ஸ்ரீ

ஸ்ரீ ராமஜயம்.

பல பக்திமான்கள் சரித்திரமாகிய

ஸ்ரீமஹாபக்தவிஜயம்

வசனகாவியம்.

மூன்றாம் பாகம்.

இதனோடு நான்காம் பாகமும் ஐந்தாம் பாகமும்
சேர்க்கப் பட்டிருக்கின்றன

15809
ACL-TNAL
01438
14 FEB 1924

இஃது

புதுவை

நாராயணதாச ரவர்களால்

மஹாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழ் வசனரூபமாக
மொழிபெயர்க்கப்பட்டது,
39. தாசர் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன

இரத்தினமங்கலம்

ஷ. கோவிந்தராஜு முதலியார்

அவர்களால்
கலைக்கியான முத்திராக்ஷரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

Registered Copy Right.

34, முததுகிருஷ்ணன் வீதி சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மஹாபக்தவிஜயம்.

மூன்றும்பாகத்திய

முகவுரை.

ஸ்ரீயப்பதியாயும் அவாப்தசமஸ்த காமராயும் ஸ்ரீ ஆதவாற்சல்ய குணநிதியாயும் ஸ்ரீபூமி நீளாதேவி
கள் சமேதராகியும் அனந்த கருடகந்தர்வ மூர்த்தியாகியும் சுரசேவ்யமூர்த்தியாகியும் சராசரவஸ்து ஜாலங்
களின் உயிருக்குயிராகி உள்ளும்புறம்புமாய் வசிக்கும் ஸ்ரீமந்நாராயணன் நித்தியவிபூதியென்னும் பரமபதத்
தில் நித்தியசூரிகள் தொழுதேத்த அரவணையின்மீதும் திருமாமண்டபத்தில் பிராட்டியர்கள்சூழ வீற்றிருந்து
மெத்தவிசனுக்கிரகந்தராகி நித்தியசூரிகளைத் தன்கடைக்கண்ணால் கடாக்ஷித்து ஒநித்தியசூரிகளே இந்தகலி
யுகமாய்கையினால் ஜெனங்கள் ஜென்மசாபலியமடையும் உபாயத்தைக்கருதாமல் சம்சாரசாகரத்தினில் மூழ்
கிப் பாபங்கள் விசேஷமாகச்செய்து நரகசம்பிராப்தியையடைந்து அனர்த்தப்பட்டுப் போகின்றார்கள் ஆகை
யால் ஏநித்தியசூரிகளே நீங்கள்உங்களுங்கள் அம்சபூதர்களாகிப் பூலோகத்திற்குச்சென்று அவதாரஞ்செய்து
என்னுடையநாமத்தையும் அதின்அருமையையும் சிறந்தகுணங்களையும் அதின்பெருமையையும் பாமரர்களு
க்குப்போதித்து தொண்டர்களாகவும் பக்திபூரணராகவும் யிருக்கும்படி திருத்துப்பாடுசெய்து தெளிவடை
யும்படி உபதேசஞ்செய்து வழிப்பட்டிருக்கும்படியாயும் நேமித்து திவ்யமாகிய ஸ்ரீபரந்தாமத்தை யடையச்
செய்யுங்களென்றும் மேலும்என்னுடைய நாமத்தையோதிசமயத்திற்குத்தக்கபடி அவர்கள்மனம் புண்ணாகா
தபடிக்கி ஸ்ரீபரந்தாமத்தை யடையும்படிச்செய்து அவர்களை வெகுபிரியமாகவசப்படுத்திபவக்கடலைக் கடப்
பதற்கு என்னுடையநாமமேஒடமாகும் இதைவிட பரமபதசாம்பிராச்சியத்தையடைவதற்குஏதுவொன்றும்
மற்றவைகளால் யாதொருசாராம்சமில்லையென்று நேமிக்க அந்தப்படியே நித்தியசூரிகள் மறுவேடம் புனைந்
துக்கொண்டு பூலோகத்திற்குவந்து தங்கடங்கள் அம்சத்துக்குத்தக்கபடி யோனிசம்பந்தமாகிப்பிறந்துவெகு
ஜெனங்களை வசப்படுத்திக்கொண்டு அவர்களுக்குத்தக்கபடி யுபதேசஞ்செய்துச்சீஷர்களாக அவர்களை அமை
த்துக்கொண்டு வெகுதிவ்ய தேசங்களுக்குச்சென்று தீர்த்தமாடி அங்கங்குள்ளப் பெருமான்களைச் சேவித்து
ஆனந்தப்பரவசமடைந்த இப்பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கிய இப்பக்தவிஜயத்தின் அருமையும் அவர்
கள் சத்தியசாதன மனதின்பெருமையையும் ஒவ்வொருவரும் பகவானை யடைவதற்காகப்பட்ட கஷ்டத்தின்
சிறுமையையும் இவர்களுக்குண்டாகிய ஞானபக்திவைராக்கியத்தின் திறமையும் மேலும் இந்தபக்தவிஜயக்
கிறந்தத்தை வாசிப்பவர்கள்மனதையும் கேட்டபவர்கள்நெஞ்சத்தையும் ஊசியைக்காந்தம்யிழுத்துக் கொள்
வதைப்போல வலித்துக்கொள்வதுமின்றித் தீயினிலிட்டமெழுகுபோல ஒவ்வொருடையமனதையும் உருகச்
செய்யும் மேலுமிந்தகிரந்தத்தினால் புத்தியும்பத்தியும் யுக்தியும்ரக்தியும் விரக்தியும் மேலோர்க்கு வழிபடுந்
தன்மையும் நன்குவிளங்குவதுமன்றி ஒவ்வொருபக்தருக்கும் நேரிட்டஆபத்துகளும் அவ்வாபத்தைசாக்ஷாத்
பகவான் எழுந்தருளி தீர்த்திரக்ஷித்த ஆச்சரியமும் இச்சரிதையைக் கண்ணுறும் புண்ணியவாளர்க்குப்பூரிப்
பும் உச்சாகமும்உண்டாகி தாமரைமலர்போல இதழ்விரிந்து ஆனந்தக்கடலில் மூழ்கித்தன்னை மறக்கச்செய்
யும் ஆகையால் ஒவ்வொருபக்தரின் அவதாரமும் அவர்கள்நடவடிக்கையும் பக்திஞான வைராக்கிய சம்பத்
தியும் முடிவினிலவர்களடைந்த நற்கதியையும் பார்க்கப்பார்க்கத் திகட்டாதமதுரமாகும் அன்றியிதைவாசிப்
பவர்களுக்கே மனசாக்ஷியாகுமென்றறிக.

ஒம்ஜனார்த்தனயதம

டி. ஆர். வெங்கடேசமுதலியார்.

சிறுமணவூர்

...சாமிமுதலியாராலியற்றிய

...ாற்றுக்கவி.

ஆசிரியப்பா.

...யுடுத்தநன்னிலத்து
...ிரும் படைத்தானருளை
...வேண்டா ருலகைமெஞ்ஞானம்
...திருவிளை யாட்டாம்பெருநூல்
...ப்புலப்பட தெரிக்குந்தகமைசால்
...லடிமுதல் கூறுநாலடைவும்
...தொடுசொற்பொருள் யாவுநற்குணர்ந்தே
...தமிழ்சால்புடைக் கற்றவனம்மா
...திமுறுபூவில் யேர்வளமோங்கும்
புதுவைநாராயணப் புலவனுலினிய
பக்தர்கள்விஜயநூற் பாகமூன்றுமிதை
மிக்கசெந்தமிழான் மேன்பெறவிளங்க
கத்தியரூபமாய்க் கழறுநன்னடையை
முத்தருமென்மேல் முயனுமான்புடைத்தால்!
தமக்குத்தாமே தரந்தரமென்னமா
சமர்த்தராம தாசர்சரிதையும்
வானும்புவியும் வந்தடிவணங்கும்
பானுதாசர் பக்தவிஜயமும்
இகத்தைக்கடந்துபே ரின்பநாடடைந்த
பகிரமபட்டர் பலவிளையாட்டும்
அகந்தனிலிருந்தே அருநிலங்கடந்த
முகுந்தசதாரம் மௌனிசரிதையும்
பேதாபேதப் பிரிவெலாங்கடந்த
போதனுபடேனு பெரியோன்சரிதையும்
கருத்துமுயிருங் கண்ணனைச்சார்ந்த
மிருத்யுஞ்சயமா மஹான்சரிதையும்
மோனரகசிஸ்ய முராரியுடனே
காணுபாத்திரை காண்டவசரிதையும்
சந்தோபாபார்சரித்திரமுடனே
சுந்தரவிட்டல சகுணசரிதையும்
சாங்கதேவர் சத்தியமத்துடன்
பாங்குமத்கூபா பக்தவிஜயமும்
நிமபராஜன் நீண்டசரிதையோ
டம்புவியடியா ளளந்தார்மரபும்
இகபரமிரண்டு மிணையரத்தேர்ந்த
பகவான்தாச பக்தசரிதையும்
புகாயுகமட்டு மொழியாக்கீர்த்தி
மகாஜனனமூர்த்தி மகத்தவமுடனே
கூர்மதாசர் குவலயநடிப்பும்
சூரதாசர்தன் சுந்தரக்கீர்த்தியும்
சேனுநவி ஜெயம்பெருகாதைமேல்
ஞானசாத்விக ராஜமகிமையும்
தர்மமனுவும் தானகலாத
கர்மாபாயி கதியடைந்ததுவும்
...னைப்பிடியால் மகிமைமிக்கார்ந்த
...னசாவந்தர் ஜெயபக்தவிஜயமும்
...மனேக வெழில்பெருதாசர்
...டயாவும் நறுந்தமிழதனல்
...பர் வுயர்நலம்பெருகி
இலகுபேரின் மெய்துவார்கருதி
அதிபதியச்சுக் கதிபதிபெருநிதிக்
கதிபதிஞான வதிபதியாய்வரும்
டி. ஆர். வெங்கடேச னெனுங்கொடையாளன்
நிதியெனப்பாரா நெடும்பொருளொடுத்து
அச்சிடுவித்து அளித்தனன்னேக்கை
மெச்சாதவரார் மேதினிமீதே.

திருப்பதிதலம்.

திருவேங்கடாசலமுதலியாரால் பாடியது.

மடலோங்கு பசுங்கமுகிற் ருவிவாளை
 மருங்கமலமலர் தாவும் புதுவைநாட்டான்
அடலோங்கு முத்தமிழும் வல்லோனம்மா
 அற்புதநாராயணப்பே ரமர்ந்தமேலோன்
கடலோங்குஞாலமிசை நித்தியமேவுருதியெனக்
 கடைப்பிடித்பக்தர்களின கருத்தையெல்லாம்
உடலோங்கு முயிர்க்குருதி யுணர்த்துமாறு
 உதவினான்வெங்கடேச னுசிதவேளே.

திருத்தணிகை.

சண்முகஞானியா ரியற்றியது.

பாரோங்கு பக்தர்களின் விஜயமூன்றும்
 பாகந்தன்னைத்
தாரோங்கு புதுவைநாரா யணதாசர்
 தமிழாற்செய்ய
சீரோங்கு வெங்கடேச வள்ளல்மிக்கச்
 சிறந்தாநச்சில்
பேரோங்க வுபகரித்தா னிதன்பெருமைப்
 பேசாராறே.

மதுரைமாநகரம்.

சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ

கந்தசாமிபிள்ளையவர்களாலியற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சீரிலகுபரதகண்டந்தனின் கீர்த்திசேர்
 சின்மயாநந்தவடிவாய்
ஸ்ரீஹரிநாராயணவெனும் மந்திரம்
 சிந்தனைசெய் தன்புடன்
பாரிலகுமாந்தர்கட் கனுதினம்மெய்ஞ்ஞான
 பக்திமார்க்கத்தின்நிலையை
பருதியொளிபோல ப்ரகாசமாய்க்காண்பித்த
 பக்தர்கள்விஜயமென்னும்
நேரிலகுமிந்நூ லுணர்ந்தவர்களனுதினம்
 நேமியில்வாழ்ஞானியாய்
நேர்மையாய்விளங்கியே துர்க்குணமகற்றியே
 நித்தியானந்தமயமாய்
தாரிலகுதவயோகிக னம்வாழமரரும்
 தகுமிவர்பக்தியெனவே
தவறின்றிபுகழ்பெறத் தடையில்லைசந்ததம்
 தரணியில்வாழன்பரே.

சிறுமணவூர். முனிசாமிமுதலியாரியற்றிய வெண்பா.

நாராயண நாவலனளித்த பக்தர்களின்
பாராயண விஜயம்பாரரிய—ஏரார்
நிதிநேர்ந் தச்சிட்ட நித்தியா நந்தகுண
வெங்கடேச னென்னு மெழிலான்.

சாற்றுக்கவிகள்-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மஹாபக்தவிஜயம்.

மூன்றும்பாகத்தினில்

விவரிக்கப்பட்ட பக்தர்களின் மகுத்துவங்கள்.

1 FEB 1924

முதலில் வரைந்திருக்கப்பட்ட சமர்த்தராமதாசர் அவதரித்தபோதேயுச்சத்துடன் ஆஞ்சநேயர்அம்சத்தைப்பெற்று உதித்ததும் இவர்அதிபாலியத்திலேயே அன்னையின் தூண்டுதலால் நான்குபேர்களுக்கு சுமக்கமுடியாத தானியமூட்டையைச் சுமந்துக்கொண்டுவந்து வீட்டினிலிரக்கிய சாமர்த்தியமும் சம்பாதிக்கும்படி அன்னை கோவித்துக் கொண்டபடியால் இந்த சமர்த்தராமதாசர் விரக்தியினால் நாட்டைவிட்டுக் காட்டையடைந்து அங்கோர் சிவசந்நிதியில்மூன்றுநா ளுபவாசமாகவிருந்ததும் அப்போது உமையவள் கிருபையினால் அங்கு அகஸ்மாத்தாய் தினமும் ஒருபாத்திரத்தில் பால்கிடைக்க அதை இந்தசமர்த்தராமதாசர் புசித்துப்பசியாறி சிவபெருமானைத் துதிசெய்துக்கொண்டிருந்த ஆச்சரியமும் ஏழாவதுநாள் சிவபெருமானை தெரிசித்த அதிசயமும் தாய்தந்தையர்கள் தேடிவந்து கண்டுபிடித்தழைத்துச் சென்றப்பிரியமும் உடனே அவர்களிந்த சமர்த்தராம தாசருக்கு விவாகமுடிக்கவெண்ணி யாவத் சடங்குகளையும் நடத்தி மங்களசூத்திரந்தரிக்கிற தருணத்தில் பிராமணர்கள்சொல்லிய பந்தமாகியசொல்லைக்கேட்டு இந்த ராமதாசர் மங்களசூத்திரத்தை விட்டெறிந்து அவிடத்தைவிட்டு வெளிப்பட்டு மரங்களின்மீது பாய்ந்து இந்தக்கிளையிலிருந்து அந்தக் கிளையிலுமாகத் தாண்டிக்கொண்டே பெருத்தகாட்டையடைந்த பிரதாபமும் அங்குமரங்களில் கயிற்றைக்கட்டிக்கொண்டு அக்கயிற்றினில் இரண்டுபாதங்களையும் மாட்டிக்கொண்டு தலைகீழாகத் தொங்கிக்கொண்டேதான்கொண்டஅம்சத்துக்குறிய ஆஞ்சநேயரைத் துதிசெய்துத் தன்னை மறந்திருந்த பரிதாபத்தையும் இதையறிந்து ஆஞ்சநேயர்வந்து தன்தெரிசனந்தந்து ராமதாசர் மாட்டிக்கொண்டிருக்கும் இரண்டுபாதங்களையும் விடுவித்து உடனே தாரகநாமத்தை யுபதேசித்துச்சென்றபெருமையும் அந்நாமத்தைத் துதிசெய்துக்கொண்டுசமர்த்தராமதாசர் காட்டினில்வசித்துக்கொண்டிருந்த அருமையும் அனேகபாமரர்களைத் திருத்திச் சிஷர்களாகச் செய்துக்கொண்ட கஷ்டமும் அவர்கள்மீது உடனேகொண்டஇஷ்டமும் சிவாஜிராஜன் தன்னைச்சரணமடைந்த தினமும் அவருக்கக்கணமே உபதேசித்த மனமும்மேலும் இவர்மஹோளிபட்டணத்துக் சிறுவர்களுடன் இரிக்கியாடிக்கொண் டிருந்தபோது அவ்வோடானது இவர்புருவத்திறபட்டுக் குறுதியொழுகியபடியால் மூர்ச்சையடைந்துப் பகல்முழுதுங் கிடந்தமையால் சிறுவர்கள்கண்டு இவர் மரணமடைந்தனரென்று அங்கொரு பள்ளம்வெட்டி அதிலிவரைப் போட்டு மூடிப்போயினவிந்தையும் சிவராஜிராஜனால் ஒருவாரத்திற்குப்பின் இவரைவெளிப்படுத்தின தெர்ந்தையும் வேடன்கொன்றப் பரவைகளுக்கு உயிர் கொடுத்தசிந்தையும் இன்னுமிப்படிப்பட்ட மகுத்துவங்களனேகமாக உலகத்தோர்களுக்கு காட்டி முடிவில் பரமசாயுச்சிய மடைந்தனர்.

இரண்டாவது பானுதாசர் ஆதித்தனுடையகிருபையினால் உதித்து உபநயனமுதலானதுகளுஞ் செய்துக்கொண்டு பள்ளியிக் படிக்கவிடுத்தனர் இப்பானுதாசர் கிரமமாய்சென்று வாசிக்காமலிருந்ததை தந்தைபானவர்கண்டு அடித்து நிர்ப்பந்தஞ்செய்யகண்டு இந்தபானுதாசர் யாருக்குந்தெரியாமல் இராக்காலத்தினில் வீட்டைவிட்டு வெளிப்பட்டதீரமும் மனிதசஞ்சாரமில்லாத காட்டினில் ஓர்பாழடைந்த சந்நிதிக்குட்புகுந்து ஏழுநாள்பரியந்தம் வெளிப்படாமலும் அன்னாகாரமின்றியிருந்த அகோரமும்அன்னைதந்தையர்தேடிச்சென்றழைத்து வந்தவிசாரமும் அவர்கள்பின் பானுதாசர் வீட்டையடைந்து தாய்தந்தையர்கள் மீதிருந்தப் பாசமற்று விரக்திகொண்ட சூரமும் சிலநாளில் பானுதாசர் தாய்தந்தையர்கள் மரணமடைந்த ஆச்சரியமும் உடனே தனக்குண்டாகிய

மாச்சரியமும்விடாது ஸ்ரீஹரிபஜனை செய்துக்கொண்டிருக்கும் புத்தியும் அதனாலடைந்த சித்தியும் ஜவுளி வியாபாரஞ் செய்துக்கொண்டிருந்த சத்தியமும்வியாபாரத்தினால் மேன்மையடைவர் நித்தியமும் சந்தையில் ஜவுளிமூட்டைகளை பகவான்வந்து காத்துக்கொண்டிருந்திரு சவகமும் மத்தவர்கள் ஜவுளிமூட்டைகளைச் சேபுர்கள் திருடிக்கொண்டுபோயினநாவகமும் தன்மூட்டைகளிலிருந்து ஜவுளிவியாபாரிக்குக் கொடுத்த தானமும் அதனால்தான் விர்த்தியடைந்த வுதாரமும் முடிவில் இந்தப்பாணுதாசர் பரமத்சாயுஜ்பதவியை யடைந்தநெறியையும் என்னொருவனால் சொல்லத்தக்கதல்ல.

மூன்றாவது பகிரமபட்டர் புஞ்சைபயல்களை காத்துக்கொண்டே ஸ்ரீஹரிநாம பக்தியில் சிரந்தவராகி பரவைராக்கியத்தையும் தனக்குள்ள தானியங்களையெல்லாம் ஏழைப்பரதேசிகளுக்களித்து தானடந்த திற்பாக்கியத்தையும் பகவானுடைய கிருபையினாலே சாவியாய்ப்போன வயல்களெல்லாம் நல்லவிளைவுண்டாகிய மர்பதத்தையும் பெஞ்சமனுக் குபதேசிக்கமுயன்குடிகளால் தானடைந்த கர்மத்தையும் ஆயிரமபணாமுடிகளும் இரண்டாயிரநாவுகளுமுடைய ஆதிசேஷனாலும் இவருடைய மகுத்துவத்தைச் சொல்லிமுடியாது.

நான்காவது பாபாஜிதாசர் சம்சாரத்தினில்விரக்தியடைந்து வெளிப்பட்டு ஓர்நதிக்கரையினிலிருந்துக்கொண்டு போகாப்பியாசஞ் செய்துக்கொண்டிருக்க இவர்மனைவி நாயனிருப்பிடத்தைச் சிலபாமரர்களாலறிந்துத்தாவிடம்சென்று இவரைப்பணிய அம்மாதை இவர்வெகுவாக வீட்டுக்குபோகும்படி கட்டளையிட அதனால்கேளாமல் நாயகன் தொண்டுகளில் வெகுஜாக்கிறதையாயிருந்து ஒருநாள் அம்மாது அடுத்தக கிராமத்திற்குச்சென்று பிக்ஷையெடுத்துக் கொண்டுவருகையில் குருக்கேவெள்ளம் இருகரையும் பிரண்டோடுவதால் அமமங்கை நாயகனுக்குப் பசியாற்றுவதற்கில்லாமல் என்னையிந்த நதியானது தடைசெய்துவிட்டதே என்றுபிரலாபித்துக்கொண்டிருந்த கோரத்தையும் அப்போதக்கு ஸ்ரீஹரியானவர் பிராணவடிவுடன்வந்து அம்மாதின்பக்தியும் இவள்கணவன் தொண்டுகளில் மெத்தப்பிரியமுண்டாகியிருப்பதையுமறிந்து அங்கஹரியானவர் கிஞ்சித்தேனும் நாணம்மானமுமில்லாமல் அம்மங்கையைத்தோளின்மீதுசுமந்துக்கொண்டு நதியைக்கடந்துநாயகன்பால்விடுத்தேகிய பகவானுடைய மகிமைகளையும் முடிவிலிவர்கள் இருவரும் பாமபதசாயுஜ்யத்தை யடைந்தனர்கள்.

ஐந்தாவது முதுந்தராஜன் பக்தியையும் க்ஞான வைராக்கியத்தையும் இவருக்குண்டாகிய ரக்திவிரக்திகளையும் யோகசாதவமும் சத்தியமும் நீதிநெறியுமுடையவராகி யிருந்துமுடிவில் பதவியடைந்ததைக் கண்ணுறில் மெத்தவும் வியக்கத்தக்கதே.

ஆறுவது போதனுபட்டேனு இவருக்குண்டாகிய ஆசாரிய பக்தியும் இவர்மனைவியும் புதல்வரும் இவரைப்போலவே பக்தியிற்சிறந்தவர்களாகிமூவரும் ஏகோபித்துச் செய்ததருமத்தின் அளவையும்க்ஞான வைராக்கியங்களின் விசேஷங்களையும் பார்க்கப்பார்க்க அதிசயிக்கத்தக்கதே.

ஏழாவது மிருத்யுஞ்செயன் இந்தசாதுவுக் குண்டாகிய சம்சாரவிர்த்தியும் பகவத்பக்தியும் ஏழைப்பரதேசிகளிடத்தில் ஈவு இறக்கம் பூததயாளத்தின் பெருமையைக்காண மனதுக்கு ஆசையும் விசுவாசமுண்டாகும்.

எட்டாவது ரசிகமுராரி இவருக்குண்டாகியபெரியோர்கள் வணக்கமும் உறியோரிடத்தில் இணக்கமும் பக்திக்ஞான வைராக்சியங்களும் கர்னனைப்போன்ற தாதாவுமாகிபிருந்து மெத்தகீர்த்தி யடைந்து முடிவில் நற்பதவியைப்பெற்ற அருமையைக் காணக்காணமெத்த ஆனந்தத்தை விளைவிக்கும்.

ஒன்பதாவது கானோபாத்திரை இவ்வனிதையர்க்கு யாலிபத்திலேயே தனக்குத்தானே யுண்டாகிய க்ஞானத்தின் அருமையும் பெரியோர்களுக்குத் தொண்டுசெய்யும் நற்குணத்தின் பெருமையும்பதவியடைந்தநெறியையும் பார்க்கப்பார்க்கப் பரமானந்தத்தை விளைவிக்கும்.

பத்தாவது சந்தோபாப்ரவரன் இவருக்குப் பகவத் விஷயத்திலுண்டாகிய சிந்தனையும் பக்தி க்ஞான வைராக்கியங்களின் உச்சாகத்தையும்விவரிக்கமெத்த விரிவாகும் என்று சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

பதினோராவது விட்டலதாசர் இவர் பகவத்விஷயத்தில் பாடுபட்டஅருமையும் ஆசாரியருக்குத் தொண்டுகள்புரிந்த பெருமையையும் முடிவில் இவரடைந்தபதவியின் அளவையுங் கேழ்க்கவும் பார்க்கவும் செவிகளுக்கானந்தமும் கண்ணுறமனதுக்குப் பரமானந்தமுமுண்டாகி மெய்மரக்கச்செய்யும்.

பனிரெண்டாவது சாங்கதேவர் இவர்செய்த பகவத்பக்தியின் தெளிவையும் தானதருமங்களின் எளிதையும் பன்னிப் பன்னிப் பலதரங் கண்ணுறினும் மனதிற்கு திருப்தியுண்டாகாமல் மேலுமேலும்பார்க்கும்படி ஆவலைத்தருவிக்கும்

பதிமூன்ருவது கூபாகுயவர் இவருக்குண்டாகியபக்தி பரவசத்தினுலே அரசன் கட்டளையின்படிபெருத்தபாண்டங்களைச்செய்து அரசனுக்களிக்க அவ்வரசன் அதற்குத் தக்ககூலிகொடாமல் கிஞ்சித்து கூலி கொடுத்தமையால் பாண்டுரங்கநாதன் அப்பாண்டங்களை இவர் வீட்டினிற்கொண்டுவந்து வைத்து மறைந்துபோக இவர்பாண்டங்களைக் கண்டு மெத்தபயந்து யாரோநமக்கு விரோதிகள் கொண்டுவந்து வைத்துப் போயினர்களோ என்று வாட்டமுறப் பாண்டுரங்கநாதன் இவர்வாட்டத்தைத் தீர்த்திரட்சித்ததை பார்க்க மெத்தவும் வியக்கத்தக்கதாகவே இருக்கும்.

பதினன்காவது நிம்பராஜன் இவர்மநுநீதி குன்றமல் அரசுபுரிந்த விசேஷத்தையும் அவ்வரசாக்ஷியின் மீதிவருக்கிருந்த ஆவலையும் ஆசான்கிருபையால் சர்வசங்கப் ரித்யாகஞ்செய்து வெகுவிரக்தரா யிருந்துபகவத்பக்திசெய்துமோக்ஷசாம்பிராச்சியமடைந்த விந்தையைக்கண்ணுறில் ஒவ்வொருவருக்கும் ஆசையும் நேசமும் விசுவாசத்தையும் விளைவிக்கும்.

பதினைந்தாவது வல்லபசாரி கோவிந்த தாசருடன் சாக்ஷாத்பாண்டுரங்கநாதன்சிறுபாலனைப்போல தினமும் விளையாடிக் கொண்டேயிருந்து கொவிந்த தாசரைப் பாண்டுரங்கநாதன் அடித்துவிட்டு ஒடிப் போவதும் அவ்வடியினுல் கோவிந்ததாசர்சிரமமடைந்துபாண்டுரங்கநாதனை விடாமற்றெடர்ந்து பதிலுக்கு அடிக்கும் ஆச்சரியத்தை வாசிக்கவாசிக்கப் பரமானந்தத்தை விளைவிக்கும்.

பதினறுவது பிரேமநிதிதாசர் இவர்செய்தஅசாத்தியமான பக்திஞான வைராக்கியங்களின் சிறப்பையும்பகவான் இவருக்காக எழுந்தருளின பறப்பையும் இவர்பகவானைசேவித்தடைந்த பதவியையுங் காணக்காண தேவாமிர்தத்தைச் செவியின் வழியாகப்புகட்ட அவ்வமிர்தம் மனதினிற்படிந்து எந்தஉருசியும் நிகரல்லவெனக்கருதும் மனதையுடையர்களாகி மெய்மறப்பார்கள்.

பதினேழாவது பகவான்தாசர் இவர்பகவான் தெரிசனங் கிடைப்பதற்காகப் பட்ட கஷ்டத்தையும் ஏழைப்பரதேசிகளின்மீது இவருக்குற்ற தயாளமென்னும் இஷ்டத்தையும் தனக்குள்ளபொருளை யெல்லாஞ் செலவழித்து அடைந்தநஷ்டத்தையும் பகவான் கிருபையினுல் முன்னமிருந்தபொருள்களைப் பார்க்கிலும் எண்மடங்கதிகமாகக் கிடைத்த பொருள்களின் விஷயத்தினி லிவருக்குண்டாகிய வெறுப்பையும் பகவத் பாகவதர்களிடத்தினில் விருப்பமும் முடிவில் பதவியடைந்த திருத்தமும் வெகுயின்பத்தைத் தருவிக்கும்.

பதினெட்டாவது சனுதனதாசர் இவர் சிறுவயதிலேதானே சகலபொருள்களிலும்பற்றற்றுவிரக்தராகிய பகவத்பாகவதகூட்டங்களிற்கூடிப்பகவானைப்பாடியாடி மெய்மறந்து வெகுமகிமைகள் விளங்கக்காட்டித் தன்னையடுத்த சிஷர்களின் ஜென்மப்பிணிகளையோட்டி ஜீவன்முக்தி பதத்தையடைந்தது விந்தையிலும் விந்தையேயாம்.

பத்தொன்பதாவது மகாஜனன் இவர் ஆசானுடைய கிருபாநோக்கத்தினுல் மெத்தபக்தி வைராக்கியமுண்டாகி வெகுபேர்களைத்திருத்திப் பகவத்சாயுச்சிய மடையும்படிக்கிசெய்தப்ரமகாருண்யகுணசமர்த்தர் மேலுமிவர் அனேகதேசங்களில் வசித்து மகிமைகளைக்காட்டி யாவரையும் பிரமிக்கச்செய்து கிரந்தர பரமானந்தப் பதவியையடைந்தனர் இச்சரிதைவெகு இன்பமாகவிருக்கும்.

இருபதாவது கூர்மதாசர் இவருக்கு ஜென்மத்திலேயே கால்கரங்கள் கிடையாது ஆமையைப்போல ஊர்ந்துக்கொண்டு திரிபவர் இவருடையஞ்ஞானபக்தி வைராக்கியத்தின் சிறப்பும் இவர்பாடும் ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனங்களின் சாரத்தைக்கேட்டு அவ்வூர் அக்கிராரத்திலுள்ள பிராமணர்களை இவருக்கு ஒவ்வொரு நாள் ஒவ்வொருவர் பிரசாதம் ஊட்டப்புசித்துத்தைலதாரா விச்சின்னமாக பக்திசெய்துக் கொண்டிருக்கும் விமலத்தையும் இவர் பண்டரியாத்திரை செய்ய வேணுமென்று தன்னூரைவிட்டு ஊர்ந்துக்கொண்டேபோய் எங்குதங்கினரோ அவ்விடத்திற்கு ஸ்ரீ பாண்டுரங்கநாதன் பிராமணனைப் போலவந்து பிரசாதம் செய்து இவருக்கு அப்பிரசாதத்தை ஊட்டி உபசரித்துப்போகும் அருமையும் இதனுலிவர்க்குண்டாகிய பெருமையும் இப்படி நாலுநாள் பகவான் வந்து பிரசாதமுதலிய உபசரங்களைச் செய்து போயின சித்திரமும் மறுநாள் பண்டரியில் உச்சவமென்றறிந்து இந்தக்கூர்மதாசர் விசனப்பட்டதும் பகவானுக்கிவர்மீது அன்புமிகுத்துத் தானே வலியவந்து தெரிசனந்தந்த விசித்திரமும் பக்தமாலை மெத்தவிரிவாய் முறையிடுகின்றன.

இருபத்தொன்றாவது சூரதாசர் இவர் அக்ரூரர் சத்தியபாமைக்குச் சகாயஞ்செய்யச் சென்று சாபபெத்த விந்தையும் உடனே சூரதாசராகி யவதரித்து அந்தகனாகிஞான பக்திவைராக்கியத்திற் சிறந்துவீணகானஞ் செய்வதில் மெத்தவல்லவராகி யிருந்தமையால் அவ்வூரரசன் இவரையழைப்பித்து வீணைவாசிக்கும்படி நேமிக்க இவரும் மெத்த இனிமையாககிருஷ்ணலீலைகளாகிய கீர்த்தனைகளை வீணையை மீட்டிக்கொண்டே பாடின திறமும் யாவருங்கேட்டு அதிசயித்துக்கொண்டாடிய மேன்மையும் உடனே ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளி இவருடைய அந்தகத்துவத்தைப்போக்கி முன்போல அக்ரூரரைப் போலாகும்படிச்செய்துப் போயின கனமும் ஆனந்தமடையச் செய்யும்.

இருபத்திரண்டாவது சேனாவி இவர்பக்தியிற் சிறந்து ஒருநாள் ஸ்ரீஹரிபூசை செய்துக் கொண்டே மெய்மறந்திருக்கிறபோது அவ்வூரரசன் க்ஷவரஞ் செய்துக் கொள்ளும் நிமித்தியம் இவரை யழைப்பித்ததும் பகவான் இவரைப்போல உருக்கொண்டு சென்று அரசனுக்கு க்ஷவரஞ்செய்த விந்தையும் அரசன் தைலக்கிண்ணத்தினில் ஸ்ரீஹரியை சேவித்துத் தன்னைமறந்ததும் இதனாலரசன் சேனாவினிடம் உபதேசம் பெற்றுக்கொண்டு முக்திபதத்தை யடைந்ததும்பார்க்கப்பார்க்க மனதை உருகச்செய்யும்.

இருபத்திமூன்றாவது சாத்விகராஜன் இவர்தன்னுடைய நகரத்தினில் விஷ்ணுவாலய மொன்று கட்டின சிந்தையும் மூன்றுகால பூசைநடக்கும்படிஉத்திரவுசெய்த விந்தையும் இவர்ச்சந்நிதியில் சூதாடின அகந்தையும் அதனால் தனக்கு நேரிட்ட அபசாரத்தின்கொடுமையையும் அவர்கோபத்தின்பொருட்டுதன் வலதுகையை வெட்டிக்கொண்டு அக்கையை பகவானுக்கு சமர்ப்பித்த ஆச்சரியமும் பகவானுடையகிருபையினால் யழயபடி இவருக்கு வலதுகையுண்டாகிய பக்தியின் சாரத்தையும் பார்க்க மெத்தவும் வியக்கத் தக்கதாக விருக்கும்.

இருபத்தினான்காவது கர்மாபாயி இம்மாதுகணவனிறந்ததுன்பத்தைப் பிள்ளையினால் போக்கிப் பிள்ளைக்கு விவாகஞ்செய்வித்து சந்துஷ்டி யுடனிருந்ததும்உடனே மருமகள்கருப்பிணியாகப் புதல்வனிறந்ததும் பேரன் பிறந்துச் சிலநாளில் மரணமடைந்ததும் அத்துயரத்தினால் சதாஏக்கத்துடன் தூக்கமின்றியிருந்ததும் பெரியோர்கள் வந்து உபதேசஞ் செய்துப் பாண்டுரங்க விக்கிரகமீந்துப்போயினதும் அந்தவிக்கிரகத்துடனிம்மாது விளையாடிக்கொண்டும் அவ்விக்கிரகத்திற்கு அன்னபானாதிகள் ஊட்டிக்கொண் டிருந்த பெருமையும்பார்க்க மெத்தப்பரமானந்த மடையத் தக்கதாக விருக்கும்.

இருபத்தைந்தாவது ஜனஜசாவந்தர் இவர்பெருத்த சாகுகாரியாயிருந்தனர் இவருடையபொருளையெல்லாம் ஏழைப்பரதேசிகளுக்கிட்டு சாதுக்களைப்பூசித்துக் கொண்டிருந்த அதிசயமும் இவர் புதல்வர்கள் அரசனிடஞ் சென்றுத் தங்கள்தந்தைக்குப் பைத்தியம்பிடித்து உள்ளபொருள்களை யெல்லாம் சிலவுசெய்து எங்களைக்கோமணாண்டிகளாக்க விருக்கின்றானென்ற சொத்சோர்வையும் அரசன்கேட்டுஇவரைப்பிடித்துக்கட்டி ஆழமுள்ளகுளத்தினிற் போடும்படி விதித்தக்கொடுமையாகிய தண்டனையையும் அந்தப்படியே தூதர்கள் செய்தமாத்திரத்தினில் ஸ்ரீபாண்டுரங்கன் அக்குளத்தினுள் ஆமையுருவாகி ஜனஜசாவந்தரைக் காப்பாத்தின விந்தையைப்பார்க்க விந்தையிலும் விந்தையாகும்.

இருபத்தாறாவது கணேசநாதர் இவர்வெகு பக்தியிற்சிறந்தவராகியிருந்ததையும்ஒருக்காலிவர்பண்டரியாத்திரைசெய்யச்சென்று பண்டரிபுரத்தை யடைந்து பக்திவினயமாகப்பாடுங் கீர்த்தனைகளைச் சிவாஜி மகாராஜன்கேட்டு ஆனந்தித்ததும் இவரைத் தன்னகரத்திற் கழைத்துச் சென்றசிறப்பையும் கட்டிலின் மீதிலவரைச் சயனிக்கும்படி வேண்டிக்கொண்டதும் இவரப்படியே செய்கிறேனென்று அக்கட்டிலின்மீது கற்களைப்பரப்பி யதின்மீது படுத்துக் கொண்டிருந்ததை அரசன்கண்டு விசனமுற்றதும். அரசனுக்கிவர் உபதேசித்த விவரமும்பார்க்க மனமுருகி மெய்மறக்கச் செய்யும்.

இருபத்தேழாவது கேசவசுவாமி இவர் ஏகாதசிதோறும் ஹரிகதைசெய்யும் பக்தியும் யாவருங்கேட்கும் ரத்தியுமடைந்த விசேஷமும்பகவானுக்குநிவேத்தியஞ்செய்ய சர்க்கரைதருவிக்க வணிகன் சர்க்கரையுடன் பாஷாணத்தைச் சுக்கென்று அந்தராக்காலத்தில் தெரியாமற்கொடுக்க அதைநம்பிப் பாஷாணத்தைப்பொடிசெய்து சர்க்கரையுடன் கலந்து பகவானுக்கு நிவேதனஞ்செய்யப் பகவான் இச்சர்க்கரையினால் சாதுக்களுக்கு மோசனமுண்டாகு மென்றும் பாஷாணத்தை மாத்திரம் தான்தின்று தன்திரேகத்தை நீலநிரஞ் செய்துக்கொண்டு வெகுடீக்காகசேவை சாதிக்க அச்சகனரயை யாவருக்கும்பகுந்துக்கொடுக்கச் சாதுக்கள் மகாப்பிரசாதமென்று புசித்தனர்கள்

பின்புவணிகன் பொழுதுவிடிந்தவுடன் கடையைத் திறந்து பாஷாணப்பை வெளியிலிருக்கப்பார்த்து இதென்ன நமதறிவீனத்தினால் பாஷாணத்தை சுக்கென்று இருட்டினில் கவனிக்காமல் கொடுத்துவிட்டோமே அரசனால் நமக்கென்னதண்டனை விதிக்கப் படுமோ என்று நடுநடுங்கிப் பயமடைந்த விசேஷத்தையும் நாம்கொடுத்தப் பாஷாணத்தினால் சர்க்கரைகலந்து சாதுக்களுக்குப் பகுந்திருப்பார்க ளல்லவா அதைச் சாதுக்கள் புசித்திருந்தால் எத்தனைபேர்கள் மடிந்திருக்க வேணுமேயென்று அந்தவணிகன் அப்பட்டணத்தின் வீதிகள்தோறுந் திரிந்து பார்த்தும் யாதொருசந்தடியையுங் காணாமல் திகைத்த துக்கத்தையும் பின்புசுடலைக் கரைக்குச்சென்று பார்த்து அங்கும் யாதொருவிசேஷத்தையுங் காணாமல் கேசவசுவாமிகள் மடத்தைநோக்கிச்சென்ற துக்கத்தையும் அங்குகேசவசுவாமிகள் ஸ்னானநுட்டானங்களை முடித்துக்கொண்டு பகவானுக்குத் திருவாராதனஞ் செய்யத்தொடங்கிய விசேஷத்தையும் பகவான் நீலமேனியுடன் சேவைசாதிக்கும் ஆச்சரியத்தையும் உடனே வணிகன் கேசவசுவாமிகளின் திருவடிகளில் விழுந்துப்பணிந்து தான் முன்னாளிரவில் சர்க்கரையுடன் சுக்கென்று இருட்டினில்தெரியாமல்பாஷாணத்தைக் கொடுத்தனுப்பிய விவரத்தையும் தெரியப்படுத்தி தனக்கு அதற்குத்தக்க தண்டனைவிதிக்கும்படி வேண்டிக்கொண்ட பரிதாபத்தையும் அப்போது கேசவசுவாமிகள் நடந்திருக்கும் ரகசியத்தைத் தெரியப்படுத்தி வணிகனை பயப்படாதேயென்று ஆதரித்த சாந்தத்தையும் உடனேகேசவசுவாமிகள் பகவானுடைய கருணையைப்பத்தி அவரைத்துதிசெய்த பக்திபரதந்திரத்தையும் பகவான்சாதுக்கள் யாவரும் பார்க்கும்படி நீலநிறத்தைப்போக்கிப் பழயபடி சேவைதந்த அதிசயத்தையும் இந்த கேசவசுவாமிகள் கிருஷ்ணாநதியில் ஸ்னானஞ் செய்ய விரும்பிச்சென்றபோது பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டே தன்னை மறந்துபோகிறபோது பகவான் அவர்தோளின் மீதிருந்துக் கொண்டு பக்திபரவசத்தைப் பார்த்ததிசயித்துக்கொண்டே போயினவிந்தையையும் பின்புகேசவசுவாமிகள் ஸ்னானமுடித்துக்கொண்டு தன்னிருப்பிடத்தை நோக்கிவருகையில் வயல்களுக்குக்காவலிருந்தக் குடியானவன் சொன்னவிசேஷ செய்திகளையும் தன்னிருப்பிடஞ் சேர்ந்து வெகுகாலமிருந்து பதவியடைந்த மேன்மையையும் பார்க்க பூரணக்ஞானோதயமுண்டாகி மெய்மரக்கச்செய்யும்.

இருபத்தெட்டாவது பரத்ரிராஜன் இவர் அரசுபுரிந்தநீதியும் தானதருமங்கள்செய்தஉதாரத்தையும் மனைவியின் மீதிருக்கும் மோகத்தையும் மனைவிசோரம் போவதை யுணராமலிருந்தக் களங்கமற்ற மனதினையும் ஆசானையடுத்த பக்தியையும் உபதேசம்பெற்ற அருமையையும் ஆசான்தந்த மாங்கனியின்விசேஷமும் அம்மாங்கனியை மனைவியினிடங் கொடுத்தப்பிரியத்தையும் அந்தக்கனியை அம்மாது சோரநாயகனுக்குக் கொடுத்தஒருமையையும்சோரநாயகன் அக்கனியைத்தன் மனைவியினிடந் தந்தப் பெருமையையும் அவள் அக்கனியை அரசனுக்களித்தப் பிரியத்தையும் அரசன்மாங்கனியவளுக்குக் கிடைத்த மார்க்கத்தை விசாரணைசெய்தநீதியையும் அவள் உண்மையைச்சொல்லிய வாக்கையும் அரசன் சோரநாயகனுடன் தன்மனையாளைக் கூட்டியனுப்பிய பெருமையையும் உடனே அரசன்சகலத்தையும் தம்பியின் வசமாக்கிய திடத்தையும் பின்புசடைமுடிதரித்துக் காட்டிற்குச்சென்று தவமியற்றியிருக்க மருபடியும ஆசான் வந்து பூரணகடாக்ஷஞ்செய்த அருமையும் வெகுகாலம் தவமிழைத்திருந்து முக்திபதத்தைப் பெற்றதையும் பார்க்கமனமானது மெழுக்கைப்போல உருகி தன்னைமரக்கச்செய்யும்.

இருபத்தொன்பதாவது நாகநாதர் இவர்தர்மத்துக்குத்தடை யுண்டாகும் டம்பத்தைவிடுத்து அழுக்கு வஸ்திரத்தைத் தரித்திருக்குங் கேவலத்தையும் திரேகச்சாயைதெரியவொட்டாமல் சாம்பலைபூசிகொண்டு நிர்மலமனதுடன் ஸ்ரீஹரியைபஜிக்கும்பக்தியையும் ஊரார்பலரும் இவரிருக்கும் இருப்பைப்பார்த்து திருடனென்று பேசிக்கொள்ளவும் பாம்பும்தேளும் இவர்திரேகத்தினி லிடைவிடாமல் சஞ்சரித்துக்கொண்டிருப்பதையும் இன்னுமிவரை பிசாசங்கள்முதலானபூதகணங்கள் சூழ்ந்திருக்கும் பயத்தினாலும் இவர் அருகினி லொருவரும் நெருங்காம லிருப்பதையும் மேலுஞ்சிலர் இவரை மந்திரந்தெரிந்தவ னென்றும் சிலர் இவரிடத்தில்மூதேவி வாசமாயிருக்கின்றுவென்றும் சிலர் இவரை மகாத்துமாவென்று கொண்டாடுவதையும் இவர் அம்மொழிகளைக் காதிற்கொள்ளாமலிருக்கும் விந்தையையும் மழைகாலத்தினில் மேலேவஸ்திரம் போர்த்துக்கொள்ளாமலும் ஏதோஒருவீட்டிற்குள் புகாமலும் வெய்யில் பனிமுதலாகியத்திற்கும் கிஞ்சித்தேனுஞ் சுளியாமலிருக்கும் ஆச்சரியத்தையும் ஏகலிங்கனெனுஞ்சிஷன் இவருக்குச்செய்யுந் தொண்டுகளின் விந்தையும் அவ்வூர்வணங்கள் புதல் விமரணமடைந்து மயானபூமிக்குக் கொண்டுபோகக்

கண்டு ஏகலிங்கன் ஆசான் திருவடிகளைத் துதித்து அப்பெண்ணுக்கு உயிருண்டாகும்படிச் செய்த விந்தையையும் பார்க்க பத்திசிறத்தையும் வைராக்கியமுந்தடையின்றி யுண்டாகும்.

முப்பதாவது லதிபுஷாஇவர்மதத்தையும் இந்துமதத்திற்சேர்ந்த விதத்தையும் இவருடைய நடவடிக்கையைச்சிலர் அரசனுக்கறிவித்த விசேஷத்தையும் அரசன்வந்து லதிபுஷாவைக்கண்டுபேசியதர்க்கத்தையும் அங்குமதிற் சுவத்தில் கிருஷ்ணனைப் போலவும் ராதையைப்போலவும் சித்திரத்தினாலெழுதி யிருப்பதைக்காட்டி இதென்ன இம்மங்கைக்கையினிலேதோ வைத்துக்கொண்டிருக்கின்றாளென்று வினவிய சித்திரத்தையும் அதற்குபதிலிவர் சொல்லிய விசித்திரத்தையும் இவர்சொல்லியபடி சித்திரத்தினாலெழுதி யிருக்ரூரபகவான் அரசனுக்குத்தெரியும்படிச்செய்தவிந்தையையும் அரசனதைக்கண்டு என்றுமில்லாத ஆச்சரியமடைந்து இவரைப்பணிந்து இவருக்கு வேணமட்டும் பொருளுதவிசெய்துக் கொண்டிருக்கும் அன்பையும் மேலுமிவர் தன்குலத்தோரைத் தன்னைப்போல விந்துமதத்தையடையும்படிச் சொன்ன விசேஷத்தையும் அவர்கருத்தின்படி இணங்காதிருந்ததிடத்தையும் வெகுகாலமிவர் பக்திசெய்துக் கொண்டிருந்து முடிவினில் பரமசாயுச்சிய பதவியடைந்த மேன்மையையும் பார்க்க மனதிற்கு வெகுவாகப் பரமானந்த முண்டாகச்செய்யும்.

முப்பத்தியோராவது உத்தவசித்கணர்இவர்மெத்தகவிகளைச்சுயமாகப்பாடி அதனாலனேகரைச்சீஷர்களாகச் செய்துக்கொண்ட அருமையையும் அடுத்தநகரத்திற்குச்சென்று ஸ்ரீராமநவமி யுச்சவஞ்செய்வித்தசிறப்பையும் பஜனை செய்துக்கொண்டே போவதைத் துலுக்கர்கள்கண்டுநமது மசூதிக்குமுன்னமிவர்கள் வெகுகோஷ்டஞ் செய்கிறார்களென்று பாகவதர்களை கற்களாலடித்த அனியத்தையும் அதனால்வெகு பாகவதர்களுக்கு காயப்பட்டு தொந்திரவடைந்தகஷ்டத்தையும் இவர்கண்டு மெத்தவிசனமடைந்தபரிதாபத்தையும் பகவான் ஆஞ்சநேயருடன்சொல்லியவிசனவாக்கையும் ஆஞ்சநேயர்சென்று மசூதியை அடியோடே பேர்த்தெறிந்து துலுக்கர்களைப்பிடித்து நசுக்கிக்கசக்கிய கோபத்தையும் உடனே அவ்வூரரசன் வந்து இவரைவேண்டிப் பணிந்து ஆயிரம்ரூபாய்கொடுத்து ஸ்ரீராமநவமியுச்சவம் வெகுசிறப்பாகநடத்தும்படிச்சொல்லிய வினயத்தையும் அந்தப்படியே உச்சவம் நடத்தின ஆரவாரத்தையும் இவர்பதவியை அடைந்த சிறப்பையும் பார்க்கப்பார்க்க வெகு ஆனந்தத்தையுண்டாகச் செய்யும்.

பக்தர்களின் மகுத்துவம்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



ஸ்ரீமஹாபக்தவிஜயம்

மூன்றாம்பாகம்.

பரப்பிரமதுதி.

இங்குள தங்கிலை யென்றிசை யாதவியல் புடனே
எங்கும் நிறைந்துய ரேகாந்த மான மெழிற்ப்ர மத்தைத்
தங்கும் படியே மனத்துண் ணிறுத்தித் தகமையுறப்
பொங்கும் படிபுள காங்கிதங் கொண்டிடப் போற்றுதுமே.

விநாயகர்துதி.

சங்கரி குமரா சான்றோர்க் கருள்வரா
பங்கயத் தாளா பாசாங்கு சதரா
மங்கள மருளு மதவே ழமுகா
சங்கைகள் தீரச் சரண்சிர மணிவாம்.

ஸ்ரீமஹாவிஷ்ணுதுதி.

கரிமுறை விட்ட போது கடுகிவந் தபயந் தந்து
விரிகுழல் துரோப தைக்கு விரைந்துடை யளித்த கோனை
அரிஹரி யென்ற ழைத்த வசுரபா லனைக்காத் தானை
திரியுல கோரும் போற்றுந் திருமாலை வணங்கு வோமே.

இலக்குமிதுதி.

பூதலத் துதித்த புண்ய புருடர்க ளிடத்தெந்நாளு
மாதவ பலத்தால் மேவி மன்னிடச் சகல சம்பத்
தாதிகள் நிறைய வீந்து தருமங்கள் செயக் களிக்கு
மாதவி நின்றன் பாத மலர்சிர மேற்கொள் வோமே.

சிவபெருமான்துதி.

இப்புவி யதனி லேழை யெளியவர் செய்பந் திக்குத்
கொப்பென மகிழ்ந்து காக்குங் கோதிலாக் குணத்துச் சீமான்
மூப்புர மெரித்த மூர்த்தி மோனிக ளேத்துங் கீர்த்தித்
துப்புடை விடைமீ தூருந் தூயனைப் போற்றி செய்வாம்.

உமையவள் துதி.

உம்பரு மிம்பர் போற்று மொளிர்பரஞ் சுடரா மாதி
எம்பெரு மானி டப்பால் மேவியே யேழை கட்குத்
தென்புறச் செல்வ மீயுந் தேவியா மென்றன் மாதா
அம்புய மலர்ப்பொற் றாளை யனுதினம் போற்றிசெய்வாம்.

நாமகள் துதி

ஆரண மாதி யாகு மருங்கல்விக் கரசா னாளைப்
பூரணப் புலவர் போற்றும் புத்தகக் கையி னாளைக்
காரண யாழ்வல் லாளைக் கமலநேர் கண்ணி னாடன்
சீரணிப் பதங்கள் போற்றிச் சென்னியிற் றரித்துக் கொள்வாம்.

பரமாசாரியர் துதி.

திருவுறு மாயன் செம்பொற் றிருவடி யடையு மார்க்கம்
பெருமையோ டெனக்குக் காட்டி தாசனும் பேரு மிட்டுத்
திருவுறு மந்த்ர மாதித் திவ்யசம்ஸ் காரஞ் செய்தப்
அருமைசேர் குருவின் செம்பொன் னடியிணை போற்றி செய்வாம்.

அவையடக்கம்.

இலக்கணவி லக்கியாதி காவியங்க ளெதுகையொடு மோனைதரு லட்சணங்கள்
துலக்கமுற நிகண்டுசாத் திரபுராணத் தூயவே தங்களோ டிதிகா சங்கள்
கலக்கமறக் கற்றுத்தேர்ந் தவனுமல்லன் கவிவாணர் தமையடையாக் கசடனேயேன்
வலக்கரத்தி லாழிசங் கேந்தும் வள்ளல் மாயனடி யார்சரிதை மவுலலுற்றேன்.

இதுவுமது.

இச்சரிதை தனிலுள்ள பிழைகள் யாவு மெண்ணும லிதன்பயனைக் கம்பர் போல
இச்சையுடன் சரியான வுரை பயின்றிங் கெல்லோருஞ் சரியென்றே யொப்புக் கொள்ள
எச்சமயத் தரும்பேதா பேதமின்றி யிசைத்திடவு மருணேக்கம் வைத்துக் காக்க
நிச்சயமா யடிபணிந்தேன் தூயஞான நெறியுள்ளோர் நிமலனடி யடையச் செய்வீர்.

முகவுரை.

ஆதிதேவனும், அனாதரக்ஷகனும், ஆபத்பாந்தவனும், ஆதிமத்தியார்த ரகிதனுமான சாக்ஷாத் ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியானவர் வைகுந்தமா நகரத்தில் அஷ்டலட்சுமிகளுந் தன்னைச் சூழ்ந்திருக்க, அனந்த கருடசாந்தர்வ விஷ்வக்சேனாதிகளும் ஆழ்வார்கள் பன்னிருவரும் சேவிக்க ஆதிசேஷன்மீது யோகநித்திரா பரவசராய் திருக்கண்வளர்ந்தருளும்பகவான் உலகத்திலுள்ள சேதனர்கள் மாய்கைக்குள்ளாகி மண்பெண்பொன்னென்னு மூவாசைகளால் பீடிக்கப்பட்டவர்களாகிப் பெண்டுபிள்ளைகளின்மீது அவாமிகுத்து நமது திருவடி ஊயத் துதித்து நிரந்தரம் அழிவில்லாத பதவியாகும் செல்வத்தை யடைந்து மறுஜென்மமில்லாமல் சுகித்திருப்பதை யொழித்து நரக சம்பிராப்தியை யடைந்து சகடக்காலைப்போலப் பிறந்துபிறந்து இறந்து இறந்து அனர்த்தம்பட்டுத் போகின்றார்களே இதற்கு என்னசெய்கிறதென்று யோசித்து அந்தச்சேதனர்களைத் திருத்தி ஆட்கொள்ளும் பொருட்டு ராமகிருஷ்ணாதி பத்தாவதாரங்க ளெடுத்து இவ்வுலகத்திலுள்ள சேதனர்களைத் திருத்துப்பாடு செய்தும் அவர்கள் மாய்கையின் பலத்தால் வழிபட்டு வராமையால் தன்னுடைய அம்சங்களை ஆழ்வாராதிகளாக அவதரிக்கச்செய்து வெகுவாகத் திருத்தியும் மீண்டும் பக்தர்களைச் சிருஷ்டித்து மாயாந்தகாரமான இவ்வுலகத்திலுள்ள ஞானசூனியர்களைத் திருத்திப் பரமபத சம்பிராப்தியை யடைந்து பக்தர்கள் சரித்திரமாகும் இந்த மூன்றும்பாகத்தை மகாராஷ்டிர பாஷையிலிருந்தும் சில பெரியோர்களின் அனுபவத்தை ஒட்டியும் எழுதலாயினேன். அன்றியும் இதைக்கண்ணுறும் ஒவ்வொருவரின் மனதையுங்கரைத்து ஆனந்த முண்டாகச்செய்து ஏழையின்மீது கருணை பொழியும்படி இஷ்டதேவதைகளைத்தோத்திரஞ் செய்யலாயினேன்.

சமர்த்தராமதாசர் சரித்திரம்.

ஸ்ரீமகா லட்சுமிகடாக்ஷம் பொருந்திய கோதாவரிநதிக்கரையில் குருஜாம்ப க்ஷேத்திரமெனுந் திவ்யஸ்தலத்தில் பிரம்மகுலத்தி லுதித்த சூரிய ஜிபந்தென்னும்நாமமுடைய அரிபக்தரொருவரிருந்தார். அவரெப்படிப் பட்டவரெனில் சதாகாலமும் ஸ்ரீ ஹரியைத்தோத்திரம் பண்ணிக்கொண்டிருப்பவர். ஏழைபரதேசிகளை ஆதரிப்பவர். யாசகருக்கில்லையென்னாமற கொடுப்பவர். கனவிலும் பொய் சொல்லாதவர். துஷ்டர்களைக் காணில் வெறுப்படைபவர். பந்துக்கள்விஷயத்தில் பிரியஞ் செலுத்துபவர். சாதுக்களைக் கண்டால் தொண்டர்களுக்குத்தொண்டனாகித்தெண்டன் சமர்ப்பித்து வணங்குபவர். இப்படிப்பட்ட நற்குணங்களெல்லாந் திரண்டு ஒருருவாய்த் தோன்றும் இவருக்கு ஓர்மனைவியிருந்தாள். அம்மாதுக்கு ராணுவவென்னும்பெயர் அவளது நடவடிக்கை எப்படிப்பட்டதெனில் தன் மணாளனைப் போஷிப்பதில் அன்னையைப்போலவும், தொண்டுசெய்வதில் வெள்ளாட்டியைப் போலவும், அழகில் ஸ்ரீ மகா லட்சுமியைப் போலவும், பொறுமையில் பூமி பிராட்டியைப்போலவும், கலவியில் வேசியைப்போலவும், புத்தியில் மந்திரியைப் போலவும் நடப்பவள். அன்றியும் தன்கணவனை விட வேறுதெய்வமில்லையென்று சதாகாலமும் அவர் திருவடிகளைத் தொழுதுக்கொண் டிருப்பவள். அவரது நற்குணங்களைக் கீர்த்தனைகளாகச் செய்து பாடிக் காலத்தைக் கழிப்பவள். அப்புண்ணியவானையே குருவென்றும் மாதா பிதா பந்துக்கள் முதலான நவவித சம்பந்தமாகக் கருதிக்கொண்டிருப்பவள். இத்தியாதி நற்குண நற்செய்கைகளை யுடைய அம்மாது தன்னாயகனுடன் கூடி இல்லறமே நல்லறமென்று இல்லறத்தி லீடுபட்டுக்கொண்டுவருகிறபோது தன் கணவன் கணக்கு ஜீவனத்தினாலே திரண்ட பொருள் சம்பாதித்து வைத் திருப்பதால் எல்லாப் பாக்கியமும் நிறைந்திருந்தும் புத்திரபாக்கிய மொன்று இல்லாக்குறையா யிருந்ததினால் சூரிய ஜிபந்தானவர் மெத்தவும் சிந்தித்துக்கொண்டிருந்து ஒருநாள் ஆதித்தனைநோக்கி உபாசனை செய்தால் அவரதுகிருபையால் புத்திரப்பேறை யடையலாமென்று யோசித்து மறுநாள் காலையிலெழுந்துஸ்நானுட்டானங்களை முடித்து ஆதித்தனை நோக்கி அர்க்கி அர்க்கியம் விடுத்துப் பூசைபுரிந்து தூபதீப நைவேத்தியங்கள் சமர்ப்பித்து வெகுவாகத் தோத்திரம் புரிந்துகொண்டிருந்தார். இந்தப்படி ஆதித்தனை நோக்கிப் பனிரண்டு வருடகாலம் உபாசனை செய்துகொண்டு வருகையில் அவரது பக்தியை மெச்சி ஆதித்தன் பிரசன்னமாக எழுந்தருளக்கண்ட சூரிய ஜிபந்தானவர் எதிர்கொண்டழைத்து வந்து ஆசனத்தின்மீது வீற்றிருக்கச் செய்து சோடசோபசாரங்களும் புரிந்து ஓ சுவாமி! தங்களுடைய தெரிசனத்தால் யானு மென் மனையாளும் புனிதர்களாயினோம். இக்கிரகமும் பாவனமாயிற்று. இனி யெங்களுக்குள்ள சகலகுறைகளும் நீங்கிப்போயிற்று. எங்கள்மனோரதமும்பூர்த்தியாயிற்று. கர்மங்களெல்லாம் தங்களைக் கண்ட பனிபோல உருமாய்ந்து போயிற்றென்று சொல்லி வெகுவாகப்புகழ்ந்து கொண்டாடுவதை யுணர்ந்த ஆதித்தனானவன் மிகவுங் கருணையுடன் அத் தம்பதிகளை நோக்கி ஓ பக்தியிற் சிறந்த உத்தம சீலர்களே? விற்பத்தியிலும் விவேகத்திலும் உயர்ந்த உங்களைப்போன்ற உத்தமர்களை நானெங்குங் கண்டதில்லை. இன்றோடொழிந்தது உங்கள் தொல்லையென்று சொல்லி அத் தம்பதிகளுக்குப் பல ஆசிகள்கூறி உங்களுக்கு வேண்டிய வரமெதுவோ? கேளுங்கள், தருகிறேனென்று மொழிய, அத்தம்பதிகளிருவரும் வினயத்துடன் ஆதித்தமூர்த்தியைப்பணிந்துஓகருணாகரக்கடவுளே? தங்களுக்குத் தெரியாத தொன்றுண்டோஎங்கள்வாய்மொழியைக் கேட்டுத்தெரிந்துப் பின்பளிக்க வேணுமென்ற மனங்கொண்டோ? தாங்களே எங்கள் மனோபாவத்தையறிந்துசெய்யலாகாதோ? ஆயினும் நாங்களெங்களுக்குவேண்டியவரத்தைக் கேட்கின்றோம், தயைசெய்து அவ்வரத்தை யீந்து எங்கள் சிந்தாகுலத்தை மாற்றி எங்களை நற்கதி யடையும்படியான மார்க்கத்திலேற்றி எங்கள் கர்மங்களை யெல்லாம் பெருங்காற்றிலடிபட்ட பஞ்சுபோலத் தூற்றி ஆதரித் தருள்புரியுமையா? வென்றுப் போற்றிப்பலவாறுதோத்திரம் புரிந்து எங்கள் குறைதீர்க்க வெழுந்தருளிய குலவிளக்கே? எங்களுக்கு வேண்டிய வரம் புத்திரபாக்கியமேயாம். அப் புத்திரனும் எப்படிப்பட்டவனாகவிருக்க வேண்டுமெனில், சதாவிஷ்ணு பக்திசெய்பவனாகவும், நற்குணங்கள்யாவும் பொருந்தினவனாகவும், உத்தமனாகவும், உலகிலெல்லோருங் கொண்டாடும்படியானவனாகவுமிருக்கவேணுமென்றுபிரார்த்திக்க, ஆதித்தன் மிகவுங் களித்து ஆனந்த மடைந்து ஓ தம்பதிகளே? புத்திர பாக்கியத்தைக் கோரின உங்

களுக்கு கொண்டியோ? முடமோ? ஏதாவதொருபுத்திரன் கிடைத்தாற் போதாதோ? உங்களுக்குற்ற குறை நீங்கிப் போகாதோ அப்படி கோரிக்கைசெய்யாமல் உத்தமனாகவே யிருக்க வேண்டுமென்கிற பேதாபேதமேனோ? வென்று நவிலக்கேட்டு சூரியஜிபங்தானவர் ஒசுவாமி? "ஏகோபி குணவான் புத்ரோ-நிர்க்குணேன குணேரபி-ஏகசந்திரப்பிரகாசனே -நட்சத்திரங்கிம்பிர யோஜனம்" என்றாற்போல ஆகாய வீதியில் கணக்கிலடங்காத நட்சத்திரங்கள் அனேகமிருந்தபோதிலும் ஒரு சந்திரனுக்கு நிகராகாதது போல, துஷ்டபுத்திரர்கள் அனேகர் பிறந்தாலும், அவர்களால் யாதுபிரயோசனம், உத்தமனாகும் ஒரு புத்திரனுதித்து உலகத்துக்கெல்லாம் தன்குளிர்ச்சியான கிரணங்களைப் பொருந்தச் செய்யும் சாந்தமுடைய சந்திரனுக்கு நிகராவதே போதுமென்றுபணிய, ஆதித்தன் அகமுமுகமு மலர்ந்து ஓதம்பதிகளே! உங்களுக்கிரண்டு புதல்வர்கள் உண்டாகக் கடவர். அவ்விருவரி லொருவன் இல்லறத்துக்குரியவனாகவும் மற்றொருவன் பகவத் பக்தனாகவு மிருப்பனென்று சொல்லி அந்தரத்தில் மறைந்து போயினர்.

இவ்வண்ணம் ஆதித்தன் வரமீந்து போயின பின்னர் அந்தம்பதிக ளிருவரும் அடங்கா மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கச் சிலகாலத்திற்குப் பின் ராணுவவென்னும் அவ்வுத்தமமாதுகர்ப்பவதியாகிப் பத்துமாதமும் பூர்த்தியாகி உடனே ஒருபுத்திரனைப் பெற்றாள். அப்புத்திரனுக்குப் பனிரண்டா நாளில் கங்காதரனென்று நாமகரணஞ்சாற்றி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவர, அச் சிறுவனும் அமாவாசை கடந்த மூன்று நாள் தொடங்கி நாளுக்குநாள் சந்திரனானவன் விருத்தியடைவதைப்போல விருத்தியடைந்து மெத்த செல்வமாக வளர்ந்து ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து வருடமாகவே, உபனயனம் க்ஷௌளம் முதலானவைகளும் நடத்தில் கல்விப் பயிற்சியின்பொருட்டுப் பள்ளியில்வைத்து வித்தை கற்பித்துக்கொண்டு வந்தார். அந்தக் கங்காதரனும் சகல கல்விகளிலுந் தேர்ச்சியடைந்து தக்கவயதடைந்த வுடனே சூரியஜிபங்தானவர் தன்மரபினில் உத்தமியாகிய கன்னிகையைப்பேசிச் சகல மேளவாத்தியங்களும் முழங்கத் திருமணம் புரிவித்துச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவராகி யிருந்தார். கங்காதரனும் இல்லறமே நல்லறமென்றுன்னி மனையாளுடன்கூடி இலௌகிகத்திற்படிந்திருந்தான். இப்படி யிருக்கையில் பதிவிரதையாகிய ராணுவ தேவியும் இரண்டாவது கர்ப்பவதியாகிப் பத்துமாதமுங் கடந்தவுடனே ஆதித்தனீந்த வரத்தின்படி உத்தமபுத்திர னொருவனைப் பெற்றாள். அப்போது பந்துக்க ளனைவருங்கூடிப்பனிரண்டாநாள் நாராயணனென்று நாமகரணஞ் செய்து களிப்பென்னுங் கடலில் மூழ்கினவர்களாகி யிருக்க, இராணுவ தேவி தன் கணவனைநோக்கி ஒபிராணநாதரே? நமது சிறுவனுக்குப் புச்சமிருக்கின்றது. பார்த்தீரா? இந்தக் குருஜாம்ப க்ஷேத்திரத்தி லெத்தனையோ பிள்ளைகளிருக்கின்றார்கள். ஒருபிள்ளைக்காவது இந்தப்படி புச்சமிருக்கக்கண்டதே யில்லை. இதென்னவோ விந்தையினும் விந்தையாயிருக்கிறதென்று நவில, சூரியஜிபங்தானவர் மனைவியை நோக்கி ஒபெண்ணே! என்னிருகண்ணே! நமது புதல்வனுக்குப் புச்சமிருக்கிறதென்று பிறருக்குச் சொல்லவேண்டாம். இப்புச்ச மிருப்பதினாலே நமது புத்திரன் ஏதோ மகிமை யுடையவனாக விருக்கவேண்டும். அதை இன்னுஞ் சில நாளில் நாம் காணலாம். ஆகையால் ஆதித்தன் புகன்றபடி இச்சிறுவன் உத்தமனாகவே யிருப்பான். அதில் கிஞ்சித்தும் சந்தேகமேயிராதென்றுநவில, அந்தஇராணுவதேவியும் கணவன் சொற்படித் தன்புதல்வனுக்குப் புச்ச மிருப்பதை அன்னியர் கண்களுக்குப் புலப்படுத்தாமலும் வெளியிட்டுச் சொல்லாமலு மிருந்ததன்றியும் அப்புதல்வனை மெத்தப் பிரியமாகவும் செல்வமாகவும் வளர்த்துவர, அச்சிறுவனும் வளர்ந்து ஏழுவயதாகவே, உபநயனாதிகளைச் செய்வித்துக் கல்வி பயிலவிடுத்தார். அப் புதல்வனும்சிரத்தாபக்தியுடன் ஒரு வருடத்திற்குள் சகல சாஸ்திரத்திலும் விற்பன்னனாகிச் சற்று நேரமேனும் வீட்டிற் றங்காமல் வெளியிற் சென்று விளையாடி வருவான். அதென்ன விளையாட்டெனில் மரங்களின்மீது பாய்வதும் இம்மரத்திலிருந்து அம்மரத்திற் றாவுவதுமாகிய விளையாட்டை விளையாடி வருவதினாலே தாய் தந்தையர்கள் இச்சிறுவன் ஆஞ்சநேயர் அம்சமுடையவனாக விருக்கவேண்டுமென்று கருதியிருந்தார்கள். இப்படியிருக்கையில் மூத்தகுமாரனும் இடைவிடாமல் இராமத்தியானஞ் செய்துக்கொண்டும் இல்வாழ்க்கையில் மெத்தக் கருத்துடையவனாகவுமிருந்தான். அப்போது பகவானாகிய ஸ்ரீராமசந்திரமூர்த்தி அக்கங்காதரனுக்குச் தெரிசனந்தந்தார். அத்தெரிசனத்திலீடுபட்டுக் கங்காதரனும் தன்னை மறந்து வெகுவாகப் பாடியாடிக் கொண்டாடியபோது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஆஞ்சநேய ரம்சத்தைப்பெற்ற நாராயண னென்னும் சாதுவுக்குத் தன் தெரிசனத்தைக் கொடுத்து ஒபக்த

சிகாமணியே? விரைவில் இராமதாசனென்ற பேரை
வகித்து வெளிப்பட்டு வரக்கடவாயென்று சொல்லி
மாயமாய் மறைந்துபோயினர். உடனே நாராயணன்
தெளிவடைந்து வைராக்கிய மேலீட்டால் காமக்கு
ரோத லோபமோக மதமாச்சரியங்களை விலக்கி மன
த்திருளைப் போக்கி ஞானேந்திரிய ஒளியைத்துலக்கி
ஆசையையடக்கி மனதைமடக்கி நானென்னுமாங்கா
ரத்தை வேருடன்மாய்த்து நீயென்னும் வேற்றுமை
யைத் தேய்த்துப் பேதவாஞ்சையை அடியோடு வெ
ட்டிச்சாய்த்து அபேதக்கடலில் மனதைத்தோய்த்து
தன்னுயிர்போல மன்னுயிரை யெண்ணிச்சதாபகவத்
நாமபஜனை பண்ணிச் சாதுக்களைக் கண்டால் தீர்க்க
தெண்டனிட்டு யோகப்புருடரைக் காணில்அவர்களின்
திருவடிகளில் நண்ணி மூன்றுலகங்களையும் அதில்வசி
க்கும் ஜீவஜெந்து ஜாலங்களையும் பகவத் சொரூபமெ
ன்றுண்ணி நற்குணங்களை யெல்லாம் தனக்குச்சொரூப
மாகக்கருதி அநுதினமும் வீட்டைவிட்டு வெளிப்பட்
டுப் பலதருக்கள் நிறைந்த சோலைகளின்மீது தாண்டு
வதும் பாய்வதும் குதிப்பதுமாக விருக்கையில். இரா
ணுவதேவிகண்டு தன்தனயனைவிளித்துஅடாமகனே
இப்படிப்பட்ட துடுக்குத்தனங்களை யெல்லாம் விடுத்
துக் கல்வியின்மீது சிரத்தையை வைத்து வாசித்துக்
கொள், வாசிப்பைமறந்து போனது மல்லாமல் சம்
சாரவிஷயத்தில் கிஞ்சித்தேனும் மனதைச் செலுத்
தாமலும் அதற்காக வேண்டிய பொருளைச் சம்பாதி
க்காமலும் தானியவஸ்துக்களை வருடத்திற் காகும்
படி சேகரிக்காமலும் ஆபரணாதிகளைச் செய்விக்காம
லும் வீடுவாசலிற் றங்காமலும் விவாகஞ் செய்துகொ
ள்ளும்பொருட்டு அக்கறையில்லாமலும் நமதுவீட்டிற்
காக வேண்டியவஸ்து சம்பாரங்களைத் தேடாமலும்
தெண்டச்சோற்றுக்காரனைப்போல வேளைக்குவந்து
புசித்துவிட்டுப் போகிறாயே? இதுஞாயமோ? அன்றி
யும், வயதுதளர்ந்த தாய்தந்தையர்களாகியஎங்களைப்
போஷிக்கவேணுமென்ற சிரத்தை அணுமாத்திரமு
மில்லையே, இப்படித்திரிந்து வருவதற்குத்தானா, உன்
னைத் தவமிருந்து பெற்றது அடாமகனே? இனியாகி
லும் நல்லபுத்தியை வருவித்துக்கொண்டு நல்லொரு
டன்கூடி சம்சாரத்தில் மனதைப் பொருந்தவைத்துப்
பொருளையேனுந் தானியங்களையேனுஞ் சம்பாதித்
துக் கொண்டுவந்து எங்களையெல்லாங் காப்பாற்றப்
பா? என்று பலவிதங்களாகப் புத்திசொல்லக் கேட்டு
நாராயணன் உடனே ஒரு இருட்டறைக்குட்சென்று
அங்கிருக்கும் தானியங்களைக் கொட்டும் தொம்பை
க்குளுட்கார்ந்து கொண்டு மௌனநிலையி லிருக்கத்
தாய் தந்தையர்களிதை யறியாமல் புதல்வனைக்கா

ணோமே எங்குப்போனானோ? என்னவானானோ? வெ
ன்று தருக்கள் நிறைந்தசோலைகளிலும் இடுக்குகளி
லும் இருட்டொடுக்குகளிலும் மூலைமுடுக்குகளிலும்
உறியடுக்குகளிலும் கூடத்திலும் முனிவர்கள் மடத்தி
லும் பெண்கள்செய்கூடத்திலும் புகைபோகாவிடத்தி
லும் அணிலெனவே தொத்தி அணியணியா யொற்றி
அணைகளெல்லாந்தத்தி அணுவணுவாகச் சுற்றித்தே
டித்திரிந்து கால்களுந்தேய்ந்து ஓய்ந்து சோர்ந்து மக
னே? மகனே?? அழகான முகனே? முகனே?? யெ
ன்று இரவும்பகலுங் பதறிக் கதறிக்கொண் டிருந்த
பின் அந்த இராணுவதேவியானவள் சிந்தா குலத்து
டன் மறுநாட்காலையில் சமையல் செய்யும்பொருட்
டுத் தானியமெடுக்கவேண்டி அவ்வறைக்குட்சென்று
தானியமெடுக்கையில் அத்தொம்பைக்குள் உட்கார்ந்
திருக்கும் மகனைக்கண்டு அடாமகனே? இதற்குளுட்
கார்ந்துகொண்டு என்ன செய்கிறாயடா? நேற்றுப்பக
லிரவு முழுவதும் உன்னைக்காணாமல் தேடித்தேடிப்
பலவிடங்களிலுஞ் சுற்றி யலைந்தோமே, உன்னை வீட்
டிற்குள்ளேயே வைத்துவிட்டு இடையன் ஆட்டைத்
தோளின்மீது வைத்துக்கொண்டு காணோமேயென்று
தேடியதைப்போல உன்னைத் தேடித் திரிந்தோமே
என்றுசொல்லி மகனை அத்தொம்பையில் நின்றும்
வெளிப்படுத்தி அடாமகனே? இருளடைந்திருக்கும்
இத்தொம்பைக்குள் பயமின்றி நீ தனித்திருப்பதற்
குக் காரணம் என்னவென்றுவினவ, அதற்கந்த நாரா
யணன் அன்னையைநோக்கி ஓஅம்மணி? இவ்வுலகின்
கண்வசிக்கும் சம்சாரிகளைப் பார்க்க வென்மனஞ்சம்
மதிக்கவில்லை. ஆதலால் இத்தொம்பைக்குள்ளே உட்
கார்ந்துகொண்டு மறைவாகவிருந்தேன். இதுவேகா
ரணமென்றுசொல்ல, அந்த இராணுவை அதைக்கே
ட்டுச் சிரித்துத் தன்கணவனை நோக்கி ஓபிராணநாய
கரே? நமதுபுதல்வன் இதோ இவ்வறை வீட்டிற்குள்
ளிருக்கும் தானியத் தொம்பைக்குள் உட்கார்ந்திருக்
கக்கண்டயான் அடாமகனே? கிஞ்சித்தேனும் பய
மின்றி நீ தனித்திங்கிருப்பதற்குக் காரண மென்ன
வென்று விசாரணைசெய்தேன். அவனதற்குப் பதிலு
ரைத்த தென்னவென்னில். இவ்வுலகத்தில் வசிக்கும் சம்
சாரிகளைப் பார்க்க என்மனஞ் சம்மதிக்காமையால்
இந்தத் தொம்பைக்குள் மறைந்துகொண்டு, தனியே
யிருந்தேனென்றான். இதென்ன விந்தையாயிருக்கின்
றது. இத்தனை சிறுவயதிலேயே சம்சாரிகளைப் பார்
க்க மனஞ்சகிக்கவில்லையென்று அவன்புகலுவதுவெகு
காலமாய்ச் சம்சாரத்தில். அடிபட்டவனுக்குக் கூட
கொஞ்சத்தில் கொஞ்சம் சித்தப்பிரமை யுண்டாக
இந்தச் சம்சாரத்திலேயே உழன்று கொண்டிருக்க

இவனெம்மாத்திரம்? கத்தரிக்காய்க்குக் காலுங்கையு முளைத்தாற்போலிருக்கும் சாணளவுப் பையனுக்கு இத்தனை விர்க்தி சம்சாரத்தி லிடத்தி லுண்டாவதற்குக் காரணமொன்றுந் தெரியவில்லையே என்றுமொழிய, சூரியஜிபந்துகேட்டு அகமுமுகமு மலர்ந்து ஓ பெண்ணே இச்சிறுவன் வயது முதிர முதிர வெகு சமர்த்தனாக விருப்பானென்று சொல்லிப் பின்னும் ஓ வனிதைகளி ரத்தினமே இச்சிறுவன் சூரியனது வரப்பிரசாதத்தினா லுண்டானவனாகையால் இவனது மகத்துவம் நாளுக்குநாள் அற்புதமாக விருக்குமென்று நம்புகிறேனென்று நவில, நாராயணன் கேட்டுத் தன் அன்னையைநோக்கி வினவத் தொடங்கினான்.

ஓ என்னை யீன்றெடுத்ததாயே? விஷய வாஞ்சையென்பதென்ன? அதைவிவரித்து எனக்குத்தெரியும்படி சொல்லவேண்டுமெனறு வேண்டிக் கொள்ள. அந்த இராணுவை தனயனைநோக்கி அடா என்கண்மணியே இல்லறமே நல்லறமென்று கருதி அந்த இல்லறத்திற்கு வேண்டிய தானியங்களைச் சம்பாதித்து வீட்டிற்குக்கொண்டுவருவதே விஷயவாஞ்சை, இந்தப்படி உலகிலுள்ள ஜனங்களெல்லவரும் நடப்பதே மானிடஜென்மமெடுத்ததற்குப் பயன், ஆகையால் எல்லோரும் இந்தப்படியே நடப்பார்கள் என, நாராயணன் நாமும் தாயின்சொற்படி நடக்கவேண்டுமென்றுன்னி வீட்டைவிட்டு வெளிப்பட்டு விரைவாகநடந்து ஒரு கிணற்றினருகிலிருந்து அங்கொரு தானிய மூட்டை கிடக்கக்கண்டு அம்மூட்டையானது ஆறு பேர் சுமக்கத் தக்கதாயிருந்தும் அதையவலீலையாயெடுத்துத் தன்தலைமீது வைத்துக்கொண்டு வீட்டைநோக்கி நடந்து அம்மூட்டையை வீட்டிற்குள் கொண்டுபோய் இறக்கிவைத்து அன்னையை நோக்கி ஓ அம்மணி! நின்சொற்படி தானியமூட்டை யொன்று இதோ கொண்டுவந்தேன் உன்னிஷ்டப்படி அத்தானியங்களை யெடுத்துக் கையாண்டுகொள்ளக் கடவாயென இராணுவையும் அம்மூட்டையைக்கண்டுமகிழ்ந்திருந்தாள். அப்போது தானியத்திற்குடையவர்கள் விரைந்தோடிவந்து ஓஅம்மணி! எங்கள் தானியமூட்டையொன்று அதைச் சுமப்பதற்கு ஆறுபேர்கள் வேண்டும், அத்தனை பளுவாகிய மூட்டையை நினது புதல்வனாகிய நாராயணன் ஒருவனே அவலீலையாய்த் தலைமீது சுமந்துகொண்டு வந்துவிட்டான. அந்தத் தானியமூட்டையைத் தயைசெய்து எங்களுக்குக்கொடுத்தனுப்பும் அம்மணி? என்று வேண்டிக்கொள்ள, அம்மாது இவர்கள் தானிமூட்டையை தமது புதல்வன் எடுத்துக்கொண்டுவந்து விட்டதாற்போலிருக்கின்றது என்று கருதியதுமன்றி, இத்தனை பாரமுள்ள மூட்டையை எப்படி சுமந்துக்கொண்டு வந்தானோ, இதுமெத்த ஆச்சரியமாக விருக்கிறதேயென்று பிரமித்து ஆ? ஆ? இதென்ன விந்தையாக விருக்கின்றது இவனுடைய நடவடிக்கை என்று வெகுவாக யோசித்து அவன்விஷயத்தில் மெத்த விசுவாசித்து நாராயண நாமத்தைக் கோஷித்து வந்தவர்களை மிகவும் பூஷித்து அந்தத் தானிய மூட்டையை அவர்களுக்கீந்து கொண்டுபோங்க ளென்று நயவசனங்கள் நவின்று அனுப்ப, அவர்களும் சந்தோஷ சித்தர்களாகி அந்தத் தானியமூட்டையை அவ்வாறு பேர்களுஞ் சுமந்துக்கொண்டு போயினார்கள். அவர்கள் போயினபின் முன்போலவே தானியமூட்டை யொன்று அங்கு இருக்கக்கண்டு இராணுவையானவள் மெத்த வியப்படைந்து தன்கணவனை விளித்து ஓஎன் பிராணநாயகரே? இந்தஆச்சரியத்தைப்பார்த்தீரா? அதென்னவெனில் நமது இளையபுதல்வன் ஆறுபேர்கள் சுமக்காத தானியமூட்டை யொன்றைப் பயப்பட அவலீலையாய்த் தானொருவனே சுமந்துக் கொண்டுவந்து இதோவிருக்கும் மூட்டை யிடத்தில் வைத்தான் உடனே அந்தத் தானிய மூட்டைக்குடையவர்கள் ஆறுபேர் வந்து அம்மூட்டையை எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள். அந்த தானியமூட்டை இப்போதுமிருக்கிறது இந்த விந்தையால் நம்முடைய புதல்வனது மகத்துவம் விசேஷமென்று மிகவும் தெரிய வருகிறது இப்படிப் பட்ட உத்தமசீலனுக்கு விரைவினில் திருமணம் புரிவிக்க வேண்டுமென்று கருதுகின்றேன். தங்களுடைய சித்தமெப்படியோ அந்தப்படியே அடியாள் நடந்துகொள்ளச் சித்தமாக விருக்கிறேனென, சூரியஜிபந்தானவர் அக்கருத்துக் கிசைந்து தங்கள் மரபினில் உத்தமசீலலட்சணங்கள் வாய்ந்த ஒரு கன்னிகையைப்பேசி அதற்காக வேண்டிய வஸ்திகாபாரணாதி சாமக்கிரியைகளைச் சேகரஞ்செய்து பச்சைப்பந்தல் போடுவித்து அதில் மலர்மாலைகளைத் தூக்கி யலங்கரித்து வாழை கமுகு பாவிலைகளைகட்டி இதற்கு நிகரில்லையென்று சொல்லும்படியாக விவாக மண்டபஞ் செய்வித்துப் பலவித மங்கள வாத்தியங்கள் கோஷிக்க, பிராமணர்கள் வேதவாக்கியங்களால் ஆசிகூற, பிராமணஸ்ரீகள் மங்களவாழ்த்துகள் வாழ்த்த பகவத் பக்தர்கள் பல்லாண்டிசைக்க பாடகர்கள் பண்பாட, தம்பதிகளுக்கு ஸ்னானஞ் செய்வித்து ஆடையாபரணங்களா லலங்கரித்து மணவறையினுட் காரவைத்துப் பலவித சடங்குகளையும்நடப்பித்துமங்களசூத்திரம் மிடற்றிற் கட்டும்பொருட்டுத் தம்பதிகளை யெழுந்து நிற்கும்படி சொல்லி இருவருக்கும்நடு

வில் திரைபோடுவித்து நிதானமாகவும் பொறுமையாகவுஞ் செய்யுங்களென்று பிராமணர்கள் நவில, அப்போது நாராயணன் உபாத்தியாயரை நோக்கி ஓ எனது சற்குருநாதரே? பொறுமையாக நடக்கட்டுமென்று ஓவென்று கூச்குரலிட்டார்களே, அஃதெதற்காகவென்றுவினவ, அங்கிருந்த மைத்துனர்கள் சிலர் வரனைநோக்கி ஓமாப்பிள்ளையே? பந்தமும் விலங்கும் இனி நீரனுபவிக்க வேண்டுமென்று தெரியச் சொல்லும் பொருட்டு யூகமாக அதனைக்குறித்துஜாக்கிரதைப் படும்படி பிராமணர்கள் இவ்விதம் நவின்றார்களென, அதனைக்கேட்ட வரன் மெத்தவும் சிந்தித்து ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை வெகுவாகத்துதித்து ஓ என் பிராணநாதரே? பந்த பாசங்களுக்குக் காரணமாகிய இந்த விலங்கிலிருந்து நான் தப்பிப்பிழைக்கும்படியான நற்புத்தியைத்தந்து என்னைக்காப்பாற்றுமென்னப்பனே! ஒப்பிலாதவனே? என்றுபலவாறு தோத்திரம்புரிந்து அருகிலிருக்கும் தாய்தந்தையர்களைநோக்கி இவர்களே நமக்குப் பகையாளிகளாவர். இனியிவர்கள் முகத்திலெந்தக்காலத்திலும்விழிக்கவே கூடாதென்று கருதி யாரிடத்திலுஞ் சொல்லாமல் அப்பொழுதே அவ்விடத்தை விட்டும் விரைந்தோடிக் கானகத்தை யடைந்தவர்.

இவ்வாறு மாயவலையிலகப்படாமல் தப்பித்துக்கொண்டோடும் வரனைப் பந்துக்கள்விடாது பின்றொடர்ந்தோடியும் அவன் அவர்கள் கண்களுக்குப்புலப்படாமல் மாயமாய் மறைந்துபோக, அவர்கள் அவனை அந்தக்கானகமெல்லாந் தேடித்தேடி முகம்வாடி கால்கள் நோயால் வேதனைப்படத் தாபமீறிப் பலவாறு தூறி பகவானைக்கோரி இனியெனன செய்கிறதென்றுப் பால்மாறிக் காட்டைவிட்டு நாட்டையடைந்து உம்முடைய புதல்வனைக் கானகமெல்லாந் தேடியும் எங்குங் காணாமையால் திரும்பி வந்தோமென, அவ்வசனத்தைக் கேடட தாய்தந்தையர்களும் நாட்டைவிட்டுக் காட்டையடைந்து புதர்களிலும் சந்துபொந்துகளிலுந் தேடித் தேடித்திரிந்து சிரமத்தினால் சலித்து நாமென்ன செய்யலாமென்று பலவாறு துக்கித்து நாட்டையடைந்தும் புத்திர வாஞ்சையினால் மனதை நிறுத்தவுந் திறப்படுத்தவுங் கூடாமையால் சிலரைக் கூட்டிப்பல குதிரைகளையுமீந்து நீங்களிவைகளின்மீதேறிச் சென்று கானகத்தை யடைந்து எமது புதல்வனைத் தேடிக்கண்டுபிடித்து அவனைவிடாது குதிரையின் மீதேற்றிக்கொண்டு வாருங்களென்றனுப்ப, அவர்களும் அந்தப்படி குதிரையின் மீதேறிச் சென்று காட்டையடைந்து பலதிக்குகளிலுந் தேடியுங் காணாமையால் திரும்பிவந்து தாய்தந்தையர்களுக்கு அவனைக் காணோமென்று சொல்லிப் போயினர்கள் பின்பு தாய்தந்தையர்கள் தீராத் துயரக்கடலில் மூழ்கினவர்களாகி மகனே? மகனே? என்று கதறிப் பதறியழுது கொண்டிருக்கும்போது மூத்தகுமாரனாகிய கங்காதரன் பார்த்து அவர்கள்படுந் துக்கத்தை சகியாதவனாகி ஓ அன்னை தந்தையர்களே? என் தம்பியாகிய நாராயணன் மகாப் பலசாலியானமாருதியம்சத்தைப் பெற்றவனாகையால் அந்தமாருதியைப்போலவே விஷயவாஞ்சையின்றிச் சர்வத்திலும் ஆசையற்றவனாகவும் பகவந் நாமபாராயணத்தில்மனதைப் பதியவைத்தவனாகவுமிருப்பவன் ஆதலால் அவன் விவாகவிஷயத்தில் சம்மதமின்றிக் கானகத்தையடைந்துவிட்டான். அன்றியும் அவனுக்கு இந்த விவாகப் பிரயத்தனஞ் செய்யாமல் நீங்களிருப்பீர்களேயாகில் அவன்வீட்டை விட்டுக் காட்டிற்குப் போவானேன்? போகமாட்டான். பவக்கடலை யடையாமல் கிரகதர்மத்தை விடாது இங்குதானே இருந்துகொண்டு அநேகம்பேர்களைக் காப்பாற்றியும் பலசிஷர்களுக்குத் தான் ஆசானாகியுமிருப்பான். அவன்காட்டையடைந்ததற்கு விவாகமே காரணமாகவிருந்தது. ஆகையாலவன் பொருட்டு நீங்கள் சிந்திக்கவேண்டுவதில்லையென்று சொல்லவே அத்தாய்தந்தையர்கள் (புத்திர துக்கம் நிரந்தரம்) என்றாற்போல மரணமடைந்தபுதல்வனைக் குறித்துத் தாய்தந்தையர்கள் சதாகாலமும் துக்கமடைவாரானால் உயிரோடு போயின புதல்வனைப்பற்றித் துக்கப்படாதவர்களுமுண்டோ? ஒருவருமிராரென்பது போல இவர்களிருவரும் அந்நாராயணன்மீது மனதை மாறாமல் வைத்துச் சிந்தனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இங்கு இவர்களிப்படித் தீராத துக்கத்துடனிருக்க, அங்கே கானகத்திலிருக்கும் நாராயணன்கொடிய துஷ்டமிருகங்கள் பெருத்தகூட்டமாகக் கூடியிருந்தபோதிலும் அணுவேனும் பயப்படாமல் அரையில் அரைஞாணும் கௌபீனமுந் தரித்துக்கொண்டு உலகவாஞ்சையை மறந்துபரமார்த்தத்தைக் காணும் பொருட்டு நாராயணா ஹரிஓம் நாராயணா வென்று துதிசெய்துக்கொண்டு அஞ்சனா தேவிக்குப் புதல்வனும் ஸ்ரீராமருக்குத் தூதனும் வஞ்சமாயாப் பிரபஞ்சத்தை மறந்த அவதூதனும் சஞ்சீவிராயனுமானமாருதியை இடைவிடாது தன்மனதினில் தியானித்துக்கொண்டிருந்தும் அந்த ஆஞ்சநேயர் பதில் சொல்லாமலும் ஏனென்று கேளாமலுமிருப்பதைக்கண்டு அவன் தேகத்தினிடத்தில் ஆசையற்ற தேவனெவனோ

அவனையே காணத்தகுமென்று கருதி அங்கிருக்கும்
செடிகளின் கொடிகளை யறுத்து அக்கொடிகளை மற்
றொருமரத்தினில் கட்டி அக்கொடிகளாகிய கயிற்றி
னில் தன்னிரண்டு பாதங்களையுங்கட்டிக்கொண்டு அம்
மாருதியினுடைய திருவடித்தாமரைகளைத் தெரிசிக்
கும்பொருட்டு ஆஞ்சநேயா? காஞ்சனகாயா? தூயா?
அப்பிரமேயா? சஞ்சீவிராயா? ஏழையாகிய அடி
யேன்மீது கிருபைகூர்ந்து விரைவினில்வந்திரட்சியும்
சுவாமி? முன்னம் ஸ்ரீராமபரமாத்துமாவானவர் தன்
னுடைய பரமரதத்தை யடையும்போது தேவரீரைத்
தமக்குத் தாசனாகச்செய்து கொண்டார். இவ்வுலகத்
தினில் அபாரமான கிருபைக்கடலே? பக்தர்களுக்கு
நேசரே? விசுவாசரே? எனக்கு தாய் தகதையர்கள்
நீரேயென்று நம்பினேன். இப்படிநம்பிய என்னிடம்
குறியாக தேவரீர்வந்து தெரிசனந் தராவிடில் இத்தே
கத்தை அடித்துக் கொல்லுவேன் பாருமென்றுப்பல
விதமாக வேண்டிப் புகழ்ந்து கொண்டிருக்கையில்
ஆஞ்சநேயருக்குக் கிருபையுண்டாகிக் கோடிசூரியர்
கள் உதையமானாற்போல எழுந்தருளி நாராயணனு
க்குச் சேவைதந்து அப்பாநாராயணா? உனக்கேனித்
தனை ஆயாசமுண்டாயிற்று. சம்சாரத்திலிருந்து மண
ப்புரிந்து பந்தத்திலகப்படலாகாதென்ற பயமேவீ
ட்டால் இங்குவந்து என்னைக் குறித்துத் தியானித்து
னொந்தையோ? என்னைக்காண வேண்டுமென்ற அவா
மிருந்தையோ? வென்று பல உபசாரவார்த்தைகளா
டிக் காலிற் கட்டிக்கொண் டிருக்குங் கொடிகளையவிழ்
த்து மேன்மையாகத் தேகத்தைத் துடைத்து என்ன
ப்பனே? ஒப்பிலாதவனே? யென்று ஆலிங்கனஞ்செ
ய்துகொண்டு அவனைப் பார்த்து சொல்லத் தொடங்
கினார். இளஞ்சூரியனைப் போலப் பிரகாச ஒளிபெற்
றோங்கிய சிறுவனே? அழகானமுகனே? மாசிலா
மணியே? கற்பகக்கனியே? நாமிருவரும் பஞ்சவடி
தீரத்திற்குப் போகலாம் வருவாயப்பா வென்றுசொ
ல்லிக் கையைப் பற்றியழைத்துக் கொண்டே நடந்து
போகிறபோது எனது அம்சத்திற்பிறந்த நினக்குஸ்ரீ
ராமபரமாத்துமாவின் கிருபையினாலே சகலபாக்கிய
ங்களு முண்டாகக்கடவது அன்றியும் உனக்குச்சித்த
தெரிசன மாகுமென்று சொல்லிக்கொண்டே நடந்து
பஞ்சவடி தீரத்தையடைந்து அங்குப் பக்தர்கள் பெ
ருத்தகோஷ்டி சேர்ந்து பஜனைசெய்து கொண்டிரு
ந்து அர்த்தராத்திரியில் அவர்கள் தங்கடங்களிருப்பி
டஞ்சேர, உடனே நாராயணனை ஆஞ்சநேயரழைத்
துக்கொண்டு சன்னிதிக்குட் புகுந்து ஏகாந்தமாக ஸ்ரீ
ராமச்சந்திரமூர்த்தியைக் கண்ணாரக்கண்டு சேவித்து
வில்லும் பாணமும் அலங்காரமாகிய கிரீடமும் ஒளி
பெற்றோங்குங் கோடி சூரியனைப்போலப் பிரகாசம்
பெற்றிலங்கக் கடககங்கண கேயூர பீதாம்பரமும்
கௌத்துவாபரணமும் அரையில் சூத்திரமும் நூபுர
ங்களும் தண்டை கொலுசுகளும் கலகலவென்று சத்
தமிட, அழகுமிகுந்த சுந்திரரூபத்தைக் கண்டு மாரு
தியானவர் பக்தி சிரத்தை அதிகரித்து அப்பகவானு
டைய திவ்ய திருவடித்தாமரைகளில் விழுந்து நேத்தி
ரங்களைப் பொருந்தவைத்துத் தன்தேக புளகாங்கித
மடைந்திருக்கக்கண்டு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஆஞ்ச
நேயரை ஆதரித்து ஓ? மாருதியே! உன்னுடன் அன்
னியனொருவனை அழைத்துக்கொண்டு வந்த காரண
மென்னவென, அதற்கு மாருதி என்னாண்டவரே?
இச்சிறுவன் என்னம்சம் பெற்றவன் இவனுக்குத்தே
வரீரது கிருபாநோக்கம் வைத்துப் பக்திவுண்டாகும்
படிசெய்து பாதுகாத்தருளும் சுவாமியென்று இருவ
ரும் பேசியதை நாரணன்செவியிற் கேள்விப்பட்டுத்
தனக்குத் தெரிசனங்கிடைக்காமற் போனை கொள்
கையை நோக்கி அன்னவன் எனதையனே? பகவா
னுடைய தெரிசனமாத்திரம் எனக்குக் கிடைக்காமற்
போன காரணமேதோ? யான்முன்னஞ் செய்த கர்ம
மோ? மாபாவியாகிய எனதுதேக மிவ்வுலகி லிருந்
தென்னபலன்? இறந்தென்னபலன்? இவ்விரண்டும்
ஒன்றேயாம்? இதற்குத்தக்க பதில்சொல்லி அடியே
னுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்யுமையா என்
னாண்டவரே? என்று வேண்ட, அதற்குமாருதிநாரா
யணனை நோக்கி அப்பா என்னம்சம்பெற்றுப்பிறந்த
பாலனே? மதியிற்சிறந்தசீலனே? பகவானுடையரூப
மானது நேத்திரங்களுக்குப் புலப்படாம லிருப்பதற்
குக் காரண மேதென்றால் குருவுபதேசம்பெறாமலும்
குருவின்பரிபூரணகடாட்ச முறாமலும், குருவின்கரங்
கள் சிரசின்மீதுபடு மனுக்கிரக மடையாமலு மிருக்
குங் குறையேயென்று சொல்லிச் சந்தேகத்தை நிவர்
த்திசெய்து ஸ்ரீரகு ராமச்சந்திரமூர்த்தியை நோக்கி
மூவுலகிற்குங் காரணவஸ்துவாகிய எனதையனே?
என்றுமழியாத மெய்யனே? கோதண்டக்கையனே?
தேவர்களும் முனிவர்களும் புகழ்ந்துகொண்டாடுந்
துய்யனே? அப்பிரமேயனே? அன்பர்கள் நேயனே?
செங்கனிவாயனே? மகிதலமெங்கும் நிறைந்த மாய
னே? விரைவாக இச்சிறுவனுக்குப தேசித்துக் காத்
திரட்சிக்க வேண்டும் சுவாமியென்று வேண்ட ஸ்ரீரா
மச்சந்திர மூர்த்தியானவர் உடனே தன்வலது கரத்
தை அச்சிறுவன் சிரசின்மீதுவைத்துத் தாரகமந்திர
த்தை உபதேசித்துப் பரிபூரண கடாட்சமழை பொ
ழிந்தார். உடனே அந்த நாராயணன் தாரகமந்திரத்
துக் கதிபதியாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைக் கண்

கள் குளிரச் சேவித்துத் தன்னைமறந்து புளகாங்கிதமடைந்து நிற்கவே, அவனைநோக்கி ஓபுதல்வா? நீ இன்றுமுதல் இராமதாசனென்னப் பேர்படைத்துச் சகல ஜனங்களாலுங் கீர்த்தியடையக் கடவாயென்று வரமுந்தந்து பின்னும் ஓ இராமதாசனே? இப்போது னக்குபதேசஞ் செய்த தாரகநாமத்தை இரவும் பகலும் இடைவிடாது பலருக்கும் போதித்து நம்மைத் துதித்துக்கொண்டாடும் படியாய் அவர்களைத் திருத்தி நமது பரந்தாமத்தை யடையும்படியான கிருஷியைத் தேடிச் சிஷவர்க்கங்களுடன் பக்தி செய்துகொண்டிருக்கக் கடவாயென்றும் சொல்லி ஆஞ்சநேயரை நோக்கி அப்பா மாருதி இந்த வஸ்திரத்தை இராமதாசனுக் களியுமென, அதற்கு மாருதியும்? ஓ சுவாமி தங்களுடைய கரங்களாலேயே தாங்களளித்தால் மிகவும் நன்மையுண்டாமென. அந்தப்படியே ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கானகத்திற்குள்ளேகும் சமயத்தில் அப்பா இராமதாசனே! இந்தவஸ்திரம்யான் தரித்துக்கொண்டிருந்த வஸ்திரம் இதனை நீதரித்துக்கொண்டு பக்திசெய்வாயாகில் இதுவே தீக்ஷை பெற்றதற்கு அடையாளமாகும். ஆகையால் உடுத்திக்கொள்ளென, அந்தப்படியே இராமதாசரும் அவ்வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு பகவானைநோக்கி ஓ ஆபத்பந்துவே அநாதைகளுக்கு நாதனே தேவரீரை விடுத்து நான்போவது எப்படி? வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத அகோசரமாகிய உமது சொரூப ரூபங்களிற் சேர்ந்து சுகமறிந்த யான் தங்களைவிட்டுப்பிரிந்தெவ்வாறு உயிர்தரிப்பேன், சகுணரூபனாகிய உமக்குச் சதாகாலமும் சகல தொண்டுகளுஞ் செய்துகொண்டிருப்பது என்க்கு மெத்தக்களிப்பாகும் பிரகுணமாக தேவரீரை பக்தியுடன் பாடியும் விடாமலிருப்பது மெத்தநன்றாகும். தீனர்களுக்குப் பந்துவென்னும் விருதுவகித்த பிரதாபத்தை என்னிடத்தில் தெரியப்படுத்தினீர். அப்படியே யானுமும்மிடத்தில் பக்திசெய்து கொண்டிருப்பதே யெனக்கு சம்மதமாகவும் மனதுக்குத் திருப்தியாகவு மிருக்குமென்று பணிய, அதற்கு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி இராமதாசரை நோக்கி எனக்குகந்த பக்தனே நற்குணங்களெல்லாந் திரண்டேருருவாய் வந்த முக்தனே? நீகிஞ்சித்தேனும் என் பிரிவைக்குறித்து விசனப்பட வேண்டாம். யானெப்போது முன்னைவிட்டுப்பிரியாமலிருப்பேன், அன்றியும். நீஎப்போது வருந்தியழைக்கின்றாயோ? அப்போது யான்வந்து தெரிசனந்தந்து போகிறேனென்றுசொல்லி இராமதாசர் மனதைச் சம்மதிக்கச்செய்து ஆஞ்சநேயரை நோக்கி ஓமாருதி இந்த இராமதாசனது வாஞ்சைகளேதேதோ அவைகளையெல்லாம் வஞ்சகமின்றிக் கொடுத்து மனத்திருப்தியடையும்படி செய்யக் கடவாயென்று சொல்லி இருவரையுங் கூட்டியனுப்ப, அவ்விருவரும் பகவானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு நடந்து டாக்கலிபுரத்தை யடைந்தார்கள். பின்னர் இராமதாசர் ஆஞ்சநேயரை நோக்கி ஓசுவாமி ஸ்ரீராமாயண காவியத்தை அடியேன்கேட்டு ஆனந்தமடையும் பொருட்டுஅருள் புரிந்து புனிதனாகும்படி கிருபாநோக்கம் வையுமையாவென்று வேண்டிக்கொள்ள, மாருதியும் மெத்த சந்தோஷத்துடன் ஸ்ரீமத்ராமாயணகாவியத்தைஆதிமுதலாகத் தொடங்கி அந்தப்வரையில் தன்னருள் வாக்கினாற் புகன்று பிரம்மானந்த மடையச் செய்து விரைவினிற் புனிதனாகக் கடவாயென்று ஆசிகூறினார் அந்தப்படியே இராமதாசரும் அந்த டாக்கலிபுரத்திலிருக்கும் பெரியோர்கள் கேட்டு ஆனந்திக்கும்படி ஸ்ரீஆஞ்சநேய இராமாயணத்தைக் காலக்ஷேபஞ்செய்துக்கொண் டிருக்கையில், மேலுமேலும் அவ்வூர் ஜனங்கள் பெருத்த கூட்டமாகக்கூடிக் கேட்டு என்ன பக்திரசம் என்ன பக்திரசம், ஆஹா இதுபரியந்தம் எத்தனையோ புராணீகர்களிடம் கேட்டிருக்கின்றோம் இவ்வளவு சாராம்சமாக விருக்கவேயில்லை, இந்தப் புண்ணியபுருடன் வாக்கிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வாக்கியமும் அற்புதமாகவே யிருக்கின்றதென்று புகழ்ந்து வெகுவிமரிசைபாய்க் கொண்டாடினார்கள்.

அவரிப்படி இராமாயணஞ் சொல்லிக் கொண்டிருக்க, ஆஞ்சநேயருஞ் சிலநாளிருந்து இராமதாசர் சொல்லும் இராமாயணக் காலக்ஷேபத்தைக் கேட்டு பிரம்மானந்த மடைந்து அவரைநோக்கி விற்பத்தியிலும் பக்தியிலும் சிறந்த சீலனே! இன்னும் நீ பிரவீணவரக்கை யுடையவனாகக் கடவாயென்று ஆசிர்வாதம் புரிந்து நான் போய்வருகிறேனென்றுவிடைபெற்றுக்கொண்டு நடந்து சேதுவை யடைந்திருந்தார். இங்கே இராமதாசர் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்வதை அந்த டாக்கலியூருக்குச் சுற்றுப்பக்கங்களிலிருக்கும் ஊர்களில் வசிக்கும் பண்டிதர்களெல்லாம்வந்து கேட்டு ஆனந்தித்துப் போவார்கள், இந்தப்படியாய்த் தினந்தோறும் பண்டிதர்களெல்லாம் வந்துகேட்டு ஆனந்தித்துக்கொண்டிருக்க, அவர்களிலொருவர் உத்தவரென்று நாமப்பெற்ற உத்தமர். அவர் இராமதாசர் திருவடிகளில் சரணாகதி யடைந்து எழுந்திராமற் கிடக்க, இராமதாசர் அந்த உத்தவருடைய பக்தி ஞான வைராக்கியத்தைக்கண்டு ஸ்ரீராமர் கிருபையைப் பெற்றுய்யக் கடவா யென்று

ஆசிர்வாதம் புரிந்து தன்னஸ்தத்தை அவ்வுத்தவர் மஸ்தகத்தின் மீதுவைத்துப் பூரணபக்தி யுண்டாக்கும்படி கிருபைபுரிந்து ஆதரித்தார். அவ்வுத்தவரும் இராமதாசரையே தெய்வமென்றும் ஆசானென்றும் தந்தையென்றும் தாயென்றும் நவவித சம்மந்தமாகப் பாவித்துத் தொண்டுபுரிந்து கொண்டிருக்க,இராமதாசரும் அவ்வுத்தவரது பக்தி சிரத்தையைக்கண்டு மெத்த சந்தோஷமடைந்து ஆஞ்ச நேயரைப்போல சிலர் விக்கிரகமொன்றுசெய்வித்து அதைஸ்தாபனஞ் செய்து கும்பாபிஷேக முதலானவைகளை ம் நடத்தித் தினந்தோறும் பூசைதப்பாமல் செய்துகொண்டு வருகையில், அந்தச்சிலாரூபத்தில் ஆஞ்சநேயர் மூர்த்திகரம் பூரணமாகப்பிரகாசித்தது, உடனே அனேக மகத்துவங்களைக்காட்டி யெல்லோருக்கும் அதிக உல்லாச முண்டாகும்படிகூட்டி எங்குமவர் பிரபாவமுண்டாகும்படி நீட்டி அஞ்ஞான பந்தங்களை யோட்டி அவர் திருவடிகளை மறவாமலென்றுஞ்சிரத்திற்சூட்டி யாவருக்கும் ஆனந்தாமிர்தத்தையூட்டி யிடைவிடாமல் பக்திசெய்துக்கொண்டிருந்தார். பின்புஒருநாள் உத்தவரைநோக்கி அப்பா ஒப்பில்லாத பக்தனே ஜீவமுக்தனே இன்றுமுதல் காலையிலெழுந்து ஸ்நான அனுட்டானங்களை முடித்துக்கொண்டு ஆஞ்சநேயருக்குப் பூசைகள் நடத்துவதோடு இந்தக்கிராமத்திற்குட்சென்று பிக்ஷையெடுத்து அதிதி பரதேசிகளுக்கன்னம்பகர்ந்து அன்னியர்கள் யாரேனும் நின்திருவடியை யாசரித்தால் அவர்களுக்குபதேசஞ் செய்யக்கடவாயென்று நேமித்து அன்றிரவு நடுராத்திரியிலெழுந்து ஒருவர் கண்ணிலும் படாமல் நடந்து கானகம் போய்ச்சேர்ந்தார்கள்.

அவ்வாறு சேர்ந்து தெற்குத்திக்கைநாடி வெகு தூரந்திரிந்தும் பட்டணமேனுங் கிராமங்களேனுமில்லாமையால் அக்காட்டி லிருக்குங் கந்தமூல பலங்களைப் புசித்துப் பசியைத் தணித்துக்கொண்டும் பைசாசத்தைப் போல இரவும்பகலும் பயமின்றித் திரிந்து மிருகங்களின் நடுவில் வசித்துக்கொண்டும்,இராமனே தமக்கு நாதனென்றும், இராமனே தமக்கு கதியென்றும், இராமனே தமக்கு தாய்தந்தையென்றும், இராமனே குருவென்றும், இராமனே தமக்குப் பிரியநேசனென்றும், இராமனே சகல பந்துவென்றும், இராமனே தெய்வமென்றும், இராமனே குலமென்றும், இராமனே கோத்திரமென்றும்,இராமனை விடத் தமக்கு வேறொரு துணையுமில்லை யென்றும், பக்திசெய்து கொண்டே கிருஷ்ணநதியைச் சேர்ந்தபோது தமக்குப் பலவித கோரிக்கைகளுண்டாயின. அதென்னவெனில், ஸ்ரீவைகுந்தத்தையும் கைலாசத்தையும் சொர்க்கலோகத்தையும் மோக்ஷ பதவியையும் ஜீவமுக்தி மார்க்கத்தையும் அடைய வேண்டுமென்ற கோரிக்கைகளால் நரக ஹேதுவாகுமென்பதே அக்கருத்தால் சுதந்தரபுத்தியை விடுத்துங் கோரிக்கைகளென்பதைப் பற்றறுத்துப் பாதந்திரபுத்தியையடுத்து எது விஷயத்திலும் ஆசை கொள்ளாமல்தவிர்த்து ஆண்டவன் செயலின்படி நடக்குமென்று திடமனதுடன் மாருதியைத் துதிசெய்துகொண்டே மாஹோரெனுமோர் க்ஷேத்திரத்தை யடுத்து அங்கோர் பரிசுத்தமான விடத்தில்தங்கி அவரைஅங்கு எழுந்தருளச்செய்து விதிப்படி அவருக்குப்பூசைகளைநடத்தி மத்தகத்தின்மீது கரங்களைக் கூப்பிக்கொண்டு பக்திசிரத்தையுடன் தோத்திரஞ்செய்ய, உடனே அவர் பிரசன்னமாய்க்காட்சிகொடுத்துமூன்றெழுத்துடைய மூல மந்திரத்தையும் மூன்று கோடி நாமங்களையும் அதைக்கொண்டு செய்யும்படியான ஜெபத்தின் விபரத்தையுஞ்சொல்லி மறைந்து போயினர்.

இந்தப்படியாக மாருதியானவர் தமக் குபதேசஞ்செய்த மந்திரத்தின் மர்மங்களை யுணர்ந்து அந்த இராமதாசர் மகத்தான தபசுசெய்து கொண்டிருக்கையில் அத்தபோக்கினியானது சொர்க்கலோகத்தை யடையக்கண்ட தேவேந்திரன் இராமதாசரது தபசைச் சோதிக்கவெண்ணங்கொண்டு அரம்பையூர்வசி மேனகை திலோர்த்தமை யென்னும் நான்கு பேர்களையுங்கூட்டி நீங்கள் பூலோகத்தில் மாஹோரெனுந் தலத்தில் தபசுசெய்துக்கொண்டிருக்கும்இராமதாசனருகிற் சென்று அவன்தபசைக்கெடுத்துவரக்கடவீர்களென்று கட்டளையிட, அந்தப்படியே அவர்கள் நால்வரும் பூலோகத்தில் மாஹோரெனுந் தலத்திற்குச்சென்று அங்குத் தபசுசெய்துக் கொண்டிருக்கும் இராமதாச ரருகிற்போய்ப் பலவிதங்களாகத்தங்களழகைக் காட்டிக் கண்களைச் சிமிட்டி அவரைத் தங்கள் வசப்படுத்தும் பொருட்டும் தபசைக்கெடுக்கும் பொருட்டும் தங்களாலான கிருஷிகளைச் செய்தும் வசப்படாமலிருக்கக் கண்டு மெத்தவிசனப் பட்டுக்கொண்டிருந்தார்கள். அதென்னவெனில் பராசர் வியாசர் விசுவாமித்திரர் முதலான பிர்ம ரிஷிகளெல்லாம் நமது அழகைக்கண்டமாத்திரத்தில் மோகித்து மூர்ச்சையடைந்து நாம்செய்த உபசாரத்தால் தெளிந்து நம்மைக்கூடிக் கலந்தணையவில்லையா? அவர்களிலிப்புண்ணிய புருடன் எவருக்கு நிகராவான். ஒருவருக்கு மாகான் அப்படியிருக்க இந்தக்கேவல மனிதனை மயக்கவந்த நாம் நால்வரும் இவனால் அவமான

மடையலாயிற்றே, இவன் நம்மை யொருபொருளாக
மதிக்கவுமில்லையே, தன் கண்களாற் பார்க்கவு மில்லை
யே யென்று விசனமுற்று நிற்க, அவர்களை அவர்பார்
த்து ஓமாதர்களே நீங்கள் உலகத்திலுள்ள யோகீஸ்
வரர்களையும், தபசிரேஷ்டர்களையும் பக்த முத்தர்க
ளையும், கண்ணிமை கொட்டுவதற்குள்ளாக மயக்கி
அவர்களை இகத்திற்கும் பரத்திற்கும் உதவாதவர்க
ளாகச் செய்யும் கணிகை மாதர்களுக்கு நிகரானவர்க
ளன்றோ? திடச்சித்த மில்லாமல் சபல சித்தத்தினை
யுடைய யேதோ சிலமாமயக்கி உங்கள் மாய்கைக்
குள்ளாகச்செய்து வென்றோமென்றகெர்வங்கொண்டு
என்னையும் மயக்க வந்தீர்களோ? இந்த எண்ணம்
என்னிடத்திற் பலிக்கமாட்டாது. சுரம்அசரமென்று
சொல்லப்பட்ட சகல வஸ்துக்களும் இராமமயமாக
வே காணப்படுவதால் உங்களையும் இராமமயமாகவே
கருதினேன். ஆகையால் என்னை யுங்கள்மாயைகிட்டி
வரமாட்டாதென்று சொன்னார் அதைக்கேட்டும்அம்
மங்கையர்கள் பின்வாங்காமற் பின்னும் கண்ஜாடை
காட்டிக்கொண்டே நெருங்கிவர, அவர்களை நோக்கிச்
சொல்லுகின்றார்.

ஓ மங்கையர்களே? நீங்க ளென்னருகில் வரவே
ண்டாம் முன்னர் பினாகபாணியான சிவபெருமானு
டைய தபசைக் கெடுக்கும் நிமித்தம்வந்த மன்மதனை
போலெரிந்து கரிந்து போவீர்கள். அன்றியும், களங்
கமற்ற சுகப்பிர்மரிஷி சொக்கி விழும்படியான கிரு
ஷியைத்தேடிய உங்களை அம்மகாத்துமாத மதுதிடச்
சித்தத்தோடு ஜாக்கிரதைப்பட்டுத் தம்வாக்குச் சாது
ரியத்தால் அவமானப்படுத்தியும், நாணமடையாத
துச்ச விச்சையையுடைய அற்ப மாதர்களே? என்ன
ருகில் வராமல் தூரத்திலே கானே நில்லுங்களென்று
கடுமையாகநவில, அதனாலவர்கள் நாணமும்லஜ்ஜையு
முடையவர்களாய் அப்போதே வந்தவழியை நோக்
கித் திரும்பிப் போயினார்கள். பின்பு இராமதாசர்
அவ்விடத்திற்றானே தபசு செய்துக்கொண்டு பனி
ரண்டுவருட காலமிருந்தும், ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி
யின் தெரிசனத்தைக் காணமல் மெத்த விசனத்து
டன் ஆஞ்சநேயரை நினைக்க, அம்மாருதியும் வந்து
தெரிசனந்தந்து நொந்த மனது மிகவும் நைந்து நீ
ஏன் விசனப்படுகிறாயென்று தேற்றியபோது இராம
தாசர் அவரின் திருத்தாட்டா மரைகளில் விழுந்து
எனதையரே? பொய்சொல்லா மெய்யரே?இருப்புலக்
கையைப் பிடித்த கையரே? பக்தியிலும் விற்பத்தியி
லுங் துய்யரே? தேவரீர் நேமித்தபடி மூன்றரைக்
கோடி ஜெபஞ்செய்தும் ஸ்ரீராமருடைய தெரிசனங்
கிடைக்காமலிருக்கின்றது. இப்படியிருப்பதற்குக்கார
ணம் யாதோ? தெரியவில்லை. அந்தமர்மத்தை யான
றியும் பொருட்டுக் கிருபைசெய்ய வேண்டும் சுவாமி
யென்று வணங்க. ஆஞ்சநேயர் தன்னை வணங்கின
இராமதாசருக்குப் பலஆசிகள்கூறி எனதம்சத்தைப்
பெற்ற இராமதாசரே? முகவிலாசனே?இன்றுமுதல்
சாதனஞ் செய்வதைவிட்டு பகவந்நாம பாராயணஞ்
செய்து கொண்டிருப்பாயாகில் உனக்கு வெகுசீக்கி
ரத்தில் இராமதரிசனங் கிடைக்குமென்றும் ஜபமா
கிய சாதனமே பகவான் தெரிசனங் கிடைக்காமலிரு
ப்பதற்குக் காரணமென்று விரித்துரைத்து மறைந்து
சேதுவை யடைந்தார். பின்னர் இராமதாசர் ஆஞ்ச
நேயர் நேமித்தபடி சாதனஞ் செய்வதைவிடுத்து வா
சுகிசெய்ய வாரம்பித்தார். அதெப்படியெனில் ஸ்ரீரகு
ராமா? பரந்தாமா? தசரதராமா? ஜானகிராமா?
கோதண்டராமா? பட்டாபிராமா? கோசலைராமா?
ஜெயராமா? அதிசயராமா? இராக்கதபீமா? துளபத்
தாமா? அடியேனைக் கடைக்கண்ணாற் பார்த்துக்கிரு
பை செய்தாட்கொள்ளும் சுவாமி? தேவரீருடைய
திருவடிகளைத் தொழுது அடைக்கலம் புகுந்தேன்.
காமக்குரோத லோபமோக மத மாச்சரியங்களென்
னும் ஆறு தூர்க்குணங்களையும் போக்கி உபயதிருவடி
களுக் கடியேனையாளாக்கி மாயாசம்பந்தமாகியஉலக
வாசனைக்குட்பட்டுப் பிரமித்துத் தேவரீருடைய நாம
ங்களைப் புகழ்ந்து மெழுகுபோல உள்ளமுருகி ஆனந்
தமடையாமல் சிலையைப்போல கடுமையாகவிருக்கும்
மனதைத்திருத்தி ஞானதீபமேற்றி அந்தகார மென்
னும் இருளைமாற்றிப் பிரகாசமென்னும் ஒளியைக்
கண்டு வயிர்க்கூச்சிட்டுப் புளகாங்கித மடைந்து தன்
னைமறந்து தலைவணங்கிய உம்முடன் கலந்து புனிதனா
கும்படி திருவருளைச் சிந்தனைசெய்கிறே னென்றும்
உம்மிடத்தில் இகபரசுகத்தைக் கோரினேன். அதை
யடையும்படி அளித்தாட் கொண்டு கிருபைவையும்
ஜெகதீசா?உமதடியனாகும்படி யெளியேனையாதரணை
செய்யும் சர்வேசா? கணப்பொழுதேனும் பிரியாம
லென்மனதில் நமது ரூபத்தை நிலைத்திருக்கும்படி
அருள்புரியும் சுப்ரகாசா? எனதருகினிலே எப்போ
தும் வாசமாய் நானடிக்கடி கண்டானந்த மடையும்
படி தயவுசெய்யும் விசுவாசா? நானென்னும் கெர்வ
மென்னிடத்தி லிருப்பதால் யான்பதிதனன்றோமேக
சியாமா உண்மையில் நீரே பாவனராதலால் அடியே
னுடைய தப்புகளை மன்னிக்கத்தகும் ஜெனகாமா? ஓ
பதிதபாவனா? ஜனகிரமணா? விரைவாக எனது மன
தைத்திருத்தி நிதானமாக அஞ்ஞான கெர்வத்தை
நிவர்த்திசெய்யும் நின்மலசொரூபா என்று புகழ்ந்து

கொண்டாடுவதை ஸ்ரீராமபிரான்கேட்டு அக்கணமே வந்துசேவைதந்து ஒபக்த சீலனே உனக்கிஷ்டமான வரமெதுவோ அதை கேட்பாயாகில் தடையின்றித் தருகிறேனென்ன, அதற்கு இராமதாசர் மூர்த்தியின் திருவடிகளில் விழுந்து சேவித்தெழுந்து கரங்களைக் குவித்தவண்ணமே எனதப்பனே ஒப்பிலாதவனே அடியேனுக்கு முக்கியமான வரம் யாதெனில் தேவரீரை மறவாமல் நாமஸ்மரணை செய்துகொண்டிருப்பதே தவிர வேறுவரமெனக்கு வேண்டுவதில்லை அன்றியும், யான் மெத்தபாவி யாதலால் என்வாக்கில் சதாகாலமும் தேவரீருடைய நாம உச்சரணை யிருக்கும்படி கிருபைசெய்யவேண்டும் இஃதல்லாமல் நும் மீது சத்தியமாக எனக்கு வேறு இச்சையில்லைஎன்று நவிலக்கேட்டு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி மெத்தசந்தோஷப்பட்டு அதிகப்பிரியத்துடன் இராமதாசருக்குத் திவ்வியஞானம் தெளிவாகும்படி தெரியச் சொல்லி உனக்குச் சிஷ்யர்களாகிச் சரண்புகுமவர்கட்கு உபதேசஞ் செய்யென்றும் ஊர்களுக்கருனில்பிக்ஷையெடுத்துக்கொண்டு வசிக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டு மாயமாய் மறைந்துபோயினர் உடனே இராமதாசரும் அதிகத்திருப்தி யடைந்தவராகிக் கானகங்களின் நடுவினில் மிருகங்களைப்பார்த்துக்கொண்டு வாசஞ்செய்திருந்தார் அன்றியும் இவ்வுலகத்தை ஆசனங்களாகவும் ஆகாயத்தை மண்டபங்களாகவும் பாவித்து அதிகாலையில் ஸ்நானநுட்டானங்களை முடித்துவிட்டு அருகிலிருக்கும் கிராமங்களிற்சென்று பிட்சையின் பொருட்டு ஜெயரகுவீரா! கோடிமன்மதாகாரா விரைவினில் வரவேண்டுமென்று பத்து வீடுகளில் சொல்லியழைத்துப் பிட்சைகேட்டு அவர்களளித்த தானியங்களைக் கொண்டுவந்து கல்லின்மீது வைத்து மாவாகச்செய்து அம்மாவைத்தண்ணீர்விட்டுப் பிசைந்து இலைகளின்மீது வைத்து அக்கினியை மூட்டி அதின்மீது அடைகளைப்போட்டுப் பாகமானவுடன் எடுத்து ஜலங்கொண்டு வந்து தொன்னையில் வைத்து ஸ்ரீராமார்ப்பணஞ் செய்து ஒப்புடன் புசித்துத் தண்ணிரருந்தித் திருப்தியடைந்து இராமதாரக நாமங்களைத் தியானஞ்செய்து கொண்டிருப்பார்.

இந்தப்படியாகத் தினந்தோறுஞ்செய்துகொண்டிருக்கும்போது சிவாஜிராஜ னெனுமரசன் வேட்டையாடும் பொருட்டு அங்குவந்து இராமதாசரைக் கண்டு அசங்கியப்பட்டு அங்குள்ள மிருகங்களை யெல்லாம் பாணங்களாலடித்துக் கொன்று கொண்டு வருகையில், சிலமிருகங்கள் அரசன்விடுக்கும் பாணங்களுக்குத் தப்பி ஓடோடியும்வந்துஇராமதாசரடிகளில் விழுந்து அபயம் அபயம் எங்களை யிரட்சிக்கவேண்டுமென்று கண்ணீர்சோர அழ, உடனே இராமதாசர் மெத்தவும் ஜீவகாருண்ணிய முடையவராகி அக்கொடிய மிருகங்களின் நடுவினி லுட்கார்ந்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த சிவாஜிராஜன் பிரியத்துடன் மெத்தவும் பயந்தவனாகி இராமதாசரருகிற்போகாமல் சபல சித்தத்துடன் தூரத்தில் நின்றுக்கொண்டு மந்திரியை நோக்கி ஓமந்திரி நமது சேனைகளையெல்லாம் பின்னால் வைத்துக்கொண் டிருவென்று சொல்லி மந்திரியுடனும் சேனைகளோடும் அஸ்தமிக்கும் பரியந்தம் அவ்வாறே நின்றுவிட்டு இராமதாசரிடம் ஒருவார்த்தையேனும் பேசாமல் அச்சேனைகளைக் கூட்டிக்கொண்டு தன்னுடைய நகரத்தை நோக்கிப் போகையில், கிருஷ்ணாநதியிலிருந்து தாளபத்திரங்கள் சிலதுவர, அவைகளைத் தண்ணீரி லிருந்தெடுத்து வாசித்துப் பார்க்கும்போது இனியமைந்த சில பத்தியங்களும், சுலோகங்களும், அதிலடங்கி யிருக்கக்கண்டு அதன் அர்த்தபுஷ்டியையும் பார்த்து இப்பத்திரங்களிலடங்கிய இவ்விதச் சாதுரியக் கவிகளை இந்த இராமதாசரே நூதனமாகச் செய்தகவிகளாகுமென்று தீர்மானித்து அவைகளில் ஒருபத்திரத்தையும் விடாமல் கைக்கொண்டு கரையேறி நான்மனிதனேனென்று கருதிக் கொண்டு சோர்வில்லாமல் தன்னரண்மனைக்கு வந்து சேர்ந்து அன்றிரவைக் கடத்தி மறுநாளில் ஸ்நானநுபானங்களை முடித்துக் கொண்டு இராமதாசரை தெரிசிக்கும்பொருட்டு அரண்மனையைவிட்டு நடந்து கானகத்தையடைந்து மிருகங்களின் நடுவினுட்கார்ந்து கொண்டிருக்கும் இராமதாசரைக்கண்டு சமீபமாகச் செல்லுவ்தற்குஇதுசமயமல்லவென்றுதிரும்பித் தன்னரண்மனையைப்போய்ச் சேர்ந்து மதுநாளுதயத்தி லெழுந்து ஸ்நானநுட்டானங்களை முடித்துக்கொண்டு நாட்டை விட்டுக் காட்டை யடைந்து மிருகங்களின் நடுவிலிருக்கும் இராமதாசரைக் கண்டு இன்றுச் சமயமல்லவென்றுதிரும்பி அரண்மனைக்குப் போனான், இந்தபபடியாகத் தினந்தோறும் அந்த இராஜன்சென்று சமயமல்ல சமயமல்லவென்று திரும்பி அரண்மனையைச் சேர்வான். இவ்வாறு சிலநாட்கள் நடந்துபோகையில் ஓர்நாள் மந்திரி பிரதானிகள் கூடி சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கும் அரசனைநோக்கி எங்களையாண்டு ரட்சிக்கும் நரேந்திரரே தேவரீர் அரசாக்ஷி புரிவதைத் தவிர்த்து க்ஷத்திரிய தருமத்தைவிடுத்துப் புனிதனல்லாத அந்தக் காட்டுமனிதனைக்கண்டு சேவிக்கும் பொருட்டு அனுதினமும் போய்வருவது தங்களுக்குத் தகுதியோ? காட்டுமிருகங்களுக்கு நிகரான அம்மனிதனை

யொருபொருளாக வெண்ணுவதுநீதியோ? அரசாங்க விசாரணையைக் கருதாது கேவலமான அவனைச்சேவிக்கத்துணிவது பிரக்கியாதியோ? இவ்வாறு நடப்பது நம்போலியர்க்கு யோக்கியதையோ? அன்றியும் அந்தச்சாமானிய மனிதன்செய்த கவிகளைவெகு பிரியமாகவும் அரிதாகவுங் கருதவேண்டாம் பெரியோர்களாலே இந்தக்கவிகளைவிடமேலான அற்புதஅர்த்தப் புஷ்டிகளுடைய கிரந்தங்களனேகஞ் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கிரந்தங்களிலிருக்கும்கவிசாதுரியமும் அர்த்தப்புஷ்டியும் நிறைந்த கவிகளைக் கொடுக்கின்றோம் அவற்றைத் தேவரீர் வாசித்துப் பார்த்தாலன்றி அதன்மகிமைசாதுரியம்விளங்கமாட்டாது அன்றியும், அந்தக்காட்டுமனிதன் சாதுவாகி நம்மிடம் வருவானேயாகில் அவனைப் பலவிதத்திலும் பூசித்துக்கொண்டாடலாம் அப்படிச் சாதுவல்லாததினாலல்லவா? நாமெல்லோரும் ஒருநாளெல்லாம் அவனிடம்போய் நின்றிருந்தும் நம்மையவன்இலட்சியஞ் செய்யாமலும் ஏறெடுத்துப் பாராமலும் தானென்ற இருமாப்புக் கொண்டிருந்தான் நீங்களியார் என்றுயினும் விசாரிக்காமல் மதங்கொண்ட யானையைப்போலக்கெருவித்துமிருந்தான் மேலும் எங்களை இலட்சியஞ்செய்யாமலிருந்தாலும் தங்களுக்கேனு மிலட்சியஞ்செய்தானா? தங்களோடு ஓர்வசனமேனும் பகராமலும் அரசனென்று கிஞ்சித்தேனு மதியாமலிருந்துவிட்டானே, இப்படிப்பட்ட ஞானசூனியனும் ஈனமனிதனுமான அக்கொடியோன் செய்தகவியின் பெருமையைக் கல்வித்திறமறியாத கசடர்கள் தாம்புகழ்ந்து கொண்டாடவேண்டுமே தவிர, விற்பத்தியும்பக்தியும் வைராக்கியமும் நிறைந்த சாதுக்கள் அதைக் கொண்டாடவே மாட்டார்களென்று சொல்ல, அதைகேட்ட அரசன் அவர்களுக்குப்பதில் ஒன்றுஞ்சொல்லாமலிருந்துவிட்டுப் பினனொருநாள் இஷ்டசித்தியை யடையும்பொருட்டுச் சற்குருவினும் குருநாதனைச் சேவிக்கவேண்டி அரண்மனையைக்கடந்து ஆரணியத்தைநோக்கிப்போய்த் தனதுசேனை பரிவாரங்களைத் தூரத்தில்நிறுத்தி இராமதாசரிடஞ்சேர்ந்து நடந்துபோகையில் களங்கமற்ற மனதுடைய இராமதாசர் வேந்தனுக்கெதிர் சென்று அழைத்துவந்து உட்காரவைத்து க்ஷேமலாபங்களை விசாரித்தார் அப்போது அவ்வரசனுக்குச் சேவைதரவேண்டியும் இராமதாசரது பெருமையை வெளிப்படுத்தவெண்ணியும் ஆஞ்சநேயரங்கெழுந்தருள, இராமதாசரும் சிவாஜிராஜனும் சேவித்து ஆனந்தமேலீட்டால் பக்திசிரத்தையுடன் அவ்வாஞ்சநேயரின் திருவடிகளில் விழுந்து பணிந்தெழுந்து நின்று அஞ்சலிசெய்து கொண்டாடினார்கள் உடனே சிவாஜிராஜன் ஆஞ்சநேயருடைய தேகஜோலிப்பு அதிகமாயிருந்தபடியால் கண்ணாரச் சேவித்து ஆனந்தமடைவதற்கில்லாமல் மின்னலின் அதிகப் பிரகாசத்திற்குக் கண்களைமூடிக் கொண்டு ஐயோ நானென்னபாவஞ்செய்தேனோ? எந்தப்பெரியோர்களை வைதேனோ? கைக்கெட்டினவுணவுவாய்க்கெட்டாமற்போனது போல ஆஞ்சநேயர்தெரிசனம் எனக்குக்கிடைத்துங் கண்ணாற்கண்டு சேவித்து ஆனந்தமடைவதற்கில்லாமற் போயிற்றேயென்றுமெத்த விசனமடைந்து மறுபடியுங் கண்களைத்திறந்து பார்க்கையில் அவ்வாஞ்சநேயரைக் காணாமல் இராமதாசர் மாத்திரமிருக்கக்கண்டு அவரம்புய பாதங்களில் தன் சிரசைப்படியவைத்துத் தெண்டனிட்டெழுந்து ஆச்சரியமு மாச்சரியமுங்கொண்டு இவர்பரிசுத்த ஆத்துமாவாகிய மெத்த மகத்துவமுடையவரென்றே பணியத்தகும் இப்படிப்பட்டபுண்ணியாத்துமாவை நமது மந்திரிகள் முதலானோரும் இழிவாகப்பேசி வாயில் வந்தபடிபேசி அபசாரத்துக்குள்ளாகினார்களே, அன்றியுமிவர் சாந்தசொரூபியும் புண்ணியாத்துமரும் வெகு மகிமையருமல்லாத பட்சத்தில் இவரிடம் ஆஞ்சநேயர் வருவாரோ? வந்துதெரிசனந் தருவாரோ? கண்ணிமை கொட்டுவதற்குள் மாயமாய்மறைந்து போவாரோ? மறுபடியுங் கண்களைத்திறந்துபார்க்கையிலிப்புண்ணியவானொருவரே சேவைதருவாரோ? வென்று தனக்குட்டானே யோசித்துத் திடச்சித்தனாகி நேத்திரங்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் சொரியாநிற்க, அவனை இராமதாசர்கண்டு இவன்பரிசுத்த ஆத்துமா வாருமென்று கருதித்தன்சமீபமாக வரும்படி கைஜாடைகாட்டியபோது அவனும்விரைந்தோடி அவர்திருத்தாட்டாமரைகளில் விழுந்து எனதையனே? யான்செய்த அபசாரங்களையெல்லாமுபசாரமாகக்கருதி எளியேனை யாண்டிரட்சியும் சுவாமியென்றுசொல்லி எழுந்திராமற்கிடந்தான். உடனே, இராமதாசர் அவன்மீது மெத்தப்பிரிவோடு அப்பா அரசனே! எழுந்திருவென்று பலஆசிகள் கூறித் தன் கரங்களாலெடுத்துவிட, அவனும் எழுந்து அஞ்சலியஸ்தனாகிநின்று ஓபரமாத்துமாவுக்கு நிகரானபுனிதரே? பதிதனாகும என்னுடையதோஷங்களைக் கருதாது பாவனராகும் தேவரீரே அடியேனைக் காத்திரட்சிக்கவேண்டுஞ் சுவாமியென்றும் தாபாக்கினியினால் தகிக்கப்படுகிற ஏழையைக் கிருபைசெய் தாட்கொள்ளுமையா ஜீவகாருண்யத்திற் சிறந்த சீலரேயென்றுங் கொண்டாடுகையில் இராமதாசர் கேட்டு அவனைநோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

கேளாய் அரசனே? பிரஜைகளுக்குள் சரசனே? ஞானபக்திவைராக்கியமானது சுற்றத்தாராகிய பந்துகளுக்கும் பெண்டு பிள்ளைகளுக்கும் விரோதமாகியுமிருக்கும். அதன்பலனானது அந்தியகாலத்திற்கு உயிர்த்துணையாயுமிருக்கும் யோகீஸ்வரர்கள் தபசிகள் பாகவதர்கள் முதலான சாதுக்களுக்குப் பரமானந்தத்தை யுண்டாகச் செய்யும் அரசனுக்கு உலகத்தை பாதுகாப்பதும் தருமந்தவறாமல் நடத்துவதும் நீதிகுன்றாமல் மநுநெறியின்படி செங்கோல் செலுத்துவதும் குடிகளிடத்தில் ஆறிலொரு கடமை பெற்றுக்கொள்வதுமான சம்பத்துக்கள் நிறைந்து நாகரீகமாயிருப்பதால் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரெனும் நான்கு வருணத்தார்களும் சகலதேசத் தரசர்களும் புத்திரமித்திர களத்திராதி பந்துக்கள்முதலானோரும் பயந்து நயந்து ஆக்கினைக்குட்பட்டு நடப்பார்கள் அரசன் பெருமைகளை மிகவு மெடுத்தோதிக் கொண்டாடுவார்கள் ஆகையால் அரசாட்சியிலிருக்கும் பெருமையுங் கர்வமும் பக்திசெய்யும்படியான பாகவதர்களுக்கில்லை பக்திமான்களன்றிப் பாகவதர்களையும் மற்றவர்கள் இகழ்வார்களேயல்லாமல்புகழமாட்டார்கள் இராஜனை யெல்லோரும்புகழ்ந்துகொண்டாடுவார்கள் ஆதலால் ஓஅரசனே? நீஅரசாட்சி செய்துகொண்டிருத்தலே உனக்குக் கௌரவமும் புகழுமாகும்அதை விட்டுப் பக்திமார்க்கத்தில் புகுவாயாகில் உன்னையெல்லோரு மிகழ்வதோடு வசைசொல்லிப்பேசுவார்கள் ஆதலாலென் சொல்லைத் தள்ளாமல் மறுவார்த்தை விள்ளாமல் நீதிகுன்றாமல் செங்கோல்செலுத்து வரக்கடவாயப்பா வென்றுசொல்ல, அதைக்கேட்ட சிவாஜிராஜன் இராமதாசரைப் பணிந்து ஓ? சுவாமி! அண்டரண்ட சராசரங்கள் யாவும் ஜெகதீசனுடையசொத்தாகவிருக்க, அவைகளையெல்லாம் இரண்டுநாள்வாழ்விலிருப்பவன் என்னரசு, என்னாடு, என்வீடு, என்வாசல். என்யானை, என்சேனை, என்பிள்ளை,என்பெண்டு என்பொருள், என்னருள் என்று சுதந்திரம் வகித்திருந்தும் முடிவுகாலம்வந்தபோது அவைகளை, யெல்லாம் விட்டுவிட்டு மாய்ந்துபோகின்றானே, அப்படிக் கணப்பொழுதில் மரணமடையும் புருடன் அநித்தியமான வஸ்துக்களையடுத்து நித்தியமானபொருளைவிடுத்து நிரையத்துக் காளாவதுபோல ஆகாமல் யானிந்த மாயாசம்பந்தமாகிய உலகவாசையை வெறுத்து தேவரீர் திருவடித்தாமரைகளை யடுத்துப் பேரின்பத்தை யடையும்படியான கிருபாநோக்கஞ்செய்து ஆதரியும் சுவாமி? அன்றியும். அடியேன் தேவரீர் சொல்லுங் கட்டளையை எள்ளளவேனுமெப்போதும்மீறாமலிருப்பேன். இதுசத்தியம், இதைத்தவறமாட்டேன் சற்குருநாதரே உமக்குச்சரணம் புகுந்தேன் கிருபையாய்ப்பாரும் எனைக்காரும், வினைதீரும், உமதருகிற்சேரும், என்றுபணிவாகக்கூற,அவனதுதீவிரத்திற்கு சந்தோஷித்து இவன்சுத்தசாந்தபுருடனென்று இராமதாசர் கருதி ஓ? அரசனே, உனக்காயாசம் வேண்டாம் சீக்கிரம் ஸ்நானஞ்செய்து வாவென, அரசன் ஒருநாளுமில்லாத சந்தோஷத்துடன் குருசுவாமிகள் கட்டளையின்படி ஸ்நானத்திற்குச் சென்றுதடாகத்திலிறங்கி ஸ்நானநுட்டானங்களை முடித்து ஈரவேஷ்டிகளுடன் புறப்பட்டு மார்க்கத்தில் வருகிறபோதே மலர்களையெடுத்து இலைகளிற் கட்டிக் கனிவர்க்கங்களைப் பறித்துக்கொண்டும்தொன்னையொன்றுதைத்து அதில் நீரை நிரப்பிக்கொண்டும் நடந்துவந்து அவைகளை மிகவும் பயபக்திவிசுவாசத்துடன் முன்னர்வைத்துக் கைகட்டி வாய்பொத்திக் கொண்டு நின்றான். அப்படிநின்ற அவனைநோக்கிஓவேந்தனே?பனிரண்டுதரம் சரணாகதிசெய்யென, அவனும் உடல் பொருளாவிகள் மூன்றும் ஆசாரியர் தியானமென்றுகருதிப் பனிரண்டுதரம் தெண்டனிட்டான். உடனே ஆசான் அவனைஉட்காரும்படி நேமித்து அந்தப்படியே அவனுட்கார்ந்தபின்பு சிரத்தில் தம்கரத்தைவைத்துச்செவிகளில் மந்திரத்தையோதிச் சிந்தைகளிக்க மந்திரத்தினர்த்தத்தையும் புகன்று ஓஅரசனே? சகலஜீவசெந்துக்க ளிடத்திலு மெப்போதும் தயைவைப்பதோடு சாதுக்களைக்கண்டால் பயபக்தியுடன் சரணம் புகுவதை மறவாமலிரு, தினமும் ஹரியைபூசைசெய் ஏகாதசிவிரதத்தை யெப்போதும்விடாமல்அநுட்டித்துவர, ஆஞ்சநேயரை யநுதினமும் பக்தியுடன்சேவித்துக்கொள்ளென்றுகூற, அவன் மிகவுங் களித்துத் தேகம்பூரித்து மயிர்க்குச்சிட்டு ஓ? எனது சத்குருநாதரே? தேவரீர் சுட்டளையின்படி சர்வசித்தமாய் நடந்துகொள்ளுகிறேனென்று பணிந்து தொன்னையிலிருக்கும் தீர்த்தத்திலவர் திருவடிகளையலம்பிமலர் மாலையை மிடற்றிற்போட்டு மற்றமலர்களினு லவர் திருவடிகளி லர்ச்சித்துக் கனிவர்க்கங்களை யன்புடனளித்து மானசிகத்தில் பக்தியுடன் தூபதீப நைவேத்தியங்களைத் தந்து அநேகதரந் திருவடிகளில் வலம் வந்து பணிந்து கைகட்டி வாய்பொத்திக் கொண்டு வணங்கிநின்றான். உடனே அவர் அவன்செய்த பூசையையுங் கனிவர்க்கங்களையுங் கைக்கொண்டு தனக்கு வேண்டியமட்டும் அக்கனிவர்க்கங்களையுந் தொன்னையிலிருக்கும் தீர்த்தத்தைப் புசித்து ஆனந்தமாக விருந்தார் அரசனே ஆசான்புசித்து மிச்சமாகிய கனிவர்க்கங்களைக் கைக்கொண்டு அவர்திருவடிகளையலம்பிய தீர்த்தத்தைசுவீகரித்து அவைகளைப்புசித்து ஆசாரிய

பிரசாதமென்று சந்தோஷித்துத் திருப்தி யடைந்து
சத்குருநாதரை நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

பவனத்திற்கோர் குடாரத்தைப்போலவும்அந்த
கார விருளைப்போக்குவதற்கோர் ஆதித்தனைப்போல
வும், அநித்தியமான ஜெகத்தாசையைப்போக்கி நித்
தியானந்த வாழ்வையளிக்கும் பரவாசுதேவனைப்போ
லவும். அடியேனுடைய மன அந்தகாரத்தைப்போக்
கிப் பிரகாசமான ஞானோதயமுண்டாகும்படிசெய்து
தேர்ந்து தெளிவடைந்த எனது சற்குருநாதரே சதா
காலமும் தேவரீருடைய சேவையைச் செய்துக்கொ
ண்டு அடியேனிருக்கும்படி கிருபைகூர்ந்து எனது
நாடு, நகரம், யானை, சேனை, பரிவாரமுதலான சகல
சொத்துக்களையும் இவ்வுடலையும்இவ்வுடலிலுள்ள ஆவி
யையும், தேவரீருக்குச் சுவாதீனப்படுத்தி அடியேனி
ருப்பதால் இம்மூன்றையும் தாங்கள் கைக்கொண்டு
அரசுபுரியு மையாவென்றுவேண்டிக்கொள்ள அதற்கு
ஆசான் ஓஅரசனே நீசொல்லியபடி உடல் பொருள்
ஆவியென்னும் இம்மூன்றையும் எனக்குத் தத்தஞ்செ
ய்த துண்மையே, இம்மூன்றும் என்னுடையதே அதி
லொன்றேனுஞ் சந்தேகமில்லை யென்பது திண்ணம்.
ஆயினும் அரசாக்ஷிசெய்யும் அனுபவம் எனக்குத்
தெரியமாட்டாது. நீ நெடுநாளாய் அனுபவப் பட்டி
ருப்பவனாதலால் என்னுடைய நிமித்தமென்வாக்கை
தள்ளாமலும் மறுவார்த்தை விள்ளாமலும் மனதில்
சங்கடங் கொள்ளாமலும் அரைக்கணமேனுமிங்குநில்
லாமலும் பொழுதுபோவதற்கு முன்னரே விரைவா
கச்சென்று நாட்டையாண்டுகொண்டிருவென்றுபுகல,
அவன் ஆசான்வாக்கைக் கடக்கக்கூடாக் குறையா
லும், முக்தியடைய வேண்டியதுறையாலும், குருநா
தன் கிருபையைப் பெறவேண்டிய முறையாலும்உல
கில் தன்னைப்பழிக்காம லிருக்கவேண்டிய நிறையா
லும் பயபக்தியுடன் அவருக்குத்தெண்டனிட்டுவிடை
பெற்றுக்கொண்டு சேனைகளுடன் நகரத்தை யடைந்
தான். அதைக்கண்ட ஜனங்கள்யாவரும் நமதரசன்
அந்தப் பரமசாதுவாகிய இராமதாசரிடம்உபதேசம்
பெற்றுக் கொண்டான். ஆனதினால்தான் அவனிடத்
தில் திருமண ஸ்ரீசூர்ணம் இத்தனை விசாலமாக மின்
னுகின்றது. ஆசாரிய ரநுக்கிரகம் பெற்றுக்கொள்ளா
விடில் இவ்வாறு இலக்ஷணமாகத்திருமண்ஸ்ரீசூர்ணந்
தரித்துக் கொள்ளுவானோ இடையில்பட்டு மடியும்
புனைந்துக்கொண்டிருக்கின்றானேயென்று பேசிக்கொ
ள்ள, அவன் அரண்மனைக்குட் புகுந்து அந்தப்புரத்
தைச் சேர்ந்து அன்றிரவைப்போக்கி மறுநாட்காலை
யிலெழுந்து ஸ்நானநுட்டானங்களை முடித்துக்கொ
ண்டு தன்குருநாதனுக்கு அளவில்லாத காணிக்கைக
ளும் பலவித கனிவர்க்கங்களும் எடுத்துச் சென்று
ஆசான் றிருவடிகளுக் கர்ப்பணஞ்செய்து அவரைப்
பலவாறு தோத்திரஞ்செய்து அவரதுஅருளைப் பெற்
றுக்கொண்டு நகரத்தையடைந்தான். இவ்வாறுதினந்
தோறும் அரசன் கொண்டுவந்து கொடுக்கும் விலை
உயர்ந்த நவரத்தினங்களையும் ஆடையாபரணங்கள்
முதலான சம்பத்துகளையும்இராமதாசர்கண்டு இதெ
ன்ன? இவ்வரசன் தினந்தினமுமிந்த அற்பமான வஸ்
துக்களைக் கொண்டுவந்து கொடுத்துக் கண்டு சேவித்
துப்போகிறதுமன்றி ஊராருங் கூடவே வந்துபார்த்
துப் போகின்றார்கள். அவர்கள் இவனென்ன பொரு
ளாசை பிடித்தவனாகி விருக்கிறானென்று நம்மை ஏள
னமாய்ப் பேசுவார்கள். அன்றியும் ஏசுவார்கள். ஆத
லால் நாம் இதற்கென்னசெய்கிற தென்றுயோசித்து
நாமிந்த வனத்திலிருக்கும் பரியந்தம் இந்தப்படி யர
சன் வந்துகொண்டே யிருப்பானென்று கருதி அவ்வ
னத்தைவிட்டும் வேறொரு வனத்தைச் சேர்ந்திருந்
தார். அரசன்வழக்கப்படிவந்து ஆசானையங்குக்காணா
மல் மூன்றுநாள்பரியந்தம் அன்னாகாரமின்றிப் பல
விடங்களிலும் ஓடித்திரிந்துதேடி வெகுவாகச் சிந்தி
த்துவாடி ஆயாசத்தால் ஓர்மரத்தடியில்தங்கி ஓ பரம
குருநாதரே அன்பர்கள்மீது மெத்தவிசுவாசரே இன்
பமிகுந்தநேசரே வனவாசரே ஏழையேன்மீதுஎன்ன
கோபமோ? ஏது மனஸ்தாபமோ? இப்படியும்ஏழை
யேனை அலையச்செய்து போகலாமோ யானிந்தவனத்
திற்குப் போகிறேனென்றோர் வார்த்தை சொல்லிப்
போகலாகாதோ? சொன்னால் தங்களுக்கென்னதாழ்
வுநேரிடுமோ அல்லது தங்களைவிடாது தொடர்ந்து
வருவேனென்ற எண்ணங் கொண்டோ? இப்படிப்
போனதினால் தங்களுக்கென்ன லாபமுண்டோ? வெ
ன்று பலவாறு சிந்தித்து வந்தித்துக்கொண்டே பல
வனங்களிலுந்தேடிச் சென்று ஆயாசத்தா லங்கோர்
மரத்தடியில் படுத்துக்கொண் டிருக்கையில், இராம
தாசர் தாமே வலியவந்து அவனைக்கண்டு ஓஅரசனே
உன்னைப்போல உத்தமனை நானெங்குங் கண்டதே
யில்லை. ஒருவர்சொல்லக் கேட்டதுமில்லை குருபக்தி
யிற் சிறந்த மெய்ஞ்ஞான சொரூபனே என்றுகொண்
டாட, கிருபாநோக்கம்புரியும் குருநாதனைக் கண்ட
அரசன் அனேகநாள் தேசாந்திரம் போயிருந்தமணா
ளனைக்கண்ட மனைவியைப் போலவும், காணாதபொ
ருள் கைக்கு அகப்பட்டாற் போலவும், சந்தோஷ
மடைந்து திடுதிடென்றோடி ஆசானடியில் விழுந்து
வணங்கி யெழுந்து அஞ்சலிசெய்து கொண்டபடியே
ஓசுவாமி எனதுசற்குரு நாதரே வேதாந்தபோதரே

தேவரீருடைய தெரிசனமில்லாமையால் இந்தமூன்று நாளும் பட்டினியாகவே முடிந்தது. அன்றியும் எனக்குநேரிட்ட விசனமோ? இவ்வள வவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆகையால் கருணைசெய்து தினந்தோறுந் தங்களுடைய தெரிசனந்தந்து ஆட்கொள்ள வேண்டும் சுவாமி என்று வெகுவாக வேண்டிக்கொண்டான். அதைக்கேட்ட இராமதாசர் ஓ பரமசாதுவாகிய அரசனே கிருஷ்ணாநதிப் பிரவாகத்தில் வருகிற ஓலைப்பத்திரங்களை விடாதுஎடுத்து அவைகளைத் தினந்தோறும் பக்திசிரத்தையுடன் மான சீகமாய்த் தியானகுணமாக வாசித்துக்கொண் டிருப்பாயாகில் அவ்விடத்திலெனது தெரிசனந்தப்பாம லுனக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அதனாலுனக்குப் பரமசாதமும் பக்தியுமுக்தியுங் கரதலா மலகம்போலக் காணப்படும். ஆதலாலினி நீயுன் னகரத்தையும் அரசாங்கத்தையும் விடுத்து வரவேண்டா மென்று சொல்லக்கேட்டு அரசன் ஓசுவாமி இன்றுமுதல்தேவரீர் கட்டளையின்படியே நகரத்தையும்அரசாங்கத்தையும் விட்டு வருவதில்லை. அன்றியும் தேவரீர் சொல்லியபடியே தெரிசனங் கிடைக்காவிடில் உடனேஎன்னுயிரை யானேமாய்த்துக் கொள்ளுவேன் இதுநிச்சயமென்று சொல்லி அவர் திருவடிகளில் விழுந்து பணிந்து முக்காலும் வலம்வந்து நின்று அஞ்சலியஸ்தனாகிப் பாதாதிகேசபரியந்தம் அவர்திருவுருவத்தைநன்றாகச்சேவித்து விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய நகரத்தைநோக்கிச் சேனைகளுடன் போனான்.

இவ்வண்ணம் அரசன் விடைபேற்றுக் கொண்டு போயின பின்னர் இராமதாசர் அவ்வனத்தை விட்டு நடந்து மெல்லென மஹோளியென்னுங் கிராமத்திற்குவந்து அங்குப் பைசாசத்தைப்போலஅலைந்துபிட்சையெடுத்துப் பசியை யாற்றிக்கொண்டும் விசாலமாகிய சோலைகளின்மீது தாண்டித்தாண்டி குதித்துக் கொண்டும் பலவிதமாக விளையாடி வருகையில் அவரைக்கண்டு சிலபாலகர்கள் பின்றொடர்ந்துவந்துஓவென்று கூக்குரலிடுவார்கள். அதைக்கண்ட அவர் மரங்களின்மீதுஏறிகொள்ளுவதோடுஅப்பாலர்களின்மீது கற்களைவாரி வாரிபோடுவார்கள். இந்தப்படி சிறிது காலம் நடந்தபின்பு அந்தஇராமதாசர் ஓர்சிறியபாலகனைப்போலத் தாமும்விளையாட எத்தனித்து ஒருவருக்கொருவர் பந்தயம் போட்டுக்கொண்டு கில்லிணை யாடிக் கொண்டிருப்பார். ஒருநாள் ஓர்நதிக்கரையின் மீது வழக்கப்படி பாலகர்களுடன் விளையாடுகையில் அந்தக்கில்லியானது இராமதாசரின்புருவத்தில்பட்டு உதிரம் பெருகியொழுக, அதனால்அவர்மரணத்துக்கு நிகரான மூர்ச்சையடைந்தார். அப்படி மூர்ச்சையடைந்து பூமியின்மீது விழுந்த அவரைக்கண்டு பாலகர்கள் யாவரும் அவரின்சமீபத்தில்வந்துசுவாசத்தைப்பரிசோதித்துச் சுவாசமடங்கியிருக்கக்கண்டு பிராணன்போய்விட்டதே, இதற்கென்ன பரிகாரஞ் செய்வதென்று பலவாறு சிந்தித்து உருகிவாடி ஒருவாறாகத்தெளிந்து திடச்சித்த முடையவர்களாகி இச்செய்தியை அன்னியர்கள் கேள்விப்பட்டால்இராஜனிடஞ் சொல்லி நமக்குத்தண்டனை விதிக்கும்படி செய்வார்கள். அரசனோ அவர்கள்சொல்லும் சொற்களின்படி நம்மைத் தண்டிக்கக் கட்டளையிடுவான். இது நிச்சயமான காரியமென்று கருதி அன்னியரொருவருக்குஞ் சொல்லாமல் அங்குப்பள்ளமொன்று வெட்டி அதிலந்த மகாத்துமாவைத் தள்ளிப் புதைத்துவிட்டு யாதொன்றும் அறியாதவர்கள்போல மௌனமாக விருந்துவிட்டார்கள். இந்தப்படி அந்த மகானுபாவராகிய இராமதாசரை யச்சிறுவர்கள்குழியிற்போட்டுப்புதைத்துவிட்டுத் தங்கடங்க ளிருப்பிடஞ்சேர, அரசன் வழக்கப்படி குருநாதரைச் சேவிக்கும் பொருட்டுச் சேனைகளுடன் புறப்பட்டுக் கானகத்தை யடைந்து அங்குச்சற்குரு நாதரைக்காணாமையால் பலவிடங்களிலுமோடித் தேடிவாடித் தன்பட்டணத்தை யடைந்து குதிரை சவாரிகளைத் தயார்செய்து தன்குருநாதரைத் தேடிக் கண்டுபிடித்துக் குதிரையின்மீதேற்றிக் கொண்டு வாருங்களென்றுகட்டளையிட்டனுப்பஅவர்களு மந்தப்படியே நான்குதிசைகளிலு மோடிச்சந்துகளிலும், பொந்துகளிலும், கானகங்களிலும், மலைகளிலும். செடிகளிலும், கிராமங்களிலும், நுழைந்து தேடிவிசாரித்துக்கொண்டு வருகையில் ஒருகிராமத்தில் சிலபெரியோர்கள் அச்சேவகர்களை நோக்கிஐயா இராஜபட்டர்களே! அந்த இராமதாசரென்னுஞ்சாதுவானவர், சிலநாளைக்கு முன்னர் இக்கிராமத்தி லிருக்கும் பிள்ளைகளுடன்கூடிப் பலவிதமாக விளையாடிக் கொண்டிருந்ததை யாங்கள் கண்டோம்.பின்பவரெப்படிப் போனாரோ! எங்களுக்குத் தெரியமாட்டாதென்று புகல, சேவகர்கள்கேட்டு இங்குத்தானே நன்றாய் விசாரிக்க வேண்டுமென்றுகருதி, அக்கிராமத்திலேயே வசித்துக்கொண்டிருக்கையில், அந்தக்கிராமத்திலுள்ளவர்கள் அப்பாலர்களையழைத்து அடா சிறுவர்களே! சிலநாளைக்கு முன்னர் உங்களுடன்விளையாடிக்கொண்டிருந்த இராமதாசர் இப்போதெங்குப் போனார்? தெரிந்திருந்தால் சொல்லுங்களென்று பவமுறுத்திக்கேட்க, அவர்களெல்லோரும பதில் சொல்லாமலிருக்கக் கண்டு கிராமஸ்தர்கள் ஓகோ? இவர்களாலென்னமோ சூது நடந்திருக்கின்றதென்று

அவர்களைநோக்கிஅடாபயல்களே இராமதாசரெங்கே போயிருக்கின்றார் உண்மையைச்சொல்லுகின்றீர்களா அல்லதிந்தப் பிரம்பா லடிபடுகின்றீர்களா ? என்று பிரம்பை யெடுத்துக்கொண்டு அவர்களினருகிற் சென்றுபிரம்பை நோக்கியடிக்கப்போகையில், அவர்களிலொருவன்கண்டுமெத்தவும்பயந்துகிடு கிடென்று நடுங்கித் தேகமெல்லாம் உதற ஓ வென்று பதறித் கதறியழ, அதைகண்டு அக்கிராமஸ்த னொருவன் அவனை யழைத்துக்கொண்டு தனியே சென்று நடந்த செய்தியை ஒளிக்காம லுண்மையைச் சொல்லப்பா ? வென்று பிரியமா வினவினன். அதற்கு அச்சிறுவன் ஓ கிராமஸ் தரே ? நாங்கள் சிலநாளைக்கு முன்னர் அந்த இராமதாசருடன் கூடி விளையாடிக் கொண்டிருக்கையில், புள்ளானது அவரின் புருவத்திற்பட்டு உதிர வெள்ளம் பெருகி வழிய, அவர் மரணத்துக்கு நிகரான மெய்ச் சோர்வை யடைந்து பூமியின்மீது விழுந்து வெகு நேரபரியந்தம் கைகாலசைவின்றியிருந்த உண்மையாகவேமரணமடைந்து விட்டார். அதுசெய்தியைநீங்களும் அரசனும் அறிந்தால்எங்களையெல்லாம்பிடித்துத் தண்டித்துவிடுவீர்களென்றுபயந்து அவ்விடத்திலேயே குழியொன்று வெட்டி அக்குழியி லவரைத் தள்ளிப் புதைத்து விட்டோம். இவ்வளவுதான் நடந்த உண்மையென்று சொல்ல, அதைக்கேட்ட ஊராரும் சேவகர்களும் மெத்தவிசனமடைந்தவர்களாகி அச்சிறுவர்களையழைத்துக்கொண்டுஇராமதாசரைப்புதைத்தவிடத்திற்குச் சென்று அடாசிறுவர்களே ? இராமதாசர் உண்மையாகவே இறந்துபிட்டாரென்று தெரிந்துக்கொண்ட நீங்கள் உடனே யவரைத் தகனஞ் செய்திருந்தால் அவரையாருக்குந் தெரிந்துக்கொள்ள முடியாது. நீங்கள்புதைத்துவந்தபடியினாலல்லவா ? அவருருவம் எவ்விதத்தினாலாவது கண்டுகொள்வதற்குச் சாத்தியமாயிற்று. இந்தச்செய்தியை அரசன் அறிந்தால் தன் குருநாதரை நீங்கள் செய்த கொடுமைக்காக உங்களெல்லோரையும் எளிதில் விடுவானோ ? விடமாட்டானே, ஆதலால் இதற்கென்ன செய்கிற தென்று சொல்லிவெகுவாகப்பிரலாபித்துத் துக்கசாகரத்தில் மூழ்கிஒன்றுந்தோன்றாமற்பிரமைகொண்ட வர்களைப் போலமயங்த்தியக்வ் கொண்டிருந்து சற்றுநேரத்திற்றெளிவடைந்து பகவான் செயலின்படி நடக்கட்டுமென்று திடசித்தர்களாகி மண்ணை யெல்லாம் பறித்துப்பிணத்தையெடுத்து வெளிப்படுத்த யோசிக்குஞ்சமயம், அவ்விராமதாசர் அசையாமலும்கை கால்களை நீட்டாமலும் பிணத்தைப் போலவே அசைவற்றிருந்தார். பின்னுமவர்கள் அப்பிணத்தைக் கைகளாலே தொட்டுஎடுக்கமுயன்றார்கள் அப்போது அவர் தம் தேகத்தின்மீது அன்னியர்களுடைய கரங்கள் பட்டபடியினாலே திடுக்கிட்டெழுந்து நடந்து எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்க முன்போலவே கானகத்திற்போய்ச் சேர்ந்தார்.

இப்படியாக இராமதாசர் ஏழுநாள் சமாதியிலிருந்து எழுந்து, குதித்தும், பாய்ந்தும், சென்று எல்லாரும் பார்த்துக்கொண் டிருக்கக் கானகத்தை யடைந்த விந்தையைகண்டசிலர் இவர் மகாத்துமாவானபடியினாற்றான் ஏழுநாள் குழியில்புதைக்கப்பட்டிருந்தும், பிராணன் போகாம லிருந்தாரென்று சொல்லுவார்கள்சிலர்இவர் யோகசாதனத்திற்சிறந்த உபாசனையில் மிகுந்த பெரியோராகத் தோன்றுகிறாரென்று சொல்லுவார்கள். சிலர் இவருடைய தேககாந்தியையும், முகத்திற்பிரகாசிக்கும்பக்தியையும், கண்ணிலிருந்து வழியும், ஆனந்தக் கண்ணீரையும், ஆக்கையின் பெருக்கையும் பார்க்கச்சிவபெருமானைப் போல விளங்குகின்றாரென்று சொல்லுவார்கள். சிலர் இவர்நடக்கும் ஆனந்தமும், குதிக்குங்கூத்தும், அரையிற்கட்டிய ஆடையும், தேகத்தினின்றுங் காற்றினாலுண்டாகுஞ் சுவாசனையையும்பார்க்க உண்மையான ஞான சம்பன்னரென்றே நினைக்கத்தகுமென்று சொல்லுவார்கள். சிலர் இவர்மானிடப் பிறவியாயிருந்தாலிவர்க்கு வாலொன்றிருக்குமோ? மிருகங்களினுஞ் சேர்க்கையில்லாம லிருப்பதால் இவரை ஆஞ்சநேயரம்சம்பெற்றவராகக் கருதவேண்டுமென்று சொல்லுவார்கள் சிலர் இவருடைய தேகமெல்லாம் புழுதி படிந்திருந்தும் சொர்னப்பிரகாசத்தைப்போலப் பிரகாசிக்கிறது. அன்றியும் ஏழுநாளாய்அன்னபானாதிகளின்றிப் பசியோடு எப்படிச்சமாதியிலிருந்தாரோ? என்றுசொல்லுவார்கள். சிலர் சர்வசங்கத்தையும் பரித்தியாகஞ்செய்து ஏகாங்கியாகிக் கானகத்தை யடைந்து துறவியான பெரியோர்களுக்கு அன்னபானாதிகளேதுக்கு? வாயுவையே பக்ஷணஞ்செய்து மௌனநிலையையடுத்து ஒருவரிடத்திலும் பேசாமலிருப்பவர்களுக்குப் பசிதாகமுண்டோ? என்று சொல்லுவார்கள். சிலர் இவரைத்தன் வயிற்றிற் பத்துமாதமும் சுமந்துபெற்று வளர்த்துமானிடப் பிறவிக்குரிய ஞானத்தைப் போதித்துக் கடைத்தேறும்படி விடுத்த புண்ணியவதிமுற்பிறப்பிலென்ன தவஞ்செய்தாளோ என்றுசொல்லுவார்கள்சிலர்இவர் தந்தைஇந்தமகானு

பாவரைப் பெறும்படியான தவமென்ன செய்தாரோ? எந்தப்பெரியோரிடம் அநுக்கிரகம்பெற்றாரோ எந்தமுனிவருடைய ஆசீர்வாதமோ? என்று சொல்வார்கள். சிலர் இப்படிப்பட்ட பொறுமையும் நற்குணங்களும், இவரிடத்தில்பொருந்தியிருப்பதினாற்றான் இந்தநகரத்தையாளும் அரசன்தினந்தோறு மிவரைத் தெரிசனஞ்செய்யாமற் புசிப்பதில்லையென்று வைராக்கியஞ் செய்துகொண்டு தேடித்திரிகிறானென்றுசொல்லுவார்கள்.

இவ்வாறு அக்கிராமத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தங்களிருப்பிடஞ் சேர்ந்தபின்பு இராமதாசர் தம்மைத் தேடிக்கொண்டு திரியும் அரசன்முன்பாக நிற்க, அரசன் புதையலைக்கண்ட ஏழையைப்போலவும், தேசாந்திரியான புருடனைக்கண்ட மனையாளைப்போலவும், மெதத இளைப்பினால் ஆயாசமடைந்தவன் கற்பகத்தருவைக் கண்டதைப்போலவும் ஆசானைக்கண்டு ஆனந்தங்கொண்டு பலவின்பமொழிகளை விண்டு அவர்திருவடிகளில் விழுந்து புளகாங்கிதமடைந்து பலமலர்களைக்கொண்டர்ச்சனைபுரிந்து தூபதீப நைவேத்தியங்களீந்து கனிவர்க்கங்களைப் புசிக்கச்செய்து ஜலத்தைப் பானம் பண்ணும்படி செய்து மீதியான சேஷத்தைத் தான் புசித்துத் தண்ணீரருந்தி அவர்திருவடிகளைப் பிடித்துக்கொண்டு ஓசுவாமி? சற்குருநாதரே! தயவுசெய்து தேவரீர் நகரத்திற்கெழுந்தருளிச் சேவைகொடுத்துக்கொண்டு சுகமாக விருக்கும்படித் தங்களை வேண்டுகிறேனென, அதற்கு இராமதாசர் ஓநிருபனே! எனக்கெப்பொதிஷ்ட முண்டாகின்றதோ? அப்போது நகரத்திற்கு வருகிறேன். இப்போது நீசீக்கிரம் உன்னுடைய அரண்மனையைச் சேரக்கடவா யென்றார். அந்தப்படியே நரபதி தன்னகரத்தை நோக்கி நடந்து அரண்மனையைச் சேர்ந்திருந்தான் அப்போது ஜெயராமனென்னுங் கிருஷ்ணபக்தனொருவன் இராமதாசருடைய மகத்துவங்களைத் தெரிந்துவிரைவாகநடந்து கானகத்தை யடைந்து அவரருகிற்சென்று வலம்புரிந்து தீர்க்கமாகத் தெண்டனிட்டு எழுந்து பிரம்மானந்தத்துடன் இருகரங்களையும் குவித்துக்கொண்டு ஓசுவாமி? நிஷ்காமி? தாங்களாசாரியபுருஷ் நம்பூரணஞானியும் மாகையால் தங்களுடன் சங்கமஞ்செய்ய வேண்டுமென்று கோரிவந்தேன். கிருபைசெய்துஅடியேனை யாட்கொள்ளும் பரமாசாரியரே? என்றுஇணங்கிவணங்கி நிற்கையில், இராமதாசர் அக்கிருஷ்ணபக்தனைக் கிருபைக்கண்ணாற்பார்த்து ஓஅரிபக்தனே விரைவாக வென்னருகில்வரக் கடவாயென்றழைத்து சமீபத்தில்வைத்துப் பகவத் குணானுபவங்களைப் பிரியத்துடன்சொல்லி அவனதுமனதைத் திருத்திப் பசிதீரும்பொருட்டுப் பத்துவீடுகளிற் சென்று பிக்ஷையெடுத்துவந்து இருவருங் குறைவின்றிப் புசித்துத் திருப்தியடைந்தார்கள். பின்னர் அந்தவனத்தில்இருவரும் மனிதசஞ்சாரமின்றி மிருகக் கூட்டங்களுடன் வசித்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் இராமதாசர் ஜெயராமனைநோக்கி ஓபக்தசிகாமணி? ஆயிரம் பிராமணர்களுக்குத்ததியாராதனை செய்யவேண்டுமென்று கோரிக்கை யெனக்குண்டாயிருக்கிறதென்றுசொல்ல, ஜெயராமனுமப்படியே தங்களிஷ்டப்படி செய்விக்கலாம். பிராமணர்களை விரைவாக அழைத்துக் கொண்டுவாருங்களென்ன, இராமதாசர் உடனே புறப்பட்டு அருகிலிருக்குங் கிராமங்களிற் சென்று அங்கு வசிக்கும பிராமணர்களை யழைத்து ஓபிரம குலத்திலுதித்த பிராமணர்களே! நாளையத்தின ஆயிரம்பிராமணர்களுக்குத் ததியாராதனை செய்விக்க நானெண்ணினேன். ஆகையால் தயவுசெய்து ஆயிரம் பிராமணர்கள் யான்வசிக்கும் வனத்திற்கு வந்து சேருங்களென்று சொல்லி அவ்விடத்தைவிட்டு நடந்து தாம் வசிக்கும் வனத்திற்சேர்ந்து பிராமணர்களையழைத்துவிட்டுவந்தேன். அகையால் அவர்கள் நாளையத்தினம் வராமுன்னமே தளிகைமுதலான கறியமுதுகளைத் தயார்செய்யக் கடவாயென, ஜெயராத்னும் அந்தப்படியே செய்துவைக்கிறேனென்று சொல்லி உடனே கறியமுதுக்கும் தளிகை முதலானவைகளும் சமைத்துச் சித்தப்படுத்தி வைத்தான். மறுநாட் காலையில் அவ்வனத்திற் பிராமணர்கள் ஆயிரம்பேர்கள் வந்துசேர, ஜெயராமனும் வந்தபிராமணர்கள் ஆயிரம்பேர்களுக்குந் தளிகையிலைபோட்டுக்கறியமுதுகளுடனும் அன்னம்பரிமாற, அந்தப்பிராமணர்கள் ஆயிரம்பேரும் புசித்துத் திருப்தியடைந்து சந்தனதாம்பூலதட்சணைகளைப் பெற்றுக்கொண்டு தங்கடங்கள் கிராமத்திற்போய்ச் சேர்ந்தார்கள்.

இந்தப்படியாக அந்தப்பிராமணர்கள் புசித்துப் போயின பின்னர் ஜெயராமனும் இராமதாசரைவணங்கி விடைபெற்றுக்கொண்டு ஏக, உடனே தத்தனென்னுமொருவன் இராமதாசரின் நற்செய்கைகளையறிந்து அவரிடம் உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதிப் புறப்பட்டுக் கானகத்தை யடைந்து அவரைக்கண்டுபணிந்து ஓகுருநாதரே? மெத்த ஏழையாகி உலகமாய்கையிற் சிக்கிக் கடைத்தேறும் வழியறியாத அஞ்ஞான சம்பன்ன கொடியேனாகிய அடியேனுக்கு உபதேசஞ்செய்து பகவானுடைய கிருபைக்குப்பாத்திரனாகும்படி அருள்புரியுமையாசுவாமி

என்றுவேண்ட, அதற்கு இராமதாசர் ஓ தத்தனே!
நானுனக்குபதேசியேன். நீவந்தவழியைப் பார்த்துக்
கொண்டு செல்லென்ன அதற்குஅவன் ஓதயாளமூர்த்
தியே? எங்கும் பிரசித்தமான கீர்த்தியே? தாங்களடி
யேனுக் குபதேசஞ்செய்யாவிடினும் யான் தங்களுக்
குத் தொண்டுபுரிந்து கொண்டாயினுமிருப்பேனென்
றான். அதற்கு இராமதாசர் ஓதத்தனே? எனக்கு நீ
தொண்டுசெய்ய மனமிருக்கும்பக்ஷத்தில் எப்போது
மென்னைப் பிரியாமல் தொண்டுசெய்து கொண்டிருக்
கவேண்டும். அப்படிச் செய்ய இஷ்டமில்லாவிடில்
இப்போதேநீ.இவ்விடத்தைவிட்டு உன்னிருப்பிடஞ்
சேரக்கடவாயென்றார். அதற்கும் அவன் ஓ சுவாமி?
தேவரீரிஷ்டப்படியே. தங்களைவிட்டுப் பிரியாமலென்
றுந் தொண்டு செய்கிறேனென்று சொல்லி அன்று
முதற்கொண்டு ஆசானுக்குச்செய்யவேண்டியதொண்
டுகளை யெல்லாஞ் செய்துவிட்டுப் பக்கத்திலுள்ளகிரா
மங்களிற் சென்று பிட்சை யெடுத்துக்கொண்டு வந்து
கிடைத்தமாவை அவரிடங்கொடுப்பான். அதைஅவர்
பெற்றுப் பாகஞ்செய்து அவனுக்குங்கொடுக்க, இரு
வரும் புசித்துப் பகவத்குணானுபவங்களைச் செய்வார்
கள். இந்தப்படியாகச்செய்து வருகையில் ஒருநாள்
இராமதாசரும் தத்தனும்புசித்து இளைப்பாறினபின்
இராமதாசர் தத்தன்செய்யுந் தொண்டுகளுக்கு மெத்
தவும் சந்தோஷித்து அவனைச்சமீபத்தி லழைத்துத்
தாரகநாமத்தை உபதேசஞ்செய்து அவன் சிரத்தில்
தமது கரங்களைவைத்து சீக்கிரத்தில் புனிதனாகக்
கடவாயென்று ஆசீர்வாதம் புரிந்தார். அந்தத் தத்த
னும், அக்கணமே உடல்பொருளாவி யென்னுமூன்
றையும் ஆசாரியருக்குத் தத்தஞ்செய்து இமைப்பொ
ழுதேனும் வீண்காலம்போக்காமல்தொண்டுசெய்வதி
லேயே மனதைப் பொருந்தும்படி வைத்திருந்தான்.

இங்கிவரிப்படியிருக்க, அங்கேயரசனானவன் ஆசி
ரியரைச் சேவிக்கவேண்டுமென்ற அவாமிகுத்துஆசா
னைப் பலவாறு தோத்திரம்புரிந்துக் கொண்டிருக்க
அதனை இராமதாசரறிந்து தத்தனுடன் கூடிக்கொ
ண்டு பட்டணத்தைநோக்கி ஸ்ரீராமநாமபாராயணஞ்
செய்து தன்னைமறந்து ஆடிப்பாடிக்கொண்டே போ
கையில், ஆனந்தம் பிரம்மானந்தமென்று மிரண்டை
யுங்கடந்து, பரமானந்தத்தையடைந்து ஆனந்தக்கண்
ணீர் பெருகியோட, தேகப் புளகாங்கிதங் கொண்டு
பரவஸ்துவினிற் கலந்தவர்களாகிச் சென்றார்கள். இவ்
வண்ணமாகப் பக்திசெய்துக்கொண்டு அவ்விருவரும்
நகரத்திற்குச் சமீபமாகவருகையில். இராமதாசர் அங்
கொரு கிணற்றைக்கண்டு அதிலிறங்கி ஸ்நானநுட்டா
னங்களை முடித்துக்கொண்டு அதைவிட்டு மேலேறி
னார். உடனே தத்தன் அவரைக்கண்டுஓசுவாமிசற்குரு
நாதரே? இதோகவித்திருக்கின்ற சோளவயல்களைப்
பார்த்தீரா? இதில் நான்கு கதிர்களைப் புசிப்பதற்குக்
கொண்டுவருகிறேனென அதைக்கேட்ட குருநாதர்
தத்தனைநோக்கி அப்பா தத்தா? இந்ததிருட்டுவேலை
மாத்திரம் நாம்செய்யத்தகாது. நகரத்தை யடைந்து
அரசனுக்கறிவித்தால் நமக்குசோளக்கதிர்கள் வண்டி
வண்டியாக எளிதிற்கிடைக்கும் ஆகையால் கதிர்களை
ஒடிக்கவேண்டாம், ஒடிக்கவேண்டாம், என்றுசொல்
லிக்கொண்டே யிருக்கையில், அந்தத்தத்தன் நான்கு
கதிர்களை ஒடித்தான். அதைப்பார்த்துக்கொண் டிரு
ந்த அக்கொல்லைக்குச் சொந்தக்காரர்கள் விரைந்தோ
டிவந்து அவனைப்பிடித்துக்கொண்டு அவனதுகன்னம்
பிளந்துபோம்படி பளீர் பளீரென்று அடித்தார்கள்.
அப்போது இராமதாசர்ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைத்
தியானஞ்செய்துக் கொண்டிருந்தார் அவ்வடிகளப்ப
டியே அவ்விராமதாசரின் முதுகிற்பட்டது அதனால்
அவர்சிரித்தார். அதைக்கண்டு குடிகள் ஐயோ முன்
னர் இக்கதிர்களில் சிலவற்றைக்கொண்டுபோய்ப் பக
வானுக் காராதனை செய்யாமுன் நீங்கள்ஒடிக்கலாமா
எச்சிலாய்விட்டதை எப்படிப்பகவானுக்கு வினியோ
கஞ் செய்கிறதென்று நாங்கள் விசனப்பட்டுக்கொண்
டிருக்கும் எங்களைப்பார்த்து நீரேன்சிரிக்கிறீரென்று
சொல்லிக்கொண்டே இராமதாசரின் முதுகின்மீது
அத்தத்தனை அடித்தஅடிகள்பட்டிருக்கக்கண்டுஅவர்
கள்மெத்தவும் வியப்படைந்து, இவர்கள் மகானுபா
வர்களென்று கருதி, நாம் தெரியாமல் இவர்களிடம்
அபசாரப்பட்டோமே, நம்முடைய அஞ்ஞானத்தை
யென்னவென்று சொல்லுவோமென்று அவமானப்
பட்டவர்களாகத் தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.
அடிபபட்ட தத்தனோ? மெத்த நோயினால் அழுது
கொண்டிருக்கக்கண்டு இராமதாசர்! விசனப்படாமல்
அவனை நீ எனழுகிறாய்? வீணில் நீசெய்த குற்றத்திற்
குப் பகவானுன்னைத் தண்டித்தார். அன்றியும, நான்
முன்னரே வரப்போகிற கெடுதியை யறிந்துக்கொண
டல்லவோ வேண்டாம் வேண்டாமென்று தடுத்தேன்
என்சொல்லைக் கேளாமற் செய்தபடியால் இக்கெடுதி
நமக்கு சம்பவித்ததென்ன அதற்குதத்தன் ஓ சுவாமி
குற்றஞ்செய்தவன் நானாகவிருக்க எனக்குத்தண்டனை
யுண்டாகவேண்டியதே நிரபராதியான தேவரீருக்குந்
தண்டனை யுண்டாயிற்றே, இதுதருமமோ வென்று
கேட்க, அதற்குஅவர் ஓதத்தனே? நீயேன்சிந்தனைப்
படுகிறாய்! பக்தர்களுக்கு எப்படிப்பட்ட இடுக்கண்
கள் வந்தபோதிலும் அவைகளை அவர்கள் கருதாமல்

மான அவமானங்களைச் சமமாகக்கருதுவார்கள் அப்படியிருக்க, நீபகவத் பக்தனாகவிருந்தும், மான அவமானங்களைக்கருதிப் பேதமனத்தனாகி விசனப்படுவது தகுதியோ? அபேதமாயிருப்பதன்றோ? பாகவதர்களுக்குரிய இலட்சணம். அன்றியும் பாகவதன் தன்னை யாரேனும் அடித்துத் தொந்திரவுசெய்யினும் அவ்வாறு அடித்தவர்களைப் பதில் அடிக்க எத்தனஞ் செய்யான். மனதில் ஆயாசமுங் கொள்ளமாட்டான். இதுபகவானுடைய செயலென்று அப்போதேமறந்துவிடுவான் மேலும் தன்னுடைய பொருளை பிறர் அபகரித்துக் கொண்டாலும் அப்பொருளை கிரகிக்கவேண்டுமென்று அதற்குவேண்டிய முயற்சியுஞ் செய்யான். சொத்துக்குடையவன் சொத்தை யெடுத்துக்கொண்டான் அதைப்பற்றி நாம்சிந்திப்பதிலும்அவர்களிடத்தில் சண்டைசெய்வதிலும் யாதொரு பயனுமில்லை யென்று பிறரிடத்திற்சொல்லாமலும்,அப்பொருள்விஷயத்தில் மனதைச் செலுத்தாமலும், சந்தோஷமாகவே பகவானைத் துதித்துக்கொண்டிருப்பான். ஆகையால் நீ இப்படிப்பட்ட வைராக்கிய ஞானமார்க்கத்தை யொழித்து அற்பவஸ்துவாகிய சோளக்கதிருக்காசித்து அடியும்பட்டாய், அவமானத்திற் கிடந்தேடிக்கொண்டாய், இனிமேலாகிலும் நீ வைராக்கிய ஞானத்தில் உன்மனதைச் செலுத்திக்கொண்டு இச்செய்தியை அரசனுக்கறிவிக்காம லிருக்கக் கடவாயென்று கட்டளையிட்டு மார்க்கத்தை நோக்கி நடந்துபோனார்கள். அப்போது அங்கே அரசன் குருநாதரைச் சேவிக்க வேண்டுமென்ற அவாமிகுந்து நால்வகைச் சேனைகளுடன் பலவித மேளவாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டுவந்து தூரத்திலேயே அவரைக் கண்டு சிவிகையைவிட்டுக் குதித்து ஓடோடியுஞ் சென்று அவரின் திருவடிகளில் விழுந்து பணிந்தெழுந்து ஓசுவாமி சற்குருநாதரே? வரவேண்டும், வரவேண்டுமென்று அழைத்துச்சென்று சிவிகையின்மீது வீற்றிருக்கச்செய்து சாமரம் விசிறிவீச அனேகமேள வாத்தியங்கள் தாம்தாமென்று முழங்கப் பலவித உபசாரங்களுடன் நகரத்திற் கழைத்துச்சென்று மந்திரிபிரதானிகள் புடைசூழச் சபாமண்டபஞ் சேர்ந்து தன்னுடைய சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கச் செய்து ஆனந்தம் பிர்மானந்தமென்னு மிரண்டையுங்கடந்த் பரமானந்தமடைந்து பலவித அறுசுவை யன்னங்கள் சமைக்கச்செய்து பிரசாதந் தயாராயிற்று, யாவருந் தயவுசெய்து ஸ்நானத்திற் கெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். உடனே பிராமணர்கள் முதலானோரும் ஸ்நானத்திற் கெழுந்தருளி ஸ்நானநட்டானங்களை முடித்துக்கொண்டு சர்வசித்தமாயிருக்கத் தளிகையிலேபரிமாறிச் சகலபதார்த்த கனிவர்க்கங்களுடன் அன்னம்வட்டித்துக் குருநாதருக்கு வென்னீர் தயார்செய்து அவரையழைத்துச் சென்று தன்கரங்களால் ஸ்நானஞ்செய்வித்து உடம்புதேய்த்துக் கழுவுகிறபோது அவர்முதுகி லிருக்கும் வடுக்களைக்கண்டு ஓசுவாமி! இதுவென்ன தங்கள் முதுகில் வடுக்கள் உண்டாயிருக்கின்றதே! இப்படி யாவதற்குக் காரணமென்னவோ! அதைத் தெரியச் சொல்லவேண்டுமென்று வேண்ட, அதற்குக் குருநாதர் ஓநரபதியே!நான்கானகத்தில்சஞ்சரிப்பவனாதலால்ஏதோ செடிகளின்கிளைகள் உராய்ந்துகொண்ட வடுக்களாகவிருக்கவேண்டும், அஃதல்லாமல் வேறொரு காரணத்தாலுண்டாயின தல்லவென்றுசொல்ல, அரசன் அது விஷயத்தில் சந்தேகங்கொண்டவனாகி அவருக்குள்ள அநுஷ்டானங்களை முடிக்கவேண்டியதற்குவேண்டியவைகளையீந்து மடிவஸ்திரங்கொடுத்து உடுத்திக்கொள்ளச்செய்து உன்னதமான ஓர்ஸ்தானத்தில் ஆசனமிட்டு அதிலவரை இருக்கச்செய்து இலைபரிமாறித் தின்னல், மெல்லுதல், நக்குதல், முதலான பக்ஷணங்களைப் படைத்து அவரது ஸ்ரீபாததீர்த்தை ஸ்வீகரித்துநிற்க, அவர் ஸ்ரீராமார்ப்பணமென்று யரபோசனத்தைக் கைக்கொண்டமாத்திரத்தில்பிராமணர்கள் யாவரும் மெத்தப் பிரியத்துடன் நன்றாகப்புசித்துத் திருப்தியடைந்து போயினார்கள். உடனே அரசன் குருநாதர் புசித்த சேஷமிருக்கும் இலையைத் தானெடுத்துச் சென்றோரிடத்திற் போட்டுக்கொண்டு உட்கார்ந்ததோடு அவ்விடத்திற்குத் தத்தனையும் வரவழைத்து அவனுக்கும் ஓரிலைபோடுவித்து அறுசுவையன்னங்களை வடித்து உண்ணும்போதே அவனை நோக்கி ஓபாகவத சிகாமணியே! நமது குருநாதர் முதுகில் சூடிருக்கின்றதே அதற்குக் காரணமென்ன சொல்லென்றுகேட்க, அதற்கந்தத் தத்தன் ஓநராதிபனே? அச்செய்தியை யெவருக்குஞ்சொல்ல வேண்டாமென்று நமதுகுருநாதர் அடியேனுக்குக்கட்டளையிட்டிருப்பதால் அவருடைய கட்டளையைமீறி நான் நடப்பதற்கு எனக்குப் பொருத்தமில்லையென்றுசொல்ல, அதைக்கேட்டரசன் ஓதத்தனே! அந்தஇரகசியத்தை நீ எனக்குச் சொல்லும்பரியந்தம் யானிந்த அன்னத்தைப் புசிக்கிறதில்லையென்று வைராக்கியஞ் செய்துக்கொண்டு அன்னம் பரிமாறிய அவ்விலைக்கு முன்னிருக்கையில், தத்தனும் இதுசெய்தியை யரசனுக்கறிவித்தால் பெருத்த வழக்குண்டாகு மெனக் கருதிக் குனிந்ததலையுடன் பதில்சொல்லாதிருந்தான. உடனே அரசன தத்தனைநோக்கி ஓபுண்ணியவானே நான் மெத்த நேரமாய் அன்னம்பரிமாறின இலைக்கு

முன்னருட்கார்ந்திருப்பது நீதியோ அன்றியும், குருநாதருடைய சேஷமமைந்த அன்னமாயினதால் அப்படியிருப்பது மெத்த அபசாரத்திற்குக் காரணமாகும். ஆதலால் தயவுசெய்து நடந்த உண்மையைச் சொல்லென்று வேண்டிக்கொள்ள, தத்தன் அரசனை நோக்கித் தான் சோளக்கதிர் பறித்து வருகிறேனென்றதும், குருநாதர் வேண்டாமென்று தடுத்ததும், அம்மொழியைக்கேளாமல் தான்போய்ச்சோளக்கதிரைப் பறித்ததும், அதைப்பார்த்துக் காவலிருக்குங் கொல்லைக்குடையவர்கள் வந்து தன்னையடித்ததும், அவ்வடிகள் குருநாதர் முதுகில் வடுக்களானது மான சமாச்சாரத்தை ஆதியோடந்தஞ் சொல்லினான். அதைக்கேட்ட அரசன்மெத்தவுங் கோபமடைந்துஉடனே குதிரைச் சவாரிகளையனுப்பி சோளக்கொல்லைக் குடையவர்களைப் பிடித்துக்கொண்டு வரும்படிக் கட்டளையிட்டுத் தானும் தத்தனும் புசித்து விரைவில் ஆசிரியரிடஞ் சென்று ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் கீர்த்தனைகளைக் கேட்டால் க்ஷேமமுண்டாகி க்ஷாபம் நீங்குமென்றுன்னிக் குருநாதரை வணங்கி நிற்க, அக்குறிப்பை யுணர்ந்து குருநாதர் மிருதங்கம் தம்பீர்தாள முதலான கருவிகளுடன் ஸ்ரீராமகீர்த்தனைகளை வெகுவாகப் பாடிக்கொண்டிருந்தால். எனது நினது என்பதை நீறுகச்செய்யும், சாரங்களுக்கெல்லாஞ்சாரமாவோன் இராமனே, அந்த இராமன் நல்ல மனநிலமையுடன் பத்தி செய்வோர்களிடத்தில் கிருபையுடன் குடிகொண்டிருப்பன். கற்பகத்தருவும், சிந்தாமணியும், காமதேனும் மூன்றிற்கும் அதிகப்பட்ட அருமையும், பெருமையும்வாய்ந்த அந்தஸ்ரீராமனைத் துதிசெய்துக் கொண்டிருப்பது மேலானகாரியமென்று கீர்த்தனைகளைப் பாடிக்கொண் டிருந்தார்.

இவ்வாறு அக்குருநாதர் கீர்த்தனைகளைப் பாடியாடுவதைக்கண்டுங் கேட்டுமிருந்த அரசன் முதலிய யாவர்களும் மனமானந்தத்தோடு சேவையிலீடுபட்டுத் தங்களை மறந்தார்கள். அப்போதுஅவர் கீர்த்தனைகளைநிறுத்தி மங்களம்பாடி முடித்தார் இங்கிப்படியிருக்க, சோளக் கொல்லைக் குடையவர்களைப் பிடித்துவரச் சென்றகுதிரைச் சவாரிக்காரர்கள் குதிரைகளை விரைவாகமுடுக்கிச் சோளக்கொல்லையைக்கிட்டி அங்குக்காவலாகவிருக்கும் காவற்காரர்களைப்பிடித்து மடலோடு மடலொடியக் கட்டிக்கொண்டு இராஜனையடுத்தார்கள். அவ்வாறடுக்க அச்சோளக் கொல்லைக் காவலர்கள் அங்குக்குருநாதர் செய்யும் பாராயணமாகிய இராமகீர்த்தனையைக் கேட்டு ஆனந்தித்துத் தாங்கள் கட்டுப்பட்டிருப்பதை மறந்து சகலத்தையுந் துறந்து பரவசமடைந்திருந்தரர்கள். அப்போதுகுதிரைச் சவாரிக்காரர்கள் மந்திரியை நோக்கி ஓசுவாமி? அரசன் கட்டளையின்படி சோளக்கொல்லைக் காவலர்களைப் பிடித்துக்கொண்டு வந்தோமென்று சொல்ல, அதைக் குருரநாதர்கேட்டு அரசனைநோக்கி ஓ அரசனே? அவர்களை யிங்கழைத்து வரும்படி கட்டளையிடென்ன, அந்தப்படியே அரசனும் மந்திரியைநோக்கி ஓமதிமந்திரியே? கைதிகளாய் வந்திருக்கிற சோளக்கொல்லைக் காவலர்களை இங்குவரச் சொல்லென்று கட்டளையிட்டு வரவழைத்துக் குருநாதர் முன்னர்விட மெத்தப்பயந்தவர்களாகிக் கட்டுப்பட்டிருக்கும் சிரபத்தினாற் சித்தங்கலங்கி யெதிரில்நிற்கும் சோளக்காவலர்களை இராமதாசர்கண்டு ஆஹா பரமசாதுக்களான இவர்களுக்கும், இப்படிப்பட்டகஷ்டம்நேர்ந்ததல்லவா? இத்தனையும்இவர்கள் முன்னர்செய்த ஊழ்வினையின் பயனேயென்று கருதி அரசனைநோக்கி ஓ பூபாலனே! விரைவினி லிவர்களைப் பிணித்திருக்குங் கட்டுகளை யவிழ்த்துவிட்டு விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் அவர்கள் பயிர்செய்து கொண்டிருக்கும் வயல்களையும் இனாமாகக்கொடுப்பதன்றியும் குருதட்சணையாக எனக்குச்சேரவேண்டிய பொருள்களையும், அவர்களுக்குக் கொடுத்தனுப்பென்றுபகர, அதற்கரசன் எனது சற்குருநாதரே? நல்ல நீதியையுடைய தேவரீரது முதுகின்மீதுவடுவுண்டாகும்படி அடித்து அபசாரப்படுத்திய துஷ்டர்களாகிய இவர்களுக்கு இத்தனை சன்மானங்களுஞ்செய்து உபசரித்து அனுப்ப வேண்டுமோவென அதற்கு தாசர் மெத்தவுங் கிருபையுடன் அரசனைநோக்கி ஓ! வேந்தனே! இவர்கள் பரமசாதுக்கள் மெத்தசுசீலர்கள், பரம உபகாரிகள் இப்படிச்செய்வதற்குக் காரணமென்னவெனில் பரமகிருபா நிதியாகியபகவான் இவர்கள் மனதிலிருந்துக்கொண்டு என்னுடைய பக்திபரதந்திரத்தை வெளிப்படையாக எல்லோருங்கண்டு மகிழும்படி சோதித்தாரே யல்லாமல் மனமார இவர்களென்னை யடிக்கவில்லை. மேலும் இதிலின்னமொரு விசேஷமுண்டு. அதென்னவெனில் சோளக்கதிர்களை யொடிதத குற்றத்திற்காக அத்தத்தனையடித்த அவ்வடிகளென்முதுகிற்பட்டு வடுக்கள் காணப்படுகின்றன. இதுவேபோதுமான திருஷ்டாந்தரமாகத் தெரிகின்றது. ஆகையால் இவர்களைப்பற்றி யான் விசேஷித்துச் சொல்லவும் வேண்டுமோ? நீமெத்த தெளிவாளியானதால் இவர்கள் விஷயத்தில் யாதொரு குற்றமுங் கருதாது யான் சொல்லியபடி குருகாணிக்கைகள் உடன்கொடுத்துப் பூசித்தனுப்பக் கடவாயென, அந்தப்படியே வேந்தனும்விலையுயர்ந்த வஸ்திராபரணங்களையும்இன

மாகச் சிலகாணி பூமிகளையுங் குருதக்ஷிணை முதலானவைகளையு மவர்களுக்குக் கொடுத்துப் பலவிதங்களாகப் பூசித்து விசுவாசித்து அனுப்ப, அவர்களும் அரசனாற் கொடுக்கப்பட்ட யாவற்றையும் பெற்றுக்கொண்டு தாசரிடம் விடைபெற்றுத் தங்களிருப்பிடத்தை நாடிச் சென்றார்கள்.

இந்தப்படி சோளக்கொல்லைக்குடையவர்கள் போயின பின்னர் தாச ரங்குமூன்றுநாள் வசித்திருந்து மூன்றாநாளிரவில் அரசனுக்குத் தெரியாமல் நடந்து கானகமேவியிருந்தார் அவரிப்படி கானகத்திலிருக்க அரசன் நான்காம்நாள் காலையிலெழுந்துகாலைக்கடனை முடித்துக்கொண்டுவந்துபார்த்து எல்லாவஸ்துக்களுமிருக்க ஆசானைமாத்திரங் காணாமையால் மெத்த முற்று, நால்வகைச்சேனைகளுடன் வெளிப்பட்டுகானகத்தை யடைந்து குருநாதரைக்கண்டு பணிந்து, ஓ சுவாமி! தேவரீர் சொல்லாமற் புறப்பட்டு நடுராத்திரியில் வருவது தகுதியோவென அதற்கு ஆசான்யான் பஞ்சவடிக்குப் போகவேண்டி வந்தேனென அரசன் ஓசுவாமி? தேவரீருடன் அடியேனும் வருகிறேன்என்னையும் அங்கழைத்துச்சென்று பகவானுடையசேவை இலபிக்கும்படி கிருபாநோக்கம் புரியுமையாவென்று வணங்கிப் பின்னும் எனது சற்குருநாதரே! இரதகஜதுரகபதாதிகளும், தனகனக வஸ்துக்களும் நிறைந்திருக்கும் இந்நகரமுந் தேவரீருடையதா யிருக்க அதிலெந்தவாகனத்தின் மீதேனும், அல்லது தணடிகைரதத்தின்மீதேனு மேவிக்கொண்டுபோகாமல் நடந்து சிரமப்பட்டுக்கொண்டு போவது தகுதியோ? வென, குருநாதர் ஓவேந்தனே? பிரஜைகளைப் பாவிப்பதில் உபசாந்தனே! நகரத்தைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டும் இடைவிடாமல் இராமநாமத் தியானஞ் செய்துகொண்டு மிருப்பது உனக்கு நீதியாயிருக்க, அதைவிட்டுக் காடேகதியாய்த் திரியும் என்பின் நீ வருவதுங் என்னை வாகனங்கள்மீதேறி சவாரிசெய்து செல்லுமென்று விள்ளுவதும், தகுதியோ? எனக்கிவைகளெல்லா மேதுக்கென்று புகல, அரசன் மறுத்தும் எனதையனே! புண்ணிய தலங்களில் தரிசனஞ் செய்யும்பொருட்டு கஜதுரகமுதலானவைகளை மந்திரியுடன் சேர்த்தனுப்புகிறேனென்று பணிய, குருநாதர் அரசனே? நினதிஷ்டப்படி செய்யென அரசன் பின்னுமவர் திருவடித்தாமரைகளில் விழுந்தெழுந்து ஓசுவாமி! இன்னுமொரு மனுவிருக்கின்றது. அதென்னவெனில், இந்தக்காலத்தில் வசிப்பவர்களாகியபிராமணர்கள் பண்டிதர்கள் முதலானோரும்தங்களுடைய குலமியாதோ? அதைவிசாரித்துத் தெரியப்படுத்தும்படி சிலநாளாய்த் தொந்தரவு செய்கின்றமையால் தயவுசெய்து கிருபைபுரியவேண்டு மென்று பணிய, அதற்கு இராமதாசர் சிரித்து ஓவேந்தனே! முன்னர் ஸ்ரீராமர் வானரங்களைக் கேவலமாகக் கருதாமல்அச்சேனைகளைச் சகாயமாகக்கொண்டு இராவணாதி இராக்ஷதர்களை வென்றார் ஆகையால்நானுமிவ்வுலகத்திற் குரங்காயினேன், அன்றியும்எனக்குச்சம்பத்தும்குலகோத்திரமும் தாய்தந்தையர்களும் அண்ணன் தம்பிகள் முதலான பந்துவர்க்கங்களும் ஸ்ரீராமச்சந்திரரேயாகும். மேலும் ஜாதிகுலபேதாபேதமெனக் கேதுக்கு பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்யுமவர்கள் எந்தக்குலத்திலே பிறந்தவர்களா யிருப்பினும் என்ன? பஞ்சமகுலத்திற் பிறந்தவர்களாயினும் அவர்களே மேலான குலத்தோர்கள். அவர்களே என்போலியவர்கள் தொழுதேத்துங் கடவுளராவார்கள். ஜாதியிலும் ஒழுக்கத்திலும் மேலோர்களா யிருப்பினும் பகவந்நாம பாராயணஞ் செய்யாதவர்கள் யாவரோ? அவர்களே புலையர்களாவாரெனக் கேட்டு அரசன் ஆசான் திருவடிகளிற் பணிந்து மெத்தப் பிரியத்துடன் அநேகஞ் சோப்தார்மார்களுடன் ஆனை குதிரைச் சவாரிகளையும் வெகுபொருள்களையும் நவரத்தினங்கள் பதித்த சிவிகைகளையும் ஆசானுடைய கட்டளைக்குட்படுத்திப் பஞ்சவடிக்குப் பிரயாணப் படுத்தினான்.

இவ்வண்ணம் அரசன் யானைகுதிரைகள் முதலானவைகளையும் தயார்படுத்தி ஒருகாததூரம் வரையில் கூட்டிச்சென்று வழிவிடுத்துத் தனக்கு அவரைவிட்டுப் பிரிந்து வரமனமில்லாமல் ஆறாத் துன்பத்தைக்கொண்டு சிந்திக்கிறபோது ஆசான் மெத்தக்கிருபையுடன் எப்போதும் நான் உன்னைவிட்டுப் பிரியாமலிருப்பேன். இஃதுண்மையென்று நம்பெனசொல்லி விரைவாகநடந்து தன்பின்வந்த யாத்திரைவாசிகளுக்கு அறுசுவை யன்னம் சமைத்துப் புசிக்கச்செய்துகொண்டு தாசர்மாத்திரம் கிராமங்களுக்குட் புகுந்து யாசகம்செய்து கிடைத்தவஸ்துக்களைப் புசித்துஅனுதினமுந் திருப்தியடைந்து தளியாராதனையை விடாமல் நடத்திக் கொண்டும் திரவியத்தை விசேஷமாகச் செலவு செய்துக்கொண்டும், பாலர்களுடன் விளையாடத்தொடங்கி வில்லைப்பிடித்து மண்ணுருண்டைகளால் மரத்திலைகளையடிக்க அவ்வடிகள் குறிப்புடன் பட்டு இலைகளுதிர்ந்து கீழேவிழுவதால் சந்தோஷித்துக் கொண்டுவருவார். இந்தப்படி வருகையில் ஒருநாள் இலைகளைக்குறித்தார் வைத்தடித்தார். அவ்வடி அங்குப் பின்னலிருந்த கெருடப்பட்சியின் மீதுபட்டு அப்பட்சி யிலையுடன் தள்ளிக்கீழேவிழுந்து பிராண

னைவிட்டது. அதைக்கண்ட தாசர் ஆஹாநாமென்ன
பக்ஷியிருப்பதை யறியாமல் இலையைத் தானேஅடித்
தேன். அவ்வடி பட்டன்றோ இக்கெருடபட்சி இறந்
தது. அந்தோ நானிதற்கென்னசெய்வே னென்று
தவித்துத் தன்னுடன்வந்து யாத்திரை வாசிகளாய்த்
ததியாராதனை செய்துக் கொண்டிருக்கும் பிராமணர்
களை நயமொழிகளைப் புகன்றழைத்து ஓதேசாந்திரி
களே! நீங்கள்மெத்த சாந்தமூர்த்தியான பகவானுக்
கிணையாவீர்கள். ஆகையால்இக்கெருடப்பட்சிக்குயிர்
கொடுத்து இரட்சியுங்களையா? உங்களுக்குவேண்டிய
திரவியங்களைக் கொடுக்கிறேன். எப்போது முங்கள்
கீர்த்தியையெங்கும் பரவும்படி செய்கிறேன், இப்பற
வையை யெழுப்புவதால் உங்களுக் கெல்லாம் நல்ல
சுகிர்தமுண்டாகும் அப்படிச்செய்தால் யானிந்தப்
பக்ஷியைக் கொன்ற தோஷமுமென்னை விட்டகன்று
போகும் உபகாரங்கள் பலவிருப்பினும், இறந்து
போன ஜெந்துக்குப் பிராணதாரை வார்த்துக் காப்
பாற்றுவதே பெருக்க உபகார மாகுமென்று நவில,
அதைக்கேட்ட யாத்திரைக்காரர்கள் தாசரைநோக்கி
ஓ பரமசற்குருநாதரே! இந்தப்பறவை யிறந்து போ
யிற்று. மறுபடியு மிதற்குப்பிராணன் வரமாட்டாது.
இந்தக்காரியம் எங்கவரலாக மாட்டாது. முன்னரிந்
திரசித்து விட்ட நாகபாசத்தினல் கட்டுண்ட இலட்சு
மணரையும் அரக்கர்களாலடிபட்டு மாண்டுபோயின
அநேகவானரக்கூட்டங்களையும் வெகுதூரத்திலிருந்து
சஞ்சீவிப் பருவதத்தைப் பந்துபோல் ஆகாயமார்க்
கமா யெடுத்துவந்து உயிர்கொடுத்துச் காப்பாற்றின
ஆஞ்சநேயர் அம்சத்தைப்பெற்ற தேவரீர்நினைத்தால்
இப்பறவைக்குயிர் வரமாட்டாதோ? எங்களை யிப்படி
சோதிப்பதால் தங்களுக்குவரும்பயன்யாது? மேலும்
சிலையானவன் பகவானுடைய திருவடிப்பொடி பட்ட
மாத்திரத்தில் சிலாரூபம்நீங்கிப் பெண்ணாகவில்லையா
அன்றியும் மாருதிவிபீஷணர் முதலானோரும் பகவத்
கைங்கரியத்தால் சிரஞ்சீவிப்பட்டம் பெறவில்லையா?
அப்படி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைச் சிந்தித்து வந்தி
த்துக்கொண்டிருந்து விரைவிலிப்பட்சியை யெழுப்பு
மையா சுவாமியென்று பணிய, உடனே தாசரும் ஸ்ரீ
ராமச்சந்திர மூர்த்தியினலாகாத காரியமு மொன்று
ண்டோ? எனக்கருதி இறந்துபோயின பறவையை
யெடுத்து இராமநாமத்தைத் தியானஞ்செய்துக் கொ
ண்டே தண்ணீரினல் அப்பறவையின் சிரத்தைத்
துடைக்க, அப்பறவைக்குயி ருண்டாகிக் குதிக்கத்
தொடங்கிற்று. அந்தவிந்தையைக் கண்ட சகலரும்
இதென்ன? இராமமென்றவுடனே இப்பறவைக் குயி
ருண்டாகி எப்படி குதிக்கத்தலைப்பட்டதென்று ஒரு
நாளுமில்லாத ஆச்சரியமடைந்துஇந்தப்பரமாத்துமா
வானவர் மகாயோக புருஷரென்று கருதி அவரை
வெகுவாகக் கொண்டாடித் தோத்திரம்புரிந்து பணி
ந்து போற்றினர்கள்.

பின்பு தாசர் திரியம்பகனைத் தெரிசனஞ் செய்
யும்பொருட்டுச் சென்று ஒருமாதகாலம் அங்குவசித்
திருந்து மறுபடியுந் திரும்பிப் பஞ்சவடியைசேர்ந்து
அத்தலத்தில் முன்போலவே பிராமணர் களுக்குக்
குறைவின்றித் ததியாராதனை செய்து தாம்கொண்ட
கோரிக்கை நிறைவேரும் பொருட்டுச் சிலகாலபரியந்
தம் அங்குவசித்துத் தசரதராமரது திவ்வியநாமத்தி
னலே எல்லாப் பிரயோஜனங்களும் வெகுவாகக்
கிடைக்குமென்றுசொல்லி அப்பகவானது கீர்த்தனை
களைப் பிரஜைகளுக் கெல்லாம் நன்ருய் விளங்கும்படி
மங்களகரமாய்ப் பாடியாடிப் பக்திமிகும் வண்ணம்
போதித்தார். அதன்பின்னர், ஆகாயமுழுவது மொ
லிக்கும்படி சகல வாத்தியங்களோடு டாகிலிக்குப்
போகப்புறப்பட்டு அனேக ஜனங்கள் தம்மைச்சூழ்
ந்துவர நடந்து டாகிலிகிராமத்தைச் சேர்ந்தார்கள்,
அப்பொது அங்குத்தமக்குச் சிடனுகவிருந்த உத்தவ
னென்பவன் எதிர்கொண்டுவந்து தீர்க்கதெண்டனிட்
டுப் பலவாறு துதித்து அழைத்துக்கொண்டு போக,
தமக்கு ஆசானுகிய அவ்வூரிலுள்ள ஆஞ்சநேயரின்
சன்னிதானத்தைக்கண்டு எல்லோரும்தெண்டனிட்டு
போஜனத்திற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்து
பிராமணர் முதலானோருக்கும் பிரசாதம் படைத்த
பின்னர்த் தாம்சென்று பிக்ஷை யெடுத்து அதனல்
கிடைத்த மாவைக்கொண்டு அடைசெய்து புசித்தார்
அதன்பின் அவர் ஆஞ்சநேயரின் சன்னிதானத்தை
யடைந்து யாவரும் தம்மைப் புடைசூழ ஹரிநாமசங்
கீர்த்தனத்தை வாக்கினற்சொல்லி மனதினல் அந்த
இராமரது திருவுருவத்தைச் சிந்தித்துக் கொண்டு ஓ
ஜனங்களே? பிரியமுடன் இராமரை யெப்போதும்
தியானஞ்செய்யுங்கள். அவர்சதாகாலமும் எவ்விடத்
திலும் நிறைந்திருப்பவர் அன்றியும் தாமொருவரே
யொருவராகியும் உலகநாதராகியும் தசதிக்குகளிலும்
பரிபூரணராகியும் சகலமுந் தாமாகியும் சௌக்கிய
மாகப் பிரகாசிப்பவர் அப்படிப்பட்ட மூர்த்தியை
நீங்களொருக்காலும் மறவாதீர்கள் அவரோடுபலவிக்
கினங்களும் நேரிடாமலிருக்க ஆஞ்சநேயரைக் கண்டு
சேவை செய்யுங்களென்று சொன்னர்.

மேலும் ஓஜனங்களே? நீங்களிந்தம்படி பகவந்
நாமசங்கீர்த்தனஞ் செய்வீர்களாகில் பாபங்கள் நீங்கி

இஷ்டார்த்தசித்தி யுங்களுக் குண்டாகும், ஸ்ரீராமர் கிருபை யுண்டாகிப் பரமபதவியுங் கைக்கூடுமெனப் போதித்துத் தம் ஜென்மபூமியை நோக்கி நடந்தார். அவ்வாறு நடந்துபோய்த் தன்னூராகிய குருஜாம்பதலத்தை யடைந்து ஊருக்குவெளியிலோர் சோலையிலிருந்து சிலசேவகர்களை யனுப்பி இவ்வூர் கணக்கனை யழைத்து வாருங்களென்று கட்டளையிட, அந்தப்படியே அவர்களுஞ்சென்று கணக்கனைக்கண்டு தெரியப்படுத்தினார்கள். உடனே அக்கணக்கன்யாரோவந்தவரின்னாரென்று தெரியவில்லையே என்றுமிகவும் பயத்துடன் ஓடோடியும்வந்து இராஜகுருவைக்கண்டுஇணங்கி வணங்கித் தெண்டனிட்டான். அதைக் கண்ட தாசர் அவனுக்குண்டாயிருக்கும் பயத்தையுணர்ந்து அவனைப் பயப்பட வேண்டாமென்று சொல்லி அவனது பயத்தைப் போக்கினார். அதன்பின் அவன்ஆசனத்தின்மீது இராசசேவகர்கள் சூழவிருக்கும் இராமதாசரை உற்றுநோக்கி ஓகோ இவர் சூரியஜிபந்துவின் புத்திரனாக வேண்டுமென்றுகருதி ஒசுவாமிதாங்கள் சூரியஜிபந் தென்பவரின்புதல்வரல்லவா? இதோ உங்களது தாய்தந்தையர்களை யழைப்பிக்கின்றேனென்று சொன்னான். அதைக்கேட்ட அவர் அவனைப் பார்த்து ஓகணக்கனே! எனது தாய் தந்தையர்களை யானேசென்று பார்க்கவேண்டுமே யல்லாமல் அவர்களை இங்குவரச்செய்து பார்ப்பது நீதியோவென்று சொல்லி உடனே புறப்பட்டு தாய்தந்தையர்க ளிருக்கும் வீட்டைநோக்கி நடந்துவீட்டிற்குள்புகுந்துஅங்குத் தந்தையானவ ரிருக்கக்கண்டு அவர்திருவடித்தாமரைகளில் விழுந்துபணிந்துயெழுந்துநின்று கைகூப்பிக்கொண்டு ஒஎன்னைப் பெற்ற தந்தையே யென்று பதறிக்கதறியழுதார். அதைக்கண்ட தந்தை அவரை ஆலிங்கனஞ்செய்து அனேகநாளாய்த் தன்னைபிரிந்து போயின தன்கன்றைக்கண்ட பசுவைப் போலவும், வெகு வருடங்களாய் தம்மைவிட்டு யாத்திரை செய்யப்போயிருந்த கணவனைக்கண்ட காந்தையைப்போலவும் சிலவருடங்களாய் தம்மைவிட்டு நீங்கிப்போயின புதல்வனைக்கண்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கினவராய் மயிர்க்குச்செறிந்துதேகப் புளகாங்கிதமடைந்தார். பின்தாயானவளும் வந்துகண்டு மேல்விழுந்து வெகுவாகப் புலம்பியழ உடனே அவர் அவளின்திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டார். அதைக்கண்ட தாய் மார்போடு கட்டித்தழுவி முத்தமிட்டு கண்ணீர் ஆறுப்பெருகியோட மர்மமாய்ப் பேசாமலிருந்து புளகாங்கிதமடைந்து பின்சொல்லத் தொடங்கினான்.

அடா மகனே விவாககாலத்தில் வைராக்கியங்கொண்டு பவக்கடலைக்கடந்து மறுபடியும்இப்பூமியில் பிறவாத வண்ணத்திற்கு உபாயமெதுவோ அதைக் கருதி பந்துக்கள் முதலானோரையும்விடுத்துநாட்டைவிட்டுக் காட்டையடைந்து தனியனாகத்திரிந்து ராமனுக்குத் தொண்டனாகி அனேகநாள் கடத்தி இன்று தினமயெங்களைப்பார்க்கும்படிவந்தாயோ எங்களுக்குன்னறிய சேவை தந்தாயோ தொண்டர்களுக்குள் முதல்வனாகி நின்றாயோ இத்தனைநாளும் எங்களைவிட்டு எப்படிமனந் துணிந்து யிருந்தாயோ பசிதாபத்தினாலெப்படி நொந்தாயோ பகவான் பத்தியிற் சிறந்தாயோ வென்று பகரும் அன்னையின் மொழிகளைக்கேட்டு தாசர்சொல்லத் துணிந்தார் அதெப்படியெனில் ஒ என்னை யீன்றெடுத்ததாயே சதாகாலமும் இந்த அனித்தியமான ஜெகத்தாசைமிகுந்துச் சம்சாரத்திலிருந்து நாளைப்போக்குவதால் என்னசுகமுண்டாகும் எத்தனைநாளிந்த மாய்கைக்குள்ளாகி யிருக்கினும் மரணமென்ப தொருநாளைக்கு நேரிட்டுப் பேறில்லாமற் போவதினால் தென்னாட்டுக் கதிபதியான ஏமனிடத்திலகப்பட்டு படாதபாடுகளும்பட்டு நரகத்தில்விழும்படியாக நேரிடும் ஆகையால் அப்படி கஷ்டம்வந்து நம்மையணுகாவண்ணம்முன்ஜாக்கிறதைப்பட்டு பகவானுடைய கிருபையைச் சம்பாதித்துக்கொண்டால் முடிவிலிந்த ஆத்துமாவானது நித்தியானந்தமாகிய வைகுந்தப் பதவியையடையும்ஆதலால் யானும் அந்தப்பதவியை யடைவதற்காக வேண்டிய முயர்ச்சியே செய்துக்கொண்டிருக்கின்றேனே அன்றி நிறையத்துக்குள்ளாகும் முயர்ச்சியை விடுத்தவனாகும்யென்று வெகுநயமாக மொழிந்து மேலும எனதன்னையே யாவத்து ஜீவராசிகளுக்கும் பிறப்பதுந் துக்கமே இறப்பதுந்துக்கமே இவ்வுலகிலிருந்துவாழ்வதுந்துக்கமே பொருளைச் சமபாதிக்கவுந் துக்கமே அப்பொருளைச் சிலவழிப்பதுந் துக்கமே இப்படிக்கெப்போதுந் துக்கமாயமாகவேயிருப்பதால் இன்று முதல் நீபுத்திரர்கள்மணாளன் பந்துக்கள் முதலானோரிடத்தில் பிரியஞ்செலுத்தாமல் அந்தபிரியத்தை பகவான்மீது வைத்தாலப்பகவான் சுகத்தைக்கொடுத்து ரக்ஷிப்பான் என்றுபுகலக்கேட்டு தாய் தந்தையர்கள் மெத் சந்தோஷத்தை யடைந்திருந்தார்கள்.

உடனே தாசர்வெகுசிந்தாக்கிரந்தராகி போஜனத்திற்கு ஆகவேண்டியமுயர்ச்சியைத் தேடி அறுசுவை முதலானதுகளுந் தயார் செய்துவைத்து தாசரும் அக்ஷய பாத்திர மெடுத்து வந்து பந்துக்களுடனும் இன்னமுள்ளவர்களுடனும்புசித்து சந்தோஷத்

துடன் அங்குமூன்றுநாள் வசித்திருந்து நான்காவது நாட் காலையிலெழுந்து அநுட்டானங்களை முடித்து தாய்தந்தை தமயன் மூவரையும் யானையின்மீ தேற்றித் தானும் சிவிகையின்மீதேறிக்கொண்டு மெல்லன நடத்தி நகரத்திற்குச் சமீபமாகவருகையில் அரசன் சாரணர்களால் தன்குருநான்வரவையறிந்துத்தானும் மந்திரிகள் புடைசூழக் கால்நடையாக எதிர்சென்று குருநாதனைக்கண்டு பணிந்து பற்பல உபசாரங்களுடனழைத்துக்கொண்டு நகரத்திற்குட்புகுந்து குருநாதனை சிங்காதனத்திலிருத்தி சோடச உபசாரங்களைப் புரிந்து இருகரங்களையுஞ் சிறத்தின்மீது குவித்துக் கொண்டு பலவாறு துதிக்கும் அரசனை தாசர்க்கருணித்துப் பலவாசிகள்கூறி · ஓ அரசனே? இதோநிற்கும் இம்மூவரையும் பார்த்தாயா இதில்விருந்தவர்க ளிருவருமென் தாய் தந்தையர்கள் மற்றொருவன் தமயனுகுமென்று நவில, அரசன்கேட்டு இனியில்லாத சந்தோஷத்தையடைந்து அம்மூவரையும் வெகுவிதமாகக் கொண்டாடி பிரமணபோஜனமவர்களுக்குதவி கணக்கில்லாத அளவற்ற ஆடையாபரணங்களும்திரவியப் பைகளையுங் கொடுத்தான். அம்மூவர்களும் அதுகளைப் பெற்றுக்கொண்டு தாசரால் சொல்லப்பட்ட ஸ்ரீராம கீர்த்தனைகளைக்கேட்டுக்கொண்டுஞ் சிலநாளங்கு வசித்திருக்க, ஒருநாள் இராமதாசர் அரசனைநோக்கி ஐயர்வேந்தனே? நாங்கள்வந்து நெடுநாளாயிற்றுஎங்களுக்கு விடைதந்தால் போய்வருகிறோமென, அரசன் ஓசுவாமி? தங்கள் மாதாபிதா பிராதா இவர்கள் மூவரையும் ஊருக்குப் பிரயாணப்படுத்தி அனுப்பிவிட்டுத் தாங்கள்மாத்திரம் இங்குதானே எழுந்தருளி இருக்கவேணுமென்று துதிக்க அந்தப்படியே தாசர் தன்தாய்தந்தை தமயன் இம்மூவரையும் பிரயாணப் படுத்தியனுப்பிவிட்டுத் தான்மாத்திரம் அங்கு சிலநாள் வசித்திருந்து ஒருநாளிரவிலெழுந்து அரசனுக்கும் காவலர்களுக்குந் தெரியாமல் நடந்து தத்தனுடன் கானகத்தையடைந்து யோகத்தில்வீற்றிருந்தார்

இங்கே அரசன் அதிகாலையிலெழுந்து அநுட்டானங்களை முடித்துக்கொண்டுவந்து பார்க்க குருநாதனைக்காணமல் விசனமடைந்து ஒருவராசத்திடங்கொண்டு தன்சேனைகளுடன் புறப்பட்டு வனத்தை யடைந்து குருநாதனைக்கண்டுபணிந்துபலவிதங்களாகஅவர் திருவடிகளைப் பூசித்து அவர் திருநாமங்களைக் கோஷித்து மெத்தவும் நேசித்து விசுவாசித்து சிலநேரமிருந்து விடைதரப் பெற்றுக்கொண்டு சேனைகள் புடைசூழ வருகிறபோது தாசருடைய தாய்தந்தைகளுக்குத் தான்கொடுத்த ஆடையாபரணங்களும் திரவியப் பைகளும் அக்கானகத்தில் விழுந்து கிடக்கக்கண்டு மெத்தவிசனங்கொண்டு இதுவென்னபாபமோவென விண்டு இத்தனைநாளா இவருக்குதொண்டு செய்திருந்தும் நமதுவிஷயத்தில் குருநாதனுக்குச் சற்றேனும் அன்பிருக்கும் விஷயத்தி லிவ்வாடையாபரண திரவியங்களை யேற்றுக்கொள்ளாமல் அலக்ஷியஞ் செய்து இக்காட்டிலென்முன் கிடைக்கும்படி விட்டெறிந்து விடுவாரோயென்று வெகுநேரஞ் சிந்தித்திருந்து குருநாதனுக் கில்லாத மானவமானம் நமக்கேது யென்று திடஞ்செய்துக்கொண்டு சேனைகளுடன்கலந்துதன்னுடைய நகரத்தைச்சேர்ந்து குருநாதன பக்தியிற் சிறந்தவனாகவிருந்தார். தாசரோ கானகத்தில் மிருகங்களும் பறவைகளுந் தன்னைப்புடை சூழ்ந்திருக்க ஸ்ரீராமநாம பாராயணஞ்செய்துக் கொண்டிருந்தார்.

இவர்களிங்கிப்படியிருக்க மஹோளி யென்னுங் கிராமத்தினில் வசித்துக்கொண் டிருக்கும் பிராமணனொருவன் தன்குலதர்மமாகிய ஆசாரமபக்தி வேதமோதுதல்முதலான நன்மார்க்கங்களை விடுத்துத்தன் மார்க்கத்தில் மனம்போனபடி நடந்து வீடு வீடுகள் தோறுந் திரிந்துக்கொண்டு தனங் கிடைக்காமையால் மணம்புரிந்துக்கொள்ளாமலும் அழையாதவீட்டிற்கு நுழையுஞ் சம்பந்தியைப்போல பிராமண போஜனமெக்குநடக்கிறதோ அங்குவலுவிற் சென்று புசித்துவருவான் அன்றியும் நல்லபுசிப்பு கிடைத்தால்மெத்த சந்தோஷமடைவான் கிடைக்காத நாட்களில் பெங்குந் திரிந்துக்கொண்டு வெகு துக்கத்தை யடைந்துக் கொண்டிருப்பான் இப்படிக்கிருக்கிற போது சிவாஜி யரசன் ராமதாசர் நிமித்தியமாக நடந்தும் பிராமணபோஜனத்தை யறிந்து தினந்தோறுஞ் சென்று இப்பிராமணன் வெகுவாகப்புசித்து சந்தோஷித்துக்கொண்டு போகிறபோது ஒருநாளப் பிராமணன் ராஜபோஜனத்திலுண்டாகு முருசியைக்கண்டு தனக்குத்தானே யோசிக்கத் தொடங்கினன்.

அதென்னவெனில் இன்றுமுதல் நாம்ராம தாசரையடுத்திருந்தால் நமக்கிஷ்டமான அறுசுவையன்னங் கிடைப்பதுமன்றி அவருடையநேசத்தாலப்பஞ்சுப்பொதியிற் அக்கினிப்பொறிப்பட்ட மாத்திரத்தில் அப்பஞ்சுஉருமாய்ந்து போவதுபோல நமக்குண்டாகிய பாபங்களெல்லாம் பறந்தோடிப்போமென்றும் நினைத்து அக்கணமே புறப்பட்டு ராமதாசரிடமேக அங்குசாந்தமிலாத கொடூரமிருகங்களைப் பார்த்துக் கொண்டேவந்து அருகிற்போக தைரியமில்லாமல் அதைரியத்துடன் எட்டநின்றிருக்கக் கண்டு தாசர்பயப்படாமல் வாருமையா பிராமணரே என அந்தப்

படியே அப்பிராமணன் பயமின்றி சமீபத்தில் வந்து
இணங்கிவணங்கி பணிந்துநிற்க, தாசர் அப்பிராம
ணனைநோக்கி நீர்ஆர் ஐயாயெங்கிருப்பது உமதுபே
ரென்ன ஊரென்ன இங்குவந்தகாரணய்யாதென அத
ற்கு பிராமணன் ஐயாசத்குருநாதரே யான்வசிப்பது
மஹோளியென்னும் கிராமம் என்பேர்விசிஷ்டன்மெ
த்தவும்யேழை எனக்கொருவரு மில்லை. அனாதிபசி
தாபத்திற்கு பொருக்கமுடியாமல் தேவரீரையடுத்து
உபதேசம்பெறவும் வயிராரப்புசித்துப் பசியாற்றிக்
கொள்ளவுமெண்ணி தங்களிடம்வந்துசரணாகதியடை
ந்தேனென்று பணியக்கேட்டு தாசர்தனக்குத்தானே
யோசித்து இப்பிராமணனென்ன அணுவளவேனும்
முக்திமார்க்கத்தை படையவேணுமென்றவெண்ணங்
கொண்டு வந்தவனேயல்ல வயிற்றுசோற்றிற்கு ஆசி
த்துவந்தவனாகத் தோன்றுகின்றது அன்றியும் இப்பி
ராமணன் தீனனாகி மென்மேலும் சம்சாரத்தி லிருந்து
மெத்தசம்பாதனை செய்து போகமோகக்கருத்துடை
யவனாகி பேரின்பத்தைக் கருதாது சிற்றின்பமே மே
லானதென்று அவாகொண்டும் தருமம் அதருமங்கள்
தெரியாமல் இவனிந்தலோகத்தில் சத்கருமம் துஷ்க்
கருமங்களில் ஆசைகொண்டு அதனால் அனர்த்தப்
பட்டு பத்தனாகிய இவனுக்குபதேசஞ் செய்யத்தகா
தென்றுங்கருதிப் பின்னும் இவனது பக்தியைசோதி
த்து அனந்தரமிவனுக்குப தேசஞ்செய்ய வேணுமெ
ன்றும் மழைதாரைகள் எல்லாப்பூமியிலும் பெய்வது
போல உத்தரணாகாத யிவனுக்குபதேசஞ்செய்துஇவ
னைசோதிப்போ மென்றெண்ணி ஐயா விசிஷ்டனே
சீக்கிரம் ஸ்னாநுட்டானங்களை முடித்துக்கொண்டுவகு
வாயென அப்பிராமணன் மகாபாக்கியமென்றுவிரை
வாகநடந்து தடாகத்தையடுத்துஸ்னாநுட்டானங்களை
முடித்து அங்குள்ள சுகந்தம் பொருந்திய மலர்களை
யெடுத்து அம்மலர்களை மாலையாகத் தொடுத்துக்கொ
ண்டேவந்து ஆசான்றிருவடிகளில் விழுந்து பணிந்து
யெழுந்துநிற்க, சாஸ்திரவிதிப்படி ராமதாசர் அம்பி
ராமணனுக் குபதேசஞ் செய்வித்தார் உடனே அந்த
சிஷன் குருநாதனிடத்தில் மலர்மாலையைச் சூட்டி
வெகுவாகப்புகழ்நதுக் கொண்டிருந்தான்.

இதற்குள்ளாகத்தான் கிராமங்களிற் சென்று
பிக்ஷை யெடுத்துக்கொண்டுவந்து தானியத்தை எந்தி
ரததிறபோட்டு மாவுசெய்து அம்மாவை ரொட்டிகள்
செய்து குருநாதனுக்களித்துத் தானும்புசித்துகளித்
திருக்கப் பிராமணன்பழக்கமில்லாதவனாதலால்அந்த
ரொட்டிகளை வைத்துக்கொண்டுதடமாடியுமிருந்தான்
அந்தசமயத்தில் சிவாஜிமகாராஜன் ரதசஜதுரகபதா
திகளுட னங்குவந்து குருநாதனைக்கண்டு பணிந்து
தான் கொண்டுவந்த பலவிதநைவேத்தியவஸ்துக்களை
குருநாதனுக்கு சமர்ப்பிக்க அவருமந்த வஸ்துக்க
ளில் கிஞ்சித்து சிஷர்களுக்குக் கொடுத்து மிச்சத்தை
குரங்குகளுக்கீந்துத் தான்செய்தரொட்டியிற் சிறிய
துண்டை அரசனுக்களிக்க அவருமச் சிறியதுண்டு
ரொட்டியை மகாப்பிரசாதமென்று கருதிப் புசிக்க
விசிஷ்டன்கண்டு இதுவெகு விந்தையா யிருக்கிறதெ
ன்று வெகுவாக யோசிக்கத் தொடங்கினான்.

அதெப்படியெனில் ஆஹா இதென்ன விந்தையி
லும் விந்தையாகவிருக்கின்றது இவ்வரசனுக் கென்ன
குறைவிருக்கின்றது சகலசம்பத்துகளும் நிறைந்திரு
க்க அற்பமாகிய ரொட்டித்துண்டைதேவாமிர்தமாக
வெண்ணிப் புசித்தான் நமக்கோ இந்தரொட்டியைத்
தின்ன அருவருப்பாக விருக்கின்றது மேலுமிந்த ஆ
சான் அரசன் கொண்டுவந்த மதுரமான வஸ்துக்களை
யெனக்குக்கொடாமல் கேவலமாகிய குரங்குகளுக்
குப்போட்டார் இதுகளை யெண்ணிப் பார்க்கையில்
வெகுமகிமையாய் விளங்குகிறது என்று யோசித்துக்
கொண்டிருக்க இதற்குள் தாசர் அரசனை நோக்கிப்
போய்வாருமென்று விடைதர அப்போதந்த பிராம
ணன் வைராக்கியத்துடன் தாசரைவிட்டகலாமல்வெ
குதுக்கத்துடனிருந்தான் இப்படியிருக்கையில் மறு
நாள் தாசரும்தத்தனும் பிக்ஷைக்கிப்போகையில்அந்
தப் பிராமணனும் அவர்களைபின்தொடர்ந்துபோகிற
போது தாசர் பிராமணனைநோக்கி ஐயா நீரெங்கள்
பின்வரவேண்டாம் இங்குவனத்திலேயே யிருமெனப்
பிராமணன் ஓசுவாமி தங்கள் கட்டளையின்படி யிவ்வ
னத்திலிருப்பதற்கு துஷ்டமிருகங்களின்பயமென்னை
வாட்டுகிறபடியால் தேவரீரென்னை யிங்குத்தனியே
விடுக்காமல் தயவுசெய்து உடனழைத்தேகு மென்று
வெகுவாக வேண்டிக்கொள்ள தாசரும் அப்படியா
னால் வாருமென் றழைத்துக்கொண்டேகிக் கிராமங்
களையடுத்து வீடுகள்தோறும்சென்றுபிக்ஷைகேட்கை
யி லிப்பிராமணன் தானுமவர்களைப்போல பிக்ஷைபி
டுங்களென்று கேழ்க்க நாணமுற்றவனாகி விசனத்து
டன் திரும்பியவர்கள் பின்தொடர்ந்து வந்து கானகத்
தையடைந்திருந்தான் அப்போதுதாசர் பிக்ஷையெ
டுத்துவந்தமாவை ரொட்டிகள்செய்து இரண்டு சிஷர்
களுக்குமீந்துத் தானுமின்பமாகப் புசித்தார். இதில்
பிராமணன் அந்தரொட்டிகளை வெகு துக்கத்துடன்
புசித்து திருப்தியில்லாம லிருந்து மூன்றாவது நான்
குருநாதன்முன்னம் வந்துநின்று ஓசுவாமி எனக்கிங்
கிருக்க மனமிசையவில்லை ஆகையால் அடியேன் வே

றொரு கிராமத்திற்குப் போகிறே னென்றுசொல்லி வணங்க அதற்குதாசர் ஓபிராமணனே யுன்னிஷ்டப் படியே வேறுகிராமத்தில் வசித்துக்கொண டிருந்த போதிலும் இங்கு அடிக்கடி வந்துபோயிக் கொண்டிருமையா வென்றுசொல்லி விடைதரப் பெற்றுக்கொண்டு அப்பிராமணர் இஷ்டமானபோஜனத்தின்பொருட்டு வேறொருகிராமத்தை யடுத்து இச்சையின்படி திரிந்துக்கொண்டிருந்தான்.

இவ்வண்ணம் அப்பிராமணன் மனம்போனபடி திரிந்துக்கொண்டிருக்கையில் அக்கிராமத்திலோர்கிரகஸ்தன் குருஉபதேசம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு குருநாதருக்கும் பிராமணர்களுக்கும் ததியாராதனை செய்விப்பதையறிந்து அவ்விடத்திற்கேகி பிராமணருட்கார்ந்திருக்கும் பந்தியில் தானுமுட்கார்ந்து திருப்தியாகப் புசித்துக்கொண்டே இச்சாதுவைகுருவாக நாமடைந்திருப்போமாகில் இஷ்டமான மதுர போஜனங்கள் கிடைக்குமென்றெண்ணி அச்சாதுவினருகில்வந்து பணிந்துயெழுந்து கைக்குவித்து நிற்கும் பிராமணனைநோக்கி அச்சாதுஓபிராமணசீலனே உமக்கென்னாலாகவேண்டிய வேலையென்ன அதைத் தெரியச்சொல்லுமென அதற்கப்பிராமணன்ஓசுவாமி யான் அனாதை ஒருவரும் பந்துக்களில்லாத யேழை தனியன் பசிதாபத்தினாலேவாடி மெத்தவுந் தவித்து ராமதாசரை குருவாகவடைந்து என்மனதுக்கு சந்தோஷமில்லாமையால் மெத்த நேமத்துடன் தேவரீருடைய திருத்தாட்டாமரைகளில் விழுந்து சரணாகதி யடைந்து சீஷனாகவெண்ணி வந்தேனென அதற்கச்சாது ஓபிராமணனே ஒருவருக்குச் சீஷனாகி அவருடைய முத்திரையைப் பெற்றுக்கொண்டிருந்தும்மறுபடியும் அந்தஆசானை யடுத்திருக்க மனமிசையவில்லை என்றுசொல்வதுநீதியோ அன்றியும்வேறொருஆசானை யடுக்கவெண்ணுவதால் உலகமுன்னைப் பழிக்காதா எந்தமதியைக்கொண்டு என்னையாசானாக வடுக்கவந்தாய் இப்படிசெய்யும்படி எந்தசாஸ்திரவாதியுனக்கு போதித்தவன் அன்றியும் அன்னையெவ்வளவு துர்ப்பலத்தையடைந்தவளா யிருக்கினும் தனயன் மற்றொருவனிதையை அன்னையாக உள்ளங்குளிரச் செய்துக்கொள்ள வெண்ணினால் உலகம் ஒப்புக்கொள்ளுமோ மேலும் ஆதிகுருநாதனைநீக்கி வேறொருநாதனையடுக்க வெண்ணுவது ஒருபுதல்வனுக்கிரண்டு தந்தைகளிருப்பதைப் போலாகும் இதுவுலகத்திற் கேளிதமாகும் அன்றியும்ராமதாசரிடத்திலிருக்க சம்மதமில்லாவிடினும் அவருபதேசித்த மந்திரத்தை இடைவிடாதெப்போதுந் தியானஞ்செய்து வீதிகள்தோறுந் திரிந்துக் கொண்டிருமையாவென்று நவின்றார்.

இங்கப்படியாக அந்தப்பரமசாது பிராமணனுக்குப் பலநீதிகளைபோதித்தும்அப்பிராமணன் அப்பரமசாதுவைவிடாமல் இணங்கிவணங்கிபணிந்து ஓசுவாமி இவ்வேழையேனை எப்படியாகிலும் கிருபைகூர்ந்து ஆட்கொள்ள வேணுமென்று திருவடியில் விழுந்து எழுந்திராமற் கிடக்கும் பிராமணனை அச்சாது நயமொழிகளாலெழுந்து நிற்கச்செய்து ஓபிராமணனே? நினக்கொரு குருவிருக்க மற்றொருகுருவை யடையக் கூடாது. அப்படியடுத்த சீஷனுக்கும் ஆசானுக்கும் மீளாநரகம் வந்தணுகும் ஆகையால் நீஅந்த இராமதாசரையே யடுத்திருப்பையாகி லுனக்கு ஜென்மரகிதமாகும் வைகுந்தப்பதவி கிடைக்குமென்று நவில, அப்பிராமணன் ஓசுவாமி? சத்குருநாதரே? உபதேசஞ் செய்தாலொழிய தேவரீரை யான் விடுவதில்லையென்று அவர்திருவடிகளில் விழுந்து முன்போலவெழுந்திராமற்கிடக்க, அப்பரமசாது ஓ பிசாமணனே? அந்த இராமதாசரிடமெந்த மந்திரத்தை உபதேசஞ் செய்துக்கொண்டயோ, அந்தமந்திரத்தை யவரிடங் கொடுத்து வருவாயாகி லுனக்குபதேசஞ் செய்கிறேனென்றுநவில, அப்பிராமணனுமந்தப்படியேசென்று மந்திரத்தை இராமதாசருக்குக் கொடுத்து வருகிறேனென்றுசொல்லி விடைபெற்றுக் கொண்டு கானகத்தேகி இராமதாசரைக் காணாமல் வெகுநாள் தேடிக் கொண்டிருந்து ஒருநாள் இராமதாசரைக்கண்டுபணிந்து ஓசுவாமி? வேறொருகுருவையடைந்தேன் ஆகையால் இவ்வேழையின்மீது கிருபைசெய்து தேவரீர் உபதேசித்த மந்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமையா வென்ற மொழியைக்கேட்டு இராமதாசர்ஓபிராமணா இவ்வுலகத்தி லுன்னைப்போல உத்தமசீஷனை நான் கண்டதில்லை, என்னிடமெந்த துர்க்குணத்தை கண்டு வேறொரு ஆசானையடுத்தாயென, அதற்குப் பிராமணன் ஓசுவாமி? தேவரீருரைத்தமந்திரம் வெகுகடினமாயிருக்கிறபடியால் வேறுஆசானைத் தேடிக்கொண்டேனெனக் கேட்டு தாசர் அப்பிராமணனை யருகிலழைத்து ஜலத்தை வாயிற்கொட்டி கொப்பளித்துமிழும்படிச்செய்ய அந்தப்படியேபிராமணனுங்கொப்பளித்துப் பூமியின்மீதுமிழ அதில் தானுபதேசித்த மூன்றெழுத்துடைய ஓங்காரங்காணப் பட்டது. உடனே தாசர் ஓபிராமணா? இனித்தடையின்றி நீவேறொரு ஆசானையடையக் கடவாயென்று விடைதரப் பெற்றுக் கொண்டப் பிராமணன் விரைவாகநடந்து பரமசாதுவையடைந்து நடந்த விர்த்தாந்தங்களை எல்

லாம் கருக்கமாகச்சொல்லக்கேட்டு அந்தப்பரமசாது பிராமணனைநோக்கி ஓவிசிஷ்டனே? அளவு கடந்த வைராக்கியத்தையும் அதிகபக்தியையும் வகித்துவன த்தினில்திரிந்து ஸ்ரீராமரைச் சதாகாலமும் இடைவிடாமல் தியானித்துக்கொண்டு அந்தஇராமச்சந்திர மூர்த்தியின் சேவையைச் செய்து பரமானந்தத்தில் மிகுந்துப்புனிதராகிய ஸ்ரீராமதாசரது முத்திரையை விடுத்து என்னிடத்தில் விசுவாசித்து வந்தாய் குருதுவேஷியாகியுவந்த உன்னையான் சேர்ப்பனோ? சேர்த்து உபதேசிப்பனோ? மந்திரவக்கிரங்களை மாத்திடச்செய்த மகானுபாவனுக்காகிலும்மேலானதிராணியை யுடையவர்கள் இவ்வுலகத்தினி லெவருமில்லை. இதையுணராமல் நீசெய்ததுதுரோககாரியமல்லவோ அதை யின்னுந் திருத்திச்சொல்லவோ? இதுசரியல்ல போபோவென்று அதட்டிக்கூற அப்பிராமணன்இருதலைக்கொள்ளியி னடுவினிலகப்பட்ட யெறும்பைப் போல இக்குஞ்சுகத்தை யடையாமல் அங்குஞ்சுகத்தையடையாமல் துக்கத்திற்குட்பட்டவனாகிச் சஞ்சலத்தையடைந்து இகத்துக்கும் பரத்துக்கும் ஆகாமல் நிறையத்துக்குள்ளாகினன்.

பின்பு தாசர் துஷ்டமிருகங்கள் வசிக்கும்காரடவியினில் வாசஞ்செய்துக் கொண்டிருக்கையில் ஒரு நாள் அம்மார்க்கமா யனேகஜெனங்கள்நடந்துசெல்ல அவர்களைப்பார்த்து நீங்களெங்கு செல்கின்றீரென, அதற்கவர்கள் பண்டரிபுரத்துக்கு யாத்திரைசெய்யப் போகிறோமென்றும் மேலுமவர்கள் ஓஐயா பரம பாகவதரே அந்தப்பண்டரி புரத்தை சேவிக்கவேணுமென்ற கோரிக்கை யுமக்கெப்போது முண்டாயிருக் கட்டும் மெத்தவைராக்கியத்துடன் வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றாய் அந்தப்பண்டரிபுரத்தை நீவந்துசேவித்தால் இருகரங்களையும் இடுப்பினில்வைத்துக்கொண்டுநின்ற திருக்கோலமாய் ராதாருக்மணி சமேதராகிய பாண்டுரங்கன் நிஜபக்தஜெனங்களை ரட்சித்துக்கொண்டு எப்போதும் வாசமா யிருக்கின்ற பண்டரிபுரத்தை பக்தி பூரணர்களாகி சேவித்தால் அவர்களுக்கு மேலாகிய சௌக்கியமுண்டாகு மென்றதைக்கேட்டு தாசர் அவர்களைநோக்கி ஓபண்டரியாத்திரைவாசிகளே இவ்வுலகின்கண் எனக்கு இராமனேதெய்வம் இராமனே பரமகுருநாதன் இராமனே தாய்தந்தை இராமனே தமயன் இராமனேபந்துமுதல்சகலசம்பந்தமாகி யெனக்கு சேவைதந்துக்கொண்டிருக்க அவரையன்னியில் என்மனதில் வேறெவரையுங் கருதமாட்டேன் என்றுசொல்லிக் கொண்டே அயோத்திமா நகரத்துக்கீசா ஆஞ்சநேயவரதா ஜெயநேத்திரோச்சவமாய் தேவரீரைக்கண்டு சேவிப்பேன் ரகுநாதாவென்று கீர்த்தனைகளைப்பாடி ஆனந்தக்கடலில் மூழ்கியிருந்தார் இதைக்கேட்டுங்கண்டும் அவர்கள் ஏகநிஷ்டா பரிபூரணராக விருப்பவராகும் இவரதுமகுத்துவத்தைச் சொல்ல ஆயிரம்பணாமுடிகளையுடைய ஆதிசேஷனாலும் பிருகஸ்பதி பகவானாலும் சரஸ்வதி தேவியினாலு முடியாதென்றால் சேவலர்களாகிய நம்மால் இவரது மகுத்துவத்தைச் சொல்லத்தரமாமோ வென்றுசொல்லிப் பண்டரியை நோக்கி நடந்தார்கள்.

அப்போது சாக்ஷாத் பாண்டுரங்கன் தாசரைச் சோதிக்கவெண்ணிப் பிராமணவேடம் புனைந்து பண்டரியைவிட்டுப் புறப்பட்டு கானகத்தைநோக்கி நடந்து தாசருக்கெதிர்வந்து ஆசீர்வாதம்புரிந்து ஓபரம பாகவதசிகாமணியே இரண்டுநாளாய்ப் பிரசாதமில்லாமல் பசிதாபத்தினால் மெத்தவும்நைந்து நொந்து மெலிந்துவாடி மனிதசஞ்சார மில்லாத இக்காட்டில் நமக்கன்னம் எவ்வாறு கிடைக்குமென்று நாட்டையாகிலு மடைவோமென்றால் வழிதெரிய வில்லையே விருத்தாப்பியக் கிழவனாதலால் நடக்கமுடிய வில்லையே கண்கள் தெரியவில்லையே நானென்னசெய்வேன் எப்படியுய்வேன் முன்னம் யான்செய்த தவப்பயனாலோ ஏழைப்பரதேசிகளை யாதரிக்கும் உத்தமகுணமுடைய உன்னைக்கண்டேன்கண்டமாத்திரத்தில்ஆனந்தங்கொண்டேன் ஐயா பரமசாதுவே தயவுசெய்து சீக்கிரம் பிரசாதங்கொடுத்து என்னுடையபசிதாபத்தைப்போக்கி ஆயாசத்தை நீக்கிக் காப்பாற்றும் ஐயோ கண்கள்சுழலமிடுகிறதே காதுகளடைக்கின்றதே என்று மெத்த தாபந்திரியப்படும் பிராமணவிருத்தரைத் தாசர்கண்டுபூததயை பச்சாதாபங்கொண்டு அவருக்கு ஸ்னானஞ்செய்வித்து ஆடைகளைத் தோய்த்து உலர்த்திக்கொடுத்து அறுசுவைஉண்டியைத்தளிகையிலையில்பரிமாறி ஓசுவாமி வாருமென்றழைத்துச் சென்றுத் தளிகையின்முன் னுட்கார்ந்துப் பொருமையாகவும் திருப்தியாகவும்புசித்து சற்றுநேரம் இளைப்பாரி உமக்கிஷ்டம் வந்தபோது போகலா மென்று நயவசனங்கள் புகன்று உபசரிக்க அந்தவிருத்தப் பிராமணன் புன்னகையுடனும் புசித்து சற்றுநேரமிளைப்பாரி தாசரைநோக்கி ஓபரமசாதுவே நான் பண்டரியாத்திரை செய்யப்போகவேண்டும் எனக்கென்னமோ இருந்தாப்போலிருந்து இப்போதுகண்கள் காணபபடவில்லைப் பண்டரிநாதனை சேவித்தபின்பே கண்கள் காணப்படுமென்று நினைக்கிறேன் தயவுசெய்து என்னைப்பண்டரி புரத்திற் கழைத்துப்

போய்விட்டுஅப்பாண்டுரங்கன்சேவையிலீடுபடுத்தினா
லுனக்கு மெத்தசுகிர்தமுண்டாகுமென்று வேண்டிக்
கொள்ள தாசரக்கருத்துக்கிசைந்து அவரையழைத்து
கொண்டுநடந்துசிலநாளில்பண்டரியைசேர்ந்துஅங்கு
வெகு ஜனங்கள் கூடிசந்திரபாகாநதிக்கரையில்ஸ்நா
னம்பண்ணி அநுட்டானங்களைமுடித்துசந்நிதிக்குச்
சென்று பாண்டுரங்க விட்டலனை சேவிக்குமவர்களும்
வலம்வருபவர்களும் ஆனந்த மேலீட்டால் ஒருவரை
யொருவர்கட்டி ஆலிங்கனஞ் செய்யுமவர்களும் தங்
களை மறந்தாடுமவர்களும் இசையுடன்கலந்துப் பாடு
மவர்களும் பலவிதமாய்த் தோத்திரம்புரியு மவர்களு
மாயிருப்பதை தாசர்பார்த்துக்கொண் டிருக்கையில்
விருத்தப்பிராமணன் மாயமாய் மறைந்துபோயினான்

அத்ததியில் தாசர் தத்தனைநோக்கிநாமழைத்து
வந்தபிராமணனெங்குபோயினாரென அதற்குதத்தன்
ஓ சுவாமி இப்பெருங்கூட்டத்தி லவரெப்படிபோயினா
ரோ தெரியாதென தாசர் ஓதத்தனே சாக்ஷாத் பா
ண்டுரங்கநாதன் எனக்குண்டாகியபக்திவைராக்கியத்
தைச் சோதிக்கவெண்ணி விருத்தனைப்போலரூபமெ
டுத்து வந்து ராமனைவிட மற்றொருவரைப் பாடுவதுஞ்
சேவிப்பது மில்லையென்று வைராக்கியங் கொண்டிரு
ந்த வென்னைமயக்கிப் பண்டரிபுரத்துக் கழைத்து
வந்து விடுத்து மாயமாய்மறைந்துபோயினான் பகவா
னல்ல இன்னமெவர்கள் வந்து என்னை வேறொருவர்
நாமத்தைச் சொல்லும்படியும் சேவிக்கும்படியும் வற்
புரித்தினாலும் என்குலதெய்வமாகிய ஸ்ரீராமனைத்த
விர அன்னியரைப்பாடவும் சேவிக்கவுமாட்டானென்
றுத் திடங்கூறிக் கொண்டிருக்கையில்கெருடன்மீதுப்
பாண்டுரங்கவிட்டலன் ஆரோகணமாகிவீதிபுறப்பாடு
செய்ய தாசர்கண்டுதனக்கு ராமனிடத்திலிருக்குமன்
பினாலும் வைராக்கியத்தினாலும்தன்னுடையநாவினால்
பாண்டுரங்காவென்றுப் புகழாமல் ஸ்ரீராமா பரந்தா
மா ஜெயராமா ரகுராமா தசரதராமா கோசலைராமா
ஜானகிராமா சீதாராமா கோதண்டராமா பட்டாபி
ராமா ஆபிராமாவென்று மெத்தப்பிரியத்தால் வர
வேணும் வரவேணும் மென்றழைப்பார் அன்றியும்
தேவரீரைவிட வேறொருவரையுந் தியானஞ்செய்யாத
வெனக்குநீர்நாமமென்னும் அகம்பாவத்தைநீக்கிஉமது
தெரிசனந்தந்தாட் கொள்ளுமென்று விண்ணப்பஞ்
செய்து அங்குண்டாகும் தாளமேள வாத்தியங்களி
னொலியினாலும் நாம்பஜனை கோஷிப்பதனாலும் தன்
னைமறந்து ஆனந்தப் பிரமானந்தமென்னு மிரண்டை
யுங்கடந்து பரமானந்தமடைந்து பற்பல விதங்களா
கப் புகழ்ந்துக்கொண்டும் சாதுக்களுக்கெல்லாம் தொ
ண்டனைப்போல வந்தனம்புரிந்துக் கொண்டு திரிகிற
போது ஆஞ்சநேயரெதிர்ப்படக்கண்டு அவருக் கிண
ங்கி ணைங்கி தீர்க்கதெண்டனிட்டு எழுந்துநின்றுகை
க்கட்டி வாய்பொத்தி பக்திசிரத்தையுடன் சொல்லத்
தொடங்கினார்.

ஓ அஞ்சனாதேவிதனயா காஞ்சனகாயா தூயா
அப்பிரமேயா சஞ்சீவிராயா என்குருராயா ஸ்ரீராம
லட்சுமணபரதசத்துருக்னசீதாபிராட்டிபைக்காணோ
மே நீர்மாத்திரந் தனித்துவந்து தரிசனந்தந்தீரே
எனனைச்சோதிக்க வெண்ணிவிருத்தப்பிராமணரூபந்
தரித்து பண்டரிநாதன்வந்து என்னையழைத்துக்கொ
ண்டித்தலத்தை யடைந்துவிடுத்து மாயமாய்மறைந்து
போயினார் என்றதைக்கேட்டு ஆஞ்சநேயர் தாசரை
நோக்கி ஓபரமபாகவதனே ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி
இவ்வுலகத்தி லயோத்தியா நகரத்தையடைந்து துஷ்
டர்களைசிக்ஷித்து இஷ்டர்களைரக்ஷித்து வெகுநீதியாக
நகரத்தை பரிபாலனஞ்செய்து பரமபதத்தை யடை
கிறபோது யான் ஸ்ரீராமரைநோக்கி ஓசுவாமி தேவ
ரீரை மறுபடியும் அடியேன் எப்போது தெரிசிப்ப
தென்றென அதற்கு ஸ்ரீராமர் என்னைநோக்கி ஓஆஞ்
சநேயரே துவாபரயுகத்தில் கிருஷ்ணாவதார மெடுக்
கப்போகிறேன் அப்போதுனக்கென் தெரிசனந்தரு
கிறேனென்று சொல்லி வைகுந்தமாநகரத்தையடைந்
தார் அவர்கட்டளையின்படி யான்சேதுவை யடைந்தி
ருக்கிறபோ தோர்நாள் திரிலோகசஞ்சாரியாகியநா
தர்வரக்கண்டு அவரைநோக்கி ஓமுனிநாதரே! ஸ்ரீரா
மச்சந்திரமூர்த்தியின் தெரிசனமெப்போது கிடைக்
கும் அதைத்தெரியச் சொல்லுமென்றுவினவியதற்கு
அந்தநாரதமுனிவர் ஓஆஞ்சநேயரே சிலநாள் நீயாத்
திரைசெய்துக் கொணடிருப்பையாகிலுனக்குஸ்ரீராம
தெரிசன முண்டாகுமென்றுசொல்லி மனதுக்கிசைந்
தபடிசென்றார் அந்தப்படியே யானும் யாத்திரை
செய்துக்கொண்டு துவாரகையையடைந்து பார்க்கும்
போதுஅந்தத்துவாரகையானது சொர்ணமயமாகியும்
லங்கைக்குநிகராயும் விளங்கினபடியால்சற்றாலோசித்
தேன் அதென்னவெனில் கடலின்நடுவிலிருக்கும்லங்
கையானது இங்கெப்படி வந்ததென்றும் யிதுயாரோ
செய்த மோசமென்றுங் கருதி என்னுடைய வாலினா
லே அந்தலங்கையைச்சுத்திஅடியோடுபேர்த்தெடுக்க
வெத்தனிக்கிறபோது அங்குநாரதமுனிவர்வந்துஇது
பலராமச்சக்கிரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்டதுவா
ரகையேயன்று இலங்காபுரமிதல்லவென்றுசொல்லக்
கேட்டு மறுபடியும் யான்ராமனென்றுகீர்த்திபெற்று
பகவான் பரமபதநகரமேவியிருக்க யிவனாரோபலரா
மனென்று நாமம்வைத்துக்கொண்டிருக்கின்றான்இவ

னந்தராமனைவிட அதிகபலம்பெற்றவனாயிருந்தா லல்லவோ பலராமனென்று பேர்வைத்துக்கொண்டுலகத்தையாளலாம் அந்தராமனையொற்ற பலத்தையடையாத பலவீனனான இவனுக்குப் பலராமனென்றபேர் தகுமோ தகாது என்றுநினைத்து அன்னகாத்தைச் சார்ந்தசோலைகளை யடுதது அங்குள்ளமரங்களை அடியோடும்பிடுங்கி அங்கிருந்தகாவலாளிகளையடித்தேன் என்னசொல்லி யடித்தேனென்றால் அடாகாவலர்களே உங்களரசன் பலராமனென்னும்தன்பேரைமாத்திரலாச்சுது இல்லாவிடில் நால்வகைச்சேனைகளுடன் யுத்தத்திற்கு வரச்சொல்லுங்களென்று அடித்தேன். அவர்கள் அவ்வடிகளைப் படமாட்டாமல்ஓடோடியுஞ் சென்று யான்சொல்லியபடி ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தெரியச்சொன்னார்கள் கிருஷ்ணனுங்கேட்டுஇதுவேநல்லதியென்றுகருதி கெருடனையழைத்து ஓவைனதேயா நமது துவாரகைக்குள்ளொரு வானரன்வந்து சோலைகளையெல்லாம் அடிவேருடன்பிடுங்கிக் காவலர்களையும் இன்னும்பலரையும் அடித்து மாய்க்கின்றான் ஆகையால் நீயவனிடஞ்சென்று பலராமரும் நானுமவனையழைத்து வரச்சொன்னதாகச் சொல்லியழைத்து வரக்கடவாயென கெருடனு மந்தப்படியேஅழைத்து வருகிறேன் சுவாமியென்றுசொல்லியென்னிடம்வந்து ஓவானரமே உன்னைப்பலராமரும் கிருஷ்ணமூர்த்தியுமழைத்து வரச்சொன்னார்களென அப்போதெனக்குண்டாகிய கோபத்தினால் அந்தகெருடன் கன்னம் பிளந்துபோம்படி யடித்தேன் அந்தஅடிக்கி கெருடன் கிறுகிறென்றுசுழன்று மூர்ச்சையாக விழுந்து சற்றுநோத்திற்றெளிந்து நகரத்தைநோக்கிச் சென்று கிருஷ்ண பரமாத்மனைக்கண்டு என்னாலவனடிப்பட்டுமெலிந்த செய்தியையறிவிக்கக் கிருஷ்ணமூர்த்திகேட்டு பலராமரைக்கண்டு ஓமுத்தண்ணாவே நமது ரதகஜ துரகபதாதி சேனைகளை யழைத்துச்சென்று அந்த வானரனுடன் போராடி தந்திரமாக அவனைப்பிடித்துக் கட்டிக்கொண்டு விரைவினில்வாருமென்றுசொல்லப் பிரத்தியுமன்னனும் வெகுசேனைகளுடனும் பலவாத்தியங்களான ரணபேரிகைசெயகலபேரிகைமுதலான துகளு முழங்க நகரத்தைவிட்டுப்புறப்பட்டுரணபூமியையடுத்தத் தன்சேனைகள் வெகு ஆரவாரத்துடன் ஆர்ப்பரிக்கபதாதிகள் தங்கடங்கள் வில்லைவளைத்து அனேகபாணங்களைச் சந்தித்துப் பிரயோகித்தார்கள் அவர்களப்படி பிரயோகித்தபாணங்கள்என்மேல்வந்து விழவொட்டாமலே பிடித்துப்பிடித்தொடித்துத்திசைகளி லெறிந்துவந்திருக்கும் வெகுசேனைகளையு மென்வாலினால் சுத்திபிருக்கிக்கட்டி ஆகாயவீதியில் கிறுகிறென்றுதிருப்ப அவர்கள் பெருத்த ஓசைபோட இதனையறிந்து ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா கெருடனைக்கண்டு ஓவைனதேயனே நீவிரைவாக அந்தவானரனிடஞ்சென்று ஸ்ரீராமர் அழைத்துவரச் சொன்னாரென்று சொல்லி அழைத்துவரக் கடவாயென அதற்குகெருடன் ஓசுவாமி என்னைமன்னித்துஇனியாரையாவது அனுப்பி அந்தவானரனை யழைப்பித்துக்கொள்ளும் நான்போனாலோ கோபத்துடனடித்துக் கொல்லுவான் எளிதானவானரனல்ல னென்று பணிய அப்போது கிருஷ்ணமூர்த்திக் கெருடனைநோக்கி ஓவினதைப்புதல்வா நீபோகிறபோதேராமநாமத்தியானஞ் செய்துக்கொண்டு ஸ்ரீராமபக்தனைப்போ லபினயித்துக்கொண்டுபோய் வானரனைக்கண்டு மரியாதையாய்ப் பேசுவையாகில் அவனுன்னையொன்றுஞ் செய்யாமல் வெகுசந்தோஷமாக நின்பின்னே வருவானென்றும் அன்றியும் அந்தமாருதியின் குணங்களையுக் திவ்யக்ஞான சம்பத்தையுந்தெரிந்து தக்கப் பிரியமொழிகளைப்பகர்ந்து பணிவாயாகிவந்த மாருதிதொண்டனாகிய னினக்குத் தொண்டனாகியுனை கௌரவப்படுத்துவானென்று சொல்லயனுப்ப வைனதேயன் அந்தப்படியேயழைத்து வருகிறேனென்று சொல்லி வருகிறபோதே ராமநாமத்தியானஞ் செய்துக்கொண்டுராமபக்தனைப்போல அபிநயங்கொண் டெனனிடம்வந்து வணங்கி ஐயாமாருதியே தங்களை ஸ்ரீராமரழைத்து வரச் சொன்னாரென்று வினயமாகப்பகர அதைக்கேட்டமாத்திரத்தில் அந்தகெருடனுக்கு யான்தெண்டனிட்டு இருவருமாகப்புறப்பட்டு வழியேவந்துக் கொண்டிருக்கையில் கிருஷ்ணபரமாத்மா சத்தியபாமையையழைப்பித்து ஓவனிதையே நீசீக்கிரம் சீதையைப்போலவடிவெடுத்து வரக்கடவாயென்று கட்டளையிட மகாபாக்கியமென்று சொல்லி அந்த சத்தியபாமையளவிறந்த ஆபரணங்களைத் தரித்துக்கொண்டும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியி னிடத்தில்வரக்கண்டு ஸ்ரீகோபாலன் ஓசத்தியபாமையே உன்னைச்சீதை வடிவெடுத்து வரச்சொனனால் பழயவடிவமாகியசத்தியபாமைவடிவுடன்வந்து நான் சீதைவடிவெடுத்து வந்தேனென்று என்முன்வந்து நிற்கின்றாய் சீதைவடிவம்பெற்றிருக்கின்றாயா அல்லது முன்வடிவத்துட னிருக்கின்றாயாவென்று பார்க்கக்கடவாயென்ன அந்தப்படியேசத்தியபாமை நிலைக்கண்ணாடி முன்னின்று பார்த்துத்தன் வடிவமேயன்றிச் சீதைவடிவமில்லாததால் அந்தச்சத்தியபாமை வெட்கப்பட்டு நாணமடைந்துஓர்பக்கத்திலொதுங்கிநிற்பதை ஸ்ரீகிருஷ்ணமூர்த்திகண்டுஇம்மாதினகெர்வமின்று அடங்கியது என்றுமதித்து ஓசத்தியபாமையே நீயேன் மிங்குமுகவாட்டத்துட னிற்கின்றாய் அதோ ஆஞ்சநேயர் சமீபித்து கெருடனுடன்

வந்துவிட்டார் ஆகையால் நீசீக்கிரம் அந்தப்புரஞ்சேர்ந்த பதினாயிரம் ஸ்ரீகளும்நீயுமாக ருக்குமணியினிடஞ்சென்று அந்தமங்கையைச் சீதையின்வடிவமெடுத்து நான்வரச்சொன்னதாகச் சொல்லுவையாகில் அம்மாது தடையின்றிச் சீதைவடிவமெடுத்துவருவாளெனக்கேட்டு அந்தசத்தியபாமை விரைந்து அந்தப்புரத்தையடைந்துப் பதினாயிரங்கோப ஸ்ரீகளையழைத்துக்கொண்டு ருக்குமணிதேவியினிடஞ்சென்று ஓ அக்கா நமது துவாரகாநாதன் நின்னைச்சீதை வடிவமெடுத்துக்கொண்டு சீக்கிரம்வரச்சொன்னா ரென்று புகலக்கேட்டு ருக்குமணி விரைவாகச்சபா மண்டபத்துக்குவரக்கண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஸ்ரீராமனுகைவடிவெடுத்துநிற்க உடனேருக்குமணியும சீதையாகிவ்காசனத்தினி லிருவருமிருக்கப பலராமர் லட்சுமணனுகவும், யாதவர்களெல்லாம் வானரங்களாகியும நிற்க, ஸ்ரீராமந் மந்தகாசத்துடன் யாவரையுங் கிருபைகணேல்பார்த்துத் தன்சுந்தரவடிவததை யெல்லோருங் கண்டு ஆனந்தம்ஆனந்தம்என்று கூத்தாடுகிறபோது யானும் கெருடனும்போய் அந்தராமரைக்கண்டுபணிந்து ஆனந்தித்துநிற்க, என்னநோக்கிஸ்ரீராமச்சந்திரமூர்த்திப் பரமசந்தோஷமடைந்து ஓ ஆஞ்சநேயரே! யான்முன்னமுனக்குச் சொன்னபடி கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீராமதெரிசனங் கொடுத்தேன். இப்போது உன்னிஷ்டமும நிறைவேரியது அன்றியும், யானெடுத்த அவதாரங்களில் பேதபாவங்கொள்ள வேண்டாம் எத்தனையவதாரங்களெடுத்தபோதிலும் பரம்பொருள் ஒன்றேயாகுமென றுசொல்லிட்டனேதான் கிருஷ்ணரூபமும் லட்சுமணன் பலராமரூபமும்சீதை ருக்குமணிரூபமும் வானரர்கள் யாதவர்களாகியும் நிற்கின்றதைக்கண்டு அன்றுதொடங்கியான் பலராம கிருஷ்ணர்களை அர்ச்சனைசெய்துக்கொண்டிருப்பேன் என்றிந்தக்கதையைச் சொல்லப் பேசாமல் மௌனமாக விருக்கையில் அந்தஇராமதாசர் விரைந்துசென்று மண்டபத்தை யடுத்து எதிர்நோக்கிப் பார்க்க, அங்குசெங்கல்லின்மீது நின்றிருக்கும் பாண்டுரங்கனைச்சேவித்து வலம்வந்து பணிந்துஎழுந்துநின்றுஇரண்டுகரங்களையுங் குவித்துநின்று ஓஸ்ரீராமா நினது கோதண்டமெங்கேபோயிற்று சரயூநதியெங்கேபோயிற்று அயோத்திமாநகர மெங்குபோயிற்று நினது ரூபமெங்கேமாறிபபோயிற்று சீதாபிராட்டியெங்கே லக்ஷமணரெங்கே அன்றியும் வானரசேனைகளெங்கே ஆஞ்சநேயரொருவரன்றி வேறொருரூபமேனு மிங்கு காணப்படவில்லையே என்று பக்திபூர்ணமாய்த் துதிசெய்து ஆனந்தக்கண்ணீர் சோரவிட்டுக்கொண்டுநிற்கும் இராமதாசரது கோரிக்கையை நிறைவேற்றவேண்டுமென்று பாண்டுரங்கன் கருதி ஸ்ரீராமரூபத்தைப் பொருந்தி சீதையும் லட்சுமணரும் அருகிலிருக்க சரயூநதியுந்தோன்ற அயோத்தியாநகரமும் அங்கு பிரகாசிக்க வானரசேனைகள் ஆரவாரிக்கும்படி நினைத்தமாத்திரத்தில் சகலமும் அங்குபொருந்தி யிருக்கக்கண்டு இராமதாசர் இனியில்லாத சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவராய் அநேககவிதங்களாகத் தோத்திரஞ்செய்ய அங்குவந்த சேவைக்காக காத்திருந்த பக்தர்களுக்கு ஸ்ரீராமரூபங் காணப்பட்டபடியால்சேவித்துப்புளகாங்கிதங்கொண்டுஅவர்கள் இந்தப்பண்டரிதலத்தில் மகாத்துமாவாகிய இந்த இராமதாசருக்காக பகவான் பாண்டுரங்கவடிவத்தை மாத்தி ஸ்ரீராமச்சந்திர வடிவமெடுத்து சேவைதந்தார் என்றுசொல்லி தாசரைவெகுவாகப் புகழ்ந்துக் கொண்டாடி ஓ ராமதாசரே முன்போலவே பாண்டுரங்க வடிவத்தை நாங்கள்கண்டு சேவிக்கும்படி பிரியபக்தியுடன்ஸ்ரீராமரைமிகவுந் தோத்யரஞ் செய்யுமையா வென்று வேண்ட அதற்குதாசர் அந்தப்படியே ஸ்ரீராமரைத்தோத்திரஞ்செய்ய ஸ்ரீராமர் விட்டலரூபத்துடன் விளங்கினார் அந்தவிட்டல வடிவத்தைக்கண்டு சேவித்து பக்தர்கள்யாவரும் பரமானந்தத்தை யடைந்து இவர் மெத்த புண்ணியபுருடரென்று தாசரை வெகுவாகத் துதித்துக் கொண்டாடினார்கள் அப்போது பாண்டுரங்கன் தாசரைநோக்கி ஓபக்தசிகாமணி உன்வாக்கினாலே என்மீது கீர்த்தனைகளைப் பாடக்கடவாயென, தாசர்சந்தோஷத்துடன் மண்டபத்தைநாடிப் புன்னகையுடன் வருகிறபோது சதாதங்களுடைய மனதில் பகவானை யேளப்பண்ணிக்கொண்டிருக்கும் அந்தரங்கபக்தர்கள் அம்மண்டபத்தில் வீற்றிருக்கையில்அவர்களைநோக்கி ராமதாசர் சொல்லத்தொடங்கினர்.

ஓசாது சத்புருஷர்களே? ஸ்ரீராமசந்திரமூர்த்தியை உங்களுள்ளத்திற்கண்டு செரிசிப்பவர்களும பக்திநிஷ்டையில் பூரணக்ஞானிகளுமாகி நீங்களிருக்கவனங்களில் மனமபோனபடி திரிந்துக்கொண்டு வானரங்களுடன் சங்கஞ்செய்துக்கொண்டு வீணைப்போக்கின யான்மேலாகிய வேதசாஸ்திர புராண இதிகாசங்களைக்கண்டு வாசிக்காமலு மிருந்தேன் அன்றியும் சங்கீதமும் சாயித்தியங்களும் நன்றாய் அறிந்தவனல்லன் சபையில் அழகானசாரம் அசாரமென்னுமவார்த்தைகளைப் பகுத்தறிந்துசொல்லத் திறமையுள்ளவனுமல்லன் மேலும்வேதாந்த சித்தாந்தங்களின அர்த்தங்களும் ஸ்ருதி லயைஸ்வர சாயித்தியங்களையும் காணறியேன, (ஞானேன ஹீன பசுபிச்சமான)என்பதுபோல ஞானமில்லாதவன் பசுவுக்கு நிகரானவ

னென்றுபிரமாணமிருப்பதாலேஞானமில்லாதவனும்
பக்தியில்லாதவனும் வைராக்ய மில்லாதவனு மான
யான் சொல்லப் புகுந்த விடத்தில் ஸ்ரீராமன் எனக்
குத் துணையாயிருந்து என்வாய்மொழிகளைப்பிரவீண
வாக்கைப் போலப் பாதுகாப்பாராக வென்று நைச்
சிய வார்த்தைகளுடன் கதைசொல்ல ஆரம்பித்தார்.
பதிதர்களைப் பாவனஞ் செய்யும்படியானதும் பக்தர்
களுக்கு வசப்பட்டதுமான ஸ்ரீஹரியின் திருநாமமே
இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் யாவருக்கும் இக்கலி
யுகத்தில் தாரக போஷக போக்கியதையாகும் அதெ
ப்படியெனில் பூர்வத்தில் அஜாமீளனுங் கணிகைமா
தும் நாராயண நாமத்தியானத்தால் ஸ்ரீ வைகுந்தத்
தை விரைவாக யடைந்தார்கள்.

அன்றியும் வாலா கோளியெனுமொருபோபியா
னவன் தாரகநாமப் பிரபாவத்தினாலே வால்மீகமுனி
யாயினான், அம்முனிவன் அத்தாரகமந்திரத்தை உல
கெங்கும் பரவச்செய்தான் மேலும் மந்திரங்களிலே
மூலமந்திரமாகியது இவ்வுலகத்தில் ராமமந்திரமாகும்
எந்திரதந்திரங்கள் இந்த ராமநாமத்திற்குமுன்னிற்க
மாட்டாது சத்தாகியும் வித்தாகியும் விளங்கும் ராம
நாமத்தை ஜபஞ்செய்புமிடத்தில் பவமென்னுங் கட
லைத் தாண்டுவதற்கோர் ஓடமாகி அக்கடலைச்கடந்து
பரமபத மடைவார்களப்போதே என்று வெகுவிதங்
களாய் ராமகுணானுபவஞ் சொல்லக்கேட்டு அவர்கள்
யாவரும் ஆனந்தமடைந்தார்கள். உடனே விட்டல
னுக்கு தூபதீப நைவேத்தியங்களிட ஜனங்கள் விட்
டல விட்டல வென்றுப்பாடி யாடியபோது ஆனந்த
மேலீட்டால் மெய்சோர்ந்து சற்றுநேரத்திற் றெளிந்
தயிருக்க தாசரும் அங்கு பக்திசெய்துக் கொண்டி
ருந்தார்.

இந்தப்படியாக தாசர் அப்பண்டரிநாதன் சந்நி
தியில் பக்திசெய்துக் கொண்டிருந்து மறுநாள்காலையி
லெழுந்து சாதுக்களுடன்கூடி கோபா புரத்துக்குச்
சென்றுப் பாடியாடி பக்தர்கள் கிருஷ்ணலீலையிற் சிற
ந்து தேடிநிற்க, தாசர் அவர்களைக்கண்டு தனக்குள்
தானே பரமானந்தமடைந்து திரும்பிவந்து பண்டரி
யையடைந்து அங்குநடக்கும் பிரமோச்சவத்தைச்
சேவித்துக் கொண்டிருக்கையில் ரதோச்சவத்தைச்
சேவிக்கும்பொருட்டு யெல்லோருமேக வெண்ணின
மாத்திரத்தில் தாசர்பயமின்றி நடுராத்திரியில் சந்நிதி
க்குச்சென்று கபாட்பந்தனமா யிருப்பதை யறிந்து
அருகிற்சென்ற மாத்திரத்தில் கதவுதிறந்துக்கொள்ள
பயப்படாமல் உட்சென்று பண்டரி நாதனது திவ்ய
ரூபத்தை நன்றாய்சேவித்து திருவடிகளுக்கு தெண்ட

விட்டு சந்நிதி முன்பாகநின்று வெருவின்றித் தான்
வாசஞ்செய்யும் வனத்திற்கேக விடைதரவேண்டுமெ
ன்றுப் பணிந்துகேழ்க்க விட்டலன் தாசரைநோக்கி
என்னருமை பக்தசீலனே நீவனத்திற் சென்றால் மறு
படியுந்திரும்பி எப்போது வருவாயென? தாசர் மெ
த்த சந்தோஷித்து அதற்குக் காரணபுருடர் நீரேயல்
லவா? பிராமணனாகிய வென்னைப்பண்டரிக்கழைத்து
வந்தாயே? கிருபாநிதியே? மார்க்கத்திலென் காலில்
முள்தைக்க அம்முள்ளை வெளிப்படவாங்கி விட்டெ
றிந்ததயாநிதியே? சாதுகோஷ்டியை நன்றாகச்சேவிக்
கச்செய்த மகானுபாவா? தேவாதிதேவா? நின்னு
டைய மகுத்துவத்தை முழுதுமறிந்துச் சொல்லத்தக்
கவர்களும் இப்புவியிலுண்டோ? அன்றியும் நினது
தொண்டர்கள் சங்கமத்தினாலே எனக்கு சாரமாகிய
சுகமுண்டாயிற்று ஓசுவாமி? எனக்கு வரமொன்று
தயவுசெய்து கொடுக்கவேணும் அதென்ன வெனில்
ஸ்ரீவச்சமும் கௌஸ்துவா பரணமும் நீங்சாமல் தே
வரீர் என்றுந் தரித்துக்கொண்டிருப்பது போலவும்
செங்கல்லைவிட்டு நீங்காமல் திருவடிகளைப் பொருந்த
வைத்துக் கொண்டிருப்பது போலவும் அடியேனை
யெப்போதும் மறவாமலிருக்கும் படியான வரமொ
ன்று தயைசெய்யவேணு மென்று பணியக் கேட்டுப்
பாண்டுரங்கநாதன் ஓராமதாசனே! ராமபக்திவிசுவா
சனே! உன்னிடத்திலெப்போதும் அன்புமரவாமலே
இருப்பேனென்று நவில, அவ்வார்த்தைப் பெற்றுக்
கொண்டும் தாசருக்குமணியைச் சேவித்துக்கொண்
டும் புறப்பட்டு நடந்துபோகையில் எல்லாம் ராமமய
மென்றுகருதி யிருப்பவர்க் கென்னபயம் இங்குண்டு
யகவர்ன அங்கில்லையென்பதைவிடுத்து அங்குமிங்கும்
எங்கெங்கும எள்ளுக்குளெண்ணையைப் போல எங்கும்
நிரைந்து ஏகாந்தரூபனாகி யிருப்பவனும் அந்த ராம
னே என்றும் நினைத்துக்கொண்டே பரமானந்தமே
லிட்டுத் தன்னைமறந்தாடிப் பாடிக்கொண்டேமஹோ
ளியென்னும் பட்டணத்தைச்சேர்ந்த தன்னிருப்பிட
மாகிய வனத்தையடைந்திருந்தார் இச்சரிப்படி யிருக்
கையில் சிவாஜிமகாராஜன் குருநாதன்வரவை வேவு
காரர்களாலறிந்து அக்கணமே சேவிக்கவேணு மென்
றெண்ணங் கொண்டு பரிவாரங்கள் சூழ வனத்தை
யடைந்து ஆசானைக்கண்டுபணிந்து அவருக்குசோடச
உபசாரங்களால் பூசித்து ஓசுவாமிஒருமாதபரியந்தம்
எங்குசென்றிருந்தீரென தாசர் அரசனே! பண்டரி
தலத்தில்நின்ற திருக்கோலத்துடனிருக்கும் பாண்டு
ரங்கநாத ரிங்கெழுந்தருளி என்னையழைத்துக்கொண்
டப்பண்டரி புரத்திற்கேகினோர் யானுமிந்த ஒருமாத
பரியந்தம் அவருடைய சேவையிலும் அடியார்கள்

கூட்டத்திலும் ஆனந்தித்துக் கொண்டிருந்து இன்று தான்வந்தேன் இதிருக்கட்டும் நீரென்ன இந்த ஒரு மாதகாலமாய் அறுசுவையன்னம் புசிக்காமலவிரதத்தை யநுட்டித்துக்கொண்டிருந்தீர் சீக்கிரஞ்சென்றுப் பாரணைசெய்யுமையாவென்று விடைதர அரசன்மகா பாக்கியமென்று விடைபெற்றுக்கொண்டு பரிவாரங்களுடன் தன்னரண்மனை சேர்ந்து சுகமாக இனிதுவீற்றிருந்தான்.

அந்தநாளிலே ஷாபுரமென்னும் பட்டணத்தை யாண்டிருந்த ரங்குஜீபுசாயப்பு என்னுமரசன் நகரங்களின்மீது தண்டெடுத்துச்சென்று யுத்தஞ் செய்து வெகுராஜ்யங்களைக் கெலித்துத்தானென்றஇருமாப்புகொண்டு தன்னைவிட சமர்த்தனெங்குமில்லை யென விண்டு மஹோளிபட்டணத்தை ஜெயித்து வரும்படி யெவனையனுப்ப அவனும் மஹோளிபட்டணத்தை சேர்ந்து அங்குள்ள குடிகளாலே சிவாஜிமகாராஜனை செயிப்பது அரிதாகுமென்று விள்ள யெவனன் குடிகளைநோக்கி அற்பபலமுடைய இந்தசிவாஜி ராஜனை ஒருகணப்பொழுதில் வெல்லவல்லவனாக யானிருக்க இவனை யொரு சுத்தவீரனாகச் சொல்லத்தருமோவென்று அட்டகாசசிங்கனாதஞ் செய்தான் அந்த ஆர்ப்பாட்டத்தைக்கண்ட குடிகள் ஓ யெவனனே! இந்த சிவாஜிராசனுக்கு குருநாதன்வலிவு மெத்த யிருப்பதால் இவனைநீவெல்லுவது அருமையிலும்அருமையே யாம் அப்படி இந்தசிவாஜிமகாராசனை வெல்லுந்திராணியுனக்கிருக்கும் பக்ஷத்தில் இந்நகரத்திற்கு ஐந்து மயில் தூரத்திலிருக்கும் வனத்திற்கு நீ சென்றுஅங்கு வசித்துக் கொண்டிருக்கும் ராமதாசரைவென்று விடுவாயாகில் சிவாஜிராஜனை எளிதில் செயித்து நீநகரத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்றுநவிலக்கேட்டு அந்தயெவனன் அப்படியானால் இதோயான்காட்டிற்குச்சென்று சிவாஜிராஜனுக்குக் குருவாகிய ராமதாசரை முன்னஞ்செயித்து வருகிறேனென்று சொல்லி அந்தயெவனன் வில்லுங்கையுமாகக் கானகத்தைநோக்கிநடந்து துஷ்டமிருகங்கள்வசிக்குங் கொடியகாட்டையடைந்து அங்குவசித்துக்கொண்டிருக்கும் தாசருக்குத்தான் வந்திருக்குஞ் சைகைதெரியும்படி வில்லில் பாணங்களைத்தொடுத்துச் சிலஅடையாளக் குறிப்புகளுணரும்படி விடுத்தான் அக்குறிப்பை யுணர்ந்தும் தாசர் சற்றுநேரம் வராமலிருந்து உடனேவந்து தானுஞ்சில அடையாளங்கள் யெவனனுணரும்படிக் காட்டினர் அதைக்கண்டு யெவனன் சற்றுலோசித்து இந்தராமதாசர் மெத்தமகிமை யுடையவராகத் தோன்றுகின்றது ஆகிலும் இன்னமிவருடைய புத்திகூர்மையையும் பக்திசிறத்தையையும் மகுத்துவத்தையுங் கண்டறிந்துப் பின்பு இவரை நாம் ஆசானாகக்கொள்ளலாமென்றுகருதி ராமதாசரருகிற்சென்று நின்றான் அப்படிநின்ற யெவனனை ராமதாசர்கண்டு ஓயெவனனே! பாணங்களைவிடுத்துக் கையிலப் பாணங்களைப் பிடிக்கவேணும்அப்படிபிடிப்பதுசாமர்த்தியமென்று சொல்ல? அதற்குயெவனன் ஓராமதாசரே! எப்படிப்பட்ட தீரபுருடனானாலும் ஆகாயத்திற்செல்லும்பாணங்களைக் கையினாற் பிடித்துக்கொள்வ தரிது. இது அசாத்தியமாகுமென்றுவிள்ள அதற்குத்தாசர்நானந்தப்படியே பிடித்துவருகிறேனென்று சொல்ல உடனே யெவனன் தன்வில்லைக் குண்டலாகாரமாக வளைத்து நாணேரிட்டு குணத்தொனிசெய்துஅதில்மிகவும் மகிமைகள் பொருந்தியச் சிலபாணங்களைத் தொடுத்து விடுத்தான் அந்தபாணங்களை தாசர்யெகிரிக்கையிற் பிடித்துக்கொண்டுவந்து காட்டினர் அப்போது யெவனன் தாசரைநோக்கி ஓசாதுசற்குரு நாதரே! தேவரீருக்கு நிகராக யெவரும் இப்புவியினிற் செய்ய மாட்டார்கள் இதுமெத்த அருமை எவர்களாலு மிக்காரியஞ்செய்வது அசாத்தியமாகுமென? தாசர் ஓ யெவனனே! சூரனாகயிருக்கப்பட்டவன் விடும் பாணமானது கணக்கிட்டுச் சொல்லமுடியாத தூரமேகுமென்று சொல்லிக்கொண்டே வில்லிலொரு பாணத்தைத்தொடுத்து அங்கிருக்குமொரு மரத்தின்மீதுவிடுத்தார். அப்பாணமானது மரத்தை யிருபிளவாகச் செய்துக்கொண்டு இவ்வளவு தூரந்தான் போயிற்றென்று சொல்லுவதற்குக் கூடாதகணக்கு கடந்துபோயினபடியால் அதையெவனன்கண்டு மெத்தவியப்பையடைந்து ஆஹா ஹாஹா இதுவென்ன ஆச்சரியம இப்படிப்பட்ட கரவேகசரவேகமுடைய சுத்தவீரனை நானெங்குங்கண்டதில்லை, கதையிலுங்கேட்டதில்லைப் பாண்டவர்களின் நடுப்பிறந்தோனான அர்ச்சுனன் வில்வித்தையில் மெத்ததேர்ச்சி படைந்தவனென்றும் அவன்விடும்பாணங்கள் கணக்கில்லாததூரம் போகுமென்றும் இருகரங்களாலும் மாறிமாறி விடுவதால் சவ்வியசாசி யென்றொருநாமமு மடைந்தானென்று கதையிலெழுதியிருக்கக்கண்டு ஆச்சரியமடைந்தேன் இப்போது நீஎன்முன்விட்ட பாணத்தின் மகிமையை யான் கண்ணாரக் கண்டும் ஆச்சரியப் படாமலிருப்பேனோ? ஓஹோ! இனி இப்பூமண்டல முழுமையும் வெற்றி கொள்ளுஞ் சக்தியுடைய புண்ணிய புருடர் நீராகுமென, தாசர் ஓயெவனனே! சகலசரீரங்களிலும் பொருந்தியிருப்பது சைதன்யம் பொருளொன்றேயாகும் அப்படியிருக்க இவ்வுலகத்தினில் துலுக்கர்கள் தமிழருடன் சரியாயிருப்பார்கள் ஆகையால்

ஈஸ்வரன் துலுக்கர்களை சிருஷ்டிசெய்தா னென்றும் இந்துக்கள்சோர சிருஷ்டிகளென்றும் உங்கள் குரானில் எழுதப்பட்டிருக்கின்றதென்றும் துவேஷபுத்தியினால் விரோதங்கொள்ளுவார்கள். நல்லயெண்ணமில்லாமல் விரோதிகளாகவும விஷயவாஞ்சைகளில் மிகுத்து குருக்கிருபையைக் கோராமல் நன்மார்க்கத்தை விடுத்து நிறையத்துக்காளாவார்கள் ஆகையால் ஓயெவனனே நீஇங்குவந்த காரணத்தை யான தெரிந்துக்கொண்டேன் இனி யிப்படிப்பட்ட துவேஷபுத்தியுங் குரோதமுமம பேதாபேதமு மெண்ணாமல் யாவற்றையும் சமமாகவெண்ணி யிருமப்பாவென்று சொல்லக் கேட்டு அந்தயெவனன் அவர்திருவடிகளில் விழுந்து பணிந்து ஓசுவாமி தங்களுக்கென்ன வேண்டியதோ அதைத்தெரியப்படுத்து மென இராமதாசர் ஓயெவனனே! நம்முடைய பலஆட்டத்தினால் இந்தவயல்பாழாய்விட்டது. இதைப் பயிரிட்ட குடியானவனுக்கு இந்தபூமியை இனாம்கொடுத்து விட்டதாக ஒருகடிதமெழுதுமென அந்தப்படியே யெவனக்குடியானவனுக்கு அந்தவயலை இனாஞ்செய்வித்து தன்னூரை நோக்கிச்சென்று அரண்மனையை யடுத்திருந்தான்.

இவ்வண்ணமாக யெவனன் தன்னகரத்தையடைந்தபின்பு தாசர் வேறொருகிராமத்தை யடுத்து ஸ்ரீராமகீர்த்தனைகள் பாடிக்கொண்டிருக்க அவ்வூரிலிருக்கும் ஜனங்களுக்குப் பக்தியுண்டாயினதின்பேரி லவர்கள் தாசரைப்பணிய அவர்களுக் காசிகூறிதாசர்பின்னும் இராமகீர்த்தனைகளைப் பாடியாடி தன்னைமறந்திருக்க அவர்கள் பக்திமேலிட்டு தாசர்பாடுங்கீர்த்தனைகள் வேதசாரமென்று கருதி அக்கீர்த்தனைகளைப்பட்டோலையிலெழுதி பாடம்பண்ணி பாடிக்கொண்டிருக்கையில் தாசர் ஸ்ரீராமமகிமைகளை அங்கு சொல்லிக் கொண்டே நடந்து ஷாபுரத்தைச் சேர்நதிருந்தார். இப்படியிவர் விடைவிடாமல் ராமத்தியானஞ் செய்துக்கொண் டிருப்பதையும் இவரது மகிமையையுமுணர்ந்து அந்தக்கிராமாதி பதியின் புதல்வி அங்கு வந்து தாசர்திருவடிகளில் விழுந்துபணிந்துயெழுந்து பயபக்தி விசுவாசத்துடன் கைகுவித்து எதிரில் நிற்பதைக்கண்டு தாசர் ஓஅம்மணி? நீயார்உனதூரென்ன பேரென்ன இங்குதனித்துவந்த காரண மென்னவென்றுவினவ, அம்மாது ஓசுவாமி! அடியாள் இக்கிராமாதிபதியின் குமாரத்தியாகும் யான்தங்களிடம் உபதேசம் பெறவேண்டி அவாமிகுந்து இஙகுவந்தேனென்றுபணிய தாசர் அம்மாதுக்குத் தாரகநாமத்தையுபதேசித்து கிருபைக்கண்ணோக்கம் புரிந்து போய் வாருமம்மணீயென்று விடைதந்தனுப்பிவிட்டுச் சிலநாளங்கு வசித்திருந்து ஒருநாள்கானகத்தை யடைந்து பகவந்நாம சங்கீர்த்தனம் பாடிக்கொண் டிருக்க சிலசிஷர்கள் தாசரைப் பூசிக்கவெண்ணி பூஜாதிரவியங்களை யெடுத்துக்கொண்டு வனத்தையடைந்து தாசரைக்காணாமல் தேடிக்கொண்டிருககையில் தாசர் சிரிபுரமெனுமொரு கிராமத்தை யடைந்து அவ்வூரில் பிக்ஷையெடுத்து ரொட்டிகள்செய்துப் புசித்து அன்றிரவெல்லாம் ஹரிகதைசொல்லஅஙகுள்ளவூர்கேட்டு பக்தி யதிகரித்துத் தாசர்திருவடிகளில் பணிய அதில் கணக்கர்குலத்திற் பிறந்த அம்பாஜியெனுஞ் சிறுவன் விகாரமாகப் பேசிக்கொண்டு திரிவதாலவன் தாய்தந்தையர்க ளிருவருமவனை கையிற் பிடித்துக்கொண்டு வந்து தாசருடையகாலில் விழுந்து ஓசுவாமி! இச்சிறுவன் எஙகள்புதல்வன் இவன்சிலநாளாய்விகாரமாய்ப் பேசிக்கொண்டு திரிகின்றான் நாஙகளுமிவனுக்கேதேதோ சிகிச்சைகளைச்செய்து பார்த்தோம் ஒன்றினும் இவன்குணப்பட்டுவரவில்லை ஆகையால்மெத்தவிசனமுற்றிருக்கு மெங்கள் பூர்வபுண்ணியவசத்தால் தாங்களிங்கெழுந்தருளினீர் இனியெங்கள்குறை நீங்கிற்று தங்கள்தெரிசனத்தால் யாங்களும் புனிதர்களானோம இக்கிராமமும் பாவனமாயிற்று என்றுசொல்லிக்கொண்டே தனயனையவர் திருவடிகளிற்போட்டு இணங்கி வணங்கி இவனைத்தங்கள் குமாரனென்றுதேவரீர்திருவடிகளுக் கொப்புக் கொடுத்தோம் கிருபைசெய் திவனைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். இதைக்கேட்டு தாசர் இச்சிறுவனைப் பேய்பிடித்திருக்கின்றது யென்றுகருதி இதற்கு சத்குருநாமமிருக்கையில் விரைவினிலோடிப் போமந்தப்பேயென்று திடங்கொண்டு பஞ்சாக்ஷரங்களாலே பெரியோர்கள் பஞ்சபூதங்களையும் பறந்தோடச் செய்கின்றார்கள் அதனால் பரிசுத்த ஆத்துமாக்களாகி ஆத்துமஞானிகளென்று பேர்படைக்கின்றார்கள் எனறிப்படி மொழிந்துக்கொண்டே ஐந்துசுலோகங்கள் சொல்லியமாத்திரத்தில் அம்பாஜியைப் பிடித்திருந்த பேயானது பெருங்காற்றி லகப்பட்ட கொசுவைப்போலவும் இலவம்பஞ்சியைப் போலவும் உருமாய்ந்து போயிற்று.

உடனே அம்பாஜி குருநாதன் திருத்தாட்டாமரைகளில் விழுந்துபணிந்து என்மதி சஞ்சலத்தைப் போக்கி என்னைக் காப்பாற்றின சத்குருநாதனே நீநானென்பதற்ற அபேதனே பரமபக்தியிற் சிறந்த அவதூதனே இனியமொழிகளைப் பகரும் நவநீதனே என்று பலவிதமாகக் கொண்டாடும் சுயக்ஞானத்தைப் பெற்ற தனயனைத் தாய்தந்தையர்கள் கண்டு இனியில்லாத ஆனந்தத்தையடைந்து தாசரைப் பல

வாறுப்புகழ்ந்து விடைபெற்றுச் சென்றார்கள். உட
னேதாசர் அம்பாஜிக்கி தாரகமந்திரத்தை யுபதேசி
த்து அஸ்தமஸ்தவியோகஞ் சாதிக்கும்படி கிருபை
புரிந்தார். அந்தஅம்பாஜியுய் ஞானபக்தி வைராக்
கியமிகுத்து சகலஅர்த்தங்களிலுந் தேர்ந்து ராகதா
ளங்களில் வல்லவனாகி தாசர்சொல்லுங்கவிகளைப் பக்
திசிரத்தையுடன் நன்றாக வெழுதிக்கொண்டு அவரு
டையசாயைவிடாது சேவித்துக் கொண்டும் உத்தம
சிஷனாகிய வடத்தில் வசித்துக்கொண் டிருக்கையில்
ஒருநாள்தாசர் கிரீடைவனத்திற் கெழுந்தருள ஆகா
பாயியென்னு மோர்வனிதை அவரிடத்திற்குப்போக
வேணுமென்று மெத்த ஆசையுடன் வருவதை தாச
ரறிந்து ஒ ஆகாபாயி இந்தவனம் பத்திரசமில்லாத
வனமாகையால் இங்குநீ வரத்தகாதென்று சொல்ல
அம்மாது ஒசுவாமி எனதுடல் பொருளாவி இம்மூன்
றையும் ஆசாரியார்ப்பணஞ் செய்து இதோ உமது
பின்னாகவே வருகிறேன் வனததிற்சென்று விண்ணப்
பஞ்செய்து அந்தப்படியே யம்மூன்றையும் நிர்மல
மனதுடன் ஆசாரியரா தீனப்படுத்தித்தன்பின் தொ
டர்ந்தம்மாது வருவதைக்கண்டு தாசர் உன்மத்தனை
போலக் காமாதி விஷயங்களைச்செய்து ஒ ஆகாபாயி
உன்னுடைய பொருளையெல்லாம் பத்துபேருக்குப்
பகுந்துவையுமென்ற மாத்திரத்தில் அந்தஆகாபாயும்
தக்ஷணமே அவர்சொற்படி பகுந்துவைத்து தனக்
கெங்கும் போக்கிடமில்லாமல் தாசர் திருவடிகளைப்
பிடித்து அவரனுக்கிரகத்தைப் பெற்று மடப்பள்ளி
யிற்புகுந்து தினந்தோரும் பிரசாதஞ்செய்து படைத்
துக் கொண்டிருந்தனள் இப்படிக்கிருக்கையில் தாசரு
டையசிஷர்கள் ஆரணியற்திற் கேகுவதும் இப்படியு
மப்படியுந் திரிந்துக்கொண்டு யாவத்து வேலைகளைச்
செய்வதுமாக விருக்கையில் ஒருநாள்தாசர் கிணத்தி
ன்கரை மீதுட்கார்ந்து அங்குஆலமரம் மெத்த தழை
த்துச் சூரியன்கிரணம் படாமல் கிளைகள் கிணத்தை
மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்துக் கிணற்றின் பக்
கமாய் வளர்ந்து வருங்கிளைகளை வெட்டிவிட்டால்யா
வருக்கும் ஜலம்நன்றா யிருக்குமென்றும கிணற்றிற்கு
யெப்போது தீஙகில்லை யென்றும் கருதித்தன் சிஷர்
களையழைத்து இந்த ஆலமரத்தினில் கிணத்தின்பக்க
மாய் செழித்துக்கொண்டு வருமிக்கிளையை வெட்டித்
தள்ளுங்களென்று கட்டளையிட்டார் அந்தசிஷர்களில்
அம்பாஜியானவன் குருவின் கட்டளையின்படி அங்கி
ருக்கும் கிராமத்திற்குச்சென்று வெட்டுகத்தி வாங்கி
ஏடுத்துக்கொண்டு லருவதற்குள் சிஷர்கள் மடப்பள்
ளிக்குள் புகுந்து தளிகைசெய்துக் கொண்டிருக்க,
அந்த ஆலமரத்தின்கிளைக்கு நேராய்க் கீழ்ப்பாகத்
தில் தாசர் உட்கார்ந்துக்கொண்டு ஸ்ரீராமரை சிந்தித்
துக் கொண்டிருக்க அம்பாஜியானவர் அக்கிளைக்கு
கயிறொன்றுகட்டி மரமேறி அக்கிளையைப் பார்த்து
இதைவெட்டினால் குருநாதன்மீது விழுமென்றுகருதி
தாசரைநோக்கி ஒசுவாமி தாங்கள்சற்றுவிலகியிருக்க
வேணுமென்று வேண்டிக்கொண்டார். அதற்குதாசர்
ஒஅமபாஜி நீஎன்னுடைய க்ஷேமத்தைக் கோரிநாய்
அப்படிக் கருதவேண்டாம் உன்னை நீ காப்பாத்திக்
கொள்ளும்விதத்தை தேடிக்கொள்ளக் கடவாயென்ற
போது சிஷியர்களிலொருவன் அக்கிளையைவெட்டப்
போகையில் அம்பாஜிகண்டு நேசர்களைநோக்கி ஐயா
நீங்களிந்தகிளையைவெட்டினால் அதுஆசான்மீது விழு
மாகில் அதையான்கண்டு மனம்பொருக்கமாட்டேன
அந்ததுக்கத்துக்கு எள்ளளவேணுஞ் சகிக்கமாட்டே
னென்றும் சொல்லி உள்ளபடி யாசட்டுமென்று கிட
ங்கொண்டு தானக்கிளைமீ திருந்துக்கொண்டே அக்
கிளையைவெட்டினார் அக்கிளையானது மெத்தபாரத்து
டன் கீழேவிழுந்தது அம்பாஜிகிணற்றில் விழுந்தான்
மேலும் அக்கிளையானது தாசருக்கருகில் விழுந்தது
அக்கிணற்றில் ஜலமதிகமாயிருந்ததால்அம்பாஜியதில்
விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தார். மற்ற சிஷர்
கள் அம்பாஜியைக்கண்டு யென்னசெய்கிற தென்று
பரிதபித்தார்கள். அந்தசமயத்தில் ஆகாபாயி பிரசா
தம் தயாராய்விட்டது. புசிக்கவரலாமென்று நயமா
ய்ப்பகர தாசர்கேட்டு போஜனத்திற் கெழுந்தருளும்
போது சிவாஜிமகாராஜன் பரிவாரங்களுடன் அங்கு
வந்து சேர்ந்து குருநாதனுக்கு தெண்டனிட்டு சோ
டச உபசாரங்களால் பூசித்து இருகரங்களையுங்குவித்
துக்கொண்டு நிற்கதாசர் அவரைஆசீர்வதித்துஇன்று
எங்களுடன் உட்கார்ந்துப் புசித்துப்போமையாவெ
ன அரசனும்பதில் சொல்லாமல் மகாப்பிரசாதமென்
றுட்கார்ந் திருக்கையில் ஆகாபாயி தாசரைநோக்கி
ஒசுவாமி! சத்குருநாதரே உத்தமசிஷனான அம்பாஜி
கிணற்றில்விழுந்து முழுகினான் அவனையெடுத்துக்காப்
பாற்றலாகாதோ வென்று நவிலும் ஆகாபாயியை
நோக்கி ஒ அம்மாபாக்கியவதி அந்தஅம்பாஜி ஏதோர்
வேலைநேரிட்டு சிறிதுதூரம் போயினான் இப்போது
டனேவருவான் நீசந்தேகப்படாமல் அன்னம்பரிமா
ருமென அந்தப்படியே அரசன்முத லானோருக்கும்
அன்னம்பரிமாறி பலவிதமாய் உபசரித்தாள்.

இப்படியாக அந்த ஆகாபாயி யாவருக்கு 'மன்
னம்பரிமாறி உபசரித்துக் கொண்டிருக்கும்' போது
தாசர் சிஷர்களைநோக்கி ஒசத்சிடர்களே! ஒருநதிப்
பிரவாகத்தில் நான்குகட்டைகள் ஒன்றாகச் சேர்ந்து

வருகிறபோது சுழலிலகப்பட்டு அக்கட்டைகள் பலவழியாக ஒன்றோடொன்று சேராமல் தனித்தனியே பிரிந்து போவதுபோல இந்தஜென்ம மிருக்குமபரியந்தம் துணையாரு மிருக்கமாட்டார்க ளிவ்விலகினில் நல்லமனத்துடன் காப்பாற்றின அன்னையுங்காலனைக் கண்ட மாத்திரத்தில் மரணமடைந்திடுவாள். வேதவிதிப்படி சகலசடங்குகளும் நடத்தி மங்கிலியஞ்சூட்டின மனையாளும் யோஷிக்குமவனுவ நாயகன்மரணமடைந்த பனிரெண்டாம்நாள் அமங்கலியாவ ளக்காலத்தில் இப்படியாக பெற்றவன்னைக்கும் அனேகம் பந்துக்கள்முன் அக்கினி சாக்ஷியாய் மணம்புரிந்த மனையாளுக்கும் சம்மந்தமில்லாமற் போக அன்னிய பந்துக்களுக்கும் நமக்குமென்ன சம்மந்தமிருக்கின்றது ஆகையால் சதாகாலமும் இப்படியேயாகுமென்று திடஞ்செய்துக்கொண்டு சகலலோக நாதனாகிய ஸ்ரீராமனை மனதில் தியானித்துக்கொண் டிருங்கள். மேலும் சம்பத்தென்ன விபவமென்ன சகலபதார்த்தங்களென்ன இதுகளெல்லாம் அளவுகடந் திருந்தாலும் இந்ததிரேகத்திலுயி ருள்ளமட்டே யன்றி உயிர் பிரிந்துபோனால் சம்பத்து முதலானதுகளு மெங்கேயோ? அன்றியும் அந்தசம்பத்து முதலானதுகளையும் என்னது என்னதுயென்று இருமாப்புகொண்டிருந்து காலம்வந்தவுடனே மடிந்துபோமென்றும் ஹிதோபதேசஞ் செய்துக்கொண்டு. மேலும் சொல்லத் தொடங்கினான்,

ஒ சிஷர்களே! இதையோசிக்கு மிடத்தில் சூத்திரதாரியினால் ஆட்டப்பட்ட சூத்திரக்கயிறு அறுபட்டதுபோல பிராணன் போயினவுடனே கட்டைவிழுந்துவிடு மென்பதில் அணுவளவும் பிசகிராது ஆகையால் ருணசம்மந்தந் தீர்ந்தவுடனே ஆத்துமா அழிந்துபோவதுபோல அம்பாஜியும் ருணம்தீர்ந்துவிட்டபடியால் கிணற்றில்விழுந்து உயிர் ரந்து போயினனென்றும் அந்த அம்பாஜி யிப்போதெங்கேபோயினனென்றும் அந்த அம்பாஜி யென்பவன் யாவனென்றும் எண்ணிப்பார்த்தால் எல்லாம சூனியமாம் ஆகையால் மேலாக இராமனை மனதில்நினைத் துங்களுக்குண்டாகும் விசனத்தை மாற்றுங்களென்றுமிந்தப்படியாக அந்ததாசர் சொல்லிக்கொண்டே புசித்து சிஷியர்களையும் பலவிரக்தி வசனங்களால் தேற்றி யவர்களுக்கும் ஊட்டினார் அரசனேகுருநாதன்மகுத்துவத்தைக் கண்டானந்தித்துத் தங்கரஞ்சேர்ந்தார். உடனேதாசர் யாருக்குந் தெரியாமல் வேறொருகாட்டிற்குட்சென்று ஆறுநாளங்கு மிங்குமாகத் திரிந்துக்கொண்டிருக்கிறபோது ஊரிலிருக்கும் சிலஜனங்கள் இவரென்னமோ மெத்தமகிமையுடன் விளங்கப்பட்டசிலரென்று சொல்லுகிறார்களே! யன்றி கிணற்றில் விழுந்து மரணமடைந்த அம்பாஜியை ஆறுநாளாக எடுங்காமலும் அவனைப்பிழைக்கும்படி செய்யாமலும்,ஜீவகாருண்ணியமின்றி மனம்போனபடி காடுகள் தோறுஞ் சஞ்சரித்து பித்தனைப்போலவும் உன்மத்தனைப்போலவுந் திரிந்துக்கொண்டு மிருக்கின்றார் அந்தஅம்பாஜி இவருக்குப்பிள்ளையாகியும், அல்லது பந்துவாகியு மிருந்தால், இப்படி பராமுகமாக சிரத்தையின்றி யிருப்பாரா உடனே வேண்டியமுயற்சியைச் செய்து உயிர்பெற் றெழும்படிச் செய்யமாட்டாரா சுயகாரிய துரந்தரா சுவாமிகாரியா வழவழா யென்பதுபோல இவர் சொந்தகாரியத்தில் வெகுதீவிர மாகவும்சுவாமி காரியத்தில் மெத்த சாந்தமாகவு மிருப்பதால்இவரை யெப்படி சத்குருநாதரென்று சொல்லிப் பணிவது, இதுஇந்த உலகத்தில் பரமசாரியர்களாகி விளங்குமவர்கள் தங்கள் சுயகாரியத்தில்துரிதப்படமாட்டார்கள் அன்னியர்களுக்குநேரிட்ட ஆபத்தைமுன்னுதாகத் தீர்த்துப் பின்னர் தங்கள் காரியத்தில் சிரத்தையெடுத்துக் கொள்ளுவார்கள். அன்றியும் யாதாமொருபொருளையும் உபகாரார்த்தமாக தேகப்பிரயாசையெடுத்துக்கொண்டு சிரமப்பட்டு சம்பாதித்து அன்னியர்களுக்குக் கொடுத்து அவர்களிக்கட்டைத் தீர்த்துக் காப்பாற்றுமவர்கள்உத்தமவர்கள். அப்படிக்கிச் செய்யாமல் அவர்களெப்பாடு பட்டாலும் நமக்கென்னவென்று திரியுமவர்கள் மத்திமர்கள் தங்களுக்கேதாகிலு மொருகஷ்டம் நேரிடில் அதற்காகவேண்டிய பிரயத்தனஞ்செய்து தீவிரமாக அக்கஷ்டத்தைப் போக்கிக் கொள்ளுமவர்கள் அதமர்கள் என்றுப்பல நீதி சாஸ்திரங்கள் முறையிடுவதால் இந்ததாசர் சகல சாஸ்திர சம்பன்னராக விருந்தும் இதைகிஞ்சித்தேனும் கவனியாமலிருப்பதென்ன காரணமோ தெரியவில்லையே மேலும் அந்த அம்பாஜீ இவருக்கு மெத்தப்பிரிய சிஷனாக விருக்கவில்லையா? அவனைக் காப்பதோர் தொல்லையா? அவன்செய்தபாவத்தின் கொள்ளையா? இவருக்கென்ன யீசொருமல்லயாவென்று அக்குடிகள் இராமதாசரைக் சேவலமாகப் பேசிக்கொண்டு அக்காடுகள்தோறுந் திரிந்துக்கொண்டிருந்தார்கள். இவர்களிப்படி தன்னை யிகக்ஷியாகப்பேசிக்கொண்டு திரிவதை தாசருணர்ந்து ஏழாவது நாளந்தக் கிணற்றின் கரைக்குச்சென்றுஸ்ரீராமநாமத்தியானஞ் செய்துக்கொண்டிருக்க இதற்குள் சிஷர்களும் வந்து கலந்துக்கொள்ளத் தன்னைமறந்து பிரமத்திலேலிபவித்து அங்குட்கார்ந்திருக்க அப்போது பிரசாதமுந் தயாராயின சிவாஜிமகாராஜனும் தன்பரிவாரங்களுட

ணங்குவந்து தன்குருநாதருக்கு சோடச உபசாரங்க
ளால் பூசைசெய்து ஆசானுடைய திருக்கண்ணேக்க
த்திற் கெதிர்பார்த்திருக்கையில் இலேபோட்டு யாவரு
க்கும் ஆகாபாயம்மாள் அன்னம்பரிமாரும் போது
தாசர் கிணற்றினருகிற்சென்று அம்பாஜியை அழை
த்து கல்லியாணவிரைவினில் வருவாயென அவ்வோ
சையைச்கேட்டு அம்பாஜி ஜலத்தில்நின்றும் வெளிப்
பட்டு கிணற்றைக்கடந்து வந்து புசிப்பதற்கு உட்
கார்ந்த மாத்திரத்தில் அரசனும்சிஷர்களும் ஆகாபா
யியும் ஊராரும் அம்பாஜியைப்பார்த்து அளவு கட
ந்த ஆச்சரியப்பட்டு மாச்சரியத்தைவிட்டு ஆசானைப்
புகழ்ந்து ஊர்வாசிகளையிகழ்ந்து யாவரும்புசித்தான
பின் அரசன் விடைபெற்றுக்கொண்டு சென்றார் உட
னேதாசர் சிஷர்களுடன்மறறொருவனத்திற்சேகிஅம்
பாஜியையழைத்து சமீபத்தில்நிருத்திகொண்டுசிஷர்
களைநோக்கி நீங்களின்றுமுதல் அம்பாஜியைக் கல்யா
ணனென்று அழைக்கக் கடவீர்களென்று கட்டளை
யிட்டார். அந்தப்படியே சிஷர்களனைவரும் அம்பா
ஜியைக் கல்யாணவென் றழைத்தார்கள். அப்போது
தாசர் ஷாபுரக்கிராமத்தைச் சேர்ந்து தாசபோதமெ
னுங் கிரந்தமொன்று செய்தார் அக்கிரந்தத்தை அவ்
விடத்தில் கல்யாணன்வாசிக்கக் குடிகள்வந்து கேட்டு
ஆனந்திருப்பார்கள் அன்றியு மந்தக் கிரந்தத்தைக்
கேட்பவர்களுக்குப் பக்திக்ஞான வைராக்கியசம்பத்
துகளு முண்டாகும் மேலும் மோகாந்தகாரத்திலகப்
பட்டுழலும்படி யானவர்களுக்குசூரியனைக்கண்டபனி
போலவும் சந்திரனைக்கண்ட யிருள்போலவும் நீங்கிப்
பரிசுத்தராவார்கள்.

இவ்வாறு தினந்தோருங் கல்யாணன் தாசபோ
தமெனுங் கிரந்தத்தை வாசித்துக்கொண்டு வருகை
யில் அதைஜெனங்கள் நன்றாகக் கேட்டுக்கொண் டிரு
க்க, அதிலொருகிரகஸ்தன் அக்கீர்த்தனையி லடங்கிய
தாத்பரியத்தை யுணர்ந்து அனித்தியமான ஜெகத்
தாசையிலகப்பட்டு அலேவது முடிவில் நரகமடைவ
தற்கேயா மென்றுங்கருதி மனோதிடஞ்செய்துக்கொ
ண்டு சஞ்சலப்படவொட்டாமல் நிர்மலக்ஞானியைப்
போல தாசர்திருவடியில் விழுந்து தடாலு மென்றெ
ழுந்து யிருகங்ங்களானும் பிடித்துக்கொண்டு ஓசுவாமி
அணுவளவேனுஞ் சந்தேகிக்காமலிவ்வேழையை யா
ண்டி ரக்ஷிக்கவேணுமென்று சரணுகெதியடைந்தான்
அப்படி தன்னைச்சரணுகெதி யடைந்த கிரகஸ்தனை
நோக்கி இராமதாசர் முகமலர்ந்து அகங்குளிர்ந்து
ஒஐயா! கிரகஸ்தனே தாபங்கள் மூன்லுந் தவித்துத்
தியங்கி மயங்கி மெத்தசிரமப்பட்டு வந்து என்னைச்
சரண்புகுந்தாய், ஆசினுமுனக் கிருக்கும் பெருத்த
குடும்பத்தைவிடுத்து என்னுட னிக்காட்டினி லெப்
படியிருப்பாய் இங்குண்டாகும் பசிதாபத்தை யெப்
படிபொருப்பாய் இதுஉன்னலாகாதகாரியமாதலால்
நீ சீக்கிரமுன் கிரகத்திற்கு நடவுமென அக்கிரகஸ்
தன் வீட்டையடைவதற்கு மனமில்லாதவனுகிச் சில
னாங்கு தாசருடன் வசித்துக்கொண் டிருந்து எல்
லோரும் வனத்திற்கேகையில் கிரகஸ்தன் அகத்தை
நோக்கிப்போயினன். போனவன் கிரகத்தை யடை
தற்கு மனமில்லாமல் மருபடியுந் திரும்பிவருகையில்
தாசரங்கோர் மரத்கடியில் சிஷருடனிருக்கக்கிருகஸ்
தன் கண்டு சமீபத்திற்சென்று தெண்டனிட்டுத் துதி
க்க தாசர் ஓகிரகஸ்தனே! உனக்கிர[illegible] டிடத்திலும்
பிரியமுண்டாகி யிருக்கிறபடியா லெப்படிக் ஞான
பக்தி வைராக்கியங்க ளுண்டாகுமென்றும், இரண்டி
டமாவதெதுவெனில் உன்மனமானது குடும்பத்திலு
ங்குருவின் திருவடிகளுமாகிய இரண்டிடத்திலுஞ்சஞ்
சலப்பட்டுக் கொண்டிருப்பதால் உனக்கெப்படி திட
ச்சித்தமுண்டாகும் ஒருவஸ்துவினிடத்தில் மனம் நிர்
மலமாய் நின்றாலல்லவோ திடச்சித்தம் அப்படிக்கி
நிலைநிற்காதமனம் சஞ்சலமனமாகும் ஆகையாலுன
க்கு ஸ்ரீராமபக்தியுண்டாவது அருமையென அக்கிர
கஸ்தன் ஓசுவாமி! தேவரீருடைய சங்கமத்தினலே
மாயைவிலகும் பூர்த்தியானக் ஞானமுமுண்டாகுமெ
ன அதற்குதாசர் ஓகிரகஸ்தனே! இது கலிகாலமா
கையால் உனக்குகுருவினிடத்தில் சுகமும், சம்சார
த்தினிடத்தில் துக்கமு மெப்போ துண்டாகிறதோ?
அப்போதல்லவோ நானுன்னிடத்தில் நம்பிக்கைவை
ப்பேன் ஆகையால் அதுபரியந்தம் உனக்கு சுகமுண்
டாகமாட்டாது யென்றுரவில அதற்குகிரகஸ்தன் ஓ
தீனனுரு மென்னிடத்தில் தயாளமுடையமூர்த்தியே
எங்கும் பிரசித்தமாகப்பெற்ற கீர்த்தியே! அடியேன்
தேவரீர் கட்டளையின்படி நடந்துக் கொள்ளுகிறேன்
எந்தகாலத்திலும் மாறுபட்டு நடக்கமாட்டேன் என
உடனே தாசர் சிஷர்களுடன் கிரகஸ்தனையு மழைத்
துக்கொண்டு வனத்திற்கேக அங்குபனைமரத்தினருகி
லொரு தடாகமிருக்கக்கண்டு அவிடத்தில் நிம்மதியா
யுட்கார்ந்து கிரகஸ்தனை சமீபத்திலழைத்து ஓகிரகஸ்
தனே இந்தப்பனைமரத்தின் மீதேறுமென அந்தப்ப
டியே கிரகஸ்தன் மரத்தின்மீதேறிட தாசர் மட்டை
யைப் பிடித்துக்கொண்டு கால்களைத்தொங்கவிடென
கிரகஸ்தன்பயந்து கால்களைத் தொங்கவிடாமலிருக்க
தாசர் பனைமட்டை யுன்னைப்பிடித்துக் கொண்டதோ
அல்லது நீ அந்த பனைமட்டையைப்பிடித்திருக்கிறாயா
யென கிரகஸ்தன் நானே பனைமட்டையைப் பிடித்தி

ருக்கிறேனே அன்றிப் பனைமட்டை யென்னைப் பிடித்துக்கொண்டிருக்க வில்லையென அதற்கு தாசர் ஓகிரகஸ்தனே! இதைப்போலவே சம்சாரமுனைப் பிடிக்க வில்லை. அச்சம்சாரத்தை நீயே பிடித்துக்கொண்டிருக்கின்றாயாகையால் சஞ்சலமனதே இவ்வுலகத்தின்கண் சந்தேகமான விரோதியாகும் இதைப்பற்றி நீ சற்றாகிலும் பயமுறாமல் மட்டையைப்பிடித்திருக்கிற கைகளிரண்டையும் விட்டுவிடுமென கிரகஸ்தன்கீழே தடாகத்தில் ஜலமிருப்பதைக்கண்டு பயமடைந்துக் கைகளைவிடாமலிருக்க இப்பிரபஞ்சத்தினில் கூண்டிவிடமிருக்குங் கிளியைப்போல நீ இந்தமட்டையைப் பிடித்துக்கொண்டிருப்பதால் என்னப்பிரயோஜனத்தை யடையப்போகின்றாய் அம்மட்டையை விட்டு இக்குளத்திளில் விழுந்தபோதிலும் க்ஷேமமடையும்படிக்கி ஸ்ரீராமர் ரக்ஷிப்பார் தன்னை நம்பினவர்களை பவர்விடமாட்டார். ஆகையாலென்சொல்லை நம்பிக் கைகளை விட்டுவிடுமென கிரகஸ்தன் தாசர்சொல்லை நம்பி உடனே மட்டையைப்பற்றி யிருந்த கைகளை விட்டுவிட்டு அக்குளத்தினில் விழுந்து முழுகிப்போயினன்.

இந்தப்படியாக அந்தகிரகஸ்தன் தன் சொல்லை நம்பிக் குளத்தினில் விழுந்து மூழ்கிப்போயின உடனே இராமத்தியானமதிகரித்துத் தன்னைமறந்து தலைவனிற் கலந்திருந்தார். இவரிப்படி யிருக்கக் குளத்தினில்விழுந்து முழுகிப்போயினகிரகஸ்தன் அங்கொரு சொர்ன்னகஜிதமான நகரத்தைக்கண்டு சந்தோஷித்துக்கொண்டே போகையில் மற்றோரிடத்தில் தாசருடைய மடமொன்று சித்திரவிசித்திரமாக விருக்கவுங் கண்டு அங்குதாசபோதமெனுங் கிரந்தத்திற்குத்தாத்பரியஞ்சொல்லவும், சற்றேனும் வேசாரவில்லாமல் ஜெனங்கள்வந்து ஆர்த்தியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதையும் பார்த்துக்கொண்டே மடத்திற்குட் புகுந்துபோகையில் தாசரிருந்தக்கண்டுபணிந்து ஓபரமகிருபா ரசமுடைய எனதையனே பொய்யில்லாத மெய்யனே! அன்பரைக் காக்குந் துய்யனே? இராமதாரக மந்திரத்தை ஜெபிக்குங்கையனே! அடியேன் காமத்தினாலே மெத்தவேதனையடைந்து அந்த கஷ்டங்களைப் போக்கும்பொருட்டு தேவரீரைச் சரணாகதியடைந்த வென்னைப் பயப்படாதே யென்று அபயப்பிரதானங் கொடுத்து ஆட்கொள்ளவேணுமென்று வெகுவாகத் தோத்திரம்புரியும் கிரகஸ்தனதற்கு தாசர் கிருபாநோக்கம் புரிந்து இராமதாரக மந்திரத்தை யுபதேசித்து அஸ்தசமஸ்தக சையோகஞ்செய்து பகவானுக் கத்யந்த பக்தனாகக்கடவாயென்று ஆசீர்வாதம்புரிந்தார்.

இவ்வண்ணம அந்த கிரகஸ்தன் அக்குளத்திற்குள் குரு உபதேசமுமவர் பூரணகடாக்ஷமும் பெற்றுக்கொண்டார் இதற்குள் தடாகக்கரைமீதிருக்கும் தாசர் ஓகிரகஸ்தனே! சீக்கிரமிங்கு வரவேணுமென்று கூக்குரலிட அந்தக் கிரகஸ்தனு மவ்வோசையைக் கேட்டு மெத்த வைராக்கிய சீலனாகி அக்குளத்தை விட்டு வெளிப்பட்டுக் கரைசேர்ந்து குருநாதருடைய திருவடிகளைப் பற்றிக்கொள்ள தாசர்குளத்தினிலென்ன கண்டாயென கிரகஸ்தன் தானக்குளத்தினில் கண்ட சித்திர விசித்திர விந்தைகளை யொன்றொழியாமல் யாவத்தையுஞ்சொல்ல, அதையரசன் முதலானோருங்கேட்டு ஆனந்தம்ஆனந்தம் பரமானந்தமொன்று சொல்லிக் கூத்தாடினார்கள் பலவிதமாய்க் குருசங்கீர்த்தனைகளைப் பாடினார்கள், இதுவென்ன ஆச்சரியமொன்று சங்கங்கூடினார்கள் பரமபதத்தை யடைவதற்கு யிதுவே மேலானமார்க்கமென்று நாடினார்கள் இதைவிட வேறுமார்க்கம ஜென்மரகித மாவதற்கில்லையென்று வாடினார்கள்.

இவ்வாறு அரசன்முதலான சிஷர்களுங் குருநாதருடைய மகுத்துவத்தைக்கண்டு என்றுமில்லாத பரமானந்த மடைந்தவர்களாகி மெய்மறந்திருக்க அதிவரசன் முன்னுதாய்த் தேறித் தெளிவடைந்து ஆசானைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு பரிவாரங்களுடன் நகரத்தை யடைந்திருக்க தாசர் வேறொருவனத்திற்குச்சென்று திரிந்துமங்கு சாபலூருக்குட்புகுந்து பிக்ஷையெடுத்துவர ரொட்டிகள் செய்து ஆகாபாயியம்மாள் கொடுக்க அதைப்புசித்து . அருகினிலொரு பருவதமிருக்க அதனிடஞ் சென்றுட்கார்ந் திருக்கையில் ஆமாத்தியனும் அரசனும் தாசரைத்தேடிக்கொண்டு பருவதத்தின்மீதேறி பாதசாரியாகநடந்துவந்தபடியால் மெத்ததாகமா யிருக்கிறது ஓ ஆகாபாயம்மா? சீக்கிரம் தாகங்கொண்டு வாவென்று சொல்லிக்கொண்டே நடந்து தாசரைக்கண்டு பணிந்துசோடசஉபசாரங்களால் பூசித்துக்கொண் டிருக்கையில்சிஷர்கள் பிக்ஷையெடுத்துக் கொண்டுவந்து ஆகாபாயிஅம்மாளிடத்திற் கொடுக்க அம்மாது அப்பிக்ஷை வஸ்துக்களைப் பெற்றுக்கொண்டு ஓசற்குருநாதருக் குகந்த சிஷர்களே! அரசனுக்கு தாகதீர்த்தங் கொண்டுவந்து கொடுங்களென. அரசன் அதிகஉஷ்ணத்தினால்திரேகமெலிந்து வாதைப்பட்டுக்கொண் டுக்கமில்லாமலிருப்பதையுந் தாசர்கண்டு கையிலொருதடியையெடுத்துக்கொண்டு வெகுதூரஞ்சென்று பூமியைசற்றே தோண்டினார். நீர்தாரைப் பெருகிவருவதைக் கண்டும்சிறிது நேரமிருக்க நீர் அதிகமாகித் தடாகமாயிற்று அதை

ஜனங்களிப்போதும் பார்க்கின்றார்கள். அப்போது வேந்தன் தாகபானஞ் செய்வதைக்கண்டு தாசர் ஓ வேந்தனே? உபசாந்தனே? உமக்கேனித்தனை தொந்திரவு இருக்குமிடத்திலேயே நீயிருந்துக்கொண்டுஎன் மீது நினைப்பு வைப்பாயாகில் அதுபோதுமான பலனைத்தரும் அப்படிக்கிராமல் மெத்தக் கஷ்டத்தையடைய வேண்டாமென்றுசொல்லிக் கொண்டிருக்கையில் சிஷர்கள் ஸ்நானஞ்செய்து அங்குதகுதியான பாகத்தைச் செய்தார்கள் அப்பிரசாதத்தை அரசனுடன் யாவரும்புசித்து சந்தோஷத்து அரசன் விடைபெற்றுப் போயினபின்பு தாசர் அங்கு தனக்குத் தகுதியான காரடவியிருப்பதால் அங்கிருந்துக் கொண்டு சிஷர்களவனைவரையு மழைத்து பலவிதமாகச் சோதித்து வில்லம்புகளைக்கொண்டுவேட்டையாடுகையில் செடிகளின்மீது குளிர்ச்சியாகவிருக்கும் அண்டஜங்கள்மீது வேடிக்கையாக நாட்டியஞ்செய்வா ரவ்விடத்தில் இந்தப்படியாக தாசர் வில்லம்புகளைக் கொண்டு குளிர்ச்சி பொருந்தியசெடிகள் மீதிருக்கும் பறவைகளை வேட்டையாடிக் கொண்டிருந்தார். இவரிங்கிப்படி இருக்கச் சிலகோசாயிகள் ஜடாதாரிகளாகி சிவாஜிமகாராஜன் சபைக்குவந்து அரசனை வாழ்த்தி ஓநரேந்திரனே! நினதுமுன்னோர்கள் எங்களுக்கொரு குறைவுமில்லாமல் நன்றாகக் காப்பாற்றினார்கள் நாங்களும் அவர்கள்விஷயத்திற் சிறியதப்பேனுஞ் செய்யாமல் அதிகஜாக்கிரதையாக நடந்துக்கொண்டு வந்தோம். அப்படிக்கிருக்க நீர்எங்களை நிவர்த்திசெய்து காட்டினில்ப்பயித்தியக்காரனைப்போலவும்உன்மத்தனைப்போலவும் அப்படியுமிப்படியுந் திரியும் தாசனைக் கண்டு அவன்திருவடியில் விழுந்துஆசாணுகவடைந்து மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு நாள்தோறும் அவனிடஞ்சென்று அர்க்கிய பாத்யாதி பூசைகளைத் தருமந்தப்பாமல் நடத்திக்கொண்டு வருகின்றீர் இப்படிச் செய்வது தருமமல்ல வென்றுப் புகலக்கேட்டு அரசன்பதிலொன்றுங் கூறாமல் மௌன முற்றிருந்தார். அப்போது கோசாயிகள் தங்களிலொருவனை யனுப்பி தாசருடைய நடவடிக்கைகளைக் கண்டு தெரிந்துக்கொண்டு வரும்படி அவனுஞ்சென்று காட்டையடைந்து தூரத்தில்நின்று தாசரைக்கண்டு அவர்கையில் வில்லம்புகளைப் பிடித்துக்கொண்டு வேட்டைவிளையாடிக்கொண்டிருப்பதையறிந்து அந்தகோசாயி இதென்ன இவர் பரமபாகவத சின்னங்களுடன்விளங்கின போதிலும் கிராதகனைப் போல பறவைகளைக் கொல்லுந்தொழிலில் கவனித்திருக்குங் காரணமென்னமோ தெரியவில்லையே யென்று கருதிக்கொண்டே தன்னவர்கள் யிருக்குமிடத்தை யடுத்து தாசருடைய நடவடிக்கையைத் தெரியப்படுத்த அக்கோசாயிகளுக்குத் தலைவராகிய மகந்து அரசனிடத்திற்சேகி ஓ பூபாலனே உமது குருநாதனுடைய நடவடிக்கைகள் சரியல்லவென்று எனதுசிஷனு லறிந்தேன் அதென்னவெனில் சுத்த சத்வகுணத்தை யடைந்தவர்போல பிணயித்துச் சகலரையும தனனை வணங்கும்படியான நம்பிக்கையுண்டாகச் செய்துக்கொண்டுபரிசுத்த ஆத்மாவைப்போல விளங்குகின்றாரே அன்றி இப்போதுசொல்லிய சாந்தமும் ஜீவகாருண்ணியமும் அவருக்கு அணுவளவேனு மில்லவேயில்லை சொருபமாத்திரம் பசுவைப்போல காட்டின போதிலும் புலியைப் போன்ற நடவடிக்கை விளங்கிக்கொண்டிருக்கின்றன அதென்ன செய்கையெனில் ஜீவகாருண்ணியமும்பூததயைப் பச்சாத்தாபமென்ப தணுவளவேனு மின்றி பறவைகளைக்கொன்று திரியுமவனை ஆசாணுகக் கொண்டு அவன்திருவடிகளில்விழுந்து மந்திரோபதேசம் பெற்றுக்கொண்டீர் தாங்களவனிடம்,என்ன மகுத்துவத்தைக் கண்டோ வயிற்றைவளர்த்துக் கொள்ளும் நிமித்தியம் அவனிந்தவேஷம் போட்டுக்கொண்டுதிரிகின்றானே யன்றி உண்வமயிலே யனுக்குக் ஞானபக்தி வைராக்கிய மென்பது கிஞ்சித்தேனு மில்லை. விநோதன் இவரே சொர்னத்தைப்போன்றமெய்யன் இவரே தேவேந்திராதி தேவர்களுக்குந்துய்யன், இவரே யாவருந் தொழுமையன். இவரே சகலருக்கும் அபயஸ்தங் கொடுக்குங்கையன், இவரே செந்தாமரைப்பாதன், இவரே வேதத்திற்கு மெட்டாத அநீதன், இவரே முத்தியளிக்கும் போதன், இவரேதொண்டர்களுக்கு நாதன், இவரே முத்தியளிக்கும் மாதவன், இவரே எங்கும்நிறைந்த ஆதவன், இவரே வைராக்கியசீலர் இவரே தாரகமந்திரத்திற்கு மூலர் இவரே முத்திக்குவித்தாகிய முதல்வன் இவரே ராணுவதேவியின்புதல்வர், இவரே சர்வத்திலுஞ் சிறந்தவர், இவரே பக்திக்குப் பறந்தவர்,இவரேபக்திதாரதமியத்தில நிறைந்தவர், இவரே அடியார்க்கெளிய னெனக் குறைந்தவர் யென்று பற்பலவாறு புகழ்ந்துக்கொண்டாடிக் கொண்டிருக்கக் கோசாயிகளும் மகந்தும் அந்த ஆச்சரியத்தைக்கண்டு திப்பிரமை கொண்டு பயந்து அரசனைக்காண நாணமடைந்து தாசருடைய மகுத்துவத்தை மெச்சிக் கொண்டவர்களாகித் தங்களிருப்பிடத்தை நோக்கி நடந்தார்கள். அப்போது அரசன் தன்குருநாதருடைய பக்தியையும் மகுத்துவத்தையுங் கண்டு மெத்த வியப்படைந்து அவர்திருவடித் தாமரைகட்கு வந்தனம்புரிந்து விடைபெற்றுக்கொண்டு தன்னகரத்தை யடைந்தார். உடனே தாசர் சிஷர்களுக்குப் பக்தி செய்யும்படியான சாத

னங்களைப் போதித்துப் புனிதர்களாகும்படி கிருபாநோக்கம் புரிந்துக்கொண்டிருந்தார்.

இந்தப்படிக்கு தாசர் தன்சிஷர்களுக்கு பக்திமார்க்கங்களை போதித்துக் கொண்டிருக்கையில் கோலாபுரத்தில் வசிக்குங் கிருகஸ்த னொருவன் தாசருடைய மகுத்துவத்தைப் பலவாறு ஜனங்கள் சொல்லிக்கொள்வதைக்கேட்டு அவரைக்கண்டு சேவிக்கவேணுமென் றெண்ணங்கொண்டு ஒருநாள் தன்னூரைவிட்டுப் புறப்பட்டு தாசர்வசிக்குங் கானகத்தையடைந்து அவரைக்கண்டு பணிந்து ஓசுவாமி! சத்குருநாதரே, யான் வசிக்குங் கோலபுரத்திலுள்ள ஜனங்கள்யாவரும இலக்குமியை உபாசனைசெய்துக்கொண்டிருப்பார்கள். அதேதெனில் இராமநாம மானதுஅத்தனைசிறந்த நாமமல்ல அந்தியகாலத்திற் சொல்லும்படியான நாமமாதலால் லட்சுமியைத் துதித்தெப்போது மிருப்பார்கள். ஆகையால் யானுமங்பப்படியே லட்சுமி உபாசனை செய்துக்கொண் டிருப்பவனாகும் அன்றியும் தங்களைச்சேவித்த ஜனங்கள்பலவாறு தேவரீருடைய மகுத்துவத்தைச் சொல்லிப் புகழ்வதைக்கேட்டு யானுந்தங்களை சேவிக்க வேணுமென்றஅவாமிகுதியால் இங்குவந்து சேவித்தேன் சேவித்தும் ஆனந்தமடைந்தேனென தாசர் குலுக்கென்றுசிறித்து ஓகிரகஸ்தனே! பரப்பிரமமே ஸ்ரீராமனாகும் லட்சுமியோ அப்பிரமத்திற்குச் சாயையாகி யிருப்பவள் இவ்வுலகத்திலு மெவ்வுலகத்திலும் சஞ்சரித்துக்கொண்டு சில வருஷங்களிருந்து உடனே அவர்களைவிட்டுநீங்கி வேறு சிலரையடுத்து அவர்களுக்கு உச்சாகத்தையளித்து ராமத்தியானத்தைச் செய்யவொட்டாமல் பராசத்தி யாகையால் தன்மாயையினால்யாவரையுங் கட்டுபடச் செயயுமவளாகும் ஆதலால் ஸ்ரீராமனை பஜனைசெய்யும் பிராணிகள் அப்படிக்கிச்சேரவொட்டாமலும ராமநாமத்தைத் துதிசெய்யாமலும்பொருளின்மதத்தா லெவரையும் அலட்சியஞ்செய்துக்கொண்டு மிருப்பவர்களாகும்என்று சொல்லிக்கொண்டே கோலாபுரத்திற்குப் போகவேணுமென்று ஸ்ரீராமருடைய கட்டளையைச் சிந்தித்துக்கொண்டுசிஷர்களையுங்கூட சேர்த்துக் கொண்டு கோலாபுரத்தைச்சேர்ந்து மெத்தவும் பக்திபூர்வமாக நித்தியமுந் திருத்தியாகவும் ஸ்ரீராமருடைய சரித்திரத்தைவெகுசிரத்தையுடனுங் காலக்ஷேபஞ் செய்துக்கொண்டு மிருப்பதைக்கேட்டு ஞானபக்தி வைராக்கியங்களும்மெத்தவுண்டாகி ஆர்த்தியுடனிருந்தார்கள்.

அதில் வேணுபாயியெனுங் கைம்பெண் ஸ்ரீராமருடைய குணானுபவத்தைக்கேட்டுமெத்தகாணயத்துடன்வந்து தாசர் திருவடிகளில்விழுந்து அத்திருவடிகளைவிடாது கெட்டியாகப் பிடித்துக்கொண்டு எனதுகுலதெய்வமாகிய பரமகுருநாதரே அடியாளை எவ்விததிலேனுங் கைக்கொண்டு ஆதரிக்கவேணுமென்றுவேண்ட தாசர்அந்தவேணுபாயியைப்புனிதனாகச்செய்யவேணு மென்றோர் ஏகாந்ததலத்திற்கந்த வேணுபாயியை யழைத்துச்சென்று அவளுடைய நல்லகுணத்தைக்கண்டு அம்மாதுக்குத் தாரகமந்திரத்தை உபதேசித்துச் சுபங்களை அடையும்படி ஆசீர்வதித்தார். அம்மங்கையும் அடியாள் இன்றல்லோ புனிதையானேனென்று தாசருக்கு முக்காலும் வலம்புரிந்து உடல்பொருள் ஆவியெனனும் இம்மூன்றையும் அவருக்கர்ப்பணஞ்செய்து அன்றுமுதற் கொண்டு பலவிதச் சித்திரான்னங்களைச் செய்துப் பிராமணர்களுக்கு இட்டும் தாரகமந்திரத்தை சதாகாலமுந் துதிசெய்துக்கொண்டு மிருந்தனன்.

இப்படி அந்த வேணுபாயம்மாள் தினந்தோறு மதுரமானப் பிரசாதங்களைச்செய்துபரிமாரிக்கொண்டிருக்கையில் சிவாஜிமகாராஜனும்தன்னுடையசேனைகளுடன் புறப்பட்டு நாட்டைவிட்டுக்காட்டையடைந்துக் குருநாதனைக்கண்டு பலபூஜா திரவியங்களைக்கொண்டு அவர் திருவடிகளுக்கு அர்ச்சித்து அவருடன் புசித்து குணானுபவஞ் செய்துக் கொண்டிருக்கையில் ஆஞ்சநேயர் பிரசன்னராக அவரைக்கண்டு யாவரும் சேவிக்கவேணு பாயியும் சேவித்து அவருடைய மனோபரவ பரிசுத்தத்தையும் பக்குவத்தையுங் கண்டு மெய்சோர்ந்து விழக்கண்டதாசர் அச்சோர்வை மாத்தி எழுப்பி இத்தனை நாளைக்கேனும் அதிகரசமாய் கிர்த்தனைகளைப்பாட யாவருங்கேட்டு மெய்மறந்து ஆஹா என்னபக்திரசம் என்ன ஆனந்தம் என்றுமனதுகரைந்து அனைவரும் தாசர்திருவடியில்விழுந்து வெகுவாகத்தோத்திரம்புரிய அவர்களுடையயோக்கியதையை யறிந்துத் தக்கபடி யுபதேசித்து மூன்றுநாள் கோலாபுரத்தைவிட்டு தாசர் புறப்பட்டபோது வேணுபாயியும் ஓசுவாமி அடியாளும் தேவரீர்பின்னே கானகத்திற்கு வருகிறேனென்று வேண்டிக்கொள்ள அம்மங்கையைநோக்கி தாசர்சொல்லுகின்றார் ஓவேணுபாயி நீயென்பின் வருகிறேனென்று சொல்லுவதும் நானுன்னை யழைத்துப்போவதும் ஞாயமல்ல அன்றியும் என்னுடன் சங்கமஞ்செய்துக் கொண்டு இருப்பதெப்படியெனில் இறவாதமுன்னே இறந்திருப்பதுபோல விருக்கவேணும் ஆகையால் நீ என்னைச் சதாகாலமும் என்றால் இருக்கும்போதும் நடக்கும்போதும் சர்வதேச சர்வகாலத்திலும் தைலதாராவிச்

சின்னமாய் இடைவிடாது தியானஞ்செய்துகொண்டு
வீட்டினிலிருப்பாயாகில் சகலபாபங்களும் பூர்வகர்ம
ங்களும் நசித்துச்சில நாளைக்குள் மோக்ஷ சாம்பிராச்
சியத்தை யடைவாயென்று சமாதானஞ்சொல்லி யனு
ப்ப அந்தவேணுபாயியும் குருநாதன்சொற்படி கோ
லாபுரத்தைக் கடந்து ஷாபுரத்தையடைந்து தன்வீட்
டைச்சேர்ந்து அன்றுமுசல் தனக்கெந்த நாமத்தைக
குருநாதன் உபதேசித்தாரோ அந்தநாமத்தை எப்
போதும் இடைவிடாமல் தியானித்துகொண்டிருந்து
சிலநாள் கடந்தபின் யொருநாள் அந்தவேணுபாய்
வீட்டைவிட்டு வெளிப்பட்டு ஷாபுரத்தைக் கடந்து
கானகத்தையடைந்து தாசர் திருவடிகளிற் பணிந்து
அவரால் ஆசிபெற்று விடைதரக்கொண்டு காட்டைக்
கடந்து ஷாபுரத்தையடைந்து வீட்டிற்சேர்ந்து பக்தி
செய்துக்கொண் டிருப்பாள் இந்தப்படி அந்தவேணு
பாய் அடிக்கடி தகுநாதனைச்சேவித்துக்கொண்டுவரு
கையில் வழக்கப்படி யொருநாள் குருநாதனிடஞ்செ
ன்று பணிந்து எழுநது அவரனுமதியைப் பெற்றுத்
திரும்பி ஷாபுரத்து வீதிமார்க்கமாய் வருகையில்
அங்குள்ள ஜெனங்கள் வேணுபாயியைக் கண்டு இம்
மங்கையென்ன இரண்டு நாளைக்கொருதரம் துணையா
ருமின்றித் தனித்துப்போய் வருகின்றாளே இவளெ
ங்குபோய் வருகிறாளோ தெரியவில்லையென்று அதி
லொருவன் இம்மங்கை மெத்தபக்தியுடையவ ளாத
தால் அருகிலிருக்கும் காட்டினில் வசிக்கும் ராமதா
சரையடுத்து யவரிடம் உபதேசம் பெற்றுக்கொண்ட
வளானதால் இரண்டுநாளைக் கொருதரம் சென்று ஆ
சானைக்கண்டுச் சேவித்துக்கொண்டு வருகின்றாளென
வேறொருவன் ஓஐயா இம்மாதுபோய் வருகிறகார
ணத்தை யறியாமலே இவள்பக்தியுடையவளென்றும்
ஆசானைக்கண்டு சேவித்து வருகின்றாளென்றுஞ் சொ
ல்லுவது ஞாயமல்ல இவள்போய்வருகிற ரகசியமெ
னக்குத்தெரியும் அதென்னவெனில் இவள் மங்கைப்
பருவமடைந்த சிலநாளையிலே இவளுக்கு நாயகனிற
ந்துவிட்டான் அதுமுதலிதுவரையிலும் எங்கும் வெ
ளிப்படாமல் தாய்தந்தைகளுக்குட்பட்டு வெகுசீலவ
தியாகவிருந்தாள் இப்படிக்கிருக்கையில் ராமதாசர்
சிலநாளைக்குமுன் நமதூருச்குவந்து ஸ்ரீராமகுணானு
பவஞ்செய்துக் கொண்டிருப்பதை இம்மங்கைகேழ்வி
ப்பட்டுத் தாய்தந்தைகளி னனுமதியைப் பெற்றுக்
கொண்டு குணானுபவம் நடக்குமிடத்திற்கேகி தாச
ரைக்கண்டு மயங்கி அவரைக்கணவனாகயடையவேணு
மென்றுக் கருத்துக்குள் வைத்துக்கொண்டு வெளி
க்கி அவரையாசானாகவும் தான்சிஷியாகவும் மதிக்
கும்படிப் பலருக்குங் காட்டிக்கொண்டு மதப்பிடித்

துத் திரியுமிவளைப பக்தியிற் சிறந்தவளென்று நீசொ
ல்லியது எந்தமதியைக்கொண்டோ இப்படியுஞ் சொ
ல்லுவாருமுண்டோ இவளிடமெந்தநன்னடக்கையை
க்கண்டோ என்னுடைய மொழிக்கிரண் டுண்டோ
வென்று பொறாமையினால் கூறினன் (சுலைப்பார்கலைத்
தக்கால் கல்லுங்கரையு) மென்ற பழமொழியைப்
போல அந்தமொழிகளை யங்குள்ள ஜெனஙகள் யாவ
ருங்கேட்டு உண்மையாயிருக்கு மென்று நம்பி யாவ
ரும அந்தவேணு பாயியையும் அவள்தாய்தந்தைகளை
யுந் தூஷிக்கத்தலைப்பட்டார்கள்

ஆகையால், ஓஅரசனே! இப்போதே என்பின்
தாங்கள் வருவீராகில் அவனிருக்குங் கோலத்தை
ரூபில் கண்டுக்கொள்ளலாம். ஆகையால் தடையின்றி
வரவேணுமென்று சொல்லி அரசனை யுடன்படுத்திச்
சேனைகள் புடைசூழ யழைத்துக்கொண்டு நாட்டை
விட்டு காட்டையடைந்து தாசருக்குச் சமீபத்தில்நெ
ருங்கித் தன்னை நோக்கிவருகிற அரசன் முதலான
வர்களைக்கண்டு தாசர் பற்பல அம்புகளை விடுத்து அ
னேகம்பரவைகளைக் கொன்றார் அப்பரவைகள் தங்
கள்மீது அம்புகள்பட்டு பிரக்ஞைகெட்டுப்பூமியின்மீது
விழுந்துப் பிராணனைவிட்டதுகள். அப்போது தாசர்
பூமியின்மீதுவிழுந்து உயிரைத்துறந்த பரவைகளைத்
தன் கரங்களா லெல்லாப் பரவைகளையுஞ் சேர்த்தெ
டுத்துக்கொண்டு இப்படியும், அப்படியும், உலாத்திக்
கொண்டிருப்பதைக் கண்டு அரசன் குருநாதன் சமீ
பத்திற்சென்று சகலவித பூஜாதிரவியங்களாலும் அவ
ருக்குச் சோடச உபசாரங்கள்புரிந்து சந்தோஷசாக
ரத்தில் மூழ்கியிருந்தார்.

அப்போது தாசர் சாதுவேஷங்கள் புனைந்துவந்
திருக்குங் கோசாயிகளைக் கண்ணுற்று மௌனமாயி
ருக்கையில் மஹந்து தாசரைநோக்கி ஓபரமபாகவத
ரே! தாங்கள் பரவைகளைச் கொல்லுவது துஷ்டமார்
க்கம் அன்னியிலும் காலமுடிவு நேரிடுஞ் சந்தர்ப்பத்
தில் நரகப்பிராப்தியை யடையும்படியாக நேரிடும்
ஆகையாலிக்கொடிய மார்க்கத்தைவிடத் தக்கதென
தாசர் ஓமஹந்துவே! இவ்வுலகத்தினிற் பல்ஜீவ ஜெந்
துக்களையுங் கொல்லுமவன் ஸ்ரீராமனேயன்றிவேறொ
ருவர் இக்கொடிய செய்கைசெய்வதால் நீர் நாமென்
னும் பேதத்தை யொழித்துச் சதாகாலமும் ஸ்ரீராம
ரைத் தியானஞ்செய்து மேன்மையானபதவியைஎளி
தினிலடையலாம். அன்றியும் சிருஷ்டி கர்த்தனே!
லயஞ் செய்வதற்குக் கர்த்தாவாகும் இதைநன்றாயோ
சித்துப் பாருங்கள். அன்றியும் லயஞ் செய்வதற்குக்

கர்த்தனனவனே சிருஷ்டிப்பதற்குங் கர்த்தனுவான். ஆகையால் கோசாயிகளுக்கெல்லாங் குருவாகியமெகந்துவே! தாங்கள் சாதுசஜ்ஜனரும் பரமபுருடரும் அதிகமகுத்துவ முடையவரும் ஜீவன்முக்தரும், புனிதரும், வைதீகரும், ஆகியதாங்கள் ஜீவகாருண்ணியமும் பூததயை பச்சாதாபமுடையவரும் சிருஷ்டிஸ்திதிலயம் இம்மூன்றையும் மனதில் நினைத்தமாத்திரத்தில் க்ஷணசிருஷ்டி க்ஷணஸ்திதி க்ஷணலமென்பதையுஞ்செய்ய வல்லவராதலால் என்னுடைய அம்புகள்பட்டு மடிந்துபோயின பரவைசளின்மீதுகிருபாநோக்கம்வைத்து உயிர்பெற்றெழச் செய்யுமையா? பெரியோரே, என்றுமிகவும் வேண்டிக்கொண்டார். அதற்கந்தமகந்து பறவைகளை உயிர்பெற்றெழச் செய்யும் மகுத்துவமும் வல்லமையும்நமக்குண்டோ? இதுமகாபுருடன்செய்யுங் காரியமன்றே. எளிதிலிக்காரியஞ்செய்வதற்கு நம்மைப்போன்ற பாமரர்களாகுங் காரியமோ? அன்றியும் சிருஷ்டிக்குந்தொழிலைப் பிரமதேவன் செய்யவல்லவன் காப்பாத்துந் தொழிலை மகாவிஷ்ணு செய்யத்தக்கவன் க்ஷீணிக்குந்தொழிலைச்செய்யச் சிவபெருமான் தீரபுருடனுகவும் மும்மூர்த்திகளும் முத்தொழில்களையுஞ்செய்ய வல்லவர்களாகவிருக்கவிது நம்மாலாகாதசெய்கையென்றுத் தனக்குத்தானே யோசித்தும் பதில் சொல்லாமல் மோனமடைந்திருந்தார்.

இப்படிக்கெல்லாம் யோசித்துச் சிந்தித்து யாதொன்றும் தெரியாத மூடனை இவர்மெத்த சிலாகித்துச் சொல்லியதைக் கருதிமெத்தவும் விசனப்பட்டுக்கொண்டிருக்கும் மகந்துவின்கெட்டயெண்ணத்தைபுணர்ந்து தாசர்சிவாஜிராஜனை நோக்கித் தான்செய்யப்போகிற ஆச்சரியச் செய்கையைக் குறிப்பாலுணர்த்தி சந்தேகமடையாமல் இப்பறவைகளை அக்கினியிற்போட்டுச் சுட்டுவிடுவது மெத்தநன்றென்றுகருதி அக்காட்டிலிருக்கும் உலர்ந்த கட்டைகளை ஒவ்வொன்றுகப் பொரிக்கிச் சுமார் மூன்றுவண்டி எரிகரும்புகள்சேர்த்து அக்கினிமூட்டி அவ்வக்கினியில்எரிகரும்புகளை யெல்லாம் போட்டுச்சுமார் கால்மயில்தூரத்திற்கப்புறம் யாவருமிருக்கும்படி. அனல் வீசுவதால் அவ்வக்கினியின்சமீபத்திலெவரும் போகத் தடைப்பட்டன. அப்போதுதாசர்விரைவினிலப்பறவைகளை அந்தயக்கினியில் ஒவ்வொன்றுகப்போடுகையில் அப்பறவைகளுக்குயிருண்டாகி அக்கினியில்நின்றும் எகிரிப்போயின, அதைக்கண்டு அரசன்முதல் யாவரும் ஆச்சரியப்பட்டு மாச்சரியங்கெட்டு ஜெயம் ஜெயமென்று ஓசைமிகுத்திட நன்றாகக்கூடிக் குரலிட்டுப்பாடியாடி பகவானைநாடித் தங்களுக்குள்தாஙகளே பரமானந்தமடைந்து தாசனைப்புகழ்ந்து மகிழ்ந்து கோசாயிகளையும் அவர்களுக்குக் குருவாகிய மகந்தையும் இகழ்ந்து இவரே! புருஷோத்தமன் இவரேசாது சத்தமன், இவரே மெஞ்ஞானயோகி, இவரேமூத்திகாந்தையை யடையும்போகி, இவரே சகலத்தையும் விடுத்தவைராகி, இவரே சாக்ஷாத்பகவான்; இவரே பூரணச்சந்திரனை யொற்றமுகவான். இவரே பரமபதநாதன், இவரே சொல்லுதற்கறிய.

அதெப்படியெனில்சிலர் இம்மாது இதற்குமுன் சீலவதியாக வீட்டைவிட்டு வெளிப்படாமல் இருந்துக்கொண்டு கௌரவத்தையும் கற்பையும் காப்பாத்திக்கொண் டிருப்பதைப்போலயிராமல் இப்போது வெள்ளாட்டியைப் போல வீதிவீதியாய்த் திரிந்துக்கொண்டிருக் கின்றுளே என்றூர் சிலர்பட்டிமாட்டைப்போல வெட்கங்கெட்டுக் கெட்டகுணமாகிகாமியாகி வீட்டிற்குங் காட்டிற்குந் திரிந்துக்கொண்டிருக்குன்றுளேயென்பார் சிலர்ராமதாசரென்று பேர்வைத்துக்கொண்டு அனுவளவேனும் ஞானபக்திவைராக்கிய மில்லாதவனைச் சாதுவென்றடுத்து சிவாஜிமகாராஜன்முதல் பலபாகவதர்கள் எப்படிஉபதேசம்பெற்றுக்கொண்டார்கள் மேலும் அவனிடத்திலெந்த மகிமையைக்கண்டு சிஷரானூர்களோ யென்பார்சிலர் இம்மாதைப் பார்த்தால் விபசாரத்தனஞ் செய்யும்வளாகத் தோன்றவில்லையே? என்பார்சிலர், இம்மங்கை பதியினிடத்தில் மெத்தபக்திசெய்துக் கொண்டிருந்தவளாச்சுதே? அப்ப்டிப்பட்ட உத்தமிக்கு இப்போதிந்த துற்குணமுண்டாவதற்குக் காரணம் யாதோ? யென்பார்சிலர், இவ்வனிதையின் னடைநொடி பாவங்களைப் பார்க்க விபசாரஞ்செய்யுமவளாகக் காணப்படவில்லை யென்பார்சிலர் இத்தெரிவைமெத்தசாந்தமும் பூததயையும் ஜீவகாருண்ணியமு முடையவ ளாகத் தோன்றுகிறது யென்பார்சிலர் இப்பெண்கொடியின் விதிவச மெப்படியோ அப்படியே நடக்குமென்பார் இந்தப்படியாக அவ்வூரில்வசிக்குஞ் செனங்க ளெல்லவரு தங்களுக்கு மனதில்தோன்றியடி பேசிக்கொண்டிருக்க வேணுபாயி கேட்டுக்கொண்டே தன்னகத்தையடைந்து யாதொன்றுமறியாத நம்மைவியாபாரியென்றும் துற்குணமுடையவ ளென்றும் பலபேர்பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறூர்களே! இதற்குக் காரணம் யாதோவென்றுன்னித் தன்னைத்தானே நிந்தித்துக்கொண் டிருக்கையில் இந்தவேணுபாயியின் தாய் தந்தையர்க ளிந்தச்செய்தினைக்கேட்டு மெத்த விசனப்பட்டவர்களாகி குமாரத்தியை அழைத்து அம்மா? வேணுபாபி, இன்றுமுதல் கானகத்திற்குப்போகாம

னும் வீட்டைவிட்டு வெளிப்படாமலு மிருக்கக் கடவாய் அப்படிக்கி நீயிராமல் எங்கள் வார்த்தையைத் தள்ளி வனத்திற்குச்சென்று குருநாதனை சேவித்து மறுபடியும் வீட்டிற்குத்திரும்பிவருவையாகில்உன்னை எளிதில்விடமாட்டோ மென்று பயமுறுத்தினார்கள். அதற்கம்மாது அணுவளவேனும் பயப்படாமல்ஆண்டவன் செயலின்படி யாகட்டுமென்று திடங்கொண்டு மறுநாட்காலையிலெழுந்து ஸ்நாநட்டானங்களைமுடித்துப் பூஜாதிரவியங்களை யோர்தட்டிளி லேந்திக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுக் காட்டையடைந்து குருநாதனைக்கண்டு சேவித்து விதிப்படி யவரைப்பூசித்து அவரிடம் விடைபெற்றுகொண்டு காட்டைவிட்டு நாட்டை யடைந்துத் தன்வீட்டைநாடி வந்துக்கொண்டிருந்தாள்.

இதற்குள் தாய்தந்தையர்கள் புதல்வியைத்தேடிக் காணாமையால் நமதுவார்த்தையை லக்ஷியஞ்செய்யாமல் கானகத்திற்குப் போனாலல்லவா இப்படிப்பட்ட துஷ்டபெண்ணை வைத்துக்கொண்டு நாம் அவுமானப்படுவதைப் பார்க்கிலும் இவளைக்கொன்றுவிடுவதால் நமக்குக் கெட்டபேரும் அவுமானமும் நேரிடாதென்றுத் திடஞ்செய்துக் கொண்டு அன்னத்தில் விஷத்தைகலந்து சித்தமாய் வைத்துக்கொண்டிருக்கையில் வேணுபாயிவந்துத் தாய்தந்தையர்களை வணங்கிநின்றாள் அப்படிவணங்கின புதல்வியை நோக்கித் தந்தையானவர்சொல்லுகின்றார் ஓஅம்மாவேணுபாயி இன்றுமுதல் வீட்டைவிட்டுன்னை யெங்கும் போகவேண்டாமென்று யான்சொல்லி யிருந்தும் என்சொல்லைக்கடந்து நீ வீட்டைவிட்டுப் போனாயல்லவா எங்களுக்கு அவுமானந்தந்தாயல்லவாவென்றுகோபித்து அதோயிருக்கும் அன்னத்தைப் புசிப்பாயென அந்தப்படியே வேணுபாயியும் விஷங்கலந்த அன்னமென்றுக்கவனியாமல் சாதாரண அன்னமென்றே கருதி அதைபபுசித்துத் திரித்தியடைந்தச் சிறிதுநேரத்திற்கெல்லாம் வயிற்றிலெறிச்ச லுண்டாகிய மெத்தவேதனைசெய்ததால் அவ்வேதனையைப் பொருக்கமுடியாமலந்தவேணுபாயி ஓகுருநாதரே தேவரீரே என்குலதெய்வம் தேவரீரேபகவான் தேவரீரே எனக்குகந்தப்ரமகுருநாதர் தேவரீரே என்தாய்தந்தைகள் தேவரீரே பந்துவென்றும் நம்பித்றுதி செய்துக்கொண்டு சதா காலக்ஷேபஞ்செய்யு மடியாளைச் சீக்கிரம்பாதுகாக்கும்பொருட்டு விரைவினில்வந்து ரக்ஷிக்கவேண்டும் அன்றி ஓபரமயோகீஸ்வரரே இதுகாலபரியந்தம் சம்சாரியாகவிருந்த அடியாளைவிபசாரியென்னும்அபசாகியென்றும் இவ்வூர்ஜெனங்கள் தூஷிக்க அதனைக் கேட்டு என் தாய்தந்தையர்கள் அன்னத்தில் விஷத்தைக்கலந்து கொடுத்தார்கள் அதையான் தடைசெய்யாமல் புசித்தபடியால் எனக்கிவ்விதகஷ்டம்நேரிட்டிருக்கின்றது இந்தக்கஷ்டத்தைச் சீக்கிரம் தேவரீர் வந்துதீர்த்துச் சுகமடையச்செய்யவேண்டும் அல்லது தேவரீர் திருவடிக்தோபயந்து கொளிலேனுஞ்சேர்த்துக்கொள்ள வேணுமென்றுத் துதிசெய்துக் கொண்டே நிர்மலமனதுடன் பயமின்றிப் பிராணனை விட்டான் இந்தச்செய்தியை தாசர் தன்னுடைய யோக திருஷ்டியினா லுணர்ந்துக் காட்டைவிட்டு அதிவிரைவாகவந்து வேணுபாயியைக்கண்டு மெத்தவும்ஆர்த்தியாக ஸ்ரீராமகீர்த்தனஞ் செய்துக்கொண்டிருந்தார்.

அதெப்படியெனில் ஓரகுராமா தசமுகனைவதைத்தஜெயராமா தசரதராமா ஜானகிவாமா நீ இங்கு விரைவினில்வந்து இம்மங்கையின்வயிற்றினிலிருக்கும் விஷத்தை யிப்போதே பரந்தோடச் செய்யுமென்று சொல்லிக்கொண்டே யவர்கரத்தினிலிருக்கும் பிரம்பினால் அப்பிரேதத்தின்மீது தாக்கினார் உடனேயம்மாது நித்திரையில்நின்றும் விழித்தவளைப்போல உயிர்பெற்றெழுந்து தாசர் திருவடிகளில் விழுந்துபணிந்தெழுந்து ஓசுவாமி விஷத்தை அன்ளத்திற் கலந்து இட்டு என்னைக்கொல்ல வெத்தனித்த யிவர்களைத் தாய்தந்தையர்களென்று எப்படி நம்புகிறது இனி யிவர்களுடன் கூடியிருக்கயெனக்கு அணுவளவேனும் சம்மதி யில்லாதபடியால். தேவரீர் தயவுசெய்து, அடியாளையுந் தங்கள்பின்னழைத்துப் போகவேணுமென்று வேண்டிக்கொள்ள தாசருஞ் சம்மதிக்க அந்த வேணுபாயி காமக்குரோத லோபமோகமத மாச்சரியங்களை யொழித்து மூன்றாசையையும் விடுத்துச் சுகமாகக் குருபின்சென்று, சாபலக்கிராமத்தைச் சேர்ந்து அங்கு சத்துக்களாகிய சிஷர்கள் கூட்டத்தைக் கண்டு அந்தவேணுபாயி மெத்தப்பிரியமடையகண்டு தாசர் கிருபாநோக்கம் புரிய பக்தியிற்சிறந்த, அவருடைய அநுக்கிரகத்தினாலே பரமசாந்தத்தை வகித்து தொண்டுசெய்துக் கொண்டிருக்க, இதற்குள் சிவாஜீ மகாராஜன் பலவிதபூஜா திரவியங்களுடன் பரிவாரங்கள்சூழக் குருவைச் சேவிக்கும்பொருட்டுவந்து தாசரைக்கண்டு பணிந்து சோடச உபசாரங்களாலும் பூசித்து வணங்கிநிற்க தாசர் அரசனையாதரித்துப் பலவாசிகள்கூற அப்போதுசிஷர்கள் பிக்ஷையெடுத்துவந்து கொடுக்க ஆகாபாயியும், வேணுபாயியும் அதனைப் பெற்றுக்கொண்டு சமைத்துப்பலபதார்த்தங்களுடன் தயார்செய்து அரசனுடன்சிஷர்கள் முதலானோருக்

கும் பரிமார தாசரும்புசித்து திருத்தியடைந்து அக்கணமே ராஜயோகத்தில், எழுந்தருளி யிருந்தார்.

அதெப்படி தாசர்ராஜயோகத்தி லெழுந்தருளி யிருந்தாரெனில் திருத்துழாய் செடியினிடத்தில் சிஙகாதனமொன்று செய்து, அச்சிங்காதனத்தின் மீது தாசரெழுந்தருளி யிருக்க, அங்குள்ள சீஷர்கள் முதலானோரும் பரிவாரங்களாக அப்போதுசீஷர்கள்ராமகதையை பலவாறு பாடியாடி ஆகாபாயியுங்குணுனுபவஞ்செய்தார் யாவரையும்நோக்கி நீங்களெல்லோரும் தனித்தனி முறையாய்ப் பாடவேண்டுமென்றுக் கட்டளையிட அந்தப்படியே ஒவ்வொருவருமமுறைப்படிப் பாடினார்கள் அச்சமயத்தில் சீஷர்களும் கல்யாணனும் ஆத்துமக்ஞானத்தை போதிக்க சிவாஜிமகாராஜன்கேட்டு ஆனந்தக்கடலில், மூழ்கினவனுகி அப்தேசமாதி யடைந்தார் அவ்வரசன் தன்னைமறந்துஇரண்டுநாளிருக்கிறபோதுகல்யாணனால்சொல்லப்பட்ட ஆத்துமக்ஞான போதமானது சம்பூரணமாயினஅன்றியும் அந்தக்கல்யாணன் ஒருநாளிரவெல்லாம் எழுதிக்கொண டிருந்தபோது, அக்கல்யாணனுக்கிரண்டு கண்களுங் குருடாய்ப்போயிற்று அதையறிந்துதாசர் தன்னுடைய மகுத்துவத்தினல், அக்கல்யாணனுக்கிரண்டு நேத்திரங்களுங் கொடுத்தார் அப்போது கல்யாணன் தனக்கு நெத்திரங்கள் வந்த மாத்திரத்தில், மெத்தவும் பரமானந்தமடைந்துஆசானைவெகுவாய்த் துதிசெய்துக் கொண்டிருந்தான், இந்த விந்தையைக் கண்டு அரசன் குருநாதனைப்பணிந்து என்றுமில்லாத பரமானந்த மடைந்திருக்க தாசர் அரசனுக்குஆத்துமபோதமெனுங் கிரந்தத்தை அதிகப்பிரியமாகக்கொடுத்தார் அக்கிரந்தத்தி னப்யாசத்தால், அரசனுக்கு இவ்வுலகத்தினில் க்ஞானபக்தி வைராக்கிய உபாசனையதிகரித்து, முமுட்சுயிருக்கவேண்டிய லட்சணங்கள் யாவுமமைந்து யிருக்கவேண்டுமென்றும்சொல்லிதாசபோதமென்னுங்கிரந்தத்திலிருக்குஞ் சுலோகங்களின் தாத்பரியங்களை யெல்லாஞ் சொல்லக்கேட்டு அரசன் தன்னரண்மனையைச் சேர்ந்து குருநாதன் சொல்லியபடி பக்திவைராக்கியத்தில் தன்மனதைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

இவ்வாறு அரசன் சிலநாள் ஞானபக்திவைராக்கியத்தில், முக்கியமாக மனதைச்செலுத்திக்கொண்டிருந்து, ஒருநாள் குருநாதனை சேவிக்க வேணுமென்றக்குறையால், பரிவாரங்கள்சூழ வனத்தைநாடிச் சென்று தாசரைக்கண்டு சேவித்து பூஜாதிரவியங்களாலர்ச்சனையாராதனை முதலானதுகளும், நடத்தி சற்றுநேரம் குணுனுபவஞ் செய்திருந்து குருநாதனிடம் விடைபெற்றுத்தன்பரிவாரங்கள் சூழநகரத்தையடைந்து, அந்நாள்போக்கி மருநாள்காலையி லெழுந்துஸ்னநட்டானங்களை முடித்து பூஜாகிரகத்திற்குள் நுழைந்து குருவைநினைத்து, மானஸபூசை செய்து, சோடசோபசாரங்களும், நடத்தி பூஜாகிரகத்தைவிட்டு வெளிப்பட்ட மாத்திரத்தில் கா கா யெனும் ஆஸ்தான பண்டிதன் வழக்கப்படி சம்ஸ்க்ருதபாகவத அர்த்தத்தைச்சொல்லிக் கொண்டிருக்கையில்,அரசன்கேட்டு ஆனந்தித்துக் கொண் டிருப்பார் இப்படி கேட்டுக் கொண் டிருந்து ஒருநாள் அரசன் பூஜாக்கிரகத்திற் குட்சென்று தேவபூசை குருபூசை முதலானதுகளும் பக்திசிரத்தையுடன் நடத்தி தாசபோதமெனுங் கிரந்தத்தையெடுத்து, அக்கிரந்தத்தைப்பூசித்து, அதில்வரைந்திருக்கும் மகராராஷ்டிர சுலோகங்களை வாசித்துக் கொண்டிருக்கிற போது காகா யென்னும் பண்டிதன் வழக்கப்படி பாகவதார்த்தைச் சொல்லும்பொருட்டு அங்குவந்து அரசன் வாசித்துக்கோண் டிருப்பதைக்கேட்டு ஓவேந்தனே! தாங்கள்வாசிப்பது, மகாராஷ்டிர பாஷையிற்செய்த கிரந்தமாக விருக்கின்றது. இந்தக்கிரந்தத்தின் பெயரென்னவென்றுவினவஅதற்கரசன் ஓசமஸ்தானபண்டிதரே இக்கிரந்தம் எனக்குப்பரமகுருவாய் கானகத்தினி லெழுந்தருளி யிருக்கும் ராமதாசர்செயத தாசபோதமெனுங் கிரந்தமிதாகுமெனக்கேட்டு அப்பண்டிதன் கரங்களால் இருசெவிகளையும் மூடிக்கொண்டு ஓநரபதியே இந்தக்கிரந்தம் சாமானியக்கிரந்தமென்றும் இதைச்செய்தவன் சூத்திரனென்றும் கேவலமாகிய மகாராஷ்டிர பாஷையென்றும் இதுபூர்வக்கிரந்தங்களாகியஸப் ஸகிருதபாஷைக்கிநிகராகுமோயென்றும் சூத்திரன்செய்த கவியாகிய இந்தநூதனக் கிரந்தத்தை வாசித்தபோதிலும் ஒருவருக்குச் சொல்லியபோதிலும் சொல்லியவர்கட்கும் கேட்டவர்களுக்கும் பாவம்வந் தணுகுமென்றும் இதுநரகமடைவதற்குக் காரணமாகுமென்றும் இப்படிப்பட்டகவிகளைவாசிக்கக்கூடாதென றும் மேலும் வியாசமுனிவரால், செய்யப்பட்ட கிரந்தங்களை வாசிக்கவுந்தகும்ஒருவருக்குச் சொல்லவுந்தகும் ஒருவர்சொல்லக் கேழ்க்கவுந்தகும் இதனல், புண்ணியங்கள் நாளுக்குநாள் விசேஷப்படும் ஆகையால், ஓபூபாலரே இனியெப்போது மிக்கிரந்தத்தைப் படிக்கவும் ஒருவருக்குச் சொல்லவும்பார்க்கவும், வேணடாமென்று நவிலக்கேட்டு அரசன ஓபண்டிதரே இந்தக்கிரந்தஞ் செய்தவர் சூத்திரராயிருந்தபோதிலும் சுருதிஸ்முருதி இதிகாச சாஸ்திரங்களுக் கொட்டியிருக்கவில்லையா, அர்த்தபுஷ்டி விசே

ஷித்திருச்க வில்லையா, எதிகணபிரகாசலட்சணங்கள்
பொருந்தியிருந்தும் இதைவாசிக்கவும், பார்க்கவும்,
ஒருவருக்குச் சொல்லவுங்கூடாதென்பது தொல்லையா
இதில் சகலார்த்தங்களும் லட்சணங்களும் அமைந்தி
ருப்பதால், எனக்கு இதை வாசிக்கவேணு மென்றப்
பிரியமுண்டாயின தாகையால், ஓபண்டிதரே தாங்க
ளிப்படிக் கிரந்தத்தை யிகழ்ந்து பேசுவது நீதியல்ல
வென்றும் இக்கிரந்தத்தை நன்றாய்ப் பரிசோதித்துப்
பாருமென்றுஞ் சொல்லக்கேட்டுப் பண்டிதன் மெத்
தவுங்குரோதங் கொண்டு தூஷணவார்த்தைகள்விண்
டு இனிபாகவத புராணமுமக்குச் சொல்லமாட்டே
னென்றுஞ் சொல்லிக்கொண்டே தனனுடைய வீட்
டையடைந்து நீங்காத அசூயயுடனிருந்தான். இப்படி
க்கிப் பண்டிதன் தாசர்செய்தக் கிரந்தத்தின் மீதும்
அதைவாசிக்கும் அரசன்மீதும் கடுகடுத்து விடாத
சலந்தொடுத்து, மிருக்கையில் ராமதாசர் பண்டிதன்
மீது நீங்காத சலந்தொடுத்தும் கிரந்தத்தை யிகழ்ந்
துப்பேசியதையுந் தாசர்தன் யோகதிருஷ்டியினு லறி
ந்துப் பரிவாரங்களாகிய சிஷவர்க்கங்களையழைத்துக்
கொண்டு சிவாஜிராஜனது பட்டணத்தை யடைந்து
அங்கோர் சோலையிலிரங்கி யிருந்தார். இதற்குள்ளர
சன் கரகஜிபண்டிதன் சொல்லிப்போன கடுமொழிக
ளைக் கேட்டுஞ்சிறிதேனுங் கோபங்கொள்ளாமல் சாந்
தத்துடனிருந்துத் தன்குருநாதனைச் சேவிக்கவேணு
மென்றெண்ணங் கொண்டிருக்கையில், தூதர்களோ
டிவந்து அரசனைக்கண்டு பணிந்து ஓசுவாமிஎங்களைப்
பிரியமுடன் காப்பாத்தி ரட்சிக்கும் உத்தமசீலரே!
அதோநமத் பட்டணத்திற் கருகிலிருக்குமோர் சோ
லையில் நமது குருநாதர்வந்திரங்கி இருக்கின்றாரென்று
சொல்லக்கேட்டு அரசன்மெத்த சீக்கிரத்தில், பரிவார
ங்கள்சூழப் பாதசாரியாக நடந்து, அச்சோலையை
யடைந்து, அங்குசிஷர்கள்சூழ வீற்றிருக்குங் குருநா
தனைக்கண்டு பணிந்து, விதிப்படிபூசித்து சோடசோ
பசாரங்களாலவர் மனங்களிக்கச்செய்து, மங்களவாத்
தியங்கள் கடலொலிபோல் முழங்கப் பரிவாரங்கள்
சூழ அவரை நவரத்தினசிவிகையின் மீதேத்தித்தான்
பாதசாரியாக அவருக்குச் சாமரம்போட்டபடி பட்
டணத்தை வலம்புரிவித்து, அரண்மனைக்குள்ளழைத்
துக்கொண்டுபோய் உன்னித ஆசனத்தின் மீதேவப்
பண்ணி எதிரில்நின்று வினயபயபக்தியுடன் இருகரங்
களையுஞ் சிரசின்மீது, குவித்துக்கொண்டு பலவாறு
புகழ்ந்து, மகிழ்ந்து, என்றுமில்லாதஆனந்தக்கடலில்
மூழ்கியிருக்க, காகஜிபண்டிதன் புராணஞ் சொல்லு
வதற்கு, வராமலும் தாசனைக்காணமனமில்லாதவனு
மாகியிருந்தான் அரசன் பண்டிதனுக்குண்டா யிருக்

குங் குரோதத்தைதவிரைந்து, போக்கவேணுமென்றெ
ண்ணி அங்கிருக்குந்தூதர்களை நோக்கி அடா தூதர்க
ளே சீக்கிரஞ்சென்று ஆஸ்தானபண்டிதராகிய காகஜி
பண்டிதரை யழைத்து, வாருங்களென்று கட்டளை
யிட்டார் அந்தப்படியே அத்தூதர்கள் சென்றுக் கா
கஜி பண்டிதனைக்கண்டு ஓசமஸ்தானபண்டிதரே தங்
களை நமதரசன் சீக்கிரமழைத்து வரச்சொன்னாரென
அதற்கு காகஜிபண்டிதர் ஓதூதர்களேஇதோஉங்கள்
பின்னாகவேவந்தேன் நீங்கள்முன்னுதாகச் செல்லுங்க
ளென்று சொல்லத் தூதர்களும் அந்தப்படியே முன்
னுதாகச்சென்று பண்டிதன் பகர்ந்ததையரசனுக்கறி
வித்துச் சென்றார்கள் இதற்குள் காகஜிபண்டிதரும்
வந்துசேர்ந்தார் அரசனும் யாவருக்கும் பிராமண
போஜனஞ்செய்விக்க அனைவரும் புசித்துப் பின்னர்
கோஷ்டிசேர்ந்து தாசர்செய்த கீர்த்தனைகளைப் பாடி
க்கொண்டு வெளிப்பக்கமா யிருந்தார்கள் தாசர் உள்
ளே யிருந்துக்கேட்டுப் பரமானந்தத்தை யடைந்து
தன்னைமறந்து போகத்திற்வீற்றிருந்து சற்றுநேரஞ்
சென்றபின்னர் தடாலுமென்றெழுந்துக் கீர்த்தனைக
ளைப் பாடிக்கொண்டு வெளிப்பாகத்தை நாடி வருவ
தைக்கண்ட மாத்திரத்தில், காகஜிபண்டித ரொருவர்
தவிர மத்தவர்களெல்லாம் எழுந்துஇணங்கிவணங்கித்
தொழுது பணிந்துநிற்க அப்போது. தாசர் யாவருக்
கும் ஆசிகூறி யெல்லோரையும்வீற்றிருக்கச்சொல்லித்
தான்னின்றபடியே தசரதராமா ஜானகிவாமா கோ
தண்டராமா பட்டாபிராமா கோசலைராமா குளிர்ந்த
முகசோமா ஆயிரநாமாதுளபத்தாமா அருள்புரிவார்
பௌமா என்று துதிசெய்து பாகவத புராணத்தில்
ஸ்ரீகிருஷ்ணபரமாத்துமா உத்தவருக்குபதேசித்தசரி
தையைத் திருவாய்மலர்ந்து வருகையில் சுரோதாக்
கள்கேட்டு மெத்த ஆர்த்திமனப்பூர்த்தி யடைந்திருக்
கிறபோது காகஜி பண்டிதனுக்கும் புளகாங்கிதமு
மயிர்க்கூசிட்டுத் தன்னைமறந்துசற்றுநேரமிருந்துஉட
னேதெளிந்து, தடாலுமென் றெழுந்து திடுதிடென்
றோடி மெத்தபக்தி வினயத்துடன் தாசருடைய திரு
வடித் தாமரைகளைப் பிடித்துக்கொண்டுஓசுவாமிஅடி
யேன் தேவரீருடைய மகுத்துவத்தை யறியாமல் தா
ஙகள்செயத தாசபோதமெனுங் கிரந்தத்தையுந் தங்க
ளையும் பலவாறு தூஷித்தேன வியாசர்செய்த கிரந்த
மே சரியான கிரந்தமென்று பூஷித்தேன் அனுவள
வேனும் க்ஞானமில்லாமல், என்னுடைய அஞ்ஞான
த்தினால் கோஷித்தேன் அகங்காரம் மகாரங்களினால்
துவேஷித்தேன் ஆகையால், சாந்த சொரூபராகிய
தேவரீர் அடியேன்மீது முனிவுகொள்ளாமல் யான்
செய்த அபசாரங்களை யெல்லாம் உபசாரமாகக் கொ

ண்டுக் கிருபைக் கண்ணோக்கம் புரியுமையா சுவாமி
யென்று வெகுவாக வேண்டிக்கொண்டான உடனே
தாசருக்குப் பண்டிதன்மீது கிருபையுண்டாகி அப்ப
ண்டிதரை யாலிங்கனஞ்செய்துக்கொண்டு கரத்தைப்
பிடித்து உட்காரவைத்து சகலமான சாஸ்திரபுராண
இதிகாசாதிகளுக்குஞ் சம்மதமாகவும் பேதமின்றி
அபேதமாகவும் சொல்லி முன்னம் பகவான் பலபா
ஷைகளிலுங் வெளிப்படுத்தினர் அன்றியும் உலகிலு
ள்ள ஜெனங்களுக்கு சம்ஸ்கிருத பாஷையில். பண்டி
தத்திறமை யில்லாததால் எல்லோரும் உணர்ந் துஜ்ஜ
ஜீவிக்கும்படி அன்னியபாஷையிலுஞ் சிலபெரியோர்
கள் செய்திருப்பதால் யானுமதை யனுசரித்து மகா
ராஷ்டிரபாஷையில் தாசபோதமெனுங்கிரந்தத்தைச்
செய்து இப்பாஷாதிகாரிகள் வாசித்துக்கடத்தேரும்
படி உலகோபகாரமாக யியற்றியபடியால்பாஷைகள்
பலவாயிருக்கினும் அவற்றுள் தாத்பரிய முதலானது
கள் பேதமாயிருக்க மாட்டாது சொல்லுவதெல்லாம்
பகவந்நாம உச்சரிப்பையே யனுசரித்தேயிருப்பதால்
எப்போதும் நீர்பேதபாவங் கொள்ளாமலும் தூஷ
ணவார்த்தைகள் வீள்ளாமலும் எக்கிரந்தத்தையுந்
தள்ளாமலும் எவர்கள்மனதையும் நோகும்படிச்சொ
ல்லாமலு மிருப்பையேயாகில் சிலநாளையில் நீபுனித
னாகிப் பேரின்பவாழ்வை யடைவாயென்று சொல்லக்
கேட்டு அங்குள்ளஜெனங்களும் காகஜி பண்டிதனும்
சந்தோஷவாரியிற் படிந்தவனாகியிருக்க இதற்குள்பா
கவதச்சரிதையும் முடிவாயின உடனே ஜெனங்கள்
யாவருந் தங்கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

இந்தப்படிக்கி தாசர் காகஜிபண்டிதருக்குக்கிரு
ஷ்ணபகவான் உத்தவருக்குபதேசித்த பாகவத புரா
ணத்தை யுபதேசித்து அந்தநாளே வனத்திற்கேக
உத்தேசித்துப் போயிக்கொண்டே ஆளந்தியெனுங்
கிராமத்திற்கு முக்கியமான சிஷர்களுடன் சென்று
அங்குக்ஞானத்திலும் யோகத்திலுந் தியாகத்தினும்
விவேகத்திலுஞ் சிறந்தப் பெரியோராகியஞானதேவ
ருடைய சமாதியைக்கண்டுப் பலகீர்த்தனைகள் பக்தி
பரமாகவிண்டு பேரின்பம் மேற்கொண்டு தன்னைமறந்
தாடிப்பண்டு எந்தையேயென வந்தனந்தந் துப் பிரா
மணர்களுக்கு போஜனஞ் செய்வித்துக்கொண்டுமூன்
றுநாளங்கு வசித்திருந்து அதைவிட்டு சிஷர்களுடன்
புறப்பட்டு ஆர்த்தியுடன் பைட்னிபுரத்தையடைந்து
ஏகநாதசுவாமிகளுடைய கிரகத்தையும் அதில் பூஜாக்
கிரகத்தி லெழுந்தருளி யிருக்கும் பாண்டுரங்க விட்ட
லனையும் அந்த ஏகநாத சுவாமிகளின் சமாதியையுங்
கண்டு சேவித்துப் பரமானந்தமடைந்துமிருக்கையில்
அந்த ஏகநாதசுவாமிகளால்வைத்துபோஷிக்கப்பட்ட
திருத்துழாய் செடிகளையும் அரசமரத்தையுங் கண்டு
அதிகவானந்தங் கொண்டு திரேகபுளகாங்கித மடை
ந்து மயிர்க்கூச்சிட்டுத் தன்னை மறந்திருக்கிறபோது
ஏகநாதசுவாமிகளுந் தெரிசனங்கொடுக்க அவரதுதெ
ரிசனத்தி லீடுபட்டுப் பரமானந்தத்துடன் அதைவிட்
டுப் புறப்பட்டு சகோரபட்சிகள் சந்திரோதயத்தை
யெதிர்பார்த்துக் கொண்டிருப்பதைப் போல பஞ்ச
வடிதீர்த்தத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமனைக்
கண்டு சேவிக்கவேணுமென் றெதிர்பார்த்துக் கொண்
டுப் பஞ்சவடியை யடைந்து மிதமில்லாத பிரியத்து
டன் ஆர்த்தியைக்காட்டி இராமாவேசத்தை யடைந்
துங் கீர்த்தனைகளைப் பாடியாடித்தேடிச் சரிதையைச்
சொல்லுவதால் பிரமருத்திராதி தேவர்களும் அங்கி
ருக்குஞ் சகலஜனங்களுங் கேட்டுப் பரமானந்தமடை
யும்படி அமலமாகிய ஆத்மக்ஞானத்தை யங்குபோ
திக்க இரவுநீங்கிச் சூரியோதயமாயின அப்போது
மங்களாரத்தி செய்துச் சரிதையை முடித்துச் சில
நாளங்கு வசித்திருந்து ஒருநாள்ஸ்ரீராமருடைய சன்
னிதானத்திற்குச் சென்று பரமகிருபாநிதியே! பாக்
கியவதியாகிய ஜானகியின்பதியே சகல லோகங்களி
லும் வசிக்கும் சாதுஜனங்களுக்குங் கதியே, நற்குண
ங்கள்யாவும் பொருந்தியமதியே அடியேனுடையவிண்
ணப்ப மொன்றுளது அதென்னவெனில் கிருஷ்ண
நதி தீரத்திற்கிடையில் அர்ச்சாவதாரரூபமான விக்கி
ரகமொன்றை ஸ்தாபனஞ்செய்ய விருப்பங் கொண்
டேன் ஆகையால் தேவரீர் கருணைபொழிய வேணு
மென்று வினயமாய்ப் பகரக்கேட்டு ஸ்ரீராமச்சந்திர
மூர்த்தி தாசரைநோக்கி ஓபரமபாகவதசிகாமணியே
பாகவதர்கள் கண்மணியே, கோதிலின்கனியே, குறை
விலா வானந்தத்தனியே, உன்னிஷ்டப்படியேகிருஷ்
ணாதீரக்கரையில் என்சாயைமிகருடைய விக்கிரகமொ
ன்றை ஸ்தாபனஞ் செய்யுமென்று விடைதரப் பெற்
றுக்கொண்டு தாசரானவர் தன்சிஷர்களுடன் புறப்
பட்டு நடந்துக் கிருஷ்ணாநதியை யடுத்து அங்கோரி
டத்திலுட்கார்ந்து மாருதியைக்குறித்து வெகுவாகத்
தோத்திரம்புரிகையில் மாருதியானவ ரங்கெழுந்தரு
ளி தாசரைக்கண்டு பலவின்ப மொழிகளைப் பகர்ந்து
என்னம்சத்தைப் பெற்றவிளையோனே? நீயிப்போது
யென்னை நினைத்துத் துதிசெய்தகாரணம் யாதோவத
னைத் தெரியப்படுத்துமென, அதற்குதாசர் ஓஎன்சத்
குருநாதரே! ஞானானந்த போதரே, கமலம்போன்ற
பாதரே, நவிலொணாநவநீதரே அடியேன் இங்கொரு
அர்ச்சாவதார விக்கிரகமொன்றைப் பிரதிஷ்டை செ
ய்யவேணுமென்றுக் கருதினேனாகையால் அவ்விக்கி

ரகமொன்றைப் பாலிக்கவேண்டு மென்றுப் பணிவா யுரைக்க ஆஞ்சநேயர் ஓ தன்னிகரில்லா அவதூதனே இந்தகிருஷ்ணாநதிக்கி ஏழுகூப்பிடு தூரத்தில் அலயூ ரென்றொரு கிராமமுண்டு அக்கிராமத்தில் சீதாராம லட்சுமண விக்கிரகங்கள் மூன்றிருக்கின்றன அவைகளை யெடுத்துவந்து உன்னிஷ்டப்படி இத்தலத்தில் ஸ்தாபனஞ்செய்யக் கடவாயென்று சொல்லி ஆஞ்சநேயர் தன்னிருப்பிடமாகி சேதுவை யடைந்தார்.

இந்தப்படிக்கி ஆஞ்சநேயர் சொல்லிய வண்ணம் தாசர்சென்று அலயூரையடுத்து அன்றிரவில் அங்கிருக்கும் விக்கிரகங்கள் மூன்றையும் யெடுத்துக் கொண்டு கிருஷ்ணாதீரத்தை யடைந்து அங்கு உன்னிதஸ்தாபனத்தில் விக்கிரகங்கள் மூன்றையும் வேதவிதிப்படி ஸ்நானஞ்செய்து கும்பாபிடேகங்கள் முதலானதுகளுங்நடத்தி அன்றுமுதல் திரிகாலபூசை அம்மூர்பதிகளுக்கு நடக்கும்படி யானதற்கு வேண்டியபொருள் முதலானதுகளுஞ் சேகரித்துவைத்து அன்பாகப்பூசித்துக் கொண்டிருந்தார் இவரிப்படி இங்கிருந்துக்கொண்டிருக்க அங்கே அலயூரெனுங் கிராமாதிகாரி முதலானவர்களுஞ் சேர்ந்து விக்கிரகங்களைக் காணேமே யென்செய்வோமென்று தேடிக்கொண்டிருக்கையில் அடுத்த கிராமவாசியால் விக்கிரகங்கள் மூன்றும் கிருஷ்ணாநதிக்கரைக்கு ராமதாசர்கொண்டுபோய் பிரதிஷ்டை செய்திருக்கின்றாரெனச் சொல்லக்கேட்டுக் கிராமாதிகாரியுடன் யாவரும் புறப்பட்டுக் கிருஷ்ணாநதியைக்கிட்டி தாசரைக்கண்டு பணிந்து ஓசுவாமி! தங்களைப்போன்ற சாதுக்கள்விக்கிரகங்கள் மூன்றையும் இரவுகாலத்தில் யாவருக்குந் தெரியாமல் திருடிக்கொண்டு வரலாமோ, இதுஞாயமோ விக்கிரகங்கள் மூன்றையும் நீரொருவரே யெடுத்துக் கொண்டு வந்ததென்ன உபாயமோ இதுவென்னமாயமோ சொல்லுமையாவெனக் கேட்டு தாசர் ஓஅலயூர்கிராமவாசிகளே? இதுவெனனிஷ்டப்படி செய்ததல்ல ஸ்ரீராமருடைய கட்டளையின்படிச்செய்தேனே யன்றி (அவனன்றிவோரணுவேனு மசையாதென்ற) பழமொழிப்படி பகவானுடையப் பரமகாருண்ணியமே அப்படிக்கிருந்தால யானென் செய்யட்டும் அந்த சீதாலட்சுமண ஸ்ரீராம விக்கிரகங்களை மறுபடியுந் தங்களூருக்கொண்டு போகவேணுமென்ற ஆவலுங்களுக்கிருக்குமாகில் நீங்கள்யாவருமொன்றுகூடி மூன்று விக்கிரகங்களையு மெடுத்துக்கொண்டுபோங்களென்று நவில, அந்தப்படியே யவர்களெல்லோரு மொருங்கு சேர்ந்து அந்தவிக்கிரகங்கள் மூன்றையும் பேர்த்தெடுக்கமுடியாமல் வியப்பை யடைந்து பகவானுடைய திருவுள்ள மிப்படிக்கிருந்தால் நாமென்ன செய்யலாமென்றுசொல்லி தாசரைப்பணிந்து விடைபெற்றுக் கொண்டு தங்கடங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

இவ்வண்ணமந்தக் கிராமவாசிக ளெல்லோரும் ஆச்சரியமடைந்துக் கொண்டு தங்களிருப்பிடஞ்சேர்ந்தபின்பு தாசர் நூதனமாக சன்னிதியைக் கட்டவேணுமென்றுக் கருதிச் சீஷர்களுக்குச்சொல்ல அவர்களுமப்படி கட்டிவைத்தால் மெத்த புண்ணிய மாகுமெனச்சொல்லி அங்குள்ள மலைகளிற் சென்று உபயோகமாகுங்கற்களை யெடுத்துவந்து சேகரஞ்செய்துவைக்கத் தாசர் பிரகாரமண்டப முதலாகியசகலமுங்கட்டிச் சிலநாளிற் பூர்த்திசெய்து கும்பாபிஷேக நடத்திப் பஞ்சபர்வகளும் பிர்மோச்சவமும் தினப்படியும் நடத்திக்கொண்டிருந்தார். அப்போது சிவாஜி மகாராஜன் இவ்வளவு அவ்வளவென்றுங் கணக்கிட்டுச் சொல்லவும் நினைக்கவும் வொண்ணாத ஸ்ரீராமபிரானுக்குக் காணிக்கைகளை யீந்துப்போயினன். ஸ்ரீராமரோ வெகுவித மகுத்தவங்களைக் காட்டிக்கொண்டு மிருந்தார், தாசரோ ஸ்ரீராமருடைய உபயதிருவடித் தாமரைகளை வணங்கி இணங்கி ஓசுவாமி!இரகுநாயகரே, தங்கள் சந்நிதிக்கெதிரில் ஆஞ்சநேயர் விக்கிரகத்தை ஸ்தாபிக்க வெண்ணினேன். ஆகையால் கருணைபுரிய வேணுமேன்றுவேண்ட ஸ்ரீராமரும் ஓதாசரே! உமதிஷ்டப்படியே நடத்துமென்று நவில, தாசர் மகாபாக்கியமென்று சொல்லி ஆஞ்சநேயர் விக்கிரக மொன்றுசெய்வித்து அதற்கு மூர்த்திகரமுண்டாகும்படி. சிலயாகாதிக் கிரத்தியங்களை நடத்தி அந்தவிக்கிரகத்தை ஸ்ரீராமரருகில்ஸ்தாபித்து அவருக்கும் விதிப்படியாவத்து அபிஷேகாதிகளும் அவரை பூசிக்கும் [illegible]த்தையும் சகலருக்குந்தெரிவிக்க அதைக்கேட்டந்த வண்ணம் நடந்தவர்க ளெல்லாம் புண்ணியபுருடர்களாகி யிருக்கவும் அன்றியும் தாசர்பிரமசாரிவிரதத்தை யநுட்டித்து மெத்தசீலராகி அம்மூர்த்திகளுக்கு தைலம் அப்பியங்கனமுதலான அபிடேகங்களைச் செய்வித்தும் திருமண் ஸ்ரீசூர்ணபுண்டரங்களைத் திருத்தி மலர்மாலைகளைச் சூட்டி தூபதீபநைவேத்தியங்களை யீந்துக்கொண்டு மிருக்கையில் ஒருநாள்தாசர் மாருதிவிக்கிரகங்களைப் பனிரெண்டுயிடத்தில் நிருத்தவெண்ணி முதலில் ஓரிடத்தில்நிருத்துகிறபோது நூறுபிரமணர்களுக்கு போஜனஞ்செய்விக்க ஆயிரம் பிராமணர்க ளெழுந்தருளக்கண்ட ஆகாயாயி தாசரைநோக்கி ஓசுவாமி தாங்கள் நூறுபேருக்கு போஜனஞ் செய்யும்படி கட்டளையிட்டீர் அந்தப்படியே அடியாள்செய்திருக்க ஆயிரம்பேர்கள் வந்துவிட்

டார்களே பிரசாதம் போதாதேயென தாசர் பொரு
மையில்மிகுத்த மாருதியானவர் யாவருக்கு மாகும்ப
டிக் கிருபைசெய்வாரென்று நவில ஆகாசவாணியும்இவர்
மகானுபாவரான படியினலே இந்தப்பிரசாதங் ஆயி
ரம்பேருக்கு ஆனனுமாகுமென்றுத் தளிகையிலேயை
பரிமாரி காய்கரி பிரசாத முதலானதுகளும் வட்டித்
துக்கொண்டு 'வருகையில், ஆயிரம் பிராமணர்களும்
புசித்துத் திருப்தர்களாகிச் சென்றும் மெத்தப்பிரசா
தம் மீந்திருந்தன இந்தஆச்சரியத்தை யாவருங்கண்டு
தாசரை வெகுவாகப்புகழ்ந்துக் கொண்டாடிச் சென்
ளூர்கள் அதுமுதல் தாசர் ஆஞ்சநேயர்மீது எப்போ
துந் தோத்திரஞ் செய்துக்கொண்டு மிருந்தார் அதெ
ப்படியெனில் ஆஞ்சநேயரே தனக்கு ஜீவாதாரமென்
றும் ஆஞ்சநேயரே தனக்குத்தாய் தந்தையர்களென்
றும் ஆஞ்சநேயரே தனக்கு சத்குருநாத ரென்றும்
ஆஞ்சநேயரே தனக்கு பிராதாவென்றும் ஆஞ்சநேய
ரே தனக்கு சகலவிதபந்து வென்றும் அந்தஆஞ்சநே
யர் புருஷாகார்த்தினலேயே ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி
யைக்கண்டு சேவித்தேனென்றும் அதிக திருத்தியை
படைந்தேனென்றும் ஹிதவாக்கியங்களை சொல்லிக்
கொண்டே இப்படியு மப்படியும் திரிந்துக்கொண்டு
மிருப்பதை அவ்வூரில் வசிக்குங்குடிகளும் அன்னிய
தேசத்துக் குடிகளுங்கண்டு இந்த ஆஞ்சநேயர்நடுநில
மையாயிருப்பதும் இருபக்கமும் கிருஷ்ணவேணிநதி
ப்பிரவகிப்பதால் ஆஞ்சநேயர் லிங்கத்தைப் போலக்
காணப்படுகிருரென்றும் நடுவாற்றில் ஸ்தாபிக்கப்பட்
டாரெனறும் ஜெனங்கள் சொல்லிக்கொண்டே யிருக்
கையில், அந்தஆஞ்சநேய சிலாவிக்கிரகமானது மடு
வுக்குள் மரைந்துபோயிற்று அதனைக்கண்ட ஜெனங்
கள் இதுவென்ன ஆச்சரியம் பார்த்துக் கொண்டிருக்
கிறபோதே ஆஞ்சநேய சிலாவிக்கிரகமானது எப்படி
மரைந்து போயிற்றென்று பெசிக்கொள்வதை தாசர்
கேட்டு தடாலுமென்று நதியின்னடுவிற் சென்று பெ
ருத்தஓசையுடன் எனதுசற்குரு நாதராகிய ஆஞ்ச
நேயரே அதிகவிரைவாக இங்கு வரவேணும் வந்து
தெரிசனந் தரவேணுமென்று அழைக்கிறபோதுஆஞ்
சநேயர் ஓ எனதுப்பிரியமுள்ள அநுசனே நீயேன்
மெத்த விசனப்படுகிறாய் சீக்கிரமாக நீஜலத்திலிரங்கி
வந்து பாருமென்று நவிலக்கேட்டு தாசர் ஆழமாகிய
யம்மடுவினிற் குதித்து உள்ளே எழுநாளிருக்கையில்
அதையறியாமல் ஜெனங்கள்யாவரும் அகோ தாசர்
மடுவினில்விழுந்து மடிந்து போயினரென்று சொல்ல
தாசர் எழுநாளும் மடுவிற்குள் ளிருந்து எட்டாவது
நாள் அந்தவிக்கிரகத்தை யெடுத்துக்கொண்டு நதிக்கு
ள்ளிருந்து கரையின்மீது வருகிறபோது மாருதிதாச
ரைநோக்கி ஓபுண்ணியசீலனே விரைவினில்வேறொரு
சிலாவிக்கிரகத்தைச் செய்து அங்குஸ்தாபித்து உம்
முடைய கரத்தினிலிருக்கும் சிலாவிக்கிரகத்தை நதிக்
குள்ளிருக்கும் மடுவினிற்போடுமென தாசர் அந்தப்
படியேசெய்து அந்தனளிரவு நடுராத்திரி வேளையில்
நூதனமாகச்செய்த விக்கிரகத்தைத் தன்கரங்களின
லே ஸ்நானஞ்செய்வித்துப் பொழுதுவிடிந்த வுட
னே பிராமணர்களை யழைப்பித்து மெத்த தயவுடன்
ஓபிர்மக் ஞானமுடைய சீலர்களே இந்த ஆஞ்சநேய
மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யுங்களென அந்தப்ப
டியே யபபிராமணர்கள் வேதவிதிப்படி மந்திரலோ
பங் கிரியாலோபமின்றி ஸ்தாபனஞ்செய்ய தாசர்
பிராமணபோஜனம் செய்வித்து அனைவரும் புசித்து
சந்தனதாம்பூலாதிகள் தரித்து மனதைநிலையில்நிருத்
திப் பலவிதமாக பஜனைசெய்திருந்தார்கள் தாசரும்
அவர்களுக்கு தட்சணைமுதலானதுகளு மளித்து ஸ்ரீ
ராமபஜனைசெய்துத் தன்னை மறந்திருக்கையில் அவ்வி
டத்திற்கு யனேகமனிதர்கள் வந்துசேவித்து அவா
வர்களுக் குண்டாயின கோரிக்கைகள் அனுகூலப்பட
திவ்யக்ஞான சம்பன்னர்களாய் சுகத்துடன் கீர்த்தி
பெற்றுக்கொண்டு போவார்கள்.

இவ்வண்ணம் தாசர் வெகுமகிமைகளுடன் பிர
பலமாக உலகெங்குங் கீர்த்தி பிரகாசிக்கும்படி நடந்
துக்கொண்டு வருகையில் ஒருநாள் கிருஷ்ணதீரத்தை
விட்டுச் சிஷர்களுடன் புறப்பட்டு சாபலகிராமத்தை
ச்சேர்ந்து அங்குநிவாசமாக எழுந்தருளியிருக்கும்ஸ்ரீ
ராமச்சந்திர மூர்த்தியைக்கண்டு சேவித்து ஓசீதாபதி
தாசரதிதயாநிதி தேவரீருக்குப் பிர்பலமாக உச்சவ
ஞ்செய்விக்க வெண்ணங்கொண்டேன் அவ்வெண்ணத்
தைமுழுதும் அனுகூலப்படுத்திவைக்கவேணுஞ்ஜெய
ஜெகதீசாவென்று சந்நிதிமுன்னம்விண்ணப்பஞ்செய்
துக்கொண்டு தன்சிஷர்களை நோக்கி என்மனதுக்கி
னிய சிஷர்களே நீங்களனைவோரும் சிரமத்தையெண்
ணுமல், கிராமங்கள் தோருஞ்சென்று ஸ்ரீராமருக்குப்
பிர்மோச்சவஞ் செய்யும் பொருட்டுப் பிட்சையெடுத்
துக்கொண்டு வரக்கடவீர்க ளென்று கட்டளையிட
அவர்களுமந்தப்படியே கிராமங்கள்தோருஞ்சென்று
பிட்சையெடுத்து அதனல் வரப்பட்ட தானியங்களைக்
கொண்டுவந்து சேகரஞ் செய்துக்கொண்டு வந்தார்
கள் அப்போது சிவாஜிமகாராஜன் தன்பரிவாரங்க
ளுடன் அங்குவந்து குருநாதனைக்கண்டு சேவித்துப்
பூஜாத்திரவியங்களைக் கொண்டுப் பூசித்து அவருக்கு
முக்காலும்வலம்வந்துபணிந்துஒசுவாமிசகலத்தையும்
ஒழித்தநிஷ்க்காமி தாங்கள் ஸ்ரீராமச்சந்திர மூர்த்

திக்குச்செய்ய வெத்தனித்த பிர்மோச்சவத்திற்கு வேண்டியயெல்லாச்சிலவுகளுக்கும் பிடிக்கும்படியான திரவியமெவ்வளவோ அவ்வளவும் அடியேன்கொடுக்கிறேன் அதனைப் பெற்றுக்கொண்டு பிரமோச்சவத்தை நடத்திவைப்பு மையாவென்று வேண்ட தாசர் அரசனைநோக்கி அகம்பாவத்தை யொழித்த வேந்தனே ஏழையெளியோர்மீது தயவுடையஉபசாந்தனே உன்னொருவனுடைய திரவியத்தைகொண்டு பிர்மோச்சவம் நடத்துவது அவ்வளவுநன்றா யிராது ஏனெனில் திரவியமுடையவ னீயாகையால், எவ்விதத்திலேனும் பொருளைச் சிலவழித்துப் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ளுந்திராணி யுமக்குண்டு ஏழையாயிருப்பவனுக்கு அவ்வளவுபொருளைச் சிலவழித்துப் புண்ணியத்தைச் சேகரஞ்செய்யத்திராணி யுண்டோ இல்லையாகையால், அந்த ஏழைக்குண்டான மட்டும கிஞ்சித்துபொருளை யுதவியவனும் புணணியவானுக வேண்டுமலலவா அப்படிக்கி யாவரையுந் தருமத்திற்குச் சிலவுசெய்யும்படி சிறிதுபொருளைப்பெற்றுஅவர்களையும் புனிதராகும்படிச் செய்யாமல் நாம்மாத்திரம்பொருளைச் சிலவழித்துப் புனிராவது அவ்வளவு சிறந்ததல்ல அன்றியும்லவணத்தை ஜலத்திற்போட்டவுடனே தன்னுருவத்தைமாத்தி ஜலத்தோடுஜலமாகி அன்னியர்களுக்கு உருசியைக் கொடுப்பதுபோலத் தான் கெட்டபோதிலும் பிரருக்குச் சுகமுண்டாகச் செய்யுமவனே உத்தமபுருடனுகும் ஆகையால் ஓஅரசனே ஏழையெளிய வர்களைப்போல நீயுங்கிஞ்சித்துப் பொருளுதவிசெய்து அவர்களையு முன்னுடன் புனிதராகச் செயயுமையா அன்றியும் ஏழைகளாக விருக்கினும் அவர்களி லெத்தனைபேர்கள் புண்ணியவான்களாக விருப்பார்கள் அப்படிப்பட்ட புண்ணியவான்கள்பொருள் இக்கைங்கரியத்திற்கு உபயோகப்படுமாகில் பகவானுக்கு மெத்தவும் உல்லாசமாகவிருக்கும் ஆதலால், ஓவேந்தனே நாலுபேரும் பிழைக்க நாமும் அவர்களநடுவில், பிழைக்கவேண்டும் அதை விட்டுநாமே பிழைக்க வேணுமென்றும் மைத்தவர்கள் கெட்டுப்போக வேணுமென்றெண்ண மிடுபவன் அதமர்களிலு மதமனுகும என்றுசொல்ல அரசன் கேட்டு சந்தோஷித்தனுகிக் கிஞ்சித்துப்பொருளையுதவிசெய்து மகாபாக்கிய மென்றுசொல்லிவிடைபெற்றுக்கொண்டு சென்றனர்.

இவ்வாறு அரசன போயினபின்பு சிஷர்கள் பற்பல கிராமங்களுக்குஞ்சென்று வேண்டியமட்டுக்கும் தானியங்களைப் பிட்சையெடுத்து வந்து தானியத்துடன்சேர்த்து அதுகளில்வேண்டிய தானியங்களைநிறுத்தி மைத்ததானியஙகளை விக்கிரயஞ்செய்துஇன்னும் வேண்டிய வஸ்துக்களை கிரயத்திற்குக்கொண்டு யாவத்துஞ் சித்தமாகச்செய்து வைத்துக்கொண்டு அநேக மனிதர்களைக்கொண்டு சந்நிதியை அலங்காரஞ்செய்வித்து துவஜாரோகணம நடத்தி ஸ்ரீராமச்சந்திரருக்கும் சீதாபிராட்டிக்கும் அபிஷேகம நடத்தி ஆடையாபரணுதி மலர்மாலைகளால் சிங்காரித்து கும்பாரத்திமுதலான அநேக ஆரத்திகள்செய்து தூபதீபநைவேத்தியங்களைச் சமர்ப்பித்துத் திருவீதி புறப்பாடு செய்வித்தார் இந்தப்படி ஒன்பதுநாள் உச்சவங்கண்டருளப்பண்ணி வேசாரமில்லாமல்தினந்தோறுங்கோலாகலமாக பஜனைசெய்தும் யாவற்றுஜெனங்களுப்ஸ்ரீராமரது பிரமோச்சவத்தைக்கண்டு சேவித்து ஆனந்தம் பரமானந்தம் பிரமானந்தம்யென்று ஒவ்வொருவருந் தங்களைமறந்து ஆனந்தநடனம புரிந்தனர்கள். அப்போதுண்டாகிய குதூகலத்தை ஆயிரம்பணுமுடிகளையும் இரண்டாயிரம் நாவுமுடைய ஆதிசேஷனுஞ் சொல்ல முடியாதென்றல் கேவலனும் ஒருநாவுடையவனும் க்ஞானசூனியனுமாகிய நாயேனுல் சொல்ல முடியுமோ? முடியாதாகிலும், மனதிற்கெட்டியவரையில் அடியேன் சழக்கு நாவால் சொல்லியபடியால் புத்திமான்கள் தங்கள் புதல்வன்செய்த குற்றத்தைப் பாராட்டாமல் மன்னிப்பதுபோலஇவனுடையபிழைகளைக் கருதாதது தப்புகளை ஒப்புகளாகக் கொண்டு அடியேனை எம்பெருமான்றிருவடிக் காளாகும்படி கிருபை கண்ணேக்கம் புரிவீர்களென்று வந்தனந்தந்தனன். இப்பால்தாசர் துவஜாவரோகணம் நடத்தி தீர்த்தவாரி செய்வித்து உச்சவமுடிவாகியபத்தாவது நாள் சகலஜனங்களும் இருப்பிடஞ்சென்றபிறகு தாசர் சீஷவர்க்கங்களுடன் ஒருநாள்வனத்திற்கேகி அங்கோர்பெருத்த மலையைக்கண்டு அதன்மீதேறி வீற்றிருந்துக்கொண்டு ஸ்ரீராமகைங்கரியத்திற்காக கிராமங்கள்தோறும் தானியங்களைக் கொடுத்த ஜனங்களையழைத்து ஓசாது சற்ஜனங்களே! இவ்வருடம் நடத்திய பிரமோச்சவத்தைப் போல் வருஷந் தப்பாமல் தானியங்களை யீந்துவிடாமல் பிரமோச்சவத்தை நடத்திவையுங்களென்று சொல்லியனுப்பிப் பின்னும் ஆஞ்சநேயஜயந்தி உச்சவத்தை நடத்தவேணு மென்றுன்னி சீஷர்களை வெகுகிராமங்களுக்கனுப்பிப்பிட்சையெடுத்து வரும்படி யனுப்ப அவர்களுஞ்சென்றுகிராமங்கள்தோறுந் திரிந்து பிட்சையெடுத்து மிதமற்ற நெல்லுகளைச் சேகரஞ் செய்துக்கொண்டுவந்து கொடுக்க அந்தநெல்லுகளைக் கொண்டு பற்பல வஸ்துக்களை வரவழைத்து ஆஞ்சநேயருக்கு வேண்டியமட்டுந் திருமஞ்சனங் கண்டருளப்பண்ணி ஆடையாபரணுதி

மலர்மாலைகளைச் சூட்டி பரிமளகந்தஞ் சமர்ப்பித்துத் தூபதீப நைவேத்தியங்களளித்து பக்தி வினயமாகப் பூசித்து வெகுஜனங்களுக்கு அன்னதானஞ் செய்து ஆஞ்சநேயார்ப்பணமாக பற்பலகீர்த்தனைகளைப்பாடி யாடித் தன்னைமறந்து ஆஞ்சநேயரது பிரபாவங்களை யெடுத்தோதி இந்தசரிதையைக் கேட்பவர்க் கல்லவோ பிரக்யாதி இவரது குணகீர்த்தனைகளைப் பாடுமவர்க்கே சொரூபஜோதி கிடைக்குமல்லவோ அனுகி யென்று சொல்லுகிறபோது சிவாஜிமகாராஜன் குருநாதனைநோக்கி என்னிடர்க்கடலைவற்றச்செய்து என்னைபாண்டிரக்ஷிக்க இப்புவியினிலெழுந்தருளியயோக புருடரே! இப்படிப்பட்ட க்ஞானபக்தி வைராக்கியத்திற் சிறந்த அந்தமாருதிக்குக் குரங்குருபம்வருவதற்குக் காரணமயாது, அதையானதெரிந்துக்கொள்ளும் படியும எனக்குற்றசந்தேகம் நீங்கும்படியுங் கிருபை புரியவேணும் சுவாமியென்று வேண்டிக்கொள்ளும் அரசனைநோக்கி தாசர்சொல்லத் தொடங்கினார்.

கேளும் அரசனே பிரஜைகளுக்குள்சரசனேஒரு காலத்தில் சாம்பவ மூர்த்தியானவர் பார்வதிசமேதராகி மகம்மேரு பர்வதபுத்திரனாகிய சேஷகிரியின்மீது சஞ்சரித்துக்கொண் டிருக்கையில் ஒருஆண்வானரமானது பெண்வானரத்துடன் மதனக்கிரீடை செய்வதைப் பரமசிவன்கண்டு அதன்பேரிலேயே கண்ணோக்கம் வைத்திருந்து காமவிகாரமதிகரித்துப்பார்வதியைநோக்கி வானரரூப மெடுக்கும்படி சொல்லித் தானும் வானரரூபமெடுத்துப் புணர்ச்சி செய்கையில் சாம்பவமூர்த்தியின் வீரியமானது கீழேவிழ அதனை வாயுதேவன் கையிலெடுத்துக்கொண்டுசென்று தவம் புரிந்துக்கொண்டிருக்கும் தன்மனைவியாகிய அஞ்சனாதேவியின் செவியினில்வார்க்கப் பிறந்தமையால் அப்புத்திரன் இவ்வுலகின்கண் வானரனாகி உற்பவமாயினான் அது எந்தகாரணத்தினா லென்றால் சாம்பசிவமூர்த்தி வானரரூப மாயினமையினாலக் காரணத்தைபற்றி ஆஞ்சநேயர் வானரரூபமாயினாரென, அச்சபையிலுள்ளசகலஜனங்களுங்கேட்டுசமாதானமடைய மேலுஞ் சிலபேர்கள் தாசர்முன்வந்து பணிந்து ஓசுவாமி! தேவரீர், இன்றிரவில்தானே அடுத்தக்கிராமத்தில் அனுமஜயந்தி வெகுவிமர்ச்சியாகவும், பக்தி சிரத்தையுடனும் நடத்தி அவ்வூராரை யானந்திக்கச் செய்துக்கொண்டிருந்த தாங்களிங்கு மெப்படிஅனுமஜயந்தி நடத்திக்கொண் டிருக்கின்றீரென்று சொல்லிக்கொண் டிருக்கையில் மற்றொருகிராமஸ்தன்வந்து தாசரைக்கண்டு பணிந்து ஓசுவாமி! இப்போது எங்கள்கிராமத்தில் அனுமஜயந்தி நடத்திக்கொண்டிருக்க யான் தங்களைக்கண்டு சேவித்து இங்குவந்து பார்க்க அங்குசரிதை சொல்லிக்கொண்டிருந்த தாங்களிங்கெப்படி வந்தீர். இதுமெத்த ஆச்சரியப்படத் தக்கதாகவிருக்கின்றதென்று அவருடைய மகத்துவத்தை நினைத்துநினைத்து ஆனந்தக் கண்ணீர் சோரவிட்டுக் கொண்டிருந்தான். இப்படிக்கிருக்க வேறொருகிராமத்திலிருந்து சிலபேர்கள்வந்து தாசரைக்கண்டு பணிந்து ஆச்சரியப்பட்டு ஓசுவாமி! எங்கள் கிராமத்தில இப்போது அனுமஜயந்தி நடத்திக்கொண்டிருந்ததேவரீர்? இஙகெப்படி வந்தீரென்று வினவினார்கள்.

இந்தப்படியாகிய பதினொருகிராமத்தோர்களும் அனுமஜயந்தி இதே இரவிலிந்த தாசரேயிருந்துநடத்தக் கண்டோமென்று சொல்லி வியப்படையும்போது அதிலொருவர் சபையோரைநோக்கி ஐயாசாதுஜனங்களே! தாசரொருவர், இத்தனைகிராமங்களிலு மெப்படியிருந்து அனுமஜபந்தி நடத்தினார் இவ்வளவு மகத்துவம யாரால் செய்யப்பட்டதென்றும் இந்தமர்மத்தை யாவருமறியும்படி சொல்லவேணும் சுவாமியென்று வினவிய கிராமஸ்தர்களை நோக்கி தாசர் சொல்லுகின்றார்.

கேளுங்கள் கிராமவாசிகளே! அண்டபிண்டபிரமாண்டங்களிலும் ஆதிநடு அந்தியத்திலும் எள்ளுக்குளெண்ணைபோலவும் பாலினுள்வெண்ணையைப்போலவும் எல்லாவுயிர்களுக்குள்ளும் புரம்புமாகவும் வசிக்கும் எமபெருமான் பதினொருகிராமத்தினு மிருந்து விபவங்களை நடத்துவது ஒரு ஆச்சரியமோ? இதுஸ்ரீராமருடைய லீலையேயாம உங்களைப்போல யானுமொரு மனிதனே யாகையால் எனக்கித்தனை சாகசமுளதோ அன்றியும் வாக்குக்கு மனதிற்குமெட்டாத பரம்பொருளாகிய பகவானுக் கிதுவொரு அருமையோ எல்லாம் அவனுடையதிருக்கூத்தே யாகுமென்றுமேலும் கிருஷ்ணாவதாரத்தில் ஒருநாள் கிருஷ்ண பகவான் கோக்களைமேய்த்துக் கொண்டிருக்கையில் அந்தகோக்களையு மதன்கன்றுகளையும் பிரமதேவன் திருடிக்கொண்டுபோ யொளித்துவைத்துக் கொண்டான் அதையறிந்து கோவிந்தன் எந்தெந்தப் பசுக்களெந்தெந்தநிறமோ எந்தெந்தக்கன்றுகளெந்தெந்த நிறமோ அந்தந்தப் பசுக்களின் நிறமாகவும் அந்தந்தக் கன்றுகளின் நிறமாகவும்ரூபமெடுத்துக்கொண்டு ஆறுமாதகாலம் சஞ்சரித்துக் கொண்டிருந்த மாயாசொரூபனாகிய பகவானுக்கு ஒரேஇரவில் பதினொருகிராமங்களிலுந் தானொருவனே நின்று காலக்ஷேபஞ் செய்துக்கொண் டிருந்ததோர் பெரிதோ அப்படிப்

பட்ட மகாஜபாவருடைய சொல்லமுடியாத நடவடி
க்கைகளைச் சொல்லவும் மனதில்நினைக்கவும் முடியாத
அருமையாகிய அவன்பெருமையையும் அருமையை
யும் என்னால்சொல்லவும் நினைக்கவும் எளிதாகுமோ
உண்மையிலே எனக்கொன்றுந் தெரியாதென்றுசொ
ல்லி மௌனமுற்றிருக்கையில், கிராமஸ்தர்கள் இது
அளவிட்டுச் சொல்ல முடியாதகாரிய மாகுமென்று
மெத் ஆச்சரியப்பட்டுக்கொணடே தங்கடங்களிருப்
பிடத்தைநாடிச் சென்றார்கள் சிலர் இந்ததாசர் பரி
சுத்த ஆத்துமாவென்று நடவடிக்கைகளைச் சொல்லி
சந்தோஷித்தார்கள் இந்தப்படிக்கி தாசரையாவரும்
புகழ்ந்துக்கொண்டாட பிரசித்த கீர்த்தியடைந்திருக்
கையில், சிலதுஷ்டர்கள் வந்து தாசரைக்கண்டு ஐயா
அரிதாசரே வேதசாஸ்திர புராணங்களைக் கொண்டு
எங்களுடன் வாதம்புரியவேணும் அப்படிக்கி வராவி
டிலும்மைப் பிடித்துக் கட்டியுருட்டி வுமக்குண்டான
கீர்த்தியைக் கொள்ளைகொண்டு போவோமென்று
பயமுறுத்தினார்கள் அதற்குதாசர் அணுவளவேனும்
பயப்படாமல் அவர்களெதிரினில்நின்று ஓங்காரசத்த
மொன்றுண்டாகும்படிச் செய்தார். அந்தஒ லியைக்
கேட்டு வாதிகள்யாவரும் கையுமெய்யுஞ் சோர்ந்துப்
பூமியின்மீது மரணமடைந்தவர்கள்போல விழுந்தார்
கள். அதைக்கண்ட தாசருக்குப் பூததயைப் பச்சாத்
தாபமேலிட்டு அவர்களைத் தாரகமந்திரத்தினு லெழு
ப்பி அவர்களைநோக்கி அடாமூடர்களே! ஏதோசில
தேசங்களிற்சென்று கையிலாகாதசிலரைவென்றகெர்
வத்தினாலே இங்குவந்து என்னைவெல்ல வெத்தனப்
பட்டீர்கள் உங்களுக்குக் கிடைத்த தண்டனைபோது
மா அல்லது இன்னுமென்னுடன் வாதம்புரிய வெண்
ணங்கொள்ளுகிறீர்களா உங்களெண்ணத்தை தெரிய
ப்படுத்துங்களென, அத்துஷ்டர்கள் தாசரைக்கண்டு
மெத்தபயங்கொணடு நடுநடுங்கி அவர் திருவடிகளில்
விழுந்து பணிந்தெழுந்து கைகளைக் கூப்பிக்கொண்டு
ஓசுவாமி! தங்களுடைய மகிமையை யறியாமல்ஏதோ
தெரியாத்தன்மையால் வாதத்திற்கழைத்த குற்றத்
தைக்ஷமித்து எங்களை யாட்கொள்ள வேணுமென்று
இனியமொழிகளைப்பகர, தாசர் அவர்களை மன்னித்து
இனி எவர்களிடத்துஞ்சென்று இப்படிகெர்வத்தினால்
வாதம்புரியும்படி வற்புருத்தவேண்டாம் என்சொல்
லைத் தவிர்த்து ஏதோ ஒருவேளை இத்தொழிலுக்குப்
போவீர்களேயாகில் அபஜெபமும் அவமானமும்பட்
டுச் சிலநாளில் பேரில்லாமல் மாய்ந்து போவீர்க
ளென்று சாபங்கொடுத்துப் போய் வாருங்களென்று
விடைதரப் பெற்றுக்கொண் டேகினார்கள். பினபு
தாசர் சிலநாள் அங்குவசித்திருந்து தீர்த்தயாத்திரை
செய்யக் கோரிக்கையுண்டாகிப் புறப்பட்டு அனேக
புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி மறுபடியும் திரும்பி
சாபலபுரத்தையடைந்து பகவந்நாம சங்கீர்த்தனஞ்
செய்துக் கொண்டிருந்தார்.

இவ்வணம் தாசர் சாபலபுரத்திலிருக்கமாஹெறா
ளிக்கிராமத்தில், மாருதியைப் பூசித்துக்கொண் டிரு
ந்த உத்தவனெனுஞ் சிஷனானவன் ஒருநாள் அகங்க
ளித்து முகமலர்ந்து அன்பாய்த் தென்பாய்த் தன்னை
மறந்து கீர்த்தனைகளைப் பாடிக்கொண் டிருப்பதைத்
துலுக்கதுறை யொருவன்கேட்டு மெத்த சினங்கொ
ண்டு தூஷணவார்த்தைகளைவிண்டு விரைந்து கதை
யை நிருத்துமென்று சொல்லித் தூதனொருவனை யனு
ப்பி அதோ அந்தத்துஷ்டனை பினகட்டாகக கட்டிக்
கொண்டு வாவென்று நேமிக்க அந்தப்படியே அத்
தூதன் சென்று உத்தவனைப்பிடித்துக்கட்டப்போகை
யில், அவ்வூரார்கணடு தூதனைநோக்கி ஐயா, சோப்
தாரரே இவர்மெத்தசாது என்னேரமும் பகவந்நாம
சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டிருப்பவர் இதரவிஷ
யங்களைக் கனவிலும் நினையாத பரிசுத்த ஆத்துமா
வாகும் இவரென்னகுற்றஞ் செய்தாரென்றுப் பிடித்
துக்கட்டப் போகிறீர் வேண்டாம் இவரை விட்டுவிடு
மையாவென்று வெகுவாக வேண்டிக்கொண்டும் அந்
தத்தாமசசித்தனாகிய துலுக்கன் சற்றேனும் யோசிக்
காமல் அவர்களைத்துரத்தி உத்தவரைப்பிடித்து அடி
த்துக்கட்டிக் காவலில்வைத்துக் காஜியை யழைத்து
இவனுக்கு சுன்னத்துசெய்துப்பிராமணதுலுக்கனாகச்
செய்யுமென்று சொல்லிக்கொண் டிருக்கையில் உத்த
வர்மெத்த விசனமடைந்துத் தன்குருநாதரை நினைத்
தமாத்திரத்திலவரும் காலஹரணஞ்செய்யாமல்விரை
ந்தோடிவந்து உத்தவனருகில்நின்றிருக்க அப்போது
காஜியானவன் உத்தவரைக் கிட்டிவந்து சுன்னத்து
செய்ய வெத்தனிக்கையில், தாசர்கண்டு அந்தக்காஜி
யன்தேகமும் மனமும்நடுங்கும்படிபெருத்தஇடியோ
சை யொன்றுண்டாகும்படிச் செய்தார் அவ்வோசை
யைக்கேட்ட காஜியானவன் இடியோசையைகேட்ட
நாகம்போலேங்கிப் பூமியின்மீது மூர்ச்சையாகிவிழுந்
தான் ஒருஜாமங் கடந்தபின்னந்தக் காஜியெழுந்துப்
பணிந்து ஓஐயா இனியுமதிஷ்டப்படி யாதொருசங்
கடமின்றிப் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொ
ண்டிமென்று தண்டனிட்டுப் போகவிடையளித்தான்
அப்போதுதாசர் உத்தவரை யழைத்துக் கொண்டு
ஆஞ்சநேயர் ஆலயத்தைநோக்கி வருகையில் அக்கி
ராமவாசிகள் யாவருங்கூடி தாசரின்பொருட்டு ஆஞ்ச
நேயருக்குத்தக்கப் பூசைகள்செய்து பலவாறு பஜனை

கீர்த்தனைகளைப்பாடி வேண்டிக் கொள்ளத் தாசர் ஆனந்தித்து அதைவிட்டும் புறப்பட்டு மறுபடியும் சாபலகிராமத்தைச் சேர்ந்து சிஷ்யர்களையழைத்து நீங்களின்று முதற்கொண்டு பட்டணங்கள் கிராமங்கள் குக்கிராமங்கள்தோறுஞ்சென்று அங்குள்ளபக்தர்கள் பாமரர்கள் யாவருக்கும்பகவந்நாமத்தின்மகிமைகளை யோதி பகவத்பக்தர்களாகும்படி திருத்துப்பாடு செய்துவாருங்களென்று நேமித்தனுப்பஅவர்களுமந்தப்படியே குருவின்சொல்லைக் கடவாமல், அக்கிராமத்தைவிட்டுப் புறப்பட்டு பாகநாகரமெனு மோர்பட்டணத்தைச் சார்ந்து அங்குகேசவபக்த ரென்றொருவரிருந்தார் அவரிடத்திற்குச் சென்று பச்திசிரத்தையுடன் பஜனைசெய்துக்கொண்டு தாசருடைய கீர்த்திப்பிரபாவங்களைப் புகழ்ந்து மகிழ்ந்திருக்க அதனைக் கேசவ பக்தர்கேட்டுக் கொண்டிருந்து அப்படிப்பட்ட மகுத்துவம்பொருந்திய அந்தஉத்தமரைச் சேவித்தால், ஜென்மசாபலிய மாமென்றும் போவதற்குச் சமயம் வாய்க்கவில்லையே இதற்கு நானென்செய்வேனென்றும் பலவாறுயோசித்து பத்திரிகையொன்றெழுதி அதையொரு பிராமணனிடங்கொடுத்து ஓபிராமணோத்தமரே இப்பத்திரிகையைக் கொண்டுபோய் சமர்த்தராம தாசரிடமீந்து வரக்கடவாயென்று சொல்லி வழியில், பசிதீநம்பொருட்டு ஒருசேர்அரிசியும் அதற்குத்தக்க சாம்பாரங்கள்முதலானதுகளும்தந்து அனுப்ப அப்பிராமணரும் அந்தப்படியே தாசரிருக்கும் வனத்தைநோக்கி நடந்து மார்க்கத்திலுள்ளவனங்கள் வனாந்திரங்கள் பர்வதங்கள் குகைகள் அதில் வசிக்கும் துஷ்டமிருகங்கள் கண்டபேரண்டாதி பறவைகள் பட்டணங்கள் கிராமங்கள் நதிநதங்கள் முதலானதுகளையும் பார்த்துக்கொண்டே நடந்து ஒரு பக்ஷம் பதினைந்துநாளையில் தாசர்வசிக்கும்வனத்தைச்சேர்ந்தார் அதுபரியந்தம் தனக்குக்கொடுத்த ஒரு சேர் அரிசியுஞ் சம்பாரங்களுஞ் சரியாயிருந்தன உடனே அப்பிராமணன் தாசரைக்கண்டு சேவித்து பத்திரிகையை யவரிடங்கொடுத்தார் தாசரும் அப்பத்திரிகையைக் கைக்கொண்டு அதைப்பிரித்துவாசித்துப் பார்த்து அதிலுள்ளகருத்தை உணர்ந்து அப்பிராமணரைப் பலவிதமாகப் பூசித்துத் தனக்கு கேசவபக்தர் வந்தனந்தந்து பத்திரிகையில் வரைந்திருப்பதியாதெனில் ஓசுவாமி திருமந்திரமானது மூன்றுபதமாகப் பிரியும் திருமந்திரத்திற்கு காணரூபமுடையவர் நீராகையால், கின்னை சித்திரரூபமாகுந் தேகத்துடனே அடியேன்சேவிக்க வெண்ணினேன் அன்றியும் சுத்தமான யோகசாதனஞ் செய்கின்றீரென்றுங் கோரினேன் மேலும் அனுவளவேனுங் ஞானமில்லாதவனுமாகிய இவ்வேழையின் மீதிற்கிருபைசெய்யவேணும் இதுவே அடியேனது விஞ்ஞாபனம் என்றெழுதியிருந்தமையால், தாசர் மெத்த சந்தோஷித்துக் கடிதங்கொண்டுவந்த பிராமணனுக்குவஸ்திரங்களளித்தார் இதைக்கண்டு சிவாஜிமகாராஜனும் அந்த பிராமணனுக்குத திருப்தியுண்டாகும்படி வெகுபொருளைக் கொடுத்தார் உடனே தாசர்பதில் கடிதமெழுதி பிராமணன் கையினில் கொடுத்ததன்றியும் ஒரு சேர் அரிசியுமீந்தார் இதுகளைக்கைக்கொண்டுஅந்தபிராமணன் தாசரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு நடந்து தன்கிராமத்தைச் சேர்ந்துக் கடிதத்தைக்கேசவசுவாமிகளிடங்கொடுக்க அவருமக் கடிதத்தைப் பிரித்துப்பார்த்துக் கண்டுகொண்டார் அதிலடங்கிய தாத்பரியத்தையும் அந்தப்பிராமணனுக்கும்ஒருசேர் அரிசி வழிப்பிரயாணத்திற்குப் பசிதீர்ந்து சரியாயிருந்தது அன்றியும் மூன்றுபதங்களாகப் பிரிக்கப்பட்ட வாக்கியார்த்தத்தை பரிசோதித்துச் சமாதியிலிருப்பார் சதானந்தகரமாகியும் அட்சராதீதமாகியும் விளங்கப்பட்ட தாசர் சரிப்பட்டு மிருக்கக்கண்டு கேசவசுவாமிகள் யோசிக்கின்றார் விரைநெல்லை சட்டியிற் போட்டுவறுத்து மருபடியும் அந்நெல்லைவயலில்விரைத்தால், அதுமுளையெடுக்காதது போல தாசருடைய சங்கமத்தினாலே நமக்கு மறுஜென்ம மில்லவேயில்லையென்று வெகுசந்தோஷங்கொண்டு இவருடைய மகிமையும் ஒருசேர் அரிசியினால் நன்றாக விளங்கப்பட்டன.

இந்தப்படியாக கேசவசுவாமிகள் மகுத்துவமும் தாசருடைய மகுத்துவமும் சரியாயிருக்கக் கண்ட கிராமஸ்தர்கள் யாவரும் இருவரையும் வெகுவாகக் கொண்டாடி சந்தோஷித்திருக்க தாசர் ஒருநாள் சாபலக்கிராமத்தைவிட்டு சிஷ்யர்கள் சமேதராய்பண்டரிபுரத்திற்குப்போக உத்தேசித்துப் புறப்பட்டுப்போகையில் சிவாஜிமகாராஜனும் பூரணப் பிரியத்துடன பண்டரிக்கிப்போக வெண்ணி நடந்தார் அப்போது பண்டரியிலென்ன விசேஷமென்னில் கார்த்திகைமாதத்து ஏகாதசியானது கௌசிக ஏகாதசிமெத்தவிசேஷமாதலால் தாசரும் அரசனும் யாத்திரை செய்யும் பொருட்டுப் பண்டரியைநோக்கிநடந்துபண்டரிபுரத்திற்குச் சமீபமாய்ப் போகிறபோது பாண்டுரங்கன் நிவாசமாகும் சந்நிதியைக்கண்டும் கோபுரக்கலசங்களாலும் ஆகாசத்தையளாவிய ஸ்தூபியினாலும் மதிற்சுவர்களினாலும் வாகனமண்டபங்களாலும் விளங்கப்பட்ட அப்பண்டரிபுரத்தின் மகிமையும் அங்கெழுந்தருளியிருக்கும் சாதுசங்கங்களின் பெருமையையும் சந்திரபாகாநதியின் அருமையையும்சேவித்து ஆனந்

தக்கண்ணீர் சோரவிட்டுக்கொண்டு பீமநதியில் ஸ்நானுட்டானங்களை முடித்துக்கொண்டு சந்நிதிக்குட்புகுந்து பகவானைக்கண்டுசேவித்தும்ருக்மணிபிராட்டிக்கிவந்தனந்தந்து சந்நிதியை வலம்வந்து துவாரத்தினில் நின்று அனேகபக்தர்கள்செய்யும் பஜனையையுங்கேட்டுப் பரமானந்தமடைந்து தன்னை மறந்துத் தலைவனிற்கலந்து ஆடியாடி யகங்கரைந்துருகி பித்தனைப் போலவும் பேய்பிடித்தவனைப் போலவும் திரிந்து கெருடனேறித் திருவீதி வலம்வருகிற பாண்டுரங்கனுதனுக் கெதிர்வந்து சேவித்துப்பாகவதர்கள் ஒருவருக்கொருவர் பணிந்து போற்றவும் வெகு ஆடம்பரத்துடன் மாடவீதியை வலம்புரிவிக்கும் சமயத்தில் துகாராம்சுவாமிகள் ஹரிகீர்த்தனைகள் செய்துக்கொண்டிருக்க அவிடத்தில்தாசர் உட்கார்ந்திருக்கஅப்போது பூபதிவினயமாகபண்டரிநாதனை சேவித்துஅங்கொரு வீட்டைக் குடிக்கூலிக்கு யெடுத்துக்கொண்டு பஜனைகீர்த்தனைகளைக் கேட்டுக்கொண்டிருந்தான் அந்தஅடியார்கள்சொல்லுங் கீர்த்தனைகளானது அதிகமதுரமாக யிருந்தமையால், கண்ணிமைக் கொட்டாமல், கேட்டு ஆனந்தித்துக்கொண்டிருக்க இதற்குள் பொழுதுபோனமையால் துக்காராம்சுவாமிகள் மங்களராத்தியெடுத்து மிகவும் வினயமாய்ப் பாடுகையில் நாமகோஷ்டம் அதிகரித்துப் பெருத்த தொனிகொண்டுப் பாடியாடி அன்றுதினம்நடந்த பஜனையின் கோலாகலத்தை நானென்னவென்று சொல்லுவேன் ஆயிரம்பணாமுடிகளு மிரண்டாயிரம் நாவும்படைத்த ஆதிசேஷனு லாகாதென்றால், என்னால் சொல்லத்தரமோ அன்றியும் தாசர் அன்றிரவெல்லாம் புண்டரீகனது சந்நிதானத்தில் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருக்கையில் கனதனவான்களும் பக்தர்களும் அருமையாகக்கேட்டும் சேவிக்கையில் மனமானது ஸ்ரீராமருடைய குணானுபவத்தால் சொக்கி மெய்சோர்ந்து அருணோதயமானபோது அரிவிட்டல விட்டலவென்றுபெருத்த தொனிசெய்துக் கதறினார்கள். உடனே மங்கள ஆரத்திகள் கொடுத்து பீமநதியில், ஸ்நானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அரசன் துவாதசிபகரணைக்குச் செய்வித்தும் ததியாராதனைக்குச் சென்று அங்கு பாகவதப்பிரசாதம் நமக்குக்கிடையாது அரிதாகுமென்று இடைந்து நின்றார்கள் இதைக்கண்டு அரசன் அவர்களை சமீபத்திலழைத்துத் தக்கவிடத்தில் உட்காரவைத்து யாவருக்கும் பரிமார யாவரும் புசித்துத்தாம்பூலம் புஷ்பம்சந்தணம் யாவத்து மெடுத்துக்கொண்டு வெகுஆனந்தமாக போகிறசமயத்தில் அரசன் யாவரையும் போகவொட்டாமல், தடுத்து பூரிவிசேஷமாகக்கொடுக்க அவைகளைப்பெற்றுக்கொண்டு சந்தோஷத்துடனிருக்க அவிடத்தில் தாசருட்கார்ந்து தாசபோதக் கிரந்தத்தை சிஷர் வாசிக்கத் தான்வியாக்கியானஞ்செய்யச்சிலபண்டிதர்கள்கேட்டு இதுவென்ன ஆச்சரியம் முன்ன மிந்தகிரந்தத்தைபதினான்கு பிரமாக்களழிந்து போகும்பரியந்தம் ஒரு சிஷனேவாசித்தான் என்றுசொன்னாரன்றோ அவ்வளவு நீடித்தகாலம் சொன்னானென்றும் இந்தத்தாசர் வியாக்கியானஞ் செய்தாரன்றோ இதுமெத்த சந்தேகத்துக்கிடமா யிருப்பதால், இந்தச்சந்தேகத்தை நிவர்த்திசெய்யும் பரியந்தம் இந்தசமர்த்த ராமதாசரை விடுகிறதில்லையென்று சொல்லக்கேட்டு தாசர்சந்தோஷத்துடன் ஒருபக்கத்தைப் பார்க்க அங்கிருந்து ஓர் மனிதன் பெருத்த கூக்குரலிட்டுக்கொண்டு தலையின் மீது பெருத்த பாரத்துடன்வந்து தாசர்முன்னம்நின்றான் அப்படிநின்ற மனிதனைநோக்கி தாசர் சமீபத்திலழைத்த மாத்திரத்தி லவன் தலைமீதிருக்குஞ் சுமையை யிரக்கிவைத்து தூரத்திலேதானே நின்று தெண்டனிட்டான் அதைக்கண்டுதாசர் நீயாரப்பாவென்று தயையுடன்கேழ்க்க அவனும் ஓசுவாமியான் அனுமிகன்யென்று சொல்லத்தாசர் அங்கொரு கோடுகிழித்து ஓஅனுமிகா விரைவாக நீ இந்தக்கோட்டிற்குள்வாருமப்பாவென அவனு மந்தப்படியே கோட்டிற்குள் வந்துநின்றான் தாசர் அப்படியவனந்தக் கோட்டிற்குள் வந்தவுடனே நீயாரென்றுவினவினார் அப்போதுமவன் யென்பேர் அனுமிகனென்றான் தாசர் சந்தேகங் கொள்ளாமல் மத்தொரு கோடுகிழித்து இந்தக் கோட்டிற்குள்வாவென அவனுமந்தப்படியே இரண்டாவது கோட்டிற்குள்வந்து நின்றான் அப்பவும் தாசர் அவனைநோக்கி நீயாரென்றுவினவ அதற்கவன் யான் சூத்திரனென்றான் அதைக்கண்டுகொண்டு மத்தொரு கோடுகிழித்து ஓசூத்திரனேஇந்தக்கோட்டிற்குள் வருவாயென அவனுமந்தப்படியே மூன்றாவது கோட்டிற்குள்வந்துநின்றான் அப்படிநின்றிருப்பவனை நோக்கி தாசர் நீயாரென்றுவினவ அவனும்யான்வைசியனென்று விடையளித்தான். என்றிந்தப்படியே க்ஷத்திரியன் பிராமணன்யென்று ஒவ்வொருகோட்டிற்குள்ளும் வந்தபோது ஒவ்வொருஜாதியைப் புகன்றும் அந்தந்த ஜாதிக்கித்தக்கபடி அங்கபேதங்களுண்டாக மேன்மையான பிராமணனாகியும் சோபித்தான அவனைக்கண்டு அருகினிலழைத்து இதோயிந்த பண்டிதர்களுக்குமெனக்கு முண்டாயிருக்கும் சந்தேகத்தை நிவர்த்திசெய்யுமென்ற மாத்திரத்தில் அப்பிராமணன் தாழ்வடையாமல் பண்டிதர் முதலான யாவருங் கேழ்க்கும்படி.

ஓபண்டித பாமரர்களே யான்முன்னமெந்தகுலத்தனாக வெளிப்பட்டேன் முடிவிலெந்தகுலத்தனாகி விருக்கின்றேன் இத்தனையும் இந்தசமர்த்தராமதாசருடையகருணையேயாம இதைவிடயான் விசேஷித்துஞ் சொல்லவேண்டுமோ இதனாலுங்களுக்குண்டா யிருக்கும் சந்தேகத்தை நிவர்த்திசெய்துக் கொள்ளுங்களெனறு சொல்லியபோது பண்டிதர்களெல்லாங் கூடி யோசிக்கின்றார்கள் அதென்னவெனில் நாமித்தனைபேரும் பார்த்துக்கொண் டிருக்கிறபோதே இந்த சமர்த்தராமதாசர் கிருபாநோக்கத்தினாலேயே முதலில் இப்பிராமணன பஞ்சமனாக வந்தான் சமர்த்தராமதாசர் வரைந்தகோடுகளினால் பஞ்சமனாக விருந்தவன்சூத்திரனானான்சூத்திரனாகவிருந்தவனவைசியனானான் வைசியனாகயிருந்தவன்க்ஷத்திரியனாயினான்க்ஷத்திரியனாகவிருந்தவன் பிராமணனாகினான்இவனுக்கிந்த பிராமணஜென்மம் வந்தது யெதினாலென்றால் தாசருடைய மகுத்துவமேயாமென்று சந்தேகநிவர்த்தி செயதுக் கொண்டார்கள் அப்போதுதாசர் அந்தப்பிராமணனை நோக்கி ஐயா பிராமணசிரேஷ்டனே நினது பூர்வஜென்ம விர்த்தாந்தமென்ன அதை சவிஸ்தாரமாகச் சொல்லுமெனப் பிராமணன் தாசரைநோக்கி ஓசுவாமி என்னுடைய பூர்வவிருத்தாந்த மெப்படியெனில் சொர்க்கலோகத்தில் வாசம்பண்ணிக் கொண்டிருக்கும் மலயனென்னுங் கந்தர்வனாகும் யானொரு காலத்தில் ஸ்ரீகளுடன்கூடி ஜலக்கிரீடைசெய்து சுராபானத்தினால் வெறிகொண்டு பெரியோரென்றுஞ்சிறியோரென்றும் மதிக்காமல் அற்பபுத்தியினால் மதிமயங்கியிருக்கிறயோது அந்ததிரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் வந்து என்னைக்கண்டு விஷயாந்திரத்தினில் மெத்தவும் அலண்டு மேலுமேலும் விர்த்தியாகிறதையும்யோசித்து வெகுகோபங்கொண்டு என்னை அழைத்து அடாமலயனே இழிவானகுலத்துயோனிகளில் மூன்றுஜென்மம் எடுக்கக்கடவாயென்றும் மறுபடியும் பூர்வரூபத்தை யடைவாயென்றுஞ் சாபங்கொடுத்துப் போயினார் அந்தப்படியேயானும் உத்தமனாகிய பிராமணன்வீட்டினில் முதலில்குதிரைசெனமமெடுத்து சிலகாலம் வசித்திருந்து அந்தஜன்மத்தையொழித்து இரண்டாவது ஜென்மம் எருமைக்கிடாவாகவெடுத்து வசித்துக்கொண்டு சிலகாலமிருந்துஞானதேவரால் கிருபைசெய்யப்பட்டுஅந்தஜென்மத்தையொழித்து மூன்றாவது பஞ்சமஜென்மமெடுத்துச்சில காலம் வசித்திருந்து காலத்தைப்போக்கித் தேவரீருடைய கிருபாநோக்கத்தால் பஞ்சமஜென்மத்தையொழித்து வைசியஜென்மத்தை யடைந்தேன் அந்தவைசிய ஜென்மத்தை யொழித்து க்ஷத்திரியஜென்மத்தையெடுத்தேன் அந்தக்ஷத்திரிய ஜென்மத்தையு மொழித்து பிராமணஜென்மத்தை யடைந்தேன் இந்தவிருத்தாந்தத்தை வியாசமுனிவர் பவிஷியோத்தர புராணத்தில் எழுதிவைத்திருக்கின்றார் அ[illegible]யிப்போதுஅனுபவயோக்கியதை யாயினதென்றுநவிலக்கேட்டுதாசர் இதுவேதரகசிய மாகுமென்று கூறினமாத்திரத்தில அப்பிராமணன் சிரமவெடித்து ஆயிரஞ்சுக்கலாகிச் சொர்க்கலோகம் போயினார்ஆனந்தமானந்தமென்று சொல்லிக்கொண்டே அவரவர்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள் பின்புதாசர் பண்டரிபுர உச்சவம் யாவும் முடிந்தபின்பு பாண்டுரங்கரிடம் விடைபெற்றுக்கொண்டு சத்துக்களுடைய சங்கத்துடன் புறப்பட்டு சாபலக்கிராமத்தைச் சேர்ந்தபின்பு அரசன் தன்னுடைய நகரத்தையடைய தாசர் நிவாசமாகச் சிலநாள்அங்கு வசித்திருந்தார்.

இவ்வாறுதாசர் சாபலக்கிராமத்தில் வசித்துக்கொண்டிருக்கையில் ஜெயராமரெனும் பக்தரொருவர் வந்து தாசரைக்கண்டு பணிந்து ஓசுவாமி கிருஷ்ண ஜயந்தி பெருத்தஉச்சவம நடக்கிறபடியால் அவ்வுச்சவத்திற்கு தேவரீர் அவசியமெழுந் தருளுவதுடன் ரதோச்சவஞ் செய்விப்பதற்கு ரதமில்லையாகையால் இதற்குநானென்ன செய்வேனென்று விசனப்படுவதைக்கேட்டு சற்றாலோசித்து ஓஜெயராமனே நீசிந்திக்கவேண்டாம் நான் நூதனமாக ஒருரதத்தைச் செய்து யான்வருகிறபோது வுடன்கொண்டு வருகிறேனென்றுசொல்ல வுடனே ஜெயராமன் மகாபாக்கியமென்றுசொல்லி விடைபெற்றுக் கொண்டு சென்றான். பின்புதாசர் மங்களகரமாக சீஷர்களைக்கொண்டுஅழகிய ரதமொன்று செய்வித்து அந்தரதத்துடனேசீஷர்கள்சூழத்தானும் அந்த உச்சவாரம்பத்தி நன்றே சென்று நடந்துபோகிறபோது தாசர்வரவையறிந்து ஜெயராமன் அண்டமுகடுபிளந்து விழுகிறதோயென்னுமாப்போல வெகுவித வாத்தியங்கள்கோஷிக்கசத்திரகாமரங்கள் தோரணங்கள் முதலான மங்கள வஸ்துக்களுடன் யெதிர்க்கொண்டு தாசரைக்கண்டு பணிந்து அழைத்துச்சென்றுத் தக்கவிடுதியிற்சேர்த்து அவரைக்கொண்டே உச்சவங்களை யெல்லாம் நடத்தி நேத்திரோச்சவமாகச் சேவித்து யெல்லா உச்சவமுமுடிந்தவுடன் தாசர் அதைவிட்டுத் திரும்பிச் சீஷர்கள்சூழ புறப்பட்டுச் சாபலூரையடுத்து ஸ்ரீராமோச்சவத்தைநடத்திக் கொண்டிருக்கையில் நாவிதனொருவன்வந்து தாசரைக்கண்டுபணிய ஞானபக்திவைராக்கியத்திற் சிறந்தவனாகி யிருப்பதை தாசருணர்ந்து அவனுக்குபதேசித்து அஸ்தமஸ்தக சையோகந்தெரி

யப்படுத்த அவனும் அதிதீவரதனுதலால் குருசொல்
லியதை அதிகநுட்பமாக வுணர்ந்து யோகசாதனத்
திற்குத் தக்கவனுகவிருந்தான் இவனிப்படிக் கிருக்க
பிராமணனொருவன்வந்து தாசரைக்கண்டு இணங்கி
வணங்கி ஒசுவாமி அடியேன் சம்சாரமென்னும்அந்த
காரவிருளிலகப்பட்டு அதைவிடுவித்துக்கொண்டு வெ
ளிப்பட்டு வரமுடியாமல் அவ்விருளிலேயேமக்னனுய்
கிடக்கும் ஏழையேனைக் கடைக்கணுற்பார்த்துஉப
தேசஞ்செய்துப் புனிதனுகும்படித் திரித்தித்தேவரீர்
திருவடிகளுக்கு ஆளாகும்படி தயவுபுரியு மையாவெ
ன்று வெகுவாக வேண்டிக்கொள்ள தாசர் சந்தோஷ
மடைந்து நாவிதனையழைத்து அப்பாநாவிதா இதோ
நிற்குமிந்தப் பிராமணனுக்கு உபதேசஞ்செய்யுமென
நாவிதன் தாசர்மதிப்படி பிராமணனுக்குத் தாரகமந்
திர முபதேசித்துச்சிலநாளைக்குப்பின் அந்தநாவிதன்
தேக வியோகமடைந்தான தன்குருநாதன் மரணம
டைந்ததைக்கண்டு அப்பிராமணன் மெத்தவும்விசன
மடைந்து முடிவில் ஒருவாறாகத் தேரித்தெளிந்து
உடனே யப்பிராமணன தன்குருவாகிய நாவிதனைக்
கொண்டுபோய் நன்ருகச் சமாதி செய்வித்துப் பனி
ரண்டுநாள் கடந்தபின்பு பிராமணர்களுக்குப் போஜ
னம்வைக்க வெண்ணிப் பிராமணர்களை யழைப்பிக்க
அவர்கள் வரமாட்டோமென்று சொலலுகையில்பிரா
மண்ன் தாசரிடஞ்சென்று அவரைக்கண்டுபணிந்துஒ
'சுவாமி எனதுகுருநாதனுக்கு இன்றையதினம் பனி'
ரெண்டா நாளாகையால் திருவந்தியனஞ்செய்விக்க
வெண்ணி பிராமணர்களை அழைப்பிக்க அவர்கள்வர
மாட்டோ மென்ருர்களென்று சொல்லதாசர் தன்னு
டைய கிருபையானதுப் பிரகாசிக்க மகிமையைக்கா
ட்டினர். அதெப்படியெனில், தாசர்மீது ஆஞ்சநேய
ரும் பிராமணன்மீதுஸ்ரீராமரும் காணப்பட்டமாத்தி
ரத்தில் பிராமணர்கள் போஜனத்திற்கு வந்தார்கள்.
அப்படிவந்தவர்களுக்கு பிராமணன் தளிகையிலேபோ
ட்டு அறுசுவையன்னமும் பரிமாறப் பிராமணர்கள்
போஜனஞ்செய்தபின் சந்தோஷமடைந்தான் சாது
க்களுக்குப் பிரியராகிய சீலசமர்த்தராமதாசர் அந்த
நாவிதசிஷியனுடைய காரியத்தை வெகுநுட்பமாக
நடத்திவைத்து ஸ்ரீராமரை இரவும்பகலும் துதிசெய்
துக்கொண்டு மலையின்மீது சஞ்சரித்துக் கொண்டும்
அந்தஸ்ரீராமரே தனக்கு சகலவிதபந்து வென்றும
பிரியத்தை வகித்துக்கொண்டுமிருந்து ஒருநாள் அந்த
சமர்த்தராமதாசர் ஸ்னநுட்டானங்களை முடித்து
அவ்விடத்தைவிட்டு தூரமாகச்சென்று உட்கார்ந்தி
ருக்கக்கண்ட சிஷர்கள் தாசரைநோக்கிஒசுவாமிதாங்
கள் ஸ்னநுட்டானங்களை முடித்துக்கொண்டு வெளி
யில் வந்திருப்பதற்குக் காரணம் யாதென்றுவினவ
அதற்குதாசர் ஒசிஷர்களே! எனதுதமயன் மரணமா
யினன் ஆதலால் எனக்கும் பத்துநாளைய சூதகமிருப்
பதால் அவசியம்யான் சூதகங்காக்க வேண்டியது
பெரியதருமமாகுமென அதற்குசிஷர்கள் இதுவரை
யிலில்லாத தமயன் இப்போதெங்கிருந்துமரணமடை
ந்தார் அவர்மரணமடைந்த செய்தி உமக்கெப்படி
தெரியவந்தது யென்றுவின அதற்குதாசர் மன்மத
னுக்குத் தந்தையாகிய ஸ்ரீராமரனுக்கிரகத்தினல்தெ
ரியவந்ததென இகளையரசன்கேட்டு தூதர்களையனுப்
பிக் கண்டறிந்துக்கொண்டு விரைவினில் வாருங்களெ
ன்று கட்டளையிட அந்தப்படியே தூதர்கள்சென்று
விசாரிக்க தாசருடையசொல் சத்தியமாகயிருந்தமை
யாலவர்களும்அதிகவிரைவினில்வந்து அரசனைக்கண்டு
தாசருடையவாக்கு சத்தியமே என அரசன்கேட்டுத்
தானும்சூதகமநுட்டித்தான் தாசரும் அணுவளவே
னும் ஆசையின்றி யாவத்துகர்மங்களும் அநுஷ்டனு
ட்டித்துக்கொண்டிருக்க அரசன் ஒருநாள் ஆசானை
நோக்கிச் சொல்லுகின்ருர் அதென்னவெனில் ஒபரம
குருசுவாமிகளே! உமதுதமயனது காரியத்திற்கும்
நூறுயிரம் பிராமணர்களுக்கு போஜனம் நடத்தும்
படியான பெருத்தமடமொன்றுகட்டினேன் ஸ்ரீராம
மட மென்று நாமமுமிட்டுச் சர்வசித்தமா யிருக்
கின்றது.

ஆகையால் தாராகணங்களில் சந்திரனைப்போல
வும் மனிதர்களில் அரசனைப்போலவும ரத்தினங்களி
ற் சிரோரத்தினம்போலவும்யோகசாதனத்திற்சிறந்த
எனது சற்குருநாதரே தேவரீர் அங்கெழுந்தருளி
ஸ்ரீராமமட கைங்கரியத்தை நடத்திக் கொண்டிருக்
கும்படி தங்களை மெத்தவும வேண்டிக்கொள்ளுகிறே
னென்று பணியும் அரசனைநோக்கித் தாசர் சொல்லு
கின்ருர்.

சேளும்அரசனே! இதோபார்த்திரா, இங்குளத்
தனைப் பிராமணர்களுக்குப் போஜனஞ் செய்விக்கவா
ம்சொல்லும் கோடி பிராமணர்கள் வந்தபோதினும்
இருக்கவும் படுக்கவும் புசிக்கவுந்தக்கயிடம் அகண்ட
மாயிங்கிருக்கின்றது இப்படிப்பட்ட விசாலமானயிட
த்தைவிட்டு லட்சம் பிராமணாகள் போஜனஞ் செய்
யும்படிக்கட்டிய ஸ்ரீராமமடத்தில் அந்தலட்சம் பிரா
மணர்கள் படுக்கயிடம் போதுமா போதாது ஆகை
யால் சகலமும் இங்கிருக்கின்றன இதைவிட்டு அற்ப
மாகிய இடத்தை ஸ்ரீராமமடமென்று கட்டி அங்கெ
ன்னை வரச்சொல்வது ஞாயமோ, மேலும் ஒ அரச
னே! உமக்கிருக்கும் சகலசொத்துக்களையும் ஸ்ரீராமா

ருடைய சொத்துகளென்றுகருதவேணும்அப்படிக்கி
யெண்ணுமல் மனதினில் அந்தசொத்துக்களை தன்ன
தென்று கருதியிருப்பது அவிவேகம், அன்றியும் அர
சனே! பக்திநிஷ்டை யுடையவனுகி பகவானைக்கண்டு
சேவிக்கவேணடும் இப்பிரபஞ்சமாயையை யடியோடு
மாய்ப்பதற்கு இதுவேதக்கயவிழ்தம் ரக்தியில்லாமல்
அழிந்துப்போகும் வஸ்துக்களை மனதினி லெண்ணு
மல் ஸ்ரீராமரொருவரைக் கண்டு சேவிப்பதன்றேமே
னமையான மானிடஜென்ம மெடுத்ததற்குப் பலன்
என்று சொல்லிக்கொண்டேதாசர் நகரத்தை நோக்கி
வந்து அவ்வரசனது குறையைத்தீர்க்கும்பொருட்டுப்
பாதசாரியாகநடந்து நகரத்தைச் சேர்ந்தார். உடனே
அரசன் குருநாதனை பற்பலவிதங்களாகப் பூசித்துத்
தக்கபடி மரியாதையுடன் துக்காராம்சுவாமிகள் முத
லானவர்களை அழையுங்களெனறும் இந்தப்படியாக
தாசர்சொல்ல அரசன தூதர்களை யழைத்து அடா
தூதர்களே! சிக்கிரம் நீங்கள் துக்காராம் முதலான
சாதுக்களை யானழைத்துவரச் சொன்னதாகச் சொ
ல்லி அழைத்துவாருங்களென்றுசொல்லியனுப்ப அந்
தப்படியே தூதர்களும்சென்று துக்காராம் முதலா
னோரையும் அழைத்து விரைவினில்வந்து அரசனுக்
கறிவித்தார்கள் உடனே துக்காராம் முதலானோரு
இன்னும் வெகுதூரத்திலிருந்தும்அனேகதாசர்களும்
வந்துசேர்ந்தனர் பிராமணர்கள் வெகுபேர்கள்வந்து
விசேஷ உச்சவத்தைப்போலசேர அப்போதுஅரசன்
அங்குவந்ததாசர்களைப் பலவாறுபூசித்து அவரவர்க
ளுக்குவேண்டிய வஸ்துக்களை யீந்துத்திரிப்தி யடை
யச்சிறிதிண்டிப் பலகாரங்களுங் கனிவர்க்கங்களும்
அறுசுவை யன்னங்களும் சமைத்து எவரெவர்களெ
தை யெதைக்கோருகிறார்களோ அவரவர்களுக் கதை
யதைக்கொடுத்துத் திருப்தியடையும்படிச் செய்து
சாதுக்களுடன்கூடி பற்பலவிதங்களாய்ப் பாடியாடி
பஜனைசெய்துக் கொண்டும்சிலர் தன்னைமறந்தாடியும்
சிலர் அகங்கரைந்துருகியும் இப்படிநவவிதபக்தி செய்
துக்கொண்டு ஒருமாதகாலம் இரவென்றும் பகலென்
றும் தெரியாமல், பகதிசெய்திருந்து ஸ்ரீராம மடத்
தைப் பாவனமாகவும் புனிதமாகவும் செய்துத்தங்க
டங்கள் ஊரைச் சேர்ந்திருக்க இங்கேதாசர் அரசனை
நோக்கி ஓஅரசனே இத்தனைசாதுக்கள்வந்து பஜனை
செய்து ஆனந்தித்துப்போயிருக்க நீர்மாத்திரம்பஜனை
செய்யாமலும் அகங்கரைந் துய்யாமலுமிருப்பதுதகு
தியேசவென அரசனும் அந்தப்படியே தம்பூருங் கர
தாளத்துடனின்று பஜனைசெய்துப் பாடியாடி மனங்
கரைந்து ஆனந்தக் கண்ணீர்விட்டு மெய்மறந்துருகி
வாடி பகவானைத்தேடி மயிர்க்கூச்சிட்டு புளகாங்கித
மடைந்து மனம்போனபடி பஜனைசெய்து மெய்சோர்
ந்துப் பூமியின்மேல் வீழ்ந்துவிட்டார்.

உடனே யரசன்தெளிந்துகுருநாதரைப்பார்த்த
வண்ணம் ஆர்த்தியுடன் பிரார்த்தித்தார் அதைக்
கண்டுதாசர் ஓஅரசனே! இந்தக்காயமானதுபூமியின்
மீதிருக்கும்பரியந்தம் இந்தப்படி பஜனைசெய்து உஜ்
ஜீவிக்கக் கடவாயென்றுசொல்லி ஆசிகூறக்கேட்டஅர
சன் குருநாதரைநோக்கி ஓசுவாமி தேவரீர்காயமிருக்
கும்பரியந்தம் இம்மடத்திலேயே யிருந்துவசித்து ஏ
ழையேனைப் புனிதனாகும்படிச் செய்யவேணும் யெ
ன்று பிரார்த்திக்க தாசர் ஓஅரசனே ஒரேயிடத்தில்
வசித்துக் கொண்டிருந்தால் பந்தங்களுக் கிடமாகும்
ஆதலால், எங்குவசித்துக்கொண் டிருந்தபோதிலும்
அப்போதைக் கப்போதுவந்து போகிறேன் என்று
சொல்லி சிஷர்களுடன் அப்பட்டணத்தை விட்டுப்
புறப்பட்டு நடந்து எவத்யா யெனுமூரைச் சேர்ந்து
அங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும்
சாம்பசிவமூர்த்தியின் சந்நிதானத்தைக்கண்டு வெகு
வாகப் பாட்டுகளைப்பாடி சிவபெருமானை வேண்டிக்
கொள்ள அச்சிவபெருமானும் தாசரை வெகுவாகப்
புகழ்ந்துக் கிருபைசெய்தார் அவரருளைப் பெற்றுத்
தாசர் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு நடந்து சஜ்ஜன
கடியெனும் ஊரைச்சேர்ந்து சுகமுடனிருக்க அன்றி
ரவில் அம்பிகையும் சாவித்திரியுமெனும்பார்வதி இர
வினில் தாசருடைய சொறபனத்தி லெழுந்தருளி ஓ!
அரிபக்தரே எல்லாதேவதைகளின்மீதும் பதங்களைப்
பாடி ஆனந்தத்தையடைந்தாய் எனமீதுஞ்சிலபதங்க
ளைப்பாடும் என்றும் அப்பதங்களைக் கேட்டு யெல்லா
ஜெனங்களும் உஜ்ஜீவிக்கும்படி மனதை நிலையில்நிறு
த்துமென்றும் பகரும் பவானியைநோக்கி தாசர்சொ
ல்லுகின்றார் ஓஅம்மணி உமாமயேஸ்வரி நின்மீதுயான்
பதங்களைப்பாடுகிறேன் யான் பாடும்பதங்களின்கஷ்
டத்தையறிந்து யதற்குத்தக்கபடி முத்துக்கடுக்கனை
எனக்குக் கொடுமென்றும் வேண்ட அந்தப்படியே
யாகட்டுமென்றுசொல்லி அம்பிகை மாயமாய் மறை
ந்துவிட்டனள் அன்னாள்கடத்திமருநாளிரவினில்அம்
பிகை சந்நிதானத்திற்கு தாசரெழுந்தருளி வேண்டிக்
கொள்ள அம்பிகை தாசரைநோக்கி ஓசாது சத்புத்
ரரே இந்தநடுராத்திரி வேளையிலிவ்விடத்திற்கெப்படி
வந்தாயென அதற்குதாசர் ஓஉமையெ நீவருவதைப்
போல விசாலமாக யானும்வந்தேனென அதற்குப்
பவானி சந்தோஷித்து தாசரதுசெவிகளில், கடுக்க
னைப் போட்டனள் உடனேதாசர் நூதனமாகப்பதங்
களை வெகுநயமாகப்பாடி சந்தோஷித்திருந்துயாருக்

குந் தெரியாமல், தாசர் சந்நிதிக்கெழுந்தருளி யிருத்துக்கொண்டு அம்பாளுக்கு தாசர் பதிலுக்கு முத்தாரம்போட அந்தஆரமானது யாவருக்கும் வெளிப்படையாகக் காணப்பட்டது அதையக்கோயிலர்ச்சகன் கண்டு ஆச்சரியப்பட்டு அவ்விந்தையை யரசனுக்குத் தெரியப்படுத்தினன் அதைக்கேட்டு அரசன் இதென்ன விந்தையிலும் விந்தையாயிருக்கிற தெனக்கருதி ஆசானுக்குச் செய்தியைத் தெரியப்படுத்தஅவருமிதினுண்மை நாளையதின மிரவிற்காணலாமென அந்தப்படியே நாளையதினங் போகலாமென்று அரசன் அந்தப்புறத்தை யடைந்தான் மருநாளிரவினில் அம்பா அரசன்சொற்பனத்தி லெழுந்தருளி நடந்தசெய்திபைத் தெரியப்படுத்தக் கேட்டு அரசன் பரிசுத்தமனதுடன் மருநாளிலும் சந்நிதிக்கு ஓடோடியும் வந்து கோயிலுக்குட்சென்று குருநாதனைக்கண்டு சேவித்து பூஜாதிரவியங்களைக் கொண்டு அர்ச்சனை யாராதனை முதலிய தூபதீபநைவேத்தியங்களை தந்து பூசையாய்ப்பார்க்கும்போது குருநாதன்செவிகளில் கடுக்கனைக் கண்டு இதேதுகடுக்கனென தாசர் அம்பாள் கொடுத்தனளென அதற்கரசன் ஓசத்குருநாதரே துறவுகோல் எப்படிகிடைத்தது எவ்வண்ணம்திறந்தாயென தாசர் நானொருவன் ஸ்ரீராமரை யெவ்விடத்திலுங்கண்டுகொண்டிருக்கையில், பரிபூரணமாகும் அவரது கிருபையினால் பிரவேசிக்கமுடியும் இவ்வுலகெங்கும் மரப்பு திரப்பாகவிருக்கும் பிரகாசம் பொருந்திய மனதிற்குபந்தங்களானது எவ்விடத்தும் நீங்கும்யென அரசன்சந்தோஷித்துச் சென்றனர். பின்புதாசர் அந்தஸஜ்ஜனகடியெனு மூரினிலிருந்து வாசஞ்செய்கையில் அவ்வூரினில்வசிக்கும் பாதசிரயனெனும் வர்த்தகன் வியாபாரஞ் செய்யும்பொருட்டு கப்பலில் சரக்குகளையேத்திக்கொண்டு தீவாந்தரங்களுக்கும் போகையில் தானியம் தனத்துடன் கப்பல்முழுகிப் போகையில் அவ்வர்த்தகன் தாசரைநினைத்து வெகுவாக வேண்டிக்கொண்டமையால், அதெதபபடி யெனில் கடலினில் கப்பல் முழுகாமலும் நன்றாக யிருக்குமாயின் பத்திலொருபாகம் குருநாதனுக்குக் காணிக்கை சமர்ப்பிக்கிறேனென்று வேண்டிக்கொண்ட படியால் தாசர் அவ்விடத்திற்கெழுந்தருளி அக்கப்பலைமுழுகிப்போகவொட்டாமல் தக்கமுயர்ச்சி செய்தமையால் அபாயமின்றி யக்கப்பல் சிலநாளையில், தன்னூரையடைந்து இருப்பு ரூபாய்களையும் சரக்குகளையுங் கணக்கிட்டு மொத்தஞ்செய்த ரூபாயைப் பத்திலொரு பாகத்தை யெடுத்துவந்து தாசர் திருவடிகளில் காணிக்கையாக வைத்து தெண்டனிட்டான் அப்படி தெண்டனிட்ட வணிகனை தாசர் ஆதரித்து ஓவணிகனே இந்தரூபாய்களனக்கேதுக்கென வணிகன்வணங்கி ஓசுவாமியான் தீவாந்தரங்களிற்சென்று வியாபாரஞ்செய்யும் நிமித்தியங் கப்பலில் பலவிதசரக்குகளை ஏத்தும்திசெய்துக் கொண்டுபோய் வியாபாரஞ்செய்துத் திரும்பிவருகிறபோது கப்பலுக்கு ஆபத்துநேரிட்டு முழுகிப்போகிறதாயிருந்தது அப்போது யான்மிகவுந் தவித்துத்தேவரீருடைய நாமத்தைச் சிந்தித்து கப்பலுக்கெந்த ஆபத்துங் நேரிடாமல், சுகமாய்க்கப்பல் ஊரைச்சேருமாகில் இந்தக்கப்பலி லிருக்கும் ரூபாய்களும் சரக்குகளுங் கணக்கிட்டு மொத்தஞ்செய்து பத்திலொரு பாகத்தைத் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேனென்று பிரார்த்தித்துக் கொண்டேன் ஆகையால்அக்கப்பலானது யாதொரு அபாயமுமடையாமல், வெகுகன்னிதமாய் வந்துசேர்ந்தமையால் தங்களுக்குக் கொடுக்கிறதாக ஏற்பாடு செய்துக்கொண்டபடி இந்தரூபாய்கள் பத்திலொருபங்காகும் இதனைப்பெற்றுக்கொண்டு இவ்வேழை வர்த்தகனைக் காப்பாத்திரட்சிக்க வேணுமென்றுப்பணிந்தான் அப்படிபணிந்த வணிகனை தாசர்ஆதரித்து விடை தந்தனுப்பி வணிகன் தந்தத்திரவியம் யாவத்தையும் பிராமணர்களுக் கீந்து திருப்தியடைந்திருந்தனர்.

இந்தப்படியாக வணிகன்சொல்லித்திரவியத்தை யீந்துப்போயின செய்தியை ஜெனங்கள் யாவருங்கேட்டு மெத்தவாச்சரிய மென்றும் இவர் மகத்துவத்தைச் சொல்ல முடியாதென்றும் தாசரைப் புகழ்ந்துக்கொண்டாடினார்கள் பின்பு அவிந்தியமெனும் பட்டணத்தை யரசாட்சிசெய்யும் அரங்குஜீபெனும் அரசனனவன் அனேகசேனைகள் சூழவந்துதோப்புகளின் மீதுங் துரவுகளின்மீதுங் குண்டுகளைவிடுகையில்அநேகம்ஜெனங்கள் வேதனைப்படுவதைக்கண்டு தாசர்பூததயை பச்சாதாபமுடையவராய் சத்துக்களான நல்லோர்களுக்குப் பிரியனாகும் ஆஞ்சநேயரை நினைத்த மாத்திரத்தில் அனேகம் வானரவீரர்களவகுவந்து அந்த யன்னியன் சேனைகளின்மீதுவிழுந்து மூக்குசெவிகளையுங் கடித்துத்துரத்தினார்கள் அன்றியும்சிலவானரங்கள் கடுமையான கற்களைக்கொண்டு யெதிரியின் சேனைகளையெல்லா மடித்துக்கொன்றார்கள் இதனால் யெதிரியின்சேனைகள் தட்டுகெட்டுத் தடமாடி இவர்களுடன் யுத்தஞ்செய்து மகாகடினமென்றும் நம்மாலாகாதென்றும் நினைத்து சேனைகளெல்லாம் புரமுதுகிட்டோடிப் போயினபடியால் எதிரியரசன் தன்சேனைகளெல்லாம் பெருங்காத்திலடிப்பட்ட பஞ்சுபோலப்பறந்து போவதைக்கண்டு இதவென்ன வானரங்களா ஒவ்வொன்றையும் எமனாகவே கருதவேண்டுமெ

ன்றுன்னி விரைவினிற்றுசரிடம்வந்து மெத்தவினயத்துடன் பணியக்கண்டு தாசர் அரசனை கிருபையுடன் பார்த்து ஓஅரசனே இனியுமதுநாட்டைப் புதல்வனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து உம்முடைய பாரத்தையிறக்கிக்கொண்டு சுகத்தை யடையுமையாவென்றும் இதுமுதல் ஸ்ரீராமசந்திர மூர்த்தியைத் துதிசெய்துக் கொண்டிருப்பையாகில் மகத்தாகிய ஆனந்தத்தையும் நிரதிசயானந்தவைகுந்த பதவியைப்பெற்றுய்வாயென்றுஞ் சொல்லியதை அரசன்கேட்டு அடங்காத சந்தோஷத்துடன் அரண்மனைக்குச் சென்று குமாரனுக்கு அந்நாட்டைப் பட்டாபிஷேகஞ்செய்து விட்டுத்தான் ஜெகதீசனை யடையும் உபாயத்தைச் சதாகாலமுந் தேடிக்கொண்டிருந்து சாயுஜ்யமடைந்தான் இவ்வரசனது புதல்வனாகிய சம்பாஜியென்பவன் தன்தந்தைக்கு கிரியையெல்லாம் நன்றாக நடத்திப் பதிமூன்றுநாள் வந்து தாசரைக்கண்டுபணிந்துத் தன்தந்தை பதவியடைந்ததற்காக மெத்தவும் விசனப்பட அவனை பயப்படவேண்டாமென்று தைரியஞ் சொல்லி இவ்வுலகத்திற் பிறந்தவர்களெல்லாம் மரணமடையுமவர்களே ஒருவராயினும் என்றும்ஜீவதிசையுடனிருப்பதில்லையென்றும் வரிசைக்கிரமமாய்த் தெரிந்துக்கொண்டு சோகத்தைநீக்கி அரசாக்ஷியை நன்றாகப் பரிபாலித்து வருவாயென்றும் ஸ்ரீராமநாமத்தை சிந்தித்துக் கொண்டிருக்கக் கடவாயென்று நவின்ற தாசருடைய கட்டளையை சிரமேற்கொண்டவனாகி அந்தப்படியே நடந்து சிலகாலங் கடந்தபின்பு குருநாதன்சீஷர்களையழைத்துசீஷர்களேஎனக்குபரமபத சம்பிராப்தத்திற்குச் சமீத்திருக்கின்றதென்று சொல்லி யாவருக்குந்திருமுகமெழுதியனுப்ப சீஷர்கள் யாவருங் குருநாதனைக் காணவந்தனர்கள்.

இந்தப்படியாக குருநாதனுடைய அந்தியதிசையையறிந்து எல்லாசீஷர்களும் வந்துசேர்ந்து குருநாதரைக்கண்டுபணிந்துக் கண்ணீர்விட்டழுது புலம்புகிறபோது தாசர் கெங்காதரனென்னுஞ் சீஷனையழைத்து மடத்தில் விவகாரத்தில் கவனித்திருமென்று சொல்லி மத்தவர்களைநோக்கி நீங்கள்உண்மையாகும் ஆத்துமாவைக்கண்டு கொண்டிருந்தபோதிலும்பூசைகளை வைராக்கியத்துடன் னடத்துவதுமன்றியும்,வழவழ கொழகொழ வென்றில்லாமல் சகுணத்தியானமாகும் பக்தியைச் செய்யுங்கள் நீங்களும்மனது பரிசுத்தமாவதற்கு பிட்சையெடுத்தே ஜீவனஞ்செய்தும் தேவனுடைய கிருபையைக்கொண்டு ஆங்காரத்தை யடக்கவேண்டியதெப்போதும் அன்றியும் ஸ்ரீராமருடைய கதையை விக்கிரயஞ்செய்துக் கொண்டு ஜீவனஞ் செய்யலாகாது அந்த ஸ்ரீராமநாமத்தைப் பாராயணஞ்செய்து நரர்களை பக்தியினிற் பொருந்த சிறுத்தித் தாசபோதமெனும் கிரந்தத்தை நீங்கள் யெப்போதுந் தப்பாமல் வாசித்துக்கொண்டும் வேசாரவின்றி மடத்தினில் கீர்த்தனைகளை நீங்காமல், இடைவிடாது தியானஞ் செய்துக்கொண்டு ராமபஜனையை சர்வகால சர்வதேச சர்வஅவஸ்தைகளிலும்செய்துக் கொண் டிருக்கவேண்டுமென்றும் அப்படிபஜனைசெய்துக் கொண்டிருப்பதால் காமகுணங்களாகிய மாயாசம்பந்தமானது காணப்படாமல் தன்கடையெ விலகிப்போகும் இதுயென்னுடைய கோபிதமாகும் இதனைநீங்கள் விடாது நடந்துகொண்டால் நிர்மலமான மனதையுடையவர்களாகி சாரமாகும் நித்தியமுக்திபதவியையடைந்து மருஜென்மமின்றிப் பரமசௌக்கியத்தை யனுபவிப்பீர்கள் என்றுரைத்த சத்குருநாதருடைய மொழிகளைக்கேட்டுச் சீஷர்களவர் திருவடிகளில் விழுந்துவணங்கி யவருடைய மகுத்துவங்களையும் நற்குணங்களை ஏழைப்பரதேசிகளை யாதரிக்கும் உதாரத்தன்மையையும் நினைந்து நினைந்து மனமுருகித் தேம்பித்தேம்பி யழுது புரண்டார்கள் தாசர் அவர்களையெல்லாம் தேத்திக்ஞான மார்க்கங்களை யோதித்துத் துக்கப்படாம லிருக்கும்படி கட்டளையிட்டுப் பின்னுஞ் சொல்லுகின்றார் ஓசீஷர்களே என்னைச் சமாதியில் வைக்கவேண்டாம் ஏனெனில்சமாதி செய்தால் என்னையே பூசித்துத்தியானஞ் செய்துக் கொண் டிருக்கும்படியாகும் அதனால் உலகத்தில் ஸ்ரீராமபக்தி குறைந்து குருபக்தி விசேஷமாகும் ஆதலால் எனக்குச் சமாதிவேண்டியதில்லையென ஜெனங்கள் யாவருங்கேட்டு துக்கமடைந்தார்கள் அப்போது தத்தனென்னுஞ் சீஷனானவன் தாசர்சமீபத்தில்வந்து பணிந்து நிற்பதைக்கண்டு தாசர் ஓதத்தனே நிர்நிமித்தமாய் இப்போதெனக்கு வந்தனந்தந்த காரணம் யாதென தத்தன்வணங்கி பயந்து ஓசுவாமி சமாதிக்கிக் கட்டளை யிடவேணுமென்று பிரார்த்தித்து இந்த காரணத்திற்காகவே வந்தனந்தந்தேனென்ன தாசர் ஓதத்தனே எனக்கு சமாதிகட்டினால் இவ்வுலகத்தினில் ஸ்ரீராமத்தியானத்திற்கும் பூசைக்குந் தடையாகும் அதெப்படியெனில் என்னிடததில் யாவருக்கும விசுவாசமும் பிரியமும் அதிகப்பட்டிருப்பதால் அனைவரும் என்சமாதியைத் தெரிசிக்கவும் என்னைப்பூசிக்கவும் என்னையே பஜனைசெய்யவுங் கருதுவார்கள் இதனால் ஸ்ரீராமத்தியானமும் ஸ்ரீராமபூசையும் நாளுக்குநாள் குறைந்து என்சமாதிபூசையும்என்னுடையதியானமு மதிகரிக்கும் அதனால் யெனக்குமெத்த அபசாரம்வந்து சம்பவிக்கும் அந்த வபசாரத்தால் யான்

னரகப்பிராப்தியை யனுபவிக்க நேரிடும் ஆகையால் உங்கள்மனதிற்குக் கஷ்டமும் ஸ்ரீராமபக்திக்குவிரோதமில்லாமல் யானொரு தந்திரஞ் சொல்லுகின்றேன் அந்தப்படி செய்வீர்களாகில் எனக்கும் உங்களுக்கும் ஊராருக்கும் யாதொருதோஷமும் நேரிடமாட்டாதென்றுப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

ஓசீஷர்களே துஷ்டர்களுக்கு துவேஷர்களேளுங்கள் நீங்கள் நூதனமாக வெள்ளைப்போல ஒரு சிலாவிக்கிரகஞ்செய்து அவ்விக்கிரகத்தைப் பூமியில் சமாதியாகப். புதைத்து அதற்குமேல் ஸ்ரீராமவிக்கிரகமொன்றை வேதவிதிப்படிக்கி ஸ்தாபனஞ் செய்து அந்த ஸ்ரீராமவிக்கிரகத்திற்குப் பூசை முதலாசிய நவவிதபக்திகள் செய்துக்கொண்டிருப்பீர்களாகில் அப்பூசைமுதலானதுகளும் எனக்குஞ் செய்ததற்குச்சமானமாகுமென்று நவிலக்கேட்டு சீஷர்கள் அந்தப்படியே செய்கிறோமென்று சொல்லிப்பணிந்து சந்தோஷசித்தர்களாகித் தங்கள் குருநாதனைப்போல நூதன சிலாவிக்கிரகஞ் செய்வித்து அவ்விக்கிரகத்தைப் பூமியிற் சமாதியைப்போல புதைத்து அதற்குமேல் ஸ்ரீராமர் விக்கிரகமொன்று செய்வித்து அன்றுதொடங்கிப் பூசைமுதலாகிய ஒன்பதுவிதபக்தி செய்து வந்தார்கள் இதுநிற்கப்பின்பு ஏழுநாள்கடக்க எட்டுதிக்குகளிலு மிருக்குமவர்க ளெல்லோரும் வந்துசேர்ந்தார்கள் இவர்களுக்குச் சீஷர்கள் பிட்சையெடுத்து வந்த தானியங்களைக்கொண்டு அன்னஞ் சமைத்துப் படைத்து அன்றிரவெல்லாம் அட்சயமாகும்படி ஸ்ரீராமசரிதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனர்கள் அப்போது தாசர் எட்டாவது நாளாயிற்று யினிநாம் தேகவியோக மடையுங்காலம் சமீபித்துவிட்டது ஜாலஞ்செய்யத் தகாதென்றுன்னித் தடைசெய்யாமல் ஸ்னனுட்டானங்களைமுடித்து அவயவங்களில்துவாதசத்திருமண்கள் தரித்துத் துளபமாலையொன்றைமிட்ற்றினிற்சூடி பத்மாசன மிட்டுட்கார்ந்து ராமநாமத்தை மனதினில் தியானித்தும அந்தஸ்ரீராமரூபத்தை இருதயகமலத்தில் பதித்து ஓசகல ஜெந்துக்குங் காரணவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணனேஇதுநல்லசமயம் வரவேணும் வந்துதெரிசனந் தரவேணும் உண்மையிலேயே தேவரீரை யன்னியில் யெனக்கு வேறு ஆதரவுகிடையாது அன்றியும் அன்னையும்நீயே அப்பனும் நீயே யென்று வெகுகாலமாக என்னுடையக் குறைகளைப்போக்கி யாதரித்துக் கொண்டிருந்த வப்பனே ஒப்பிலாதவனே! தடைசொல்லாது யேழையேனை உண்மையாகிய பரந்தாமத்திற்கழைத்துச் செல்லும் நீர்நாமெனும பேதத்தை யொழித்தேன் நினதுகீர்த்தியைப் புகழுவதற்காக தேவதேவனே யுன்னையான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இத்தேகத்தை விடவேணும் நன்றாய் அந்திய காலரட்சணையின் பொருட்டு ஆதிமுதற்கொண்டுன்னை பஜித்துக்கொண்டிருந்தவென் கண்ணுற்கண்டு சேவித்து ஆவல்தீரச் செய்யுமையனே! எனறு இவ்விதமாக அந்தசமர்த்த ராமதாசர் கவிகளைச்சொல்லி மனமுருகிதியானிக்கிறபோது ஸ்ரீராமரும் சமர்த்தராம தாசரிஷ்டப்படி வந்து தெரிசனந்தர அப்பரமபாகவதர் கண்டு சேவித்து ஆனந்தம் பிர்மானந்தம் பரமானந்தமென்று சொல்லிக்கொண்டே தேகத்தைவிடுத்து ஸ்ரீராம சொரூபத்திற்கலந்து மறைந்துபோகச் சீஷர்களும் வெகுஜெனங்களுங்கண்டு ஸ்ரீராமநாமத்தை கோஷித்து மெய்மறந்திருந்தார்கள் அந்தசமயத்தில் தேவர்கள் சமர்த்தராமதாசர் தேகத்தின்மீது புஷ்பமாரி பொழிய உடனே சீஷர்களும் வெகுஜெனங்களுந் தெளிந்து வெகுசம்பிர்மமாக சமர்த்தராமதாசர் தேகத்திற்கு செய்யவேண்டிய சடங்குகளைச்செய்து முடித்து அத்தேகத்தை கொண்டுபோய் ஸ்மசானபூமியிற்சேர்த்து அக்கினியில் தப்தஞ்செய்வித்து ஸம்ஸ்காரங்களையும நடத்தி மூன்றுநாள் தகனஞ்செய்த விடத்திற்குப் போய் பார்க்க அங்குதன்கடையாய் சமாதியிருக்கக் கண்டு சீஷர்கள் ஆனந்தங்கொண்டு நாமென்ன புண்ணியஞ் செய்தோமோ பண்டு என்றுப் பலவிதமாக விண்டு குருபதங்களை மனதிற்கொண்டு அவருக்கெவ்வாறு செய்கிறது தொண்டு என்றுசொல்லிக் கொண்டே இனியெந்த காலததில், நாம்குருநாதனைக் கண்டு தெரிசிக்கப் போகிறோம் அவர்வாய்மொழி யெப்போது கேழ்க்கப் போகிறோமென்று சீஷர்களும் வெகுஜெனங்களும் அந்தஸ்மசான பூமியின்மீது விழுந்து ஓவென்றுக்கதறி யழுகிறபோது அச்சமாதியிலிருந்தொரு ஓசையுண்டாயின அதென்னவெனில் ஓ கல்யாணு விரைவாகயான் சொல்லுங்கவியை ஓலையிலெழுதுமென சிஷியனுமெழுதினுந் சமர்த்த ராமதாசரால்செய்யப்பட்ட கவிகளில், உண்டாகும் அர்த்தத்தை விடாமலங் கெழுதப்பட்டது இதை ஜனங்கள் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டேயாம் என்னுடைய சரீரமானது சத்தியமாக இப்போது அக்கினியினாலகொளுத்திச் சாம்பலாகும்படிச் செய்துவிட்டபோதிலும் யானென்னமோ மரணமடையவில்லை நித்தியமாக யான் ஜெகதாகாரமாகி நின்றிருக்கின்றேன் இவ்விடத்தில் ஜீவன்முக்தனுகி யென்று மழியாமல்சஞ்சரித்துக் கொண்டிருக்கினறேன் அன்றியு முங்களுக்கோர் நன்மையைச் சொல்லுகிறேன் கேளுங்கள் நீங்களிவ்வுலகத்திலி ருக்கும பரியந்தம் சதாகாலமும்

தாசபோதத்தைக் சந்தேகந்திரும் பொருட்டுப் பாருங்கள் பார்த்ததனு லுண்டாகுங் ஞானத்தால் தேறுங்கள் அப்படிக்கந்த தாசபோதத்தைப் பாராமல். சந்தேகமடைந்து இதரசேஷ்டைகளை எவ்விடத்திலுஞ் செய்யவேண்டாம் அதிற்சொல்லியபடி நடந்துக்கொண்டால், உங்களுக்கு சாயுஜ்ஜியபதவி யுண்டாகும் அன்றியும் பிராப்தத்திற்கு வேறுவிதமாக நடந்துக் கொள்ளாமலும் விரோத முண்டாகாமலும் சாரமாகிய ஸ்வஸ்வரூபத்தினில், சதா அனுசந்தானர்களாகியும் ஸ்ரீராமரைத் தியானஞ்செய்துக் கொண்டு நீங்களிருப்பீர்களே! யாகில், திடத்துடனெங்குஞ் சஞ்சரித்துக் கொண்டு திரியலாமென்றும் சொல்லினர்இந்த அர்த்தங்களமைந்த கவிகளை யின்பமாக யெழுதிக் கொண்டு நீங்காப் பிரியத்துடன் பக்தர்கள் யாவருந் தியானஞ்செய்தார்கள் அப்போது அங்கு பாதக்குரடுடன் சமாதியானது வெளிப்படுவதை யாவரும்பார்த்து வேதசாஸ்திர விதிப்படி சமாதியை ஸ்தாபனஞ் செய்துப் பண்கள்பாடியும் நடனங்கள்செய்துமெய் மறந்தும் வெகுவினோதங்களை நடத்தினர்கள்உடனே அரசன் பிராமணர்களுக்குக் கோதானபூதான வஸ்திரதான ஹிரணியதான மென்று சொல்லப்பட்ட ஷோடசதானங்களும் அபாரமாகநடத்தி அறுசுவையுடன்கூடின அன்னதானமுஞ்செய்துஅச்சமாதியின் மீது சீதாராம விக்கிரகங்களையும் ஆஞ்சநேய விக்கிரகத்தையும் நிருத்திவைத்துக் காலந்தப்பாமல், பூசை நடத்திக்கொண்டு வரும்படி யதற்குவேண்டிய பொருளையுதவிக் கொண்டு மிருந்தார் பின்பு சகலஜெனங்களும் சமர்த்தராமதாசர் சரிதைகளை ஆனந்தமாகச் சதாகாலமும் பாடிக்கொண்டும் சிஷர்கள்வெகு சாதுகளுக்கு உபதேசித்துக் கொண்டு மிருந்தார்கள்.

வாழிவிருத்தம்.

அமராபதியோர்வாழ்த்த வகிலத்திலனுமனஞ்
சமமுறப்பெற்றசாது சங்கமாவத்தோன்வாழி
நமன்றமர்தமைவென்றக் ஞானமாமதியோனவாழி
சமர்த்தராமதாசர் செம்பொற்றுளிணை வாழிவாழி.

சமர்த்தராமதாசர் சரித்திரம்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணபரப்பிரம்மணேநம.

ஸ்ரீமத்

பானுதாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

நானெனுமகம் பாவத்தைநலமுடநகற்றிமேலாந்
தேனெனும் பக்தியோகத்தேளிவினிற் சிறந்தசீமான்
மானெனுங்கண்மடவநர் மயக்கினையறுத்தசுத்தப்
பானெனுந்தாசர்பாத பங்கயம்வணங்குவோமே.

ஸ்ரீமகாலட்சுமி கடாட்சம் பொருந்திய பிரதிஷ்டானபுரமெனும் பட்டணமானது நீர்வளம் நிலவளங்களாலும் நதியோடைகளாலும் நான்குபக்கமுஞ் சூழ்ந்திருக்கும் தேங்குக்கதலி பலாமாமுதலாகியபலவிதத் தருக்களாலுஞ் சூழப்பட்டு மாதமும்மாரிபொழிவதால் மூன்றுபோகம் விளைந்துப் பிரமக்ஷத்திரியவைசிய சூத்திரர் முதல்நான்கு வர்ணத்தாரும் வசிக்கும் வீதிகளாலும் கோட்டைக் கொத்தளங்களாலும் மந்திரி சாமந்திரிகளாலும் தண்டத்தலைவர் யூகத்தலைவர் அணித்தலைவர் படைத்தலைவர்களாலும் ரதகஜதுரக பதாதிகளெனும் நால்வகைச் சேனைகளாலும் பத்திலொருபங்கு கப்பம்வாங்கும் தருமத்தினாலும் சகலஔஷதங்களும் செழித்துந்தழைத்தும் பூத்துங் காய்த்தும் பழுத்தும் யிராநின்ற மரங்கள் நிறைந்த ராஜவீதிகளினாலும் அந்நகரமானது பூமிமாதுக்கோர் பூமாலை சூடியதுபோல விளங்காநின்ற அப்பட்டணத்தில் பிரம்மகுலத்திற் பிறந்தவர் பிரமஞானத்திற் சிறந்தவர் என்னேரமு மரியைத்துதிப்பவர் பகவானுடைய திருவடியை மனதிற்பதிப்பவர் அதிதியப்யாதிகளை யாதரிப்பவர் பெரியோர்களைக் கண்டால் சாஷ்டாங்கமாகவிழுந்து தெண்டனிடுமவர் இப்படிப்பட்ட நற்குணங்கள் நிறைந்த பிராமணரொருவரிருந்தார் இவருக்கு மனைவியொருவளுண்டு அம்மங்கைத தன்கணவனையே தெய்வமென்றும் தன்மணாளனே! குருவென்றும் தன்னாயகனே தாய்தந்தை யென்றும் தன்கொழுநனே சகலபந்துக்க ளென்றுங்கருதி அவருக்குத் தொண்டு செய்வதிலேயே மனதைப்பொருந்தவைத்து மிருப்பவள் நாயகனைப்போஷிக்கும் விஷயத்திலே அன்னையைப்போலவும் அழகினில் ஸ்ரீமகாலட்சுமியைப் போலவும் பொருமையில் பூமாதைப் போலவும் கலவியில் வேசியைப்மோலவும் புத்தியில் மந்திரியைப் போலவும் நடிக்கும் அந்தஉத்தமியானவள் நாயகனிஷ்டப்படி இல்லறமாகிய நல்லறத்திலிருந்து நாளைப்போக்கிக் கொண்டிருக்கையில் இவர்கள்

தினந்தோறும் விடாது பூசித்துக்கொண்டுவரும் பகவானுடைய கிருபையினால் சிறிதுகாலத்தில் புத்திரனொருவன் பிறந்தான் அப்புத்திரனைத் தாய்தந்தையர்கள் மெத்தசெல்வமாக வளர்த்து ஐந்து வருடமானதே கல்விப்பயிற்சியில், விடுத்துத்தேர்ச்சியடைந்த பின் தன்னண்டை யிருத்திக்கொண்டு வேதமோதிக்கொண்டிருக்கையில், அச்சிறுவன் ஒருநாள் பாடத்தைப் படிக்காமலிருந்தபடியால் தந்தை யெனனடா பயலே பாடம்படித்து ஒப்பிக்காமல்வீண்காலம்போக்குகிறையாவென்று கோபத்தினாலதட்டினார் அதனாலச்சிறுவன் அதிர்ந்துவிழுந்து பயத்தினால் வீட்டைவிட்டு வெளிப்பட்டு ஒளித்துக்கொள்ளுவதற்குத் தக்கவிட மில்லாமையால் வெகுதூரம் நடந்து சென்று மனிதசஞ்சாரமில்லாத காட்டையடைந்து அங்கோர் ஆலயத்தைக்கண்டு அதற்குட்புகுந்து பயமதிகரித்து ஓகடவுளே! இந்தமனித சஞ்சாரமில்லாத காட்டில் யான் தனித்து ஒருவருந் துணையின்றிவருந்தி மெத்த பயத்தினால் பசியினாலும் வாடிவதங்கி மெலிந்து அழுது புலம்புகின்றேனே என்மனத்திகில் நீங்கும்படி தேவரீர் யெழுந்தருளி சேவைதந்து பயப்படாதேயென்றுசொல்லி அபயஸ்தங்கொடுத்து ரட்சிப்பது மக்கோர் பாரமோ ஆபத்பந்துவே யென்றுப் பதறிக்கதறி விசனப்பட்டுக்கொண்டி ருந்தான் அங்கே தாய் தந்தையர்கள் தனயனைக்காணாமல், தெருவீதிகளெல்லாந் தேடியும் வீடுகள்தோறும் நுழைந்து தேடியுங்காணாமல், அடாமகனே! நீயெங்குபோனாயோ எப்படியானாயோ எங்களைத்தனியே அலையவிடுத்துப் போவதுனக்கழகோ யாங்களுனக்குச்செய்த அபகாரந்தானேதோ வாசித்துக்கொள்ளவில்லையே என்று நின்தந்தை கோபித்துக்கொண்டது உனக்குவிரோதமாயிற்றோ மேலும் நின்தந்தையின் சொல்லானதுகர்ணகடூரமாகி நினக்கு வெறுப்புண்டாகச் செய்ததோ அடாயென் கண்மணியே உயிரோடுன்னைப் பரிகொடுக்கத்தானோ இத்தனையருமையாகப் பெற்று வளர்த்தேன் இப்படிச் செய்வாயென்று கிஞ்சித்தேனு மறியாமற் போனேனே ஐயோ என்குடல் பதருகின்றதே ஏதோ ஒருவித பயமுண்டாகின்றதே அன்றியும் தாய்தந்தையர்களிடம் சிலவருடகாலம் வளர்ந்து அவர்களைவிட்டுப் பிரிந்து போகும்படிப் பிரமதேவன் நின்தலையி லெழுதிவைத்தானோ இதுயாங்கள் முன் ஜென்மத்திற் செய்த கர்மவினையோ அல்லதெந்தப் பெரியோர்களிட்ட சாபத்தின் கொடுமையோஎன்று பற்பலவிதங்களாகப் புலம்பியழுதுக்கொண்டேதேடி எங்குமகப்படாமையால் நடந்துநடந்து வேசாரி தெய்வத்தைப் பலவாறு தூறி எத்தனைபேர்கள் வந்துத் தேறுதல் சொல்லியபோதிலுமவர்களைச்சீறி உள்ளபடி யாகட்டுமென்று தனக்குத்தானே தேரி இருந்தார்கள்.

இவர்களிங்கிப்படி அடங்காத துக்கசாரத்தில் மூழ்கினவர்களாகி யிருக்க அங்கே ஆலயத்தில மெத்தபயத்துடன் ஒளித்துக் கொண்டிருக்குஞ் சிறுவன் ஏழுநாள்பரியந்தம் பசிதாபத்தினால் வெகுதுயரப்பட்டுக் கொண்டிருக்கையில் ஆதித்தமூர்த்தியானவர்சிறுவன்படுந் துக்கத்தையும் போக்கி காப்பாத்தலேணுமென்றெண்ணி பிராமணவேடந் தரித்து ஒருபொற்கிண்ணத்தின் னிறையப்பாலை யேந்திக்கொண்டுவந்து அந்த ஆலயத்திற்குள் நடுராத்திரியிற்புகுந்து சேவைகொடுக்க அச்சிறுவன் இருளடைந்திருந்த ஆலயமானது கோடி திருவிளக்கேத்தினால் எவ்வளவு பிரகாசத்துடன் விளங்குமோ அதுபோல விளங்குவதையும் அப்பிரசாதத்திற்குக் காரணவஸ்துவாகிய பிராமணனையுங் கண்டு ஆனந்த மேற்கொண்டு யான்புனிதனானேனென விண்டு எந்ததவத்தை யிழைத்தேனோ பண்டு என்று சந்தோஷ மேலிட்டதால் ஓடோடியும் அவர் திருவடித் தாமரைகளில் விழுந்துபணிந்து எழுந்து கைகூப்பிக் கொண்டபடி ஒன்றுஞ்சொல்ல நாவெழாமலிருந்தான் அப்படிநின்ற சிறுவன்மீது ஆதித்தனாகிய பிராமணன் கருணைமழை பொழிந்துத்தன் கரத்திலேந்திக்கொண்டு வந்தப்பால்கிணத்தைக்கொடுத்து சீக்கிரம்புசித் துன்பசியைத் தீர்த்துக்கொள்ளுமப்பாவென்று சொல்லிப் பின்னுஞ் சிலநயமொழிகளைப் பகர்ந்தார் அதென்னவெனில் அப்பாசிறுவனே நீஎள்ளளவும் பயப்படவேண்டாம்பசிதாபத்திற்காக சங்கடப்படவும் வேண்டாம் நானுனனை சவரட்சணை செய்கிறேன் இதில் கிஞ்சித்தேனுஞ் சந்தேகமில்லை இன்றோடொழிந்தது நின்தொல்லை உன்னைவிட்டு நீங்கியது தரித்திரமென்னுஞ் சள்ளை இனியடிக்கப்போகின்றுப் பகவந்நாமத்தைக் கொள்ளை ஆகையால் இன்றுமுதல் நீ சாக்ஷாத்துப் பாண்டுரங்க நாமத்தையிடைவிடாது தியானஞ்செய்துக்கொண்டு சாதுசங்கத்திற் சேர்ந்து பக்திசெய்யும் மார்க்கங்களை யறிந்து அந்தப்படி பக்திபண்ணிக் கொண்டிருமப்பாவென்று சொல்லி அப்பிராமணன் மாயமாய் மறைந்துபோயினார் பின்பு தாய்தந்தையர்க ளிருவருந் தனயன்மீதே கவலைகொண்டு (கடந்தஞானியுகெடப்பரோ மக்கண் மேற் காதல்) என்னும் நீதிவாக்கியத்தின்படி எல்லா சோகத்தையும் எதோ ஒருவிதமாய் மாத்திக்கொள்ளலாம் புத்திரசோகத்தை மாத்திரம் மாத்துவதற்கு எப்படிப் பட்டவர்களாலும் முடியாது ஆதலாலிவர்

களும் புத்திரசோகத்தினால் எழுநாள் பரியந்தம்அன்ன ஆகாரம் நித்திரை முதலானதுகளையு மொழித்துப் பித்தர்களைப்போலவும் பேய்களைப் போலவும் மகனே மகனேயென்ற வாக்கொழிய வேறொன்றும் புகலாமல் திரிந்து வெகுகிராமங்களிலும் பட்டணங்களிலுந் தேடித்தேடி வேசாரி இனியென்ன செய்கிறது பாலனை எங்குகண்டுத் தேடுகிறதென்று கையுங்காலு மெய்யுஞ்சலித்து நடப்பதற்குஞ் சகதியின்றிபடுக்கையிலேயே மகனேமகனே யென்று கதறிக்கொண்டிருக்கையில் எழாவதுநாள் ஆலயத்திற்குள்ளிருந்த பிராமணச்சிறுவன் வெளியில் வரும்போது தெற்பைசமித்துகளுக்காக வந்தப்பிராமணனொருவன்கண்டு மனிதசஞ்சாரமில்லாத விந்தக்காட்டினி லிவன் தனித்துஒண்டியாக இவ்வாலயத்தி லிருக்கின்றானே இவனைப் பெற்ற தாய்தந்தையர்கள் காணோமென்று வெகுபட்டணங்களிலும் கிராமங்களிலும் வீடுகள்தோறும் சென்றுத் தேடிக்கொண் டிருக்கின்றார்களே இதுவென்னபாவம் அங்கவர்க ளெப்படியலைந்துக்கொண் டிருக்கஇங்கிவன் புண்ணிய புருடனைப்போல இவ்வாலயத்திற்குள் நிம்மதியாயிருக்கின்றானே என்றோசித்துக்கொண்டேசேன்று பட்டணத்தை யடைந்து அவன்தாய்தந்தையர்களைக் கண்டு ஒபுண்ணிய சீலர்களே உமதுபுதல்வன் வடதிக்கிலுள்ள காட்டினிலொரு தேவாலயத்தைவிட்டு வெளியில்வரக் கண்டேன் யென அவர்களப்பிராமணனை யழைத்துக்கொண்டக் காட்டைநோக்கி வந்துக்கொண்டிருக்கையி லிதற்குள் பிராமணச்சிறுவன். நமதூர்ப்பிராமணன் நம்மைப் பார்த்துக்கொண்டே போயினானே அவனெங்கே நமதுதந்தைதாய்களுக்கு நாமிங்கிருக்குஞ் செய்தியைச் சொல்லிவிடுகின்றானோ என்ற பயத்தினால் திடுதிடென்றோடிஅந்தஆலயத்திற்குட் புகுந்து நிலவரையிலிறங்கி சொஸ்தமாகப் படுத்துக்கொண்டு நித்திரை செய்திருந்தான்.

அப்போது இவன் தாய்தந்தையர்களும் பகலிவனைப் பார்த்துப்போயின பிராமணனு மிம்மூவரும் நடந்துநடுராத்திரியில் ஆலயத்தினருகில்வந்து இதற்குள்தான் உங்கள் புதல்வனிருக்கின்றானென அவர்கள் புதல்வனைப் பார்க்கவேணுமென்கிற அவாமிகுதியால் அக்காரிருளைக் கருதாமலும் பயமென்பதெள்ளளவுமில்லாமல் அவ்வந்தகார விருட்டினி லவ்வாலயத்திற்குட்புகுந்து நாலாபக்கமுந் தேடிக்காணாமல் வருத்தமுற்றுக் கொண்டிருந்து நிலவரையைக்கண்டு அதிலுள்ளிரங்கித் தடவிக்கொண்டு போகையில்அங்குபடுத்து நித்திரை செய்துக்கொண்டிருந்த சிறுவனைக்ககப்பட அடாமகனே வென்று வாரியெடுத்துக்கட்டித்தழுவிப் பலமுத்தந்தந்து ஆவல்தீர்ந்து அப்புதல்வனைத் தோளின்மீது சாத்திக்கொண்டு நிலவரையைக்கடந்து சந்நிதிப்பிரகாரத்தையடைந்து ஆலயத்தைவிட்டு வெளிப்பட்டு நடந்து காட்டைக் கடந்துநாட்டையடைந்து வீட்டிற்புகந்து தனயனை நோக்கிபடா மேட்டானமேட்டிப் பரமேட்டி யென்றுநீராட்டிமைதீட்டி ஆடையாபரணஙகளைச் சூட்டி புகழ்ந்துஅன்னபானதிகளை யூட்டி ஆதரித்து அடாமகனே அழகானமுகனே இந்த எழுநாளாய் பசிதாபமெப்படிதீர்ந்ததெனப் புதல்வன் ஓஅம்மணியானந்தீ ஆலயத்திற்குட்போயின னிரவில் மெத்தசபசியுடனிருந்தமையால் அப்பசியின் கொடுமையினாலே யான்பகவானைநோக்கிப் பலவாறு முறையிட்டு அழுதேன் அம்முறையைக்கேட்டுப்பகவான் ஒருகிண்ணத்தின்னிறையப்பால் கொண்டுவந்து கொடுத்து வென்பசியை யாற்றி என்னைப் பயப்பட வேண்டாமென்று அபயஸ்தங் கொடுத்துப் போயினார் அந்தப்படியே அந்தப்பானு மூர்த்தியானவர் தினந்தோரும் ஒருகிண்ணத்துப்பால் கொடுத்துக் கடந்த எழுநாளுங் காப்பாற்றினாரெனச் சொல்லக்கேட்டுத் தாய் தந்தையர்கள் மெத்தக்களிப்படைந்து இவனது பாக்கியந்தானேதோயென்று குசலாயிற்று உடனே யப்புதல்வனைப்பானுதாசனே என்று அழைத்தார்கள் அன்றியும்அச்சிறுவனை வாசிப்பதற்காகப் பயமுறுத்தாமலும்தண்டனைகண்டனை செய்வதை விடுத்து,

சாக்ஷாத்து ஸ்ரீஹரியேயிவனை ரக்ஷிக்கிறேனென்று முயன்றிருக்கிறபடியால் அப்பகவானேயிவனுக்குயிர்த்துணையாயு மிருக்கச்சே நாமிவனை வாசிக்கவும்வேதமோதும்படி கோவிப்பதால் பிரயோசன மொன்றுமில்லை யென்றுக்கருதி அவனைச்சினேகனைப்போலச் செல்லமாகவும் மெத்தஆசையுடனும் போஷித்துக்கொண்டும் மேலும் இவனுக்குப் பகவானே! சுலபமாகக் கிடைத்திருக்க எல்லாப்பொருளுமிவனுக்கனுகூலமாகும் ஆகையால் இவனைக்கல்வியின் பொருட்டுமெத்ததொந்திரப் படுத்துவதால் காரியங்கெட்டுப்போகும் ஆதலால் இனியிவனைக் கல்வியின் பொருட்டிக்கடுமை செய்வது நன்றல்லவென்று யோசித்துக்கல்விப்பயிர்ச்சி செய்யாமல் நிருத்திவிட்டார்கள்.

இந்தப்படியாக அச்சிறுவனைக் கல்வியில் நின்றும் தவிர்த்து வெகுசெல்வமாகப் பாதுகாத்து வருகிறபோது அவனுக்கு விவாகஞ்செய்வதற்குத் தக்கவயதுவந்தபடியால், சிலகாலங் கடத்திப் பின்பு தங்

கன்மரபினில் உத்தமியாகியப் பெண்ணைப்பேசிச் சந்
தனம்பூசி பச்சைபந்தலிட்டு வாழைகமுகு முதலான
மரங்களைக்கட்டி சித்திரவிசித்திரமாக வலங்கரித்துத்
தம்பதிகளுக்குத் திருமஞ்சனஞ் செய்வித்து ஆடை
யாபரணாதிகளால் சிங்காரித்து மணவரையிலிருவரை
யும் ஒக்கரத்திவைத்து விதிப்படி சடங்குகளைநடத்தி
சகல மேளவாத்தியங்களுங் கோஷிக்கச் சுமங்கலி
பிராமணஸ்ரீகள் ஆலாத்தியேந்தப் பூசுரர்கள் ஆசீர்
வதிக்க முனிவாகள் பல்லாண்டிசைக்கப் பாடகர்கள்
பாட தாசிகளாட பானுதாசர் மங்கிலியஞ் சூட்டினார்
அப்போது பானுதாசருடைய தந்தையானவர் உத்த
மர்களாகிய பிராமணர்களுக்கு பரிசுத்தமாகிய பசுக்
களுடன் கன்றுகளையுங்கூட்டி அதற்குவேண்டிய உப
கரணங்களுடன் அனேகங்கோக்களை தானஞ்செய்
தார் அன்றியும் முப்போகம் விளையும்படியான வயல்
களை பூதனமாகச்செய்தார் மேலும் வஸ்திரதானம்
ஹிரண்ணியதானமென்று சொல்லப்பட்ட சோடச
தானங்களுஞ் செய்து தங்கள் புத்திரமித்திரபந்துஜெ
னங்களுடன் புசித்துச் சந்தனதாம்பூல புஷ்பங்களை
யீந்து அவாவர்களை யனுப்பித் தம்பதிகளை மெத்தச்
செல்வமாகப் போஷித்துக் கொண்டிருக்கையில் பா
னுதாசர் பகவான் தனக்குபதேசித்தவண்ணம் சர்வ
தேச சர்வகால சர்வஅவஸ்தைகளிலும் இடைவிடா
மல் விட்டலநாமத்தை பஜனைசெய்துக் கொண்டிருந்
தார் இவரிப்படி பகவத்பக்தி பூரணராக யிருக்கை
யில் தாய்தந்தையர்கள் தேகவியோகமடைய அவர்க
ளுக்குச் செய்யவேண்டிய பிரதேசம் ஸ்காரங்கள் யா
வுமுடித்துப் பயமென்பதை யொழித்துப் பண்டரி
நாதனைத் தியானஞ்செய்துக் கொண்டிருந்தார் இப்ப
டிக்கிருக்கு மிவர்குடும்ப சவரட்சணை யெப்படி நடக்
கின்றதென்றால் பிராமணகுலத்திற்கு யாசகஞ்செய்
வது குலத்தொழிலா யிருக்கினும் இவர்யாரிடத்துஞ்
சென்று யாசகஞ்செய்வதில்லை எத்தொழிலையுஞ்செய்
வதில்லை இவர்தந்தை சேகரித்துவைத்ததிரவியத்தை
இதராளுக்கு வட்டிபாபத்தாய் கொடுத்தும் வாங்கிக்
கொண்டும் அதனால்கிடைக்கும் வட்டி பொருளைக்
கொண்டும் குடும்ப சவரட்சணஞ் செய்துக்கொண்டு
வருகையில்,

சிலவருடங்களுக்குள் தந்தையால் சேகரிக்கப்
பட்ட திரவியங்களெல்லாஞ் செலவாகி ஒருகாசியே
னும் யிருப்பில்லாமல் போனபடியால் மனையாளும்
மக்களும் பட்டினியாயிருக்கினும் அசைதமனதிற் கரு
தாது எண்பத்து நான்குலட்சம ஜீவராசிகளைச் சிரு
ஷ்டித்து அதுகளுக்கெல்லாம் ஆகாரங் கொடுத்துக்
காப்பாத்திரட்சிக்கும் ஜெகதீஸ்வரன் இரண்டுமூன்று
ஆத்துமாக்களுக்கு ஆகாரங்கொடாமற் போவனோ
கருணாநிதியாகிய அப்பரமேஸ்வரனுக்கு பட்சபாத
முண்டோ இல்லை ஆகையால் இதைபற்றியாம் சிந்தி
க்கவேண்டிய அவசியமில்லை யென்றும் மேலும் அப்
பகவான் சுதந்திரமுள்ளவன் நாம்பரதந்திரமுள்ளசே
தனன் ஆகையால் அவனுக்கில்லாத பொருப்பு நமக்
கேதுக்கு என்று பாதகாமில்லாம லிருக்கையில் பந்
துகள் யாவருங்கூடி பானுதாசரையழைத்து ஓபானு
தாசரே தந்தையின்சொற்படி ஆதிகாலத்தினில் கஷ்
டப்பட்டு வாசித்துக் கொண்டிருந்தால் எங்களைப்
போல வேயும்பொருளுடையவனாக விருக்கலாமல்லவா
வாசித்துக்கொள்ளாத குறையினாலேயேயுமுன்மனை
விமக்களுடன் பட்டினியாகவிருக்க நேரிட்டது இப்
படிக்கெத்தனைநாள் பட்டினியாக விருப்பீர்கள் இது
மெத்தகஷ்டம எங்கள் கண்ணாலுங்களைப் பார்க்க
சகிக்கவில்லை ஆதலால் இந்ததரித்திர திசையைப்போ
க்கிச் செல்வதிசையை நீங்களடைவதற் கோருபாயஞ்
சொல்லுகின்றோம் அந்தப்படிநீர் நடப்பீராகில் பசி
யில்லாமல் புசிக்கவும நல்ல ஆடையாபரணங்களை அ
லங்காரமாகத் தரித்துக்கொள்ளவும் நாலுபேர்களைப்
போலக் கையிருப்புக்காரனாகவு மிருக்கலா மென்று
சொல்ல பானுதாசர் ஓபந்துக்களே அந்த உபாயம்
யாதோ அதைத்தெரியப்படுத்தினால் அவ்வாறுயான்
னடந்துக் கொள்ளுகிறேனென பந்துக்கள் ஓபானு
தாகரே நாங்களெல்லோருஞ் சேர்ந்து ஆளுக்குக்
கொஞ்சம் வரிபோட்டுக் கொண்டு நூறுவராகன்கொ
டுகுரோம் அந்த நூறுவராகனுக்குப் ஜௌளிதினுசு
களைக்கொண்டு அன்னியர்களுக்குக் இஞ்சித்துலாபம்
பெற்றுக்கொண்டு விக்கிரயஞ்செய்து லாபத்தை வீட்
டிற் குபயோகப்படுத்தி முதல்வராகனைக் கொஞ்சங்
கொஞ்சமாக யெங்களுக்கு செலுத்தி விடக்கடவா
யென அதற்கு பானுதாசரும் சம்மதித்திருக்க பந்து
க்கள் ஜௌளிதினுசுகளை அங்கொரு சாகுகாரியினிட
த்தில் கொள்ளுகையில் பானுதாசரையழைத்துஅந்த
சாகுகாரிகளுடன் கலந்து அதினுடைய மர்ம சர்மங்
களை யறியும்பொருட்டு மனதில் நினைத்திருக்க அவர்
களும் வர்த்தகஞ்செய்யும் மர்மசர்மங்களைச் சொல்லி
ஓபானுதாசரே வர்த்தகத்துக் கெல்லாம் பொய்சொ
ல்லாவிடில் லாபங்கிடைக்க மாட்டாது பொய்சொன்
னாலே மெத்தலாபங் கிடைக்குமென பானுதாசர் ஓ
வர்த்தகர்களே யானபொய் சொல்லுவதற்கு ஒப்ப
மாட்டேனென இவ்வாக்கியத்தை யன்னியர்கள் கே
ட்டு பிட்சையெடுத்து ஜீவனஞ்செய்யும்படி பிரமதே
வன் இவர்தலையினி லெழுதியிருக்க வர்த்தகத்தில்

பொய்சொல்லி ஜீவனஞ் செய்வாரோ இவரென்று சிறித்தார்கள் அவர்களை நோக்கிப் பானுதாசர் ஓ வர்த்தகர்களே எத்தனை ஆபத்துகளெனக்குச்சம்பவித்தபோதிலும் எப்போதும் சத்தியவாக்கை விடமாட்டேன் என்றுசொல்லிக்கொண்டே பானுதாசர் வர்த்தகஞ் செய்வதற்குக்கடையினிலுட்கார்ந்து கிராக்கி காரர்களுக்குத்தான்கொண்ட விலையைக்குணமாகச்சொல்லிக்கொண்டு அவர்மோசமில்லாமலும் மரப்புத்திரப்பில்லாமல் எனக்குலாபமிவ்வளவு கொடுக்கவேணுமென்றுக் கண்டிதமாய்சொல்லி வியாபாரம் நன்றாக நடத்திக் கொண்டுமிருந்தார் இவரிப்படியுண்மையாய் நடத்துவதால் கிராக்கி காரர்கள் இவர்மெத்த சத்தியவானென்று அதிகலாபத்திற்கு ஆசைப்பட்டவரல்லவென்றும் நம்பிக்கையுண்டாகி விரைவினில் யாவருமவரிடத்திற்கு வந்தார்கள் அப்படி நம்பிக்கை கொண்டுவருமவர்களுக்குப் பரிசுத்தமானமத்தியவசனமொன்றே சொல்லியும் அச்சுதா கிருஷ்ண ஹரி ரங்காயென்று மவர்தியானித்துக் கொண்டிருக்கையில் உலகத்தினில் பானுதாசர் தன்தலைபோகிறதாயிருந்தாலும் மனமாரப் பொய் சொல்லமாட்டாரென்றெங்கும் பிரச்சித்தியாயிற்று இதனால்பானுதாசர் அற்பலாபத்துக்கே ஆசித்து சிலநாளில் வெகுபொருள் சேகரஞ்செய்துக் கொண்டிருக்ககிராக்கியாவத்து மிவருடைய கடைக்கே நம்பிக்கையுடன் வந்துக் கொண்டிருக்க இதையறிந்து அக்கம்பக்கத்தினிலிருக்கும் வர்த்தகர்கள் மிகவுங்குரோதங்கொண்டு அசத்தியவாதிகளாகியஅவர்கள் பானுதாசர் மீது பொறாமையினால் சொல்ல வுத்தேசங் கொண்டார் அதென்னவெனில் வீசங்காசிக்குப் பொறுதமதிப் பில்லாமல் கஞ்சிக்குங் கந்தைக்கும் மெத்த கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த புத்தியீனனாகிய இந்தபானுதாசன் நம்முடைய சகாயத்தினால் மேன்மையை யடைந்துநமக்கே கெடுதி யுண்டாக்கினான் அன்றியும் ஜனங்களை வசியப்படுத்துவதினாலே சொன்ன விலையைக்கொடுத்து மறுசொல் சொல்லாமல் மனிதர்களெல்லாம்பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்டிருப்பார்கள் மேலுங்கிராக்கிதார்கள் யாவரும் பானுதாசர் கடைக்கே போவதக்குக் காரணம் நம்மிடத்தில் அசத்தியவாக்கிருப்பதினாலல்லவா இந்தகாரணமே நமதுகடைக்கு ஒருவரும் வருவதில்லை யாகையால் நாமுமின்று முதல் சத்தியமாகவே வியாபாரஞ்செய்தால் பானுதாசனென்ன கெதியாய்ப்போவான் ஒருவருமவன் கடைக்குப் போகமாட்டார்களென்றும் பற்பலவிதங்களாகப் பேசிக்கொண்டிப்படி வெகுகுரோதத்துடனிருக்க ஒருநாளெல்லாங்கடைக்காரரும் வேறுகிராமத்திற் கூடும்சந்தைக்குப்போக வெண்ணி சரக்குகளை மூட்டைகள் கட்டிகுதிரையின்மீது அம்மூட்டைகளை யேத்தியாவரும் பார்க்கச்சென்றார்கள் அதையறிந்து பானுதாசரும் சந்தையில் கடைபோட்டு வியாபாரஞ் செய்யவேணு மென்றெண்ணி ஜவுளிகள் வேணுமானமட்டும் மூட்டைகட்டிக் குதிரையின் மீதம்மூட்டைகளை யேத்திக்கொண்டு நடந்து அடுத்தக்கிராமத்தையடைந்து மைத்தவியாபாரிகளிரங்கி யிருக்குந் தேவாலயத்திற்குட் சென்று மூட்டைகளை யிரக்கி அவர்கள் மூட்டைகளுக்கருகில் வைத்துக் குதிரையை யங்கோர்மரத்தடியிற் கட்டிவைத்து நடந்துவந்த ஆயாசந்தீர்ந்துக் கொண்டிருக்கையில், அந்தவியாபாரிகளிலொருவன் வந்து பானுதாசரை நோக்கி ஓஐயா இன்றுஹரிதினமாதலால் இங்கு அரிகதைநடக்குமெனப் பானுதாசர் கேட்டு ஓவர்த்தகரே அப்படியானால் அவசியம் போய்கேழ்க்க வேண்டியதே யென்றுன்னி அங்குகூட்டமாகவிருக்குங் கெட்டவெண்ண முடையவர்த்தகர்களை நோக்கி ஐயாவியாபாரிகளே! மூட்டைகளை யிங்குயான்வைக்கிறேன் அதுகளை மோசப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுங்களென அதற்கவர்கள் ஓபானுதாசரே கோவிந்தன்கதையைக் கேட்டுக்கொண்டு இரவெல்லாம் போக்குவதால் என்னலாபமுண்டாகும் அப்படி மூட்டைகளை யெங்கள் வசமாக ஒப்புக்கொடுத்துப் போவதுமக்குத்தகாது அன்றியும் உன்னுடைய மூட்டைகளை நாங்கள்பார்த்துக் கொண்டிரோம் அம்மூட்டைகளை உன்னுடன் கொண்டுபோய் வைத்துக் கொள்ளுமென்றுஞ் சொல்லப் பானுதாசர் கேட்டுவர்த்தகர்களைநோக்கி ஓவியாபாரியே நீரேன்சினங்கொள்ளுகின்றீர் இத்தனை கஷ்டமுமக்கு வேண்டாம் என்னுடைய மூட்டைகளிரண்டிற்கும் பண்டரிநாதரே காப்பாவாரென்றும் அல்லது சொத்துஎன்னதாகவிருந்தால் இருக்கிறதுவேறு அன்னியருடைய சொத்தாகவிருந்தால் போகட்டுமென்று சொல்லி மனதைதிடம்பண்ணிக் கொண்டு அப்போதே புறப்பட்டு குணானுபவங் கேட்கும் பொருட்டுச் சென்று அங்கு அரிதாசரைக்கண்டு சேவித்து அங்கோரிடத்தில் உட்கார்ந்து அரிதாசர் சொல்லும் அரிகதைகளைக் கேட்டுக்கொண்டு மிருந்தார் மேலும் அங்குள்ளஜனங்களும்ஹரியைத் துதித்துக் கதையைக்கேட்டும் ஆனந்தித்து மிருந்தார்கள்.

இவ்வண்ணமிங்கே பானுதாசர் அரிகதையைக்கேட்டுகொண்டிருக்க அங்கேதேவாலயத்தினி லிருந்த வர்த்தகர்கள் தைரியத்துடன் யோசிக்கின்றார்கள். அதென்னவெனில் பானுதாசனிப்போ திங்கில்லை அ

ரிசுதைகேட்கப்போ யிருக்கின்றான் அவனுடைய மூ
ட்டைகளைத்தொண்டி செய்து அதற்குள்ளிருக்கும் வ
ஸ்திரவகையாக்களிற் சிலதெடுத்து நாம் பங்கிட்டுக்
கொள்ளலாம் பானுதாசரென் மூட்டைகளெங்கேயெ
ன்று கேட்டால், சோரர்களபகரித்துப் போயினார்க
ளென்று சொல்லலாம் அன்றியுமவன் குதிரையை ய
விழ்த்து வயலில்மேயும்படி விட்டு அவனுக்குகஷ்ட
முண்டாகும்படிச் செய்வதற்கு இதுவே நல்லசமயம்
இதைவிடவேறு சமயம்நமக்குக் கிடைக்கமாட்டா
தென்றுங்கருதிக் குதிரையையவிழ்த்து விளைச்சலினி
ல்விட்டும்பானுதாசருடையமூட்டைகளைத் தொண்டி
செய்யப்போகையில். சாக்ஷாத் பாண்டுரங்கநாதன்சி
லகள்வரைப்போல வேடம்புனைந்துவந்து பானுதாச
ருடையமூட்டைகளைத் தவிர்த்து மைத்தவர்த்தகர்க
ளுடையமூட்டைகளுடன் குதிரைகளையும் அபகரித்து
க் கொண்டுபோயினார்கள் அப்போது வர்த்தகர்கள்
சோரர்களைநோக்கி ஐயாநீங்கள் கொண்டுபோகும்மூ
ட்டைகளுக்கும் குதிரைகளுக்கும் எஜமான்கள் நாங்
களாதலால் தயவுசெய்து அதுகளையெல்லாம் கொடு
த்துப்போங்களென்று வெகுவாக வேண்டிக்கொள்ள
அச்சோரர்கள் இவர்கள் பக்காபேர்வழிகளாதலால்,
எளிதினிலிவர்களை விடக்கூடாதென்று கருதித்தடிக
ளாலும் தாம்புகளாலும் மிகவும் அடித்துநோகச்செ
ய்து போயினார்கள்அந்தவடிகளினாலே மெத்ததுக்கப்
பட்டு தலைகளை வளைத்துக்கொண்டு இனியெப்படி ஜீ
வனஞ்செய்யப்போகிறோமென்றங்கிருந்து கொடியக்
குரோதங்கொண்டு பானுதாசருக்குப் பெருத்த நஷ்
டமுண்டாகும்படி நாம்கெட்ட வெண்ணங்கொண்ட
படியால் பகவானுடைய கிருபைபானுதாசர் மீதிருப்
தால்நமக்கப்பெருத்தநஷ்ட முண்டாயின தென்றுவி
சனப்பட்டுக் கொண்டிருக்க அங்கே பானுதாசர் அ
ழியாத பொருளிதென்று அரியின்கதைகளைக் கேட்
டுக்கொண்டிருந்தபோது சூரியோதயமாகவே கற்பூர
ஆரத்திகள் கொடுக்கையில் பானுதாசரெழுந்து அரி
தாசர்களுக்கு வந்தனந்தந்து அவ்விடத்தைவிட்டுவெ
ளிப்பட்டு தேவாலயத்தை நோக்கிவருகையில், சா
க்ஷாத்து பாண்டுரங்கநாதன் பிராமண வேடம் புனை
ந்து வர்த்தகர்கள் அவிழ்த்து விளைச்சலில் விட்டக் கு
திரையைத் தன்கையிற்பிடித்துக் கொண்டுபானுதாச
ர் வரவுக்கெதிர்பார்த்துக்கொண்டு வழியில், காத்தி
ருந்தார் அதைப்பானுதாசர்கண்டு ஏதோமோசம்நே
ரிட்டாற்போலிருக்கின்றதென்று கருதிக்கொண்டே
மாயாவேஷதாரியாகிய பிராமணன் அருகினில், வர
அப்பிராமணன் பானுதாசர் கையில், குதிரையை ஒ
ப்புக் கொடுத்துப் போகபானுதாசர் குதிரையைப் பி
டித்துக் கொண்டு சந்தோஷத்துடன் தேவாலயத்தி
ற்கு வருகையில் அங்குவர்த்தகர்கள் பயத்தினால் வெ
குதுக்கத்தையடைந்து அழுதுக்கொண்டிருக்கஅதை
க்கண்டு பானுதாசர்வர்த்தகர்களை நோக்கிஎன்னையா
நீங்களழுகிறீர்கள் இதற்குக்காரணம்யாதென அதற்
கவர்கள் ஐயா பானுதாசரே நாங்கள் பாவிகளானப
டியால் உமக்கு துக்கமுண்டாகும்படியெண்ணங்கொ
ண்டு உமதுமூட்டைகள் யாவத்திலும் ஒருதுவாரஞ்
செய்து அதிலுள்ள வஸ்திரவகையராக்களை கிரகித்து
க்கொள்ள நினைத்தமாத்திரத்தில், எங்கள்மீது பகவா
ன்தய வில்லாமற் போனமையால், திருடர்கள் எங்க
ள்துணி மூட்டைகளுடன் குதிரைகளையுங் கவர்ந்துப்
போகுறவர்கள் தங்களையும் பலவிதமாக வடித்துத்
தொந்திரவு செய்தமையால் சாவுதப்பியது மத்தகஷ்
டங்களெல்லாம் அனுபவித்து விட்டோம் அன்றியு
ம் முன்னுதாயுன் குதிரையை நாங்கள் விட்டபடியி
னாலே யாதொருகஷ்டமுமின்றிக் குதிரையைப் பிடி
த்துக்கொண்டிங்குவந்தீர் எங்களுக்குபெருத்த விபரீ
தம் நேரிட்டமையால், இனி யெப்படி யெங்கள் குடு
ம்ப சவரக்ஷனை நடக்கப்போகிறது சொத்துகளெல்
லாஞ் சோரர்கள் அபகரித்துக்கொண்டு போயினார்க
ள், அதனால நிலமைகெட்டுதே யெங்களுக்கு இனி எ
வ்வண்ணம் பிழைக்கப் போகுறோமென்று அடங்கா
விசனமுற்றுப் பின்னுஞ் சொல்லுகிறார்கள் ஓபா
னுதாசரே எங்களிடத்திலுன்னைக் கெடுக்கவேணுமெ
ன்ற கெட்ட வெண்ணமிருந்தமையால், பகவான் எங்
களையே கெடுத்துவிட்டார் உனக்கப்படிப்பட்டகெட்
டயெண்ணமெங்கள் மீதில்லாமையால்பகவானும்மை
க்காப்பாத்திரட்சித்தார் அதெப்படியென்னைக் காப்
பாத்தினாரென்பீரோ அந்த சந்தேகத்தையும் போக்
குறோம் கேளுமையாவென்று மேலுஞ் சொல்லத்
தொடங்கினார்கள்.

ஓபானுதாசரே பகலான்னினது துனுமூட்டை
களைப் பத்திரப்படுத்தினார் இதோபாரும் அதனால் நீ
பயப்படாமலிருமென்று சொல்ல பானுதாசர் பகவா
னைக் கொண்டாடிப் போற்றி வெகுவிதமாகச் சிந்தித்
து அகோ குதிரையைக் கையினிற்பிடித்துக்கொண்டு
மார்க்கத்தில் நின்றிருந்தவன் சாக்ஷாத்துப் பாண்டு
ரங்கனேயாகும் அந்தோ கடுமையான எனது ஜென்
மத்தையும் அக்கினியிற்போட்டுசுட்டெரிக்காமல்இன்
னமுமுயிருடன் வைத்துக்கொண்டிருக் கின்றேனே
என்னைப்போலுங் கொடியபாவி இவ்வுலகத்தினிலுண்
டோ நீலமேகசியாமள சுந்திரரூபனும் சுகுமாரனும்
சர்வேஸ்வரனுகுமவனும் கோமளமாகிய பிராமண

வேஷங்கொண்டுக் குதிரையைக் கைக்கொண்டா நன்றோ இதென்னபாவம் கடுமையான தொந்திரவு கொடுத்து விட்டேனே! இப்பாவத்தை நானெப்போது நிர்ப்பது அன்றியும் என்னுயிர்க்குயிராகிய பகவானுக்கே சேவலமாகிய வேலையைக்கொடுத்த என்திரேக என்னமுயன் மீதிருக்கின்றதே என்றுசொல்லிப் பலவாறு விசனப்பட்டு ஒருவாறாகத்தேரிவர்த்தகர்களைக் கருணையுடன் பார்த்து ஓவர்த்தகர்களே!உங்களுடையமகள் போயிற்றென்ற துக்கத்தைப் போக்கி சந்தோஷத்தைக் கொண்டிருங்கள் களவுபோனஉங்கள் உடமைகளுக்குப் பதிலாக என்னுடையஉடமைகளை உங்களுக்குக் கொடுக்கின்றேன என்றுசொல்லிஜௌவுளிமூட்டைகளை வெளிக்கிக்கொண்டுவந்து மூட்டைகளை யவிழ்த்துப் பங்கிட்டு அவுர்களுக்குயீந்தார் இந்தப்படி யந்த பானுதாசர் குதிரையுடன்வஸ்திரவகையராக்களையும் வர்த்தகர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தன்வீட்டை நாடிவந்து வெகுஉல்லாசமாய் ஒருவருடைய சம்பாதனையைக் கைக்கொள்ளாமலுமிருந்துக் கொண்டு பண்டரிநாதரை யனுதினமும் கீர்த்தனைகளால் பாடிக் கொண்டிருக்கையில் எல்லாஜெனங்களுஞ் ஜெகந்நாதனுடைய கதைகளைக்கேட்டு மீருப்பார்கள் இவருடைய தேகயாத்திரையின் பொருட்டுயாரெனைதக்கொடுக்கினு மதைப்பிரியமாகப் பெற்றுக் கொண்டு குடும்பபோஷணை செய்து இல்லறத்திலிருந்துக்கொண்டே நாளுக்குநாள் க்ஞானபக்தி வைராக்கியங்கள் அதிகரித்துப் பண்டரிநாதனுடைய சேவையெப்போது தனக்குகிடைக்குமோ யென்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தப்படி பானுதாசர் ஞானபக்தி வைராக்கியமதிகரித்து விட்டபடியால் நாமத்தை யிடைவிடாது தியானித்துக் கொண்டிருக்கையில், பண்டரியில் நிவாசியாகிய பிராமணனொருவன்தேகயாத்திரையின்பொருட்டு வெளிப்பட்டுவந்து பெருத்தநகரங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே வித்தியாநகரம்தைச்சேர்ந்து ஸ்னனுட்டானங்களை முடித்துக்கொண்டு அரசனைக்காணும் பொருட்டு அரணமனையை நோக்கிச்சென்று வாசற்காப்போரை யடுத்துஅவர்களனுமதியை பெற்று அந்தப்புரத்தை யடைந்து அரசனைக்கண்டு பலஆசிகள்கூறிய பிராமணனைக் கண்டு அவ்வரசன் பூசித்து அடங்காத சந்தோஷமடைந்துக் கொண்டே ஓபிராமணோத்தமரே தாங்களெந்தவூர் தங்களுடைய பெரென்ன என்னைநாடி யிங்குவந்தகாரணம்யாதென அதற்குப்பிராமணன் ஓவேந்தனே யான்வசிப்பது பண்டரி என்பேர் உத்துங்கன் தங்களுடையகீர்த்திப் பிரதாபத்தைக் கேட்டு ஏதோகிஞ்சித்து பொருளையபேக்ஷித்து வந்தேனென அரசனகமு முகமுமலர்ந்து ஓஉத்துங்கனே! யான் ஸ்னனுட்டானங்களைமுடித்துவந்து சியாமளாம்பாளுக்கு பூசைநிறைவேற்றிப் பின்பு மக்கஸன்மானங்கள் கொடுக்கின்றே னெனப் பிராமணன் மெத்த சந்தோஷத்துட னிருந்தார் உடனே யரசன் ஸ்னனுட்டானங்களைமுடித்துக்கொண்டு தேவிபூஜைக்குச் சொல்ல பிராமணனும பின்சென்றிருக்க அரசன பாவனிசன்னிதியை வெகுவுன்னிதமாகப் பிரகாசிக்கும்படி அலங்கரித்தார் மூலஸ்தானத்தை பலவித மலர்களைக்கொண்டுவெகுவிமர்ச்சையாய் அலங்கரித்தார்கள். வெகுவித மேள வாத்தியங்கள் அண்டமுகடுபிளந்து விழுகிறதோ என்றுசொல்லும்படி கோஷித்தார்கள். பிரமக்ஞானத்திற் சிறந்தபிருமணர்கள் விதிப்படி வேதமோதினார்கள் அப்போதந்த பூபாலன் பவானிக்கி வெகுவித சம்பாரங்களைக் கொண்டு அபிஷேகஞ்செய்வித்து உயர்ந்த ஆடையாபரணங்களா லப்பவானியைச் சிங்காரித்து தூபதீபநைவேத்தியங்கள் தந்து பற்பலவிதங்களாகத் தோத்திரம்புரிந்து மங்களாரதிக ளெடுத்துப் பிரசாதத்தை யாவருக்கும் பகுந்துபூசைமுடிவானவுடனே, அரசன் பிராமணனையழைத்து அருகினிலுட்கார வைத்துக் கொண்டு ஓபிராமணோத்தமரே இவ்வுலகத்தினில் வெகுபிரசித்தியும் மகுத்துவங்களும் விசேஷித்து எனக்குக் குலதேவதையாயும் விளங்கும்இந்தப்பவானியை நீயுங் கொண்டாடத்தகும் இதையறிந்து சகலஜெனங்களும் இப்பவானியை சேபித்துத்தங்கள் மனோரதங்களும் பூர்த்திசெய்துக் கொள்ளுகின்றார்கள்.

இந்தப்படிக்கி யாவரும் பவானியைத் தொழுதுத் தங்கடங்கள் கோரிக்கைகளைப் பூர்த்திசெய்துக் கொள்ளுகிறபடியால் இத்தனை மகுத்துவங்களில்மிகுத்தப் பவானியை என்கரங்களாலேயே பக்திவினயத்துடன் பூசித்துக்கொண்டு வருகின்றேன்இந்தஞாபகமென்னைவிட்டு யெப்போதும்பிரியாமலிருப்பதனாலே அந்ததேவிக்கி யான்சகலவிதத்திலும்பூசிப்பதுபோலவும் தெரிசிப்பதுபோலவுங் கனவுகாண்கிறேன்ஆகையால் இதைப்போல பண்டரிபுரத்தில் நிவாசமாயிருக்கும் பாண்டுரங்கநாதனை எந்த அரசனும் பூசைசெய்யவரமாட்டார்க ளல்லவா அந்தப்பாண்டு ரங்கனுக்குச் சிறுவர்கள் பூசைசெய்வார்களல்லவா அன்றியும்பிராமணோத்தமர்கள் யாவரும் பலவீனராகையால் அப்பண்டரிநாதனுக்கு அபிஷேகம் ஆடையாபரண அலங்காரமும் முதலான பூசைகள் செய்யமாட்டார்களல்லவா மேலும் அம்பிகைக்குப் பூட்டும் ஆபரணங்க

ளில் ஒரு ஆபரணத்திற்கு நிகராகுமோ பாண்டுரங்கனுக்கிருக்கும ஆபரணங்கள் அன்றியும் இத்தனைவைபவங்கள் நடக்கின்றதா உங்கள் பாண்டுரங்கனுக்கு ஒருக்காலுமிராது மேலும் இந்ததேவாலயத்திற்குநிகராகுமோ உங்கள்தேவாலயமென்று அரசன்தன்தேவாலயத்தையும் ஆடையாபரணங்களையும்விபவங்களை மெத்தப் புகழ்ந்துச் சொல்லியதால் பிராமணனுக்கு மெத்தக் கோபமுண்டாகி ஓஅரசனே பவானியின் மகுத்துவத்தை மெத்தவும் புகழ்ந்துக் கொண்டாய் அதுஞாயமே பாண்டுரங்கனுடைய சந்நிதியையு மவருக்குண்டாகிய ஆடையாபரணங்கள் முதலான விபவங்களுஞ்சொல்ல வெளிதாகுமோ உம்முடையபவானிசந்நிதி வெள்ளிகிலிட்டு மேலேபூசி யிருப்பதால், தனுக்காகவிருக்கிறது பாண்டுரங்கனுடைய சந்நிதியோ சொர்னத்தினாற்செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கிறபடியால் கோடிசூரியயோதயமானதுபோல பிரகாசிக்கின்றன பிர்மோற்சவத்திற்காகச் செய்திருக்கும் வாகனங்களெல்லாம் ரத்தினங்கள்பதித்து தங்கத்தினா விழைக்கப் பட்டிருக்கின்றன கற்பக்கிருகம் அந்தாரளம் ஸ்தூபி முதலியதும்அவ்வண்ணமேசெய்திருக்கின்றன இடையில் சந்திரபாசாநதி பெருக்கெடுத்துப் போகின்றன இத்தனை சித்திர விசித்திரங்களாக வமைத்திருக்கும் சந்நிதிக்கு நிகராகயெதையுஞ் சொல்லுவதற்கும் பகருவதற்குங் கூடாதென்றால்அச்சந்நிதியின் பெருமையை நானெவ்வண்ண முயலுவேன் அன்றியும் பிரமனுஞ் சிவனும் தேவேந்திராதிதேவர்களும் முனிவர்களும் பரமபாகவதர்களும்இன்னுமுள்ள ஜெனங்களுமவந்து அப்பண்டரி நாதனைத் தினந்தோறுஞ் சேவித்து மனதினில்பக்திபாவித்தும் ஆடியும்பாடியும் பாண்டுரங்கா வரவேணுமென்றுதேடியும் அச்சந்நிதானத்தை நாடியும் கோஷ்டியாகக் கூடியும் செவிகளாரப் பாண்டுரங்க நாமத்தைகேட்டு ஆனந்தங்கொண்டு கண்ணீர்விட்டுக் கொண் டிருப்பவர்களும் கீர்த்தனைகளை வாக்கினாற் பாடிகளிப்பவர்களும் பகவானுடைய நாமத்தை மானசீகமாய் ஸ்மரித்துக் கொண்டிருப்பவர்களும் சந்நிதியை வலஞ்செய்துக்கொண்டே சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிடுமவர்களும் திருத்துழாயைக்கொணடு பகவான்திருவடிகளில் ஸகஸ்திரநாம அர்ச்சனை செய்யுமவர்களும் அடிக்கடி அந்தமூர்த்திக்கி வந்தனஞ்செய்யு மவர்களும் சதாகாலமும் பகவானுடைய சந்நிதானத்தின் முன்னந் தொண்டர்களாகக் கிடப்பவர்களும் அந்த பகவானுக்கு இனியநேசர்களாகி விசுவாசித்துக்கொண்டிருப்பவர்களும் தங்களுடைய ஆத்துமாவை பகவான் திருவடிகளுக்கு நைவேத்தியமாக சமர்ப்பிக்குமவர்களும்.

இந்தப்படியாக ஒன்பதுவித பக்தியில்எவரெவர்களுக் கெந்தெந்த பக்தியிற்பிரியமோ அவரவர்களந்தந்த பக்தியிற் பரிபூரணமாக மனதைநிருத்தி பகவானைச்சேவித்துக் கொண்டிருப்பார்கள் அன்றியும்தாங்கள்பூசிக்குங் குலதேவதையாகிய பவானியும் அச்சந்நிதானத்தை எப்போதும் மாசுமருவின்றி பெருக்கிச் சுத்தஞ்செய்துக் கொண்டிருப்பாள் ஆகையாலந்தப் பண்டரி புரத்தைப் பூலோகவைகுந்தமென்றேசொல்லத்தகுமென்று சொல்லக்கேட்டு அரசனுக்கு மெத்தச் சினமுண்டாகிப் பிராமணனை நோக்கி ஓபிராமணோத்தமா நானிதுபரியந்தம் .பண்டரி க்ஷேத்திரத்தின் வர்ணனையை யனேகரால் பலதடவை கேட்டிருக்கின்றேன் ஒருவராயினும் சொர்னத்தினாலிழைக்கப்பட்ட சந்நிதியென்று சொல்லவேயில்லை நீயொருவனே! சொர்ன சந்நிதியென்று சாதிக்கின்றாய் அன்றியுமென்குல தெய்வமாகிய அம்பிகையை அப்பண்டரி நாதன் சந்நிதானத்தை விளக்கிக் கொண்டிருக்கிறதாசியென்னும் நீசொல்லயான்செவியாரக்கேட்டேன் இனியுன்னை யெளிதினில் விடமாட்டேன் உனக்குத் தக்க சிக்ஷையைச்செய்து உன்னைக்காட்டிற் கொண்டுபோய் விடும்படி செய்விக்கிறேன் அன்றியும்அப்பண்டரிபுரத்தைச் சொர்னத்தினா விழைக்கப்பட்டது யென்று நீசொல்லியதே பிசகு ஆயினும் மதாபிமானத்தினாற் சொன்னாயென்று மதித்து உன்னை க்ஷமித்து விட்டுவிடுவேன் என்குலதெய்வமாகிய பவானி யம்மையைப் பண்டரி புரத்திலிருக்குங் குப்பையைவிளக்கித்தள்ளும் தாசியென்றும் வேசியென்றும்சொல்லிய உன்னாக்கை யறுத்தெரிகிறேன்மேலும் பண்டரிபுரத்தைப் பாலனஞ் செய்யும்படி விஜயஞ்செய்துக்கொண்டிருக்கும்படி பகவானுடைய சந்நிதியை நவரத்தினங்களைப் பதித்துத் தங்கத்தினாலிழைக்கப் பட்டதென்றல்லோ நீசொல்லியது அந்தப்படி யப்பண்டரிபுரநாதன் சந்நிதிசொர்னத்தி லிழைக்கப்படாமல்சாதாரணமாக உலகிலுள்ள சந்நிதானத்தைப் போலக்காணப்பட்டால், எளிதினிலும்மை விடமாட்டேன் என்றும் எப்போதுமில்லாத சந்நிதிக்குஇப்போதெப்படி சொர்ன மிழைக்கப்பட்டது இதுவெனக்கு மெத்த ஆச்சரியத்தை விளைக்கின்றது என்று அதிகசினங்கொண்டுபகரும் அரசனைநோக்கிப் பிராமணன் சிறிதேனும் பயப்படாமற் சொல்லத்தொடங்கினான்.

கேளும் அரசனே பண்டரிபுரத்தின் விவரத்தையும் அதில்வசிக்கும் பாண்டுரங்கனுடைய சேவையை

யும் ரூபில்போய் பார்த்தாலன்றோ அதின்பிரகாசமும் விபவமுந் தெரியவரும் அப்படிக்கிச்செய்யாமல்வீணாய்க் கோபிப்பதில் பயனென்ன நான்சொல்லியவார்த்தை அசத்தியமாகும் பக்ஷத்தில் உடனே எனக்குக் கடுமையான சிக்ஷைவிதிக்கலாம் இதிலணுவளவும்பிசகில்லை மேலுமப்பண்டரிநாதனை சேவித்த மாத்திரத்தில் பவானியைப் பூசைசெய்வது தவிர்ந்துவிடும்அன்றியும் வேதாந்தத்தைக்கேழ்க்காமலிருந்தபோதிலும் வேதசாஸ்திரங்களைக் கோரும்நரர்களைப்போல வேதவேதாந்தனும் நாதநர்தாந்தனுமானப் பாண்டுரங்கனைச் சேவித்தமாத்திரத்தில் சகலசந்தேகங்களுந்தீர்ந்துவிடுமென்று கூற இதைக்கேட்டு அரசன் அப்படியே செய்கிறேனென்று நால்வகைச் சேனைகளுடன்மந்திரிப் பிரதானிகள்சூழப் பண்டரிபுரத்தை நோக்கிச் சென்றான் அப்போது பண்டரிபிராமணன் வெகுசங்கடமாயிற்றே இதற்கு யானென்ன செய்வேன் அரசனோ பண்டரியைநோக்கி சேனைகளுடன் பிரயாணமாயினான் ஓஜெகதீசா அரசனுக்கு யான் சொல்லியதைப்போல காண்பிக்காவிடில என்னை சிக்ஷைக்குடன்படுத்திமெத்த கஷ்டத்தை யனுபவிக்கும்படிச் செய்வான் ஆகையால் ஓஸ்ரீசா முகுந்தா தீனதயாளா தீனபந்துவே தீனஜென போஷகனே பக்தவற்சலா பதிதபாவனா ஆபத்பந்து அனாதைகளுக்கு நாதனே! ஆதிதேவனே இப்போதும்மைவேண்டிக்கொள்ளுகிறேன் காப்பாத்தி ரக்ஷிப்பதுமதுபாரம் இவ்வுலகத்திலுள்ள சாதுக்கள் சின்சந்நிதியைப்பத்தி வெகுவாகப் புகழ்ந்திருப்பதால், யானுமதை யனுசரித்துமது சந்நிதியை வைகுந்த மாநகரமென்றே புகழ்ந்துக்கொண்டாடினனேயன்றி வேறொருகுற்றமுஞ் செய்தவனல்லவிரபராதியாகியென்னை யரசனுக்குக்காட்டிக்கொடுக்க வேண்டாம் மேலும் வைகுந்தமான கரத்தைப்போலநினது சந்நிதியை யான்காண்பிக்காவிடில் அரசன் என்னைச் சிக்ஷை செய்வதுடன் பிராணத்தைப் போக்கும்படியாக நேரிடும் யென்றிப்படிப் பலவாறு துதிசெய்யும் பிராமணன் முறையைசாக்ஷாத்பாண்டுரங்கன்கேட்டு உடனேருக்குமணியை யழைத்து ஓவனிதைகளி ரத்தினமே நம்முடைய பண்டரியில் வசித்துக்கொண்டிருந்த பிராமணனொருவன் யாத்திரைசெல்யச்சென்று வெகுதேசங்களெல்லாங் கடந்து வித்தியாநகரத்தை யடைந்து அப்பட்டணத் தரசனைக் கண்டு ஆசிகூறியபோது அவ்வரசன் பிராமணனுக்குப்பவவிதமாக உபசரித்து க்ஷேமத்தை விசாரித்து எந்தவூரென்று வினவிச் சகலமுந் தெரிந்துக்கொண்டு அப்பிராமணனைநோக்கி ஓபிராமணோத்தமரே யான்பவானி பூசை முடித்து வரும்பரியந்தம் சற்றுநேரமிங்கிருப்பீரேயாகில் உமக்குத்தக்கப் பரிசு கொடுக்குரேனென்று சொல்லிப்போய் பவானியைப் பூசித்துத்திரும்பி வருகையிலப் பிராமணனைக் கண்டு அழைத்துக் கொண்டுபோய் பவானியை சேவிக்கச்செய்து அப்பவானிதன்குல தெய்வமென்றும் அந்தசந்நிதியைத் தானே!கட்டிவைத்த தென்றும் தன்னைப்போல எந்த அரசனும் பக்தி பூரணமாய்ப் பூசிப்பவர்களொருவரு மில்லையென்றும் தன்னைத்தானே புகழ்ந்துக் கொண்டமையால் பிராமணன் பக்திசிரத்தையுடன் உண்மையாகநாமிருக்கு மிச்சந்நிதியை வைகுந்தமென்றும் பீமநதியை விரஜா நதியென்றும் இங்குவசிப்பவர்கள் யாவருமநித்தியசூரிகளென்று அரசன்பூசைசெய்யும் பவானிநமது சந்நிதியைப் பெருக்கும் தாசியென்றும் பலவாறுபுகழ்ந்து அரசனையிகழ்ந்து விட்டமையால் அரசனுக்குக் கோபமுண்டாகி ஓபிராமணா பண்டரிபுரத்தை வைகுந்தமானகரமென்று மொழிந்தயே அந்தப்படி நீயப்பண்டரியை வைகுந்தமானகரத்தைப் போலக் காண்பிக்காவிடி லுன்னைப் பலவிதசிக்ஷைகள் செய்து பிராணனைவாங்கி விடுவேனென்று சொல்லி அவ்வரசன் சேனைகளுடன் அதோவந்துக் கொண்டிருக் கின்றான் பிராமணனோ மெத்தபயத்தினால் விசனமேலிட்டுதன்னைக்குறித்து மெத்தநேரம் முறையிட்டுக்கொண் டழுகின்றான், ஆதலால் சீக்கிரமாக இப்பண்டரியைதுவாரகையைப் போல ஒருமுகூர்த்த காலமிருக்கும் படிச் செய்யக்கடவாய் அப்படிச் செய்வதால், பிராமணன் கோரிக்கையும்நிறைவேறும் நமக்கும்மங்களகரமுண்டாகுமென ருக்குமணிபிராட்டியும் பகவான் சொற்படி அப்பண்டரிபுரத்தைத் துவாரகையைப் போல ஒருமுகூர்த்தகாலம் விளங்கும்படிக் செய்து பிராமணன் பயத்தைப் போக்கினாள் அப்போது அரசன்வழிமார்க்கத்தில் நடந்துக்கொண்டே பண்டரி புரத்திற்குச் சமீபித்து வருகையில் யானையின்மீது தானேறிக்கொண்டு பிராமணனைநோக்கி ஓபிரமவித்தாகிய பிராமணா நீசீக்கிரம் பண்டரிக்கு வந்துசேருமென்று சொல்லி யானைப்பாகனைத் தூண்டினான் அவனும்யானையை விரைவில் நடத்திக்கொண்டு போகையில் அரசனுடைய நேத்திரங்களுக்கு அப்பண்டரியானது எப்படி விளங்கியதென்றால், மெத்தப் பிரகாசத்துடன சந்நிதியின் சிகரமும் பூரணச்சந்திரனைப்போன்றகாந்தியை நரேந்திரன்கண்டு மெதுவாக யானையை விட்டுக் கீழேயிறங்கி தீர்க்கமாக சந்நிதியை நோக்கித்தெண்டனிட்டுப் பலவாறு துதித்துப் பிராமணனையழைத்து ஓபிராமணோத்தமரே நீர் உண்மையைப் புகன்றீர் அதையான் சத்தியமென்று கருதாமலும்மைவெகுவாகத் தூஷித்தேன் அந்தவபசாரங்களை மன்னித்

தென்னைக் காப்பாத்தி ரட்சியுமையாவென்றுவிழுந்து
பணிந்தெழுந்து நடக்கிறபோது கற்பக விருக்ஷமும்
காமதேனு சிந்தாமணியு மிருக்கக்கண்டுவெகுசந்தோ
ஷங்கொண்டுப் பிரியமாகச் சாதுக்களெல்லாம்ஒன்று
கூடி பலவிதங்களாகப் பாடிய பலவாறு ஆடிப்பக்தி
செய்துக் கொண்டிருப்பதையும் பூரணப்பிரவாகமாகி
பீமநதியும் இருகரையும் பிரண்டோடுவதையும்அங்கு
நிவாசமாகும் பக்தஜெனங்களுக்கும் அந்நதியானது
நித்தியமங்களகரத்தைத் தருவதையும் அழகாக கெந்
தர்வர்கள்பாடுவதும் அங்கிருக்கும் சிவனுடுவதையுந்
தாரகமந்திரத்தை தியானிப்பதும் அயனும் ஆகாச
வாசிகளும் அஞ்சலி அஸ்தர்களாசி நிற்பதையும் பர
மாத்துமாவாகிய பாண்டுரங்கனுதன் பக்தர்களையாத
ரித்துக்கொண்டு மிருப்பதுடன் அப்பண்டரியானது
வைகுந்தத்தைப் போலவும் பிரகாசிக்கப் பவானியும்
ஆடுவதுடன் அங்கணமெல்லாம் பெரிக்கிக் கொண்டு
மிருப்பதையுங்கண்டு அரசன் ஆனந்தங்கொண்டுஉட
னே, சந்திரபாகாநதியில் ஸ்னானஞ்செய்து விட்டல
னது சந்நிதிக்குட்சென்று குலதெய்வமாகிய பவானி
யைக்கண்டு ஓபவானி யானுன்னைத் தினந்தோரும்
பூசித்து நைவேத்தியங்கள் முதலானதுக ளெல்லாந்
திருப்தியாகக் கொடுத்து முன்னைவேண்டிக்கோண்டி
ருக்க நீயிங்குவந்து யீனத்தொழிலைச்செய்துக்கொண்
டிருக்குங் காரணம்யாதென பவானி அரசனைநோக்கி
சொல்லுகின்றுள் கேளுமரசனே! அனேகஞ்சத்திகள்
கூடிக்கொண்டிங் கிருக்கயதில் நானொருவள் மாத்தி
ரம் பகவான் சந்நிதானத்தில், கைங்கரியஞ் செய்யாம
லிருப்பதுநீதியோ யாவருடன்யானும் வராவிட்டால்
என்தோஷங்க ளெப்படிவிலகும் ஆகையால், எம்பெ
ருமான் கைங்கரியத்தில் விசுவாசித்து யிங்கு தினந்
தோரும் வந்துப் புனிதைகளாகிப் போகின்றோம்நிர
வதிக் கிருபாகக்ஷமும் நீங்கா தமகுத்துவமும் நிறைந்
திருப்பதாகும் இந்தத்தலத்தின் அருமையும் பெரு
மையும் எனனொருவளால் சொல்லத்தக்கதோ வென்
றுநவிலும் பவானியின் மொழியைக்கேட்டு அரசன்
வெகு ஆச்சரியமடைந்து அங்கு ஸ்னானஞ்செய்து
கொண்டு தனனைமறந்திருக்கும் நாரத முனிவரைக்க
ண்டு ஆனந்தங்கொள்ள உடனே தும்புருவர்வந்துசங்
கீதம் பாடுவதையுங் கேட்டுக்கொண்டிருக்கையில் ஸ்ரீ
களும் புருஷர்களும் நான்குகரங்களுடைய வர்களாகி
வெகுதிருத்தமா யங்கிருந்தனர்கள் சங்குசக்கிரதரர்க
ளாகிய ஜெயவிஜயர்கள் செய்யும் துவாரபரிபாலனை
யும் ஆகாயத்தில், கெருடக்கொடிகள் பறக்கச்சொல்
லவும் மனதில்நினைக்கவுங் கூடாத பிரகாசத்தையும்
அந்தராளம் கெர்ப்பக்கிருகத்திற்குள் சென்று நின்ற
திருக்கோலத்துடன காயாம்பூ மேனியனும் சுந்திர
குமாரனும் புன்னகையுடைய முகமும் பக்தர்கள்
எதையபேக்ஷிக் கின்றூர்களோ? அதுகளைக் கொடுப்
பவனும் இருகரங்களையும் யிடுப்பின்மீது வைத்துக்
கொண்டிருக்கும் டக்கையும் அன்றியும் மூக்தாத்து
மாக்களுக்குத் தன்சேவையைத் தரும்படியான ஜெக
தீசனும் பக்தர்களை ரட்சிக்கும் நிமித்தியம் கரத்தில்
விருதுதரித்துக் கொண்டிருக்கும் சர்வேசனுமாகியப்
பாண்டுரங்கனைக் கண்டு சேவித்து அரசன் சொல்லு
கின்றுன் அதென்னெனில், இந்தபரமாத்துமனை அனு
பவக்ஞானிகளாகும் பெரியோர்களே! தங்களுக்குள்
கண்டு தெரிசிப்பார்கள் என்னைப்போன்ற மூடர்களு
க்கு இந்தபகவானுடைய ரூபரேகை சௌந்திரியங்க
ளைச் சொல்லவேணுமென்றால் வாக்குகள் போதாது
தெரிசிப்பதற்கும் இப்படிப்பட்ட மகாபுருஷனையும்
வேதங்களுக்கு மெட்டாத அதிதனையும்அரசன்கண்டு
சேவித்து அப்பாண்டுரங்கன்தாட்டாமரைகளைத்தன்
னிருகரங்களாலும் பிடித்து உடனே சிரத்தின்மீதிரு
கரங்களையுங் குவித்துக்கொண்டு ஆனந்தித்து தனக்
குள்தானே சொல்லிக்கொள்ளுகின்றுன் நினைப்பதற்
குஞ் சொல்லுவதற்கும் எவர்களாலுமாகாத பாண்டு
ரங்கனது சேவைப் பிராமணன் கிருபையினுலன்றோ
நன்றாகப் பார்த்தேன் யேன்றும் யித்தனை சுலபமாய்
பாண்டுரங்கன் சேவையெனக்கு கிடைத்ததற்குக் கா
ரணமென்னமோ வெனில் அப்பகவானுடைய நிர
ஹேது கதியாயமான கடாக்ஷமேயன்றி அன்னியர்க
ளா லாகாதென்று சொல்லிக் கோவிந்தாமுகுந்தாநந்
தநந்தா வைகுந்தாவென்றுத் துதிசெய்து மேலும்
இந்திரன் முதலானோரையுங் கண்டேன் யாவத்சித்தி
களையும் அடைந்தேன் சந்திரகாந்தத்திற்கு நிகராகும்
வைகுந்தத்திற்கு நிகரான பண்டரியைக் கண்டேன்
ஆகையால், ஓபிராமணோத்தமரே யான் புனிதனுகி
னேன் என்று அவர்திருவடிகளில் பணிந்து எழுந்து
யான்செய்த அபசாரத்தைமன்னிக்கவேண்டுமென்று
களங்கமற்றுச் சொல்லிக் கொண்டிருக்கையில் இதற்
குள் ஒருமுகூர்த காலங்கடந்து பொயினபடியால்உட
னே, யப்பண்டரியானது பழயபடியாயிற்று அதனைக்
கண்டு அரசன் ஆச்சரியப்பட்டு மாச்சரியங் கெட்டுக்
கேவலம் அந்தப்பண்டரி யானது குக்கிராமத்தைப்
போலக் காணப்பட்டது அந்தநரபதி இந்தசித்திரங்
களையெல்லாம் வெகுநயமாய்ப் பார்த்து உடனே பா
ண்டுரங்கன்மீது தன்னுடைய மனதைநிருத்தி எக்கா
லத்திற்கும் காரணவஸ்துவான படியினுலே இது எம்
பெருமானுடைய மாயையாகுமென்றுதீர்மானித்துப்
பவானியின் மீதிருந்த பக்தியைமறந்து பண்டரி

நாதன்மீதந்தபக்தியைநிருத்திப் பகவானைப் பார்த்த வண்ணம் சகலஜெந்துக்களும் பிரியஞ்செலுத்தும்படியான ஓஜெகதீசா ஆபத்தை யடைந்திருக்கு மென்னுடைய வாக்கியங்களை தயவுடன் கேளுமென்றும் ஓபகவானே முன்னஞ் சரணாகதி யடைந்த விபீஷணைப் போல அடியேனும் உம்மைச் சரணாகதியடைந்துஉம்மைச்சேர்ந்தேன் ஹரியே கிருபை செய்யவேணும் நீரேபக்தர்களுடைய வாஞ்சையைப் பூர்த்திசெய்விப்பது உன்னுடைய விருதானபடியினாலே நினக்குத் தொண்டனாகி நினது திருத்தாட்டாமரையின்சேவையே மோக்ஷம்டையும் பொருட்டுக் கோரிக்கொண்டிருப்பேன் அன்றியும் ஓபகவானே! நினதுகருணையானது கடலைப்போல அளவிட்டுச்சொல்ல முடியாததுவிராட்சொருபனே! அப்படிப்பட்ட நின்கிருபை பாரும் தேவரீருடைய் கைங்கரியத்தி லெப்போதும் இடைவிடாமல் விடுபட்டுக் கொண்டிருப்பேன்ஆதலால் இவ்வேழையைக் காப்பாத்திரட்சிக்க வேணுமென்று முறையிட்டழுகிறபோது அம்முறையைக்கேட்டு ஸ்ரீ யாண்டுரங்கநாதன் உண்மையான ரூபத்துடன் பிரசன்னனாகி யெழுந்தருளக்கண்டு சேவித்து அரசன் ஓசுவாமி த்ருதநேமி தேவரீர் அடியேனுடைய நாட்டுக்கெழுந்தருளி என்றும் நிவாசமாக யிருந்துக்கொண்டு நாட்டிலுள்ளகுடிகளையும் நகரத்திலுள்ள குடிகளையும் அடியேனையுங் காப்பாத்தி ரட்சிக்கவேணுமென்று வேண்டிக் கெர்ண்டான்.

இந்தப்படியாக அரசன் பாண்டுரங்கநாதனைவேண்டிக்கொண்ட விஷயத்தில் பகவான் அரசனைநோக்கி ஓவேந்தனே! உபசாந்தனே! இதோவருகின்றேன் என்னையெடுத்துக் கொண்டுசென்றுநின்னகரத்தினிற் ஸ்தாபித்து பூசைமுதலானதுகளும் நடத்தக்கடவாய் ஆனாலென்னை மார்க்கத்தி லெங்கேனும் பூமியில்வைப்பாயாகி லதைவிட்டு யான்வருவது மெத்தக்கஷ்டமாகும் அன்றியும் நீதிமார்க்சத்தை எப்போது தப்பி நடக்கிறயோ அப்போதே நின்னகரத்தை விட்டுப் பழயபடிப் பண்டரிபுரத்தை யடைவேன் என்றிந்தப்படி பகவான் சொல்லிய மொழிகளைக்கேட்டு அரசன் மெத்தக் களிப்படைந்துப் பண்டரிபுரத்திற்கும் வித்தியாநகரத்திற்கும் நடுவிலநேக மனிதர்களைவைத்து மேன்மையான விக்கிரகத்தை கைவலுவினாலே எடுத்துக்கொண்டுபோய் யாதொரு அபசாரமுமின்றி தன்னுடைய நகரத்தினிற்சேர்த்து மந்திராலோபங்கிரியாலோபம் யாதொன்றுமில்லாமற் ஸ்தாபனஞ் செய்து உண்மையான பக்தனாகி எல்லாப்பூசையும் தன்கைகளாலேயே நடத்திக்கொண்டு யாதொன்றிலுங் குறைவின்றி நடத்திக் கௌரமாக அப்போதுமலர்ந்தசெந்தாமரைப் புஷ்பத்தை நிகர்த்த நேத்திரங்களை யுடையப் பகவானைச் சேவித்துக்கொண்டு மெத்த ஆச்சரியப்படத் தக்கினதாக தருமந்தப்பாமல் அரசாட்சி செய்திருந்தான் இப்படிக்கிருக்கையில்ஆஷாடமாதம் வந்தபடியா லப்போதுப் பிர்மோற்சவம நடத்துவது வழக்கமாகையால், அந்தவுற்சவம் கடந்தவருடத்தைப்போல இந்தவருடமும் உற்சவம் நடக்குமென்று நம்பி அனேக பாகவதர்கள் உற்சவத்திற் கெழுந்தருளிநடந்து பண்டரி புரத்தையடைந்து சந்நிதிக்குட் புகுந்து பார்க்கையில், விட்டலவிக்கிரகத்தைக் காணாமையால், மெத்த ஆச்சரியத்தை யடைந்து தங்களுக்குள்தாங்களே! அனுதாபமடைந்து ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். அதென்னவெனில்சாட்சாத்துப் பாண்டுரங்கநாதன் இப்பண்டரி புரத்தைவிட்டு எப்படிப்போயினார் பாண்டுரங்கன் சன்னிதியில்லாதது எப்படியிருக்கின்றதெனில், சகல அலங்காரத்துடனிருக்கும் மனைவியானவள் தன்னுடைய புருடனைவிட்டுத் தனித்திருக்கும் உத்தமியானவளெப்படி அழகுமழுங்கி இருப்பாளோ ஒளிமழுங்கி இருப்பாளோ அதுபோல பகவானில்லாத பண்டரிபுரமானது சோபிக்கவில்லையே பாழடைந்த கிராமத்தைப்போல லட்சுமிகடாக்ஷ மில்லாம லிருக்கின்றது இதற்கென்ன செய்யலாமென்று யாவருங் கூடிக்கொண்டு ஒன்றுந்தோன்றாம லிருக்கையில் பிரியபக்தராகிய பானுதாசரெழுந்து ஓபகவத் பக்தர்களே! சாட்சாத்து வித்தியாநகரத்தி லிருக்கும் பாண்டுரங்கநாதனை பழயபடி பண்டரிக்கு யெழுந்தருளச் செய்கின்றேன் அப்படிக்கந்த பகவானையான் பண்டரிக்குக் கொண்டுவந்துசேர்க்காவிடில் என்பிராணனைப்போக்கிக்கொள்ளுகிறேன் இதுசத்தியமென்று சொல்லிவித்தியாநகரத்தை நாடிசென்றார்.

இந்தப்படியாக அந்த பானுதாசர் சத்தியமொழிபகர்ந்து வித்தியாநகரத்தை நாடிச்சென்றுவிட்டலதேவனை யரசன் யெங்குஸ்தாபனஞ் செய்துபூசித்துக்கொண்டிருக்கிறானோ தெரியவில்லையேயென்று அந்நகரமுழுமையுந் தேடிக்காணாமல்வெகுவாகச்சிந்தித்து இதற்குயானென் செய்வேனென்றுப் பிரலாபித்து எப்போது காண்பேன் விட்டலதேவனையான் கூறிவந்த சத்தியமொழியைக் கடவாமலெனக் கனுகூலனாகி என்னிஷ்டப்படிப் பண்டரிபுரத்திற்கு வருவாரோ வராரோவென்றும் பலவாறு பிரலாபித்துக் கொண்டும் அங்கிருக்கும் மனிதர்களைநோக்கி ஓகுடிகளே! உங்களரசன் பண்டரிநாதனைக் கொண்டுவந்தானே

அக்கடவுளை எங்குஸ்தாபனஞ் செய்து பூசித்திருக்கிறான் அந்தமர்மத்தை தயவுசெய்து சொல்ல வேணுமென்று வேண்டிக்கொள்ள அக்குடிகளிலொருவன் ஓஐயா பானுதாசரே இச்செய்தியையாங்கள் சொல்லுவோமாகி லிந்தரகசியத்தை யரசனறிந்தாலோஎங்கள் சிரசுபோய்விடும் ஆகையால், தாங்களரிதாசராயிருப்பதால் ரகசியத்தைச் சொல்லாவிட்டாலும் மெத்ததோஷம் வந்தெங்களுக்குச் சம்பவிக்கும் அரசனுடைய உப்புந்தண்ணீருங் குடித்து வயிற்றைவளர்த்துக் கொண்டிருப்பதால் இந்தவுளவைச்சொல்லுவோமாகில் ராஜத்துரோகஞ் செய்ததைப் போலாகும் இதுதருமசங்கடமாக விருக்கின்றதே அன்றியும் சிசுஹத்திப் பிரமஹத்தியாக விருக்சின்றதே இதற்கு நானென்னசெய்வேன் ஆகிலும் பகவான் இங்கிருப்பதால் என்னவிசேஷம் பண்டரியிலிருப்பதால் என்ன லாபம் இவ்விரண்டிடத்திலு மெவ்விடத்தி லிருந்தால் விசேஷமோ அந்தயுக்தா யுக்தங்களை யாலோசித்து யுக்தமெதுவோ அலையனுசரித்துச் சொல்லுகிறேனென்று யோசிக்கத் தொடங்கினான் பகவானிங்கு அரசனிடத்திலிருப்பதால், தானொருவனே அர்ச்சனையாராதனைநடத்தி பக்திசெய்துய்வான் பண்டரியிலிப்பகவானிருந்தால், அனேகசாது சத்புருடர்கள் சேவித்து ஆனந்தமடைவார்கள் ஆகையால், பகவான்பண்டரியிலிருப்பதே மேன்மையென்றுகருதிப் பானுதாசரை ஏகாந்தமாகத் தனித்தழைத்துக் கொண்டு போய் ஓபானுதாசரே அரசன் பாண்டுரங்கனைத்தன்னரமனைக் குள்ளிருக்கும் தேவபூஜாகிருகத்தில் ஸ்தாபித்துப் பூசை முதலானதுகளும் நடத்திக் கொண்டு வருகிறான் ஆதலால் அப்பகவானுடைய தெரிசனங் கிடைப்பது தம்போலியர்க்கே அரிதாக விருக்கின்றது நீரெப்படி காவல்களைக் கடந்து பகவானைக் காணப் போகுறீர் என்று சொல்லினன் இதைக்கேட்டுபானுதாசர் நல்லதிருக்கட்டும் எத்தனை காவலிருக்கினும் யான் பயப்படுவதில்லையென்று சொல்லிப் பகலெல்லாம்போக்கி அன்றிரவு நடுராத்திரிவேளையில் பானுதாசர் துவாரத்தையடுத்து அங்குக்காவலர் நல்லநித்திரையிலிருப்பதை யுணர்ந்துத் துவாரத்தைக்கடந்து உள்ளேபுகுந்து அங்குள்ளக் காவலரும் தங்களைமறந்து நித்திரையில் யாவருமிருக்க அப்போது பானுதாசர்உள்ளேபுகுந்து பூஜாக்கிருகத்தின்கதவை தன் கரங்கதால் தொட்டுப் பார்த்துக்கொண் டிருக்கிறபோதே பூட்டுக்கீழே விழுந்தது உடனே கதவைத் திறந்துக்கொண்டு உள்ளேபோய் பாண்டுரங்க நாதனைக்கண்டு சேவித்துக்கொண்டு இருகரங்களையுங்குவித்து எதிரில்நின்று ஓபண்டரிநாதா பங்கயபாகாவேத விரோதா விளங்கும் பிரக்யாதா தேவரீர் வெகு காலமாய்ப் புண்டரீகன் னிமித்தியம் செங்கல்லின் மீது நின்றுக்கொண்டு அனேகதாசர்களை முக்திபதவியிற் சேர்த்துக்கொண்ட மூலபுருஷராகிய ஓசுவாமி தங்களுக்கங்கே யென்னகுறை நேரிட்டதென்று தாங்கள் அரசனிடம் அந்தப்புரத்தினி லிருக்கின்றீர் எங்களுக்கெல்லாம் தங்கள் திருவடிகளே! கெதியென்று நம்பி யிருந்தோமே அப்படிக்கிருக்க எங்களைஇப்படியும் அலையச்செய்து வரலாமோ அன்றியும் உலகத்தினில் ஒருவஸ்துவினாலே அனேகம்பேர்கள் சுகமடைவது விசேஷமா அல்லது ஒருவனே! யந்தவஸ்துவின் யின்பத்தையடைவது விசேஷமா ஓதீனதயாளாபண்டரிபுரத்தினில் வெகுதூரத்தினில் நின்றும் பிரமோச்சவத்தைச் சேவிக்கும் நிமித்தியம் கோடிகள் கணக்காக அனேகசாதுக்கள் வந்துகூடித் தேவரீரை நேத்திரோச்சவமாகக் காணப் படாமல், கிலேசமடைந்தார்கள் ஓகோவிந்தா நினதுக்கிருபையை அவர்கள் மீது படும்படிக்காட்டும் அன்றியும் என்னுடையநாட்டைவிடுத்து நின்னிடம்வந்தேன் தேவர்களுக் கெல்லாம் ஆதிதேவனே! என்பின்னாகவே பண்டரிபுரத்திற்கு வரவேணும் மேலும் ஓபகவானே! பண்டரிபுரத்தைவிட்டு இங்கெழுந்தருளின காரணம் யாது இஷ்டமித்திரர் முதலான சாதுக்களும் இங்குவருவார்களோ வரமாட்டார்கள் நாம்கோஷ்டம் செய்வதற்கும் கேட்பதற்கும் பண்டரிபுரமேதக்கது ஆகையால். நீரிங்கெழுந்தருளி யிருந்தும் அங்குநினதுநாமகோஷ்டம் நடபபதின் அருமையும் பெருமையும்என்னொரு நாவால் சொல்லத்தரமோ அப்படிப்பட்ட நாமகோஷ்டத்தைக் கேழ்க்கச் சகிக்காமல், இவ்விடத்திற்கு வந்தீரோ விட்டலரங்காவென்றுவேண்டிக்கொள்ளும் ஜெனங்களின்பொருட்டு வெறுப்புண்டாகி இங்கோடி வந்து விட்டீரோ அல்லது யாத்திரைசெய்துக் கொண்டுவரும் மனிதர்களின் சிரமத்தைப் பார்க்க மாட்டாமல் இங்குவந்து ஒளித்திருக்கின்றீரோ மேலும் தினந்தோறுந் தாங்களொருவரேயொண்டியாகி அன்னியர்கள் கண்களுக்குப் புலப்படாமல மறைவாகவிருப்பதுமக்கு நன்றோ இதனாலுமக்குண்டாகும் லாபந்தானேதோ வென்றுப் பாண்டுரங்க னுடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு விடாமலிருக்கும் பானுதாசரை நோக்கிப் பண்டரி நாதன் சொல்லத் தொடங்கினான்.

கேளும் பானுதாசரே ஆசாபாசங்களில்வெறுப்புண்டாகி நீங்களெனை வேதவிதிப்படி தொழுவதால் உங்கள்கோரிக்கை யெப்போதும் சித்தியாகும்படிக்

கொடுக்கிறேனென்று சொல்லியபோதிலும் அதைக் கொள்ளாமல் நீங்களிருக்கின்றீர்கள் நானோ இவ்வரசனுக்குப் பெருத்தருணக்காரனாகி அச்சுமைஎன்மீது பட்டமாத்திரத்தில் பதிலொன்றுஞ் சொல்லமுடியாமல் இவவாறு விரைவாக யிங்குவந்தேன் அப்படியானிங்கு வந்ததற்குக்காரணம் யாதெனில் இவ்வரசன் பரமபக்தனாகும் அதெப்படியெனில் வித்தம் மாடு கன்று வீடு பிள்ளை பெண்டு சுத்தம் சோதரர்கள்முதலானவர்களிடத்திலும்ஆசையென்பதையும்பாசமென்பதையும்அடிமூலவேறுடன்பற்றறுத்துஅந்தஆசாபாசத்தையென்மீது வைத்து அநுதினமுமென்னைத்தன் மனதைவிட்டுநீங்காவண்ணம் நிற்குணனாகி சேவித்து இன்னுமுள்ளபக்தகள்சங்கத்தினிற்பரமானந்தமடைந்துசத்துவகுணத்திற் சிறந்த பரமசாரியன்மீதுஅதிக சிரத்தை பக்திமிகுத்து சந்தோஷிக்கும்படி நடந்து பரிசுத்தமாகிய சித்தத்தினிலன்புற் றிளையபெருமாளைப்போலக் குற்றமிலாத புத்தகத்தினிலுள்ள விசேஷார்த்தங்களாகிய வித்தையைக்சற்று மனத்தினில் வைத்திருக்கும் பரமபாகவத னானதால் இவ்வரசன் பக்தியெனும் திரவியக்குப்பலுக்கு யான் மெத்தருணஸ்தனாயிருப்பதால் யானந்தப் பண்டரிபுரத்தைவிட்டு வித்தியாநகரத்தினுள்ளிருப்பது எப்படியிருக்கிறதென்றால் பெருத்த குற்றவாளி தண்டனை விதிக்கப்பட்டு ஜெயிலில்விழுந்துகிடப்பதுபோலாயிற்றுஎன்னுடைய பிழைப்பு நீங்களும் இத்தனைநாளாயிங்கு வராமலே யிதுவரையிலுமிருந்து விட்டீர்களே யென்று சத்தப் படாமற் பேசியும் பானுதாசர் சந்தேகிக்கக் கண்டு பாண்டுரங்கநாதன் தனக்கு அரசன் கண்டத்தினிற் போட்டிருக்கும் சொர்னமாலை யொன்றைக் களைந்து பானுதாசர் மிடத்தினிற்போட்டு அநுதினமும்காலைவேளையில்நடக்கும் பூசையின்போது உன்னை யான் காண்கிறதுண்டு ஆகையால் ஓபானுதாசரே இனியிவ்விடத்தில்காலஹரணஞ் செய்யாமல் அரண்மனையை விட்டு சீக்கிரம் வெளிப்பட்டுப் போய் வாருமையா வென்று விடைதரப் பெற்றுக்கொண்டு விரைவினிலந்தப் புரத்தைவிட்டு பானுதாசர் வெளிப்பட்டு வருகையில் கபாடங்களெல்லாந் தன்கடையே திறந்துக் கொள்ள பானுதாசர் ஒவ்வொருவாசற்படி கடந்த மாத்திரத்தில் பழயபடி ஒவ்வொருகபாடமும் மூடிக் கொள்ளும் இந்தப்படியெல்லா கபாடமும் மூடிக்கொண்டவுடனே பானுதாசர் தவாரத்தையுங் கடந்து ராஜவீதியில் வந்து கலந்து தன்னிஷ்டப் படிக்குப் போயினர்.

இவ்வாறு பானுதாசர் பாண்டுரங்கன் தன்னிடத்தினிற்போட்ட சொர்னமாலையின் மகுத்துவத்தினால் அங்கங்குள்ளக் காவலர்கள் தங்களைமறந்து நித்திரைசெய்யக் கபாடங்களும் மூடிக்கொள்ள வெளிப்பட்டுத் தன்னிஷ்டப்படிக்குப் போயினபின்பு வித்தியானகரத்தரசன் வழக்கப்படி அன்றுகாலையி லெழுந்து ஸ்னானுட்டானங்களை முடித்துக்கொண்டுபாண்டுரங்கன சந்நிதியையடுததுக் கபாடத்தினருகிற்செல்ல அங்குதிறவுகோல் கீழே கிடக்கக்கண்டு கபாடமும் திறந்திருப்பதையு முணர்ந்துநேற்றையதினம் நாமே பூட்டாமற் போனோமோ என்ற சந்தேகத்தினால் அதைக்கருதாமல் சந்நிதிக்குள்ளே புகுந்து தேவபூஜையில் யாதொரு லோபமுமில்லாமற் செய்து தூபதீப நைவேத்தியங்கள்தந்து மங்களாரத்திக ளெடுத்துப் பூசைமுடித்துப் பிரசாதத்தை அங்குள்ளவர்களுக்கீந்து சாயந்திரம் திருவிளக்கேத்தி அர்த்தஜாமபூசை நடத்தி தூபமளித்துத்தீபாராதனைகொடுக்கிறபோது பாண்டுரங்கனுடைய மிடத்திற் போட்டிருந்த சொர்னமாலையைக்காணோம் ஆகையாலிச்செய்தியைக் காவற்காரருக்குத் தெரியப்படுத்தி அத்திருடனைப் பிடித்துக்கொண்டு வரும்படியாய்க்கட்டளை யிட்டதாகச் சொல்லி யனுப்புங்களென்று ஆக்கியாபித்தான்அவர்களுமந்தப்படியே சென்றுக் காவலர் முதலானோருக்குந் தெரியப்படுத்த அக்காவலர்கள் அவ்விரவைப் போக்கி மறுநாட்காலையினி லெழுந்து அந்தநகரமெங்குந் தேடிக்கொண்டிருந்தும் திருடன் அகப்படாமையால் பலகிராமங்களிலும் குக்கிராமங்களிலுந் தேடித் தேடிவேசாறி அந்தஜவான்கள் மருபடியுந் திரும்பித் தங்கள் பட்டணத்தை யடைந்துத் தேடிக்கொண்டே வருகையில் அங்கோர் தடாகத்தில் ஸ்னானஞ்செய்து கொண்டிருக்கும் பானுதாசர் மிடத்திலச் சொர்னமாலை யிருக்கக்கண்டு ஜவான்கள் திடுதிடென்றோடித் திருடனகப் பட்டானென்று சொல்லிக் கொண்டே கயிறுகளைக்கொண்டு அந்தபானுதாசரைப் பின்கட்டுமாராய்ப் பிணைத்துக் கட்டிக் கொண்டுவந்து சிங்காதனத்தின் மீதிருந்து கொலுசெய்யும் அரசன்முன்னிருத்தி ராஜாதிராஜ ராஜபரமேஸ்வரா எச்சரிக்கை நமது அந்தப்புரத்தி லிருத்தித் தாங்கள் பூசைசெய்யும் பாண்டுரங்கன் மிடத்திற் போட்டிருந்த சொர்னமாலையைக் கவர்ந்துக்கொண்டுபோயின திருடன்இவனேயாம் அதெப்படி யிவனே கவர்ந்துபோயினவனென்பீரேல் அச்சொர்னமாலை இதோயிவன் கண்டத்திலிருப்பதாலுஞ் சாக்ஷி வேறொருவர்வேண்டுவதேயில்லை சொர்னமாலையே களவுங்கையுமா யிருப்பதினாலே இவனே திருடனாகுமெனக்கேட்டு அரசன் சொர்னமாலையைக் களைந்துப் பார்த்துத் தன்னுடைய மாலையேயென்று தீர்மானித்து இந்தமாலை யெப்படியுன்

னிடம் வந்தது அல்லது நீயே அந்தப் புரத்திற்குள் நுழைந்து பகவான் கண்டத்திலிருந்து திருடிக்கொண்டு போனையாயென்றுந் திரவிசாரணை செய்யாமலே அங்கிருக்குங் கொலையாளிகளை யழைத்து அடா கொலையாளிகளே! இவனைக் கொண்டுபோய் ரணபூமியில் நிறுத்தி சூலத்தினாலிவன் சிரசின்மேல் குத்திக்கொல்லுங்களென்று கடுமையான கட்டளையிட்டான் அதைக்கேட்டுப் பானுதாசர் தூதர்களைநோக்கிஐயா தூதர்களே! இனியென்னுயிர் நீங்குவது திண்ணமேயாயினும் என்மனதிலொரு கோரிக்கையுளது அதென்னவெனில் இங்குசமீபமாக அந்தப்புரத்தில் வசிக்கும் பாண்டுரங்க நாதரைக்கண்டு சேவித்து வருகிறேன் இவ்வளவு தயவுசெய்து அழைத்துக் கொண்டுபோய் அப்பகவானைச் சேவிக்கச்செய்து உடனே, அரசனுக்கினையின்படி என்னை சூலத்தினாற் குத்திக்கொன்றுவிடுங்களென்று மெத்தவும் வினயமாகக்கேட்டுக்கொண்டபடியால் அரசனுந்தூதரை நோக்கிக் கள்ளனதிஷ்டப்படிப் பாண்டுரங்கனை சேவிக்கச்செய்து உடனே சூலத்தினாற் குத்திக்கொன்று விடுங்களெனத் தூதர்களுமந்தப்படியே பானுதாசரை அந்தப்புரத்தினில் வசிக்கும் பாண்டுரங்கன் சந்நிதியின் முன்பாகக் கள்வனை நிறுத்திக் கபாடத்தைத் திறந்துகற்பூர ஆரத்தி செய்விக்க அப்போது பானுதாசர் சாக்ஷாத்து பாண்டுரங்கனைச் சேவித்து ஓதீனபந்துதீனதயாளோ? தீனசரண்ணியா தீனஜென்மந்தாரா அடியேன் தேவரீரைக் கொண்டுபோக வெகுதிடமாக யிவடத்திற்குவந்தேன் அப்படிவந்தயேழையின் கண்டத்தினில், சொர்னமாலையை போட்டு போகும்படிவிடை தரப்பெற்றுக்கொண்டு யான்போய் ஸ்னானஞ் செய்துக்கொண்டிருக்க இத்தூதர்கள் சொர்னமாலையைத் திருடினவன் யானேயென்று சொல்லிச் சாதிக்கின்றார்கள் அவர்கள் மொழிகளையேசத்தியமென்றுநம்பி என்னைச் சூலத்திற்றாற் குத்திக் கொன்று விடும்படிக் கட்டளையிட்டான் ஆகையால் இப்பட்டணத் தரசன் ஞாயமனியாயம் விசாரிக்காமலே என்பிராண காதகனாகி முயன்றிருக்கின்றான் அந்தப்படியே யடியேன் பிராணன்போக நீரொருவர் மாத்திரம் சுகமாகவிருமென்றும் மேலும் நினதுமனதில் இப்படிப்பட்டயெண்ணத்தை வைத்துக்கொண்டு தந்திரத்தினாலென்னைக் கொல்லச்செய்தீர் ஆகிலும்யெத்தனைஜென்மங்களெடுக்கினும் நானுன்னை விடமாட்டேன் நாராயணா இதுசத்தியமென்று கருதக்கடவீரென்றுஞ் சொல்லிக்கொண்டே நேத்திரங்களில் நின்றும் கண்ணீரொழுக விண்ணப்பஞ்செய்கையில் அரசன் ஜவான்களை விரைவினில் வாருங்களென்று சொல்லக்கேட்டு ஜவான்கள் பானுதாசரைத் துரத்திக்கொண்டு அந்நகரத்திற்கு வெளியில்வந்து வெகுபாரமாகிய சூலத்தைப் பானுதாசர் முன்னம் வைக்க அதைப் பார்த்துப்பானுதாசர் பாஹிமுராரி நரஹரி ஸ்ரீஹரி மதுகைடவாரி யானென்னமோ சொர்னமாலையைத்திருடினவனல்ல தேவரீரே யெனதுகண்டத்தினிற் போட்டுப் போய் வாருமென்று விடைதந்து அனுப்பிவிட்டு என்னைக் கள்வனாக்கி யரசனுடன் நீருஞ் சேர்ந்துக்கொண்டு என்னைக் கொன்றுவிட யெண்ணங்கொண்டீர் ஆகிலுமெனக்கென்ன யான் பரதந்திரனாக நடக்கவேண்டியதே என்னுடைய விதியானதால் இப்பாவம் எப்படியாமோ அரசனை விட்டெப்படிப்போமோ இனியான் விசேஷித்துச் சொல்லி முறையிடுவதில் யாதொருபயனுமில்லை முடிந்துபோன காரியத்திற்கு யார்தானென்ன செய்யலாமென்று சொல்லித் திடமாக அச்சூலத்தின் முன்னின்றார் அப்போது கொலையாளிகள்சூலத்தை யெடுத்துநிறுத்தி ஓங்கிப் பானுதாசர் சிரசின்மீது மோதிப் பற்பலவிதங்களாக பாதிக்கிறபோது அப்பட்டணத்திலிருக்கும் ஜெனங்களெல்லாருங் கூடி இதுவென்பாவம் இவரைப்பார்த்தால், திருடனாகக் காணப்படவில்லையே இவரைச் செய்வதெல்லாந்தொல்லையே யென்று ஜீவகாருண்ணியத்தால் பலவாறு விசனப்பட்டார்கள் அப்போது பானுதாசர் எனதுயிருக்குயிராகிய பாண்டுரங்கநாதா பங்கயபாதா வானம்பூமி இவைகளிரண்டுந் தலைகீழானாலும் சாகரங்களேழும்பொங்கி சமமாயின போதிலும் யென்புத்தி மாத்திரங் கலங்கிச் சிதரமாட்டாது அன்றியும் இத்தேகத்தை யுமக்கு திருஷ்டி சுத்திப் போடுகிறேன் பிரளயகாலம் வந்தபோதிலும் உன்னைப் பிடித்துக் கொண்டிருப்பேன் பிராணபதனும் பிராணநாதனும் பரமபுருடனும் நீரன்றோயென்றுமுறையிட்டவுடனே அந்தசூலத்தில், நின்றும் மிகவும் பிரகாசத்துடன் துளிரெடுத்து அதென்னத் துளிரெனில் தாமரையிலைகளும் தாமரைமொக்குகளும் தாமரைமலர்களும்அதிகமாகச் செழித்திருந்தமையால் அதனைத் தூதர்களுங் கொலையாளிகளும் புரஜெனங்களுங் கண்டு இதென்ன விந்தையாயிருக்கிறதென்றுத் தூதர்களோடி இச்செய்தியை யரசனுக்கோதினார்கள் அதைக்கேட்டு அரசன் மெத்த ஆச்சரியத்துடன் விரைந்து வந்துபார்த்து இதென்ன விந்தையிலும் விந்தையாயிருக்கின்றதென்றெண்ணி அந்தப் பானுதாசருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு ஓபரமபாகவத சிகாமணியே கொடியபாவியாகிய யான் அஞ்ஞானத்தினாலே செய்வித்த அபசாரங்களை மன்னித்து ரக்ஷிக்கவேணும் சுவாமியென்று சொல்லிப் பானுதாசரை அதிகப்பிரி

பத்துட னழைத்துக்கொண்டு அந்தப்புரத்தையடைந்
துப் பாண்டுரங்கன் சந்நிதிக்குச் சென்று கபாடங்க
ளைத் திறந்துவிட அப்போது பானுதாசர் ஸ்ரீபாண்டு
ரங்கநாதனைக்கண்டு சேவித்து இரண்டு திருவடித்தா
மரைகளைப் பிடித்துக்கொண்டு வேண்ட ஸ்ரீபாண்டு
ரங்கநாதன் தன்னுடைய உண்மையான ரூபத்தைக்
காட்டிச்சொல்லுகின்றார் ஓபானுதாசரே நின்னுடை
ய தோளின்மீது என்னைச்சுமந்துக் கொண்டுபண்டரி
புரத்திற்குச் செல்லும் அந்தப் புண்டரீகனுடைய ஆ
சிர்மமாகு மிடத்திற்கு என்ற பகவானைநோக்கி அர
சன் சொல்லுகின்றான் ஓம்புண்டரீக வரதா தேவரீர்
இவ்விடத்தைவிட்டுப் பண்டரிபுரத்திற்கு செல்வது
நீதியோவென அதற்குபகவான் ஓஅரசனே! முன்ன
மே யான்சொல்லிவந்தேன் அதென்னவெனில் எப்
போது நீ நீதிகுன்றும்படி நடக்கின்றயோ அன்றே
யான் பண்டரிபுரத்திற்குச் செல்லுவேனென்றுசொல்
லியிருந்தேனாதலால் அதைப்போலவே நீதியின்றிய
நீதியாய்ப் பானுதாசரைப் பிடித்துக்கட்டிச் சூலத்தி
னால் சிரசில்குத்திக் கொல்லும்படி செய்தாய் ஆகை
யால் இனியுன்னகரத்தினில் அரைக்கணமேனு மிருக்
கமாட்டேன் அன்றியும் நின்மனம்போனபடிச் சிறி
தேனும் யோசனைகள் யின்றி நடந்திருக்கின்றாய் இப்
படி நடப்பதற்கு சாஸ்திரங்களேதுக்குசுருதிஸ்மிருதி
இதிகாசங்களேதுக்கு மநுதருமமேதுக்கு இத்தனை
சாஸ்திரங்க ளிருந்தும் அதையனுசரித்து சாமபேத
தானதண்டமெனும் சதுர்விதஉபாயங்களைக்கொண்டு
அரசாக்ஷி செய்யாமல் தருமத்திற்கு விருத்தமாய்நட
க்கும் கொடுங்கோல்செலுத்தும் நினக்கு நரகஹேது
வேயன்றி சொர்க்காதி போகங்களை யனுபவிக்கப்
போகிற தில்லையென்று சொல்லிப் பின்னுஞ் சொல்
லத் தொடங்கினர்.

கேளும் அரசனே! நடந்துபோனதுபோகட்டும்
இனியாகிலும் தருமமாகத்திரவிசாரணை செய்து ஒவ்
வொருவியாச்சியத்தையும் நன்றாய் ஆராய்ந்துபார்த்
துத்தண்டனைகண்டனை விதிக்கக்கடவாயென்று சொ
ல்லக்கேட்டு அரசன் ஓசுவாமி அடியேனை யிப்படியே
துக்கு முதவாதவனாகச் செய்துப்போவது நீதியோ
வெனப் பாண்டுரங்கன் ஓஅரசனே! இன்றுதொடங்கி
என்னை யுன்னிருதய கமலத்தினில் சதாகாலமும்ஏள
ப்பண்ணிக் கொண்டிருப்பாயாகில் எல்லாப் பாபங்க
ளும் பஞ்சுபொதியினில், அக்கினிப்பொறிப் பட்டால்
அப்பஞ்சுப்பொதி எப்படி யூநுமாய்ந்துப்போகுமோ
அதுபோல எனது நாமப்பிரபாவத்தினாலே நின்பா
பங்களெல்லாம் பறந்தோடி நீசிலநாளிற் புனிதனாகு
வாயென்று சொல்லி வரந்தந்தார் அரசனப்படியே
செய்கிறேன் சுவாமியென்று மெத்தவிசனத் துடனி
ருந்தான் அப்போதுபானுதாசர் பகவானை நோக்கி
ஓசுவாமி பண்டரிநாதா நினதுசொரூபமாகிய விக்கி
ரகத்தை யானொருவனெப்படி சுமப்பேன் அதற்கு
வேண்டிய உபாயம் யானொன்றுமறியேனென அதற்
குப் பாண்டுரங்கன் ஓபானுதாசரே யானுன்னிடம்
சுவாதீனனாகியதிசுலபனுமாகி யமர்ந்திருந்தேன் அ
தெப்படியெனில் சூக்கும ரூபத்தைக்கொண்டு பொ
ருந்திருக்க யதையுணராமல், என்விக்கிரகத்தைச் சும
க்க ஏதேதோ யோசனையுடன் பிரமிக்கின்றாய் எனப்
பானுதாசரும் மகாபாக்கியமென்று அவ்விக்கிரகத்தி
ற்குத் திருமஞ்சனங் கண்டருளப் பண்ணித்திருமணி
ஸ்ரீசூரணமிட்டு ஆடையாபரணங்களா லலங்கரித்துக்
களங்கமற்ற மனதுடன் விக்கிரகத்தை கக்கத்தில்வை
த்துக்கொண்டு பண்டரியைநோக்கிப் புறப்பட்டு நட
ந்து பண்டரிபுரத்திற்கு அருகினிற்போய்க் கொண்டி
ருக்கையில் அப்போதவ்விடத்தில் அவ்விக்கிரகத்தை
வைத்துவிட்டு அந்தப்பானுதாசர் ஜலத்திற்காக போ
கையில் இதற்குள்ளாகப் பாண்டுரங்கன் உன்னிதரூப
த்துடன் அங்கிருக்க வைராக்கியத்துடன் அந்தப்பா
னுதாசரும் பகவானைக்கண்டு பணிந்து வேண்டிக்கொ
ண்டார் அதெப்படியெனில்.

ஓவாசுதேவா தேவதேவா மகானுபாவா தேவ
ரீரைப் பண்டரிக்குக் கொண்டுபோய் எப்படிசேர்ப்
பேனென்று முறையிடுகையில் பண்டரிநாதன்ஓபானு
தாசரே இதற்காக நீரேன் விசனப்பட் டழுகின்றீர்
சீக்கிரம் பண்டரிக்குச்சென்றுசாதுக்களை இங்குவரும்
படிச்செய்து சகலவிபவங்களுடன் என்னைச்சிவிகையி
லேளப்பண்ணித் திருவீதி புறப்பாடுடன் சந்நிதியிற்
கொண்டுபோய்ச் சேரும் அன்றியுமின்னாள் நன்னா
ளாயிருப்பதால் பரமசுகமுண்டாகு மெனப்பானுதா
சர்கேட்டு வெகுசந்தோஷத்துடன்விரைந்து பண்டரி
புரத்தை யடைந்து தியானனிஷ்டர்களாகும் பக்தர்க
ளிவர்க்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்து இவரைக்
கண்ட மாத்திரத்தி லவர்கள் இவரைக்கட்டி க்ஷேமா
லிங்கனஞ் செய்துக்கொண்டு ஓபானுதாசரே பாண்டு
ரங்க நாதரெங்கே எடுத்துவந்தீரா வெனப் பானுதா
சர் ஓசாதுக்களே பாண்டுரங்கநாதன் பத்மாலயமெ
னும் கிராமத்தினில் வந்திருக்கின்றார் ஆகையால் நா
மெல்லோரும் சகலமேள வாத்தியங்களும் முழங்கப்
பரிவாரங்கள்சூழ எதிர்க்கொண்டு சென்று சிவிகை
யின்மீது பாண்டுரங்கநாதனை ஏளப்பண்ணிக்கொண்டு
திருவீதி வலம்புரிவித்துச் சகலாடம்பரத்துடன் சந்நி
தியிற் சேர்க்கவேணுமாகையால் சாதுக்கள் யாவரும்

புறப்படுங்களென்றுசொல்லி சந்நிதிக்குட் சென்று
குடைகொடி தோரணம் ஆலவட்டம் சாமரம் முத
லானதுகளையு மெடுப்பித்துக்கொண்டு மங்களவாத்தி
யங்கள் கோஷிக்கச் சாதுக்களுடன் நடந்து பத்மால
யத்தையடைந்து ஸ்ரீஹரிநாம மாகும் ஜெயவிட்டல
வென்று மார்க்கத்திற் சொல்லிக்கொண்டு பெருத்த
வுற்சவத்தைப்போல நடத்திப் பாண்டுரங்கனை விமா
னத்தின் மீதேளப்பண்ணி சேவிப்பவர்கள் யாவரும்
ஆஹா என்னவிபவம் என்னசேவையென்றுக்கொண்
டாடும்படி எழுந்தருளச் செய்து பண்டரிபுரத்தை
யடைந்து ஆயாசத்தால் சந்திரபாகாநதியில்ஸ்னானம்
பண்ணி பகவானைத்திருவீதிப் புறப்பாடுடன் சன்னி
திக்கு சமீபமாக நிருத்திச் சிவிகையின் மீதேளப்
பண்ணி சந்நிதிக்குள் கொண்டுபோய் ஆசனத்தின்
மீதுசேர்த்துபிராமணர்கள்யாவரும்விதிப்படிவேதம
ந்திரங்களையோதபக்தர்கள்பல்லாண்டிசைக்க சுபமங்
கிலியஸ்ரீகள் மங்களவாழ்த்துகள் வாழ்த்த பலவித
மேள வாத்தியங்கள் முழங்க தாசீஜெனங்கள் மங்கள
ஆரத்திகளெடுக்க இத்தனை வைபவங்களுடன் பாண்டு
ரங்கநாதனுக்கு அபிஷேகஞ்செய்வித்துதிரிகாலபூசை
யும் பஞ்சபர்வங்களும் பிரமோச்சவமும் நடக்கும்ப
டிச் செய்தும் தளிகையாராதனை தூபதீபங்களை சமர்ப்
பித்துக்கொண்டுவரப் பாண்டுரங்கநாதருஞ் சகலவித
உபசாரங்களையுங்கைக்கொண்டுசுகமாகியஆசனத்தின்
மீதுயிருந்துக் கொண்டுசகலஜெனங்களையும்தன்திக்ரு
கண் ணோக்கத்தினால் ஆதரித்துக்கொண்டு மிருந்தார்
பின்பு பானுதாசர் சாதுக்களுடன் சேர்ந்துச்சிலகா
லம் பஜனைசெய்துக் கொண்டிருந்து முடிவில் நிரதிச
யானந்த ஸ்ரீவைகுந்தத்தை யடைந்து நித்தியசூரிகளு
டன் கலந்திருந்தார்.

ஸ்ரீவிஷ்ணுவே நம

வாழிவிருத்தம்.

ஜெகமதனில்பானுசேவைச் செய்தோன்வாழி
ஜெளளியாபாரத்தில்மிகச் செழித்தோன்வாழி
வகையுடனேவர்த்தகர்க்கு மாநிதியீந்தோன்வாழி
வரதர்தாட்டாமரைகள் வணங்குமவன்வாழி
மிகமெலிந்தும்ரங்கனை மேவித்தந்தோன்வாழி
மென்மேலுமரிபக்தி மிகுத்தோன்வாழி
பகவனருள்பெற்றுய்யும் பக்தன்வாழி
பானுதாசர்பங்கயத்தாள் பலநாளும்வாழிவாழி.

பானுதாசர் சரித்திரம்.

முற்றிற்று,

—

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீமத்

பகிரமபட்டர்சரித்திரம்.

தாசர்வரலாறு.

வாழிவிருத்தம்.

அகிலத்திலனைவோர்போற்று மாதியாம்பொருளையேற்றும்
மகிமைகள்மிகுத்துநாளுமாதவன் கிருபையைப்பற்ற
வெகுபகையாகியாசான்விமலப் பொற்பதத்தாலுயர்ந்த
பகிரமபட்டர்பாதப் பங்கயம்பணிகுவோமே.

திருமகள் கிருபாநோக்கம் பெற்றப் பைட்னி
புரமெனும் பட்டணத்திலிருப்பவர் சகலசாஸ்திர சம்
பன்ர் யாக எக்கியங்களை யென்றும் நடத்துமவர் கல்
வியிற்சிறந்த விற்பன்னர் அன்னியர்களுக்குக் கல்வி
யோதும் நிபுணர் பிராமணர்களுக்கு யாசிப்பது உரு
த்தாயிருக்கினும் இவர் அயாசகராகவே யிருப்பவர்
உத்தமமாகியப் பிராமணகுலத்திற் பிறந்தவர் என்
னேரமும் ஹரிபக்தியிற் சிறந்தவராகிப் பிராமணரொ
ருவரிருந்தார் இவர் சகலசாஸ்திர சம்பன்னரானதி
னாலே கல்வியில் வெகுசாமர்த்திய முடையவராகவிரு
ந்தார் இப்படிப்பட்ட வேதாந்திக்கி மனைவியொருவ
ளுண்டு அம்மங்கைத் தன்கணவன் திஷ்டப்படிஇல்ல
றமேநல்லறமென்று கருதி வெகுகாலம்போக்கிக்கொ
ண்டிருந்தாள் இவளிப்படியிருக்கப் பகிரமபட்டர் அ
துதினமுங் கெங்காநதிக்குச்சென்று ஸ்னானுட்டானங்
களை முடித்து நிர்மலமனதுடன் இரண்டுஜாம
பரியந்தம் தேவபூசை செய்து முடித்து நிவே
தனை யென்றுக் கருதி பிராமணர்களெத்தனைபேர்
கள்வரினும் அத்தனைபேர்களையும் ஆராதனைசெய்துப்
பின்புத்தானும் புசித்து பாகவத பாராயணஞ் செய்
துக்கொண்டு வருகையில், ஒருநாள் இவர்மங்கைபிரா
மணர்களுக்கும் தன்னுடைய நாயகரான பகிரமபட்
டருக்கும் அன்னம் பரிமாரினள் அப்போது பகிரம
பட்டர் தன்மனைவியை நோக்கி அடிபெண்ணே
இந்தப்பச்சடியில் கொஞ்சம் உப்புகுறைவுயென அதற்
கம்மங்கை ஓபிராணநாயகரே அறுபதுவருடங்கடந்து
போயியும் இன்னமுமக்கு நாவுக்குரிசி தேடுகின்ற
தோ இந்தச்சபலபுத்தி உம்மைவிட்டு இன்னமும்நீங்க
வில்லையா வென்றுக் கடுங்கோபத்துடன் மொழிந்த
வசனங்களைப் பகிரமபட்டர் கேட்டு மெத்த லஜ்ஜை
யடைந்தலராகி அனுதாபங்கொண்டு ஆராச்சிசெய்து
இதற்குத்தக்கப் பிரயத்தினமுந் தேடவேண்டு மென்
றுகருதி ஆஹா நமது மொழிக்கி இணங்கி வணக்க
மாகப் பகராத இக்கொடியவளை வைத்துக்கொண்டு
இல்லறத்தி லிருப்பதைப் பார்க்கிலும் வனங்களிற்
சென்று பகவத்தியானஞ் செய்திருப்பது உத்தமம்
அங்குள்ளவர்கள் நம்மைக்கண்டு யாரோ பெரியவர்
பகவத்தியானஞ் செய்துக் கொண்டிருக் கின்றாரென்
று பூததயைப் பச்சாத்தாபமுண்டாகி நமக்குவேண்
டிய ஆகாரத்தைக் கொடுத்துப் பசியையாற்றி விசு
வாசித்துக் கொண்டிருப்பார்கள் அன்றியும் சர்வத்
தையும்நீக்கி சன்னியாசியாகினல் யாவரும் நம்மைப்
பூசித்து ஆராதனை செய்விப்பார்கள் மேலும் பரம

ஹம்ஸ ஆசிரமத்தை யடைந்தால்,பிரமசொரூபரென்
றெல்லவரும் புகழ்ந்துக்கொண்டாடுவார்கள் அப்படி
கிக்கொண்டாடினபோதிலும் உடனேஇப்பெரியவ
ரிக்கவயதில் மனைவியை அலையவிட்டுவயிறுவளர்க்கும்
நிமித்தியம் இந்தவேடந் தரித்துக்கொண்டு திரிகிறா
ரென்று நிந்திப்பார்கள் இதில்நமக்கு வேண்டியவர்
கள் மறுபடியும் மனையாளுடன்கூடி யில்வறத்திலிருக்
குமபடியான பிரயத்தினஞ் செய்துக்கொண்டேயிருப்
பார்கள் அவர்கள் சொல்லைக்கேளாமல், நிராகரித்து
விட்டால், அவர்களும நம்மைநிந்திப்பார்கள் இதனா
லெப்போதும நமக்கு இடையூறுண்டாயிக்கொண்டே
யிருக்கும் ஜாதிப்பிரஷ்டராயி விட்டால் ஒருவருநம்நம
துகிட்டே நெருங்கமாட்டார்க ளென்றுத் தீர்க்கா
லோசனைசெய்து அந்தப்பகிரமபட்டர் வெகுவைராக்
கியங்கொண்டு காஜியினிடஞ் சென்று ஓஐயா நான்
துலுக்கனாகவேண்டி உம்மிடம் வந்தேனென அதற்
குக்காஜி ஓபகிரமபட்டரே தாங்கள்சகலசாஸ்திர சம்
பன்னரும் திவ்யக்ஞான சம்பூரணரும் வயதில் மூத்த
வருமாகியும் பிரமகுலத்திற் பிறந்தவருமாகியு மிருக்க
இந்த கேவலமாகிய எங்கள் ஜாதியில்வந்து கலந்துக்
கொள்ளுவதற்குக் காரணம்யென்ன மேலும் காமாதி
விஷயங்களி லெவ்விதமான நடவடிக்கையி லீடுபட்ட
போதிலும் ஒருக்கணநேரத்தில்,மோக்கமடையும்படி
செய்விப்பேன் என்று நவிலக்கேட்டுப் பகிரமபட்டர்
ஒகாஜியான் காமாதிவிஷயங்களை அனுபவிக்கவேணு
மென்றெண்ணி உம்மை அடையவில்லைசகலத்திற்கும்
ஈஸ்வரனாகிய கடவுளைக் காணவேணடி உங்களுடைய
ஜாதிகளனுட்டிக்குங் கிரந்தங்களைப் படித்துஅதிலிரு
க்கும் சாரத்தையறியவேண்டுமெனக் கருதிவந்தேன்
இதுவே காரணமின்றி வேறொன்றுமில்லை யென்று
சொல்லிய பகிரமபட்டர் மொழியைக்கேட்டுக் காஜி
சந்தோஷத்துடனே பகிரமபட்டரை அருகிலழைத்
துச் சுன்னத்துக் கல்யாணஞ்செய்து மந்திரத்தைஉப
தேசித்து துலுக்கனாகச்செய்து தங்கள் மரபிற்குறிய
கிரந்தங்களைக் கொடுத்து வாசிக்கும்படிச் சொல்லப்
பகிரமபட்டரும் அக்கிரந்தங்களை யெல்லாம் வாசித்
துப்பார்த்து அதிலுள்ள சாராம்சத்தையறிந்து நடக்
கவேணு மென்றாலோசிக்க ஒன்றும் சாராம்சமில்லா
மையால் வேறுப்படைந்து ஒருவிதகெதி மோக்ஷமு
மில்லாமல், போனமையால் ஆலோசிக்கத் தொடங்
கினார்

சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவன் இவ்வுலகத்
தினில் ஷண்மதங்களை யுண்டாக்கினார் அதிலெந்த
மதம் மேலானது எந்தமதந் தாழ்ந்தது இதையோ
சிக்குமிடத்தில் பொன்னொன்றே ஆபரணம் பலவாம்
குலமொன்றே நாமம்பலவாம் மண்ணொன்றேவிளைவு
பலவாம் பிரமமொன்றே மூர்த்திகள்பலவாம் ஆகை
யால் ஒன்றுக்கொன்று பேதமில்லை பேதத்தை யொ
ழித்தாலொழிய அபேதமுண்டாக மாட்டாது அபே
தமுண்டாயின போதன்றோ பிரமநிஷ்டை யுண்டா
கும் பிரமநிஷ்டை யுண்டாயினபோதன்றோ பிரமத்
துடன்கலந்து சுகமடையப் படுமென்று திடங்கொண்
டு பிரமநிஷ்டாபரனாயிருந்தார் இப்படிக்கிவரிருக்கிற
போது அவ்வூரிலுள்ள ஜெனங்கள் பகிரமபட்டர்
துலுக்கனாயினா ரென்றுகேட்டு ஒருவருடனொருவர்
பேசிக்கொள்ளுவது எப்படியெனில், ஐயோ யிப்பிரா
மணன் சகலசாஸ்திர சம்பன்னராகியும்பூரணக்ஞான
விற்பன்னாகியும் பிரமநிஷ்டா பரனாகியுமிருந்தும் கே
வலமாகிய துலுக்கமதத்தில் விழுந்துச் சுன்னத்துச்
செய்துக்கொண்டு அனியாயமாய் ஜாதிபிரஷ்டனாகிக்
கெட்டானே யென்றார், சிலர் கைப்புண்ணுக்குக் கண்
ணாடிவேணுமா பிராமண குலத்திற்கும் அசுசியான
துலுக்கர் குலத்திற்கும் எவ்வளவோ பேதமிருக்கின்
றது கரதலா மலகம்போல விளங்குகின்றதே விளக்
கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுந்ததுபோ
லாயிற்றே இப்பிராமணன் கெதி கிணறு வெட்டப்
பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே யென்பார சிலர்
எல்லாந்தெரிந்த யிவர்யென்னமோ புத்திமயங்கிவிட்
டாற்போலத் தோன்றுகிறதென்றுபற்பலவிதங்களா
கப் பேசிக்கொள்வதை இப்பிராமணன்கேட்டு விசன
ப்படாமல் காரியத்தின்மீது கண்ணாயிருந்தார்; இப்ப
டிக்கிருக்கையி லொருநாள் நதிப்பிரவாகத்தி லனே
கம் பிராமணர்கள் சேர்ந்து ஸ்னானஞ்செய்துக்கொண்
டிருக்க இப்பகிரமபட்ட ரங்குசென்றுத் தானும்ஸ்னா
னஞ்செய்ய முயலுவதை அங்கொருபிராமணன்கண்டு
மற்றவர்களை யழைத்து ஜாதிப்பிரஷ்டனான துலுக்க
னும் நம்முடன் ஸ்னானஞ்செய்வதற் கிசைந்தான் ஆத
லாலவனைத் தூரமாகச்சென்று ஸ்னானம் பண்ணும்ப
டிச் சொல்லுங்களென்று கூவினான் அப்போது வே
றொரு பிராமணன் மற்றவர்களை யழைத்து இவன்
துலுக்கனல்லன் பிராமணனாயிருந்து துலுக்கவேதத்
தில்விழுந்த பகிரமபட்டனென, வேறொருவன் வந்து
பகிரமபட்டரை நோக்கி அடா ஜாதிபிரஷ்டா துலு
க்கஜாதியே உண்மையான தென்றும் பிராமணஜாதி
பொய்யானதென்றுங்கருதி நமதுகுலத்தை விடுத்துத்
துலுக்கர் குலத்திலேன் விழுந்தாய் இதிலெந்த ஜாதி
யில் சுகம்நின்றது அதைச்சொல்லு மெனப் பகிரம
பட்டர் சொல்லுகின்றார் கேளுங்கள் பிராமணர்களே
யான் பிரமக்ஞானத்தை நன்றாகயடையும் பொருட்டு
அந்தவேதத்தை யனுசரித்துப் பார்த்ததில் அதிலும்

முக்தி யடைவதற்கொரு மார்க்கம் எழுதிவைத்தேயிருக்கின்றார்கள் அன்றியும் ஆத்துமக் ஞானத்தினிமித்தியம விசாரமின்றி யானப்படிச் செய்தேனேயன்றி அந்தத் துலுக்கமதத்தையடையவேணுமென்றுச் செய்தவனேயல்லன், மேலும் அம்மதத்தைச் சேர்ந்து யதிலுள்ள ரகசியங்களைச் சோதித்துப்பாராமலிருந்தாலது எப்போதுக்குஞ் சந்தேகமேவிளைவித்துக் கொண்டிருக்குமென்று யோசித்துச் சந்தேக நிவர்த்தியாகும்படி அம்மதத்தை யடுத்தேனேயன்றி அவாள்வீட்டிற் புசித்தேனோ விவாகமேதேனுஞ் செய்துக்கொண்டேனோ அல்லது அபிமானமேதேனும்வைத்துக்கொண்டேனோ வென்று சொல்லவே பிராமணர்கள்யாவரும் தங்கள்மனதினில் ஆலோசித்து இந்தப் பகிரமபட்டர் மெத்தகுணவான் ஆகையால் பெருத்தப் பரவசத்தினால் கேவலமான துலுக்கஜாதியில்புகுந்தாரிவரென்றும் இவருக்குப் பிராச்சிதஞ்செய்துநமக்குள் சேர்த்துக்கொள்ளவேணும் இப்படிக்குச்செய்வது மேலான சத்தியவான்களுடைய கருத்திதாகுமென்றுன்னி மேலும் அன்னியகிராமங்களிற் செய்த நரர்களுடைய அபசாரங்கள் நமதுகிராமத்தில்தீர்ந்து போவதனால் நேசன்பொருட்டு நாம்பிரியமாகயிவர்க்குண்டாகிய ஆபத்தை இப்படித் தீர்த்துவிட்டால் மேன்மையாகு மாதலால் இதற்குவேண்டிய முயற்சி செய்துப் பிராமணனை நம்முடன் சேர்த்துக்கொள்ளுவதே மெத்த விசேஷமாகுமென்று சொல்லியாவருங் கூடிக்கொண்டு திரவியஞ் சிலவுசெய்து யாகத்தைநடத்திப் பகிரமபட்டர்செய்த கர்மங்களைப்போக்கிபிராமணனாகும்படி நல்லகிருத்தியங்களை நடத்தியத்துலுக்களைப் பிராமணனாகச் செய்துத் தங்களிற் சேர்த்துக்கொள்ள சிலர்ஒப்பியும் சிலர்ஒப்பாமலு மிருக்குஞ் செய்தியை துலுக்கரறிந்து அரசனுக்குத் தெரியப்படுத்த அரசனும் பகிரமபட்டர்முதலானோரையழைப்பித்து விசாரணை செய்கையில் பகிரமபட்டர் அரசனைநோக்கி ஓபூபதியே! யான் துலுக்கமதத்தில் விழுந்தவனாகவிருந்தால் என்காதில் ரந்திர மிருக்குமோ அவ்விரந்திரத்தில் குண்டலங்களுந் தரித்துக்கொண்டிருப்பேனோ யென்று சமயத்துக்குத் தக்கபடி தந்திரமாகச் சொல்லினார் அதைக்கேட்டு அரசனும் பிராமணர்களும் இந்தப் பகிரமபட்டர் மெத்தபுத்திமான் ஆகையால் தங்களிபகாரத்தை யெடுத்தோதினாரென்று சந்தோஷித்திருக்கையில் அப்போது காஜியானவன் அரசனைநோக்கி ஐயா பார்த்திபரே! இவர்துலுக்கரில்லாத விஷயத்தில் சுன்னத்துசெய்யாம லிருக்கவேணும் துலுக்கராகும் பட்சத்தில் சுன்னத்து செய்துக்கொண் டிருக்கவேணும் ஆகையால் பரிசோதித்துப் பார்த்து இவரைத் துலுக்கரென்றும் அல்லது பிராமரென்றுந் தீர்ப்பு செய்யலாமென அரசன் இதசரியான ஞாயமென றாலோசித்து உடனே பகிரமபட்டர் இடையில் தரித்திருக்கும் வஸ்திரத்தைக் களைந்து பார்க்கும்படி தூதர்களுக்குக்கட்டளையிட்டான் அவர்களு மந்தப்படியே யவர் வஸ்திரத்தை யவிழ்த்துப் பார்க்கிறபோது சுன்னத்து செய்துக்கொண்டிருக்கக் கண்டு அத்தூதர்கள் அரசனைநோக்கி ஓசுவாமி இவர் சுன்னத்து செய்துக்கொண் டிருக்கிறாரென்று சொல்லக்கேட்டு அரசன் அந்தபகிரம பட்டரைத் துலுக்கனென்றே தீர்ப்புகொடுக்கப் பிராமணருந் துலுக்கரும் இதுசரியான தீர்ப்பென்றுசொல்லிப் போயினார்கள்.

உடனே பகிரமபட்டரைப் பிராமணர்கள்குலப் பிரஷ்டனாக வெண்ணி சாதியிற்சேர்க்காமல் நீக்கினார்களப்போது பகிரமபட்டர் இந்த ஜாதியிற் சேர்க்காமலும் அந்தஜாதியிற் சேர்க்காமலும் நடுநாட்டானாகவும் இருதலைக்கொள்ளியின் னடுவிலிருந்துக்கொண்டு இப்படியும் அப்படியும் போவதற்கு முடியாமல் சங்கடத்தை யடையும் எரும்புபோல இவரும் மெத்தக் கஷ்டப்பட்டுக் கொண்டு திரிகிறபோது யெவர்களுந்தன்னை யழைத்து யிப்படிக்கியேன் மனவருத்தமுற்றுத் திரியும் காரணமேதென்று வினவுமவர்களை நோக்கி யான் துலுக்கரிற் கலந்துபோகவெண்ணி சுன்னத்துச் செய்துக்கொண்டேனாகையால் பிராமணர்கள் என்னைக் கிட்டச்சேர்க்க மாட்டாமற்றாத்திபடிக்கின்றார்களென்று உண்மையைச் சொல்லிக்கொண்டுத் திரிவதால் இவருக்குப் பயித்தியம் பிடித்ததென்றுச் சகலருஞ் சொல்லிக்கொள்ள இஷ்டமானபடி திரிந்துக் கொண்டிருக்கையில் ஒருநாளிந்த பகிரமபட்டர் யான் பிராமணனோ அல்லதுதுலுக்கனோ என்ற சந்தேகங்கொண்டு இந்தசந்தேகத்தை நிவர்த்திசெய்யத்தக்க ஆசான் கிடைக்கவில்லையே யென்றுதேடித் திரிந்துக்கொண்டிருந்தார் இப்படிசந் தேகநிவர்த்திக்குத்தக்கஆசானைத்தேடிக்கொண்டிருப்பதில்லையேசில நாள்கள் கடந்துபோயினது அப்போதுமெத்த விசனத்துடன் திரிந்துக்கொண்டே வடவாளமெனுங்கிராமத்திற்குவந்து அங்குசந்நிதியும் அதைச்சார்ந்த மடமு மொன்றிருக்கக்கண்டு அதற்குட்புகுந்து போகையில் சிலசாதுக்கள் கூட்டமாய்க் கூடிக்கொண்டிருப்பதைப்பார்த்து அக்கூட்டத்தில் நாகநாதரெனுஞ்சுத்தபுருடனவ்விடத்தில் வெகுமுடுக்கா யிருக்கக் கண்டு அவருக்கு சமாதியொன்று வெகுவேலைத் தரமாகக் கட்டுவதையும் பார்த்துக்கொண்டிருக்கையில் அந்த நாகநாத சித்தபுருடன் அங்கிருக்குங் குளத்தடியில்

வந்துத் தன்கையிலிருந்த சக்கரையை அக்குளத்தி
னிற்போட்டார் அதிலெரும்புகளிருக்க அதின்பேரி
லிரண்டு கற்களைவைத்தார் அவ்வெறும்புகள் தண்ணீ
ரில் முழுகிச்சாகாமல் உயிருடனிருப்பதைக் கண்டு
இந்த பகிரமபட்டர் அவருடைய மகுத்துவத்திற்கு
அதிசயங்கொண்டு இப்பெரியோராலே நமதுசந்தேக
நிவர்த்தியாகுமென்று விண்டு திடங்கொண்டு இவரே
நமது சத்குருநாதரென்று இவரேதன் சந்தேகத்தை
நீக்கும் போதரென்று கருதி அவர்திருவடிகளில்விழு
ந்து பணிந்தஎழுந்து ஒசுவாமியான் துலுக்கனோஅல்
லது பிராமணனோ இந்தசந்தேகத்தைநிவர்த்திசெய்ய
வேணுமென்று வேண்டிக்கொள்ள அப்போதந்தகுரு
நாதன் வெகுவிசையாய் தன்கையிலிருக்குந் தடியின
லே ஒங்கி சிரசின்மீது நன்றாயடித்தார் அவ்வடியைப்
பட்டமாத்திரத்தில் பகிரமபட்டர் மெய்சோர்ந்துப்
பூமியின்மீது ஸ்மாரகம்தப்பி விழுந்துக்கிடக்கக்குரு
நாதன் பகிரமபட்டர் சந்தேகத்தை நிவர்த்திசெய்ய
வேணுமென்றுக் கருதி உபசரித்து அருகிலிருக்கும்
சிஷர்களையழைத்து இவனுடைய தேகத்தை நையும்
படி நன்றாகவடிக்கச்செய்து அந்தமாங்கிஷம் செறி
த்தசையுஞ்சியும் நரம்புகளும் பஞ்சுபோலாக்கி அதை
யுண்டைசெய்து வைத்து சிறிதுநேரஞ் சென்றபிறகு
அந்தக்குருநாதன் அவ்வுண்டையை யெடுத்துத் தன்
னுடைய கரங்களாலேபுருஷனைப்போலச்செய்து அப்
புருஷனை யக்கினியில்வைத்தார் அவ்வக்கினிதேவன்
தணிந்துபோகும் வரையிலிருத்தி உடனே அக்குரு
நாதன் தன்னுடையக் கிருபையெனுஞ் சாந்தத்தை
அம்மூர்த்திக்குள் பிரகாசிக்கச்செய்துஅச்சரீரத்திற்கு
ள் சைதன்னியத்தைச் சஞ்சரிக்கும்படி பார்த்தமாத்
திரத்தில் அந்தபகிரமபட்டர் உயிர்பெற்றுத் துரிய
யுன்மனியவஸ்தை யடைந்த துரியயோகியைப்போல
வெழுந்து குருநாதனைவணங்கி இணங்கி நிற்கக்கண்டு
அந்தநாகநாதர் பகிரமபட்டரைநோக்கி ஒபிராமணோ
த்தமா நீயாரென்றுவினவ அதற்குப் பகிரமபட்டர்
ஒன்றும்பேசாமல் மௌனமாகவிருக்க நாகநாதர் ஒ
பிராமணா நினது பாபங்களெல்லாம் பரிகாரமாகிப்
பரிசுத்த ஆத்துமாவாகினாய் நினக்குண்டாகிய பெரு
த்த சந்தேகமும் நிவர்த்தியாயிற்று வென்று வினவி
உடனே அவயவங்களெல்லாம் பின்னமில்லாமல்பூர்த்
தியாக விருக்கின்றதாயென்று பரிசோதித்து யாவத்
துமான அவயவங்களும் பூரணமாயிருக்கக்கண்டு சந்
தோஷங்கொண்டு அந்தபகிரமபட்டர் சிரசின்மீதுத்
தன்கரங்களைவைத்துத் தாரகமந்திரத்தை யுபதேசித்
துச் சீக்கிரமே நிரதிசயானந்த ஸ்ரீவைகுந்த சம்பிரா
ப்தியை யடையக்கடவாயென் றாசீர்வதித்து அஸ்த
மஸ்தகவியோகந் தெரிவித்து இனியுன்னிஷ்டமான
படி போகக்கடவாயென்று மங்களவாக்களிக்க அந்த
பகிரமபட்டர் ஆசானுடைய கட்டளையின்படிவடவா
ளக்கிராமத்தைவிட்டு புறப்பட்டு மருபடியும்பைட்னி
புரத்தையடைந்து அங்குதிவ்யக்ஞான சம்பூரணனா
கிப் பிரமானந்தத்துடன் பிராமண அக்கிராரவீதியில்
ஹரிபஜனை செய்துக் கொண்டிருந்தார்.

இந்தப்படி பகிரமபட்டர் நாகநாதரால் பழைய
திரேகத்தைப் போக்கிப்புதியதிரேகத்தைப்பெற்றுத்
திவ்யக்ஞான சம்பன்னனாகி வீதிகள்தோரும் ஹரிப
ஜனை செய்துக்கொண்டு திரியும் பகிரமபட்டரை அவ்
வக்கிராரத்திலிருக்கும் பிராமணர்கள்கண்டு இந்தத்
துலுக்கப்பிராமணன் இத்தனை நாளெங்கேபோயிருந்
தான் இன்று நமதக்கிராரத்தினுள் வந்து ஹரிபஜனை
செய்கின்றான் முன்னமிவனை இவ்வூரரசன் துலுக்க
னென்றே தீர்மானஞ் செய்திருக்க இத்துலுக்கன் நம
தக்கிராரத்திற்குள் ளேன்வந்தான் இவனையினியிங்கு
வரவொட்டாமற் பிடித்தடித்துத் துரத்தும்களென்று
கொல்லி ஆங்காரமேலிட்டு அப்பிராமணர்கள் பகிரம
பட்டர் மேல்விழுந்து இடியிடியென் றிடித்துப் புடை
புடைபுடை யென்றுப் புடைத்து அடாபகிரமபட்டா
துலுக்கனாகிய நீயெங்கள்வீதிக்குவந்து பயமின்றிஹரி
பஜனை செய்கின்றயா இதை ஜீவனமாகச் செய்துக்
கொண்டுய்கின்றையா அடாதுஷ்டா உத்தமமாகிய
பிரமகுலத்தைவிட்டு துலுக்கமதத்திற்குட்பட்டுகெட்
டுப்போயின பிரஷ்டா இன்றுமுதல் இவ்வீதிக்குள்
வராதே என்சொல்லை மறுத்துவருவாயாகி லுன்னைச்
சித்திரவதைசெய்து விடுவோம் இதுதிண்ணமென்று
கருதக்கடவா யென்றுசொல்லப் பகிரமபட்டர் தன்
னைப் பிராமணர்கள் அடித்த அடிகளாலுண்டாகிய
நோயினால் மெத்தவருந்தி ஒபிராமணர்களே வீணாக
வென்னைத் துலுக்கனென்றும்பிரஷ்டனென்றும்துஷ்
டனென்றும் இன்றுமுதல் எங்கள்வீதிக்கு வராதே
யென்றும் மேல்விழுந்து நீங்களெல்லோரும் அடித்தீர்
கள் அதனால் யான் தாழ்ந்தவனாகப் போகிறதில்லை
ஆகையால் முன்னமென்னை யரசன் பரிசோதித்துச்
சுனனத்து செய்திருந்தமையால் துலுக்கனென்று தீர்
ப்புக்கொடுத்தான் அதனாலெனக்குச் சந்தேகமுண்
டாகி அன்றுமுதல்யான் தக்கவாசானைத்தேடித்திரிந்
துக்கொண்டே வடவாளமெனுங் கிராமத்தையடுத்து
அங்குசித்திர விசித்திரமாகச் சமாதி கட்டிவித்துக்
கொண்டிருந்த நாகநாதரைக்கண்டு இவராரோ பெரி
யவராக யிருக்கின்றாரென்றாலோசித்துக் கொண்டிரு
க்கையில் அந்தநாகநாதர் மடத்தைவிட்டு வெளிப்

பட்டுவந்து அங்கிருக்குந் தடாகத்திலிறங்கியவர்கரத்
திலிருந்து சர்க்கரையை அத்தடாகஜலத்திற் போட்
டார் அதிலெறும்புக ளிருக்கக்கண்டு அவ்வெறும்பு
கள்மீது இரண்டு கற்களை வைத்தார் அதனால் யெறும்
புகளுங் கற்களுந் தண்ணீரில் முழுகிப் போகாமல்,
மிதந்துக் கொண்டிருந்ததை யான்கண்டு மெத்த ஆச்
சரியமடைந்து இவரே நமக்குற்ற சந்தேகத்தை நிவர்
த்தி செய்யத்தக்க வாசானாகுமென்று நம்பிக்களங்க
மற்ற மனதுடன் அவர்திருவடித் தாமரைகளில் விழு
ந்துபணிந்து எழுந்து இருகரங்களையுஞ் சென்னிமீது
குவித்துக்கொண்டு ஓசுவாமி யான துலுக்கனோ அல்
லது பிராமணனோ இந்த சந்தேகத்தை நிவர்த்திசெய்
யவேண்டுமென்று வேண்டிக் கொண்டேன் அதற்கந்த
குருநாதன் பதிலொன்றுஞ் சொல்லாமல் தன்கரத்தி
லிருந்தத் தடியாலென் சிரசின்மீதோங்கி யடித்தார்
அவ்வடியினால் யான் மெய்சோர்ந்து பூமியின்மீது
வீழ்ந்து உடனே தெளிந்தெழுந்திருக்கக் கண்டஆசா
ன் சீஷர்களை யழைத்து என்னுடைய திரேகத்தைப்
பஞ்சு போலாகும்படி நையநறுக்கச்சொன்னார்அவர்
களுமந்தப்படியே இருப்புத்தடிகளைக்கொண்டு அடிக்
கும் வரையிலெனக்குப் பிராணனும் சுயக்ஞானமு
மிருந்தது இரண்டு மூன்றடிபட்ட மாத்திரத்தில்சுயக்
ஞானமுமற்றுப் பிராணனும் போயினபின்பக் குரு
நாதரென்னை யெவ்வாறுசெய்து உயிர்கொடுத்தெழுப்
பினாரே யானறியேன் பின்பெனக்கு ஸ்மாரகம்வந்த
வுடனே! குருநாதனை யிணங்கிவணங்கி நிற்கிறபோது
அக்குருநாதரென்னை நோக்கி நீயாரப்பா வென்றார்
அதற்கு யானொன்றும் பதில்சொல்லாமல் மௌனமா
கயிருக்க அதையுணர்ந்தக் குருநாதன் ஓபிராமணோ
த்தமா நீசெய்த பாபங்களெல்லாம் பறந்துபோயிற்று
அன்றியும் நீ துலுக்கனல்ல பிராமணனேயாகும் மு
ன்னம் நின்னாட்டரசனுன்னைப்பரிசோதனைச்செய்யும்
போதிருந்த சுன்னத்து இப்போதிருக்கின்றதா பார்
த்துக்கொள் ளென்றுசொல்லி என்சிரத்தின் மீதுத்
தன்கரங்களை வைத்துத் தாரகமந்திரத்தை யுபதேசி
த்து மங்களவாழ்த்துக்கள் வாழ்த்தி யினியுன்னிஷ்
டப்படி செல்லக்கடவாயென்று விடைகாரப் பெற்று
க்கொண்டு வந்து என்ஜென் மங்கடத்தேருப்படியான
வழியெதுவோ அந்தமார்க்கமான ஹரிபஜனையைச்
செய்துக்கொண்டு வழியேபோகு மென்னைச் சின்னா
பின்னமாக வடித்துத் துறத்துகின்றீர்களே இதுஞா
யமோ வெனக்கேட்டு அந்தப்பிராமணர்கள் பகிரம
பட்டர் யிடையில் தரித்துக்கொண்டிருக்கும் வஸ்திர
த்தை யவிழ்த்துப் பரிசோதனைசெய்துப் பார்க்கும்
போது துலுக்கமதத்தை யடுத்த சுன்னத்தயில்லா
மல் போகவே எல்லோரு மெத்தசந்தோஷ மடைந்து
பகிரமபட்டரை யழைத்துச்சென்று அரசன்கொலு
முகத்தில் நிறுத்தித் துலுக்கருக்கும் தங்களுக்குமிருக்
கும் வியாச்சியத்தைத் தெரியப்படுத்த உடனே! அர
சன் துலுக்கரை வரவழைத்து இதோபார்த்தீர்களா
முன்னமிவனைத் துலுக்கனென்றே தீர்ப்புசெய்திருக்
கின்றேன் அப்படிக்கிருக்க இப்போதிவன்வந்துநன்
பிராமணனேயன்றித் துலுக்கனல்லவென்று வியாச்
யங் கொடுத்திருக்கின்றான் உங்கள்சம்மதி யென்ன
அதற்குத்தக்க ருஜுவேதாகிலு மிருந்தால் சொல்லி
வழக்கைக்கெலித்துக் கொள்ளுங்களெனத் துலுக்கர்
கள் ஓபார்த்திபரே இதென்ன யடிக்கடிதொந்திரவாக
விருக்கின்றது இவனுக்கு சுன்னத்து செய்திருப்பதே
திருஷ்டாந்திர மாகவிருக்க இவனைத்துலுக்க னல்ல
வென்றும் பிராமணனே யாகுமென்றெப்படிச்சொல்
லுகின்றதெனப் பிராமணர்கள் ஓவேந்தனே! முன்
னம் பரிசோதித்ததைப் போல இப்போதும்பரிசோ
தித்துச் சுன்னத்துச் செய்திருக்குமாகில் இவன்துலு
க்கனே மருபடியுமின்ன மிவ்வழக்கைத் தங்கள்சமுக
த்தின்முன்னம் பேசுகிறதே யில்லையென அரசன்அங்
கிருக்கும் தூதர்களையழைத்து இவனுக்குச்சுன்னத்து
செய்திருக்கிறதா இல்லையா இதையறிந்துச்சொல்லுங்
களெனத் தூதர்களுமந்தப்படியே பிராமணன்இடை
யில் தரித்திருக்கும் வஸ்திரத்தைக்களைந்து பார்க்கும்
போது சுன்னத்துசெய்யாம லிருப்பதையறிந்து அர
சனைநோக்கி ஓசுவாமி இப்பிராமணனுக்கு சன்னத்து
செய்யவேயில்லை யென்றுநவில அரசன்கேட்டுமெத்த
வாச்சரியப்பட்டு மாச்சரியங்செட்டு உடனே இவன்
துலுக்கனல்ல பிராமணனே யாகுமென்றுத் தீர்ப்பு
செய்தான் அத்தீர்ப்பைக் கேட்டுத் துலுக்கர்கள் ஓ
வேந்தனே! சிலநாளைக்கு முன்னமிருந்த சுன்னத்து
இன்றெப்படிப் போயிற்று இதுவென்ன ஆச்சரியம்
சூத்திலடிக்க வாயிலுள்ள பற்களெல்லாங் கொட்டிப்
போயிற்றென்பது போல சந்தேகத்துக்கிடமாக விரு
க்கின்றது ஆகையால், நாங்களே! பரிசோதித்துப்பா
ராமலிவனைப் பிராமணனென்று சொல்லுவது அநீதி
யென்றுப் பகர்ந்து துலுக்கர்கள் பகிரமபட்டர் அரு
கிற்சென்று அவர் தரித்துக் கொண்டிருக்கும் வஸ்திர
த்தைக் களைந்துபார்க்கிறபோது சுன்னத்துசெய்யாம
லிருப்பதையுணர்ந்து அத்துலுக்கர்கள் மெத்தவாச்ச
ரியமடைந்து இதுவென்ன ஜாலமோ அல்லதுமந்திர
தந்திரத்தின் வலுவோ வெனறும் பலவாறுயோசித்
துக் கொண்டேவந்து அரசனைநோக்கி ஓபூபாலரே?
இப்பிராமணனுக்கு சுன்னத்துசெய்யக் காணோமென
உடனே அரசன் இவர்பிராமணரே யாகுமென்று தீர்

ப்புசெய்தான் அதைக்கேட்டுத் துலுக்கர்கள் தங்கள் வியாச்சியம் தோத்துப் போயிற்றேயென்று விசனப் பட்டுக்கொண்டு போயினர்கள் பிராமணர்களோ? வெருசந்தோஷித்தாகி பகிரமபட்டரைத் தங்களு டனழைத்துச்சென்று அக்கிராமத்திலுள்ளப் பிராம ணர்களையெல்லாம் வரவழைத்துக் கூட்டஞ்சேர்ந்து பகிரமபட்டரைப்பத்தி ராஜசபையில்நடந்த செய்தி யையெல்லாம் ஒன்றொளியாமற் பகர்ந்து யாவருமொ ப்புக்கொள்ளும் படியாகச்செய்து பகிரமபட்டரைத் தங்கள் குலத்தினிற் சேர்த்துக்கொண்டு அவருக்கு வேண்டிய பிரசாத முதலானதுகளும் ஒவ்வொருதின த்திற்கு ஒவ்வொரு வீட்டாருதவி செய்யும்படி ஏர்ப் பாடுசெய்ய அப்போதந்தப் பகிரமபட்டர் முறைப் படி ஒவ்வொருவீட்டினிற் புசித்துக்கொண்டுதன்குரு நாதரைப் பலவிதங்களாகத் தோத்திரம் புரிந்தும் ஹரிபஜனையை யிடைவிடாது செய்துக் கொண்டும் அளவுகடந்த தன்சற்குரு நாதருடைய மகுத்துவங்க ளைப் பலருமறியச் சொல்லிக்கொண்டு மிருந்து ஒரு நாள் பண்டரியைநோக்கி நடந்துச் சிலநாளிற் பண்ட ரியையடைந்து அங்கிருக்கும் பாண்டுரங்க நாதனைச் சேவித்துப் பரமானந்தமேலிட்டுத் தன்னை மறந்தா டிப் பலகீர்த்தனைப்பாடிப் பரமாத்துமாவுடன்கூடிப் பாகவதர்கள் திருவடிப் பொடிகளைச் சிரசினிற்சூடி உலகவாசையை மறந்துப் பரமவைதீகச் சாம்பிராஜ் யமாகிய வைகுந்தமா னகரமெனும் பரந்தாமத்தை யடைந்து நித்தியமுக்தர்களுடன் கலந்து மெத்தசுகா னுபவ மடைந்துக் கொண்டிருந்தார்.

அகிலமதிலறுமறைகளனைத்துணர்ந்தோன்வாழியே யறுசமயமதின்சாரமறிந்துதேர்ந்தோன்வாழியே
வெகுவிதமாய்மேவிஜென்மமாறினோன்வாழியே வேதாந்தசித்தாந்தவிதிநடப்போன்வாழியே
தருமவராம்வேதியர்கடமைச்சார்ந்தோன்வாழியே தாரத்தைதவிர்த்தமுக்திதாரத்தோன்வாழியே
பகிரமபட்டரெனும்பெரும்பான்மையோன்வாழியே பாதபங்கத்தினம்பணிந்துய்வோர்வாழியே

விட்டலதேவாயநம:

பகிரமபட்டர்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீ மத்

பாபாஜி சரித்திரம்.

துதிவிருத்தம்.

மாபாவவிருளைப்போக்க மாதவிகுணவன்செம்பொற்
ஸ்ரீபாதபக்திசெய்திச் செகத்தினிற்புனிதனுக
தாபாக்கினிமூன்றும்போக்கித் தவம்புரிந்தரியைக்கண்ட
பாபாஜிபங்கயத்தாள் பணிந்தென்றுமுய்குவோமே.

திருமகளுக்கோ ரிருப்பிடமாகியும் தெளிந்தஞானியர்கள் வாசத்தலமாகியும் நீர்வளமும் நிலவளமும் நிறைந்ததேசமாகியும் மணிமாட மாளிகைகளாலே யிலகும்படியானதாகியும் மகத்தாகிய வினைகள்யாவும் அதைப்பார்த்தாலே விலகும்படியானதாகியும் சாலைவாய்ப்புஞ் சோலைவாய்ப்புங் கண்டோராழ்வதாகியும் சாதுர்வர்ணத்தாரு மங்கேயிருந்து வாழ்வதாகியும் சேடனுமதின் பெருமையைச்சொல்லத்தரமாகாததாகியும் சீமான்களாகிய பெரியோர்களுடைய நெஞ்சமானது வேறொன்றினிற் புகாமலித்தலத்தையே நாடிக்கொண்டிருப்பதாகியும் விளங்கப்பட்ட மங்களகரமுடைய பாராமதியென்னுஞ் க்ஷேத்திரத்தில்உத்தமகுணத்திலும் நற்றவமுயற்சியினலும் கல்வியின்வணக்கமும் நல்லோரிணக்கமும் சாதுக்கள்சேவையுப் மாதனத்தினீகையும் இடைவிடாத் தியானமும் மடமையிலாமோனமும் ஆதுலர்க்காசனமும் அருமையானசாந்தமனமும் பொருந்தி சிரேஷ்டமாகிய பிராமணகுலத்தி லுதித்தவரும பிரம்மத்தி லிருதயத்தைப் பதித்தவருமாகய தாமாஜியென்றொருவ ரிருந்தார் இவருக்கு நற்குணமும நற்செய்கையும் வாய்ந்த மனையாளொருவளுண்டு இவ்வுத்தமமாதுடன்கூடி இல்லறமே நலமெனக்கருதி இல்வாழ்க்கையை யனுசரித்துத் தான் அவ்வூர்கணக்கு அலுவலில்முயன்றிருந்துமானியங்களும சம்பத்துகளும விசேஷித்து வெகுசெழிப்புடனிருந்தார் இப்படிஇவருக்கு எல்லா சம்பத்துகளுமிருந்தும் புத்திரசம்பத்தொன்று குறைவாயிருப்பதால் மெத்தவிசனத்துடன் சிலகாலங் கழியப் பின்பொருநாள் தன்குலதெய்வமாகிய ஆதித்தனைக்குறித்துத் தம்பதிகளிருவரும் பூசைமுதலான பஜனைசெய்துக்கொண்டிருக்க இப்படி யனேகநாள்கள் செய்துக்கொண்டுவருகையில் அந்ததபனன் இவர்கள் பக்தியாகச்செய்யும் பூசைமுதலான பஜனைக்கு மெத்த சந்தோஷித்து ஒருநாள் அந்த ஆதித்தன் எழுந்தருளித் தாமாஜியின முன்னம்நின்று சேவைதந்து ஓதம்பதிகளே! உங்கள் மனத்தினிலுண்டான குறையென்ன அதை வெளியிட்டால் தடையின்றி அவ்வரத்தைக் கொடுக்குறேனென, அதற்கு தாமாஜிபந்துலு அவர் திருவடிகளில் விழுந்துபணிந்து முன்னின்று ஓசுவாமி தேவரீருடைய சுந்திரரூப விலாசத்தைக்கண்ட மாத்திரத்தி லடியேனுக்கு மெத்தப் பிரியமாயிற்று எங்கள் பாக்கியராசியானது இன்றல்லோ பலிதமாயிற்று எங்களுக் குண்டாகியகுறை யின்றோடுநீங்கிப் போயிற்று எஙகள்குலதெய்வமே உத்தமனகும் ஒருபுத்திரனைக் கிருபைசெய்ய வேணுமென்று வேண்டிக் கொள்ள அதற்கு ஆதித்தன் மெத்த சந்தோஷமடைந்து ஓ தாமாஜி பக்தியிற் சிறந்தவனும்சாதுக்களிலுத்தமனுமாகிய ஒருபுத்திர னுண்டாகும்படி வரயளித்தேன் அவனால் நின்குல மூத்தோர்கள்யாவரும்புனிதர்கள

கிப் பரமசாம்பிராஜ்யப்பதவியை யடைவார்க ளென்று சொல்லி மாயமாய் மறைந்துபோயினவுடனே சில நாள் கடந்துபோனபிறது மனையாளுக்குக் கெர்ப்பமுண்டாயிற்றென்று தெரிந்து அதற்குத்தக்கின சிகிச்சைகள் செய்துக்கொண்டுவர ஒனபது மாதங்களும் பூர்த்தியானவுடனே அவ்வனிதைப் புத்திரனைப்பெற் அப்புத்திரனுக்குப் பன்னிரண்டாநாள் புண்ணியாகவசனம் படித்து அந்ததாமாஜி ஜாதகர்மங்கள் முடித்துச்சாதுக்களுக்குத்ததியாராதனையுடன் சகலதானங்களும் அபாரமாகச்செய்து அப்புதல்வனுக்குப் பாபாஜியென்று நாமகரணமிட்டு நாளுக்குநாள் செல்வமாகவளர்த்து வந்தார்கள் அப்புதல்வனும சுக்கிலபக்ஷத்து சந்திரனைப்போல நாளுக்குநாள். விருத்தியடைந்துக் சொண்டிருக்க சிவாஜிமகாராஜனுக்கு தாமாஜியின்மீது மெத்தப்பிரியமுண்டாகிச் சிறிதுசேனைகளுக்கு எஜமானாகச்செய்கையில்அவருக்குச்சம்பத்து அதிகரித்துவந்து சேர்ந்தது இதனால் தாமாஜிமெத்த சந்தோஷசித்தனாய் புதல்வனுக்கு ஐந்துவயதானவுடனே பள்ளியிலோத விடுத்து அவன்கல்வியிற்றேர்ச்சியடைந்து பதினாறுவயது பூரணமான்வுடனே தங்கள் மரபினில் உத்தமியாகியுங் கணவனையே பந்துவென்றும் கணவனையே தாய்தந்தையென்றும் கணவனையே மித்திரரென்றுங் கருதித் தொண்டுசெய்யும் படியான வேணுபாயெனுங் கன்னிகையைப்பேசி அனைவருக்குஞ் சந்தனம்பூசி பந்துமித்திர புரோகிதர் முன்னிலையில் பாபாஜியையும் வேணுபாயியையும் ஸ்நானஞ்செய்யும்படிச் செய்து ஆடையாபரணங்களா லலங்கரித்து மணவறையில் தம்பதிகளை ஒக்காத்திச் சடங்குகள் யாவத்துமுடித்து பிராமணர்களாலும் பிராமணஸ்ரீகளாலும் புரோகிதர் முதலான பெரியோர்களாலும்பந்துமித்திரர்களாலும்அக்ஷதை புஷ்பங்கள்கொண்டு பூஜித்துமங்களாசனஞ்செய்துக்கொடுக்கப்பட்ட மாங்கிலியத்தைப்பாபாஜிதன்கரங்களால்வேணுபாயிமிடற்றினிற்சூட்ட வெகுவித மேளவாத்தியங்கள்கடலொலிபோல் முழங்கப் பிராம்ணாகள் வேதமந்திரங்களையோதிஆசீர்வதிக்கமுனிவர்கள் பல்லாண்டிசைக்கப் பந்துக்கள் பகவந்நாமத்தை யோதி மலர்களிறைக்க வெகுஆடம்பரமாகநடத்தி தானதருமங்கள்மிதமின்றிச்செய்து பந்துவர்க்கங்களுடன் புசித்துச் சந்தனபுஷ்பத் தாம்பூலங்கள் கொடுத்து அவரவர்விடுதிக்கேகினவுடன் தாமாஜிதன்புதல்வனாகிய பாபாஜியையும்மருகியாகிய வேணுபாயியையும்வெகுபிரியமாகப் போஷித்துக் கொண்டிருந்தார்

இப்படிக்கிவர் சில்நாள் கடந்தபின்பு ஒருநாள் தன்புதல்வனைநோக்கி யந்த தாமாஜியானவர் அப்பா மகனே எனக்கோவயதுமுதிர்ந்து திரேகந்தளர்ந்து நரைதிரை யதிகரித்துப் பலவீனப்பட்டு நடக்கவும் ஒடவும் சக்தியற்று மெற்றமெலிந்து விட்டபடியால் நீ இன்றே அரசனிடஞ்சென்று அவருடைய தயவையெதிர்பார்த்து என்னுடைய வீனதிசையை யோதி யான் செய்துக் கொண்டிருந்த உத்தியோகத்தில் நீ பொருந்திச்செய்து அதனால்கிடைக்கும் பொருளைக் கொண்டு சம்சாரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கக் கடவாயென்று நேமிக்க அந்தப்படியே யப்பாபாஜி அரசனைக் காணும்பொருட்டுப்புறப்படுகிறபோது தாமாஜிசிப்பாய்களையுங்குதிரைகளையுமனுப்ப அதன் மீதப்பாபாஜி யேறிக்கொண்டு சிப்பாய்கள் தன்னைச் சூழ்ந்துவரத் தான் முன்னாகக் குதிரையை நடத்திக் கொண்டுசென்று அரசனைக்கண்டு பணிந்து தன்தந்தைக்கு நேரிட்டிருக்கும் மூப்புத்திசையையும் பலவீனத்தையுமோதி அவர் செய்துக்கொண்டிருந்தஉத்தியோகத்தை யான்செய்கிறேனென்று நவிலக்கேட்டு அரசன் பாபாஜியினுடைய அடக்கஒடுக்க புத்திகூர்மையைக்கண்டு உடனே அவருக்கந்த உத்தியோகத்தைக் கொடுத்துச் சிலசேனைகளுக்கு அதிபதியாகச் செய்று ஒபாபாஜி இன்றுமுதலிச் சேனைகளைக் காப்பாற்றிக்கொண்டு எதிரியரசன் நம்முடைய நாட்டின் மீது படையெடுத்து வராதபடிக்கித் தக்கமுயற்சிதேடிக்கொண்டிருக்கக் கடவாயென்றுக் கட்டளையிட்டனுப்ப அப்பாபாஜியும் மகாபாக்கியம் அப்படியே செய்துக்கொண் டிருக்கிறேனென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய வீட்டையடைந்துச் சிலதுநாள் போக்கிக் கொண்டிருந்தான்.

இப்படிக்கிந்த பாபாஜி யிருக்கிறபோதுசிவாஜி மகாராஜன்மீது வேற்றரசன் படையெடுத்து வருவதைப் பாபாஜியறிந்து விரைந்தரசனிடஞ்சென்றுசெய்தி தெரியப்படுத்த அரசன் ரதகஜதுரகபதாதிகளை வெகுவாகக்கூட்டி ஒபாபாஜிஇச்சேனைகளைக்கொண்டு எதிரியரசனை வென்று ஜெயமபெற்று வரக்கடவாயென்று சொல்லியனுப்ப அந்தபாபாஜியும்சத்துருக்கள் சேனைகள் முன்னேவருகையில் தானும்யெதிர்செல்லுகையில் அப்போது சத்துருக்கள் சேனையிலிருந்தச் சிலவீரர்கள் குண்டுகளைவிட்டுங் கத்திகளினால் வெள்ளரிக்காயை வீசுவதுபோல வீசி தன்சேனைகளை மடித்துக்கொண்டே வருவதையந்தப் பாபாஜிகண்டு பயந்து அனுதாபங்கொண்டு தனக்குள்தானே யோசிங்கின்றார் அதென்னென்றால் வெகு யோனிகளில் நாம் திரிந்து முடிவில் மேன்மையாகிய மானிடஜென்மம் நமக்குக் கிடைத்தது இப்படிப் பட்ட சரீரத்தை

இவ்வுலகத்தினில்மாயையெனும் சம்சாரத்தின்பொரு
ட்டு மிகவும்திரவியத்தைமுனனிட்டு உபயோகப்படுத்
தும் விஷயத்தை அனுசரித்து இந்த அற்பவயிற்றுக்
காகவே திரேகத்தை விக்கிரயஞ்செய்ததைப்போலப்
பொருத்தப் பட்டதாகும் மேலும் நாம் பார்த்துக்
கொண்டிருக்கிறபோதே எத்தனைபிராணிகள் மடிந்து
போயினார்கள் இதைப்போலவே யானுமினி ஒருகண
ப்போதி லிந்தரணபூமியில் விழுவதுநிச்சயமே இதை
யோசிக்குமிடத்தில் இப்படியுத்தஞ் செய்து மடிவதா
லென்னபிரயோசனம் ஒன்றுங்காணேம் ஆகையால்
காலனுடைய தூதர்கள் வருமுன்னம் பரவாசுதேவ
னைக் காணவேணும் இந்தமேலான காரியத்தை யோ
சித்து அற்பமான விஷயத்தைப் பரிகரித்து முக்தி
மாதுடன் கூடிவாழ்வதே திரேகமெடுத்ததற்குத்தக்க
பலனாகும் ஆகையா லப்படிப்பட்ட முத்திமார்க்கத்
தை கூடிவாழுதற்குத் தக்கமுயற்சியைத் தேடுவதல்ல
வோ வாசித்துக் கொண்டதற்குப் பயன் ஆதலால்
சகலலோகத்தையும் ரட்சிக்கும்படியான ஜெகதீசனு
டைய அருளைச்சம்பாதித்து முக்தியடைவதே மேன்
மையென்றுகருதி இரணக்களத்தைக்கண்டு பயந்துப்
பின்னிட்டவாக்காகவேயோடி ஆரணியத்தைநோக்கி
நாடி ஆரணியத்தை யடைந்து ஏகாந்தமாக ஓரிடத்
தில் வீற்றிருந்து ஓபரமசொரூபனே பக்தரட்சகனே
தேவதேவனே மகானுபாவனே தேவரீரை இவ்வுல
கின்கண் நன்றாகச் சேவிப்பதற் கெந்த உபாயமோ
சிரவணமெப்படியோ உன்னையாராதனை செய்வதெப்
படியோ யறியேனென்று மறியேனே என்றுயோசனைசெ
ய்கிறபோது தான் சிறுபிராயத்தி லிருக்கிறபோது
சிலப்பிராமணர்கள் சொல்லியசெய்தி கியாபகத்திற்கு
வந்து அந்தத்திரிபுரசுந்தரி சன்னிதிக்குட் சென்று
பணிந்து அங்கோரிடத்திலுட்கார்ந்து இருபத்தொரு
நாள் அன்ன ஆகாரமின்றி அங்கு தவஞ்செய்துக்கொ
ண்டிருக் அப்பாபாஜியி னுயிரானது கண்டத்தையடு
த்திருப்பதை அந்தத்திரிபுர சுந்தரியறிந்து வெகு
விரைவாக யெழுந்தருளிப் பாபாஜியைக்கண்டு தன்
கிருபை அவர்மீது படும்படியாகக் கண்ணைப் பூர்த்தி
யாகத்திறந்து ஓபாபாஜி தவசைநிறுத்தும் என்னைச்
சேவியும் சேவித்து உமக்குவேண்டியவரமெதுஅதை
சீக்கிரங் கேளுமென்று நவிலக்கேட்டு பாபாஜி கண்
ணைத்திறந்துப் பவானியைக்கண்டு சேவித்துஒம்மயே
ஸ்வரி ஜெகத்திற்கு ரட்சகனும் ஜெகதீசனுமான ஸ்ரீ
மந்நாராயணனைக் கண்டு சேவிக்கும்படியான வர
மொன்று தயவுபுரிய வேணுமென்று வேண்டிக்கொ
ள்ள அதற்கம்மயேஸ்வரி சற்றாலோசித்து ஓபாபாஜி
நீ சேவிக்கப் பிரியங்கொண்ட பகவான் எனக்கு சுவா
தீனப்பட்டவனல்லவே நினக்கவன் சேவைகிடைக்கு
ம்படிச்செய்ய என்னைப்போல சத்திகளனேகம் பேர்
கள் அவரிடத்தில் அனேகநாளாய் சேவிப்பதற்குக்
காத்துக்கொண்டிருக்க அந்தபகவான் சேவை நினக்
குக் கிடைக்கும்படிச் செய்யவென்னாலாகுமோ திரவி
யமுதலான சம்பத்துக்களைக் கொடுக்க என்னாலாகும்
இதுவேண்டுமானால் சொல்லுமென அதற்குபாபாஜி
ஓபவானி சிலநாளில் அழிந்துபோவதாகிய இந்தஅற்
பவஸ்துக்களை யான்கனவிலும் நினைக்கவேயில்லைஎன்
றுமழியாத வஸ்துவெதுவோ அவ்வஸ்துவை யடை
யும்படியான கிருபைபுரியு மம்மணீயென்று வேண்ட
அதற்குபவானி ஓபாபாஜி மாயாதீனனான நாராய
ணன் அன்னியசாதனங்களைத் தவிர்த்துகாயம்மனது
வாக்குஎனும் திரிகரண சுத்தமாய்க் களங்கமின்றித்
தன்னை யாரொருவர் தியானஞ் செய்கின்றார்களோ
அப்படிப்பட்ட பரிசுத்த ஆத்துமாக்களுக்கே தன்னு
டையசேவை எளிதில் கிடைக்கும்படி அருள்செய்
வார் என்போலியர்க்கு அவர்சேவை கிடைப்பது
மெத்த அருமையாகுமென்று பின்னுஞ் சொல்லு
கின்றாள்.

கேளும் ஒ பாபாஜி வேதங்களுக்கும் வேதபோ
தங்களுக்கும் அதீதனாகிய பகவானைச்சேவிப்பதுஅரு
மையாயினு அப்பகவானுக்குக் கிடைக்கும்படி யுனக்
கொருதந்திரஞ் சொல்லுகின்றேன்இவடத்திற்குஆறு
மைல் தூரத்திலிருக்கும் குண்டோகாமெனுங்கிராமத்
திற் கருகினிலொரு பருவதமங்குண்டு அப்பருவதத்
தின்மேலே சடலேஸ்வர னென்றொரு லிங்கமுளது
அதற்கருகில் தடாகமொன்றுளது அததடாகமானது
மாண்டவ்யமா முனிவராலே பிரதிஷ்டை செய்யப்
பட்டு வெகுகுளிர்ச்சியாயும் சோலைகளின் னிழலினா
லும் மெத்தப்பிரசித்தி யடைந்ததாகும் மேலும்அதி
கமகிமை பொருந்தியும் அதில் ஸ்னானஞ் செய்புமவர்
கள் ஜென்மபாவனமாகி மறுஜெனமமின்றி நித்திய
முக்தர்க ளாவார்களென்றும் அன்றியும் மாண்டவ்ய
மாமுனிவரை அந்தசடலேஸ்வரர் நாப்பாத்தினத்தல
முமாகும் மேலும் ஷேகுமகம்மது யென்பவனைத்
துலுக்கனொருவ னவ்விடத்தில்புனிதனாகும்படிச்செய்
வித்ததும் இன்னுமிக் கலியுகத்திலனேக சித்தியடை
யச் செய்ததுமாகிய அந்தத் தடாகத்திற்குச் சென்று
நீ ஸ்னானுட்டானங்களை முடித்துக்கொண்டு இதோ
யிந்த பகவத்கீதையை வாசித்துக்கொண்டிருமென்று
சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார் ஓபாபாஜிநான்
சொல்லியதைப் பொய்யென்று கருதவேண்டாம் சீக்
கிரம் அங்குபோவீராகி லுமக்குச் சிலநாளில் பகவா

னுடைய தெரிசனம் அவசியமுனக்குக் கிடைக்குமென்று சொல்லிமறைந்து போயினன் உடனே யந்தப் பாபாஜியும் புறப்பட்டு நடந்து குண்டோகாமெனுங் கிராமத்தை யடைந்து அதற்கருகிலிருக்கும் மலையின் மேலேறி அங்கிருக்குந் தடாகத்தினில், முழுகிப்பவானி கொடுத்த பகவத்கீதையெனுங் கிரந்தத்தைவைத்து வாசித்துக்கொண்டு தினந்தோரு மிருக்கிகையில், அந்தபாபாஜிக்கி நாளுக்குநாள் வைராக்கிய மதிகரித்து ஹரியைக் காணவேணுமென்ற வாஞ்சைமேலுமுண்டாகுவதால் பசிக்குவேண்டியகனிகளோ? அல்லது கிழங்குகளோ சருகுகளோ? ஏதையும் புசிக்காமல், மகாவைராக்கியத்துடன் ஹரியின் திருவடியில் மனதை நாட்டியிருந்தார்.

இவரிங்கிப்படியிருக்க அங்கே பாராமதியெனுந் திவ்யக்ஷேத்திரத்தி லிருக்குந் தாமாஜியானவர் தன் புதல்வன் எங்கையோ போய்விட்டானென்று சொலக்கேட்டு இருசாரமென்றும் அது அசாரமென்றும் இரண்டுந்தெரியாமல் மெத்ததுக்கப்பட்டுக் கொண்டு தன்புதல்வனெங் கிருக்கின்றான் அவ்விடத்தைத்தெரிந்துக்கொண்டு வாருங்களென்றும் சாரர்களை நான்கு திக்குகளிலும் போய்த்தேடி சாதுக்களெங் கிருக்கின்றார்களோ? அங்கேயிருப்பானென்றும் சொல்லியனுப்ப அவர்மந்தப் படியேசென்று தேடிக்கொண்டே நான்குதிக்குகளிலும்போக அதில் வடதிக்கைநாடிப் போனவர்கள் குண்டோகாமெனுங் கிராமத்திற்கிடையிலிருக்கும் சரசில் பாபாஜி யகப்பட அவர்ஜடாமகுடதாரியாகி தாடியுடன் யிருக்கக்கண்டு தூதர்கள் திரும்பிவந்து தாமாஜியுடன் நின்குமாரன் குண்டோகாமில் முனிவராகி யிருக்கின்றாரென்று தெரியச்சொன்னார்கள் அதைக்கேட்டுத் தாய்தந்தையர்கள் அடங்காத சந்தோஷமடைந்து நமதுபுதல்வன் மெத்தஉத்தமனானதலால் அன்னிய விஷயத்தில் பிரவேசிக்காமல் நல்விஷயத்திலேயே மனதைச் செலுத்திக் கொண்டிருப்பது நம்முடைய பூர்வபுண்ணிய மாகுமென்றும் அன்றியும் முன்னம் ஆதித்தியன்சொல்லிய மொழி தப்பி நடக்குமோ ஒருக்காலும் நடவாதென்றுவெகு சந்துஷ்டரா யிருந்தார்கள் அப்போது வேணுபாய் மாமிமாமனிடம்வந்து அவர்களைப் பணிந்து ஓமாமா மாமியா னென்கொழுனன் நின்றிக்கு மிடமெதுவோ அவ்விடத்திற்கு நான்போகிறேன் விடைதரவேணுமென்று வேண்ட அதற்கவர்கள் ஒ அம்மா வேணுபாயி நின துமணாளன் யாதொரு குறைவுமின்றி யிங்குவருவான் நம்மிடத்திற்கு ஆகையால் நீ நல்லவயதுப் பெண்ணும் துணையொருவருமின்றி தூரதேசம் போவது தகுதியல்லவென்று நவிலக்கேட்டு வேணுபாயி யவர்கள் சொல்லைக்கேளாமல் தனித்தொண்டியாகப் போயினள் அதையறிந்து தாமாஜியும் குதிரைகளும் மனிதர்களும் துணையாகச்செல்லும்படி யனுப்பினர் அவர்களும் பின்செல்ல வேணுபாய் சிலநாள் வழிநடந்து குண்டோகாமைச் சேர்ந்து தபசிகளில் மேலானவராகியும் இணையற்றசரீரத்தை யுடையவராகியு மிருக்கும் பதியின் முகத்தைக்கண்டாள் அப்போது பாபாஜி தன்மனைவியைக் கண்டு அடிபெண்ணே நீயிங்கு வரவேண்டியதென்ன சீக்கிரம் நின்தாய் தந்தையர்களிருக்கும் ஊருக்குச்சென்று சுகமாக யிருமென அதற்கவ்வேணுபாய் பதிலொன்றுஞ் சொல்லாமலும் தூரமாகயிருந்து மனதினில் ஸ்ரீஹரியைத் தியானித்துக் கொண்டு உட்கார்ந்துத் தன்பதியை யடிக்கொருதரம் பார்த்துக்கொண்டு அங்குதானே யிருந்தாள்.

இப்படிக்கப் பதிவிரதைப் புருடனைவிட்டுப்போவதற்கு மனம்வராமல் யிருக்க அதையுணராமலந்தப் பாபாஜி மெத்தவைராக்கிய சீலனாகித்தன்மனைவியின் பக்கலடைந்து அம்மலையினிலுள்ள குண்டுக்கல்களைக் கொணர்ந்து தன்மனையாளைச் சுத்தியடுக்கி குகையைப்போலச் செய்து வழிவிடாமல் மேலே மூடிவிட்டுத் தன்னலுவலில் தானிருந்தார் அப்போதப் பெண்ணணங்கு ஸ்ரீவிட்டலனமத்தைத் துதிசெய்துக்கொண்டிருந்தனள் முன்னம் வால்மீகர் ஸ்ரீஹரியினலோதப் பட்ட ராமமந்திரத்தைத் தியானஞ்செய்துக்கொண்டு வெகுகாலமிருக்கையில் அவர்மீது புத்துயடர்ந்து மூடிக்கொண்டதைப் போல இந்தவேணுபாயியை கற்களினால் மூடியதொக்கும் பின்பந்த வேணுபாய் இந்த அனித்தியமான திரேகத்தினிடத்தில் ஆசையை வைத்தபோதிலும் ஹரியினுடைய திருவடிகிடைப்ப தரிதாகும் நித்திபமாகியும் சிறந்ததாகியும் எங்கும்நிறைந்திருப்பதாகியும் பேரின்பமாகியும் விளங்கப்பட்ட நிர்மலக்ஞான பக்திவைராங்கியத்தைச் செய்துக்கொண்டிருக்க ஸ்ரீஹரியும் நம்மைக் காப்பாத்துவாரென்றும் அன்றியும் நமக்குபர்த்தாவே குருநாதராகிக் கற்களையடுக்கிக் குகையில் நம்மை வைத்திருக்க பொருள் காயம் பிராணன் இம்மூன்றும் ஆசாரியாதீனமென்பதைப் போல அடியாளுடைய திரேகமும்பொருளும் காயமும் இம்மூன்றையுங் கணவனாகிய ஆசானுக்கே அர்ப்பணஞ்செய்து விட்டேனென்று சொல்லித் திடச்சித்தத்துட னக்குகையிலிருந்து சமாதிநிஷ்டை செய்துக்கொண் டிருந்தனள் இம்மா திப்படிக்கிருக்கப் பாபாஜியானவர் உலகமாய்கையில் விழுந்துத் தானெனுங் கெர்வத்தை யடையாமல் மனதைநிர்மல

மாகவிருந்து ஹரியைபஜித்துக் கொண்டு மனைவியினு
டைய திரேகங் கண்களில் அகப்படாதபடிக் கிருந்
தார்.

இப்படிக்கிருக்கிறபோது அக்காட்டினில் வசிக்
கும் வேடனொருவ னக்கொடிய வனத்தினில் திரிந்து
க்கொண்டேவந்து சற்குகையைக்கண்டு இதற்குள்நீல
வர்ணமுடைய வஸ்திரமெப்படி யிருக்குமென்று திரு
டர்கள் திரவியத்தைத் திருடிவந்து இங்கொளித்து
வைத்திருப்பார்க ளென்றுகருதி அத்திரவியத்தைத்
தான்கைக்கொள்ள வெண்ணி அக்கற்களையொன்றொ
ன்றாகப் பேர்த்து வைக்கிறபோது அக்குகைக்குள்ளி
ருக்குஞ் சிறுவள் தன்கையை யசைக்கவதினலம் மங்
கையின் கைவளையல்கள் சத்தமிடக்கேட்டு இதிலா
ரோ மனிதனிருக்கின்றா னென்றுக்கருதி மேலுங் கற்
களை ஒவ்வொன்றாகப் பேர்த்து வெளியில் வைக்கிற
போது அதற்குள் திருத்தமான வனிதை யொருவ
ளிருக்கக்கண்டு நீயாரம்மாவென்று விசாரிக்க அம்மா
துபுருஷன் னிமித்தியம் தானங்குவந்ததும் தன்னைப்
புருஷ்ன் அக்குகைக்குள்வைத்துமூடியதுஞ்சொல்லக்
கேட்டு அவ்வேடன் ஆச்சரியசித்தனாகி அம்மாதுக்கு
வந்தனந்தந்துப் போயினான் அப்போதம்மாதுமெல்
லென அக்குகையைவிட்டு வெளிப்பட்டுத் தன்கணவ
னிடம்வந்து வணங்கினாள் அப்படி வணங்கின்ற
மனைவியை அந்தப்பாபாஜி கண்டு ஓபெண்ணே இத்
தனைநாளும் அக்குகைக்குள்ளே பிராணனோடிருந்தை
யா நினதுப்பிராணன் போயிருக்கு மென்றல்லோ
நினைத்திருந்தேன் பிராணனுடனிருந்தது மெத்தஆச்
சரியப்படத்தக்கதே ஆகிலும் அடிபெண்ணே நீயிக்
காட்டினி லென்னுடனிருப்ப துனக்குமெத்தக்கஷ்ட
மாகும் சுகமாயிராது ஆதலால் நீயுன்தாய் வீட்டிற்
குச்சென்று சுகமாகவிருமென்ற கணவனைநோக்கி ஓ
சுவாமி தேவரீர் இந்தகற்குகையினி லடியாளையடைத்
துவைக்க அதிலுமிருந்துக்கொண்டு பகவத்தியானஞ்
செய்துயிருட னிருந்து தங்கள்கிருபையினா லல்லவோ
அன்றியும் பிராணநாயகரே தாங்களே இக்காட்டினி
லிருந்துக்கொண்டு அன்னபானாதிகளின்றி சாகுபட்ச
ணங்கள் செய்துக்கொண்டு ஸ்ரீஹரியைக்கண்டுசேவிக்
கும்பொருட்டு மெத்தக்கஷ்டத்தை யடைந்துக் கொ
ண்டிருக்க அடியாள்மாத்திரம் தாயார்வீட்டையடை
ந்து சுகத்துடனிருப்பது ஞாயமோ தங்களுடைய
திரேகத்தைப் பார்க்கிலும் அடியாளுடைய திரேக
மென்ன அத்தனைசிறந்ததா இக்காலத்தில தாயார்
யாவள் தந்தையாவன் பந்துக்கள்யாவர் இக்காயம்
போகிறபோது இதற்குத் துணைவரார்க ளெவர்களும்
சுற்றத்தார் பந்துக்களோ சுகத்தை யடைந்துக்கொ
ண்டு வீடுவாசல் ஆடையாபரணங்கள் முதலான சம்
பத்து நிறைந்திருக்கும் பரியந்தமே என்க்குச் சொந்
தம் நினக்குச் சொந்தமென்று புகலுவார்கள் பந்துக்
கள் அதுகளொன்று மில்லாவிட்டாலோ அவனாரோ
போபோவென்பார்கள் அந்தியகாலத்திலும் பிடித்து
க்கொண்டு யெவர்களு மிருக்கமாட்டார்கள் ஆகை
யால் ஓபிராணநாயகரே பரமார்த்தமாகும் அழியாத
சம்பத்தையான் நன்றாகவடையும் பொருட்டு நிமைப்
பொழுதும் தங்களைவிட்டு நீங்காமலிருக்கும்படி அடி
யாள்மீது கருணைசெய்ய வேணும் அன்றியும் பூர்வ
ஜென்ம புண்ணிய பலத்தினாலேயே தேவரீரை யான்
கண்டு சேவித்தேன் அப்புண்ணிய பலனில்லாவிட்டா
லடியா ளெங்கையோ தாங்களெங்கையோ ஒருவரை
யொருவர் காணப்போகிறதில்லை ஆதலால் ஓசுவாமி
கருணைபுரிய வேணுமென்றும் அடியாள்மீது கோபங்
கொள்ளாமலுங் குறைகள் விள்ளாமலும் கிருபைக்
கண்ணோக்கம் வைத்துக் காப்பாத்த வேணுமென்
றும் அவர்திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொ
ண்டவண்ணம் ஓபரமசொரூப சிந்தாமணியே அடி
யாளுக்குத் தேவரீரையன்றி வேறொருவர் கெதியுண்
டோ வென்றுக் கண்ணீர்விட்டழுது புலம்புகிற தன்
னுடைய நாயகியை ஆதரித்து அடிபெண்ணே நீ
இன்றுமுதல் சருகுபட்சணஞ்செய்து பஜனை பாடிக்
கொண்டிருமென்று கட்டளையிடக்கேட்டு அம்மாது
அப்படியே மகாபாக்கியமென்று சொல்லிச் சருகுபட்
சணஞ்செய்து இடைவிடாம லரிபஜனை செய்துக்கொ
ண்டு மிருந்தாள் பாபாஜியோ அதுமுதல்பனிரெண்டு
வருடகாலம் தபசுசெய்துக் கொண்டிருக்கிற போது
ஸ்ரீஹரியானவர் புலியைப்போல வடிவந் தரித்துக்
கொண்டொரு நாளங்கு வந்துட்கார்ந்துக் கொண்டு
பாபாஜி வாசித்துக் கொண்டிருக்கும் பகவத்கீதை
யின் சொகுசைக் கேட்டுக்கொண்டு வாயைத்திறப்ப
தும் மூடுவதுங் கோட்டாவி விடுவதுமாக விருக்கிற
போது பாபாஜி யந்தப்புலியைக்கண்டு பயப்படாம
லும் அதிகபக்தியாக வாசிப்பதைக் கேட்டு அப்புலி
யானது அண்டமுகடு பிளந்து விழும்படி பெருத்த
ஓசைசெய்துச் சிறிதுநேரமிருந்து மாயமாய்ப் போ
யிற்று.

இவ்வண்ணம் ஸ்ரீஹரியானவர் புலியின் வடிவங்
கொண்டு பாபாஜிபிடம்வந்து அவர் வாசிக்கும் பக
வத்கீதையின் பக்தியையும் அவருக்குண்டாயிருக்கும்
விரக்தியையும் திரேகத்திற் குறைந்திருக்குஞ் சக்தி
யையும் அவர்க்காகாரமா யிருக்கும் சருகு புக்தியை

யுங்கண்டு சற்றுநேரமங்கிருந்து உடனே, மாயமாய் மறைந்துபோய்ச் சிலநாள்கடத்தி யொருநாளிரவினிலந்த ஹரியானவர் பெருத்த சர்ப்பவடிவமாகி யங்கு வந்து பாபாஜியைக்கண்டு அவருடைய் திரேகத்தை சுத்திக்கொண்டுப் பலவிடங்களில் கடித்து திரேகமெல்லாங் காட்டுகள்பட உதிரமொழுகப் பெருத்தக்கஷ்டத்தைக் கொடுத்தும் அந்த பாபாஜிச் சிறிதேனுஞ் சபலமில்லாமலும் மனங்கலங்காமலும் வெகுதிட வைராக்கியத்துடன் சொத்துக் குடையவன் அச்சொத்தைக் காப்பாத்தி வைத்துக்கொள்ள முயற்சி தேடுவானேயன்றிச் சொத்தைப் போக்கடித்துக்கொள்ள மனமார முயர்ச்சிசெய்ய மாட்டானென்று மனோதிடங்கொண் டிருக்கிறபோது சாக்ஷாத்து ஸ்ரீஹரியானவர் பாபாஜிக்குண்டா யிருக்கு மனோதிட வைராக்கியத்திற்கு மெச்சி உடனே, தன்சுயரூபங்கொண்டுமங்களகரமாகிய திரேகச்சாயை யுடனும் சதுர்ப்புஜங்களுடனும் சங்கு சக்கர வாள் கெதை சாரங்கமெனும் பஞ்சாயுதங்க ளுடனும் கடக கங்கண கிரீட கேயூர கௌஸ்துவமாலைகளும் பிரகாசிக்க இடையில் பீதாம்பரஞ் சோபிக்க வனமாலை வனசமாலைகள் குலுங்கியாட பயப்படாதே பயப்படாதேயென்று ஹரிசொல்லக்கேட்டு பாபாஜி கண்களைத்திறந்து சுபமங்களகரமுடைய பகவானைப்பார்த்து புளகாங்கித திரேகனாகி கண்ணீரொழுக மயிர்க்குச்சிட்டுவிழுந்து பணிந்து எழுந்து சிரமேற்கரங்களைக் குவித்துக் கொண்டு ஓஜெகதீசா ஆதியும் அனாதியுமாகி அகிலத்திலுள்ள ஜீவராசிகளினுயிருக் குயிராகி எங்கும் பிரகாசமாகி ஏகாந்தசொரூபமாகி எள்ளுக்கு ளெண்ணையைப்போல யாவத்திலும் நிறைந்திருக்கும் ஓபகவானே! பிரமதேவன் முதலான தேவர்கள் வாக்குக்கு மனதுக்கு மெட்டாத பரஞ்சோதியாகிய தேவரீரை இவ்வேழையேன் என்னென்றுத் துதிசெய்வேன் எப்படியானுய்வேன் யென்று பற்பலவாறு புகழ்ந்தேத்தும்பாபாஜியைக்கண்டு சந்தோஷசித்தராகி ஓபாபாஜி யுனக்கு வேண்டிய வரமெதுவோ கேளுந்தருகிறேனென அதற்குப்பாபாஜி இவ்வேழையேனை யொரு பொருளாக வெண்ணி எழுந்தருளி தெரிசனந்தந்த வரமொன்றே போதும் இதைப்போலவே யென்னுயிருள்ள பரியந்தமும் யெத்தனைஜென்ம மெடுக்கினும் நின்னுடைய நாமத்தை மரவாமல் பஜனை செய்துக்கொண் டிருக்கும்படியான வரமொன றளிக்கவேணும் அன்றியும் பவானியின் புருஷாகாரத்தினா லித்தனை வருடகாலந் தபவஞ்செய்துக் கொண்டிருந்து மனதிற்கோரின இஷ்டசித்தியை யடைந்தேன் இனிவேறொன்று மெனக்குவேண்டேன் என்றுசொல்லும்போதுவேணுபாயி விரைவினில்வந்து ஸ்ரீஹரியினுடைய திருவடித்தாமரைகளில் விழுந்து பணிந்து எழுந்து நினக்குநிகரான தெய்வமில்லையென்று பலவாறு துதித்து வெகுப்பிரியத்தைத் தெரியப்படுத்திக் கொண்டே மெய்சோர்ந்தாள் உடனே, பகவான் வேணுபாயிக் குண்டாகிய சோர்வைத் தன்சங்கத்தால், போக்கித் தெளிவடையச்செய்து அந்ததம்பதிக ளிருவரையும் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் ஓதம்பதிகளேநீங்களிருவருமினியிக் காட்டைவிட்டு நாட்டையடைந்து யாசகவிருத்தியை விடுத்து மெத்தை மேடைகளின்மீது வாசஞ்செய்துக் கொண்டு சுகமாகயிருந்துக்கொண்டு பக்தஜனங்கள் வந்து சரணாகதியடைந்தால் அவர்களுக்குத் தாரகநாமத்தை யுபதேசித்து விரக்திமார்க்கங்களை போதித்து நீங்களும் என்னுடைய குணானுபவஞ் செய்துக் கொண்டிருங்கள் அன்றியும் புண்டரீகன் னிமித்தியம் பூலோக வைகுண்டத்தினில் பிரியம் நிரைந்துப் பரவையானிருப்பேன் பூலோகவைகுண்டமெதுவெனில் ஸ்ரீபண்டரிபுரமேயாம் அப்பண்டரி புரத்தில் நடக்கும் பிரமோச்சவத்திற்கு நீங்களிருவரும்வருடந்தோருந் தப்பாமல்வந்து அடியார்களைக் கண்டு சேவைசெய்யுங்கள் ஏனெனில் சதாகாலமும் இவ்வுலகத்தினில் சத்துக்களெனுஞ் சாதுசங்கத்துக்கு நிகரெதுவுமில்லை யாதலால் நீங்கள் சாதுசேவையிலேயே மனதைச் செலுத்திக்கொண் டிருங்களென்று சொல்லி ஸ்ரீஹரிமாயமாய் மறைந்துபோயினார் உடனே அத்தம்பதிகளிருவரும் அடங்கா சந்தோஷத்துடனே காட்டைவிட்டு நாட்டை யடைந்துத் தங்களூராகிய பாராமதியெனுஞ் க்ஷேத்திரத்தைச் சேர்ந்து அங்கிருக்கும் தாய்தந்தையர்களைப் பணிந்துநின்றான் அப்படிபணிந்து நின்றப் புதல்வனாகிய பாபாஜியைத் தாய்தந்தையர்க ளிருவருங்கண்டுசிலவருடங்களாய்ப் பாராமலிருந்த அவாவினால் அடாமகனே எப்போது வந்தாய் எங்களுக்கு நல்லபேரைத் தந்தாய்ப் பகவானுடையசேவை கண்டாயா கண்டு ஆனந்தங்கொண்டாயா பலவாறு பகவந்நாமத்தை விண்டாயாஎங்கள் குரை நீங்கவந்து நின்னழகிய முகத்தைக்காட்டிச்சந்தோஷாபரணம் பூண்டாயா என்று பலவாறு புதல்வனை வினாவிக்கொண்டிருக்கும் போது வேணுபாயி விரைந்துவந்து மாமன்மாமி திருவடிகளில் விழுந்து பணிய அவர்களும் மருகியை யிருகரங்களாலும்தாவியெடுத்துப் பலஆசிகள் கூறிய பின்னந்தப் பாபாஜியும் வேணுபாயியும் ஸ்நானுட்டானங்களை முடித்தும் அன்னபானாதிகளைப் புசித்தும் போக பாக்கியங்களை

யனுபவித்தும் சரணாகதியடையும் பக்தர்களுக்குத் தாரகமந்திரத்தை யுபதேசித்தும் விரக்தி மார்க்கங்களை போதித்தும் சதாகாலமு மென்றால் சர்வகால சர்வதேச சர்வ அவஸ்தைகளிலும் இடைவிடாமல்பகவந்நாமத்தைப் பாராயணஞ் செய்தும் வருடந்தோறும் பண்டரிபுரத்திற்கு சென்றுப் பகவனாகிய பாண்டுரங்களை சேவித்தும் அங்குவந்திருக்கும் சாதுக்கள் சேவை செய்துக்கொண்டும் திரும்பி தஙகளூரையடைந்துக்கொண்டு மிருந்து பகவான் னேமனப்படி வெகுகாலம் பஜனைசெய்துக் கொண்டு அனேக சிஷர்கள் தங்களைச் சேவித்துக்கொண்டிருக்கக்காலத்தைப் போக்க அத்தம்பதிகளிருவரும் முடிவில் நித்தியமுக்தர்களாகி இப்பூமண்டலத்தினில் வசித்துக் கொண்டிருக்கின்றனர்கள்.

தாபங்கள்மூன்றுந் தனியவைத்தோன்வாழி தரைதனிலேசகலமுமனித்தியமென்றோன்வாழி
பாபங்களணுகாமல் பரிகரித்தோன்வாழி பந்தபாசந்தனையொழித்தபரமபுருடன்வாழி
கோபமெனபதில்லாத குணமுடையோன்வாழி கூசாமமனைவியைக் குகையில்வைத்தோன்வாழி
பாபாஜியெனும் பரமபாகவதர்வாழி பாதமலரனுதினமும் பணிந்துய்வோர்வாழி.

விட்டலதேவாயநம:

பாபாஜிசரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீமத்

முகுந்தராஜன்சரித்திரம்.

துதிவிருத்தம்.

நந்தநந்தனனைக்காண ஞாலத்தில்யோகமார்க்க
முந்தவேயறியவெண்ணி முதியோரைச்சிறையில்வைக்க
வெந்தையேதோன்றிமார்க்க மெடுத்துரைத்திடக்கண்டமு
குந்தனென்றேதும்ராஜன் மொய்கழற்பணிகுவோமே.

கதையின் வரலாறு.

திருமகளுக்கோர் திலகம்போலவும் அம்மாதுக்கோர் மலர்மாலையைப் போலவும் அம்மங்கையின் மார்பினில்விளங்கும் மங்கிலியத்தைப்போலவும் அவ்வனிதையுதித்த தாமரைமலரைப்போலவும்விளங்கும் சௌராஷ்டிர தேசமென்றோர் நகரமுண்டு அந்நகரமானது மிகுதியாகிய நீர்வளத்தினாலும் நஞ்சை புஞ்சை வயல்களாலும் நவமணிகளிழைத்த மாளிகைகளாலும் யாகயெக்கியாதி வேதங்களோதும் பிராமணர்களாலும் நீதிகுன்றாத க்ஷத்திரியர்களாலும்நானாவிதவஸ்துக்கள் வியாபாரஞ் செய்யும் வைசியர்களா

னும் உழுது பயிரிடுஞ் சூத்திரர்களாலும் அகழி முதலான கோட்டைகளாலும் அரசன்வசிக்கும் அந்தப்புர மாளிகைகளாலும் ஒளி பெற்றோங்கும் அந்நாடு சகலசம்பத்துகளுமநிறைந்த குபேரன் பட்டணத்துக்கு நிகராகும் இப்படிப்பட்ட நகரத்தை நீதிகுன்றாமல் செங்கோல் செலுத்திக் கொண்டிருக்கும் ஜயதுபாலனெனு மரசனானவன் குடிகளுக்கு மெத்தவும் பிரியனாகவிருப்பதால் குடிகள்யாவரும் அரசன்மீது மெத்தப்பிரியம் வைத்திருந்தார்கள் மேலும் விடபுருடர்கள் எப்படி தங்கள் அவயவங்களை அதிகயருமையாகக் காப்பாற்றுவார்களோ அதைப்போலஇவ்வரசன் குடிகளைக் காப்பாற்றிக் கொணடு வந்தான். இப்படிக்கிக் காப்பாற்றிக் கொண்டுவருகையில் ஒருநாள் இவ்வரசன் மெத்தப்பிரியமாகப் புராணங்கேட்டுக் கொண்டிருக்கையில் பிரசினையொன் றுண்டாயிற்று அதென்னவெனில் ஒருமனிதன்சகல சாதனங்களிலும் கைதேர்ந்தவனாகி யிருந்தபோதிலும் சத்குருநாதன் கிருபையில்லாமல் பவக்கடலைக் கடப்பதரிதாகும் என்று புராணீகர் சொல்லக்கேட்டு இவ்வரசன் இந்த அனுபவத்தை தெரிந்துக்கொள்ளும்பொருட்டு இப்போதே யாதொரு ஆசானையடைய வேணுமென்று தன்மனதினில் யெண்ணி அதற்குத் தக்கின பிரயத்தனஞ்செய்ய அதற்கு அப்புராணீகர் சிலபிரசித்தி யடைந்த சற்குருநாதர்களைச் சேர்த்து நீங்கள் முகுந்துராஜனைக் காண்பீர்களேயாகில் தக்ஷிணைகள் முதலானதுகளும் வேண்டியமட்டும் கொடுப்பாரென்ற மாத்திரத்திலவர்கள் அளவத்தஆசையுடன்நாங்களுபதேசஞ் செய்வதிற் சிறந்தவர்களென்று சொல்லக்கேட்டு அரசன்மெத்த சந்தோஷமடைந்து ஓபரம சத்குரு நாதர்களே! தீனனாகியயடியேன் இதற்காகவே யுங்களை வரவழைத்தேனென்றும் சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார் ஒபூரணக்ஞான சம்பத்திற்சிறந்த உத்தமர்களே! அடியேன் மனம்வாக்குக் காயமென்னும் திரிகரணசுத்தியா யுங்களுக்குச் சரணம் புகுகின்றேன் அனுபவக்ஞான மெனக் குண்டாகும்படி அருள்புரியவேணும் அன்றியும் வாசாக்ஞானம் வேண்டியதில்லை அனுபவக்ஞானத்தைக்காட்டுங்களென அதற்கவர்கள் ஓபூபாலரே! புராண சாஸ்திரங்களும் சொல்லியபடி அனேக் உபாசனைகளும் யோகலட்சணங்களும் மந்திரதந்திரங்களும் மேன்மையானதென்றார்கள் அதற்கு அரசன் இதுநன்றாயிருக்க வில்லையென சிலர் சுருதிகளுக்கு வியாக்கியானஞ் சொல்லியும் சிலர் வேதாந்த ரகசியங்களை யெடுத்தோதியும் அரசனிதுகளெல்லா மெனக்கு வேண்டியதில்லை வஸ்துவானுபவத்தைக் காட்டுங்களென சிலர் சிவபூசையை செய்யுமென்றுசொல்லஅதற்குஅரசன்கோபத்துடன்நீங்கள்சொல்லுவதில் அனுபவ மிருப்பதுபோல பொருத்தமாக வில்லையே யென்னஅதற்குசில கோசாயிகள் பாலாஜியைத் துதிசெய்யு மென்றார்கள்.

இந்தப்படி ஆறுமதக் குருநாதர்களும் தங்களிஷ்டத்தைப் போலச்சொல்ல அதற்கரசன் களங்கமற்ற மனதுடன் சொன்னார் அதென்னவெனில் இவர்கள் யாவரும் பகல்வேஷக்காரர்கள் ஆசைபிற்கட்டுப் பட்டவர்கள் அக்ஞானவித்தையிற் சிறந்தவாகள் வஸ்துவின் அனுபவக்ஞான மில்லாதவர்கள் என்றுசொல்லி அக்குருநாதர்களுடைய சொத்துக்களை யெல்லாம் தான்கைக்கொண்டு அவர்களையெல்லாம் சிறைச்சாலைக்குள் போங்களென்ற மாத்திரத்தில் அந்த ஷண்மதக் குருக்கள்களும் மனக்கலக்கங் கொண்டு அரசனைநோக்கி ஓபூபாலனே! நாங்களென்ன குற்றஞ்செய்தோமென்று சிறைச்சாலைக்குள் போகச் சொல்லுகின்றீர்; வேதாந்தங்களென்ன சாஸ்திரங்களென்னப் புராணங்களென்ன இத்தியாதிகளை யெடுத்து யெங்களைப்பரிக்ஷைசெய்துப் பாருங்கள் அதுகளில் நாங்களொருவருக்கொருவர் பின்வாங்கினவர்களல்ல இப்படிப்பட்ட எங்களைச் சிறைச்சாலையில் வைப்பதேதுக்கு என்ற குருக்கள்மார்களை நோக்கி அரசன் சொல்லுகின்றார் ஓ சதாசாரியர்களாகி வந்த ஞானசூனியர்களே வஸ்துவை அனுபவக்ஞான மில்லாத உங்கள் மொழிகளெல்லாம் உலகந்தனில் உப்புப்போடாத அன்னத்துக்கு நிகரேயாகும் பதினாறு வர்ணஸ்தர்களுக்குப் பரமகுருசுவாமிகளும் பூசுரர்களுமாகும் நீங்கள் என்னுடைய சந்தேகங்களை பரிசுத்தமாகச் சொல்லி என்மனதை சந்தோஷிக்கச் செய்ய வல்லவர்களொருவருமில்லை ஆகையால் அவசியம் நீங்களெல்லோருஞ் சிறைச்சாலையி லிருக்கவேண்டியதே என்று தூதர்களைஏவினான் அத்தூதர்களும் அரசன் சொற்படி யவர்களையெல்லாம் சிறைச்சாலையினு லடைத்து அரசனுக்குச்செய்தி தெரியப்படுத்தினார்கள் அரசனும் அன்றுதினம்போக்கி யவர்களைக்கொண்டு குளமொன்றுஎடுக்க அவ்வூரில் ஆரம்பித்தார் எப்படியெனில் கெட்டபாறை மண்வெட்டித் தட்டுக்கூடை முதலானதுகளையும் அந்தகுருசுவாமிகள் யாவரு மெடுத்துக்கொண்டு அரசனுடைய கட்டளைக்குத் தடுத்துச் சொல்லாமல் மண்ணைவெட்டிக் கரைமீது போட்டுக்கொண்டே அவர்களெல்லோரும் இச்செய்தியையாருக்குச் சொல்லுவோம் எப்படி இவ்வேலையை செய்வோம் மனதுக்கேதுந் தோன்றவில்லையே யென்று பேசிக்கொண்டு அவ்வரசனது கட்டளைக்குட்பட்டு வெகுநயமாக அவ்வேலையைச் செய்துக்கொண்டு வரு

வதால் அவர்களுக்கு நாளுக்குநாள்பலயீனமுண்டாகி கெட்டபாரையையும் மண்வெட்டியையும் எடுக்கவும் பிடிக்கவுஞ் சக்தியற்றவர்களாயிருந்தபோதிலும் அரசனுடைய பயத்தினால் முக்கிமுறண்டிச் செய்துக்கொண்டிருக்கப் பிரதாபமடைந்தவனும் வெகுபுண்ணியமூண்டாகினவனுமான அவ்வரசன் அந்த குருக்கள்மார்களுக்கு பலயீனமுண்டாகும்படிச் செய்தவிஷபத்தில் அவர்களெல்லாம் மெத்த தீனர்களாகி யிருந்தார்கள்.

இப்படிக்கவர்கள் சக்தியத்திருக்கிறபோது அரசன் சர்வசங்கத்தையும் பரித்தியாகஞ் செய்தசம்சாரத்தைவிட்டுத் துறவரியாகி இருகரங்களையுந்தன்சென்னிமீது கூப்பிக்கொண்டு ஓம் ஸ்ரீமந்நாராயணா நாரதபாராயணா ஜெகத்காரணா பரமபரிபூரணா அடியேனுக்கு அனுபவக்ஞானம் போதிக்கும் படியான பரமகுருநாதனை சீக்கிரமாக வனுப்பவேணும் என்று பகவானைத் தொழுதுக்கொண்டு ஆடையாபரணங்களை தரித்துக்கொள்ளாமலும் அறுசுவையுடன் கூடின அன்னமுந்நீரும் புசிக்சாமலும் ஏவலர்களா லெந்த உபசாரங்களையும் பெற்றுக் கொள்ளாமலும் சத்குருநாதன் சேவையைவிட மேலான தெதுவுமில்லை யென்றுததேக்ஞான பரிபூரண நிஷ்டையிலிருந்துக் கொண்டு உத்தமராகும் நல்லகிருபையுண்டாகிய சத்குருநாதரை.என்றுகாண்பேன் என்மனதிலுள்ள சந்தேகத்தை யெப்படி நிவர்த்திசெய்துக் கொள்ளுவே னென்றும் இப்படி ஏகநிஷ்டையுடன் அரசனிருக்கையில் அங்கே சிறைச்சாலையினி லிருக்குமவர்கட்குப் போக்கிடமெங்கு மகப்படாமல் எல்லோருங்கூடிக்கொண்டு சொல்லத் தொடங்கினார்கள் அதென்னவெனில் இந்தப்பூபாலன் மெத்ததான தக்ஷிணைகளைக் கொடுப்பாரென்று நம்பி ஆசைகொண்டிங்குவந்தும் நமதுவினையானது நம்மை யெல்லாம் குளம்வெட்டும்படி விடுத்தார் வீட்டினிலிருக்கும் மனையாள் மக்கள்முதலானோரும வெளியிற் போனவர்களை இரண்டுமூன்று நாளாய்க் காணோமே பதினாறுபேரும் என்னமானார்களோ வென்று விசனப்பட்டுக் கொண்டு மெத்தகாபரா செய்வார்களே அந்தத்திட புருஷனான ஸ்ரீஹரிநம்மை எப்போது காப்பாத்துவரோ அந்தரகசியந்நமக்குத் தெரியவராதென்று யிருப்பார்கள் அன்றியும் ஸ்ரீஹரி கோவிந்தா அச்சுதாகிருஷ்ணா அப்பிரமேயா கரிவரதா முன்னம்தர்மத்தை யுலகத்தினில் நிலைநாட்டும்பொருட்டுபல அவதாரங்க ளெடுத்துத் துஷ்டர்களைசிக்ஷித்து சிஷ்டர்களை ரக்ஷித்துந் தருமத்தை நிலைநாட்டவில்லையா எங்களைக் காப்பதுமக்கோர் தொல்லையா இன்ன முமக்குக் கிருபைவல்லையா எங்கள் முன்தோன்றி பயப்படாதீர்க ளென்றோர் வார்த்தை சொல்லையா அன்றியும் பரமாத்துமனே பரமசொரூபனே எங்களைக் காக்கும்படியான தெய்வம் நீரேயென்று நம்பியிருக்கின்றோம் ஆகையால் தயவுசெய்து விரைந்துவந்து எங்களை இச்சிறையில் நின்றும்மீட்டிரக்ஷிக்கவேணும் தீனர்களுக்கு நாதனாகிய ஓஜெகதீசாயென்று சிறையை மீட்டும்படிபகவானை தியானித்தார்களேயன்றி உண்மையிலேயே இவர்கள்பக்தியுண்டானவர்களல்ல அரசனோ சத்குருநாதனைச் சேவிக்கும்பொருட்டும் அவரால் வஸ்துவானுபவம் தெரிந்துக்கொள்ளும் நிமித்தியமும் ஸ்ரீஹரியைத் தோத்திரஞ்செய்தார்.

இந்தப்படியாக உபயத்திராளும் மெத்தவுங் கதறிப் பதறியழைக்கும் முறையைக்கேட்டு ஸ்ரீஹரியானவர் வெகுசந்தோஷ சித்தராகி பிராமண பிரமசாரி வடிவமெடுத்து மார்பினிற்புரளும்முப்புரிநூலும் கமண்டலமும் பிரம்புங்கையினிற் பிடித்து இடையில், அரைஞாணும் கௌபீனமும் அதற்குமேல் தாவளியமான வஸ்திரமுந் தரித்துக்கொண்டு புறப்பட்டு வந்து தடாகக்கரையின்மீது நின்று அங்கு மண்வெட்டிக்கொண்டிருக்கும் குருக்கள்மார்களுக்கு வந்தனந் தந்து செந்தாமரைக்கண்ணன் சேவைக்கு நீங்கள்தக்கவர்களாக யிருக்க இந்தவேலை யேதுக்கு இப்படிசிரமப்பட்டு செய்துக்கொண்டு இவ்விடத்தினி லிருக்கின்றீர்களென அதற்கப்பிராமணாகள் வாமனரூபத்துடன்வந்த அம்மூர்த்தியைக்கண்டு அழகியமுகமும்சுந்திரதிரேகமும் ஷட்குணபூர்த்தியு முண்டாகி இவ்விடத்திற்கு யேன்வந்தீர் இவ்வூர் அரசன் எங்களுபதேசம் வீணானதென்று மதித்து எங்களைச் சிறையினில் வைத்ததன்றியுங் குளத்தைவெட்டும்படி கெட்டபாறை மண்வெட்டி பிக்காசுங் கொடுத்துத் தூதர்களைக் கொண்டு எங்களை மெத்தவும் பாதிக்கின்றான் எங்கள் கதியே இப்படிக்கிருக்க அரசன் உம்மைக்கண்டால் என்னகட்டளை யிடுவானோவென்று விசனப்படுகின்றோமென்ற ஆரியர்கூட்டத்தை நோக்கி ஐயாகுருக்கள்மார்களே! நீங்களேதுக்கும் பயப்படவேண்டாம்உங்களை முன்னமிச்சிறையில் நின்றும் விடுவித்துப் பினபல்லவோ அரசனைக்காணுவேன் ஆகையால் உங்கள் கரங்களிருக்கும் மண்வெட்டிகெட்டப்பாறை பிக்காசு முதலிய சாமான்களைச் சீக்கிரம் விட்டெறிந்து விட்டு யெல்லோரு மென்னிடம் வாருங்கள்என் அவர்களு மந்தப்படியே பிக்காசு முதலானதுகளையும் விட்டு வருகையில் அரசன்தூதர்கள் அவர்களை தடுத்துபோகக் கூடாதென்றுக் கடுகடுத்துப்பேச அதற்குப்பிரமசாரியாகிவந்தமாயாபிரமணன் அத்தூதர்களைநோக்கி

ஓதுதர்களே போதும்போதும்உங்களுடையவாயை மூடுங்கள் உங்கள் வேலைகளுக்கு விக்கினம்நேரிடாமலிருக் ம்படிப் பார்த்துக்கொள்ளுங்கள் அதைவிட்டு இவர்களைத் தடுப்பது நீதியல்லவென்று சொல்ல அப்போது மண்வெட்டி கெட்டப்பாறைபிக்காசுகள் அதுவே வேலைகள்செய்யவுங் கண்ட அச்சேவகர்கள் இது வெகுவிந்தையாக விருக்கின்றதென்றுப் பிரமித்துக் கொண்டேசென்று அரசனைக்கண்டு ஓசுவாமி யாரோ ஒருபிரமசாரிவந்து தடாகத்தின் கரைமீதுநிற்க அவரைக்கண்ட மாத்திரத்தில், வேலைசெய்துக் கொண்டிருந்த பிராமணர்கள் யாவரும் அவரிடத்திற்குச்சென்றார்கள் அப்போதந்த ஆயுதங்கள் தங்களுக்குத்தாங்களே! வேண்டியவேலைகள் செய்துக்கொண்டிருந்தது கள் யென்றுசொல்லிய சேவகர்மொழிகளைக் கேட்டு இதுவென்ன விந்தையா கதையிலுங்கேட்டதில்லைஇந்தப்படி யெங்கேயாகிலும் நடந்திருக்கப் பார்த்தது மில்லையென்று சொல்லிக்கொண்டே தடாகக்கரைக்கு வந்துநின்றுத் தன்க்குத்தானே ஆயுதங்கள் செய்யும் வேலைகளைக்கண்டுவியந்து இதுயிந்தப் பிரமசாரியின் புதியசமத்கார மெனக்கருதி உடனே அரசன் அப்பிரம்மசாரியின் றிருவடிகளில்விழுந்து பணிந்துஎழுந்து ஓசுவாமிநாம் அரண்மனைக்குப்போகலாம்வாருமென அதற்கந்தபிரம்மசாரி ஓஅரசனே! இந்தப்பிராமணர்கள் யாவரையும் விடுதலைச்செய்து அவர்களுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்துச் சீக்கிரம்அனுப்பும் உமதிஷ்டப்படியே அரண்மனைக்கி வருகிறேனென அந்தப்படியேயரசன் அவர்களைச் சிறையில் நின்றும் விடுவித்து அந்தசத்குருநாதர்களுக்கு வேண்டிய மட்டுக்கும் தனத்தையீந்துசன்மானித்தனுப்பினபின்புப் பிரம்மசாரியை யழைத்துக்கொண்டு அரண்மனையைச்சேர்ந்து அவரைத்தக்க ஆசனத்தின்மீது வீற்றிருக்கச்செய்து பூஜாதிரவியங்களைக் கொண்டு அவர் திருவடிகளுக் கர்ச்சனையாராதனை தூபதீபமுதலான சகலஉபசாரங்களுஞ் செய்து அவர்மனதைச் சந்தோஷிக்க நடந்து ஓசுவாமி அனுபவமாகும்படி வஸ்துவின் ஆத்மக்ஞானத்தைக் கிருபைக் கண்ணோக்கம் புரியுமையாவென்று வேண்டிக்கொள்ள அப்போது மாயாமயனாகியப் பிரம்மசாரி ஓஅரசனே! ஜனங்களுக்குள்சரசனே! ஆத்துமக்ஞான மென்னும் ஆத்துமானுபவ மாகும்படிச் சொல்லிவிக்கிறேனென அதற்கரசன் தன்னுடைய குதிரையேறுவதற் குள்ளாகஅந்த அனுபவத்தை இன்றுகாண வேணுமென அதற்குப் பிரம்மசாரி அப்படியேசெய்கிறே னென்று சொல்லி அப்போதே குதிரையைவருவித்து ஓஅரசனே சீக்கிரம் குதிரையேறுமென்று சொல்ல் அரசனும்உடனே குதிரையின்மீதேற பிரம்மசாரியும் அப்போதக்குதிரையை ஐன்பத்திரெண்டடி போட அரசன் உடனே திரேகத்தைமறந்தான் அந்தஐன்பத்திரெண்டடி பட்டக்குதிரையும் அப்பிரமசாரியின் திருவடிகளின்மீது விழுந்துஇறந்தது உடனே பரமகுருநாதன் அரசன் மீதுக்கிருபா னோக்கம்வைக்க அரசன் ஜாக்கிரத்தையடைந்துத் தன்சிரசின்மீது இருகரங்களையும் குவித்துக்கொண்டுநிர்க்கப் பிரம்மசாரி அனேகங்கவிகளையின்புறும்படி தத்துவங்களை போதிக்க அரசனுக்கு ஆத்துமானுபவக் ஞானமானது கரதலாமலகம்போலத் தெளிவுரவிவரமாயிற்று அப்போதவ்வரசன் மறுபடியும் ஆத்துமானுபவஞ் செய்யப்பாக்கையில் தன் மனதினில் இந்தப்பூமண்டல மெல்லாம் ஹரிமயமாகவே காணப்பட அந்தஅனுபவத்திலேயே சொக்கிக் கொண்டு பலவருடங்களிருந்து முடிவில்பரம சாம்பிராஜ்யபதவியை யடைந்து நித்தியமுக்தருடன்கலந்து மெய்மறந்திருந்தனர்.

வாழிவிருத்தம்.

ஸ்ரீதரனடிகள்மேவசிரம் படைத்தந்திட்டோன்வாழி
ஜெகமதினில்பதினாறுபே றைச்சிறையில்வைத்தோன்வாழி
மாதுமுதற்சகலமுமேநீக்கி மனவெறுப்படைந்தோன்வாழி
மர்மம்மரியவேண்டி குருமாதவனைத்தேடினோன்வாழி
ஏதுகமையிலாதவனுபவக்ஞான மிசைந்திருந்தோன்வாழி
யெப்போதும்ஹரிமயமாய் யெங்குங்கண்டோன்வாழி
மாதவன்றன்னருளாற் சகலமர்மமறிந்தோன்வாழி
மறுபடியுஞ்சென்மமிலா முகுந்தமாவள்ளல்பதங்கள்வாழி

முகுந்தராஜன்சரித்திரம்.

முற்றிற்று.

—

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீமத்

போதலுபடேலு சரித்திரம்.

14 FEB 1924

துதிவிருத்தம்.

மாதவன்பதமென்னா மரவாமற்சிந்தைகொண்டச்
சாதுவாய்நற்குணங்கள் சகலமும்பொருந்திகத்தில்
சாதனஞ்செய்துயேழை தங்களையாதரித்தப்
போதலுபடேலுபாதம் போற்றியேவணங்குவோமே.

கதையின் வரலாறு.

பங்கயமலரி லுதித்தவளும் பங்கயமலரைப்போன்ற திருவடிகளை யுடையவளும் பங்கயமலரை யொற்றக் கரங்களையுடையவளும் பங்கயமலரை நிகர்த்த நேத்திரங்களை யுடைய வளுமான திருமகள்கடாக்ஷவீக்ஷண்ணியம் பொருந்தின தாமணகரமெனு மோர் கிராமத்தினில் வசிப்பவர் சூத்திரஜாதியிற் பிறந்தவர் சூசனைகளெல்லா மறிந்தவர் பக்திபாவத்திற் சிறந்தவர் அதிதிய்ப்பியாகதிகளை யாதரிப்பவர் யேழையெளியோர்களுக் கில்லையென்னாமல் யீவியளிப்பவர்சாதுக்களை விசுவாசித்திருப்பவர் போதலுபடேலு என்ற நாமம்தரித்தவர் இப்படிப்பட்ட நற்குணங்களிற் சிறந்த அந்தஉத்தமருக்கு மமதாயியெனும்நாமம்பெற்ற மனையாளொருவளுண்டு அம்மாது தன்கணவனுக்கு என்றும் தொண்டுசெய்வதில்தனக்கு அபசாரம்வந்து நேரிடாவண்ணம் சகலதொண்டுகளுஞ் செய்துக்கொண்டு வெகுஜாக்கிரதையாக இவர்களிருவரும் இல்லறமே நல்லறமெனக்கருதி வெகுபிரியமாக இல்லறத்திலிருக்கையி லிவர்களுடைய பூர்வஜென்மபுண்ணியபலத்தினாலே மமதாயின்வயிற்றில் புதல்வனொருவன்பிறந்தான் அப்புதல்வனுக்குப் பனிரெண்டாநாள் ஜாதகர்மஞ்செய்து யாமஜியென்று நாமகரணமிட்டுவேண்டிய தானதருமங்களைச்செய்து நாளுக்குநாள் மெத்தப்பிரியமாக வளர்த்துக்கொண்டுவர அப்புத்திரனும் வளர்பிறைச் சந்திரனைப்போல தினந்தோரும் வளர்ந்து ஐந்துவயதானவுடனே அப்புதல்வனைப்போதலுபடேலுப் பள்ளியினிலோதவிட்டு தேர்ச்சியடைந்தபின் தன்னுடன் உழவுவேலைக்கு வைத்துக்கொண்டிருந்துத் தக்கவயதுவந்தவுடன் தன்னுடைய பரபினிற்றக்கப் பாகீரதியெனும் பெண்ணைப்பேசியாமஜிக்கு மணம்செய்வித்து வெகுபிரியமாய் போஷித்துக்கொண்டுவருகையில் நால்வர்மனதும்ஒருமித்துப்பிரபஞ்சவாழ்க்கையை யறிந்து விர்த்தியடைந்து யிவர்களுக் குண்டாயிருக்கும் மானியமும் தனசம்பத்துகள் பசுவிருத்தி முதலானதுகளும் வெகுவாயிருந்தும் அதுகளில சந்துஷ்டியடையாமல் பண்டரிநாதன்மீதேசதாகாலமும் இவர்கள்மனதைப் பொருந்தவைத்துக்கொண்டு மிருக்கையில் இவர்களில் போதலுபடேலுபிரதி ஏகாதசிக்கும் பண்டரிபுரத்திற்குச் சென்று பீமநதியில் ஸ்னானம்பண்ணி அனுட்டானங்களை முடித்து பகவான் சந்நிதிக்குட்சென்று சேவித்துப் பலவாறு துதித்துக்கொண்டே பகற்பொழுதைப் போக்கிஇரவு வந்தவுடன் அங்குபாகவதங்கள் செய்யும்பகவத்குணானுபவங்களைக் கேட்டுக்கொண்டிருந்து பொழுதுவிடிகிறகாலத்தில் பீமநதிக்குச்சென்று ஸ்னானுட்டானங்களை முடித்துத் துவாதசியனுட்டித்து பகவானைதெரிசித்து அங்குள்ள பாகவதர்களுக்குத் ததியாராதனை நடத்தி மறுநாள் தன்னுடைய கிராமமாகிய தாமணகாமுக்குத் திரும்பி வந்தக்கொண்டு மிருப்பார்.

இவ்வணம் பிரதி ஏகாதசிதோரும் இந்தப்போதலுபடேலு பண்டரிக்குச்சென்றுபகவானைசேவித்து

துவாதசிபாரணையில் சாதுகோஷ்டிகளை அறுசுவை
அன்னங்களாலே திருப்திசெய்துக்கொண்டு வெகுகா
லங் கடத்திக்கொண்டு வருகையில் ஒருவருடம் மழை
யில்லாததால் எங்குஞ் க்ஷாமமதிகரித்துக் கொண்டு
வர அதினால்ஜெனங்கள் பசி தாளமாட்டாமல் பரத
விப்பதைக்கண்டு போதலுபடேலு பூததயைப் பச்
சாத்தாப முடையவராகி மனைவியாகிய மமதாயியை
நோக்கி அடிபெண்ணே புராணபுருடனும் புருடோ
த்தமனுமாகிய பகவான் யாவத்திராளிடத்திலும்உள்
ளும்புரம்புமாகப் பொருந்தி யிருக்கின்றார் என்று
ஏகாந்தமாகச் சொல்லிப் பின்னுஞ் 'சொல்லுகின்றார்
அடிபெண்ணே மமதாயி இக்காலத்தில் பசியினால்மெ
லிவடையு மவர்கட்கு அன்னமிடவேணும் வெட்பத்
தினால் தாபங்கொண்டவர்களுக்கு ஜலங் கொடுக்கவே
ணும் மழைகாலத்தில் யேழைகளுக்கு வஸ்திரங்கள்
கொடுக்கவேணும் மேலும்வியாதியஸ்தர்களுக்கு அவி
ழ்தங்களும் அதற்குத்தக்க பத்தியங்களுங் கொடுக்க
வேணும் தண்ணீரில்மூழ்கிச் சாகப்போரவர்களையிழு
த்துக் கரைமீதிற்போட்டு அவனுயிரைக் காப்பாத்த
வேணும் றரித்திரனால் பீடிக்கப்பட்ட ஏழைபிராமண
சிறுவர்களுக்கு உபநயனம் திருகல்யாணமுதலானது
களுஞ் செய்யவேணும் அன்னியனுடைய வீட்டினில
கஸ்மாத்தாய் அக்கினிபிடித்தெரியுமாகில் அந்தஅக்
கினியைத் தணிக்கவேணும் யாசகர்களுக்கு ஏதோ
தன்னாலியன்றமாத்திரங் கொடுத்துச் சந்துஷ்டியடை
யச்செய்யவேணும் இப்படியென்றும் செய்துவந்தால்
தருமமதிகரித்துப் புண்ணியம் அதிகரித்தமர்ந்திருக்
கும் அன்றியும்அதனால் சத்தியு முண்டாகுவதுடன்
ஞானபக்தி வைராக்கியத்துடன் பத்தி செய்வோ
மாகில் விஷய வாஞ்சைகளற்று விவேக மதி
கரித்து ஸ்ரீராமர் தெரிசன முண்டாகுவதுடன்
பரமசுகமாகிய ஹரிபரந்தாமம் நமக்குண்டாகும்என்
றுபோதித்த நாயகனது வசனங்களைக்குருவாக்காகக்
கருதி அந்தமமதாயி பரோபகாரமும் அன்னதான
மும் அபாரமாகச் செய்துக்கொண்டிருந்த படியால்
சிலவருடங்களுக்குள் இருந்ததனமெல்லாஞ் சிலவாகி
ப்போகியும் அந்தபோதலுபடேலுமிச்சமாயிருக்கும்
தானியங்களையும் வஸ்திரங்களையும்கோக்களையும் எரு
துகளையும் விற்பனைசெய்து அன்னதானஞ் செய்தும்
யாவத்பொருள்களும்போய் தீனனாகிக் கையிலொரு
காசளவுமில்லாத தரித்திரம்வந்துத்தன்னைச்சூழ்ந்துக்
கொள்ள மெத்த யேழையாகியிருந்தும் சம்சாரம் நட
க்கவேண்டியதற்காகத் தான் கூலிவேலைசெய்து அத
னால்கிடைக்கும் அற்பபொருளைக்கொண்டு சம்சாரத்
தைக் காப்பாத்திக்கொண்டும்ஸ்ரீஹரிகோவிந்தாமுகு
ந்தா நந்தநந்தா வைகுந்தா வென்றுசொல்லி யவர்
நிஷ்டையிலிருக்க சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் வந்து
அப்போதுக்கப்போது தெரிசனந்தந்து போயிக்கொ
ண்டிருப்பார்.

இப்படிக்கி யிந்தபோதலுபடேலு தனக்குள்ள
சம்பத்துகள் யாவத்தையும் கிருஷ்ணார்ப்பணமாக
ஏழைப்பரதேசி முதலானோருக்குமீந்து யேழையா
யிருக்க ஒருநாள் ஏகாதசியன்று பண்டரிபுரத்திற்கு
போக தன்கையில் பைசாகூட மில்லாமல் புறப்பட்
டார் இப்படி புறப்பட்டுக் காட்டின்வழியாய்போகிற
போது அங்குள்ள எறிகரும்புகளைப் பொருக்கி ஒரு
சுமையாகக்கட்டி மானாபிமானத்தை விடுத்து அந்த
விறகுசுமையைத் தலையின்மீது வைத்துக்கொண்டுசெ
ன்றுப் பண்டரிபுரவீதியில் பதினாறுகாசுக்கு விற்பனை
செய்து பீமநதிக்குவந்து ஸ்னானஞ்செய்கையில்சங்கல்
பம்சொன்ன பிராமணனுக்கு ஒருபைசா கொடுத்து
புஷ்பந்தாம்பூலாதிகளுக்கு ஒருபைசாகொடுத்து வா
ங்கிக்கொண்டு தேவாலயத்துக்குட் சென்று அந்தப்
புஷ்பதாம்பூலாதிகளால் பகவானைபூசித்துத் தூபதீப
நைவேத்தியங்களீந்து பக்திபூர்வமாகப் பகவானைப்
பலவிதங்களாகப் பாடித் தன்னைமறந்தாடி சாதுசங்
கத்திற்கூடி ஹரிபதவியைத்தேடிப் பரமானந்தத்துட
னன்று பகற்பொழுதைப் போக்கி அன்னாளிரவெல்
லாங் குணானுபவங்கேட்டு இராப்பொழுதையும் போ
க்கிச் சூரியோதயமானவுடனே பீமநதியில் ஸ்னானம்
பண்ணி அநுஷ்டானங்களைச்செய்துக் கடைவீதிக்குச்
சென்று மீதியாயிருக்கும் பணத்துக்கு மாவைவாங்
கிக்கொண்டு பீமநதிக்கரைச் சேர்ந்து அங்கிருக்குந்
தக்கப்பிராமணர்களவர்களை யாகிலும் பிரியமாக
வழைப்பார் அவர்களுமிந்த போதலுபடேலைக்கண்டு
இந்தமாவு எங்களுக்கேதுக்கு யிதில் சவுசாரமில்லா
தது இதையினி யாருக்கேனுங் கொடுமையாவென்று
சொல்லி யொருவருமதைப் பெற்றுக் கொள்ளாமற்
போனதால் இந்தபோதலுபடேலு நான் மெத்தவும்
யேழையானதாலும் இந்தமாவு கிஞ்சித்தேனும் உரு
சியில்லாததாகியு மிருப்பதால் என்னுடைய தானத்
தை யெவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லையே இதற்கு
நானென்ன செய்குவேன் ஒபண்டரிநாதா பங்கயபா
தா புண்டரீகவரதா சுரர்கள்போற்றும் நவநீதாயெ
ன்று தியானித்துக்கொண்டே அவ்விடத்திலுட்கார்ந்
தார் இவர் முறையைக்கேட்டு தீனரட்சகனும் தீனத
யாபரனும் ஆகிய சாக்ஷாத் பாண்டுரங்கனாதன் கிழப்
பிராமணனாகிக் கரத்தினிற்றடியைப் பற்றிக் கிழிந்த
வஸ்திரத்துடனும் தலையினில் சகலாத்துக் குல்லாயுந்
தரித்துக்கொண்டு விரைந்தோடிவந்து போதலுபடே

லின்முன்னம் நின்று ஓஐயாநீர் பழயயெஜமானநல்ல
வா எனக்கு அன்றியும் பெரியோர்களாகிய பிராம
ணர்கள் பொருளாளியையே கூடியிருப்பார்கள் யான்
மெத்ததரித்திர னுகையால் எனக்கொருவரும் அன்
னம் படைக்கமாட்டார்கள் அன்றியும்மெத்தப் பசியி
னுல்வாடி நின்னிடம் வந்தேன் ஆகையால் என்பசி
தீரும்படி ஏதாகிலுங் கொடுமையாவென்று தவிக்கும்
மாயாப்பிராமணனைநோக்கி ஓயேழைப் பிராமணரெ
எனக்குத்தக்க யேழைபிராமணரையே பகவானென
க்குக் கூட்டி வைத்தாரென்று சொல்லிக் கொண்டே
அந்தமாவை யம்மாயாப்பிராமணனுக்குக் கொடுத்து
இதற்குத்தக்கப் பருப்புக்கொழம்பு கொடுப்பதற்கில்
லாமற் போயிற்றே என்று விசனப்பட்டும் போதலு
படேலு பகவானைநோக்கி ஐயாஎஜமானே! இப்போ
து சமயத்திற்குத்தக்கப் பதார்த்தங் கொடுப்பதற்கு
பாக்கியஞ்செய்யாதவ னுயினேனேஎன அதற்கம்மா
யாப்பிராமணன் ஓஐயா தருமவானே! சமயோசித
மாகிய பதார்த்தமிதுவே போதும் எனக்கென்றும்
இந்தப்பண்டரிநாதன் சந்நிதியில்பாகஞ்செய்துக்கொ
ள்ளுவதற்குத் தக்கயிடமில்லாத காரணமேதோ தெ
ரியவில்லை ஆதலால் யானிந்தவிடத்திலேயே சமையல்
செய்ய நினைக்கின்றேன் அதற்குவேண்டிய எரிகரும்
புகள் பொரிக்கிக்கொண்டு வாருமென அப்படியே
கொண்டுவருகிறேனென்று சொல்லி அந்தப்போதலு
படேலு அவ்விடத்தைவிட்டு நடந்து காட்டுவெரட்டி
களைப் பொருக்கிக்கொண்டு வந்து மாயாப்பிராமண
னிடங்கொடுக்க அப்பிராமணன் அதைப் பெற்றுக்
கொண்டு அங்குவைத்துச்சென்று ஸ்நானஞ் செய்து
யந்தமாயாப்பிராமணன் அங்கோரிடத்தில் நன்றாக
உட்கார்ந்து மாவையெடுத்துத்தண்ணீர்விட்டுப்பிசை
ந்துக் கொண்டிருக்க உடனே! போதலுபடேலுநெரு
ப்பு கொண்டுவந்து கொடுத்தார் அந்தசமயத்தில்
ஸ்ரீருக்குமணிதேவி வயதுசென்ற கிழவியாகி அங்கு
வந்து தன்பிராணநாதரைக் கண்டு எஜமானனையுங்
கண்டு சந்தோஷமடைந்து உடனே, தன்கணவனை
நோக்கி ஓசுவாமி அடியாளை யொண்டியாகக் கோயி
லில்விடுத்துத் தாங்களிங்குவந்திருப்பது நீதியோவெ
னக் கேட்டுக்கொண்டே எனக்குமெத்தப் பசியாக
விருக்கின்றதென்று சொல்லி ஸ்நானஞ்செய்துசமயல்
செய்யமுயல அதைப்போதலுபடேலு பார்த்துநமது
தானத்தை இன்றுதினம் பெற்றுக்கொள்ளு மவர்கள்
யாவருமில்லையே யென்று விசனப்பட்டுக் கொண்டிரு
ந்த என்முன்னிந்த பிராமணன் வந்து என்தானத்
தைப் பெற்றுக்கொண்ட விஷயத்தில்சந்தோஷமடை
ந்தேன் மேலுநான்கொடுத்த தானம் அற்பமானதா
யிருந்தபோதிலும் அதை அருமையாகப் பெற்றுக்
கொண்டு என்னைபுனிதனுகச் செய்ததொரு பட்சமா
யிருக்கினும் இந்த உப்புசப்புமில்லாத மாவினைப்புசி
க்க இவர்மனையாளும்வந்து சேர்ந்ததெனக்குப் பரம
சந்தோஷத்தை யுண்டாகக்செய்ததே யென்று தனக்
குள்தானே யோசித்து அடங்காமகிட்சிகொண்டிருந்
தார் இதற்குள் அந்தமாயா பிராமணன்மனைவி சமை
யல்செய்து முடிந்தஉடனே, தம்பதிகளிருவரும்புசித்
துக்கொண்டிருக்க அதைப் போதலுபடேலு கண்டு
ஆனந்தபரவச மடைந்திருக்க அப்போது போதலு
படேலு யிந்தமாவானது ருக்குமணிபிராட்டியின் அ
ஸ்தவிசேஷத்தினுல் அறுசுவை யன்னமாகி விளங்க
அதைக்கண்டு மாயாப்பிராமணன் ஓ தருமவானே!
நீயுமெங்களுடன் புசிப்பதற்குச் சீக்கிரம் வரவேணு
மென அதற்குபோதலுபடேலு ஓசுவாமி நீங்களிருவ
ரும் புசித்துவிட்ட சேஷமிருந்தால் யான்புசிக்கிறே
னெனப் பின்பு மாயாப்பிராமணனும் மாயாப்பிராம
ணஸ்ரீயும் புசித்துப்போகிறபோது போதலுபடேலு
கண்டு இவர்களிருவரும் பாண்டுரங்கனும் ருக்குமணி
பிராட்டியுமாமென்று உணர்ந்து நம்முடைய மனதில்
இச்சையைப் பூரணஞ்செய்யும் பொருட்டுத் தம்பதிக்
ளிருவருமிங்கு வந்தார்கள் ஆஹாநம்முடைய பாக்கி
யமேபாக்கியம் எவர்க்குண்டிந்த யோக்கிமம் என்று
நினைத்துக்கொண்டே தம்பதிகள் புசித்துவிட்டசேஷ
த்தைதின்று மெத்தக்களிப்புடன் யிருந்தார்.

இவ்வாறு போதலுபடேலு வெகுக்களிப்புடனி
ருந்து உடனே, சந்நிதியைநோக்கிச் சென்று ஸ்ரீபா
ண்டுரங்கனுடைய திவ்யரூபத்தைக்கண்டு ஓபக்தவற்
சலா பரமதயாளா அமராதீசா ஆபத்பந்து தேவரீர்
உப்புசப்புமில்லாத வெரும்மன்னத்தை யின்றுதினம்
புசித்தீர் இப்படிச் சாரமில்லாத அன்னத்தை புசிப்ப
தற்குநீரென்னயேழையா சகலசம்பத்துக்களையுங்கொ
டுக்கும் அஷ்டலட்சுமிகளுக்கும் நாயகனுகை விருக்க
உமக்கென்ன குரைவு சகலஔஷதிகளையுஞ்சிருஷ்டி
த்தப் பிரமதேவனைப் பெற்றப்பரம்பொருளே! அண்
டபிண்ட பிர்ம்மாண்டங்களையும் நினது வயற்றினில்
வைத்துக்காப்பாற்றி ரக்ஷிக்கும்படியானயோகருணு
நிதியே எனக்குத் திருப்தியுண்டாகும்படிக்கிந்தஅன்
னத்தைப்புசித்துச் சந்தோஷித்தீரோ என்றுப்பிரிய
வசனங்கள் புகல அதற்குஹரியும் போதலுபடேலை
நோக்கி ஓபரமபக்தனே! இவ்வூரிலென்றும் ஏமாரா
மல் பெரியோர்களிங் கெழுந்தருளினுலும் அன்னமி
டப்பட்டதாதா யொருவரையுங்காணேம் இதற்குத்
திருஷ்டாந்தமிப்போதே நின்மனதிற்கு திருப்தியா

கும்படிக் காட்டுகின்றேன் வாருமென்றழைத்து அவ
ரையுங் கூட்டிக்கொண்டு ஹரிமுன்போல கிழப்பிரா
மண வடிவங்கொண்டு கந்தத்துணியுங்கரத்தினிற்றடி
யும்பிடித்து நடுக்கலுடன் மெத்தவேழையைப் போல
வும் நடைநொடிப் பாவங்களைக் காட்டிக்கொண்டும்
அந்தஹரியானவ ரப்பண்டரிபுர வீதியிலப்படிப்போ
கத் தொடங்குகையில் புருஷனொருவன் அந்ததினத்
தில் ஆயிரம்பிராமணர்க்குத் ததியாராதனை நடத்தப்
படுமென்றுசொல்லிப் பிராமணர்களையதற்கு முன்னு
ளே வருவித்து அவர்கள்பேரையும ஊரையும் யெழு
திக்கொண்டு ஆயிரம்பேர் மொத்தகணக்கான உட
னே அவர்களையனுப்பி மருநாள் பிரசாதமுதலியதுக
ளையும்தயார்செய்தும் பஜாரினில் திரைபோட்டுக்கண
க்கில் தாக்கலாயிருக்கும் பேர்வழியின்படி ஒவ்வொரு
வராக அழைத்து உள்ளேவிட்டுப் பக்தியாக ஒக்கா
த்தி இலைகள்போட்டு பரிமாரப்போகிற சமயத்தில்,
மாயாதாரியாகிய பிராமணனும் போதலுபடேலும்
அங்குசென்று அத்ததியாராதனத்திற்கு எஜமானனை
க்கண்டு ஸ்ரீஹரி சொல்லுகின்றார் ஓதருமவானே!மெ
த்தப்பசியினாலே வேதனைப்பட்டுக்கொண்டு வந்தேன்
என்பசிதீர இவ்வளவுஅன்னம் வட்டித்தால் புசிக்கி
றேனென அதற்கத்தருமவான் நாங்கள் ஆயிரம்பேர்
களுக்கு பிரசாதங் கணக்காகச் செய்தோம் அந்தப்
படியே ஆயிரம்பேர்களும் வந்துவிட்டார்கள் கணக்
குஞ் சரியாய்விட்டது அன்றியும்அங்கே யுமக்கிடங்
கிடைக்காதெனஸ்ரீஹரி ஆயிரம்பேர்கள் புசிக்கும்படி
யான இப்பெருத்த ஜாகையில் எனக்கொருவனுக்கு
யிடமிருக்கமாட்டாதோ என்று சொல்லிக்கொண்டே
யுட்புகுந்து அங்கொருயிலையின்முன்னமுட்கார்ந்தார்
அதைக்கண்டங்குள்ளவர்கள் அவர்கையைப்பிடித்துக்
கொண்டு நீயென்ன அடஞ்சாதிக்கின்றவனாக விருக்
கின்றாயென்று அப்போதேவெளிக்கிக்கொண்டுவந்து
விடுகையில் போதலுபடேலுகண்டு ஆஹாஇதென்ன
அனியாயம் இப்படியும் ததியாராதனை செய்யப்பட்
டவர்களை நானெங்குங் கண்டதில்லையென்று மெத்த
விசனப்பட்டார் அப்போது பிராமணர்க ளெல்லாம்
ஆபோசனங் கைக்கொண்டு புசிக்கத்தலைப் பட்டவு
டன் அங்கொரு சாத்தெழும்பி இலைகளை யெல்லாம்
கிளப்பிக்கொண்டு போயிற்று அதனால்திரைகளிற்கட்
டின வஸ்திரங்களும் மண்டபமும் திடீவென்று பூமி
யின்மீதுவீழ்ந்தது அருமையான அந்தபதார்த்தங்க
ளும் அன்னமும் ஒன்றோடொன்று கலந்துமண்ணின்
பங்காயிற்று அக்கோஷ்டியினில் ஸ்ரீஹரி யொருவரில்
லாமையினால் அன்னம் முதலானதுகளுங் கெட்டுப்
போயிற்று அன்றியும் அந்நாள்செய்தத் ததியாரா
தனை வியர்த்தமாய்போயிற்று அப்போது பகவான்
போதலுபடேலைநோக்கி ஓபக்தியிற்சிறந்த பரமபாக
வதரே இவர்கள்செய்தத் ததியாராதனையானதுகளங்
கமுடையவர்களாகியும் மனம்வாக்கு காயமென்னும்
திரிகரண சுத்தியில்லாமல் டம்பத்தைநாடி பக்தியில்
லாமல் செய்தபடியால் இந்தத்ததியாராதன மிப்படி
யாயிற்று பரிசுத்தமனதுடன் பக்திச்சிரத்தையாகநீர்
செய்தது கிஞ்சித்தாகிலும் இதின்சுகத்தையும் மது
ரத்தையும் நானென்னென்று சொல்லுவேன் அப்ப
டிக்கிருந்தமையால் யானும் ருக்குமணியும் புசித்துச்
சுகமடைந்தோமென்று சொல்லக்கேட்டு போதலுப
டேலு மெத்தசந்துஷ்டராகி ஓபகவானே கணக்கிட்
டுச் சொல்லமுடியாத மகுத்துவங்களுடைய நின்பெ
ருமையை யென்னால் புகழத்தரமாமோ என்றுசொல்
லிக் கொண்டே அவர்திருவடிகளில் விழுந்துபணிந்து
துதிக்க அப்போது பகவான் சந்நிதிக்குள்போயினார்

மறுநாளுதையத்தில் போதலுபடேலு தாமணை
காமுக்கு போயிக்கொண்டிருக்க பசியினால்வேதனைப்
பட்டவராகியும் சூரியனது வெப்பத்தினாலும்மெத்தச்
சிரமமடைய இதை ஸ்ரீஹரியரிந்து அந்தமார்க்கத்தி
லே அதிகஉச்சிதமாகிய ஒருதோட்ட மொன்றுண்
டாக்கிக்கொண்டு அதற்குத்தான் தோட்டக்காரனாக
வும் தன்மனைவியாகிய ருக்குமணி தோட்டக்காரியா
கவும் வேடம்புனைந்து அதில் வசித்துக்கொண்டிருக்
கையில் தோட்டக்காரன் மனைவியாகிய ருக்குமணி
பிராட்டி அத்தோட்டத்தினுள்ளிருந்து சீக்கிரம் வெ
ளியில்வந்து போதலுபடேலை நோக்கி ஓஐயா ஹரி
தாசரே தயவுசெய்து எங்கள்தோட்டத்திற்குள்வாரு
மென்று அழைத்துக் கொண்டுபோய் உன்னிதஸ்தா
னத்திலவரை ஒக்காத்தி ஒருரொட்டியுங் கந்தமூலங்க
ளையுங் கொடுத்துப் புசித்து இளப்பாருமையா!வென்
றினிய வசனங்கள்மொழிய அதற்குபோதலுபடேலு
ஓஅம்மணி நீயாரம்மா என்னை முன்னேபின்னே எப்
பவோ பார்த்ததைப்போல மார்க்கமே போகுமெ
ன்னை யித்தோட்டத்திற்குள் ளழைத்துவந்து கந்த
மூலபலங்களும் ரொட்டியுங்கொடுத்துப் புசிக்கும்படி
வேண்டிக் கொள்ளுகிறாயென்று சொல்ல அதற்கம்
மாது ஓபரமசாது இந்ததோட்டக்காரர் உம்முடை
யவரவை தூரத்திலேதானே கண்டு சீக்கிரமும்மை
யழைத்துப் பசிதீரயேதாகிலு முதவிக் களைதீர்த்து
அனுப்பும்படி நேமித்தபடியால் அவர் நேமனப்படி
யடியாள் தங்களையழைத்துப் பசிதீரும்படி யேதோ
கிஞ்சித்துதவினேன் அதைப்புசித்து எங்கள்குடிசை
யில் பாதத்தைவைத்து எங்களைப்புனித ராகும்படி

கிருபைசெய்யு மையாவென்று வேண்டிக்கொண்டனள் அப்படி தன்னை வேண்டிக்கொள்ளும்அம்மாதின் கருத்துக்கிசைந்து அந்தப்பரம போதலுபடேலுரொட்டியையுங் கந்தமூலாதிகளையும் புசித்துத் தாகமருந்தி சற்றுநேரம்ங்கிருந்து விடாய்தீர்ந்து அதைவிட்டும் வெளிப்பட்டுச் சிறிதுதூரஞ்சென்றுத் திரும்பிப் பார்க்கையில் தோட்டத்தைக்காணாமல் மாயமாய்ப் போயினபடியால் இது பகவானுடைய கிருபை யென்றுக் கருதி ஆனந்தசாகரத்தில் மூழ்கினவராய் நடந்துத் தன்னூராகிய தாமணகாமையடைந்து சுகித்திருக்கிற போது சோளக்கொல்லையை போதலுபடேலு காக்கும்படிச்சென்று அங்கொரு கட்டிலைப்போட்டுச்கொண்டு அதின்பேரில் நின்று பறவைக் கூட்டங்களைக் கண்டு அதையோட்டுவதற்கு மனமில்லாதவராயினர் ஏனெனில் சகலபூதங்களிடத்திலும் ஜெகதீஸ்வரனும் சர்வேஸ்வரனுமாகிய பகவான் உள்ளும் புரம்புமாய் வசித்துக்கொண்டிருப்பதால் பசியுடன் வந்துப் பறவைகள் சோளக்கதிர்களின் மீதிருந்துச் சோளத்தை ஒவ்வொன்றாய்த் தின்னுவதாலும்சிலபறவைகள்கதிர்களையொடித்து வாயில் கவ்விக்கொண்டு போவதாலும் அதுகளையப்போது உண்டை வில்லினாலடித்துக் துரத்துகையில் அவ்வடியைத் தப்பித்துக்கொண்டு போனாலாயிற்று அப்படிதப்பித்துக்கொண்டு போகாவிடி லப்பறவை உடனே உயிர்விடும்படி நேரிடும் ஆகையால் பசியோடுவரும் பறவைக்கூட்டங்களை யோட்டுவதுபாவமே உண்டைவில்லினா லடிப்பதும் பாவமே அன்றியும்பறவைகள் துக்கப்படும்படியாகச்செய்வதும்பாவமே நம்மைப் பார்த்துப் பார்த்துப் பயந்தோடும்படியாகச் செய்வதும்பாவமே சகலவிதத்திலும் நமக்குப்பாவமேவந்து அணுகிறபடியால்இன்றுமுதல் பறவைகளையோட்டவும் அடிக்கவும் பயமுறுத்தவும் விசனப்படவுஞ் செய்யத்தகாதென்றுமதித்து பறவைகளையோட்டாமலும் உண்டைவில்லினா லடிக்காமலும் பயமுறுத்தாமலும் விசனப்படாமலும் அக்கட்டிலின்மீதிருந்து உள்ளபடி யாகட்டுமென்றுதிடச்சித்தராகி மனோவாக்கு காயமென்னுந் திரிகரணசுத்தியாய் பகவானைத் துதிசெய்துக்கொண்டு தன்னை மறந்திருந்தார்.

இந்தப்படிக்கி யந்தபோதலுபடேலு பகவத்தியானத்தினால் தன்னைமறந்திருக்கிறபோது இவர்மனைவியாகிய மமதாயி அங்குவந்துத் தன்னைமறந்திருக்குங்கணவனைப்பார்த்து இப்போது பக்தியைச்கெடுக்கலாகாதென்றுக் கருதி சற்றுநேரம் ஒன்றும்பேசாமலிருந்துத் தனபிராண நாயகருக்கு ஜாக்கிரதைவந்து கண்களைத் திறந்துபார்த்தவுடன் அந்தமமதாயி நாயகனருகிற்சென்று வணங்கித்தான் கொண்டுவந்தரொட்டியையுதவிப் புசித்தபின்புத்தண்ணீர்கொடுக்க அவரந்தரொட்டியைத் தின்றுத் தண்ணீரருந்தி இளைப்பாறியிருக்கையில் அம்மமதாயி தன்கொழுநனை நோக்கி எனதன்பிற்குரியப் பிராணநாயகரேசோளக்கதிரேனும் அல்லது சோளத்தையேனும் யாசகர்களுக்காயினும் யேழைப்பரதேசிகளுக்காயினும்ஹரிபக்தர்களுக்காயினும் கொடுக்கவேண்டாம் அப்படிகொடுப்பீரேல் நமக்குமெத்த கஷ்டம்வந்து சம்பவிக்கும் அதென்னகஷ்டமெனில் நமக்குப் போஜனத்திற்கு யில்லாமற் போவதொன்று கிஸ்திகட்டுவதற் கில்லாமற் போவதிரண்டு கஷ்டங்கள் நமக்குவந்து சம்பவிக்குமாதலால் நீரும் அந்தச்சோளக்கதிர்களை தொடுவது ஞாயமல்ல பாண்டுரங்கன்மீதுஆணையாய் இந்தக்கொல்லையிலிருக்குஞ் சோளக்கதிர்களை யுமதுகரங்களால் தொடக்கூடாதென்று ஆணையிட்டுத்தன்வீட்டைநாடிப்போயினள் உடனே சிலசாதுக்கள் விட்டலவிட்டலவென்று நாமத்தியானஞ் செய்துக்கொண்டே பண்டரி யாத்திரைக்குப் போயிக்கொண்டிருக்க அவர்களைப் போதனுபடேலு பார்த்து உடனே கட்டிலினிலிருந்திரங்கி மனதினில் களங்கமின்றிப் பக்திவினயமாய் அவர்களுக்குத் தெண்டனிட்டு நின்றிருக்க அப்போதுசிலர் போதலுபடேலை நோக்கி ஓ ஐயா புண்ணியபுருடரே சிலமாதங்களுக்கு முன்னம் க்ஷாமம் வந்தபோது ஏழைப்பரதேசிகளை அழைத்தழைத்து அன்னங்கொடுத்த தாதா நீரல்லவா அதைப்போல இப்போது பண்டரியாத்திரை செய்யப்போகமெங்களுக்கு மெத்த பசியுண்டாயிருப்பதால் அப்பசிதீரும்படிச் சோளக்கதிர்களைக் கொடுத்தால் அதைத் தின்றுப் பசியாற்றிக் கொள்ளுகிறோமென்று வேண்டிக்கொள்ளும் பண்டரியாத்திரை வாசிகளைநோக்கி போதலுபடேலு சொல்லுகின்றார் ஓபரமசாதுக்களே உங்களுக்குத் தேவையானமட்டும்சோளக்கதிர் ஒடித்துங் கொள்ளுங்களென அவர்களு மந்தப்படியே சிலகதிர்களை யொடித்துக் கொண்டுபோக அதேமார்க்கத்திற் போகுமவர்கள்கண்டு இச்சோளக்கதிரேதென்று விசாரித்துக் கொண்டுவந்து போதலுபடேலைக் கண்டு சிலமாதங்களுக்கு முன்னம் அன்னதானஞ் செய்த தாதா நீராகையால் இப்போதெங்களுக் குற்றப்பசி தீரும்படி யேதாகிலு முதவியனுப்புமையாவென அதற்குப் போதலுபடேலு அவர்களைநோக்கி ஓப் பிரியமான சாதுக்களே யாதொருதடையுமின்றி உங்களுக்கு வேண்டியமட்டில் சோளக்கதிர்களை யொடித்துத்தின்று பசியாறுங்களென அந்தப்படியே அவர்க

ளும் தங்களுக்கு வேண்டியமட்டில் சோளக்கதிர்களை
யொடித்துத் தின்றுப் பசியாறிப்போயினவர்கள்.

இந்தப்படி இருநூறுசாதுக்கள் வரையில் வந்து
அந்தச் சோளக்கொல்லையைக் கொள்ளையிட்டு ஒரு
சோளமாயினும் விடாமல் வெருங்கொல்லை யாக்கிப்
போயினர்கள் அப்படிப் போகுமவர்கள் வெறுமனே
போனார்களோவெனில் விட்டல விட்டலவென்று பக
வந்நாம பஜனை செய்துக்கொண்டே சோளக்கதிர்க
ளைத்தின்று சந்தோஷித்தாகி போயிக்கொண்டிரு
க்கையில் போதலுபடேலு தன்கொல்லையில் ஒருசோ
ளக்கதிரேனு மில்லாததைக்கண்டு பாகவதர்களுக்கு
உபயோகமாயிற்றேயென்று விண்டு என்றுமில்லாச்
சந்தோஷங்கொண்டு வீட்டிற்குப்போகாமலே அங்கு
தானேயிருந்தார் இவரிப்படிக் கிருக்கிறபோதுவீட்டி
லிருக்குமிவர் புதல்வனாகிய யாமஜிதங்கள் சோளக்
கொல்லையெல்லாங் கொள்ளை போயினதென்று கேழ்
விப்பட்டுஉடனேயவ்விடத்திற்குவந்துபார்த்துமெத்த
விசனமடைந்து இதற்கு நானென்னசெய்வேனென்று
எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் இவருடைய தந்
தையாகிய போதலுபடேலும் தன்புதல்வனை நோக்கி
அடாமகனே நீயெப்போதும் லோபியென்றுப்புவியி
னில் பேரெடுக்காம லிருமென்றுசொல்லிப் பின்னுஞ்
சொல்லுகின்றார் கேளும்மகனே தேனீய்களானது
உபவாசமிருந்துத் தேனைக்கொண்டுவந்து சேர்த்துப்
பின்பு அத்தேனை வேடனுக்குக் கொடுப்பதுபோல
நம்மாலியன்றமாத்திர மூலகத்தோர்க்குதவி செய்யா
மல் உலகத்தினில் நாம்புகித்துத் திரேகத்தைப்பெரு
க்கச்செய்து இருமாப்படைந்திருப்பது நன்றோ அன்
னியர்களுக்கிட்டு நாம்பசியுடனிருந்த போதிலும்புண்
ணியமேயன்றிப் பாவமில்லை அன்றியும் இவ்வுலகத்தி
னில் சம்சாரத்தி லீடுபட்டுக்கொண்டு மிதமற்ற திரவி
யஞ் சம்பாதித்தும் இன்னுமைத்துமுள்ள சம்பத்துக்
களெல்லா முண்டாகியிருந்தும் ஏழையெளியவர்களுக்
கீயாமலும் தானும் புசிக்காமலும் அன்னியர்களுக்
குபயோகப் படுத்தாமலும் மேலுமேலுஞ் சேகரஞ்
செய்யும் லோபியானவன் அந்தத்திரவியங்களையுஞ்சம்
பத்துக்களையும் திருடர்கள் வசமாகச்செய்து மெத்
தச் சிரமமடைந்துக் கொண்டிருப்பவர்க ளெத்தனை
பேர்களைப் பார்த்திருக்கின்றோம் அதை யுணர்ந்தே
யான் இத்தினத்திலிந்தக் கொல்லையிலிருந்த சோளக்
கதிர்களை சத்பாத்திரங்களுக்கு கொடுத்து திருப்தி
யடைந்தேன் இதைப்பற்றி நீ விசனப்பட வேண்டா
மென்று சொல்லக்கேட்டப்புதல்வன் தந்தையின்திரு
வடிகளில் விழுந்துத் தீர்க்கமுடன்தெண்டனிட்டு அவ
ரைக்கையினித் பிடித்துக்கொண்டே புதல்வனானவன
ப்போதே வீடுபோய்சேர்ந்தான் அப்போதுமமதாயி
தன்புதல்வனை நோக்கி அப்பாமகனே உன்தந்தை
யைக் கையுடனழைத்து வந்தையே என்னவிசேஷம்
அதைத்தெரியச் சொல்லுமென அதற்கு யாமஜி தன்
தாயைநோக்கி ஓஅம்மணீ இவரைச் சோளக்கொல்
லைக்குக் காவலிருக்கும் படிச்சொல்லி யான்மேலண்
டைக் கொல்லைக்குச்சென்றுக்காவல் காத்திருந்தேன்
அப்படிக் கிருக்க இவரிரண்டுமூன்று நாளைக்குள்ளா
கச் சாதுக்களுக்கு அக்கொல்லையிலிருந்தசோளக்கதிர்
களையெல்லாங் கொடுத்துக் கொல்லையைக்காலிசெய்து
விட்டார் அதைப்பற்றி யான் கேட்டவிஷயத்தில் எ
னக்குத்தக்கபடி ஞாயத்தை யோதிடயானும் அதற்
குச் சம்மதிப்பட்டிருந்தும் இவர்வீட்டிற்கு வராமல்
வெறுங்கொல்லையைக் காத்திருப்பதால் என்னப் பிர
யோசனம் என்றெண்ணி இவரைக்கையுட னழைத்து
வந்தேனென அதற்கவ்வுத்தமியும் அடாமகனே பக
வத்பக்தர்கள் பொருட்டு தானஞ்செய்தால்அதற்குப்
பதில் பகவான் ஏதோ ஒருவிதத்தில்போன சோளக்
கதிர்களை யெல்லாம் அனுகூலப் படுத்துவார் யென்
றெண்ணி அந்தநால்வரும் தீனர்களாகி ஹரியின்மீது
பாரத்தைப்போட்டு அவரேயாவர்க்குங்கெதியென்று
நம்பிக் கைவைத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படிக்கிவர்கள் நால்வரும் ஏகமனதாய் ஹரி
யின்மீது பாரத்தைபோட்டு இடைவிடாமல்தியானித்
துக் கொண்டிருக்கையில் சிலதுஷ்டர்கள். அதிகாரியி
னிடஞ்சென்று ஓசுவாமி போதலுபடேலானவன்தன்
சோளக்கொல்லைமுற்றிலும் கொள்ளைவிட்டுவிட்டான்
முன்னமுங்களுக்கு ஏழுவராகன் கொடுப்பதாய் வாயி
தாபத்திரங் கொடுத்திருக்கின்றான் ஆகையால் அந்த
ஏழுவராகனும் அவனிடத்தில் தாங்கள் வசூல்செய்த
பிரகேதான் யாங்களும் வாயிதாவராகன்களைக் கட்டு
வோமென்று விவரப்படுத்துகையில் அந்த அதிகாரி
யுங்கேட்டு மதிமயங்கி உடனே போதலுபடேலிடம்
தமக்குச் சேரவேண்டிய ஏழுவராகனையுங் கேழ்க்கும்
படி தூதர்களுக்குக்கட்டளை யிட்டனுப்ப அத்தூதர்
களு மந்தப்படியே சென்று போதலுபடேலைக்கண்டு
வாயிதாவராகன்களைக் கொடுமையாவென்று வெகு
விததொந்திரவு படுத்துகையில் அந்தப்போதலுபடே
லுங் காரணத்தை யறிந்துக்கொண்டு பெட்டியைத்
திறந்துப்பார்க்க அதில்மூன்று வராகனே இருக்கக்
கண்டு மைத்தனன்கிற்கும் பிரயத்தினஞ் செய்தபோ
திலும் அனுகூலப்படாமலிருக்கவும் உடனே அந்தப்
போதலுபடேலு அந்நகரத்துவர்த்தகனிடஞ்சென்று

தன்னுடைய நிலத்தை அடமானம் வைத்துக்கொண்டு நான்குவராகன் கடனாகக்கேழ்க்கையில் அவ்வர்த்தகன் நாளையதினம் கொடுக்கிறேனென்று சொல்லி அதிகதனராசிகளை பூமியில்புதைத்து வைத்திருப்பதில் நான்குவராகன் யெடுத்து வெளியில் வைத்திருக்கையில் சிலர் அந்தவர்த்தகனிடஞ் சென்று போதலுபடேலு கொல்லைமுழுமையும் கொள்ளை போயிற்றென்றுசொல்ல அவ்வர்த்தகனதைக் கேட்டுக்கொண்டு மறுநாள் தன்னிடம்வந்த போதலுபடேலைக் கண்டு ஒபக்தசீலனே உன்னுடைய கொல்லையி லொன்றுமே இல்லாமல் கொள்ளையிட்டு விட்டார்களே அப்படிக்கிருக்கும் கொல்லையின்மீது நான் நான்குவராகன் கொடேனென்றுசொல்ல இதைக்கேட்டு போதலுபடேலு ஓஐயா வர்த்தகரே உம்முடைய வார்த்தையை நம்பி அதிகாரிக்கி நாளையதினங் கொடுக்கிறேனென்றுசொல்லி பேச்சு கொடுத்துவிட்டு சொற்சோர்வு பட்டேனே என்றுவிண்டு இன்னொரு வர்த்தகனை யிவ்வூரில் கேட்பதில்லையென்று தன்மனைவியைநோக்கி அடிபெண்ணே நான் மீரளமென்னு மூருக்குப்போய் வர்த்தகனிடம் வாங்கிக்கொண்டு வருகிறேனென்று சொல்லிப்புறப்பட்டு மீரளமென்னுங் கிராமத்தைநோக்கிப் போகிறபோது ஹரிகோவிந்தா அச்சுதா அமலாவிமலா நிமலா நிர்மலாவென்று தியானித்துக்கொண்டே போயினார் அப்போதுசில துஷ்டர்கள் அதிகாரியிடஞ்சென்று போதலுபடேலு நான்குவராகன் கொடுப்பதற்கு வழியில்லாமல் ஊரைவிட்டு ஓடிப்போயினானென்று சொல்லக்கேட்டு அதிகாரி;போதலுபடேலு வீட்டிற்குக் காவற்காரரையனுப்ப அவர்களுஞ் சென்று போதலுபடேலு வீட்டின் வாசற்படியிலிருந்துக்கொண்டு அவர்மனைவியை நீருக்கும் நெருப்பிற்கும் வெளிவிடாமல் வெகுநிற்பந்தப் படுத்துகிறபோதுசர்வேஸ்வரனாகிய பகவான் இந்தச்செய்தியை யறிந்துத் தன்பக்தனை கௌரவப்படுத்த வேணுமென்றெண்ணி பஞ்சமனைப்போல வடிவமெடுத்து விட்டுயென்றநாமத்துடன் வராகன் ஏழையுங்கைக்கொண்டுவந்து சாவடியினிடஞ்சேர்ந்து அதிகாரியையழைத்துப்போதலுபடேலு கொடுத்தனுப்பினாரென்று ஏழுவராகனையுங் கொடுத்தார் அதிகாரியதைப் பெற்றுக்கொண்டு அந்தப்பஞ்சமனை நோக்கி நீயெந்தவூர் உன்பேரென்ன அந்தபோதலுபடேலுக்கு முனக்குமெப்படி சிநேகம் இதுகளைபொன்றொளியாமற் சொல்லுமென அதற்கந்த விட்டுயென்ற பஞ்சமன் ஒசுவாமி நானேபஞ்சமகுலத்திலுதித்தவன் யான்வசிப்பது பண்டரிபுரம்என் பேர்விட்டு என்னுடன்பாட்டன் அவருக்குப் பாட்டன் ஆகமூன்றுதலைமுறையாக அந்தபோதலுபடேலுக்கு மெங்களுக்கு மெத்தநேசம எனக்கொருஆபத்துநேர்ந்தால் அவர்வந்து அந்தஆபத்தைப் போக்குவார் அவருக்கொரு ஆபத்துவந்தால் நான்வந்து சகாயஞ்செய்வே னென்றுசொல்லி விடைபெற்றுக் கொண்டு மாயமாய்ப்போயினார் அதைக்கண்டு அவ்வதிகாரி மெத்த ஆச்சரியமடைந்து ஆஹா இதென்னவிந்தையிலும் விந்தையாக விருக்கின்றது வந்தவன்பஞ்சமனாயிருந்தால் அவனுக்குப் பார்த்துக்கொண் டிருக்கும்போதே மரைந்துபோவதற்குசக்தியுண்டோஇது ஜெகதீஸ்வரனுடைய செய்கையன்றோ ஆகையால்பரமபக்த சிகாமணியாகிய போதலுபடேலை கௌரவப்படுத்தும் நிமித்தியம் யாராகிலும் தன்னையின்னானென்று தெரிந்துக்கொள்ளப் போகிறார்களென்று பஞ்சமனைப்போல வடிவமெடுத்துவந்து நம்மிடம்ஏழுவராகன்செலுத்தி மாயமாய் மறைந்துப்போயினார் அன்றியும் உமதூரெதுவென்று கேழ்க்கப் பண்டரிபுரமென்றார் பேரென்னவென்றால் விட்டுஎன்றார் இவ்விரண்டையும் யோசிக்குமிடத்தில், பண்டரிபுரத்தில் ராதாருக்குமணி சமேதராய்நின்ற திருக்கோலத்துடன்பக்தர்களை ரக்ஷித்துக்கொண்டிருக்கும் பாண்டுரங்கனே. யாகுமென்றுத் திடங்கொண்டு அந்தவதிகாரியும் பகவத்தியானத்துடன் போதலுபடேலின் வரவுக்கெதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தப்படியந்த அதிகாரி போதலுபடேலு எப்போது வருவாரோ என்றெதிர்பார்த்துக் கொண்டவண்ணம் குடிகளைநோக்கி நீங்கள்சொல்லியபடி போதலுபடேலிடம் வாயிதாவராகன் ஏழையும் வசூல்செய்துவிட்டேன் இனிநீங்கள் கட்டவேண்டிய வாயிதாவராகன்களைக்கொண்டுவந்துசெலுத்துங்க ளென்று சொல்லிவிட்டு வீட்டையடைந்து அன்றிரவைப்போக்கி மறுநாள் காலையிலெழுந்து அந்தஅதிகாரி காலைக்கடனைமுடித்து வாயிதா வராகன்களை வசூல்செய்யும் நிமித்தியம் வேண்டியக்கிருஷி செய்துக்கொண் டிருக்கையில் போதலுபடேலு அதிகாரியிருக்கும் மார்க்கமாகவந்து அங்குபயத்தினா லென்னசொல்லுகிற தென்று சமீபத்தில்வந்தபோது அந்தஅதிகாரி போதலுபடேலை அழைத்து ஒபரமசாதுவே நீர் விட்டுவென்னும் பஞ்சமனிடமனுப்பின பூராத்தொகையான வராகன் ஏழும்சேர்ந்தது ஆனாலதிலொரு விசேஷத்தை என்கண்ணாரக்கண்டு ஆனந்தங்கொண்டேன் அதென்னவெனில் பஞ்சமனைப்போல வடிவமெடுத்துவந்த விட்டுவென்பவன் சாக்ஷாத் பாண்டுரங்கனேயாம் அதெப்படியெனில் வராகனைச் செலுத்திவிட்டு அந்த விட்டுவென்பவன் திரும்பினான் அவ்வளவிலேயே மா

யமாய் மறைந்துபோயினதை யான்மனமாரவுங் கண்
களாரவுங் கண்டபடியினாலே அவரைப் பாண்டுரங்க
னென்றே சொல்லத்தகும் அன்றியும் சொல்லவும்
நினைக்கவும் அரிதாகிய பகவானே நின்பொருட்டுஏழு
வராகனைக் கொண்டுவந்து கொடுத்துப்போயினார்இதி
னாலுன்புகழை யென்போலியனால் சொல்லவும் நினைக்
கவுந் தரமாமோவென்று வெகுவாகக் கொண்டாடி
னார் அப்போது போதலுபடேலு அங்கிருக்கும் விட்
டுயெனும் பஞ்சமனையழைத்து ஐயா விட்டு இந்தஏழு
வராகனுனக்கேது யார்கொடுத்தனுப்பினார்கள் என்
பொருட்டு ஏழுவராகன் நீகட்டவேண்டிய அவசிய
மென்னவென்று வினவ அதற்கு அந்தவிட்டு யென்ப
வன் ஓசுவாமி யானேகேவலமானபஞ்சமகுலத்தினிற்
பிறந்தவன் ஒருவேளைகஞ்சிக்கி வழியில்லாதவன் கட்
டத்துணிக்குங் கெதியில்லாமல் இனிகிழிய இடமில்
லாதபொத்தக்கந்தலைக் கட்டியிருக்கும்படியான யீன
அனந்தஸ்துடைய எனக்கு ஏழுவராகனேது உமக்
காகயான் கட்டவேண்டிய காரணமில்லை அப்படி யெ
னக்கு ஏழுவராகனுக்கு ஐவேஜு யிருந்தால் நல்லது
ணியுடுத்தி மூன்றுமாதம்வரையில் நல்லகஞ்சிக்குடித்
துக் களித்திருப்பேனே இதுவென்னமோ கட்டுக்
கதையாகவும் சுத்தப் பொய்யாகவு மிருக்கிறதென்
றான் அதைக்கேட்டு அந்த போதலுபடேலு ஐயா
விட்டு இந்த அற்பமான ஏழுவராகனுக்காக அதிகாரி
பொய்சொல்லுவாரோ அன்றியும் என்பேரில் வரவு
வைத்து பேபாக்கிக்கட்டுவாரோ நீ சொல்லுவதே
பொய்யல்லாமல் அதிகாரி யொருக்காலும் பொய்
சொல்லமாட்டாரென்றும்புகல அதற்கந்தவிட்டுஐயா
பரமபாகவதரே இதுவிஷயத்தைப்பத்தி யோசிக்கிற
போது களங்கமற்றவனும் நிரதிசயக்கிருபா கடாக்ஷ
வீக்ஷணனும் சரணாகதரக்ஷகனுமாகியஸ்ரீஹரிபாண்டு
ரங்கனுடைய செய்கையென்று நவிலக்கேட்டுப் போ
தலுபடேலு தன்கண்களில் நீரொழுகவிட்டுக்கொண்டு
ஹரிஓம்கிருஷ்ணா கேசவா மாதவா மதுசூதனா அனா
தைகளுக்குநாதா ஆபத்பந்து ஆதிதேவா பக்தவற்ச
லா பரமபுருஷா புண்டரீகாக்ஷா புருஷோத்தமா கே
வலனாகிய அடியேனுக்காக பஞ்சமனாகிவந்து அதிகா
ரிக்கி ஏழுவராகனை யளித்தீரோ அளித்து யென்கண
க்கைத்தீர்த்தீரோ அதிகாரிக்கினின தரியசேவைதந்து
கடைக்கண்ணாற் பார்த்தீரோ பார்த்து அவருடைய
பாபங்களையெல்லாம் பரந்தோடச் செய்தீரோ இந்த
ருணத்தையானென்று தீர்ப்பேன் எப்போதும்மைக்
கண்ணாரப்பார்ப்பேன் இடைவிடாமலுமது திருவடி
களை எனதிருதய கமலத்திலெப்போது சேர்ப்பேன்
என்று பலவாறு துதிசெய்துக்கொண்டேதன்னைமறந்
தாடி பகவானே விரைவினில்வரவேணும் வந்து நின
தரிய சேவைதரவேணும் தந்து மேன்மையாகியவிரு
துபூணும்என்று வேண்டிக்கொள்ள ஸ்ரீஹரியானவர்
பஞ்சாயுததரராகியும் ஸ்ரீவற்ச கௌத்துவ மணியில
ங்க வனமாலைவனசமாலை அசைந்தாடித்துலங்கஇடை
யினில் பீதாம்பர கடககங்கணகேயூர திவ்யாபரண
பூஷிதராகிவந்து சேவைதந்தார் அந்தவரிய சேவை
யைக்கண்டு சேவித்துப் போதலுபடேலுவெகுவாகப்
புகழ்ந்து ஓகருணைக்கடலே கார்மேனிவண்ணா கமலக்
கண்ணா அடியேன்பொருட்டுவாயிதாபணங்கொண்டு
வந்து அதிகாரியினிடங் கொடுத்து இவ்வேழையே
னுக்கு அவமானம் நேரிடாவண்ணங் கிருபைசெய்த
வராகனே சொல்லும் சுவாமியென அதற்குப் பக
வான் ஓஹரிபக்தரே அனைத்திலும்விரக்தரே வர்த்த
கன்தந்த நான்குவராகனும் உம்மிடமிருந்த மூன்று
வராகனுஞ்சேர்த்து ஏழுவராகனைக் கட்டினேனெ
ன்றுசொல்லி சாக்ஷாத் பாண்டுரங்கன் மாயமாய்
மறைந்துபோயினார்.

இந்தப்படிக்கிபகவான்சொல்லிப்போயினபின்பு
அந்தப் போதலுபடேலு கொல்லையிலிருக்கும் சோ
ளத்தட்டுகளை யறுக்கும்பொருட்டுச்சென்றுக் கொல்
லையைப் பார்க்கிறபோது அதில்சோளக்கதிர்கள் யா
வற்றிலும் பூர்த்தியாய் மஞ்சள் பிளந்தாற் போலக்
கதிர்கள் பெருத்தும் மணிகளும் பெருத்திருக்ககண்டு
அந்தபோதலுபடேனி இதுஹரியினுடைய செயலா
மென்றுக்கருதி அடங்காமகிழ்கொண்டு. சோளக்க
திர்களை யறுத்து அடித்து அளவுபோட ஒன்றுக்கு
நான்குபங்கு அதிகமாக உபரிகண்டபடியால் அச்
சோளங்கள் தன்கொட்டாய் நிறையவுங்கண்டு அந்த
போதலுபடேலு யிது ஸ்ரீஹரியின் கிருபையென்று
மனமகிழ்ந்து அந்தச்சோளதானியத்தை யெல்லாம்
பகவானுடைய பக்தர்களை அழைத்து கிருஷ்ணார்ப்ப
ணஞ்செய்து வெகுபிரியமாய் கொடுத்தார் அதை
யவர்களும் மெத்த சந்துஷ்டராய் பெற்றுக்கொண்டு
போய் மாவுகளாக்கி ரொட்டிசெய்து புசித்தார்கள்.
இங்கிப்படிக்கிருக்க தாமணகாமெனும் நகரத்திற்கு
அரைகாதவழி தூரத்திலிருக்கும் ராளேராசெனுங்
கிராமமொன்றுளது அவ்வூரிலிந்தப் போதலுபடே
லுக்கு அம்மான் வீடொன்றுண்டு அந்தஅம்மான்கால
கதியடைய அவருக்கு இரண்டுபுதல்வருண்டுஅவர்க
ளிருவரும் போதலுபடேலின் விஷயத்தில அலட்சிய
மாகவிருப்பவர்கள் ஏனெனில் இந்தபோதலுபடேலு
தன்சம்பாதனையை யெல்லாம் ஏழைப்பரதேசிகளுக்
கிட்டு தான்மெத்த ஏழையாய் விட்டப்படியினாலே

இவர்விஷயத்தில் அவர்களுக்கு மதிப்பு கிடையாது அப்படிப்பட்டவர்களை வேலைக்காரி ஹாஸிநியென்னு மவள் வெகுநாளாய் அவர்களை யடுத்துக்கொண்டும் பகவத்பக்தியிற் சிறந்துமிருந்தாள் அன்றியும் இம்மாது அப்பொழுதைக்கப்போது போதலுபடேலினிடம் வந்து போயிக்கொண் டிருப்பாள் ஏதுக்காகவெனில் ஸ்ரீஹரிகுணானுபவங்களை போதலுபடேலு சொல்லக் கேட்டுப் போயிக்கொண்டிருக்கையில் ஒருநாள் அம்மாது போதலுபடேலு திருவடிகளைவிடாமற் பிடித்துக்கொண்டு ஓசுவாமி பவக்கடலைக் கடப்பதற்கோருபாயஞ் சொல்லவேணுமென்றுவேண்டிக்கொள்ளக் கேட்டு போதலுபடேலு ஓஅம்மணீ தாசிஜெனங்களுக்கு உயர்ந்த நேமமேதுக்கு சம்சாரத்திற்குள்ளவேலைகளைச்செய்துக்கொண்டே ஜெகதீஸ்வரனை நன்றாகவென்றால் க்ஞானபக்தி வைராக்கியத்துடன்திரிகரணசுத்தியாய் தியானரனஞ் செய்துக்கொண்டும் பிரதிஏகாதசிக்கும் உபவாசமிருந்து இரவினிலரிகதைக் கேட்டும் துவாதசியில் பாரணை செய்துக்கொண்டு மிருப்பையாகில் விரைவினில் ஸ்ரீஹரியினுடையதிருவடிகளையடைவாயென்ற போதலுபடேலு மொழிகளைகேட்டுஅந்த ஹாஸினி தாசியானவள் இடைவிடாமல் சர்வதேச சர்வகால சர்வஅவஸ்தைகளிலும்ஸ்ரீபாண்டுரங்கநாதனைத் துதிசெய்தும் ஏகாதசியனுட்டித்தும் அன்றிரவில் போதலுபடேலு வீட்டையடைந்து கதையை செவியாரக்கேட்டு சுகமாயிருக்க ஆனந்தித்துக்கொண்டுபோவள் இப்படியம்மங்கை ஏகாதசிதோறும்இரவினில்வந்து போதலுபடேலு சொல்லும் அரிகதை குணானுபவங்களைக்கேட்டு ஆனந்தித்துப்போய்க்கொண்டிருக்கையில் இம்மங்கையுடன் இன்னுஞ்சிலபாகவதர்கள் வந்துகேட்டு ஆனந்தித்துப்போவார்கள் இப்படிக்குச்சில ஏகாதசிகள் கடந்துபோகையில் ஒரு ஏகாதசியினன்று ராளேராசெனுங் கிராமத்திலிருந்து வெகுஜெனங்கள் இரவினில்வந்துக் கொண்டிருக்கையில் ஒருமனிதனைப் பாம்புகடித்தது அதையறிந்து உடன்வந்தவர்கள் அவனையெடுத்துக் கொண்டுவந்து ஹரிகதை நடக்குமிடத்தினிற் பார்க்க அவனுக்குப் பிராணனில்லாம லிருப்பதை வெளிப்படுத்தாம லவனைச் சுவத்தினிற் சாத்திவைத்தார்கள் அப்போது போதலுபடேலு வந்தவர்களை யெல்லாம்மரியாதையுடன் அழைத்து உட்காரச்சொல்லி பலவிதங்களாக நாமமகுத்துவத்தை யெடுத்து வெகுநயமாகச் சொல்லிக்கொண்டே யாவரையும்நோக்கி நீங்க ளெல்லோரும் ராமாராமாயென்று சொல்லுங்களென்றுத் தான் னின்றுக்கொண்டு ஓஜெனங்களே இந்தத்தாரக நாமமாகிய ராமநாமத்தை மனோவாக்குகாயமெனும் திரிகரணசுத்தியாய் நாவாரச் சொல்லுவதினால் விஷங்களெல்லாம் அமிர்தமாகித் திரேகமெங்கும்பரவிபரமானந்தத்தை யுண்டாகச்செய்யும் அன்றியும் இதுதசதிசைகளெங்கும்வசிக்கும் பக்தர்களுடைய ஹிருதய கமலத்தினில் எழுந்தருளி தெரிசனமளிக்குமனுபவக் ஞானப் பிரியமாகும் மேலும் ஓஜெனங்களே விமலமாகியது இந்தராமநாமம் இதைபிரியத்துடன்சொன்னால் புனிதர்களாவார்கள் அன்றியும் க்ஷேமத்தையடைவார்கள் மேலுமிந்த நாமமானது மதுரங்களுக்குள்ளாக அமிர்தத்திற்காயினும் அதிகமதுரமாயிருக்கும் ஆகையாலிந்த ராமநாமத்தை வாக்கினால் சொல்லிக்கொண்டே கரங்களினால் தாளம் போடுங்களென க்கேட்டு அவர்கள் கரதாளத்துடன் ராமநாமத்தை வாக்கினாற் சொன்னார்கள்.

இவ்வண்ணம் அச்சபையிலுள்ள ஜெனங்களெல்லோருங் கரதாளத்துடன ஸ்ரீராமநாமத்தை வெகுப்பிரியமாகச்சொல்ல அதில்பாம்புகடித்திறந்தவன் கரத்தினால் தாளம்போடாமலும் வாக்கினால்நாமஞ் சொல்லாமலு மிருப்பதை போதலுபடேலு அறிந்து அவ்விறந்த மனிதனைநோக்கி ஓஐயா ஹரிநமக்கு மேன்மையான நரஜென்மங் கொடுத்திருந்தும் இந்தஜென்மமழிந்து போவதற்குமுன் ஸ்ரீராமநாமத்தைச் சொல்லி அவனுடையகிருபையைச்சம்பாதித்துக்கொள்ள வேணுமாகையால் தபவுசெய்து கரதாளத்துடன் வாக்கினால் ராமநாமத்தை யான்கேழ்க்கும்படி சொல்ல வேணுமென்று வேண்ட அப்போது ஸ்ரீஹரியானவர் பஜனையின் மதுரங்கெட்டுப் போகுமென்றுகருதிஇறந்துபோனவனுக்குப் பிராண னுண்டாகும்படிக் கிருபையுடன் அச்சுதாகிருஷ்ணா ஹரிராமாவென்றுஅவனைச்சொல்லும்படிச் செய்வித்தார் இதையந்தப் பிணத்தைச் சுமந்துக்கொண்டு வந்தவர்கள்கண்டு ஆஹா ஹா இதுவென்ன விந்தையிலும்விந்தையாயிருக்கின்றதென்று ஆச்சரியமுண்டாகி அவர்களெழுந்து போதலுபடேலுக்கு வந்தனந்தந்து ஓசுவாமி அதோ சுவத்திற் சார்ந்துக்கொண்டிருப்பவனை நாங்கள்வரும் மார்க்கத்தில் பாம்புகடித்திறந்துபோயினான் நாங்களவனையெடுத்துக் கொண்வெந்து உயிருட னிருப்பவனைப் போல இச்சுவத்தினிற் சாத்திவிட்டு பகவத்குணானுபவங்கேட்டுக் கொண்டிருக்கையி லிவனுக்குஉயிர்வந்து எங்களுடன் கரதாளத்துடன் நாமத்தைச்சொல்லக்கண்டோமென விண்டார்கள் அதைக்கேட்டு அச்சபையினிலுள்ளோர்களனைவரும் ஆனந்தம் பிரமானந்தம் பரமானந்தமென்றும் போதலுபடேலை வெகுவாகத் துதித்துக்கொண்டாடி மேலுமேலென்று சொ

ல்ல அப்போது போதலுபடேலு ஆனந்தக்கண்ணீரொழுக விட்டுக்கொண்டு ஓம்நமோநாராயணா நாரதபாராயணா சகலதோஷநிவாரணா சர்வபரிபூரணா ஜெகத்காரணா இம்மனிதனைப்பாம்புகடித்து மரணமடைந்தசெய்தி எனக்குத்தெரியாமுன்னமே இவனுக்குயிர்தந்து கடாக்ஷித்த எம்பெருமானே என்குலதெய்வமே நினக்குநிகரானவர்கள் யாரையா நிர்மலமான திருமேனி சங்காழிகையா என்று மரணமிலாத மெய்யா ஏழைகளைக்காக்குந் துய்யாயென்று நிர்மலமான மனதுடன் பக்திசெய்து மங்களாரத்திகள் கொடுத்துத்தொழுதார் இதைக்கண்ட ஹாவஸியென்னுந் தாசியானவள் போதலுபடேலுடைய மகுத்துவத்திற்கு மெச்சி மெத்தபிரியமுண்டாகி இதுவரையில்போதலுபடேலின் மீதிருந்த பிரியத்தைக்காட்டிலும் பிரியம் அதிகரித்து அவரைத்தனக்குக் குருநாதனாகப்பாவித்து நேசமும் விசுவாசமும் மேலிட்டுத் தினந்தோறும் வந்துத்தன் குருநாதராகிய போதலுபடேலைக் கண்டு சேவித்துப்போவள் இப்படிமூன்று வருடகாலங்கடந்தபின்பு அம்மாதின் எஜமான்களிருவரும் ஒருவருக்கொருவர் விரோதித்துக்கொண்டு பாகிக்கவும் விக்கிறயப்படுத்தவும் அவர்களெத்தனித் திருப்பதையும் அந்தஹாவஸியெனுந் தாசியானவளறிந்து இச்செய்தியை போதலுபடேலுக்குத் தெரியப் படுத்துகையில் கேட்டு அந்தபோதலுபடேலு ஓ ஹாவஸினிமுன்னஞ் செய்தகர்மமோ அல்லது துஷ்டக்கர்மமோ அதை யிந்த ஜென்மத்தினி லனுபவிக்காமல் விடமாட்டாது அப்படிக்கிருக்க நீஇதற்காகச் சிந்திக்கவேண்டியஅவசியமென்ன அன்றியும் சாக்ஷாத்பாண்டுரங்கன் சாகரத்தைப்போல விருக்க அதற்குள் நாமெல்லோரும் அலைகளைப்போலவும் இருந்தபோதிலும் அதுவுஞ்சலமே இதுவுஞ்சலமே ஆனபோதிலுஅந்தநீரைப்போல அபாரநீராகமாட்டாது நாம் அலைகளின்னீர்போலும் பகவான் கடல்நீரைப்போலவும் என்றும் இறப்புப்பிறப்பில்லாதவன் நாமோ அக்கடலின் அலைகளைப்போல இறப்பதும் பிறப்பதுமாகி கர்மங்களை யனுபவிக்கவேண்டியதே நித்ஸ்கரங்கக் கடலைப்போல பகவான் என்றுமழியாமல் பிறப்பில்லாமல் நீடூழியாக விருப்பவர் ஆகையால் ஓஹாவஸீனி கருமத்திற்குடையவர்கள் நாமேகருமங்களுக்குட்படாதவர் பகவானே ஆதலால் இந்தரகசியத்தை யறிந்துக்கொண்டு நடந்தால் நமக்குக்கெடுதி யாதொன்றுஞ் சம்பவிக்கமாட்டாது அன்றியுமிந்தனுட்பம் நன்றாகத்தெரிந்துக்கொண்டால் திரேகவியோகமானது நம்மையடிக்கடிபாதிக்கமாட்டாதுயென அதற்கந்த ஹாவஸீனி ஓசுவாமி அடியாளுக்கு நம்மைவிற்பனைசெய்து விடுகிறார்களே என்றசிந்தை எள்ளளவுமில்லை பின்னேதுக்கு நீதுக்கப்படுகிறதென்பீரேல் அன்னியர்களாருக்கேனுமென்னை விற்பனைசெய்தால் தேவரீரை அடிக்கடிக் கண்டு சேவிக்கமுடியாதே இதற்கென்ன செய்யப்போகிறேனென்றதுக்கமே என்னை பாதிக்கின்றதென்றாள்.

இந்தப்படி அந்தஹாவஸினியானவள் போதலுபடேலின் பிரிவாற்றாமல் இப்படியினில்மூர்ச்சையாகி விழுந்து உடனே தெளிந்துத்தடாலுமென்று மமதாயினிடஞ்சென்று இச்செய்தியை தெரியப்படுத்தி ஓ அம்மணி நீங்களென்னை விலைக்குவாங்கி யெனக்குநன்மைசெய்யுங்களென்று வேண்டிக்கொள்ள அதற்கம் மமதாயி தன்கணவராகிய போதலுபடேலை நோக்கி ஓபிராணநாயகரே இந்தஹாவஸினியெனுந் தாசியானவள் நம்மைவிடவேறு திக்கில்லையென்றும் நம்மையே நம்பியிருக்கின்றேனென்றும் நம்மை யடைந்திருக்க அம்மங்கையை எப்படியாகிலுங் காப்பாத்த வேணுமென்றும் இவளை யெத்தனை வராகனுக்கு க்கொள்ள நிச்சயிக்கின்றார்களோ அந்தத்தொகையை யான்கொடுக்கிறேனென்று அவளுக்குஅபயந்தந்துபோய்வரும்படி விடைதந்துஅனுப்ப அந்தஹாவஸினிதாசிமெத்த சந்தோஷமடைந்துத் தன்னூரை நாடிச்சென்று வீடு சேர்ந்திருந்தனள் பின்பு போதலுபடேலு ஒருநாள் மைத்துனர்களிடம் சென்று சொல்லுகின்றார் அப்பாமைத்துனர்களே உங்களிடமிருக்கும் ஹாவ்ஸினி என்னுந்தாசியை நீங்கள்விற்பனை செய்வதாய் கேழ்விப்பட்டு இங்குவந்தேன் அன்றியும் நீங்களேகிறயப்படுத்தி நீங்களே கிறயத்துக்குக் கொண்டாலுஞ் சரி அல்லது யெனக்குச் கிறயத்துக்குக் கொடுத்து விட்டாலும்சம்மதியே ஆகிலும்அவளுக்குக் கிறயமென்ன அதைச்சொல்லுங்களென அவர்கள்சொல்லியதாவது ஓ அத்தானே ஹாவஸினியெனுந் தாசியைப் பந்துவாகிய உமக்குக்கொடுக்கமாட்டோம் ஆகையால் இங்கு கணநேரமேனும் நிற்காதே வீட்டைவிட் டுவெளியே போமென்றுக்கடிந்து சொல்லக்கேட்டு ஹாவஸீனியழுகையில் போதலுபடேலு கண்டு ஓஹாவஸினி நீயழவேண்டாம் உன்னை ஸ்ரீஹரிபாண்டுரங்கனாலே அழைப்பித்துக்கொள்ளுகிறேன் விசனப்படாமலிருமென்று சொல்லி உடனே தன்வீட்டிற்குவந்து மனையாளைப் பார்த்துச்சொன்னார் அதென்னவெனில் அடிபெண்ணே மமதாயி அந்தஹாவஸினியை பந்துவாகிய எனக்கு விக்கிறயஞ்செய்ய மாட்டோ மென்றும் சிலகடுமொழிகளை அவர்களிருவரும் பகரக்கேட்டுஹாவஸினி யழுதுக்கொண்டிருந்தாள் அதைக்கேட்டுயான் அவளை பயப்படாமலிரு உன்னை ஸ்ரீஹரியினால் அழைப்பித்

துக்கொள்ளுகிறேன் என்றுசொல்லிவந்தேன் யென மமதாயிகேட்டு அம்மாதுக்குநான் அபயங்கொடுத்திருக்கின்றேனே இதற்கென்னசெய்வேன் ஸ்ரீகோபாலா தீனதயாளா ருக்குமணி மணாளா பங்கயமலர்த்தாளா கோபீஜனபாலா நற்குணங்களமைந்த சுசீலா என்னுடையசொல்லைப் பழுதுபோகாவண்ணங் காப்பாத்திரக்ஷிக்கவேணும் முன்னம் கௌரவர்கள்சபையினில் துர்ச்சாதனனால் இழுத்துவரப்பட்டு துகிலைக் களைகிறபோது முறையிட்ட துரோபதைக்கி மாளாத்துயிலளித்து மானபங்கம் நேரிடாவண்ணம் காப்பாத்தி ரட்சித்ததைப்போல இப்போதுஅடியாளுடைய அபயதாபனமாகிய சொல்லை சோர்வுபடாமல் அம்மாதைக் காப்பாத்தி யருளவேணுங் கருணாசாகரா யென்று முறையிட்டுக் கொண்டிருந்தனள் அங்கே ராளராசெனுங் கிராமத்தினில் போதலுபடேலுமைத்துனர்களிருவரும் அந்தநாளிலேயே வெளிகிராக்கிக் காரர்களை அழைத்து ஹாவினியை இருபதுவராகனுக்கு விற்பனைசெய்து அவ்விருபதுவராகனையும்மவர்கள்கைக்கொண்டு ஹாவினியைப் பிடித்துக் கொடுத்து கொண்டுபோங்களென்று சொல்ல அவர்களுமந்த ஹாவினியை யழைத்துக்கொண்டுபோய்தங்கள்வீட்டினிற் சேர்ந்தார்கள் அப்போதந்த ஹாவினியானவள்பட்டத் துயரத்தையென்னென்று சொல்லுவேன் ஆகிலும் என்மனதுக்கெட்டியவரையில் சொல்லுகின்றேன் அதெப்படியெனில் ஓ பாண்டவர்கள் சகாயா பக்தர்கள்நேயா காயாம்புமேனியை யுடையகாயா தேவர்களுக்குந் தேவனாகியதூயா இப்போதிந்த யேழையின்மீது கிருபைசெய்ய வேணுமென்றும் அன்றியுமினி யிங்கரைக்கணநேரத்திற்குள்வந்து யடியாளைக் காப்பாத்தினாலாயிற்று அப்படிக்கி வராவிடிலுன்மீது ஆணையிருக்கின்றது அன்றியும் அடியாளுக்கு நின்னரியசேவையைத் தராவிடில் விரைவினிற் பிராணனை விடுவேனென்றும் மேலும் யான்படுந்துக்கத்தை சகிக்கமாட்டாமல் எனதுபிரியமுள்ள குருநாதரும்மையனுப்புகிறேனென்று சொல்லிப்போகின வசனங்களைச் சத்தியவாக்காகக் காப்பாத்திரக்ஷியும் அச்சுதா கேசவா புருஷோத்தமா வாமனாயென்றுந் திரிகரணசுத்தியாய் துதிசெய்ய அம்முறையைக்கேட்டு ஸ்ரீஹரியானவர் பிராமண வடிவங்கொண்டு அங்குவரஹாவினியானவள்கண்டுஅடங்காசந்தோஷங்கொண்டுஅவர் திருவடித் தாமரைகளில் விழுந்து பணிந்தெழுந்து நிற்கக்கண்டு ஸ்ரீஹரியாகிய பிராமணர்சொல்லத்தொடங்கினர்.

ஓஹாவினி நீபயப்படவேண்டாம் உன்னை யிந்தக் கேவலர்களிடம்விட்டுச் சங்கடப்பட யான்கண்டு சகிக்கமாட்டேன் ஆகையால் நீ தைரியத்துடனிரும் அன்றியும்உன்னை போதலுபடேலு சீக்கிரம்வரச்சொன்னார்யென்று சொல்லி மாயாப்பிராமணனது திருவடிகளை அந்தஹாவினி பிடித்துக்கொண்டு விடாமலிருக்க அப்போது அங்குள்ளவர்களெல்லாம் பார்க்க இருவரும் மாயமாய் மறைநதுபோயினார்கள் அன்றியும் ஹாவினியின் புதல்வியும் அங்கில்லாமற் போனமாத்திரத்தில் ஹாவினியை விக்கிறயப்படுத்தினவர்கள் யாரோ அவர்களைவரவழைத்து வர்த்தகர் இவர்களிருவருமெங்கே காணோமே இதுவென்ன மாயம் நடந்தசெய்திபை•ஒளியாமற் சொல்லுங்களென அதற்கவர்கள் இதுவென்னஅக்கிரமமென்றும் இச்செய்தி எங்களுக்குத்தெரியாதென்றும்சொல்லினர்கள் அதைக்கேட்டு அந்த வர்த்தகர் விக்கிறயஞ் செய்தவர்களை நோக்கி அந்ததாசியின்பொருட்டு நாங்கள்கொடுத்த இருபதுவராகனையுங் கொடுங்களென்று நிர்ப்பந்திக்க அவர்கள் ஓவர்த்தகர்களேயாங்கள் இருபதுவராகன்களைப் பெற்றுக்கொண்டு உடனேயந்ததாசியைப்பிடித்துமதுகையிற் கொடுத்தோம் அவளை நீங்கள் பத்திரப்படுத்திக் கொள்ளமாட்டாமல் விட்டுவிட்டு இப்போதெங்களைப் பிடித்துக்கொண்டு அந்ததாசியைக் கொண்டுவந்து ஒப்பித்தாலாயிற்று இல்லாவிடில் அவளுக்காககட்டினஇருபதுவராகன்களைக்கொண்டுவந்து கட்டுங்களென்று இப்படிக்கெங்களை அலட்டுவது ஞாயமோ இதுவென்ன உபாயமோ அல்லது போதலுபடேலு செய்தமாயமோ இல்லாவிடிலந்தப் பிராமணன்செய்த அனியாயமோ இதுவெங்களுக்குண்டாக வேண்டிய அபாயமோவென்று நிஷ்டூரவார்த்தைகள் புகன்று மேலும் சொல்லுகிறார்கள் ஐயாவர்த்தகரே நீர்விரைவாக யந்தப்போதலு படேலிடஞ் சென்றுக் கேளுமென அதற்குவர்த்தகர் நீர்சொல்லுவதுமெத்த நன்றாயிருக்கின்றது நெருப்பைப்போல இருபதுவராகன்களை உம்மிடத்திற் கொடுத்துவிட்டு அவ்வரசனுக்குறிய தாசியை யொப்புக்கொடுமென்று கேட்டால் அந்ததாசியைப் பிடித்துவந்து ஒப்பிக்காமல்போதலுபடேலைப்போய் கேளுமென்று சொல்லுவது நீதியோ அப்படி நானந்தப்போதலுபடேலிடம் போகவேண்டிய அவசியமில்லை நான்கொடுத்த இருபதுவராகனையுஞ் சீக்கிரங்கொடுங்களென்று வெகுதொந்திரவுசெய்கிறபோது ஸ்ரீஹரிபாண்டுரங்க விடலனானவர் இங்கே நடக்குங்கலகங்களையும் இனிமேல் நடக்கப்போகிற கலகங்களையுந் தெரிந்து அந்தஹாவினிமீதுமெத்தக் கிருபையுடையவராகி உடனே ஹாவினியெனுந் தாசிக்கு ஸ்ரீவைகுந்தபதவியை யளித்தார் அவளும் மெத்தசந்தோஷம் மெத்த சந்தோஷமென்று ஹரியை

வெகுவாகக் கொண்டாடிப் பாடிக்கொண்டேசென்று இனியொருவராலே நிர்மிக்கப்படாததாகியும் சத்தியமாகியும் நித்தியசூரிகள் வசிப்பதாகியும் விளங்கும் ஸ்ரீவைகுந்தமா னகரத்தை யடைந்து மறுபிறப்பில்லாமல் நித்திய சூரிகளுடன்கலந்து பரமபதநாதனைச் சேவித்துக்கொண்டு பரமானந்த மடைந்திருந்தனன்.

இவ்வாறு ஹரியின் கிருபையால் ஹாவினியெனுந் தாசியானவள் வைகுந்தபதவியை யடைந்த விருத்தாந்தத்தைப் போதலுபடேலு ஸ்ரீஹரியினால் சொல்லக்கேட்டு மெத்தசந்துஷ்டராயினார் இவர்மனையாளாகிய மமதாயியும் ஹாவினி வைகுந்தத்தை யடைந்த சவிஸ்தாரத்தையறிந்து ஆனந்தித்து யிருந்தனள் இப்படிக்கிருக்கிறபோது சண்டாளனொருவன் போதலுபடேலிடம்வந்து பணிந்து ஒசுவாமி இந்த நீச்சக்குலத்திற்பிறந்த பஞ்சமனிவனென்றெண்ணி யடியேனைக் கைசோரவிடாமல் என்மீதுக் கிருபைசெய்துத் தாங்களெனக் குபதேசஞ்செய்ய வேணுமென்று வேண்டிக்கொண்டான் அப்படிக்கித்தன்னை வேண்டிக்கொள்ளும் பஞ்சமனைநோக்கி யந்தபோதலுபடேலு சொல்லுகின்றார் கேளுமப்பா தீண்டப்படாத குலத்தினிலுதித்தவனே சாக்ஷாத்பாண்டுரங்கநாதன் எனக்கு யெல்லா அனுகூலமுஞ்செய்தும் சொல்லியுமிருக்கின்றார் உன்னைப்போல மெத்த ஆர்த்தியாகவந் தடுப்பவர்களுக்கு உபதேசஞ் செய்யும்படி எனக்குக்கட்டளையிடவில்லை ஆகையால் இந்தவிஷயத்தைப்பற்றிப் பாண்டுரங்கநாதனைக் கேட்டுத் தெரியப்படுத்துகிறேனென அதற்கவன் மகாபாக்கிய மென்று சொல்லிப் போயினான் பிறகு போதலுபடேலு ஸ்ரீபாண்டுரங்கனை வெகுவாகத்துதிசெய்ய அத்துதிக்கிமகிழ்ந்து ஸ்ரீபாண்டுரங்கன் எழுந்தருளி சேவைதர அச்சேவையினிலீடுபட்டு அந்தப்போதலுபடேலுபஞ்சமனுடைய விண்ணப்பத்தைத் தெரியப்படுத்தினார் அதைக் கேட்டு ஸ்ரீபாண்டுரங்கன் ஒபக்தசீலனே இவ்வுலகத்தின்கண் மாயாசம்பந்தராகி அக்ஞானபரிபூரண ராகித் திரியும் துஷ்டர்களுக்கு உபதேசஞ்செய்யக் கூடாது அதிலு மிவன்குலத்தில்பஞ்சமனாகயிருக்கின்றான் இவனுடைய நடவடிக்கைகளாகிலும் நல்நடவடிக்கையாயிருக்குமென்று யோசித்தாலோ இவன்நடப்பதெல்லாங் கெட்டநடவடிக்கையே இப்படிப்பட்ட துஷ்டனுக்கு உபதேசஞ்செய்யும்ஆசானும்செய்யச் சொல்லி நேமிக்குமவர்களும் மீளாநரகத்தை யடைவார்களென்று தருமசாஸ்திர முறையிடுகின்றன அன்றியும்பனிரெண்டுவருடஞ் சோதித்து உத்தமகுணத்தை வகித்தவனாகவிருக்கில் அவனுக்குபதேசஞ் செய்யும்படி நீதிசாஸ்திர முறையிடுகின்றது ஆகையால்இவன்துஷ்டனென்றுப் பிரசித்தியாகத் தெரிந்தும் மனசாக்ஷிக்கு விரோதமாக இவனுக்குபதேசஞ் செய்யத்தகாது ஆகிலு மிதற்கொருதந்திரஞ் சொல்லுகின்றேன் அந்தப்படி யவனைக்கொண்டு செய்வியும் அதற்கவன் உடன்பட்டு அவன்குலத்தை யனுசரித்துநமக்குக்கீழ்ப்பட்டிருப்பானாகில் உபதேசஞ்செய்யும் அப்படிக்குடன்படாமல் மீறிநடப்பனேயாகி லவனுக்கு உபதேசஞ்செய்யவேண்டாமென அதற்குப்போதலுபடேலு ஒசுவாமி அவனைச் சோதனைசெய்யுந் தந்திரமெப்படியென ஸ்ரீபாண்டுரங்கன் ஒபக்தசிகாமணியே அந்தப் பஞ்சமன் நாளையதின முன்னிடம்வருவான் அவனைக் கண்டு வயலுக்குப்பூசைபோடு மன்னாளில் அவ்வயலுக்கொரு ரிஷபத்தை பொலிகொடுத்து அதின் மாங்கிசத்தைச் சுத்திப்படுத்திக்கொண்டுவந்து யென்னிடங் கொடுப்பையாகில் யானதைச்சமைத்து யெங்கள்பந்துக்களுக்குப் போஜனஞ் செய்வித்துப் பின்புனக்கு உபதேசஞ்செய்கிறேனென்றும் அன்னியிலும் அந்த ரிஷபத்தின்சிரசையும் அதின்கால்களையும் பத்திரப்படுத்தி வையுமென்றும் ரிஷபத்தின்மாங்கிசஞ் சமைத்துப் பந்துக்களுக்குயான் விருந்துசெய்வதை அன்னியர்களுக்குச் சொல்லாமலிருக்கு ம்படியுஞ் சொல்லும் அதையவன் கோபித்தப் படுத்துமிடத்தில் அவனுக்குபதேசஞ்செய்யும் அப்படிக்கிராமலவன் மர்மத்தை வெளிப்படுத்துவனேயாகில் உபதேசஞ் செய்ய வேண்டாமென்று சொல்லிய ஸ்ரீபாண்டுரங்கன் மொழிகளைக்கேட்டு அந்தப் போதலுபடேலு. ஒசுவாமி ஒருஜெந்துவைக் கொல்லும்படியானகர்மமெனக்கிஷ்டமில்லையென அதற்கு ஸ்ரீபாண்டுரங்கன் நீரேன் சந்தேகப்படுகின்றீர் உமக்கதினால் யாதொருகஷ்டமும் நேரிடமாட்டாது ஆகையால் சந்தேகமில்லாமற்செய்யும் யென்று சொல்லிப் பாண்டுரங்கன் மறைந்து போயினார்.

இவ்வண்ணம் ஸ்ரீபாண்டுரங்கன் போதலுபடேலுக்குச்சொல்லி மறைந்துபோயின பிறகு மறுநாள் அந்தபோதலுபடேலினிடத்திற்குப் பஞ்சமன்வந்து பணிந்து ஒசுவாமி எனக்குசீக்கிரம் உபதேசஞ்செய்ய வேணுமென்று வேண்ட அதற்குப் போதலுபடேலு அவனைநோக்கி அப்பா அனுமிகா நின்வயலுக்கு பூசைபோடுகிற அன்னாளில் எருதொன்றை அவ்வயலுக்குப் பலிகொடுத்து அதின்சிரசையுங் காலையும்பத்திரமாக (ஒளித்துவைத்து மைத்தமாங்கிசங்களை யெல்லாம் நன்றாகச் சுத்தப்படுத்தி யென்னிடங் கொடுத்தால் நானதைச்சமைந்து என்பந்துக்களுக்கு விருந்

திட்டுப்பிரகு உனக்குபதேசஞ் செய்கிறேன் அன்றி
யும் நானிந்த எருதுமாங்கிசத்தைச் சமைத்துவிருந்து
செய்வித்தேனென்று நீயெங்கும் வெளிப்படுத்தாமலி
ருமென அதற்கவனு மொத்துக்கொண்டு மகாபாக்கி
யமென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்று
சிலநாள் கடத்திக்கொண்டிருக்கையில் அந்தஅனுமிக
னுடைய வயல்களெல்லாம் நன்றாய்ப்பழுத்து அரவ
டைக்குத் தயாராகவிருப்பதை யறிந்து போதலுப
டேலுக்கறிவித்துச் சென்று வயலுக்குப்பூசை போடு
கிறபோது எருதொன்றைப் பிடித்துவந்து அப்பூசை
க்குறிய தேவ்தைக்குப் பலிகொடுத்து அதின்சிரசை
யுங் கால்களையும் பத்திரப்படுத்தி மைத்த மாங்கிசத்
தைச்சமைத்து அன்னமுதலான அறுசுவைகளுஞ்சித்
தப்படுத்திப் பந்துக்களை யழைப்பித்துஅ வர்களுக்கு
ப்போஜனங்கள் பரிமாரி யாவரும்புசித்தப் பின்னர்
சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளையீந்து அவரவர்கள் தங்
கடங்கள் வீட்டையடைந்திருக்க அந்தஅனுமிகன்மறு
நாள் சுதந்திரப்பட்டவனாகி அதிக கெர்வமடைந்துக்
குடிகள்வீட்டிற்குள் புகுந்துநடுகூடத்துக்குச் சென்று
உட்கார்ந்திருக்க அக்குடிகளிவனைக்கண்டு அடாதுஷ்
டா ஏண்டாயெங்கள் வீட்டிற்குள்ளேன்வந்தா யென்
றுவின அதற்கவன் உங்களுக்குமெனக்கு முண்டான
பேதமென்ன பேதமில்லாததினாலேயே உங்கள்வீட்
டிற்கு வந்தேனென்றான் அதற்கவர்கள் எங்களுக்கு
முன்க்கும் பேதமில்லையென்றெப்படி தெரிந்துக்கொ
ண்டு இங்குவந்து உட்கார்ந்தாயென அதற்கவன்நேத்
தியதினம் யானொருரிஷபத்தை வயல்பூசைக்கிப் பலி
யிட்டு அதின் மாங்கிசங்களைப் போதலுபடேலிடம்
யான்கொடுத்தேன் அந்தமாங்கிசத்தைச் சமைத்துப்
போதலுபடேலுங்களுக்கு விருந்துசெய்ய அந்தவிருந்
திற்கு நீங்கள்சென்று அந்தரிஷபத்தின்மாங்கிசத்தை
ப்புசித்தபடியினாலே உங்களுக்கு மெனக்கும்பேதமி
ல்லையென்று தெரிந்துக்கொண்ட படியினாலேயே உங்
கள் வீட்டிற்குவந்து உட்காரும்படியானதிடமுண்டா
யிற்றென்று சொல்லியபின்னுஞ் சொல்லத்தொடங்கி
னான் நேத்தியதினம் அன்றியுமுன்னாளையதினம் என்
னை நீங்கள்கண்டால் எட்டி தூரத்தேபோடா யென்
றீர்களே இன்றப்படி யென்னைசொல்லுவதா லுங்களு
க்குப் பாபமுண்டாகுமென் றிந்தப்படி அந்தபஞ்ச
மன் ஒவ்வொரு குடியானவன் வீட்டிற்குஞ் சென்று
சொல்லிக்கொண்டு வருகையில் குடிகளெல்லாமொன்
றுகூடி அதிககோபங் கொண்டவர்களாகி ஜாதிபிரஷ்
டமுண்டாயிற்றென்றும் இதுவென்ன அனியாயம்பர
யன் நமது வீட்டிற்குள்வந்து உட்காருகிற தென்றால்
இனியென்னஇருக்கிறது மேல்வரப்பு கீழ்வரப்பு எப்
போதப்பிப் போயிற்றே அப்போதேயெல்லாச் சில
மும்போய் பரையரோடு பரையராக வேண்டியதே
இதைப்பத்தி இனியோசிப்பதில் பிரயோஜனமில்லை
ஆகிலும் இதின்மர்மத்தைத் தீரவிசாரிக்க வேணுமெ
ன்றுக்கருதி அந்தஅனுமிகனை யழைத்து அடாதுஷ்
டா மாட்டிரைச்சியை நாங்கள் புசித்தபடியினாலே
யெங்களையு முன்னோடு பரயனைச்சேர்த்துக்கொண்டு
எங்கள்வீட்டிற்கு பந்துவாகிவந்து நடுவீட்டினில் உட்
கார்ந்துக் கொண்டாய் அதிருக்கட்டும் எங்களுக்காக
நீபலிகொடுத்த எருதின்தலையும்கால்களும்தோலுமெ
ங்கே அதைக்காட்டுமென அதற்குஅனுமிகன் அதுக
ளெடுத்துப் பத்திரப்படுத்திவைத்திருக்கின்றேன்அப்
படியே உங்களுக்குக் காட்டுகிறேன் என்றமாத்திரத்
தில் அக்குடிகள் அவசரக்காரனுக்குப் புத்திமட்டெ
ன்பதுபோல நிதானிக்காமல் நீதியற்றவனாகிய அந்த
போதலுபடேலை கொன்றுவிட வேணுமென்று கரு
திச் சோளக்கொல்லையினிடம் அவரைத்தேடி கரத்தி
லே தடியைப்பிடித்துக் கொண்டுவந்து பார்க்கையில
வர் குடிசைக்குள் பாண்டுரங்கனை தியானித்திருக்கக்
கண்டு சிலர் அவரைவெளிக்கிக் கொண்டுவாருங்களெ
ன்றார்கள் அதைக்கேட்டவர் வைராக்கியத்துடன்வெ
ளிக்கிவருகையில் அவரைக்கண்டு டக்குடமரகக் கார
னாகிக் குலநாசஞ்செய்வித்தபாவி உனக்குத்தக்க சிட்
சை வெகுவாகச் செய்விக்கிறோமென்று மேல்விழுந்து
அடிக்க முயலுகிறபோது போதலுபடேலு ஸ்ரீஹரி
பாண்டுரங்கா பவபங்கா சற்சங்கா மங்களாங்காயெ
ன்று பகவானுடைய நாமத்தைச்சொல்லியமாத்திரத்
தில் அடிக்கவந்தவர்க ளெல்லாருக்குங் கோபந்தணி
ந்து அந்தஅனுமிகனைநோக்கி அடாதுஷ்டா எருகின்
தலையுங் கால்களும்தோலும் எடுத்துவைத்திருக்கிறே
னென்று முன்னம்நீசொன்னாயல்லவா யெதோஅதை
க்கொண்டுவா பார்ப்போமென அந்தஅனுமிகனும்
இதோகொண்டு வருகிறேன் பாருங்களென்றுவிரைந்
தோடிச்சென்று சிரசும்கால்களும் தோலும் வைத்தி
ருந்த இடத்திலிருந்திழுத்து வெளிப்படுத்திப் பார்க்க
அவைகள்சிரசும் அதின்கால்களும் மேற்போர்வையா
னதோலும் வெள்ளாட்டி னுருவமாக விருக்கக்கண்டு
வெகுவிதமாகச் சிந்தைநொந்து விசனப்பட்டுக் கொ
ண்டிருந்து சற்றுநேரங் கடந்தபின்பு மேலுஞ் சொல்
லத் தொடங்கினான்.

அதென்னவெனில்யான் எருதைக்கொன்றிருக்க
இதென்ன விந்தையாயிற்று இந்தஆடுஎப்படி இங்கு
வந்தது இதையோசிக்கையில் சித்திரத்திலும் விசித்
திரமாக விருக்கின்றதென்று பிரமை கொண்டிருக்க

அப்போதுகுடிகள் போதலுபடேலை நோக்கி ஓஐயாயுமதெருதைக் காணோமே அதைக்கொண்டுவந்து காட்டுமென்றுசொல்ல அதற்கு போதலுபடேலு பகவானைக்குறித்து சிந்தனைசெய்துக்கொண்டிருக்க உடனே சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் இறந்து போயின எருதைப் பிழைக்கச்செய்தமாத்திரத்தில் அவ்வெருதைக் கண்ட பந்துக்களெல்லாம் சேர்ந்து அனுமிகனுக்குத் தக்கதண்டனை செய்யவேணுமென றுலோசித்திருக்கையிலவனும் போதலுபடேலின் திருவடிகளில் விழுந்து ஓசுவாமி என்னுடைய அபசாரத்தை க்ஷமித்து ரக்ஷிக்கவேணுமென்று வேண்டிக்கொள்ள அந்தப் போதலுபடேலு கிராமஸ்தர்களை நோக்கி இவன்செய்த குற்றத்தை மன்னித்துக் காப்பாத்துங்களென்று பலதரஞ்சொல்லியும் இவனைக்கொல்லவேண்டாமென்றுப் பிரியவசனங்களால் பிரார்த்தித்தார் அதற்கவர்கள் அவனைமன்னித்து இனியிந்தபக்கந் தலைகாட்டாதே யென்றுசொல்லி யோட்டினார்கள் அவனுங்கெட்டேன் பிழைத்தேனென்று சொல்லிக்கொண்டே தன்னுடைய சேரியை நாடியோடிப் போயினான் பின் பொருசமயத்தில் மழைபெய்யாமல் தண்ணீரின்றி விசேஷித்த விளைவுகளில்லாம லிருக்கையில் பட்டணங்கள் கிராமங்கள் முதலானவிடங்களிலும் வசிக்குங் குடிகள் மெத்தக்கஷ்டமடைந்து எருதுஆடுமுதலானதுகளுங் குடிப்பதற்குத் தண்ணீரில்லாமல் இனியெப்படி பிழைக்கப் போகிறோம் என்று விசனப்பட்டுக் கொண்டிருக்கையில்.

பகவானுடைய கிருபையினால் கார்த்திகைமாதம்முதலில் மழைபெய்ய அவ்வூராருடன் தானும் உலவுமுதலானதுகளுஞ் செய்து இந்தபோதலு படேலு விரைவிரைப்பதற்கு வேகமாய் விரைதானியமெடுத்துக் கொண்டுவந்து விரைக்கப்போகுஞ் சமயத்தில் பண்டரியாத்திரை வாசிகளாய் சிலஜெனங்கள் பாண்டுரங்கா பக்தசங்கா மோகனங்கா தயாந்தரங்கா வென்று பகவந்நாமத் தியானஞ்செய்துக்கொண்டு அம்மார்க்கமாய்வந்து போதலுபடேலையும் அவர் கொண்டுவரும் விரைதானியத்தையுங்கண்டு பூரணப்பிரியத்துடன் அங்குநின்று பஜனைசெய் திருந்தார்கள் அவர்களைப் போதலுபடேலுகண்டு விரைந்தோடிச் சென்று அவர்களுக்குத் தீர்க்கதெண்டனிட்டெழுந்துநின்று அவர்களைநோக்கி ஐயாபரமசாதுக்களே இம்மார்க்கமாக யெங்குபோகுறீர்களென அதற்கவர்கள் பண்டரியாத்திரை செய்யப்போகிறோமென்றும் முன்ன்ம்வந்த க்ஷாமத்தினில் அழைத்தழைத்து அன்னமிட்டதாதா நீரல்லவோ இப்போதொருவேளை அன்னங்கொடுத்துப் புசிக்கச்செய்தால் மெத்தவும்நன்றென்றார்கள் இதைக்கேட்டு போதலுபடேலு தன்புதல்வனை ஏகாந்தமாகவழைத்து அடாமகனே அழகான முகனே இதோயிருக்குமிந்த விரைதானியத்தை விட வீட்டில் வேறெந்ததானியமுமில்லையல்லவா நீயுன்மனதினில் வேறொன்றுங் கருதாமலும் பதிலொன்றுஞ் சொல்லாமலும் இந்த விரைதானியத்தை வீட்டிற்குக் கொண்டுபோய் எந்திரத்திற் போட்டு மாவரைத்து அந்தமாவை கிருஷ்ணார்ப்பணஞ்செய்து இவர்களுக்குக்கொடும் அப்படிநீ இவர்களுக்கந்தமாவைக் கொடுப்பதினாலே இவர்களந்த மாவைத்தின்றுப்சிதீர்ந்தால் இவர்களு தாமகுத்துவத்தினால் கணக்கிட்டுச் சொல்ல முடியாத தானியம் நமக்குண்டாகுவது மன்றியும் விரைவிரைக்காத நமதுவயலுந் தனக்குத்தானேமுளையெழுந்துசெழித்துத் தழைத்தும்பலித்தும் பழுத்தும் அளவுகடந்ததானியம் நமக்குப்பலிதமாகும்படி பகவான் கிருபை செய்வாரென்று சொல்லப் புதல்வன் மறுவார்த்தைசொல்லாமல் (தந்தைசொன்மிக்க மந்திரமில்லை) யென்ற ஔவையின் மொழிப்படி அந்த சுதன்தந்தையின் சொல்லை வேதமந்திரமாகக் கருதி அந்தவிரைதானிய மூட்டையை யெடுத்துக்கொண்டு சென்று வீட்டையடைந்துத் தன்மனையாளையழைத்து அடிபெண்ணே இந்ததானியத்தைசீக்கிரம்மாவரைத்துக் கொடுமென்று சொல்ல அவ்வுத்தமியும் கொழுநன் உத்திரவின்படி. அத்தானியத்தை எந்திரத்திற் போட்டு அரைக்கணத்தில் மாவாக்கி அம்மாவைஒரு பாத்திரத்திற்கொட்டி யதைத்தன் பிராணநாதரிடங் கொடுக்க அவருமதைப் பெற்றுக்கொண்டு விரைந்தோடிச்சென்று பண்டரியாத்திரை வாசிகளைக்கண்டு கிருஷ்ணார்ப்பணஞ்செய்து அம்மாவைக்கொடுத்தார் அவர்களுமதைப் பெற்றுக்கொண்டு போய்வருகிறோமென்றுசொல்லி மெத்தசந்துஷ்டராய் ரொட்டிகள் செய்துப் புசித்து ஆனந்தமாக பஜனைசெய்துக் கொண்டு போயினார்கள்.

இவர்களிப்படி பண்டரியைநோக்கிச்சென்றபிறகு போதலுபடேலு உழவுசெய்திருக்கும் நிலத்தில் விரைவிரைப்பதற்கில்லாமல் கோதுமைவிளைந்துஅறுவடைசெய்த கோதுமைத் தாள்களை யந்நிலத்தினில் முழுமையும்நட்டு வெகுபத்திரமாய் அந்தவயலைக்காத்துக் கொண்டிருந்தார் இவரிப்படியிருக்க நிலத்தினில் நட்ட கோதுமைத்தாள்கள், கிளைத்துத்தழைத்து செழித்துவருவதை அன்னியர்கள்கண்டு சிறித்துப் போதலுபடேலை பரிகசித்தார்கள் இதிலொரு துஷ்டன்

அதிலொருகாயையறுத்து அதையடித்துப் பார்க்கிற போது அதில்கோதுமைமணிகள் கூடியிருக்கக்கண்டு சிலர் இதென்னவிந்தையென்று கொண்டாடினார்கள் இதைக்கண்டு ஹவல்தாரொருவன் இந்த விந்தையை நவாப்புக்கெழுதினன் இதைவாசித்து செய்தியையுணர்ந்து அந்தப்பட்டணத்தை யாளும் நவாப்புமெத்தக் கோபங்கொண்டு கெர்வமதிகரித்து ஐந்துஜவான்களை யனுப்பி போதலுபடேலைக் கைப்பிடியாப்பிடித்துக் கொண்டுவரும்படிக் கட்டளையிட்டான் அந்தப்படியே ஜவான்கள்வந்து போதலுபடேலைப் பிடித்தபிடிவிடாமற் கொண்டுபோய் நவாப்புக்கெதிரில் நிறுத்தினார்கள் அப்படித்தன்னை நிறுத்தினமாத்திரத்தில் போதலுபடேலு நவாப்பைக்கண்டு சலாஞ்செய்தார் அதற்கந்தநவாப்பு இவர்விஷயத்தில் மதிப்பின்றிபதில்சலாஞ்செய்யாமற் தானெனுங் கெர்வங் கொண்டவனாகி ஒபோதலுபடேலு சோளத்தட்டி னிடமாக கோதுமைமணிகள் யெப்படிசேர்ந்த தெவ்வண்ண மென அதற்கு போதலுபடேலு ஒபாதுஷாவேயதுபண்டரிநாதருடைய பிரபலமானசெய்கை யென்றமாத்திரத்தில்அந்தவற்பனைகேட்டநவாப்புஇவரைத்துக்கனைகசெய்ய வெண்ணங்கொண்டு எருதின் பச்சை மாங்கிசத்தைத்தருவித்து ஒபோதலுபடேல் இதைப்புசியுமையாவென்று நிர்ப்பந்தித்தான் உடனே யந்தமாங்கிசமானது பகவானுடைய கிருபையினல் யாவும்புஷ்பங்களாகி ஏர்ப்பட்டன இதைக்கண்டு அந்தநவாப்பு இவருக்குப் பலசலாஞ்செய்து ஒஉத்தமசீலனே உனக்கென்னவேண்டுமோ அதைக்கேளும் தருகிறேனென ஒபாச்சாவே யெனக்கெந்த அபேக்ஷையுமில்லை யென்று சொல்லிக்கொண்டே திரும்பி தன்னுடைய கிராமத்தையடைந்து ஸ்ரீஹரியைப் பஜனைசெய்துகொண்டு அகம்மகாரங்களைப் பற்றறுத்தெரிந்துபகவானுடைய சரித்திரங்களினல் தன்னூரைப் பண்டரிபுரத்தைப் போலச் செய்துக்கொண்டும் ஜடர்களையும் மூடர்களையும் பகவானுடைய பக்திசெய்யும்படித்திரித்திப் பரிசுத்தாத்துமாக்க ளாகும்படிக்கிருபை புரிந்துத் தானுஞ் சிலவருஷகாலம் அனேகசீடர்களுடன்வசித்திருந்து முடிவினில் நிரசதியானந்த ஸ்ரீமுக்தி பதவியையடைந்தார்.

வாழிவிருத்தம்.

சாதனச்சதுஷ்டயங்கள் சார்ந்திருந்தோன்வாழியே
பூதலத்தில்புண்ணியங்கள் பொருந்திசெய்தோன்வாழியே
மாதவத்தோர்போற்றிடுமா மகுத்துவத்தோன்வாழியே
போதலுபடேலுதம் பொற்பதங்கள்வாழியே.

போதலுபடேலுசரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீ மத்

மிருத்யுஞ்ஜெயன் சரித்திரம்.

துதிவிருத்தம்.

சாந்தசமதமாதிஷட் குணத்திற்றேர்ந்தவே
தாந்தசாஸ்திரபுராண மேதாவியுமானநீதி
வேந்தனபிதருநகர் விமலமாயாண்டசீலன்
சாந்தப்பிரம்மணிசரண் சார்ந்தென்றுமுய்புவோமே.

கதையின் வரலாறு.

பிதருயெனும் பட்டணத்தை யாளுஞ்சீலன் அதிக பக்தியிற் சிறந்தமூலன் பட்டணத்திலுள்ள குடிகளுக்கெல்லாம் அனுகூலன் வெகுநீதியாக அரசுபுரியுந்தயாளன் ஏழையெளியவர்கள் மீது கிருபாவிசாலன் துலுக்கர்குலத்தினிற் பிறந்தவன் சாந்தப்பிரம்மணியெனும் நாமமுடையவன் இத்தியாதி நற்குணங்களும் நற்செய்கைகளும்இடைநடுவினிலுண்டாயினதே அன்றிப் பாலியம் முதலிக்குண முண்டாயினதல்ல ஆனால்பாலியம் முதலிவர்க்குண்டாயின குணமென்னவெனில் இவ்வரசனுடையகுலம் துலுக்கர்குல மானதால் ஆதியிலிவன் துடுக்குத்தனமே செய்துகொண்டிருந்தான் அதென்ன துடுக்குவேலைகளென்றால் இவன் காலையிலெழுந்துத் தூண்டிக்கோல் எடுத்துச் சென்று மடுவினிலோ அல்லது குளத்தினிலோ குட்டையினிலோ கோதுமைமாவைத் தூண்டிமுள்ளின் முனையினிற் பொருந்தவைத்து அதைப்போட்டு மோசஞ்செய்து மீன்களைப்பிடித்துச் சமைத்து அதின்மாம்சங்களைத்தின்று ருசிகண்டு அதனால்திரேகம் பெருக்கச்செய்துக் கொண்டிருந்தான் இப்படியனேகநாள்கடத்திக் கொண்டிருக்கையில் ஒருநாளிந்த மிருத்யுஞ்ஜெயன் தூண்டிமுள் ளெடுத்துக்கொண்டுவேட்டைக்குச் சென்று மடுவின்கரைமீதுட்கார்ந்துத் தூண்டிப்போட்டுக் கொண்டிருக்கையில் திரேகம்யேதோ ஒருவாக்காகவர அக்கரையின்மீது படுத்துத் தன்னைமறந்து நித்திரைபோயினான் அப்போதங்கிருந்தமூங்கிற்புதரிலிருந்தொரு சர்ப்பமானது ஓடிவந்து மடுக்கரையின்

மீதுபடுத்து நித்திரைசெய்யும் மிருத்யுஞ்ஜெயன் அருகினில்வந்து அவன்முகத்தில் சூரியக்கிரணம்படவொட்டாமல் தன்னுடைய படத்தை விரித்துக் குடையைப்போல பிடித்துக்கொண்டிருந்ததுஇப்படிக்கிருக்கிறபோது அங்கொருகீரிப்பிள்ளையும் மயிலும்வரக்கண்டு அப்பாம்புச்சீறிசீறிச் சிறிதேனும்பயமின்றி யிருக்கக்கண்டு கீரிபிள்ளையானது அப்பாம்பின்னருகிற் சென்றுப் பாம்பைக்கடிக்க முயலுவதையறிந்தப் பாம்பு அதிககோபத்தோடு புஸ் புஸ்ஸென்றுசீறி ஆரவாரஞ் செய்ய அந்தஓசையினால் மிருத்யுஞ்ஜெயன் விழித்துக்கொண்டு தன்னருகினில் பாம்புங்கீரிப்பிள்ளையும்சண்டைக்குப் பிரயத்தினஞ்செய்துக்கொண்டிருப்பதைக் கண்டு இந்தசமயத்தில் பாம்புக்கு வைரியாயிருக்குங் கீரிப்பிள்ளையைக்கொன்றாலிப்பாம்பு உயிர்பெற்றுலாவும் இல்லாவிடிலக் கீரிப்பிள்ளைப் பாம்பைக் கண்டங்கண்டமாகவுந் துண்டந் துண்டமாகவுங் கத்திரித்துக் கொன்றுவிடுமே இதற்கென்னசெய்கிறதுமேலும்மயிலொன்று வந்திருக்கின்றதே இதைககொன்றாலும்பாவம் அதைக்கொன்றாலும் பாவம் இவ்விரெண்டிற்கும் இடைநடுவிலிருக்கும் பாம்பைக் கொன்றாலும் பாவமென்றாலோசித்துக் கொண்டிருக்கிற போது நல்லபாம்பானது மிருத்தியுஞ்ஜெயன் உடுத்திக்கொண்டிருக்கும் நிஜாருக்குள்புகுந்துக்கொண்டது அதையறிந்துக் கீரிப்பிள்ளையும் மயிலும் மிருத்தியுஞ்செயனருகில்வந்து எங்களுக்கு விரோதியாகியப்பாம்பைவெகுநாளாய்க் கொன்றுவிட வேணுமென்றுக் கருதிச் சமயம் பார்த்துக்கொண் டிருந்தோம் இன்றயதினம் தக்கப்படி நேரிட்டும் என்னுடைய யெண்ணம் பலிக்காமற்போயிற்று ஆகிலும்நீறந்தப்பாம்பைப்பிடித்தென்முன்விடுகிறையா அல்லது உன்முன் என்பிராணனைவிடட்டுமா என்றகீரிப்பிள்ளையைநோக்கி மிருத்தியுஞ்ஜெயன் சொல்லத்தொடங்கினான்.

கேளும் ஓகீரிப்பிள்ளையே உலகத்தினி லெப்படிப்பட்ட துஷ்டனா யிருந்த போதிலும் அவன் தன்னுடையரோஷமுங் கோபமும்விட்டு நான் அவமானத்தைக்கருதாமல் சரணாகதியடைந்திருக்க அவனைக்காப்பாத்தாமல் அனாதரணைசெய்து எதிரியினிடம்பிடித்துக் கொடுத்துவிட்டால் அதைவிடவேறு பாவமுமுண்டோ அந்தப்பாவத்தினால் ரௌரவாதி நரகத்தையடையாமல் தப்புவதுமுண்டோ ஆகையால் இந்தச் சர்ப்பமொன்றுதவிர மைத்தெதுகேட்கினும் கொடுப்பேனே அன்றிப்பாம்பைக் கொடுக்க மாட்டேன் என்று வெகுதிடமாக மொழியும் மிருத்யுஞ்செயன் மொழியைக்கேட்டு அந்தக் கீரிப்பிள்ளை யானது ஓஐயா தூண்டிக்காரரே இதுபரியந்தம் நீர்பாவஞ்செய்யாமலேயே புண்ணியத்தையே சம்பாதித்துக்கொண்டிருக்கின்றீரோ நீர் இதுபரியந்தஞ் செயதிருக்கும் பாவத்தின்கணக்கை இவ்வளவுதான்யென்றுசொல்ல என்னால்தரமாமோ இந்தப்படிநீர் செய்திருக்கிறபாபத்தை நன்றாயோசித்துப் பாராமல் புண்ணியஞ் செய்தவர்களு மிப்படிச்சொல்லமாட்டார்களே ஆகையால் வீணிலேன் யெங்களைப் பரிசோதிக்கின்றாய் எண்காதம்போனாலும் தன்பாவம் தன்னோடே என்றநீதிவசனத்திற்கிணங்க உன்னைவிட்டு அப்பாவங்கள் விலகினதல்ல அன்றியும் இப்பாம்பைவெளியில் விடாமல் எத்தனைநாளைக்குக் காப்பாத்தப்போறீர் இப்போதுவீட்டிற்குப் போகப்போரீரே அங்கேயும் இப்பாம்பைக் கொண்டுபோவீரோ கொண்டுபோ யென்னலாபம் பெறப்போகுறீர் பாம்பையெடுத்துவெளியில்விட்டுச் சுகமடையு மையாவென்று நயபயமாகப் புகன்ற கீரியின் சொல்லைக்கேட்டு அந்தமிருத்யுஞ்செயன் கடுங்கோபங்கொண்டு ஓகீரிப்பிள்ளையே இனியிங்குநின்று பற்பலவாறு பேசவேண்டாம் உன்னுயிர் தப்பித்துக் கொள்ளவேணுமென்றால் சீக்கிரம் இவ்விடம் விட்டு ஓடிப்போ யில்லாவிடின் பிராணனை அரைக்கணத்தினிற் போக்குவேன் என்னுயிர்நீங்கினு மிப்பாம்பையெடுத்து யுன்முன்விட மாட்டேனென்று திடமொழி கூறக்கேட்டு அக்கீரிப்பிள்ளை மெத்தவிசனத்துடன்விடம்விட்டுப் போயிற்று உடனேமயிலானதுமிருத்யுஞ்செயனருகில்வந்து ஓஐயா தூண்டில்முள்போடுமவரே போகட்டும் வெகுமச்சங்களைப் பதைக்கப் பதைக்கப் பிடித்துக் கொன்றுதின்று தேகங்கொழுக்கச் செய்யும் கொடியபாவியாகிய உமக்குப் புண்ணியமென்பதெப்படி சித்திக்கும் அப்புண்ணியபலத்தினால் சொர்க்காதிபோகத்தை யனுபவிக்கலாமென்று வெகுசந்துஷ்டரா யிருக்கின்றீரோ அந்தபோகத்தை நீரடைவீரென்பது கனவிலுமில்லை இதையுணராமல் இந்தப் பாம்பைக் காப்பாற்றியா நீர்புண்ணியஞ் சம்பாதிக்கப்போகின்றீர் இந்தயெண்ணங் கிஞ்சித்தேனும் பலிக்கப்போகின்றதில்லைஇதை நன்றாகயோசித்து உம்மிடமிருக்கும் பாம்பை வெளியில்விடுத்து அதையெனக்காகாரமாகக் கொடுத்துப் புண்ணியத்தை சேகரஞ்செய்துக்கொள்ளு மையாவென்ற மயிலின் மொழிகளைக்கேட்டு அந்தமிருத்யுஞ்ஜெயன் மயிலைநோக்கி ஓசிகியே நீஎத்தனைவிதத்தில் என்னையிழிவாகப்பேசினபோதிலும் அதற்காகயான் கோவிப்பதுமில்லை பயப்படுவதுமில்லை யிதையுறுதி வாக்கியமென்று நம்பி மறுத்தொன்றும் பேசாமல் மரியாதையாக இவ்விடத்தைவிட்டு உன்னிருப்பிடத்திற்குப் போகக்கடவாய்

மேலும நீயேதேடுதோ சொல்லுவதால் அதற்குயானுட்பட்டு இப்பாம்பை உனக்காகாரமாகும்படி விடுப்பேனென்று நீ எள்ளளவும் நினைக்கவேண்டாம் என்னைச்சரணுகதியடைந்த பாம்பையுனக் காகாரமாகக்கொடுத்தால் எனக்குப்பாவம் வந்தணுகுமே யல்லாமல் புண்ணியமென்பதெப்படி யெனக்குண்டாகும் நீ சொல்லுவது மெத்தநன்ருகவிருக்கின்றது போபோ பதிலொன்றும் பேசாதே என்னுயிர் நீங்கும்பரியந்தம் பாம்பைவிடுப்பேனென்று யோசிக்கவேண்டாம் இதைத்திண்ணமென்று கருதிச்சீக்கிரம் உன்னிருப்பிடத்தை நாடியோடி பிழைக்கும்வகையைத் தேடிக்கொள் இல்லாவிடிலுன்னை யிப்போதே க்ஷணநேரத்திற்குள்ளாக மடித்துவிடுவேன்என்றுவெகுகடுமையாகப்பேசினுன் அதைக்கேட்டந்த மயிலானது மிருத்யுஞ்ஜெயனைவெகுவாக தூஷித்துக்கொண்டே போயிற்று அப்படிதன்னை தூஷித்துக்கொண்டு மயிலானது போயின சிறிதுநேரங்கடந்தபின் அந்தமிருத்யுஞ்ஜெயன் வெகுசந்தோஷத்துடன் தன்சராயிக்குள் புகுந்துக் கொண்டிருக்கும் சர்ப்பத்தை வெளிப்படுத்திய போது உடனே அப்பாம்பானது தன்னுருவத்தைப் போக்கிப் பிராமணவடிவங்கொண்டுமிருத்யுஞ்ஜெயன் யெதிரில்நின்று ஓபுண்ணியபுருடரே எனக்கு சிலவுகொடும் நான்போய்வருகிறேன் எனஅதற்கு மிருத்தியுஞ்ஜெயன் மெத்தவாச்சரியப்பட்டு ஓசுவாமி பிராமணசிரேஷ்டரே முன்னம் நீங்கள் பாம்பின்வடிவமாயிருந்தத் தாங்கள் இப்போது பிராமணவடிவங் கொண்ட காரணம்யாதோ அதைத்தெரியப் படுத்தவேணும் யென்றுசொல்லிப் பணிந்தான் அப்படிபணிந்த மிருத்யுஞ்ஜெயனை யந்தப்பிராமணன் ஆசீர்வதித்துக் சொல்லத் தொடங்கினுர்

கேளுமையா மிருத்யுஞ்செயனே முன்ஜென்மத்தில் யான்பிராமணன் என்பேர் விட்டலன் என்தாய் தந்தையர்களிடங் கலகப்பட்டு நான்வீட்டை விட்டு வெளிப்பட்டு வெகுதேசங்களையெல்லாந்திரிந்துக்கொண்டே ஒருநாட்டிற்குள் புகுந்துபோகிறபோது அங்கொருமலையைக்கண்டு அம்மலையின்மீதேரிப்போகையில் குகையொன்று காணப்பட்டது அக்குகைக்குள் புகுந்து சிலதூரம்நடந்தும் சிலதூரம் புட்டத்தினுல் நகர்ந்தும் சிலதூரம்பாம்பைப்போல உளர்ந்தும்போகிறபோது அங்கொருவெளி காணப்பட்டது அதையுங்கடந்துபோகையில் அருமையாகியும் அடர்ந்த சோலையொன்று தோன்றியது அதின்அலங்காரத்தைச்சொல்லமுடியாது அப்படிப்பட்ட அடர்ந்தசோலையைக் கடந்துபோகையில் அங்கொருநிர்மலமானபூமியின்மீது புலியாசனம்பரப்பி 'யதின்மீதுட்கார்ந்துத் தவசுசெய்துக்கொண்டே ஒருவரிருந்தார் அவரருகிற்சென்று விழுந்துபணிந்து எழுந்து சென்னியின்மீது கரங்களை குவித்துக்கொண்டு பலவாறு புகழ்ந்துக்கொண்டு வெகுநேரம்நின்றிருந்தும் அவர்கண்களைத் திரவாமலுந் திரேகத்தை யசைக்காமலும் வெகுதிடமாகத் தவசுபுரிந்துக்கொண்டிருந்தார் அதையறிந்துயான் இவரெத்தனை நாளைக்கொருதரங் கண்களைத்திறப்பவரோ தெரியவில்லையேயென்று அவர்கண்களைத்திரக்கும்பரியந்தம் அவ்விடத்தை இம்படியு மப்படியும்போகாமல் வெகுஜாக்கிரதையாகக் காத்திருந்தேன் அப்படிக்கிக் காத்துக்கொண்டு ஒருமாதபரியந்தமிருந்தும் அவர்கண்களைத்திரவாமலிருந்தார் இவரிப்படிக்கிருக்கையில் யானிந்த ஒருமாதகாலமாய் நித்திரையாகாரமில்லாத கஷ்டத்தினுல் ஒருநாளிரவில்என்னைமறந்து நித்திரை போய்விட்டேன் அன்றிரவிலவரெப்போகண்கள் திரந்தாரோ எக்குளத்தில் ஸ்னுனஞ்செய்தாரோ எக்கனிகளையோ அல்லது கந்தமூலபலன்களோ புசித்து மருபடியும் தவத்திலிருந்தார் அதெப்படி நித்திரைசெய்துக் கொண்டிருந்த எனக்குத்தெரிந்ததென்றுல் வைகரையில்நித்திரைதெளிந்து எழுந்துநான் பார்க்கிறபோது அங்கே கந்தமூலபலாதிகளும் சிலகனிவர்க்கங்களும் அங்கிருந்தது அன்றியும் சுரமாகியகௌபீனமும் உலரப்போட் டிருந்தது இந்ததிருஷ்டாந்திரத்தினுலே அத்தவசி கண்களைத்திறந்து எழுந்தசெய்தி தெரிந்துக் கொண்டேன் இப்படி யிரண்டுமூன்றுகாலமுந் தவரிப்போயினபடியால் மெத்தவிசனப்பட்டுக் கொண்டிருந்து நான்காவது மாதத்தில் வெகுஜாக்கிரதையாக விருந்துக் கண்களைவிழிக்கப்பார்த்து அவர்திருவடிகளில்விழுந்துப் பணிந்து யெழுந்திராமற் கிடக்கையில் அவர்யெனக்காசிகூறி யெழுந்திருக்கச்சொல்லி என்னுடைய க்ஷேமங்களைவிசாரித்து மனம்பூரித்து திரேகம்பாரித்து என்னையுந்தன்னுடன ழைத்துச்சென்றுவிமலமானசரசையடைந்துஸ்னுநட்டானங்களைமுடித்துக்கொண்டுபழயபடி தவமியற்றுமிடத்தை யடைந்து அங்குயாரோ கொண்டுவந்து வைத்திருக்கும் கந்தமூலபலாதிகளைப் புசித்து சேஷத்தை எனக்கீந்து ஜலமருந்தி என்னைப் பார்த்து நீஇங்கெப்படிவந்தாய் வந்ததற்கு என்னைக் கண்டுபணிந்து என்னுடனுண்டாய் இனியுனக்கிங்கிருக்க யிஷ்டமா அல்லதுபோவதற்கிஷ்டமா சீக்கிரஞ்சொல்லுமென அதற்குயான் ஓசுவாமி சகலத்தையும் ஒழித்துவிட்டு திவ்யதேசயாத்திரைகள் செய்துக்கொண்டு தக்கஆசானைக்கண்டு உபதேசம் செய்துக்கொள்ளவேணுமென்று கருதிக்கொண்டே வருகையில் இக்

ஞகைகாணப்பட்டது யானுமிதற்குள் ளுட்கார்ந்தும் படுத்தும் இக்குகையைக் கடந்துவந்து தங்களைக்கண்டும் நான்குமாதமாகக்காத்துக்கொண்டிருந்து இன்று தினந் தங்களைப்பணிந்தேன் இந்தகஷ்டம் எளிதானதோ இத்தனைகஷ்டப்பட்டுத் தங்களைத்தெரிசித்தஇவ்வேழையேனுக்குக் கிருபாகடாக்ஷஞ்செய்து உபதேசிக்கவேணுமென்று வேண்டிக்கொள்ள அதற்கத்தவசி ஒய்பிராமணா உலகத்தினில் ஒவ்வொருவரும் ஆசானருள் பெறவேண்டிப் பனிரெண்டு வருடகாலம் தொண்டுகள் புரிந்திருந்தும் அவர்களுக்கு ஆசானது கிருபையு முபதேசமுங் கிடைக்காமல் மெத்தவருத்தப்பட்டுக்கொண்டு மறுபடியும் உபதேசியும் சுவாமியென்று கேட்டால் என்னசொல்லுவாரோவென்றுப் பயந்துத் தொண்டுசெய்துக் கொண்டிருக்க நான்கு மாதகாலமாய் காத்துக்கொண்டு மெத்தக்கஷ்டப்பட்டேன் இப்படிபட்டகஷ்டம் எப்போதும்பட்டதில்லையென்றும் சீக்கிரம் உபதேசஞ் செய்யவேண்டுமென்றுஞ் சிறிதேனும் பயமின்றிப் பேசத்தொடங்கினாய் ஆகிலும் தீவிரதாரனாகை விருக்கின்றாய் இப்படிக்கிநீயிருந்தபோதிலும் பனிரெண்டு வருடகாலம் உன்னைசோதனைசெய்யாமல் யானுனக்குபதேசஞ் செய்யமாட்டேனென்று சொல்லக்கேட்டு உடனேயவர் திருவடிகளில் விழுந்துயான் யெழுந்திராமலவர் திருவடியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விடாமல் ஒசுவாமி தேவரீரையன்றி வேறுகெதியில்லாத இவன்மீதுக்கிருபையின்றி பனிரெண்டுவருடஞ் சோதித்தப் பின்பே உத்தமமத்திப அதமனென்பதையறிந்து உத்தமனாகைவிருக்கும்பக்ஷத்தில் உபதேசஞ்செய்வேன் மத்திபன் அதமனாகிலுபதேசஞ் செய்யேன் என்றால் யெப்படியான் கடத்தேறுவது தாங்கள்சொல்லிய பனிரெண்டு வருடம்வரையி லிக்காயம் நிலைத்திருக்குமென்று எப்படிநம்புகிறது திரேகமோ நீர்மேற்குமிழி நிலையற்றக்காயம் கண்களைமூடினால்மரணம் மருபடியுந்திறந்தால் ஜெனனம் ஆகையால் ஒருநிமைக்கோட்டுவதிற் குள்ளாக ஜெனனமரணமிருப்பதால் இந்தஜென்ம மிருக்கிறபோதே பகவானுடைய அருளைப்பெறவேணுமே அப்படிக்கித் துறைப்பட்டு பகவானுடைய அருளைப்பெராமல் பனிரெண்டுவருடம்வரைக்கும் யான்காலம் போக்கிக்கொண்டிருப்பது தகுதியோ ஒசுவாமிசீக்கிரம் இப்பாமரன்மீது கிருபைபுரியவேணும் என்றும் பலதரம்பணிந்து வேண்டிக்கொண்டும் அத்தவசிக்கு மனமுருகாமல் என்னை பார்த்து ஒய்பிராமணா சாஸ்திரத்திற்கு விரோதமாய் நடக்கயென்னாலாகாதுஇனியிவ்விடத்தைவிட்டு சீக்கிரம் உபதேசஞ்செய்யும்ஆசானைத்தேடிப் போமென்று சொல்லித்தவத்தினி லுட்கார்ந்து கண்களைமூடிச்கொண்டார் உடனேஎனக்கு அவ்விடத்தைவிட்டு வெளியில்வருவதற்கு யோசனையுண்டாகி வந்தவழியைத் தேடித்தேடித் திரிந்தும் வேசாரி வழியகப்படாமல் இதற்குநானென்ன செய்வேன் இங்கிருந்துப் பனிரெண்டு வருடகாலம் யெப்படியுய்வேன் ஒதெய்வமே என்னையிப்படியுஞ்சோதிக்கலாமோஇதினாலுனக்கென்ன லாபமுண்டாமோஎன்றுப் பலவாறு முறையிட்டழுகிறபோது அங்கிருக்குஞ்சோலையிலிருந்து ஆகாயத்தையளாவியஸ்தூலதிரேகத்துடனும் நீண்டகைகளும் கருத்தனிறமும் வாச்சிகளைப்போன்ற பற்களும் முரத்தைப்போன்ற செவிகளும் குகையைப்போன்றமூக்கும் அக்கினியைப்போன்றகண்களும் அச்சோலையை யொற்ற விசாலமான மார்புங் கோரைப்பற்களும் பொருந்திய ஒருபூதமானது வெளிப்பட்டுவந்து என்னைநோக்கி யாரடா ஒ பிராமணா இந்தமனிதசஞ்சார மில்லாமல் தனித்து ஏகாந்தமாய்ப் பரமசிவத்துக் கொப்பாகிய உத்தமசீலர் தவசுபுரியு மிவ்விடத்திற்குவந்துசுகமாயிருந்துக்கொண்டு பனிரெண்டு வருடகாலத்தைப் போக்கிச்சந்தோஷமாய்க் குருவுபதேசம் பெற்றுக்கொண்டு கட்டைக் கடத்தேறும் வழியைக்கருதாமல் வீணாகைச்கொண்டு அதமனாகிய நீதீவிரப்பட்டால் பேரின்பவாழ்வு உனக்குக்கிட்டுமோ உன்கைக்கொட்டுமோ முடவனுக்குக் கொம்புத்தேன் யெட்டுமோ மிருதரித்திரனுக்குத் தனப்புதையல் கிட்டுமோ கிட்டாததுபோல பூர்வஜென்மபுண்ணியமில்லாதஉனக்குப்பரமகுருநாதனுடைய உபதேசமுங் கிருபையுமுண்டாகுமோ போபோ குணங்கெட்ட பிராமணா இனியிங்கிருந்துக்கொண்டு இப்படிப்பட்ட ரோதனப்பண்ணாதே என்னுடைய சொல்லைத்தட்டிமறுபடியும் இங்கேதாகிலும் ரோதனம்பண்ணுவாயாகில் உன்னைத்தூக்கிக் கடலுக்கப்பால் விழும்படி எறிவேனென்று சொல்லி அப்பூதமானது மறைந்துபோயிற்று.

அப்போதெனக் குண்டான பயத்தை யென்னென்றுசொல்லுவேன் அந்தபூதத்தைப் பார்த்தமாத்திரத்தில் மெய்நடுங்கிக் கையுங்காலுஞ் சோர்ந்து பிராணன் போயிற்றென்று சொல்லும்படியாகப் பூமியின் மீது ஸ்மாரகங்கெட்டு விழுந்துக்கிடந்தேன் உடனே தெளிந்தும் அப்பூதத்தின்உருவத்தைநினைக்கநினைக்க முன்போலவே பூமியின்மீது ஸ்மாரகந்தப்பி விழுந்து கிடக்கிறதும் மறுபடியுந்தெளிகிறதுமாக அன்றெல்லாமிருந்து மறுநாள்முதல் சிறிதுச்சிறிதாய்ப் பயம் நீங்கித் திடமுண்டாகி அக்குகையைவிட்டு வெளிவருவதற்கு வழிதெரியாமல்தேனில்விழுந்தஈயைப்போல

மனக்கவலை கொண்டிருந்து நாளைப்போக்கிக் கொண்டுவர ஒருமாதமாயினவுடனே அத்தவசிக் கண்களைத் திறந்துபார்த்து என்மீது தயவுடையவராகி ஓய்பிராமணா என்பின்னேவாரும் என்றழைத்துச் சென்று முன்னம் போனக்குளத்தினையடைந்து ஸ்னாநுட்டானங்களைமுடித்துப் பழையபடித் தவநிலையைசேர்ந்து கந்தமூலபலாதிகளைப் புசித்து ஜலமருந்தி அத்தவசி என்னைநோக்கி ஓபிராமணா நீஉண்மையிலேயே ஆசானையடைந்து உபதேசம்பெற்றுக்கொண்டுஅந்தப்படி நடந்து பேரின்பத்தை யடையவேணுமென்ற திடமுனக்கிருக்கும்பக்ஷத்தில் என்னுடைய சொரூபத்திலேயே மனதைநாட்டி சஞ்சலத்தையோட்டி மனம்வாக்குக் காயமென்னு மிம்மூன்றையு மொருமிக்கக் கூட்டிப் பிரமசொரூபத்தின் திருவடியைச் சிரசினிற் சூட்டிக்கொண் டிருப்பையாகி லுனக்கு க்ஞானபக்திவைராக்கிய மென்மேலும் அதிகரித்துப் பரமானந்தமேலிட்டு அவ்வானந்தத்தில் சொக்கிக்கொண் டிருப்பையாகில் சிலமாதங்களிலுனக்குபதேசஞ் செய்கிறேனென்றுசொல்லிக் கண்களைமூடித் தவத்தினி லயித்துயிருந்தார் இவ்வண்ணஞ்சொல்லித் தவசித்தவத்தி லிருக்கையில் எனக்கு அத்தவசி யுரைத்ததைப்போல யானும் அவர் திருவடிகளின்மீது மனதைப் பொருந்தவைத்துத் துதிசெய்துக்கொண்டு வருகையில் எனக்குண்டாகிய க்ஞானபக்தி வைராக்கியத்தை யென்னென்று சொல்லுவேன் நிஸ்தரங்கக்கடலைப் போலவும் என்னுடைய மனமானதுருவிந்து அந்தத் தவசியின் திருவடிகளில் தானேலயித்திருக்கையில் ஒருமாதங்கடந்தவுடன் வழக்கப்படி தவசிகண்களைத்திறந்து முன்போலவே யென்னை யழைத்துச்சென்று தடாகத்திலிரங்கி ஸ்னாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டுப் பழையபடித் தவநிலைக்குவந்து கந்தமூலபலங்களைப்புசித்துத் தண்ணீரருந்தி யிளைப்பாரி என்னை நோக்கி ஓய்பிராமணரேயான்சொல்லியபடிக்கிசொரூபத்தினில் மனதைப் பொருந்தவைத்து அதனாலுண்டாகும் பரமானந்தமடைந்துக் கொண்டிருக்கின்றீரா அதனிலயித்துக் காலத்தைப்போக்குகின்றீராஎன்று விசாரித்து இந்தமாதத்தையும் கஷ்டத்தோடு கஷ்டமாய் நடத்திவிடுவீரேயாகில் மேல்மாதத்தி லுமக்குபதேசஞ் செய்கிறேனென்று சொல்லிக் கண்களைமூடிகொண்டு தவத்திலிருந்தார் யானும் அவர்சொற்படி அம்மாதமுழுமையும் அவர்திருவடித் தாமரைகளில் மனதைப் பொருந்தவைத்து அதினாலுண்டாகும் ஆனந்தத்திற்சொக்கி யிருக்கையில் அம்மாதமும் பூர்ணமாகி அந்ததவசி கண்களைத் திறந்து வழக்கப்படி யென்னை யழைத்துச் சென்று ஸ்னாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தவநிலைக்குவந்து கந்தமூலபலாதிகளைப்புசித்து ஜலமருந்தி எனக்கும் மிச்சமாகியசேஷத்தையீந்து அதையான்புசித்துத் தண்ணீரருந்தினபின்பு என்னையருகினிலழைத்து ஒக்காத்திக்கொண்டு தாரகபோஷக போக்கியதையாகிய மந்திரமாகும்ஸ்ரீராமநாமத்தை யுபதேசஞ்செய்து அதின்மர்மத்தைச் சொல்லத் தொடங்கினார்.

கேளும் பிராமணோத்தமனே அன்பர்களதுமனதில் ரமிப்பவராகிய ஸ்ரீராமருடைய நாமதேயத்தின் பலனையுரைக்க வெகுவிரிவாகும் அதேதெனில்ராவென்பதால் சகலபாபங்களையும் வெளிப்படுத்தும்மாவென்பதால் வெளிப்பட்ட பாவங்கள் தன்னையடையாமல் நிக்கிரகிக்கும் அதற்கு திருஷ்டாந்தம் ராவென்றால் வாய்திறக்கும் மாவென்றால் வாய்மூடுவதேயாம் மேலும் ரா-ஆதிசிவன் மா-ஆதிசத்தி ரா-பரப்பிரமம் மா-சிற்சத்தி ரா-ஆத்மா ரா-சீவன் ராவென்றால்பரப்பிரமத்தைத் துதித்ததாகும் மாவென்றால் மும்மூர்த்திகளை மனனம்பண்ணதாகும் ராவென்றால் பாபங்களணுகாது ராமாவென்றால் ஏமன் நடுங்குவான் ராமாவென்றால் ஏமபாசந்துகளாகும் ராமாவென்றால் நரகவேதனை நீங்கிப்போம் ராமாவென்றால் குஷ்டமுதலானவியாதிகளகன்றுபோம் ராமாவென்றால் வறுமைசிறுமைநீங்கி அஷ்டைஸ்வரியமுமுண்டாகும் ராமாவென்றால் கோரியகோரிக்கைகளெல்லாம் பலிதமாகும் ராமாவென்றால் பிரமஹத்திமுதலான சகலபாபங்களும் நீங்கி மோட்சசாம்பிராச்சியத்தையடையலாம் ராமாவென்றால் ஆயுள்விருத்தியும் சகலவித்தைகளும்கரதலாமலகம்போல விளங்கும்ராமாயென்பதே தாரகமந்திரம் ராமாயென்பதே சகலகர்மங்களையும்ஒட்டும்யந்திரம் ராமாவென்பதேமோக்ஷமடையுந்தந்திரம் ராமாவென்பதேஅண்டசராசரங்களிலும் நிறைந்திருக்கும் நிரந்தரம்என்று சொல்லி அஸ்தமஸ்தக வியோகங்களைத் தெரியப்படுத்தி பிராமணோத்தமரே இனியுமதிஷ்டப்படிக்கி யெங்காகிலுஞ் செல்லலாமென்று விடைகொடுச்க யானும் அவருக்குச்சாஷ்டாங்க தெண்டனிட்டு வெகுவாகத்துதித்து விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு வெளிப்பட்டு விரைவினிற் குகையினிற்சென்றுப்பாம்பைப்போலச் சிறிதுதூரமும் புட்டத்தால்நகர்ந்துச் சிறிதுதூரமுங் கடந்து அக்குகையைவிட்டு வெளிப்பட்டுவெகுதூரம் நடந்துப் பழயபடிக்கி என்னூரையடைந்து வீட்டிற்குப்போயினேன் என்னைப்பார்த்தமாத்திரத்தில்தாய் தந்தையர்கள் கட்டித்தழுவி அடாஎங்கள் கண்மணியே இத்தனைநாளாய் எங்குபோயிருந்தாய் எங்களை

விட்டு இத்தனைநாளாய் எப்படியிருந்தாயப்பா என்று
உச்சிமுகந்து முத்தந்தந்தும் பலவாறுப் புகழ்ந்தே
த்தி எனக்கு ஸ்னானஞ்செய்வித்து மடிவஸ்திரமீந்து
யான் பூசைமுதலானதும் முடித்துக்கொண்டு வருவ
தற்குள் அறுசுவையன்னம் பரிமாரிட யானங்குசெ
ன்று புசித்து திருப்தியடைந்து மார்க்காயாசந் தீரும்
படிபடுத்து நித்திரைசெய்து எழுந்து உட்கார்ந்திருக்
கிறபோது அவ்வூரார் ஒவ்வொருவராய்வந்து என்
னைப்பார்த்து இத்தனைநாளெங்கு போயிருந்தீரென்று
வினவி இனியாகிலும் ஊரைவிட்டெங்கும் போகா
மல் இருப்பீரா மறுபடியும் போவீராஎன்று விசாரிக்
கையில் அவர்களைநோக்கியான் சொல்லியதென்னவெ
னில் ஐயாபெரியோர்களே உரியோர்களே நேசர்க
ளே விசுவாசர்களே கேளுங்கள் நாட்டிலிருந்தாலுங்
காட்டிலிருந்தாலும் ஒன்றே அதெப்படியெனில் சகல
த்தையும் வெருத்துத்துரவரியாகியஎன்னைப்போலொ
த்தவர்களுக்கு வீடுங்காடுமொன்றே இதில்பேதங்கி
டையாது சகலத்திலும் ஆசையுடைய உங்களைப்போ
லொத்தவர்களுக்கு நாடென்றுங் காடென்றும் பேத
முளது அபேதமுண்டாயின போதன்றோ பிரமக்ஞா
னமுண்டாகும் பிர்மக்ஞான முண்டாயின போதே
பிரமத்தினிற்கலந்தவனாகித் தானேபிரமசொரூபனாகி
ன்றான் பேதமனமுண்டானவர்களுக்கு பிர்மக்ஞான
முண்டாவதரிது மைத்ததுகளும் அப்படியே அரிதாகி
மாயாசம்பந்தம் விடாமல்வெகுஜென்மங்களெடுத்துப்
பிறந்துபிறந்து இறந்திறந்து கடலினலைகளைப் போல
ஓயாத ஜென்மங்க ளெடுப்பதேதுக்கு அதனால் துக்க
மே அன்றிச்சுகமென்ப தெள்ளளவுமில்லை மேலும்
பாபமே அன்றிப் புண்ணியமில்லை ஜென்மமில்லாத
யோதன்றோ புண்ணியமதிகரித் திருக்கும் அடிக்கடி
ஜென்மம் வந்துக்கொண்டே யிருக்கில் பாபமதிகரித்
தேயிருக்கும் ஆகையால் இல்லறத்தைவிட்டுத்துறவரி
யாகி ஒரேயிடத்தில் நிர்க்காமலும் சஞ்சரித்து ஆசா
னையடுத்து உபதேசம்பெற்று ஆத்துமக்ஞான சம்பூர்
த்தியாகி அந்தவனுபவத்திலேயே காலத்தைப்போக்
கிக்கொண்டிருந்தால் சீக்கிரகாலத்திலேதானே மோ
க்ஷமடையலாமென்றும் யான்சொல்லியபோது அவர்
களிலொருவன் என்னைநோக்கி அடா பிராமணப்பய
லே! நாங்களுன்னைக்கண்டு விசாரித்துப் போகலாமெ
ன்று வந்து ஏதோசிலமொழிகள் பகர்ந்தால் அதற்கு
த்தக்கபதில் சொல்லாமல் ஏதேதோ வாயில்வந்தபடி
யெல்லாம் ஞானவானைப்போல பேசுகின்றாய் ஞான
மார்க்கந்தெரிந்த என்னைப்போ லொற்றவன்கூட இப்
படிப்பேசுவதுகடினமாகும் அப்படிக்கிருக்கநீபேசிய
மார்க்கங்களை யோசித்துப்பார்க்கையில் எல்லாந்தெ
ரிந்த யோகபுருஷனைப்போல் பேசுகின்றாய் இனிஎப்
போதிக்கும் எம்போலியர்முன்னம் பேசவேண்டாம
என்றமாத்திரத்தி லெனக்குச் கோபமுண்டாகி இந்த
உலகத்தினில் மாயாசம்பந்தத்தில் மூழ்கினவர்களாகி
அற்பவாழ்வை நித்தியமென்றுக்கருதி ஆசைமேலிட்டு
நிரையத்துக்குள்ளாகு மவர்களிடம் பேசுவது தகா
தென்றுசொல்லி உடனேபுறப்பட்டு நாட்டைவிட்டு
வெகுதூரம் போகிறபோது அங்கோர்மரத்தடியிலொ
ருபெரியவர் உட்கார்ந்திருந்தார் அவரைக்கண்டுபணி
ந்து ஓசுவாமி! இவ்வுலகத்தினி லெதார்த்தவாதிவெகு
ஜெனவிரோதி யென்பதைப்போல உலகத்தோருக்கு
நித்தியமானவஸ்துவின் பெருமையைச்சொல்லிஅவரு
டைய திருவடித்தியானஞ்செய்துக்கொண்டு நாளைப்
போக்கினால் இந்தஜென்ம மெடுத்ததற்குப் பலனாகும்
அதைவிட்டு அனித்தியமான ஜெகத்தாசைக்குள் கட்
டுப்பட்டு வீணாய்ப்போக்கிக் கொண்டிருந்தால் யாதொ
ருபயனுமில்லை என்றுசொல்லிய எனமீதுச்சீறி என்
னைத்தூரிமனஸ்தாபமீறிடயிழிவாகப்பேசினபடியால்
எனக்கு ஊரினுள்வசிப்பதற்கு மனமில்லாமல் இவ்
வண்ணம் புறப்பட்டு வேறெங்காகிலுஞ்சென்று நிம்ம
தியா யிருந்துக்கொண்டு நல்விஷயத்தில் மனதைச்செ
லுத்திக் கொண்டிருந்து அதற்குத்தக்கப் பதவியெது
வோ அதையனுபவிக்கலா மென்றுத் திடங்கொண்டு
விருப்பமின்றி வெறுப்பையடைந்து இவவாறு புறப்
பட்டு வந்தேனென அதற்கப்பெரியோர் ஓபிராமணா
ஊராருடைய நேசமுனக்கேதுக்கு அவர்களுடன்பே
சுவதால் தொல்லைவந்து சம்பவிக்குமே அன்றிச்சுக
முண்டாகமாட்டாது ஆகையால் இன்றுமுதல் நின்
கட்டைக் கடைத்தேர வேணுமென்றத் திடச்சித்தத்
துடன் உனக்காசான் சொல்லியமந்திரத்தை யநுஷ்
டித்துக்கொண்டு ஆசான் திருவடிகளின்மீது விடாது
பக்திசெய்துக் காலத்தைக் கடத்திக்கொண்டிருமென்
று சொல்லக்கேட்டுயான் அவர்திருவடிகளில் விழுந்து
பணிந்து விடைபெற்றுக் கொண்டு மனம்போனபடி
நடந்துசென்று பெருத்தக்காட்டைக்கண்டு அதற்குள்
பயமின்றிச் சென்று அங்கிருக்கும் பெரியோரைக்
கண்டுபணிந்து பலவாறுபுகழ அப்பெரியோர் ஆசி
கூறி என்னுடைய விர்த்தாந்தங்களை யெல்லாம் விசா
ரித்துத் தெரிந்துக்கொண்டு என்னைநோக்கி ஐயா நீர்
பிராமணனாகை விருப்பதால் எனக்குத்தொண்டு செய்
துக்கொண்டு இங்குதானே யிருமென்றுப்பகர யானு
மவர்க்குத்தொண்டு புரிவதாய் ஒப்புக்கொண்டுவெகு
காலமாய் அவருடையகடாக்ஷம் பெறவேண்டித்தொ
ண்டுசெய்துக் கொண்டிருந்தேன் இப்படிக் கிருக்கை
யில் ஒருநாள் அக்காட்டினிலுள்ள விரகுகளைப்பொ

ருக்கிச் சுமையாகக்கட்டிக் கொண்டுவந்து ஆசீர்மத்
திற்சேர்த்து அதிற்சில விரகுகளைக்கொண்டு நெருப்பு
மூட்டி கிழங்குவகையராக்களை அதில்போட்டுச் கருக்
க்கி வேகவைத்து பதமாக வெந்தவுடனே எடுத்து
அதின்மேல் தோலைப்போக்கிப்பக்குவப்படுத்திவைத்
திருந்தேன் இதற்குள் அப்பெரியவர் நிஷ்டையினிலி
ருந்து எழுந்துத் தடாகத்திற்குச் சென்று ஸ்னானுட்
டானங்களை முடித்துக்கொண்டுவந்து என்னாலுதவப்
பட்ட கந்தமூலபலாதிகளைத்தின்று ஜலமருந்திச்சற்று
நேரம் இளைப்பாரிக் கொண்டிருக்கையில் முன்னம்
யான்கொண்டுவந்த வீரகுசுமையினில் நின்றும் ஒரு
நாகப்பாம்பானது அதிககோபத்துடன் சீறிக்கொண்
டேவந்து அப்பெரியோரைக்கடித்தது அதைக்கண்ட
ப்பெரியோர் ஆய்ந்தோய்ந்துப்பாராமல் விரகுச்சுமை
யினிலிருந்து பாம்புவந்ததென் றுணர்ந்து என்னைச்
சமீபத்திலழைத்து இதேது விரகுசுமையென்றூர் அத
ற்குயான் பொய்சொல்லலாகாதுயென்றுக்கருதிஇந்த
விரகுசுமையை நானே பொருக்கிக் கட்டிவந்தேன்
அந்தவிரகு சுமையேதோ எனக்குத்தெரிய மாட்டா
தென்றேன் அதற்கவர் இரண்டு விரகு சுமையையும்
நீயேகொண்டுவந்து வைத்துவிட்டு ஒருசுமையைமாத்
திரம் யான்சுமந்துவந்தேன் மைத்தொரு சுமையா
தோ எனக்குத் தெரியமாட்டாதென்றுப் பொய்சொ
ல்லுகின்றயா என்றுக் கடுஞ்சினமடைந்து இன்று
முதல் நீசர்ப்பமாகக் கடவாயென்றுசபித்தார் அதை
க்கேட்டு யான்மெய்நடுங்கி ஓசுவாமி தங்களிடத்தில்
பொய்சொல்லலாகா தென்று உண்மையைச்சொன்ன
வென்மீது முனிவுகொண்டு சபிப்பதுநீதியோ அன்றி
யும் இச்சாபமெப்போதுநீங்கும் அதைக்கிருபைசெய்
துச் சொல்லவேணும் சுவாமியென்று பணிந்தேன்
அப்போதவர் மனமிரங்கி ஓபிராமணா நீநல்லசர்ப்பத்
தின் வடிவத்தைப்பெற்று வெகுதூரஞ் சஞ்சரித்துக்
கொண்டே வடதிசையைநோக்கிச்சென்று அங்கோர்
மடுக்கரையின்மீதிருக்கும் மூங்கிற்புதருக்குள் வசித்
துக்கொண்டிருக்கையில் அங்கொருதுலுக்கன்தூண்டி
முள்போடுவதற்கு அம்மடுக்கரையின் மதிலிருக்கையி
லவனுக்கு திரேகமேதோ ஒருவாராய்த் தோன்றிப்
படுத்து நித்திரைசெய்வான அப்போது நீயவனருகிற்
சென்று அவனமுகத்தில் வெயில்படாமல் படத்தை
விரித்துக் குடையைப்போலஇருப்பையாகிலப்போது
அத்துலுக்கனுன்னைக் காப்பாற்றுவான் உடனே நீ
பழயவடிவமாகிய பிராமண உருதரித்துச் சொர்க்க
லோகத்தை யடையக்கடவா யென்று அனுக்கிரகம்
பண்ணியனுப்ப அந்தப்படியேயான் சர்ப்பரூபத்துட
னிருந்து இன்னால் ஆதரிக்கப்பட்டுப் பிராமணஉருவ
த்தைப் பெற்றேன் மேலும் கிரிப்பிள்ளையினிடத்தும்
மயிலினிடத்தும் என்னைக்காட்டிக் கொடாமல அப
யந்தந்து காப்பாத்தின நினக்குக்கைமாறு நானென்
னசெய்யப் போகிறேன் ஆகிலும் என்னாற்கூடியமட்
டுஞ் சகாயஞ்செய்கிறே னென்றுசொல்லி அத்துலுக்
கனைநோக்கி பிராமணன் சொல்லத்தொடங்கினன்.

ஓஐயா சகாயபுருடரே! இன்றுமுதலந்த ஜீவவ
தைசெய்யுந்தொழிலைவிடுத்து ஸ்ரீராம நாமத்தைத்தி
யானஞ்செய்துக் கொண்டிருப்பாயாகி லுனக்கு இன்
னுஞ்சிலநாளில் இராஜரீகம் செய்யும்படியான சம்பத்
துகள்கிடைத்து மெத்தநீதிமானும் க்ஞானவானுமா
கிச் சீக்கிரகாலத்திலேயே முக்திபதவியை யடைவா
யென்றுசொல்லி அப்பிராமணன் சொர்க்கலோகம
டைந்தார் பின்பு இந்தத்துலுக்கன் மெத்தசந்தோஷ
மடைந்தவனாகி அப்போதே தன்னிடமிருந்தத்தூண்
டிலை விட்டெரிந்துவிட்டு ஸ்ரீராமநாமத்தியானஞ்செய்
துக்கொண்டே இரண்டுமூன்று வருடகாலங்கழித்துக்
கொண்டு வருகையில் அவ்வூரையாளும் அரசன்தேக
வியோகமடைந்துப் பட்டத்துக்குப்பிள்ளையில்லாமை
யால் மந்திரிகளாலோசித்து யானையை அலங்கரித்து
அதன் தும்பிக்கையில் ஒருபுஷ்பமாலையைக்கொடுத்து
இந்தமாலையையார் கழுத்தில்போட்டுத் தன்முதுகின்
மீது தாங்கிக்கொண்டு வருகின்றதோ அவனேஇந்நக
ரத்திற் கரசனாகுமென்று தீர்மானித்துயானையையோ
ட்டிவிட்டார்கள் அந்தயானையுந் தன்னிச்சையாய்நட
ந்து அந்நகரவீதிகள்தோருந் திரிந்துக்கொண்டேஅத்
துலுக்கன் வீட்டிற்கெதிரில் வந்து நின்றுக்கொண்டு
எப்போதவன் வெளியில் வருவானென்றெதிர் பார்த்
துக்கொண் டிருக்கையில் ஏதோ காரியமாய் அவன்
வெளியில்வந்த மாத்திரத்தி லவன்கழுத்தில் புஷ்ப
மாலையைப் போட்டு அந்த யானையானது அவனைத்
தூக்கி மத்தகத்தின் மீதேத்திச் சுமந்துக்கொண்டு
வந்து ஆசாரவாசலில் நின்ற மாத்திரத்தில்மந்திரிமுத
லானோர்கண்டு வெகுசந்தோஷமடைந்து சகலமேள
வாத்தியங்களும் முழங்க அந்தத்துலுக்கனையானையின்
மீதிருந்துமிரக்கிச் சகலாடம்பரத்துட னழைத்துச்
சென்று மகுத்துவமுடைய தீர்த்தங்களினா லபிஷே
கஞ்செய்து பெரியோர்கள் ஆசீர்வதிக்க பிராமணர்
கள் பல்லாண்டிசைக்க பூசுரஸ்ரீகள் மங்களம்பாடச்
சகலமேள வாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்க
முடிசூட்டிச் செங்கோல் கரத்தினிலளித்து சொர்ன
கஜிதமாகிய சிங்காதனத்தின் மீதிருக்கச் செய்துப்
பூசுரர்களுக்குக் கோதானபூதான வஸ்திரதான ஹிர
ணிய தானமெனும் முப்பத்திரண்டு தானங்களும்

அபாரமாகச் செய்துக் சகலகுடிகள் முதலானோருஞ் சந்தோஷிக்க அந்த மிருத்யுஞ்ஜெயன் வெகுநீதியாக அரசுசெலுத்திக் கொண்டிருந்தான்.

இவ்வாறு அந்தமிருத்யுஞ்ஜெயன் நீதிகுன்றாமலரசுசெய்துக் கொண்டும் இடைவிடாமல் ராமநாமத்தைத் துதிசெய்துக்கொண்டும் வருகையில் இவ்வரசனுக்குக் க்ஞானபக்தி வைராக்கியங்களுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு இருக்கையில் ஒருநாள் அரண்மனையின்மேடையில் அம்ஸ்தூளிகாமஞ்சத்தின் மீதிருந்துத்தன்மனைவியாகிய ராணியுடன் லீலைகள்செய்துகொண்டு அந்தப்புரத்துக்குள் ளெவரையும் வரவொட்டாமல் தக்கக்காவல்களமைத்து அவர்களிருவரும்ஜன்னலினிடம் உட்கார்ந்து வாழைக்கனிகளையுரித்து சர்க்கரையினில் தொட்டுப் புசித்துக்கொண் டிருக்கையில் அக்கனிகளின் தோலைக்கீழே விட்டெரியக் கீழேவிழுந்த அக்கனியின்தோலை யொருமனிதன் கைக்கொண்டு புசித்துக்கொண் டிருக்கையில் அதை ராணிபார்த்து அரசனைநோக்கி ஒசுவாமி யாரோ அன்னியபுருடன் கீழேயிருந்துக்கொண்டு நாம் உரித்துப்போடும் வாழைப்பழத்தின் தோலையெல்லாம் யெடுத்துப் புசித்துக்கொண் டிருக்கின்றானென்று அம்மனிதனைக் காட்ட அவனைப்பார்த்துச் சினங்கண்டு அரசன்காவலரையழைத்து அடாகாவலரே அன்னியபுருடன்நமது அந்தப்புரத்திற்குள் ளெப்படிவந்தான் உங்கள்காவலிப்படியாகவா யிருக்கின்றது இத்தனைக்கண்டிப்பாகவா காவலிருக்கின்றீர்கள் நீங்கள் காவலிருப்பது மெத்தநன்றாயிருக்கின்றது என்றுமிகக் கடுஞ்சினமடைந்து அக்காவலர்களைப் பிடித்து அரசன் மனம்போனபடியடிக்க அவ்வடிகளைப்பட்ட காவலர்கள் மெத்தப் பயந்துத் திடுதிடென்றோடி அம்மனிதனைப்பிடித்துப் பின்கட்டுமாறாகக்கட்டி யடிக்கிறபோது அம்மனிதன் கக்கடக்கக்கடச் சிறித்துக்கொண்டிருப்பதைக்கண்டு அரசன் அவனையடிக்கவேண்டாம் இங்குகொண்டுவாருங்களென்றுக் கட்டளையிட அந்தப்படியே பக்காவலாளிகள் அம்மனிதனை யரசன்முன்னங் கொண்டு வந்து நிருத்தினார்கள் அரசன் அவனைக்கண்டுக் காவலர் உன்னையடிக்க அந்தவடியின் சிரமத்தைக் கருதாமல் நீசிறித்தச் காரண மென்னவென்று கேட்டுக்கொண்டே தன்திரேகத்தைத் தடவினான் அவனைக்காவலரடித்த அடியின்வடுக்கள் தன்மீதிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டுச் சொல்லுமையாவென அதற்கவர்சந்தோஷசித்தராகி அரசனைநோக்கி ஒபூபாலரேஉம்முடைய வீட்டினில்லரை நாழிகை யடைந்திருந்தேன் அப்போது நீர்போட்ட வாழைக்கனியின் தோலையானெடுத்துப் புசித்தேன் இதற்காகவென்னை படித்தகாரணமென்ன யான் உன்னந்தப்புரத்தி னுட்புகுந்து நின் சொத்துகளேதாகிலுந் திருடினேனா நீகழித்துவிட்ட தோலைத்தின்றதற்கே யித்தனையடியானாய் உண்மையிலேயே திருடியிருந்தாலின்ன மெத்தனையடி அடிப்பார்களோ அறியேன்மேலும் நீர்பலவிதபோகபோக்கியங்களை யனுபவித்துக் கொண்டிருக்குமுமக்குநாளைக்கென்ன கெதியோவென்று சிறித்தேன் அதேனென்னைக்குண்டாகு மென்பீரேல் கோதுமைமாவின் உண்டைகளால் மச்சங்களை பிடித்துக்கொன்றீரே எத்தனை ஜீவன்களைப் பிடித்துக்கொன்று அதின்மாம்சங்களைத்தின்று திரேகத்தைப் பெருக்கச்செய்த உமக்கென்ன தெண்டன மேர்ப்பட்டிருக்கின்றதோ அதையானறியேனென்று சொன்ன உடனே அந்தமிருத்யுஞ்ஜெயன் சகலசங்கப் பத்திரியாகஞ்செய்து மெத்த வைராக்கியசீலனாகி சடைமுடியும் மரவுரி தண்டுகமண்டலமிலங்க மெத்த வைராக்கியசீலனாகி நாட்டைவிட்டுக் காட்டையடைந்து நமக்கிங்குசாதுசங்கமெப்போது கிடைக்குமென்றும் பகவானுடைய பஜனையெப்படி செய்வதோ யோகசாதனமெப்படி யுண்டாகுமோ பாசபந்தங்களெப்படிவிலகுமோவைராக்கிய்மெப்படி யுண்டாகுமோ பூததயை பச்சாத்தாபமெப்படி யுண்டாகுமோசாக்ஷாத்ஹரியின் கிருபையெப்படியுண்டாகுமோ அந்தஹரியைப் பூசிப்பதெப்படியோ என்றிவ்விதச் சிந்தனைசெய்துக்கொண்டிருக்கையில் பண்டரியாத்திரை வாசிகள் சிலபேர் அம்மார்க்கமாக வரக்கண்டு அரசன் அவர்களுக்கு வந்தனந்தந்து ஒசாதுக்களே! இம்மார்க்கமாக எங்குபோகின்றீரென அதற்கவர்கள் ஒஅரசனே! நாங்கள் பண்டரியாத்திரை செய்யப் போகிறோமென அரசன் யானுமுங்களுடன் பண்டரிக்கிவருகிறேன் என்னையுமழைத்துச்சென்று அப்பகவானுடைய சேவையிலீடுபடுத்தி சுகிர்தத்தை யடையுங்களென்று வேண்டிக் கொள்ள அவர்கள்அரசனே! சுகமாகவாரும் அழைத்துப்போகுறோ மென்றவரையும் அழைத்துக்கொண்டு பலகருவிகளுடன்கலந்து பகவந்நாம சங்கீர்த்தனஞ்செய்துக்கொண்டே சிலநாளினில் பண்டரிபுரத்தைச் சேர்ந்து இச்சையுண்டாயினது நமக்குஅனுகூலமாயிற்றென்று சந்துஷ்டராகி அந்த மிருத்யுஞ்ஜெயன் சந்திரபாகாநதியில் ஸ்னானஞ்செய்து அநுட்டானங்களை முடித்து அப்பண்டரிபுரத்தைப் பிரதக்ஷணஞ் செய்து அங்கு எதிர்ப்படும் பக்தர்களுக்கு வந்தனந்தந்து புண்டரீகனுக்குப் பூசைசெய்து சந்நிதானத்தின் முன்சென்று அங்குபக்தர்கள் மனம்வாக்குக் காயமெனுந்திரிகரணசுத்தியாய் .பகவானை பஜிக்குங்குணானு பவங்களைக் கேட்டு மெத்த ஆனந்தமடைந்தும் இவ்வுலகத்தினி

லனேக தீர்த்தங்களிருக்கின்றன இந்தத் தலத்தின் தீர்த்தத்திற்கு நிகரானதெதுவுமில்லை யென்றும் மண்டபத்திற்குட்புகுந்து அங்கு நிர்மலமான ரூபத்தையொத்தப் பாண்டுரங்க நாதரைக்கண்டு குவிந்தமனதுடன் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டு ஒ பக்தபாராதீனா பரமதயாளா பாண்டவபாலா தேவரீரது அபாரகீர்த்தியை கேழ்விப்பட்டு சகல சம்பத்துகளையும்விட்டு நினது தொண்டர்களுக்குத் தொண்டனாகி யுட்பட்டுக் தங்களைச் சேவிக்க வேணுமென்ற கோரிக்கை யதிகரித்து இவ்வண்ணம்வந்தேன் வந்து நினதறிய சேவையைச்செய்துப் ப்ரமானந்த மடைந்தேன் இன்னொருகோரிக்கையுளது அதை யனுகூலப்படுத்தவேணும் ஜெகதீசா சர்வேசா இருடிகேசாபண்டரிவாசா இருதயகமல நிவாசாயென்றுத் துதிசெய்துக்கொண்டே ஒசுவாமி அடியேனுக்குத் தக்ககுரு தெரிசனங் கிடைக்கும்படிக் கிருபைசெய்து என்மனதிலுற்ற வாஞ்சையைப் பூர்த்திசெய்ய வேணுமென்றுஞ்சொல்லி அன்னபானாதிகளின்றி மூன்றுநாளுபவாசமாகவிருந்தார் இவரிப்படிக்கிருக்க மூன்றாநாளிரவில் சாக்ஷாத் பாண்டுரங்கனாதன் அந்தமிருத்யுஞ்ஜெயன் கனவினிலெழுந்தருளி ஒபக்தசீலனே இன்னுஞ்சிலநாளில் சகஜானந்தரெனும் ஆசானாலுபதேசிக்கப் படுவீரென்று சொல்லி விவேகசிந்து வெனுமொருக் கிரந்தத்தைக்கொடுத்து மாயமாய்மறைந்து போயினர் உடனே இந்தமிருத்யுஞ்ஜெயன் திடுக்கென்றெழுந்து பார்க்கையில் பண்டரிநாதனைக்காணாமல் நூதனமாகிய விவேகசிந்து வெனுங்கிரந்தம் மாத்திரம் தன்கையிலிருக்கக்கண்டு வெகுவாகக் கிலேசப்பட்டு அந்தவிவேகசிந்துவெனுங் கிரந்தத்தை வாசித்துக்கோண்டே சிலகாலம்போக்கிக் கொண்டிருந்தார்.

இவ்வாறு சிலகாலம் போக்கிக் கொண்டிருந்து அந்தமிருத்யுஞ்ஜெயன் ஒருநாள் ஸ்ரீபாண்டுரங்கரது நேமனம்பெற்று அப்பண்டரியைவிட்டுப் புறப்பட்டு நடந்து கலியாணிபுரமெனும்பட்டணத்தை யடைந்து அங்குக் குருநாதரைப் போய்த்தேடியும்இல்லாதபடியால் மறுபடியுந் திரும்பிப் பண்டரிபுரத்தைச் சேர்ந்துப் பாண்டுரங்கனைப் பாடிக்கொண்டிருந்தார் இவரிப்படிக்கிங்கிருக்க அங்கே கல்யாணிபுரத்தில் சகஜானந்தர் வந்துசேர்ந்து மிருத்யுஞ்ஜெயன் வந்துபோனதைக் கேழ்விப்பட்டு உச்சவம் சமீபித்திருக்கின்றது அப்போதங்குசென்று உச்சவத்தை சேவித்தபடியும் மிருத்யுஞ்ஜெயனுக்கு உபதேசஞ்செய்வித்தைப் போலவு மிரண்டுகாரியங்களையும் பார்த்துக்கொண்டு வரலாமென்று யோசனைசெய்துக் கொண்டிருந்து உச்சவந் தொடக்கமான நாளே அந்தசகஜாநந்தர் புறப்பட்டுவந்துப் பண்டரிபுரத்தைச் சேர்ந்தார் இவரை மிருத்யுஞ்ஜெயன் சேவித்து ஒசுவாமி தங்களிடத்தில் உபதேசஞ் செய்துக்கொள்ளும்படி அடியேனுக்கு பாண்டுரங்கநாதர்சொற்பனஞ்சாதித்து விவேகசிந்துவெனுங் கிரந்தத்தை யளித்து மறைந்துபோயினரென்று பணிந்தார் அப்படிபணிந்த மிருத்யுஞ்செயனை அந்த சகஜானந்தசுவாமிகள் ஆசீர்வதித்து உச்சவமுழுதும் சேவித்திருந்து முடிவானவுடனே அந்தமிருத்யுஞ்ஜெயனை யழைத்துக்கொண்டு சகஜானந்த சுவாமிகள் தன்னூராகிய கல்யாணிபுரத்தைச்சேர்ந்துத் தன் வீட்டையடைந்து இரண்டொரு நாள்போக்கி நான்காவதுநாள் அந்தசுவாமிகள் மிருத்யுஞ்ஜெயனையழைத்து அருகினில் ஒக்காத்தி வைத்துக்கொண்டு தாரகநாமத்தை யுபதேசஞ்செய்து மிருத்யுஞ்ஜெயனென்று நாமகரணமிட்டு ஆசீர்வதித்து அனுப்பிவிடை பெற்றுக்கொண்டு பண்டரியைச் சேர்ந்து அந்தமிருத்யுஞ்ஜெயன் தனக்கு சகஜானந்தரெனும் ஆசான் உபதேசித்த தாரகநாமத்தைத் தியானித்து க்ஞானபக்தி வைராக்கியமதிகரித்துத் தன்னுடைய இருதயகமலத்தினில் சாக்ஷாத் பாண்டுரங்கநாதனைக் கண்டு சேவித்து ஆனந்தித்து சிலகாலம்போக்கிக் கொண்டிருக்கையில் பண்டாரஜாதியில் பலராயனெனும் உத்தமனொருவனிருந்தான் அவனிந்த மிருத்யுஞ்ஜெயரது செய்தியையறிந்து விரைந்து சரணம்புகுந்து ஒசுவாமி பொருள்காயமும் பிராணனும் இம்மூன்றும்தேவரீருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தேன் தயவுசெய்து அடியேனுக்கு உபதேசிக்க வேணுமென்று வினயமாக மொழிந்தான் அம்மொழிகளையும் அவன்சரணாகெதியையும் வித்தம்பிரான் ஆக்கையையுங் கைக்கொண்டு மெத்த சந்தோஷசித்தராகி அந்தபலராயனை அருகினிலழைத்துத் தாரகமந்திரத்தையுபதேசஞ்செய்தார் இதையங்கிருந்தப் பண்டாரங்கள் பலவருங்கண்டு சந்தோஷித்தார்கள் இப்பண்டாரங்களுக் கெல்லாம்எஜமானாகிய சமுச்சயனெனும்பண்டாரமானவன் இந்தப்பவராயனை யழைத்து அடாபவராயா நமது ஜாதியென்ன நீயுபதேசஞ் செய்துக்கொண்ட ஆசான்ஜாதியென்ன உன்னுடைய ஆசான்திருமணி ஸ்ரீசூர்ணம் தரிக்கிறவன் நாமெல்லோரும் விபூதியுஞ் சந்தனப்பொட்டுந் தரிக்கின்றவர்கள் மேலும் நமக்காசான் வேறொருவரிருக்க அவரைதுரோகஞ்செய்துமனமார அன்னியஜாதியானவனை ஆசானாகவடுத்துஉபதேசஞ் செய்துக் கொண்டாயே இதனாலுனக்கு நரகப்பிராப்தமேயன்றி நற்கெதியுண்டாகுமோ அடாபாவி அனியாயமாய் குருத்துரோகி யென்று யெல்லோரும்

நிந்திக்கும்படி பேரெடுத்துக் கொண்டாயே யென்று மிகவுங் கோபித்துக் குலத்தோர் யாவரையும் வரவழைத்துக்கூட்டம் போட்டுப்பேசி இந்தபவராயனை குற்றவாளியாகச்செய்து அபராதம்விதித்தான் அதற்குப்பவராயன் மெத்தசந்துஷ்டனாகி தனக்குக்குலத்தோர்விதித்த அபராதத்தைக்கட்டிவிட்டுவிரைந்தோடிவந்து ஆசானாகிய மிருத்யுஞ்ஜெயன் திருவடிகளில் விழுந்துபணிந்து ஓசுவாமி எங்கள்குலமூத்தோனாகிய சமுச்சயனென்பவன் அடியேனைப் பலவிதங்களிலுந் தொந்திரவு செய்ய யோசித்திருக்கின்றான் இதற்கு நானென்செய்வே னென்று விசனப்படுவதைக் கண்டு அந்தமிருத்யுஞ்ஜெயன் பவராயனைநோக்கி ஒஉத்தமசீலனே நீபயப்படவேண்டாம் ஸ்ரீஹரியின்மீதுபாரத்தைப்போட்டுக் குவிந்தமனதுடன் பஜனைசெய்துக் கொண்டிருப்பையாகில் உன்னுடையகாரியங்களையெல்லாம் பகவான் அனுகூலப்படுத்துவா னென்றுசொல்லக்கேட்டு அந்தபவராயன் மனதிலுற்ற விசனத்தைப்போக்கி அதிகசந்தோஷ சித்தனாகி தனக்காசான் சொல்லியபடி ஸ்ரீபாண்டுரங்கனை திரிகரணசுத்தியாய் பஜனைசெய்துக் கொண்டிருந்தான்.

இப்படிக்கிந்தபவராயன் பரிசுத்தமான மனதுடன் பாண்டுரங்கனை பற்பலவிதங்களாய் தன்னை மறந்து பஜனைசெய்துக்கொண் டிருக்கையில் அந்நகரத்தையாளுங் காசிபதியெனும் பேருடைய அரசனொருவனுண்டு அவன்சிவபக்தியிற் சிறந்தவன்க்ஞானத்தில் நிறைந்தவன் இவ்வரசன் சிவனடியார்களாகும் பண்டாரங்களுக்குதினந்தோறும்போஜனஞ்செய்விப்பான் எப்படிப்பட்ட போஜனமெனில் அறுசுவையன்னங்களுடன் சுகியன்போளி வடைபாயாசன்முதலானகனிவர்க்கங்களுடன் பந்தியாகச்செய்வித்துக் கொண்டிருந்தான் இப்படிக்கிப் பண்டாரங்களெத்தனை பேர்கள் வரினும் இல்லையென்னுமல்யாவருக்கும் அன்னங்கொடுத்துக்கொண்டே வருகையில் ஒருநாள் வழக்கப்படி யாவரையும் உக்காரவைத்து சகலவிதகரி காய்வகைகளும் பலகாரவகைகளையும் இலைபோட்டு வட்டித்து ஆனவுடன் பண்டாரங்கள் யாவரும் சிவபெருமானுக்கு அர்ப்பணஞ் செய்யும்பொருட்டு ஒவ்வொருவருந் தங்கடங்கள் செச்சைமூடியை எடுத்து அதற்குள்ளிருக்கும்காயும் லிங்கங்களும் காணப்படாமல் போனபடியால் வெகுஜெனங்களும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு பயமும்வெட்கமு முடையவர்களாகிப் பரமசிவத்தைப் பூசைசெய்ய தேதுக்கு அதுகிடைக்கும்பரியந்தம் புசிக்கக்கூடாதென்றும் அப்படியல்லவென்று புசித்தவர்களுக்குத்தக்க சிக்ஷைவிதிக்கப்படுமென்றும் அன்றியும் இதற்குத்தக்கப்பிராசிதம் ஏதுவோ அதையெல்லோரும் அனுபவிக்கவேணும் அன்றியும்பிராணனை விடுவதே சாஸ்திரசம்மதமாகுமென்றும் எல்லோருக்கும் இக்கெதியே காலத்தில்வந்து சம்பவித்ததே என்றுப்பிரமித்து பற்பலவாறுபேசிக்கொண்டே ஏதும்தோன்றாம லிப்படிக் கிருக்கையில் காசிபதியெனும் அரசனானவன் தீர்க்காலோசனை செய்து அங்கிருக்குப் பண்டாரங்கள்யாவரையும்நோக்கி ஒசிவனடியார்களே தெரியாமையினாலே யாரோ ஒரு சாதுவைப் பாதைப்படுத்தின படியாலே உங்களுக்கு அபசாரம்வந்து சித்தித்தது அந்தவபசாரத்தின் பயன்யாதோ அதுவும்தெரியவில்லை யன்றியும் இப்படிப்பட்டப்பிரமாதமான அபசாரம் நேரிடும்படிச்செய்தவர்கள் யாவரோ அவர்கள்நடந்த உண்மையைச்சொல்லுங்களென்று அவர்களை விசாரணைசெய்கிறபோது ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு உச்சிதவாரத்தைகள் பேசிக்கொண்டு மிருக்கையில் சமுச்சயனும் அரசனைநோக்கி ஓவேந்தனே பூர்வத்தினில் எங்கள் ஜாதியோனான பவராயனுக்கு அபராதம் விதித்ததைக்கண்டு அவன் அவ்வபராத பணத்தைக்கட்டி விட்டுப்போயினான் அதனால்நமது சிவபெருமான் நம்மைவிட்டும் நீங்கிப்போயினாற்போலிருக்கின்றது இதற்கு நானென்னசெய்வேன் யென்றுபயந்து ஒன்றுந்தோன்றாமலிருந்தான் இதையறிந்து அவ்வரசன் நீங்களெல்லோருஞ்சென்று மிருத்யுஞ்செயனை வேண்டிக்கொள்ளுவீர்களாகில் நமக்குண்டான வேதனைநீங்குமெனவும் அந்தப்படியே பண்டாரங்கள்யாவரும்மிருத்யுஞ்ஜெயனிடஞ் சென்று தீர்க்கமாகவிழுந்து சேவித்துஒசுவாமி உண்மையாக உம்முடையதிருவடிகளை ஆசரித்த பவராயனெனும் பண்டாரத்தை சமுச்சயனெனும்பண்டாரம் பலவிதமாகவைத அபசாரத்தினாலே நாங்களொவ்வொருவருந் தரித்திருந்த லிங்கங்களெல்லாம் மாயமாய் மறைந்துபோயிற்றென்றுஞ் சொல்லி பின்னும் ஒசுவாமி சத்குருநாதரே தயவுசெய்து நாங்கள் தரித்திருந்த ஒவ்வொருலிங்கமும் எங்களுக்குக் கிடைக்கும்படி கிருபைக்கண்ணோக்கம் புரியுமையாவென்று வேண்டிக்கொண்டார்கள் இப்படியவர்கள் வேண்டிக்கொள்ளும் வினயமுறையைக்கேட்டு அந்த மிருத்யுஞ்ஜெயன் அவர்களைநோக்கிஒபண்டாரங்களே வேதாந்தமும் சித்தாந்தமும் இரண்டும் நாய்களாகி உங்கள் லிங்கங்களைக்கொண்டுபோயிற்று அதைக்குறியாகப் பாருங்களென்று சொல்லி மெய்மறந்து ஒவேதாந்தமே யென்றழைத்தார் உடனே அந்தகுக்கலானது மிருத்யுஞ்ஜெயன் சமீபத்தில்வந்து நின்றது அதைக்கணடு ஒவேதாந்தமே இந்தபண்டாரங்களினது

லிங்கங்கள்யாவையுங் கொண்டுபோனயே அந்தலிங்கங்களனைத்தையும் யிவர்பார்த்துப் பிரமிக்கும்படி வெளிப்படுத்து மென்றவுடனே அக்குக்கலானது ஐயாயிரம் லிங்கங்களைகக்கினது மருபடியுமவர் ஒசித்தாங்தமே யென்றழைத்த மாத்திரத்தில் வேறொரு நாயானதுவந்து ஐயாயிரம் லிங்கங்களைக்கக்கியது இந்தவிந்தையை அவர்கள்பார்த்து மேலுமேலும் மிருத்யுஞ்ஜெயனைப் புகழ்ந்துக்கொண்டாடினார்கள் உடனேசிவபெருமான் ஆயிரத்தெட்டு சிவலிங்கங்களைக் காட்ட அந்தலிங்கங்களை யெல்லாம் சோதித்துப் பார்த்தும் இவர்களுடைய லிங்கங்களகப்படாமையினால் மேலுமந்த சிவபெருமானை வேண்டிக்கொள்ள உடனேசிவபெருமானுடைய கிருபையினாலே அவரவர்கள்லிங்கம் அவரவர்கள்செச்சைக்குள் ளிருக்கக்கண்டு இத்தனையும் மிருத்யுஞ்ஜெயன் மகுத்துவமென்றும் இவரதுநாமம் க்ஞானசாகர மென்றுஞ் சொல்லிப் பலவாறு புகழ்ந்துக்கொண்டே போயினார்கள்.

இவ்வண்ணமந்தப் பண்டாரங்கள் யாவரும்மிருத்யுஞ்ஜெயனைத் துதிசெய்துக்கொண்டே அரசனிடஞ்சென்று நடந்தவிந்தைகளை யெல்லாஞ் சொல்லக்கேட்டு அரசன் சந்தோஷசித்தனாகி யிருக்கஉடனேபண்டாரங்களனைவரும் தங்கடங்கள் லிங்கங்களுக்கு ஆராதனைசெய்து அனந்தரம்யாவரும் புசித்துக் ஞானசாகரன் மகுத்துவத்தை நினைத்துநினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள் பின்பு இந்தக்ஞானசாகரன்வெகுகாலம்பூலோகத்தில்வசித்து அனேகருக்குபதேசித்து வெகுசிஷர்கள் தன்னையடைந்திருக்க முடிவினில் சாலோகசாமீப சாரூபசாயுச்சிய பதவியை அடைந்தார்.

வாழிவிருத்தம்.

தானந்தயாளந்தனில் மிக்கோன்வாழியே
தீனதூண்டிபோட்டுத் திறமடைந்தோன்வாழி
மோனமாதவநிஷ்டை மிகச்செய்தோன்வாழியே
ஞானசாகரன்றன்சரண ஞாலத்தில்மிகவாழியே.

மிருத்யுஞ்ஜெயன் சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீமத்

ரசிகமுராரிசரித்திரம்.

துதிவிருத்தம்.

சுசியதில்மிகுத்தசீலன் சூசனையுமிந்ததூயன்
சசியெனவழகுவாய்ந்துச் சாதுகள் தமக்குநேயன்
பசியெனுமவரைக்காக்கும் பரமபுண்ணியனுமான
ரசிகமுராரிசரண் ராசீவம்போற்றிபோற்றி.

கதையின் வரலாறு.

திருமகளுக்கோ ரிருப்பிடமாகியும் தெளிந்தஞானிகள்வசிக்குந் தடமாகியும் பிரமக்ஞானம் நிறைந்த பிராமணர்களாலும் யாகயெக்கிய அவிர்ப்பாகங்களாலும் மாதவரேத்தும் வேதகோஷ்டங்களாலும் ஆகாயத்தையளாவிய கோட்டைகளாலும் மேடை மாளிகைகளாலும் நவரத்தினங்களிழைத்த சபாமண்டபங்களாலும் நீதிகுன்றாமல் வருநீதிமுதலான தருமசாஸ்திரவிதியையோதும் மந்திரிப்பிரதானிகளாலும் அன்னியர்கள் பிரவேசிக்கக்கூடாத க்ஷத்திரியர்கள் வசிக்கும் வீதிகளாலும் உழுதுபயிரிடும் வைசியர்கள் வசிக்கும் வீதிகளாலும் ஏவல்தொழில்கள் செய்யும் சூத்திரர்வசிக்கும் வீதிகளாலும் தன்னிகரில்லாமல் விளங்குஞ் சாயன நகரமெனும்பட்டணத்தை மநுநீதிகுன்றாமலும் முப்பத்திரண் டறங்களையும் நடத்தி செங்கோல்செலுத்திக் கொண்டிருக்கும் பிரமகேசரியெனும் அரசனது அபிமானத்தைப் பெற்ற ரசிகமுராரியெனுமொரு பரமசாதுவிருந்தார் அவர்ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாது பூசையிலும் சேவையிலும் சொக்கிக் கொண்டு அப்பரமாத்துமாவின் தொண்டர்களைக் காணில் அடியார்க்கடியராய்த்தாழ்ந்து சேவைசெய்தும் அவர்களுக்கு வேண்டிய பிரசாத முதலானவைகளையீந்து ஆதரித்தும் அவர்கள்திருவடிகளை ஜலத்தினால் அலம்பி அத்தீர்த்தத்தை ஸ்வீகரித்துக் கொண்டும் வெகுபக்தி விசுவாசத்துட னிருந்தார்.

இவ்வண்ணமிருக்கையில் சிலசிஷ்யர்கள்இந்தரசிகமுராயினிடம்வந்து விழுந்துபணிந்து எழுந்துஒசுவாமி! மாயாசம்பந்தமாகிய இவ்வுலக வாழ்க்கையை நீக்கி பேரின்ப வாழ்க்கையை யடையவேணு மெனக் கருதி அர்த்தம் பிராணன் திரேகம் இம்மூன்றையும் தேவரீர் திருவடிகளிலர்ப்பணம் பண்ணி சரணுகெதி யடைந்த இவ்வேழைகள்மீதுக் கிருபைசெய்து ஆட்கொள்ள வேணுமென்று வேண்டித் தங்களுக்குள்ள திரவியங்களை யெல்லாங் காணிக்கையாக வைக்க அத்திரவியத்தை யந்தரசிகமுராரிகண்டு இதுகிருஷ்ணபகவான் கைங்கரியத்திற் குபயோகப் படுத்துகிறேன் என்றெண்ணி சிஷர்களையழைத்து இந்ததிரவியத்தி லொரு காசளவும் மீதிவைக்காமல் ததியாராதனைக்கு வேண்டிய சாமக்கிரியைகள் ஒன்றேனும் விடாமல் வாங்கிக்கொண்டுவரக் கடவீர்களென்று நேமித்தார் அவர்களும் ஆசான்சொற்படி சிஷர்கள்கொடுத்த காணிக்கையாகிய திரவியங்களனைத்தையுமெடுத்துக்கொண்டுபோய் அமுதுபடி முதலிய சாமக்கிரியைகளைக் கொண்டு அதுகளையெடுத்துவந்து ஆசான் வீட்டினிற் சேர்த்து ஒசுவாமி யாவத்துமான சாமக்கிரியைகளும் வாங்கிவந்து இதோசேர்த்துவைத்திருக்கின்றோமென அதுகளையந்த ரசிகமுராரிகண்டு பரமானந்த மடைந்து சிஷர்களைநோக்கி அப்பாசிஷர்களே இந்தசாமக்கிரியைகளில் ஒருநாளைக்குத் ததியாராதனஞ் செய்வதற்கு வேண்டியதெவ்வளவோ அவ்வளவை நிதான

மாகவெடுத்துச் சமயல் சீக்கிரமாகட்டுமென்று நேமிக்க அவர்களுமந்தப்படியே ஒருநாளைக்கு வேண்டிய சாமக்கிரியைகளை கிதானமாக வெடுத்து அறுசுவையன்னமுதல் சிலசிறுதிண்டி பலகாரங்களுஞ் செய்துமுடித்துக் குருநாதனுக்குத் தெரியப்படுத்தக் கேட்டந்த ரசிகமுராரி மெத்தசந்துஷ்டராய் தளிகை யிலையைப்போட்டு அதில் சகலபதார்த்தங்களுடன் பலகாரங்களன்னமும் பரிமாரிப்பாகவதர்களையெல்லாம் உட்காரவைத்து அவர்கள்பாதங்களைத் தீர்த்தத்தினாலலம்பி அத்தீர்த்தத்தை ஸ்வீகரித்து பகவத்குணானுபவஞ் செய்துக்கொண்டே சொக்கி மெய்சோர்ந்து உடனேதெளிந்து யாவரையும் புசிக்கும்படிச் சொல்லி அனைவருக்குந் தன்கரங்களினாலே ஆலவட்டகயிங்கரியஞ் செய்துக்கொண்டே மேல்விசாரணையி விருந்து யாவரும் புசித்தானவுடனே அப்பிராமணர்களுக்குச் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகாணிக்கைகளளித்துப் போய்வரும்படி விடையளிக்க அவர்களும் விடைபெற்றுக்கொண்டு தங்கடங்கள் வீட்டை யடைந்தார்கள்

பின்னரிந்த ரசிகமுராரி தினந்தோறும் வெகுவிமரிச்சையாய் ததியாராதனை செய்துக்கொண்டே வருகையில் சிலவருடங்களுக்குள் தானியமுதலானதுகளும் சிலவாகி வெறும்வீடாய்விட்டது அப்படிப்பட்டதரித்திரம் தனக்குவந்துநேரிட்டும் அந்தரசிகமுராரியானவர் சீஷர்களையனுப்பி கிராமங்களில் தானியங்களைப் பிட்சையெடுத்துக் கொண்டுவரும்படியாக நேமித்து அவர்களுமந்தப்படியே பிட்சை யெடுத்துவந்த தானியங்களைக் கொணடுப் பிரசாதஞ்செய்து ததியர்களை வரவழைத்து அவர்கள்திருவடிகளை ஜலத்தினாலலம்பி அத்தீர்த்தத்தைரசிகமுராரிஸ்வீகரித்தும் ஆராதித்தும்வந்தார் இந்தப்படிக்குப் பலவருடங்கள் நடத்திக்கொண்டு வருகையில் ஒருநாள் ததியாராதனைக்கு ஒன்றுமேயில்லாமற் போனமையால் அந்த ரசிகமுராரி சீஷர்களையழைத்து அப்பா சீஷர்களே நீங்கள்சென்று சாதுக்களைக்கண்டு அவர்கள்திருவடிகளையலம்பி அத்தீர்த்தத்தைக் கொண்டுவந்து யென்னிடங் கொடுங்களென்றுநேமிக்க அவர்களும்ஆசான் சொற்படி ஒருசொம்பில் ஜலமும் வெறுங்குண்டானொன்றும் யெடுத்துக்கொண்டு சென்று சாதுக்களைக்கண்டு அவர்கள் திருவடியின கீழே குண்டானைவைத்துசொம்பினிலிருக்கும் ஜலத்தைக்கொட்டி திருவடிகளையலம்பிய ஜலத்தை குண்டானில் வெகுபததிரமாய் யெடுத்துக்கொண்டு வருகையில் அங்கொருசாது எதிர்ப்பட்டார் அவரையும் நிருத்தித் திருவடிகளையலம்புகையில் அத்திருவடிகள் வெடிப்புண்டாயிருக்கக் கண்டு மனதிற்குச் சயிக்காமல் அவர்திருவடியை யலம்பாமல்விட்டு வேறொரு நல்லதிருவடிகளுடையவர்தீர்த்தத்தை யெடுத்துக்கொணடுவந்து ஆசானிடத்தில் கொடுத்தார்கள் அதையந்த ரசிகமுராரி பெற்றுக்கொண்டு அதிலுள்ள தீர்த்தத்தை ஸ்வீகாரஞ் செய்துப்பார்க்கையில் அந்தத்தீர்த்தஞ் சப்பென்றிருந்தமையால் அவர்சீஷர்களையழைத்து அப்பா சீஷர்களே இந்ததீர்த்தஞ் சப்பென்றிருப்பதற்கு என்னகாரணம் அதை யொளியாமற் சத்தியமாகச்சொல்லுங்களென அதற்கந்த சீஷர்கள் நடுநடுங்கி ஒசுவாமிதங்கள் முன்னேபோய் சொல்லுவோமாகில் எங்களுக்குரவுரவாதி நரகசம்பிராப்தி யுண்டாகும் ஆகையால் நாங்கள்செய்த உண்மையையே சொல்லுகிறோம் எங்கள்மீது கோபங்கொள்ளாமல் செவிசாத்திக் கேழ்க்கவேணும் பரமகுருநாதரே யென்றுபணிந்துச் சொல்லுகின்றார்கள் ஒசுவாமி யாங்கள்சென்று சாதுஒருவரைக்கண்டு அவர்திருவடியைவிளக்க உத்தேசித்துத் திருவடிகளைப்பிடிக்கையில் அத்திருவடி, பெரிய வியாதியால் பீடிக்கப்பட்டுப் பிளவுண்டாகிச் சீழுமிரத்தமுமாகயிருந்தமையால் அதுயெங்கள் மனதுக்கு அசிங்கிதமாகத்தோற்றி அறுவருப்புண்டாக்கின படியால் அவரைவிட்டு வேறொருவர் திருவடியைத்துலக்கி அத்தீர்த்தத்தைக்கொண்டு வந்தோம் இதுவே யாங்கள் செய்தகுற்றம் இதிலெள்ளளவும் பிசகில்லை இதுசத்தியமென்றும் அன்றியும் உலகத்தினில் பிள்ளைகள்செய்தகுற்றத்தைப் பிதாமன்னித்து ரக்ஷிப்பதுபோலஎங்களுக்குப் பிதாவாகிய தாங்கள் பிள்ளைகளாகிய யாங்கள் செய்தகுற்றத்தை க்ஷமித்து காப்பாத்தவேணும் எங்களையனேயென்று அவர்கள் அந்தரசிகமுராயின திருவடித்தாமரைகளில் விழுந்துக்கிடந்தனர்கள் இப்படிக்கிச்சொல்லித் தன்திருவடிகளில் விழுந்து எழுந்திராமற்கிடக்கு அந்தச்சீஷர்கள் மீதுக் கிருபையுண்டாகி யாவருக்கும் ஆசிகூறி யெழுந்திருக்கச் சொல்லி அவர்களைநோக்கி ஒசீஷர்களே பெரிய வியாதியினால் பீடிக்கப்பட்டுத் திருவடிகள் பிளவுண்டு சீழுமிரத்தமும் ஒழுகும்படியான திருவடிகளையுடையசாதுயெவ்விடத்தினிலிருக்கின்றார் அவரையெனக்குக்காட்டுங்களென்று அந்தரசிகமுராரியானவர் அங்கிருந்துவெளிப்பட்டுநடந்தார்சீஷர்களும்பின்தொடர்ந்தேசென்று அச்சாதுவைக்காட்ட அவரைஇந்த ரசிகமுராரிகண்டு பணிந்து ஒசுவாமி தங்களுடைய மகுத்துவ மரியாத இச்சிறுவர்கள் ஏதோ தேவரீரை யவமதித்தார்கள் அந்தப்பிழையைக்கருதாமலிவர்களை க்ஷமித்துக்காப்பாத்தவேணுமென்று வேண்டிக் கொண்டபடியால் அச்சாதுவும் அவர்களைக்கடாக்ஷித்து க்ஷமித்துமந்த

காசஞ்செய்தார் அக்குறிப்பையுணர்ந்து ரசிகமுராரியானவர் உடனே அச்சாதுவின் திருவடிகளை யலம்பி அதைக்கைக்கொண்டு அச்சாதுவின்திருவடிகளை தன்னுடைய இருதயகமலத்தில் பொருந்தவைத்துக் கொண்டு சிறிதுநேரம் பரமநிஷ்டையிலிருந்து மெத்தப் பிரியத்துடன் அச்சாதுவின்திருவடி தீர்த்தத்தை ஸ்வீகாரஞ்செய்து ஆஹா யிப்போதல்லவோ இந்த தீர்த்தம் மிகவுமினிப்பாக விருக்கின்றதென்று ஆனந்தமடைவதைப் பார்த்துச் சீஷர்களும்சாதுக்களும் இன்னுமக் கிராமத்திலுள்ளவர்களும்ஆச்சரியமடைந்தார்கள் மேலும் புராரியாகிய சிவபெருமான் ஒருவரே பூர்த்தியாக அந்தராமநாமத்தின் மகுத்துவத்தைத் தெரிந்துக் கொண்டதைப்போல இந்தரசிகமுராரியும் சாதுக்களுடைய திருவடிகளின் தீர்த்தத்தின் பிரபாவத்தை யிவரொருவரே தெரிந்துக்கொண்டார்அன்றியும் இவர்கள்சாதுக்கள் இவர்கள் அசாதுக்களென்றுந்தெரிந்துக்கொள்ளுந் திறமிவரொருவருக்கே தகுமென்றும் ஆஹா இவருடைய பேரும்பிரக்கியும் என்னவென்று சொல்லுகிறதென்றும் இவரைப்போல பக்தர்களிப்புவியினி லொருவருமில்லை யென்றும்சீஷர்களும் சாதுக்களும் புகழ்ந்துக் கொண்டே போயினார்கள்.

இந்தப்படியாக இந்தரசிகமுராரியான யிவர்வெகு கீர்த்திபெற்றவராய் இருக்கையிலிவருக்கு குருநாதராகிய தயார்ணவரென்பவர் பரமக்ஞான சம்பத்தியிலும் கைசாந்தி சமதமாக நற்குணங்களில்செழித்து அருமையாகிய ஒருசாளக்கிராமத்தை வைத்து அதற்குமெத்தப் பிரியமாகப்பூசித்துக் கொண்டும் வெகு புனிதராக பேரெடுத்து மிருக்கையில் அப்பட்டணத்தையாளும் அரசன் இந்ததயார்ணவரெனும் பரமசாதுவின் பக்திசிரத்தை நிஷ்டைமுதலானதுகளையு மறிந்து சந்தோசித்து அந்தவரசன் இந்ததயார்ணவர்செய்யும் பூசையின்பொருட்டு இவருக்கு நான்குக்கிராமங்கள் மானியமாகக் கொடுத்து ஓபரமபக்தசிகாமணியே இந்தநான்கு கிராமங்களும் ஏதுக்காகஉமக்கு கொடுத்தேனெனில் ஸ்ரீஹரியை பூசிப்பதற்கும் சாதுக்களை யாராதிப்பதற்குங் கொடுத்தேன் என்றுசொல்லிப்போயினான் உடனே அந்ததயார்ணவர் நமக்குத் தசரதராமருடைய தயையுண்டாயிற்றென்றுவெகுசந்தோஷித்து மெத்தநேமமாக பகவானுக்குப் பூசையும் சாதுக்கள் ஆராதனையுஞ்செய்து நாள்போக்கிக் கொண்டிருக்கையில்துஷ்டனொருவன் அந்ததேசமுழுமையும் இராஜாவாகவெடுத்துப் பணத்தைக் கட்டிப் பின்வரும் நஷ்டத்தையறியாமல் யதில் லாபஞ்சம்பாதிக்கலாமென்றெண்ணி ஒவ்வொருநிலத்திற்கும் கட்டணமாக யேர்ப்பட்டிருக்கும் வாயிதாபணங்களைக் கட்டும்படி சொல்லித்திட்டப்படுத்தி குடிகளிடத்தில் வாயிதாபணங்களை வசூல்செய்துக் கொண்டே வந்து தயார்ணவரது மானிய நாலுகிராமங்களையுஞ் ஜப்தி செய்கிறபோது அங்கிருந்தசிலர் இந்தநாலுகிராமங்களும் அரசன் அந்ததயார்ணவரெனுஞ் சாதுக்குமானியமாகக் கொடுத்ததாகும் இதைஜப்திசெய்வது ஞாயமல்ல அன்றியும்அவர் மெத்தசாது க்ஞானபக்திவைராக்கியத்திற் சிறந்தவர் ஆகையால் அவர்விஷயத்தில் தாங்கள் மன்னிக்கவேண்டியதே யென்றும் பலவிதங்களாகச் சொல்லியும் அந்தயிஜாராதரான் கேளாமல் ஜப்தியேசெய்து விட்டுப்போயினான்இந்தச்செய்தியை அந்ததயார்ணவரெனுஞ் சாதுவானவர் தன்சிஷ்யராகும் ரசிகமுராரிக்கொருசீட்டிலெழுதி ஒருசீஷனிடங் கொடுத்தனுப்ப அவனும் அச்சீட்டை யெடுத்துகொண்டுபோய் பிரசாதம் ஸ்வீகரித்துக் கொண்டிருக்கும் ரசிகமுராரியிடங் கொடுக்க அதையவர் பெற்றுக்கொண்டு ஓலைக்சுருளைப்பிரித்து வாசித்துக்கொண்டு மடிவஸ்திரத்துடன் கையையலம்பாமல்எச்சில்கையோடு புறப்பட்டு தன்ஆசான் வசிக்குங் கிராமத்தில்வந்து பார்த்து அங்கு அவரில்லாமற்போகவே அடுத்தகிராமத்திலிருப்பதாய் தெரிந்து அக்கிராமத்திற்குச் சென்று அவரைக்கண்டு பணிந்து போற்றக்கண்ட குருநாதன் ஓரசிகமுராரி இதென்ன மடிவஸ்திரத்துடன் எச்சில்கையோடு வருவதற்குக் காரணமென்னவென அதற்கவர் ஓபரமகுருநாதரே அடியேன் பிரசாதம் ஸ்வீகரித்துக் கொண்டிருக்கும்சமயத்தில் தங்களுடையக் கட்டளைப்பத்திரத்தை யான்கண்டு அப்போதிருந்தபடியே யான்வந்தேன் ஆகையால் நேமனமென்னவென அதைக்கேட்டந்த குருநாதன் வெகுவிதங்களாய் தன்சீஷனுடைய புத்திகூர்மைக்கி மிகவுங்கொண்டாடி அவர்கரங்களை யலம்பிச்கொள்ளச் செய்து சொல்லுகின்றார் ஏளும்ரசிகமுராரி துஷ்டனொருவன் இந்நகரத்தைச் சேர்ந்த கிராமங்களை யெல்லாம் தன் பேருக்கு இஜாராசெய்துக் கொண்டபடியால் ஹரியைப் பூசிப்பதற்கும் சாதுக்களை யாராதிப்பதற்கும் அரசன் இனாமாகக்கொடுத்த நாலுகிராமங்களையும்ஜப்திசெய்தான் ஆகையால் ஹரிபூசைக்கும்பாகவத ஆராதனைக்கும் கஷ்டமாய்விட்டது மேலும் அந்தயிஜாராதாரனுக்கு யெத்தனை விதத்தில் ஞாயங்களை யெடுத்தோதினபோதிலும் அவன்கேளாமற் போய்விட்டான் ஆதலால் நீயவனிடஞ் சென்று பகவதாராதனைக்கும் பாகவத ததியாராதனைக்கும் விக்கினம்நேரிடாவண்ணம்பேசி அந்த நான்கு கிராமங்களையும் லைக்

கொண்டு வரக்கடவாயென்று நேமிக்க அந்தரசிகமுராரியும் ஆசான் னேமனப்படிக்குஇஜாராதாரனூரையடுத்து விடுதிவீட்டினில் வசித்துக்கொண்டு அங்கு தன்னைச் சூழ்ந்திருக்குஞ் ஜெனங்களைநோக்கி ஒகிராமஸ்தார்களே ஸ்ரீஹரியின் பூசையின்பொருட்டும் பாகவத ததியாராதனையின் பொருட்டும் அரசன்குருநாதருக்குக் கொடுத்த மானியமாகும்நான்குகிராமங்களையும இஜாருதாரன் கைப்பத்திக்கொண்டபடியால் அவனிடத்திற்குயான் போய்வருகிறேனென்று சொல்ல இதைக்கேட்டந்த கிராமஸ்தர்கள் இதுவிஷயத்திற்குத் தாங்கள் போகவேணுமா வேண்டாம் நாங்கள் போய் பேசியந்த மானியக்கிராமங்கள் நான்கையும் பெற்றுக்கொண்டுவருகிறோமென அதற்குரசிகமுராரி உங்களிஷ்டப்படியே செய்யுங்களென்றுசொல்லஇவர்களிற் சிலர் அந்தஇஜாருதாரன் விஷ்ணு துரோகியானதால் பகவானுக்குக் கொடுத்த மானிய கிராமங்களைக் கைக்கொண்டான் அவனுக்கென்ன சொன்னபோதிலும் நம்முடையவார்த்தைகளைக்கேளான் இது மெத்த கஷ்டமாகுமென்று சொல்லக்கேட்டு ரசிகமுராரி இதென்னகஷ்டம் மெத்தகலகமுண்டாகும்போலத் தோனறுகின்றதென்று நவிலுகையில் இதற்குள் சிலபேர் இஜாருதாரனிடஞ் சென்று சொன்னார்கள் அதென்னவெனில் ஓஐயா இஜாருதாரரே தன்னுடைய குருநாதருடைய மானியகிராமங்கள் நான்கையுங் கைக்கொண்டு போவதற்காக ரசிகமுராரிதாசர் நமது பட்டணத்துக்குள் வந்திருக்கின்றார் அவர் ஸ்ரீஹரியின்னாமத்தைச் சொல்லி யாவரையும்மோகிக்கச் செய்யுஞ்சக்தி யுடையவரென்று சொல்லக் கேட்டு அந்த இஜாருதாரன் மாவட்டியானை அழைத்துஅடா மாவட்டிக்காரனே சீக்கிரம் நமதரசனுடைய மதங்கொண்டயானையையுஞ் சேவகர்களையும் அழைத்துக் கொண்டுபோய் ரசிகமுராரி தாசரைக்கண்டு மார்க்கத்தில் வழிவிடாமற்றரித்து அவனை யானைக்காலினலை மிதிக்கச்செய்யக்கடவாய் அப்படி நீசெய்து வருவையாகில் உனக்கு வெகுதானங்களை இனமாகக்கொடுக்குறேனென்றுக் கட்டளையிட்ட மாத்திரத்தில் அந்த மாவட்டியானும் மெத்தசந்தோஷத்துடன் கன்னமதங்கபோலமதமென்று சொல்லப்பட்ட மும்மதங்களும் பொழியாநின்ற யானைமின்பேரி லேரிக் கொண்டுஞ் சிலசிப்பந்திகளையும் அழைத்துக்கொண்டு யானையை விரைவாக மார்க்கத்திற்செலுத்திக்கொண்டுபோகிறபோது ரசிகமுராரிதாசர் சிஷர்கள்சூழ பஜனை செய்துக்கொண் டெதிர்ப்பட அப்போதந்த நகரஜெனங்களும் தன்னைப் புடைச்சூழ்ந்து ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனைகளைக் கேட்டானந்தித்தவா அதுசமயத்திலொருவன் ரசிகமுராரியைப் பார்த்து ரகசியமாகச் சொல்லுகின்றான் ஓசுவாமி அந்தயற்பனாகிய இஜாருதாரன் உம்மைக் கொல்லும் பொருட்டு இந்தயானையையனுப்பினான் அன்னியிலுமிந்த யானைக்குமும்மதமும் பிடித்திருப்பதால்அதுவும்ஆங்காரத்துடன் அட்டகாசஞ் செய்துக்கொண்டுவருகின்றது பாருமென்ற மாத்திரத்தில் அந்தரசிகமுராரி தாசரும் தான்முன்னுதாகச்சென்று அந்த மதம்பிடித்த யானையையெதிர்த்தார் அதைக்கண்டு சிஷர்கள் ஓசுவாமிஇதுநம்மையெல்லாங் கொல்லுவதற்கே வருகின்றது. .ஆகையால் நாங்களெல்லோரும்ஒட்டமாயோடிப்போகிறோமென அதற்குரசிகமுராரிதாசர் அவர்களைநோக்கி ஓசிஷர்களே! குருநாதனுடைய உபதேசத்தைப் பெற்றதற்கு அடையாளமாக சூத்திரக் கயிறுங்கள் கழுத்தினிற் போட்டுக்கொண்டு இன்னாருடைய சிஷர்களென்று லோகப்பிரசித்தியாய் திரிந்தது வீணுக்கே யல்லவா அன்றியுங் குருநாதருக்கொரு ஆபத்துவந்த காலத்தில் அதற்காகமுயன்று தன்பிராணனை விட்டபோதிலும் ஒருகைப்பார்த்து விடாமல் அர்த்தம் பிராணன் ஆக்கையென்னு மிம்மூன்றும் ஆசானாதீன மென்றுச் சரணாகதி யடைந்த உங்கள் திரேகத்தின்மீது நீங்களே! ஆசையைவைத்து வேஷதாரிகளாகி வாசாகைங்கரியஞ் செய்தவர்களாகின்றீர்களேயன்றி உண்மையிலேயே ஆசானுக்கர்ப்பணஞ் செய்த உங்கள் திரேகத்தைக் காப்பாத்திக்கொள்ளும் பொருட்டு சுதந்திரப்பட்டீர்களல்லவா எப்போதிந்த துர்ப்புத்தியுங்களுக் குண்டாயிற்றோ அப்போதே ஆசானதுமுத்திரையாகியும் உங்கள்கழுத்தினில் தரித்திருப்பதாகியுமிருக்குஞ் சூத்திரக்கயிற்றைக் கொடுத்துவிட்டு போங்களென்றவுடனே அவர்கள் தங்கடங்கள் கழுத்தினில் போட்டிருக்கும் பவித்திரமாலைகளைக் களைந்துக் கொடுக்க அந்தபவித்திரமாலைகளைப் பெற்றுக்கொண்டுபோய் வாருங்களென்று சொல்லி யனுப்பினார்.

இவ்வண்ண மந்தச்சிஷர்கள் சூத்திரமாலையைக் களைந்துக் கொடுத்துவிட்டுப் போயினபின்பு|அந்தரசிகமுராரிதாசர் மனதில் கவலைகொள்ளாமல் தானொருவராகப் பாடிக்கொண்டு யானையெதிரினிற் செல்லுகையில் எப்புவவத்தினிலும் வியாபித்திருக்கும் ஸ்ரீபதியாகிய வரதனுஞ் சர்வவேஸ்வரனும் பொருந்தியிருக்கையில் நாமேன பயப்படவேணும் யாவத்துமானகாரியங்களும் அவரே நடத்துவாரென்றுபாடிக் கொண்டே தன்மனதைக் குவியச்செய்திருக்க அப்போதந்த யானையானது விரைந்துவந்து ரசிகமுராரிதாசர் திருவடிகளில்விழுந்து பணியக்கண்டு அந்த

ரசிகமுராரிதாசர் சிஷர்கள்கொடுத்துப்போன சூத்திரமாலையி லொன்றை அந்தயானையின் கழுத்தினிற் போட்டுஸ்ரீராமதாரகமந்திரத்தை யதற்குபதேசித்து அதற்குண்டாயிருந்த கொடியகுணங்களை யெல்லாம் போக்கிஉடனே யதின்மதத்தை யடக்கி யாட்கொண்டார் உடனே அந்தயானையானது அடக்க ஒடுக்கத்துடன் சாந்தகுணத்தை வகித்திருக்க அதைக்கண்டுசாதுக்களும் வெகுஜனங்களும் பிரியமதிகரித்து மகத்தான ஆச்சரியமடைந்து உடனே இஜாருதாரனுக்கு இந்த ஆச்சரியச்செய்தியைத் தெரியப்படுத்தினார்கள் அவனுமதைக்கேட்டு இதென்னவிந்தையா யிருக்கின்றது இப்படியும் உலகத்தினில் நடந்ததுண்டோகதையிலேனும்பார்த்ததுண்டோகேழ்வியாகிலுமுண்டோ இல்லையேயென்று ஆச்சரியப்பட்டவனாகி உடனேபுறப்பட்டுவந்து அங்குநடந்திருக்கும் அதிகவிந்தையைத் தன்கண்களாரக் கண்டு திரேகம்பூரித்து மயிர்க்குச்செறிந்து அந்த ரசிகமுராரிதாசர் திருவடிகளில் விழுந்து பணிந்து எழுந்து ஓசுவாமி தங்களுடைய மகுத்துவத்தை யறியாதவனாகும் யான்செய்த குற்றத்தை க்ஷமித்தாட்கொள்ள வேணுமென்றுமெத்தவும்வேண்டிக்கொள்ள அந்தரசிகமுராரியும் இஜாருதாரரைக் கருணையுடன் பார்த்த மாத்திரத்தி லந்த இஜாருதாரருக்கு மெத்த சந்தோஷமுண்டாகி ஓரசிகமுராரிதாசரே உமக்கென்னகோரிக்கை யதைத் தெரியப்படுத்தினால் அக்கோரிக்கையைத் தருகிறேனென அதற்கு ரசிகமுராரி தாசர் ஓஇஜாருதாரரே பகவானைப்பூசிப்பதற்கும் பாகவதர்களை யாருதிப்பதற்கும் அரசன் எனதுகுருநாதருக்கு மானியமாகவிட்ட நான்குக்கிராமங்களையும் தயவுசெய்து கொடுக்கும்படிக் கோருகிறேனெனக்கேட்டு அந்தஇஜாருதாரனும் அந்தப்படியே சன்னத்தெழுதி தயார்ணவருக்கென்று கொடுக்க அதைரசிகமுராரி கைப்பற்றிக்கொண்டு அந்தப்பத்திரிகையை தன்குருநாதராகிய தயார்ணவரிடமீந்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டுபோகிறபோது அந்த யானையானது ரசிகமுராரிதாசர் பின்னடந்துச்செல்ல அவரும் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டேபோக யானையும்பின்தொடர்ந்துவரச்சென்றுதன்னூரையடைந்து இடைவிடாமல் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டு பலசிஷர்கள் தன்னைச்சூழ்ந்திருக்கக் கமலம்போக்கிக் கொண்டிருந்தார்.

இந்தப்படிக்கி இவரிருக்கிறபோது அந்தயானையானது பொழுதுவிடிவதற்கு முன்னமேகானகத்திற்குச்சென்று தென்னமட்டைகளும் கோரைப்புற்கள் முதலான தனக்குணவாகும்வஸ்துக்களை சேகரித்துத் தன்முதுகின்மீதுச் சுமந்துக்கொண்டுவந்துத்தன்குருநாதன் வசிக்குமிடஞ்சேர்ந்து அவர்கிருபா நோக்கத்திற் கெதிர்பார்த்துக்கொண்டு மிருக்க இப்படி வெகுநாள்கள் கடந்துபோகப் பின்பொருநாள் பக்தர்கள் வெகுபேர் கூட்டமாய்ச்சேர்ந்து பஜனைசெய்துக்கொண்டு யாத்திரை செய்யவேணுமென யோசித்து சகல சாமான்களையும் யானையின்மீதேத்திக் கொண்டு பல கருவிகளுடன் சாக்ஷாத் பண்டரிநாதனைப்பாடி யாடி தன்னைமறந்து போகிறபோது யானையும் அவர்கள் பின்னடக்க மார்க்கத்தினில் சோரர்கள்வரஅவர்களை யந்தயானையானது துரத்தித்துரத்தியோடி அவர்கள் கையுங்காலுஞ் சலித்துப் போகும்படிச்செய்யஅந்தக் கஷ்டத்தினால் மெத்த வருத்தமுற்று வந்தவழியைப் பார்த்தோடினார்கள் அன்றியும் துளசிமாலையுடன்ஊர்த்துவ புண்டரங்கள்தரித்து ஸ்ரீராமநாமத்தைப் பாடுஞ் சாதுக்களை அந்தயானையானது கண்டால் அவர்களை அன்புகூர்ந்துப் பார்த்தும் அன்னியர்களைப்பார்த்தால் மனவெறுப்பு மடைந்துக்கொண்டேசெல்லும் இவ்விதமாக வெகுதிவ்யதேச யாத்திரைகள்செய்துக்கொண்டு சாதுக்கள் யானையுடன் போகதிரிகரணசுத்தியுடன் குருக்ஷேத்திரத்தைக்கண்டு நன்றாய் சுத்திப்பார்த்துக்கொண்டேசென்றும் மிகச்செழித்துந்தழைத்தும் பூர்த்துங் காய்த்தும்பழுத்தும் விளங்குஞ்சோலைகள்சூழ்ந்த அருணவதியெனும் நகரத்தைக்கண்டு அங்குஅழகமர்ந்த சோலையிலிவர்கள் யானையுடனிறங்கி ஸ்னானுட்டானங்களை முடித்துப் பிரசாதஞ்செய்து பகவானுக்குக் கண்டருளப்பண்ணி அப்பிரசாதத்தை யாவரும் ஸ்வீகரித்து ஆனந்தமாக பஜனைசெய்துக்கொண்டிருந்தார்கள் அதையவ்வூரார்கண்டு அற்பனாகிய அவ்வூரரசனாகும் நவாப்பினிடஞ்சென்று ஓபாக்ஷாவே நமதுபட்டணத்திற்கு வெளியில் சிலவிஷ்ணுபக்தர்கள் யானையுடன வந்திரங்கி யிருக்கின்றார்கள் அந்தபக்தர்களை அவ்வியானையானது மெத்தபக்தி விசுவாசத்துடன் வணங்கி அவர்கள்சொற்படி நடக்கின்றதென்று சொல்லியவுடன் அந்தவரசன் அவ்வியானையை தனக்காகவேண்டியது ஆகையால்உடனே அந்தயானையைக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டவுடன் சிப்பாயிகள் அங்குசென்று ஹரிபக்தர்களைக்கண்டு ஓசாதுக்களே இந்தயானை யரசனுக்குஇன்பமாகி யிருக்கின்றது ஆகையால் யானையைக்கொடுங்களென்று கேழ்க்கிறபோது அதற்கவர்கள் இந்தயானையானது மாயாசம்பந்தத்தி லுழலும் பாமரர்களைக் கண்டால் இதுஎளிதினில் விடமாட்டாது ஹரிபகதர்களாகிய எங்கள் சேவையில் அனுபவப்பட்டிருக்கின்றது இப்படிப்பட்ட மகா தெளிவுடைய இந்தயானை

யை உங்களரசனுக்கு யெப்படி கொடுப்போம் என்ற வசனத்தைக்கேட்டு அந்தசிப்பாயிகள் இச்செய்தியை யரசனுக்குத் தெரியப்படுத்தின மாத்திரத்தி லந்த நவாப்பு மாவட்டியானையழைத்து நீ மாறுவேடத்துடன்சென்று அந்தயானையை யிவடத்திற்குக்கொண்டுவரக் கடவாயென்று கட்டளையிட அந்தப்படியே மாவட்டியானும் பனிரெண்டு திருமணி ஸ்ரீசூர்னபுண்டரங்களும் கழுத்தில் துளசிமாலைகளையுந் தரித்து வாக்கினால் விஷ்ணு நாமசங்கீர்த்தனஞ் சொல்லிக்கொண்டும் யானையினிடத்திற்குவந்து நிற்கிறபோது அந்த யானையும் பகவந்நாமத்தைக் கேட்டு என்றுமில்லாத சந்தோஷமடைய அதைக்கண்டு அந்த மாவட்டியானும் உடனே அந்தயானையின் கழுத்தின் மீதுட்கார்ந்து அதைநடத்திக் கொண்டுவந்து நவாப்பின்சமுகம் நிருத்தினான் இதைக்கண்டந்த யானையானது ஆஹா யிவன் நம்மைக் கபடவேடம்புனைந்தன்றோ கொண்டு வந்தானென்று மனம்நடுங்கி இன்றுடன் ஸ்ரீஹரிநாமங் கேழ்ப்பதும் சாதுக்கள்சேவை செய்வதும் நமக்கின்றோ டொழிந்துபோயிற் றென்று மெத்தவிசனப்பட்டிருக்கிறபோது அந்த மாவட்டியானும்யானையை ஒருகொம்பினிற் கட்டிவைக்க யானையானது கோபமின்றி ஒருவாரபரியந்தம் வெகுதுக்கத்துட னிருக்க ஏழாவதுநாள் அவிடத்தில் மாவட்டியான் கெங்கைக்கு யானையைநடத்திக் கொண்டுபோக வெகுநாளாய் சாதுக்கள் சேவையும் ஹரிநாமசங்கீர்த்தனமும் செய்துங் கேட்டுக்கொண்டு வழக்கப்பட்டிருந்துஇப்போதொருவாரமாய் பாமரர்களுடைய சங்கமம் நமக்கு நேரிட்டதே இதற்கென்ன செய்கிறதென்றும் நாம் நல்லசுகத்தை யடைந்திருந்து உடனே துக்கத்தையடையும்படி நேரிட்டதேயென்றும் இனியிந்த ஜென்மத்தை வைத்திருக்கத் தகாதென்று யோசித்து உடனே தன்பிராணநாதரான ரசிகமுராரிதாசரை யழைத்துக்கொண்டே பிராணனை விட்டுவிட்டது.

இவ்வாறு அந்தயானையானது பசுவுக்குநிகரானதாயிருக்கினும் சாதுசங்கத்தி லீடுபட்டிருந்த படியான மேலாகிய பதவியையடைந்தப் பின்பு அந்த ரசிகமுராரி முதலானசாதுக்களும்யானையின்குணமகுத்துவங்களையுந் தன்னிச்சையாய்ப் பிரமரந்திரம் பேதித்துக்கொண்டு அதின் பிராணன் போயினதற்காக மெத்த ஆச்சரியப்பட்டு உடனேயப்பட்டணத்தை விட்டுப் பிரமானந்தைமடைந்த வர்களாகிப் பஜனைசெய்துக்கொண்டே நடந்து அவரவர்கள்வீட்டை நாடிச் சென்றார்கள் இதில்ரசிகமுராரியானவர் அந்தச்சாதுக்களைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு நடந்துதன்னுடைய வூரையடுத்துச் சிலகாலம் அரியைப்பாடியாடி அவர்கிருபையைத்தேடி சிஷர்களுடன் கூடியிருந்து முடிவினில் நிரதிசயானந்த வைகுந்தசம்பிராப்தியையடைந்து நித்தியசூரிகளுடன் கலந்து பரவாசுதேவன் சேவையினால் தன்னைமரந்து தலைவனிற் கலந்து சொக்கிக்கொண்டிருந்தார்.

வாழிவிருத்தம்.

தசதிசைதனிலுங்கீர்த்தித் தழைத்தோங்குதாரன்வாழி
இசையுடன்பாடி யெந்தையிணையடிபணிந்தோன்வாழி
பசையிலாதவரைக்கானில் பார்க்கவுஞ்சகியான்வாழி
ரசிகமுராரிதாசர் சரணென்றும்வாழிவாழி.

ரசிகமுராரிதாசர் சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீ ம த்

கானொபாத்திரை சரித்திரம்.

துதிவிருத்தம்.

மானெனும்விழியாள்மங்கை மாதுசிரோமணினியத்
தேனெனுமொழியாள்சிந்தை ஸ்ரீஹரின்யறிவேறுப்
பானெனும்பிரகாசங்கோடிப் பார்த்திபார்த்திபரொனுமறுவேனென்றக்
கானொபத்திரையின் கழற்கமலங்கள்போற்றுவோமே.

கதையின் வரலாறு.

அண்டர்கள்புகழும் பண்டரிபுரத்திற்குத் தென் திக்கினில் மண்டலம்புகழும மங்களவெடயெனும்பட்டணமொன்றுளது அப்பட்டணமானது பிரகாசத்தினில் சூரியனைப்போலவும் நக்ஷத்திரகூட்டங்களிற் சந்திரனைப்போலவும் புருடர்களில் உத்தம புருடனைப் போலவும் பட்டணங்களில் அமராவதிப் பட்டணத்தைப்போலவு மிலங்கிதுலங்கும் அதில்நீர்வளம் நிலவளமும் அதிகரித்துச் சோலைகள்தழைத்து மேடைமாளிகைளாலுங் கூடகோபுரங்களாலும் பிரமக்ஞானத்திற் சிறந்த பிராமணர்களாலும் மநுநெறிமுறையின்படி நீதிசெலுத்தும் அரசனாலும் மாதமும்மாரி பொழிவதாலும் காலத்தில் உழுதுபயிர்சொய்யும்வைசியர்களாலும் ஏவல்தொழில்களைச் செய்யுஞ்சூத்திரர்களாலும் பூமாதுக்கோர் புஷ்பமாலையைத் தரித்ததைப் போல விளங்கப்பட்ட அந்நகரத்தினில் கணிகையர் குலத்தினிலுதித்த சியாமளாவெனும் வனிதையொருவளுண்டு அவள்தங்கள் குலத்தொழிலாகும் இச்சைப்பட்ட புருடர்களைக்கூட்டிக் குலாவிக்கொண்டு வெகு பொருளைச் சம்பாதித்து சந்துஷ்டியடைந்துக்கொண்டிருந்தனள் இவளிந்தவடிக்கையி லிருக்கினும் பகவந்நாமத்தைச் சர்வகால சர்வதேச சர்வஅவஸ்தைகளிலும் இடைவிடாமல் தியானித்துக்கொண்டிருப்பாள் இவளுடைய பக்திக்கிமெச்சிச்சகலவடிவழகுகளிலுஞ் சிறந்த உத்தமமான சுந்திரமமைந்தப் பெண்குழந்தை யுண்டாகும்படிப் பகவான் கிருபைசெய்தார் அந்தப்படியே அந்தசியமளா கெர்ப்பிணியாகிப் பத்து மாதமும் பூர்ணமடைந்துப் பெண்சிசுவைப்பெற்றாள் அச்சிசுவுக்குப் பனிரெண்டு நாளானதே கானொபாத்திரையென்று நாமகரணமிட்டு தானதருமங்களைச்செய்து புத்திரோற்சவத்தைப் பிரமோற்சவமாகக் கொண்டாடி நாளுக்குநாள் வெகுசெல்வமாகவளர்த்துவந்தார்கள் அச்சிசுவுஞ் சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப் போல நாளுக்குநாள் விருத்தியடைந்து ஐந்துவயதானவுடனே பள்ளியிலோதவிட்டுச் சகலசாஸ்திரங்களிலும் தேர்ச்சியடையச் செய்தனர்கள் அக்குழந்தையும் வெகுசீக்கிரத்தினில் சகலகலைகளையும் ஓதித்தேர்ச்சியடைந்து அதிகரூபவதியாகி ரம்பைஊர்வசி முதலான தேவஸ்ரீகளுங்கண்டு நாணமடையவும் மானிடஜென்மத்திலுதித்த ஸ்ரீகளில் அதிகரூபவதியாகி விளங்குவதால் எல்லோருங்கண்டு இவளதுரூபம் விந்தையிலும் விந்தையாமென்று யாவரும்புகழும் படியானவடிவழகைப் பெற்றுச் சிறந்திருக்கையில் சியாமளா மெத்தசந்துஷ்டி யடைந்தவளாகிப் பாடகரைக் கொண்டுப்பாட்டும் ஆட்டகரைக்கொண்டு ஆட்டமுங்கற்பித்தாள் அந்தக் கானோபாத்திரையும் பாட்டுகளிலும்ஆட்டங்களிலும்மெத்ததேர்ச்சியடைந்தவளாகியுமிருந்தனள்.

இப்படிக்கிந்த கானொபாத்திரைபாட்டிலும் ஆட்டத்திலும் மெத்தவல்லமை யுடையவளாகி இருந்தபடியால் ஒருநாள்சியாமளா தன்புதல்வியாகிய கானொபாத்திரையை நோக்கி அடியம்மா கானொபாத்திரையே ஆட்டத்திலும் பாட்டத்திலும் நீமெத்தவல்லமையுடையவளாக விருப்பதால் நாளையதினம் இவ்வூரையாளும் அரசனிடஞ்சென்று உனக்குத் தெரிந்திருக்கும் பாட்டுகளைப் பாடியும் ஆட்டங்களையாடியும் வேந்தனுடைய மனங்களிக்கும்படி வல்லமையைக் காட்டுவாயாகில் அரசன்மெச்சி விலையுயர்ந்த ஆடையாபரனங்களையும் கணக்குமிதமில்லாததிரவியமுங்கெடுப்பனென்று சொல்லக்கேட்டு அந்தக்கானொபாத்திரைத்தன் அன்னையைநோக்கி ஓஅம்மணி எனக்குநிகரான அழகிலுங் குணங்களிலும் பொருந்தினவர்களிப்பூமண்டலத்திலில்லை ஆனால் சம்பத்துக்களில் விசேஷித்தஅரசர்களிருக்கின்றார்களென்பையோ அப்படி

சம்பத்தினில் அதிகப் பட்டவர்களாக விருக்கினும் இவ்வுலகத்திலுள்ள அரசர்களையேனும் மைத்துமுள்ளவர்களையேனும்யான்விரும்புவதேயில்லை ஆனால் நீயாரைதான் விரும்பிச் சேர்ந்தணைவாயென்பையோ என்மனதிலுத்தேசித் திருப்பது யாரெனில் ஜெனன மரணமில்லாதவனும் தனக்கு நிகரில்லாதவனும்ஊழி காலத்தினில் சகலசராசரங்களையுந் தன்குக்ஷியில் வைத்துக்கொண்டு காப்பாத்தும்படியானவனும் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டித்திதி சங்காரங்களைச்செய்யும் படியானவனும் பிரமருத்திராதி சகலதேவர்களும்புகழ்ந்துக்கொண்டாடும் படியானவனும் நித்தியமானவனும் நிர்மலமானவனும் தற்பரனானவனும் அத்திக்கருள்புரிந்த அற்புதனாகவும் விளங்கும் சாக்ஷாத்பாண்டுரங்கநாதனை யன்றிவேறு அன்னியபுருடர்களைக்கனவிலும் நினைக்கமாட்டேன் அப்படிக் கென்னிஷ்டமான நாயகர் எனக்கனுகூலப்படாமல் என்னையனாதரணை செய்வாரேயாகில் உடனே என்னுயிரைப்போக்கிக்கொள்ளுவேன் இதுசத்திய மென்றுசொல்லி அம்மாது வெகு தெளிவுட னிருக்கையில் தன்தாய் மகளைப் பார்த்து பச்சத்தாபப் பட்டுக்கொண்டிருக்க அப்போது சிலசாதுக்கள் பண்டரிபுரத்திற்கு செல்லுவதர்க்காகப் போவதை கேசவகிருஷ்ண கோவிந்தாயென்று வெகுபிரியத்துடன் ஹரியை பலவிதகருவிகளுடன் பாடிக்கொண்டு போகையில்அவர்களை யந்தக்கானோபாத்திரைக்கண்டுவிழுந்துபணிந்து எழுந்து ஓசாது சத்புருஷர்களே! இம்மார்க்கமாய் எங்குபோகுறீர்க ளென்றுவினவ அதற்கவர்கள்சொல்லியதாவது ஓஅம்மணி நாங்கள் பண்டரியாத்திரைக்குப் போகிறோமென்றும் அங்கென்ன விசேஷமெனில் ஸ்ரீமந்நாராயணன்புண்டரீகன்பொருட்டுநடந்து வந்து சேவைகொடுத்தத் தலமாகும் அன்றியும் அப்புண்டரீகன் பிரமருத்திராதி தேவர்களால் துதிசெய்யப்பட்டவராகும் மேலும் சுத்ததீரனாகி உன்னிதவிக்கிரஹசுந்தர ஆகாரமுடையவராகும் அன்றியும்தினகரன் பிரகாசத்திற்கு தேஜசுக்கொடுத்த திவ்யமாகிய பிரகாசனாகும் மவனும் எப்போதும் இருகரங்களையும் இடுப்பின்மீது வைத்தும் செங்கல்லின்மீது திருவடிகளைப் பொருந்தவைத்துக் கொண்டிருப்பவருமாகிய அந்தப் பரமாத்மனைச் சேவிக்கும் பொருட்டுப் போகிறோமென்று சொல்லியமாத்திரத்தில் அந்தகானோபாத்திரை யவர்களைநோக்கி ஓசுவாமிகளே! அடியாளுங்களுடன் பக்தியாகப் பஜனைசெய்துக்கொண்டு வந்தால் அந்த ஸ்ரீஹரிபரமாத்மன் என்னையும் ஆதரிப்பாரோ அல்லது யனாதரிப்பாரோ, அதற்கவர்கள் ஓகானோபாத்திரையே! கிருஷ்ணவதாரத்தில் கஞ்சனுக்குப் பரிமளகந்தங் கொடுத்துக்கொண் டிருந்த மூன்றுவளைவுடைய குப்ஜையாகுந் தாசியைமுன்னங் காப்பாத்திரக்ஷித்தது அன்றியும்அவளுக்குற்றக்கூனை நிமிர்த்து எவ்வனபருவ முண்டாகும்படி யருள்புரிந்தார் மேலும் கொடும்பாவியாகிய அஜாமீளனையும் சோகாமேளனையும் காத்த அந்ததயாநிதியாகிய ஸ்ரீ பாண்டுரங்கன் பதிதாளைப் பாவனம்பண்ணும் படியான புண்ணியநாமத்தை யுடையவன் இப்படிபட்ட பெருங் கீர்த்தியையுடைய அந்தப்பாண்டுரங்கநாதன் உன்னைக்காப்ப தவருக்கொரு லக்ஷியமோ என்றவர்கள் சொல்லைக்கேட்டு அந்தக் கானோபாத்திரைத்தன் தாயையடுத்து தெண்டனிட்டு விடைபெற்று வீணையையெடுத்துக்கொண்டு பண்டரிபுரத்தை நோக்கிச் சாதுக்களுடன் சென்றாள்.

இவ்வண்ணம் அந்தக்கானோபாத்திரை சாதுக்களைக் கூடிக்கொண்டு பிரமானந்தமாய் பஜனைசெய்துக்கொண்டு சென்றுப் பண்டரிபுரத்தையடைந்து சந்திரபாகாநதியிற் ஸ்னானஞ்செய்து பாண்டுரங்கனது சந்நிதிக்குட்புகுந்து விட்டலதேவனைக்கண்டு சேவித்துப் பரமானந்தங்கொண்டு ஓபாண்டுரங்கா பக்தசங்கா மோகனாங்கா பவபங்கா தேவரீரது அழகிய கீர்த்தியைச் செவியாரக்கேட்டு ஆனந்தமடைந்துத் தங்களைச்சேவிக்க வேணுமென் றவாமிகுந்து இங்குவந்தேன் சத்துவஷட்குண சத்திய சம்பன்னரெனும் ஆறுகுணங்களாகும் சம்பத்தும்உம்மிடமெப்போதும்விட்டு நீங்காமல் நன்றாய்பொருந்தியிருக்கும்அப்படிப்பட்ட நினதுதிருவடிகளில் சந்திராயுதத்தை யொத்த மனதினுடைய விருத்தியைக் கண்டித்து இன்றுசரணாகெதியடைந்தே னும்மை உத்தமமான குவிந்தமனதினாலே உம்மைப்பலவாறு புகழ்ந்தும் பாடியும் ஆடியும் இத்தலத்தில்தானே நிவாசஞ் செய்துக்கொண்டிருக்கின்றேன் என்றபோது மேலும் தடாகத்தி லிருக்கும் மச்சங்கள் மனிதர்களைப் பாதிக்காமல் நிம்மதியாக வதிலிருக்க அதுகளை இவ்வுலகத்திலுள்ள போயிகள் பிடித்துக்கொள்ளுகின்றார்கள் அதைப்போலக் கானோபாத்திரையின்மீது சிலர் விரோதங்கொண்டு பிதருபட்டணத்தையாளும் நவாப்பினிடஞ் சென்று சொல்லினார்கள் அதென்னவெனில் ஓஐயா நவாப்பே தேவஸ்ரீயைப்போலே அழகினில் மிகுத்ததிவ்யமான திரேகத்தைப் பெற்று பரமார்த்தத்துடன் பண்டரீபுரத்தினில் பக்தியுடன் தான்வாசஞ்செய்துக் கொண்டிருக்கையில் எப்போதும் ராதாருக்குமணி சமேதராய்நின்ற திருக்கோலத்துடன் சேவைசாதிக்கும்ஸ்ரீ பாண்டுரங்கன் சந்நிதானத்தில் ஆடுவதும் பாடுவதுமாக விருந்துக்கொண்டிருக்கின்றாள் அவளுடையநாம

தேயம் கானோபாத்திரை குலத்தினில்தாசி எந்தப் புருடனையும் விரும்பாமல் கன்னிய ஸ்ரீயைப்போல விருக்கின்றாள் அன்றியும் அந்தஸ்ரீ மெத்த நிதானமுடையவளும் திருத்தமான அழகினிற் சிறந்தவளும் வைராக்கிய முடையவளுமாகும் அப்படிப்பட்ட ஸ்ரீயை இவ்வுலகத்தினில் நாங்களெங்குங் கண்டதில்லையென்று சொல்லக்கேட்டு அந்தநவாப்பு தன்னருகினில் இருக்குஞ் ஜவான்கள் இரண்டுபேர்களை யழைத்து அடாஜவான்களே பண்டரிபுரத்துச் சந்நிதியில் பகவானுக்கு எதிரில் நடனபஜனைசெய்யும் கானோபாத்திரை யென்றொருவனிதையிருக்கின்றாள் அவளைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு வரும்படிக்கிக் கட்டளையிட்டான் அந்தப்படியே ஜவான்களிருவரும்நடந்து வாய்வேகமனோவேகமாகச் சென்று பண்டரிபுரத்தையடைந்து சந்நிதிக்கி வெளியிலிருந்து ஓகானோபாத்திரையே உன்னைநவாப்பு அழைத்துவரச்சொன்னாரென்ற மொழியை தெரியப்படுத்தியதால் அதைக் கேட்டம்மங்கை பாண்டுரங்கனுடைய திருவடித்தாமரைகளை மனதினில்நிறுத்தி ஓபகவானே! இவ்வுலகத்தினில் தேவரீரையன்றி அன்னியர்களெவர்களுமில்லையென்றும் நின்னையல்லால் வேறுகெதியில்லை யென்றும் விழுந்து சரணம்புகுந்தேன் என்னைக் கைவிட வேண்டாம் அன்றியும் குவிந்தமனதுடன் திருவடியைப் பிடித்துக்கொண்டு விடாமலிருக்கின்றேன்என்னையவர்கள் கையினில் காட்டிக்கொடுத்துக் கடக்கப் போய் நிற்கவேண்டாம் அப்படிக்கி என்னைக்கைநழுவவிடுதலால் உன்னுடைய விருதுக்குப் பழுதுவந்து நேரும் அன்றியும் நீபரமதயாநிதி யாகையால் உன்னைச் சரணாகெதி யடைந்த கபோதபரவையை முன்னம் அபயங்கொடுத்து ரக்ஷித்தையேயென்றும் இன்னும் அம்பரீஷனும் அஜாமீளனும் கரியரசன் முதலான பக்தர்களைக் காப்பாத்தினதெல்லாம் பிரசித்தியாக விளங்கிக்கொண் டிருக்கையால் யானுன்னையே அடைக்கலம்புகுந்தேன் கடைக்கண்பாரும நீசர்களையெப்படிமனமாரவணங்கி இணங்குவேன் ஆகையால் இந்தசமயத்தில் என்னைக் காப்பாத்தி ரக்ஷியும் அன்னியர்கள் சிறிக்காவண்ணங் கடைக்கண்பாரும் துஷ்டர்களுடைய சங்கத்தை இன்றே டொழித்துவிடும் என்றிப்படி யம்மங்கைப் பலவாறு துதிசெய்துக்கொண்டே ஆனந்தனடனம்புரிந்து மெய்சோர்ந்தபோது சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் அந்தக் கானோபாத்திரையின் பிராணனை யிழுத்துக்கொண்டவுடன் அவள் திரேகம் பூமியின்மீது விழுந்துவிட்டது அத்திரேகத்தை அர்ச்சகர்கண்டு யெடுத்துக்கொண்டுபோய் சந்நிதிக்குத் தென்திக்கினில்வைக்க அப்போதுஅந்ததிரேகம் வாழைமரமாயிற்றுநாளைக்கும் அந்தவாழைமரம் நேத்திரங்களுக்குப் புலப்பட்டு கொண்டே யிருக்கின்றது அப்போது நவாப்பினுடைய ஜவான்கள் வெளியிலிருந்தபடியே பிராமணர்களை யழைத்து ஓபிராமணர்களே! தாசி கானோபாத்திரையானவள் சந்நிதிக்குள்ளேபோய் வெகுநாழிகை யாயிற்று எத்தனைநேரம் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறது சீக்கிரம்வருகிறாளா இல்லையா இதைக்கேட்டுவந்து சொல்லுங்களென அதற்குப் பிராமணர்கள் ஓஜவான்களே! அந்த கானோபாத்திரை பண்டரிநாதன் முன்னம் பக்தியாய்ப்பாடியாடி சொக்கிச்சோர்ந்து ஜோதிரூபமாய் பகவான் திரேகத்தினில கலந்துபோயினள் என அதற்கு ஜவான்கள் ஓபிராமணர்களே! அந்தகானோபாத்திரையின் பிராணன் பகவானுடைய திரேகத்தினில்கலந்து போயினபோதிலும் அவளதுதிரேக மிருக்கவேணுமல்லவா அவள்திரேகத்தையாகிலுங் காட்டுங்களென அதற்குப் பிராமணர்கள் ஓஜவான்களே! அம்மங்கையின்திரேகம் கதலிமரமாகி விளங்கியது என அதற்கந்தஜவான்கள் இவர்கள்சொல்லுவது சுத்தப்பொய்யென்றுகருதி அந்தப்பிராமணர்கள் கரங்களைப் பிடித்திழுத்துக் கொண்டுவந்து நவாப்பினுடையசமுகம் நிறுத்தினார்கள் அப்போது நவாப்பு அடா ஜவான்களே! நான் கானோபாத்திரையைஅழைத்துக்கொண்டுவரும்படிக் கட்டளையிட் டனுப்பினால் நீங்கள் பிராமணர்களைப் பிடித்துக்கொண்டு வந்தீர்களே இதென்னகாரணமென அதற்கு ஜவான்கள் ஓபாதுஷாவே இப்பிராமணர்கள் கானோபாத்திரையையொளித்துவைத்துவிட்டு அவள் இறந்து போயினளென்று சொல்லுகின்றார்கள் ஆகையாலிவர்களைத் தங்கள்சமுகம் அழைத்துக்கொண்டு வந்துவிட்டோம் இவர்களை விசாரணைசெய்தால் உண்மை வெளியாகுமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் அப்பிராமணர்கள் ஸ்ரீபாண்டுரங்கனுடையப் பிரசாதத்தை யந்தநவாப்புனிடங் கொடுத்தார்கள் அப்பிரசாதத்தைநவாப்பு பெற்றுக்கொண்டு அதிலிருந்த புஷ்பத்தையெடுத்து முகருகையில் அந்தப்புஷ்பத்தினில் ரோமமொன்றிருக்கக்கண்டு அந்த நவாப்பு மெத்தகேபங்கொண்டு பகவானுக்குச் சாத்தினபுஷ்பத்தில் ரோமமிருக்க வேண்டிய காரணமென்ன சீக்கிரஞ் சொல்லுங்களென அதற்கந்தப் பிராமணர்கள் ஓதானீஷாவே சாக்ஷாத் பாண்டுரங்கன் சிரசினில் ரோமங்களிருக்கின்றது தாங்கள் பார்க்கவேணுமென்றால் வந்துப்பார்க்கலாம் என்ற சொல்லைக் கேட்டு அந்தத்தானீஷா மெத்த விந்தையா யிருக்கின்றதென்றுக் கருதி ஓபிராமணர்களே! பாண்டுரங்கநாதனை பெண்ணணங்கு எப்படிக் கலந்தாளென்றார்

அதற்கந்தப் பிராமணர்கள் கடலினில் உப்புசேர்ந்த
தைப் போலாமென அம்மொழிகளைக்கேட்டுப் பாது
ஷா இவர்கள்சொல்லுவது உண்மையென்றும் பொய்
யென்றும் நாமேபோய்க் கண்டறியவேணு மென்று
யோசித்து உடனே அந்தத்தானீஷா சகலபரிவாரங்
களுஞ் சூழப்பண்டரியை நோக்கிப் பிராமணர்களு
டன் புறப்பட்டுப் போகையில் அந்தப் பிராமணர்கள்
சாக்ஷாத் பாண்டுரங்கனை திரிகரணசுத்தியாய்த் தியா
னஞ்செய்யத் தொடங்கினர்கள்.

அதெப்படியெனில் முன்னம் ஹிரணியனிடம்
அகப்பட்டுக்கொண்டு மெத்த இடுக்கண்கள்பட்டபிர
கலாதாழ்வானை காப்பாத்தும் பொருட்டுத் தூணிலி
ருந்தும் வெளிப்பட்டு ஹிரணியனை இருபிளவாகப்
பிளந்துயிர் மாயச்செய்த நரசிங்கதேவா உமக்கு வந்
தனம் துரியோதனுதிகளை மாய்த்துப் பாண்டவர்க
ளைக் காப்பாத்தின ஸ்ரீகிருஷ்ண பகவானே! நினக்கு
வந்தனம் கோபாலர்களின் பொருட்டுத் தாவாக்கினி
யை விழுங்கிக் காப்பாத்தின கோபாலா நினக்குவந்
தனம் தேவேந்திரன் றனக்குப் பொங்கலிடுவதை மறு
த்து உமக்குப் பொங்கலிடும்படி கோபிகளுக்கு நேமி
க்க அன்னேமனப்படி யந்தகோபிகள்உம்மையுத்தே
சித்துப் பொங்கலிடக்கண்டு அந்ததேவேந்திரன்கடுங்
கோபங்கொண்டு சப்தமேகங்களையும் அழைத்து ஏக
காலத்தில் மழைபொழியும்படிக் கட்டளையிட அந்த
ப்படியே அம்மேகங்கள் யானைத்தும்பிக்கைகளி லிரு
ந்து கொட்டுவதுபோல ஏழுநாளிரவும்பகலும் ஓயா
மல் மழைபொழியக் கோபாலர்களுங் கோபிகைக
ளும் பிள்ளைகளும் பசுக்களும் அதின்கன்றுகளும்அம்
மழைக்குத் தாக்குப்பிடிக்காமல் பெருத்த அல்லோல
கல்லோலமாகிப் பதறிகதறியழுது புலம்புகிறபோது
கோவர்த்தனகிரியைச் சுண்டுவிரலில் தாங்கிக்குடை
யாகப்பிடித்து கோபாலர்களையும் கோபிகைகள் பிள்
ளைகள் பசுக்கள் கன்றுகள் முதலானவர்களையும் அக்
குடைக்குள்ளாக வருவித்துக்கொண்டு அவர்களுக்கு
ண்டாகிய பயத்தைப்போக்கி சந்தோஷத்துடனி நக்
கும்படிக் காத்துரக்ஷித்த கோபாலா உமக்குவந்த
னம் இன்னுமைத்துமுள்ளஜீவராசிகளுக்குண்டாகும்
இடுக்கண்களை யெல்லாம்போக்கிரக்ஷித்ததைபோல
எங்களுக்குண்டாயிருக்கும் இந்த ஆபத்தைப்போக்கி
யாண்டிரக்ஷிக்கவேணும் ஆபத்பந்து அனுதரக்ஷகா
ஆதிதேவா வாசுதேவா தேவதேவா மகானுபாவா
உமது திருவடிகளில் அடைக்கலம்புகுந்தோம் கடை
க்கண்பாரும் ஐயனே மெய்யனே துய்யனேசங்கா
ழிக்கையனே என்று பலவாறுதோத்திரம் பண்ணிக்
கொண்டே பண்டரியையடைந்து மண்டபத்துக்குள்
சென்று அங்குதானீஷாவை நிறுத்தி ஓபாக்ஷாவே
இதோபாரும் பகவானுடைய சிரசினிலிருக்கும் ரோ
மங்களை என்றுசொல்லிக் காட்ட அந்தநவாப்பும் பக
வானுடைய சிரசினிலிருக்கும் ரோமங்களையும்சுந்திர
மானமுகத்தையும் அப்போதலர்ந்த செந்தாமரைப்
புஷ்பங்களைப்போன்ற நேத்திரங்களும் சுகுமாரமா
னத்திருமேனியும் புன்னகையுடன விசாலமான மார்
பும இருகரங்களையும் இடுப்பின்மீது வைத்திருக்கும்
டீக்கும் எட்டுத்திசையானை துதிக்கைகளும் தோல்வி
யடையத்தக்க இரண்டுதுடைகளும் செந்தாமரை மல
ரைப்போன்ற திருவடிகளு மமைந்துவிளங்குந் திவ்ய
மாகிய சேவையளிக்கும் சாக்ஷாத்து பாண்டுரங்கனு
தனைச் சேவித்துப் பரமானந்தத்தை யடைந்து விழுந்
துபணிந்து எழுந்துநின்று ஓபிராமணர்களே உங்க
ளால் சொல்லக் கேட்டதைப்போலப் பாண்டுரங்க
விட்டலனைக்கண்டு சேவித்தேன் எனதுவாஞ்சைத்
தீரும்படி மனதில் பாவித்தேன் இதைப்போலவே
அந்தக் கானுபாத்திரை பூர்வத்திற்செய்தபுண்ணிய
பலத்தினுலே ஸ்ரீஹரியையடைந்தனள் இனிமையாக
வேயிருக்கும் என்றென்மனம் சந்தோஷித்து அன்றி
யும் பொய்சொல்லாத வாக்கையுடைய சாதுக்களான
உங்களையான் எனக்குண்டான அஞ்ஞானத்தினுலே
பலவிதங்களாகப் பரிக்ஷித்து பொய்யர்களென்றுமதி
த்து ஏதேதோ பேசிவிட்டேன் இந்தகுற்றத்தை யெ
ண்ணுது என்னை மன்னித்துச்காக்கவேண்டியதுங்கள்
பாரமென்றுவினவி அந்தஉத்தமியை வைத்த யிடத்
தைப் போய்பார்த்து அம்மாதின்திரேகம் கதலிமர
மாய் விருத்தியடைந் திருப்பதைக்கண்டு ஓமாதுசி
ரோமணி உன்னுடைய பதிவிரதத்தன்மையை யறி
யாமல் பாவியாகிய யான் உன்னுடைய வடிவழகைக்
கேட்டு இனியில்லாத சந்தோஷமடைந்து உன்னைக்
கூடிக்குலாவி மன்மதபாதையைத் தீர்த்துக் கொள்ள
வெண்ணின யென்மனதையுன் திருவடித் தாமரைக
ளில் பலிகொடுத்தாலும் என்னுடையபாவந் துலையு
மோ ஓமங்கைகளில் திருமங்கைக்குநிகரான உத்தம
மாதே யான்கொண்ட கெட்டவெண்ணத்தைக்கருதா
மல் க்ஷமித்துக் காப்பாத்தும் அம்மணியென்று விழு
ந்துபணிந்து ஆனந்தக்கண்ணீருதிர்த்துதன்பரிவாரங்
கள்சூழ நகரத்தையடைந்து அன்றுமுதல்பாண்டுரங்
கனை தியானஞ்செய்துக்கொண்டிருந்தான் ஆகையால்
இவ்வுலகின்கண் ஒவ்வொருவரும்பக்திசிரத்தையுடன்
பஜனைசெய்துக் கொண்டிருந்தால் பகவான்திரேகத்
தினில் ஐக்கியமாயின கானுபாத்திரையைப் போல
நாமும்பகவானிடத்தினி லைக்கியமாவதற்குயாதொரு
தடையுமே இல்லையென்பது திண்ணம்.

கானுபாத்திரைசரித்திரம்-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்க விட்டலாயநம:

ஸ்ரீ ம த்
சந்தோபாபாவரன் சரித்திரம்.

துதிவிருத்தம்.

சந்ததமுஞ்சிவாஜிராஜன் றளகர்த்தனாகிமெத்த
சிந்தைதனிற்புத்திரப்பேரில்லாமற் றிகைத்துநைந்து
பந்தமுடனுடன்பிறந்தான் பாலகரால்பத்திநேர்ந்தச்
சந்தோபாபாவரன் சரணங்கள்படிந்துய்வோமே.

கதையின் வரலாறு.

சிவாஜிமகாராஜன் ஆளுகைக்குள் இந்தசந்தோபாபாவரன் தளகர்த்தனாகியிருந்தார் இவருக்குவெகுமானியங்களும் சொந்தநிலங்களும் பலதருக்கள்நிறைந்தசோலைகளும் பசுக்கள் கன்றுகளின் சம்ருத்தியும் பலவிதசம்பத்துகளும் நிறைந்திருந்தும் ராஜகாரியத்தில் வெகுஜாக்கிரதையாய்நடந்துவருகிறபோதுஇந்த சந்தோபாபாவருக்கு ஏசுபாயெனும் மனைவியொருவளுண்டு இம்மங்கையானவள் மணாளனது இஷ்டப்படிக்கி இல்லறமே நல்லறமெனக்கருதி யதிலீடுபட்டுகொண்டு சிலவருடங்கள் கடத்திக்கொண் டிருந்தும் புத்திரபாக்கிய மில்லாததால் இம்மங்கைக் கணவனை நோக்கி ஓபிராணநாயகரே வேறொருமனைவியை தாங்கள் விவாகஞ்செய்துக் கொள்ளுவீரேயாகில் புதல்வர் பிறப்பதன்றியும் வம்சவிருத்தியாகுமென அதற்கந்த சந்தோபாபாவரன் அடிபெண்ணே எனக்கேவயதாய் விட்டது இனியொருபெண்ணை விவாகஞ்செய்துக்கொள்ளுவது தருமமல்ல அப்படியல்லவென்று விவாகஞ்செய்துக்கொண்டால் ஏதோ ஒருசந்தர்ப்பத்தி லுங்களிருவருக்கும் மனஸ்தாபநேரிடுமாகில் அப்போது யான் னடுநிலமையாய்ப் பேசவேண்டிய திருக்கின்றது அப்படியான் சொல்லுவதில் ஒருவர்பக்ஷம்ஞாயமும் மற்றொருவர்பக்ஷம் விரோதமுமாகவே நேரிடும் இதனாலெனக்கு மெத்தக்கஷ்டம்வந்து சம்பவிக்கும் ஆகையால் எனக்கு இன்னொரு விவாகம் வேண்டுவதில்லை அப்படிக்கியான் விவாகம் வேண்டியதில்லையென்றால் நமக்குப்பின்னிந்த சம்பத்துக்களை யெல்லாம் அனுபவிப்பவர்கள் யாரென்பையோ இதுகளை யெல்லாம் அனுபவிப்பதற்கு எனதுதம்பியின் குமாரர்கள் இரண்டுபேர்கள் இருக்கின்றார்கள் அவர்களை ஸ்ரீகாரமெடுத்துக்கொண்டு வித்தைபுத்திகளைக்கற்பித்துநாம் வளர்த்துக்கொண்டால் இந்தசொத்துகளை யெல்லாம் நமக்குப்பின்னிட்டு அவர்களனுபவித்துக் கொள்ளட்டுமென்று சொல்லித் தன்தம்பியின்புதல்வர்க ளிருவரையும் வரவழைத்து ஸ்ரீகாரமாகயெடுத்துக்கொண்டு நாளுக்குநாள் செல்வமாகவளர்த்து அவர்களிருவரையும் பள்ளியினிலோதவிடுத்து மெத்தப் பிரியமாகப் போஷித்துக்கொண் டிருக்கையில் ஒருநாள் அந்தசந்தோபாபாவரன் பிள்ளைகள் பள்ளிக்குச்சென்றுவாசித்துக்கொள்ளுகிறார்களே! அவர்கள்கல்வியைப் பரிட்சிக்க வேணுமென்றுன்னி உபாத்தியாயர் வீட்டை நோக்கி நடந்துவந்து உபாத்தியாயரைக் காணாமல், விசாரித்து வீட்டிற்குள் பூசைசெய்கிறாரென்றுத்தெரிந்து வீட்டிற்குள்சென்று பார்க்கையிலங்கு உபாத்தியாயர் பூசைசெய்வதைக்கண்டு அவரருகினில் போய் சொல்லத் தொடங்கினார்.

ஓஐயா உபாத்தியாயரே ஸ்னானஞ்செய்து மடிவஸ்திரந்தரித்து மணையொன்றைப் போட்டுக் கொண்டு யதின்மீதிலுட்கார்ந்து என்னமோ குணுகுணு மொணமொண வென்குறீரே அதென்ன சொல்லுமையாவென அதற்கந்த உபாத்தியாயர் ஓசந்தோபாபாவரரே எனக்கு சத்குருநாதர் உபதேசஞ் செய்த பரமமந்திர மிதுவென அதற்கு சந்தோபாபாவரன் ஓ உபாத்தியாயரே என்விஷயத்தில் கிஞ்சித்தேனுஞ் சந்தேகங்கொள்ளாமல் அந்தமந்திரத்தை நீயெந்தனுக்குரைசெய்யுஞ் சுவாமியென்று வேண்ட அதற்கு

உபாத்தியாயர் ஓசந்தோபாவரரே நீருமொருசத்குருநாதரையடுத்து மந்திரோபதேசஞ் செய்துக் கொள்ளும் யானென்னமோ வயிற்றுப்பாட்டுக்கு மந்திரஞ் செபிக்கின்றேனே யன்றி உண்மையிலேயே குருநாதனை சேவிக்கும்பொருட்டு மந்திரத்தை செபிக்கவில்லை யென்றதற்கு சந்தோபாபாவரன் ஓஉபாத்தியாயரே என்னுடைய மனமானது இப்போதுகுவிந்திருக்கின்றது ஆகையால் இப்போதேஉபதேசஞ்செய்தால் மெத்தநலமாகவிருக்கும் இந்தசமயந்தப்பினால் மனம் பலவிதத்திலும் சபலித்துவிடும் அப்போது உபதேசஞ்செய்யில் பிரயோசனமே இல்லையென்று சொல்லி குருபூசையின் பொருட்டு சாமக்கிரியை யாவத்தும் விரைவினிற் கொண்டுவந்து வைக்கப்பார்த்து அந்த உபாத்தியாயர் சந்தோபாபா வரருக்குத் திருமந்திரத்தை நன்றாக உபதேசிக்கக் கேட்டுச் சந்தேகங்கொண்டவராகி வேறொரு குருநாதரையடுத்து உபதேசம் பெற்றுக்கொண்டு அந்தகுருநாதருக்கு ஒருவீடும்வேண்டுமானதிரவியமும் ஆபரணாதிகளும் பாகஞ்செய்வதற்குப் பிராமணர்களையும் தாசீதாசஜெனங்கள் முதலானவைகளுங் கிருஷ்ணார்ப்பணஞ் செய்துக்கொடுத்துவிட்டு வெகுசந்துஷ்டராய் இருக்கிறபோதுசிவாஜி மகாராஜனிடமிருந்து தூதர்கள்வந்து ஓசுவாமி தளகர்த்தரே என்று அழைக்கக்கேட்டு அந்தசந்தோபாபாவரர் அத்தூதர்களையழைத்து இராஜசபையினிலென்ன விசேஷமென்று வினவ அவர்கள் அரசனாற்கொடுக்கப்பட்ட ஓலைச்சுருளைக் கைக்கொண்டு அழைப்பித்து வாசித்துப் பார்த்து உடனேதன் மனைவியாகிய ஏசுபாயியை யழைத்து அடிபெண்ணே நம்முடைய பிள்ளைகளிருவரையும் போஷிப்பதுடன் தினந்தோறும்சென்று ஆசானிடம்வணங்கி யவர்சொல்லும் நன்மார்க்கங்களைக் கேட்டுக்கொண்டிருக்கக்கடவாய்நான் அரசனுக்குப் படைத்துணையாய் யுத்தத்திற்குப்போய்வருகிறேனென்று சொல்லி யுத்தசன்னுத்தராய்ப் புறப்பட்டுப் போயினார்

இவ்வண்ணம் அந்தசந்தோபாபாவரர் தன்மனைவிக்குச் சொல்லித்தான் அரசனிடஞ்சென்று ரதகஜதுரக பதாதிகளும் தண்டத்தலைவர் அணித்தலைவர் படைத்தலைவர் யூகத்தலைவர் முதலானசதுரங்க பலங்களுஞ்சூழ வெகு தூரதேசத்தைநாடிச் சென்றார் இங்கே சத்குருநாதன் தனக்குச் சந்தோபாபாவரர் கொடுத்த தாசிஜெனங்களில் ஒருவளுடன் கூடிக்கலந்து மன்மதக்கிரீடை செய்துக்கொணடிருந்தார் ஏசுபாயியும் தன்கணவன் கட்டளையின்படித் தினந்தோறும் பிள்ளைகளைப் போஷித்துப் பள்ளிக்கனுப்பித் தான் ஆசானிடஞ்சென்று பகவற்குணானுபவங்களைக் கேட்டும் வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தாள் இப்படிக்கிருக்கிறபோது சிலர் ஆசானுடைய நடவடிக்கையைக்கண்டு ஏசுபாயியைநோக்கி ஓஅம்மணி தினந்தோறும் நீஆசானுடைய வீட்டிற்குச்சென்று நல்விஷயங்களைக் கேட்டுக்கொண்டு வருகிறையே இன்றுமுதற்கொண்டு இனிநீ யவரிடம்போவது தகுதியல்லவென அதற்கந்த ஏசுபாயி அவர்களைநோக்கி என்னை யாது காரணத்தால் போகக்கூடாதென்று தடைபடுத்துகிறீர்களென அதற்கவர்கள் உங்களாசான் நீங்கள்கொடுத்ததாசிகளில் ஒருவளைக் கூடிக்கலந்து சேர்ந்தணைந்துக்கொண்டு நல்விஷயங்களை யெல்லாந்துறந்து அதுவே தொழிலாக விருக்கின்றார் ஆகையால்உன்னையவரிடம் போகவேண்டாமென்று தடுத்ததற்கு இதுவே காரணமென அதற்கம்மாது அவர்களைநோக்கிநீங்கள் சொல்லுவது சரியேயானாலும் நாயகருடைய கட்டளையைமீறி யெப்படிநடப்பது அப்படிக்கவரிடம்போகாமலிருக்கினும் கணவன்கட்டளையைத் தவிர்த்தகாதகியாகியும் கார்த்தபத்துக் கிணையானவளு மாகின்றேன் அன்றியும் கணவனுரைத்தட்டி நடந்தவன் கணிகைக்குங் கீழ்ப்பட்டவள் பிராணநாயகரது மொழிப்படி நடந்தவளன்றோ மகாபதிவிரதை எல்லோரும் புகப்பட்ட மாதுசிரோமணி சொக்கமான கென்புமணி உத்தமகுணசிந்தாமணி மாசுமறுவிலாதமணி என்று சொல்லியவர்கள் மனதைத் திருத்தித் தினந்தோறுஞ் சென்று குருநாதரை இணங்கிவணங்கியவர் சொல்லும் குணானுபவங்களைக் கேட்டும் சந்துஷ்டியடைந்துக் கொண்டுவருவள் இப்படி யொருவருடகாலங் கடத்தியபோது சந்தோபாபாவரர் தன்னுடைய வீட்டைச்சேர்ந்து உடனே சகலஜெனங்களுங்கொண்டாடும்படி சத்குருநாதரிடஞ் சென்று சேவித்துஆனந்தமடைந்து ஆசியைப்பெற்று தன்வீடுசேர்ந்து அன்றிரவைப்போக்கி மருநாளுதையத்தி லெழுந்து ஸ்நானுட்டானங்களை முடித்துக் குருபூசைக்கு வேண்டிய சாமக்கிரியைகளைக் கொண்டு அவரைப்பூசித்து ஆனந்தமடைகிறபோது துஷ்டர்கள்சிலர் சந்தோபாபாவரரை நோக்கி உமது சத்குருநாதன் நீர்கொடுத்ததாசிகளில் ஒருதாசியுடன் கூடிக்கலவி செய்துக்கொண்டு அதுவிஷயத்திலேயே காலம்போக்குகிறாரே யன்றி அவருடைய பூசைமுதலானவைகளையுமறந்துவிட்டாரென்று சொல்லக்கேட்டு அந்த சந்தோபாபாவரர் மெத்தசந்தோஷ மடைந்து எனக்கு இதுபரியந்தம் தந்தைமாத்திர மிருக்கின்றாரே தாய்நமக் கில்லையே என்ற எக்கம் வெகுநாளாக விருந்தது அந்த எக்கத்தையும் பகவான் சீக்கிரகாலத்திலேதானே பகவான்

அனுகூலஞ்செய்து வைத்தாரென்றுசொல்லிக்கொண்டே பரமானந்தத்தை யடைந்து ஆசானையும் ஆசானுக்குகந்த பத்தினியையும் வெகுஆடம்பரமாகச் சகலருமறியப் பூசித்து விழுந்துபணிந்து எழுந்து வெகுவாகப் புகழ்ந்து கொண்டாடித் தன்மனைவிக்கிச்செய்திருப்பதுபோல ஆபரணாதிகளைச் செய்துக் கொடுத்தும் விலையுயர்ந்த ஆடைகளையுந் தருவித்துக் கொடுத்துத் தரித்துக்கொள்ளும்படி சொல்லிஅதையம்மாது தரித்துக்கொள்ளக் கண்டு எண்ணத்தரமாகாத சந்துஷ்டி யடைந்திருந்தார் மேலும் பிராமணர்களுக்குத் திருப்தியாகவே போஜனஞ்செய்வித்து யாவரும் புசித்தபின்பு தக்கபடிதக்ஷிணைகள் யீந்து உபாத்தியாயர் குருநாதன் தானும்வந்த பிராமணர்களுக் கெல்லாம் வந்தனந்தந்தனுப்பி வெகுகளிப்புட னிருந்தார்.

இவரிப்படி குருபக்தியிற் சிறந்திருப்பதற்கு சாக்ஷாத் ஹரியானவர் மெத்தசந்தோஷ மடைந்தார் அன்றியும் இந்தசந்தோபாபாவருக்கு க்ஞானபக்தி வைராக்கியம் இம்மூன்றுமுண்டாகும் படிக்கிக் கிருபைசெய்தார் சந்தோபாபா வரும் நாளுக்குநாள் க்ஞானபக்தி வைராக்கியமதிகரித்து துக்காராம்செய்திருக்கும் ஹரிகீர்த்தனையாகிய அபங்கைக்கேட்டுநற்குணங்களாகியவற்றை யெல்லாந் தனக்கொரு ஆபரணமாகப்பூண்டு வெகுசுகமடைந்து மனதைபகவானுடைய திருவடியில் லயிக்கச்செய்து உடனேதெளிந்து இந்த நரஜென்மமானது அழிந்துப்போகும் இந்தத்திரேக மிருக்கிறபோதே அழியாமலும் என்றுமிருப்பதுமாகிய ஸ்ரீமந்நாராயணனைச் சேவிப்பதினாலேயே மேன்மையாகிய சுகமுண்டாகுமென்றுக்கருதி உடனே அரசனிடந் தான்செய்துக் கொண்டிருந்த உத்தியோகத்தையும் விடுத்து தான்சேகரஞ் செய்திருந்த திரவியமனைத்தையும் ஏழைப்பரதேசிகளுக்குக்கொடுத்துச் சர்வசங்கபரித்தியாகஞ் செய்துத் துறவரியாகிச் சாதுவேஷம் புனைந்து வீட்டைவிட்டு வெளிப்பட்டு விட்டலவிட்டலவென்று சொல்லிக் கொண்டே வெகுதூரம்நடந்து பெட்டாவரமெனு மொரு சிவஸ்தலமுளது அந்த சிவஸ்தலமானது பீமநதி, கமடநதி எனுமிவ்விரண்டு நதிகளுக்கு நடுவினி லிருக்கின்றது அங்குபெருத்த காடுளது அதில் துஷ்ட மிருகங்கள் வசித்துக்கொண் டிருந்தன அவ்விடத்தில் ஒருவிடுதியேர்ப்படுத்திக்கொண்டு ஸ்ரீஹரிபஜனை செய்துக்கொண்டிருந்தார் இவரிங்கிப்படி ஹரிபஜனை செய்துக்கொண்டிருக்க அங்கே இவர்தாயார் தன்புதல்வன் சகலத்தையும்விடுத்துச் சன்னியாசி சாதுவேஷந் தரித்து காட்டைவிட்டுக் காட்டை யடைந்தச் செய்தியைக் கேட்டு வெகுவிதங்களாகப் பிரலாபித்து மருமகளைக் கட்டிக்கொண்டழுது உடனே ஒருவாராகத் தேறி வெகுசீக்கிரத்தில்தன்மருமகளுக்குப் பலவிதங்களாகிய ஆடையாபரணங்களால்அலங்கரித்து அடிமருகி நீ தடையொன்று மிலலாமலுன் னாயகனிடஞ் சென்று கண்டு எந்தவிதத்திலேனும் கையோடு அழைத்துக் கொண்டு வரக்கடவாயென்று கட்டளை யிட்டனுப்ப அந்தப்படியே யேசுபாயியும் விரைவாகநடந்து பெட்டாவரத்தைச் சேர்ந்து அங்குபஜனைசெய்துக் கொண்டிருக்கும் நாயகனைக்கண்டு விழுந்துபணிந்து எழுந்து நிற்கக்கண்ட சந்தோபாபாவரர் அடிபெண்ணே! உனக்கென்ன குறையிருக்கின்றது சகல சம்பத்துகளும் நிறைந்திருக்கும் வீட்டைவிட்டுக் காட்டினில் தனித்திருக்கும் என்னுடன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க உன்னால்முடியாது அன்றியுமிவ்விட முனக்கெப்படி தெரிந்தது நீயேனிங்குவந்தாய் சுகமாய் வீட்டினிலிருந்துக்கொண்டு காலத்தைப் போக்காம லிக்காட்டினிலென்னுட னிருக்க உனக்குத்தகுமா வென அதற்கந்த ஏசுபாயி என்பிரியமுள்ள பிராணநாயகரே பதிவிரதையானவள் தன்பதியைவிட்டுத் தனித்திருப்பதனால் பரகதியெப்படி யுண்டாகுமென அதற்கந்த சந்தோபாபாவரர் அடிபெண்ணே! யான்வைராக்கியசீலனாகி யிந்தச்சாதுவேடம் புனைந்துக்கொண்டு யிருக்குமென்னுடன் சேர்ந்திருப்பதற்கு உனக்குச் சரிப்படமாட்டாது ஏனெனில் மேலாகிய வஸ்திராபரணங்கள் தரித்துக் கொண்டிருக்கு முனக்குமெனக்கு மெப்படி சரிப்படும் என்னுடைய வேஷத்திற்கு உன்னுடைய வேஷம் ஒத்திருக்கின்றதோ ஒருக்காலும் ஒத்திருக்க மாட்டாது சகலத்தையும் விட்டுத் துறவரியான எனக்குஞ் சகலசம்பத்துகளையும் அனுபவித்துக்கொண்டு சுகத்தினிலிருக்கும் இல்லறத்தானுக்குமெவ்வளவோ பேதமிருக்கின்றதோ இதையோசிக்காம லென்னுடனிருக்க வெண்ணி நீ இங்குவந்தது ஞாயமல்ல போ போவென்றார் அவ்வசனங்களைக் கேட்டு அந்த ஏசுபாயி ஓசுவாமி மணவாளனைவிட்டுப் பிரிந்திருக்கும் மாது பதிவிரதை யாவாளா மணவாளனிடம் ஒருக்கணப்பொழுதேனும் வசனியாம லிருப்பவனும் மாதுசிரோன்மணி யாவாளா ஒருக்கணப் பொழுதேனும் மணவாளனுக்குத் தொண்டுசெய்யாம லிருப்பவளும் மானிடஜென்ம மெடுத்தவளா எப்படிப்பட்டக் கஷ்டம்வரினும் மணவாளனைவிட்டுப் பிரிந்துத்தான்மாத்திரஞ் சுகித்திருப்பவள் கணிகைக்குநிகராகும் மணவாளருக்கு நேரிட்ட விபத்தைத்தனக்கு நேரிட்ட விபத்தாகக் கருதாமலிருப்பவள் கார்த்தபத்துக்குநிகராகும் என்று நீதிசாஸ்திரங்கள் முறையிடுகிற படி

பால் அடியாள் தேவரீரைவிட்டுப் பிரியாமலிருக்கவெண்ணிவந்தேன் இதுபெண்ணாங் கொண்டுவந்தஅடியாளைத் தனித்துத் தாயார்வீட்டை யடைந்திருக்கும்படி நேமிப்பது தருமமல்லவென்று வெகுவாக அழுதுக் கண்ணீர்சோர விட்டுக்கொண்டு மெத்தவிசனப்படும் தன்மனைவியைநோக்கி அந்த சந்தோபாபாவரர் சொல்லுகின்றார் அடிஉத்தமமாதே நீஎன்னைவிட்டுப்பிரியமனமில்லாதவளாயிருப்பது உண்மையாகில் இதோ நீதரித்துக் கொண்டிருக்கும்படியான ஆடையாபரணங்களை யெல்லாம் களைந்து ஏழைப்பரதேசி களுக்குச் சீக்கிரங் கொடுத்து விடுவையாகில்.* என்னுடனிருக்கபெண்ணாங் கொண்டுவந்தவளென்று நம்புவேனெனச் சொன்ன மாத்திரத்தில் அந்த பதிவிரதத்தைத் தான் தரித்து கொண்டிருக்கஆடையாபரணங்களையெல்லாம் அக்கணத்திலேதானே கலைந்து எரிந்துவிட்டனள் அதைக்கண்டு அந்த சந்தோபாபாவரர் அதிகசந்துஷ்டராகி அடிபெண்ணே! உன்னை இப்படிப்பட்ட பதிவிரதையென் றறியாமற்போனேனே அடி பதிவார்த்தையைக் கடவாத பொற்பாவையே இலக்குமிக்கிணைரான பூவையே எனச்குள் ளடங்கிபிருக்கும் ஆவியே என்றுமழியாத சிரஞ்சீவியே என்று பலவாறுபுகழ்ந்துத் தன்னரையி லுடுத்தியிருந்த வஸ்திரத்தை இரண்டாகக் கிழித்து அதிலொன்றைக் கொடுத்து உடுத்திக்கொள்ளும்படிச்சொல்லி மற்றொருபாகத்தைத்தான் உடுத்திக்கொண்டு பகவத்தியானஞ்செல்திருக்கையில் அந்த சந்தோபாபாவரருக்கு அதிக பசியுண்டாகியதால் தன்மனைவியை நோக்கி ஓபெண்ணே! நீஇதற்கு அடுத்தகிராமத்திற்குச் சென்று பிக்ஷை யெடுத்துக் கொண்டுவந்து இப்போதெனக் குண்டாகிய பசியை போக்கக்கடவாய் அன்றியும் நமக்கு பந்துக்களாகயிருப்பவர்கள் நம்மிடத்திலிருக்கும் பக்ஷத்தில் நல்ல பக்குவமாகிய அன்னங்கள் முதலாகிய பக்ஷணங்கள் அல்லது திரவியமுதலான ஆபரணங்கள் கொடுத்தபோதிலும் அதற்காசித்து அதுகளைப்பெற்றுக் கொள்ளாத அவர் களிடத்தில் நாமிருக்கும் இந்தஸ்திதியைச் சொல்லாதே மேலும் நமக்குண்டாகிய சகல சம்பத்தும்விட்டுப் பரதேசிகளைப் போல இக்காட்டினில் நாமிருக்கவேண்டிய காரணமென்ன நாம்பிக்ஷையெடுத்து ஜீவனஞ்செய்ய வேண்டியஅவசியமென்னையோ? அந்த சம்பத்துக்கள் முதலாகியதும் அழிந்துபோகும் இந்தக்காயமு மழிந்துபோகும் நிசமே ஆகையால் என்று மழியாமலும் புனர் ஜென்மமில்லாமலும் செய்விக்கும் பொருளெதுவோ அந்தமகா புருஷனுடைய அருளைத்தேடிப் புனிதனாகும் பொருட்டு இந்தவேடம்புனைந்து இங்குவந்துத் தனித்திருக்கலாயினேன் ஆகையால் ஓபெண்ணே நீ யிதுகளை யெல்லாம் நன்றாயோசித்து உன்னுடையமனதையும் சாட்சாத் எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளில் பொருந்தவைப்பதுடன் பண்டரிநாதா, பங்கயபாதா புண்டரீகவரதா, புராணபுருஷா, பாண்டவபரிபாலா பக்தர்கட்கனுகூலா, பதவிதருஞ்சீலா, பந்தபாசங்களைப்போக்கும் மூலாவென்று வாக்கினாற்சொல்லுவதற்குச் சிறிதேனும் லஜ்ஜைப்படாமல் மானத்தை விட்டு வீடுகள்தோறுஞ் சென்று பிக்ஷையெடுத்துக் கொண்டு வரக்கடவாயென்று கட்டளையிட அக்கட்டளையை யந்தயேசுபாயிசிரமேற்கொண்டவ்ளாகித்தன் கணவன் திருவடிகளில் விழுந்து பணிந்து எழுந்து விடைபெற்றுக் கொண்டு அக்கானகத்தை விடுத்து அடுத்தகிராமத்தை நோக்கிநடக்கத் தொடங்கினாள்.

இவ்வண்ணம் அந்தஏசுபாயி தன்கணவன் கட்டளையின்படி அடுத்தகிராமத்தை நோக்கி வருகிறமார்க்கத்தில் முட்களும் பருகாங்கற்களும் நெருங்கியிருப்பதால் ஒருஅடிக்கி அரைநாழிகைகழிந்து போசின்றது யேனெனில் அந்தமுட்கள் காலில்தைத்துக்கொள்ளுவதால் அம்முட்களை லகுவாய்ப்பிடுங்கி யெரிவதற்கும் அதினாலுண்டாகிய பாதையைப் போக்குவதற்கும் காலஹரணமாய்க் கொண்டிருந்தது இப்படிஎங்கேபார்த்தாலும் கண்ட கவனமாகவே இருந்தமையால் அந்தயேசுபாயிக்கு மெத்த ஆயாசமும்சோர்வுமுண்டாகி ஒருநாளும் கால்நடையாகச்சிறிதுதூரமேனும் நடந்தறியாதவளாகையால் மெத்தகஷ்டப் பட்டுத் தன்கணவனுக் குண்டாகியபசியையெவ்வண்ணந் தீர்க்கப் போகின்றேன் இந்தக்கண்டகவனத்தை எப்படிகடக்கப் போகின்றேன் அந்தோநான்வந்து நெடுநேரமாயிற்றே பொழுதேபோயிற்றே பிராணநாயகர் பசியினால் யெப்படி தவிக்கின்றாரோ என்னடா போனவளை யின்னங் காணோமென்று கோவிக்கின்றாரோ என்று பலவாறு சிந்தித்துக்கொண்டே வருகையில் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டே மெல்ல மெல்லன அந்த கண்டகவனத்தைக் கடநதுக் கிராமத்தையடுத்து பகவந்நாமத்தைப் படித்துப் படித்துப் பிட்சை கேட்டுக்கொண்டே வருகையில் அகஸ்மாத்தாக தன்மைச்சினி வீட்டிற்குள்புகுந்து பிக்ஷைகேட்கையில அந்தமைச்சினியானவள் இதுயாரோ பெண்குரலாயிருக்கிறது இந்தஅகாலத்தில் வந்துபிக்ஷை கேட்கிறார்க ளௌன்றோடிவந்து அந்தயேசுபாயியை கண்டு ஆஹா உனக்கென்ன குறைவுண்டாகி நீபிக்ஷை யெடுத்து ஜீவனஞ்செய்யப் புனர்பட்டாய் உன்னுடைய சம்பத்துக்களை யெல்லாம் எப்படிவிட்டாய் நீயிப்படி

வருவதற்குக் காரணமென்ன நீஅணிந்துக் கொண்டிருந்த ஆடையாபரணங்களெல்லாமெங்கேபோயிற்று என்றுபலவாறு வினவிக்கொண்டே கட்டிக்கொண்டு அழுது அந்தயேசுபாயி மைச்சினியைத்தேத்திநடந்த விருத்தாந்தங்களையெல்லாஞ்சொல்லிஅவளுக்குண்டாகிய துக்கத்தையாற்றி அம்மா மைச்சினியே அங்கே என்கணவன் மெத்தப்பசியாக விருக்கின்றார் தயவு செய்து எனக்குச்சிலவு கொடுத்தால்யான்போய்இன்னொருசமயம் வருகிறேனென்று சொல்லக்கேட்டு அந்தமைச்சினி பூததயை பச்சாத்தாபமுடையவளாகித்தன் வீட்டிலிருக்கும் பூரிசர்க்கரை நெய்யுடன் சேர்த்துக் கொண்டுவந்து கொடுக்க அதையந்தயேசுபாயி பார்த்து ஓஅம்மணி சர்க்கரைநெய் சேர்க்காமல் வெறும்பூரிமாத்திரங்கொடுப்பையாகில் அதுஎன்பிராணநாயகருக்கு இனிப்பும் பிரியமுமாகவிருக்கும் சர்க்கரை நெய்சேர்த்தப் பூரி அவருக்குப் பிரியப்படமாட்டாது என்று வெகுவாகச் சொல்லித்தடுத்தும் அந்த மைச்சினிகேளாமல் எப்படியாகிலும் நீ இதைக் கொண்டுபோய் யுனது நாயகனுக்குக்கொடுத்துப்பசியாற்றுவதே சரியாகும் அப்படிக்கிச்செய்யாவிடில்விடோபாவின்மீது ஆணையிருக்கின்றதென்று சொல்லக் கேட்டு அந்தயேசுபாயிக்கிப் பதிலொன்றுஞ்சொல்ல முடியாமல் அந்தப் பூரிசர்க்கரை நெய்யுடன் யெடுத்துக்கொண்டுத் தன்கணவனிடஞ் சென்று ஜோல்னைப்பையை முன்னால்வைக்க அதைக்கண்டு அந்தசந்தோபாபாவரர் தனனுடைய மனைவியைநோக்கி அடிபெண்ணே! நான்முன்னமே யுனக்குச்சொல்லியனுப்பியுமதைகவனிக்காமல் சர்க்கரை நெய்சேர்த்தப் பூரியைக்கொண்டு வந்தையே இதினிடத்திலெனக் கவ்வளவாகப் பிரியமுண்டாகவில்லை ஆகையால் நீயிதை சீக்கிரமெடுத்துக் கொண்டுபோய் இதைக் கொடுத்தவர்கள் யாரோ அவர்களிடத்திலிதைக் கொடுத்துவிட்டு சாக்கரை நெய்யில்லாத பூரிகொடுத்தால் அதைப்பெற்றுக்கொண்டு வந்திடுவாயென்று மொழிய அந்தப்படியே யேசுபாயியும்திருமபி மார்க்கத்தினில்மெத்த வருத்தப்பட்டுக் கொண்டேசென்று மைச்சினி வீட்டையடைந்து நெய் சர்க்கரைசேர்ந்த பூரியைக்கொடுத்து நடந்தசெய்தியை யுரைத்து விடைபெற்றுக் கொண்டு திரும்பிவருகிறபோது மார்க்கத்தில் மழையினாலுண்டாகிய வெள்ளப்பெருக்கின் விந்தையை யென்னென்று சொல்லுவேன் ஆகிலும் அடியேன் புத்திக்கெட்டினமட்டில் விவரிக்கிறேனென்று இதைஎழுதுமவர் விவரிக்கத் தொடங்கினார்.

இந்தப்படி யந்தயேசுபாயி தன்கணவன் சொல்லியவண்ணம் சர்க்கரை நெய்சேர்த்துப் பூரியைக்கொடுத்துவிட்டுத் திரும்பிவருகையில் மேற்குத் திசையில் சூரியன் அஸ்தமித்து இராத்திரிவந்துசூழ்ந்துவானத்தில் மேகங்கள்கவிந்து மழைபெய்வதினாலும் வழிதெரியாமலும் இருள்கவிந்துக் கொண்டிருப்பதினாலும் மழையதிகத்தினால் சந்திரபாகாநதி இருகரையும் பிரண்டோடுவதினாலும் அந்த ஏசுபாயி சிந்தைகலங்கி ஐயோ இதற்கு நானென்ன செய்வேன் எவ்வாறு இந்தநதியைக் கடப்பேன் மின்னலினாலும் இடிகளாலும் கண்கள்சிதறி மெய்நடுங்குகின்றதே காரிருளால் வழிதெரியவில்லையே அடியெடுத்து வைக்க மெத்தப பயமாக விருக்கின்றதே அங்கேநாயகன்பசியினாலெப்படி தவிக்கின்றாரோ போனவளின்னுந் திரும்பிவரக் காணோமே மழையினாலும் வெள்ளப் பெருக்கினாலும் என்னமானாளோ எப்படி மனங்கலங்குகின்றாளோ வென்று நினைந்து நினைந்துருகி வாடுகின்றாரோ அல்லது வழிபார்த்துத் தேடுகின்றாரோ என்றும் அன்னியிலும் ஒபகவானே! அடியாளை யிக்கரையிலும் பிராணநாயகரை அக்கரையிலுந் தவிக்கச் செய்துப் பிரித்து விட்டீரே எங்களை யிக்கோலமாக்க உடன்பட்டீரோ யாரும் ஆதரவின்றித் தனியே தவிக்கின்றேனே! அனாதைகளுக்கு நாதா ஆபத்பந்தோ அம்புஜபாதா வேதவிநோதா விசுவம் பரசரீரா முரஹரி நரஹரி நந்தாமுகுந்தா கோவிந்தா வைகுந்தா இத்ததியில்வந்து ரக்ஷிக்கவேணும் என்றுப்பதரிக் கதரி முறையிடுகிறபோது சாக்ஷாத் பாண்டுரங்க நாதன் மெத்ததயை யுடையவனாகி உடனே. தானொரு ஓடக்காரனைப்போல வேடம்புனைந்து அங்குவந்து ஏசுபாயியை நோக்கி சொல்லத் தொடங்கினார்.

ஓஅம்மா பதிவிரதா சிரோமணியே இதோநான் வந்திருக்கின்றேன் பயப்படவேண்டாம்நான்யாரென்றால் இப்படிப்பட்ட வெள்ளம்பெருகி யோடுங்காலத்தில் யாராகிலும் இக்கரையிலிருந்து அக்கரைக்கும் அக்கரையிலிருந்து இக்கரைக்கும் போகவேணுமென்றும் வரவேணுமென்றும் மெத்தப்பரதவிக்கிற காலத்தில் அவர்களுக்குத் திடஞ்சொல்லிஎன்முதுகின்மீதேத்திக் கொணடுபோய் விடுவதே எனக்குத் தொழிலாகும் என்வார்த்தையை நம்பிவிரைவாகஎன்தோளின் மீது ஏறிக்கொள்ளுவாயாகில் உன்னையொருக் கணநேரத்திற்குள்ளாக அக்கரையில்கொண்டு போய்விடுகிறேன் என்சமர்த்தைப் பாரும் பயப்படாமலென்தோளின் மீதேறிக் கொள்ளுமம்மாவென்று சொல்லும் பாண்டுரங்கனாகிய ஓடக்காரன் சொல்லைக்கேட்டு அந்தஏசுபாயி சற்றாலோசித்து மனதைதிடஞ்செய்துக்கொண்டு உள்ளகருத்து வள்ளலுக்குத் தெரியுமன்

ரியும் பகவான்செயலின்படி நடக்கட்டுமென்றுமனோதிடங்கொண்டு அந்தஏசுபாயி ஒட்க்காரனை உட்காரச்சொல்லி அவன்தோளின்மீது ஏறிக்கொள்ள உடனே அந்தஓடக்காரன் ஒருகணப் பொழுதிற் குள்ளாகக் கொண்டுபோய் அக்கரையில்விடுத்து அந்தபகவானாகிய ஓடக்காரன் மாயமாய் மறைந்துபோயினார் அதைக்கண்டு அந்த ஏசுபாயி இதென்ன ஆச்சரியம் நம்மைத்தூக்கிக் கொண்டுவந்து இக்கரையினில் விடுத்த அந்த ஓடக்காரன் எப்படிப்போயினான் இதையோசிக்கையில் மனதுக்கு மெத்த ஆச்சரியத்தையும்விந்தையையும் விளைவிக்கின்றது ஆஹா நம்மைச்சுமந்து வந்தவன் ஓடக்காரனல்ல சாக்ஷாத் பாண்டுரங்கனேயாகும் நமக்குத் தெரிந்திருந்தால் விட்டுவிடுவேனோ என்றும் ஜெகதீசனாகியும் சகலஜீவதயாபரனாகியும் யாவத்துமானபிராணி கோடிகளின் உயிருக்குயிராகியும் உள்ளும்புறம்புமாகியும் எள்ளுக்குளெண்ணை போலவும் ஏகாந்தரூபனாகியும் விளங்கும் பாண்டுரங்கநாதன் நம்மைச் சுமந்துக்கொண்டு வந்துவிட என்னபாவஞ்செய்தேன் இந்த அபசாரத்தை எப்படிபோக்கிக் கொள்ளுவேன் அந்தவிடோபாவுக்குக் கஷ்டத்தைக் கொடுத்த இத்தேகத்தை நெருப்பினில்போட்டுத் துடிக்கத் துடிக்க வாட்டினாலும் இப்பாவம் தொலையுமோ வென்றும் ஓஜெகதீசா இக்கொடியபாவியாகிய அடியாளுக்கும் ஓடக்காரனாகிவந்து சுமந்துக்கொண்டு வந்துவிடவும் நீதியாகுமோ நானின்னவனென்று சொல்லித் தெரிசனந்தந்தார் உமது சொரூபத்திற்கு திருஷ்டியுண்டாகுமோ இத்தனைகிருபையுடன் வந்துக்காப்பாத்தின நினக்கு நானென்ன கைம்மாறு செய்வேன் என்று பலவாறு பிரலாபித்துக்கொண்டே தன்னயகனருகினில் வந்துபணிந்து நிற்கக்கண்டு அந்தசந்தோபாபாவரர் மெத்த ஆச்சரியப்பட்டுமாச்சரியங்கெட்டு ஓபெண்ணே எனதிருகண்ணே இந்த அடாமழையினால் வெள்ளம்பெருகி சந்திரபாகாநதி இருகரையும் பிரண்டோடுவ தன்னியிலும் மின்னலுங் குமறலும் இடிகளும் கண்களைவிழித்துப் பார்க்கக் கூடாமலும் விழிகள்சிதறிப் போகும்படியாகவு மிருக்கின்ற தன்னியிலும் கொடிய காரிருள்சூழ்ந்துக் கொண்டிருப்பதாலும் மார்க்கமுங் காணப்படா திருப்பதாலும் இத்தனைகஷ்டங்களையுந் தப்பித்துக் கொண்டெப்படி வந்தாய் சீக்கிரஞ்! சொல்லுமென அந்த ஏசுபாயி தன்கணவனை நோக்கிச் சொல்லத் தொடங்கினாள்.

கேளும் என்பிராணநாயகரே தங்கள் நேமனப்படி நெய்சர்க்கரைசேர்ந்தப் பூரியைக்கொண்டுபோய் எனது மைச்சினியினிடங் கொடுத்துவிட்டுத் திரும்பி வருகிறபோது மேகங்களானது வானத்தை மூடிக்கொண்டு இருள்சூழ்ந்து சோனைமாரி பொழிகிறது போல மழைபெய்தபடியால் சந்திரபாகாநதி இருகரையும்பிரண்டு வெள்ளம்பெருகி யோடியதாலும்இடிகள் மின்னல் குமுறல்களாலும் வழிதெரியாமல் ஒண்டியானதால் மெத்தப்பயந்து தேவரீர் திருவடிகளைச் சிந்தித்த மாத்திரத்தில் அடியாளுக்கு தைரியமும் சந்தோஷமுமுண்டாக்கின சாக்ஷாத் பாண்டுரங்கநாதனைப் பலவாறுத்துதிசெய்து முறையிட்டேன் அம்முறையைக்கேட்டுப் பகவான் ஓடக்காரனைப்போல வடிவங்கொண்டுவந்து என்னையாதரித்துக் தன்னுடைய தோளின்மீது அடியாளைச் சுமந்துக்கொண்டு வந்து இங்குவிடுத்து மாயமாய் மறைந்துபோயினார் யானுமந்த பகவானுடைய கிருபையினாலிங்குவந்து சேர்ந்தேனே அன்றியென்னுடையஇச்சையாலிங்குவரமுடியுமோ வென்றனள் இவ்வசனத்தைக்கேட்ட மாத்திரத்தில் அந்தசந்தோபாபாவரர் பரமானந்த சாகரத்தினில் மூழ்கினவராகித் தன்னுடைய மனையாளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு அடிபெண்ணே யுனக்கும் பாண்டுரங்கன்மீது பக்திவாய்ச்சுதோ மானாபிமானமெல்லாம் பரந்தோடிப்போச்சுதோ ஞானபக்திவைராக்கியமுண்டாச்சுதோ பரமானந்தவெள்ளம் பெருகிப்பாய்ச்சுதோ உனக்காக ஸ்ரீபண்டரிநாதன் ஓடக்காரனாகி வந்தாரென வந்து தன்னறிய சேவையைத் தந்தாரோ தந்தன்னைத் தோளின்மீது தாங்கிக்கொண்டிங்குவந்து விடுத்துச் சென்றாரோ என்தந்தையை சேவித்த நீயல்லவோ புனிதவதிநீயேயந்தலக்குமிக்கு நிகரானமதி உன்னுடைய பாக்கியத்தை யானென்னவென்று சொல்லுவேன் நீயல்லவே எனக்குகந்தசதி நினக்கு நிகரான பெண்களு முண்டோ யிவ்வுலகில் என்று பலவாறு புகழ்ந்தும் அடிபெண்ணே யனேகநாளாக யான் அந்தப்பாண்டுரங்க நாதருடையதெரிசனஞ்செய்ய வெண்ணங் கொண்டிருந்தேன் அவர் எனக்குத்தன் தெரிசனந்தராம லிருப்பதற்கு காரணம் யாதோ தெரியேன் ஆகிலுமிப்போதொரு வைராக்கியஞ் செய்துக் கொள்ளுகிறேன் அதற்காகிலும் தயைபிறந்து வந்து யெனக்கு தெரிசனந்தந்தால் தரட்டும் இல்லாவிடி லெத்தனை நாளாயினபோதிலும் பிராணனைவிட்டாலும் விடுவேனேயன்றி வைராக்கியத்தைவிட்டுப் பிரளமாட்டேன் அதென்ன வைராக்கியமெனில் அந்தபகவான்வந்து எனக்கு தெரிசனந்தருகிறவரையில் யான் எந்தவஸ்துவையும் புசிக்கிறதில்லை இதுசத்தியமென்று திடங்கூறிக்கொண் டிருக்கிறபோது சாபலகாமெனுங் கிராமத்தினில் வாசஞ்செய்து கொண்டிருக்கும்படியான கோமுட்டிஒருவர்

மெத்த பக்தியுடையவனாகி யிருந்தார் அவருடைய சொற்பனத்தினில் சாக்ஷாத் பாண்டுரங்கநாத ரெழுந்தருளி ஒபக்தசீலரே! சந்திரபாகாநதியுங்கமடாநதியுஞ் சந்தித்திருக்கும் தலத்தினில் சந்தோபாபாவரர் வாசஞ்செய்து என்னையிடைவிடாமல் தியானஞ்செய்துக் கொண்டிருக்கிறார் அவருக்கு நீபக்குவமாகிய அன்னத்தைக் கொடுத்துக் காப்பாத்துமென்றுசொல்லி மாயமாய் மறைந்துபோயினார் உடனே யந்தகோமுட்டி திடுக்கென்றெழுந்து பகவானைக்காணாமல் வெகுவாகப் பிரலாபித்து சீக்கிரமே சமையல்செய்து அறுசுவை யன்னமு மெடுத்துக்கொண்டு சந்தோபாபாவரரிருக்குமிடத்தை நோக்கிவந்து அந்த அறுசுவையன்னத்தையும் அங்குவைத்து சந்தோபாபா வருக்குத் தெண்டனிட்டு ஒசுவாமி! சாட்சாத் பாண்டுரங்கநாதன் நேற்றிரவினிலென் சொற்பனத்தி லெழுந்தருளி தேவரீருக்கு அறுசுவைபுடன் கூடிய அன்னத்தைச் சமைத்து உமக்கிடும்படி நேமித்தார் அவர்நேமனப்படி அறுசுவையன்னஞ் சமைத்து இதோ கொண்டுவந்து வைத்திருக்கிறேன் தாங்கள் தயவுசெய்து எழுந்து பிரசாதத்தை ஸ்வீகரித்து அடியேனைப் புனிதனாகச் செய்யுமையாவென்று வேண்டிக்கொள்ள அதற்கந்த சந்தோபாபாவரர் கோமுட்டியை நோக்கி ஒ ஐயா பரமசாதுவே உம்முடைய சொற்பனத்திலெழுந்தருளி அறுசுவையன்னங் கொண்டுவந்து எனக்குக் கொடுக்கும்படி நேமித்த அந்த பாண்டுரங்க நாதன் என்னிடம்வந்து என்கோரிக்கையாகிய தன்னுடைய தெரிசனந்தந்து இந்தப்பிரசாதத்தை ஸ்வீகரிக்கமாட்டேனென்று வைராக்கியஞ் செய்துக் கொண்டிருந்தார்.

இவ்வண்ணம் இந்த சந்தோபாபாவரர் புசிக்காமல் வைராக்கியசீலராக விருப்பதை ஸ்ரீபாண்டுரங்கநாதரறிந்து முழுதிலுஞ் சோதிக்கவெண்ணியிருக்கையில் இந்த சந்தோபாபாவரர் மெத்தசுகமாக வேளைக்குப்புசித்து படுக்கை முதலானதுகளிலுஞ் சவுக்கியக் குறைவின்றி யிருந்தவராகையால் ஒருபகலும்இரவும் ஆகாரமில்லாமற் போகவே பசியதிகரித்து காதுகளடைத்துக் கண்களிருண்டு நாவுலர்ந்து மெய்சோர்ந்து பூமியின்மீதுவிழுந்து மூர்ச்சையாகினார் இதைக்கண்டு ஸ்ரீஹரியானவர் ஒகோ மோசம்வந்துவிடும் இவனுயிர் பிரியுமாகில் நாமிதற்குக் காரணமாக வேண்டிவருமென்றுக் கருதிப் பகவான் உடனே ஆரகிரீடகேயூர சாரங்குசங்கு சக்கிரவாள் கெதை பஞ்சாயுதத்துடனும் ஸ்ரீவற்ச கௌத்துவாபரணாதிகளுடனும் ராதாருக்குமணி சமேதராகி எழுந்தருளி இந்தச் சந்தோபாபாவரர் சமீபத்தினில்வந்து ஒ சாதுசத்புத்திரரே நின்மனதிலெண்ணியவெண்ணத்தின்படி இதோயானவந்து தெரிசனந்தர சித்தமாக விருக்கின்றேன் சீக்கிரம் நீயெழுந்திருந்து என்னையும் எனதுபிராட்டிமாரிருவரையுந் தெரிசித்து ஆனந்தமடைந்துப் பசிதீரப்புசித்து ஆயாசத்தைப் போக்கிக் கொள்ளுமையாவென்று ஸ்ரீஹரிசொல்லக்கேட்டுத் தான்கொண்ட வைராக்கியத்தைவிட்டு சீக்கிரமெழுந்து ஹரியின்திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்துக் கண்களாரக்கண்டுப் பல சங்கீர்த்தனங்களை விண்டு மனதினில் ஆனந்தங்கொண்டு யான்செய்த பூசையின் பலனையிது பண்டு என்றும் ஒபகவானே! நாரதாதி முனிவர்களுங்கண்டு புகழத் தரமாகாத நினதரியசேவையை நீசனும் நெறியொன்றுமிலாத நாயேன்கண்டு களிகூர்ந்தேன் இனியெத்தனை ஜென்மங்க ளெடுக்கினும் தேவரீருடைய திருநாமத்தை மரவாமலிருக்கும் படியான வரமொன்று தரவெணுமென்று வேண்டப் பகவான்களித்து அந்தப்படியே வரமளித்தேனென்று சொல்லி மாயமாய் மறைந்துபோயினார் உடனே சந்தோபாபாவரர் பரமானந்த மடைந்தவராகி அந்தக் கோமுட்டி கொண்டுவந்த அறுசுவை யன்னத்தைப்புசித்து சமத்தாகி நற்குணங்களும் பக்திவைராக்கியங்களும் அதிகரித்து மெத்தப் புகழுடனிருக்கிற போது சாபலாசமெனுங் கிராமத்தினில்வசிக்கும் பிராமணனொருவன் எப்போதும் தன்சம்சாரத்துடன் கலகப்பட்டுக் கொண்டே யிருப்பன் அதேனெனில் இந்தப் பிராமணன் சம்சாரமாகியப் பிராமண ஸ்ரீவேளைக்குப் பிரசாதமளிக்காமலும் நாயகன் சொற்படி கேளாமலும் நாயகனென்றுசொன்னால் தான் ஐந்து சொல்லுமவளாகியும் காலையிலெழுந்து சுசி ஆசார மில்லாதவளாகியும் பகலொரு ஜாமத்திற்குமேல் நித்திரைவிட் டெழுந்திருப்பவளும் அக்காலத்தில் போஜனஞ் செய்பவளும் ஏழைப்பரதேசிகளுக் கீயாதவளுமாகியிருந்தபடியால் இப்பிராமணன் எப்போதுங் கலகஞ்செய்துக் கொண்டேயிருந்து ஒருநாள் தன்மனையாளுடன கலகஞ்செய்துக்கொண்டே அடிபெண்ணே நீயெப்போது மென் வார்த்தையைக் கேளாமல் எதிர்த்துப் பேசிக்கொண்டேயிருக்கின்றாய் இனியானுனக்குடன் பட்டிருப்பது கடினம் சந்தோபாபாவருடன் சேர்ந்துக் கொண்டு இவ்விடத்திற்கு வராமலும் உன்முகத்தை யேறெடுத்துப் பாராமலும் போய்விடுவேன் ஈதுண்மையென்று நம்பும் யானவரிடம்போய் சேர்ந்துவிட்டால நீமெத்தக் கஷ்டம் அடையும்படியாக நேரிடும் ஆகையால் நீ இன்றுமுதல் வெகு ஜாக்கிரதையாக நடந்துக்கொள்ளுமென்று சொல்லக்கேட்டு இந்தப் பிராமணன்

மனைவிபயந்து நம்முடைய நாயகன் போய்விட்டால் நம்மைக் காப்பாத்துவதற்கு யாருமில்லையே நாயகனைவிட நமக்கு ஒருவேளை கஞ்சிவார்க்கும் பிள்ளைகளுமில்லையே இந்தகாலத்தில் நாம் நாயகனைப் போக்கடித்துக்கொண்டு என்னசெய்கிறது நமக்கு ஜீவனமெப்படி நடக்கும் ஆதரவில்லாத பாவியாகவிருக் கின்றோமே நமக்கொருவருந் துணையில்லாமலிருப்பதனாலன்றோ நாயகன் ஆடினது ஆட்டமாக விருக்கின்றதே என்னைப்போலுங் கொடும்பாவி இவ்வுலகினில் யாரேனுமுண்டோவென்றுப் பலவாறு சிந்தித்து அன்று முதல் பயந்து நாயகனிஷ்டப்படி நடந்துக்கொண்டிருந்தனள்.

இவ்வாறு இந்தபிராமண ஸ்ரீயானவள் தன்கணவன்சொற்படி சிலநாளிருந்து பழயபடி கணவன்சொல்லுக்கு மாராக நடப்பதையறிந்து அப்பிராமணன் தன்மனைவியைநோக்கி அடிபெண்ணே சிலநாள் என் சொற்படி நடந்து வந்தமையால் கலகமில்லாமல் சம்சாரம் மெத்தசுகமாயிருந்தது அன்றியும் அக்கம்பக்கத்தி லுள்ளவர்களும் நமக்குண்டான பந்துமித்திரர்களெல்லவரும் உன்னைப்போல பதிவிரதைக ளிவ்வுலகினிளில்லையென்று மெத்தவும் புகழ்ந்துக்கொண்டாடிக்கொண் டிருந்தார்கள் அதையறிந்து யானுமெத்த சந்தோஷமடைந்தேன் அப்படி யாவரும் சந்தோஷித்திருந்ததை நூற்றைக்கெடுத்தது குறுணியென்பதைப்போல இத்தனைநாளாய் நடந்துவந்த உத்தமகுணத்தை இன்று கணப்பொழுதினில் போக்கிக் கெட்டப்பேரெடுத்துக் கொண்டாயே வேண்டாம் இனியாகிலும் இப்படிப்பட்ட துர்க்குணத்தை விடுத்து நற்குணத்தை யனுசரித்து நடக்கக்கடவாய் இப்படிக்கி நீ நடந்துக் கொள்ளாவிடில் சத்தியமாக யான்சம்சாரத்தைவிடுத்து சந்தோபாபாவருடன் சேர்ந்துக் கொண்டு உன்னையலையச்செய்வேன் இதுவுண்மையென்று சொல்லி பயமுறுத்துவதைக் கேட்டு அந்தப்பிராமணஸ்ரீ மெத்தவும் பயந்து நடுநடுங்கி நாயகனைநோக்கி ஓசுவாமி இனிமீது யானுங்கள் மனதின்படிக்கி நடக்கின்றேன் கோபஞ்செய்ய வேண்டாம் இந்தத் தடவைமாத்திரம் க்ஷமிக்க வேணுமென்று வேண்டிக்கொண்டனள் அதற்கப்பிராமணன் சம்மதித்து ஜாக்கிறதையாக யிருமென்று சொல்லித்தான்புரோகிதஞ் சொல்லப்போயினார் இந்தப்பிராமணஸ்ரீயும்அன்னாள் முதல் நாயகனுடைய இஷ்டப்படிக்கி வெகுநாள்நடந்துக் கொண்டிருந்தனள் அதையாவரு மறிந்து இனியம்மாது பதிவிரதையாயினாள் முன்னிருந்த துர்க்குணம் இவளைவிட்டு நீங்கி உத்தமகுணத்தையடுத்திருக்கின்றாளென்று யாவருங் கொண்டாடும்படி நல்லபேரையெடுத்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் இந்த சந்தோபாபாவரர் அந்தப்பிராமண ஸ்ரீயும் அவரைக் கண்டு மெத்தவினயமாகப் பணிந்துப் பிக்ஷையளித்து ஓசுவாமி அடியாளுடைய நாயகர் வீட்டினிலேதாகிலுங் கலகம்நடந்தால் உடனே சம்சாரத்தைவிடுத்துச் சன்னியாசியாகித் தங்களையடுத்து உபதேசம் பெற்றுக்கொண்டு காடேகெதியாய்ப் பிக்ஷையெடுத்துப் புசித்து பகவந்நாமத்தைத் துதித்து மேலாகிய வைகுந்தபதவியை யடைகிறேனென்று சொல்லி பயமுறுத்துகிறார் இதற்குநானென்ன செய்வேனென்று வெகுவாகப் பிரலாபிக்கும் அந்தப்பிராமண ஸ்ரீயை நோக்கி அந்தசந்தோபாபாவரர் சொல்லுகின்றார் ஓ அம்மாபாக்கியவதி நீயாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் அப்படியவர் சம்சாரத்தைவிட்டு சன்னியாசியாசிரமத்தைத் தொட்டு என்னிடம்வருவாரேயாகில் யானதற்குத்தக்கத் தந்திரங்களைப் பண்ணி மருபடியுன்னிடம்வந்து சம்சாரியாகும்படிச் செய்கிறேனென்று சொல்லிப்போயினார் அந்தவார்த்தையைக்கேட்டுப் பிராமணஸ்ரீயானவள் மெத்தசந்தோஷித்துஇனி நமக்கு பயமில்லையென்று கெர்வித்து அந்நாள்கடத்தி மறுநாளே பழயபடி நாயகன்சொல்லைக்கேளாமலும் அவரை மதிக்காமலும் ஏடாகூடமாகப் பேசத்தலைப்பட்டாள் இதையறிந்து அந்தப்பிராமணன் அடிபாதகி உனக்கென்ன அடிக்கடி யிப்படிப்பட்டதுர்க்குணமுண்டாகின்றது யானெத்தனைத் தடவை யுனக்குப் புத்தி சொல்லுகின்றது நற்குண முடையவர்களுக்கு ஒருதடவை சொன்னமாத்திரத்தில் தெளிவுடன் நடப்பார்கள் துஷ்டர்களுக்கெத்தனை தடவை சொல்லினும் அவர்களுக்குண்டாகியதுர்க்குணத்தையேகாட்டுவார்கள் அதைப்போல நீதுஷ்டியான படியினாலே உனக்கெத்தனை தடவைசொல்லினும் உனக்குண்டாகிய துர்க்குணத்தையே காட்டுகின்றாய் மேலும்பதிக்கித்தக்க சதிகிடைப்பாளாகில் எவ்விதத்திலாகிலும் பொருந்தி சம்சாரத்திலிருந்து நாளைப் போக்கலாம் சிறிதேனும் ஏறுமாறாகப்பேசி கணவனுக்குமனநோகும்படி. செய்துக்கொண் டிருப்பாளேயாகில் அப்படிப்பட்ட சம்சாரத்தைவிட்டுச் சன்னியாசியாகி வீட்டைவிட்டு வெளிப்பட்டுப் போவதே மேன்மையாகுமென்ற நீதிவாக்கியத்துக் கிணங்கியான் சன்னியாசியாகி சம்சாரத்தைவிட்டு இப்போதே வெளிப்பட்டுப் போகிறேன் பாருமென்றுசொல்லி இப்பிராமணன் அக்கணமே சன்னியாசி வேடந்தரித்து சம்சாரத்தைத் தனியேவிடுத்து வீட்டைவிட்டு வெளிப்பட்டு நடந்து சந்திரபாகாநதிக்கும் கமடாநதிக்கும்நடுவினி

விருக்கும் சிவஸ்தலத்தை யடுத்து அங்கு பகவத்பஜனை செய்துக்கொண்டிருக்கும் சந்தோபாபாவரரைக் கண்டு பணிந்து எழுந்துநின்று கைகூப்பிக் கொண்டு ஓசுவாமி யெனக்குண்டாகிய குறைகளைசெவிசாத்திக் கேட்டு என்னையாண்டு ரக்ஷிக்கவேணும் சுவாமியென்று பணிவாகச் சொல்லத் தொடங்கினாள்.

ஓசுவாமி அடியேனுக்குச் சிறுவயதிலே தானே விவாகம்நடந்தது அன்றுதொடங்கி இன்னாள் பரியந்தம் சம்சாரமானது என்சொல்லைக் கேளாமல் ஏறுமாறாக நடந்துக்கொண்டே வருவாள் அதைப்பத்தி யான் அனேகதடவைகள் புத்திமதிகளைச் சொல்லித் திருத்துப்பாடு செய்வதுண்டு அந்தப்புத்தியைக் கேட்டு அவளும் எனக்கிணங்கி சிறிதுநாள் நடந்துக்கொண்டிருந்து பழையபடி துர்க்குணமுண்டாகிஎதிர்த்து பேசுவதினால் என்மனந்தாளாமல் இன்றுதினம்திடச்சித்தனாகி யென்சம்சாரத்தை விடுத்துத் தேவரீரிடம் வந்தடுத்தேன் என்னையனாதரணை செய்யாமல் அனுக்கிரகம்செய்து உபதேசிக்க வேணுமென்று விழுந்து பணிந்து வெகுவாக வேண்டிக்கொண்டாள் இப்படி வேண்டிக்கொள்ளும் பிராமணனைநோக்கி அந்த சந்தோபாபாவரர் சொல்லுகின்றார் கேளுமையா பிராமணரே யானோசூத்திரன் தாங்களோ பிராமணர் உமக்கு யானுபதேசஞ் செய்வதுநீதியோ அன்றியும் உபதேசஞ் செய்துக்கொள்ள விருப்பங் கொண்டுவந்து ஆசானைப்பணிந்து வேண்டிக்கொள்ளுஞ் சீஷனாயிருக்கினும் அவனைப்பனிரெண்டு வருடகாலம் சோதித்து உத்தமனாகயிருக்கும் பக்ஷத்தில் அச்சீடனுக் குபதேசிக்கச்சொல்லி தருமசாஸ்திர முறையிடுகின்றது உத்தமனாகாமலும் சோதனைசெய்யாமலும்உபதேசிக்கும் ஆசானுக்கும் நரகமே துஷ்டனுக்கும்நரகமே பிராப்தியாகுமென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றதே அப்படிக்கி விதியிருப்பதாலுன்னைப்பரிசோதனை செய்யாமல் உனக்கு யானுபதேசஞ் செய்வதில்லை யென்றுக் கடுமையாகப்பேசும் ஆசானைநோக்கிஅந்தப்பிராமணன் ஓசுவாமி யாள்வெகுகாலமாகசம்சாரத்துடன் மெத்தகஷ்டப்பட்டு மனம்வெறுத்து சம்சாரத்தை விடுத்துச் சன்னியாசியாகி வெளிப்பட்டுவந்து தேவரீருடைய திருவடித்தாமரைகளை யடுத்து வேண்டிக் கொள்ளும் அடியேனையுஞ் சோதிக்கவேணுமோ ஓசுவாமி இக்காயம்நிலையல்லவேஇதைநிஜமென்றெண்ணி பனிரெண்டுவருடகாலங் தங்களுக்குத் தொண்டு செய்துக்கொண் டிருப்பதற்கு இப்பவோ எப்பவோ இத்திரேகத்தை விடுத்துயிர் பிரிந்துபோவது அப்படிக்குயிர்பிரிந்து திரேகத்தை விடுத்துப்போயினபின்பு உபதேசமெங்கே செய்துக்கொள்ளுகிறது ஓசுவாமி இப்படிப்பட்ட மரணகாலம்வந்து சம்பவிப்பதற்கு முன்னமே ஆசானிடத்தில் உபதேசஞ்செய்துக் கொண்டவனுக்கன்றோ முக்தி முக்திக்குகந்த பக்தி பக்திக்குகந்த வைராக்கியமுமெனக்குண்டாகும்படி கடைக்கண் பாரும் ஓசுவாமியென்று வேண்டிக்கொண்டான் அதற்கந்த சந்தோபாபாவரர் ஓபிராமணரே உம்மைப் பனிரெண்டு வருடகாலம் பரிக்ஷிக்க வேண்டியதில்லை சிலநாளுக்குள்ளாக உமக்குபதேசிக்கிறேன் நீர்பயப்படாமலிருமென்றுசொல்லிமேலும் உன்னுடன்யான் சங்கமஞ்செய்துக் கொண்டிருப்பது எனக்கு மெத்த மேலாகும் அன்றியும் உன்னைப்போலெனக்கு வைராக்கியபுருடன் கிடைப்பது மெத்த அருமையாகுமென்றுசொல்லிப் பின்னும் ஓபிராமணரே இப்போதெனக்கு மெத்த தாகதாபமாயிருக்கிறதுஆகையாலிந்த சொரகுடுக்கையை யெடுத்துச்சென்று தண்ணீர்முகந்துக்சொண்டு சீக்கிரம்வந்து சேருமையா மேலும் நீ உடுத்திக் கொண்டிருக்கும்படியான வஸ்திரத்துடன் போவையாகில் இவ்விடத்தில் கள்ளர்கள் மெத்தவிருப்பதால் வஸ்திரத்தின்பொருட்டு உன்னையடித்து விடுவார்கள் ஆகையால் வஸ்திரத்தைக்களைந்து வைத்து விட்டுப் போமென அந்தப்படியே யப்பிராமணன் தான் உடுத்தியிருந்த வஸ்திரத்தைக் களைந்துவைத்து விட்டு கௌபீனத்துடன் சொரகுடுக்கையைக் கைக்கொண்டு தண்ணீரின் பொருட்டு நதியை நோக்கிச் சென்றான்.

இவ்வாறு பிராமணன் சந்தோபாபாவரர்சொற்படி கௌபீனத்துடன் சொரகுடுக்கையைக்கைக்கொண்டு நதியைநோக்கிப் போனபிறகு சந்தோபாபாவரர் அந்தப்பிராமணனுடைய வஸ்திரத்தை யெடுத்து துக்குத் துக்காகக்கிழித்துயெறிந்து மேலுமவன்கொண்டுவந்த சொம்பையும் நதியினில் விழப் போட்டு விட்டு ஸ்ரீஹரிபஜனை செய்துக்கொண்டிருந்தார்இதற்குள் பிராமணன் நதிக்குச்சென்றுத் தண்ணீர்முகந்துக்கொண்டுவந்து கொடுத்தான் அதையந்த சந்தோபாபாவரர் பெத்துக்கொணடு தனக்குப்பசியா யிருக்குதென ஏசுபாயி வேப்பன்பட்டையை கொடுத்தாள் அந்தப்பட்டையிற் சந்தோபாபாவரர் வேண்டுமான வரைக்கும் புசித்து மிச்சத்தைத் தன்பத்தினிக்கும் பிராமணனுக்குங் கொடுத்துப் புசிக்கச் சொன்னார் அதையந்த உத்தமி தேவாமிர்தத்தைப்போலப்புசித்துத் திரிப்தி யடைந்திருந்தனள் பிராமணனோ அந்த வேப்பம்பட்டையைக் கடித்துத்தின்று அதிககசப்பாயிருந்தமையால் வாயிலெடுத்துக் கொண்டு ஐயோ

சம்சாரத்துடன் கலகஞ்செய்து யாவத்தையும் விடுத்
துச்சன்னியாசி வேடந்தரித்து இந்த சந்தோபாபாவ
ரரையடுத்து உபதேசம் பெற்றுக்கொண்டு போகலா
மென்று யெண்ணிவந்த நமதெண்ணம் ஒருவேளைக்
கே புசிப்புயில்லாமல் மெத்தக்கஷ்டப் படலாயிற்றே
வேப்பம்பட்டையைத் தின்னும்படியாக நேரிட்டதே
இந்த வேப்பம்பட்டையைத் தின்றுக்கொண் டெத்த
னைநாளைக் கிருக்கின்றது கஷ்டத்துடன் கஷ்டமாய்
சம்சாரத்திலேதானே யிருந்துக்காலம் போக்கலாமே
என்னுடைய மந்தபுத்தியினால் சம்சாரத்தை விடுத்து
ச்சன்னியாசி வேடந்தரித்து இங்குவந்து வாயிக்கு
ருசியான பரிப்பு ரொட்டி முதலான திவ்வியமான
அன்னத்திற்குக் கஷ்டப்படலாயிற்றே இதற்குநானெ
ன்னசெய்வேன் எப்படி ஜீவனஞ்செய்துய்வேன்இந்த
வினைக்கி யாரைவைவேன் எத்தனைநாளைக்கிந்த வேப்
பம்பட்டையைத் தின்றுழைவேன் அன்றியும் கட்ட
வஸ்திரமுமின்றிக் கோமணாண்டியாகத்திரியும்படியா
யிற்றே என்னுடைய கௌரவமெல்லாம் போயிற்றே
யென்று பிரலாபித்துக்கொண் டிருக்கையில் சந்தோ
பாபாவரர் இதையறிந்து ஒபிராமணா சகலத்தையுந்
துறந்துச் சன்னியாசி வேடம்புனைந்து ஸ்ரீராமபஜனை
பஜிக்குமுமக்கு உருசியுள்ள வஸ்துக்களின்மீது இன்
னமுமிச்சை யேதுக்கு கிடைத்ததைப் புசித்துப் பசி
யாரியிருப்பதே மேன்மை அதைவிடுத்து ரசவர்க்கங்
களே வேணுமென்ற சுதந்திரமுமக்குண்டாயிருப்பது
சரியல்ல பரதந்திரராகி எந்தவேளையி லெதுகிடைக்கி
ன்றதோ அதைப்புசித்து திரித்தியடைவ தல்லோ
மேன்மை என்றுசொல்லி வேப்பிலையைக்கொடுத்துப்
புசிக்கும்படி நேமித்தார் அதனை யந்தப் பிராமணன்
கைக்கொண்டு புசித்துப்பார்த்து சரிப்படாமலந்தவே
ப்பிலையை யப்பிராமணன் திரும்பியும் சந்தோபாபா
வரரிடங்கொடுத்து எவ்வளவு கேவலஸ்திதியை யான
டைந்தேன் ரொட்டியும் பருப்பும் தின்றுக்கொண்டி
ருந்தேன் அது இதுவரைக்கு மெனக்குமெத்த உருசி
யாயிருந்தது அதைவிடுத்துக் கசப்பு வஸ்துக்களைத்தி
ன்ன எனக்குச் சகிக்கவில்லையே உலகவாழ்க்கைக்கு
வேறுபட்டிருக்கின்றது பரமார்த்தமானது இதையறி
யாமல் இவ்வேடத்திற்குட்பட்டேன்என்று சொல்லிக்
கொண்டே குளிருக்கும் அதினாலுண்டாகும் நடுக்கலு
க்கும் பசிக்கித்தக்க ஆகாரமில்லாத ஆயாசத்திற்கும்
மெத்தவருத்தத்தினால் துக்கமடைந்துக் கொண்டிருக்
கையில் சந்தோபாபாவரர் சொல்லுகின்றார் ஒபிராம
ணரே முன்னமென்னிடம் நீவந்தபோது சொல்லிய
தைமறந்து விட்டையோ அதென்னவெனில் ஒசுவாமி
இன்றுடன் சம்சாரமென்னும் விலங்கை வெட்டியெறி
ந்து சன்னியாசியாகிவந்தேன் எனக்கு உபதேசஞ்
செய்யவேணு மென்று சொல்லிய நீ இப்போது வே
தாந்தவிஷபத்தை விடுத்துச் சம்சாரத்திற்குப் போக
வெண்ணமுடையவன் முன்னமே எனக்கு சம்சாரம்
வேண்டாமென்று சொல்லி சன்னியாசிவேடந் தரித்
துக்கொண்டு ஏன்வரவேணும் ஆதியிலொருமனிதனு
க்கு க்ஞானம் பக்திவைராக்கியம் இம்மூன்றுமுண்டா
யின பிறகன்றோ ஆசானிடத்தி லனுக்கிரகம்பெறவே
ணும் அதைவிட்டுப் பத்தசம்சாரியாகிய நீசன்னியா
சியாவது இப்படித்தானோ வீணாயேன் கலகம்விளைத்
துச் சம்சாரத்தைவிடுத்து வந்தாயென அதற்கந்தப்
பிராமணன் ஒசுவாமி சத்குருநாதரே என்னுடைய
மனையாள் சண்டைசெய்த படியால் யான்மனதில்துக்
கமடைந்து ஆயாசத்தினால் தங்களிடம் வந்தேனேய
ன்றி இந்தபகவத்விஷயம் இவ்வளவு கஷ்டமென்றறி
யாமற் சுலபமார்க்கமாகுமென்றுக்கருதி சன்னியாசி
வேடம் புனைந்துவந்தேன் இனிசந்தேக மடையாமல்
உன்னுடைய சங்கமம் எனக்குநன்று யிருக்கவில்லை
யான்திரும்பியும் சம்சாரத்தினிடமே போகலாமென்
றுப் பிரயத்தினஞ்செய்கிறேன் அப்படியான் போவ
தற்கும் இடையில் வஸ்திரமில்லையே அதுவும் போய்
விட்டதே மேலும் மெல்லனஇரவினில்போகலாமென்
றோசித்தாலோ இந்தகோலத்தை மனையாள் பார்த்
தால் மெத்த அலக்ஷியஞ்செய்வாள் மதிக்கவுமாட்
டாள் இதெற்கென்ன யான்செய்வேன் என்றுப் பிர
லாபித்துக் கொண்டிருந்தான்.

இந்தப்படி யப்பிராமணன் பிரலாபித்துக் கொ
ண்டிருப்பதை சந்தோபாபாவரர் அறிந்து ஒ பிராம
ணா பரமார்த்த மார்க்கத்தைக் கண்டுதெளிய சக்தி
யில்லாத நீ சன்னியாசியாகி யேன்வெளிப் பட்டாய்
பெருத்ததண்டனைக் குட்பட்டாய்வைராக்கியசீலனுக்
கல்லோ பரமார்த்தமார்க்கங் கரதலாமலகம் போலக்
காணப்படும் உன்னைப்போல சபலசித்தமுடையவனு
க்குப் பரமார்த்தமார்க்கந் தெரிந்துக்கொள்ள சாத்தி
யப்படுமோ மேலும் இப்படிப்பட்டக் கேவலனாகிய
நீயுன்சம்சாரத்துடன் கலகம் விளைப்பதேன் அடிபெ
ண்ணே நான் சந்தோபாபாவரரைப் போலச் சன்னி
யாசியாகி வெளிப்பட்டுப் போவேன் என்று யேன்
அம்மாதுடன் வைராக்கியம் பேசவேணும் பேசிச்
சொற்சோர்வு படவேணும் திடவைராக்கிய முடைய
சாதுக்களுக்கே பரமார்த்தத்தின் மார்க்கம் பிடிப்ப
டாமல்எங்கித் தவிக்கின்றார்கள் அப்படிப்பட்டமேன்
மையான பரமார்த்தத்தைக் கேவலம் எளிதினிலுண
ரலாமென்று வந்தனையோ இனிமேலாகிலு முன்னு

டைய மனையாளுடன் கலகஞ்செய்யாமல் இருப்பாயாகில் மெத்தமேன்மையாக இவ்வுலகத்தினில் நல்லகீர்த்தியைப் பெற்றுய்வாய் அப்படிக்கிராமல் விட்டோபாமீது ஆணையாக அடிக்கடி கலகஞ்செய்யாம லிருமென்றும் மேலுமிச்செய்தியைபிறரறியவொட்டாமல் என் மனதிலேயே வைத்திருப்பேன்இப்படிக்குன்மனையாளுடன் நீகலகமேதுமின்றிச் சுகமாகயிருக்காமல் கலகஞ்செய்வையாகில் நீசன்னியாசியாகி வெளிப்பட்டசெய்திகள் யாவத்தையும் நீவாசஞ் செய்யும்படியான ஊராரிடஞ்சொல்லி யுன்னையவுமானப் படுத்திவிடுவேனென்று பயமுறுத்திப் போய்வாரு மென்று விடைதந்தவுடன் அப்பிராமணன் அந்த விட்டோபா திருவடித்தாமரைகளைப் பிடித்துக்கொண்டு ஒசுவாமி! இனியான் யென்னுடைய மனையாளுடன் சண்டை செய்யாமல் எப்போதும் பத்திரமாக யிருந்துக்கொண்டு காலத்தைக் கழிக்கின்றேன் இதுசத்தியம் இதற்குசாக்ஷி சாக்ஷாத்பாண்டுரங்க நாதரிருப்பாரென்ற மாத்திரத்தில்அந்தசந்தோபாபாவரர்பிக்ஷைபின்பொருட்டு வெளிப்பட்டுச்சென்றுஇப்பிராமணன்வீட்டையடைந்து பிராமணன் மனையாளையழைத்து பிக்ஷை கேட்டு வாங்கிக்கொண்டு ஒஅம்மா பாக்கியவதி உன்பதிக்கி இன்றையதினம் தக்கசிக்ஷை செய்வித்தேன் இனிமேலென்று முன்னுடன் சண்டைசெய்யார் மெத்த சாதுவாகவிருப்பார் நீயுமவருக்குத் தக்கப்படி நடந்துக்கொள்ளவேண்டும் நமதிஷ்டப்படிக்கி நாயகன் வந்துவிட்டாரே என்றுகேர்வித்து அக்கிரமங்களுக்குட்படாம லவரைக் காப்பாத்திக்கொண்டுகாலங் கடத்தக் கடவாயென்றும் இன்றிரவுக்குள் கணவன் கௌபீனத்துடன்வருவார் அவரைப்பார்த்துக் கேலிசெய்யாமலும் அவருக்கிணங்கி வணங்கி நடந்துக்கொள்ளுமென்று சொல்லித்தன் னிருப்பிடத்தை யடைந்துப் பிராமணனைநோக்கி ஒஐயாபிராமணரே இனிசுகமாக உமதுவீட்டிற் கேகலாம் கலகமின்றி யுன்மனையாளுடன் கூடிவாழ்ந்திரு மென்று வாழ்த்தி யனுப்ப அப்பிராமணனும் அவரைப்பணிந்து விடைபெற்றுக் கொண்டு நடுராத்திரி வேளையிலவ்விடம்விட்டுப் புறப்பட்டு யாருக்குந் தெரியாமல் நடந்துத் தன்வீட்டையடைந்தான் அந்தப் பிராமணஸ்ரீயும் அவரைக்கண்டவுடன் மெத்த சந்தோஷமடைந்துஅவருக்குஸ்னானஞ் செய்வித்து நல்லவஸ்திரங்களையீந்து அறுசுவையன்ன பானதிகளையுதவி வேண்டியதொண்டுகளை யெல்லாஞ் செய்து மெத்தப்பிரியமாகப் போஷித்துக் கொண்டிருக்கப் பிராமணனும் அன்றுமுதல் கலகமின்றிவெகு நீதிமானகித் தானும் ஸ்ரீராமபஜனை யிடைவிடாமற் செய்துக்கொண்டு மிருந்தான்.

இவ்வண்ணம் பிராமணன் மனையாளுடன் கலகமின்றியிருக்கச் சந்தோபாபாவரர் ஆஷாடமாசத்திய பிரமோற்சவத்திற்குப் போகவேணு மென்றெண்ணி புறப்படுகிறபோது இந்த சந்தோபாபாவரருடன்இரண்டாயிரஞ் ஜெனங்கள்பின்றொடர ஞானபக்தி வைராக்கியத்துடன் கிருஷ்ணாராமா கோவிந்தா ராமகிருஷ்ணா கோவிந்தாவென்று பஜனை செய்துக்கொண்டு போகையில் ஒவ்வொருவரும் நிர்மலபக்தியுடன் ஆடியும்பாடியுந் தங்களைமறந்துஅகங்கரைந்துபரமானந்த மென்மேலு முண்டாகித் தங்களைமறந்துத் தலைவனிற் கலந்து தசமிவரையில் நரசிங்கபுரத்தைச்சேர்ந்துஅங்குப்பிரவாகம் பெருகியோடும்சந்திரபாகாநதியானது கங்குகரைகொள்ளாமல் ஜலமானது ஒடுவதைக்கண்டு அதைக்கடந்து போவதற்கு மெத்தப் பயமடைந்து அங்கிருக்கையில் இந்த ஏகாதசியின்பகவானைச் சேவிப்பதற்குத் தடையாகி பெருகிச் சந்திரபாகாநதி ஜலமானது பூரணமாகப் போகின்றதே இதற்கென்ன செய்யலாமென்று சந்தோபாபாவரரும் மத்துமுள்ள இரண்டாயிரஞ் ஜெனங்களும் பதறிக்கதறி விசனப்பட்டுக்கொண்டு இந்தநதி பகவானுடையசேவை நமக்குக்கிடைக்க வொட்டாமல் குறுக்கிட்டதே ஒபாண்டுரங்கா இத்தனைபேர்களும் ஏககாலத்திலென்னபாவஞ் செய்தவர்களோ எங்கள்வினையோ இப்படி நதிபெருகித்தடைசெய்ய எங்க ளெண்ணங்கள் தான்கெட்டதோ எங்கள்பாவம் இப்படிப் பட்டதோ நாங்கள் பண்டுசெய்த கர்மங்கள் உட்பட்டதோ பகவானுடையதெரிசனஞ் செய்யாத எங்கள் துஷ்டக்கர்மங்களைப் படிப்பட்டதோ இங்குசமீபமாக வந்தும் தேவரீரை சேவிக்காமலிருக்குஞ் சாபந்தான் யாரிட்டார்களோ யெந்தபெரியோர்களிட மபசாரப்பட்ட தோஷமோ என்று பலவாறு சிந்தித்துகொந்தார்கள் அப்போது சந்தோபாபாவரர் தன்மனதைச் சஞ்சலத்தில் விடுக்காமல் பரிசுத்தமான மனதுடன் ஒஜெகதீசா சர்வேசா பந்தபாபநாசா பத்தர்கள் தம்பிராணேசா விசுவாசா விண்ணவர்கள்நேசா விளங்கும்பொற்பிரகாசா பண்டரிபுரவாசா பவபக்தநாசா விசுவேசா யாங்களெல்வவருந் தேவரீரைசேவிக்க வெண்ணி இத்தனை தூரம் ஆவலுடன்வந்தும் எங்களுக்கு நினதறியசேவை கிடைக்காமலிந்தச் சந்திரபாகாநதிக் குறுக்கே தடைபடுத்தியபடியால் யாங்கள்மெத்த விசனப்பட்டிருக்கின்றோம் தேவரீர்மனதில் நினைத்தால் இந்தசந்திரபாகாநதி யொருலக்ஷியமோ அபாரமான பாற்கடலிற் சயனத்திருக்கோலங் கொண்டிருக்கும் லட்சுமிநாதா பொற்றாமரைப்பாதா வேதவிநோதாவிளங்கும் பிரக்கியாதா மதுசூதா மாமனோ ஹாரமுரகரா முகு

குந்தவரதா மோகனகாரா அபாரகருணாபாராவாரா அப்ரமேயா அரவணைச்செல்வா அனந்தசயனா ஆதிமத்யாந்தரகிதா அமலவிமலா நிர்மலா மச்சகச்ச வராக நரசிங்கவாமனா பரசுராமா ஸ்ரீராமா பலபத்திரராமா கலிகிமுதலாகிய தசாவதாரங்களெடுத்து அநேகசாதுக்களை ரட்சித்தும் சிட்சித்தும் இவ்வுலகத்தினில் தருமத்தை நிலைநாட்டிய புருஷோத்தமா புராணபுருஷா மனதினில் நினைத்தமாத்திரத்தில் சகலலோகங்களை சிஷ்டித்தும் உடனேரக்ஷித்தும் சங்கரித்தும் ஊழிகாலத்தில் அண்டரண்ட சராசரங்களையுங்குக்ஷிக்குள் வைத்து ரட்சிக்கும் சர்வ வல்லமையும் பொருந்திய ஆதிதேவா தேவரீரின்மீது பாரத்தைப்போட்டு அடியேன் இந்த சந்திரபாகா நதியிலிரங்கி அக்கரைசேர வெண்ணித் துணிந்தேன் கரைசேர்த்தாலும் உமது பாரமே நதியினிலடித்துப்போய்க் கடலிற் சேர்த்தாலும் உமதுபாரமே என்றுசொல்லித் திடச்சித்தனாகி இந்தசந்தோபாபாவரர் சந்திரபாகாநதியினி லிரங்கினார் அதைக்கண்டு உடன்வந்த இரண்டாயிரம் ஜெனங்களும் அவர்பின்னேயிரங்கிப் பாண்டுரங்கநாதரைத் துதிசெய்துக்கொண்டே நடந்தார்கள் அப்போதுசாக்ஷாத் பாண்டுரங்கநாதன் முன்னம் மந்திரகிரிபர்வதத்தைப் பார்க்கடலினில் போட்டு வாசுகியைத் தாம்பாகப்பூட்டி தேவர்கள்வால்புரமும் இராக்கதர்கள்சிரசின்பக்கமாய் நின்றுக்கடைகிறபோது அம்மலையானதுக் கடலினில்மூழ்கிப் போகாவண்ணம் கூர்மாவதாரமெடுத்துத் தன்முதுகினா லம்மலையைத் தாங்கிக்கொண்டிருந்ததைப்போல இக்கலியுகத்தினில் சந்தோபாபாவரர் தம்பொருட்டுப் பாண்டுரங்கநாதன் ஆமை வடிவமெடுத்து இந்த இரண்டாயிரத் தொருவரையும் அந்த சந்திரபாகாநதியினில்மூழ்கிப்போகாவண்ணம் தன்முதுகின்மீது தாங்கியபோது வெள்ளப்பெருக்கானது அளவுகடந்துங் கங்குகரைகாணாமலும்பிரவாகிப்பதாலும் இவர்களுக்கு முழங்கால்ஜலமாகவேயிருந்தது அதனாலிந்த இரண்டாயிரத் தொருவரும் மெத்த சந்தோஷத்துடன் அக்கரைசேர்ந்து ஸ்நானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஓபாண்டுரங்காபக்தசங்கா பவபங்கா மங்களாங்கா ககதுரங்காமாதங்காவென்று துதிசெய்துக்கொண்டே சந்நிதியைநோக்கிப்போகிறபோது சந்தோபாபாவரர் நேத்திரங்களுக்குக் கூர்ம அவதாரசேவை கிடைக்க அந்தசேவையினிலீடுபட்டு வேதத்துக்கும் பஞ்சபூதத்துக்கும் வாக்குக்கும் முனிவர்கள்மனதுக்கு மெட்டாத பரஞ்சோதியே சகலநற்குணங்களையும் ஆபரணமாகப் பூண்டிருக்கும் நீதியே சிருஷ்டிக்கி முதல்வராகத் தோன்றியஆதியே எங்கள் நிமித்தியம் தேவரீர் கூர்மாவதார மெடுத்து இந்தச் சந்திரபாகாநதிக் குள்ளிருந்துக்கொண்டு எங்களைநின் முதுகின்மீது நடந்துபோகும்படி யக்கரைக்கும்இக்கரைக்கும் நீண்டு முழுகிப் போகாவண்ணம் துடையளவு ஜலமிருக்கும்படி கிருபாநோக்கம் புரிந்தஐயனே மெய்யனே! துய்யனே!சங்குசக்கரக்கையனே!என்று புகழ்ந்துக் கொண்டாடித்தன்னுடன்வந்தவர்கள்முன்னம்நடந்துப் பண்டரியையடைந்து சந்நிதிக்குட் புகுந்து பகவானுடையத் திருவடித்தாமரைகளிற் பணிந்துப் பாதாதிகேச பரியந்தம் சேவித்துப் பரமானந்தமடைந்தவராகி ஓஜெகதீசா அடியேன் வசிப்பதற்குத் தேவரீருடைய திருவடித்தாமரைகளில் இடந்தரவேணுமென்றுவேண்டிக்கொள்ளும்சந்தோபாபாவரரையும் இவர்மனையாளாகிய ஏசுபாயியையுங்கண்டுஓபுனிதவரனே புனிதவதியே நீங்களிருவரும் என்னிடத்திலேயே சதாகாலமும் வாசம்பண்ணிக் கொண்டிருங்களென்று வரந்தந்தார் அந்தப்படியே சந்தோபாபாவரரும் ஏசுபாயியும் சிலவருடகாலம் அந்தப்பண்டரிபுரத்திலேயே வசித்துக்கொண்டிருந்து பகவான்னே மனப்படி ஸ்ரீவைகுந்தமாநகரத்தை யடைந்துநித்தியசூரிகளுடன்கலந்து இன்புற்றிருந்தார்கள்.

வாழி விருத்தம்.

சிந்தைதனில்மிகக்களித்துற் றேசிகனருள்பெற்றோன்வாழி
நந்தநந்தனன்பக்தியில்நாளும் போக்கினோன்வாழி
விந்தையாய்ப்பண்டரிபுரத்தை மேவினவள்ளல்வாழி
சந்தோபாசரணமலர்ச் சந்ததமும்வாழிவாழி.

சந்தோபாபாவரர்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீஜனார்த்தனாயநம:

ஸ்ரீமத்
விட்டலதாசர் சரித்திரம்.

14 FEB 1924

துதிவிருத்தம்.

சிட்டர்களேத்துஞ் சேஷசயனனைப்பாடியாடி
மட்டுமிதமிலாதமாவிந்தை மன்னாட்டத்தைத்
திட்டமாய்நிருத்தியென்றுந் தேவனைக்கண்டுபோற்றும்
விட்டலதாசர்சரண விமலத்தைப்போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு.

வடக்கே இந்துஸ்தானி தேசத்தினில்பிரமகுலத்தினிலுதித்த அண்ணன் தம்பிகளிரண்டு பேர்களிருந்தார்கள் அவர்களிருவரும் வேதசாஸ்திர புராண இதிகாசங்கள் முதலான சகல கல்விகளிலுந் தேர்ந்தவர்களாகியு மிகுசீலர்களாகியும் புத்திமான்களாகியும் நற்குணங்களையெல்லாம் ஆபரணமாகப் பூண்டவர்களாகியும் அந்நகரத்திலுள்ளச் சகலரும் புகழும்படியான கீர்த்திபெற்றவர்களுமாகியிருக்கிறபோது மூத்தோன் சமஸ்தானத்தில் வித்துவானாகியும் இளையோன்புரோகிதராகியுமிருந்து அளவிலாதப்பொருளைச்சேகரித்து இருவரும்தங்கள் மரபினிலுதித்த உத்தமிகளாகிய இரண்டு கன்னிகைகளைப்பேசி இருவரும் மணம்புரிந்துக்கொண்டு நிகமுஞ் சதையைப்போலவும் மலரும் மணம்போலவும் பாக்கினிற் சுவையைப் போலவும் கரும்பிற்குள் உருசியைப்போலவும் கணவனைவிட்டுப் பிரியாத மங்கையைப்போலவும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமலும் வெகு அன்னியோன்னிய மாகவும் நேசர்களைப்போல வெகுநாள்கடத்திக் கொண்டிருக்கிறபோது மூத்தோனுக்குப் புத்திரபாக்கிய மில்லை இளையோனுக்கோர் புதல்வன்பிறந்தான் அப்புதல்வனுக்குப் பனிரெண்டாநாள் தங்கள்பந்துமித்திரர்கள் முதலானோரை வரவழைத்து நீராட்டிமைதீட்டி ஆபரணங்கள்பூட்டிச் சீராட்டிப்பாராட்டி அனைவர்கள்முன்னிலையில் விட்டலனென்று நாமகரணமிட்டுத் தொட்டிலில்போட்டுத் தாலாட்டிப் புத்திரோச்சவத்தைப் பிரமோச்சவமாகக் கொண்டாடிவந்த விருந்தினர்கட்கெல்லாம் அறுசுவையன்னப் பரிமாறிச் சந்தண புஷ்பத்தாம்பூல தக்ஷிணைகளளித்து அவரவர்கள் தங்கடங்களிடம்போகச் சிலவளித்து அப்புத்திரனைநாளுக்குநாள் செல்வமாகவளர்த்து வந்தார்கள் புதல்வனும் சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப் போல வளர்ந்துக்கொண்டு ஒன்றிரண்டு மூன்றுநான்கு ஐந்துவயதான வுடனே அப்புதல்வனுக்கு க்ஷௌளம் உபநயனம் முதலானசுபங்களை நடத்திப் பள்ளியிலோத விடுத்தார்கள் அந்தவிட்டலனும் உபாத்தியாயர் சொற்படி நடந்துக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தான்.

இவ்வண்ணம் அந்தவிட்டலன் வெகுசிரத்தையாகக் கல்வியைக் கற்றுக்கொண்டிருக்கையில் இவன்தந்தைக்கும் பெரியதந்தைக்கும் கலகம்நேர்ந்து பாகித்துக்கொள்ள வெண்ணங்கொண்டு பாகிக்கிறபோது புரோகிதன் மூத்தோனைநோக்கி எல்லாப் பொருளும் இந்நகரத்தினில் யான்புரோகிதஞ்சொல்லி சம்பாதித்ததே அன்றிநீரென்ன சம்பாதித்தது உமக்கேது சமபாகம் தரமாட்டேனென்றனன் அதற்குமூத்தோன் அடாதம்பி யான் ராஜசமஸ்தானனத்தினில் வித்துவானாகவிருந்து சம்பாதித்த திரவியமேயாகும் நீ புரோகிதஞ் சொன்னவனாகையால் உனக்கவ்வளவு சம்பாதனையேது யெதோ கிஞ்சித்துப்பொருளைச்சம்பாதித்துவிட்டு எல்லாம் நானேசேகரஞ் செய்தபொருளே! ஆகையாலுமக்கு சமபாகங்கொடுக்கமாட்டேனென்று சொல்லுவது நீதியோவென்று ஞாயம்பேசிக்கொண்டேயிருந்து ஒருவருக்கொருவர் அடிதடிகளால் விடாது சண்டைசெய்து கீழிதுமேலிதாய் விழுந்து புரண்டுப் பொருளாசையால் ஒருவரையொருவர் களடித்தும் ஒருவரையொருவ ரிடித்துங்குத்தியும்வெ

ட்டியும் தீராக்கோபங் கொண்டவர்களாகிப் போராடுகையில் அக்கம்பக்கத்தினிலிருப்பவர்கள்வந்துஇவர்கள்செய்யுஞ் சண்டையைப்பார்த்து இதென்ன விபரீதம் அற்பமாகியும் அழிந்துபோவதாகியும் நிலையில்லாததாகியும் பிராணனைப்போக்குவதாயுமாகிய பொருளின் விஷயத்தினிலிப்படி சண்டைசெய்துக்கொண்டவர்களை நாங்களிதுபரியந்தம் யெவர்களையுங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை மேலும் நீங்களென்ன அன்னியர்களோ? அண்ணனும் தம்பியுமாகி யிருப்பதால் நீரதிகப்பொருளை யெடுத்துக்கொண்டாலு மென்ன அல்லது அவர்சிறிதுப்பொருள் அதிகமாக எடுத்துக் கொண்டாலுமென்ன இருவரு மனமொத்துப் போனால் மெத்தநன்றா யிருக்கின்றது மேலுமிச்செய்தியை அன்னியர்களறிந்தால் சிறிக்கமாட்டார்களோ அது உங்களுக்கு அவமானமல்லவோ இதுகளை யோசிக்காமல் நீங்களிருவரும் பிராணன் போகிறதுகூடத்தெரியாமல் சண்டைசெய்துக் கொள்ளுவது ஞாயமல்லவென்று பற்பல நீதிமதிகளைச்சொல்லி விலக்கிப் பார்த்தார்கள் ஏதேது ஒருவரையொருவர்விடாமல்வெகு மூர்க்கமாயும் பொருளின்மீதிலிருக்கும் அதிக ஆசையினாலும் மெத்த கோபத்துடன் சண்டை செய்வதையுணர்ந்து இங்கிருந்தால் மோசமுண்டாகு மென்று பயந்து அவரவர்கள் தங்கடங்கள் வீட்டை யடைந்தார்கள்.

இவ்வண்ணம் இப்பிராமணர்க ளிருவரும் ஒருவரையொருவர் மிதித்து ரோஷமிகுதியால் பதைத்தும் பிடித்துங் கடித்துப் வாயினில்வந்த துர்ப்பாஷைகளால் வைதும் விடாதுசண்டை செய்தும் ஒருநாள் முழுதும்போராடிபிரர்சொல்லும் புத்திமதிகளைக் கேளாமலும் சாந்தகுணத்தை வசிக்காமலும் மூடத்தனமாக அடித்துக்கொண்டு பொருளாசையினால் இருவரும் மடிந்துபோயினார்கள் இச்செய்தியை அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் அரசனுக்கறிவித்தார்கள் அதை வேந்தன் கேட்டுத் தனது சமஸ்தான வித்துவானுடைய வித்துவத்திறமைக்கும் அவர்க்குண்டாயிருந்த புத்திநுட்பத்திற்கும் மெத்த விசனப்பட்டு மந்திரியுடன் வித்துவான் வீட்டிற்குவந்து நடந்த செய்திகளையெல்லாம் ஆதியோடந்தமாகக் கேட்டு இருவருமிறந்துப்போனமையால் விசாரணை செய்யவும் தண்டனை விதிப்பதற்கு மில்லாமற் போனமையால் அந்த அரசன் இறந்துக்கிடக்கும் வித்துவானைநோக்கி ஓசுவாமி நீர்மெத்த சாதுவாச்சுதே உமக்கிப்படிப்பட்டகோபமிருக்குமென்றும் யான்சிறிதுங் கருதவேயில்லையே இந்த அற்பப்பொருளுக்காக யேதுக்கு சண்டைசெய்தீர் இப்பொருளையெல்லாம்விடுத்து என்னிடம்வந்து என்தம்பியானவன் அக்கிரமமாக என்பாகத்தையும் கைக்கொண்டு மோசஞ் செய்துவிட்டானென்று ஒரு வார்த்தை என்னிடஞ்சொன்னால் உடனே யவனைவரவழைத்து விசாரணைசெய்து உமக்குச்சேரவேண்டிய சமபாகத்தைக் கொடுத்து விடும்படிக் கட்டளையிட்டு நின்பாகத்தை நினக்குச் சேர்ப்பிப்பேனலலவா அல்லது அந்தபாகத்தைப் பார்க்கிலும் நாலுபங்கு அதிகமாக யானாகிலுங் கொடுப்பேனே இதை யெல்லாம் நன்றாயோசிக்காமல் அன்னியாயமாய் சண்டைசெய்துப் பிராணனைப் போக்கிக்கொண்டயே இச்செய்தியைப் பிறருக்குச்சொல்லிபவர்களால்நாமேனும்நமது தம்பியேனும் புத்திமதிகளைச் சொல்லக்கேட்பதைப் பார்க்கிலும் நம்மாலானமட்டுஞ் சண்டைசெய்து ஜெயித்தால் இப்பொருளையெல்லாம் நாமடையலாமென்றெண்ணங்கொண்டு சண்டைசெய் திறந்தாயோ அல்லது அயனெழுதிய யெழுத்து யிம்மட்டில் தானோ என்று பற்பலவாறு விசனப்பட்டு ஒன்றுஞ் செய்வதற்குமுடியாமல் அடக்கஞ்செய்து விடும்படிக் கட்டளையிட்டு மந்திரியுடன் அரசன் அரண்மனையைச்சேர்ந்தான் உடனே இறந்துபோன இரண்டு பிராமணர்கள் மனைவிகளுந் தங்கடங்கள் நாயகன்மீதுவிழுந்துப் பதரிக்கதறி குய்யோ முறையோவென்றழுது புலம்புகையில் இதற்குள்ளிவர்கள் மைத்துனர்களும் மாமன் மாமிகளும்வந்து மருமகனையும் மகளையும்பார்த்துவிசனப்பட்டு உங்களிருவரையுஞ் சண்டைசெய்திறக்கும்படிப் பிரமதேவன் எழுதினானோ அல்லது எந்தப் பெரியோர்களிட்ட சாபத்தின் கொடுமையோ வென்றுசொல்லி ஒருவாறுகத்தேரிபிரேதசம்ஸ்காரத்திற்கு வேண்டிய சாமக்கிரிகைகளைச் சேகரஞ்செய்து இருவரையும் பாடையின்மீதேற்றி ஸ்மசானபூமியிற் சேர்த்துக்கட்டை முட்டைகளையடுக்கி யதிலவர்களைக் கிடத்திமூடிக் கொள்ளிவைத்துத் தகனஞ்செய்துவீட்டையடைந்து யன்றுமுதல் பனிரெண்டுநாளைய கருமங்களும் நிறைவேற்றித் தங்கடங்க ளிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

இவ்வாறு இவர்களிருவருக்கும்விட்டலனைக்கொண்டு கருமக்கிரியைகளை நடத்திவிட்டுப் பந்துமித்திரர்கள் போயினபின்பு சிலநாள்களுக்கெல்லாம் இந்த விட்டலனுக்கு கல்வித்தேர்ச்சி யுண்டாகி மெத்தவல்லவனாகி சகலசாஸ்திர புராணங்களிலும்மெத்தசமர்த்தனாகி யிருக்கிறபோது ஒருநாளிந்த விட்டலன் தன் தாயைநோக்கி ஓஅம்மணி ! எனதுதந்தை யெப்படியிறந்துபோயினாரெனறுவினவ அதற்கந்தமாதுமகனை

நோக்கி அடாமகனே! அழகானமுகனே கேவலமாகியும் அற்பமாகியும் அழிந்துப் போவதாகியும் மிருக்கும் இதோ இந்தப்பொருள்களினமீது அதிகஆசை கொண்டவர்களாகி நினது தந்தையும் பெரியதந்தையும் சண்டைசெய்து இருவரும் ஒரேநாளில் மடிந்துப் போயினார்களென்று சொல்லக்கேட்டு அந்தவிட்டலன் மெத்த விசனமடைந்து அற்பப் பொருளுக் காசை கொண்டா மடிந்துபோயினார்கள் யான்கேழ்விப்பட்டமட்டில் அவர்களிருவரும் மெத்தக் கல்வியிற் சிறந்தவர்களென்றும் ஒருவர் புரோகிதரென்றும் மற்றொருவர் சம்ஸ்தான வித்துவானென்று மறிந்தேன் இப்படிப்பட்ட சமர்த்தர்களாயிருந்தும் க்ஞானமில்லாமல் பொருளாசையினால் அடித்துக்கொண்டு மடிந்துபோயினார்களென்று நீசொல்லுவது ஞாயமோ பிர்மதேவன் யெழுதிய திவ்வளவே அந்தக் கெடுவுக்குள் அவர்கள் மரணமடையவேண்டியவிதியிருந்தபடியால் அவர்களந்தப்படியே அடித்துக்கொண்டு மாய்ந்துப் போயினார்கள் மேலுமிந்தசெய்தியை யறிந்தவர்களெல்லாம் கேவலமாகப் பேசிக்கொள்ளுவதற்கு இடமாயிற்று இதுவெகு காலத்திற்குப் பேராகி விளங்கும் நாமிதைப்பத்திப் பேசிக்கொண்டு வீண்காலம்போக்குவதால் பிரயோஜனமில்லை யென்றுக்கருதி உடனே தந்தைகள் சேகரித்துவைத்திருக்கிற திரவியப்பெட்டியைத் திறந்துபார்த்து இந்ததிரவியத்தை நல்ல விஷயத்தில் சிலவுசெய்ய வேணுமென்று யோசித்துக்கொண்டே தன்தாயை நோக்கி ஓஅம்மணி என்னுடைய தந்தைகள் செய்திருந்தப்புரோகிதத்திற்கேனும் அல்லது சமஸ்தான வித்துவான் உத்தியோகமாகிய இவ்விரண்டையுய் நான்பார்க்கிறதில்லை ஏனெனில் இந்த ஞாயமானது விஷயத்திற்கேதுவாகவிருக்கும்மேலும் நன்மார்க்கத்தி லிருப்பவர்களை துன்மார்க்கத்திலிருப்பவாகள் கண்டால் விரோதமே ஏனெனில் இவனென்ன பெரியபக்தனைப்போலவும் வேதாந்தியைப்போலவும் சர்வசங்கத்தையும் விடுத்தத் துறவரியைப்போலவும் காணப்படுகிறான் சிலநாளைக்கு முன்னமிவனிருந்த அந்திஸ்து யாருங்கும்தெரியாதோ இவனுடைய நடவடிக்கையைப்பத்திபேசினால் நாய்கூடத்தண்ணீர் குடியாது அப்படிப்பட்ட துஷ்டனாகவிருந்த இவன் இப்போது திரேகமெங்கும் நாமம் ஸ்ரீசூரணந்தரித்து கழுத்தினில் வனமாலை வனசமாலையைத்தரித்துச்கொண்டு வேஷக்காரனைப்போல சஞ்சரிக்கு மிவனொரு பாகவதனேயென்பார்கள் துன்மார்க்கத்திலிருப்பவர்களை நன்மார்க்கத்தினி லிருப்பவர்கள்கண்டால்விரோதமே ஏனெனில் இவனென்ன கொடிய துஷ்டனாகவிருக்கின்றான் இவ்வுலகத்தினில் அரிதாகிய இந்தநரஜென்மம் வந்ததற்குக் காரணமென்ன இந்தநரஜென்மமிருக்கிறபோதே செய்யவேண்டிய சாதனமின்னதென்றுணராமல் வாழ்நாளையெல்லாம் வீணாகக் கடத்தி விஷயாந்திரத்திற்குட் பட்டு மானையொத்த விழிகளையுடைய மடவார்கள் வலைக்குள் ளகப்பட்டு அந்தவலையை விடுவித்துக்கொண்டு வெளிப்படும்மார்க்கத்தையுணராமல் விஷயவாஞ்சையிலேயே நாளைப்போக்கி நரகத்துக் காளாகின்றார்களே யென்றும்கருதுவார்கள் ஆகையால் நன்மார்க்கம் துன்மார்க்கமெனு மிவ்விரண்டிற்குள் நன்மார்க்கமே விசேஷமாதலால் ஓஅன்னையே நானிந்த வுலகமாயா சம்பந்தத்தையொழித்து ஜென்மசாபல்லியமாகும் சாதனஞ்செய்துக் கொண்டிருப்பது எனக்குமேலானவழியென்று நினைந்து அதற்குத்தக்க சாதனஞ் செய்வதற்கு ஆதியாகிய சாதுக்கள் சங்கமத்தைச் செய்வதற் குபாயமெதுவோ அந்த அன்னதானஞ் செய்கிறேனென்று சொல்லி அதற்குத் தக்கயோசனை செய்துக்கொண்டிருந்தார்.

இவ்வண்ணம் அந்தவிட்டலன் அன்னதானஞ் செய்யவேணுமென்றாலோசித்து தந்தைகள் சேகரித்துவைத்துப்போயின திரவியத்தை எடுத்து வேண்டுமான சாமக்கிரியைகளைக்கொண்டு எத்தனைபேர்பிராமணர்கள்வரினும் இல்லையெண்ணாமல் அனனதானஞ் செய்துக்கொண்டு வந்தார் இப்படிக்கிந்த விட்டலன அன்னதானம்விடாமல் பலவருடங்கள் செய்துக்கொண்டு வந்தமையால் இருந்ததிரவிய மெல்லாஞ்சிலவழிந்துக் காலணாவுக்கும் வழியில்லாத வருமைவந்துநேர்ந்தது அதினால் அந்தவிட்டலன் சிறிதேனும் விசனப்படாமல் மெத்ததைரியத்துட னிருந்தார் ஆனால்சானங்களனேக மாகவிருக்க அன்னதானமென்ன அவ்வளவுசிறந்தது அதினாலென்ன பலனுண்டாகுமென்றால் இவ்வுலகத்தினி லெந்தப்புண்ணியவான் அன்னதானஞ் செய்கின்றானோ அவ்விடத்திற்குச் சாதுக்களனேகர் எழுந்தருளுவார்கள் அவர்கள் சேவையினால் அன்னதானஞ்செய்யும் புண்ணியவானுக்கு ஏர்ப்பட்டிருக்கும் பூர்வகருமங்களெல்லாம்சூரியனைக்கண்டபனி போல அக்கணமே அவரைவிட்டுநீங்கிவிடும் கர்மங்களெப்போது நீங்கிபோயிற்றோ உடனே அப்புண்ணியவான் அழகிய திருமாமணிமண்டபமெனும் வைகுந்தமாநகரத்தை யடைந்து மறுபடியும் ஜென்மமில்லாமல் எப்போதும் அந்தவைகுந்தத்திலேயே யிருக்கும்படிச்செய்யும் இப்படி யிப்புண்ணியவான் பரமபதத்தையடைந்தும் இவர்செய்தஅன்தானத்தினாலுண்டாகிய கீர்த்தியானது எட்டுதிக்குகளிலும் பாவியங்

குள்ள மனிதர்களெல்லாம் புகழும்படியாகச்செய்விக்கும் மேலும் அளவில்லாத திரவியத்தையொருவனுக்குத் தானஞ் செய்தபோதிலும் திருப்தியடையமாட்டான் அப்படிப்பட்டவனுக்கு அன்னதானஞ்செய்தால்அவனதைப் புசித்துத் திருப்தியடைந்து ஆனந்தித்துக்கொண்டு போவான் ஆகையாலிந்த அன்னதானத்திற்கு மேலானதான மெதுவுமில்லை யாதலாலிந்த விட்டலரும் அன்னதானஞ் செய்துப் பரமபுனிதராகிக் ஞானபக்தி வைராக்கிய மதிகரித்து என்னேரமும் இடைவிடாமல் ஸ்ரீஹரி பாண்டுரங்க விட்டலா பரம தயாளா பக்தவற்சலா பாபநிர்மூலா பாண்டவரிபாலா பக்தபாலா பரமசீலா பங்கயத்தாளா பகருமாதி மூலாவென்று துதிசெய்துக்கொண் டிருந்தார்.

இவ்வண்ணம் விட்டலர் பகவத்தியானஞ் செய்துக்கொண் டிருப்பதையும் அவருக்குண்டாகியயெவ்வனபருவத்தையும் அன்னையானவள் கண்டு வெகுவாகப் பிரலாபித்துக்கொண்டு இனிநாம்சும்மாவிருப்பது ஞாயமல்லவென்று விண்டு அக்கணமே சென்று தங்கள் மரபினிலுதித்த உத்தமியாகியக் கன்னிகையைப் பேசித் தன்கையிருப்புத் திரவியத்தைச் சிலவழித்து மணப்பந்தல் போடுவித்து அதில்வாழை கமுகுமுதலியமரங்களை அலங்காரமாகக் கட்டி விவாகத்திற்கு முன்னமாக வேண்டியசடங்குகளை யெல்லாம் நடத்தி அனேகமேளவாத்தியங்கள் கடலொலிபோல் முழங்கத் தம்பதிகளுக்கு ஸ்னானஞ்செய்வித்து ஆடையாபரணங்கலலங்கரித்து மலர்மாலைகளைக்சூட்டி யழைத்துவந்து மணவரையினில் ஒக்காத்தி ஓமசாந்திமுதலானதுகளும் நடத்திப் பூசுரர்கள் ஆசீர்வதிக்க பிராமணஸ்ரீகள் ஆலாத்தியெடுக்கப் பெரியோர்கள் பல்லாண்டிசைக்க மாங்கிலியத்தை யாவரும் மந்திரபுஷ்பங்களாலர்ச்சித்து மாப்பிள்ளையாகிய விட்டலர்கரங்களிற் கொடுத்துக் கலியாணப்பெண்ணின் கழுத்தினிற் கட்டும்படிச்செய்து அமோக வாத்தியங்கள் கோஷிக்க வதூவராளிருவரையும் யாவரும்பூஷிக்க சகலசம்பிரமத்துடன் விவாகத்தைநடத்தி அதிதியப்பியாகதர்களுக்கு வேண்டியமட்டுக்கும் பூரிகளளித்து ஏழைப் பரதேசிகளுக்கு இல்லையென்னாமல் யாவருக்கும் திருப்தியுண்டாகும்படி தானமளித்துப் பந்துமித்திரர் முதலானோருக்கும் அறுசுவையன்னமும் பற்பல பலகாரவகைகளைப் பரிமாரினவுடன் யாவரும்புசித்தானபின்பு சந்தனபுஷ்ப தாம்பூலாதிகள் யீந்து அனைவருக்கும் விடைதந்து அனுப்பிவிட்டுத் தன்மகனையும்மருகியையும் வெகுப்பிரியமாகப் பாதுகாத்துக்கொண்டிருந்தனள் அப்போது விட்டலர் ஸ்ரீஹரிபூசையும் ஸ்ரீஹரிபஜனையும் விடாது செய்துக்கொண்டு எப்போதும் அச்சுதாகிருஷ்ணா ஸ்ரீஹரியென்றுநாவாரசொல்லிக்கொண்டேதிரேகத்தைமறந்து மூர்ச்சையடைந்து பூமியின்மீது விழுந்து ஒருஜாமபரியந்தம் அப்படியேயிருந்து மறுபடியும் யெழுந்து மெத்தப்பிரியத்துடன் ஸ்ரீஹரிநாமத்தை மென்மேலும்வசனித்துக்கொண்டுமிருந்தார் இதைக்கண்டு நல்லோர்கள்யாவரும் இவர் நிஷ்டைசெய்வதில் மெத்த வல்லவரென்றும் திடவைராக்கிய முடையவரென்றும் இந்தப்பக்குவமானநிஷ்டை யெல்லோருக்கும் பிடிப்படுவது மெத்ததுர்பலமென்றுஞ் சொல்லிக் கொண்டிருக்கத் தீயோர்கள் இந்தவிட்டல பந்துவை நாமறியோமோ இவன்டம்பத்திற்கும் பெருமையடையும் பொருட்டும் வைஷ்ணவனைப்போல வேடந்தரித்துக் கொண்டிருக்கின்றானேயன்றி உண்மையிலெயே இவனுக்குப்பக்தி க்ஞான வைராக்கிய மில்லவே யில்லையென்றும் மேலும்பள்ளியினி லோதினவரேயன்றி இவர்எந்தஆசானை அடுத்து உபதேசம் பெற்றுக்கொண்டார் என்ன க்ஞானமார்க்கந் தெரிந்துக்கொண்டார் இவருக்குநிஷ்டை யுண்டாவதற்கு இது உலகத்தோரை யேமாத்திப் பொருள் சம்பாதிக்கவெண்ணிப் பொய்நிஷ்டை செய்கிறாரேயன்றி யிது உண்மையான நிஷ்டையல்ல பனிரெண்டுவருடகாலம் ஆசானுக்குத்தொண்டுசெய்திருந்து அவர்களித்துக் கிருபையுடன் உபதேசித்து நிஷ்டை சந்திக்கும்படியான நுட்பங்களை யெல்லாம் விவரமாகச் சொல்லக் கேட்டுக்கொண்ட புண்ணியவான்களுக்கெல்லாம் நிஷ்டை கைக்கூடிவராமல் பிரமித்துக்கொண்டு மெத்த விசனமடைந்திருக்க இவர்நிஷ்டைசாதிக்கின்றாரென்பது வீணேயென்றுப்பலதரஞ்சொல்லிக் கொண்டிருக்க ஒருநாளந்த நகரத்தையாளும்அரசன் தன்மந்திரியைநோக்கி வினவத் தொடங்கினான்.

அதென்னவெனில் ஓமதிமந்திரியேஎனக்குமெத்தப்பிரியனாகியும் புரோகிதனாகியு மிருந்துப் பொருள் வாஞ்சையினால் அண்ணன் தம்பிகளிருவர்கள்சண்டை செய்து ஒருவருககொருவர் அடித்துக்கொண் டிறந்துபோயின இளையோனுக்கு ஒருபுதல்வன் யிருக்கின்றாரென்று யான்முன்னஞ் சிலரால்சொல்லக் கேட்டிருக்கின்றேன் அந்தப்புதல்வன் இப்போதெப்படி யிருக்கின்றான் அவனுடைய நடவடிக்கைகள் யெவ்விதமாயிருக்கின்றது தந்தையைப்போல சமர்த்தனா யிருப்பானா புலிவயிற்றிற் பிறந்தகுட்டிப் புலியைப்போலவிருக்குமா அல்லது பூனையைப்போ லிருக்குமோ அந்த விருத்தாந்தத்தைத் தெளிவாகச்சொல்லுமென அதற்குமந்திரி வேந்தனை நோக்கி ஐயா பூபாலரே

அச்சிறுவன்மெத்த புத்திமானும் க்ஞானபக்திவைராக்கியமிகுத்து மெத்த சாதுவாகிப் பிரமநிஷ்டையிற் றேர்ந்தவராகி ஸ்ரீஹரிப்ஜனை செய்துக்கொண்டிருக்கின்றானென்று சொல்லக்கேட்டு அரசன் நிதியிலும்மதியிலுஞ்சிறந்த மந்திரியே அச்சிறுவன் தன்தந்தையைப்போல புரோகிதஞ்சொல்லி ஜீவனஞ் செய்யாமலுங் குலத்தொழிலை விடுத்துப் பகவத்விஷயத்தி லீடுபட்டுக்கொண்டுப் பிரமநிஷ்டனா யிருப்பதுநீதியோவென அதற்குமந்திரி ஐயா முடிவேந்தர் சிகாமணியே அச்சிறுவன் தன்தந்தையர்கள் பொருளாசையினால் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு மரணமடைந்ததைக்கேட்டு மெத்த விசனமடைந்து பொருள்விஷயத்தினில் விரக்தனாகி அனைத்திலும் ஆசையற்றுத் தானெனும் கெர்வத்தைவிடுத்து பக்தியிற் பிரியமதிகரித்து ஸ்ரீஹரியின் திருவடித்தாமரைகளை யடுத்து பஜனைசெய்துக் கொண்டும் பிரமநிஷ்டையில மனதைச் செலுத்தித்தன்னை மறந்திருக்கிறானெனக்கேட்டு அரசன் மந்திரியைநோக்கி ஓ அமைச்சனே அந்தச்சிறுவனாகிய விட்டலனை யிங்கழைப்பித்து அவனுக்குதனதானியங்களை யதிகமாகக் கொடுக்க வேணுமென்று என்மனதினில் கோரிக்கை யுண்டாயிருக்கின்றது ஏனெனில் அச்சிறுவன் மெத்தவிர்த்தனாகிச் சகலத்திலும் வெறுப்பையடைந்து திடவைராக்கிய சீலனாகிப் பிரமநிஷ்டையினில் சிறந்த ஆவல்கொண்டவனாகியுமிருப்பதால் அப்படிப்பட்ட உத்தமகுணசீலனுக்குக் குட்சிபாதையில்லாமல் எப்போதும் ஆகாரம் பூரணமாக விருக்குமேயாகில் மெனமேலும் பிரமநிஷ்டை அதிகரிக்கும் அப்படிப்பட்ட குக்ஷியில் நமது கஷ்டமாகிய தானியங்களும் பொருளும்போய் விழுந்தால் நமக்கு மெத்தப்புண்ணிய முண்டாவதன்னியிலும்மென்மேலும் நமக்குப் பொருளுந் தானியங்களு விர்த்தியாகுமெனக்கேட்டு மந்திரி மெத்த சந்துஷ்டனாகி ஓ சுவாமி இப்போது தங்களுக்குண்டாகிய கோரிக்கை மெத்தநலமாக விருக்கின்றது தாங்கள் சொல்லியபடிக்கி அந்தச்சிறுவனாகிய விட்டலபந்துவை யழைப்பித்துப் பொருளுந் தானியங்களுங் கொடுத்தனுப்பினால் தேவரீருக்கு சொர்க்கலோகப் பிராப்தியுண்டாகுமென்றுசொல்லி அக்கணமே சோப்தார்களையழைப்பித்து அடா சோப்தார்களே நீங்கள்சென்றுவிட்டலபந்துவை யழைத்துக்கொண்டு சீக்கிரம் வந்துசேருங்களென்றுக் கட்டளையிட்டான் அந்தப்படியே சோபதார்களும் விட்டலபந்து வீட்டைநோக்கி விரைந்து சென்று விட்டலபந்தைக் கண்டு பணிந்து ஓசுவாமி தங்களை எங்களரசனழைத்து வரச்சொன்னா ரென்று வேண்டிக்கொள்ள அதற்கந்த விட்டலபந்து சற்றாலோசித்துத் துரவிக்கு வேந்தன் துரும்பென்னும்நீதி வசனத்தைப்போல சோப்தார்களைநோக்கி ஓ சோப்தார்களே இநம்படிக்குமிடத்தில்நாய்க்கென்னவேலையென்பதைப்போல எனக்கு அரசனிடத்தி லென்ன வேலை அரசனுக்கென்னாலென்ன வேலையிருக்கின்றது ஒன்றுமேயில்லையே அப்படிக்கிருக்க அரசனென்னை யழைத்துவரச் சொன்னாரென்பது மெத்த வியக்கத்தக்கதாக விருக்கின்றது ஆகையாலுங்க ளரசனிடஞ் சென்று வருகிறதில்லையென்றுசொன்னானென்றுசொல்லக்கேட்டு அந்தச்சோப்தார்கள் விரைந்தோடிச்சென்று அரசனைக்கண்டு வணங்கி ஓசுவாமி யாங்கள்சென்று அந்த விட்டவபந்தைக்கண்டு பணிந்துத்தங்களையரசனழைத்துவரச் சொன்னா ரெனறு வினயமாகப் பேசி யழைத்தோம் அதற்கவர் தான்வருகிறதில்லையென்றுங்க ளரசனிடஞ் சொல்லுங்களெனவிண்டார் இதுசெய்தியை தேவரீருக்குவிண்ணப்பஞ்செய்தோம் இனியுமதுசித்தம் அவர்பாக்கிய மென்று கொல்விச் சென்றார்கள் அதைக்கேட்டுஅரசன்மெத்தசந்தோஷமடைந்து சிலசாதுக்களை யழைப்பித்து அவர்களை வணங்கி ஓசுவாமிகளே அடியேன் பொருட்டுச் சிரமமெடுத்துக்கொண்டு விட்டல பந்துவினிடஞ் சென்று யானழைத்துவரச் சொன்னதாக அவருக்குத் தெரியப்படுத்தி எப்படியாகிலும் அவரை யிங்கழைத்து வந்துன்மனதி லுதித்தக் கோரிக்கையை நிரைவேத்தி என்னைப் புனிதனாகச் செய்யவேணுமென்று வேண்டிக்கொண்டான் அதற்கந்தசாதுக்கள் அரசனை நோக்கி ஐயாபூபாலரே உமதிஷ்டப்படியேயாங்கள்சென்று அந்த விட்டலபந்தைக்கண்டு பேசி யெவ்விதத்திலாகிலும் அவர் மனம்களிக்கச்செய்து இங்கு தங்கள் சமுகமழைத்துக்கொண்டு வருகிறோமென்றுசொல்லி விடை பெற்றுக்கொண்டு சென்று விட்டலபந்தைக் கண்டு சொல்லத் தொடங்கினார்கள்.

கேளும் பரமநிஷ்டாபரராகிய விட்டலதாசரே அரசனென்றால் கேவல நல்லவிஷ்ணு அம்சம்பெற்றவனே அரசனாகும் அவனுக்கு ரதம் கஜம் துரகம் பதாதிகளெனும் நால்வகைச்சேனைகளும்தண்டத்தலைவர் யூகத்தலைவர் அணித்தலைவர் படைத்தலைவர் முதலான சேனாயகர்களு முண்டுமேலும் அஷ்டலட்சுமி கடாக்ஷமும் அவ்வரசனுக்குண்டு இத்தியாதிகளெல்லாம் விஷ்ணு அம்சம்பெற்ற அரசனுக்கே யுண்டாகும் அன்றியும் நவரத்தினங்கள் இடம் பொருள் யேவல் முதலானதுகளும் அந்த அரசனுக்கனுகூலப்பட்டிருக்கும் மேலும் பூச்சக்கிரக்குடை நிழலிலிருந்துக்கொண்டு கரத்தினிற் செங்கோல்தரித்து ஸ்ரீமஹா

விஷ்ணுவானவர் அண்டரண்ட பகிரண்டங்களிலுள்ள சர அசரமாகிய சகலப் பிராணிகளுடனும் மிருகங்கள் பறவைகள் ஊர்வன பறப்பன நடப்பன முதலான பிபீலிகாதிகளையும் பாதுகாத்து ரட்சிப்பது போல இந்தஅரசனும் மஹா விஷ்ணுவைப் போல தன்னுடைய கைக்குட் பட்டிருக்குஞ் சகலஜெந்து ஜனங்களையும் பாதுகாத்துக் குடிகளுக்கெவ்வித யிடையூறுகளும்வர வொட்டாமல் துஷ்டர்களை சிட்சித்துச் சிஷ்டர்களை ரட்சித்துக்கொண்டு மநுநீதிவழுவாமல் அரசுசெலுத்துமவனாதலால் இவ்வரசனை ஸ்ரீமகாவிஷ்ணுவென்றே மதிக்கவேண்டும் அதைவிடுத்து நாம் சதாகாலமும் ஸ்ரீஹரிபஜனை செய்துக்கொண்டு பிரமநிஷ்டாபரனாகியிருக்கும் நமக்கிணையாவனோ அரசனென்று கெர்வித்துத் தானெனும் மமதைகொண்டிருப்பது ஞாயமோ அன்றியும் ஏதோ ஒருசந்தர்ப்பத்தில் அரசன் நமது பட்டணத்தில் வாசமாகயிருக்கும் சாதுவையழைப்பித்து அவர் மூலியமாக நமக்குண்டாயிருக்கும் சந்தேகத்தை நிவர்த்திசெய்துக் கொள்ளவேணு மென்று நினைந்து தன்னைப்போலொத்தவர்களை யழைப்பித்தால் என்னாலரசனுக் கொருவேலையுமில்லை அரசனாலெனக்கொருவித வேலையுமில்லை யென்றுங்க ளரசனுக்குத் தெரியப்படுத்துங்களென்று சொல்லியனுப்புவது நீதியோ இதுசாதுக்களுக்குறிய தர்மமல்லவே யென்றும் சகலமுந்தெரிந்த தங்களைப்போலொத்தவர்களே அரசனைமதிக்காமல் கேவலப்படுத்தினால் எம்போலொத்தவர்கள் இன்னுங் கேவலமாக வல்லவோ பேசும்படி நேரிடும் இப்படிக்கியாரேனும் அரசனையிழிவாகநினைந்து மதிப்பின்றிப்பேசினால் அவர்களுக்குத்தக்க நீதிகளையோதி அரசனுக்கு வழிபடும்படிச்செய்வதைவிடுத்துத் தாங்களே! இப்படிசொல்லி யனுப்புவது நீதியல்ல மேலும் அரசனேதோ சாதுவாக விருக்கிறபடியால் தாங்கள் சொல்லியனுப்பிய சொல்லைக் கேட்டுக் கோபஞ்செய்யாம லிருந்துவிட்டார் துஷ்டனாகயிருந்தால் மெத்த சினங்கொண்டு உம்மைப் பிடித்துக்கட்டிக்கொண்டு வரும்படிசெய்து பலவிததண்டனைகளை விதித்து உம்மைக்கஷ்டத்தை யடையும்படிச் செய்விப்பானன்றோ இதுகளையெல்லாந் தேவரீர் தீர்க்காலோசனைச் செய்யாமல் வந்தவர்களிடங்கடுமையாகப் பேசியனுப்பியது தக்கதல்ல வென்றும் பலவிதநீதி மார்க்கங்களையோதி நடந்துபோனதைக் குறித்துப் பேசுவதால் பிரயோஜனமில்லை மேல்நடக்கவேண்டிய விஷயத்தைப் பத்தியென்ன சொல்லுகின்றீ ரென்று வினவிய சாதுக்களைநோக்கி விட்டலதாசர் சொல்லத் தொடங்கினர்.

கேளுங்கள் சாதுக்களே ராஜசதாமசகுணங்களையனுசரித்து நடப்பவர்கள் அரசர்களென்றும் அவர்களுக்குச் சூரியகுலப் பிரபாவத்தால் சுத்தசத்வகுணமிராதென்றும் பெரியோர்கள் சொல்ல யான்கேட்டிருப்பதனால் அரசன் விஷயத்திலெனக்கு அவமதிப்புண்டாயிற்று அன்றியும் இது என்னுடைய துர்க்குணத்தாற் சொல்லியதேயாம் இந்த அபசாரத்தை மன்னிக்க வேணுமென்று வேண்டிக்கொண்டார் அதற்கந்த சாதுக்க ஐயா விட்டலதாசரே யாங்களும்மைநல்வழியாய் நடக்கும்படியாகவும் உம்முடைய விஷயத்திலெங்களுக் குண்டாயிருக்கும் பிரியத்தினாலும் ஏதோ தெரிந்தும் தெரியாமலும் சொல்லிவிட்டோம் இதைப் பற்றி நீயெங்கள்மீது முனிவுகொள்ளவேண்டாமென்று வினயமாகப் பேசிப்பின்னுஞ் சொல்லுகின்றார்கள் ஐயா விட்டலதாசரே உம்மைச் சோப்தார்களைக்கொண்டு அழைப்பித்த அரசன் மனங்களிக்கும்படி நீரெங்கள் பின்வருவீரேயாகில் நாங்களழைத்துக் கொண்டு போய் அரசனிடம் உம்மைவிடுத்து அரசனுக்குண்டாயிருக்கும் ஆயாசத்தைப் போக்கி உங்களிருவரையும் சந்தோஷமாயிருக்கும்படி சமரசப்படுத்தி விட்டுப் போகிறோமென்றும் சீக்கிரம் வாருமையா வென்றழைத்த மாத்திரத்தில் அந்தவிட்டலதாசர் மெத்த சந்துஷ்டராகி அந்தச்சாதுக்கள் பின்னே நடந்தார் அப்போது சாதுக்கள் விட்டலதாசருடன் ஸ்ரீஹரி நாமத்தைத் துதிசெய்துக் கொண்டே அரசன் சபையைச் சேர்ந்தார்கள் அப்போது அந்தஅரசன்சாதுக்களுடன்வந்த விட்டலதாசரைக் கண்டு சிறிதுதூரம் தான் எதிர்ச்சென்றழைத்துவந்து அவர்களுக்குத்தக்க ஆசனமளித்து சோடச உபசாரங்களுஞ்செய்து விழுந்துபணிந்து எழுந்து சென்னியின்மீது இருகரங்களையுங் குவித்துக்கொண்டு ஓசுவாமி தேவரீருடைய வாக்கினால் பகவானுடைய கீர்த்தனைகளாகுங் குணானுபவங்களைக் கேழ்க்கவிருப்பங்கொண்டேன் ஆகையால் தயவுசெய்து அடியேனுடைய ஆவலைத்தீர்த்துரட்சிக்கவேணுமென்று வேண்டிக்கொண்டான் அப்படிதன்னை வேண்டிக்கொள்ளும் அரசனுடைய வாஞ்சையை தீர்க்கமனமுகந்து விட்டலதாசர் அப்படியே பகவத்குணானுபவஞ் செய்கிறேனென்று சம்மதிக்க அப்போது அரசன் மேடையின்மீது ஜமுக்காளங்களைப் போட்டு சகலவாத்தியங்களையும அழைப்பித்துச் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளை வரவழைத்து விட்டலதாசர் வாக்கினாலெப்போது ஹரிநாம சங்கீர்த்தனஞ் சொல்லுவாரோ வென்று சோதிநட்சத்திரத்தில்பெய்யும் மழைபிந்துகளுக்கு எதிர்ப்பார்த்திருக்கும் முத்துச்சிப்பியைப்போல அரசன் விட்டலதாசருக்கெதிர்

பார்த்துக் கொண்டிருந்தான் அப்போது சிலதுஷ்டர்
களும் இன்னுமனேக ஜெனங்களும்வந்து விட்டலதா
சர்சொல்லும் ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனை யாகும்
பகவத்குணானுபவங்களைக் கேட்கும பொருட்டு மே
டைமீதுபோட்டிருக்தும் ஜமுகாளத்தின்மேலுட்கார்
ந்திருந்தார்கள் தற்சமயத்தினில் விட்டலதாசர் எழு
ந்துநின்று சுநாதமுடைய வாத்தியங்களைக் கூட்டிக்
கொண்டு ஸ்ரீஹரிகதையைச் சொல்ல ஆரம்பித்துச்
சகலலோகத்தவர்களுந் துதிசெய்யும் கிருபையுடைய
மகாவிஷ்ணுவே ஸ்ரீபாண்டுரங்க விட்டலாவென்று
ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனங்களை பூரணபக்தியுடன் பா
டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீரொழுகக் காலில்கட்
டிய செஜ்ஜைகள்முழங்க ஆடியும் திரேகத்தைமறந்து
பூமியின்மீது தான்விழுந்து கடகடவென் றுருண்டுப்
படிகளின் மார்க்கமாய் கீழேவிழுந்து சாவுக்குச் சரி
யான மூர்ச்சையடைந்தார் இதைக்கண்டுசகலஜெனங்
களும் ஆஹாவென்று ஒசைச்செய்தார்கள் துஷ்டர்
கள் சந்தோஷமடைந்தார்கள் அந்தஅனர்த்தத்தைக்
கண்டு அரசன் மெத்த விசனமடைந்தவனாகித் திடு
திடென்றோடிக் கீழேயிறங்கி விட்டலதாசர்கரத்தைப்
பிடித்துப் பார்த்து அவர்திரேகத்தினில்திடமும்சுவா
சமுஞ் சிறிதேனு மில்லாமையினாலே இதற்கென்ன
செய்வேன் ஐயோ இந்தவிட்டலதாசர் தன்வீட்டினி
லேதானே நிம்மதியாக விருந்தாரே அவரையான்
சாத்க்களையனுப்பி அழைத்து வரச்சொன்னதுஇதற்
குத்தானோ அந்தோ மெத்தநற்குணங்களை யுடைய
இந்தவிட்டலதாசரை எப்போதினிக் காணப் போகி
றேன் ஐயா விட்டலதாசரே சீக்கிரமெழுந்து என்னு
டன் ஒருவார்த்தை பேசக்கூடாதோ என்மீதுகோப
மேதோ யான்செய்த அபசாரந்தானென்னமோ இது
யானே வலியத்தேடிக்கொண்டவினைதானென்னமோ
இதுயான் பண்டுசெய்த கர்மமோ இப்படிக்கி நீரென்
னுடன் பேசாதிருப்பது தருமமோ இதுவுமது வர்ம
மோ மர்மமோ யான்செய்த கர்மமோ என்றுசொல்
லிப்பலவாறு துதிசெய்துக் கொண்டே இப்பழிக்குக்
காரணமும் பாத்தியமும் யானல்லவோ யாயினேன்
இப்படியாகுமென்று முன்னமே தெரியாமற் போயி
னேன் அந்தோ சாதுவை வீட்டிலிருந்தழைப்பித்துக்
கொன்றக் கொடும்பாவி யானாகினேனே இக்கொடிய
பாபத்தினால் யெனக்கு நரகப்ராப்தியே சம்பவிக்கும
இத்தனைநாள்செய்த புண்ணியமெல்லாம் நூற்றைக்
கெடுத்தது குறுணியென்னும் பழமொழியைபோல
இவரிறந்த காரணத்தினால் யானிழைத்தப் புண்ணிய
மெல்லாம் உருமாய்ந்துப் போயிற்றே எங்கும் என்
னைப் பழிக்கும்படியாயிற்றே இவருடையதாயும்மனை
யாளும் என்னைத்தானே தூஷிப்பார்கள் சுகமாகவீட்
டிலிருந்து ஸ்ரீஹரிபஜனை செய்துகொண்டு பிரமநிஷ்
டாபரராகியிருந்த என்மகனை இவ்வூரையாளும் அரச
னழைப்பித்து காலக்ஷேபஞ்செய்யச் சொல்லிக் கொ
ன்றுவிட்டானே அடாபாவி உனக்கெத்தனை யிடுக்கு
னுண்டாக்கின போதிலும் அதைவிசாரணை செய்து
அதற்குத்தக்க தண்டனைகண்டனை செய்யாமல் உயி
ரையே வாங்கிவிட்டாயே இந்தப்பிரமஹத்திதோஷம்
எளிதினில் விட்டுவிடுமோ என்று அன்னையும் மறுகி
யோ மெத்தசிறுப்பிராயமும் சுகதுக்கங்களை நன்று
யறியாதவளும்ஆகையால்என்னையென்னவைவாளோ
எனக்கென்ன சாபமிடுவாளோ என்றுப் பலவாறு
விசனப்பட்டு முடிவில் உள்ளகருத்து வள்ளலுக்குத்
தெரியு மென்பதைப்போல இவரை என்மனமாரக்
கொல்லவேணுமென் றெண்ணங்கொண்டு அழைப்
பித்தவனல்ல மெத்த சாதுவென்றும் ஸ்ரீஹரிபஜனை
மிகவுமுருக்கமாகப் பாடுகிறாரென்றும் பிரமநிஷ்டா
பரனென்றும் மந்திரி சொல்லியபடியால்யான்கேட்டு
இவரையழைப்பித்துத் தக்கபடி உபசரித்து மம்மாவி
யன்றமட்டும் தனதானியங்களைக் கொடுத்தனுப்பயெ
ண்ணங்கொண்டு இவணழைப்பித்தேனே யன்றி இவ
ரைக் கொல்லவேணுமென்றுக் கார்ப்பண்ணியததினா
லழைப்பித்தவனல்ல இதுசத்தியமல்லவோ ஓமனதே
இதை நீ தெரிந்திருக்கின்றாயல்லவாவென்றும் உள்ள
படியாகட்டுமென்று மனோதிடங்கொண்டு மந்திரியை
நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

கேளும் மதியிற்சிறந்தமந்திரி நாமென்று நினைக்
கத் தெய்வம்தானொன்று நினைத்ததே இதுவென்ன
அநியாயமாகவே யிருக்கின்றது ஸ்ரீஹரிகீர்த்தனைக
ளைப்பாடிக் காலில்கட்டிய செஜ்ஜைகள்சத்திக்கஆடிக்
கொண்டே இவ்வுலகத்தைமறந்து மூர்ச்சித்துப் பூமி
யின்மீதுவிழுந்துப் புரண்டுக்கொண்டே க்ஷேத்ரஸ்தக்
குச்சென்ற இந்த விட்டலதாசர் பிராணனெப்படிப்
போயிற்று இதை யோசிக்குமிடத்தில் இவரதுபக்தி
உண்மையானதென்றே நினைக்கவேண்டும் இப்படிப்
பட்ட க்ஞானவைராக்கிய பக்திமான்களையானிதுபரி
யந்தங் கண்டதேயில்லை கதைகளிலும் பார்த்ததில்லை
ஒருவர்சொல்லவுங் கேட்டதில்லை இவரைமெத்தபக்தி
மானென்றும் வைராக்கியத்திற் சிறந்தவரென்றும்
பிரமநிஷ்டையிற் றேர்ந்தவரென்றும் சொல்லத்தகும்
மேலும் இவருக்கு நிகரானபக்திமான்கள் இவ்வுலகத்
தினி லெவர்களுமில்லை யென்றுசொல்லி வெகுவாகப்
புகழ்ந்து பின்னும் மந்திரியைநோக்கி ஓமந்திரி நமது
அரண்மனையிலிருக்குஞ் சிவிகைகளில் மேலான சிவி

கையொன்றைச் சீக்கிரங்கொண்டு வரும்படிச் செய்யுமென்று கட்டளையிட்டான் மந்திரியும் அந்தப்படியே தூதர்களைக்கொண்டு நவரத்தினங்கள் பதித்து வெகு அழகாயிருக்கும் சிவிகையொன்றைத் கருவித்து அரசன்முன்ன மச்சிவிகையையிரக்கி வைக்கக்கண்ட அரசன்வெகு பரபரப்பாக அச்சிவிகையின் ஜன்னல்களைத்திறந்து நான்குபக்கமுங் காத்துவரும்படிச் செய்து மந்திரியும் தானுமாக இறந்துகிடக்கிற விட்டலதாசரைத் தூக்கிக்கொண்டுவந்து அச்சவிகையினிற்படுக்கவைத்து உயர்ந்தசாலுவை யொன்றை யவருக்குப் போர்த்து போவிகளைநோக்கி அடாபோயிகளே இச்சிவிகையைச் சுமந்துக்கொண்டு விட்டலதாசன் வீட்டைநோக்கி நடவுங்கள்பின்னாகவேவருகிறேனென்று கட்டளையிட்டு அரசன் குதிரைக்கொட்டாரத்திற்குட்புகுந்துத் தக்கக்குதிரையின் மீதேறிக்கொண்டு சிவிகைமுன்னும் தான்பின்னுமாகச்சென்று ஆசான்வீட்டையடைந்துச் சிவிகையினிற் படுக்கவைத்திருக்கும் விட்டலதாசரை வெளிப்படுத்தி வீட்டிற்குள்ளேகொண்டுபோய் பெருத்த கூடத்தினிற் போட்டிருக்கும் கட்டிலின்மீது படுக்கவைத்து விட்டலதாசர் அன்னையையழைத்து நடந்தசெய்திகளை யொன்றொளியாமற் சொல்லக்கேட்டு அந்தவிட்டலதாசர் அன்னைத் தன் மகனையெடுத்து மார்பின்மீது படுக்கவைத்துக் கொண்டு அடாமகனே உன்னைப் பார்த்தன்றோ நின்தந்தையின்மீதிருக்குந் துக்கத்தைப்போக்கிநமச்கென்ன குறை புதல்வனிருக்கின்றான் நம்மை முழுமைக்குங் காப்பாத்தி முடிவில் நமக்குண்டான கருமக்கிரியைகளைச்செய்து சொர்க்கலோகத்தை யடையும்படி நம்மைச் செய்விப்பானென்றெண்ணி விசனமாறி மெத்த சந்தோஷமாகவிருக்கும் எனக்கு முன்னம் நீமாண்டு போனாயே அடாமகனே உன்னைப் பத்துமாதஞ்சுமந்துக்கொண்டிருந்த வயற்றினில் அக்கினியை மூட்டி விட்டாயே அதனாலென்திரேக முழுமையும் எறிக்க உடன்பட்டாயோ அடாமகனே நரகீனதேதோ வெண்ணங்கொண்டிருந்தேனே அவ்வெண்ணத்தை யெல்லா முனக்கேதுக்கு நான்போய் வருகிறேனென்று வாய்திறந்தொருவார்த்தையுஞ் சொல்லாமற்போனாயோ அப்பாமகனே இப்போதாகிலும் நீவாயதிறந்து ஒருவசனமென்னுடன் சொல்லலாகாதோ சொல்லியென்குறையைத் தீர்க்கலாகாதோ கண்களைதிறந்தென்னைப் பார்க்கலாகாதோ இந்தகோலங் காணுவதற்குத்தானோ சீக்கிரமுனக்கு விவாகஞ் செய்வித்தது அடாகணமணியே இவள் கொடும்பாவி யிவளுடன் பேசலாகாதென்றுக் கண்களைமூடிக் கொண்டு நித்திரை செய்கிறுப்போல விருக்கின்றையோ அடாமகனே நீஎன்னுடன் பேசாவிட்டாலும் இதோநின்னருகினிலிருக்கும் மனையாளைப் பார்த்தாகிலும் ஒருவசனஞ் சொல்லுமையா வென்றுக் கதரிப்பதரி யழுகிறபோது விட்டலதாசர் மனையாளும் இப்படி யப்படியென்று சொல்லமுடியாத துக்கத்துடன் கணவன் மீதுவிழுந்து புலம்பியழுகிறபோது அரசன் இவ்விருவருக்கு முண்டாகிய துக்கத்தை மாற்றும்பொருட்டுச் சிலநீதி வசனங்களைப் புகன்று மேலுஞ் சொல்லுகின்றான் ஓஎன தன்னைமார்களே நீங்களேனிப்போது அழுதுபுலம்புகிறீர்கள் அழவேண்டாம்விட்டலதாசர் மரணமாயி விட்டாரென்றே துக்கப் படுகின்றீர்கள் அவர்மரணவடையவில்லை நிஷ்டை சாதித்துக்கொண்டிருக்கின்றார் இன்றைக்கோ அல்லதுநாளைக்கோநிஷ்டைநீங்கி எழுந்திருப்பார் விசனப்படாம லிருங்களென்றுசொல்லி அவர்களைச் சமாதானப்படுத்தி வெகு தனத்தை யவர்களுக்கீந்து யான்போய்வருகிறேனென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு குதிரையின மீதேரி விரைவாகச் செல்லும்படி குதிரையை முடுக்கித் தன்னரண்மனையைச் சேர்ந்து விட்டலதாசர் மீதே மனதை வைத்துக்கொண்டிருந்தார்.

அரசனிவ்வண்ணஞ் சொல்லிச் சமாதானப் படுத்திப் போயினபின்பு விட்டலதாசர் அன்னையும்மனைவியுஞ் சேர்ந்துத் தீராததுக்கத்துடன் புலப்பிக்கொண்டுமிருக்க இதில் தாயாரும் மகன்பிழைப்பானென்றும் மனைவி மணாளன் பிழைப்பானென்றும் இரண்டு நாள்பரியந்தம் விட்டலதாசரெழுந்திராமல் கிடந்து மூன்றாவதுநாள் மூர்ச்சை தெளிந்தெழுந்து அன்னையைநோக்கி ஓஅம்மணி இவிடத்திற்கென்னையெடுத்து வந்தவர்கள் யாவா நான அரசனரண்மனையி லனறோ யிருந்தேன இதுராஜக்கிரக மல்லவே இவடத்திற்கு யானெப்படி வந்தேன் இச்செய்தியை எனக்கு ஒளிக்காமற் சொல்லவேணுமென்றா வேண்டிக் கொள்ள அதற்கந்தஉத்தமி மகனைநோக்கி அப்பா புத்திரசிகாமணியே நீயரசனுடைய மேடையின்மீது நின்றுக்கொண்டு காலில் கெஜ்ஜைகட்டிப் பாடியாடி யுன்னை மறந்து மூர்ச்சையாக விழுந்துருண்டுக் சொண்டே அடிவாரத்தில் விழுந்துச்கிடக்க அரசனங்கு வந்துனைங்கண்டு திரேகத்தையும் கையையும்பிடித்துப் பார்த்துத் திரேகஸ்மரணை யில்லாமலும் உயிர்நீங்கிப்போய் விட்டதென்று கருதி யுன்னைச்சிவிகையின் மீதேத்திக் கொண்டுவந்து இங்குவிடுத்துப் போயினாரென்றுசொல்லி அரசன் கொடுத்துப்போயின திரவியத்தையுங் காட்டினாள் அந்ததிரவியத்தைக்கண்டு விட்டலதாசர் மெத்த விசனப்பட்டு அன்னை நோக்கி ஓ அம்மணி

அழிந்துப் போகும்படியான அற்ப திரவியத்திற்காக வா என்னை விற்பனைசெய்தாய் உனக்கிந்த திரவியமே லாகினது யான் தாழ்ந்தவனென்றல்லோ எண்ணங் கொண்டாய் இந்தப்பொருளானது எனைப்பார்க்கிலு மேலானதோ சற்றாகிலும் யோசிக்காமல் இப்படிஎன் னைப் பொருளுக்காசித்து விக்கிரயஞ் செய்யலாமோ ஓஅம்மணி அற்பப்பொருளின் மீதன்றோ வாஞ்சித் தாய் சொற்பமென்றெனை நினைத்தாய் என்றிப்படி சொல்லிக்கொண்டே இரண்டுஜாம பரியந்தம் அங்கு தானிருந்துத் திடீரென்றெழுந்து யாரிடத்துஞ்சொல் லாமல் தான்போகும் மார்க்கம் எவர்களுக்குந் தெரி யாமல் எங்கோ போய்விட்டார் இச்செய்தி யரசனுக் குத்தெரிந்து அப்போதே சாரர்களையனுப்பித்தேடிப் பிடித்துக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான் அத் தூதர்களும் அந்தப்படியே சென்று வெகுதூர தேச மெங்கும் விட்டலதாசரைத் தேடியுங்காணுமல் அவர் கள் மெத்த விசனத்துடன் திரும்பிவந்து அரசனைக் கண்டு வணங்கி ஒசுவாமியாங்கள் வெகுதூர தேசங்க ளெல்லாஞ் சென்று விட்டலதாசரைத் தேடித்திரிந் தும் அவரகப்படவில்லை யென்றுசொல்ல அரசன்கே ட்டு மெத்த விசனப்பட்டு உடனே நமதுபேரில் நிந் தையில்லாம லந்தவிட்டலதாசர் உயிர்பெற்றெழுந்து போய்விட்டாரே இதைப்பத்தி யவர்க்கு அனேக நம ஸ்காரங்கள் செய்கிறேனென்று என்றுமில்லாத சந்து ஷ்டராகி யிருந்தான்.

இந்தப்படி யரசன் மெத்தசந்துஷ்டனுகி யிருக்க விட்டலதாசர் அன்னை மகனைநினைந்து நினைந்துருகி அடாமகனே முன்னம் மூன்றுநாள்பிரபஞ்சமாயயை மறந்து பிரமநிஷ்டாபரனுகி யிருந்தனையே அப்போ தே நீயுயிர்துறந்துப் போயிருந்தால் மெத்தநன்றுயிரு க்கும் உயிரோடெனைவிட்டு மனந்துணிந்தெப்படியிருப் பேனப்பா எத்தனையாக மனதை திருத்தினுலும் மன ங்கேழ்க்கவில்லையே பெற்றவயிறு பற்றியெரிகின்றதே யென்றுக் கண்ணீர் ஆராய்ப் பெருகியோட விட்டு மெத்த துக்கப்பட்டுக்கொண்டு மூன்றுநாள் பரியந் தம் அன்னம் நித்திரையின்றி யிருக்கையில் மூன்று நாளிரவினில் அன்னம் நித்திரையின்றியிருந்த ஆயா சத்தினுலும் திரேகவாட்டத்தினுலும் அலண்டு நித்தி ரை செய்கிறபோது சொற்பனத்தில் ஸ்ரீபாண்டுரங் கன் எழுந்தருளி ஓஅம்மா பாக்கியவதி நினது புதல் வன் யெங்கேயோ போய்விட்டானென்றல்லோ மூன் றுநாளாய் துக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றுய் அவ னெங்கும் போகவில்லை• மதுராபுரத்தினி லிருக்கின் றுன் ஆகையால் நீஇனி விசனத்தைமாத்தி மதுராபுரி க்குச் சென்று அங்கிருக்கும் மகனைக்கண்டு நின் துக்க த்தை யாற்றிக் கொள்ளுமென்று சொல்லி மறைந்து போயினர் உடனே, அந்த உத்தமி திடுக்கிட்டெழுந் திட்கார்ந்து இப்போது நாம் கண்டது கனவோ அல்லது நினவோ இதை சோதித்துப் பார்த்தா லன்றி கனவென்றும் நினவென்றும் உண்மை பொய் யைத் தெரிந்துக்கொள்ளலாகாதும் ஆகையால் நாளைய தினம் மதுரைக்கிப் பிரயாணப்படுவதே நிச்சயமென் றெண்ணி மருமகளைநோக்கி அடியம்மா நின்கணவன் மதுரையிலிருப்பதாக யான் கனவுகண்டேன் ஆத லால் நானங்குசென்று அவனையழைத்து வரும்பரியந் தம் நீயுன்தாயார் வீட்டிற்குப் போயிரு யானிங்கு வந்தவுடனே உன்னை யழைப்பித்துக் கொள்ளுகிறே னென அதற்கு மருமகள் ஓமாமி தாங்கள் மதுராநக ரத்தை நோக்கியும் யானென்தாயார் வீட்டையுந்நோ க்கிப் போயிருக்குந் தறியில் தங்கள்புதல்வர் இங்கு வந்துபார்த்து நாமிருவரு மில்லாமற்போனல் பருப் பில் நெய்விட்டதைப்போல மனம்போனபடிப்போய் விடுவார் அப்படிக்கி யவர்போகாவண்ணம் என்தா யாரை இங்கழைப்பித்துக் கொண்டு யானிவடத்தில் தானே யிருக்கின்றேன் தாங்கள் மதுராபுரத்திற்குச் சென்று தேடி அங்கிருந்தால் அவரை யழைப்பித்துக் கொண்டு சீக்கிரமாகவந்து சேரவேணும் மாமியென் றுசொல்லி வணங்கினுள் அதற்கந்த விட்டலதாசர் அன்னை மருமகளைநோக்கி அடியம்மா உன்னிஷ்டப் படியே தாயாரை யழைப்பித்துத் துணையாகவைத்து க்கொண்டிங்கிரு நான் மதுராபுரிக்குப் போய்த்தேடி மகனை யழைத்துக்கொண்டு சீக்கிரம்வந்து சேருகிறே னென்றுசொல்லி மதுராபுரத்தை நோக்கி நடந்துச் சிலநாளில் மதுராபுரத்தைச் சேர்ந்து தேடித்திரிகிற போது அங்கு தறவாசனுகி மூன்றுகாலமும் ஸ்ரீஹரி யை சேவித்துக்கொண்டு இடைவிடாமல் ஸ்ரீஹரிபஜ னை செய்தும் தவராமல் பக்தர்களுக்குஅன்னதானஞ் செய்து பிரமநிஷ்டாபரராகிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிற தன்புதல்வனுகிய விட்டலதாசரைக் கண்டு இருகரங்களாலும் கட்டித்தழுவி அடாமகனே நீஎன்னுடன் ஒருவார்த்தை யேனுஞ் சொல்லாமல் இருந்தாப்போல லிருந்தெப்படி வந்துவிட்டா யப்பா உன்னை விரக்தியுடையவனென்று யானறிந்திருந்தும் பொருளின்மீது வாஞ்சையுடையவளாகி அரசன் தந் தப்பொருளை யான் பெற்றுக்கொண்டபடியா லென் மீதுனக்கு வெறுப்புண்டாகி சொல்லாமற் புறப்பட்டு வந்துவிட்டாயென்று யெண்ணுகிறேன் என்றுசொல்லி மகனையடுத் தங்கிருந்தான்.

இவ்வாறு மாமியார் மகனிடமங்கிருக்க இங்கே மருமகள் தன்தாயாரை அழைப்பித்துக்கொண்டு கணவனெப்போது வருவாரோ வென்ற வெண்ணத்தை பேமாராமல் கருதிக்கொண்டிருக்கையில் தன்கணவனும் மாமியாரும் மதுராபுரத்தினி லிருப்பதை மாமியாரனுப்பிய தூதர்களால் தெரிந்து வெகுசந்துஷ்டியாயிருக்கையில் ஒருவடத்தில் அதிகமழைபெய்ததினால் வீட்டின்சுவர்கள் இடிந்து விழுந்து போயிற்று அச்சுவர்களைவைத்து வீட்டை மராமத்துச் செய்யவேணுமென்றெண்ணி விட்டலதாசர் மனையாள் மண்ணுக்காகக் குழியொன்று வெட்டினாள் அப்பள்ளத்தினில் நின்றும் ஆச்சரியப் படும்படியாக மகாவிஷ்ணுவிக்கிரகமொன்றகப்பட்டது அந்தவிக்கரகத்தை யெடுத்து ஒரிடத்தினில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு மருபடியும் மண்ணின் பொருட்டுப் பள்ளமெடுக்க கணக்கிட்டுச் சொல்லமுடியாத திரவியமதி லிருக்கக் கண்டு மெத்த சந்தோஷங்கொண்டுஇந்தசெய்திநமது கணவனுக்குத் தெரிந்தால் ஓடிவருவாரென் றெண்ணி தனக்குண்டாயிருந்த பயத்தைவிடுத்துத் தன் அன்னையைநோக்கி ஓ அம்மா என்னைப்பெத்ததாயேயானினியொருக்கண நேரமாயினு மிங்கிருக்கமாட்டேன்என் பிராணநாயகரிருக்கும் மதுராபுரிக்குப் போய் அவரைக்கண்டா லொழிய என்மனமிங்கு பொருந்தமாட்டாது இதுசத்தியம் அன்றியும் நீயென்னைப் போகக்கூடாதென்றுத் தடைசெய்வையாகில் யான்தாசியாய் விடுவேன் இதுநிச்சயமென்றெண்ணி யாதொருதடையுமின்றி என்னையனுப்பிவையும் மேலும் யான்தாசியாய்விட்டால் உங்களுக்கெல்லாம் அவமானமன்றோ மருபடியுமென்னை யுங்களுடன் சேர்த்துக் கொள்ள சம்மதியாகுமோ இதுகளை நன்றாயோசித்து என்னைப் பிரியமாக என்கணவனிடஞ் சேரும்படி விடைதந்து அனுப்புமம்மணீயென்று வேண்டிக் கொண்டனள் அதற்கந்த அன்னை தடையொன்றுஞ் சொல்லாமல் அடியம்மா மகளே யானுனதிஷ்டப்படிக்கி அனுப்புவதற்குச் சம்மதித்தே யிருக்கின்றேன் அப்படிக்கனுப்பியபோதிலுமுன்னைத்தனியேஎப்படியனுப்புவேன் வீட்டைச்சாத்திப் பூட்டிவிட்டு யானுனக்குத் துணையாக வருகிறேனென்று சொல்லக்கேட்டு விட்டலதாசர்மனைவி ஓ அம்மணீ நீவீட்டைக்காத்துக்கொண்டிரு யான்சென்று மதுராபுரியை யடைந்துக் கணவனைக் கண்டுபேசி அவரையு மாமியையும் முடனழைத்துக் கொண்டுக் கூடியசீக்கிரத்தில் வந்து சேருகிறேனென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு நடந்துச் சில நாளில் மதுராபுரத்தைச் சேர்ந்துத்தன் பிராணநாயகரைக்கண்டுபணிந்து ஓசுவாமி சிலநாளைக்குமுன்னம் நமது ஹிந்துஸ்தான் தேசத்தினில் விடாமழை பெய்ததினால் நமதுவீட்டுச் சுவர்கள் சிலதுமழைக்கி கரைந்துவிழுந்து போயிற்று அந்தச்சுவர்களை மராமத்துச் செய்யவெண்ணி மண்வேண்டி யோரிடத்தில் பள்ளமெடுத்தேனப்பள்ளத்தினிலிருந்து ஸ்ரீமகாவிஷ்ணுவிக்கிரகம் ஒன்றுகிடைத்தது அதையெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு மேலும் அப்பள்ளத்தினில் மண்ணைத் தோண்டிக்கொண்டிருக்கையில் திடீலென்றொரு பிரகாசமுண்டாயிற்று அப்பிரகாசத்திற்கு அடியாள்பயந்து இதென்னயிங்கு பிரகாசமுண்டாவ தற்குக் காரணம் யாதென்று யூகையாகப் பார்க்கையில் அதினுள்கணக்கிட்டுச் சொல்லமுடியாத சொர்ணாபரணங்களும் நவரத்தினங்களும் அளவற்றதிரவியங்களுமிருக்க அடியாள்கண்டு மெத்த சந்துஷ்டி யடைந்து அச்செய்தியைத் தங்களுக்குத் தெரியப்படுத்திஅழைத்துக்கொண்டுபோய் விஷ்ணுவாலயம் ஒன்றுகட்டி அதில்அந்த விக்கிரகத்தை ஸ்தாபனஞ்செய்துகும்பாபிஷேக முதலானதுகளும் நடத்தித் தினமுந்தாங்கள் பூசித்துக்கொண்டு நமது பட்டணத்திலேயே வாசஞ்செய்துக் கொண்டிருக்கலாம் வாரும் சுவாமியென்று சொல்லி வினயமாகி வணங்கி நின்றனள் இப்படித் தன்னை வணங்கிநின்ற மனைவியைநோக்கி விட்டலதாசர் சொல்லத் தொடங்கினர்.

அடிபொன்னாசைப் பொருளாசைப் பிடித்தப் பேயே ஏதோ பள்ளம்வெட்டினதில் அளவற்றப்பொருள் கிடைத்திருக்கின்றது அதைக்கொண்டு நமது பட்டணத்தினிலேயே வாசஞ்செய்துக் கொண்டிருக்கலாம் வாருமென் றென்னைமயக்கி அழைத்துப் போக வந்தாயோ அற்பமாகியப் பொருள்கிடைத்ததென்று சொன்னா லதைக்கேட்ட மாத்திரத்தில் பொருள்வாஞ்சைகொண்டு உடனே யுன்பின் பட்டணத்திற்கு வருவேனென்று யோசித்துச் சொல்லுகின்ற பேதையே அங்குதானா பொருளிருக்கின்றது இங்கே பொருளில்லையா அதோகிடக்கின்ற ஓட்டாங்கிச்சியை எடுத்துக்கொண்டு வரக்கடவாய் அந்தஓட்டாங் கிச்சியினாலுனக்குண்டாயிருக்கும் பொருள்வாஞ்சையின் றிறத்தைக் காட்டுகின்றேன் உன்னைப் பிடித்திருக்கும் பேயையோட்டுகின்றேன் அந்தப் பேயைப்பிடித்துவாட்டுகின்றேன் எனக்கதன்மீ திச்சையில்லாமலிருக்கின்றதிடத்தை நிலைநாட்டுகின்றேன் பாருமென்று சொல்லக்கேட்டு அம்மங்கை மெத்தவும்பயந்து அவர்சுட்டிக்காட்டிய ஓட்டாங்கிச்சியை யெடுத்துவந்துத் தன் கணவன் கரத்தினில் வெகுவினயமாகக் கொடுத்தாள் அதையவர் பெற்றுக்கொண்டு அதன்மீது முத்திரத்

ணைப் பெய்தமாத்திரத்தில் அதுபத்தரை மாத்துத் தங்கமாயிற்று அத்தங்கத்தைத் தன்மனைவியினிடங் கொடுத்து அடிபெண்ணே அதென்ன சொல்லுமென அப்போதந்தமங்கை யதைப்பார்த்து ஓசுவாமி இது தங்கமென்று சொல்லக்கேட்டு அந்த விட்டலதாசர் அடிபெண்ணே யானிருக்கு மிடமெல்லாம் தங்கமயமேயாகும் அதனிடத்திலெனக்கு ஆசையில்லாமையினாலேயே யெனக்கு யாவத்துந்தங்கமாகவே தோன்றுகின்றது உனக்குப் பொருளாசை அதிகரித்திருப்பதினாலேயே யாவத்து முன்கண்களுக்குக் கல்லும் ஓடுகளுமாகவே காணப்படும் ஆகையால் எனக்குப் பொருள் பானை ஓட்டுக்கு நிகராகும் பொருள்விஷயத்தினில் அணுவளவேனும் எனக்கு ஆசைகிடையாது வீணாகயேன் பிரயாசையெடுத்துக்கொண் டிவ்வளவு தூரம்வந்தாய் வந்துமனம்நொந்தாய் எனக்கேனிவ்வளவு ஆயாசந் தந்தாய் என்னை யழைத்துக்கொண்டு போகவேணுமென்ற ஆசையேதுக்குகந்தாய் நீதனித் தொண்டியாக வரலாமோ நமது பட்டணத்திற்கும் மதுராபுரத்திற்குங் கொஞ்சந்தூரமோ மேலும் அப்பொருளினாலே மெத்தக் காரியங்களுக்கு விக்கினம் வந்துநேரிடும் அதென்னவெனில் வீட்டிற்குச்சொந்தகாரனுக்கும் மிராசிதாரனுக்கு அப்பொருள் நம்மைக் காட்டிக்கொடுக்கும் ஆதலால் அதனிடத்திலெள்ளளவேணும் ஆசைவைப்பவன் அவமானமடைவான் மெத்தகஷ்டங்கள் படுவான் ஆசையில்லாதவன் மௌனியாகுமென்று சொல்லக்கேட்டு அம்மாது ஓ சுவாமி அப்பொருளைக் கைக்கொணடு ஏழைப் பரதேசிகளுக்குத் தானஞ்செய்துவிட்டுத் திரும்பியுமிவடம் வந்து வாசம்பண்ணிக் கொண்டிருமென்று வணக்கமாகக் கூறும் தன்மனைவியை நோக்கி அடிபெண்ணே நீமுன் ஜென்மத்தினிலேதோ புண்ணியம்பண்ணியிருந்தபடியினாலே அப்பொருள் முதலானதுகளு முனக்குக் கிடைத்தது அப்பொருளை நீயெடுத்துக்கொண்டு பகவானெப்படி மனதைச் செலுத்துகின்றாரோ அம்மார்க்கத்தினில சிலவு செய்துக்கொண்டிருப்பது ஞாயம் இதைவிடுத்து உனக்குக் கிடைத்தபொருளை என்னைக் கைக்கொள்ளும்படிச் சொல்லுவது நீதியோ மேலும் யான் முன்ஜென்மத்தினில் புண்ணியஞ் செய்திருப்பனேயாகில் அப்பொருள் எனக்குக் கிடைத்திருக்கும் அப்படி யான்புண்ணியஞ் செய்யாதவனாகையாலே அப்பொருளெனக்குக் கிடைக்காமல் புண்ணியம்பண்ணின-உன் கண்களுக்கே யகப்பட்டது ஆகையால் நீ சீக்கிரமாக நமது பட்டணத்தைச் சேர்ந்து வீட்டையடைந்து யப்பொருளைக் கைக்கொண்டு அதை எந்த விஷயத்திற் சிலவுசெய்யும்படி பகவானுனக் கெப்படி புத்திகொடுக்கின்றாரோ அப்படிசிலவு பண்ணிக்கொண்டு சுகமாயிருக்கக் கடவாயென்று நேமிக்க அம்மாது கணவனை விட்டுப் பிரிய மனமில்லாதவளாகி ஓ சுவாமி தேவரீர் அடியாள்மீது கிருபைசெய்து நமது பட்டணத்திற் கெழுந்தருளி விஷ்ணு விக்கிரகத்தை சேலித்து அடியாளுக்குக் கிடைத்திருக்கும் பொருளைக்கொண்டு விஷ்ணுவாலயமொன்று கட்டி அந்த ஆலயத்தில் விக்கிரகத்தை ஸ்தாபனஞ்செய்து கும்பாபிஷேகம் நடத்தி பிராமணபோசனஞ் செய்வித்து மூன்றுகாலமும் பூசைநடக்கும்படியான யேர்பாடுகளுஞ்செய்து அந்தசந்நிதிக்குத் தாங்கள் தருமகர்த்தாவாகவிருந்து சதாகாலமும் பகவானை பஜித்துக் கொண்டிருக்கலாம் தயைசெய்து வாரும் சுவாமி என்று விழுந்துபணிந்து எழுந்து நின்றுக் கொண்டிருக்கும் மனைவியைநோக்கி விட்டலதாசர் சொல்லத் தொடங்கினார்.

அடிபெண்ணே என்னிருகண்ணே பகவானுனக்கும் தன்னை பஜனைசெய்யும்படி புத்திகொடுத்தாரோ இதற்காகத்தான் பட்டணத்திலிருந்த உன்னை யென்னிடம் வரும்படிக் கொண்டுவந்து விடுத்தாரோ துர்க்குணங்களை யெல்லாம் நிக்கிரகித்தாரோ இப்போதுனக்குண்டாயிருக்கும் பக்திக்கி யான்மெத்தசந்துஷ்டியடைந்து உன்னுடன் பட்டணத்திற்குவர என்மனமிசைந்தது ஆகையால் ஓபெண்ணே என்னிரு கண்ணே நாமிருவரும் பகவானை பஜனைசெய்துக் கொண்டே நமது பட்டணத்தைநோக்கிப் போகலாம் வாருமென்றழைத்துக்கொண்டு சென்று பட்டணத்தைச் சேர்ந்து வீட்டையடைந்து திரவியமும் ரத்தினங்களும் ஆபரணாதிகளுமிருக்கும் பள்ளத்தைத் தன்கணவனுக்குக் காட்டினாள் அதையந்த விட்டலதாசருங் கண்டு பகவத்கைங்கரியஞ் செய்வதற்கு அபாரதிரவியமும் ரத்தினங்களும் ஆபரணாதிகளுங் கிடைத்ததேயென்று மெத்த சந்தோஷமடைந்து அதுகளை யெல்லாம் வெளியிலெடுத்துத் தன்வீட்டிற்குள் பத்திரப்படுத்திவிட்டு மஹாவிஷ்ணு விக்கிரகத்தை பார்த்து அவ்விக்கிரகமிருக்கும் அழகு சுந்திரத்திற்கு மெத்த ஆச்சரியமடைந்து சிற்பிகளை வரவழைத்து நூதனமாக விஷ்ணு விக்கிரஹத்திற்குத் தக்க நாச்சிமார் இருவரை வார்ப்படம் வார்க்கும்படி கட்டளையிட்டு உடனே சந்நிதிகட்டுவதற்குத் தக்கவிடம் அகப்படாமல் மெத்த விசனப்பட்டுக்கொண்டு இதற்கென்னசெய்யலாம் யாரைப்பிடித்தால் சந்நிதிகட்டுவதற்குநிலங் கிடைக்குமென்றும் யோசனை செய்துக்கொண் டிருக்கையில் அங்நகரத்தையாளும் அரசன் விட்டலதாசர்

வந்திருக்குஞ் செய்தியையறிந்து மந்திரியை அழைத்துக்கொண்டு வந்து விட்டலதாசரைக் கண்டுபணிந்து ஓசுவாமி முன்னந் தாங்கள் அரண்மனை மேடையின்மீது காலக்ஷேபஞ் செய்துக்கொண்டே திரேகத்தை மறந்து மூர்ச்சையாகி விழுந்து உருண்டுக்கொண்டே கிழந்தஸ்திற்குச் சென்று மரணமடைந்ததைப்போல தேவரீர்கிடக்க அடியேன்கண்டு மெத்தவிசனப் பட்டுத் தங்களைச் சிவிகையின்மீதேற்றிக் கொண்டுபோய் தங்கள் வீட்டினிற்சேர்த்து யுமது அன்னைக்கு மெத்தப்பிரிய வசனஞ்சொல்லிப் போயின அன்றுலங்கள் முகத்தைப்பார்த்ததேயன்றி இன்று பார்க்கும்படியாக நேரிட்டது ஓசுவாமி சற்குருநாதர் புலவரீர இவன்மீது தங்களுக்கென்ன இத்தனைக்கோபம் யானென்னசெய்தேன் பாபம் என்மீதுமக்கேனித்தனை மனஸ்தாபம் அதை வெளியிடுவதற்கென்ன ஆக்ஷேபம் அன்றியும் என்மீதுமக்குக் கோபமில்லாவிடில் நிஷ்டையிலிருந் தெழுந்தத் தாங்களுமென்மீது தயவுசெய்து அரண்மனைக்கு வரலாகாதோ வந்தால் என்கர்மங்களெல்லாம் நீங்கிப் போகாதோ பேதமின்றித் தாங்கள் வராமலிருந்ததேயெனக்கு மெத்த விசனமாக விருக்கின்றது என்று மெத்தவும் பிரியமாகப் பேசுவதைக்கேட்டு விட்டலதாசர் அரசனை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

கேளும் சாந்தத்திலும் நீதியிலுஞ் சிறந்தவேந்தனே நீரெந்தன் அன்னையிடங் கொடுத்த திரவியத்தின் பொருட்டே மறுபடியும் யானும்மைக்கண்டு பேசாமற்போயினது எனெனில் பொருள்முதலாகிய சகலத்திலுமெனக்கு மெத்த விரக்தியுண்டா யிருக்கின்றன ஆதலால் தாங்கள் பொருளுதவி செய்யாமற் போவீரேயாகில் யானும்மை அவசியம்வந்து கண்டுக்கொண்டேபோவேன் நீர் தந்தப்பொருளே என்னையும்மிடம் வாராமற்செய்தது பொருளுக்கு ஆசித்தல்ல முன்னம் யானுமது மேடைக்குவந்து காலக்ஷேபஞ் செய்தது வேண்டுமானு லென்னைப் பலவிதத்திலுஞ் சோதனை செய்துபாரும் பார்த்து மக்குண்டாயிருக்குஞ் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும அந்தப்பொருளே காரணமாகி உம்மைக்கண்டு பேசாமற்செய்தது மன்னியிலுமப்பொருளே யென்னை யிப்பட்டணத்தைவிட்டு மதுராபுரிப் பட்டணத்தை யடுத்திருக்கச் செய்தது ஆகையால் ஓஅரசனே இனியெப்போதைக்கு மென் விஷயத்தி லெந்தவஸ்துவையும் தயவுசெய்து கொடுக்காம லிருப்பீரேயாகில் என்னுயிருள்ள பரியந்தம் உமது நேசத்தை விடாமலிருப்பேனீதுண்மையென்று நம்பிக்கைகொள்ளக் கடவீரென்று சொல்லிப்பின்னுஞ் சொல்லத் தொடங்கினர் அதென்னவெனில் ஓஅரசனே யானொரு சந்நிதிகட்டவேணுமென்றெண்ணங் கொண்டிருக்கின்றேன் அதற்கு உம்மாலொரு காரியமாகவேண்டி யிருக்கின்றது அக்காரியத்தை யனுகூலப்படுத்துவீரேயாகி லுமக்குமெத்த புண்ணியமுண்டாகும் அதென்னகாரிய மென்பீரேல் சந்நிதியைகட்டுவதற்கு முதலில் இடங்கிடையாது அந்தயிடமுமெத்த அகலநீளமுள்ளதாக விருக்கவேண்டும் இந்த உபகாரஞ் செய்வீரேயாகில் உமக்கே அந்தச்சந்நிதி தருமகர்த்தரெனும் பட்டஞ் செய்விக்கின்றேன் என்றுசொல்லி வெகுவாக வேண்டிக்கொண்டார் அதற்கந்த அரசன் சந்தோஷித்து ஓசுவாமி உமதுகோரிக்கை எவ்வளவுநீளம் எவ்வளவு அகலமுமுடைய நிலம்வேண்டுமோ அவ்வளவு அகலநீளத்தைப் பார்க்கிலும் இரண்டத்தனை நிலமுமக்குத் தருகிறேன் அதை ஆதாரமாகக் கொண்டு சந்நிதி கட்டுவதற்குச் சீக்கிரமாக ஆரம்பஞ் செய்யுமென்று வேண்டிக்கொண்டான் அப்படி வேண்டிக்கொள்ளும் அரசனுடைய மொழிகளைக் கேட்டு விட்டலதாசர் சொல்லத் தொடங்கினர்.

கேளும் அரசனே சந்நிதி கட்டுவதற்குத் தாங்கள் கொடுக்க உத்தேசித்த நிலமெங்கிருக்கின்றது அந்தநிலத்தைக் காட்டினால் யான்பார்த்து அதுசந்நிதி கட்டுவதற்குதவும் உதவாதென்றுஞ் சொல்லுகின்றேனென அதற்கரசன் மெத்தசந்துஷ்டனாகி விட்டலதாசரை யழைத்துக்கொண்டுத் தன்னரண்மனைக்கருகில் மெத்த அகலமும் நீளமுமுடைய நிலத்தைக் காட்டி ஓசுவாமி இந்தநிலத்தில் தாங்கள் சுகமாகச் சந்நிதிகட்டிக் கொள்ளலாமென்று சொல்லக் கேட்டு விட்டலதாசர் அந்தநிலத்தைப்பார்த்துத் தன்மனதுக்குச் சம்மதியாகி உடனே சிற்பிகளை வரவழைத்து ஐயா சிற்பிகளே இந்தநிலத்தினில் சந்நிதியொன்று கட்டவேணுமென்று யோசித்திருக்கின்றேன் அதற்கு எவ்வளவு அகலநீளம் வேண்டுமோ அவ்வளவுநிலத்தை யளவுபோட்டுக் கூச்சடித்து விடுங்களென்று நேமிக்க அந்தப்படியே யச்சிற்பிகள் கணக்கிட்டு விஸ்தாரமாக அகலநீளமாக யிருக்கும்படிக் கூச்சடித்து விட்டார்கள் உடனே விட்டலதாசர் நல்லநாளொன்று பார்த்து அந்நாளில் கடக்காலெடுத்துக் கற்கள் முதலான சாமான்களையும்வருவித்து மெத்தத்துரிதமாக வேலைகளாரம்பித்துச் சிலநாளில் சந்நிதியைக் கட்டிமுடித்துச் சாஸ்திரசம்பன்னர்களான பிராமணர்களை வரவழைத்து மகாவிஷ்ணு விக்கிரகத்தை விதிப்படி ஸ்தாபனஞ்செய்து கும்பாபிஷேகத்துக் காரம்பித்து

அன்றுமுதல் பிராமணர்களுக்கு அபாரமாக அன்னதானம் நடத்தி நாற்பதுநாளும் மந்திரலோபங்கிரியாலோபமின்றிப் பூரணகும்பங்கள் நிறுத்தி விஷ்ணுதேவனுக்கும் உபயநாச்சி மார்களுக்கும் அபிஷேகஞ்செய்வித்து மேலும் எந்தெந்தகாலத்தினி லெந்தந்தக்கிரியைகளை நடத்தவேண்டுமோ அந்தந்தகாலத்தினி லக்கிரியைகளை யெல்லாம் நடத்தி நாற்பத்தோராவது நாள் அந்தவிட்டலதாசர் அரசனையழைப்பித்து சந்நிதானத்தின் முன்பாகநிருத்தி பகவானுக்குத்தூபதீப நைவேத்தியங்களைச் செய்து சேவிக்கச்செய்து தீர்த்தம் திருத்துழாயை யளிக்க அதனையரசன் மெத்தப் பிரியமாக ஸ்வீகரித்துநிற்க உடனே அர்ச்சகர் திருமாலைச் சடகோப பிரசாத முதலானதுகளு மளிக்க அதுகளையெல்லாம் மெத்தப் பிரியமாகப் பெற்றுக்கொண்டு பகவானைக் கண்குளிரப் பாதாதிகேச பரியந்தஞ் சேவித்துக்கொண் டிருக்கையில் விட்டலதாசர் அரசனைநோக்கி ஓபூபாலனே இன்றுமுதல் தாங்களிந்த சந்நிதானத்திற்கு தருமகர்த்தாவாகி நித்தியோற்சவம் பிரம்மோச்சவம் பக்ஷோச்சவ பஞ்சபருவங்களும் விக்கினமின்றி நடத்திக்கொள்ளக் கடவீரென்றும் ஆனந்தமாகப் பகவானை தியானஞ்செய்துக்கொண்டு பகவதனுக்கிரகத்திற்குப் பாத்திரனாகிச் சுகித்திருக்கக் கடவாயென்று ஆசீர்வாதஞ்செய்ய அதனை அரசன்கேட்டு என்றுமிலாதப் பரமானந்தத்தை யடைந்துக்கொண்டும் இருக்கையில் சிலநாள் கடந்தபின்பு இவ்வரசனுக்கு க்ஞானபக்தி வைராக்கியமெனு மிம்மூன்று முண்டாகி என்றும் இடைவிடாமல் ஹரியைத்தியானஞ் செய்துக்கொண் டிருந்தான்.

இவ்வாறு அரசன்மெத்த பக்திசெய்துக் கொண்டிருக்கிறபோது விட்டலதாசர் தன்வீட்டை யடைந்துப் பிரமநிஷ்டையிற் சிறந்தவராகி அநேகசிஷ்ய சமூகங்களைச் சேர்த்துக்கொணடு ஹரிபஜனைசெய்துக்கொண்டிருக்கிறபோது இந்தவிட்டலதாசருக்கொரு புதல்வன் பிறந்தான் அப்புதல்வனுக்குப் பனிரெண்டாநாள் ஸ்நானஞ்செய்து அலங்கரித்து அந்தப்புதல்வனுக்கு ஸ்ரீராமனென்று நாமகரணமிட்டு நாளுக்கு நாள் செல்வமாக வளர்ந்துக்கொண்டுவந்து ஐந்துவயதானவுடனே க்ஷௌளம் உபநயனம் முதலானவைகளும் நடத்தி அவனுந்தக்கபடிநடக்கக் கல்விப்பயிர்ச்சி செய்விக்கவிட்டார்கள் அச்சிறுவனுந் தாய்தந்தையர்கட்குட்பட்டு மெத்த உத்தமனாயிருக்கையில் பண்டரிபுரத்தினில் பிரம்மோச்சவ முதலான உற்சவம்நடத்தப் போகிறோம் ஆகையால் எல்லோரும்வந்து சேவிக்கலாமென்று சொல்ல அந்தப்படியே ஸ்ரீவிஷ்ணுதேவன் பக்தியைவிடாது நடத்தி வருகிறபோது ஸ்ரீராமனும்வந்து என்ன விசேஷமென்று வினவியபோது அதற்கவர்கள் நாளையதின முதற்கொண்டு பண்டரிபுரத்தினில் பிரமோச்சவமாரம்பம் ஆகையால் எல்லோரும்வந்து சேவிக்கலா மென்று யானையின்மீது தண்டோரு போடுவதையுங்கேட்டு விட்டலதாசரும் ஸ்ரீராமனும் பண்டரியாத்திரைசெய்யவேணுமென்று வைராக்கியசீலர்களாகிப் புறப்பட்டார்கள் அதையறிந்து அவ்வூராருஞ் சிலபேர்கள் புறப்பட்டு விட்டலதாசரைப் பின்தொடர்ந்துச்சென்று ஸ்ரீஹரிகிருஷ்ண கோவிந்தா கோபாலா ஆதிமூலா அன்பர்கள்தயாளா என்றுதுதி செய்துக்கொண்டேநடந்துப் பண்டரியையடைந்து சந்திரபாகாநதியினிற் ஸ்நானஞ் செய்துக்கொண்டிருக்கையில் விட்டலதாசருடன் வந்தவர்களில் ஒருவரை முதலையானது பிடித்திழுத்துக் கொண்டுபோயிற்று அதையறிந்து அவருக்கு மைத்துனரானவர் மைத்தவர்களைநோக்கி ஐயா சாதுக்களே அத்தானை முதலை யிழுத்துக்கொண்டு போகிறது சீக்கிரம் யாராகிலும் ஓடி அவரை விடுவித்துக்கொண்டு வாருங்களென்று குய்யோமுறையோ வென்றுக் கூக்குரலிட்டுப் பதறிக்கதறியழுதான் அதைவிட்டலதாசரும் மைத்துமுள்ளவருங்கேட்டு விசனப்பட்டுக் கொண்டிருக்கிறபோது மைத்துனனானவன் அழுதுக்கொண்டே விட்டலதாசரிடம்வந்து அவரைப் பணிந்துத் தன் அத்தானை முதலையிழுத்துக் கொண்டு போயின சவிஸ்தாரத்தைச் சொல்லி ஓசுவாமி யானமாத்திரம் நமது பட்டணத்திற்குப் போவேனேயாகில் என்தமக்கை எனனைக்கண்டு உங்களத்தானெங்கே யென்று கேட்டால் நானென்ன சொல்லுவேன் அவருக்குத் தாயாருந் தந்தையுங்கேட்டால் அவர்களுக்கு நானென்னபதில் சொல்லுவேன் அப்படிக்கி யான்பட்டணத்தைச் சேர்ந்து அவர்களிடம் கெட்டப் பேரையும் கெட்டசொற்களையுங் கேட்டு மனம் புண்ணுவதைப் பார்க்கிலும் யானுமிந்த நதியினில் விழுந்துப் பிராணனைவிடுவது மெத்தநலமாக விருக்குமென்று யோசிக்கிறேனென்று சொல்லிக்கொண்டே நதியில் விழுவதற்கு மெத்தப் படபடப்பாக போகுவனை விட்டலதாசர்கண்டு ஐயா நதியினில் விழப்போகிறவரே சற்றே நிதானித்துயான் சொல்லுவதைக்கேட்டுச் சம்மதியில்லாவிடில் உமதிஷ்டத்தைப்போல நதியினில் விழுந்து மரணமடையலா மென்றும் சம்மதியாயிருக்கிற பக்ஷத்தில் நதியினில் விழாமல் பிராணனுட னிருக்கலா மென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

கேளுமையா சாதுவே உலகத்தினில் அனேக ஜீவஜெந்துக்களும் பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்டு எந்தெந்தகாலத்தினில் எந்தெந்த சுகதுக்கங்களையனுபவிக்கும்படி பிரமதேவன் எழுதியனுப்பினனோ அந்தப்படி அஜ்ஜீவ ஜெந்துக்களெல்லாம் அந்தந்த காலத்தில் அந்தந்த சுகதுக்கங்களை யனுபவித்தேபாகவேணும் என்ற வேதசாஸ்திர விதிப்படியின் அத்தாணவன் முன்ஜென்மத்தினி லெந்தகர்மத்தை யனுட்டித்தானோ அந்தகர்மத்துக்குத் தக்கபடி முதலையின வாயினிலகப்பட்டு விழுங்கலாயினன் அதற்கு நாமென்னசெய்யலாம் இதை யோசிக்காமல் அவன் போய் விட்டானே! அதைப்போலநானும் நதியினில்விழுந்து மாண்டுபோகிறேனென்றுசொல்லி நதியை நோக்கிச் செல்லுவது நீதியாமோ மேலும் அவனுடன் நீயும் இந்நதியினில் விழுந்து மடிந்துபோக வேண்டிய பிரமலிபியிருந்தால் வினைவிடமாட்டாது ஆகையால் அவரவர்கர்மம் அவரவரைவிடமாட்டாது வீணிலேன் உன்னுடையபிராணனை நீயேவிடத்துணிந்துபோகின்றாய் வேண்டாப் வேண்டாமென்றுப் பலநீதிகளை யோதியும் அவன்கேளாமல் நதியினில் விழுந்து சாகிறதே மேன்மையென்றுக்கருதி நதியைநோக்கிச் செல்லுவதை விட்டலதாசர்கண்டு பூததயை பச்சாத்தாபமுடையவராகி மருபடியுமவனை யழைத்து ஐயா வீணிலேன் உயிரைப்போக்கிக் கொள்ளத் துணிந்திருக்கின்றாய் வேண்டாம் சற்றேநிதானித்திரும் இன்னொருயோசனை செய்கின்றேனென்றுசொல்லி அவனைநதியினில் விழவொட்டாமற் றடுத்துப் பாண்டுரங்கநாதன் சந்நிதியைநோக்கி ஒபக்தவச்சலா பரமதயாளா பார்மகள்லோலா நிஜபக்தபாலா பரமசீலா ஆபத்பந்து அனாதரக்ஷகா ஆதிதேவா தேவாதிதேவா மும்மூர்த்திகளில் முதல்வா முன்னஞ் சாந்தீபர்மனைவியின்யிஷ்டப்படி முதலையால் விழுங்கப்பட்ட அவள்மகனை அனேக வருடங்களுக்குப்பின் கொண்டுவந்து குருதக்ஷிணையாகக் கொடுத்த ஒதீனதயாளா திருமாதை வைத்த வக்ஷஸ்தலா அதுபோல இப்போது முதலையானது இழுத்துக்கொண்டு போயினசாதுவைக்கொண்டுவந்து கொடுத்து இவனுடையபிராணனைக் காப்பாத்தி ரட்சியுமையாவென்றுத் தோத்திரம் புரிகையில் சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் சிக்கிரம் தானுமொருமுதலையாக வடிவமெடுத்து அந்நதிக்குள் சென்று மனிதனை யிழுத்துக்கொண்டு போயின முதலையுடன் போராடி அதைக்கொன்று மனிதனை மிதந்துக்கொண்டே விட்டலதாசர் அருகினிற் செல்லும்படிக் கிருபைசெய்தார் அந்தப்படியே அச்சாதுவும் நதியின் மீது மிதந்துக்கொண்டே விட்டலதாசர் சமீபத்தினில் வரக்கண்டு அந்தவிட்டலதாசரும் பரமானந்தமடைந்து அச்சாதுவைநதியினின்று மெடுத்துக் கரைமீதுவிடுத்தார் அவரைப்பார்த்த மாத்திரத்தில் மைத்துனனானவன் பரமானந்தமடைந்து யாவரும் அநுஷ்டானங்கள் முடித்து சந்நிதிக்குச்சென்று பாண்டுரங்கநாதனைக் கண்டு சேவித்து ஆனந்தமடைந்தவர்களாகித் தன்னைமறந்து நிறகையில் விட்டலதாசர் வெகுவாகப்பாடியாடி மூர்ச்சையாகிப் பூமியின்மீது விழுந்து மரணமடைந்ததைப் போலகால்கரங்களசைவற்றுக்கிடந்தார் இப்படியந்த விட்டலதாசர் மூன்றுநாள்வரையில் பிரமநிஷ்டாபரராகி எழுந்திராமல்விழுந்துகிடந்து மூன்றுவதுநாள் சாயரட்சை நிஷ்டைகலைந்தெழுந்துச் சகலரையும் அழைத்துக்கொண்டு பட்டணத்தைநோக்கிப் போகிறபோது விட்டலதாசர்புதல்வராகிய ஸ்ரீராமனென்பவர் தன்தந்தையைநோக்கி ஒ அண்ணாவே! அடியேனுக்கு இப்பண்டரியில் சிலநாள் வசித்திருக்க வேணுமென்று யோசனையுண்டாயிருக்கின்றது ஆகையால் தயவுசெய்து தாங்கள் பட்டணம்போன இரண்டுமூன்று நாளைக்குள்ளாக யானும்வந்து சேருகிறேன் என்றுசொல்லக்கேட்டு. விட்டலதாசர் அப்படியே உன்னிஷ்டப்படி யிருந்துவரக்கடவாயென்றுசொல்லி பட்டணத்தைநோக்கி நடந்துச் சிலநாளில் பட்டணத்தையடைந்து சந்நிதிக்குட் சென்று ஸ்ரீமகாவிஷ்ணுவையும் உபயநாச்சிமார்களையுஞ் சேவித்து ஆனந்தமடைந்து அதைவிட்டுஅரசனரண்மனையைச் சேர்ந்து அரசனைக்கண்டு தான்பண்டரியாத்திரை செய்யப்போயினது முதல் நடந்தசெய்தியையெல்லா மொன்றொளியாமற் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தன்வீட்டைச் சேர்ந்துத்தன் மனைவியுடன் பகவானை பஜித்துக்கொண்டு ஆனந்தமாகவிருந்தார்.

இப்படி விட்டலதாசர் இங்கே மனைவியுடன் பஜனைசெய்து நாளைப்போக்கிக் கொண்டிருக்க அங்கே யிவருடைய புதல்வனாகிய ஸ்ரீராமன் பாண்டுரங்கநாதனை சேவித்துக்கொண்டு சாதுக்கள் கோஷ்டியிற்சேர்ந்து பகவத் குணானுபவஞ் செய்துக்கொண்டும் அவர்கள் சொல்லும் பிரமநிஷ்டையாகும் மார்க்கங்களையுணர்ந்து க்ஞானபக்தி வைராக்கியமுண்டாகி நாளுக்குநாள் பிரமநிஷ்டை யதிகரித்து அதைவிட்டு புறப்பட்டுத் தன்பட்டணத்தை நோக்கிவருகையில் மார்க்கத்தினிலொரு நந்தவனத்தைக்கண்டு அங்கு வசிப்பதற்குத் தனக்கு மெத்த சௌக்கியமாசவும மனிதசஞ்சாரமில்லாத யிடமாகவு மிருப்பதால் இதுபிரமநிஷ்டைசெய்வதற்குத் தக்கயிடமாகவிருக்கிறதென்று

கருதி அங்குதானே வசித்துப் பிரமநிஷ்டைசெய்துக்கொண்டுமிருந்தார் இவரிப்படி இருக்க அங்கேபட்டணத்திலிருக்கும் விட்டலதாசர் மனைவியுடன் பகவத்பஜனை செய்துக்கொண்டுமிருக்கிறபோது இவர்மனைவி இரண்டாவது கெர்ப்பந்தரித்துப் பத்துமாதமும்ப்பூரணமாகி ஆண்சிசுவைப் பெற்றாள். அச்சிசுவுக்குப்பனிரெண்டாம்நாள் நாமகரணஞ் செய்விக்கவேணுமென் றெண்ணித் தங்கள் பந்துமித்திரர்களுக் கெல்லாஞ் சொல்லி வரவழைத்து அச்சிசுவுக்கு ஸ்னானஞ்செய்வித்து ஆடையாபரணங்களை யலங்கரித்துத் தாரை, பூரி, முரசு, முதலாகிய வாத்தியங்கள் கடலொலிபோல முழங்க பிராமணர்கள் புரோகிதர்கள் பந்துமித்திரர்கள் யாவரும்வந்து நிறைந்திருக்கிற போது தாசியொருவள் தன்செட்டுடன்வந்து பகவந்நாம சங்கீர்த்தனைகளைப் பாடியாடினாள் அதை யாவருங் கண்டுங் கேட்டும் ஆனந்தித்து அத்தாசிக்குவெகுமதியாக வஸ்திராபரணாதிகளைக் கொடுத்தார்கள் அதைகண்டு விட்டலதாசர் நாமகரணஞ்செய்ய நேமித்திருக்குஞ்சிசுவையெடுத்துக் கொண்டுவந்து அத்தாசிக்கு யீந்தார் அதைக்கண்டு யாவரும் இதென்ன விபரீதமாகவிருக்கின்றது இந்த விட்டலதாசருக்கும் பைத்தியம்பிடித்துவிட்டதோ பயித்திய மில்லாவிடில் தன்சிசுவுக்கு நாமகரணஞ் செய்யப்போகிறோ மென்றெங்களைவரவழைத்து சபைகூடி யிருக்கையில் சகலமேளவாத்தியங்களும் தாம்தாமென்றுமுழங்கத் தாசியானவள்வந்து பாடியாடக்கண்ட யாவரும் தங்கள்சக்தியானுசாரம் அவரவர்கள் வஸ்திராபரணாதிகளை யீந்தார்கள் அதைப்போல இவரும் யேதாகிலுமொரு ஆபரணத்தை இத்தாசிக்குக் கொடுக்காமல் நாமகரணஞ்செய்ய உத்தேசித்திருந்தச் சிசுவை இவளுக்குக் கொடுத்துவிட்டாரே இப்படியும் உலகத்தில் தான்பெற்றபிள்ளையைக் கொடுத்தவர்களு முண்டோ இவரைப்போலதிடச்சித்தர்களாகி கொடுப்பவர்களுமுண்டோ அன்னியிலும்இப்பிள்ளையை பிராமணர்கள் யாருக்கேனுங்கொடுத்தாலுஞ் சுகிர்தமுண்டு அப்படிக்குங் கொடுக்காமலும்சூத்திர ஸ்ரீயிச்கிக்கொடுத்தாரேஎன்றுமிகவும்விசனப்பட்டுக்கொண்டு இன்னமென்ன நடக்கிறதோ அதைமுற்றிலு மிருந்துப்பார்த்துப் போவோ மென்று கருதி யிருந்தார்கள். அன்றியும் இந்த விட்டலதாசருடைய சீஷர்கள் சிலபேர் அழகிலுஞ்சுந்தரத்திலுஞ் சிறந்த இச்சிசுவை தாசிக்குக்கொடுக்க நமதாசானுக்கெப்படி மனந்துணிந்ததோ என்று சிந்தாக்கிரந்தர்களாகி குருநாதன் முன்னமேதுஞ் சொல்லக் கூடாமையால் வெருமனே இருந்து விட்டார்கள் அப்போதந்ததாசியும் மெத்த சந்தோஷத்துடன்சிசுவை வெடு

ஆ

துக்கொண்டுத் தன்வீட்டை யடைந்தனள். தற்சமயத்தினில் அங்குவந்திருந்த பந்துமித்திரர்களும் சிஷ்யர்களும் மனமபதைத்து மங்களம் நடக்கவேண்டியஇவ்விடத்தினில் அமங்களம் நடந்துவிட்டதேயென்றுயாவரும் மெத்த சங்கடமடைந்தனர்கள். இதிற்சிலசிஷ்யர்கள் நாமாகிலும் விரைந்தோடி அந்தத் தாசியைப்போகவொட்டாமல் மடக்கி நீயேதாகிலும் வஸ்திராபரணாதிகளையோ அல்லது திரவியத்தையோ பெற்றுக்கொண்டு போககடமையிருக்கஅதுகளைவிடுத்துஉன்பனதைச் சோதிக்கும்படி . விட்டலதாசர் கொடுத்த சிசுவை நீயெடுத்துக் கொண்டேகுவது நீதியல்லவென்று சொல்லி பலவத்காரஞ்செய்து அச்சிசுவைஎடுத்து வருவோமென்றாலோ குருநாதருக்குக்கோபமுண்டாகும் இதற்கென்ன செய்கிறதென்று உபாயமெதுவுந் தோன்றாம லிருந்தனர்கள்.

இவ்வண்ண மிந்தசிஷ்யர்களுக் கெந்தஉபாயமுந் தோன்றாம லிருக்கிறபோது இந்தவிட்டல தாசருக்கு ராஜகன்னிகை ரங்கசாயி யென்றொரு சிஷியளிருந்தனள். அவளிந்த செய்தியையறிந்து விரைந்தோடித் தாசிவீட்டிற்குச் சென்று அவளைக்கண்டு உனக்கென்னவேணுமோ அதைக் கேட்பாயாகில் தடையின்றி அவசியமுனக்குத் தருகிறேன் குருபுதல்வனைக்கொடுத்து விடுமென்றுப் பலவித உபாயங்கள்பேசிக்கேட்டபோதிலும் அத்தாசி அந்தஉபாயச் சொற்களைக் கேளாமலே யிருந்தனள். அதைக்கண்டு அந்த ரங்கசாயியெனும் சிஷியள் மனவருத்தத்துடன் அத்தாசி வீட்டைவிட்டு வெளிப்பட்டு சிவிகையின் மீதேறிக்கொண்டு குருநாதன்வீட்டை நோக்கிவந்து குருநாதனருகினி லிருந்துக்கொண்டு ஏதோ பகவத் குணானுபவங்களைக் கேட்டுக்கொண் டிருக்கிறபோது தாசியானவள் சிசுவை எடுத்துக்கொண்டு விட்டலதாசர் முன்னம்வர அதைக்கண்டு அந்த ரங்கசாயியெனும் ராஜகன்னிகை இதுநல்ல சமயமென்றுக் கருதித் தம்பூர், மிருதங்கம். தாளம், முகவீணை முதலான வாத்தியங்களுடன் கலந்து வெகுசாதுரியமாகப் பாடிப் பலவிதங்களாயாடி அதிகரசமாக ஹரிகுணானு பவங்களைச் சொல்லக்கேட்டு அச்சபையினி லுள்ள யாவர்களும் ஆச்சரியப்பட்டு மாச்சரியங் கெட்டு வியப்படைந்ததைக்கண்டு அந்ததாசியானவள் தானும் ஆச்சரியப்யட்டு மெய்மறந்து அச்சிசுவை இராஜகன்னிகைக்குப் பரிசாகக்கொடுத்தனள்அதையந்தரங்கசாயிகைக்கொண்டு அருகினிலிருக்குஞ் சத்குருநாதர் திருத்தாட்டாமரைகளில்போட்டனள் யதையங்குவந்திருந்தயாவர்களுங்கண்டு ரங்கசாயிசெய்த சமயோசிதமாகிய யுக்திக்கு மெத்தவும் புகழ்ந்துக் கொண்டாடினார்கள்.

இவ்வாறு அந்தரங்கசாயியெனும்ராஜகன்னிகை லஜ்ஜையை விடுத்துச் சபையினிலுள்ளயாவர்கள்முன்னம நடித்துத்தன் குலதர்மத்தையும் யெண்ணாமல் தான் இராஜகுமாரத்தியாக விருந்தும் குருபுதல்வனுக்காகத்தான் பகவத்குணானுபவங்களைப் பலவிதமாகப் பாடியும் யாவரும் பிரமிக்கும்படியாக ஆடிச் சிசுவை தாசியினிடம் சன்மானமாகக் கொண்டு ஆசான் திருவடிகளிற் போட்ட விஷபத்தினிலந்த இராஜகுமாரத்திக் குண்டாகிய கௌரவத்தைச்சொல்லஇரண்டாயிரம் நாவுடைய ஆதிசேஷனாலுந் தாமாசாதென்றால் கீர்த்தியையும் என்னொருநாவால் சொல்லமுடியுமோ அப்படிப்பட்டக் கீர்த்திப்பிரதாபத்தை யடைந்தனள். இப்பாலந்தத் தாசியும் விட்டலதாசருக்கு வந்தனந்தந்து விடைபெற்றுக் கொண்டு தன்வீட்டை யடைந்தனள். பின்பு விட்டலதாசர் பந்துக்கள் முதலானோருங் களிக்கும்படித் தன்புதல்வனுக்கு நரஹரி என்று நாமகரணமிட்டு கோதான பூதான ஹிரணிய தான அன்னதான வஸ்திரதானமெனுஞ் சோடசதானங்களும் அபாரமாகநடத்தி புத்திரோச்சவத்தைப் பிரமோச்சவமாகக் கொண்டாடிப் பந்துமித்திர சிஷியர்களுடன்புசித்துச் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளை யீந்து உடனே அந்த விட்டலதாசர் காலில் கெஜ்ஜை கட்டிக்கொண்டுக் கரத்தினில் தம்பூரைப் பிடித்துக் கொண்டு பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடித்தன்னைமறந்தாடி மெய்மறந்துப் பூமியின்மீதுவிழுந்து ஆர்த்தியாகப் புரண்டுபுரண்டுப் பாடுவதை யாவத்திராளுங்கேட்டு ஆனந்தப் பிரமானந்தம் பரமானந்தமென்று சொல்லப்பட்ட மூன்றினில் பரமானந்தத்திற் சொக்கித் தன்னைமறந்து தலைவனிற்கலந்து சுகவாரியில் மூழ்கியிருந்து உடனேதெளிந்து இந்நாள் நந்நாளாகியதென்றுசந்தோஷசித்தராகித் தங்கடங்களகஞ் சேர்ந்திருந்தனர்கள்.

இந்தப்படிக்கி யாவரும் தங்கள்கஞ் சேர்ந்து பின்பு விட்டலதாசர் மனைவி தன்புதல்வனை எடுத்து மார்புடன்றழுவி முத்தமிட்டுப் பாலூட்டிச் செல்வமாக வளர்த்துவந்தாள். விட்டலதாசர் மூன்றுநாள் பரியந்தம் நிஷ்டையினிலிருந்து மூன்றுநாள் சாயரட்சை நிஷ்டை கலைந்தெழுந்துப் புதல்வனைக்கண்டு இவன் மெத்தபக்தி யுடையவனாக யிருப்பானென்றுணர்ந்து அச்சிறுவனை யதிகப்பிரியமாகப் பாதுகாத்துவந்தார். அப்போதச்சிறுவனும் சுக்கிலபக்ஷத்துச்சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகிறபோது அப்புதல்வனுக்கு ஒன்றிரண்டு மூன்றுநான்கு ஐந்துவயதானவுடனே உபநயனம் க்ஷௌளம் அன்னப்பிரசான முதலான சடங்குகளை நடத்திப் பள்ளியினிலோத விடுத்து மெத்தச் சிரத்தையாக பாதுகாத்து வருகையில் அச்சிறுவனும் நாளுக்குநாள் கல்வியதிகரித்து நான்குவேதம் ஆறுசாத்திரம் பதினெண்புராணம் கலைக்கியான மனுவிக்கியான முதலான சகலசாஸ்திர புராணங்களில் சம்பன்னனாகிவிற்பனத்திலுஞ் சொற்பனத்திலும் மெத்த வல்லவனாகியுமிருக்கிறபோது அப்பட்டணத்தையாளும் அரசன் அச்சிறுவனது கல்வித் திறமையையுங் குணவிசேஷத்தையுமறிந்து வெகுசந்துஷ்டனாகி மந்திரியுடன் விட்டலதாசரகத்தை யடைந்து விட்டலதாசரைக்கண்டுவணங்கி ஓசுவாமி! தங்களுடைய இரண்டாவது புத்திரன் கல்வித்திறத்திலுஞ் சகலநற்குணங்களிலுஞ் சிறந்தவரென்று யான் கேழ்விப்பட்டேன் ஆகையால் அவரையுமது தந்தைகளிருவரு மிருந்ததைப் போலப் புரோகிதமும் சமஸ்தான வித்துவானாகும் இரண்டு வேலைகளையும் பார்க்கும்படிக் கட்டளையிட்டனுப்பும்படி யான்மெத்தவும் வேண்டிக்கொள்ளுகிறே னென்றுசொல்லிப் பணிந்தான். அதற்கு விட்டலதாசர்மெத்த சந்தோஷித்து அரசனைநோக்கி ஐயா பூபாலரே! நானெண்ணங்கொண் டிருப்பதைப்போல பகவானுமக்கும் யெண்ணமப்படியே கொடுத்தார். ஆனால்நம்மிருவருக்குமுண்டாயிருக்கும் எண்ணத்தைப்போல அவனுடையகோரிக்கையும் சம்மதமுமிருந்தா லன்றோ சந்தோஷம் அப்படிக்கில்லாம லவனெண்ணமெப்படி யிருக்கின்றதோ? அதையானறியே னாதலால் அவனையழைத்து மனோபாவத்தை யறிந்துக்கொள்ளுவோமென்றுசொல்லித் தன்புதல்வனையழைப்பித்து அடாமகனே! நமது முன்னோர்கள் செய்திருந்த உத்தியோகமாகிய புரோகிதம் அல்லது சமஸ்தான வித்துவத்திறம் இவ்விரண்டிலுனக் கெந்த உத்தியோகம் பார்க்க மனதுக்கிஷ்டமோ அதைத்தெரியப்படுத்துமப்பாவென்று வினவிய தந்தையைநோக்கிச் சொல்லுகின்றான் கேளும் அண்ணா சிலவருடகாலம் முன்னோர்கள் செய்திருந்த உத்தியோகத்தையே பார்த்துக் கொண்டிருந்து பின்பு கடைத்தேரும் மார்க்கத்தில் முயலவேணுமென்ற யோசனை யுண்டாயிருக்கின்றது தங்களுடைய கருத்தெப்படியோ யானறியேனாகையால் தாங்களெப்படி நேமிக்கின்றீர்களோ அந்தப்படி யவ்வுத்தியோகத்தினி லிருக்கின்றேனென்று சொல்லக்கேட்டு அரசனும் விட்டலதாசரும் மெத்த சந்தோஷமடைந்து இவன் நல்லகுணவானாகவு மிருப்பானென்று மதித்துஇருக்க இதில்விட்டலதாசர்புதல்வனைநோக்கி அப்பா புத்திரசிகாமணியே! நமதரசனிடத்தினில் புரோகிதமும் சமஸ்தான வித்துவத்திறமு

மாகிய இரண்டு உத்தியோகத்தையுஞ் செய்துக்கொண்டிருக்கக் கடவாயென்ன, அந்தநேமனப்படி யப்புதல்வன் ஒப்புக்கொண்டு அரசனுடன் சென்று இரண்டு உத்தியோகங்களையுஞ் செய்துக்கொண்டு வருகையில் அப்பட்டணத்திலுள்ள குடிகள்யாவரும் இவருடைய அடக்க ஒடுக்கங்களைக்கண்டு மெத்தவும் புகழ்ந்துக் கொண்டாடப் பலவருஷங்கள்உத்தியோகஞ் செய்துக்கொண்டும் இடைவிடாமல் பகவத்குணானுபவங்களைப்பண்ணிவருகையில் விட்டலதாசரும்அவர் மனைவியும் யோசிக்கத் தொடங்கினார்கள் அதென்னவெனில் நமது புதல்வனுக்கோ விவாகத்துக்குத்தக்க வயது உண்டாயிருக்கின்றது இனிநாம் நாளைப்போக்கலாகாதென்றுகருதி உடனே புறப்பட்டுத் தங்கள் மரபினில் அழகுங்குணமும் வாய்ந்த கன்னிகையைப் பேசி நல்லகடிகையினில் விவாகம் நடப்பித்து அவர்களுக்கு வேண்டியவைகளை யெலலாஞ் சேகரித்துவைத்துவிட்டு விட்டலதாசர் அரசனிடஞ்சென்று மகாராஜனே! யானும்யென்மனைவியும் நாட்டைவிட்டுக்காட்டுக்குச் சென்றுத் தவமியற்றி மேலாகியபதவி யடையும்பொருட்டு நாளையதினம் போகின்றோமாகையால் என்புதல்வனை யுமது புதல்வனாக பாவித்துக் காக்கக் கடனுமக்கே யாமென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு தன்னகரத்தையடைந்து மகனையும்மருகியையும் நோக்கி நாங்கள் கானகம்போய் வருகின்றோம் நீங்களதுபரியந்தம் சுகமாக வாழ்ந்துக்கொண் டிருங்களென்றுசொல்லி நாட்டைவிட்டுக் காட்டையடைந்து வாளப்பிரஸ்த ஆசிரமத்தை யடுத்தும் பர்னசாலையொன்றியற்றி யதிலிருந்துக்கொண்டு தவமியற்றிச் சிலவருடங்கள்போக்கி முடிவினில் விட்டலதாசர் மனைவியும் சிலநாள் கடந்தபின்பு விட்டலதாசரும் நிரதிசயானந்தமாகும் வைகுந்தமாநகரத்தை யடைந்து நித்தியசூரிகளுடன் சேர்ந்து முத்தர்களாகி மறுஜென்மமில்லாம லிருந்தார்கள்.

வாழி விருத்தம்.

இஷ்டமுடனென்னுளு மிருதயத்திற்பூசிப்போன்வாழியே
நிஷ்டைசெய்துநிர்மலமாய் நெறியுடையோன்வாழியே
மட்டிலாக்கீர்த்திபெற்ற மாதவத்தோன்வாழியே
விட்டலதாசர்விமல பொற்பதங்கள்வாழிவாழி.

விட்டலதாசர்சரித்திரம்.

முற்றிற்று,

—

ஸ்ரீ

ஸ்ரீஜனார்த்தனாயநம:

ஸ்ரீமத்

சாங்கதேவர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

இந்திரனுக்கினைமருந்து யெழிலிலாச்சாபமேற்று
எந்தைசரணெனவேண்டி யிவ்வுலகதனில்வந்து
பந்தங்கள்பற்றறுத்துப் பாண்டுரங்கனருளைப்பெற்ற
அந்தமாஞ்சாங்கதேவ ரடிமலர்ப்பணிகுவோமே.

கதையின் வரலாறு.

ஸ்ரீமகாலட்சுமி கடாக்ஷம்பொருந்திய பொன்னுலகமானது கற்பகத்தருக்களாலும் காமதேனுவினாலும் தேவதுந்துமியாலும் ரதகஜதுரகபதாதிகளாலும் தண்டத்தலைவர் அணித்தலைவர் படைத்தலைவர் யூகத்தலைவர்களாலும் நிமைக்கொட்டாத தேவர்களாலும் யக்ஷக்கின்னர கிம்புருஷ கருடகாந்தர்வ சித்தவித்தியாதரர்களாலும் சப்தரிஷிகளாலும் புடைசூழப்பட்டுதேவசிங்காதனத்தின்மீது இந்திராணிசமேதனாக தேவேந்திரன் கொலுவமர்ந் திருக்கிறபோது தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் ஆசீர்வதிக்க சப்தரிஷிகளும் பலவாறு புகழ்ந்துக்கொண்டாட ரம்பை ஊர்வசி திலோர்த்தமை மேனகையெனும் நான்கு கணிகைமாதரும் ஆடப்பாட கட்டியங்கூற மெத்த வைபோகத்துடன் சபை பரிமளித்துக்கொண் டிருக்கும்போது மருத்கணனென்னும்படியானவன் அங்கு வந்து தேவேந்திரனைக்கண்டு பணிந்து ஓசுவாமி அடியேனுக்கென்ன கட்டளையென்று வேண்ட அதற்கு தேவேந்திரன் அடாமருத்கணா பாட்டும் ஆட்டமும் நல்லரசமாயிருக்கிறபோது வந்து கட்டளை என்னவென்றுகேட்டு ரசத்தைக்கெடுக்கின்றாய் சற்றுநேரம்அப்படி விலகியிரும்பிள்ளாய் பாட்டும் ஆட்டமுமுடிந்தவுடன் உன்னிஷ்டத்தை முடிக்கின்றேனென்று சொல்லிய நேமனத்தை அந்தமருத்கணன் சற்றேவிலகிப்போகாமல் மறுத்து அங்குதானேநின்றிருந்தான் சற்றுநேரத்திற்குள் ஆட்டபாட்டங்களெல்லாம் நிறுத்திவிட்டார்கள் உடனே தேவேந்திரன் சினங்கொண்டு அடாமருத்கணா என்னுடையகட்டளையைமீறி நாளதுவரையில் ஒருவரும் நடந்ததேயில்லை ஒவ்வொருவரும் மெத்தபயத்துடன் என்கட்டளையின்படி நடப்பார்களே அன்றியுன்னைப்போல் கெர்வத்தினாலென்னை மதிக்காமலிருந்ததில்லை ஆகையாலிதோ சற்றுநேரத்தினிலுன் கெர்வத்தையடக்கிறேன்பாரடா என்றுசொல்லி

அதிக சினங்கொண்டு மேலுஞ் சொல்லுகின்றான் அடாமருத்கணா என்னுடைய கட்டளையை நீமறுத்த படியினாலே இப்போதே நீமானிடனாகிப் பூலோகத்திற்குச்சென்று வசித்துக்கொண் டிருக்கக்கடவாயென்று சபித்தான் அதைக்கேட்டு மருத்கணன் நடுநடுங்கி ஓசுவாமி யானிப்படி வருமென்று தெரியாமற்செய்தகுற்றத்தை மன்னித்து என்னைக் காப்பாத்தவேணுமென்று விழுந்துபணிந்துஎழுந்திராமற்கிடந்தான் அப்போது தேவேந்திரனுக்குக் கோபம் நீங்கிப் பூததயை பச்சாத்தாபமுண்டாகி அடாமருத்கணா சீக்கிரமெழுந்திரு நீசெய்த குற்றத்தின்பொருட்டு என்னை நீ மெத்தவும் வேண்டிக்கொண்டபடியால் நீபுனிதனாகியமனிதனாகிஜெகதீஸ்வரனுடைய கிருபைக்குப் பாத்திரனாகி அரசர்களுக்குமெத்தக் கீர்த்தியுண்டாகும்படிச் செய்து திரும்பி சொர்க்கலோகம்வந்து சேரக்கடவா யென்று சாபானுக்கிரகஞ்செய்து அனுப்பினான் அப்போதந்த மருத்கணன் அவ்வார்த்தையைக்கேட்டுச் சந்தோஷசித்தனாகி உடனே புறப்பட்டு பூலோகத்திற்குவந்து அந்தமருத்கணன் தபதிநதியில் ஸ்னானஞ்செய்துப் புனிதமாகிய மானிட ஜென்மத்தைப் பெற்று அநுஷ்டானங்களை முடித்து அந்நதிக்கரையின்மீது பதுமாசனமிட்டுட்கார்ந்து ஒருவருடனும் பேசாமல் மௌனமாகவும் மௌனியைப் போலவுங் கண்களைமூடிக்கொண்டு பிறவிக்குருடனைப்போலவுந் தவஞ்செய்துக்கொண்டிருக்கிறபோது இவருடையதிரேகம் மெத்தசுந்தரமாகவிருப்பதால் அவரைப் பார்க்கும்பொருட்டு அனேக ஜனங்கள் வந்துக்கொண்டிருந்தார்கள்

இந்தப்படிக்கி இவர்திரேகம் மெத்த அழகுசுந்திரமாக விருப்பதால் இவரைக்கண்ட யாவரும் இவரைச் சாங்கதேவரென்று பேரிட்டு அழைத்தார்கள் மேலும் இவரைச் சாங்கதேவரென்று அழைத்தயாவரும் இவருடையப் பிரதாபத்தை யெல்லாக்கிராமங்களுக்குந் தெரியப்படுத்தினார்கள் அதில்வருணக்கிராமத்தினிலிருந்து இரண்டு பிராமணர்கள்வந்து இவரைக் கண்டு சேவித்து ஆனந்தித்து இந்தச்சாங்க தேவருக்குத் தொண்டுசெய்துக் கொண்டப்பிராமணர்களிருவருமிருக்கிறபோது நாளுக்குநாளந்தச் சாங்கதேவருடைய திரேகம்பூரித்து ஸ்தூலமாக விருக்கின்றதேயன்றி இளைக்கவும்முகவாட்டமும்காற்றுமழைகளால் சுருங்கிப்போகாமலும் அதிகதேஜசு பிரகாசிக்கின்றபடியாலும் க்ஞானபக்தி வைராக்கிய மதிகரித்திருப்பதினாலேயும் பிராமணர்களிருவரும் நாளுக்குநாள் குருபக்தியிற் சிறந்தவர்களாகி மெத்தவினயமாக நடந்துக்கொண் டிருந்தனர்கள் இப்படி யொருமாதம் வரைக்கும் இவர்களிருவருந் தொண்டு செய்திருந்து ஒருநாளந்த சாங்கதேவரைக்கண்டு பிராமணர்களிருவரும் வணங்கி ஓசுவாமி! நாங்களிருவரும் பிராமணர்கள் ஒருமாதகாலமாய் தங்களுக்குத்தொண்டுசெய்துக்கொண்டு வருகின்றோம் எங்கள்விஷயத்தினில் கிருபாநோக்கம் வைத்து உபதேசஞ் செய்யவேணுமென்று வேண்டிக் கொண்டார்கள் அதற்கந்த சாங்கதேவர் சிரித்து ஐயா பூசுரர்களே! க்ஞானமென்பதெதுவோ பக்தியென்பதெதுவோ, வைராக்கியமென்பதெதுவோ, உபதேசமென்பதென்னமோ இதிலொன்றேனுமெனக்குத் தெரியமாட்டாது பெரியோர்களையடுத்து நீங்கள் உபதேசமென்பதெதுவோ அதைப்பெற்றுக் கொள்ளுங்கள் யானோ ஒண்டியாகியிங்கு உங்களிடம் அகப்பட்டேன் ஒன்றுந்தெரியாதமெத்த யேழையாகும் பென்னையொரு பொருளாகவெண்ணி எனக்குத் தொண்டுசெய்துக் கொண்டிருந்ததுவீணே பெரியோர்களை யடுத்துத் தொண்டுசெய்து ஒருமாதகாலங் கழித்திருப்பீர்களேயாகில்உடனேஉங்களுக்கு யேதாவதொருப் பிரயோஜனமுண்டா யிருக்குமன்றோ எனக்குத் தொண்டுசெய்திருந்து ஒருமாதகாலம் வீணாப்போக்கி விட்டீர்களே மேலுமெனக்குத்தாய் தந்தையர்களும் மனைவிமக்களும் பந்துமித்திரர்களும் பூமிகாணி நிலந்தோப்புத் துறவுகள் முதலானதுகளிலொன்றேனு மில்லாத அனாதியாகும்யான் அன்றியும் மந்திரதந்திரமு மறியாத முழுமூடனாகுமென்னைபொருபொருளாக மதித்து அடுத்திருப்பது கிளிகள் இலவங் காய்களைக்கண்டு இக்காய்களின்னுஞ் சிலநாளினில் பழுக்கும் அப்போதிந்தப் பழத்தைத்தின்று ஆசையைத் தீரலாமென்று வெகுநாள்கள் அம்மரத்தின் மீதே காத்துக்கொண்டிருந்து முடிவில் அக்காய்கள் உணர்ந்து வெடித்துப் பஞ்சிகள் பறந்துபோக கண்டு விசனப்பட்டதைப் போலாகும் நீங்களிருவருமென்னையடுத்திருப்பது தகாதென்று சொல்லியும் அப்பிராமணர்களிருவரும் அந்தச் சாங்கதேவர் சொல்லிய வசனங்களைப் பொய்யெனறுகருதி ஓசுவாமி! யாங்கள் செய்யுந்தொண்டுகளால் பலவருடங்கள் வரையினிலெங்களைச் சோதித்துப் பின்பல்லவோ உபதேசஞ் செய்வது வழக்கம் அதைச்சிலபெரியோர்களால் கேழ்விப்பட்டிருந்தும் சமயத்தில் மறந்துத் தங்களை யங்களுக் குபதேசஞ் செய்விக்கும்படி வேண்டிக்கொண்டது குற்றமே அன்றியும் ஒருமாதமாயத் தொண்டு செய்துக் கொண்டிருக்கின்றோமென்று சொல்லியதும் அபசாரமே இதுவிஷயத்திலில் முனிவுகொள்ளாமல் க்ஷமித்துக் கொள்ளவேணும் சுவாமி என்றுப்பணிந்து அவரைவிட்டகலாமல் தொண்டுசெய்துக் கொண்டிரு

ந்தார்கள் அப்போது சாங்கதேவர் இவ்விருவரும்நம்மைவிடாது தொண்டு புரிவதற்குக் காரணம் யாதென்று உன்னிப்பாயவர்கள் நடைநொடிபாவங்களால் தெரிந்துக்கொண்டாரா அதென்ன தெரிந்துக் கொண்டாரெனில் அவர்களிருவரும் பொருள் வாஞ்சைகொண்டுவந்தவர்களென உணர்ந்துச் சாங்கதேவர் அவர்களிருவரையும் அழைத்துநீங்களெந்தவஸ்துவின்மீது அபேக்ஷைகொண்டு இங்குவந்து இத்தனைநாளாக வெனக்குத் தொண்டுசெய்துக் கொண்டிருக்கின்றீர்கள் அதை சீக்கிரம் வெளியிட்டால் உங்கள்கருத்தின்படி முடித்து அனுப்புகிறேனென அதற்கந்தச் சீஷர்களிருவருஞ் சாங்கதேவரைப் பணிந்து ஒசுவாமிநாங்களிருவரும் பலசரக்கு வியாபாரஞ்செய்யும்படியான வர்த்தகர்கள் வெகுநாளாக வர்த்தகஞ்செய்துக் கொண்டிருந்தும் எங்களுக்குநஷ்டம்வந்துக்கொண்டேயிருக்கிறதல்லாமல் எங்களுக்கெந்தநாளும் லாபங்கிடைத்ததேயில்லை இதனால் எங்கள் முன்னோர்கள் சேகரஞ்செய்துவைத்துப் போயின பொருள்களும் ஆபரணாதிகளும் தோட்டத்துறவுகளும்வீடுவாசல்களும்போய் வியாபாரத்தினிலிருக்கும் சரக்குகளன்றி எங்கள்கையினில் ஒருகாசேனும் ஐவேசுகிடையாது இவ்வளவு நிற்பாக்கியர்களாகி யிருக்கின்றோம் ஆகையால்தாங்களிதற்கேதேனு மொருயோசனை செய்து வியாபாரத்தினில் நஷ்டம் வாராதபடிக்கும் லாபமேயுண்டாகும்படிக்கிக்கிருபை செய்யவேணும் சுவாமியென்று வேண்டிக்கொண்டார்கள் அதற்கந்த சாங்கதேவர் யோசித்துச் சீஷர்களைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்.

கேளுங்கள்பொருளாசைகொண்டு வந்தவர்களே நாளைபதினஞ் சந்தையாதலால் உங்களிடத்திலிருக்குஞ் சரக்குகளையெல்லாம் யெடுப்பித்துக் கொண்டுவந்து சந்தைக்கூட்டத்தினில் கடைவையுங்கோள் நானங்குவந்து உங்களுடனிருக்கின்றேன் அப்போதுங்கள் சரக்குகளெல்லாம் விக்கிறயமாகும் உபாயத்தையும் லாபங்கிடைக்கும் சகாயத்தையும் பார்ப்போம் உங்களுக் கெந்தவிதத்தில் நஷ்டமுண்டாயிற்றோ அதற்குக் காரணத்தையும் தெரிந்துக் கொள்ளுகிறேன் இனிபோய் வாருங்கள் நீங்களெனச் சீஷர்களிருவரும் விடைபெற்றுக்கொண்டு தங்களகஞ் சேர்ந்திருந்து மருநாள் காலையினிலெழுந்து சரக்குகளையெல்லாஞ் சந்தைக்கூட்டத்திற் சேர்த்து ஆசானிடம்வந்து பணிந்து ஒசுவாமி எங்கள்மீது தாங்கள் தயவுசெய்து சந்தைகடைக்கு வந்திருக்க வேணுமென்றுவேண்டிக் கொண்டார்கள் அதற்குச் சாங்கதேவர் சிறித்து அப்பா சீஷர்களே யிதோவந்தேனென்று சொல்லி அவர்கள் பின்னடந்து சந்தைக்கடைக்கிச் சென்றுச் சீஷ்களால் போடப்பட்ட உன்னித ஆசனத்தின் மீதெழுந்தருளி சரக்குகளை யெல்லாந் திருத்தமாக வைத்து அவாகளை இருபக்கமும உட்காரும்படி நேமித்தார் அவர்களு மந்தப்படியே சரக்குகளைத் திருத்தமாக அமைத்து அக்கடையினிரண்டு பக்கத்திலும் இரண்டு பேர்களும் உட்கார்ந்திருக்க அப்போது கிராக்கிக்காரர்கள் அங்குவந்து வர்த்தகர்கள் என்னவிலை சொன்னார்களோ அந்தவிலைக்கே சரக்குகளை நிறைபோட்டு பெற்றுக்கொண்டு அதற்குண்டான விலையாகுப் கிறயத்தைக் கொடுத்துப் போயினார்கள் இந்தப்படி யெல்லா சரக்குகளையும் அரைநாளைக் குள்ளாக விற்பனை செய்து யணத்தைக் கைக்கொண்டு உடனே அவ்விடத்திலேதானேபிரசாதஞ்செய்து புசிப்பதற்குஆசானை யழைத்தார்கள் அந்த சாங்கதேவரும் சந்துஷ்டராகி ஸ்னாநட்டானங்களை முடித்து மண்ணினால் லிங்கத்தைச்செய்து அந்தலிங்கத்துக்கு அபிஷேகம் ஆடையாபரணங்கள் அலங்காரஞ்செய்து தூபதீப நைவேத்திபம் முதலானதுகளுந்தந்து பூசைமுடித்துச் சீஷர்களால் உபசரிக்கப் புசித்துச்சந்தோஷ சித்தராகிச் சீஷர்களையழைத்து இன்று வியாபாரஞ் செய்ததிலென்ன லாபமுண்டாயிற்றுச் சொல்லுங்களென அதற்கந்த சீஷர்கள் முடிப்பு ரூபாய்களையெடுத்து ஆசான் முன்னம் வைத்தார்கள் அதையந்தச் சாங்கதேவர் கண்டு சீஷர்களைநோக்கி இன்றையதினம் உங்களுக்கு லாபமென்ன கிடைத்ததென்று யான்கேட்டால் என்முன் முடிப்பு ரூபாய்களைக் கொண்டுவந்து வைத்துப் பதில்சொல்லாம லிருக்குங்காரணமென்னலாபம் இவ்வளவு கிடைத்ததென்றால் யான் அதற்கு ஆசைப்படுவே னென்றோசித்தோ முடிப்பையே கொண்டுவந்தேன் முன்வைத்தது பொருள்வாஞ்சை கொண்டவர்கள் யென்றுங்களை முன்னமேயான்தெரிந்துக்கொண்டல்லவோ உங்கள் ஆசைதீரும்படிலாபங்கிடைத்துச் சுகமாக இல்லறவாழ்க்கையினி லிருப்பீர்களென்றல்லவோ யான்செய்யுந் தவசைவிடுத்து வந்தது யானும் பொருளாசை கொண்டுவந்தவனென்று யோசித்திருக்கின்றீர்களோ அப்படியென்னை யுங்களைப் போல பொருள் வாஞ்சைகொண்டு இந்த சந்தைக்கூட்டத்திற்கு வந்தேனென்று அணுவளவேணுங் கருதவேண்டாம்யென்று சொல்லிக் கோபக்குறிப்பைக் காட்டினர் அதற்கந்தசீஷர்கள் நடுநடுங்கி அந்தசாங்கதேவர் திருவடிகளில் விழுந்து ஒசுலாமி தேவரீர் பொருளின் மீது ஆசையுடையவரென்றுச் சிறிதேனுங் கருதினவர்களல்ல கபடமின்றி முடிப்பையே கொண்டுவந்து வைத்தோம் ஏனெனில் இத்தனைநாள் நாங்கள் வியா

பாரஞ்செய்ததில் முதலேகைக்கூடி வருவது மெத்த கஷ்டமாக விருக்கும் இன்றபடினம் முதலுக்குமேல் இரண்டுபங் கதிசலாபங் கிடைத்திருப்பதால் இவ்வளவு லாபமுந் தங்களால் கிடைத்ததென் றுண்மையிலே தெரிந்துத் தங்கள்முன் முடிப்பையே வைத்தோம் அன்றியுமீசெகள் முடிப்பைப் பார்த்து எஙகளிருவருக்கும் விரோதம் நேரிடாவண்ணம் தாங்கள் பகுந்துக் கொடுப்பீர்களென் றெண்ணி முடிப்பை வைத்ததேயன்றி தாங்கள் பொருள்வாஞ்சைகொண்டவரென்றும் இந்தமுடிப்பில் ஏதோ யிஷ்டப்படி எடுத்துக் கொள்ளுவீரென்றுங் கருதி யாங்கள் முன்னம் முடிப்பை வைத்தவர்க ளல்லவென்று வினயமாகச் சொல்லிப் பணிந்தார்கள்.

இவ்வாறுசொல்லிப் பணிந்தச் சீஷர்கள்மீது சாங்கதேவருக்குப் பிரியமுண்டாகி அந்தமுடிப்பை யவிழ்த்து மொத்தஞ்செய்து அதையிரண்டாகப் பகுந்து இருவருக்குங் கொடுத்தார் அதையவர்கள் பெற்றுக்கொண்டு அன்றிரவு முழுமையும் ஆசானை யவர்கள் காத்திருந்து உதயமானவுடன் அவர்களிருவரும் ஆசானை யழைத்துவந்து முன்னமிருந்த விடத்தினில் விடுத்து மெத்த அன்புடன் சத்குருநாதனுக்குத்தொண்டுசெய்துக் கொண்டிருந்து வாரந்தோரும்ஆசானை யழைத்துச்சென்று சந்தைக் கடையினில் வைத்துக்கொண்டு மளிகைவியாபாரஞ்செய்ய முயலுகையில் கிராக்கிகாரர்கள் வந்து சரக்குகள் விலேகேட்டு வியாபாரிகள் சொல்லியவிலைக்கு மறுவிலேகேட்காமல்வியாபாரிகள் சொன்னவிலைக்கே சரக்குகளை யெடைபோட்டுப் பணத்தைக் கட்டிவிட்டுப் போவார்கள் இதனலிவ்விரண்டு சீஷர்களுக்கும் அதிகலாபங் கிடைத்தது இரண்டுவருட காலங்களுக்குள் மெத்தப்பொருளாளிகளாகி சம்சாரபந்தங்களில் விழுந்து விடுவித்துக்கொள்ள முடியாமல் வியாபாரத்தினல் வெகுபொருள் சேகரஞ்செய்துத் தானெனுங் கெர்வங்கொண்டு ஆசான் விஷயத்தினில் முன்னமிருந்த பக்திநாளுக்கு நாள் குரைந்து தனமதிகரித்தபடியால்மத மதிகரித்துத்தங்களுக்கு நிகராக இவ்வுலகினிலொருவருமில்லேயென்று கருதி தினமும் ஆசானுக்குத் தொண்டு செய்வதை விடுத்து தனமதங்கொண்டு திரிந்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் சாங்கதேவர் பூசைசெய்யும் பொருட்டு லிங்கஞ்செய்வதற்கு மண்ணில்லாமல் மிகவுந்தவித்து இன்னமுஞ் சீஷர்கள் வரவில்லேயேஇதற்கென்னசெய்கிறதென்று யோசித்துப் பகலிரண்டு மணிவரையில் சீஷர்களே யெதிர்ப்பார்த்துக் கொண் டிருக்கையில் சீஷர்களிருவரும் யோசிக்கின்றூர்கள் அதென்னவெனில் தினந்தோருங் காலேயிலெழுந்தவுடனே நாமிருவரும் ஆசானிடத்திற்குச் சென்று மாலேபரியந்தம் அவருக்குத்தொண்டுசெய்ய வேண்டியகஷ்டம்நமக்கு நேரிட்டிருக்கின்றதே இந்தகஷ்டம் நமக்கில்லாமலெப்போது ஒழியுமோ நாழிகைதப்பினும் நாள் தப்பமலிருக்கின்றதே இதற்கென்ன செய்யலாமென்று ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கையில் இவ்விருவரி லொருவன் மைத்தொருவனை நோக்கிச் சொல்லுகின்றுன் ஐயா குப்பையங்காரே இதற்கொருதந்திர மிருக்கின்றது அந்தப்படிக்கிச்செய்தால் இந்தசள்ளே நமக்கென்று மில்லாமற் போகும் அதென்ன தந்திரமெனில் இன்றைக்கு ஆசானிடம் ஏழுமணிக்கு போகிறது நாளேக்கு எட்டுமணிக்குப் போகிறது மறுநாளேக்கு ஒன்பது மணிக்குப் போகிறது அதற்குமறுநாள் பத்துமணிக்குப் போகிறது மறுநாளேக்குப் பதிஞேரு மணிக்குப்போகிறது அதற்குமறுநாள் பனிரெண்டுமணிக்குப் போகிறது இந்தப்படி நாளொன்றுக்கு ஒருமணிநேரங் கழித்துக்கொண்டே போவதால் ஆசான் நமதுகருத்தையறிந்துக்கொண்டு அதுமுதல் நம்மை எப்போதும் யெதிர்பார்க்கமாட்டார் நாம் அவரிடம் போகாமலிருப்பதற்கு இதுவேநல்ல தந்திரமென்றுர் அதற்குஅப்பனையங்கார் ஓ குப்பனையங்காரே! நாமிந்த ஆசானையடுப்பதற்கு முன்னம் எந்தஸ்திதியினி லிருந்தோம் இந்த ஆசானையடுத்தபின்பு எந்தஸ்திதியினிலிருக்கின்றேம் இதையோசியாமல் ஆசானுக் கிரண்டகஞ்செய்யயோசிப்பது ரௌரவாதி நரகத்தை யடைவதற்கேயாம் மேலும் உபகாரஞ் செய்தவனுக்குப் பதிலுபகாரஞ்செய்வது அத்தனைச் சிறந்ததாகமாட்டாதுஅபகாரஞ் செய்தவனுடைய குற்றத்தைப் பாராட்டாமல் அவனுக்கு உபகாரஞ் செய்யுமவனே கல்வியிற் றேர்ந்தவனும் புத்திகூர்மையுடையவனு மாகுமென் றுநீதிசாஸ்திரமுறையிடுவதால் கேவலமானஸ்திதியினிலிருந்துக்கொண்டு அன்னந் தண்ணீருக்கு மெத்த யிடுக்கண்பட்டு நம்மை யாதரிப்பவரொருவருமின்றி தன்னந்தனியே புலம்பிக்கொண்டிருந்த நாம் அந்த ஆசானையடுத்த பின்பன்றே நமக்குப்பசியார அன்னமும்வஸ்திராபரணதிகளும் மாடு கன்று வீடு மனைவி மக்கள் பந்துக்கள் மித்திரர்களு முண்டாயினர்கள் இந்த ஆசானை யடுக்காமுன்னம் நம்மை யாரேனும் இங்கே வாருமென் றழைத்தவர்களு முண்டோ? ஒருவருமில்லேயே, எல்லா சம்பத்துகளும் ஆசானல் நமக்குண்டாகி அதை நாமனுபவித்துக்கொண்டுச் சுகமாகவிருப்பதை யெண்ணிப் பாராமல் அவரைமறந்தும் அவருக்குத் தொண்டு செய்யாமலும் வீண்காலங் கழிப

போமாகில் முன்போல நாம் யீனஸ்திதியை யடையும்படியாக நேரிடுமென்று சொல்லினர்.

இப்படிக்குச் சொல்லிய அப்பணையங்காரை நோக்கிக் குப்பணையங்கார் சொல்லுகிறார் கேளும் அப்பணையங்காரே நீர்சொல்லுவது மெத்த மூடத்தனமேயாம் அதெப்படியெனில் உலகத்தினி லொவ்வொருவருமியற்றிய புண்ணியத்திற்குத் தக்கபடி ஜென்மமும தனகனக வஸ்திவாகனாதிகளும் வந்தணுகும் பாபத்திற்குத் தக்கபடி தரித்திரமும் பொய்கொலை களவு காமம் கள்ளென்னும் பஞ்சமாபாதகங்களும் வந்தணுகுமென்று சாஸ்திரங்கள் முறையிடுவதை நாம்பார்த்துப் படித்திருந்தும் க்ஞானமின்றி ஆசானால் நமக்குச்சகல பாக்கியங்களு முண்டாயிற்றென்று நீசொல்லுவது அறிவீனமேயாம் ஆகையால் ஒருவராலே மற்றொருவன் தனகனவானாகிறானென்பதுபொய்யே அவன் பூர்வத்திற்செய்த புண்ணியவசத்தினா லுண்டாகுமென்பது மெய்யே இதை நீசிறிதேனு முணராமல் சொல்லியது நீதியோ மேலும் யான் நாளதுமுதற்கொண்டு தினந்தோறும் ஒவ்வொருமணிநேரங் கடந்தே ஆசானிடம்போகிறேன் அப்படியான் போவதால் ஆசானுக்கென்மீது வெறுப்புண்டாகி என்னைக் கனவிலும் நினைக்கவேமாட்டார் பின்புயான்யென்னிஷ்டப்படிக்கி வீட்டிலேதானே சுகமாக விருப்பேன் நீர் வேணுமானால்தினந்தோறும் ஆசானிடஞ்சென்று தொண்டுசெய்துக் கொண்டிருந்துவாருமென அதற்கு அப்பணையங்கார்குப்பணையங்காரை நோக்கி ஓகுப்பணையங்காரே! நீசொல்லுவது சரியே ஆயினுமுமக்கித்தனை அவசரமாகாது படிப்படியாயல்லவோ ஏறவேணும் அதைவிட்டுக் கீழ்ப்படியினிலிருந்து மேற்படியினிலெப்படி கால்வைத்தேறுவது அப்படியேயேறினால் தலைகீழாய் பூமியின்மீது விழுந்துகாயம் படலாகும் கிரமமாகப் படிப்படியாக யேறினால் சுகமாகமேலந்தஸ்தைச் சேரலாம் ஆகையால்நீஅவசரப்படாமல் நானெப்படி ஆசானிடம் போகிறேனோ அதுபோல நீயுமென்பின் வந்துக்கொண்டேயிருந்து எப்போது யானின்றுப் போகிறேனோ அப்போதுநீயும் நின்றுவிடக்கடவாயென்று சொல்லக்கேட்டுக் குப்பணையங்காருஞ் சம்மதித்திருக்க அப்பணையங்கார்முன்னுதாக ஆசானிடஞ் சென்றார்.

அப்போது சாங்கதேவர் அப்பணையங்காரை யழைத்து லிங்கஞ் செய்வதற்கு மண்வேண்டுஞ் சீக்கிரங் கொண்டுவரக் கடவாயென்று நேமித்தார் அந்தப்படியேயப்பணையங்காருஞ் சொம்பொன்று கைக்கொண்டுசென்று தபதீநதியை யடைந்து மண்ணைச்சேர்த்துச் சேர்த்து எடுத்தார் அதுமணலாகியதால்லிங்கஞ் செய்வதற் குபயோகப்பட மாட்டாதென்றும் மணலைக்குவித்தாகிலும் லிங்கமாக பாவித்துப் பூசைமுடித்துக் கொள்ளுவாரென்றுன்னி சொம்பினில் மணலை வாரிப் போட்டுக்கொண்டிருந்தார் இதற்குள் குப்பணையங்கார் ஆசானிடம் வந்துபணிந்து ஓசுவாமி! அடியேனுக்கென்ன கட்டளையென்றார் அதற்குச் சாங்கதேவர் ஓஐயா குப்பணையங்காரே! அப்பணையங்கார் மண்கொண்டு வருகிறேனென்று சொல்லிப்போய்வெகுநாழிகையாயிற்று இன்னுமவர் வரக்காணோம் நீயாகிலுஞ் சென்று அப்பணையங்காரைக் கண்டு சீக்கிரமழைத்துக்கொண்டு வாருமென்று கட்டளையிட்டனுப்பினார் அந்தப்படியே குப்பணையங்காருஞ் சென்று தபதிநதிக்கரையை யடைந்து அங்குமணலைவாரி சொம்பினிற் போட்டுக்கொண்டிருக்கும் அப்பணையங்காரைக்கண்டு ஓ அப்பணையங்காரே! உம்மைநமதாசான் சீக்கிர மழைத்துக்கொண்டுவரச் சொன்னாரென அதற்கு அப்பணையங்கார் ஓ குப்பணையங்காரே! ஆசான் என்னை லிங்கஞ்செய்வதற்கு களிமண் கொண்டுவரச் சொன்னார்யெங்கும் அகப்படவில்லை மணலையாகிலும் யெடுத்துக்கொண்டு போனால் லிங்கத்தைப்போல செய்து இன்றைவதினப் பூசைநடந்துவிட்டால் நாளைய தினங் களிமண்ணிருக்கு மிடத்தைக் கண்டுபிடித்து எடுத்துக்கொண்டு போகலாமென்றுகருதி மணலைவாரிச் சொம்பின் நிறைபப்போட்டு சொம்பைஎடுத்துக் கொண்டு போகலாமென்று என்னால்கூடியப்பிரயத்தினஞ் செய்தபோதிலுஞ் சொம்பு நதியினில் ஒட்டிக்கொண்டு வரவில்லை இதற்குநானென்ன செய்வேனென்று விசனப்படும் அப்பணையங்கார் அருகினில்குப்பணையங்கார்சென்றுத்தானும் அச்சொம்பை தன்வலுவுள்ளமட்டும் வேண்டிய கஷ்டப்பட்டுத் தூக்கியும் சொம்புவராததால் அக்குப்பணையங்காருஞ்சற்றுலோசித்துக் கொண்டிருக்கையில் அந்தச் சொம்பானது லிங்காகாரமாகக் காணப்பட்டது அதைக்கண்டு இருவரும் மெத்தசந்துஷ்டராகிஇனிநமக்குக் கஷ்டமில்லை இந்தலிங்கத்தை எடுத்துக்கொண்டுபோய் ஆசானிடத்தில் கொடுத்தமாத்திரத்தி லவர்சிரமமில்லாமல் சீக்கிரம் பூசைமுடித்துக்கொள்ளுவாரென்றுக்கருதி இருவருஞ்சேர்ந்து லிங்கத்தைத் தூக்கியும் அந்தலிங்கமானது இவர்கள்கைக்கு தூக்கியும் அசைத்தும் பலவித சிகிச்சைகள்செய்தும் அந்தலிங்கத்தையும் எடுக்கமுடியாமல் மெத்தக்கவலை கொண்டவர்களாகி இருவரும் ஆசானிடம் வந்துபணிந்து ஓசுவாமி! நாங்கள் களிமண்ணுக்காக வெகுதூரமெல்லாந் தேடித்திரிந்தும்களி

மண் அகப்படவில்லை தபதிநதியிலிருக்கும் மணலையா கிலுங் கொண்டுபோனால் லிங்காகாரமாக மணலைச் சேர்த்து இன்றையதினம் பூசைநடந்துவிட்டால்நாளை யத்தினம் பார்த்துக்கொள்ளலா மென்று யோசித்து மணலைவாருகிறபோது அம்மணலுமொரு லிங்கமா கத் தோன்றியது அதைக்கண்டு நாங்கள்மெத்த சந் தோஷித்து நமக்குலிங்கமே அகப்பட்டதே நாளைய தின முதற்கொண்டு களிமண தேடவேண்டிய தில்லை யென்றுக்கருதி அந்தலிங்கத்தைத் தூக்கிப் பார்த் தோம் அதுவும் எங்களுக்குத்தூக்கவும் அசைக்கவும் முடியாமற் போனபடியால் நாங்கள் மெத்தகஷ்டப் பட்டுவந்தோமென அதற்கு சத்குருநாதன் மெத்த வும் சந்தோஷித்து தபதிநதியினி லுங்களுக்கு லிங்கா காரங் காணப்பட்டபடியால் நீங்களிருவரும் மெத்தப் புண்ணியவான்களாகும் ஆகையால்அந்த லிங்கமிருக் குமிடத்தினி லென்னைக் கொண்டுபோய்விடுங்களென அவர்களும் இன்றோடிந்தகஷ்டம் நம்மைவிட்டுநீங்கிய தென்றுக்கருதிச் சத்குருநாதனை யழைத்துகொண்டு போய் தபதிநதி நடுவினிலிருக்கும் லிங்கத்தினருகில் விடுத்தார்கள். அவரும் அந்தலிங்கத்தைத் தன்கரங்க ளால் தடவிப்பார்த்து சந்தோஷித்து உடனே அந்த லிங்கத்துக்கு அபிஷேகஞ்செய்வித்து ஆடையபரண திகளால் அலங்காரஞ்செய்துதூபதீபநைவேத்தியமெ னுஞ் சோடச உபசாரங்களுஞ் செய்து முடிக்க உட னே சீஷர்கள் சத்குருநாதனை யழைத்துக் கொண்டு போய் அவரிருப்பிடத்தினில் விடுத்து அவருக்குஅன் னபனுதிகளை யுதவினார்கள் அப்போதந்த சாங்கதே வர் ஏதோ சொம்பைக் கொடுங்களென்று கேட்க அதற்குசீஷர்கள் ஓசுவாமி தபதிநதி மருத்துவங்களை ச்சொல்லி அந்நதியினில்வைத்த சொம்பு நதியைவிட் டுப் பெயராமல் ஒட்டிக்கொண்டிருக்கின்ற தென்று சொல்லுஞ் சீஷர்கள் வசனத்தைக்கேட்டு சாங்கதே வர் அவர்களைநோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

கேளுங்கள் சீஷர்களே! நீங்களிந்த லிங்கத்தை எத்தனைநாளாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறீர்களெ ன அவர்களதற்கு ஓசுவாமி! இந்தலிங்கத்தைஇப்போ தே கண்டோம் இதற்கு முன்ன மெத்தனை தரமோ அவ்வழியாசப் போயிருக்கின்றோம் ஒருநாளும் நாங் களிந்த லிங்கத்தைக் கண்டதேஇல்லை இப்போதேஎங் கள் நேத்திரங்களுக்குக் காணப்பட்டதென்று சொல் லுகையில் சாங்கதேவர் லிங்காகாரமாக யிருக்குஞ் சாம்பவமூர்த்தியை நோக்கி யானேபெரும்பாவி என் னுடைய பக்திக்குநீரும் இந்நதியின்நடுவினின் தோ ன்றப்பட்டீர். இப்படிப்பட்ட தேவரீர் சதாகாலமும் அடியேனுக்கு சேவைகொடுத்து இவனை புனிதனாகச் செய்யும் நீலகண்ட மகாதேவா என்று தோத்திரஞ் செய்து உடனே அந்தலிங்கத்துக்கு வடவேஸ்வரமெ ன்று நாமமிட்டுத் தீர்க்கமுடன் விழுந்து சாஷ்டாங்க தெண்டனிட்ட மாத்திரத்தினிலந்த சாங்கதேவருக்கு அந்தகனென்பது நீங்கிக்கண்கள் காணப்பட்டதுஅப் போதந்த சாங்கதேவர் வடவேஸ்வரலிங்கத்தைக்கண் களாரக்கண்டுப் பரவசமடைந்துஞ் சிஷர்களைநோக்கி ஓ அப்பணையங்காரே! குப்பணையங்காரே! இனியுங்க ளுக் கென்னிடம் யாதொருவேலையுமில்லை சுகமாகஉங் களுங்கள் வீட்டையடைந்து நாளைமுதற்கொண்டுஉங் களுக் கென்னுடைய தொண்டுசெய்யவேண்டாம் உங் கள் வீட்டுக்காரியங்களிலும் வர்த்தகத்தினிலும் மெத் தச்சிரத்தைவைத்துக் கொண்டிருக்கக் கடவீர்கள். போய்வாருங்களென்று விடைதரப் பெற்றுக்கொண் டந்த சீஷர்களிருவரும் இன்றோடு நமக்கெந்தகஷ்ட மும்இல்லாமல் வீட்டினிலிருந்துக்கொணடு வர்த்தகஞ் செய்வதற்கு நிம்மதியா யிருக்குமென்று கருதிக்கொ ண்டு சத்குருநாதனைப் பணிந்துத் தங்கடங்க ளகஞ் சேர்ந்திருந்தனர்கள.

இப்படிக்கிவர்க ளிருக்கையில் அநேக ஜெனங் கள் சாங்கதேவர் மருத்துவத்தைக்கேட்டு அவரிடத் திற்குவந்து கண்டுபணிந்துப் பலபல பிரார்த்தினைகள் செய்துக்கொண்டு சென்று அக்கோரிக்கைக ளெல்லா மனுகூலப்பட்டு வருவதால் எங்கும் பிரசித்தியான கீர்த்திப் பிரகாசித்துக் கொண்டிருந்தனர் பின்பொ ருகாலத்தினில் ஒருவர்த்தகன் அபாரமான திரவிய த்தைச் சிலவுசெய்து மடமொன்று கட்டிமுடித்து அ ன்னதானங்கள் மிதமின்றிச் செய்துக்கொண் டிருப்ப தால் இவ்வர்த்தகனுடைய கீர்த்திப்பிரதாப மானது தசதிசைகளெங்கும் நிறைந்து ஞானபக்திவைராக்கி யங்கள் சிறந்து சாக்கதேவரை யடுத்துப் பிரியவசன ங்கள் பேசியவரை யந்தமடத்தினில் வாசஞ்செய்துக் கொண்டிருக்கும்படி வேண்டிக் கொண்டான் அதற் கந்த சாங்கதேவர் ஒப்புக்கொண்டு அந்தமடத்தினிற் சேர்ந்து வடவேஸ்வரனை தினந்தோறும் ஆராதனை செய்துக்கொண்டு அடயோகத்திற்குத் தக்கசாதனங் களைச் செய்துக்கொண்டப்போது அஷ்டாங்கயோக க்களையுஞ்செய்ய உத்தேசித்து நாளுக்குநாள் விருத்தி யாகும்படி சாதனஞ்செய்து அதனால்சித்தி யடைந்து ஏமன் தன்னிடம் வராமலிருக்கும்படி வெகுவைராக் கியத்தை யனுசரித்து ஆயிரத்திநானூறு வருடங்கள் அவ்விடத்தில் பிழைத்திருந்தார் மேலும்சித்திரவிசித் திரமாகும் சித்திகளை ஜெனங்களுக்குக் காட்டிக்கொ

ண்டும் அந்ததானே வாசம்பண்ணிக் கொண்டிருக்கையில் இவருக்கு ஆயிரத்திரானூறு சிஷியர்கள் தன்னைச்சூழ்ந்திருக்க மெத்த மகுத்துவ முடையவராகவிருக்கையில் பைட்னிபுரத்திலிருந்தொரு பிராமணன் யாத்திரை செய்துக்கொண்டே அங்குவந்து சாங்கதேவரைக் கண்டுபணிந்து எழுந்து சாம்பவமூர்த்தியைப்போல விளங்கும் அந்த சாங்கதேவருடையரூபத்தையும் அழகையும் பார்த்து மெத்த ஆனந்தத்தையடைந்து அநேகவிதங்களாய் தியானஞ்செய்து மறுபடியும் விழுந்துபணிந்து எழுந்து கைகூப்பிக்கொண்டு நிற்கும் பிராமணனைநோக்கிச் சாக்கதேவர் வினவத்தொடங்கினர்.

ஓபிராமணரே தங்களூரென்ன பேரென்னஇங்கு தாங்கள் வந்தகாரணமென்ன தாங்களிருக்கும் ஊரிலென்னவிசேஷம் இதுகளைச் சொல்லவேணுமென்று வினவ அதற்கந்தபிராமணன் ஓசுவாமியான்வசிப்பது பைட்னிபுரம் என்பேர் நரசிங்கவிட்டலன் யான்யாத்திரை செய்யும்பொருட்டுப் புறப்பட்டு வெகுதேசங்களையெல்லாம் பார்த்துக்கொண்டும் அங்கங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியும் எம்பெருமான்களைசேவித்தும் சாதுசத்புருஷர்களை தெரிசித்துக்கொண்டும் இங்குவந்து தங்களுடைய கீர்த்தியைக்கேட்டுத் தரிசித்துப் போகவெண்ணி தங்களிடம் வந்தேன் அன்றியும் பைட்னிபுரத்திலில் சாதுவொருவரிருக்கின்றார் அவர்யாருடைய புதல்வரென்றால் விடோபா வென்றோர் சன்னியாசியிருந்தார் அவர் கர்மானுசாரத்தினால் ஒருகன்னிகையை மணந்து அம்மங்கையினிடமாக நான்குபிள்ளைகளைப் பெற்றார் அந்த நால்வரில் ஞானதேவரெனனும் புண்ணியவான் மகிஷத்தினுடைய வாக்கினால் வேதங்களைச் சொல்லிவித்தார் இவ்வுலகின்கண் இந்தவிந்தையைப் போல நானெங்கும் கண்டதில்லை இதுவே யெங்களூரினில் நடந்தவிசேஷமெனக்கேட்டு சாங்கதேவர் மெத்த சந்துஷ்டராகி அந்த ஞானதேவருடைய புறப்புவளப்பு முதலானதுமுணர்ந்து அவர்விஷ்ணு அம்சமேயாகுமென்று தன் மனதினிலெண்ணி யாத்திரைசெய்துக் கொண்டுவந்த நரசிங்க விட்டலனெனும் பிராமணனுடன் கூடிக்கொண்டு இந்த சாங்கதேவர் பைட்னிபுரத்தை யடைந்து ஞானதேவரைக் கண்டுபணிந்து ஓசுவாமி அடியேனுக்கு மந்திரோபதேசஞ் செய்யவேணுமென்று வெகுவாக வேண்டிக்கொண்டார் இப்படி தன்னைவேண்டிக்கொள்ளும் சாங்கதேவரை நோக்கி ஓசாங்கதேவரே மந்திரோபதேசஞ் செய்வதென்றால் எப்படிப்பட்டவர்களுக்கு உபதேசஞ்செய்ய வேண்டுமென்றும் எத்தனைவருடம் பரிசோதித்து ஒருவனுக்குபதேசஞ் செய்யவேணுமென்றும் உனக்குத்தெரியுமா தெரியமாட்டாது அந்தவிவரத்தைச் சொல்லுகின்றேன் நீயதைச் சற்றுநேரங் கவனித்துக்கேழ்க்கக் கடவாயென்று சொல்லத் தொடங்கினர்.

கேளுஞ் சாங்கதேவரே உலகத்திலொருவன் சத்குருநாதனையடுத்து அவர்மனங்களிக்கும்படி பன்னிரெண்டு வருடகாலம் தொண்டுசெய்துக் கொண்டிருப்பனேயாகில் குருநாதன் அவனது குணகுணங்களையறிந்து சாதுசற்குணனாக யிருப்பனேயாகில் அவனுக்குபதேசஞ் செய்விப்பது மெத்தஅருமை அப்படிக்கிருக்க நீயொன்றுமே தெரியாதவனும் சாதுசங்கத்தினில் பழகாதவனுமாக விருக்கின்றாய் இப்படிப்பட்ட உன்னைப் பனிரெண்டுவருடம் சோதனைசெய்தபிறகே உனக்குத் திருமந்திரோபதேசஞ் செய்ய வேண்டிய விதியிருக்க அதைத்தவிர்த்துனக்கெப்படி உபதேசஞ் செய்வேன் என்று சொல்லக்கேட்டுச் சாங்கதேவர் ஓசுவாமி பனிரெண்டுவருடகாலம் தொண்டுசெய்தும் எப்படிப்பட்ட குணமுடையவனுக்கு மந்திரோபதேசஞ் செய்யவேண்டுமென்ற விதியிருக்கின்றது அதுகளை யிவ்வேழையேன் தெரிந்துக்கொள்ளும்படி அருள்புரியவேணுமென்றுப் பிரார்த்திக்க அதற்குஞானதேவர் சாங்கதேவரை நோக்கி இந்திரனுடையசாபத்தினா லிவ்வுலகினில் சாங்கதேவரென்று கொண்டாடப்பட்ட மருத்சணனே நீர்கொண்ட சந்தேகந்தீரும்படிச் சொல்லுகின்றேன் கேளும் அவனெப்படிப்பட்ட குணவானாக விருக்கவேணுமெனில் (கொக்கைப்போலிருப்பன்) என்றால் ஓடிமீனோடி யொருமீன்வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு என்றவாக்கியத்துக்கிணங்க கொக்கானது தண்ணீர்ஓடுகிற கால்வாயின் கரைமீது வாடிவதங்கியதுபோ லசைவத்திருந்துசிறியமீன்களை யெல்லாம் விடுத்துப் பெரியமீனைப் பிடித்துக்கொள்வது போல உத்தமபுருடனானவன் அற்பமந்திரங்களை யெல்லாம் விடுத்துப்பெரிய திருமந்திரத்தை யனுஷ்டிக்கும்படி யானவனும் (கோழியைப்போலிருப்பன்) என்றால் கோழியானது குப்பையைக்கிளறி அசத்தையெல்லாம் விடுத்துச் சத்தாகிய ஜீவரத்தினத்தைப் பொறுக்கிப புசிப்பதைப்போலச்சாத்திரக் குப்பையை யெல்லாந்தள்ளி சாரமான பொருளைக்கிரகித்து மனத்திற் பதியவைத் திருப்பவனும் (உப்பைப்போலிருப்பன்) இன்னுமெப்படி யிருப்பானெனில் உப்பானது தன்னுடைய உருவத்தைப் போக்கித் தண்ணீரைப் போலாகி அன்னியர்களுக்கு இனிப்பை யுண்டாக்குவதைப்போல தன்னுடைய

பிராணனைப் போக்கி யாகிலும் அன்னியர்களுக்குக் கஷ்டமென்பதில்லாமல் சுகமுண்டாகச் செய்பவனும் (உம்மைப்போலிருப்பன்) என்றால் ஒருபிராமணன் அடுத்தக்கிராமத்தினில் ததியாராதனை நடக்கிறதென்று கேழ்விப்பட்ட தன்றியும் சாதுவென்றால் எப்படிப்பட்ட குணமுடையவனோ அதைதெரிந்துக் கொள்ளவேணுமென்றுங் கருதி யிருந்தவனாதலால் ததியாராதனை நடக்குமிடத்திற்குச் சென்றாலங்கு அநேக பெரியோர்கள் வந்திருப்பார்கள் அவர்களைக்கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாமென்று யோசித்து அப்பிராமணன் ததியாராதனம் நடக்கும் கிராமத்திற்குச் சென்று அந்தயிடத்தையணுகி நடந்துவந்த இளைப்பினாலவ்வீட்டுத் திண்ணையின்மீது சற்றுநேரம் படுத்து இளைப்பாறிப் பிராமணனுடன் ததியாராதனஞ் செய்யத்தானும் போகிறபோது உள்ளேயிருந்தொரு பிராமணன் இப்பிராமணனைப் பிடித்து வெளியிற்றள்ளி மைத்தவர்களை யெல்லாம் உள்ளேவிட்டான் அப்போதந்தப் பிராமணன் கோபங்கொள்ளாமல் திண்ணையின்மீதே யிருந்தான் இப்படியிரண்டுமூன்றுதரந்தள்ளியும் பிராமணன் அவ்விடத்தைவிட் டகலாமலுஞ் சினங்கொள்ளாமலு மிருந்தான் அப்போது ததியாராதனைசெய்யக் கடைசிபந்தியிலிப் பிராமணன் உள்ளேசென்று முன்னமொருதிரைக்குள்ளுட்கார்ந்தான் அங்கிருந்த பிராமணர்கள் இப்பிராமணனைக் கண்டு இவனாரோ பிராமணன் எங்களுடன் ஆராதனை செய்வதற்குக்கூடவேயுட்கார்ந்தான் இவனுடைய ஆசாரம் சீலம் இதுகளை நாங்கள்கண்டதில்லை ஆகையால இவனுடன் நாங்கள் சமமாக உட்கார்ந்துப் புசிக்கமாட்டோமென்றுசொல்லி யெழுந்தார்கள் அதைக்கண்டு ததியாராதனை நடத்துமவர் இப்பிராமணனை யழைத்துக்கொண்டுபோய் வேறொருதிரையி லுட்காரவைத்தார் அங்கிருந்தப் பிராமணர்களும் முன்திரையிலிருந்த பிராமணர்கள் சொல்லிபதைப் போலச் சொன்னார்கள் இந்தப்படியே ஒவ்வொருதிரையி லுட்கார்ந்திருக்கும் பிராமணர்களெல்லோருஞ் சொல்லியபடியால் ததியாராதனை நடத்திவைக்கும் யெஜமானன் இப்பிராமணனைப் பிழைக்கடைக் கழைத்துப்போய் அங்குட்காரவைத்துத் தளிகைமுதலானதுகளும் பரிமாறினார் அதைக்கண்டப் பிராமணன் சிறிதேனுங் கோபமின்றிப் பிரசாதத்தை ஸ்வீகாரஞ்செய்து அங்கிருக்கும் எஜமானாகிய பிராமணனைநோக்கி ஓசுவாமி! சாதுவென்றால் அவன் யெப்படியிருப்பானென்று கேழ்க்க அந்தஎஜமானாகிய பிராமணன் இப்பிராமணனை நோக்கி உன்னைப் பலதிரைகளிலும் ததியாராதனஞ் செய்யும்படி உட்காரவைத்தேன் ஒவ்வொருதிரையிலிருந்த பிராமணர்கள் யாவரும் உம்முடன் புசிக்கச் சம்மதியற்றவர்களானார்கள் அதையறிந்து யானும்மை அழைத்துக்கொண்டுபோய் பிழக்கடையினிலுட்காரவைத்துப் பிரசாதம் பரிமாரியும் உனக்குமான அவமானமென்பதெப்போதற்றுப் போயிற்றோ அப்போதே உம்மைச் சாதுவென்றே சொல்லத்தகும் அன்றியும் உன்னை இத்தனை திரைகளைவிட்டும் எழுப்பி எழுப்பி உட்காரவைத்த விஷயத்தினிலுனக்குக் கோபமெனபது அணுவளவேனு மில்லாமையினால் அன்றியும் மெத்தசுகமான இடங்களெல்லாமிருக்க அவ்விடங்களிலுன்னை ஒக்காத்திப் பிரசாதம் பரிமாராமல் பிழக்கடையினில் உம்மை ஒக்காத்திவைத்துப் பிரசாதம் பரிமாறினபோதாகிலும் உமக்குக் கோபம் வருமென்று யோசித்தேன் அப்போதும் உமக்குக்கோபம்வராமல் வெகுசந்தோஷமாய் பிரசாதத்தை ஸ்வீகரித்தபடியால் சாதுயெப்படி யிருப்பனென்றால் உம்மைப்போ லிருப்பனென்று சொல்லக்கேட்டு அப்பிராமணனுக் கிருந்த சந்தேகநிவர்த்தியாகி வெகுசந்தோஷமாகப் போயினார் ஆகையால்ஓசாங்கதேவரே இப்படிப்பட்ட சாதுசத்புருடனை யன்றோ பாகவதனென்று சொல்லத்தகும் என்றுசொல்லக்கேட்டு அந்தச்சாங்கதேவர் வெகு சந்தோஷித்தராகி ஞானதேவரைப்பார்த்து ஓசுவாமி அடியேன்சாதுக்கள்சங்கமஞ் செய்தவனுமல்லன் வாசிப்பிலுந் தேர்ந்தவனுமல்லன் ஞானபக்தி வைராக்கியங்களிற் றெளிந்தவனுமல்லன் யாதொன்றுந் தெரியாதநிர்மூடனுக்கு சாந்தகுணமானது எந்தகாலத்தினில் வருவது சாந்தமென்பதை யோசிக்கிறபோதே மெத்த அருமையானதாகவிருக்கின்றது மேலும் விஷ்ணு அம்சம்பெற்ற தேவரீரையடியேன் சேவித்தமாத்திரத்தினி லெல்லாநற்குணங்களுந் தனக்குத்தானே நாயேனுக் குண்டாவதற்கு யாதொரு தடையுமிராது ஆகையால் மெத்தவுங் கிருபைசெய்து திருமந்திர உபதேசஞ்செய்யவேணும் சுவாமியென்றுப் பணிந்தார் அப்படிபணிந்த சாங்கதேவரை ஞானதேவர் இருகரங்களாலும் வாரியெடுத்துச் சொல்லத் தொடங்கினார்.

கேளும் சாங்கதேவரே திருமந்திரோப தேசஞ் செய்வதென்றால் எளிதானதல்ல அதையோசித்துப் பாராமல் நீர்தீவரமதியுடையவராக விருக்கின்றீர் எத்தனைவிதத்திற் சொல்லியபோதிலும் நீர்மெத்த துரிதப்படுகின்றீர் இதற்கே சாந்தமெனபதில்லாமல் வெகு துரிதப்படுவது நீதியல்லே ஆகிலும் இனியொருயோசனை சொல்லுகின்றேன் அதைப்போல செய்வீரேயாகில் உடனேயானுமக்கு உபதேசஞ் செய்கின்றேன்

அதென்னவெனில் உமக்கு ஆயிரத்திநானூறு சீஷர்களிருக்கின்றார்க ளல்லவா அவர்களிலொரு சீஷனையழைத்துவந்து பொலிகொடுப்பீரேயானால் உமக்குபதேசஞ் செய்வதற்கு யாதொருதடையுமில்லை யென்ற ஞானதேவரை நோக்கிச் சாங்கதேவர் சொல்லுகின்றார் ஓசுவாமி திருமந்திரோபதேசஞ் செய்வதற்கு நரபொலி கொடுக்கும்படியாக சாஸ்திரங்கள் முறையிடுகின்றதா அல்லது தாங்களே சொல்லுவதா இப்படி யாராகிலு நரபொலிகொடுத்துத் திருமந்திரோப தேசஞ் செய்துக்கொண்ட துண்டா யானிதுபரியந்தம் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை அன்றியும் திருமந்திரத்திற்காக நரபொலிகொடுப்பது தோஷமல்லவோ எந்தவிஷயத்திற்கும் ஜீவயிம்சை செய்யக்கூடாதென்றும் அப்படியல்லவென்று நரபொலி கொடுத்தால் ரௌரவாதி நரகத்திற்கு ஹேதுவாகுமேஎன அதற்கு ஞானதேவர் ஓசாங்கதேவரே அசுவமேதயாகம் நரமேதயாகமென்று சொல்லப்பட்ட யாகத்திற்கு ஜீவஇம்சைசெய்து மந்திரலோபங் கிரியாலோப மின்றி யாகத்தைப் பூர்த்திசெய்து தேவர்களுக்கும் மும்மூர்த்திகளுக்கும் எந்ததியைக்கொண்டு அரசர்களும்முனிவர்களும் அவிர்ப்பாகங்கள் கொடுக்கின்றார் அதுஜீவஇம்சையாகுமோ ஆகாததுபோல்நீயும் திருமந்திரோபதேசஞ் செய்துக்கொள்ளும் பொருட்டு நரபொலி கொடுத்தாலன்றி யானுனக் குபதேசஞ் செய்யேன் என்றுக் கண்டிப்பாகச் சொல்லக்கேட்டுச் சாங்கதேவர் சம்மதித்து ஞானதேவரிடம் விடைபெற்றுக்கொண்டுநடந்து வடவேஸ்வரத்தையடைந்து அங்குதான் வாசஞ்செய்துக் கொண்டிருந்த மடத்திற்குட்சென்று அங்கிருக்கும் ஆயிரத்திநானூறு சீஷர்களையும் அழைத்துச் சொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் சீஷர்களே பைட்ணிபுரத்தினில்விஷ்ணு அம்சப்பெற்றுப் பிறந்திருக்கும் ஞானதேவரிடத்தினில் யானுபதேசஞ் பெற்றுக்கொள்ள வெண்ணி அங்குசென்று அந்தஞானதேவரைச் கண்டுபணிந்து ஓசுவாமி அடியேனுக்குத் திருமந்திரோபதேசஞ் செய்யவேணுமென்று வேண்டிக்கொண்டேன் அதற்கவரென்னை நோக்கிச் சொல்லியதாவ தென்னவெனில் உமக்கு ஆயிரத்திநானூறு சீஷர்களிருக்கின்றார்களல்லவா அவர்களில் ஒருவனைக்கொண்டுவந்து என்முன்னம் பொலிகொடுப்பையே யாகில் உனக்குபதேசஞ் செய்வேனென்று சொன்னார் யானுமந்தப்படியேஒரு சீஷனையழைத்துவந்துபொலிகொடுக்கின்றேனென்று சொல்லிவந்தேன் ஆகையால் இத்தனைபேர்களில் யாரேனுமொருவர் பொலிக்குட்பட்டு என்னுடையசொல்லை அசத்தியமாகும்படிக்குச் செய்யாமல் சீக்கிரம் நாளையதினங்காலை பென்பின்வர சித்தமாகவேணுமென்றுசொல்லி ஸ்னானுட்டானங்களைமுடித்துச் சிலராகி லிங்கபூசைநடத்தி சீஷர்கள்உபசரித்தப்பிரசாதத்தை ஸ்வீகரித்து நிஷ்டைசாதித்துக்கொண்டிருந்தார் அப்போது ஆயிரத்திநானூறு சீஷர்களும் ஒன்றுகச்சேர்ந்து ஏகாந்தமானயிடத்தை நோக்கிச் சென்று மனிதசஞ்சாரமில்லாத ஓரிடத்தில் உட்கார்ந்து ஆலோசிக்கத் தொடங்கினார்கள்.

என்னவெனில் நமதரசன் நாளையதினம் உதயத்தினில் நம்மிலொருவனை அழைத்துக்கொண்டு போய் பொலிகொடுக்கக் கருதியிருப்பது உண்மையே இதிலெள்ளளவுஞ் சந்தேகமேஇல்லை இப்படி நரபொலி கொடுத்துத் திருமந்திரோபதேசஞ் செய்துக்கொண்டவர்களை எங்குங் கண்டதுமில்லை ஒருவர் சொல்லக் கேட்டதுமில்லை இதென்ன அநியாயம் எங்கே நடக்கும் இப்படிக்கிக் கிராதகனும்செய்ய மனதில்நினைக்கவுமாட்டான் இப்படிக்கிக் கொலைசெய்து திருமந்திரோபதேசஞ் செய்துக்கொண்டா பரகதியை யடைவது இப்படிக்கிச் செய்தால்தானா பரகதிகிடைக்கும் ஐயையோ இந்தவார்த்தை கேட்டதுமுதல்என்னபலமெல்லாம் பதறுகின்றதே ஆவியென்னுடலை விட்டுப் போனதுபோலாகின்றதே அப்பப்பா யிக்கொலைக் காரனுக் குட்பட்டுச்சென்று யான் பொலிக்காளாக மாட்டேன் நீங்களாரேனும் போங்களென்றான்இதைக்கேட்டு வேறொருவன் சொல்லுகின்றான் முன்னம் நாமெல்லோரும் ஆசானையடுத்துத் தொண்டு செய்ய நிச்சயித்து உடல்பொருளாவிகளை யவர் திருவடிகளுக்கு அர்ப்பணஞ்செய்திருக்க அதைமறந்து நீங்களிப்படி பேசுவதுஞாயமோ எப்போது உடல்பொருளாவிகள் மூன்றையுந் தத்தஞ்செய்து இம்மூன்றையும்ஆசானுக்கு தத்தஞ்செய்து விட்டோமோ அப்போதே இதுகள்மூன்றும் ஆசாரியனாதீனமாய்விட்டது இதையவரென்ன செய்துக்கொண்டாலுஞ் செய்துக்கொள்ளலாம் அப்படிக்கிருக்க நீர்சொல்லுவது ஞாயமோ இதையோசித்துப் பாராமல் மேல்வருந் துயரத்தையுங்கருதி நடந்துக்கொள்வதை விடுத்துப் பிடிவாதம் பேசுகின்றீர் அன்றியும் நன்று தீதுதெரியாமல் பேசுவது நீதியோ வீணிலேன் ஆசான்றிருவடிகளில் அபசாரப் படுகின்றீர்கள் வேண்டாம்வேண்டாம் முன்னமெப்படி ஆசானுக்குத் தொண்டுபுரிந்துக் கொண்டிருந்தோமோ அப்படி செய்திருப்பதே நீதியாகும் இந்த யோசனைப்படி நடந்துக்கொள்ளு மென்றான் வேறொருவா கண்களுக்குப் புலப்படாமல் ஓடிப்போ

னால் மெத்தநலமாக விருக்கின்றதென்றும் ஒவ்வொருவருந் தப்பிப்போகாமல் ஒரேவார்த்தையாகப் பேசிக்கொண்டு மடத்திற்குள்சென்று அன்றிரவைபோக்கிப் பொழுதுவிடியற் காலத்தினில் யாவருமெழுந்து ஓடிப்போய்விட்டார்கள் பொழுது விடிந்தவுடன் அந்தச்சாங்கதேவர் நிஷ்டைகலைந்து எழுந்துச்சீஷர்களை யழைத்தார் ஒருவரும் வராமற்போயினார்கள் அதை யறிந்துச் சாங்கதேவர் இவர்களெப்படி மடத்தைவிடுத்துப் போயினார்களோ என்றுமெத்த விசனமடைந்து இப்படிப்பட்ட சீஷர்களா நம்மைக் காப்பாற்றுவார்கள் நித்திரைசெய்துக் கொண்டிருக்கிற போது பெருத்தகல்லை நமது தலையின்மீது போட்டுக் கொன்றுவிடுவார்களன்றோ இப்படிப்பட்டக் கிராதகவெண்ணங் கொண்டவர்களென்று நாமறியாமலவர்களைச் சீஷர்களாகக் கொண்டோம் இப்படிப்பட்ட கெட்டவெண்ண மிவர்களிடமிந்தப்படி யிருப்பதினாலேதான் நம்மைப் பனிரெண்டுவருடஞ் சோதித்தபின்பே நமக்குத் திருமந்திரோபதேசஞ் செய்வேனென்றது இந்த அனுபவமெல்லாந் தெரிந்தவராகையால் ஆயிரத்திநானூறு சீஷர்களில் ஒருசீஷனைப் பொலிகொடுத்தால் திருமந்திரோபதேசஞ் செய்வேனென்றது இக்கொடிய பாவிகளெல்லாம் நமக்குச் சீஷர்களாகியிருந்து சமயத்தில் நமக்கு அவமானமுண்டாகச் செய்தார்களே இப்படிக்கிவர்கள் செய்வது தெரிந்தால் இவர்களைக்கிட்ட நாடவொட்டுவேனோ தெரியாமற்போயிற்றே இதற்கு நாமென்ன செய்கிறதென்றுப் பலவாறு யோசித்து மனதைச் சிதரவிடாமல் திடப்படுத்திக்கொண்டு இனியெவ்விதத்தினில் நாமந்த ஞானதேவராகும் சத்குருநாதனிடத்தினி லுபதேசம் பெற்றுக்கொள்ளப் போகின்றோமென்று சிந்தித்துக்கொண்டிருந்து உடனே ஆண்டவன் செயலின்படி யாகட்டுமென்றுத் திடங்கொண்டு பொருமைவகித்துத் தபதிநதியை நோக்கிச்சென்று காலைக்கடனாதும் ஸ்னானுட்டானங்களை முடித்துக் கொண்டிருக்கையில் ஞானதேவரங்குவந்து சாங்கதேவரைக் கண்டார் அப்போது சாங்கதேவர் ஞானதேவரைப் பணிந்து ஓசுவாமி! தங்களுடைய கட்டளைப்பின்படி சீஷனொருவனை யழைத்து வந்து பொலிகொடுத்து மந்திரோபதேசஞ் செய்துக்கொள்ளலாமென்று மெத்த சந்தோஷத்துடனிங்கு வந்து சீஷர்களையழைத்து திருமந்திரோபதேசம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு யாராகிலுமொருவர் ஞானதேவருக்குப் பொலியாகும்படி என்பின்வரவேணுமென்றுசொல்லி யானனிஷ்டையிலிருந்து விட்டேன் அப்போதந்த ஆயிரத்திநானூறு சீஷர்களும் எப்படியோடிப்போய் விட்டார்களோ யானறியேன் தேவரீருக்குச் சொல்லிவந்தபடி யடியேன் செய்விக்காமல் சொற்சோர்வுபட்டேன் யானவர்களைச் சீஷர்களென்று நம்பிக்கெட்டேன் அபசாரத்திற் குட்பட்டேன் அடியேனுடைய சுயக்ஞானமும் விட்டேன் என்று சொல்லியவர் திருவடிகளில் விழுந்துக் குய்யோமுறையோவென் றோலமிட்டழத் தொடங்கினார்.

இவ்வண்ணம் சீஷர்கள்செய்துப் போயினமோசத்தைச் சொல்லித் தன்திருவடிகளில் விழுந்து ஓலமிட்டழுகிற சாங்கதேவரைக் கண்டு ஞானதேவர்பூததயை பச்சாத்தாப மடைந்தவராகித் தன்கரங்களாலவரையெடுத்துப் பலநீதிவசனங்களையோதிச் சாங்கதேவருக் குண்டாகிய விசனத்தைமாத்தி ஐயாசாங்கதேவரே சொக்கமாகிய நல்லநீலக்கல்லொன்றே போதும் தனுக்குடமரகமாகிய கற்கள் ஒருகட்டின்னிறையயிருந்த போதிலுமது யோதுக்கு இப்படிப்பட்ட தனுக்குடமரகஞ் செய்யும்படியான ஒருகட்டுகற்களைப்பார்க்கிலும் சொக்கமாகிய நல்லநீலமணியொன்றே சிறந்ததல்லவா அதுபோல உமக்குமோசக் கருத்துடைய சீஷர்கள் ஆயிரத்திநானூறு பேர்களிருந்துமென்னப் பிரயோஜனமடைந்தீர் அவமானப் பட்டீரேயன்றி அவர்களாலுமக் குண்டாகிய சுகமென்ன ஆகையால் யானிதைதெரிந்தே துஷ்டர்களாகுஞ் சீஷர்களாரவை விடுக்கும்பொருட்டே எனக்கு ஒருசீஷனைப் பொலி கொடுக்கும்படி உம்மைக் கேட்டுக் கொண்டதற்குக் காரணமுமிதுவே இவர்களையோட்டும் பொருட்டே யான்செய்த தந்திரமாகுமிது அந்தக்கொடியவர்களாகிய சீஷர்களெப்போ தூர்மை விட்டு ஓடிப்போயினார்களோ அப்போதே உமக்கிவ்வுலகத்தினில் ஜெயகாலம் வந்ததாகிய தென்றெண்ணக் கடவாய் இனியவர்களைப்பற்றி நீர்விசனப்படவேண்டாம் இப்போதே யென்னுடன் புறப்பட்டு பைட்னிபுரத்திற்கு வருவீரேயாகில் உமக்கு யாதொரு தடையுமின்றி மந்திரோபதேசஞ் செய்கிறேனென்று சொல்லக் கேட்டு சாங்கதேவர் யென்றுமில்லாத சந்தோஷமடைந்து அந்த ஞானதேவரைத் தொடர்ந்தேசென்று பைட்னிபுரத்தைச்சேர்ந்து ஞானதெவருடைய வீட்டையடைந்து இருக்கிறபோது ஞானதேவர் சாங்கதேவரை நோக்கி சொல்லத் தொடங்கினார்.

கேளும் சாங்கதேவரே உலகத்தினில் பிரம்மசாரியாசிரமம் வானப்பிரஸ்த ஆசிரமம் சன்னியாசியாசிரமம் கிருகஸ்தாசிரமம் என்று சொல்லப்பட்ட நான் ஆசிரமங்களில் கிருகஸ்தாசிரமத்தை எப்படிப்பட்ட திடச்சித்தமுடையவர்களும் விடுப்பது மெத்த

வும் அரிதாகும் அப்படிப்பட்ட கிருகஸ்தாசிரமத்தை
வெகுயெளிதினில் நீக்கி ஏகாங்கிகளும் தங்கள் மனதி
னில் இன்னுங் கொஞ்சகாலம் கிருகஸ்தாசிரமத்தினி
லிருந்தும பின்பு சன்னியாசி யாசிரமத்திற் குடன்ப
டாமற் போய்விட்டோமே என்றுந் தங்களுக்குத்தா
ங்களே யோசித்துச் சபலசித்தர்களாக விருக்க நீர்
மெத்த திடசித்தராகி சந்நியாசி யாசிரமத்தை யடுத்
திருப்பது மெத்தவும் அரிதிலுமரிதாகும் இப்படிப்
பட்ட மேலாகிய ஆசிரமத்தையடைந்தும் மெத்தசில
ராகியுமிருக்கு முமக்குபதேசஞ் செய்வதற்குத் தடை
யுமுண்டோ உம்மிடத்திலிருந்த சிஷர்களை விலக்கும்
நிமித்தியந் தடை சொன்னதே யன்றி உம்மைப் பரி
சோதிக்க வேணுமென்றெண்ணித்தடைசொல்லியதல்
லவென்றுச் சாங்கதேவர் மனம் சந்தோஷ முண்டா
கும்படிப்பேசி உடனே மந்திரோபதேசஞ்செய்து அ
தற்குண்டாகிய மர்மங்களனைத்தையும் புகன்று அம்ம
ந்திரத்தைத் தன்னெரியிலேயே யனுட்டிக்கும்படிநே
மித்தும் ஒருமாதபரியந்தம் தன்கிருகத்தினி லேயே
வைத்துக்கொண்டும் பகவத்குணானு பவமாகுங் கீர்த்
தனைகளை சொல்லிக்கொண்டும் பாண்டுரங்கனையுபாசி
க்கும்விதிகளை யோதியும் ஐயா சாங்கதேவரே ஸ்ரீ
ஹரிநாமங்களை நாவினில் பொருந்தும்படியாகச்செய்
யுமென்றும் மனம் வாக்குக் காயமெனுந் திரிகரண
சுத்தியுடன் பக்திசெய்துப் பாடியாடி மிதமற்றப் பிரி
யத்துடனிருமென்றும் ஞானதேவர் சொல்லக்கேட்டு
அந்தப்படியே சாங்கதேவரும் பகவந்நாம சங்கீர்த்த
னங்களை மெத்தரசமாகப் பாடியாடியும் திருமந்திரத்
தைத் தியானஞ் செய்துக்கொண்டும் ஒருமாதகாலம்
வரையில் ஞானதேவர் வீட்டினிலிருக்கிறபோது ஞா
னதேவர் சாங்கதேவர் விரக்தியுடன் செய்யும் பக்தி
யைக்கண்டு மெத்த சந்தோஷித்து உமக்குவெகு சீக்
கிரத்திலேதானே முக்திபதவி கிட்டுமென்றுஞ் சொ
ல்லி ஆசீர்வதித்துப் போய்வாருமென்று விடைதரப்
பெற்றுக்கொண்டு அந்த சாங்கதேவர் வடவேஸ்வர
த்தையடைந்து அவ்விடத்திலேயே பகவத்குணானு
பவ கீர்த்தனைகளைப் பாடித் தன்னை மறந்தாடிக்கொ
ண்டு மிருந்தார்.

இவரிப்படிக் கிருக்கிறபோது அந்தவடவேஸ்வ
ரத்திற்குச் சமீபத்தில் நாராயணடோகி யெனுந்திவ்ய
த்தலத்தினில் பிரமகுலத்தினிற் பிறந்தவர் சதாகால
மும் உமாமயேசன் பக்தியிற்சிறந்தவர் துஷ்டர்களுற
வைத்துறந்தவர் ஏழைப்பரதேசிகளிடத்தினில் மனங்
கரைந்தவர் மூதோ பந்துயென்ற நாமம்பெற்றவர்
இவருக்குக் கற்பினி லுயர்ந்தவளும் கணவனுடைய
சொல்லுக்கு மறுத்துத்தாஞ் சொல்லாதவளும்மாதர்
களில் சிரோமணியுமாகி யாவருங்கொண்டாடத்தக்க
ருக்மாபாயியெனும் உத்தமமனைவி யொருவளுண்டு
இம்மாதுடன்கூடி மூதோபந்தானவர் இல்லறமேநல்
லறமெனக்கருதி இல்வாழ்க்கையி லிருக்கையில் இவர்
களுக்கு யெல்லாபாக்கியமு மிருந்தும் புத்திரபாக்கிய
மொன்றில்லாமையால் அனேகஉபவாசங்களிருந்தும்
தானதருமங்களைச் செய்தும் சத்திரம் நடையாயிமுத
லியதுகளைக் கட்டிவைத்தும் அனேகபுண்ணிய தீர்த்
தங்களில் மூழ்கியும் இன்னுமனேகக் கிரியைகளைச்செ
ய்தும் புத்திரபாக்கியங் கிடைப்பது அரிதாகயிருந்த
மையால் தம்பதிகளிருவரும் மெத்த விசனமடைந்து
இனியென்ன செய்கிறதென்று யோசித்துக் கொண்
டே அந்தமூதோபந்து தன்மனைவியை நோக்கி அடி
பெண்ணே நமதூருக் கருகிலிருக்கும் வடவேஸ்வர
மெனுந் திவ்யத்தலமானது மெத்தமகுத்துவ முடை
யது ஆகையால் நாமிருவரும் அந்ததலத்திற்குச் செ
ன்று அந்த வடவேஸ்வரரையும் அம்பிகையையுங்
குறித்துத் தவமியற்றிப் புத்திரப்பேறடையலாமென்
று என்மனதிற் தோன்றுகிறபடியால் நாமத்தலத்தி
ற்குச்சென்றுத் தவம்புரியலாம் வருவாயென வாயெ
ன்றுசொல்லி யம்மாதின் மனதைத்திருத்தி அழைத்
துக்கொண்டு வடவேஸ்வரத்தைச் சேர்ந்து அங்கோ
ரிடத்தினில் பர்னசாலையொன் றியற்றிக்கொண்டு வா
னப்பிரஸ்தாசிரமத்தை யடைந்து ஸ்நானுட்டானங்
களைமுடித்து இருவரும் பத்மாசனமிட்டுட்கார்ந்துஇரு
கரங்களையுமேந்திக் கண்களைமூடி அன்னஆகாரமின்றி
த்தவஞ்செய்துக் கொண்டிருந்தார்கள் அப்போது
விஸ்வநாதர் சாங்கதேவருக்குத் தெரிசனந்தந்து ஓ
சாங்கதேவரே நமதுவடவேஸ்வரத்தினில் பிராமண
குலத்தினிலுதித்த தம்பதிகளிருவர் என்னை நோக்கி
மெத்தவும் அரிதாகிய தவம்புரிகின்றார்கள் அவர்களை
நீர்வரவழைத்து அபீஷ்டத்தையறிந்து அனுகூலமா
கும்படிச் சொல்லியனுப்பக் கடவீரென்றுநேமித்தார்
அவர்நேமனப்படி யந்தச்சாங்கதேவர் மூதோபந்தை
யும் ருக்குமாபாயியையும் அழைப்பித்தார் அவர்களி
ருவரும்வந்து சாங்கதேவரைப் பணிந்து ஓசுவாமிஎங்
களை வரவழைத்தக் காரணம் யாதென்று வினவக்
கேட்டு சாங்கதேவர் தம்பதிகளைநோக்கி நீங்களிருவ
ரும் வடவேஸ்வரரை நோக்கி என்னவரம் வேண்டித்
தவம்புரிகின்றீரென்று வினவத் தம்பதிகளிருவரும்
சற்றுலோசித்து ஓசுவாமி எங்களுக்கு வெகுகாலமாக
புத்திரபாக்கிய மில்லாததால் மெத்தவருந்தி அதற்
காகவேண்டிய கிருஷிகளையெல்லாஞ்செய்தும்புத்திர
ப்பேறுகிடைக்காமையால்தவமியற்றியேனும்புத்திர

பாக்கியம் அடையவேணுமென்று இத்தலத்திற்கு வந்து வானப்பிரஸ்த ஆசிரமத்தை யடைந்து அன்ன ஆகாரமின்றித் தவம்புரிந்துக் கொண்டிருக்கின்றோமென்றுக் காரணத்தைத் தெரியப் படுத்தினார்கள். அந்தவசனங்களைக் கேட்டு சாங்கதேவர் தம்பதிகளை நோக்கி ஓபிராமண தம்பதிகளே நீங்கள்கொண்ட புத்திரபாக்கியமெனுங் கோரிக்கையை விஸ்வநாதர் கிருபையினா லுங்களுக்குண்டாகும்படிற் செய்விக்கின்றேன் உங்களுக்குப் பெண்பிள்ளைவேண்டுமா அல்லது ஆண்பிள்ளைவேண்டுமா வென்று வினவ சாங்கதேவரைநோக்கி ஓசுவாமி தேவரீரைப் போலொற்ற ஆண்பிள்ளை வேண்டுமென்றுப் பணிய அத்தம்பதிகளை நோக்கிச் சாங்கதேவர் சொல்லத்தொடங்கினார்

கேளுங்கள் பிராமண தம்பதிகளே யென்னைப் போல புதல்வனைக் கேட்டுக்கொண்டபடியால் யான் அயோனிசம்பந்தனாகப் பிறந்து பாலனாகிப் பனிரெண்டுவருட பாலகுமாரனாகி கோரக்கநாதர் கிருபையைப்பெற்று உங்களிடம்வருகிறேன் அதுபரியந்தம் கோரக்கநாதருடைய வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருங்களென்று சொல்லி அவர்களுக்கு விடைதர அத்தம்பதிகளும் மகாபாக்கியமென்று சந்தோஷசித்தர்களாகி விடைபெற்றுக்கொண்டு/தங்கள் ஊராகிய நாராயணடோகியை யடைந்து விசுவநாதரைப் பூசித்துக் கோரக்கநாதர் வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் இங்கே வடவேஸ்வரத்தினில் சாங்கதேவர் தினந்தோரும் இடைவிடாமல் ஸ்ரீஹரி பஜனைசெய்து நாளைப்போக்கிக் கொண்டே வருகையில் பத்துவருடங்கள் கடந்து போயினதால் அந்தச் சாங்கதேவர் கோரக்கநாதரிடமேகி அவர் திருவடிகளில் விழுந்துபணிந்துஎழுந்து ஓசுவாமி சிவபெருமானுடைய நேமனப்படி பிராமணதம்பதிகளுக்குயான் பிள்ளையாகப் பிறக்கினறேனென்று வரந்தந்திருக்கின்றேன் ஆகையால் அந்தவரத்தை யவர்களுக்குக் கொடுத்துப் பூர்த்திசெய்ய வேணுமென்று வெகுவாகப் பிரார்த்திக்க அப்போது கோரக்கநாதர் சாங்கதேவரைநோக்கி ஓசாங்கதேவரே நீர்சீக்கிரம் சமாதியினிலிரங்குமென்று நேமிக்க அந்தப்படியே சாங்கதேவர் சமாதியினிலிரங்கச் சிலநாள் கடந்தபின்பு அந்தகோரக்கநாதர் நாராயணடோகி பெனும் தலத்திற்கேகி அங்கு மூதோபந்து வீட்டையடைந்து பிட்சையின்னிமித்தியம் அலக்குயென்றும் ஓசைபோட அவருடைய பத்தினியாகிய ருக்குமாபாயி மெத்தப் பிரியத்துடன் பிக்ஷைகொண்டுவந்து சமர்ப்பிக்கஅப்போது கோரக்சநாதர் அம்மாதுக்கு சாங்கதேவர் வரந்தந்ததைப்போல புத்திரபாக்கிய மளிக்கவேணுமென்று மனதினில் கவனிக்கிறபோது அம்மாது கோரக்கநாதர் திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்து ஓசுவாமி அடியாளுக்கொரு புதல்வனுண்டாகும்படி கடாக்ஷிக்க வேணுமென்று மெத்தவும் பிரார்த்திக்க அப்போது கோரக்கநாதர் அக்ஷயமென்றுவேனுவை யூதிக்கொண்டிருக்கையில் அந்தநாதத்தினால் அப்போபிறந்த புதல்வனைப்போல அப்போதொரு சிசு காணப்படச்செய்து உடனே கோரக்குநாதரும் மாயமாய் மறைந்துபோயினார் பின்பு தம்பதிகளிருவரும் பாலகனைக்கண்டு பிரியமதிகரித்து தங்கள்பிள்ளையென்று யெடுத்து ருக்குமாபாயியும் ஆனந்தத்துடன் முத்தந்தந்துக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறபோது அந்தருக்குமாபாயிக்கித் தன்கடையேபாலானது பெரிகிப்பரவி வெளிப்பட அப்பாலைக் கொடுத்து மிகவும் பிரியமாக வளர்த்துக்கொண்டே வந்து பனிரெண்டாநாளச் சிசுவுக்குச் சாங்கதேவனென்று நாமகரணமிட்டுச் செல்வமாகப் போஷித்துவருகையில் அச்சிசுவும் சுக்லபக்ஷத்துச் சந்திரனைப் போல நாளுக்குநாள் விருத்தியடைந்து ஐந்துவயதானவுடனே க்ஷௌளம் உபநயனம் அன்னப்பிராசனமுதலான சடங்குகளை அந்தந்த காலத்தினில் தப்பாமல்நடத்திப் பள்ளியிலோதவிடுத்து மூதோபந்துவும் புதல்வன்மீது மெத்தப்பிரியமாக விருந்தார் புதல்வனும் சிலவருடங்களுக்குள் சகலவேதசாஸ்திரி சம்பன்னனாகியிருக்கத் தாய்தந்தையர்கள் தங்கள் மரபினில் உத்தமியாகுங் கன்னிகையைப்பேசி நல்லலக்கினத்தினில் தன்குமாரனுக்குத் திருக்கல்யாண மகோற்சவஞ்செய்வித்து கோதான பூதான வஸ்திரதான அன்னதானங்களெனுஞ் சோடசதானங்களும் அபாரமாகச்செய்து வெகுசந்துஷ்டராகியிருக்க சாங்கதேவரும் விவேகத்திலும் புத்தியிலும் ரக்தியிலும் பக்தியிலுஞ் சிறந்தவராகி பகவத்குணானுபவங்களை விடாது செய்துக்கொண்டு கிருகஸ்தராகி குபேரசம்பத்திருப்பதால் தானதருமங்களை விசேஷமாகச்செய்துக்கொண்டு தாய்தந்தையர்களுடையசொல்லைக்கேட்டுஅவர்கள் சொற்படிக்கிக் கீழ்ப்படிந்து நடந்து இருபத்தினான்குவயது வரையினில் சம்சாரத்தினி லிருந்துக் கொண்டே காலத்தைக் கடத்தியிருந்தார்,

இப்படிக்கிவர் தாய்தந்தையர்களை விட்டுப் பிரியாமலிருக்கையில் அன்னை தந்தையர்க ளிருவரும்மேல்நாட்டை யடைந்தார்கள் அப்போதிந்த சாங்கதேவர் அவர்களுக்குச்செய்யவேண்டிய உத்திரக்கிரியைகளைச் செய்துமுடித்துப் பிராமணர்களுக்குக் கணைக்

கிட்டுச் சொல்லமுடியாத தானதருமங்களைச் செய்து மிச்சமாகவிருக்கும் திரவியங்கள் முதலானதுகளையும் தன்சிறிதந்தைக்குக் கொடுத்துவிட்டுப் பண்டரியாத்திரைசெய்து வருகிறேனென்று சொல்லிவிடைபெற்றுக்கொண்டுப் பண்டரிபுறத்தைநோக்கி பகவத்குணானுபவ கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே நடக்கிறபோது அங்கு அனேகபக்தர்களைக்கண்டு மானாபிமானத்தை விடுத்துத் தனக்குள்ள சம்பத்தின்கொர்வத்தைப் பரிகரித்து யாவத்து சக்தர்களுக்கும் விழுந்து விழுந்து பணிந்தெழுந்துஓசாதுசத்புருஷர்களே இவ்வேழையின்மீது கிருபைசெய்து தங்கள் கோஷ்டியுடன் சேர்த்துக் கொள்ளும்படி மெத்தவும்வேண்டிக் கொள்ளுகிறேன் யென்றுப் பிரார்த்திக்க அவர்கள்கேட்டு மெத்தசந்துஷ்டராகித் தங்கள் கூட்டத்திலவரையுஞ் சேர்த்துக்கொண்டு ஸ்ரீஹரிகீர்த்தனைகளைப்பாடியாடி மெய்மறந்துப் பரமானந்தத்துடன்பண்டரிபுரத்தைச் சேர்ந்துப் பாண்டுரங்கநாதனைக்கண்டு சேவித்து ஆர்த்தியுடன் யீனஸ்வாராகி ஸ்ரீஹரியைத் தன் ஆசைதீர நன்ருகப்பாடியாடி ஓஜெகதீசா அனுவளவு நினதுகிருபையை யடியேன்மீது லபிக்கச்செய்து அடியேனுடைய ஜனனமரணங்களுக்கேதுவாகும் பவபந்தங்களைப் பரந்தோடச் செய்து நாயேனை இப்போதேப் புனிதனாகச்செய்யும் பவபந்தநாசா சர்வேசா சகலப்பிராணி கோடிகளின் இருதயங்களிலும் நிவாசா என்றும்பணிய பகவான் அந்தச்சாங்கதேவர் இருதயத்தினில் ஸ்ரீஹரியானவர் பலவாறு தன்னைப் புகழும்படியாகச் செய்தும் நாமத்தைதியானஞ் செய்யச்செய்ய பக்தியும் அதினால் விர்த்தியும் ரத்தியும் அவர்க்கு ஆனந்தமாகும்படிச்செய்துக்கொண்டுமிருக்கையில் இந்தசாங்கதேவர் பின்னுஞ்சொல்லித் துதிக்கத்தொடங்கினர்.

ஓ பாவிகளைப் புனிதர்களாகச் செய்யும் புண்ணியனே மிகுகண்ணியனே அதிகசுந்தரமடைந்தலாவண்ணியனே நினதுகிருபையினாலே தேவரீருடைய பக்தர்களைக் கண்டுபணிந்து சரணாகதி யடைந்தேன் இதுபோலவே யெப்போதும் உம்முடையதிருவடித் தாமரைகளை மரவாமலிருக்கும்படி அருள்புரியவேணும் என்றிந்தப்படி பற்பல விதங்களாகத்துதிசெய்துக்கொண்டு சாந்தமனமுடையவராகி மூன்றுநாள் ஆகாரமின்றிச் சந்திரபாகா நதியினிலிருந்துக் கொண்டு திடவைராக்கியத்துடன் ஸ்ரீபாண்டுரங்கநாதனை சேவிக்கவேண்டிப் பலவாறு துதிசெய்துக்கொண்டிருக்கையில் கருணாநிதியும் கண்ணபிரானுமாகிய ஸ்ரீபாண்டுரங்கநாதன் கிருபையுடன் அந்தச் சாங்கதேவர் முன்னம்வந்து தன்னுடைய பூரணமாகிய ரூபத்துடன் நின்றார் அப்போதுசாங்கதேவர் ஸ்ரீஹரியின் திவ்யமங்கள விக்கிரகத்தைக்கண்டு சேவித்துப்பரமானந்த மடைந்தவராகி விழுந்துபணிந்துஎழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்குவித்துக் கொண்டவராகி பிரமருத்திரர்திகளுக்குஞ் சேவிக்கவும் புகழவுந்தரமாகாத நினதரியசேவையை யான்கணடு சேவிக்கும்படியான புண்ணியமென்னசெய்தேனோ எந்தபெரியோர்களை தெரிசித்தபலனோ தேவரீருடைய மங்களதேகதெரிசனங்கிடைத்தது என்று பலவாறுபுகழ்ந்து ஓ பக்தரக்ஷக ரதங்களைநாயேன் தெரிசித்ததற்கு திருஷ்டாந்திர மொன்றிருக்கவேணு மாகையால் இவ்வுலகத்தையுண்டுமிழ்ந்த திருவாக்கினால் அடியேனுக் குபதேசஞ்செய்து அருள்புரியுமென்று வேண்ட அதற்கு ஸ்ரீபாண்டுரங்கநாதன் புன்னகைபுரிந்து அந்தசாங்கதேவரை சந்திரபாகாநதியினில் முழுத்த சாங்கதேவரும் அந்நதியின் ஜலத்திற்குள்ளாகப் பண்டரிக்ஷேத்திரத்தையும் புண்டரீகனையுங்கண்டு ஆனந்தக்கடலில் முழுகினவரைப் போல மெய்மறந்து உடனேதெளிந்து புண்டரீகரை வெகுவாகப்புகழுகையிலந்தப்புண்டரீகன் சாங்கதேவர்மீது அன்புடையவராகி ஷடாட்சர மந்திரத்தை யுபதேசிக்கச் சாங்கதேவரும் அம்மந்திரத்தை கிரகித்துக்கொண்டு புண்டரீகரைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு நதியைவிட்டு வெளிப்பட்டுப் பழையபடி கரைசேர்ந்துக் கண்களைத்திறந்துப் பண்டரிபுரத்தைக் கண்டு அங்கும் பண்டரிபுரத்தைக்கண்டோம் இங்கும் பண்டரிபுரத்தைக் கண்டோம் இது எம்பெருமானுடைய மகுத்துவமாகும் லீலையென்றுக் கருதி நதியைவிட்டு சந்நிதியைச்சேர்ந்து விட்டலதேவரைக் கண்டு சேவித்து ஓபரமதயாளமூர்த்தியே தேவரீரைசேவித்த மந்திரோபதேசம் பெற்றுப் பரமானந்தமடைந்த அடியேனுக்கு விடைதர வேணுமென்றுவேண்டி விடைபெற்றுக்கொண்டு நடந்துத் தன்னூரைநண்ணி சாதுக்களுடன் பஜனை செய்துக்கொண்டே தன்வீட்டையடைந்து அனேகமூடர்களை வரவழைத்து அவர்களுச்குபக்திமார்க்கமடையும் விதியையோதி அவர்களும் ஞானபக்தி வைராக்கிய மிகுத்திருக்கக் கண்டு சந்தோஷ சித்தராகி வெகுநாள்கழித்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறு சாங்கதேவர் மூடர்களுக்கு பக்தியுக் திரக்தி யுண்டாகும்படி பலநீதிவாக்கியங்களை யோதிட அவர்களு மதைக்கேட்டு சந்துஷ்டராகி யந்தப்படியே நடந்து வைராக்கியத்திற் சிறந்திருப்பதை சாங்கதேவர் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கிற

போது சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் அவர்முன்னமெருந்தருளக்கண்டு சாங்கதேவர் வெகுவிநயமாக அவர்திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்துமெத்த விசுவாசத்துடனிற்கிறதைக்கண்டுபாண்டுரங்கநாதன் களித்து சாங்கதேவரை நோக்கி ஓ, சாங்கதேவரே! சீக்கிரமாக நீர் கோதாவரிநதியை யடைந்து அங்கு கேசவமூர்த்தி விக்கிரகத்தை ஸ்தாபனஞ் செய்து அந்தமூர்த்தியை பூசித்துக்கொண்டு அங்குவாசமாகயிருக்கக்கடவா யென்றுசொல்லி சிலாவிக்கிரக மொன்றைக் கொடுத்துவிட்டு மாயமாய் மறைந்துபோயினார். உடனே சாங்கதேவர் ஸ்ரீஹரியினநேமனப்படி வடவேஸ்வரத்தை விடுத்து கோதாவரி நதியைநோக்கிச் சென்று நாராயணடோகியை யடுத்து அதைவிட்டுப் போகிறபோது அனேகஜெனங்கள்வந்து சாங்கதேவரைச் சூழ்ந்துக்கொண்டு ஓசுவாமி! எங்களை யெல்லாம் அலையவிடுத்துத் தாங்கள்மாத்திரம் கோதாவரிநதிக்குப் போகிறது நீதியோ? எங்களையும் உம்முடன் அழைத்தேக லாகாதோ, அப்போதெங்கள் மனம் நிம்மதியாயிராதோவென்று மெத்தவிசனத்துடன் வருந்தி மனக்கவலைகொண்டு அவரைப்போகவிடாமல் மடக்குகிறபோதுசாங்கதேவர் இந்தவெகுஜெனங்களையும் நோக்கி என்பிரிவாற்றாதப் பிரியநேசர்களே! விசுவாசர்களே! பகவானுடைய நேமனத்தை யான் தவரிநடக்கச் சிறிதேனு மெனக்கு மனமில்லை யாகையால் நீங்களெல்லோரும் என்மீதுதயவுசெய்து விடுப்பீர்களேயாகில் மாதத்திற் கொருதரம் யானிங்குவந்து உங்களைக்கண்டு பேசிப் போகிறேனென அதற்கவர்கள் ஓசுவாமி தாங்களிங் கெழுந்தருளுவதென்றால் எங்களுக்கு மெத்தஅபசாரமுண்டாகும் அப்படிக்கித் தாங்கள்வரவேண்டாம் நாங்களே தங்களிடம்வந்து அடிக்கடிக்கு சேவித்து வருகிறோமென்று அவரைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டு தங்கடங்களநம் புக்கிபிருந்தார்கள்.

உடனே சாங்கதேவர் குடும்பசமேதமாகப் புறப்பட்டுநடந்து சிலநாளையில்கோதாவரிநதியையடைந்து அங்குகேசவமூர்த்தி விக்கிரகத்தைப்பெரியோர்களைக்கொண்டு ஸ்தாபனஞ்செய்து பிராமணர்களுக்குத் ததியாராதனம் நாற்பதுநாள்நடத்தி மண்டலாபிஷேகம் கும்பாபிஷேகம் முதலானதுகளையும் மந்திரலோபங் கிரியாலோபங்க ளில்லாமல் பூர்ணாகுதி தந்து அந்தக் கேசவமூர்த்திக்கி,நித்தியோச்சவப்பட்சோச்சவப் பஞ்சபருவங்கள் முதலான பிரமோச்சவங்களும் குறைவின்றி நடத்திக்கொண்டும்மூன்றுகாலமும் பூசைதவராமல் செய்துவருகையில் அந்தநதிக்கிசுத்து பக்கத்திலிருக்கும் கிராமஸ்தர்கள் அனுதினமும் கோதாவரி நதிக்கரையினில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீகேசவப் பெருமானைச் சேவித்து அச்சந்நதி பரிபாலகரான சாங்கதேவரைக் கண்டு அவர் செய்யுங் குணானு பவங்களைக் கேட்டு ஆனந்தித்துப் போவார்கள்.

அப்போது சாங்கதேவர் மெத்தபக்தியுடன்ரத்தியாக ஸ்ரீஹரிபஜனை செய்துக்கொண்டு மிருந்தார் இவரிப்படிக் கிருப்பதைக் கண்டு ஜெனங்கள் யாவரும் அவரைக் கேசவச் சாங்கதேவரென்று அழைத்துப் புகழ்ந்துக் கொண்டாடிக் கொண்டிருக்கச்சிலர் பலவித கோரிக்கைகளை வகித்து பிரார்த்தனை செய்துக்கொள்ள அதுகளெல்லாம் தப்பாமல் அனுகூலமாயிருப்பதால் மேலும் ஜெனங்கள் வந்துக் கொண்டேயிருப்பார்கள் அவர்களுக்குஞ் சீக்கிரத்திலேதானே கோரிக்கைகள் பூர்த்தியானதினால் உடனே தங்கடங்கள் ஊரைச்சேர்ந்து யாவருக்கும் சாங்கதேவதாசருடைய மகுத்துவங்களை வெளியிடக்கேட்டஜெனங்கள் யாவரும் வந்துபணிந்து கோரிக்கொண்டவஸ்து அனுகூலமாகிப் போவார்கள் இப்படிக்கி வெகுஜெனங்கள் கோரிக்கைகள் நிறைவேறி வருவதால் அஷ்டதிக்குகளிலுஞ் சாங்கதேவருடைய கீர்த்திப் பிரதாபங்கள் பரவியதால் தேவகிரியெனும் நகரத்தைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டிருக்கும் ராமராஜனுக்கு இச்செய்தி தெரிந்து மனம்வாக்கு காயமெனுந் திரிகரணசுத்தியுடன் நால்வகைச் சேனைகள் தன்னைப் புடைசூழ்ந்துவர கோதாவரிநதியை நோக்கிப் புறப்பட்டுச் சாங்கதேவதாசரைக் கண்டுசேவிக்கவேணுமென்ற அவாமிகுதியால் வந்து கோதாவரியை யடுத்துக் கேசவமூர்த்தியைச் சேவித்துப் பின்பு சாங்கதேவ தாசரைக்கண்டு சேவித்து வெகுவாகத் தோத்திரம்புரியும் அரசனையந்த சாங்கதேவதாசர் வாழத்தித் தக்க ஆசனத்திலிருக்கச்செய்து க்ஷேமங்களை விசாரித்து ஓநரேந்திரரே! இன்றுதினம் தயவுசெய்துத் தாங்களிங்கு போஜனஞ் செய்யவேணுமென்று சொல்லக்கேட்டு அரசன் ஓசத்குருநாதரே! யானொருவனே தனித்துவந்திருந்தால் புசித்துப் போவதற்குத் தடையேயில்லை யென்பின் அனேகஜெனங்களும் காலாள்களும் வந்திருப்பதாலே இந்தவேளை தவிர்த்து இன்னுமெப்போதாகிலும் புசிக்கிறேனென்றுப் பணிவாகச் சொல்லக்கேட்டு சாங்கதேவர் அரசனைநோக்கி ஓவேந்தனே! உம்முடன் எத்தனைபேர்கள் வந்திருக்கினும் அத்தனைபேர்களும்புசிக்கட்டும் இதைப்பற்றி தாங்கள் யோசிக்கவேண்டாம் எல்லா

ருடன் தாங்களும் புசித்தே போகவேணுமென்று வற்புறுத்தும் சாங்கதேவர் இஷ்டப்படி யரசன் தன்னுடன் வந்தவர்கள் யாவருடனும் புசிப்பதற்குச்சென்றார். அப்போது சாங்கதேவர் ஒருசொம்பினில் தீர்த்தந்தை யெடுத்துக் கொண்டுவந்து யாவரையும் ஒக்காத்திவைத்துத் தளிகையிலே பரிமாறி அங்கிருந்தும் சாக்ஷாத் கேசவப்பெருமாளிடஞ் சென்று அவருக்குப் பிரபத்திசெய்து ஓஜெனார்த்தனா பங்கயக்கண்ணா மணிவண்ணா என்னண்ணா இந்தவேளை இங்கெழுந்தருளியிருக்கும் அரசனுடன் யாவருக்கும் பிரசாதந்தி யுருப்தியாகும்படி செய்ய வேணுமென்றும் முன்னமொரு காலத்தில் தருமநந்தரைக் கெடுக்கவெண்ணி துரியோதனன் தூறுவாச முனிவரை நோக்கி ஓசுவாமி தேவரீர் சிஷர்களுடன் ஆரணியத்தினில் வசிக்கும் தருமநந்தரிடத்திற்குப் பகலிரண்டு மணிக்கு எழுந்தருளி அவரைப் பிரசாதங் கேட்டுச் சிஷர்களுடன் தாங்கள்புசித்துவரத் தங்களை ஒருவரம் அடியேனுக்கருள் புரியும்படி வேண்டுகிறேனென்று பிரார்த்திக்க அந்தப்படியே வரமளித்தே னுனக்குத் துரியோதனா வென்றுசொல்லி அந்தத் தூறுவாசமாமுனிவர் ஒருநாள் பகலிரண்டுமணி நேரத்திறகுச் சிஷர்களுடன்கூடி யந்த தூறுவாசமாமுனிவர் தருமநந்தனர் வசிக்கும் காமியவனத்திற் கெழுந்தருளக் கண்டு தருமநந்தன ரெதிர்சென்றழைத்து வந்துத் தக்க ஆசனத்தி லெழுந்தருளச்செய்து சோடச உபசாரங்களால் அவரைப்பூசித்துச் சிரத்தின்மீது கரங்களைக் குவித்துக்கொண்டு ஓசுவாமி! இன்று தேவரீருடையத் திருத்தாட்டாமரைகள் பட்டு இவ்வனமானதுப் புனிதமாயிற்றுத் தங்களுடைய தெரிசனத்தால் யாங்களும்தன்னியர்களானோம் இந்தவெய்யிலில் இவ்வேழைகள்மீதுக் கிருபைகூர்ந்து எழுந்தருளிய காரணம்யாதோ தெரியப்படுத்தவேணும்சுவாமியென்று மெத்தவினயமாய் வினவும் தருமநந்தனரை நோக்கித் தூறுவாசமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

கேளும் தருமநந்தனா யான் சிஷர்களுடன்இந்த அகாலத்தி லுன்னைநாடி இக்கானகத்திற்கு வந்தகாரணம் யாதெனில் யாங்களனைவரு மெத்தப் பசியினால் மெலிந்துவாடி காதடைத்துப் பிராணன்போகுந் தன்மைபான திசையடைந்து வந்தோம் ஆகையாலெங்கள் பசிதீரும்படி அன்னபனாதிகளை யுதவிக்களையாற்றியனுப்ப வேண்டுமென்று சொல்லும்தூறுவாசர் மொழியைக்கேட்டுத் தருமநந்தனர் தூறுவாசமுனிவரை நோக்கி ஓசுவாமி தங்களிஷ்டப்படியேயாவருக்கும் தேவாமிர்தத்துக்கு நிகரான அறுசுவைபுடன்கூடின அன்னபானாதிகளை யுதவுகிறேன் தாங்கள் தயவுசெய்து ஸ்னானபானாதிகளை முடித்துக்கொண்டு சீக்கிரம் இங்கெழுந்தருளுமென் றுரைத்தத் தருமநந்தனர் சொற்படி அந்தத்தூறுவாச மாமுனிவர் சிஷவர்க்கங்களுடன் ஸ்னானத்திற் கெழுந் தருளி அங்கோர் தடாகத்தினிலிறங்கி ஸ்னானஞ்செய்துக் கொண்டிருந்தார்.

இப்படிக்கிருக்கிறபோது அங்கேதருமநந்தனர் துரோபதையையழைத்து ஓபெண்ணே துரோபதையே தூறுவாசமுனிவர் சிஷவர்க்கங்களுடன் ஸ்னானத்திற் கெழுந்தருளினார் அவர்வருவதற்கு முன்னம் அக்ஷயபாத்திரத்தைக் கொண்டுப் பிரசாதந்தயாராகட்டுமென்று நேமிக்கத் துரோபதைகேட்டு ஓசுவாமி பிராணநாதரே சூரியபகவான் அக்ஷயபாத்திரத்தை நமக்களிக்கிறபோது அக்ஷயபாத்திரம் எத்தனைபேர்களிருக்கினும் அத்தனை பேர்களுக்கும் தினத்திற்கு ஒரேவேளை அன்னங்கொடுக்குமேயன்றி இரண்டாவதுவேளைக்குக் கொடுக்கமாட்டாது என்றுசொல்லி நமக்குக் கொடுத்திருப்பதை மறந்து இப்போதுபிரசாதம் வேணுமென்றால் இந்த அகாலத்தினி லெப்படி தயார்செய்கிறதென அதற்குத்தருமநந்தனர்மெத்தவிசனமுற்று ஸ்னானத்திற்குப் போயின தூறுவாசமுனிவர் இதோவந்து விடுவாரே இதற்குநானென்ன செய்வேன் பிரசாதமில்லையென்றால் கோபித்து என்னசாபங் கொடுப்பாரோ என்று மனக்கவலைகொண்டிருந்து சத்துநேரத்திற் கெல்லாந் திடங்கொண்டு ஓதுவாரகாவாசா சர்வேசா ருக்குமணி பிராணேசா அன்பர்கள்நேசா விசுவாசா ஜெகதீசா அபயம் அபயம் தேவரீர் இப்போதிங் கெழுந்தருளி அடியேனுக்கு சம்பிராப்தமாகிய இடுக்கண்களைப் போக்கி யாதரித்தருள்புரிய வேணுமேன்று முறையிட இம்முறையைக்கேட்டுத் துவாரகாவாசராகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமர் அந்ததருமநந்தனரைக்காப்பாத்தும்பொருட்டு சத்தியபாமையுடன் கெருடன்மீதூர்ந்துக காமியவனத்தை யடைந்து மெத்தவிரனுக்கிராகதராகிய தருமநந்தனரைத்தேத்தி அக்ஷயபாத்திரத்தைக்கொண்டுவரச்செய்து அதைப்பரிசோதித்து அதிலொரு எள்ளு மூக்கத்தனைப் பத்திருக்க அதை யெடுத்துவாயிற்போட்டுச் சப்பிகொண்டே தடாகத்தினில்ஸ்னானஞ்செய்துக் கொண்டிருக்குந் தூறுவாசருக்கும் அவர்சிஷர்களுக்கும் பிரசாதம் வயிர்நிறைந்து மூச்சுவிடக்கூடாமலும் புளியேப்பமுண்டாகும்படிக் கிருபைபுரிந்து தருமநந்தனருக்குத்தூறுவாசமுனிவரால் யாதொருசாபமும்நேரிடாவண்ணங்கிருபாநோக்கஞ்

செய்த ஓ கேசவா அதுபோல இப்போது பத்துபேருக்கு ஆயிருக்கும் பிரசாதத்தை பத்துநூறு பேருக்காகும்படி கிருபைபுரியவேணும் பக்தவற்சலாவென்றுப் பணிந்துத் துதிசெய்துக்கொண்டே மடப்பள்ளிக்குட்புகுந்து பத்துபேருக்குச் சமைத்திருக்கும் பிரசாதத்தின்மீது தீர்த்தத்தைதெளித்து அங்கிருந்துர்திரும்பி அரசன்முதலானோர் ஒக்காந்திருக்குமிடம்வந்துசிஷர்களைக்கொண்டு அன்னமுதலானதுகளை ஆயிரம்பேர்களுக்கும் பரிமார யாவரும் புசித்துத்திருப்தியடைந்திருந்தார்கள்.

அப்போது அரசன் பத்துபேருக்குச் சமைத்திருந்த அன்னம் ஆயிரம்பேருக்கெப்படிகலந்துவந்ததுயென்று மெத்தவியப்படைந்துஇதுசத்குருநாதராகிய சாங்கதேவருடைய மகுத்துவமாகுமென்று தீர்மானித்து அவரைப்பணிந்துப் பலவாறு புகழ்ந்து விடைபெற்றுக்கொண்டு தன்பரிவாரங்கள் புடைசூழ நடந்துத் தன்பட்டணத்தை யடைந்துச் சாங்கதேவருடைய மகுத்துவத்தை நினைந்து நினைந்துக் கொண்டாடிக் கொண்டாடி ஆனந்தித்திருந்தான் அரசனிப்படிக்கிருக்க இங்கேசாங்கதேவர் அனுதினமும் ஹரிகதை காலக்ஷேபஞ்செய்வதை அறிந்து அனேகம் ஜனங்கள்வந்துகேட்டு ஆனந்தித்துப்போவார்கள்இவ்வாறு அந்தச்சாங்கதேவர் கோதாவரிக்ஷேத்திரத்தில் பனிரெண்டு வருடகாலம் பகவத்குணானுபவ கீர்த்தனைகளைப் பாடிபாடிப் பரமானந்தத்தையடைந்துக்கொண்டிருக்கையில் கலுபுருகாயெனும்பட்டணத்தில் சங்கரனெனுமோர் பிராமணனுண்டு அப்பிராமணன் தன் மனையாளுடன் இல்லறதருமத்திலிருந்து அளவிறந்த திரவியத்தைச் சம்பாதித்து எங்குமெத்தக் கீர்த்தியடைந்து தனவானென்றபேரை வகித்து யாவருங் கொண்டாடவிருந்தான் இவனுக்கு சகலசம்பத்துக்களும் நிறைந்திருந்தும் புத்திரபாக்கியமில்லாமல் இப்பிராமணனு மிவன்மனையாளும் சொல்லிமுடியாத கவலையடைந்துக் கொண்டிருக்கையில் சங்கரனெனும் பிராமணன் காலகெதியா லெவ்வனதிசையில் மரணமாயினன் இப்படி மரணமடைந்தத் தன்புருடனைத் தானு மவன் தாயுமாகக்கண்டு மெத்தபிரலாபித் தழுது அவனுக்குச் செய்யவேண்டியப் பிரேதகர்மங்களையெல்லாம்முடித்தும் இவர்களுக்குத்தீராத துக்கமாகிக் காசியாத்திரை யாகிலுஞ்செய்து வந்தால் நமக்குண்டாயிருக்குந் துக்கமானது நாளுக்குநாள் குறைந்துச் சந்தோஷமாக விருக்கலாமென்று ஆலோசித்துவேண்டிய வஸ்துக்களை சேகரஞ்செய்துக்கொண்டு அப்பிராமண ஸ்ரீயும் அவனதுதாயுமாகச் சேர்ந்து வாரணாசியைநோக்கி நடந்து நடுவிலுள்ள கிராமங்களையெல்லாங்கடந்து கோதாவரி தீரத்தையடைந்துஅங்குகேசவ சாங்கதேவருடைய மகுத்துவங்களைப் பலர்சொல்லக்கேட்டு அந்த சற்குருநாதரைக் கண்டு சேவித்துப் போகலாமென்றுன்னி மாமியும்மருகியு மிருவரும்நடந்து சாங்கதேவரைக்கண்டு மருகியானவள் கணவனிறந்தும் மொட்டை யடித்துக்கொள்ளாமல் இருந்தமையாலும் கணவனிறந்தபோதுஇம்மங்கைச்சிறுவயதாகையால் அப்போதங்கிருந்த பெரியோர்கள் யோசித்துத் தலைமயிர் வாங்காமல் நிறுத்தியபடியால் அம்மங்கை முன்னுதாகச்சென்று சாங்கதேவரைப் பணிந்துக் கிடந்தமையால் அந்தசாங்கதேவர் அம்மங்கையைச் சுமங்கலியென்றுக்கருதி சீக்கிரமே புத்திரபாக்கியத்தைப் பெரக்கடவாயென்று ஆசீர்வதித்தார்அவ்வார்த்தையைக்கேட்டு யம்மங்கையின் மாமியானவள் சாங்கதேவரைப் பணிந்து ஓசுவாமி இம்மங்கைஅமங்கலியாச்சுதே இவளுக்கெப்படிப் புத்திரன் உதிப்பானென்றும் அவள்புருடன் இறந்துபோன காரணத்தைத் தெரியப்படுத்தினாள் அதைக்கேட்டுச் சாங்கதேவர் இதையானறியாமற் சொல்லி ஆசிகூறினேன் ஆகிலும் யான் சொல்லியமொழி தவராமாட்டாது பகவானுடைய கிருபையினால்அவசியம் இம்மங்கைக்குப்புத்திரப்பேருண்டாகுமென்று திடமாக மொழிந்தார்.

இந்தப்படி யந்தசாங்கதேவர்கைம்பெண்ணுக்கு புத்திரபாக்கிய முண்டாகும்படி கிருபைபுரிந்துஅங்குள்ள பிராமணர்களை நோக்கி அமங்கலிய ஸ்ரீயிக்குப் புத்திரபாக்கியங் கிடைக்கும்படி தான்கூறின ஆசீர்வசனத்தின் உண்மையை யோசியபோது அப்பிராமணர்களனைவருங்கூடியோசித்து இவர்களிருவரையும் இவ்விடத்திலேயேயிருக்கும்படிச் செய்யவேணுமென்றுக்கருதி அங்கொரு வீட்டைப்பேசி யதிலவர்களைக் குடியேற்றி யவர்களுக்கு வேண்டியவஸ்துக்களை சேகரித்துக் கொடுத்துக்கொண்டிருக்க அம்மங்கையும்மங்கையின்மாமியு மிருவரும் அவ்வீட்டிலிருந்து வசித்து நாளைப்போக்கிக் கொண்டிருக்கையில் அந்த[illegible]கப்பெண்ணுக்கு ஒன்பதுமாதங் கெர்ப்பமுண்டாகிப் பூரணமானவுடனே அக்கைம்பெண்ணுக் கொரு புதல்வன் பிறந்தான் அப்புதல்வனுக்குப் பத்துநாளுங்கடந்த இரண்டாநாளென்பது போலப் பனிரெண்டாநாள்நாமகரணஞ் செய்விக்க வேணுமென்றெண்ணிப் பாட்டியார் அவனையெடுத்துவந்து சாங்கதேவருடைய திருவடிகளிற்போட்டு மாமியும்மருகியும் யவருக்குதெண்டனிட்டு நிற்கப் புதல்வனையும் பிராமண ஸ்ரீகளையும் ஆசீர்வதித்து அப்பிள்ளைக்கு விட்டலனென்று நாம

காரணமிட்டுப் பிராமணர்களை யழைப்பித்து இப்பிள்ளைக்குச் செய்யவேண்டிய விதியின்படிக் கர்மங்களை நடத்துங்களென்றுகூற அதற்குப் பிராமணர்கள் ஒப்புக்கொள்ளாம லிருக்கச் சாங்கதேவர்கண்டு இப்பிராமணர்கள் துஷ்டர்கள் என்றுக்கருதி அப்பிள்ளையையும் அப்பிள்ளைக்குப் பாட்டியையுந் தாயையுந்தன்னிடம் வைத்திருந்து அப்பிள்ளைக்கு ஐந்துவயதானவுடனே சாங்கதேவர் பிள்ளையையும்பிராமண ஸ்ரீகளையும் பண்டரிபுரத்திற் கழைத்துச்சென்று அங்குள்ளபிராமணர்கள் பத்துபேரை யழைத்து ஒபிரமகுலத்தினிலுதித்தப் புண்ணியசீலர்களே இச்சிறுவனுக்கு உபநயனஞ் செய்வியுங்கள் இவன் சாக்ஷாத் ஸ்ரீஹரியின் கிருபையினாலுதித்தவனாகும் இவனுக்குபநயனஞ்செய்வித்தால் உங்களுக்குமெத்த சுகிர்தமுண்டாகுமென்று சொல்லக்கேட்டு அப்பிராமணர்கள் சாங்கதேவருடைய சொல்லைக்கடந்து ஓசாங்கதேவரே கைம்பெண்புதல்வனுக்கா எங்களை உபநயனஞ் செய்துவைக்கும்படிக்குத் தாங்கள் சொல்லுவதுநீதியோ இதுவேந்தசாஸ்திரத்திற் சொல்லியவிதியோவென்று அலக்ஷியஞ்செய்துத் தங்கடங்களகத்தைநோக்கிப்போவதை சாங்கதேவர்கண்டு மெத்த விசனமுற்றவராகி விட்டலனை யெடுத்துக்கொண்டு ஸ்ரீபண்டரிநாதன் சந்நிதியைநோக்கிச் சென்று அங்கு அர்ச்சாவதாரரூபியாய் திவ்யமங்கள விக்கிரகத்துடன் நின்ற திருக்கோலமாகச் சேவைதரும் ஸ்ரீபாண்டுரங்கநாதனைக் கண்டுசேவித்து ஓசுவாமி இச்சிறுவன் தேவரீருடைய கிருபாநோக்கத்தினால் தந்தையின்றிப் பிறந்தவன் இவனுக்குத்தாயோ கைம்பெண்ணாயிருந்தும் வரப்பிரசாதத்தினா லிவனுற்பவ மாயினதை அநேகப்பிராமணர்கள் அறிந்திருந்தும் கைம்பெண்ணின் பிள்ளைக்கு உபநயனஞ் செய்யமாட்டோமென்று ஊரிலுள்ள யாவரும் இவனையுமிவன் தாயையும் நிந்தித்துப் போயினார்கள் யாருமற்ற அனாதையைப்போல இவன்தாயும் பாட்டியாரும் மெத்தவருந்துகின்றார்கள் இவனுக்கோஐந்து வயதிற்கு மேலாயிற்று பிராமணகுலத்திற் பிறந்தப் புதல்வர்களுக்கு ஐந்துவயதுக்கெல்லாம் உபநயனஞ் செய்விக்க வேணுமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றது இவன்கெதி யெப்படியாகுமோ யானறியேன் இப்போதிவன் நித்தியகர்மங்களைச் செய்யாததாலிவன் சூத்திரனுமாகாமல் பிராமணனுமாகாமல் பிரஷ்டனாகி யிருக்கின்றான் ஆகையாலிவ்வேழைச் சிறுவன் மீது கிருபைசெய்து தேவரீர் எழுந்தருளி இவனுக்கு உபநயனஞ்செய்வித்து இவன் அன்னையளிக்கும் பிரசாதத்தை ஸ்வீகரித்து இப்பண்டரியிலுள்ள பிராமணர்களின் கெர்வத்தையடக்கி இவனைக் காப்பாத்தி ரட்சியும் சுவாமி என்று வேண்டிக்கொண்டார் அதற்கந்த பாண்டுரங்கநாதர் சம்மதித்து ஓசாங்கதேவரே உமதிஷ்டப்படிக்கி யான் தடையின்றி நீங்களிரங்கி இருக்கும் வீட்டிற்குவந்து இவன் அன்னையளிக்கும் பிரசாதத்தை ஸ்வீகரித்துப் பிராமணர்களின் கொட்டத்தை யடக்குகிறேன் இச்சிறுவனை யழைத்துக்கொண்டு வீட்டைச் சேருமையாவெனச் சாங்கதேவர் பகவானிடம் விடைபெற்றுக்கொண்டுசிறுவனுடன்தானிரங்கிய வீட்டை நாடிச்சென்று அச்சிறுவன் தாயை நோக்கி ஓஅம்மா பாக்கியவதி சீக்கிரம் நூறுபேருக்காகும்படி பிரசாதந் தயார்செய்யுமென்று கட்டளையிட்டார். அந்தப்படியே நூறுபேருக்காகும்படிக்கவ்வப்பொழுதினில் தயார்செய்து வைத்தனள் உடனே சாங்கதேவர் அப்பண்டரியினில் வசிக்கும்பிராமணர்கள் நூறுபேருக்கு போஜனமென்றும் நீங்கள் யாவரும்வந்து அச்சிறுவனுக்கு உபநயனஞ் செய்துவைத்து உடனேபுசித்து அவனதுதாயார் கொடுக்கும் தட்சணை தானதிகளைப் பெற்றுக்கொண்டுசந்தோஷமாக வரலாமென்று சொல்லக்கேட்டு அப்பிராமணர்கள் கைம்பெண்ணின் புதல்வனுக்கா நாங்கள் உபநயனஞ் செய்விக்க வரவேணும் மெத்தநன்றா யிருக்கின்றது நாங்களென்ன யெங்களனுட்டானங்க ளென்ன சீலமென்ன இவைகளையெல்லாம் இன்றேயொழித்துஎங்களை ஜாதிபிரஷ்டர்களாகச் செய்விக்கவா யெண்ணி வந்தீர் போதும் போதும் எங்களுக்குப்பிராமணீகஞ் சொன்னது ஆயிரம்வராகன் எங்களுக்குதக்ஷணைகொடுத்தபோதிலும் நாங்கள் அதற்கு ஆசித்துவருவோமென்று யோசிக்கின்றீர் அற்பபொருளுக் காசித்து எங்கள் பிராமணீகத்தை விட்டுவிடுவோமோ வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போமையா நாங்கள் வருவதில்லை யென்றுக் கடினமாகப் பேசினார்கள்.

அதைக்கேட்டு சாங்கதேவர்மெத்தவிசனமுற்று உடனே சந்தோஷத்தை வருவித்துக்கொண்டு நாமேன் விசனப்படவேண்டும் சாக்ஷாத் பாண்டுரங்கனே வந்துதன் கரங்களால் விட்டலனுக் குபநயனஞ்செய்துவைக்கிறேனென்று சொல்லியிருக்கஅதைமறந்து நமதுமனதைச் சபலத்தினில் விடுத்தோமே எந்த நாளுமில்லாத சபலம் இன்றைக்கு நமக்குண்டாகவேண்டிய காரணமேதென்றும் நமது சொந்தகாரியத்திற்குப் புத்தியைச் சபலிக்கவிடுத்தாலன்றோ தோஷம் விட்டலன்தாயும் பாட்டியாரும் படுந்துக்கத்தை கண்டுச் சகிக்கமுடியாமலல்லவோ சபலசித்த னானேம் இதைப்பத்தி நாம்யோசிப்பதால் பிரயோஜனமில்லை யென் றுங் கருதிக்கொண்டே விட்டலன் அன்னையிரு

க்கும் வீட்டையடைந்து ஓ அம்மணி இவ்வூரிலுள்ள பிராமணர்களில் நூறுபேரை நமதுவீட்டிற்குப் பிராமணீகத்தின்பொருட்டு அழைத்தேன் அவர்கள்கைம்பெண்ணின் புதல்வனுக்கு உபநயனஞ்செய்விக்கநாங்கள் வரமாட்டோமென்று கூறினார்கள் இதற்கென்ன செய்கிறது ஒருவிதயோசனையு மெனக்குண்டாகவில்லையேயென அதற்கந்த கைம்பெண்ணானவள் மெத்தவும் விசனப்பட்டுக்கொண்டே ஓ சுவாமி அடியாளுக்குப் புத்திரனுண்டாகும்படி ஆசிகூறிய தேவரீர் மகுத்துவத்தை யானென்னவென்று மொழிவேன் சொல்லவுங் கருதவுங்கூடாத அப்படிப்பட்ட மகுத்துவத்தையுடைய தேவரீர் இச்சிறுவனுக்கு உபநயனஞ்செய்விப்பதோர் அருமைபோ அடியாளைச் சோதிக்கவெண்ணித் தாங்கள் செய்யும்படியான கூத்தேயன்றி மனதினில் நினைத்தமாத்திரத்தில் எப்படிப்பட்ட காரியங்களும் தங்களுக்கு அநுகூலமாகாதது முண்டோவென்றுசொல்லிச் சாங்கதேவர் திருவடிகளில்விழுந்துபணிந்து எழுந்துநின்றனள்.

அப்போது சாங்கதேவர் விட்டலன் அன்னையை நோக்கி ஓ அம்மணி நீமுன்னஞ்செய்திருந்த புண்ணியபலத்தினாலே இப்போதுன்வீட்டிற்கு சாக்ஷாத்பாண்டுரங்கனதை ரெழுந்தருளி யவர்கரங்களாலே சகலவிதிகளையு முன்குமாரனுக்கு ஓதி உபநயனஞ் சேய்விக்க வந்திருக்கின்றார் இதைப்பற்றி நீசிறிதேனும் விசனப்படவேண்டாமென்றுத் திடஞ்சொல்லக்கேட்டு விட்டலன் அன்னையும் மெத்தசந்தோஷத்துடன் ஸ்ரீஹரி வந்திருக்கின்றாரென்றாரே எங்கேயிருக்கின்றார் கண்டு சேவிப்போ மென்றெண்ணித் தானிரங்கி இருந்த வீடெல்லாந் தேடிக்காணாமல் சற்றுநேர மெய்மறந்து உடனேதெளிந்து எல்லாம் பின்னுஞ் சிறிதுநேரத்தினில் காணலாமென்று திடங்கொண்டிருந்தனள் இப்படியிருக்கையில் சந்நிதியில் பாண்டுரங்கநாதனைக்காணாமல் சேவிக்கவந்தவர்களெல்லாம் இதுயென்னவிந்தையாகவிருக்கின்றது சந்நிதியில் எப்போதும் நீங்காமலிருந்த சாக்ஷாத் பாண்டுரங்கனதமூர்த்திகரமாகும் விக்கிரகத்தைக் காணோமே யாரெடுத்துப் போயினார்களோ தெரியவில்லையே என்றுவிசனப்பட்டுக்கொண்டிருப்பதைக்கண்டு சிலபிராமணர்கள்.

விசனப்படுமவர்களை நோக்கி ஓ பிராமணர்களே சாக்ஷாத் பாண்டுரங்கநாதனைச் காணோமென்று மூலைக்குமூலையோடித் தேடித்திரிந்து நீங்களேன் விசனப்படுகின்றீர்கள் அப்பரமாத்மாபக்தர்களுக்குக் கட்டுப்பட்டவரேயன்றி மைத்தவர்களுக்குக் கட்டுப்பட்டவரன்று ஆகையால் பரமக்ஞான சம்பூர்த்தி யுள்ள சாங்கதேவரிடம் போயிருப்பார் இது லெள்ளளவும் பிசகிராது அங்குபோய் பாருங்களென்று சொல்லக்கேட்டுப் பிராமணர்கள் யாவரும் சாங்கதேவரிருப்பிடத்தை நோக்கி சென்று அவரைக்கண்டுபணிந்து ஓ சுவாமி சாக்ஷாத் பாண்டுரங்கநாத விக்கிரகத்தை சந்நிதியில் நாங்கள் சேவிக்கப்போய்ப்பார்த்து விக்கிரகத்தைக்காணோம் எப்படி மாயமாய்விட்டதோ வென்றுத் துயரப்படும்பிராமணர்களை நோக்கி ஓ பிராமணர்களே கைம்பெண்ணுக்கு நீங்கள் மனவருத்தமுண்டாகும்படிச் செய்தபடியால் ஸ்ரீஹரியானவர் எங்கள்வீட்டிற்குப் போசனத்தின் பொருட்டு வந்திருக்கின்றாரெனக்கேட்டு அப்பிராமணர்கள் அவ்வீடெங்குந் தேடிக் காணாமலிருக்க சாங்கதேவருக்கு மாத்திரம் ஸ்ரீஹரியானவர் காணப்பட்டுக் கொண்டிருந்தார் அப்போது பிராமணர்கள் பக்திபாவத்தைவிடுத்து வெகு சந்தேகங்கொண்டு இவடத்தில் ஸ்ரீஹரியானவர் வந்திருப்பது சத்தியமாக விருக்குமேயாகில் இங்குசெய்திருக்கும் பிரசாதம் முதலானதுகளும் இந்தப் பிராமணர்களுக்குச் சரியாகயிருக்கவேணும் அப்படிக்கிராமல் பிரசாதங் குறையுமேயாகில் இங்கு ஸ்ரீஹரிஇல்லையென்றுயெண்ணி நம்பத்தகுமென அதற்குச் சாங்கதேவர் ஓ பிராமணர்களே சொர்க்கத்தினில் வசிக்குங் காமதேனுவானது எத்தனைபேர்க ளிருக்கினும் அத்தனைபேர்களுக்குங் குறைவின்றி யன்னம் அளிப்பது போல இவடத்திற்கு எத்தனைபேர்கள் வரினும் அத்தனைபேர்களுக்குங் குறைவின்றிப் பிரசாதங்கொடுப்பதற்குக் கருணாநிதியாகிய சாக்ஷாத் பாண்டுரங்கன் சித்தமாக இங்கிருக்கின்றார் ஆகையால் இங்கிருக்கும் பிரசாதமே அனேகஜெனங்களுக்கு திருப்திசெய்விக்கும் ஆதலால் ஓ பிராமணர்களே நீங்களெல்லோரும் புசித்து இங்கு நடக்கப்போகிற விந்தையைக் கண்ணாரக்கண்டும் செவியாரக் கேட்டும் ஆனந்தமடையுங்களென்றுக் கூறிடக்கேட்டுப் பிராமணர்கள் சந்துஷ்டர்களாகி உடனே ஸ்னானத்திற்குச் சென்று ஸ்னானஞ் செய்து அநுட்டானங்களை முடித்துக்கொண்டு விரைவாகவந்து யாவரும் உட்கார்ந்திருக்கக்கண்டு அவ்வூரிலுள்ள பிராமணர்கள் யாவரும்வந்து பந்தியினுட்கார்ந்து என்னவிந்தை நடக்கின்றதே பார்க்கவேணுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது விட்டலன் அன்னையாகிய கைம்பெண் யாவருக்கும் இலைபோட்டுப் பரிமாறத் திருப்தியாக நாலாயிரம் பிராமணர்கள்புசித்துச் சந்தனபுஷ்பதாம்பூல தக்ஷிணைகளைப் பெற்றுக்கொண்டு வெகு

சந்துஷ்டராகி அந்தநாலாயிரம் பிராமணர்களும் சந்
நிதிக்குச்சென்று அங்குராக்ஷகனுகிய பாண்டுரங்கநாத
னைக் கண்டுசேவித்து பரமானந்தத்துடன் திரும்பவும்
சாங்கதேவரிடம வந்துபணிந்து ஓசுவாமி யாங்கள்
கூறின புன்மொழிகளைக் கருதாமல் க்ஷமித்துக் காப்
பாத்த வேணுமென்று வேண்டிக்கொண்டும்பின்னுஞ்
சொல்லுகின்றார்கள் ஓசுவாமிஇந்தக்கையபெண்ணின்
புதல்வனுக்கு உபநயனஞ் செய்விப்பதற்கு முகூர்த்த
காளொன்று குறித்திடுங்க ளெனக்கேட்டுச் சாங்கதே
வர் உடனே நல்லமுகூர்த் நாளொன்றுகுறித்து யாவ
ருக்குந்தெரியப்படுத்த சகல பிராமணர்களுங் கேட்டு
முகூர்த்தங் குறித்திட்ட நாளில்வந்து விட்டலனுக்கு
உபநயன முகூர்த்தத்தை வேதவிதிப்படிநடத்தி அக்
கைம்பெண் கொடுத்த மிதமற்ற தானதருமதட்சணை
களைப் பிரியமாகப் பெற்றுக்கொண்டு சொல்லத்தர
மாகாத ஆனந்தத்துடன் பிராமணர்கள் தங்கடங்களு
கஞ சேர்ந்திருந்தனர்கள் பின்பு சாங்கதேவர்விட்டல
னையும் அவனன்னையையும் பாட்டியையும் அழைத்து
க்கொண்டு கலுபுருகாவெனும் பட்டணத்தையடைந்
து மரணமாயின சங்கரன்வீட்டை நோக்கிச் சென்று
அவ்வீட்டினில் சுகமுடனிருக்கும்படி விட்டலனுக்கு
நேமித்துத் திரும்பித் தன்னூரைநோக்கிச் செல்லு
கையில் அவ்வூரிலிருக்கும் பிராமணனொருவன் திடுசி
டென் றேடிவந்து சாங்கதேவருடைய திருவடிகளில்
விழுந்து பணிந்து எழுந்து ஓசுவாமி தேவரீர் ஒருவா
ரம் இவ்வூரினில் வசித்திருந்து எனது கன்னிகையை
விட்டலனுக்குக் கொடுத்து மணஞ்செய்வித்துக்கண்க
ளாரக்கண்டு சேவைஷயிட்டு ஆனந்தித்துப் போகவே
ணுமென்று வெகுவாக வேண்டிக்கொண்டான அதற்
குச் சாங்கதேவா மெத்த சந்தோஷித்து இந்தவிட்ட
லனை நாமித்தனைநாளாய் வளர்த்து இவனுக்குக்கல்வி
யும் புத்திமதியுஞ் சொல்லிவைத்தும் இவனுக்குவிவா
கஞ் செயவிக்காமல்போனல் நன்றாயிருக்கவில்லை அன்
றியும் வலியப்பெண் கொடுக்கிறதாக இப்பிராமணன்
நம்மை மெத்தவும் வேண்டிக் கொள்ளுகிறான் ஆகை
யால் நாமிருந்து விட்டலனுக்கு விவாகஞ் செய்துவை
த்துப் போயினல் மெத்தநலமாக யிருக்குமென்று
யோசித்து அப்பிராமணனை யழைத்துக்கொண்டு திரு
ம்பி விட்டலன் வீட்டிற்குவந்துமுகூர்த்தநாளொன்று
பார்த்து அன்னளில் பந்தல்மணவரை முதலானதுக
ளும் போடுவித்துமுகூர்த்தத்திற்கு வேண்டிய சகல
சாமக்கிரிகைகளையும்சேகரித்து மங்களவாத்தியங்கள்
முழங்க விட்டலனுக்கு ஸ்னனஞ்செய்வித்துப் பெண்
ணுக்கும் மங்கலஸ்னனஞ் செய்வித்து ஆடையாபர
ணங்களால் இருவருக்கும் அலங்கரித்துமணவரையில்
ஒக்காத்தி ஓமசாந்திமுடித்துச் சகலமேளவாத்தியங்க
ளும் தாம்தாமென்று முழங்க பூசுரர்கள் வேதகோஷ
டஞ்செய்ய முனிவர்கள் ஆசீர்வதிக்கப் பிராமண ஸ்ரீ
கள் மங்களம்பட நல்லகடிகையினில் விட்டலன்பெண்
ணின்மிடத்தினில் மங்கிலியஞ்சூட்டிடவெகு ஆடம்பர
மாகத் திருக்கல்யாண மகோற்சவத்தை நடத்திவை
த்து கோதான பூதான வஸ்திரதான அன்னதானங்
களெனுஞ் சோடசதானங்களையும் கிருஷ்ணர்ப்பண
மாகச் செய்வித்து பந்துமித்திர புரோகிதர்களுடன
புசித்துச் சந்தன தாம்பூலங்களை யீந்துக் களிப்புடனி
ருந்து இப்படி ஏழுநாள் கலியாணம்நடத்தி அவரவர்
களுக்குத் தக்கசன்மானங்கள் கொடுத்து விடைதந்
துத்தானும் தம்பதிகளை ஆசீர்வதித்து விடைபெற்று
க்கொண்டு துவாரகையை நோக்கிப் புறப்பட்டார்
அப்போது யாதவபந்துவும் இன்னுமநேக ஜெனங்க
ளும் யாத்திரைசெய்யும் பொருட்டுச் சாங்கதேவர்
பின்தொடர்ந்தார்கள்.

இவ்வண்ணம் அந்த யாதவபந்துவு சம்சாரத்தி
னில் விரக்தி யடைந்தவராகி யாத்திரை செய்யும்படி
புறப்படுகிறபோது இவர்மனைவி கெர்ப்பிணியானதால்
வீட்டிலேயே இருக்கும்படி திட்டஞ்செய்து வெகுஜெ
னங்களுடன் சாங்கதேவர் பின்போகிறபோதுயாதவ
பந்துவுமனைவி சாங்கதேவர் மீதிருக்கும் பக்திபரவச
த்தால் அம்மாதும் இவர்கள்பின்றொடர்ந்து நடந்து
போகையில் நாளுக்குநாள் கெர்ப்பம் பாரமதிகரிப்ப
தால் அம்மாது மெல்லனநடந்துக் கொண்டே சாங்க
தேவர் திருவடிகளைத் தியானஞ் செய்தவண்ணம் இ
டைவிடாது நடந்துக்கொண் டிருக்கிறபோது வயிறு
நோய் அதிகரித்து பொருத்து முடியாமலிருந்த படி
யால் அங்கோர் மரத்தடியினி லுட்கார்ந்து கெர்ப்ப
வேதனைப்பட்டுக் கொண்டிருந்தனள். சிலர் இம்மாது
கெர்ப்பிணியாகி யிருந்தும் யாத்திரைசெய்யப் போ
வது தகாதென்று நிந்தித்தார்கள் அப்போதம்மாது
அவர்களைநோக்கி சாங்கதேவருடைய கிருபையும் பக
வானுடைய அருட்கண்பார்வையு மென்னைவிட்டு நீங்
காதிருக்கிறபோது எனக்கெந்த ஆபத்தும் வரமாட்
டாது அப்படியல்லவென்று எனக்காபத்து நேரிடு
மாகில் அவர்பின்னலேயே சென்று மரணமடைகி
றேன் அப்படி யடைவதாலெனக்கு மெத்தச்சுகமுண்
டாகும் இவடத்தில் மரணம் எனக்குநேரிட்டால் சுக
மே கிடையாதென்றுசொல்லி அங்குதானே யிருந்த
னள் முன்னுதாகப் போனவர்களாகிலும் இம்பாதை
த்திரும்பிப் பாராமலே போயினர்கள் இம்மங்கை
யின் கணவனுகிய யாதவபந்துலோ சத்குருநாதரு

ண்டைய அருணோக்கம்பெத்து அதனால் சாதுமார்க்கத்தை யனுசரித்துப் பிரமநிஷ்டாபரராகிப்பின்சென்று கொண்டிருந்தார்.

அப்போது அம்மங்கை நரஹரிமுரகரி அச்சுதா கோவிந்தா நாராயணா அடியாளிந்தக்கொடுமையான காட்டினில் ஒண்டியாகி ஆதரிப்பவர்களொருவருமின்றி அனாதையைப்போலப் பரதவிக்கின்றேனே இந்தவேளையில் வந்து பயப்படாதே யென்றுசொல்லி யாதரித்து ரக்ஷிக்கவேணும் சுவாமியென்றும் ஓ எனதரிய சற்குருநாதராகியசாங்கதேவரே உமக்கடியாள் மீதிருந்தக் கிருபை யிப்போது மாரிவிட்டதோஎன் காலந்தான் கெட்டதோ யான்பூர்வத்திற் செய்த பாவமானது இந்தசமயத்தினிலுங்களுக்கென்மீதுமனம் செல்லாமலிருக்கும்படி யுடன்பட்டதோ அப்பாவங்களே அடியாளை யிக்காட்டினில் தனித்திருக்கவிட்டதோ முன்னம் கௌரவர்கள் சபையினில் துச்சாதனால் துயிலுரிகிறபோது துரோபதையானவள் ஓகிருஷ்ணா துவாரகாவாசா வென்று முறையிட்டுக் கதறியபோது அம்மாதுக்கு மென்மேலுந் துயில்பெருகும்படி கடாக்ஷித்த ஓஜெகதீசா இப்போததைப்போல அடியாள் முறையைக் கேட்டுச் சீக்கிரம்வந்து என்னைக் காப்பாற்றும் அனாதைகளுக்குப் பந்துவேஎன்று முறையிடுவதை ஸ்ரீஹரியானவர் கேட்டு உடனே தான் பெண்வடிவங் கொண்டு புடவைக்கட்டி ரவிக்கைப் போட்டுக்கொண்டு நெற்றியினில் குங்குமமிட்டு விரைவாக அக்கொடிய காட்டினில் மரத்தடியில் பிரசவேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் யாதவபந்துலு மனைவியின் எதிரில்வந்து நின்றாள் இவர்களைக்கண்டு அம்மாது நீயாரம்மாவென்று வினவ அதற்கு அந்தமாயாமங்கை சொல்லுகின்றாள் ஓ அம்மா பாக்கியவதி உனக்காசானாகிய சாங்கதேவரால் அனுப்பவந்தவள் நான் என்பேர் கிருஷ்ணாபாயி யென்பார்கள் யான்வந்தகாரணம் யாதென்பையோ இப்போதுனக்குப் பிரசவசமயம்வந்திருக்கின்றபடியால் யான்விரைவாக உன்னிடம்வந்து ஆதரிக்க வெத்தனப்பட்டு யிருக்கின்றேன். ஆகையால் ஓஅம்மணி நீயேதுக்கும் பயப்படவேண்டாம் யென்றுசொல்லித் திடமுண்டாகச் செய்து உடனே அங்கொருகிராமத்தை யுண்டாக்கி அதிலொரு வீட்டினிலிம்மங்கையைச்சேர்ந்து இடுப்பைப் பிடித்துக்கொண்டே அரை வீட்டிற்குள்ளழைத்துப்போய் வேதனைப்படாமலிருக்கும்படித்தக்க சிகிச்சைகளைச் செய்துக் கொண்டு பின்னும் ஓஅம்மணி யாரோ இவள்வந்திருக்கின்றாளே இவள்முன்னம் எப்படி பிள்ளையைப் பெருவதென்று வெட்கப்பட வேண்டாமென்று சொல்லகேட்டு யாதவபந்துலு மனைவியானவள் சந்தோஷத்துடன் நாணத்தைவிட் டிருந்துக்கொண்டே ஐயோ இந்தப் புண்ணியவதி யாரோ இவளைநமக்குத் துணையாயிருந்துப் பிரசவம் பார்க்கும்படி சத்குருநாதர் அனுப்பினாரே இவள்செய்யும் பணிவிடைக்குத்தக்கபடியே தாகிலுஞ் சன்மானஞ் செய்தனுப்புவதற்கும் நம்மிடத்தினி லொருகாசேனுமில்லையே இதற்கென்ன செய்வேனென்று அம்மாயா மங்கையைப் பலவாறு விழுந்துபணிந்துத் துதிசெய்துக் கொண்டிருந்தனள்.

இந்தப்படி யம்மங்கைப் பிரசவவேதனைப் பட்டுக்கொண்டே மாயாமங்கை தனக்குச்செய்யும் பணிவிடைக்குத் தக்கப் பொருளளிப்பதற்கு நமக்கிங்கில்லாமற் போயிற்றேயென்று விசனப்படும் யாதவபந்துலு மனையாளைநோக்கி மாயாமங்கைச்சொல்லுகின்றாள் ஓஅம்மணீ எனக்குத் தக்கபடிக்கிப் பொருள் கொடுப்பதற்கில்லையே என்றவிசனமும் யான் பொருள் கேழ்ப்பேனென்ற பயத்தையும் விடுத்துச் சந்தோஷமாக விருமம்மா நான்பொருளுக் காசித்து வந்தவளல்லச் சாங்கதேவருடைய தயவு நம்மீதென்றும் நீங்காமலிருக்கவேணு மென்றெண்ணித் தாக்ஷிண்ணியத்தின் பொருட்டு வந்தேனேயன்றி திரவியத்திற்கு வாஞ்சித்து வந்தவளென்று நீஅணுவளவேனும் மனதினில் கருதவேண்டா மென்றுசொல்லி நீங்காப் பிரியமுண்டாகும் படிக்குச்சொல்லிச் சம்மதிக்கச்செய்து அங்கு செய்யவேண்டிய வேலைகள்யாவத்தும் செய்துக்கொண்டிருக்கையில் மாதம் வாரம் திதி நக்ஷத்திரம் யோகம் கரணம் நவக்கிரகங்களும் உச்சம் நம்பு ஆக்ஷியிலிருக்கும் சுபலக்கினத்திலே ஆண்சிசுவைப் பெற்றனள். அச்சிசுவுக்கு மாயாமங்கையானவள் அப்போது தொப்புளறுத்து உடனே வெந்நீரினால் ஸ்னானஞ்செய்வித்து ஓர்பக்கத்தில் கிடத்தி பிரசவித்த மங்கைக்குப் படுக்கைப்போட்டு அதில் படுக்கவைத்து அவிழ்தங்கள் பத்தியமுதலானதுகளை அப்போதுக்கப்போது செய்து திருவிளக்கு நீங்காமலிருக்கும்படி வைத்து எந்த பதார்த்தமுங் குறைவின்றி யாவத்தும் தயார்செய்து வைத்துப் பிரசவித்த மங்கைக்குப் பத்தாவதுநாள் ஸ்னானஞ்செய்து வைத்து அப்போது செய்யவேண்டிய பத்தியஞ் செய்துவைத்து வெகுஜாக்கிரதையாக மருத்துவவேலைகளைக் குறைவின்றி நடத்திக்கொண்டு இருந்தார்.

இந்தப்படியாக அந்த மாயாமருத்துவமங்கைச் சகலவேலைகளையும் வெகு ஜாக்கிரதையாக நடத்திக்

கொண்டு ஒருமாதபரியந்த மிருந்து வேண்டியவேலை
களைச் செய்துக்கொண்டிருக்க இந்தரகசியம் யாருக்
குந் தெரியமாட்டாது இவன்னிற்க இதற்குள் சாங்க
தேவர்யாதவபந்துவுடன் துவாரகையையடைந்துசந்
நிதிக்குட்புகுந்து விக்கிரகத்தைப்பார்த்து அவ்விக்கி
ரகத்திற்கு மூர்த்திகரமில்லாமல் சந்துஷ்டியின்றி மெ
த்தவிசனமடைந்து ஆர்த்தியுடன் தனதுயோகதிருஷ்
டியினால் பார்க்கிறபோது சாக்ஷாத் ஸ்ரீஹரியானவர்
கானகத்தினில் பிரசவித்த மங்கைக்குத் தொண்டுசெ
ய்வதை யுணர்ந்து வெகுசந்தோஷ மடைந்தவராகி
யிருக்க அப்போது ருக்குமணிபிராட்டிப் பிரசன்ன
மாகி ஓசாங்கதேவரே அந்தஹரியானவர் என்னை இங்
குத் தனியேவிடுத்து வனத்திற்குச்சென்று ஒருமாத
காலமாய் அனாதையாகிப் பிரசவித்த மங்கைக்குத்
தொண்டுசெய்துக் கொண்டிருக்கின்றார் ஆகையால்
ஓசாங்கதேவரே அங்குநீர்சென்று ஹரியையழைத்து
க்கொண்டு வாருமென்று நேமிக்க அந்தப்படியே
சாங்கதேவர் துவாரகையைவிடுத்து நடந்து ஆரணி
யத்தை படுத்துப்பார்க்க அங்கொரு நூதனமாகிய
கிராமங் காணப்பட அவிடத்திற்குச்சென்று அங்கி
ருக்குஞ் சிலரைநோக்கி கிருஷ்ணாபாயி வீடெங்கே
யென்று விசாரித்துக்கொண்டே சென்று கிருஷ்ணா
பாயி வீட்டைச்சேர்ந்து அங்குசுந்தரமான ரூபத்து
டன் பெண்வடிவங் கொண்டிருக்கும் ஸ்ரீஹரியான
வர் சாங்கதேவரைக் கண்டுபணிந்து உடனே மாய
மாய் மறைந்துபோயினார் அந்த மாயமங்கையை ஸ்ரீ
ஹரியென்று தெரியாமல் சாங்கதேவர் யாரோயிவள்
இப்படிப்பட்ட ரூபமுடையமங்கையும் உலகத்தினி
லிருக்கின்றாளல்லவாவென்று மனதில்கருதி பிரமை
யடைந்திருக்கையில் பிரசவித்த மங்கைப் புதல்வனை
எடுத்துக்கொண்டுவந்து சற்குருநாதன் திருவடிகளிற்
போட்டுத் தானும் விழுந்துபணிந்துஎழுந்துநடந்தச்
செய்திகளைச்சொல்லி ஓசுவாமி தாங்கள் கிருஷ்ணாபா
யியை இங்குவிரைவினி லனுப்பியபடியால் அலக்கணு
ராமல் சௌக்கியப்படுத்தினள் சந்தோஷப்படும்படி
என்னைச்செய்வித்தனள் என்றிப்படி சோல்லக்கேட்
டுச் சாங்கதேவர் ஓஅம்மணி அந்தகிருஷ்ணாபாயியை
யெப்படி காணுவேனென அதற்கம்மங்கை ஓசுவாமி
அந்தகிருஷ்ணாபாயி வெளியிலிருப்பாள் பாருமென
அந்தப்படியே சாங்கதேவர் வெளியில்வந்துபார்த்து
கிருஷ்ணாபாயியைக் காணாமல் சொல்லமுடியாத விச
னமடைந்து யெல்லா ஜெனங்களையும் அழைத்துக்
கொண்டு பிராட்டியின் நேமனத்தை நினைத்துக்கொ
ண்டே துவாரகையை யடைந்துத் தாராளமாகச் சந்
நிதிக்குட்புகுந்து ஸ்ரீஹரிகிருஷ்ண பரமாத்துமரைச்
சேவித்து மூர்த்திகரம் அங்குவிளங்குவதால் ஓபாண்
டுரங்கா தாங்கள் அனாதைகளுக்குப் பந்துவென்பது
இவ்விடத்தினிலுண்மையாயிற்று அக்கொடியநாட்டி
னில் யெழுந்தருளிப் பிரசவவேதனைப்படும் மங்கை
க்கு மெத்த இழிவான தொண்டுகளையெல்லாம் மன
மாரச்செய்து அவளையும் அவள்புதல்வனையும் காப்
பாத்திக்கொண்டிருந்து நான்வந்தவுடன் மாயமாய்
மறைந்து இங்குவந்து சேவைதந்தஜெகதீசா அடியே
னுக்காக மருத்துவச்சி வேடம்புனைந்து செய்யத்த
காத தொண்டுகளெல்லாஞ் செய்து பக்தர்களைக் கா
ப்பாத்தின பக்தவச்சலாவென்று வெகுவாகப் புகழ்
ந்து ஆனந்தக்கண்ணீருதிர்த்துக் கொண்டே யாதவ
பந்துவை வரவழைத்து ஓஐயா பக்தசிகாமணியேஉன்
னுடைய புதல்வனுடன் மனைவியையுங்கைக்கொண்டு
ஆதரிக்கக்கடவாய் அன்னியிலும் நினதுபுதல்வன்
சாதுஜெனங்களிற் சிறந்தவனாகும் ஆகையால் இன்று
முதல் நீர்சம்சாரத்தின்மீது வெறுப்பு கொள்ளாமல்
விருப்பத்துடனிருந்து காப்பாத்திக் கொண்டிருப்
பையாகில் உன்னுடையவம்சத்தை விருத்திசெய்விக்
கும் பொருட்டுப் பேரனும் உதிக்கக்கடவன்யென்று
சொல்லி அவருடையமனைவியுடன் புதல்வனையும் வச
ப்படுத்தி நான்குமாதகாலம் அந்தத் துவாரகையிலே
யே இருந்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமா
வைசேவித்து ஆடிப்பாடி மெய்மறந்துப் பரமானந்த
மடைந்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறு அந்தச்சாங்கதேவர் நான்குமாதகால
ம் துவாரகையிலேயே வசித்து பகவத்தியானஞ்செய்
துக் கொண்டிருந்து பகவானிடம் விடைபெற்றுக்
கொண்டு புறப்பட்டுத் தன்னூரைச்சேர்ந்திருக்கையி
னில் பண்டரிபுரத்தில் சிலவிபரீதங்கள் நடந்ததென்
றுக் கேழ்விப்பட்டார் அதென்னவெனில் பிதருபட்
டணத்தையாளும் அவிந்தியநரபதியானவன்பண்டரி
புரத்தினில் இருக்கும் சாக்ஷாத் பாண்டுரங்கனுடைய
சந்நிதியையிடித்து மசூதுகட்டவெண்ணி வெகுதொ
ந்திரவு செய்கிறபோது பிராமணர்கள் விட்டலவிக்கி
ரகத்தை யவனுக்குத் தெரியாம லெடுத்துக்கோண்டு
போய ஒளித்துவைத்துக் கொண்டிருந்தார்கள் அன்
றியும் பிராமணர்களெல்லாம் பண்டரியினிலிருக்கும்
தங்கள் வீடுகளைவிட்டு வெளிப்பட்டுப் போயினார்கள்
துலுக்கர்கள் அனேகர் பண்டரிபுரத்திற்குள் புகுந்
தும் பலவிதங்களாகப்பிராமணர்களைப்பிடித்து அடி
த்து நோகச்செய்தார்களென்று கேழ்விப்பட்டுச் சா
ங்கதேவர் மெத்த விசனமடைந்து இதற்கென்னசெய்
கிறதென்று யோசித்து ஸ்ரீஹரிகோவிந்தாநந்தநந்தா

முகுந்தா வைகுந்தா முக்குந்தவரதா முன்னம்
துஷ்டர்களையெல்லாம் பிடித்துக்கொன்று சிஷ்டர்க
ளையெல்லாம் ரக்ஷித்துத் தருமத்தை நிலைநாட்டிய
கெம்பீரா உதாராதாமோதரா பீதாம்பரதராபிரமன்
முதலான தேவர்களாலுங் கொண்டாடவும்மினதறிய
சேவைப்பைக் காணவும் தரமாகாத ஒபுராணபுருஷா
நினது மகுத்துவங்களைச் சொல்ல வாசமகோசரமா
கும் அப்படிப்பட்ட மகுத்துவங்கள் பொருந்திய
தேவரீரைபாவியும் மந்தபுத்தியும்அற்பாயுளுமுடைய
ஏழையேன் புகழத்தரமாகுமோ அப்படிப்பட்டஅரி
தாகிய தேவரீருடைய குணானுபவங்களைச் சொல்லு
வதற்கு ஆயிரப்பணாமுடிகளும் இரண்டாயிரம் நாக்கு
களுமுடைய ஆதிசேஷனாலும் புகழ்ந்துக் கொண்டா
டுவதரிதென்றால் ஒருநாக்கையுடைய நாயேன்என்ன
வென்றுபுகழப்போகிறேன் அப்படிப்பட்டதேவரீர்
வாசஞ்செய்புஞ் சந்நிதியில் துலுக்கர்கள்புகுந்து இடி
த்துத்தள்ளி மசூதுகட்டப் போகுறார்களென்று கே
ழ்விப்பட்டது முதல் அடியேனுடைய மனமானது
தாமரையிலைதண்ணீர் போலச் சிதறிப்பதருகின்றதே
இந்தசமயத்தினில் துலுக்கர்செய்யும் அக்கிரமங்களை
க்கண்டும் அவர்களை யொன்றுஞ்செய்யாம லிருக்குங்
காரணம்யாதோ இதுகலியுகமானதால் மறைந்திருப்
பதே சிறந்ததெனக் கருதியிருக்கின்றீரே இதுசரியா
குமோவென்றுத் திடமாக வேண்டிப்பணிந்துசாங்க
தேவர் துதிசெய்துக்கொண் டிருக்கையில் தாமோ
தரன் பிரத்தியக்ஷமாகத் தெரிசனந்தந்து ஒசாங்கதே
வரே விரைவாகநீரும்பிதருபட்டணத்திற்குச்சென்று
என்னைப்பஜனைசெய்துக்கொண் டிருப்பையாகில்அவ்
வூரரசன்வலியவந்துஉன்கோரிக்கையை நிறைவேததி
யனுப்புவானென்று கட்டளையிடக்கேட்டு சாங்கதே
வர் மகாபாக்கியமென்றுப் பகவான் நேமனத்தைச்
சிரசாகவகித்துத் தன்னுடைய சிஷவர்க்கங்களுடன்
சிறிதேனும் பயமின்றி நடந்துச்சிலநாள் பரியந்தம்
அங்கங்குள்ள கிராமங்களிற்சேர்ந்து பிரசித்தியான
ஒருவீட்டை வாடகைக்குப் பேசியதில் தானிருந்து
இடைவிடாது பஜனைசெய்துக் கொண்டிருக்கஅநேக
ஜெனங்கள்வந்து பகவந்நாம சங்கீர்த்தனங்களைக்கே
ட்டு ஆனந்தித்துப் போவார்கள் இவர்கள்பாவிகளா
யிருந்தும் பகவந்நாம சங்கீர்த்தனைகள் கேட்டுக்கொ
ண்டிருப்பதினாலே திடமாகிய பக்தியுண்டாகியது
ஸ்ரீஹரியினுடைய கிருபையினாலே மெத்தசாதுக்க
ளாகினார்கள் இதுவுமன்றி ஒவ்வொருவரும் எந்தெ
ந்த கோரிக்கைகொண்டு பிரார்த்திக் கின்றார்களோ
அவரவர்களுக்கு அந்தந்தக் கோரிக்கைகள் அனு
கூலமாகுவதால் மென்மேலுஞ் ஜெனங்கள் அனே
கர்கள்வந்து சாங்கதேவரைக் கண்டு சேவித்து போ
வார்கள்.

இப்படிப்பட்டக் கீர்த்திப் பிரபாவத்துடன் சா
ங்கதேவர் போயிக்கொண் டிருக்கையில் அங்கொரு
கிராமத்தினில் அதிக கெர்வங்கொண்ட பண்டாரங்க
ளிருந்தார்கள் அவர்கள் கொடுமையானமந்திரங்கள்
அனேகமாகக்கற்றுத் தங்களுக்குநிகரான மந்திரவா
திகளும் சமர்த்தர்களும் இப்பூமண்டலத்தினிலெங்கு
மில்லையென்று ஆங்காரமடைந்து நாயொன்றைவளர்
த்து அதற்கு சாங்கதேவரென்ற பேரை வைத்திருப்
பதினாலே பண்டாரங்களுக் கெல்லாங் குருவாகிய
பெரியபண்டாரம் அந்தநாயை நன்றாகவளர்த்துச்சா
ங்கதேவரை அவமானப்படுத்த வேணுமென்று எண்
ணியிருந்தான் இப்படிக்கிருக்கையில் சாங்கதேவர்
அங்குவரக்கண்டு அந்தப் பெரியபணடாரம் மதிப்ப
ற்று வாய்பேசாமலிருந்தான் அக்குறிப்பையுணர்ந்து
சாங்கதேவர் பண்டாரங்களுக் குருக்களாகிய பெரிய
பண்டாரத்தின் திருவடிகளில் விழுந்து பணிந்தார்
அதற்குமவன் ஒன்றுஞ்சொல்லாமல் மெத்தகௌரவ
மடைந்திருந்து வணங்காமல் சாங்கதேவரைநோக்கி
ஓஐயா சாங்கதேவரே அதோயிருக்கும் ஆசனத்தின்
மீது வீற்றிருமென அதற்கந்த சாங்கதேவர் பெரிய
பணடாரஞ் சொல்லியபடி ஆசனத்தின்மீது உட்கா
ராமலே இருக்கக்கண்டு பெரியபண்டாரம் ஓ ஐயா
சாங்கதேவரே ஏதுக்குநிற்கவேணும் இந்த ஆசனத்
தின்மீ திருமென்றுக் கையைப்பிடித்து வலிக்கக்
கண்டு சாங்கதேவர் ஒபெரியபண்டாரமே நீர்போட்
டிருக்கும் ஆசனத்தின்கீழ் பெரியபள்ளமொன்றிருக்
கின்றது இதையானறியேனென்றோ என்னைமோசப்
படுத்த யெண்ணியிருக்கின்றது நீதியாகுமோ ஆயி
னும் என்னைப்படுகுழியில் தள்ளவெண்ணின யுன்ம
னஞ் சிதரும்படியாகச் செய்கிறேன் பாருமென்று
சொல்லி அந்த ஆசனத்தைத் திரிஷ்டித்துப் பார்த்த
மாத்திரத்தில் அதுபத்தியெரிந்து போகக்கண்டப்
பண்டாரம் மெத்தபயந்து திடுக்கென யெழுந்துச்
சாங்கதேவருடைய திருத்தாட்டாமரைகளில் விழுந்
துப்பணிந்து எழுந்து ஒசுவாமி சத்குருநாதரே அடி
யேன் தேவரீருடைய மகுத்துவத்தை யறியாமல் சா
மாண்யரென்றெண்ணி கெர்வித்துக் கபடஞ்செய்யத்
துணிந்த நாயேன்மீதுக் கிருபைகூர்ந்துக்ஷமித்தருள
வேணுமென்று வேண்டிப் பின்னுஞ் சொல்லுகின்
றான் ஒசுவாமி யோகநிஷ்டாபரரே இப்போது தேவ
ரீர் திருஷ்டித்துப் பார்த்தவுடன் யெறிந்துபோயின
ஆசனத்தை மறுபடியும் உண்டாகும்படி தயைபுரிய

வேணுமென்று பணிந்தான் அப்போதுசாங்கதேவர் எறிந்துபோயின ஆசனத்தின்மீது விபூதியை மந்திரித்துத் தெளித்தார் உடனே அந்தஆசனமானதுமுன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிக சிங்காரமாகியும் புதுமையுமாகி விளங்கியது அதை அப்பெரியபண்டாரமும் அனேக ஜெனங்களுங்கண்டு இதுவிந்தையிலும் விந்தையாக விருக்கின்றதென்றுப் பிரமித்துயிருக்கையில் பண்டாரங்களுக்கு குருக்களாகிய பண்டாரம் சாங்கதேவரை நோக்கிச் சொல்லத் தொடங்கினன்.

ஒசுவாமி சாங்கதேவரே தயவுசெய்து இன்றைய தினம் இங்குபுசித்துப் போகவேணுமென்று வேண்டிக்கொண்டான் அதற்கு சாங்கதேவர் சம்மதித்துத் தன்னிடமிருக்கும் பிராமணர்களை நோக்கி ஒபிராமணர்களே சீக்கிரம் பிரசாதஞ் செய்யுங்களென்று நேமித்து அவர்களும் பிரசாதஞ் செய்தானவுடனேசாங்கதேவர் பண்டாரங்களை யழைத்து நாமெல்லோரும் ஒரேபந்தியாய் யுட்கார்ந்து புசிக்கலாம் வாருங்களென அதற்குப் பண்டாரங்களும் ஒப்புக்கொண்டார்கள் உடனே சாங்கதேவர் தளிகையிலேபோடச்சொல்லி யாவரையும் ஒரேபந்தியா யுட்கார்ந்திருக்கும்படி பிராமணர்களைக் கொண்டு பரிமாரச்செய்துத் தானும் உட்கார்ந்துப் புசிக்கச்சித்தமாகிப் பெரியபண்டாரத்தை நோக்கி உங்களுக்காயிருக்கும் பதார்த்தங்களைக் கொண்டுவரச் சொல்லுமென்று நேமித்து யாவத் பதார்த்தங்களுடன் அக்கணமேபரிமாரியானபின்பு சாங்கதேவர் ஸ்ரீஹரிக்கி நிவேதனித்து அர்ப்பணஞ்செய்து பெரியபண்டாரத்தை நோக்கி நீங்களுஞ் சிவபெருமானுக்கு நிவேதனித்து அர்ப்பணஞ் செய்யுங்களென்ற மாத்திரத்தில் அவரவர்கள் லிங்கமிருக்குஞ் செச்சையை யவிழ்த்துப் பார்க்கிறபோது காலனுக்குக்காலனாகிய சிவபெருமான் முத்திரையாகிய லிங்கங்களை காணாமல் வெற்றுசெச்சைகளிருக்கச் சீஷர்கள் பெரியபண்டாரத்தின் முகத்தைப்பார்க்கப் பெரியபண்டாரமானவர் சீஷர்கள்முகத்தைப் பார்த்துப் பங்கப்பட்டு மெத்தலஜ்ஜை யடைந்தவனாகி சாங்கதேவரை நோக்கி ஒசுவாமி சத்குருநாதரே தேவரீரும் தங்கள் சீஷவர்க்கங்களும் முன்னதாகப் புசியுங்கள் நாங்கள் பின்னிட்டுப் புசிக்கின்றோம்எனெனில் சதாசிவமூர்த்தியானவர்எங்கள்மீது கோபித்து எங்களைவிட்டு மறைந்துபோயினர் அவர் வந்து ஒவ்வொருவரிடத்திலும் லிங்காகாரமாய் சேவை கொடுத்தபின்பு பிரசாதத்தை அவருக்கர்ப்பணஞ்செய்து பின்னரே நாங்கள்புசிப்போம் ஆகையால் எங்களையிட்டு நீங்கள் கர்த்திருப்பது மெத்தசந்தோஷமாகுமாதலால் தயவுசெய்து நீங்கள் புசியுங்களென்று வெகுவாக வேண்டிக்கொண்டான் அப்போது சாங்கதேவர் பண்டாரக்குருக்களை நோக்கி ஐயா குருக்களே உங்களில் யாரோபசியினால்வாடியுபவாசமாக யிருக்கின்றார்கள் அவரைக்கருதி யழைக்காமல நீங்கள்மாத்திரம் புசிக்க சித்தமாயினதால் அந்ததோஷத்தின் பலனாது நீங்கள்பூசிக்கும் லிங்கங்களே காணாமல் மாயமாய்ப் போயினதுகள் ஆதலால் உபவாசமாகவிடுத்து யாரை மரந்தீர்களோஅவரையழைத்து உங்களுடன் கூடவைத்துக் கொண்டு புசிப்பதல்லவோ நன்று அவரையங்கு தனியவிடுத்து நீங்கள் மாத்திரம் புசிப்பதற்கு முயன்றது நீதியோ வெனக்கேட்டு அந்தகுருக்கள் ஒசுவாமி சாங்கதேவரே ஒருவரையும் நாங்களுபவாசமாகப் பசியுட னிருக்கும்படி மனமாரவிடுத்து நாங்கள் புசிக்க எண்ணங்கொண்டவர்களே அல்லவென்றுசொல்லக்கேட்டுச்சாங்கதேவர் நன்றுயோசித்துப் பாருங்கள் யாராகிலுமொருவரிருக்கவேணும் இல்லாவிட்டால் லிங்கங்கள்மாயமாய்ப் போவதற்குக் காரணமேயில்லையெனமறுபடியுமக் குருக்கள் வெகுவாக யோசித்துப் பார்த்தும் கவனப்படாமையால் மேலும் யோசித்துக்கொண்டிருந்தான்.

அப்போது சாங்கதேவர் ஒகுருக்களே சுவானமொன்றுக்கு என்பேரையிட்டு மெத்தப் பிரியமாய் வாசலில்கட்டி வளர்த்துக்கொண் டிருந்தீரல்லவா அந்த சுவானத்தை இப்போதென்னைக் கண்ட மாத்திரத்தில் பிழைக்கடையினில் ஒளித்துவைக்க வேண்டிய காரணமென்ன அப்படி நீயொளித்துவைத்த சுவானமே யுங்களுடையலிங்கங்களையெல்லாம்விழுங்கிவிட்டதெனக்கேட்டு குருக்களின் சீஷனொருவனோடி சுவானத்தைப் பிடித்துக்கொண்டுவந்து சாங்கதேவர்முன்னம் விடுத்தான் சாங்கதேவரும் அந்த சுவானத்தை நோக்கி நீகுக்கலாகியும் லிங்கங்களை யபகரிப்பது நன்றன்று அன்னியிலும் உன்னை வெகுப்பிரியமாகப் போஷித்துக் கொண்டிருக்கும் இவர்களுடைய லிங்கங்களை நீ யபகரித்துக்கொண்டது உண்டவீட்டிற் கிரண்டகஞ் செய்ததைப் போலாயிற்று ஆகையால்இந்த சிவபக்தர்களுடைய லிங்கங்களை தயவுசெய்து சீக்கிரமாகக் கொடுத்து விடுமென்று நேமிக்க உடனே அக்குக்கலானதுத் தலையைக் கவிழ்த்துக்கொண்டப்போது அவர்களுடைய லிங்கங்களை யெல்லாங் கக்கியது அந்த விந்தையை யருகினிலிருந்து பார்த்தகுருக்கள் இதுவென்ன ஆச்சரியம் நமதுசீஷர்களுடைய

செச்சைக்குள்ளிருந்த லிங்கங்களை இந்தகுக்கலெப்
படி விழுங்கியது இதையோசிக்கு மிடத்தினில் விந்
தையினும் விந்தையாக விருக்கின்றதென்றுக் கருதி
அவரவர்கள் லிங்கங்களை யவரவர்களெடுத்துப் பிர
சாதத்தை நிவேதித்து யாவரும் புசித்துத் திருப்தர்
களாகி சாங்கதேவரைப் பார்க்க நாணமடைந்தவர்க
ளாகி ஓடிப்போகயெத்தனித்திருப்பதை சாங்கதே
வருணர்ந்து அப்பண்டாரங்களையெல்லாம் ஓடவிடா
மல் படக்கி யாவரையும்உட்காரும்படிக்கிச் சொல்லி
அந்த சிவபக்தர்களையும் அவர்களுக்குக் குருக்களா
யிருப்பவரையும் நோக்கி ஓசிவபக்தர்களேயான்சொ
ல்லுவதைக் கவனித்துக் கேளுங்கள் அதென்னவெ
னில் வித்துவத்திறமையும் சகலலட்சணங்களும்மகுத்
துமமும் மந்திரயந்திரபலமும்சம்பத்தும் உங்களுக்கு
அனுகூலமாகி யிருந்தபோதிலும் இவைகளனைத்தும்
மென்மேலும் பெருகுவதற்கு சாந்தம் தயை ஜீவகா
ருண்ணியம் இருக்கவேண்டும் இவைகளிருந்தால்அப்
புருடனுக்கு எப்படிப்பட்ட காரியங்களும் எளிதி
னில் கைவல்லியமாகும் மேற்சொன்ன குணங்களில்
லாவிடில் எப்படிப்பட்ட மகுத்துவ முடையவனுக
விருந்தபோதிலும் அப்புருடனுக்குக் காரியநஷ்டங்
களேயன்றி யொருகாரியமும் சித்தியாக மாட்டாது
ஆகையால் துர்சேஷ்டைகளை இன்றுமுதல்விடுத்துச்
சகலபூதங்களிலும் உள்ளும் புரம்புமாய் சாக்ஷாத்ஜெ
கதீசன் வசித்துக்கொண் டிருப்பதால் நீங்கள்கெர்வ
த்தைவிடுத்து யாருக்குந் தொந்திரசுகொடாமல் இரு
க்கவேணும் அப்படிக்கிருப்பீர்களேயாகில் உங்களு
க்குச் சகலசம்பத்துகளும் நிறைந்து லட்சுமி வல்லப
னுக்குத் தொண்டர்களாகி நீடித்தகாலம் வெகுசந்
தோஷமாக யிருப்பீர்களேயாகில் கரதலாமலகலம்
போல ஸ்ரீஹரியினுடையநிரதிசயானந்தமாகும் ஸ்ரீ
வைகுந்தமாநகரமானது உங்களுக்குக் கிடைக்கும்
என்றுசொல்லியசாங்கதேவரை நோக்கிப்பண்டாரங்
களுக்குக் குருக்கள் சொல்லத் தொடங்கினன்.

ஓசாங்கதேவரே யான் தேவரீருடைய மகுத்து
வத்தையறியாமல் யென்மந்த புத்தியாகும்துர்க்குண
த்தினலே தங்கள்பேரை நாயிக்கிட்டுவெகுபிரியமாக
போஷித்துக்கொண்டு தங்களையவமானப்படுத்தயோ
சித்ததொன்று ஆசனத்தின்கீழே படுகுழியொன்று
வெட்டி படுகுழியில் விழும்படி கபடஞ்செய்த மாபா
வியாகுமிவன் தப்புகளைக் கருதாமல் ஒப்புகளாகக்
கொண்டு க்ஷமித்து ரக்ஷிக்கவேணுமென்று விழுந்து
பணிந்து எழுந்து ஓசத்குருநாதரே இனிமேல் தாங்
கள் சொல்லியவண்ணம் மமகாரத்தை விடுத்துச் சா
துக்களையடுத்து பகவந்நாமத்தைப் படித்துக்கெட்ட
வெண்ணங்களைக் கெடுத்து ஏழைப் பரதேசிகளுக்கு
இல்லையென்னமல் ஈவிசொடுத்துப் பூததயை பச்சாத்
தாபங்களைச் சாதனஞ் செய்துக்கொண்டு சதாகால
மும் தேவரீருடைய திருத்தாட்டாமரைகளை தியானி
த்துக்கொண்டு மிருக்கின்றேன் எனதையனே என்று
பணிந்தான் அப்படிப்பணிந்த குருக்களைச் சாங்கதே
வர் இருகரங்களாலுந் தாவியெடுத்துத் தழுவிக்கொ
ண்டுப் பல்ஆசிகள்கூறிச் சுபமுடனிருமென்று சொ
ல்லிப் பிதருபட்டணத்தைநோக்கிநடந்து அன்னக
ருக்கருகினி லிருக்குஞ் சோலையிலிறங்கி ஸ்னனுட்டா
னங்களை முடித்துப் பலகாரங்கள் புசித்துத்தாளமிரு
தங்கத் தம்பூர்முதலாகிய கருவிகளுடன் கலந்து ஸ்ரீ
ஹரியின் குணனுபவமாகிய கதைகளைப் பன்னிசை
யுடன் பாடிக்கொண்டிருக்க அதைக்கேழ்க்கும் பொ
ருட்டு அனேக ஜெனங்கள்வந்து சேர்ந்திருந்தார்கள்
அப்போது அரசனிடமிருக்குஞ் ஜோசிய ரொருவர்
ஆசாரவாசலில் நின்றுங் கேட்டுக்கொண் டிருந்தான்
இப்படியந்த ஜோசியர் ஒருஜாமபரியந்தம் மறைந்து
கேட்டுக் கொண்டிருந்து மங்களம் பாடினவுடனே
அந்தஜோசியர் சாங்கதேவரை நோக்கிச்சொல்லுகின்
றார் ஓசுவாமி சாங்கதேவரே இப்பட்டணத்தை யா
ளும் அரசன் மகாதுஷ்டன் இவன் விஷ்ணுபஜனை
செய்கிறவர்களையும் திருமண் ஸ்ரீசூர்ணம் தரிப்பவர்
களையும் பரமசாதுக்களையும் பிடித்து காராகிருகத்தி
னில் போட்டும் விஷ்ணுவாலயஞ் சிவாலயங்களையிடி
த்தும்மசூதுகட்டும்படியாக உத்திரவுசெய்திருப்பது
மன்றியும் தானதருமம் பரோபகாரமுதலான நல்வி
ஷயங்களை யாருஞ்செய்யக் கூடாதென்றுந் தண்டோ
ரா போடும்படியும் மந்திரிகளுக்குக் கட்டளை யிட்டி
ருக்கின்றான் மேலும் இவ்வரசன்செய்யும் அக்கிரமங்
களறிந்து பிராமணர்கள் சாக்ஷாத் பாண்டுரங்க விக்கி
ரகத்தை ஒளித்துவைத்துக் கொண்டார்கள் அப்பண்
டரிபுரமெல்லாம் பிராமணர்கள் மயமாகி முன்னமிரு
ந்தது இப்போதப்பண்டரிபுரமெல்லாந் துலுக்கர்மய
மாகியிருக்கின்றது இப்படிப்பட்டகொடியதுஷ்டன்
அரசனுகி யாளுகைசெய்வதால் மிருதங்கதாளதம்பூர்
முதலானகருவிகளுடன்கூடி ஸ்ரீஹரியின் குணனுப
வஞ்செய்கிற மெத்தசாதுவாக விருக்கின்றீர் உமது
கோஷ்டத்தை யரசன்கேட்டால்மெத்தயிடுக்கண்கள்
படச் செய்விப்பன் அன்றியும் பகவத்பக்தர்களைக்
கண்டால் வெகுதூரம் விரட்டியோட்டிடுவன் இவன
து அரசாக்ஷியில் நல்விஷயங்களும் சாதுக்கள்சேவை
யுங் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை இன்றென்ன
மோ அத்தி பூத்ததென்பது போலச் சாதுவாகிய

தேவரீரைக்கண்டுசேவித்தேன் ஆகிலும்இப்போதிந்த அரசனுக்குச் சொல்லமுடியாத கஷ்டம்வந்து சம்பவித்திருக்கின்றது அதென்ன கஷ்டமெனில் தன்னுடையபட்டத்து ஸ்ரீயைச்சர்ப்பங் கடித்து இறந்து போயினள் இதையறிந்து அனேகவைத்தியர்கள்வந்து மணிமந்திர அவிழ்தங்களை உபயோகப்படுத்தியும் அனுகூலப்படாம லிருக்கின்றது இந்தவிசனத்தினால் அரசன் நீர்செய்யும் பஜனையைக் கருதாமலிருக்கின்றான் அவனுக்கிந்த விசனமிராத பக்ஷத்தில் நீர்செய்யும் பஜனையுடன் ஊருக்குப் புரம்பாகயோட்டி விடுவன் மேலும் யான்பார்த்த வரையில் எவர்களும்ஒரு ஜாமபரியந்தம் ஆசாரவாசலின் எதிரில் நின்றுக்கொண்டு பஜனைசெய்துக் கொண்டிருந்ததில்லை உம்முடையகாலம் நற்காலமானபடியால் ஒருஜாம பரியந்தம் பஜனைசெய்துக் கொண்டிருந்தது மன்னியில் யாதொரு அவமானமும் நேரிடாமல் தப்பித்துக்கொண்டீர் என்றுசொல்லிய ராஜஜோசியரை நோக்கிச் சாங்கதேவர் சொல்லத் தொடங்கினர்.

கேளுமையா ராஜஜோசியரே சாக்ஷாத்ஸ்ரீபாண்டுரங்கனது கிருபையால் கணநேரத்திற் குள்ளாக இராஜபத்தினியை யெழுந்திருக்கச்செய்விக்கிறேன் இச்செய்தியை அரசனுக்குத் தெரியப்படுத்து மென்று சொல்லி மேலுஞ் சொல்லுகின்றார் ஓஜோசியரே இவ்வுலகத்தின்கண் அரசனாகிலு மினியெப்படிப் பட்ட மகுத்துவமுடையவனாகி யிருக்கினும் மதத்தினாலே அக்கிரமங்களைச் செய்ய முயலுவனேயாகில் அவனுக்கு வாராததுன்பங்கள் யாவும் வந்துசம்பவிக்கும் ஆகையால் இவன்நடத்தும் கொடுங்கோலே இவனுக்கிப்படிப்பட்ட ஆபத்து வந்துநேர்ந்ததென்று சொல்லக்கேட்டு அந்தஜோசியர் விரைந்தோடிச் சென்று அந்தப்புரத்தை யடைந்து அரசனைக்கண்டு ஓசுவாமி இன்றுதினம் நமதுபட்டணத்தில் சாங்கதேவரெனும் பரமசாது ஒருவர் அனேகசிஷ்ஷர்களுடன் வந்திருக்கின்றார் அவரை யழைப்பித்தால் உடனேராஜபத்தினியை யெழுப்புவா ரெனக்கேட்டு வேந்தன் விரைவாக அந்தசாங்கதேவரை அழைத்துக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட அந்தப்படியே பலராஜதூதர்கள் விரைந்தோடிச் சாங்கதேவரைக்கண்டு பணிந்து ஓசுவாமி தங்களை எங்களரச னழைத்துவரச் சொன்னாரெனக் கேட்டுச் சாங்கதேவர் தன்சிஷ்ஷர்களுடன் கருவிகளிற் கலந்து பகவந்நாம சங்கீர்த்தனம் பெருத்த கோஷ்டத்துடன் பாடிக்கொண்டேசென்று அந்தப்புரத்தை யடைந்து அரசன் சமீபமாக வருகிறபோது அரசன்கண்டு அலக்ஷியமாககெர்வங்கொண்டு வணங்காம லிருந்தான் அதைக்கண்டு சாங்கதேவர் விபூதியை மந்திரித்துத் தெளித்தார் அப்போதுசாங்கதேவர் வானுலகையாளுந் தேவேந்திரனைப்போலத் தோத்தகண்ட அரசனுக்குக்கெர்வம்நீங்கிசாந்தமுண்டாகி சாங்கதேவர் திருவடிகளில் விழுந்து பணிந்து ஓசுவாமி இம்மங்கை சர்ப்பங்கடித்திறந்தாள் இவளை தேவரீர் எழுப்பித்தர வேணுமென்று வேண்டிக்கொள்ள அதற்குச் சாங்கதேவர் சந்துஷ்டராகி அரசனையழைத்து ஓவேந்தனே இந்தவிபூதியை அம்மங்கையின் நெற்றியிலிடுமென அந்தப்படியேஅரசனும்விபூதியை அம்மங்கையி னெற்றியிலிடப் பிணமாயிருந்த ராஜபத்தினி நித்திரைநீங்கியெழுந்ததைப்போலஉயிர் பெற்றெழுந்து பெருத்தக் கூக்குரலிட்டுபற்பலவிகாரமான சேஷ்டைகளைச்செய்ய அரசன்கண்டு அச்செய்தியைச் சாங்கதேவருக்குத்தெரியப்படுத்த அதற்குச் சாங்கதேவர் ஓஅரசனே விரைவாக அந்தப்புறத்திற்குச்சென்று நினதுமங்கையை நோக்கி உனக்கெது வாஞ்சையோ அதைச் சொல்லுமெனக் கேளுமையாவென்று சொல்லக்கேட்டு அரசன் மறுபடியும் அந்தப்புறத்திற்குச் சென்று அடிபெண்ணே என்னிரு கண்ணே உனக்கெதுவாஞ்சையோ அதைத் தெரியப்படுத்தினா லவ்வண்ணமுனக்குத்தருகிறேனென அதற்கந்த ராஜபத்தினி அரசனைநோக்கி ஓசுவாமி எனக்கொன்றும் வேண்டுவதில்லை அடியார்களுக்குயிர் தந்து காப்பாத்தின பாண்டுரங்கரது பக்தராகிய சாங்கதேவருடைய வாஞ்சையைத் தீர்த்தனுப்பும் இதுவேயெனக்குண்டாயிருக்குங் கோரிக்கை யென்றனள்.

அவ்வசனத்தைக்கேட்டு அரசன் மெத்தப்பிரியத்துடன் சாங்கதேவரிடஞ் சென்றுவணங்கி ஓசுவாமி சத்குருநாதரே உமக்கென்னவேண்டுங் கேளுந்தடையின்றித் தருகிறேனென அதற்குச் சாங்கதேவர் ஓவேந்தனே எனக்குப் பொருளின்மீது இச்சையே கிடையாது சகலஜெனங்களும் வந்து தினந்தோறுஞ் சேவித்துப் பரமானந்த மடைந்துபோகும் பண்டரி ஆலயத்தைத் தங்கள்வசப் படுத்திக்கொண்டு தப்பு வழியில் நடப்பதால் இந்த ஆபத்துகளெல்லா முனக்குவந்து எளிதில்நேர்ந்தது ஆகையால் இனிமீது துலுக்கர்களுடைய பாதைகளெப்பபாதைக்கும் நேரிடாவண்ணம் அப்பண்டரிபுரத்திற்குந் துலுக்கர்களுக்கும் யாதொருசம்பந்தமு மில்லாம லிருக்கும்படி எனக்கொருதாக்கீது யெழுதி முத்திரையிட்டுக் கொடுக்க வேணுமென்று வினயமாகக்கேழ்க்க அதற்கந்த அரசன் என்றுமில்லாத சந்தோஷசித்தனாகி உடனே துலுக்கர்களுக்கும் பண்டரிபுரத்திற்கும் யாதொரு

சம்பந்தமில்லவே இல்லையென்றொரு தாக்கீதையெ
ழுதி அத்தாக்கீதினில் தன்னுடையமுத்திரையையிட்
டுச் சாங்கதேவரிடங் கொடுத்துச் சிலசேவகர்களைச்
சாங்கதேவருக்குச் சகாயமாகக் கூட்டி அனுப்பினன்
உடனே சாங்கதேவர் அத்தாக்கீதைக் கைப்பற்றி
அரசனிடம் விடைபெற்றுக்கொண்டுசிஷர்களுடனும்
சேவகர்களும் தன்னைச்சூழ்ந்துவர நடந்து பண்டரி
புரத்தைச் சேர்ந்து அங்கிருக்குந் துலுக்கர்களுக்கு
அரசன் கொடுத்தத் தாக்கீதைக்காட்டித் துலுக்கர்
களையெல்லாஞ் சந்நிதியைவிட்டு வெளியேபோகும்
படித் திட்டஞ்செய்து பிராமணர்கள் ஒளித்துவைத்
துக் கொண்டிருநதப் பாண்டுரங்க விக்கிரகத்தைக்
கொண்டுவரச் செய்து வேதவிதிப்படி விக்கிரகத்தை
ஸ்தாபனஞ்செய்து சம்புரோட்சணைசெய்வித்துஅந்த
நாற்பதுநாளும் பிராமணர்களுக்குத் ததியாராதனை
குறைவரநடத்தி எப்போதும்போல ஹரிபக்தர்கள்
பகவந்நாம பாராயணஞ்செய்து பெருத்த கோஷ்டி
யாகச்சேர்ந்து ஓசையுடன் அச்சுதா-கிருஷ்ணா-கோ
விந்தா-ஹரிமுகுந்தா-வைகுந்தா-நந்தநந்தா வென்று
தங்களை மறந்துப் பாடியாடிப் பரமானந்த மடைந்தி
ருந்து உடனே சாங்கதேவரைக் கண்டு ஓசுவாமி சத்
குருநாதரே துலுக்கர் தங்கள்வச மாக்கிக்கொண்டு
எங்களையெல்லாம் ஊரைவிட்டு ஓட்டிட நாங்களும்
இவ்வூரைவிட்டு எங்களுடையவீடுமாடு முதலானதுக
ளையும்விட்டுப் பரதேசிகளைப் போலாகி அடுத்தகிரா
மங்கள் தோறுஞ்சென்று பிட்சையெடுத்துப் பலநா
ளாய் ஜீவனஞ் செய்துகொண்டு வெகுகஷ்டப்பட்டு
க்கொண்டிருந்த எங்களை மறுபடியும் பண்டரிபுரத்தி
னில் குடியேத்தி வைத்ததுமன்றியும் சாக்ஷாத் பாண்
டுரங்கநாதனையும் முன்போல ஸ்தாபனஞ்செய்வித்து
சம்புரோட்சணைநடத்தி பதினாயிரம் இருபதுனாயிரங்
கணக்காகவந்த பிராமணர்களுக்கு நாற்பதுநாளுங்
குறைவரத் ததியாராதனை செய்வித்துநித்தியோற்சவ
பக்ஷோற்சவ பஞ்சபர்வங்களும் விமர்சையாகநடத்
தும்படியான நேமனஞ்சாதித்த சத்குருநாதரே எம்
பெருமானுக்கு நிகரான மகுத்துவங்களமர்ந்த ஜெய
சீலரே எட்டுத்திசைகளினு மட்டில்லாக்கீர்த்திபெற்ற
நயமூலரே என்று பலவாறு புகழ்ந்துக் கொண்டிருந்
தார்கள்.

பின்பு இந்தச்சாங்கதேவரும் பிராமணர்களும்
சதாகாலமும் இடைவிடாமல் ஸ்ரீஹரிபாண்டுரங்கன
து நாமத்தைப் பாடியாடி மெய்மறந்து தலைவனிற்
கலந்துப் பரமானந்தத்துட னிருக்கிறபோது சாங்க
தேவர் அப்பண்டரிபுரத்தினில் ஒருவருடகாலம் ஸ்ரீ
ஹரியைப் பலவாறு புகழ்ந்து ஆராதனை முதலான
உபசாரங்களால் பூசித்துக்கொண்டிருந்து ஒருநாள்
மெத்தப் பிரியத்துடன் இந்தச்சாங்கதேவர் ஸ்ரீஹரி
யை நோக்கி ஓபக்தர்கள் நேசா-பாண்டவர்கள் விசு
வாசா-ஜெகதீசா-சர்வேசா-ஆசா-பாசவினசா எவ்வி
டத்தினி லெனக்குச் சமாதிநேமித்திருக் கின்றீரோ
அதைத்திருவாய் மலர்ந்தருள வேணுமென்றுவேண்
டிக்கொள்ள அதற்கு ஸ்ரீபாண்டுரங்கநாதர் ஓஹரிபக்
தர்களிற் சிறந்தவரே உமக்குச் சமாதியானது கோ
தாவரிதீர்த்தத்தில் தயார்செய்துக்கொண் டிருக்கிற
திருப்பள்ளியாகிய சமாதி சித்தமாயிருக்கிறபடியால்
அதிலிறங்கிப் புனிதனைக் கடவாயென்று ஆசீர்வதி
த்திருக்கின்றோம் ஆகையால் நீ அங்குசென்றிருப்ப
தே உமக்குத் தகுதியானத்தலம் மேலும் உன்னு
டைய மூத்தகுமாரனாகிய கேசவனுக்கும்இளையகுமா
ரனாகிய விட்டலனுக்கும் யானுனக்குபதேசித்தஷடா
க்ஷரத்தை யுபதேசித்துவிட்டு நீ சமாதியினி லிறங்கக்
கடவாயென்றுப் பகவான் கட்டளையிட அந்தப்படி
யே செய்விக்கிறேன் என்றுசொல்லிபகவானிடத்தில்
விடை பெற்றுக்கொண்டு சிஷர்களுடன் தானுமாகப்
புரப்பட்டு நடந்து கோதாவரிதலத்தையடைந்துதன்
பெரிய குமாரனையழைத்து வேதரகசியமாகிய ஷடா
க்ஷரத்தை உபதேசித்து அப்புதல்வனைநோக்கி அப்
பாகேசவா இந்த ஷடாக்ஷரமந்திரத்தை உன்தம்பி
யாகிய விட்டலனுக்குச் சிலவருடங்கள் கடந்தபின்
உபதேசஞ் செய்விப்பது மன்னியிலும் இந்தவுலகத்
திற்கு நீநன்மையே தேடிக்கொண் டிருக்கக்கடவா
யென்றுக் கட்டளையிட்டு அங்கு அனேக ஜெனங்கள்
கூட்டமாயிருக்க அவர்களுக்கெல்லாந் தெண்டமிட்டு
யான் சமாதியாகிறேன் யென்விஷயத்தினிலெல்லோ
ருக்குந் தயவிருக்கட்டுமென்று சொல்லி அந்தசாங்க
தேவர் சமாதியினி லிறங்கினர் அப்போதங்கிருந்த
சாதுக்களெல்லாங் ஜெயவிட்டல விட்டலவென்று கர
தாளங்கள்போட்டு கோஷித்தார்கள். சிலஜெனங்கள்
ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனங்கள்பாடியாடிமெய்மறந்து
சொக்கியிருந்து உடனேதெளிந்து சாங்கதேவரைத்
துதிசெய்துக் கொண்டே தங்கடங்கள் இருப்பிடம
டைந்தார்கள் உடனே சாங்கதேவர் மூத்தகுமாரனா
கிய கேசவன் தன்தந்தை சமாதியிலிருக்கப் பார்த்து
வெகு ஆடம்பரத்துடன் அவருக்கு நடத்தவேண்டிய
சமாதிவிதிகளி லொன்றேனுங் குறைவின்றிநடத்தித்
தம்பியாகிய விட்டலனை போஷித்துக் கொண்டும்
தினந்தோறுந் தந்தையின் சமாதியைப் பக்திவினய
த்துடன் வலம்புரிந்துக் கொண்டும் வெகுகாலம் கே
சவப்பெருமாள் சந்நிதி கைங்கரியத்தைக் குறைவி
ன்றி நடத்திக்கொண்டி ருந்தான்.

இந்தப்படி யந்தக்கேசவன் நாடோறுந் தப்பாமல் தந்தையின் சமாதியைப் பூசித்துக்கொண்டு வருகிறபோது சாங்கதேவர் பனிரெண்டு வருடகாலம் அன்னியர் கண்களுக்குப் புலப்படாமல்சஞ்சரித்துக் கொண்டிருந்துப் புதல்வர்களாகிய கேசவனுக்கும் விட்டலனுக்கும் நேர்ந்திருக்கும் தீராவிரோதத்தை யுணர்ந்து அவர்கள் விரோதத்தைப் போக்கி இருவரையும் ஒருமித்திருக்கும்படி செய்யவெண்ணி ஒருநாளவர்கள் முன்னந் தோன்றினர் அவரைக்கண்டமாத்திரத்தில் புதல்வர்களிருவரும் ஆனந்தம் பிரமானந்தமென்னு மிரண்டையுங் கடந்து பரமானந்தத்தை யடைந்து திரேகம்பூரித்து மயிர்க்குச்சிட்டு புளகாங்கிதமுடன் எழுந்தோடி யெதிர்சென்றுஎங்களைப் பெற்றதந்தையே இத்தனைவருடகாலமாய் எங்குபோயிருந்தீர் சமாதியிலிருந்து விட்டீரென்றல்லோயெண்ணி யுமதுசமாதியைப் பூசித்துக் கொண்டிருந்தோம் எங்கள் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருப்பதற்குக் காரணம் யாதோதெரியவில்லையே யென்றுப் பலவிதமாகப் புகழ்ந்து விழுந்து பணிந்து எழுந்து இருகரங்களையுஞ் சென்மேற் கூப்பிக்கொண்டு அவர்களுக்குள் நடந்திருக்கும் விரோதத்தை விரித்துரைத்தார்கள் அதைக்கேட்டு சாங்கதேவர்சிறித்துஅடா புதல்வர்களே எனக்குப் பிள்ளையாகப்பிறந்த நீங்களிருவரும் இப்படிக்கலக்கப் பட்டுக்கொண் டிருக்கலாமோ புலியின்வயிற்றில் பிறந்தகுட்டிகள் புலிகளாகவே தன்தாய் தந்தையர்கள் நடந்தவழியில் தாங்களும் நடக்கிறபோது மனிதன் வயிற்றினிற் பிறந்த நீங்களும் என்னைப்போலவே பரமசாந்த மூர்த்திகளாகி யிருந்தாலல்லவோ எனக்கு நல்லகீர்த்தி யுண்டாகும் அதைவிடுத்துப் பொன்னைசைப் பொருளாசைப் பெண்ணாசையதிகரித்து ஒருவருக் கொருவர் சண்டைசெய்துக் கொண்டிருந்தால் எனக்கும் நல்லகீர்த்தியில்லை யுங்களுக்கும் புகழில்லை இதையறிந்து நடப்பவர்களை யல்லவோ நல்ல பிள்ளைகளென்று யாவருங் கொண்டாடுவார்கள் இப்படிப்பட்டக்கீர்த்தியைச் சம்பாதிக்கு மவர்களல்லவோ பிள்ளைகள் மைத்தவர்களெல்லாம் அணிப்பிள்ளைக் கீரிப்பிள்ளைஊத்தாம் பிள்ளைகளன்றோ இதையறிந்து இனியாகிலும் யான் சொல்லுவதைப்போல நடந்து நல்லகீர்த்தியை யடையுங்கள் அதென்னவெனில் அப்பா விட்டலா நின்னண்ணனாகிய கேசவனைத் தந்தையைப் போலப்பணிந்து அவன்சொற்படி நடப்பதுன் கடமை அப்பாகேசவா நின்தம்பியாகிய விட்டலனைப் புதல்வனைப்போற் பாதுகாப்பதுன்கடமை இப்படியொருவருக்கொருவர் அன்னியோன்னியமாகக்கலந்திருப்பதால் உங்களையாவரும் மதிப்பார்கள் அதனுலுங்களுக்கு கௌரவமுண்டாகும் இந்தசொல்லை நீங்கள் தட்டிநடந்தால் உங்களிருவருக்கும் அகௌரவமுண்டாகும் இதைநன்றாக ஆலோசித்து நடந்துக் கொள்ளுங்க ளென்றுசொல்லிச்சிறிய புதல்வனையழைத்து ஷடாக்ஷரத்தை யுபதேசித்து இனிமேலாகிலும் புத்தியாக நடந்துக்கொள்ளக் கடவாயென்று நேமித்து மாயமாய் மறைந்துபோயினர்.

இவ்வண்ணம் சாங்கதேவர் புதல்வரிருக்கும்புத்திமதிகளைச்சொல்லி மறைந்துபோயினபின்புஇளையகுமாரனாகிய விட்டலனுக்கு நாளுக்குநாள் பக்தியும் சந்ததியும் பிரபலமாயின அதில் ஏழாவது புதல்வன் சாங்கதேவர் அம்சத்தைப் பெற்றுப் பிறந்தான் அப்புதல்வனுக்கு விட்டலதேவர் கோனேரியென்றுநாமகரணமிட்டு நாளுக்குநாள் செல்வமாக வளர்த்து ஐந்துவயதானவுடனே உபனயன முதலான் சடங்குகளை விதிப்படிநடத்தி கல்விப்பயிர்ச்சியில் விடுத்துச் சகலசாஸ்திர சம்பன்னனாகும்படிக்குச் செய்வித்தார் அந்தக்கோனேரியுந் தந்தையின் சொற்படி நடந்துவந்தமையால் யெல்லோருமவனை மெத்தப் புத்திமானென்றுப் புகழ்ந்துக் கொண்டிருக்கச் சிலவருடங்களுக்கெல்லாங் அந்தக்கோனேரிக்குக்ஞானபக்திவைராக்கியங்க ளதிகரித்துக் கேசவப்பெருமாள் சந்நிதி தருமபரிபாலனத்தினிற் புத்தியைச்செலுத்திக் கொண்டிருந்து ஒருநாள் அந்தகேசவப்பெருமாள் சந்நிதிக்குச்சென்று பூசைமுதலிய துகளும் நடத்திவீட்டிற்குத் திரும்புகையில் அச்சந்நிதியின் கோபுரத்திலொருபக்கம் இடிந்துவிழக்கண்டு மெத்த விசனப்பட்டு மறுபடியுந் திரும்பிச் சந்நிதிக்குட்சென்று மூலஸ்தானத்தினுட்புகுந்து மூலவரைநோக்கி ஓசுவாமி கேசவப்பெருமாளே தேவரீருடைய சந்நிதியை நூதனமாகக் கட்டிமுடித்துக் கும்பாபிஷேக முதலானதுகளும் பிரமோற்சவமும் நடத்தியபின்னரே அடியேன் தீட்சையை வாங்குவேன் மேற்சொன்ன கைங்கரியம் பூர்த்தியாகா முன்னம் தீட்சையை வாங்குவதில்லையென்று சங்கல்பஞ் செய்துக்கொண்டு சந்நிதியை விட்டு வெளிப்பட்டுத் தன்னகத்தை யடைந்துபிரசாதம் ஸ்வீகரித்துத் தன்பாட்டனாராகிய சாங்கதேவருக்கு அனேகஞ்சாதுக்கள் வெகுமதியாகக் கொடுத்துப்போயின திரவிமத்தைச் சந்நிதி கைங்கரியத்துக்கென்று எழுதிவைத்திருந்தபடியால் அந்ததிரவியத்தினில் நாலிலொருபங்கை யெடுத்து சந்நிதி கைங்கரியத்திற்கு வைத்துக்கொண்டு மைத்த மூன்றுபாகத்தையும்பாட்டனார்வைத்ததைப்போலபந்தோபஸ்து

செய்து வைத்துவிட்டு ஒருபாகத்தையெடுத்துக்கொண்டுவந்து சந்நிதியிற் சேர்த்துப் பத்திரப்படுத்திச் சிற்பிகளை வரவழைத்து கிலமாகிய சந்நிதியை நூதனமாகக் கட்டுவதற்கு எவ்வளவுதிரவியம் வேண்டுமோ அவ்வளவுக்குங் கணக்கிட்டுக்கொண்டு வாருங்களென்று நேமித்தார் அந்தப்படியே சிற்பிகள் சென்று ஒவ்வொன்றுக்குங் கணக்கிட்டு மொத்தஞ்செய்து ஒன்பதுலட்ச வராகனுகை ஞச்சுமெதன்றுக் கணக்கிட்டுக் கொண்டுவந்து கொடுத்தார்கள் அக்கணக்கைக் கோனேரி கைக்கொண்டு பார்த்து ஒன்பதுலட்சவராக.னிருக்கத் தானெடுத்துவந்த திரவியத்தைக் கணக்குசெய்ய அதுவும் ஒன்பதுலட்சம் வராகனிருப்பதையுணர்ந்து இனியில்லாத சந்தோஷமடைந்து அத்திரவியத்தைக் கொண்டு வேண்டி யசாமான்களைக்கொண்டு சேகரஞ்செய்து உடனே வேலைகளாரம்பித்து ஒருவருடத்திற்குள்ளாக சந்நிதியைக்கட்டி முடித்து ஆயிரங்கணக்காகப் பிராமணர்களை யழைப்பித்துத் ததிவாராதனையுங் கும்பாபிஷேகமும் நாற்பதுநாள்செய்து மந்திரலோபங் கிரியாலோபமின்றி முடித்து நித்தியோற்சவம்.பக்ஷோற்சவம் பஞ்சபாவங்கள் பிரமோற்சவங்களும் யதாவிதியாய் நடத்திக் கொண்டு மிருந்தார்.

இவரிப்படிக்கிருக்க முன்னமிந்திரனுல்சாபமேற்றும் பூலோகத்திற்கு வந்தமருத்கணரும்பின் புஅழகிய சுந்திரரூபத்தினுல் சாங்கதேவரென்றுப் பலருமழைக்கப்பட்டவரும் கோரக்கநாதருடைய கிருபையினுல் நாராயணடோகியெனுங் கிராமத்தினில் வாசஞ்செய்துக் கொண்டிருந்தபிராமண தம்பதிகளுக்குப் புதல்வராகப் பிறந்து கேசவசாங்கதேவ ரென்றுப் புகழ்பெற்றிருந்த சாதுவானவர் மறுபடியுஞ் சொர்க்கலோகத்தை யடையாமல் அன்னியர்களாலே நிர்மிக்கப்படாததாயும் எந்தகாலத்திலும் அழியாததாகியும் நித்தியமாகியும் சத்தியமாகியும் விளங்கும்வைகுந்தமாநகரத்தை யடைந்து நித்தியசூரிகளுடனும் பாகவத கோஷ்டிகளுடனும் சதாவைகுந்த வாசருடைய சேவையினி லீடுபட்டுக்கொண்டிருந்தார் இதனுல் சொக்காதி போகங்கள் அநித்திய மென்றும் பரமபதபோகம் நித்தியமாகுமென்றுந் தெரியவருகின்றது.

வாழி விருத்தம்.

பத்தியினில்மிகுந்திட்டப் பரமஞானிவாழியே
முக்திபதமடைந்திட மூன்றுருவானுன்வாழியே
சித்தியடைந்திவ்வுலகிற் செழித்திட்டோன்வாழியே
சத்துவகுணசாங்கதேவர் சரணென்றும்வாழிவாழி.

சாங்கதேவர்சரித்திரம்.

முற்றிற்று,

—

ஸ்ரீ

ஸ்ரீ பரப்பிரமணே நமஃ

ஸ்ரீ மத்
கூபாகுயவர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

மகத்தானபாவம்போக்கு மாற்வன்பதத்தைப்போற்றி
இகவாசையற்றுயின்பிற் பேரின்பமேசுகமென்றெண்ணி
மிகமதித்திடமேகொண்டு மென்மேலும்பக்திசெய்துப்
பகவதனருள்பெற்றகூபா குயவர்தாள்பணிகுவோமே.

கதையின் வரலாறு.

ஸ்ரீதாமரையாள் கிருபாநோக்கம் பெற்ற மார்வாடிதேசத்திற் கடுத்த சீதடியெனும்புர மொன்றுளது அச்சீதடிபுரந்தனில் கூபாகுயவரென்றொரு சாதுயிருந்தார் இவர்பிறந்ததுமுதல் ஸ்ரீஹரியையே தியானித்துக்கொண்டிருப்பாரே யன்றி இவ்வுலகமாய்கைக்கு யெவ்வளவும் பிரமிக்காமல் நாமதேவர் கபீர்தாசர்களைப்போல மெத்த வைராக்கியசீலராகி விருந்து தன்னுடைய தேகபோஷணையின் பொருட்டுப் புரியெனுமொரு கன்னிகையைமணந்து இல்லறத்தினில் வசித்துக்கொண்டு ஜெனனமரணமென்னுங் கடலைக் கடப்பதற்கு உபாயமெது வென்றுக் கருதி அக்கடலைக் கடப்பதற்கு ஸ்ரீஹரியின்நாமமேஓடமாகியிருப்பதை யுணர்ந்து சதா ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனங்களைப்பாடிக் கொண்டும் தன்குலத்தொழிலாகிய பாண்டங்களைச் செய்யும்பொருட்டுமண்ணை மிதித்துக்கொண்டே தன்னைமறந்தாடி சொக்கிச்சேர்ந்தும் தெளிவுண்டாயின உடனே அம்மண்ணையெடுத்துப் பாண்டங்களைச் செய்யும்போதும் அப்பாண்டங்களை சூளையிலிட்டு அக்கினியினால் வேகச்செய்யும்போதுவெந்தபிறகு சூளையைப்பிரித்துப் பாண்டங்களை வெளிப்படுத்தி ஓரிடத்தினில் கவிழ்த்துவைக்கிறபோதும் பகவந்நாம சங்கீர்த்தனைகளை செய்துக்கொண்டும் அப்பாண்டங்களை ஜெனங்களுக்குக் கண்டிப்பாக விற்பனைசெய்து அதனால்வரும்திரவியத்தைக்கொண்டுஜீவனஞ்செய்து வருவார் அன்னியிலும் சுகம்வரினும்சந்தோஷிக்காமல் பகவானுடைய கிருபை யென்றும் துக்கம்வரினும் விசனப்படாமல் பகவானுடையகிருணையென்றுங் கருதிச் சுகதுக்கங்களிரண்டையும் சமமாகப் பாவித்துச் சகலகர்மங்களையுங் கிருஷ்ணார்ப்பணஞ்செய்தும் வெகுதெளிவாகத்தான் ஜென்மமெடுத்தது யாதுக்கென்றும் அறுபத்துநான்கு தத்துவங்களையும் அறிந்துத் தன்னைத்தானுணர்ந்துத் தெளிவடைந்துப் பின்னர் பகவானொருவனுண் டென்று அப்பகவானை யடையும்மார்க்கம் இன்னதென்றும்

உணர்ந்து பகவத்தியானஞ் செயதுக்கொண்டிருப்பதே நன்மையென்றும் மைத்தகாரியங்களெல்லாந்தின்மையென்றும் யோசித்து இடைவிடாமல் எப்போதும் ஒன்றாய் சர்வகால சர்வதேச சர்வஅவஸ்தைகளிலும் தியானித்துக்கொண்டிமிருந்தார்மேலும் எந்தசமயத்தினில் அதிதி அப்பாகவதாள் வரினும் அவர்களுக்கு வயிறாரத்திருத்தியாக அன்னமிடுவார் அன்றியும் யெந்தபலாபேக்ஷையுங் கோராமலேயே கிடைத்ததைப் பகவானுக் கர்ப்பணஞ்செய்துப் புசித்து மெத்தவுந் திருப்தியடைந்து அனுதினமும்நாளைப்போக்கிக் கொண்டுவருவார் மேலும் எப்படிப்பட்டப் பரமனுகவிருக்கினும் அவருடைவ பாண்டத்திலிருக்கும் அன்னத்தைப் புசிப்பனேயாகில் உடனே அவனுக்கு ஸ்ரீஹரிபக்திப்பொருந்தச்செய்யும் ஆகையால் அந்தக் கூபாகுயவர் நடந்துவரும் நீதியை என்னவென்று சொல்லுவேன் ஆகிலுமென்புத்திக் கெட்டினமட்குல் விவரித்தேன்.

இந்தப்படியாக அந்தக்கூபாகுயவர் நன்மார்க்கத்தினில் வெகுநீதியாக நாளைப் போக்கிக்கொண்டு வருகையில் ஒருநாள் அவ்வூரையாளுப் அரசன்தூதரைநோக்கி அடாதூதர்களே நமது பட்டணத்திற்கு வெளியிலிருக்குங் கூபாவென்னுங் குயவனை வெகு சீக்கிரமாக யழைத்துவரச் சொன்னதாகச் சொல்லி சீக்கிரம் அழைத்துவரக் கடவீர்களென்றுக் கட்டளையிட்டான் அந்தப்படியே தூதர்களும் வேகமாகயோடிக் கூபாகுயவரைக்கண்டு ஓஐயாகூபாகுயவரே எங்களரசன் உம்மைசீக்கிரம் அழைததுவரச் சொன்னர் ஆகையால் தடையின்றி விரைவாகயெங்கள்பின் வாருமென்று அழைக்கக்கேட்டுக்கூபாகுயவரும்இதோ வந்தேனென்று வெகுசந்தோஷசித்தராகி பகவந்நாமத்தைத் தியானஞ் செய்துக்கொண்டே தூதர்கள் பின்னடந்து ராஜசபையையடுத்து அரசனைக்கண்டுப் பணிந்து பலவாறுபுகழ்ந்து ஓசுவாமியெங்களையாண்டிரக்ஷிக்கும் இறைவனே இந்த ஏழையேனைத் தாங்கள் சபைக்கு வயவழைத்தக் காரணம்யாதோ அதையருள்புரிய வேணுமென்றுப் பணிந்தக் கூபாகுயவனைநோக்கி அரசன் அடாகூபாகுயவா நமதந்தப்புரத்திற்கு பாண்டங்கள் பத்துப் பெரிதாகவேணும் அப்பாண்டங்கள் பத்தும் நான்குநாள்களுக்குள்ளாகத் தயார்சேய்துக் கொடுக்கக் கடவாயென்று கட்டளையிட்டான் அதைக்கேட்டுஅந்தக்கூபாகுயவனும் அந்தப்வடியே நான்குநாளுக்குள் தயார் செய்துக் கொர்டுக்கிறேன் விடைதாரும் சுவாமியென்று விடைபெற்றுக்கொண்டு ராஜசபையைவிட்டு வெளிப்பட்டு நடந்துத்தன் வீட்டையடைந்து பகவத்தியானத்துடன் மண்ணைமிதித்துப் பெருத்தபாண்டங்கள்பத்துசெய்து அப்பாண்டங்களை சூளையிலிட்டு வேகச்செய்துப் பாண்டங்கள் நன்றாய்வெந்துத் தணிந்தவுடனே அப்பாண்டங்களைக் கயிர்கொண்டு சேர்த்துக்கட்டித் தான் ஐந்துபாண்டமுமாகச்சுமந்துக்கொண்டுபோய் நான்குநாள்களுக் குள்ளாகவே ராஜசபையினிலிரக்கிவைத்து அரசனுக்குத் தெரியப்படுத்தினர்கள் அதைக்கேட்டு அரசன் அப்பெரியபாண்டங்கள் பத்தையும் பார்த்து வெகுசந்தோஷப்பட்டுஅதுகளையந்தப்புரத்திற் கனுப்பிவிட்டு அதுகளுக்குண்டாகியகிறயத்தைக் கூபாகுயவருக்குக் கொடுத்து அனுப்ப அக்கூபாகுயவரும் அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு பகவத் தியானத்துடன் தன்வீட்டை யடைந்திருப்பார்.

இவ்வாறு அரசன் கட்டளையின்படி இரண்டுமாதத்திற் கோருதரம் பெரியபாண்டங்கள் செய்துகொடுத்து அதற்குண்டாகிய கிறயத்தைப்பெற்றுக் கொண்டுவருவார் இப்படிக்கிவருகையில் ஒருநாள் சாட்சாத் ஸ்ரீஹரியானவர் கூபாகுயவர் அரசனுக்குக்கொடுத்துவந்த பத்து பாண்டங்களையு மெடுத்துவந்து கூபாகுயவர் வீட்டினில் வைத்துவிட்டுமறைந்துபோயினர் அப்பாண்டங்கள் பத்தையுங் கூபாகுயவர் கண்டு மெத்த வியப்படைந்து இப்பாண்டங்கள் பத்தையும் நாமெடுத்துக் கொண்டுபோய் அரசனுக்கொடுத்துவிட்டு வந்திருக்க இப்பாண்டங்கள் பத்தும் யாரெடுத்துவந்து இங்குவைத்தவர்கள் இதையோசிக்குமிடத்தில் விந்தையிலும் விந்தையாகவே யிருக்கிள்றதென்று தனக்குத்தானே சிந்தித்து உடனேதன் மனையாளை அழைத்து அடிபெண்ணே இந்தபத்துப் பாண்டங்களையும் நாமிருவரு மெடுத்துக்கொண்டு போய் அரசனிடஞ்சேர்த்து அரசனளித்த அரைசார்ச்சைப் பெற்றுக்கொண்டு சந்தோஷத்துடன் நாம் வந்திருக்க இப்பாண்டங்கள் நம்முடைய வீட்டினில் வந்திருப்பதற்குக் காரணமென்ன யாராகிலுங் கொண்டுவந்து வைத்துவிட்டுப்நாமேயிப்பாண்டங்களைத் திருடிக் கொண்டுவந்து நமதுவீட்டினில் வைத்துக் கொண் டிருக்கிரார்களென்று அரசனிடஞ் சென்றுக் கோள்சொல்லி நம்லமத் தண்டனைக்குட் படச்செயவேணுமென்றுங் கருதி போயினர்களோ அல்லது நாமே யிப்பாண்டங்களை யாசனிடங் கொண்டுபோய்க் கொடாமலிருந்து விட்டோமோ என்றுப் பலவாறு சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கும் மணாளனை நோக்கி மனையாள் சொல்லுகின்றாள் ஓசுவாமி பிராணநாயகரே இப்பாண்டங்களை நேத்தியதினம் நாமி

ருவரும் எடுத்துக்கொண்டுபோய் உண்மையாக அரசனிடஞ்சேர்த்து அரசன்தந்த பாதிக் கிரயத்தைப் பெற்றுக்கொண்டு நாமிருவரும் வந்திருக்கத் தேவரீர் சந்தேகிக்கவேண்டிய காரணமென்ன நம்மீது பொறாமையினாலே யாரோ செய்ததாகத் தோன்றுகின்றதெனக் கேட்டு அந்தக்கூபாகுயவர் பாண்டங்களை அரசனுக்குச் சேர்ப்பிக்கவில்லை யென்ற சந்தேகந்தீர்ந்து யாவரோ கொண்டுவந்து வைத்துவிட்டுப் போயினார்களேயென்ற சந்தேகம் அதிகரித்து இதற்கு யானென்னசெய்வேன் ஸ்ரீஹரிமுகுந்தா கோவிந்தா நந்தநந்தா வைகுந்தாவென்றுப் பலவாறுசிந்தித்து உடனே தெளிவடைந்து உள்ளபடி யாகட்டுமென்று பகவத்தியானஞ் செய்துக்கொண்டு தன்னைமறந்துக் கண்களில் ஆனந்த நீர்பெருவிட்டுக் கொண்டிருக்கையில் சாக்ஷாத் ஸ்ரீஹரியானவர் சங்குசக்கரம் கதை சாரங்கமென்னும் பஞ்சாயுதத்துடன் சகலாபரணங்கள் பூண்டு எழுந்தருளி ஓகூபாகுயவரே நீரேன் பாண்டங்களைக் கொண்டுவந்து வைத்தவனாரோ வென்ற சந்தேகமனத்தராகி என்னை நினைந்து உருகிவாடுகின்றீர் அப்படிக்கி நீர் சந்தேகிக்கவேண்டுவதில்லை யானே அப்பாண்டங்களை வெடுத்துவந்து வைத்தவனாகும் அப்படிக்கப் பாண்டங்களைக் கொண்டுவந்து வைத்ததற்குக் காரணம்யாதென்றால் நீர் கஷ்டப்பட்டுச் செய்துக்கொண்டுபோயின பாண்டங்களுக்குத் தக்கவிலையை அவ்வரசன் கொடாமல்நான்கிலொரு பங்குகொடுத்து வருகிறபடியால் என்மனந்தாளாமல் அப்பாண்டங்களை யெடுத்துவந்து உமது கிரகத்தினில் வைத்தேன் எனக்கேட்டுக் கூபாகுயவர் ஓசுவாமி கருணாநிதியே தங்களுக்கித்தனை கஷ்டத்தைக் கொடுத்தேனே இந்தருணத்தை யானெப்போது தீர்ப்பது தீர்த்துமது திருவடியி லென்னைத்துமாவை யென்றுசேர்ப்பது என்று துக்கப்படுகிற கூபாகுயவரை நோக்கி ஸ்ரீஹரியானவர் மாசில்லாச்சாந்த குணத்தையுடைய அன்பனே இதைப்பற்றி நீர்விசனப்படவேண்டாம் நீர்செய்யும் பக்திக்குயான் மெத்தருணஸ்தனாகி யிருப்பதால் இப்படிப்பட்ட வேலைகள் ஆயிரங்கணக்காகச் செய்தபோதிலும் உமக்குச்சேரவேண்டிய ருணசம்பந்தம் தீரமாட்டாது ஆகையால் இப்போதுமக் குண்டாயிருக்குஞ்சங்கடத்தைவிடுத்து நிம்மதியாக என்னுடைய நாமசங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருக்கக் கடவீர் என்றுசொல்லி ஸ்ரீஹரியானவர் மறைந்துபோயினார்.

இந்தப்படி ஸ்ரீஹரியானவர் கூபாகுயவருக்குச் சொல்லி மறைந்து போயினபின்பு கூபாகுயவர் பகவந்நாம சங்கீர்த்தனம் பாடியாடிக்கொண் டிருக்கிறபோது ஒருநாள் இருநூறு வைஷ்ணவர்கள் யாத்திரை செய்துக்கொண்டே அக்கிராமத்திற்குவந்துமெத்தப்பசியினாலெங்குசென்றாலும் அக்கிராமத்திலிருப்பவர்கள் ஒருவரேனும் அன்னம் அளிக்காத குறையால் மெத்தவும் வாடிவதங்கி ஆயாசமேலிட்டுக் களைப்பட்டு அவ்வூராரைநோக்கி யாத்திரை செய்யும்பொருட்டு நாங்களிருநூறுபேர் வைஷ்ணவர்கள் புறப்பட்டு வெகுதிவ்விய தேசங்களையெல்லாம் யாத்திரை செய்துக் கொண்டேவந்து உங்கள்கிராமத்தையடைந்தோம் பசியோ யெங்களை வாட்டுகின்றது ஆகையால் இத்தனைபேர்களுக்கும் பிரசாதமளிக்குந் தாதாயிவ்வூரினில் யாரேனுமுண்டோ வென்று கேழ்க்க அதற்குக் கிராமஸ்தர்களில் ஒருவன்யோசித்து யாத்திரைவாசிகளை நோக்கி ஓவைஷ்ணவர்களே இக்கிராமத்தினில் மெத்தசாதுவாகிய கூபாகுயவரெனுந் தாதா ஒருவரிருக்கின்றார் அவரிடத்திற்கு நீங்கள்போவீர்களேயாகில் இப்படிக்கிரண்டு பங்கு அதிகமாக சாதுக்கள் வந்தபோதிலும் அவசியம்பிரசாதமிட்டுப் பசியாற்றுவாரெனக்கேட்டு அந்த வைஷ்ணவர்கள் இருநூறுபேர்களும் விரைவாக நடந்துக் கூபாகுயவரைக்கண்டு பணிந்து ஓ ஜீவகாருணியமும் பச்சாத்தாபமும் பொருந்தின பரமசாதுவே நாங்களோ யாத்திரை செய்துக்கொண்டு வருகிறவர்களாகும்எங்களுக்கிப்போது மெத்தப்பசி யுண்டாகி வருத்துகின்றது இக்கிராமத்தினி லெம்போலியர்களை ஆதரிப்பவர்கள் தங்களைவிட வேறொருவரையுங் காணோம் ஆகையால் தயவுசெய்து சீக்கிரம் எங்களுக்குப் பிரசாதமளித்துப் பசிநோயைப் போக்கி ஆதரிக்கவேணும் பக்திசீலரே யென்றுப் பிரார்த்திக்கும் வைஷ்ணவர்களை நோக்கிக் கூபாகுயவர் சொல்லுகின்றார் கேளுங்கள் வைஷ்ணவர்களே உங்களிஷ்டப்படியே பிரசாதம் அளிக்கின்றேன் யாவருமென்மீது தயவுசெய்து சற்றுநேரம் வீற்றிருங்களென்று சொல்லி வீட்டைவிட்டு வெளிப்பட்டு மனைவியை யழைத்து அடிபெண்ணே நம்மையொரு பொருளாக வெண்ணிவந்துப் பிரசாதங்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளும்வைஷ்ணவர்கள் இருநூறுபேருக்கு ஆகும்படி தானியமிருக்கின்றதாவென அதற்கம்மங்கை எனதுபிராணநாயகரே அடியாள் தங்களுக்குத் தெரியாமல் தானியத்தை ஒளித்துவைத்துக் கொண்டிருக்கின்றேனா இப்படிப்பட்ட சாதுக்களுக் குபயோகப்படுத்தாமல்வைத்திருப்பதினால் பாபம்வந்தணுகுமே யன்றிப் புண்ணியம் சம்பவிக்குமோ தேவரீர் அடியாளை சோதிப்பது நீதியோ அன்றியும் பேதாகிலும் பொன்னைச்சார்ந்த

ஆபரணங்களும் நம்மிடத்தினிலிலேயே என்றுவிசனப்படும் மனையாளைக்கண்டு தானும் விசனப்பட்டு இதற்கென்னசெய்வேனென்று பகவானைத் தியானஞ்செய்துக்கொண்டே கடைவீதிக்குச் சென்று வர்த்தகனொருவனைக்கண்டு வந்தனந்தந்து ஓ ஐயா வர்த்தகரே இன்றுதினம் எனதுவீட்டிற்கு இருநூறுபேர் வைஷ்ணவர்கள் வந்து மெத்தப்பசியினால் வருந்துகின்றார்கள் ஆகையால் அந்த இருநூறுபேர்களுக்கு ஆகும்படி அரிசி பருப்பு முதலாகிய வஸ்துக்களைக் கொடுத்து அதுகளுக்கென்ன மொத்தமாகின்றதோ அந்தத்தொகையை என்மீதுயத்து யெழுதிக் கொள்ளும் அத்தொகையைச் சமயோசிதமாகத் தங்களுக்குக் கொடுக்கிறேனென்று சொல்லி வேண்டிக் கொள்ள அதற்குவணிகன் ஓஐயா கூபாகுயவரே உம்மிடத்தினில் எந்தஐவேசுமில்லாதிருப்பது உண்மையேயாகிலும் எனக்கொருகாரியம் உம்மாலாகவேண்டியதாகவிருக்கின்றது அக்காரியஞ் செய்துக் கொடுக்கிறேனென்று உம்முடைய வாக்கால்சொல்லுவீரேயாகில் உமக்கெவ்வளவு அரிசிபருப்புமுதலாகிய சாமக்கிரியைகள் வேண்டுமோ அவ்வளவுந் தடையின்றிக்கொடுக்கிறேன் இப்படி சொற்பமாகப் போவதைவிடுத்துக் கடன்வைத்துக் கொண்டு சங்கடப்படுவானேன் என்றுவணிகன் சொல்லக்கேட்டுக் கூபாகுயவர் ஓ வணிகனே என்னாலாகிற காரியமாகவிருக்கும்பக்ஷத்தில் அவசியமக்காரியத்தைப் பகவான் திருவடியின் மேலாணையாகச் செய்து முடிக்கின்றேன் அந்தவேலையின்னதென்று தெரியச்சொல்லுமென்றார் அதற்கவ்வணிகன் சந்துஷ்டியடைந்து ஓகூபாகுயவரே யான் கொடுக்கும் சாமக்கிரியைகளுக்கு பதிலாகநீர் எனக்கொருகிணறு வெட்டித்தரவேணும் இதுக்குச்சம்மதிப்பீரேயாகில் இப்போதே அரிசிபருப்பு முதலாகியதுங் கொடுக்கிறேனெனக்கேட்டு கூபாகுயவர்ஓவணிகரே உமதிஷ்டப்படியே கிணறுவெட்டித் தருகிறேனென்று சொன்னமாத்திரத்தில் அவ்வணிகன் உடனே மிதமற்ற அரிசிபருப்புமுதலாகியதுகளையுந் தன்னாலியன்றமட்டில் கொடுத்தான அவைகளையந்தவைஷ்ணவர்கள்இருநூறுபேரும் பெற்றுக்கொண்டுகூபாகுயவரை வெகுவாகத் தோத்திரம் புரிந்துக் கொண்டே போயினார்கள்.

இந்தப்படி யந்தவணிகன் தந்த அரிசிபருப்பு முதலானதுகளைப் பெற்றுக்கொண்டு வைஷ்ணவர்கள் போயினபின்னர் கூபாகுயவர் மெத்தப் பரமானந்தமடைந்து சாதுக்களுக்கு அமுதுபடி முதலாயினதுங் கொடுத்தவணிகனை மெத்தவும் புகழ்ந்துத் தன்மனைவியுடன் வணிகன்வீட்டுப் பிழக்கடையினில் மண்வெட்டி கெட்டபாரைகளைக் கொண்டு கிணறுவெட்டமுயன்றார்கள் அதெப்படியெனில் கூபாகுயவர்பூமியைத்தோண்டிக் கொண்டிருக்க இவர்மனைவியாகிய புரியென்னும் பேருடையமாது மண்ணைச்சுமந்துக் கொண்டு விரைவாகச்சென்று வெளியிற் போட்டுக் கொண்டிருந்தனள் இப்படியிவ்விருவரும் கிணறுவெட்டிக் கொண்டுடவர வெகுநாள் விடாமற்செய்துவர ஒருநாள் அக்கிணற்றினில் ஊத்துண்டாகி ஜலம்பெருகிவர அப்போது புரியானவள்மண்ணைத்தட்டினில் வாரிப் போட்டுக்கொண்டு வெளியில் வந்தமாத்திரத்தில் களிப்பான மண்ணாகியிருந்தபடியாலும் இருந்தாப்போலிருந்து அக்கிணறு இடிந்துவிழுந்தது அதைக்கண்டு புரியானவள் வாயிலும் வயிற்றிலு மடித்துக்கொண்டு ஓபிராணநாதரே அடியாளைத் தனியே விடுத்து இக்கிணற்றினுள்ளகப்பட்டு மடிந்துபோயினீரோ அப்பிரமதேவன் கிணற்றிற்குள்ளகப்பட்டு மாய்ந்துபோகும்படி தங்கள் தலையினிலெழுதி விட்டானோ அந்தயெழுத்தைஎப்படிப்பட்டவர்களாலும் மாத்திக் கொள்ளத் தரமாகுமோ ஆகமாட்டாதே ஐயோ நானினி என்னசெய்வேன் எப்படி உயிருடனிருப்பேன் எவ்வாறு துக்கத்தைப் போக்குவேன் யாருமற்ற அனாதியாகினேனே பகவான்கிருபை யிம்மட்டில்தானோ இருந்தது இருநூறு வைஷ்ணவர்களுக்கு ஆகும்படி அரிசிபருப்பு முதலாகிய சாமக்கிரியைகள் வணிகனிடத்தினில் வாங்கிக் கொடுத்தக் கிறயத்துக்காகக் கிணறுவெட்டிக் கொண்டிருந்த பலனிதுதானோ உபகாரஞ்செய்ய முயன்றஎன்கணவருக்கு அபகாரமாதய உயிர்ச்சேதம் வந்ததுமன்றிக் கணவன் முகத்தைப் பார்ப்பதற்கில்லாமற போயிற்றே ஓ என்னுயிர்க்குத் தோழரே கொடும்பாவியாகு மிவளுடைய முகத்தைப் பார்க்கலாகாதென்று மண்ணிற்குள் ளொளித்துக் கொண்டீரோ இப்படிக்கிக் கலங்கியழுகிற யென்முன்னன் தேவரீர்வந்து தெரிசனந்தந்து வாயைத்திறந்தொரு வார்த்தைப் பேசலாகாதோ பேசினால் பெருந்துக்கம் சம்பவிக்கு மென்று வாயைத்திறவாமல் மண்ணுக்குள் ளிருக்கின்றீரோ யென்றுப் பலவாறு துக்கப்பட்டழுவதை வணிகன் கேட்டு உடல்பதறி ஓகோ கிணர்வெட்டிக் கொண்டிருந்த குயவருக்கு என்னமோ மோசம்வந்து சம்பவித்தாற் போலிருக்கின்றதெனக்கருதி பத்துமனிதர்களை அழைத்துக்கொண்டு கிணற்றினருகினில் வந்து பார்த்து மெத்தபயந்து ஜலமட்டத்திலிருந்து மேல்மட்டம்வரைக்கும் நான்குபக்கமும் இடிந்து மண்மூடிக்கொண்டிருப்பதைக் கண்டு ஆஹா ஆஹா கூபா

குயவர் உருவகப்படாமலேயே அப்போதே உயிர் விட்டிருப்பார் அவரைச்சீக்கிரத்தினில் வெளிக்குக் கொண்டுலரலா மென்றாலோ மண்ணையெடுத்து வெளியில் கொட்டுவதற்கே வெகுநாள்களாகும் இதற்கென்னசெய்கிறது அந்தக் கூபாகுயவர் முன்ஜென்மத்தினி லெந்தகர்மஞ் செய்தாரோ அந்தகர்மத்திற்குத் தக்கபடியே நடந்துவிட்டது ஓ அம்மணி நீஇதைப்பற்றி எத்தனை நாளிங்கிருந்து துக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும் மண்ணோடுமண்ணாய் மாண்டுபொயின நினதுகணவன் உயிர்பெற்று வரப்போகிறதில்லை யாகையால் நீயுனக்குண்டாகிய விசனத்தை விடுத்து உன்னுடைய மனைங்கேகுவது மெத்தநலமென்று சொல்லக்கேட்டு அந்தப் புரியென்னு மங்கையான் பரதேசியைப்போல அனாதியாகினேனே என்றுசொல்லி யழுதுக்கொண்டே தன்வீட்டை யடைந்துப் பதினாறுநாள்களும் மெத்த துக்கப்பட்டுக் கொண்டிருந்து கருமஞ் செய்யாமலும் மங்களசூத்திரத்தை வாங்காமலு மிருக்கும்படி ஸ்ரீஹரியானவர் அம்மங்கையினுள்ளத்தைச் சிதறவிட்டுக் கொண்டிருந்தமையால் அந்தப்புநியென்னு மாதும் தன்கணவனுக்குக் கருமஞ் செய்விக்காமலும் மங்களசூத்திரத்தை வாங்காமலு மிருந்தனள்இப்படிக்கிச்சிலநாள்கடந்து போயினபின்பு அம்மங்கையும் இன்னுமுள்ளவர்களும அந்த கூபாகுயவரை மரந்து விட்டார்கள்.

இவ்வண்ணம் யாவரும் அந்தக் கூபாகுயவரை யாவருமறந்து ஒருவருடங் கடந்துவிட்டது அக்கிணறும்பூமி மட்டந்துந்து யாவரும் அதின்மேல் நடந்துக்கொண்டு மிருந்தார்கள். இப்படிக்கிருக்கையில் வழிப்பிரயாணிக ளொருநாளங்கு வந்திரங்கிச் சமையல்செய்து யாவரும்புசித்துப் பசியாறி இரவுவந்தவுடனே அவர்கள் வரிசையாகப் படுக்கைப் போட்டுக்கொண்டு படுத்திருக்கையில் அங்குபூமிக்குள்ளாகத் தாள மிருதங்கம் வீணைத்தம்பூர் முதலானதுகளுடன் சேர்ந்துக் காதுக்கினிமையாக நல்லசொர சாவித்தியங்களின் ஓசையுண்டாகக்கேட்டு ஆச்சரியமடைந்துக்கொண்டே நித்திரைசெய்து விடியற்காலமாயினவுடனே யாவருமெழுந்து ராத்திரிபடுக்கையினில் கேட்டிருந்த விந்தையை அவ்வூராருடன் சொல்ல அவர்களுங்கேட்டு இன்றிரவுக்கிவ்விடத்திற்குவந்து அந்த சுனாதத்தைக் கேழ்க்கவேணுமென்றுக் கருதிச்சென்று பகற்பொழுதைப் போக்கி இரவுவந்தவுடன் அவர்களங்குவந்து படுத்திருக்கையில் வீணைமுதலாகியகருவிகளுடன் சுனாதமாக சொரசாயித்தியங்கள் ஓசைப்படக்கேட்டு ஆனந்தித்து இதுவிந்தையிலும் விந்தையாகுமென்று சொல்லிக்கொண்டே சென்று மறுநாளுதையகால மாயினவுடனே இவர்களவ்வூரா ரெல்லோருக்கு மிந்தவிந்தையைத் தெரியப்படுத்த அவர்களுங்கேட்டு ஆச்சரியப்பட்டு யாவரும் ஒன்றுகூடி வந்து சுனாதத்தைக் கேட்டுப் போய்க்கொண் டிருந்தார்கள் இப்படியிவர்கள் செவியாரக்கேட்டு ஒருவரோடொருவர் சொல்லிக்கொண் டிருந்தமையால்இச்செய்தி யவ்வூரெங்கும் பரவியதால் இச்செய்தியை அன்னகரத்தையாளும் அரசன்கேட்டு அவ்விடத்திற்குத் தன்பரிவாரத்துடனே வந்து ஆர்த்தியாகப்பாடும் ஹரிகீர்த்தனைகளாகும் சுனாதத்தைக் கேட்டுப் பரமானந்தமடைந்து அங்கிருக்கும் ஜெனங்களைநோக்கி இங்கு இந்தவிந்தையாகும் பகவந்நாமசங்கீர்த்தனைகள் கோஷிப்பதற்குக் காரணம்யாது இந்தவிருத்தாந்தத்தைச் சொல்லுங்களென்று கேழ்க்க அதற்கவர்கள் ஓ மாந்தர்களாகு மெங்களை யாண்டருளும் வேந்தனே ஒருவரிடத்திற்கு முன்னம் இருநூறுவைஷ்ணவர்கள்வந்து கூபாகுயவரைக் கண்டு பணிந்து நாங்கள் இருநூறுபேர்கள் யாத்திரைசெய்துக் கொண்டு இங்குவந்தோம் வந்தவிடத்தில் ஆகாரமின்றிப் பசியினால் அவர்கள் மெத்தவுந்தவிக்கிறபோது சிலவணிகர்கள் அவர்களையழைத்துஇக்கிராமத்தினில்கூபாகுயவனொனு மொரு சாதுவிருக்கின்றார்அவரைநீங்கள் போய் கண்டால் அவருங்களுக்கு எதேஷ்டமாகப் பிரசாதங் கொடுப்பாரென அவர்களு மந்தப்படியே கூபாவிடஞ்சென்றுப் பிரசாதங்கேழ்க்க அந்தக்கூபாகுயவர் அந்த இருநூறு வைஷ்ணவர்களை யழைத்துக்கொண்டுவந்து அவ்வீட்டினிலிருக்கும்வணிகனுக்கு அவர்களைக்காட்டி அரிசிபருப்பு முதலாகியவஸ்துசம்பாரங்களை இவர்களுக்குக் கொடுப்பீரே யாகில் அதற்குண்டான பொருளை யான்கொடுத்துவிடுகிறேனென்று வேண்டிக்கொள்ள அவ்வணிகன் கேட்டுச் சந்துஷ்டியடைந்துக் கூபாகுயவரை நோக்கி ஓ ஐயா சாதுவே உமக்குக் கடனில்லாமல் வேண்டியவஸ்துசம்பாரங்களைக் கொடுக்குரேன் அதற்குபதிலாகஎன் வீட்டின் பிழக்கடையில் ஒருகிணறு வெட்டிக் கொடுத்துவிடுமென்று சொல்லக்கேட்டுக் கூபாகுயவர் சந்தோஷசித்தராகி ஓவணிகரே உமதிஷ்டப் படியே கிணறு வெட்டித்தருகிறேன் இவர்கள மெத்தப்பசியினால் வாடுகின்றார்கள் ஆகையால் சீக்கிரமிவர்களுக்கு அரிசிபருப்பு முதலாகிய சம்பாரங்களைக் கொடுத்தனுப்புமென உடனே அவ்வணிகன் அந்த இருநூறு வைஷ்ணவர்களுக்கும் யதேஷ்டமாக அரிசிபருப்பு முதலானதுகளுங் கொடுத்தான் அதுகளையந்த வைஷ்ணவர்கள் பெற்றுக்கொண்டுப் பலவாறு கூபாகுயவரைப் புகழ்ந்துக்கொண்டே போயினார்கள்.

இந்தப்படிவணிகன் தந்த அரிசிபருப்புமுதலானதுகளும் பெற்றுக்கொண்டு வைஷ்ணவர்கள் போயினபின்பு கூபாகுயவர் தன்மனைவியுடன் கிணறுவெட்டிக்கொண்டு போகிறபோது நீர்மட்ட முண்டாகி ஊத்துப் புறப்பட்டது அதைக்கண்டு கூபாகுயவர் செய்வனதிருந்தச் செய்யென்ற ஔவையார்மொழிக்கிணங்க மேலுங் கொஞ்சம் ஆழமாக வெட்டிவிட்டால் எந்தகாலமும் ஜலம்புஷ்களமாக விருக்குமெனக்கருதி வெட்டிக்கொண்டே யிருக்கையில் தடாலுமென அக்கிணறு நான்குபக்கமும் இடிந்து கூபாகுயவர்மீது விழுந்து அதனாலந்தக் கூபாகுயவர்இறந்திருப்பாரென்று நிச்சயித்து மண்ணையப்புரப் படுத்திக் கூபாகுயவரை வெளிப்படுத்துவதற்குக் கூடாமையால் யாவரும் விசனப்பட்டுக்கொண்டே தங்கடங்கள் அகம்புக்கிருந்தார்கள் இப்படி யொருவருடங் கடந்துபோகவே ஒருநாள் பாட்டைசாரிகள் அங்கு வந்திரங்கிச் சமைத்து அவர்கள்புசித்து வரிசையாய்ப் படுக்கைப் போட்டுக்கொண்டு நித்திரைசெய்துக்கொண்டிருக்கையில் இங்கு பூமிக்குள்ளிருந்து செவிகளுக்கின்பமாக சகலகருவிகளுடன் ஸ்ரீஹரிகீர்த்தனைகள் சுனாதமாகக்கேட்டு அவர்கள் ஊராருக்குத் தெரியப்படுத்த அவர்களும் வந்து பரிக்ஷித்துத் தினந்தோறும் அஙகுவந்து சுனாதத்தைக்கேட்டுக்கொணடுபோகிறபோது ஒருவருக் கொருவர் இவ்வதிசயத்தைப் பேசிக்கொண்டு போனதால் யாவருக்குந்தெரிய வந்தது மல்லாமல் அவ்வூரையாளும் அரசனுமறிந்துபரிக்ஷிக்கவேணுமென்று அங்குள்ளவர்களை விசாரித்துப் பூர்வத்தில் நடந்ததையுணர்ந்து அரசன் இந்தவதிசயத்தைப் பரிசோதித்துப் பாராமல் உண்மைதெரியமாட்டாதெனக்கருதி அவ்வரசன் சிலவேலைக்காரர்களை வரவழைத்து அந்தக்கிணற்றை முன்போலவெட்டுங்களென்றுக் கட்டளையிட்டான் அவர்களும் அந்தப்படியே கெட்டப்பாரை மண்வெட்டிகளைக் கொண்டுவெட்டி மண்ணை அப்புரம் படுத்திக் கொண்டே போகையில் அக்கிணற்றிற்குள் ஸ்ரீஹரிவிக்கிரகத்தின் எதிரில் நின்றுக்கொண்டு தன்னை மறந்துப் பாடியாடிக் காமக்குரோத லோபமோக மதமாச்சரியங்களை விடுத்து ஸ்ரீஹரியின் திருவடிகளே தனக்குத் தஞ்சமென்றடுத்து விஷயாந்தரங்களில் சலந் தொடுத்து மனோவாக்கு காயங்களை பகவானுக்குப் பலிகொடுத்து நிச்சலபக்தி செய்துக்கொண்டிருக்குங் கூபாகுயவரைக்சண்டு அரசன் முதலாகச்சகலரும்அதிசயித்து இதுமேலாகிய சுகமாகும் இப்படிப்பட்டநிலை யிவருக்குண்டாயிருப்பதை யோசிக்குமிடத்தில் இவரைப் பகவானென்றே கருதி நாமனைவருந் தொழவேண்டுமென்றுசொல்லி அரசன் அந்தக்கூயாகுயவர் திருவடிகளில்விழுந்து பணிந்துஎழுந்தார் அதைகண்டுயாவரும் அவர் திருவடிகளில் விழுந்துபணிந்தார்கள் அப்போதுஅரசன்யாவரையும்நோக்கிஇவர்கேவலமாகிய மனிதரல்ல சாக்ஷாத்ஸ்ரீஹரியேயாகுமென்றுசொல்லி அந்தக் கூபாகுயவரை நோக்கி ஓசுவாமிதயவுசெய்து வெளியில்வர வேணுமென்று வேண்டிக் கொண்டார் அந்தப்படியே கூபாவும் அரசனிஷ்டப்படி வெளிப்பட்டுவந்துப் பூமியின்மீது நிற்க அப்போது அனேக ஜெனங்கள் வந்துக் கூபாகுயவரைக்கண்டு பணிந்து ஓசுவாமி ஒருவருடகாலமாக எப்படி இக்கிணற்றிற்குள்ளிருந்துக்கொண்டு உயிருடனிருந்தீர் நாங்களெல்லாம் இறந்துவிட்டீ ரென்றல்லோ யெண்ணியிருந்தோம் நீரிக்கிணற்றிற்குள் உயிருடனிருந்ததை யோசிக்கில் உமதுமகுத்துவத்தை யெங்களால் புகழத்தராமோ வென்று வெகுவாகத் துதிசெய்ய அப்போது அரசன் சிற்பிகளை வரவழைத்து இங்குபெருத்த மடமொன்றுக் கட்டவேணும் அதற்கு எவ்வளவு திரவியம் வேண்டுமே அதைக் கணக்கிட்டுக்கொண்டு வருவீர்களேயாகில் அக்கணக்கின்படி யுங்களிடம் திரவியத்தைக்கொடுத்து விடுகிறேன் அதைப்பெற்றுக்கொண்டு இத்தனைநாளில் மடத்தைக்கட்டி முடிக்கிறோமென்று ஒருகெடுவிட்டு அக்கெடுவுக்குள்ளாக முடிக்காவிடில் வுங்களுக்குத் தக்கதண்டனை விதிப்பேனென்று நேமிக்கக்கேட்டு அந்தசிற்பிகளும் தீர்க்கமாக யோசித்து அரசனைநோக்கிச் சொல்லத் தொடங்கினார்கள்.

கேளும்வேந்தர்கோமானேஇனிவரப்போகிறது மழைக்காலமானதால் அப்போது வேலைகள் செய்யமுடியாது தாங்களோ வெகுதுரிதப்படுகிறீர் ஆகையால் இக்கட்டடம்இரண்டுவருடத்திற்குள் முடித்துக் கொடுக்குரோ மெனக்கேட்டு அரகன் உங்களிஷ்டப்படியே இரண்டுவருடத்திய கெடுவுக்குசம்மதித்தேன் இக்கெடுவிற்குள் முடிக்காவிடில் தக்கசிஷ்டை விதிப்பேனென்று சொல்லி அவர்கள் போட்டக்கணக்கின்படிக்குப் பொருளைக் கொடுத்துவிட்டுக் கூபாகுயலரை அழைத்துக் கொண்டுபோய் தன் அரண்மனையைச்சேர்ந்துத் தன்னிடம் வைத்துக்கொண்டு போஷித்துவந்தார் அப்போது கூபாகுயவர் ஸ்ரீஹரிதியானஞ்செய்வதில் கிஞ்சிற்றேனும் குறைவின்றிபக்திசெய்து சிற்பிகள் மழைசாலம் வருகிறதென்றும் இந்தமழைகாலம் நாலுமாசம் போனபின்பு வேண்டியசாமான்களைக்கொண்டு வேலையாரம்பிக்க யோசித்தார்கள் அப்போது மேகங்கள் கூடிக்கொண்டு வெள்ளைக்காடாய் விடுமென்றுக்கருதி தங்சடங்கள் அகம்புக்கிருக்

றபோது பெருத்த காத்துண்டாகி மேகங்களைக் கலைத்துவிட்டன இந்தப்படி தினந்தோறும் மழை வருவதைப்போலச் சகலரும் பிரமிக்கும்படி மேகங்கள்கூடி மழைபெய்யாமலே எச்சிவிட்டது அதனாலந்தசிற்பிகள் வீண்காலம் போயிற்றேயென்று வருத்தப்பட்டு உடனேதெளிந்து இனிநாம் வெருமனேயிருக்கக்கூடாது அப்படிக் கிருப்பமேயாகில் அரசனால் தெண்டனைக் குட்படும்படியாக நேரிடுமென்றுத்திவிரப்பட்டு அரசன் கொடுத்தப் பொருளைக்கொண்டுகற்கள்சுண்ணம் முதலாகிய சாமான்களைக் கொண்டு தயார்செய்துக் கட்டடம் ஆரம்பித்தார்கள் கடக்கால் வெட்டியதுகளைத் தூத்து பூமிமட்டத்துக்கு மேல்கட்டடந் தொடங்கிக் கட்டிக்கொண்டு வருகிறபோது விடாமழை பெருங்காத்துமாக மூன்றுமாதகாலம் அடித்ததனால் கட்டடவேலைகள் செய்வதற்குக் கூடாமற்போயிற்று அதனால்சிற்பிகள் மெத்த விசனங்கொண்டு அரசனுக்கு நாம்சொன்ன கெடுவுதப்பிப் போகிறதா யிருக்கின்றதே இதற்கென்னசெய்கிறதென்று யோசித்து ஒன்றுந்தோன்றாமல் முன்ஜென்மத்தினி லெந்தகர்மஞ் செய்தோமோ அந்தகர்மத்தை இந்தஜென்மத்தினி லனுபவித்தேதீரவேணும் எங்கேயோடி யொளித்தபோதிலும் விடமாட்டாது இனியிதைப்பற்றி யோசிப்பதில் பலனில்லை நாம் கூடியமுயர்ச்சியுடன் சீக்கிரமாக வேலைகளைச்செய்துக்கொண்டு வருவோம் பகவானுடைய கிருபையின்படி நடக்கட்டுமென்று துணிந்து அச்சிற்பிகள்வெகு சீக்கிரமாகவே வேலைகளைச்செய்துதிராவிகளையேத்தி தளத்தின்வேலைசெய்து முடிவாகிறதற்குள் அரசன் சிற்பிகளுக்குக் கொடுத்த கெடுவுதவிர்த்து விட்டபடியால் அப்பூபாலன் அச்சிற்பிகளை வரவழைத்து விசாரணைசெய்து தண்டனைவிதிக்க முயலுவதை அருகிலிருந்த கூபாகுயவர் உணர்ந்து வேந்தனைநோக்கி ஓ அரசனே நீர் யிவர்கள்மீது சினந்து கெடுவுதப்பியதற்கு தண்டனைவிதிக்க வேண்டாம் இதுதெய்வச்செயலாய் நாள்கடந்து போயினதற்கு இவர்கள்மீது குற்றமில்லை இதை யோசிக்காமல் தண்டிப்பது நீதியல்லவெனக் கேட்டு அரசன் ஆதியில் பேசியமுடிவின்படி இவர்கள் மடத்தைக்கட்டி முடிக்காதபடியால் இவர்களுக்கு அவசியம் தண்டனைவிதிக்க வேண்டியதே அப்படிப்பேசி முடிக்காமல் சாதாரணமாக விட்டிருந்தால் இவர்களைத் தண்டிக்கவேண்டிய காரணமேயில்லை அன்றியும் இவர்களே ஒத்துக்கொண்டு வேலைகளுடன் பட்டமையால் அவசியமிவர்களை தண்டிக்கவேண்டியதே என அதற்கு கூபாகுயவர் ஓஅரசனே இந்தசிற்பிகள் ஆதியினும்மிடம் ஒப்புக்கொண்டது உண்மைவேயாயினுங் காலந்தப்பி இவர்கள் குறித்த காலத்தினில் மழைபெய்தபடியால் இவர்கள்மீது குற்றமில்லை மழைபெய்வதும் பிரசவிப்பதுந் தெரிந்துச்சொல்ல யாவர் வல்லவர்கள் ஓவேந்தனே முன்னம் சாக்ஷாத் கிருஷ்ணபரமாத்துமாபாண்டவர்கள் நிமித்தியம் மயனென்னுந் தச்சனை யழைப்பித்து இவடத்தினில் நூதனமாக ஒருகட்டடம் யேர்ப்படுத்தவேணுமென்று சொல்லக்கேட்ட தக்ஷணம்அந்த மயன் மனதில் நினைத்தமாத்திரத்தில் நூதனசிருஷ்டியுண்டாகியது அன்றியும் துவாபரயுக மாகையால் நினைமாத்திரத்தில் சிருஷ்டியாயிற்று அதுபோலஇப்போது நினைமாத்திரத்திற் சிருஷ்டிசெய்வதுஅருமை இது கலியுகமாதலால் கைகளாற்செய்தே முடியவேணும் இதையோசியாமல் அவசரப்பட்டு இவர்களைத் தண்டிப்பது ஞாயமல்லவென அதற்குவேந்தன் ஓ சுவாமி கூபாகுயவரே இவர்கள்முன்னங் கெடுவுக்கு ஒப்புக்கொள்ளமாட்டோம் எத்தனைநாளைக்கு முடியுமோ எங்களுக்குத் தெரியமாட்டாது எங்களால்கூடியசீக்கிரமாகச் செய்கிறோமென்று சொல்லிவிட்டிருப்பார்களேயாகில் இவர்கள்மீது குற்றமில்லை அப்படிக்கிச் சொல்லித் தப்பித்துக் கொள்ளாமல் ஒப்புக்கொண்ட தோஷத்தால் இவர்களை அவசியம் தண்டிப்பதே விதியென்றுசொல்லி மெத்தச்சினங்கொண்டு அங்கிருந்ததூதர்களை நோக்கி அடாதூதர்களே இதோநிற்குமிந்த சிற்பிகளையழைத்துக்கொண்டுபோய் காவலில்வைத்து வரக்கடவீர்களென்று கட்டளையிட்டான் அந்தப்படியே அவர்களும் அந்த சிற்பிகளைக் கொண்டுபோய் காவலில்வைத்து வந்துஅரசனுக்கறிவித்துப் போயினார்கள்.

இவ்வாறு அரசன் கட்டளையின்படிசிற்பிகளைக் காவலில்வைத்துத் தூதர்கள் போயினபின்பு கூபாகுயவர் அரசனைநோக்கி ஓவேந்தனேஇப்போதுகாவலில்வைத்த சிற்பிகள் கட்டடவேலை யெவ்வளவு முடித்திருக்கின்றார்களோ அதைநாம் போய்பார்த்துவருவோம் வாருமென அரசன் சம்மதித்துக் கூபாகுயவர் பின்சென்றுக் கட்டடத்தைப் பார்த்து எல்லா வேலைகளும் முடிநது சம்புரோக்ஷணைக்குத் தயாராகவிருப்பதை யுணர்ந்து ஓசுவாமி கூபாகுயவரே கட்டடவேலைகள் யாவத்தும் முடிந்து வெகு அழகாகவிருக்கின்றதே இந்தச்செய்தியை நம்மிடத்திற் சொல்லாமல் இன்னமும் முடிவாகவில்லையென்று சொல்லவேண்டிய காரணமென்ன இதையான்வந்து நேரில் பாராமலே சிற்பிகளைச் சிறையில்வைத்தேனே இந்த தோஷத்திற்குயா னென்னசெய்வேன் அப்போதே யவர்களைத் தண்டிக்க வேண்டாமென்று தாங்கள்

சொல்லிய வார்த்தையைக் கேளாமல் மறுத்துவிட்ட
மகாபாவியாகினேனே இக்கட்டடம் முடிவாயிற்றெ
ன்று தெரியாமற் போனேனே தங்கள்வாக்கை மறு
த்து அபசாரப்பட்டக் கொடியபாதகனாகிய வென்னை
இந்தவாளாயுதத்தினாலிரண் துடுண்டாகும்படிவீசியெ
றிந்துவிடும்சுவாமியென்று தன்னிடையிலிருக்கும் வா
ளாயுதத்தையுருவிகூபாகுயவரிடங்கொடுத்துஅவர்தி
ருவடிகளில்விழுந்துபணிந்துஎழுந்திராமற்கிடந்தான்
அப்படித்தன் திருவடிகளில்விழுந்துகிடக்கும்அரசனை
அந்தக்கூபாகுயவர்தன்கரங்களா லெடுத்துஆலிங்கன
ஞ்செய்துக்கொண்டு ஓஅரசனேநீரேன்வீணில்பிராண
னைவிடத்துணிந்திருக்கின்றீர்வேண்டாம்அவரவர்கள்
செய்தவினையின்படி யனுபவிக்கவேணுமென்று சாஸ்
திரங்கள் முறையிடுகின்றன அந்தவினையின்படி சிற்
பிகளும் பூர்வத்திற்செய்த கர்மபலன் இப்போதனுப
விக்க வேண்டியதால் இப்போதவர்கள் காவலில் இ
ருக்கும்படி நேரிட்டது அன்றியுங்கட்டடம் வேலைமு
டியாமல் அரைகுறையாயிருந்தது உண்மையே ஆகி
லும் பகவானுடைய கிருபையால்முடிவானதுபோல
இப்போதுஉன்கண்களுக்குப்புலப்படும்படிச்செய்தா
ரே அன்றிக்கட்டடம்இன்னமும்முடிவாகவே இல்லை
இந்தரகசிய மிப்படிக்கிருக்க இதையறியாமல் நீ கவ
லைப்படுகின்றாய் இக்கவலையை விட்டொழித்து திடச்
சித்தனாகி விரைவாகச் சென்றுக் காவலில்வைத்திரு
க்குஞ் சிற்பிகளை விடுப்பையேயாகில் இக்கட்டடம்
பகவானுடைய கடாக்ஷத்தினாலே முடிவாய்விட்டதெ
ன்றே யெண்ணக்கடவாய் மேலும் அந்தசிற்பிகள்
மெத்தவுங் யோக்கியர்கள் உனக்குச்சொன்னகெடுவு
தப்பிப்போய் விடுகிறதென்று மிகவும்பயந்து வேலை
கள் அதிகதிருத்தமாய் செய்திருக்கின்றார்கள் ஆகை
யால் அவர்களைச் சாமானியர்கள் என்றுக் கருதவே
ண்டாம் பகவானுக்குகந்த பக்தர்களென்றே கருதி
யவர்களை வணங்கியிணங்கக் கடவாயென்ற கூபாகுய
வர் வசனத்தைக்கேட்டு அரசன் மெத்தவுஞ் சந்துஷ்
டியடைந்துநிற்க உடனே கூபாகுயவர் வாளாயுதத்
தை அரசனிடமீந்துப் போய்வாருமென்னஅரசனும்
வாளாயுதத்தைக் கைக்கொண்டு உறையிற்போட்டு
ஓசுவாமி இனியறைக் கணப்பொழுதேனும் தேவரீ
ரைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன் அன்றியுந்தங்கள்
வசனத்தை மறுத்து எப்படிப்பட்ட காரியமேனுஞ்
செய்யமாட்டேன்என்குலத்திற்குத்தெய்வமாகவந்து
தோன்றிய சத்குருநாதரே என்னுயிர்நீக்கினும் உம்
மைவிட்டுத் தனித்திருக்கமாட்டேன் ஆதலால்தாங்க
ளும் என்னுடன்வந்து அச்சிற்பிகளைக் காவலில் நின்
றும்விடுவித்து அடியேனுக்கு நல்வாக்கியங்களை உப
தேசித்துக் கொண்டிருக்க வேண்டுகிறேன் என்ற
அரசனுடன் அந்தக்கூபாகுயவருஞ் சென்றுக்காவலி
லிருக்கும் சிற்பிகளை விடுவித்து அந்தப்புரத்திற்குச்
சென்று அநுட்டானங்களைமுடித்து அரசனை யழைத்
துக்கொண்டு மடத்தினிடஞ்சென்று சிற்பிகளைவரவ
ழைத்து சம்புரோக்ஷணை செய்து அச்சிற்பிகளுக்குத்
தக்கமரியாதைசளைநடத்தி அம்மடத்துக்குட் புகிந்து
அதில் உன்னிதஸ்தானத்தி லிருந்துக்கொண்டு அரச
னால் கொடுக்கப்பட்ட தனதானியங்களைக்கொண்டும்
இன்னுமுள்ள தனீகர்களா லனுப்பப்பட்ட தானிய
சம்பத்துகளைக் கொண்டும் பிராமணர் களுக்கும்
ஏழைகளுக்குய் எப்போதுமில்லை யென்று சொல்லா
மல் யாவருக்குந் தினந்தோறும் பிரசாதமளித்துக்
கொண்டு மிருக்கிறபோது அரசனுந் தினந்தோறும்
வந்து கூபாகுயவ்வரை தெரிசித்துக்கொண்டுபோவார்

இந்தப்படிக்கிதினந்தோறும்அரசன்வந்துகூபா
குயவரைச் சேவித்து அங்கிருக்குஞ் சிப்பந்திகளை
யழைத்துப் பிராமண போசனததிற்குக் குறைவாயி
ருக்குங் வஸ்துக்களைத் தெரிந்துவந்துஅனுப்பிக்கொ
ண்டே யிருப்பார் இப்படிக்கிருக்கையில் கூபாகுயவ்
ரும் ஹரிகதை காலக்ஷேபஞ் செய்துக்கொண்டிருக்
கையில் அநேகப்பிரஜைகள் அங்குவந்து ஹரிகதை
யைக்கேட்டு ஆனந்தித்துப் போயிக்கொண்டிருக்கை
யில் ஒருநாள் கூபாகுயவர் மனையாளாகிய புரியென்
னும் பேருடையமாது அவர்களைக்கண்டு பணிந்து ஒ
ஐயமாரே நீங்களெல்லோரும் எங்குபோய் வருகிறீர்
களென்றுவின அதற்கவர்கள் ஓஅம்மணிதங்கள்நாய
கராகிய கூபாகுயவர் சிலநாளாய் அரசன்கட்டியமட
த்திலனேக சீஷர்கள்சூழ ஹரிகதை காலக்ஷேபஞ்
செய்வதைக்கேட்டு வருகிறோமெனக்கேட்டு அந்தப்
புரியெனுமங்கை ஆச்சரியப்பட்டு கிணறிடிந்துவிழுந்
து மண்ணுக்குள்ளகப்பட்டு மடிந்துபோயின எனது
கணவன் எப்படி எயிர்தப்பிவந்தார் நீங்கள்சொல்லு
வது கேலியாயிருக்கிறதென அதற்கவர்கள் ஓஅம்ம
ணி சாக்ஷாத் ருக்குமணிபிராட்டிக்கி நிகரானதங்களி
டத்தில் கேலிபேசினா லெங்கள்நாக்கு எற்றுவிழாதா
ஒருக்காலும் நாங்கள் பொய்சொல்ல மாட்டோம்
தாங்களவரைப் பார்க்கவேணு மென்றாலுஞ்சரி அல்
லது அவரைரூபில் தங்களுக்குக் காட்டுங்க ளென்றா
லும் இப்போதே எங்கள்பின் தாங்கள்வந்தால்ரூபில்
அவரைக் காட்டுகின்றோமென அதற்கம்மாது சம்ம
தித்து அவர்கள்பின்செல்ல அவர்களுப் அம்மாதை
யழைத்துச்சென்று மடத்தையடைந்து அங்குஉன்னி
தஸ்தானத்தினி லனேகசீஷர்கள் உபசரிக்கச்சயனி

துக்கொண் டிருக்குங் கூபாகுயவரைக்காட்டி ஓ அம்மணி உனதுகணவனிதோ வாருமென, அம்மாதுங் கண்டு தன்னுடைய கணவனென்றுணர்ந்துதிடுதிடென்றோடி அவர் திருவடிகளில்விழுந்துபணிந்து ஓஎன்னுயிருக்குயிராகிய மணவாளரே அடியாளைத்தனியேயலையவிடுத்து இத்தனைநாளெங்கு போயிருந்தீர் இப்படியுஞ் செய்வது தங்களைப்போன்ற சாதுக்களுக்கு நீதியோ என்று பிரலாபித்து உடனே ஓசுவாமி அடியாள்செய்த கர்மபலனை அடியாளே யனுபவிக்கவேண்டிய முறமை சாஸ்திரங்களுமப்படியே முறையிடுகின்றன வென்று பெரியோர்கள் சொல்லக்கேட்டிருந்தும் என்னுடைய அஞ்ஞானத்தினால்தெளிவின்றியேதேதோ பிணத்திவிட்டேன் இந்த அபசாரத்தை மன்னித்தருள வேணுமென்று வேண்டிக் கொள்ள அதற்கந்த கூபாகுயவரும் சந்துஷ்டி யடைந்தவராகி ஓபெண்ணே நீஇன்றுமுத லிம்மடத்தைச் சுத்திசெய்துக்கொண்டு பிராமணர்கள் படைக்கும் பிரசாதத்தையுண்டு சுகமுடனிருக்கக் கடவாயென்று நேமிக்க அதற்கம்மாதும் மகாபாக்கியமென்று சொல்லி அன்றுமுதல் அம்மடந்தைச் சுத்தஞ் செய்துக் கொண்டு பிராமணர்கள் கொடுக்கும் பிரசாதத்தை வாங்கியுண்டு காலங்கழித்துக் கொண்டிருந்து ஒருநாள் தன் பிராணநாயகரை நோக்கி ஓசுவாமி இன்றுமுதல்பிராமணர்களன்னியில் மைத்தவர்களுக்கு அடியாள் பிரசாதஞ்செய்து பகுந்துவருகிறேனென அதற்கந்தக் கூபாகுயவர் அந்தப்படியே செய்துக்கொண்டிருமென்று நேமித்தார் அம்மங்கையும் மடத்திற்கு வரும் சாதுக்களுக்குப் பாகஞ்செய்துப் படைத்துக்கொண்டிருந்தனள்.

அவ்வாறு அந்தப்புரியெனு மங்கை சிலவருடகாலஞ் சாதுக்களுக்குத் தினந்தோறும் பிரசாதஞ் செய்துப் படைத்துக்கொண் டிருக்கிறபோது ஒருநாளிந்த புரிக்குச் சொந்தபந்துக்கள் சிலபேர்கள் அங்குவந்து புரியைக்கண்டார்கள் புரியவர்களைக்கண்டு மரியாதைசெய்து ஆதரணைசெய்து பலவிதமாக உபசரித்து இருக்கும்படிச்சொல்லி அவர்களுக்குவேண்டியப் பிரசாதமும் பாலுமெடுத்து வேரோரிடத்தினில்வைத்து பத்திரப்படுத்தி வைத்துவிட்டு வந்த ஏழைப்பரதேசிக்ளுக் கெல்லாம் அன்னம்பரிமாரியாவரும்புசித்துப் போயினபின்பு இலைகளை யெடுத்துப்போட்டு எச்சலுக்குச் சாணந்தெளித்து மொழுகிவிட்டு வெளிக்குப்போய் வரலாமென்றுன்னிப் போயினள் அப்போதொரு சாதுவந்து கூபாகுயவரை நோக்கி ஓசுவாமி மெத்தப்பசியாக விருக்கின்றது அன்னம் போடவேணுமென்று மெத்தச்சங்கடப்படுவதைக்கேட்டு கூபாகுயவருக்கு பூததயை பச்சாத்தாபம் பிறந்து தானே எழுந்திருந்து பரிமாரும்பொருட்டுப் பாகசாலைக்குச் சென்று பார்க்கும்போதுஅன்னம் பருப்பு முதலாகியது மொன்றேனு மில்லாமையால் யாவத்தும் ஆய்விட்டதெனக் கருதி மைத்தோரிடத்திற்குச் சென்று அங்கு மூடிவைத்திருப்பதென்னவென்று திறந்துபார்க்க அதிலன்னமும் பாலும் வேணமட்டு மிருக்கக்கண்டு பசியுடன் வந்திருக்குஞ் சாதுவை அழைத்து அப்பிரசாதத்தில் அவருக்குவேண்டியமட்டுங் பரிமாரிப் பாலைவிட்டுப் புசியுமென்று சொல்லிக் கொண்டிருக்கையில இன்னுஞ்சில சாதுக்கள் வந்தார்கள் அவர்களையும் ஒக்காத்தி மைத்தப் பிரசாதத்தை யெல்லாம் பரிமாரிபாலைவிட அவர்களுமப்பால் அன்னத்தை வெகுப்பிரியமாகப் புசித்துப் போயினாகள் பின்பு கூபாகுயவர் சாதுக்களை வஞ்சித்து நமதுமனைவியானவள் பாலுடன் அன்னத்தையும் பந்துக்களுக்கிடுவதற்குப் பத்திரப்படுத்தி வைத்தாளே இதுவும் பாபமல்லவா வென்றுன்னி முன்னமே சாதுக்களுக்குப் பகுந்துவிட்டார். இதற்குள்புரியானவள் வந்துத் தன்பந்துக்களைப் பந்தியாகஒக்காத்திவைத்துத் தளிகை யிலையைப்போட்டுப் பாகசாலைக்குட்சென்று பார்க்கத் தான்வைத்துப் போயினபாலன்னமில்லாமையால் உடனே அம்மங்கைமார்பினிலடித்துக் கொண்டு தேசதேசத்து சாதுக்களனைவரையும் தன்னிடத்திற் சேர்த்துக்கொண்டுகிஞ்சிற்றேனு யெனக்குச் சுகமில்லாமல் யானெவ்வளவோபாடுபட்ட யெனக்கு பந்துக்கள் வந்திருக்க அவர்களுக்காக யானெடுத்துவைத்தப் பாலன்னத்தை யெடுத்துச் சாதுக்களுக்குப் பரிமாரிவிட்டீரே இதுதருமமோவென்றுத் தன்பிராணநாயகரை நோக்கி வினவினள் அதற்கவர் அடிபெண்ணே வந்திருக்குஞ்சாதுக்களை வஞ்சித்து பந்துக்களை நீயாதரித்தாய் இப்படிக்கி நீசதாகாலமுஞ்செய்துக்கொண்டிருப்பதால்என்னப் பிரறோசனத்தை யடைவாய் அடிபாதகிபிரம்மகாதகி தோதகி குலைபாதகி என்று வைதுக்கொண்டே தன்மனைவியின் பக்கலடைந்து அடிக்கப் போகையில் அதைக்கண்டு அம்மங்கையும்பயந்து இனியானிங்கிருப்ப தில்லையென்றுசொல்லித் தாயார்வீட்டையடைந்திருந்தனள். அப்போது கூபாகுயவர் மனைவி தன்னைவிடுத்துப் போயினதற்கு மெத்தசந்தோஷித்துச் சீஷர்களுடன் பகவந்நாம சங்கீர்த்தனைகளைப் பாடியாடியும் பரமானந்தமடைந்தும் முன்னமிருந்ததைப் பார்க்கிலும் எண்மடங்கதிகமாக சாதுசத்புருஷர்களுக்கு அன்னதானம் நடத்திக்கொண்டும்இருந்தார்.

இவ்வண்ணமிந்த கூபாகுயவர் ஹரியைப்ஜித்து
க்கொண்டும் சாதுக்களுக்குஅன்னம்படைத்துக்கொ
ண்டும் பேதமின்றியிருக்கையில் ஒருகாலத்தினிலங்கு
பெருத்த கரிப்புகாலம் அங்குள்ளவர்களுக்கும் மத்த
தேசங்களி லிருப்பவர்களுக்கும் ஜீவனம் நடப்பது
மெத்தக்கடினமாயிற்று அப்போது எங்கிருந்தஜென
ங்களுங் கணக்குமிதமின்றிமந்து கூபாகுயவர் மடத்
திற் சேர்ந்திருந்தார்கள் அவர்களைநோக்கிக் கூபாரு
யவர் ஓசாது ஜெனங்களே நீங்கள்யாவரும் மடத்தி
னில் சொஸ்தமாகப் புசித்துக்கொண்டு ஸ்ரீஹரிபஜ
னையைப் பக்தியுடன்கேட்டுக்கொண்டிருங்களென்று
கட்டளையிட்டார் அந்தப்படியே யந்தசாதுக்கள் எல்
லோரும் புசிக்கச் சென்றபோதுசமைத்திருந்த அன்
னமாவது வந்திருநத யாவருக்கும் அக்ஷயமாகவளர்
ந்தபடியால் யாவரும் திருப்தியாகப்புசித்து சந்தோ
ஷசித்தர்களாகி கூபாகுயவர் செய்யும் பஜனைகீர்த்த
னைகளைக் கேட்டுக்கொண் டிருந்தார்கள். இவ்விடந்தி
லிப்படிக்கிருக்க அங்கே கூபாமனைவியாகிய புரியெ
னும் பேருடைய மங்கையானவள் தன்தாயார்வீட்டி
லிருந்தபடயே வேறொருபுருடனை மணம் புரிந்துங்
கொண்டு வெகு உல்லாசமாகச் சிலகாலங் கடத்திக்
கொண்டிருக்கையில் சொல்லிமுடியாத கரிப்புக்கா
லம் வந்தபடியால் புசிப்பதற்கெதுவு மில்லாமையால்
தரித்திரம் பிடிங்கித்தின்னுவதால் தட்டுகெட்டுத் தடு
மாறிக் கொண்டிருக்க அவர்களுச்குச் சந்ததிவெகு
வாக உண்டாகி விருத்தியாயினதால் அந்த தரித்திர
திசையை சகிக்கமுடியாமல் அப்போதந்தப் புரியா
னவள் முன்கணவன் நன்றாகவிருக்க ஆசையினால்இர
ண்டாவதோர் கணவனை விவாகஞ் செய்துக்கொண்டு
பலபுத்திரர்களைப் பெற்று இப்படிப்பட்ட ஈனதிசை
யை யடையும்படி நேரிட்டதே உலகத்தினில் அக்கி
னி சாக்ஷியாகப் பலபந்துக்களறிய மணம்புரிந்துக்
கொண்ட கணவனைத் துரோகஞ்செய்து வேறொரு
கணவனை விவாகஞ்செய்துக்கொண்ட கொடும்பாவி
யாகிய எனக்கும் பகவானெப்படிக் கிருபைசெய்வா
ரென்று பிரலாபித்து வெகுவாகத்துக்கப்பட்டுத்தன்
பிள்ளைகளை யழைத்துக்கொண்டுத் தன்பழையபுருட
ரிடம் போகவெண்ணித் தெருவீதியில் வந்துக்கொ
ண்டிருப்பதைகண்டு அவ்வீதியிலுள்ளவர்கள்ஒருவ
ருக்கொருவர் பேசிக்கொண்டதாவது கெங்காசலத்
தைக்கண்டு பன்றியானதுசுகமாகிய தீர்த்தமென்றுக்
கருதாமல் துர்க்கந்தமாகிய சேருடன்கூடின ஜலத்
தைப்போலவும் தடையிருக்கின்றது இப்போதேசிற்
றுளி வேலைக்காரர்களை வரவழைத்துப் பத்துநாளைய
உக்சவத்திற்கும் வேண்டிய வாகனங்களும் ரதமுஞ்
செய்விக்கும்படி நேமித்துவிடுங்கள் அதற்கெவ்வளவு
தொகையாகிறதோ அவ்வளவு தொகையையுந்தடை
யின்றி கிருஷ்ணார்ப்பணமாகத் தருகிறேனெனக் கே
ட்டு கூபாகுயவர் அப்போதே பிரமோச்சவம்நடத்தி
விஷ்ணுமூர்த்தியைச் சேவித்துப் பரமானந்தமடைந்
தவர்போலப் புளகாங்கிதத்துடன் மயிர்க்குச்சிட்டு
ஆனந்தக்கண்ணீர் பெருகவிட்டு மெய்மறந்திருந்தார்
அதைக்கண்டு அரசன் தன்னருகினிலிருக்குந் தூதர்
களை நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

அடா தூதர்களே நீங்கள் சீக்கிரமாக ஓடி தச்ச
வேலைகளுஞ் சிற்றுளிவேலைகளுஞ் செய்யும்படியான
தச்ச மேஸ்திரிகளையுஞ் சிற்றுளி மேஸ்திரிகளையுஞ்
சுவாமிக ளழைக்கின்றாரென்று சொல்லி அழைத்துக்
கொண்டு கணநேரத்திற்குள்ளாக வரவேணுமென்று
க்கட்டளையிட்டான் அவர்களுமந்தப்படியே விரைந்
தோடிச்சென்று தச்சமேஸ்திரிகளையுஞ் சிற்றுளிமே
ஸ்திரிகளையும் அழைத்து கொண்டுவந்து கணப்பொ
ழுதிற்குள்ளாக அரசன்முன்னம் விடுத்துப் பணிந்
தார்கள். அரசனுமவர்களை நோக்கி ஓதச்சமேஸ்திரி
களே நமதுசுவாமிகளிருக்கும் இம்மடத்திற்குள்ளெ
ழுந்தருளி யிருக்கும் சாக்ஷாத் விஷ்ணு மூர்த்திக்குப்
பிரமோச்சவம் செய்யும்பொருட்டு வேண்டிய வாக
னாதிகளும் ரதமொன்றுஞ் செய்விக்க வேண்டியதா
யிருப்பதால் அதற்காகவேண்டிய மரங்கள்வகையரா
க்கள்எதெதுவேண்டியதோ அதுகளையெல்லாம்நமது
மந்திரியினிடஞ்சொல்லித் தருவித்துக்கொண்டுவெகு
சீக்கிரத்தினில் முடித்துக் கொடுக்க வேண்டுமென
அதற்கந்த தச்சமேஸ்திரிகள் அரசனையும் சுவாமி
கூபாவையும் பணிந்து ஓசுவாமிகளே தங்களிஷ்டப்
படியே அதிகதுரிதமாக ரதத்தையும் வாகனாதிகளை
யுஞ் செய்துமுடிக் கின்றோமெனக் கேட்டு அரசன்
தூதர்களைநோக்கி அடாதூதர்களே நமதுமந்திரியை
சீக்கிரமழைத்து வாருங்களென்று கட்டளையிட அந்
தப்படியே அத்தூதர்களுஞ் சென்று மந்திரிவீட்டை
யடைந்து ஓசுவாமி நமதரசன் தங்களையழைத்துவரச்
சொன்னாரெனக் கேட்டு மந்திரியும் வெகுசீக்கிரமா
கப் புறப்பட்டுத் தூதர்களுடன் நடந்து மடத்தை
யடைந்து சுவாமிகளைக்கண்டு பணிந்துப்பின்பு அரச
னைக்கண்டு வணங்கி எங்களையாண்டுரட்சிக்கும் வேந்
தே அடியேனை யழைப்பித்தகாரணம் யாதோ அதை
தெரியப்படுத்தவேணுமென்று பணியும் மந்திரியை
நோக்கி அரசன் சொல்லுகிறான் ஓமதிமந்திரி சுவாமி
கள் வீற்றிருக்கும் இம்மடத்திற்குள் நின்றதிருக்கோ
லத்துடன் சேவை சாதிக்குஞ் சாக்ஷாத் விஷ்ணு

மூர்த்திக்குப் பிரமோத்சவஞ் செய்விக்க வெண்ணங் கொண்ட நமதுகுரு சுவாமிகளிஷ்டப்படிக்கிஆகவேண்டிய வாகனாதிகளும்ரதமுஞ்செய்விக்கும்படிஇதோ நிற்குந் தச்சமேஸ்திரிகளை யழைப்பித்தேன்இவர்கள் கேழ்க்கும் மரங்களையும் இன்னுமேதேனும் சாமான்களையும் கிரயத்திற்குக்கொண்டு கொடுத்துக் கூடிய சீக்கிரத்தினில் வேலைகள்செய்து முடிக்கின்றது நினதுகடமை இதற்குவேண்டிய தொகையை நமதுபொக்கிஷத்தினிலிருந்து வரவழைத்துக்கொண்டு கூலிமுதலானதுகளும் அப்போதுக்கப்போது பட்டவடா செய்து யாதொரு புகாராவுமின்றி வெகுவிமர்ச்சையாக முடிவுசெய்து எனக்குத்தெரியப்படுத்துமெனக் கேட்டு மந்திரியும் அப்படியே செய்விக்கின்றேன் பிரபுவேயென்றுசொல்லி அங்குவந்திருக்குந் தச்சமேஸ்திரிகளை நோக்கி ஓமேஸ்திரிகளே உங்களுக்கு வேண்டியது என்னென்னமரங்கள் அதைத்தெரியச் சொல்லுங்களென அதற்கவர்கள் ஓசுவாமி மதிமந்திரியே கலியாணமுருக்க மரங்கள் திருக்கணமரங்கள் இவைகளிரண்டு தினுசுகளிலும் பலமரங்கள் வேண்டுமெனக்கேட்டு மந்திரியும் தூதர்களையனுப்பிக் கிராமங்களிலிருந்து வரவழைத்துக் கொடுக்க அம்மரங்களைக்கொண்டு அத்தச்சர்கள் ரதத்திற்கு வேண்டிய பொம்மைகள் சிற்றுளி வேலைகளைச்செய்து ஒருவருடத்திற்குள் முடித்தார்கள் தச்சமேஸ்திரிகளோசக்கரங்கள் அச்சுமச்சுக் கொடுங்கைக் குத்துக்கால் முதலானதுகளும் மேல்கண்ட வருடத்திற்குள்ளாக முடித்தார்கள்இன்னுஞ்சில தச்சர்கள்வாகனாதிகள்செய்த மாத்திரத்தில் மந்திரியானவன் தச்சர்களுக்குந் தச்சமேஸ்திரிகளுக்கும் வாரந்தோரும் கூலி பட்டவடா செய்துக்கொண்டும் யாதொரு தடைபு மில்லாமல் வெகு அழகாகமுடிந்த அந்தரதத்தைப் பார்த்து மந்திரி வெகுசந்துஷ்டியடைந்து உடனே அரசனிடஞ் சென்று ஓசுவாமி பலவிதங்களாகியவாகனங்களுடன் ரதமும்முடிவாய் விட்டதெனக்கேட்டு மந்திரியுடனரசனும்வந்து ரதத்தையும் வாகனங்களையும் பார்த்து வெகுசந்தோஷப்பட்டு ரதத்தைக் கரியகோலமாக ஓட்டும்படி தச்சமேஸ்திரிகளுக்குக் கட்டளையிட்டான் அந்தப்படியே தச்சமேஸ்திரிகளும் ரதத்தைக் கரிய கோலமாக நடப்பிக்கிறபோது அந்தரதத்தினுருளைகளுக்குப் பலமிருகஜாதிகளைப் பெலிகொடுத்துராஜவீதியாக ஓட்டிப் பிரதக்ஷணஞ்செய்வித்துப்பழயபடி தேர்முட்டியினிடஞ் சேர்த்து அரசன்கொடுத்தவெகுமதிகளைப் பெற்றுக்கொண்டுதச்சர்கள்போயினார்கள் பிறகு அரசன் மடத்திற்குவந்து சுவாமிகளைக் கண்டு பணிந்து ஓசுவாமி தங்களுடைய உத்திரவின்படிவாகனங்களும் ரதமுந்தயாராய்விட்டது அதைத்தாங்கள் வந்துப் பார்க்கவேணுமென்று வேண்டிக் கொள்ள அதற்குசுவாமிகள் அப்படியேஇதோவந்தேனென்று சொல்லி அரசன் பின்சென்று ரதத்தையும் வாகனங்களையும் பார்த்து வெகுசந்துஷ்டராகிப் பங்குனிமாதத்தில் ஸ்ரீராமநவமியன்று உச்சவஞ் செய்விக்கும்போது முதல்நாள்தொடங்கி எட்டுநாளுமாகஅமுர்தபானத்தைவிடுத்து சாராயத்தைச் சுகமெனக் கருதிக்குடித்ததைப்போலவும் இம்மங்கை பரிசுத்தாத்துமாவாகியும் வைஷ்ணவர்களிற் சிறந்தவராகியும் விளங்குங் கூபாகுயவரைவிடுத்துத் துஷ்டனாகியும் பாவியாகியும் விளங்கும் வேறொருபுருடனை மணம்புரிந்துகொண்டு மெத்த தரித்திர பீடிதையாகிய அன்னந்தண்ணீரு மில்லாமையால் பிள்ளைகளை யழைத்துக்கொண்டு கிஞ்சித்தேனும் வெட்கம் நாணமட மச்சம் பயிர்ப்பென்ப தெள்ளளவுமில்லாமற் றெருவழியாக நல்லடிக்காக நடந்துபோகிறாள்பார்த்தையாயென்று பேசிக்கொள்ள அதைக்கேட்டு அந்தப் புரியானவள் பதிலொன்றுஞ் சொல்லாமலே கூபாவிருக்கு மடத்தைநோக்கிச் சென்றனள் அங்குசென்று தன்கணவனைநோக்கி ஓசுவாமி மெத்தப் பசிகொண்டுவந்தோம் எங்களுக்கு அன்னங்கொடுத்துப் பசியாற்றுமென்று வேண்ட அதற்குக் கூபாகுயவர் மடத்தைவிட்டுமுன்னம் வெளியிற்போ உனக்கும் உன்புதல்வர்க்கும்பசி தீர்க்கும்படி யானிந்த மடத்திலிருக்கவில்லைச் சாதுக்களுடைய பசியைத் தீர்க்கும்பொருட்டு அரசன் இம்மடத்தைக் கட்டிவைத்தாரேயன்றி யுன்போலொத்த துரோகசிந்தை யுடையவர்களுக்கு அன்னமளிக்கும் பொருட்டு இம்மடத்தைக் கட்டிவைக்கவில்லைஅன்றியும் அக்கினி சாக்ஷியாகப் பந்துக்கள் முன்னிலையில் விவாகஞ் செய்துக்கொண்ட யானுயிருடனிருக்கும் போதே என்னைவிடுத்து நீ வேறொருபுருடனைமணம் புரிந்துக்கொண்டு அவன்விஷயத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையாலுண்டாகிய பாக்கிய விசேஷத்தையும் யான் ஸ்ரீஹரியே கெதியென்று யவர்திருவடிகளையன்றி வேறொரு தெய்வத்தையுந் துதிசெய்யாம லிருக்கும் என்னுடைய பாக்கியவிசேஷத்தையும் நன்றாக யோசித்துப்பாருங் கரதலாமலகம்போல காணப்படுகின்றதென்று சொல்லிக்கொண்டே அங்கிருக்கும் சாதுக்களுக்கு அன்னம்பரிமாரி யாவரும்புசித்தபின்புத் தானும்புசித்து பகவந்நாம சங்கீர்த்தனம் பாடியாடி ஆனந்தக் கண்ணீர்சோர மெய்மறந்திருக்கிறபோது அருகினிலிருக்குங் கிராமவாசிகள் சிலபேர்கள்வந்து கூபாகுயவரைப் பணிந்தெழுந்து ஓசுவாமீ எங்கள் கிராமத்தினில் புராதன மகாவிஷ்ணு மூர்த்தி

விக்கிரகமொன்று வெகுகாலம் பூசையில்லாமல் இருக்கின்றது அந்தவிக்கிரகத்தை இம்மடத்திற்குக் கொண்டுவந்துஸ்தாபனஞ்செய்துப் பூசைமுதலியதுகளும் நடத்திக்கொண்டிருந்தால் மிகவுமகிமைகள் விளங்குவதுமன்றியும் தங்களுக்கு மெத்தப் புண்ணிய முண்டாகுமென்று வேண்டிக்கொள்ள அதற்கு கூபாகுயவர் வெகுசந்துஷ்டராகிக் கிராமஸ்தர்களை நோக்கி அப்படியானலந்த விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று நேமிக்க அந்தப்படியே யவர்களுஞ்சென்று தங்கள்கிராமத்தையடுத்து அவ்விக்கிரகத்தைப் பலவித சிகிச்சைகள் செய்து எடுத்தும் அவ்விக்கிரகம் ஸ்தாபனத்தைவிட்டு எடுபடாமலும் பெயராமலுமிருந்தபடியால் அவர்கள் இது யென்னமோ விந்தையாக யிருக்கின்றதென்று சொல்லிக் கொண்டே கூபாகுயவரிருக்கும் மடத்துக்குவந்து அவரைக் கண்டு பணிந்து ஓசுவாமி அந்தவிக்கிரகமானது எத்தனையோவித உபாயங்கள் செய்து பேர்த்தெடுத்தயோதிலும் அது அவ்விடத்தை விட்டுப் பெயராமலிருக்கின்றது இதற்கு நாங்கள் செய்யவேண்டியதென்னமோ அதைதெரியப் படுத்தினல் நாங்களந்தப்படிக்கிச்செய்து எடுத்துக்கொண்டு வருகின்றோ மெனக் கேட்டு கூபாகுபலர் திடுக்கென்றெழுந்து அவர்களை யழைத்துக் கொண்டக்கிராமத்தை யடைந்து அந்த விஷ்ணு மூர்த்தியைக் கண்டு தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

அதெப்படியெனில ஓஜெகதீசா சர்வேசாகருணையனுங் குணதீதனுங் கஞ்சாக்ஷனுமாகிய தேவரீர் ஸ்ரீஹரியெனும் நாமம் சொல்லிய மாத்திரத்தினில் அளவிட்டுச் சொல்லப்படாத கிருபைசெய்யப் பட்டவர் சகலஜெகங்களும் தேவரீருடைய ரூபமாகி சர்வகாலத்திலும் இருக்குமிவ்வுலசத்தினில் வாசாமகோசரமாகிய திவ்வியகுணங்களைப் புகழ்ந்துக் கொண்டாட என்னல்தரமாகுமோ அன்றியும் பக்தர்களுடைய மனோபாவந் தெரிந்து அவர்களுக்கு சகுணத்தினல் காணப்படுவாய் பாமரர்களுக்குப் பாஷாணமாகியிருப்பாய் இப்படிப்பட்ட குணதீதனுங் குணரசிதனுமாகிய தேவரீர் மடத்தின்வரைக்கும் எழுந்தருளி வரவேணுமென்று யான்மெத்தஅபேக்ஷைகொண்டேன் ஆகையால் தயவுசெய்து என்னுடன் வாருமென்றழைத்தமாத்திரத்தில் அனேகவருடகாலமாய் பூசைமுதலானதுகளு மில்லாமலிருந்த அவ்விக்கிரகத்திற்கு குளிர்ந்த பார்வையும் புன்னகையுடைய முகமும் அவ்விக்கிரக தேகமுதல் யாவத்துமான அவயவங்களுக்கும் ஒருவிதமான பளபளப்பு உண்டாயின அதைக்கண்டு கூபாகுயவர் என்றுமில்லாத பரமானந்தமடைந்து தன்கரங்களாலே அந்தச்சிலாரூபவிக்கிரகத்தைப் பேர்த்தெடுக்கப் பிரயத்தனஞ் செய்கிறபோது தன்கடையாகவே அந்தச் சிலாவிக்கிரகமானது அவ்விடத்தைவிட்டுப் பேர்ந்திருக்க உடனே அக்கிராமஸ்தர்களை யழைத்து இனிநீங்கள் சீக்கிரமாக இச்சிலா விக்கிரகமாகிய விஷ்ணு மூர்த்தியைச் சிலமனிதர்களைக் கொண்டு எடுப்பித்துக்கொண்டுவாருங்களென்று சொல்லி அவர்களுக்கு நேமித்துவிட்டு அந்தக்கூபாகுயவர் முன்னுதாக நடந்துத்தன் மடத்தைச் சேர்ந்திருந்தார். இதற்குள் அக்கிராமவாசிகள் சிலபேர்கள் சேர்ந்து சிலாவிக்கிரகத்தைத் தூக்குகிறபோது அவ்விக்கிரகம் வெகுலேசில் கிளம்பியதுஉடனே அவர்கள்மெத்த சந்தோஷத்துடன் அச்சிலாவிக்கிரகத்தைச் சில ஆட்களைக்கொண்டு எடுத்துவந்து மடத்தினில் சேர்ப்பித்தார்கள்.

அப்படியவர்கள் கொண்டுவந்து சேர்த்தவுடனே கூபாகுயவர் முகூர்த்தநாளொன்றுபார்த்துஅந்நாளில் அனேகம் பிராமணர்களை வரவழைத்து அவ்விக்கிரகத்திற்குக் கும்பாபிஷேகஞ் செய்வித்து அந்த நாற்பதுநாளும் பிராமணர்களுக்குஞ்சாதுக்சளுக்கும் சொல்லிமுடியாத பக்ஷணங்களுடன் ததியாராதனை நடத்தி மந்திரலோபங் கிரியாலோபமின்றி ஸ்தாபனஞ்செய்து அஷ்டபந்தன முதலானதுகளையுஞ்சாஸ்திரவிதியின்படி முடித்துவந்த பிராமணர்களுக் கெல்லாந் தக்கவெகுமதிகள் செய்து அவர்களை யனுப்பிவிட்டு அன்றுமுதல் அந்தவிஷ்ணுமூர்த்திக்கி மூன்றுகாலபூசையும் பஞ்ச பர்வங்களும் நித்தியோச்சவபக்ஷோச்சவ முதலானதுகளை நடத்திக்கொண்டு வெகுபக்தி சிரத்தையாக விருந்து ஒருநாள் அந்தவிஷ்ணு மூர்த்திக்குப் பிரமோச்சவஞ் செய்விக்கவேணுமென்றக் கருத்துண்டாகி அரசனைலரவழைத்துத் தக்கபடி உபசரித்துஓவிஷ்ணுபக்தனுகியவேந்தனே எனக்கோரெண்ணமுண்டா யிருக்கின்றன அதென்னவெனில் நமது மடத்தினுள் நின்ற திருக்கோலங் கொண்டிருக்கும் சாக்ஷாத் விஷ்ணு பகவானுக்குப் பிரமோச்சவஞ் செய்விக்க வேணுமென்ற எண்ணமுண்டாயிருக்கின்றதெனக் கேட்டு அரசன்ஓசுவாமி கூபாகுயவரே தங்களிஷ்டப்படியே செய்விப்பதற்கென்ன தனங்களின்மீது பகவானை எளய்பண்ணித் திருவீதிபுறப்பாட்டு செய்வித்து ஒன்பதாவதுநாள் ரதத்தை அலங்கரித்து அந்தரதத்தின்மீது பெருமாளை எளப்பண்ணித்திருவீதி வலஞ்செய்வித்து நிலையில்நிறுத்திப் பத்தாவதுநாள் தீர்த்தவாரி செய்து தெப்பஉச்சவங்

நடாத்திய பிரமோச்சவத்தைப் பூர்த்திசெய்து துவஜாவரோகனஞ் செய்வித்துக் கூபாகுயவரும் அரசனும் பரமானந்தமடைந்து யிருக்கிறபோது கூபாகுயவர் அரசனைநோக்கி ஓஅரசனே பிரமோச்சவம் நடத்தியதில் பகவானை சேவிக்கவேண்டிவந்த வெகு ஜெனங்களும் நிற்பதற்கும் தெண்டன் சமர்ப்பிப்பதற்கும் இடம் விசாலமாகயிராத இம்மடத்தில் வெகு கஷ்டப்பட்டார்கள் இனி மேலுமேலும் பிரபலமாகும் ஆகையால் ஜெனங்கள் சௌக்கியமாக விருப்பதற்குத்தக்கயோசனை செய்யுமென அதற்கரசன்கூபாகுயவரை வணங்கி ஓசுவாமி ஒன்றுந்தெரியா தனிர்மூடனை யோசனை செய்யும்படிக்கித் தேவரீர் கட்டளையிட்டால் யானென்னசெய்வேன் இதற்கு யிப்படிநடக்கவேணுமென்றுத் தாங்களே சொன்னால் அந்தப்படி நடக்கச் சித்தமாக விருக்கின்றேனெனக்கேட்டு கூபாகுயவர் அரசனைநோக்கி ஓஅரசனேமெத்தவிசாலமாகிய விடத்தில் சந்நிதியொன்றுகட்டி அதில்விஷ்ணுமூர்த்தியை ஸ்தாபனஞ்செப்தால் சாதுக்களுக்கு அன்னம் படைப்பதற்குங் கஷ்டமில்லாமல இடம் விசாலமாகவிருக்கும் ஆகையால் சீக்கிரம் சந்நிதிகட்டுவதற்குத் தக்கயோசனைசெய்துமுடித்துவையுமென உடனே அரசன் மந்திரியை யழைத்துக் கொண்டு கூபாகுயவருடன் சென்று சந்நிதிகட்டுவதற்குத்தக்க இடமெங்கிருக்கிறதென்று பார்த்துக்கொண்டேவருகையில் அங்கோர்பக்கத்தில் தக்கயிடங்கிடைக்க அதைக் கூபாகுயவரும் அரசனும் மந்திரியுமாக மூவரும் அவ்விடம் தக்கதென்று சந்தோஷித்து சிற்பிகளை யழைப்பித்து அவ்விடத்தினில் கடக்கால் எடுக்கும்படிச்செய்து அக்கடக்காலை துத்துக் கட்டடத்துக்கு வேண்டிய சாமான்களை வரவழைத்துக்கூடியசீக்கிரத்தில் இரண்டுவருட காலத்துக்குள் சந்நிதியை முடித்து அச்சந்நிதியை சம்புரோக்ஷணை செய்வித்து விஷ்ணுமூர்த்தியை அச்சந்நிதிக்குள் எளப்பண்ணி நல்ல முகூர்த்தவேளையில் ஸ்தாபனஞ்செய்து அஷ்டபந்தனம்முடித்து மூன்றுகால பூசையும் நித்தியோச்சவ பக்ஷோச்சவப் பிரமோச்சவ முதலானதுகளுங் குறைவர நடத்திக்கொண்டுச் சிலவருடகாலம் ததியாராதனையும் நடத்திக்கொண்டிருந்து முடிவில் அந்தக்கூபாகுயவர் நிறந்தர சாம்பிராச்சிய பதவியையடைந்தனர்.

வாழி விருத்தம்.

மாபாவசஞ்சிதங்கள்போக்குமவன்வாழியே மண்ணுக்குள்ளொருவருடமரைந்திருந்தோன்வாழி
சாபாதுக்கிரகசம்பத்துதனக்குற்றோன்வாழி சாதுக்கள்தொண்டிலென்றுஞ்சந்துஷ்டியோன்வாழியே
தாபாதிகள்மூன்றையுந்தனித்தவள்ளல்வாழியே தன்னிகரிலாச்சாந்தசற்குணத்தோன்வாழியே
கூபாகுயவரெனுங்கோதிலாதோன்வாழியே குணமுளவர்தாள்களென்றுங்குறைவின்றிவாழியே

கூபாகுயவர்சரித்திரம்.

முற்றிற்று,

—

ஸ்ரீ

ஸ்ரீபரப்பிரமணேநம:

ஸ்ரீமத்

நிம்பராஜன் சரித்திரம்.

துதிவிருத்தம்.

உம்பர்களுமறியவொண்ணாதுலகநாத னுபயசரணபக்திசெய்துயர்பதத்தை
அம்புவியிலடையவெண்ணிமனதைநாட்டி யனுதினமுமிடைவிடாமல்தனைமறந்து
வம்பர்களைப்பிடித்தடித்துவழியைக்காட்டி வாதுசெயுமதபேதர்தமைவெரட்டும்
நிம்பாராஜனுபயதிருவடிகளேற்றி நிர்மலமாய்நமதுதலைக்கணிந்துய்வோமே.

கதையின் வரலாறு.

திருமாதுக்கோர் கணிகலமாகிய தேவதைடெனும் பட்டணத்தில் நிம்பனென்றொரு பிராமணனிருந்தான் அப்பிராமணன் அப்பட்டணத்தைச் சார்ந்த கிராமங்களில் கணக்குவேலை பார்த்துக்கொண்டு அதினால்கிடைக்குஞ் சம்பளத்தைப் பெற்றுத்தன்குடும்பத்தைப் போஷித்துக்கொண்டு வெகுநீதிமானாகி மனதினில் ஸ்ரீஹரிபக்தியை மரவாமல் பாகவதர்களைக் கூடி உலகத்தில் இருக்கும்படியான திவ்வியதீர்த்தங்களனைத்தையும் பார்த்தும் மூழ்கியும் திவ்வியதேசங்களைச் சேவித்துக்கொண்டுவீட்டிற்குவந்துத் தன்மனதினில் ஸ்ரீஹரியைப் பதியவைத்து அப்பகவானுடைய கதைகளில் உருசியுண்டாகி சுயமாகத்தான் கீர்த்தனைகள் ஸ்ரீஹரியின்மீது செய்யவேணுமென்ற அபேக்ஷையுண்டாகி யோசிக்கையில் தன்மனதுக்கெதுவுந் தோன்றாதபடியால் வெகுகாலம் விசனப்பட்டுக்கொண்டு ஸ்ரீஹரியை மெத்த வேண்டிக்கொண்டிருக்கையில் இதை ஸ்ரீபாண்டுரங்க நாதனறிந்துக்கருணைமிகுந்து விநாயகரை யழைத்து ஓகெஜானனரே என்மீது கீர்த்தனைகள் செய்யும்பொருட்டு நம்மை மெத்த பக்தியுடன் வேண்டிக்கொள்ளும்நிம்பப்பிராமணனெதிரினிற்சென்று நினதுசேவையை யீந்து அப்பிராமணன் கேட்கும்வரத்தையீந்து வாருமென்றுக் கட்டளையிட்டார் அந்தப்படியே அத்திமுகனும் நிம்பப்பிராமணன் முன்னமெழுந்தருளிசேவைதந்து நிற்கக்கண்டு அந்த நிம்பப்பராமணன் அந்தவிநாயகமூர்த்தியை வணங்கி வெகுவிதமாகத் தோத்திரஞ்செய்துநிற்கும் அந்தநிம்பப் பிராமணனை நோக்கி விநாயகர் வினவுகின்றார்.

ஓபிராமணோத்தமரே நீர்செய்யும் பத்திக்குமெச்சி நீயபேக்ஷித்திருக்கும் வரத்தைக் கொடுத்துவரும்படி சாக்ஷாத் பாண்டுரங்கநாதர் என்னையனுப்பினார் அவர்நேமனப்படி யானும்வந்துன்பக்திவைராக்கியத்தைக்கண்டு மெத்த சந்தோஷித்தேன் உன்மனதில் கோரிய வரமெதுவோ அதைத் தெரியப்படுத்துவையேயாகில் அந்தவரத்தை யுனக்கு அவசியங் கொடுத்துப் போகிறேனெனக்கேட்டு நிம்பப்பிராமணன் ஓசுவாமி விநாயகமூர்த்தியே இந்த ஏழையின்மீதுக் கிருபையுண்டாகி சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் தங்களை யனுப்பினாரோ தேவரீரும் அடியேனையொருபொருளாக வெண்ணி இவ்வளவுதூரஞ் சிரமமெடுத்துக் கொண்டு வந்தீரே இந்தருணத்தை யானெப்போது தீர்க்கப்போகின்றேன் என்று தீனவசனங்களைப் பகரும் நிம்பப்பிராமணரை நோக்கி நிம்பப்பிராமணரே வேதங்களும் வேதகீதங்களுக்குப் பிரமன் முதலிய தேவர்களுக்குஞ் சேவிக்கவும் புகழவுந்தரமாகாத சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் நீசெய்யும் பக்தியெனும் பொருளுக்குக் கடன்காரனாகியபடியால் அக்கடனைத் தீர்த்துவரும்படி என்னையனுப்பினார் இதையோசியாமல் ஏதேதோ சொல்லுகின்றாய் இதுகளெல்லா மிருக்கட்டும் எனக்குமெத்த நாழிகையாய்விட்டதுயான் சீக்கிரம் போகவேணும் உன்மனதினில் கோரியிருக்கும் வரம்யாதோ அதைக்கேளும் தருகிறேன் எனக்கேட்டு அந்த நிம்பப்பிராமணன் ஓசுவாமி விநாயகக்கடவுளே சாக்ஷாத் பாண்டுரங்கன்மீது கீர்த்தனைகள் யான் சுயமாகச் செய்யவேணுமென்ற கோறிக்கையடியேனை வெகுகாலமாக வாட்டுகின்றது ஆகையால்

அப்பகவான்மீது கீர்த்தனைகள் தொடங்கிய மாத்திரத்தில் யாதொரு தடையுமின்றி முடிவு ஆகும்படியும் அடியேனுடைய அபேக்ஷைத் தீரும்படியாகவும் வரந்தரவேணுமென்று வேண்டிக்கொள்ளும் நிம்பராஜன்மனது சந்தோஷிக்கும்படி யந்தவிநாயகக் கடவுள் ஓநிம்பப்பிராமணனே நீர்கேட்ட வரத்தைக்கைக்கொள்ளு மென்றுசொல்லி வெற்றிலைப்பாக்கு அதற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்கள் முதலானதுகளையுமீந்து இதைப்போட்டு மென்று விழுங்குவையேயாகில் பகவானுடைய கதைகளைச் செய்யும்படியான திறமை யுமக்குண்டாகு மென்றுசொல்லி யப்பிராமணனை மெத்தவுஞ்சாதுவாகும்படிக்கிருபை புரிந்து மறைந்துபோயினர்.

உடனேயந்த நிம்பப்பிராமணன் நித்திரையினிலிருந்து விழித்துக்கொண்டவனைப் போலாகி அப்போது மிதமற்றகதைகள் செய்விப்பதற்குத் தக்க சமர்த்துண்டாகி ஸ்ரீஹரியின் கிருபைக்குப் பாத்திரனாகியும் விளங்கினார் அன்றியும் ஆசைகள் மோகமுதலானதுகள் அபிமானாதிகளை யவர் ஆராய்ந்துபார்த்து இதுகளில் சத்தில்லை யென்றுக்கருதீ யாவத்தையும் நிவர்த்திசெய்து பாசபந்தங்களற்று அப்பிராமணர் அப்போதே பண்டரிபுரத்தைநோக்கிச்சென்று அத்தலத்தை யடைந்து அங்குப் பெருகியோடும்பீமநதியினில் ஸ்நாநுஷ்டானங்களை முடித்து மெத்தநேமத்துடன் சந்நிதியைநோக்கி வருகையில் துவாரத்தினிடத்தில் சாக்ஷாத் ஸ்ரீருக்குமணி பிராட்டியாரோரு ஏழையைப்போல உருக்கொண்டுமையக்கிழங்குவித்துக்கொண்டிருந்து இந்தநிம்பப் பிராமணரைப் பார்த்த மாத்திரத்தில் திட்டென்றெழுந்து ஓசுவாமி அடியாளுக்கொரு பிள்ளையுண்டு அப்பிள்ளைக்குக்காலையில் பால்கொடுத்துத் தொட்டிலில் போட்டுவிட்டு இக்கிழங்கு விற்பனை செய்வதற்காக இங்குவந்துவிற்பனைசெய்துக் கொண்டிருந்தும் இன்னமுமிச்சமாகக் கிழங்குகளிருக்கின்றது நாழிகைபதினைந்தாய் விட்டது முலைப்பாலின் பொருட்டு அப்பிள்ளை மெத்தவும் ரோதனஞ் செய்துக்கொண் டிருக்குமென்று எண்ணுகின்றேன் ஆகையால் தாங்கள் தயவுசெய்து சத்துநேர மிங்கிருப்பீரேயாகில்கணப்பொழுதிற்குள் வீட்டிற்குச்சென்று அடியாள் பிள்ளையை எடுத்துக் கொண்டு வருகின்றேனென நிம்பப்பிராமணன்கேட்டுப் பூததயை பச்சாத்தாப முடையவராகிஓஅம்மணி அப்படியானால் நீசீக்கிரம் வீட்டிற்குச்சென்றுபிள்ளையை எடுத்துக்கொண்டு வருகிறபரியந்தம் இக்கிழங்குகளை யாரும் அபகரித்துக்கொண்டு போகாவண்ணம் பாதுகாத்துக்கொண் டிருங்கின்றேனென்று ஒப்புக்கொண்டார் அவ்வசனத்தைக் கேட்ட மாத்திரத்தில் அந்தமாயாமாது வெகுசந்தோஷத்துடன்போக உத்தேசித்தனள் அப்போது நிம்பப்பிராமணன் அக்கிழங்குகளையெல்லா மோர்வஸ்திரத்தில் வைத்துக் கட்டிவைத்துக்கொண் டிருக்கையில் அந்தமாயாமாதுபிள்ளையை எடுத்துக்கொண்டு வருகிறேனென்றுசொல்லி பிரியத்துடன் சந்நிதிக்குட்சென்றனள் அப்போதந்த நிம்பப்பிராமணர் அங்குஉட்கார்ந்து ஒருஜாமபரியந்தமிருந்தும் அம்மாதங்கு வராமலிருக்க மூடிவைத்த கிழங்குகள்மேற் போர்த்த வஸ்திரத்திற்கு மேலே யொருபளபளப் புண்டாகக்கண்டு அந்தநிம்பப்பிராமணர் அம்மூட்டையவிழ்த்துப் பார்க்கையில் அக்கிழங்குகள் பொன்கார்களாகி யிருக்கக்கண்டு ஓஹோ ஆதிமாயசத்தியானவள் என்னை மோசப்படுத்த வெண்ணி அநித்தியமாகிய இப்பொன்கார்களைக்கொடுத்து மாயமாய் மறைந்துபோயின வல்லவா வென்று அப்பொன்கார்களை அங்குதானே வைத்துவிட்டு மெத்தக்கவலை யடைந்தவராகிப் பாண்டுரங்கநாதன்சந்நிதிக்குட்சென்று அந்தஹரிக்குத் தெண்டனிட்டு எழுந்துநின்றுச் சிரசின்மீது இருகரங்களையும் குவித்துக் கொண்டு ஓதேவாதிதேவா மகானுபாவா அடியேனை இப்படியுஞ்சோதிக்கநீதியோ இதுயான்முன்னஞ்செய்த கர்மமோ அல்லது நீர்கொண்டவர்மமோ மர்மமோ இப்படிக்குச்செய்வது தர்மமோ மண்பெண் பொன்னென்னு மூவாசையும்விடுத்துப் பந்துக்கள் தீராச்சலந் தொடுத்துத் தேவரீருடைய திருவடிகளை விடாமலடுத்து என்றும்விடாமல் படித்துக்கொண்டிருக்கு மிவ்வேழையை இனிமீது சோதனைசெய்யவேண்டாமென்று பணிந்து அருகினிலிருக்கும் ருக்குமணி பிராட்டியைக்கண்டு சேவித்துத் தானிரங்கிஇருக்கும் விடுதியைச்சேர்ந்து ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்துக் கொண்டிருக்கையில் இங்கேசந்நிதியில் ருக்குமணிபிராட்டி ஸ்ரீஹரியைநோக்கி ஓசுவாமி தீனர்களுக்குப் பந்துவே இந்த நிம்பராஜன் எந்த ஆசையிலும் அகப்படமாட்டான் சம்பத்துமுதலான சகல பொருள்களையுந் தன்னிடம் வரவொட்டாமல் பற்றின்றிருப்பவன் இப்படிப்பட்ட இந்த நிம்பராஜனை சோதனைசெய்வது வீணேயென்ற பிராட்டியின்வசனங்களைங்கேட்டு ஸ்ரீஹரியானவர் குலுக்கென்று சிறித்துச் சொல்லுகின்றார்.

கேளும்பெண்ணே ருக்குமணி இவ்வுலகின்கண் அனேகபக்தர்கள் என்னைமனதினில் நினைந்து நிராசை யுள்ளவர்போல அபிநயித்து இருப்பார்கள்

அன்றியும் தானெனும் மமதையும் லோபமுமுடைய
வராகிச் சிலபக்தர்கள் உண்மையான பக்திசெய்து
எந்த ஆசையுமின்றி பற்றற்றவர்களைப்போலவிருந்து
எனதுபதவியாகும் பரமபதத்தை யடைவார்களென்
றுசொல்லக்கேட்டு ருக்குமணிபிராட்டி மெத்த சந்
தோஷத்துட னிருந்தனள் மருதினங்காலையில் நிம்ப
ராஜனெழுந்து வெளிக்குச் சென்றுக் காலக்கடனை
முடித்துப் பீமநதிக்குச்சென்று விரைந்து ஸ்னனஞ்
செய்துக்கொண் டிருக்கிறபோது ஸ்ரீஹரியானவர்
திருத்துழாய் மாலையுடன் மேகலாபரணமின்ன பொ
ன்சரிகைப் பூவேலைசெய்த டொப்பியைச் சிரசினில்
தரித்து வேண்டியமட்டும் பரிமளஞ்சேர்த்தச் சந்த
ணத்தை மார்பினில் பூசிக்கொண்டு பிராமணவேடம்
புனைந்து அப்பீமநதிக் கரைக்குவந்துஅங்குஸ்னனஞ்
செய்துக்கொண்டிருக்கும்நிம்பராஜனைக்கண்டு ஓசாது
சத்புருஷரே இங்கு அனேகர் திருடர்கள் திரிந்துக்
கொண்டிருக்கிறபடியால் என்மீது தயவுசெய்து இந்
தத்திருத்துழாய்மாலையுடன்மேகலாபரணம்டொப்பி
மிதுகளைச் சிறிதுநேரம் வைத்துக்கொண் டிருப்பீரே
யாகில் இதற்குள் யான் ஸ்னனஞ்செய்துவந்து பெற்
றுக்கொள்ளுகிறேனென்றுசொல்லி அம்மூன்றுஆப
ரணங்களையுங் களைந்துக் கொடுத்துவிட்டு மாயாப்
பிராமணர் மறைந்துபோயினர் அப்போதந்த நிம்ப
ராஜன் அங்கு ஒருஜாமபரியந்தங் காத்திருந்தும்பிரா
மணன்வராததால் இதற்கு நானென்னசெய்வே னெ
ன்று அங்குள்ள சாதுக்களை வினவியபோது அதற்க
வர்கள் யோசித்து ஓநிம்பராஜனே இது சாக்ஷாத் பா
ண்டுரங்கனதுசோதனையாகுமென்றும்அப்பகவானே
உமக்கிதுகளைக் கொடுத்தேகினு ரென்று சொல்லக்
கேட்டு அங்குள்ளவர்களனைவரும் மெத்தபக்தியுடன்
கூட்டமாகக் கூடிப் பகவானைநோக்கிப்பலவாறுதுதி
செய்துக்கொண்டே பகவான் கொடுத்துப் போயின
மாலைகளையு மந்தநிம்பராஜனுக்குச் சூட்டி அவரை
அழைத்துக்கொண்டு சந்நிதிக்குட்சென்றுபகவானெ
திரினில் நிருத்தி ஹரிகதை செய்யவேணு மென்று
சாதுக்களனைவருஞ் சொல்லக்கேட்டு அந்தநிம்பரா
ஜன் அந்நாள் ஸ்ரீஹரியின்குணானுபவங்களைவிடாமற்
செய்தார் அதெப்படியெனில் காலில்கெஜ்ஜை கையில்
கரதாளம்பிடித்து உலகத்தைமறந்துமிகுமதுரமாகப்
பிரியவாக்குடன் சொல்லக்கேட்டு அங்குநின்றிருந்த
ஜெனங்கள்யாவரும் தங்களைமறந்து சித்திரப்பதுமை
களைப் போலசைவற்று நின்றார்கள் அப்போதுநிம்ப
ராஜன் கோவிந்தா முகுந்தா மூசுகுந்தவரதா நந்த
நந்தா வைகுந்தாவென்றுப் பாடித்தன்னை மறந்தாடு
கையில் ஸ்ரீஹரியானவர் ஓர்பாலனுகி வந்து அந்த
நிம்பராஜன் கண்களிலிருந்துதிரும் ஆனந்தக்கண்ணீ
ரைத் தன்உத்தரியத்தினுல் துடைத்து அவர்திரேகத்
தினி லிருந்தொழுகும் வேர்வையைப்போக்கும்பொ
ருட்டும் ஆயாசமடையா திருக்கும்பொருட்டுத் தன்
கரங்களால் வெண்சாமரம் போட்டுக்கொண் டிருந்
தார் அன்றியும் அந்தபகவான் ஆயாசத்தினுல் நிம்ப
ராஜன் அலண்டு யோகாவண்ணம் அவருக்கு வேண்டு
மான வஸ்துக்களையீந்து அவருக்கு சேவைசெய்துக்
கொண்டிருக்கையில் நிம்பராஜன் செய்யும் பக்திக்கு
மகிழ்ந்து மெய்மறந்தபோது பாலஉருவம் நீங்கித்
தன்கடையே சுயரூபம் தனக்குவந்ததை யுணராமல்
பிரமித்திருக்கிறபோது அங்கிருந்து ஹரிகதையைக்
கேட்டுக்கொண்டிருந்த சாதுக்களேனும் பகவான்
சொரூபத்தைக்கண்டு சேவிக்காமல் நிம்பராஜன்சொ
ல்லும் ஹரிகதையின் சாரத்தைக்கிரகித்து மென்மே
லுங்கேழ்க்க ஆசைமிகுத்திருந்தார்கள்.

இந்தப்படிக்கி யாவரும் கதையின் சாரத்தைக்
கிரகித்துக்கொண்டு மெய்மறந்திருக்கிறபோது அரு
ணோதயமாயிற்று அப்போ தப்பண்டரியி லிருக்கு
மொரு பெண்ணனவள் அம்மார்க்கமாகப் பீமநதிக்
கு ஸ்னனஞ் செய்யப்போகையில்சந்நிதியில்நடக்கும்
ஹரிகதையின் ஓசையைக்கேட்டு யாரோ மகானுபா
வர் ஹரிகதை செய்கின்றார் ஆகையால் அப்புண்ணிய
புருடரை சேவிப்பதுடன் குணானுபவங்களைச் சிறிது
நேரங்கேட்டுப் பின்பு ஸ்னனத்திற்குப் போகலாமெ
ன்றுக்கருதி அப்பெண் வெகுசீக்கிரமாகச் சந்நிதிக்
குட்சென்று அங்குஸ்ரீகூட்டங்க ளிருக்குமிடத்தினில்
போய் தானுமவர்களுடன் நின்று நிம்பராஜன் ஹரி
கதைசொல்லும் சாரத்தையும் அந்தநிம்பராஜன் பிட
ரியின்மீதிருந்துக்கொண்டு சாமரம்போடுகிற ஸ்ரீஹரி
யைக்கண்டு சேவித்து உலகத்தைமறந்து சொக்கியிரு
ந்து அந்தரூபத்தையே பார்த்துக்கொண்டிருப்பதை
ஹரியுணர்ந்து ஒகோ இந்தநிம்பராஜன் செய்யும்பக்
தியெனும் வலையிற்சிக்கிப் பிரமித்து நாமெடுத்தபால
ரூபம்மாரி நமக்கும் சுயரூபமுண்டாயினபடியால் அ
தோநிற்கும் மங்கையொருவள் மாத்திரம்நம்மையின்
னுரென்றறிந்து சொக்கி நம்மையேபார்த்துக்கொண்
டிருக்கும்படி அறிவுகெட்டு மோசம்போய் விட்டோ
மே யென்றுன்னி உடனே மாயமாய் மறைந்துபோ
யினர் அப்போதந்தப் பெண்புருடர்களிருக்குங் கூட்
டத்திற்குட் புகுந்து மெத்த ஆர்த்தியுடன் சென்று
நிம்பராஜன் திருவடிகளில்விழுந்து பணிந்துஓசுவாமி
அடியாளை ரக்ஷிக்கவேணுமென்று விடாதுரோதனை
செய்கிறபோது அங்கிருக்கிருக்கும்சாதுக்கள்யாவரு

மொன்றுகூடி அப்பெண்ணைநோக்கி ஓஅம்மணிநீயிப்
படி ரோதனஞ் செய்வதற்குக் காரணமென்னவென
அதற்கப்பெண் ஓசாதுக்களே இங்கொரு ஆச்சரியம்
நடந்திருப்பதாலே அந்த ஆச்சரியத்தை யடியாள்
ரூபில்சேவித்த மாத்திரத்தில் எனக்கென்று மில்லா
தப் பரமானந்தக்கண்ணீர்பெருகிசொக்கியிருந்தேன்
அப்படி சொக்கியிருந்த யான்மருபடியும் அந்தரூப
த்தைப் பார்க்கக்கருதி கண்களைத்திறந்து பார்க்கிற
போது அந்தரூபங் காணமல்மறைந்து போயினபடி
யால்எனக்குமெத்தஆர்த்தம்வுண்டாகிசாதுக்கள்கூட்
டத்தில் நுழைந்துவந்து நிம்பராஜனைப்பணிந்துரோ
தனஞ் செய்யலாயினேனென அதற்கச்சாதுக்கள் ஓ
அம்மணி நீபார்த்த அதிசயந்தானென்ன அதை விவ
ரிப்பதுடன் ரூபிக்கவேணுமே அதற்கம்மாது ஓசாது
க்களே ஹரிகதைசெய்யும் நிம்பராஜன் தோளின்மீது
சாக்ஷாத் ஸ்ரீஹரியானவ ரிருந்துக்கொண்டு சாமரம்
போட்டுக்கொண்டிருக்கக்கண்டு சேவித்தப் பரமான
ந்தத்தால் யான் அனேகசாதுக்கள் கூட்டமாயிற்றே
யென்றுங் கருதாமல் அக்கூட்டத்திற்குட்புகுந்துநிம்
பராஜன் சமீபத்தினில் வருவதற்குள் அந்த ஸ்ரீஹரி
யானவர் மறைந்துபோயினர் இதனாலே யானிப்படி
ரோதனை செய்தேனெனக்கேட்டுநாமித்தனைபேர்கள்
சமீபமாகவிருந்தும் அந்தஹரியைக் காணமலிருக்க
வெகுதூரத்தினில் பெண்கள் கூட்டத்திலிருந்த இம்
மாதின் கண்களுக்கு எப்படிப்புலப்பட்டது இதை
யோசிக்குமிடத்தினில் நம்பத்தக்கதாகயிருக்கவில்லை
யே என்று யோசித்துப் பின்னும் அநத மங்கையை
நோக்கி ஓஅம்மணி ஸ்ரீஹரியை நீகண்டு தெரிசித்தது
உண்மையாக விருக்கினும் நிம்பராஜன்தோளின்மீது
ஸ்ரீஹரி யிருந்துக்கொண்டு சாமரம் போட்டதற்கு
என்ன திருஷ்டாந்திரம் அதைச்சொல்லுவையே யா
கில் நாங்களுன்வசனத்தை நம்புவோம் இல்லாவிட்
டால் நம்பக்கூடிய தல்லவென்று மொழியக்கேட்டு
அம்மங்கை விரைந்துச்சென்று நிம்பராஜன்தோளைப்
பரிசோதிக்க அவர்தோளின்மீது ஸ்ரீஹரியின் உபய
திருவடிகளுக்கும் பூசியிருந்தச் சந்தனம் திருவடிக
ளைப்போலக் காணப்பட்டபடியால் அந்ததிருஷ்டா
ந்திரத்தை யம்மாது சாதுக்களுக்குக்காட்டஅவர்கள்
அத்திருவடிகளைக்கண்டு தெரிசித்து வெகுவாகப்புக
ழ்ந்துக் கொண்டிருந்து உடனே பாண்டுரங்கனது
நாமங்களை ஜெயஜெயவென்று கோஷித்து ஒவ்வொ
ருவரும் சிரசின்மீது இருகரங்களையுங் குவித்துக்கொ
ண்டு பக்திசிரத்தையுடன் தியானித்து நிம்பராஜன்
மீது ஹரியின் கிருபையாகுங் கடைக்கண் ணோக்க
மிருப்பதையுணர்ந்து அந்தநிம்பராஜனை வெகுவாகப்
புகழ்ந்து அப்போது பகவானுக்கு அவர்கள்மங்களா
ர்த்திகள்கொடுத்து நிம்பராஜனைப்பணிந்து சாதுக்க
ளனைவோரும் விடைபெற்றுக்கொண்டு சென்றுதங்க
டங்களகம்புக்கிருக்கையில் நிம்பராஜன் பகவத்குண
னுபவஞ்செய்துக் கொண்டு மூன்றுநாளங்கு வசித்தி
ருந்துப் பாடியும் ஆடியும் தன்னுடைய பூர்ணபக்தி
யைப்பகவான் தெரிந்துக் கொள்ளும்படி நன்னடவ
டிக்கைகளைகாட்டிப் பகவானிடம்விடைபெற்றுகொ
ண்டுநடந்து பண்டரிநாதனைப்புகழ்ந்துக் கொண்டே
தன்வீட்டையடைந்து தைலதாராவிச் சின்னத்தைப்
போலப் பாண்டுரங்கனுடைய திருவடிகளில் மன
தைப் பொருந்தவைத்து வெகுகாலம் அனேக சிஷர்
களுடன் பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொ
ண்டிருந்து முடிவில் நிரதிசயானந்த வைகுந்தத்தை
யடைந்தார்.

வாழி விருத்தம்.

அம்புவியிலரியைத்தினம்பாடுமவர்வாழி வன்புகொண்டவமலன் திவ்யசரிதைவாழி
வம்பர்களைவழிப்படுத்திவாழுமவன்வாழி வரம்பெற்றுவிநாயகரைவாழ்த்தினோன்வாழி
உம்பர்களுங்கொண்டாடவெகுவாய்ப்பாடி உரகசயனன்கைங்கரியத்தாலுயர்ந்தோன்வாழி
நிம்பராஜன் புகழெங்குமிறைந்துபோற்றும் நிர்மலமாம்திருவடிகள்நீடூழிவாழி.

நிம்பராஜன் சரித்திரம்.

முற்றிற்று,

—

ஸ்ரீ

ஸ்ரீபரப்பிரமணேநம:

ஸ்ரீ ம த்

வல்லபாசாரிகோவிந்ததாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

எல்லையில்லாக்ஞானபக்தி,வைராக்கியங்கள்
அல்லலிலாமலென்றுமனுஷ்டித்து ஹரியைப்போற்றிச்
சல்லியங்களனத்தையுமே யொழித்துச்சாது
வல்லியபரசாரிசரண் வணங்கிதினமேத்துவோமே.

கதையின் வரலாறு.

வடக்கேபிருந்தாவனமெனுஞ் சேத்திரத்தினில் வல்லபாசாரியென்றொருப் பிராமணர் வசித்துக்கொண்டு சதாகாலமும் ஸ்ரீஹரியையரிச்சித்து உச்சிதமாகிய க்ஞானபக்தி வைராக்கியத்திற் சிறந்திருந்தார். அன்றியும் சாந்தி க்ஷமை சத்யாத்மக்ஞான மவருக்குண்டாகி சகலபிராணிகளையும் தன்னைப்போ லெண்ணிப் பேதமின்றி அனேகஜெனங்களுக்குப்,போதனை சக்தியினுல் பக்திபொருந்தும்படிக் கிருபைசெய்து இடைவிடாம லெப்பொழுதும் பகவந்நாமசங்கீர்த்தனைகளைச் செய்துக்கொண்டு மிருக்க ஒருநாள் வெகு ஜெனங்களங்குவந்து வல்லபாசாரி செய்யும் பஜனையைக்கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருக்கும் அவர்களைநோக்கி யந்தவல்லபாச்சாரி ஓஅரிதாகிய மானிடஜென்ம மெடுத்திருக்கும் மாந்தர்களே ஸ்ரீஹரியின் குணனுபவங்களை செவிகளாரக் கேட்டிருப்பதொன்று அந்தஹரியின் கீர்த்தனைகளை நாவாரப்பாடிக்கொண்டிருப்பது இரண்டு அந்தஹரியைத் துதிசெய்துக்கொண்டிருப்பது மூன்று அந்தஹரியின் திருத்தாட்டாமரைகளில் விழுந்துபணிவது நான்கு அர்ச்சனைசெய்வது ஐந்து வந்தனம்புரிவது ஆறு தொண்டுசெய்வது ஏழு நேசஞ்செய்வது எட்டு ஆத்துமசர்ப்பணஞ்செய்வது ஒன்பது இந்தஒன்பதும் நவவிதபத்தியாகும் இந்தநவவித பக்திகளையும் முன்யுகத்தினில் அவரவர்களுக் கிஷ்டமாகிய பக்தியைச்செய்துமுக்தியடைந்தனர்கள் அதுபோல இக்கலியுகத்தினிலும் கணக்கிட்டுக் சொல்லமுடியாத ஜெனங்களிருந்தும் சிலர் ஹரிநாமஸ்மரணையைச்செய்துப் பரமபதவியையடைந்தனர் சிலர் பாமரர்களாகியிருப்பதால் ஜென்மசாபலியமடைவது எக்காலத்தில் ஓமாந்தர்களே பகல்முப்பது நாழிகை இரவுமுப்பதுநாழிகை ஆக அறுபதுநாழிகையினில் அன்பத்தொன்பதுநாழிகை உணவாதிகளிலும் விஷயாந்திரங் களிலும் நாளைப்போக்கினபோதிலும் ஒருநாழிகைசாக்ஷாத் ஸ்ரீஹரியைத்தியானஞ்செய்துகடத்தேரும்வழியைத்தேடுங்க

மென்று சொல்லக்கேட்டு அவர்களெல்லோரும்அந்தப்படியே தினந்தோரும்ஒருநாழிகைபரியந்தம் ஸ்ரீஹரிநாமத்தியானஞ்செய்துக் கொண்டேவந்தார்கள்.

இந்தப்படிக்கி அம்மாதர்களெல்லோரும் இரண்டுமூன்று வருடகாலம் ஹரிநாமத்தியானஞ் செய்துக்கொண்டு வருகையில் நாளுக்குநாள் அவர்களுக்குக்ஞானபக்தி வைராக்கியங்க ளதிகரித்துத் தெளிவுள்ளவர்களாகி யொருநாள் வல்லபாசாரி யிடத்திற்கு வந்து அவர்செய்யும் ஹரிபூஜையின் கிரமத்தையும் சோடசஉபசார விதியையுந் தெரிந்துக்கொண்டுதங்கடங்களகம் புகுந்து அவர்களுமந்தப்படியே ஸ்ரீஹரியைப் பூசித்துக் கொண் டிருந்தார்கள் இவர்களிப்படிக் கிருக்க வல்லபாச் சாரியும் ஸ்ரீஹரியைப் பூசித்துக்கொண்டும் சோடச உபசாரங்கள் புரிந்து வருகையில் ஸ்ரீஹரியானவர் அந்தவல்லபாச்சாரியருக்குந் தினந்தோருந் தெரிசனந் தந்துக்கொண்டே இருந்தார் வல்லபாசாரியருக்கும் நாளுக்குநாள் பக்தியதிகரித்து மூன்றுகாலபூஜையுஞ் செய்துக்கொண்டிருக்கையில் ராதாகுண்டமெனு மொருப்பிரதேசத்தினில் பக்தரொருவர் பக்தியில் சிறந்தவராகவிருக்க அவரைக்கண்டவ்வூரினில் வசிப்பவர்கள் அவரை கோவிந்ததாசரென்றெப்போது மழைத்துவர அந்தகோவிந்ததாசரும் அவருடையஅன்னையும் இருவருமாக வசித்து எப்பொழுதும் இடைவிடாமல் ஸ்ரீஹரியைத் தங்கள்மனதினில் கண்டுசேவித்துப்பரமானந்தமடைந்து இத்தனையெளிதினில் ஸ்ரீஹரியின்தெரிசனம் நமக்குக் கிடைப்பதற்கு நாம்ஜென் ஜென்மாந்தரங்களிற் செய்தபலனுகுமென்று தீர்மானித்து அனுயாசமாக அந்தக் கோவிந்ததாசர் ஸ்ரீஹரியைக் கண்டுசேவித்தும் மேலும் ஸ்ரீஹரியை தெரிசிக்கவேணுமென்று ஸ்ரீஹரியை யெதிர்பார்த்துக்கொண்டிருந்து இவ்வுலகத்தினிலெந்த வஸ்துவைக்கண்டபோதிலும் அவ்வஸ்துக்களை யெல்லாம் ஸ்ரீஹரி யென்றேபாவித்துப் பலவாறுதுதித்து வந்தனந்தந்து விஸ்வம்பரனைக்காணுவார் இப்படி எம்பெருமானை தெரிசித்துக்கொண்டு கபடமின்றி ஸ்ரீஹரியை பஜித்துக்கொண்டிருக்கும் உத்தமக்ஞானிகளுக்குஞ் சிறந்தவராகியாயிருந்தார் இப்படிக்கிருக்குங்கோவிந்ததாசருடன் ஸ்ரீஹரியானவர் எழுந்தருளிதினந்தோரும்பேசி சந்தோஷப்படுத்துவார் அதெப்படியெனில் சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மா கோபாலருடன் பலவித விளையாடல்களைச் செய்ததைப்போல இந்தகோவிந்ததாசருடன் மெத்த சந்தோஷத்துடன் ஸ்ரீஹரியானவர் விளையாடி கோவிந்ததாசரை ஆனந்தப்பரவச ராகும்படிச்செய்தும் கோலிகளாடுவர் ஒருவருக்கொருவர் மேலேறிக்கொண்டும் பலிசிப்ளாம் ஆடியும் இன்னுமனேகவித ஆட்டங்களை யாடிக்கொண்டிருந்தும்ஒருவருக்கொருவர் அடிகளடித்தும் கக்கடக் கக்கடச் சிறித்தும் எனக்குத் தோத்துப்போனு யென்றும் பேசியும் ஸ்ரீஹரியானவர்ஓட யக்தரும் பின்னுகவே அவரைத் தொடர்ந்துஒடி பக்தன் ஸ்ரீஹரியைப் பிடித்துக்கொண்டு என்றுமில்லாத சந்தோஷமடைந்துக் கொண்டிருப்பதை க்ஞானபூர்ணராகும் சிலபக்தர்கள்கண்டு லட்சுமிநாயகருஞ் சின்மயரூபருமாகியபகவான் பாலகர்கள் ஆடும் விளையாட்டினுல் கோவிந்ததாசரிடம் வெகுயெளிதினி லகப்பட்டார். மேலும் பரந்தாமனும் பிரமதேவனுக்குத் தந்தையும் பாலியசேஷ்டைகளைக் கைக்கொண்டு ஆட்டத்தினில் உருசியடைந்து முயன்றிருப்பதை யோசிக்கையில் சித்திரமாக விருக்கின்றதென்று மெத்த அதிசயித்து மிதமற்றப் பிரியங்கொண்டு அவர்கள் போயினுர்கள்.

இந்தப்படி யவர்கள் பிரியமடைந்துப்போயின பின்பு ஸ்ரீஹரியுங்கோவிந்ததாசரும் சதாகாலமுவிளையாட்டிலேயே பொழுதுபோக்கிக் கொண்டிருக்கையில் ஒருநாள் ஸ்ரீஹரியானவர்கோவிந்ததாசரை அடித்துவிட்டுப் போகையில் களங்கி அந்த கோவிந்ததாசரும் அவரைப் பிடிக்கும் பொருட்டுப் பின்தொடர்ந்து ஓடுகையில் அப்போது ஸ்ரீஹரியானவர் எழுவயதுசிறுவனைப் போலாகி வெகுகஷ்டப்பட்டுவந்தவரைப்போல அபிநயித்து வல்லபாசாரியர் வீட்டைநாடி யோடிவருகையில் அந்தவல்லபாச்சாரி கண்டு மெத்த அதிசயித்தவராகி விரைவினில் ஓடிவந்து ஸ்ரீஹரின் திருத்தாட்டாமரைகளைப் பிடித்துக் கொள்ள அப்போது கோவிந்ததாசர்கண்டுதானும்விரைந்தோடிப் பின்னுகவேவந்துஒசுவாமி அடியேன்முதுகினில் ஒரடியடித்துவிட்டு ஓடிவந்த தேவரீரையான் விடுவனே விடமாட்டேன் சீக்கிரம் வாருமென் ரூர்ப்பாட்டஞ் செய்துக்கொண் டிருப்பதை ஸ்ரீஹரியானவர் கண்டு அங்கிருக்கும் பக்தர்களைப்பாாத்து ஒஎனதன்பர்களே பிரமதேவன் முதல் சகல தேவர்களும் என்னைமனதினில் நிருத்தித் தியானஞ்செய்யும் ஸ்ரீஹரியாகிய என்னைஇவ்வுலகினில் கேவலமாகியமுண்டச்சிப் புதல்வனுகிய இச்சிறுபயல் என்னை அடிக்கவேணுமென்று சொல்லியசொல்லை நீங்கள் யாவருங் கேட்டும் சும்மாவிருப்பது உங்களுச்கு ஞாயமோ வெனக் கேட்டவர்கள் மெத்த சினங்கொண்டவர்களாகி வெளியிலவந்துகோவிந்ததாசரைக்கண்டு அடாபயலே எள்ளுக்கு ளெண்ணெயைப் போலவும்தயிருக்குள் வெண்ணெயைப் போலவும் வெண்ணெக்குள்

நெய்யைபோலவும் எங்கும்நிறைந்திருக்கும்சாக்ஷாத்
ஸ்ரீஹரியை அடிப்பதற்கா காத்துக்கொண்டிருக்கின்
றாய் அந்தபரமாத்மாவை யடிப்பதற்கு எவ்வளவு
எளிதாய் நினைத்திருக்கிறாய் அவரை அடிக்கவேண்
டாம் அவருக்காக யாங்கள் முன்னின்று வந்தோம்
ஏதோயெங்களை யடியும் பார்ப்போம்யெங்களையடிப்
பையேயாகில் ஸ்ரீஹரியை யடித்ததற்குச்சமமாகுமெ
ன்று சொல்லிக்கொண்டே யவர்கள் கோவிந்ததாசர்
மேல்விழுந்து புடைபுடையென்றுப் புடைத்துக்கோ
விந்ததாசர் திருமேனியில் நோயுண்டாகும்படிச் செ
ய்ய அதற்கந்த கோவிந்ததாசரும் தன்திரேசநோயிக்
காக மெத்த விசனப்பட்டு அழுதுபுலம்பி என்னை
யடித்துவிட்டு ஓடிவந்து இந்தக்கிரகத்திற்குள் புகுந்
துக்கொண்டது மல்லாமல் இவர்களையுமேவி மேலு
மென்னை யடக்கச்செய்த அந்த ஸ்ரீஹரியை யடிக்கா
மல் யான்போவதில்லை அன்றியும்இவர்களைக்கொண்
டடிப்பித்ததும் அனியாயமல்லவா இதையாவரும்
பாருங்க்ளென்று சொல்லி அந்த ஸ்ரீஹரியானவர்வெ
ளியில் வருவார் நான் ஆண்பிள்ளையானா லப்போது
பார்த்துக் கொள்ளுகிறேனென்று முணமுணவெனத்
தனக்குத்தானே பேசிக்கொண்டுஅவ்விடத்திலுட்
கார்ந்துக் கொண்டிருக்க அப்போது வல்லபாசாரி
யர் ஸ்ரீஹரிக்கி அர்ச்சனை ஆராதனை முதலான சோ
டச உபசாரங்களுஞ்செய்து அந்த ஹரிக்கிப்பிரசா
தம் பரிமாரி ஆலவட்ட கைங்கரியம் புரிந்துக்கொண்
டிருக்க அப்போது ஸ்ரீஹரியானவர்அந்தப்பிரசாதத்
தைப் புசிக்காமல் மனஸ்தாபத்துடனிருக்க யதை
யறிந்து வல்லபாசாரியார் அதிகதுக்கத்துடன் ஸ்ரீஹ
ரியின் முன்னின்று ஓசுவாமி தேவரீர் இப்பிரசாதத்
தை ஸ்வீகரிக்காமலும் ஏழையின்மீதுக் கிருபைசெய்
யாமலும் இருப்பது நீதியோ யானென்ன அபசாரம்
பண்ணினேன் என்னையறியாமலேதேனுஞ் செய்திரு
ந்தாலும் அந்தவபசாரங்களைக் கருதாதுக்கிருபைசெ
ய்துப் பிரசாதத்தைப் புசியுமையாவென்று வேண்டி
க்கொள்ள அதற்கு ஸ்ரீஹரியானவர் ஓவல்லபாசாரிய
ரே நாளதுபரியந்தம் கோவிந்ததாசருடன்யான்பால
உருவங்கொண்டு நினைந்தபடி தினமும் விளையாடிக்
கொண்டிருந்தும் இப்போது அந்தகோவிந்த தாசன்
வெளியில் துக்கப்பட்டுக்கொண்டிருக்க அவரைவிடு
த்து யான்மாத்திர மெப்படி புசிப்பேன் என்மனஞ்
சக்மதிக்கவில்லை ஆகையால் நீசீக்கிரமாக அந்தகோ
விந்ததாசரிடஞ்சென்று பலநீதிவசனங்களை யோதி
சமாதான மாகும்படிச் செய்து அவரையழைத்துக்
கொண்டு வருவையாகில் அந்த கோவிந்ததாசருடன்
யானும் புசிப்பேனென்றுசொல்லக்கேட்டு அந்தவல்
லபாசாரியா இதென்ன விந்தையாக விருக்கின்றதெ
னக்கருதி உடனே அந்தவல்லபாசாரியர் கோவிந்த
தாசரிடஞ்சென்று அவருக்கு வந்தனந்தந்து ஓஐயா
பரமசாதுவாகிய கோவிந்ததாசரே யான்சொல்லுவ
தைக் கவனமாகக் கேளுமென்று சொல்லத் தொ
டங்சினார்.

கேளுமையா கோவிந்ததாசரே இப்போதுமக்
கும் ஸ்ரீஹரிக்கும் நடந்திருக்குஞ் சச்சரவையோசிக்
கில் ஸ்ரீஹரியின்மீதே குற்றமிருக்கின்றது அந்தக்குற்
றத்தைப் பாராட்டாம லிருப்பதே சாதுக்களுடைய
லக்ஷணம் அதைப்பாராட்டிக்கொண்டு மனம்போன
வழி நடந்தால் விபரீதத்திற் கிடமுண்டாகும் அன்றி
யும் ஈரேழுபதினான்கு லோகங்களையும் தன்வயிற்றி
னில் வைத்துக்கொண்டு காப்பாத்திரக்ஷிக்கும் பரம்
பொருள் மேலும் பிரமன் ருத்திரன் முதலானதே
வேந்திராதி தேவர்களுக்கும் அறிவதற்கு அரிதாகிய
அந்தபரமாத்து மாதுகரங்களால் அடிபட நீர்ஜென்
மாந்திரத்திலென்ன புண்ணியஞ் செய்தீரோ அவரு
டன்கூடி பாலகர்களைப்போலப் பலவிதமாக விளை
யாட என்னதவமியற்றி நீரோ உம்முடைய பாக்கிய
மேபாக்கியம் எவர்க்குண்டாகுமிந்தசிலாக்கியம் இது
வன்றோ அரிதாகிய மானிளஜென்ம மெடுத்ததற்கு
யோக்கியம் இத்தனையெளிதினில் பகவானுடையகிரு
பைக்குப் பாத்திரமானீரே இதுவே எல்லாவத்திலு
முக்கியம் சாக்ஷாத் ஸ்ரீஹரியுடன் விளையாடுவது யெ
வர்களாலும் முடியாதகாரியம் இப்படிப்பட்டநினது
புகழைக் கொண்டாடுவதற்கு ஆயிரம்பணாமுடிகளும்
இரண்டாயிரம் நாக்குகளுமுடைய ஆதிசேஷனாலுந்
தரமாகாதென்றால் கேவலம் ஓரேநாக்குடைய என்
னால் புகழத்தரமாமோ ஓகோவிந்ததாசரே உத்தம
மாகிய நற்குணங்களையெல்லாம் ஓராபரணமாகத் தரி
த்திருக்கும் படியான தேவரீர் இனியாகிலுங்கோபத்
தையுந் துக்கத்தையுமாத்தி ஸ்ரீஹரியின்மீதுமக்குண்
கூாயிருக்கும்வைராக்கியத்தைநீக்கிசாந்தமடைய கட
வீர்அன்றியும்அந்தஸ்ரீஹரியையான்பலவிதமாக பூசி
த்துத் தூபதீப நைவேத்தியங்களால் உபசரித்தேன்
வெகுவாகப் பிரார்த்தித்தேன் இதுகளெல்லாம் அவ
ருக்கு எவ்வளவும் பிரியப்படவே இல்லை ஏனெனில்
உம்மையடித்துத் துக்கப்படும்படிக்கிச் செய்ததன்
னியிலும் வெளியில விடுத்துத் தான்மாத்திரம் தனித்
துப்புசிக்க மனமொவ்வாதவராய் மெத்த விசனம
டைந்து உம்மைச் சமாதானப்படுத்தி அழைத்துவரு
ம்படி எனக்குக் கட்டளையிட்டார். அந்தப்படியே
யானும் உம்மிடம்வந்து உமதுமனது சம்மதிக்கும்

படியான சிலநீதிவசனங்களை யோதினேன் இனியாதொருதடையுஞ் சொல்லாமல் தாங்களென் பின்னங்குவந்து ஸ்ரீஹரியைக் கண்டுபணிந்து புசிக்கும் பரியந்தம் அந்தப்பகவானும் புசியேனென்று வைராக்கியமடைந்து மெத்தப்பசியுடனிருக்கின்றாரென்றும் பற்பலவிதங்களாய் நயவசனங்கள் பகர்ந்து அவர் கையைப் பற்றிக்கொண்டே நடந்து ஸ்ரீஹரியின்னருகினில் விடுத்து இருவரையும் நேசத்துடனிருக்கும்படிச் செய்துப்பின்பு தளிகையிலே பரிமாரி கரிகாய்கள் வகையராக்களுடன் பிரசாதமும் வட்டிக்கத் தொடங்கினார்.

வத்தல்வதக்கல் பச்சடிபருப்பு உப்பு ஊர்காய் தோசை கூட்டுக்கரிவரல் பொரிகுழம்பு வடை தயிர்வடே ஆமைவடே வெங்காயவடே மசாலவடே அப்பளம் இன்னும்பலவித பலகாரங்கள் திருக்கண்ணமுது புளியோ ஹோரே பொங்கல் சக்கரைப்பொங்கல் வெள்ளன்னம் குழம்புரசம் தயிர் பலகனிவர்க்கங்கள் வெகுவிதமிட்டாய் தினுசுகள் முதலானதுகளும் இருவருக்கும் வட்டித்து அரிகினில்நின்றுப்பலவாறுஉபசரித்து சாமரம்போட்டு அவர்களிருவரும் விரோதமின்றி மனமொத்து சந்தோஷத்துடன் திருப்தியாகப் புசித்தானவுடன் அந்தவல்லபாசாரியர் வெகுசந்துஷ்டராகி சந்தணம்புஷ்பம் தாம்பூலங்க ளளித்தார் அவைகளையந்த ஸ்ரீஹரியும் கோவிந்ததாசருந் தரித்துக்கொண்டார்கள் இதற்குள் கோவிந்ததாசர் ஸ்ரீஹரிதன்னையடித்து சிரமப்படும்படிச் செய்ததை மறந்து பகவான்மீது மெத்தப் பிரியமாகவிருந்துப் பற்பல நயமொழிகளைப் பகர்ந்து ஸ்ரீஹரிக்குத் தன்மீது பிரியமுண்டாகும் படியான முயற்சிகளின் மீதேதன் மனதைச் செலுத்திக்கொண் டிருக்கிறபோது ஸ்ரீஹரி யிதையுணர்ந்தும் மாயமாய் மறைந்து வல்லபாசாரிக்கும் கோவிந்ததாசர் கண்களுக்குப் புலப்படாமலிருந்தார் அப்போது கோவிந்ததாசர் ஒண்டியாகி ஸ்ரீஹரியைக் காணாமல் பரதவித்துக்கொண்டே நடந்துத்தன்னுடைய வீட்டிற்குச்சென்றார் அத்ததியினில் ஸ்ரீஹரியானவர் கோவிந்ததாசரிடஞ் சென்று முன்போல பற்பல சேஷ்டைகளைச் செய்து விளையாடிக்கொண்டேயிருந்து கோவிந்ததாசரைக் கீழேதள்ளி தன்மனம்போனபடி பல அடிகளடிக்கிறபோது கோவிந்ததாசர் அவ்வடிகளுக்குத் தாளமாட்டாமல் குய்யோ முறையோவென்றுக் கதறியழுகிற ஓசையைக் கோவிந்ததாசர் அன்னைகேட்டுஇதென்னநம்முடைய பிள்ளைக் கதறிப்பதறி யழுகின்றானே யாராகிலும் அடித்தார்களோ அல்லது எந்தஆபத்து சம்பவித்ததோ கண்டறிந்துக்கொண்டு வரலாமென்று யோசித்து விரைவாக!வீட்டைவிட்டு வெளியி லோடிவந்து பார்க்கிறபோதுத் தனபுதல்வன் கீழேவிழுந்துக் கதறுகிறான் அவனுக்கருகினில் சாக்ஷாத்து ஸ்ரீஹரியானவர் சங்குசக்கரம் சாரங்கம் வாள் கெதையாகிய பஞ்சாயுதத்துடன் ஹாரகேயூரகிரீட கௌஸ்துபமாலையும் மேகலாபரணங்கள் தரித்து மார்பினில் உலகமாதாவாகிய லக்குமியும் ஸ்ரீவச்சமும் பிரகாசிக்கச் சேவைதந்தார் அச்சேவையினி லீடுபட்டு அப்புண்யவதி அவர்திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்துப் பலவாறு துதித்துப் பரமானந்த மடைந்துச் சற்றுநேரந்தன்னை மறந்திருந்து உடனேதெளிந்துத் தன்மகனருகிற்சென்று அடாமகனே அழகான முகனே பகவானுடன் விளையாடுஞ் சுகனே மாசற்ற மகனே நீசீக்கிரம் எழுந்திருமப்பாவென்றுத்தன் குமாரனாகிய கோவிந்ததாசன் கைகளைப்பிடித்து எழுப்பிக்கொண்டிருக்கிறபோது ஸ்ரீஹரியானவர் மாயமாய் மறைந்து போயினார் அதையறிந்து அம்மாதுத் தன்மகன் கையைப்பற்றி யழைத்துக்கொண்டு வீட்டையடைந்துத் தன்புதல்வனை நோக்கிச் சொல்லத் தொடங்கினாள்.

அப்பாமகனே உன்னுடன்விளையாட்டினில்பழகினவன் சாக்ஷாத்து ஸ்ரீபரந்தாமனென்றேநினைக்கக்கடவாய் பூர்வத்தினில் நீசெய்திருந்த புண்ணியபலத்தினால் மெத்தவெளிதினில் ஸ்ரீஹரியுடன் நீ விளையாடும்படியான தவபலனைப்பெற்றாய் உன்னைப்பெற்றெடுத்த தாயாகிய என்னுடை மனங்களிக்கும்படியாகவும் சந்தோஷிக்கும்படியான வயிற்றினையுடையஎன்னுடைய பாக்கியவிசேஷத்தை யானென்னென்று சொல்லுவேன் என்கண்ணார ஸ்ரீஹரியைக் கண்டுசேவித்து ஆனந்தமடையச் செய்த நின்னைப்போன்ற உத்தமனாகிய பிள்ளையைப்பெற்ற எனக்கினியென்ன குறையிருக்கின்றது அன்றியும் இந்த ஸ்ரீஹரியுடன் இனி நீ விளையாடுவதை விடுத்து இன்றுமுதல் நீ அவருடைய திருவடிகளில் அர்ச்சனையும் பலவாறு அவருடைய நாமத்தை இடைவிடாமல் துதிசெய்யவும் பக்திபரவசனாகியும் இருக்கவேண்டும்இவ்வாறுபக்திசிரத்தையுடன் அவரைக்கொண்டாடுவதை விடுத்துத் தினந்தோறும் விளையாட்டினிற் காலத்தைம்போக்குவது ஞாயமல்ல மேலும் சிவன் பிரமன் முதலான தேவேந்திராதி தேவர்களுக்குஞ் சேவிக்கவும் புகழவுந் தரமாகாத இந்த எம்பெருமானுடைய சேவை எனக்கு மெத்த யெளிதினிற் கிடைத்துக் கொண்டிருந்தும் காத்துள்ளபோதே தூத்திக் கொள்வதைப்

போலவும் அரிதாகிய இந்தமானிடஜென்ம மிருக்கிற போதே அப்பகவானைத் தொழுதுக் கிருபையைச் சம்பாதித்துக் கொள்ளாமல் வாழ்நாளை யெல்லாம் வீணாளாகக் கடத்திக்கொண்டிருந்தால் மருஜென்மம் வராமல் பரமபதத்தை யடைவதெப்போ உயிர்துறந்தபின்பு எமனால் தண்டிக்கப்பட்டு நரகங்களில்விழுந்து மெத்த சிரமமடையும்படி நேரிடும் ஆகையால் அப்பாபுத்திர சிகாமணியே என்மனதைக் களிப்புறச்செய்த சிந்தாமணியே ஆனந்தப்பரவச முண்டாகச்செய்த நவமணியே வெகுசீலமாகவும் மனதைச் சஞ்சலத்தினில் விடாமலும் பக்தியாகப் பகவானைத் தியானம் பண்ணக் கடவாயென அதற்கந்த கோவிந்ததாசர் ஓ என்னைப் பெத்தெடுத்த அன்னையே என்னிடத்தில் சீலமிருப்பதினாலேயே அந்தஹரியானவர் வசியவந்து என்னைத் தொட்டுக்கொண்டு விளையாடுவார் என்னையவர் கீழேதள்ளுவதும் அவரை யான் கீழேதள்ளுவதும் என்னையவர் அடிப்பதும் யானவரை மடிப்பதுவும் இப்படிப் பலவாறாக விளையாடிக் கொண்டு பேதமின்றியிருக்கிற என்னை ஸ்னானுட்டானங்களை முடித்து மனதை சஞ்சலத்தினில் விடாமல் திடவைராக்கியத்துடன் ஞானபக்தி செய்யும்படிக்கும் புகன்ற என தன்னையே உனது கட்டளையின்படியே நடந்துக் கொள்ளுகிறே னென்றுசொல்லி உடனேசென்று ஸ்னான அநுட்டானங்களை முடித்து கிருஷ்ணாஜினத்தின் மீதிருந்துக்கொண்டு ஸ்ரீஹரிநரஹரிமுரஹரி மதுகைடவாரி என்றுபலவாறுக்ஞான வைராக்கியத்துடன் துதிசெய்துக்கொண்டு தன்னை மறந்திருந்தார்.

அப்போது ஸ்ரீஹரியானவர் முன்போல பால வடிவுடன் வந்து கோவிந்ததாசரை நோக்கி ஓகோவிந்ததாசரே இன்றென்ன விளையாட்டை மறந்து ஸ்னானுட்டானங்கள் செய்து ஆசனத்தின்மீது வீற்றிருந்துக்கொண்டு யாரைதியானஞ் செய்துக்கொண்டிருக்கின்றாய் உனக்குண்டாகிய கோரிக்கையாதோவிள்ளுமென்று சொல்லிக்கொணடே அந்தகோவிந்த தாசர் கையைப்பிடித்து விளையாடுவதற்கு யெழுந்துவாருமென்று யிழுக்க அப்போது கோவிந்ததாசர் தன் அன்னையை யழைத்து ஓஅம்மணி யிதோபரர்த்திரா திடபக்தியுடன் துதிசெய்துக்கொண்டிருக்குமென்னை இந்தஹரியானவர் விளையாடுவதற்கு வாருமென்று சொல்லி என்கையைப் பற்றி யிழுக்கின்றார் இப்படிக் கென்னை வற்புருத்தி விளையாடுவதற் கழைக்குமிவரிடத்தினில் யானெப்படி மரியாதையாய் நடப்பதுவென்று மொழியக்கேட்டு அந்த கோவிந்ததாசருடைய அன்னை விரைவினிலந்தஹரியைப்பார்க்கமுயல்வதையறிந்து ஸ்ரீஹரியானவர் உடனேமாயமாய்மறைந்துபோயினார் அப்போது கோவிந்ததாசர் முன்போல ஆசனத்தின்மீதிருந்து பக்திசெய்துக்கொண் டிருக்க மருபடியும் ஸ்ரீஹரியானவர்வந்து ஓ கோவிந்ததாசரே யாரைக்குறித்து தியானஞ்செய்கின்றாய் உன்மனதினிலுள்ள கோரிக்கை தானென்னமோ அதைவெளியிடுமென்று சொல்லி கோவிந்ததாசரைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் பலவாறு அடித்தும் இஷ்டப்படிவைதும் மட்டும் மரியாதையின்றி ஒருவரையொருவர் வைவதும் அடிப்பதும் ஒருவரையொருவர் பிடித்துத்தள்ளுவதும் கோபங்கொள்ளுவதுமாகயிருந்து முடிவினில் கோவிந்ததாசர் குரோதங்கொண்டுஸ்ரீஹரியைநோக்கிவிகடங்களாகப்பலசொற்களை பகர்ந்துவெறுமனேயிருக்கஅப்போது ஸ்ரீஹரியானவர்மெத்தசந்துஷ்டராகிவிரைவினிலந்தகோவிந்ததாசரைபிடித்திழுத்துவிளையாடுவதற்கு வருமென்றுஎழுப்பிக்கொண்டுபோய்பற்பலவாறு விளையாடிக்கொண்டே திரிகிறபோது வல்லபாசாரியர் ஸ்ரீஹரிக்குவழக்கமாய் தினந்தோறும் பிரசாத மனுப்புவதைப்போல அன்றுதினமுந்தன் சீஷர்களிடங் கொடுத்தனுப்ப ஸ்ரீஹரியுடன்விளையாடிக்கொண்டிருந்த அந்த கோவிந்ததாசர் ஸ்ரீஹரியடிக்கும் அடிகளுக்குத்தாளமாட்டாமல் கோவிந்ததாசர் ஓடுவதால் வல்லபாசாரியர் சீஷர்கள் கொண்டுபோகும் அப்பிரசாதத்தின்மீது விழக்கண்ட சீஷர்கள் பிரசாதந் தீட்டுபட்டுப்போச்சுது இதைபகவானுக்கு அம்சை செய்வித்தால் மகத்தான தோஷமுண்டாகுமென்று கருதி அப்பிரசாதத்தைக் கோவிந்ததாசருக்குக் கொடுத்துவிட்டு அச்சீஷர்கள் வல்லபாசாரியிடஞ் சென்று வணங்கி ஓசுவாமி நாங்கள் பிரசாதத்தை யெடுத்துக்கொண்டு மார்க்கமாய்ப் போகையில் கோவிந்ததாசரால் அப்பிரசாதந் தொடப்பட்டுப் போயினபடியால் அப்பிரசாதத்தை பகவானுக்குநைவேத்தியஞ் செய்பத்தகாதென்று கருதி அந்தப்பிரசாதத்தை யக்கோவிந்ததாசருக்கே கொடுத்துவிட்டு வந்தோமெனக் கேட்டு வல்லபாசாரியர் மெத்தவுங் கவலைப்பட்டு சந்நிதிக்குச்சென்று கேசவப் பெருமாளை நோக்கி ஓசுவாமீ தாங்கள் கோவிந்ததாசருடன் மெத்த சனுவுசெய்து விளையாடிக் கொண்டிருப்பதால் அந்தகோவிந்த தாசர் பகவானுக்கு அம்சை செய்யும்படிக் கொண்டுபோகிறப் பிரசாத மாயிற்றேயென்ற மதிப்புச் சற்றேனு மில்லாமம் பிரசாதத்தைத் தொட்டு அக்கிரமஞ் செய்து விட்டார் இந்த அனியாத்திற் கென்ன கட்டளையென்று வினவக்கேட்டு கேசவப்பெருமாள்

வல்லபாசாரியரை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

கேளும் வல்லபாசாரியரே அந்தகோவிந்த தாசரைக் கேவலரென்றெண்ணவேண்டாம் சத்தியசீலர் சாந்தத்திற்சிறந்தவர் சமதமாதி நற்குணங்களெல்லாந் திரண்டோருருவாயவதரித்தப் புண்ணியப்புருடர் ஞானபக்தி வைராக்கியத்தில் அவருக்குநிகரான உத்தமபுருடர்களிவ்வுலகினிலொருவருமே யில்லை அன்றியும் தனகன்கவஸ்து வாகனாதிகளிலும் தாய் தந்தை பந்துக்கள் முதலானவர்களிடத்திலும் அணுவளவேனும் ஆசையின்றிப் பற்றற்றவராகி என்னை அவருக்குள் சதாகாலமும் எழுந்தருளச்செய்து பூசிப்பதால் ஆத்துமக் ஞானியாகியிருப்பதால் அவரே யானாகவும் யானே அவராகவுமெண்ணி பூசிக்கக் கடவாய் மேலும் அந்தகோவிந்ததாசருக்கு முன்னம்பிரசாதமிட்டும் பின்பெனக்குப் பிரசாதங் கொடுக்கக் கடவீரென்று பகரக்கேட்டு அந்தவல்லயாசாரியர்பகவான் கட்டளையின்படியே அன்றுதொடங்கி கோவிந்ததாசருக்கு முன்னம் பிரசாதமளித்துப் பின்னர் கேசலப்பெருமாளுக்கு நிவேதனஞ்செய்து கொண்டு காலத்தைக் கடத்திக்கொண்டு வருகிறபோது இச்செய்தியை அப்பட்டணத்தை யாளும் அரசன்கேட்டு பொராமைவடைந்துத் தன்னிடமிருக்குஞ் சிலதூதர்களையழைத்து அடா தூதர்களே சீக்கிரம் நீங்கள்மதுராநகரத்திற்குச் சென்று அங்குபக்தர்களிற் சிறந்தவராகிய கோவிந்ததாசரைப்பிடித்துக்கொண்டுவந்து நமதுகொலுகூடத்தின் முன்னஞ்சேரக்கடவீரென்று கட்டளையிட அந்தத்தூதர்களும் மவ்வண்ணமேகடந்து மதுராநகரத்தை யடைந்து கோவிந்த தாசரைக் கண்டு வணங்கி ஓபுண்ணியபுருடரே எங்களரசன் தங்களையழைத்து வரும்படிக்கட்டளையிட்டாராகையால் சீக்கிரம்ம் எங்களரசன் வசிக்கும் டில்லிநகரத்திற்கு வாருமையா வென்றுக்கடூரமாக மொழிவதைகேட்டு அந்தகோவிந்த தாசர் உடனே மாயமாய் மறைந்து தூதர்களுக்கு முன்னுதாய்ச் சென்று டில்லிநகரத்தைச்சேர்ந்து நடுராத்திரியில் அந்தப்புரத்தை யடைந்து அம்சதூளிகா மஞ்சத்தின்மீது சயனித்து நித்திரைசெய்யும் அரசனைக்கண்டு சிலசைகைகளால்எழுப்பிக்கொண்டிருந்தார் மதுராநகரத்தினில் தூதர்கள் இப்போது நாம் கண்களாரக்கண்ட சோவிந்ததாசர் எப்படியோ மாயமாய்ப் போய்விட்டாரே நாமினி எங்கிருக்கின்றாரென்றுதேடிக் கண்டுபிடிக்கப்போகிறோமென்று அந்தமதுரா நகரமெங்குஞ் சுத்திசுத்தித் தேடிக்கொண்டிருந்தார்கள் இங்கே டில்லிநகர அந்தப்புரத்திற்குச் சென்று அரசனைப் பலசைகைகளாலெழுப்பிக் கொண்டிருந்த கோவிந்ததாசர் அரசன் எழுந்திராமலிருப்பதைக் கண்டு உடனே அரசன் மார்பினிலோர் அறையறைந்தார் அவ்வடியினால் அரசன் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்து கொசுக்கூட நாடக்கூடாத கட்டுகாவலுடனிருக்கும் நமது அந்தப்புரத்திற்குள் வந்தவன் யாவன் என்றும் இத்தனை திடச்சித்தத்துடன் இங்குவந்தது மல்லாமல் எள்ளளவேனும் அச்சம் பயமின்றி என்னையடித்தானே அவனெங்கு ஒளித்திருக்கின்றானோ வென்றுதேடுகையில் கோவிந்ததாசர் அரசனெதிரில்வந்து நின்றார் அவரைக்கண்டு அரசன் நீர் ஆரையாவென்று வினவ கோவிந்ததாசர் அரசனைநோக்கி ஓவேந்தனே உபசாந்தனே யான் மதுராநகரத்தினில் வசிக்குங் கோவிந்ததாசராகும் தூதர்களை யனுப்பித் தாங்களென்னை யழைத்துவரச்சொல்லி கட்டளை யிட்டபடியால் அவர்களென்னைக்கண்டு அரசன் கட்டளையின்படி கொலுக்கூடத்திற்கு வரவேணுமென்று அழைத்தார்கள் அதைக் கேட்டவுடனே தங்களைக்காணவேண்டி வந்தவனாகுமென அரசன் சந்தோஷ சித்தனாகியிருக்கக்கண்டு கோவிந்ததாசர் பின்னுஞ்சொல்லுகின்றார் ஓ அரசனே யான் பகவானுடது தினந்தோரும்விளையாடுவது வழக்கமாக விருக்க அதைக்கேட்டு நின் மனந்தாளாமல் பொராமை கொண்டு தூதர்களை யனுப்பி என்னை யழைத்துவரச் சொன்ன காரணம் யாதோ அதைதெரியச் சொல்ல வேணுமென அதற்கரசன் கோவிந்ததாசரை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

கேளுமையா பகவத்பக்தர்களிற் சிறந்த புண்ணிய சீலரே யானும்மை யழைப்பித்துப் பலவிதங்களிற் சோதனைசெய்ய வேணுமென்றெண்ணித்தானெனு மமகாரங்கொண்டு உம்முடைய மகுத்துவத்தை யறியாமல் பலவிதவெண்ணங் கொண்டிருந்ததுஉண்மையே தாங்களிந்த நடுராத்திரியில் கண்ணிமைக் கெட்டாமலிருக்குங் காவலையெல்லாங் கடந்துவந்ததுவே மெத்த அருமை அன்றியும் பந்தோபஸ்தாக அன்னியர்கள் உள்ளே பிரவேசிக்கமுடியாமல் கதவுகளெல்லாம் சாத்திப்பூட்டியிருக்கும் அந்தப்புரத்திற்குள் தாங்கள்வந்தது அருமையிலும் அருமையாகையால் எனக்குத் தாங்கள்மீதிருந்தச்சந்தேகமெல்லாம் நிவர்த்தியாகித் தங்களைப்பகவானென்றே யெண்ணினேன் இதிலெள்ளளவும் பிசகில்லை யிதுசத்தியமான மொழியாகும் ஆகையால் அடியேன்மீது தயவுசெய்து யான்கொண்ட எண்ணமாகும் ஆபசாரங்களை மன்னித்து இப்போதே தங்கள் அஸ்தங்களை இவ்வேழையின் சிறத்தின்மீது வைத்துக் கருணைமழை பொழியு

மையா சத்குருநாதரே ஆனந்தபோதரே பிரமமே தானாகும் நவனீதரே பங்கயமலரைப்போன்ற பாதரே என்று துதிசெய்துப் பலதரம் விழுந்து பணியும் அரசனையாதரித்து உடனே தன்கரத்தை ஆரசன் சிரத்தின்மீது வைத்துப் பிரமோபதேசஞ்செய்து அதற்காகவேண்டிய விதிகளையெல்லாஞ் சொல்லி அரசனை களிக்கடலில் மூழ்கும்படிசெய்துப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார் ஓஅரசனே நீர்அனுப்பிய தூதர்கள் மதுராநகரத்தினில் தேடித்திரிந்துக் கொண்டிருப்பார்கள் ஆகையால் அலர்களுக்கு நான்வந்து உம்மைக்கண்டு பேசிய சவிஸ்தாரங்களை யெல்லாம் ஒரு கடிதத்தினி லெழுதிக் கையொப்பமிட்டு என்னிடங் கொடும் அக்கடிதத்தைக் கொண்டுபோய்தூதர்களுக்குக்காட்டி சீக்கிரமவர்களை யிங்குவந்தனுகும் படிச்செய்கிறேனென அரசன் அந்தப்படியே ஒருகடிதமெழுதி அதில்தன் சிலிட்டுக் கொடுக்கக் கோவிந்ததாசர் பெற்றுக்கொண்டு அந்தப்புரத்தைவிட்டு வெளிப்பட்டு பொழுதுவிடிவதற்கு முன்னமே மதுராநகரத்தையடைந்து அங்குதன்னைத் தேடிக்கொண்டு திரியும் தூதர்களைக்கண்டு அரசன்கொடுத்த கடிதத்தைக்காட்டிதான் அரசனிடஞ் சென்றதுமுதல்விடை பெற்றுக்கொண்டு மதுராநகரத்தைத்தான்சேர்ந்தது வரையில் நடந்தசெய்திகளை யொன்றொழியாமற்சொல்லக்கேட்டும் அரசன் சீடனுடனிருக்கும் சீட்டை வாசித்தும் சந்தேகம்நீங்கிக் கோவிந்த தாசருடைய மகுத்துவத்திற்கு மெத்த அதிசயித்து அத்தூதர்கள் அவர்திருவடித் தாமரைகளில்விழுந்து பணிந்து எழுந்துக்கைகுவித்து நிற்குந் தூதர்களைக் கோவிந்ததாசர் ஆசீர்வாதம்புகன்று விடைதரப் பெற்றுகொண்டு தூதர்கள் டில்லிநகரத்தை நோக்கி நடந்துபட்டணத்தையடைந்து அரசனைக்கண்டுப் பணிந்து தாங்கள் போய்வந்த செய்தியைப்பகர அரசன்கேட்டு யெத்த சந்துஷ்டியடைந்துத் தனக்குக் கோவிந்ததாசர் உபதேசஞ்செய்துப் போயினப்பிரமோபதேசவிதிப்படி நடந்துக் கொண்டிருந்தான்.

பின்பு கோவிந்ததாசர், அந்தமதுராநகரத்தினில் முன்போல ஸ்ரீஹரியுடன் சிலவருடகாலம் விளையாடிக் கொண்டிருந்துப் பூரணக்ஞானியாகி ஒருவர்கண்களுக்கும் புலப்படாமல் சிரஞ்சீவியாக நாளைக்கும் அந்த மதுராநகரத்தினில் வாசம் பண்ணிக்கொண்டிருக்கின்றா ரென்று பக்தலீலா மிருதம் முறையிடுகின்றன.

வாழி விருத்தம்.

நல்லோர்கள்கொண்டாடும் ஞானியர்கள்வாழியே
இல்லறத்தைக்கருதாது மெழிலுடையோர்வாழியே
எல்லையிலாப்பேரின்ப மென்றடைந்தோர்வாழியே
வல்லபாசாரியுடன்தாசரின் மலர்ப்பதங்கள்வாழியே.

வல்லபாசாரிகோவிந்ததாசர்சரித்திரம்.

முற்றிற்று,



ஸ்ரீ

ஸ்ரீபரப்பிரமணேநம:

ஸ்ரீ ம த்

பிரேமநிதிதாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

காமனைவென்றுநாளுங் கரிநகர்தனில்வசித்து
நேமங்கள்மிகச்செய்து நெடியமாலைப்பூசித்து
பூமகள்கணவன்கொண்டப் பெருந்தீவத்தியாவ்வழிகடந்தப்
பிரேமநிதிதாசர்பிரிய பீடுடைபதங்கள்போற்றி

கதையின் வரலாறு.

பூமாதுக்கோர் அணிகலமாகவும் பக்தர் முக்தர் வசிப்பதற்க்கோர் உத்தமபூமியாகியும் விளங்கும் கரிநகரமெனும் பட்டணத்தினில் வசிப்பவர் பிரமகுலத்தினிலுதித்தவர் சதாஹரியை யாராதிப்பவர் அதிதிகளுக்கில்லை யென்னுமல் ஈவியளிப்பவர் சாதுக்கள் சேவையில் பிரியம் வகித்திருப்பவர் பிரேமநிதிதாசரெனப்பேர் பெற்றவர் எப்பொழுதும் ஸ்ரீராமபூசையிற் பிரியஞ் செலுத்துமவர் இந்தப்படி சிலசிஷர்கள் சகாயத்தினலே ஸ்ரீராமபூசை செய்துக் கொண்டேயிருந்து அவர் ஒருநாள் தனக்குததானே யோசிக்கின்ருர் அதென்னவெனில் இவ்வுலகத்தினில் உத்தமர்களாயிருப்பவர்கள் அன்னியர்களுக்குப் பிரயாசை கொடுத்து அதனல் ஸ்ரீராமரைப்பூசிக்கமாட்டார்கள் அப்பலன்கள் யாவும் பிரயாசைப் பட்டவர்களுக்கே அன்றி ஸ்ரீராமரைப் பூசிப்பவர்களுக்கொருவிதப்பலனுமேயில்லை யாகையால் இன்றுதொடங்கி எல்லா வேலைகளையும் நமதுகைகளாலேயே சிரமமெடுத்துக் கொண்டு செய்து அதனல்வரும்பலனை நாமேயடைய வேணுமென்றுக் கருதிச் சிஷர்களுக்கெந்தவேலையைபுஞ் சொல்லாமல் தானே யாவத்துமான வேலைகளையுஞ்செய்து ஸ்ரீராமரைப் பூசித்துக்கொண்டு சிலவருடகாலங்கள் கடத்திக்கொண்டே வந்தார் மேலும் அன்னியர்களாலே எந்த கைங்கரியங்களும் பெற்றுச் செய்த புண்ணியபலனுங் கிட்டாதென்றும் காகிகொடுத்து எந்தவேலைகளையுஞ் செய்வித்துக் கொண்டால் நமக்கு நல்லகெதி யுண்டாகுமென்றெண்ணி இவ்விதமாகிப சிந்தனைசெய்து அந்தப் பிரேமநிதிதாசர் தான கஷ்டமெடுத்துக் கொண்டு ஸ்ரீராமபூசைசெய்துகொண்டிருந்தார் அதெப்படியெனில் அந்தப்பிரேமநிதிதாசர் தினந்தோருஞ் ஜாமநேரத்தினி லெழுந்து கெங்கைக்குச் சென்று ஸ்னுனுட்டானங்களைமுடித்து பெருத்த தவலையினில் ஜலந்திரட்டிக் கொண்டுவந்து வைத்துப் பூஜாபாத்திரங்களைத்துலக்கி சுத்திசெய்து ஸ்ரீராமவிக்கிரகத்திற்குத் திருமஞ்சனஞ் செய்வித்து ஆடையாபரணங்களால் அலங்காரஞ்செய்து சோடசோபசாரங்கள் கண்டருளப்பண்ணி அரிச்சனையாருதனங்கள் புரிந்தும் இந்தப்படிபந்த பிரேமநிதிதாசர் ஸ்ரீராமகைங்கரியத்தில் நாட்களைப் போக்கிக்கொண்டிருக்க ஸ்ரீராமர் தன்மனதினில் மெத்தவிசனப் பட்டார் அதென்னவெனில் இந்தப் பிரேமநிதிதாசர் செய்யும் பக்திக்கு நாம் ருணஸ்தனுகியிருக் கின்றேமே அந்தருணத்தைத் தீர்த்துக்கொண்டே வரவேணுமென்று கருதி அந்தப்பிரேமநிதி தாசருக்கு அடிக்கடி தன் தெரிசனந்தந்துக் கடனைக்கழித்துக் கொண்டேயிருந்தார் இப்படிக்கிருக்கையில் உலகத்தினி லொருமனிதனுக்கு உபகாரஞ்செய்தால் அந்தஉத்தமன்உபகாரஞ் செய்தவனுக்கு பதிலுபகாரஞ் செய்வதற்கு சமயம் பார்த்துக்கொண்டேயிருந்து பதிலுபகாரஞ் செய்கின்ருன் அப்படிச்கிருக்க சாக்ஷாத்ஸ்ரீஹரிக்கிச் செய்துக் கொண்டிருக்கும் பூசையின் கைங்கரியமாகும் கடனைக்கொடுப்பது ஸ்ரீஹரிக்கு இபற்கையாகியும் பகவானை யடைந்தவர்களுக்கு அவருடைய கிருபை யுண்டாகாம லிருக்குமோ ஆகையால் பகவானை தொழுதவர்களுக்கு அளவிட்டுச் சொல்லப்படாதசுகத்தையடைவார்கள் இந்தஉண்மையைச் சாத்திரபுராண இதிகாசங்களில் தேர்ச்சியடைந் திருப்பவராகிய

இந்தப் பிரேமநிதிதாசர் சதாகாலமும் பகவானுடைய பூசையிலும் பகவந்நாம சங்கீர்த்தனைகளிலும் கணப்பொழுதேனும் மறவாமல் இடைவிடாது நடத்திக் கொண்டிருக்கையில் ஒருகாலத்தில் அந்தடில்லி மாநகரத்தினில் பெருத்தமழை விடாமல் ஏழுநாள் பரியந்தம் பெய்தபடியால் எங்கேபார்த்தாலும்வெள்ளக்காடாகி சேராகினது முழங்கால் பரியந்தம்புதைவதினாலும் மேலுமேலு மழை பொழிந்துக் கொண்டே யிருப்பதினாலும் இந்தப் பிரேமநிதிதாசர் அம்மழைக்கும் இருட்டிற்கும் அணுவளவேனும்பயமின்றி ஒருநாள் தவலைக்குடத்தை யெடுத்துக்கொண்டு பகவந்நாம சங்கீர்த்தனை வாயினாலுச்சரித்துக் கொண்டு கங்கைக்கரையை நோக்கிப் புறப்பட்டார் இவர்பொழுதுவிடிந்தபிறகு கெங்கைக்குச்சென்றுதீர்த்தங்கொண்டுவரப் பட்டதோ மூன்றுஞ்ஜாமத்திற்கே யேன் போகவேண்டுமென்றாலோ பொழுது விடிந்தபிறகு கெங்கைக்குச் சென்று ஜலந்திரட்டினால் அனேகருடைய சேஷம்பட்டு ஜலம் அசுத்தமாகவிருக்குமென்றும் அந்ததீர்த்தத்தினால் ஸ்ரீராமபிரானுக்குத் திருமஞ்சனஞ்செய்தால் மகத்தாகிய பாதகம்வந்து சம்பவிக்குமென்றுங் கருதி மூன்றுஞ்சாமத்திலேயே எழுந்து இந்தப் பிரேமநிதிதாசர் கெங்கைக் கரைக்குப் போகிற வழக்கப்படி போகிறதுபோல அன்றையதினமும் போகிறபோது காரிருளினாலுஞ் சேற்றினாலும் கால்கள்புதையவும் வழிதப்பிநடந்து ஒண்டியாகிப் போகையில்கண்டு ஸ்ரீராமமூர்த்தியானவர்மனிதவுருக்கொண்டு பிரேமநிதிதாசருக்கு வழிநன்றாய்த்தெரியும்படியாகவும் அரிதான கைங்கரியஞ் செய்யத்தொடங்கினார்.

அதென்ன கைங்கரியமெனில் யாரோ பாட்டைசாரி இருட்டிற்காக தீவட்டிப் பிடித்துகொண்டுபோவதுபோல அபிநயங்காட்டி ஸ்ரீராமர்கைதீவட்டிபிடித்துக்கொண்டு முன்னதாக நடக்கப் பிரேமநிதிதாசரும் அந்ததீவட்டியின் வெளிச்சத்தினால்பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டே பின்னால் வழிநடந்துக்கொண்டே இந்ததீவட்டியைப் பிடித்துவருவது ஆச்சரியமாக விருக்கின்றது அன்றியும் இத்தீவட்டி வெளிச்சம் நமக்குக்கிடைத்தது ஸ்ரீராமபிரானுடைய கிருபையென்றே நம்பத்தக்கது மேலுமிந்த தீவட்டியைப் பிடித்துக்கொண்டு நமக்குமுன்னே போகிற மனிதன் யாரோ தனவானைக் கொண்டுபோய் வீட்டினில்விடுத்து மருபடியுந் திரும்பிவழியே செல்லும் மசால்சியாகுமிவன் என்றும் அன்றியுமிது அடியேனுக்குபகாரமாக இன்று அமர்ந்திருக்கிற தென்று சிந்தனைசெய்துக் கொண்டே கெங்காநதியைச் சேர்ந்து ஸ்நானஞ்செய்து அனுட்டானங்களை முடித்துத் தவலைக்குடத்தினில் ஜலந்திரட்டிக்கொண்டு அந்தப் பிரேமநிதிதாசர் திரும்பிவருவதைஸ்ரீராமர்கண்டுகைதீவட்டியை நன்றாகத்திருத்திக் சொளுத்திக்கொண்டு பிரயாணமாகினார் பக்தருக்கு முன்னதாக மெத்தவெளிச்ச முண்டாகும்படி மனதினிற்கருதி நடக்கிறபோது பிரேமநிதிதாசர் ஜலந்திரட்டி தவலைக்குடத்தைச் சிரத்தின்மீதில்வைத்துக் கொண்டுபின்னாகவே நடந்து தனனிருப்பிடத்தினிற் சேர்ந்துநின்றார் அப்போது ஸ்ரீராமமூர்த்தி யந்தப் பிரேமநிதி தாசர்பார்த்துக்கொண் டிருக்கிறபோதே மாயமாய் மறைந்துபோயினார் அதைக்கண்டுபிரேமநிதிதாசர் ஆஹாஹா நாம் பகவானுக்குமெத்த அபகாரியாகிப்போயினோமே யென்றும் சூரியகுலத்திற் கோர் திலர்தமாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியே கைதீவட்டியைப் பிடித்துக்கொண்டு வந்தவராகும் அன்றியுஞ் சனகசனத்தாதி முனிவர்கள் வந்த மகாபுருடனுக்காக யோகநிஷ்டை செய்துக்கொண் டிருக்கின்றார்களோ அப்படிப்பட்ட மகானுபரவர் என்பொருட்டு கைதீவட்டியைப் பிடித்து மசால்ச்சிவேலைமுயன்றுச் செய்தாரே என்றுமிகவும் விசனப்பட்டுக் கொண்டே பகவான் சந்நிதிமுன்னஞ் சென்று ஓஜெகதீசா ஆசாபாசவினாசா பக்தர்கள்நேசா வைகுந்தவாசா என்று பற்பலவாறு புகழ்ந்துக் கொண்டாடிப் பின்னுஞ்சொல்லுகின்றார் ஓகருணாநிதி அடியேன் என்னும்க்ஞானஹீனனும் பக்தியில்லாத மூடனேன் வைராக்கியமில்லாத சபலசித்தனுமாகிய யான் தேவரீருக்குப் பூசை எப்படிசெய்வேன் பூசைசெய்யுமவனும் கீர்த்தனைகளைப் பாடுமவனும் சகலகாரியங்களையுஞ் செய்யுமவனும் நீயாகவே யிருக்க யான் பூசைசெய்தேன் கீர்த்தனைகளைப் பாடினேன் எல்லாகாரியங்களும் நடத்தினேனென்றொரு மனிதன் சொல்லுவது அவிவேகமே ஆகையால் ஓபரமபுருடனே அடியேன் ஒண்டியாகத் தனித்துமது கைங்கரியங்கள் செய்வது நன்றல்லவென்றுக்கருதி சண்களுக் கின்பமுண்டாகும்படியாரோ ஒருமனிதனைப்போ லுருகொண்டு கையினில் தீக்கோலைத் தரித்து எனக்காகவந்து வழிகாட்டி இருப்பிடத்திற்சேர்த்து மரைந்துபோயின ஸ்ரீரகுராமாமுதசோமா ஜானகிவாமா பரந்தாமா பக்தர்கள்நேமா அடியேனுடைய மனமானது தங்கள்மீது என்றுஞ் சேர்ந்திருக்கும்படி கிருபைபாரும் தயாநிதி கருணாபயோநிதி யென்று பக்திசெய்துக்கொண்டிருந்தார்

மேலும்இந்தப்பிரேமநிதிதாசர் மூன்றுகாலமும் பகவானுக்கு அர்ச்சனையாராதனைகளை நடத்திப் ப

நாமசங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருக்கையில் அனேக வைஷ்ணவர்களும் பாமரர்களும் அங்கு வந்து பிரேமநிதிதாசர் பாடுங் கீர்த்தனைகளின்உருக்கத்தைக்கேட்டு ஆனந்தித்து தினந்தோறும் வந்து கீர்த்தனைகளைக் கேட்க மெத்தப்பிரியங் கொண்டவர்களாகி தினமும்வந்து பக்திமிகுந்து பிரேமநிதிதாசரைக்கண்டு வணங்கி அவரது ஆசீர்வாதம் பெற்றுச்கொண்டு போகிறபோது ஒருவருக்கொருவர்பேசிக்கொள்ளுவ தென்னவெனில் இந்தப்பி ரேமநிதிதாசர் இக்கலியுகத்தினில் பாமர ஜெனங்களைக் கடத்தேரச்செய்யும் பொருட்டு அவதாரஞ் செய்துவந்தவரைப்போல தோன்றுகின்றதென்று கொண்டாடச் சில துஷ்டர்கள் ஒரிடத்திற் சேர்ந்துப் பிரேமநிதிதாசர் வயிறுவளர்க்கும் பொருட்டு ஹரிகதை சொல்லிக்கொண்டு ஸ்ரீகூட்டங்களை மெத்தவுஞ் சேர்த்துக்கொண்டு கீர்த்தனை யவர்கள் மெச்சிக்கொள்ளும்படியாகடம்பத்திற்றுப்பாடி சந்தோஷிக்கச்செய்துஅவர்களை வசியஞ் செய்து சந்தர்ப்பம் நேரிட்டால் அவர்களைக் கூடி மன்மதக்கிரீடைகள் செய்துப் பலஸ்ரீகளைக் கெடுத்துவிட்டான் ஆகையால்,இவனை எவ்விதத்தினாலும் அரசனிடங் கொண்டுபோய் சிக்ஷைசெய்விக்கவேணுமென்று அவர்கள் சொல்லிக்கொண்டே சிறிதேனும் இந்தப்பிரேமநிதி தாசர்மீது பக்ஷமின்றி அரசனிடஞ் சென்று பொறுமையதிகரித்து வணங்கி ஓபூபாலரே நமதுபட்டணத்தினில் வசிக்கும் பிரேமநிதி தாசர் உண்மையான பக்தனைப்போல வேடம்பூண்டுஅநேக ஸ்ரீஜனங்களைச் சேர்த்துக்கொண்டு ஹரிகதைகளையுங் கீர்த்தனைகளையும்பாடி யவர்களைமயக்கிப் பிர்மிக்கச் செய்து சமயம்பார்த்து வெகுஸ்ரீகளைக் கூடிக்கலந்து கெடுத்துவிட்டான் இன்னுஞ்சிலநாளில் மத்தஸ்ரீகளையுங் கெடுத்துவிடுவன்போலத் தோன்றுகின்றதுஅன்றியும் அந்தப்பிரேமநிதி தாசன் எங்களுக்குச் சகோதரனாகும் அவன்மீது நாங்கள்குற்றஞ் சொல்லுவோமோ ஒருக்காலும் நாங்கள் பொய்மொழி புகலமாட்டோம் பன்னிப்பன்னி பலதரஞ் சொல்லுவதால யாதொரு பயனுமில்லை அந்தப் பிரேமநிதி தாசனைத்தாங்கள் யிங்கழைப்பித்து ரூபில்வைத்துக்கொண்டுவிசாரணை செய்தால் நாங்கள்சொல்லுவது பொய்யென்றும் அவன்சொல்லுவது பொய்யென்றும் நன்றாய்த் தெரியவருமென்று சொல்லக்கேட்டு அரசன் அடங்காச் சினங்கொண்டு வேடனானவன் புதரினில் தன் தேகத்தை மறைத்துப் பரவைகள்மீதுவலையைப்போட்டுப் பிடித்துக்கொண்டு ஜீவனஞ் செய்வதுபோல அந்தப்பிரேமநிதிதாசன் உலகத்திலுள்ள மனிதர்களைப்போல யிராமல் தன்னுருவத்தைமாத்தி ஹரிபக்தனைப்போல வடிவம்பூண்டு ஹரிகதைகளைச் சொல்லிப் பெண்களைமயக்கிதன்வசமாகும்படிக்குச்செய்து அவர்களுடன் கூடிக்குலாவுகின்ற மகாபாதகனை இப்போதே வரவழைத்துத் தக்கசிக்ஷை செய்கின்றேன் பாருங்களென்று கடுஞ்சினமடைந்து அங்கிருக்குந் தூதர்களையழைத்து அடா தூதர்களே சீக்கிரமாகநீங்கள்சென்றுக் கொடியபாதகனாகியபிரேமநிதிதாசனை யானழைத்துவரச் சொன்னதாகச்சொல்லி கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வரக்கடவீர்களென்று கட்டளையிட அந்தப்படியே தூதர்கள் பிரேமநிதிதாசரை ராஜசமுகத்திற்கு அழைத்துவரும்படி ஜாமராத்திரிவேளையில் வெகுசீக்கிரமாக நடந்து பிரேமநிதிதாசர் ஹரிகதை சொல்லிக் கொண்டிருக்கும் இடம் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது பிரேமநிதிதாசர் ஹரிகதைகளை அதிகரசமாக கொல்லிக்கொண்டிருக்க அதைக் கேட்டு ஆனந்தித்துக்கொண்டு அனேகஜெனங்கள் அங்கிருக்க அவர்களைநோக்கி அந்தப் பிரேமநிதிதாசர் ஓபிராணிகளே நமக்கு ஸ்ரீராமசந்திரமூர்த்தியே நேசன் அந்தஸ்ரீராமபிரானே நமக்குப் பந்து அண்ணனும்ராமனே தந்தையும் அன்னையும்ராமனே குருவும்ராமனே இன்னுமைத்துமுள்ள உரன்முறைகளும்ராமனே பிரமக்ஞானமும்ராமனே சகலதனங் களும்ராமனே மோக்ஷத்திற்குக் காரணவஸ்துவும் ராமனே அந்த ராமனில்லாவிடில் நமக்குசரீரமிராது ஆகையால்கண்களார ஸ்ரீராமனையே சேவித்திருக்கவேணும் கரங்களால் ஸ்ரீராமர் திருவடிகளை அர்ச்சனைசெய்துக்கொண்டிருக்கவேணும் மனமானது ஸ்ரீராமபக்தியி லீடுபட்டிருக்க வேணுமென்று அந்தப்பிரேமநிதி தரசர் ஜெனங்களுக்குப்போதனை செய்துக்கொண்டிருக்கும்போது தூதர்கள் அங்குவந்து பிரேமநிதி தாசரை நோக்கி ஓஐயா ஸ்ரீஹரிதாசரே நினதுசகோதரர்கள் அரசனிடம்வந்து நின்மீது வெகுதப்புகளைப் புகன்றார்கள் அதைக்கேட்டு பூபாலன் கடுஞ்சினமடைந்து நின்னைக் கைப்பிடியாகப்பிடித்து வரும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார் ஆகையால் மறுத்தொன்றுஞ் சொல்லாமல் இப்போதே எங்கள்பின்னே வரவேணும் அப்படிக்கி நீர்வராவிடில் பலாத்காரஞ் செய்து உம்மைப் பிடித்துக்கொண்டுபோய் அரசன்கொலுவிடுப்போமென்று ஆரவாரஞ் செய்யக்கேட்டு அந்த பிரேமநிதிதாசர் அத்தூதர்களை நோக்கி ஐயா ராஜதூதர்களே அரசன் கட்டளையின்படி யான் வரமாட்டேனென்று சொன்னலல்ல வேருஉங்களுக்குக்கோபம் வரவேண்டும் யான் அரசன் கொலுமுகத்திற்கு

அவசியம் உங்களுடன் வருகிறேன் ஆனாலதிலொரு விசேஷமுளது அதென்னவெனில் இப்போது நடுராத்திரியாயிருப்பதால் கெங்கைக்குச் சென்று ஸ்ரீராமசந்திரமூர்த்திக்குத் தீர்த்தங்கொண்டுவந்து வைத்து உடனே வருகிறேனென்றும் என்னையிந்தநடுராத்திரி வேளையில் அவ்வளவு அவசரமாக அரசனழைத்துவரச்சொன்ன காரணம்யாதோ என் சகோதரர்கள் அரசனிடம்வந்து என்மீதுசொல்லிய கோள்தானென்னமோ அதையெனக்கு தயவுசெய்துச்சொல்லவேணுமென்று மெத்தவும் வேண்டிக்கொண்டார் அவ்வேண்டுதலைக் கேட்டத் தூதர்களிலொருவன் பிரேமநிதிதாசரை நோக்கி ஓஐயா ஹரிதாசரே தங்கள் சகோதரர்கள் அரசனிடம்வந்து உங்கள்மீது சொல்லிய கோளென்னவெனில் தாங்கள்சொல்லும் ஹரிகதையின் சாரத்தால் அனேகம் ஸ்ரீகளை மயக்கி வசமாக்கிக்கொண்டு அவர்களுடன் கூடிக்கலவிசெய்துகொண்டிருப்பதன்றியும் இன்னுமிருக்கப் பட்ட ஸ்ரீகளையுங் கெடுக்க முயன்றிருக்கின்றீரென்றும் உம்மை அரசன் கொலுமுகத்தினில் வரவழைத்துத் தக்கதண்டனை விதிக்கும்படி யவர்கள் சொல்லியபடியால் அரசன் கடுஞ்சினமடைந்து உடனே தங்களைக்கைப்பிடியாகக்கொண்டு வரும்படிக்கிக் கட்டளையிட்டார் அக்கட்டளையின்படி யாங்களும் தங்களிடம் வந்தோம் அழைத்துப் போகும்படிக்கி இதுவே ராஜசமுகத்தினில் நடந்த செய்தியென்று சொல்லுந் தூதர்கள் வசனங்களைக் கேட்டு அந்தப் பிரேமநிதிதாசர் தூதர்களை நோக்கி திருமஞ்சனத்திற்குத்தீர்த்தங்கொண்டு வந்து வைத்து நொடிகளுக்குள்ளாக வருகின்றேன் அதற்கு விடைதாருங்களென அத்தூதர்கள் கடுஞ்சினங்கொண்டு ஓஹரிதாசரே மரியாதையாய் எங்கள்பின் தாங்கள் வந்தாலாயிற்று இல்லாவிடில் பலவந்தமாக உம்முடைய கரத்தைப்பிடித் திழுத்துக் கொண்டு போவோமெனக் கேட்டு அந்தப்பிரேமநிதி தாசர் உடனே வெளியில்வந்து பகவந்நாம சங்கீர்த்தனஞ்செய்துக்கொண்டே ராஜதூதர்கள்பின் அரசன் கொலுமுகத்தை நோக்கி நடந்தார்.

இங்கே ஹரிகதை கேட்டுக்கொண்டிருந்தஜெனங்களாவரும் தங்கடங்களகம் புகுந்திருந்தார்கள் அப்போது பிரேமநிதிதாசர் ராஜன்கொலுகூடத்தையடைந்து அரசன்வரவுக் கெதிர்பார்த்துக் கொண்டிருக்க அந்தசமயத்தில் அரசன் அந்தப் புரத்தினில் தாசிகளுடன் மோகாந்தகாரனாகி யிருக்கத்தூதர்கள் அந்தப்புரத்திற்குச் சென்று அரசனைக்கண்டுவணங்கி ஓசுவாமி தங்கள் கட்டளையின்படி பிரேமநிதிதாசரைக்கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவந்தோமென்று சொல்லக்கேட்டு அரசன் அடாதூதர்களே அந்தப் பிரேமநிதிதாசனை ராத்திரி பொழுதுக்குக் காவலில் வைத்துவிட்டுப் போங்கள் நாளையதினம் பகலுக்கு அவனையழைப்பித்து விசாரணைசெய்துதக்கதண்டனை செய்கிறேனென்று சொல்லி யவ்வரசன் கட்டிலின் மீது படுத்து நித்திரைசெய்தான் அப்போது தூதர்கள் பிரேமநிதிதாசரை யழைத்துக் கொண்டுபோய் காவலில்வைக்க யந்தப்பிரேமநிதிதாசர் இன்று நமக்குப் பெருத்தசேவை லபிக்காமற்போயிற்று ஸ்ரீராமருடைய கைங்கரியத்திற்குத் தீர்த்தங்கொண்டு வரப்பட்ட ராத்திரிகாலம் வந்தணுகியதே யானெப்படிக் கின்று ராமகைங்கரியஞ் செய்யாமல் உயிருடனிருப்பேன் அன்றியும் இவ்வுலகத்தினிலென்னைப் போல பகவானுடைய சேவையில்லாம லிருப்பவர்களுமுண்டோவென்று ராஜநிர்ப்பந்தத்திற் குடன்பட்டு மெத்தவுங் கவலையடைந்துக் கொண்டிருக்க அப்போது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் நரபதியின்மீது மிகவுங் குரோதங்கொண்டு காஜி உருவமெடுத்து அந்த ராத்திரி காலத்திலேயே அரசன் னித்திரைசெய்யும் அந்தப்புரத்தை நோக்கிவந்து அரசனைக்கண்டு அவன் மார்பினி லுதைத்தார் அந்த உதையினாலே அரசன் கட்டிலைவிட்டுக் கீழேவிழுந்து அலறி உளறிக்கொண்டே இப்படி யார் நம்மையுதைத்தவன் எப்படிநமது அந்தப்புரத்திற்குள் புகுந்துவந்தான் என்றுமனதில் நினைத்துக் கண்களைத்திறந்து பார்க்கிறபோது தன் குல குருவென்றுணர்ந்து உடனேவணங்கி பலவிதமாகப் புகழ்ந்துநிற்க அந்தக்காஜியானவர் தன்கரத்தினில் குரான் புத்தகத்தைப் பிடித்துக்கொண்டு வேந்தனைநோக்கி அடா அரசனே நீஅதிகநித்திரையினால் உன்மத்தனாகித் தன்னைமறந்து சுழுப்தியடைந்திருந்தாய் எத்தனைநேர முன்னையெழுப்பினாலும் எழுந்திராமற்கிடந்த படியால் எனக்குண்டாகிய தாகதாபத்தைச் சகிக்கமுடியாத கோபத்தினாலுன்னை யுதைத்தேன் என்றுசொல்லவே அரசன்விரைந்து தாகதீர்த்தந் தருவித்துத் தன்ஆசானை அருந்துமென்றுவேண்டக்காஜி அடாவேந்தனே இன்றுதினம்எவனைக்காவலில்வைத்தாயோ அந்தப் புண்ணியபுருடன் வந்துத் தன்கைகளால் தீர்த்தத்தைக் கொடுப்பனேயாகில் மெத்தச் சந்துஷ்டியுடன் அருந்துவேனென்றுதெரிந்துக்கொள்ளும் அப்படிக்கென் தாகதாபத்தைத்தீராமல் நீஎத்தனைவிதத்தில் வேண்டிக்கொண்ட போதிலும் நானுடன்பட்டுத் தீர்த்தத்தைப் புசிப்பேனென்றுக் கனவிலுமெண்ணாதே உத்தம புருடர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்த துஷ்டனாகிய நின்வீட்டில் தாகபானஞ் செய்வேனோ அடாகொடியப் பாத

பிரமகாதகா என்றுசொல்லி மாயமாய் மறைந்துபோ
யினர் இதைககண்ட வேந்தன் ஆச்சரியமு மாச்சரிய
முமடைந்து இவர் காஜியல்லப் பிரேமநிதிதாசர்தொ
ழுந் தெய்வமாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியாகும் இவ
ருடைய தெரிசனம் நபக்குக்கிடைக்க நாமென்னதவ
மியற்றினேமோ அன்றியு மிவருடைய கால்களால்
நாம் உதைப்பட என்னபாக்கியஞ் செய்தோமோ
இன்னுள் நமக்மு நன்னளாயிற்று கடந்தநாளெல்லா
வீணனநாள்களே மருபடியுமொருதரம் ஸ்ரீராம்ரு
டைய தெரிசனம் நமக்குக்கிடைக்குமா தெரியாமல்
மோசம்போயினேமே அன்றியும் உத்தமபாகவதரு
கிய பிரேமரிதிதாசரை காவலில் வைத்தபடியினலன்
றோ நமக்கு ஸ்ரீராம்தெரிசனங் கிடைத்தது என்று
பலவாறு சிந்தித்துக்கொண்டே அந்தவேந்தன்மெத்
தவும் அபசாரப்பட்டு விட்டோமே என்று பயந்து
அங்கருக்குங் காவலரையழைத்து அடாகாவலர்களே
நீங்கள்சீக்கிரம் சென்றுக் காவலில் வைத்திருக்கும்
பிரேமநிதிதாசரை விடுதலை செய்யுங்களென்று கட்ட
ளையிட அந்தப்படியே காவலர்கள் சென்றுப் பிரேம
நிதிதாசரை விடுதலை செய்வித்தார்சள்.

இவ்வாறு காவலர்கள் தன்னை விடுதலைசெய்த
வுடனே அந்தப்பிரேமநிதி தாசரும் பக்வந்நாமசங்கீ
ர்த்தனைகளைப் பாடிக்கொண்டே சுகமாகத் தன்வீட்
டையடைந்து நம்மையிந்த நடுராத்திரியில் வெகுதுரி
தமாக அரசன் தூதர்களையனுப்பி அழைத்து வரச்
சொல்லிக் காவலில்வைத்து யாதொரு விசாரணையு
மின்றி உடனே போகும்படி நமக்குக் கட்டளையிட்
டனுப்பியதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே
என்றுயோசித்துமுடிவில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின்
கிருமையாகுமென்று தீர்மானித்துத் தவலைக்குடத்
தையெடுத்துக்கொண்டு கெங்காநதிக்குச்சென்றுஸ்னு
னுட்டானங்களை முடித்து ஜலந்திரட்டிக் கொண்டு
வந்து ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கித் திருமஞ்சனஞ்
செய்து ஆடையாபரணதிகளா லலங்காரஞ் செய்து
தூபதீப நைவேத்தியங்களை யீந்து சகஸ்திரநாமர்ச்ச
னைபுரிந்து தீர்க்க தெண்டனிட்டுப் பூசைமுடித்துப்
பகவத்தியானஞ் செய்துக்கொண்டே படுத்து நித்தி
ரைசெய்துக் கொண்டிருந்தார் சூரியோதய காலமா
னவுடன் அரசனெழுந்துப் பரிவாரங்கள் சூழப்புரப்
பட்டுவந்துப் பிரேமநிதிதாசரைக் கண்டுபணிந்து ஓ
பரமபாகவத சிகாமணியே நினதுகிருபையினல் ஸ்ரீ
ராமச்சந்திரமூர்த்தி காஜியைப்போல உருக்கொண்டு
குரான்புத்தகத்தைக் கையிற்பிடித்து எனது அந்தப்
புரத்திற்குவந்து அங்கு நித்திரைசெய்துக் கொண்டி
ருந்த என்னைமார்பி லெட்டியுதைத்துக் கீழேவிழத்
தள்ளி தாகதீர்த்தத்தின்பொருட்டு என்னையுதைத்த
தாகச்சொல்ல உடனேயான் தாகதீர்த்தந் தருவித்து
அருந்தும்படி வெகுவாகப் பிர்ரார்த்தித்தும் அதை
யவர்கைக்கொள்ளாமல் இன்றையதினம் எந்தசாது
வைக் காவலில்வைத்தாயோ அந்தசாதுவானவர் வந்
துத் தன்கரங்களால் தீர்த்தங்கொடுப்பாரே யாகில்
அத்தீர்த்தத்தை வெகு போக்கியமாகப்புசிப்பேனே
யன்றிக் கொடியபாதகனகிய நினதுகரத்தால் கொடு
டுக்குந் தீர்த்தத்தைக் கைகளால் தொடேனென்று
சொல்லி மாயமாய்மறைந்துபோயினர் அந்தநுட்பந்
தையுணர்ந்தும் யும்மைக்காவலில்நின்றும்விடுவிக்கும்
படி கட்டளையிட்டேன் காவலரும்உம்மையந்தப்படி
யேவிடுவித்தார்கள் அப்போதுஎனக்குண்டாகிய பய
த்தை என்னென்று சொல்லுவேன் இத்தனையும் ஸ்ரீ
ராமருடைய மகிமையாகுமென்றும் ஓபுண்ணிய புரு
டரே எனதறிவீனத்தினல் தெரியாது தங்களுக்குச்
செய்த அபசாரங்களை மன்னித்து ரக்ஷிக்கவேணுமெ
ன்று விழுந்துபணிந்து எழுந்திராமற் கிடந்தான்
அப்படி யெழுந்திராமற் கிடந்த அரசனை
யந்தப் பிரேமநிதிதாசர் இருகரங்களினலுந் தாவியெ
டுத்துப்பல ஆசிகள்கூறி ஓவேந்தனே ஒவ்வொருமனி
தனும் சத்கர்மமோ அல்லது துஷ்க்கர்பமோ இவ்வி
ரண்டில் எந்தெந்தகாலத்தினி லெந்தெந்தகர்மங்களை
யனுபவிக்கவேணும் அந்தந்தக்காலத்தினிலக் கர்மங்
களை யனுபவித்தேதீருமோமென்பது சாத்திரபிரமா
ணமிருக்க நான்செய்தேன்என்னலேயே அந்தகாரிய
மனுகூல மாயிற்றென்று சொல்லுவது அறிவீனம
ஆகையால யானனுபவிக்கவேண்டியதா யிருந்தகர்ம
த்தை யானனுபவித்தேன் அப்படிக்கிருக்க நீ என்ன
மோ என்னிடத்தினி லபசாரப்பட்டே னென்பது
சாத்திரப் பிரமானத்திற்கு ஒவ்வாது எல்லாம்பகக்
வான்செய்யுந் திருக்கூத்தே யாகுமென்று சொல்ல
கேட்டு அந்தப்பூபாலன் சந்தோஷசித்தனகி அந்தப்
பிரேமநிதி தாசருக்கு வேண்டிய தனதானியங்கள்
வெகுவாகஅளித்து விழுந்துபணிந்துஎழுந்துபயபக்தி
யுடன்தெண்டனிட்டுவிடைபெற்றுகொண்டுசென்றன்

அரசன் பிரேமநிதிதாசருக்கு வெகுதனதானிய
வஸ்துக்களையளித்துப் போயினபின்பு அந்தப்பிரேம
நிதிதாசர் எதாவிதியாய் வெகுகாலம் பகவானைப்பூசி
த்துப் பரமஞ்ஞானசம்பன்னராகி மூன்றுசையையும்
போக்கிப் பாகவதசிகாமணியாகி யிருந்து முடிவில்
ஸ்ரீராமருடைய தேகத்தில்கலந்து நித்தியமுக்தராகி
வைகுந்தமாநகரத்தை யடைந்தார்.

வாழி விருத்தம்.

வாழிப்பிரேமநிதிதாசர்வாழி மாரனைவென்றோன் வாழிஸ்ரீராமரைப்பூசித்து நல்லவழிபடைந்தோன்வாழி
வாழிவெகுபாமரர்களைவழிபடசெய்தோன்வாழி வாழிபரந்தாமன்மெய்யில்கலந்தவள்ளல்வாழியே.

பிரேமநிதிதாசர்சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபரப்பிரமணேநமஃ

ஸ்ரீ ம த்

பகவான் தாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

சகலகலைகளைக்கற்றுச் சாதுசங்கத்திற்சேர்ந்து
மிகவுமுத்தமமானமேகவண்ணன் பதங்கள்போற்றி
இகத்தினிலுதிப்போர்க்கெல்லா மெளிதினிலுணரச்செய்த
பகவான்தாசர்பாத பங்கயமலர்த்தாள்போற்றி.

கதையின் வரலாறு.

திருமகள் கடாக்ஷம் பொருந்திய அஸ்தினுபுர
மெனும் பட்டணத்தை சுவாலேர் பாதுஷா வென்ப
வர் அரசாக்ஷிசெய்துக் கொண்டிருந்தார் அவர்வெகு
நீதிமானுகவும் சத்தியசந்தனுகவு மிருந்தார் அப்
பட்டணத்தில் பகவான் தாசசென்றொரு பரமசாது
விருந்தார் அவரைபந்த அரசன் தன்னிடத்தில் சுபெ
தார்வேலையில் வைத்திருந்தார் அந்தபகவான் தாசர்
ஹரிபக்தியிற் சிறந்வவராகி நற்குணங்களெல்லாந்திர
ண்டோ ருருவாகி யதைப்போலஉருக்கொண்டமகா
னுபாவர் சாதுக்கள்பூசையிலும் ஆசாரத்திலும்சாது
க்கள்சங்கத்திலும் குடும்பத்தினில் விரக்தியும் தேவ
பாஷையிலும் மத்தயிதர பாஷைகளிலும் சிறந்தவரா
கியும் எல்லோருங் கொண்டாடத்தக்கப் பரமவைதீ
கராகியு மிருந்தார் இவருக்குப் பூர்வபுண்ணிய பலத்
தினல் கணக்கிட்டுச்சொல்ல முடியாத திரவியமிருந்
தன திரவியத்தை உபகாரமாக அனேகர்களுக்குகொ
டுத்து வெகுதருமவானென்ற பேரெங்கும் பிரசித்தி
யடையும்படி கிருஷ்ணார்ப்பணஞ்செய்து சகலகர்மங்
களையும் நிறவேத்திக் கொண்டிருந்தார் இவரிப்படிக்
கிருக்கிறபோது பிருந்தாவன க்ஷேத்திரத்தினில் க்
ஞானபக்தி வைராக்கியத்திற்சிறந்த விட்டலா சாரிய
ரென்றொரு பரமசாது விருந்தார் அந்தசாதுவானவர்
அப்பிருந்தாவன க்ஷேத்திரத்தினிலிருக்குஞ் ஜெனங்
கள தன்னைப் பலவாறு நிந்திக்க அதுகளைக் கிருஷ்
ணார்ப்பணஞ்செய்து கிஞ்சித்தேனுஞ் சலியாமல் பய்
முராமனு மெத்த வைராக்கியசீலராகி அனேக ஜென
ங்களை பக்திமார்க்கத்தினி வீடுபடும்படியாகச் செய்
தும் பின்னுமனேகர்களை நல்ல நீதிமார்க்கத்தி வீடு
படும்படிறாகச் செய்தும் பின்னுமனேகர்களை நல்ல
நீதிமார்க்கத்தினில் நிபுணராக்கியும் சிஷர்களாகவுஞ்
செய்துக்கொண்டு வெகுசந்துஷ்டராகி யிருந்தார்.

இப்படிப்பட்டப் பரமவைதீக நிஷ்டானு சார
ராகிய இந்த விட்டலாசாரியரது குணமகுத்துவங்க
ளைப் பகவான்தாசர் சிலரால் மேழ்விப்பட்டு அந்த
விட்டலாசாரியரைத் தனக்குக் குருவாகச் செய்துக்
கொள்ள வெண்ணி ஒருநாள் அந்தப் பகவான்தாசர்
அஸ்தினுபுரத்தை விடுத்து நடந்துச்சிலநாளில் பிருந்
தாவனத்தைச் சேர்ந்து விட்டலாசாரியர் திருவடிக
ளில் சரணுகதியடைந்து தனக்குண்டாகிய திரவியங்
கள் தேகம் பிராணன் இம்மூன்றையும் அவர்திருவடி
களுக் காதீனஞ்செய்து மூக்காலும் வலம்புரிந்து அஞ்
சலியஸ்தராகி ஒதுங்கின்று ஓசுவாமி பரமகுருநாத
ரே பரப்பிரம்மக்ஞான போதரே இடைவிடாமற் பா
ராயணஞ் செய்யுப் தேவபாஷை வேதரேசகலரையும்
குளிர்ச்சியாக பார்க்கும் நவநீதரே யாதொன்று மறி
யாத பாமரனுகிய ஏழையின்மீது கிருபாநோக்கம்
வைத்துத் தங்கள் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ளக்
கருணைசெய்யும் ஒப்பில்லாத யோகபுருடரே என்று
புகழும் பகவான் தாசர்மீது விட்டலாசாரியர்கருணை
மழைபெய்து மனேபாகத்தை யுணர்ந்து சுபத்தைத்
தரும்படியான ஸ்ரீராமதாரக மந்திரத்தைஉபதேசஞ்
செய்வித்தார் அம்மந்திரத்தை யந்தப்பகவான் தாசர்
பெத்தப் பிரிறமாக உணர்ந்துப் புனிதனுயிடுன னெ
ன்றும் பரமானந்தத் தாண்டவஞ் செய்துத் தன்னை
மறந்து தலைவனிற்கலந்து உடனேதெளிந்து ஆசா

திருவடிகளுக்கு வந்தனந்தந்து விடைபெற்றுக் கொ
ண்டு நடந்து அஸ்தினுபுரத்தை யடைந்துத் தன்வீட்
டைச்சேர்ந்து தன்க்குப் பரமாசாஞகிய விட்டலாசா
ரியர் உபதேசித்த ஸ்ரீராமதாரக மந்திரத்தையுச்சரித்
துக்கொண்டு ஆசானே பரமதெய்வமென்றும் அவர்
திருநாமமே மோக்ஷ சாம்பிராச்சியத்திற்கு எல்லைநில
மென்றுப் அவருடைய சேவையே ஸ்ரீஹரியின் சே
வையென்றும் அவருடைய திருவடித் தாமரைகளைந்
துதிசெய்வதே ஜென்மசாபலிய மென்றும் அவரைப்
பூசிப்பதே மானிடதேக மெடுத்ததற்குப் பலனென்
றும் அவருக்கர்ப்பணஞ் செய்தப் பிரசாதத்தை ஸ்வீ
கரிப்பதே தெவார்மிர்தமென்றுங் கருதிச் சதாகால
மும் இடைவிடாமல் ஆசானையே துதிசெய்துக் கொ
ண்டிருந்தார்.

இவ்வண்ணம்அந்தபபுகவான்தாசர்தனக்குஅன்
னைதந்தை தமயன்பந்து முதலானவர்களும்ஆசானெ
ன்றே திடவைராக்கிய சிலராகிக் கருதிக்கொண்டு
ராஜகாரியங்களில் அணுவளவேனும் பிசகாமல்நடந்
தும் பக்தர்களைப் பூசிததுச் சாதுசங்கத்தினிலீடுபட்
டும் எந்த அபசாரமும் நேரிடாமல் ஆசானையேதெய்
வமென்று எண்ணிக்காலத்தைக் கடத்திக்கொண்டும்
பிருந்தாவன க்ஷேத்திரத்தினிலிருந்துயாரேனும்வரு
வார்களேயாகில் அவர்களைக் சந்தேகமின்றிப்பிரியத்
துடன் ஆசாரிய சொரூபரென்றே கருதி அவர்களுச்
குத் தக்கபடி இணங்கிவணங்கி பூசித்து உபசரிப்பார்
அன்றியும் ஸ்னன அநுஷ்டானங்கள் முடித்துஏகாந்
தமாகவிருந்து சத்குருநாதரை தியானிம்பார் யோ
டச உபசாரங்களால் தன்மனதிலேயே உபசரிப்பாக்
சதாகாலமுங் குருநாதருடைய சேவை செய்யவேணு
மென்று மனதில்நினைப்பார் எப்போது பரமகுருநா
தருடைய தெரிசனம் நமக்குக் கிடைக்குமென்று மர
வாமல் நினைந்துருகிக் கொண்டிருப்பார் தான்வசிக்
கும் க்ஷேத்திரமே குருநாதரென்றும்குருவேதனக்கு
தெய்வமென்றும் குருவே தீர்த்தமென்றும் குருவே
தன சொந்த திரவியமென்றும் குருவையன்றி மைத்
த சாதனங்களெல்லாம் வீணென்றும் குறிப்புடனிரு
க்கத் தகுமென்றும் தைலதாராவிச் சின்னமாக சத்
குருநாதர் சேவைசெய்துக் கொண்டிருப்பார் இவரு
டையபக்தி யிப்படிக்கிருக்க இவர்மனைவியின் பக்தி
யெப்படியோ யென்றால் அம்புண்ணியவதி எப்போ
தும் தன்கணவனைப் போஷிப்பதிலும் அவருக்குத்
தொண்டுபுரிவதிலும் அவர்கண்களுக்கு ரமிக்கும்படி
...ப்பதிலும் பொருமையிலும் கலவி செய்வதிலுக்
...ரியை யொற்ற மதியினுலும் அவரை இணங்கி
வணங்கி அவருக்கின்பமுண்டாகும்படி நடப்பதன்றி
யும் காமசிந்தனையின்றிப் பிரியத்துடன் தர்மசிந்தனை
யதிகரித்து சிலருக்கு அன்னவஸ்திரங்களும்சிலருக்கு
திரவியங்களும்சிலருக்குதானியங்களும்சிலருக்கு பூமி
களும்சிலருக்குப்பசுக்களும்சிலருக்கு ஆபரணங்களும்
இந்தப்படிஎவரெவர்கள் றெதுவெதுகேழ்க்கின்றார்க
ளோஅந்தப்படி அதுவதுக்களைகொடுத்தும்சிலருக்கு
கடன்பாதைகளை தீர்த்தும்எங்கும்பிரசித்தியானகீர்த்
தியைப் பெற்று உத்தமமாதென்றுயாவரும்போற்றி
யேத்த நற்குணங்கள் மிகுத்துக் கற்பினிற் சிறந்தவ
ளாகி யிருந்தனள் இங்கிப்படிக்கிருக்க பிருந்தாவன
க்ஷேத்திரத்தினிலிருக்கும் விட்டலாசாரியர்சன்னிதா
னத்தில் பகவர்ன்தாசருடைய நற்குணங்களும அவர்
செய்யுங் குருபக்தி விசேஷங்களையும்இவர்மனைவியின்
குணவிசேஷங்களையுஞ் சிலர்சொல்ல விட்டலதாசாரி
யர்கேட்டு வெகு பகவான் தாசர்மீதும் அவர்மனைவி
யின்மீதும் மெத்த சந்துஷ்டராகி யானும் அப்பக
வான்தாசரைச் சீக்கிரகாலததிலேயே பார்க்கிறேன்
அன்றியும் அவர் மனோபாகம் யெப்படி யிருக்கின்ற
தோ அதையும்ரூபில் கண்டறியவேணு மென்றுக்
கருதி அந்த விட்டலாசாரியர் உடனே புறப்பட்டு
அஸ்தினுபுரத்தை யடைந்து பகவான் தாசரிருக்குமி
டத்தை நாடிவருகையில் சிலர் சென்று பகவான்தாச
ரைக்கண்டு பணிந்து ஓபரமசாதுவே தங்கள் பரம
குருநாதராகிய விட்டலாசாரியர் தங்களைக் காணவே
ண்டி யிதோசமீபித்து வந்துக்கொண் டிருக்கின்று
ரெனச் சொல்லக்கேட்டு கணக்கிட்டுச் சொல்லவறி
தாகிய நற்குணத்தையுடைய பகவான்தாசர் பரமா
னத்த தாண்டவமாடித் தன்னைமறந்து உடனேதெளி
ந்து தேகபுளகமாகி மயிர்க்குச்சிட்டு என்னுடையபர
மாசாரியருக்கு நானென்ன காணிக்கைவைத்து அவ
ருடைய திருவடிகளில் விழுந்து பணிவேன் எனக்
கொன்றுந் தோன்றவில்லையே என்று யோசித்துக்
கொண்டே தன்மனையாளைக்கண்டு பரமகுருநாதன்
வரவைச் சொல்லிக்கொண்டிருக்க அந்தப் பிரியமா
கிய மனையாள் தன்கணவனை வணங்கிச் சொல்லத்
தொடங்கினுள்.

கெளும் யெனதுப்பிரியமாகிய பிராணநாயகரே
தேவரீர் ஆதியிலெதானே பரமாசாரியர் திருவடிக
ளில் பிராணன் தேகம் திரவியம் இம்மூன்றையும் ஆ
தீனஞ்செய் திருக்கின்றீறன்றோ அப்போதே நாமவ
ருக்குத் தொண்டர்களென்று சொல்லத்தகும் ஆகை
யால் அவருடையபொருளை அவருக்கேயவசியமாகக்
கொடுக்கவேண்டும்அதற்குமேல்வேறொருயோசனையு

மெனக்குண்டாக வில்லையென்று சொல்லக் கேட்டு அந்தபகவான் தாசர் மெத்த சந்தோஷித்துத் தனுமணாதிபொருள்களை யவருக்கே யளிக்கவேணுமென்று வெகுபிரியத்துடனிருக்கிறபோது சிலர்சென்றுவிட்டலாசாரியரைக் கண்டுபணிந்து பகவான் தாசரும் அவர்மனைவியும் பேசிக்கொண்டு கர்வசொத்துகளையுந் தங்களாதீனஞ் செய்வதற்கு மெத்தப்பிரியங்கொண்டு தங்கள்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்களென்று சொல்லக்கேட்டுஅந்தவிட்டலாசாரியர் திரும்பிப் பிருந்தாவனத்தை யடைந்து இந்தச் சீஷனைப்போல யிக்கலியிலிப் பூமண்டலமெங்குந்தேடியபோதிலும் நமக்ககப்படுவதுமெத்தகடினமாகும் அன்றியும் நாமவர் வீட்டிற்குச் சென்றாலோ சகல சொத்துக்களையும் நமக்களித்துநிற்க நிழலில்லாமல் வெளிப்படுவார்கள்- அப்படிக்கிநாம் அவர்களைத் தெருவில்விடுத்து அவர்கள் சொத்துகளனைத்தையும்பெற்றுக்கொள்வது சரியல்லவென்றும் அவர்களெப்போது சகலசொத்துகளும் ஆசாரியாதீனமாகுமென்று கருதி திடஞ்செய்துக் கொண்டார்களோ அப்படிப்பட்ட மனதை நாம் ஆதீனஞ்செய்துக்கொண்டு அவர்களை மோக்ஷவீட்டை யடையும்படிக்கிச்செய்வதுந் தருமசாஸ்திர விதியாகுமென்று தனக்குதானே யோசித்துக் கொண்டே தன்வீட்டைச் சேர்ந்திருந்தார் இவரிங்கிப்படியிருக்க அங்கே பகவான் தாசர் தன்பரமாசாரியர் திரும்பிப் பிருந்தா வனத்திற்கே போயினாரென்று சிலர் சொல்லக்கேட்டுத் தொண்டனாகுமென்னைப் பாராமல் அந்தப் பரமாசாரியர் இவ்வளவு சமீபத்தினில்வந்து மருபடியுந் திரும்பிப் பிருந்தாவனத்திற்குப் போகத் தகாதென்று சொல்லி மெத்த சங்கடமடைந்துக் கொண்டிருக்கும் போது அவருடைய மனைபாள்வந்து கணவனைப் பணிந்து ஓ சுவாமி தாங்களிப்படி மனக்கவலைப்பட வேண்டிய காரணம் யேதுக்கு ஆதியில் யெவ்வளவு பிரியத்துடன் சகலசொத்துக்களையும்ஆசாரியார்ப்பணஞ்செய்தோமோ அதுபோல இப்போதுமதிகப் பிரியத்துடன் சகல சொத்துக்களையும் யெடுத்துக் கொண்டு போய் ஆசாரியர் திருவடிகளுக்குக் காணிக்கையாக வைத்து வணங்கினால் போதும் அப்படிச் செய்வதைவிடுத்துப் பலவாறு மனசங்கடப்பட்டுக் கொண்டிருப்பதனால் யாதொரு பலனுமில்லை யென்று சொல்லக் கேட்டு அந்தப்பகவான்' தாசர் அதிகப்பிரியத்துடன் அந்தகாலத்தினில் மேலாகிய ரத்தினங்கள் சம்பந்துக்கள் முதலான யாவத்துமான பொருள்களையுமெடுத்துக்கொண்டு தன்மனையாளுடன் புறப்பட்டுப்பிருந்தாவனத்தை யடைந்துப் பரமாசாரியரைச் கண்டு அவர் திருவடிகளுக்குக் காணிக்கையாக சகல சொத்துக்களையும் வைத்துப் பகவான்தாசரும் அவர்மனையாளும் விழுந்து பணிந்து எழுந்துகுருநாதன் மனங்களிக்கும்படித் தொண்டுகள் புரிந்துக் கொண்டும் மேலும் தங்களுக்குண்டாகிய மானியங்களையும் ராஜயதிகாரத்தையும் அவருக்கே யர்ப்பணஞ் செய்துவிட்டு ஆசான்சொல்லும் பணிவிடைகளைச் செய்துக்கொண்டு அவரளிக்கும் பிரசாதத்தைப்புசித்து வெகுசந்துஷ்டர்களாகத் தங்கள்காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறபோது நாகரியா கிராமத்தினிலிவர் தந்தை' மாதவதாசரென்பவர் மெத்த விருத்தராகியும விஷ்ணுபக்தியிற் சிறந்து வியாதியினால் பீடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றாரென்று கேழ்விப்பட்டு குருநாதரிடம் விடை பெற்றுக்கொண்டு பிருந்தாவன க்ஷேத்திரத்தைவிடுத்துத் தன்னுடையமனையாளுடன் நடந்து நாகரியா கிராமத்தை யடுத்துத் தன்தந்தையின் சிரமதிசையைக்கண்டு விசாரிக்க அவருக்குப் பேசுவதற்குஞ் சக்தியின்றிப் பெருத்தநோயுடனிருக்க இனியிவரிங்கிருந்தால் சீக்கிரகாலத்திலே தானே தேகவியோகமடைவார் பிருந்தாவன க்ஷேத்திரத்திற்குக் கொண்டுபோனால் இந்தவியாதி இவருக்குசௌஸ்தமாகி இன்னுஞ்சிலகாலம் ஜீவத்துடனிருப்பாரென்றெண்ணிச் சிவிகையின்மீது அவரை எத்திக்கொண்டு சொல்லுகையில் அந்த மாதவதாசருக்குப் பிரக்ஞையுண்டாகி பகவந்நாம சங்கீர்த்தனைகளைப்பாடிக்கொண்டே கண்களைத்திறந்து புதல்வனைக்கண்டு அப்பா புத்திரசிகாமணியே இத்தனை வேகமாக என்னையெங்குகொண்டு போகின்றாயென்றுகேழ்க்க அதற்குப் புத்திரன் தந்தையை நோக்கி ஓஎந்தையே தேவரீருடைய தேகம் வியாதியினால் மெத்தவும் மெலிந்து ஆபத்தைத் தருவதா யிருப்பதனாலே மதுராநகரத்திற்குத் தேவரீரைக் கொண்டுபோய் அங்குமெத்த வல்லவராகிய பண்டிதருக்குக் காட்டித் தக்க அவிழ்தங்களைக் கொடுத்து சௌஸ்தப்படுத்தும் பொருட்டுத்தங்களைச் சிவிகையின் மீதேத்திக்கொண்டு போகிறேனென்றப் புதல்வன் வசனத்தைக்கேட்டுஅந்தமாதவதாசர் புத்திரனைநோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

கேளுமப்பா மகனே அழகானமுகனே இந்தத் தேகமோ ஒன்பதுவாசலாகிய வீடு இதனிடத்தினிலுண்டாகும் துர்க்கந்தங்க ளனேகமுண்டுஅதென்னவெனில் இத்திரேகத்தில் வேர்வையுண்டாகில்அதினால் நாற்றமும் வாயிலோ அழுக்கு பற்களில்பாசை மூக்கினில்சளி நேத்திரங்களிற்பீளை கக்கத்தினில் துர்வாசனை வயிற்றினில் கணக்குமிதமில்லாத புழுக்கள்

நிறைந்தமலம் அதற்கிடையில் மூத்திரம் தொடுவதற்கும் சகிக்காதசீழும் உதிரமும் மாங்கிசமும் நரம்புகளும் தோலுங்கூடிய துர்நாற்றங்களுக்கிடமாகிய இக்கசயத்தை மதுராநகரத்திற்குக் கொண்டுபோய் பண்டிதருக்குக்காட்டி அவிழ்தங்கள் கொடுத்து சொஸ்தப்படுத்த வெண்ணங்கொண்டு என்னைச்சிவிகையின் மீதேற்றிக்கொண்டு போகிறது நீதியல்ல எனெனில் என்னுடையகாயம் இப்பவோ எப்பவோ விழுந்துவிடப் போகின்றது இனி நீ எத்தனைவித அவிழ்தங்களைக் கொடுக்கினும் ஜீவன் பிறிந்துபோகுமே யல்லாமல் இனியா னுயிருடனிருப்பது பொய்யே இப்படிப்பட்ட ஹேயமாகிய காயத்தைவிட்டு ஆத்துமா பிரிந்துபோயினல் இத்தேகத்தை மகாக்ஷேத்திரமாகிய மதுராநகரத்தினில் புதைப்பது மகத்தாகிய் அபசாரம்நேரும் அன்றியும் மூத்திரத்தைப் பிடித்துக்கொண்டுபோய் கெங்கையில் விடுத்தது போலாகும் ஆகையால் சிவிகையைத்திருப்பிகிராமத்திற்குப்போகச்செய்யும் அவ்விடம்சேர்ந்து நிர்மலமனதுடன் ஸ்ரீஹரியை தியானித்துக் கொண்டே காயத்தை விடுத்தால் பகவானைக்கண்டு சேவிக்கும்படியாகும்மேலும் அன்னியாயமா யிந்தப்பிராணன் எமனிடத்திலகப்படாவண்ணம் மதுரைக்கு நாயகனுகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையான் அவசியமாகக் கண்டு சேவிக்கின்றேன் என்றுசொல்லிய தந்தையின் வசனங்களைக் கேட்டு அந்தப்பகவான் தாசர் சிவிகையைத்திருப்பி, கொண்டு நகரியா கிராமத்தையடைந்து தந்தையை சிவிகையில்நின்றும் இரக்கி வீட்டிற்குள்ளேகொண்டுபோய் கிடத்தின மாத்திரத்தில் அந்த மாதவதாசர் ஹரிஹரீயென்று சொல்லிக் கொண்டே பிராணனை விடுத்தார் அதைக்கண்டு அந்தப்பகவான் தாசர் தந்தைக்கு நடத்தவேண்டிய கர்மக்கிரியைகளிற் சிறிதேனுங் குறைவின்றி நடத்தி அக்கிராமத்தை விடுத்து மதுராநகரத்தைச் சேர்ந்து குருநாதரை இடைவிடாமல் துதிசெய்துக் கொண்டிருக்க அங்குள்ள பகவத்பக்தர்கள் பகவான் தாசருடன் கூடிக்கொண்டு அவரைநோக்கி ஓ பகவான்தாசரே யுமது தந்தையாகிய மாதவதாசரை மங்கள க்ஷேத்திரமாகிய பிருந்தாவனத்தினில் ஸ்ரீஹரி சந்நிதானத்தினில் கண்டோம் அங்கென்ன செய்துக்கொண் டிருந்தாரெனில்பகவந்நாமசங்கீர்த்தனங்களைப் பாடியாடி தன்னை மரந்திருந்தாரென யாவருங்கேட்டு மிதமற்ற ஆச்சரியமடைந்தார்கள் பகவான்தாசரும் தன்தந்தையின் மகுத்துவத்தைக் கேட்டுப் பிரமானந்தமடைந்து அந்த மதுராநகரத்திலேயே பூர்ண நிஷ்டையினிலிருந்து தன்னை மறந்துத் தலைவனிற்கலந்து நித்தியமுக்தி ஸ்தானமாகும் வைகுந்தமா நகரத்தினில் நித்திய சூரிகளுடன் கூடி திருவனந்தாழ்வான்மீது சயனித்து அஷ்டலட்சுமிகள் தொண்டுசெய்ய திருக்கண் ணேலக்கமாகவிருக்கும் வைகுந்தநாதன் சேவையினல் ஆனந்தப்பரவச மடைந்துக் கொண்டிருந்தன.

வாழி விருத்தம்.

இகத்தில்நற்குண்மெல்லாந் திரண்டோரெழிலுருவானேன்வாழி
மிகப்பொருள்கள்யாவத்துமாசானுக்கு மேவியளித்தோன்வாழி
தகப்பன்சரமதிசையறிந்துத்தான் சென்றுக்கர்மங்கள்முடித்தோன்வாழி
பகவான்தாசர்பங்கயபொற்பாத மலர்களென்றும்வாழிவாழியே.

பகவான்தாசர்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபரப்பிரமணேநம:

ஸ்ரீ மத்

சனாதன தாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

அனாதைகள்நாதனான ஸ்ரீஹரிநாமம்நாளுஞ்
சுனாதமாய்ப்பாடியாடி சொக்கிமெய்ப்பதத்தைவேண்டி
முனாட்செய்தபுண்ணியத்தால் முகுந்தன்றன்பதத்தைப்பெற்ற
சனாதன தாசர்பாத சரண்புகுந்துய்குவோமே.

கதையின் வரலாறு.

ஸ்ரீதாமரையாள் கடாக்ஷம் பொருந்திய பங்காளதேசத்திற்குப் பிரபுவாகியும் சங்கீதத்திலும் விஷயானுபவங்களிலும் போக்கியபோக வஸ்துக்களிலும் பிரியமில்லாமல் சகலத்திலும் விரக்தியும் பகவத்விஷயத்தில ரக்தியுங்கொண்டு கிருஷ்ணபகவா னிடத்தில் உபாசனை செய்துக்கொண்டு அரிதாகிய நிஷ்டையினால் பக்திசெய்துத் தொண்டுகள்புரிந்தும், பகவத்குணானுபவமாகிய சங்கீர்த்தனைகளைப் பாடியும் வெகு திடச்சித்தராகி யிருந்தார் இவருக்குத் தம்பிரூபாவென்று பேர்கொண்டவர் வெகுயிஷ்டப் பிரியராகியும் இருந்தார் ஒருவரையொருவர் விட்டுப்பிரியாமல் மெத்தநேசமாக இருவரும் சிநேகிதர்களைப்போலக் கபடமின்றி எக்காலத்திலும் விரோதமென்ப தில்லாமல் வெகு சனுவாகயிருக்க இதில் ரூபாவென்பவர் ராதையின் பூஜையில் வெகுப்பிரியங் கொண்டுநடத்தி ஆயாசமின்றி சமதமாதி குணங்கள்மிகுத்து இருவருங்கூடிக்கொண்டு உபாசனைசெய்துக்கொண்டிருந்தார்கள் அதெப்படியெனில் காந்தமானது இரும்பைத் தின்னிடஞ் சேர்த்துக்கொள்ளுவது போல இருவருடையமனமும் ஒன்றுபட்டுக் கலக்கச்செய்து விஷயாந்திர அணுலளவேனும் வாஞ்சையின்றி வெகுதிடச்சித்தத்துடன் பக்திசெய்வதினாலே அவர்களிருவருக்கும் உபாசனமூர்த்தியாகும் சாக்ஷாத் கிருஷ்ணபரமாத்மாவும் ராதாதேவியும் பிரசன்னர்களாகி தெரிசனந்தர அவர்கள் சேவித்துப் பரமானந்தப் பரவசராகி தனகனக வஸ்துவாகனாதி சம்பத்துக்கள் முதலானதுகளும் அவர்களுக்கு விஷத்திற்காகிலும் கொடியதாகக் காணப்படச் சகலவாஞ்சைகளும்பற்றற்று சகல க்ஷேத்திரங்களையும் சேவிக்க வேணுமென்ற ஆசையதிகரித்து அவர்களிருவரும் புறப்பட்டு திவ்ய க்ஷேத்திரங்களை சேவித்துக் கொண்டேவந்து பிருந்தாவனத்தை யடைந்து அங்கு ஜாகைசெய்துக் கொண்டு அவர்களிருவரும் வெகுவாகப் பகவத்குணானுபவங்களைப் பெரியோர்கள் சொல்லக்கேட்டுப் ப

மானந்த மடைந்திருப்பார்கள் அன்றியும்உபயத்திராளுடைய மனமும் ஒருமித்து வேஷமின்றி விகல்பமில்லாமலும் ஒருக்கால் தங்களுக்குந் தெரியாமல் யேதோகுற்றம் நேர்ந்தபோதிலும் அதுகளைக் கவனிக்காமல் சமரசப்படுத்திக் கொள்ளுவார்கள் இந்தப்படி யிவர்களிருவரும் நகமுஞ்சதையைப் போலவும் பாலும் நீரைப்போலவும் பாக்குனுள் சுவையைப்போலவும் கரும்பிற்குள் ருசியைப்போலவும் புஷ்பத்தினில் மணம்போலவும் ஒருவரைவிட் டொருவர் பிரியாமலிருந்து விரோதங்களெண்ணாமல் சமபாவத்துடன் ஒருவரைவிட்டொருவர் வெவ்வேராகி அவர்களந்தப் பிருந்தாவன க்ஷேத்திரத்தினில் வாசஞ்செய்துக்கொண் டிருக்கிறபோது ஜேசிங்களெனும் அரசன் யாத்திரை செய்துக்கொண்டே வந்து பிருந்தாவன க்ஷேத்திரத்தை யடைந்து சிலநாளங்கு வாசஞ்செய்துக் கொண்டிருந்து தன் பட்டணத்திற்குப் போகவெண்ணி ரதகஜ துரக பதாதிகளுடன் புறப்பட்டு யமுனாநதிக் கரையைச் சேர்ந்து அந்தயமுனாநதி இருகரையும் புரண்டு ஜலப்பிரவாகமாகி யோடுவதால் அந்நதியினி லிரங்கிப் போவதற்குக் கூடாமையால் படவுகள்மீது தன்சேனைகளை எத்திக்கொண்டு தானும்யேறி ஓடக்காரனை யெச்சரிக்க அப்போதந்த ஓடக்காரன் ஓடத்தைச் செலுத்துகையில்அப்படவுகள் நதியினில் போகாம லிருப்பதினால் வெகு கஷ்டமடைந்தும் இதற்கென்ன செய்யலா மென்று யோசித்துக் கொண்டிருக்கிறபோது அரசன் ஓடக்காரனைநோக்கி அடா மீகாமனே ஓடங்களேன் இவ்வளவு மெதுவாகச் செல்லுகின்றதென அதற்குஓடக்காரன் அரசனைநோக்கி சொல்லத் தொடங்கினான்.

கேளும் எங்களையாண் டிரட்சிக்கும் வேந்தனே இந்தஓடங்கள் நதியிற் செல்லுவது மெத்தக்கஷ்டமாயிருக்கின்றது எங்களால் கூடியமட்டும் உபாயங்கள் செய்தும் இவ்வோடங்கள்அசைவதுவெகுகடினமாகயிருக்கின்றது இந்தரகசியம் இந்த க்ஷேத்திரத்தினில் நிவாசமாக வீற்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைப் பிரசன்னமாகச் சேவித்துஆனந்தபரவசமடைந்துக்கொண் டிருக்கும் சனாதன தாசரைக் கேட்டால் தெரியவருமென்று சொல்லக்கேட்டு அவ்வரசன்அப்படியே யாகட்டு மென்றுசொல்லி ஓடத்தை விட்டிரங்கி விரைந்து நடந்து சென்றுப் பிருந்தாவனத்தையடைந்து சனாதனதாசரைக்கண்டு பணிந்து ஓசுவாமி நான் ஜேசிங்கெனும் பேர்கொண்ட அரசனாகும்யாத்திரைசெய்யும் பொருட்டு ரதகஜதுரகபதாதி சேனைகள் சூழப்புறப்பட்டு வெகு க்ஷேத்திரங்களை யெல்லாஞ் சேவித்து யாத்திரை செய்துக்கொண்டேவந்து இப்பிருந்தாவன க்ஷேத்திரத்தையடைந்து ஸ்ரீகிருஷ்ணபகவானைச் சேவித்தும் ஆசைதீராத படியால் சிலநாளிங்குவசித்துத் தினந்தோறுஞ் சென்று பகவானைக்கண்டு சேவித்துக் கொண்டிருந்துபட்டணத்தைவிட்டு வெளிப்பட்டுச் சிலவருடங்கள் கடந்துபோயினபடியால் இன்றுதினம் பிரயாணப்பட்டு பட்டணஞ் சேரவெண்ணி சேனைகளுடன்புறப்பட்டுயமுனாநதிக்கரை சேர்ந்து அந்நதியில்ஜலம்பிரவாகமாகப் போவதினால் ஓடத்தின்மீதேறி யாகிலும் போகலாமென்றெண்ணி சேனைகளை யெல்லாம் ஓடத்தினிலேத்தியானும் ஏறிக்கொண்டு ஓடக்காரனை எச்சரித்தேன் அவனும் தன்னால் கூடியமட்டுங் கஷ்டப்பட்டும் பிரயாசைப்பட்டும் அவ்வோடங்கள் இருந்தவிடத்தைவிட்டு அசையாம லிருப்பதைக் கண்டு ஓடக்காரனை நோக்கி இவ்வோடம் இருப்பிடத்தைவிட்டு அசையாம லிருப்பதற்குக் காரணம் யாதென்ன வினவினேன் அதற்குப்பதில் அவன் சொல்லிய தென்னவென்றால் தங்களுக்கு சாக்ஷாத் கிருஷ்ணபகவான் பிரத்தியக்ஷமென்றும் அப்பகவான் தங்களிடம்ரூபில் பேசுகிறா ரென்றும் தங்களைக்கண்டு வணங்கி இம்மர்மத்தைக் கேட்டால் காரணந் தெரியுமென்றும் சொல்லக்கேட்டு யானுமந்தப்படியே தங்களைக்கண்டு சேவித்து ஓடம் அசையாமலிருக்குங் காரணத்தைத் தெரிந்துக் கொண்டுபோக வெண்ணி தேவரீரிடம் வந்து திருவடிகளில் விழுந்துபணிந்தேனெனக்கேட்டு அந்த சனாதனதாசர் மெத்தவுஞ் சந்தோஷித்தராகி ஜேசிங்குராஜனை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

கேளும் ஜேசிங்குமகாராஜனே இந்தப்பிருந்தாவன க்ஷேத்திரத்தினில் உம்முடைய திரவியத்தைக் கிருஷ்ணார்ப்பணஞ் செய்து அத்திரவியத்தைக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கி பெருத்த சந்நிதி யொன்றுகட்டியதில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஸ்தாபனஞ் செய்து கும்பாபிஷேகம் நடத்திப் பிரமோச்சவங் கண்டருளச் செய்வீரேயாகில் உம்முடைய சேனைகளும் நீரும் சுகமாகப் பட்டணம் போய்ச் சேரலாம் இதுபகவானுடைய சங்கல்பமேயன்றி மற்றொருகாரணமுமில்லை ஆகையால் பகவானுடைய வெண்ணத்தின்படி சீக்கிரமாக சந்நிதி கட்டுவதற்குப் பிரயத்தினஞ் செய்யுமையா வென்றும் மேலும் இன்னொரு விசேஷமுள்ளது அதென்னவெனில் இந்தப் பிருந்தாவன க்ஷேத்திரத்திற்கு எத்தனையோ அரசர்கள்வந்து பகவானை சேவித்து ஆனந்தித்துப் போயினார்கள் அவர்களைக்கொண்டு தனக்கொருசந்நிதி கட்டிவையுங்களென்று சொல்லிப் பகவான் னேமிக்கலாகாதோ

வென்பிரேயாகில் அவர்கள்மனமுங் குணமும் தனமுங் கொடியதா யிருந்தபடியினாலே பகவானுக்குத் திருவுள்ள மில்லாமலிருந்து உத்தமரும் நற்குணமுடையலரும் ஆகியயுமது திரவியமும் நல்லவிஷயத்திலேயும் கஷ்டத்தினாலுஞ் சேகரித் திருப்பதினாலும் அத்திரவியத்தைக் கொண்டு சந்நிதி கட்டும்படி பகவானுக்கேமனமாயிருக்கின்றது ஆகையால்உமதுபாக்கியமே பாக்கியம் என்று புகழக்கேட்டு அந்தஜேசிங்குராஜன் மெத்த சந்தோஷித்து என்னுடைய பாக்கியமேபாக்கியம் எவர்க்குண்டிருந்த சிலாக்கியமென்றுப் பரம சந்தோஷமடைந்து ஒடங்களிலேத்தியசேனைகளை வரவழைத்துக்கொண்டு அங்கிருந்தபடியே சிலசிற்பிகளை வரவழைத்து அப்பிருந்தாவன க்ஷேத்திரத்தினில் தக்கயிடத்தில் விசாலமாகவும் சகலருங் கண்டு ஆச்சரியப்படத் தக்கதாகவும் பெருத்தசந்நிதியொன்றுகட்டி வாகனாதிகள் ரதமுதலானதுகளையும் புதிதாகச் செய்வித்துக் கும்பாபிடேகம் நடத்திக் கிருஷ்ண விக்கிரகத்தைச் சுபலக்கினத்தினில் அச்சந்நிதிக்குள் ஸ்தாபனஞ்செய்து ஆவணிமாதத்தில் கிருஷ்ணஜயந்தி தொடங்கிப் பத்துநாள் பிரமோச்சவம் நடத்திச் சனாதனதாசரிடம் விடைபெற்றுக்கொண்டு அந்த ஜேசிங்குராஜன் தன்பரிவாரங்கள் சூழப்பட்டணத்தை யடைந்துச் சுகமாக இனிது வீற்றிருந்தான் இப்படிக்கிருக்க சகலஜெனங்களும் சனாதனதாசரை மெத்தவுங் கொண்டாடி இவர்பரிசுத்த ஆத்துமாவானபடியினாலேயே பகவானுடைய கிருபையைப்பெற்றாரென்றும் புகழ தேசதேசத்தரசர்களும் இந்த சனாதனதாசரை வேகுவாகப்போற்றி யேத்த பாலக்கிரீடைகளும் ராசக்கிரீடைகளும் பாகவத புராணந்தெரிவிப்பதுபோலச் சனாதனதாசரும் கிருஷ்ணவேஷந் தரித்து பற்பலவித நடனங்கள்செய்தும் மனசந்துஷ்டியுடன் பரமசுகானந்தத்தினில் சொக்கிக் கொண்டிருந்து ஒருநாளினில் தன்னுடைய தம்பியாகிய ரூபானென்பவர் வீட்டிற்குச்சென்றுதம்பியைநோக்க அவரும் அண்ணன் வந்தாரென்றபரமசந்தோஷத்தினால் எதிர்க்கொண்டு சென்று தெண்டனிட் டெழுந்து அழைத்துவந்து தக்க ஆசனத்தின்மீதுஎளப்பண்ணி பற்பலவாறு புகழும்போது அந்தசனாதனதாசர் தம்பியை ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு பல ஆசிகள் கூறி அப்பாதம்பி உன்னுடைய க்ஷேமமென்னஎனக்குத் தெரியப்படச் சொல்லுமென்று வினாவியபோது தம்பியாகிய ரூபாவென்பவர் அண்ணனை நோக்கி எனது பிரியதமையனே யானிந்தக் காட்டினில் தனித்து ஒண்டியாகிப் பிரசாதங் கிடைக்காமல் பாலைப் புசித்துக் காலத்தைப் போக்கிக்கொண் டிருக்கின்றேன் இதுவே அடியேனுடைய க்ஷேமம் அந்தப்பாலொன்றே இப்போதிருக்கின்றது அப்பாலைக் கொடுக்குறேன் புசித்துப் பசியாறுமென்று தன்மனதில் நினைத்தமாத்திரத்தில் இவருபசரணைசெய்வதைராதாதேவிகேட்டு உடனே அருசுவையுடன் கூடியபக்குவமானப் பிரசாதங்களை ஒருகணப்பொழுதினில் பிரியமாகச்செய்து பாத்திரங்களில் நன்றாகப் பரிமாரிட அப்பிரசாதத்தை சனாதனதாசர் புசித்து அதிகருசியுண்டாகியும் அமுர்தத்திற்கு நிகராகியும் பொருந்தியிருப்பதினாலும் அந்தசனாதன தாசர் தம்பியைநோக்கி எனதுயிருக்குயிரான தம்பி தேவபோக்கியப்பிரசாதத்தைப் பிரயாசை யெடுத்துக்கொண்டுசெய்தவர்கள் யாரென்றும் சூசனையாக வினவியதற்கு அந்த ரூபா சொல்லத் தொடங்கினார்.

கேளும் எனதருமைத் தமயனே ஜெகதீசனும் சர்வேசனும் எள்ளுக்கு ளெண்ணெயைப் போலவும் பாலுக்குள் வெண்ணெயைப் யோலவும் எங்கும் நிரைந்திருக்கும் சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்குப் பிரிய பாறியாளாகியராதாதேவி கஷ்டமெடுத்துக்கொண்டு தன்கைபாகமாகச் செய்தப் பிரசாதமாகும் இப்பிரசாதத்தை கோமளமான ரூபத்துடன் அந்தறேவியே பரிமாரின ளெனக்கேட்டு அந்தச்சனாதனதாசர் அப்பாதம்பி இப்படிக்கி அம்மங்கையினால் வேலைகள் செய்யப் பெற்றுக்கொள்ளுவது நமக்கு சரியல்லவென்று மெத்த மனஸ்தாபமடைந்து இப்படிப்பட்டக் கஷ்டத்தைக் கொடுக்கலாமா ஹரிஹரீ இதென்ன கொடுமை அப்பாதம்பி லோகமாதாவாகிய ராதம்பாளுக்கு ஒருசமயம் தொந்திரவுகொடுத்தால் அது மற்றொருசமயத்தில் நாம் செய்யும்பக்தி யெல்லாம் வீணாகும் இதுநன்றல்ல இதை நீநன்றா யோசித்துப் பாருமென்றும் சிலர் ஹரியைப் பக்திசெய்து முக்தியடைய வேணுமென்று மெத்த ஆசைகொண்டு ஆசனத்தின்மீதிருந்து சித்தசஞ்சல மடையா வண்ணம் நிர்மலமான மனதுடன் பகவான்திருவடிகளில் மனதைப் பொருந்தும்படி ஹரியைத்துதி செய்துக்கொண்டிருக்கு மவர்களுக்கு பகவான் கடன்காரனாகியிருப்பதுண்மை யாயிருக்க அந்தஹரியி னிடத்திலேயே நாம் பக்திசெய்துக் கொண்டிருக்கின்றோ மென்ற இருமாப்பினால் அவர் கைகளாலேயே கஷ்டத்தைப் பெற்றுக் கொண்டிருந்தால் அந்த ஹரியானவர் ஒரு சமயத்தில் பக்தனைநோக்கி நீசெய்தபக்திக்கும் நான் செய்த தொண்டுக்குஞ் சரியாய்விட்டதென்று முக்தி கொடுப்பதை வஞ்சிப்பார் இதற்கொரு திஷ்டாந்திரமுண்டு அதென்னவெனில் பூர்வத்தில் ஞானதேவர்

நாமதேவர் விடோபா துள்சிதாசர் முதலான இன்
னுஞ் சிலதாசர்கள் ஒருநாள் கோராகும்பாருடைய
கிரகத்திற் கெழுந்தருளி கோராகும்பாரைக் கண்டு
க்ஷேமலாபங்களை விசாரித்துச் சிலநேரம் நல்விஷயங்
களைப் பேசிக்கொண்டே யிருக்கையில் ஞானதேவர்
கோராகும்பாரை நோக்கி ஐயாபரமபாகவதரே தாங்
கள் பாண்டபரிக்ஷைகளிற் றேர்ச்சியடைந்தவ ராகை
யாலே இங்கு வீற்றிருக்கும் எங்களை பரிக்ஷைசெய்து
இதில்யாவர் வெந்தபாண்டம் யாவர் வேகாத பாண்
டம் என்றுசொல்ல வேணுமென்று வேண்டிக்கொ
ள்ள அதற்கந்த கோராகும்பார் யாவரையும் நோக்கி
ஓசுவாமிகளே கேவலமாகியமண்ணை மிதித்துப்பாண்
டங்களைச்செய்து அதுகளைச்சூளையிலிட்டெரித்துஅப்
பாண்டங்களை யெடுத்துப் பரிக்ஷைசெய்யும்படியான
ஏழையேனைப் பரமசாதுக்களான உங்களைப்பரிக்ஷை
செய்ய வல்லவனாவேனோ இது என்னாலாகாத காரிய
மென்று தடுத்தும் ஞானதேவர் சம்மதிக்காமல்உமக்
குத் தெரியாத காரியமுமொன்றுண்டோ என்சொல்
லைத் தட்டாமல் எங்கள்யாவரையும் நீரே அவசியம்
பரிக்ஷை செய்து வெந்த பாண்டம் இன்னா
ரென்றும் வேகாதபாண்டம் இன்னவர்க ளென்
றும் சொல்லுமையா வென்று வினயமாகக் கேட்டுக்
கொள்ள அதற்கந்த கோராகும்பார் இவர்சொல்லை
நாம்தட்டி விடுவமேயாகில் பாகவதாப சாரதோஷம்
சம்பவிக்குமென் றெண்ணி உடனேகுண்டும்பட்டை
யும் மெடுத்துவந்து முதலில் ஞானதேவர் முகவாய்க்
கட்டையில் குண்டைப் படியவைத்து பட்டையினா
லோங்கியவர் சிரத்தின்மீதடித்தார் அவ்வடிக்கி அந்த
ஞானதேவர் யாதொரு கஷ்டமுமடையாமல் பகவா
னைத் தியானித்துக்கொண்டே வெகுசந்துஷ்ட ராகி
யிருந்தார் இந்தப்படியேயந்த கோராகும்பார் அங்கு
வந்திருந்த ஒவ்வொருவரையும்பரிக்ஷைசெய்துக்கொ
ண்டே வருகையில் அவர்களெல்லாம் ஞானதேவரை
ப்போல பகவத்தியானஞ் செய்துக்கொண்டே சந்
துஷ்டர்களாக விருந்தார்கள் முடிவில் அந்தகோரா
கும்பார் நாமதேவர் சமீபத்தினில்வந்து பரிக்ஷை
செய்யத் தொடங்கியபோது அந்தநாமதேவர் அங்கி
ருக்கும் சாதுக்களைநோக்கி சொல்லத்தொடங்கினர்.

கேளுங்கள் பரமசாதுக்களே சாக்ஷாத் பாண்டு
ரங்கநாதனுக்குத் தினந்தோறும் யான் அன்னமூட்டி
யும் அப்பாண்டுரங்கன் எனக்கன்னமூட்டியும் ஒருவ
ருக்கொருவர் வெகுப்பிரியமாக வார்த்தைக ளாடிக்
கொண்டும் அனவரதமும் அவருக்கே தொண்டுசெய்
துக் கொண்டே யிருப்பதும் உங்கள் யாவருக்குந்
தெரிந்தவிஷயமே யல்லவா இப்படிப்பட்ட என்னை
யும் பரிக்ஷிக்கவேணுமோ வேண்டியதில்லை யென்று
தடுக்க ஞானதேவரதையறிந்து நாமதேவரைநோக்கி
ஓநாமதேவரே இந்த கோராகும்பார் யாவரையும்
வரிசைக்கிரமமாய் பரிக்ஷைசெய்துக் கொண்டே வரு
கையில் உன்னைப்போல யாரேனுந் தடுத்துப்பேசின
வர்களுண்டோ ஒருவருமில்லையே நீர்மாத்திரம் நாம்
பகவானுடன் பேசுகின்றோம் நம்முடன் பகவான்
பேசுகின்றார் என்றகெர்வத்தினாலே பரிக்ஷைசெய்யக்
கூடாதென்று தடைசெய்தாய் அப்படிக்கித் தடை
செய்வது நீதியோ படிகளத்தினில் ஒப்பாரியு முண்
டோ இதென்ன வார்த்தை நீசொல்லுவது சரியல்ல
வென்றும் அன்றியும் உமக்கென்ன பயம் பிரத்யக்ஷ
மாகப் பகவானைக்கண்டு தெரிசித்துக் கொண்டிருக்
கும் நீரேன் எல்லோரைப்போல யிராமல் தடைசொ
ல்லுகின்றீர் இப்படிக்கித்தாங்கள் தடை படுத்தினால்
இங்கிருக்கும் சாதுக்கள் யாவருக்குஞ் சீற்றமுண்டா
வதன்றியும் தாங்கள் மாத்திரந் தானா பகவானைக்
கண்டு பேசுகின்றீர் நாங்களெல்லாம் அந்தபகவானை
கண்டு தெரிசித்து வார்த்தைக ளாடவில்லையாஈதுமக்
குத் தெரியாதா சகலசாஸ்திர சம்பன்னராகிய தாங்
களே இப்படிக்குச்சொன்னால் என்போலொற்றவர்
கள் சொல்லத் தடையுண்டோ அப்படிக்குஉம்மைப்
போல நாங்களெல்லாம் சொல்லாமலுந் தடைபடுத்
தாமலும் இருந்ததற்குக் காரணமென்னவெனில் நா
மெல்லோருங்கூடி ஆதியில் பேசிக்கொண்டபடிநடந்
துக் கொள்ளுவதே தருமமென்றுடன் பட்டோம்
அதையுணராமல் தாங்கள்மாத்திரம் எங்களைப்போல
உடன்படாமல் மறுத்துப்பேசுவது அதருமமன்றோ
வெனச்சிலநீதி வசனங்களை ஞானதேவர் சொல்லக்
கேட்டு அந்தநாமதேவர் தன்னைப் பரிக்ஷை செய்யும்
படி யாவர்முன்னிலையில் உடன்பட்டார் உடனே
கோராகும்பார் அந்த நாமதேவருடைய மூகவாய்க்
கட்டையில் குண்டுக்கல்லைக் கொடுத்துஒருகையினால்
தாங்கிக்கொண்டு மற்றொருகையினால்பட்டையைஓங்
கிச் சிரசின்மீது அடித்தார் அவ்வடிபட்ட மாத்திரத்
தில் அந்தநாமதேவர் தாளமாட்டாமல் அதிகநோயி
னால் ஓவென்றுக் கதறிப்பதறி யழுகிறபோது கோ
ராகும்பார் இப்பாண்ட மொன்றே வேகாதபாண்ட
மெனக் கேட்டந்த நாமதேவர் நாணத்தினால் அவ்வி
டத்தைவிட்டெழுந்து விரைந்தோடிச் சென்றுப் பா
ண்டுரங்கநாதன் திருவடிகளில் வீழ்ந்துக் குய்யோ
முறையோவென் றழுவதைக்கண்டுப் பாண்டுரங்கனு
தன் தனக்கொன்றுந் தெரியாதவரைப் போல அபி
நயித்து அப்பா நாமதேவா யுனக்கென்ன விபத்து
நேர்ந்தது அல்லது யாரேனும் அடித்தார்களா வை

தார்களா சொல்லுமப்பா வென்று வினவிக்கொண்டே அப்பாண்டுரங்கநாதரும் நாமதேவருடன் அழத்தொடங்கினார் இதற்குள் வெகுஜெனங்கள் கூட்டங்கூடி என்னவிசேஷம் என்னஆபத்து நேர்ந்தது என்றும் சிலசாக்ஷாத் பாண்டுரங்கநாதரும் நாமதேவருடன் வெக்கிவெக்கி யழுகின்றாரே என்னசள்ளையோ என்னதொல்லையோ யென்ன ஆபத்துநேர்ந்தபோதிலுந் தீர்க்கவல்லவரான பாண்டுரங்கநாதரிருக்கஇந்த நாமதேவர் அழவேண்டிய காரணமென் னென்பார் சிலர் பகவானுங்கூடவே யழுவதால் நாமதேவருக்கு யேதோ அவஸ்தை நேரிட்டிருக்கலாம்என்பார்சிலர் பகவானும் அழுவதினாலே நாமதேவரை என்னமோ மோசப்படுத்துவதற்கே யாகுமென்றும் இந்தப்படி அவர்கள் மனம்போனபடி பேசிக்கொண் டிருந்தார்கள்,

அப்போது பகவான் நாமதேவரழுகையைமாத்திச் சமாதானப்படுத்தி அப்பா நாமதேவா நீ இப்படிக்கெந்தநாளும் அழயென் கண்ணாரப் பார்த்ததேயில்லையே இன்றையதினம் உன்னையாரென்ன செய்தார்கள் அல்லதுவைதார்கள் அவர்களை யின்னாரென்று பேர்குறித்துச் சொல்லு மப்பாவென்று நவில்வதை நாமதேவர்கேட்டு ஓசுவாமி ஞானதேவா சோபானதேவர் முதலான சிலசாதுக்களுடன்கூடியின்று தினம் கோராகும்பார் வீட்டிற் கெழுந்தருளினோம் அவரும் மெத்த வுபசாரஞ்செய்து தக்க ஆசனங்களளித்து வீற்றிருக்கும்படி வேண்டினார் நாங்களும்அக்கோராகும்பார் இஷ்டப்படி வீற்றிருந்து சிலநேரம் நல்விஷயங்களைப் பேசிக் கொண்டே யிருந்தோம் இதில் ஞானதேவர் கோராகும்பாரை நோக்கி ஓஐயா கோராகும்பாரே தாங்கள் பாண்டபரிக்ஷை செய்வதில் மெத்த வல்லபரானபடியால் இங்கே வீற்றிருக்கும் நாங்களும் பாண் டங்களுக் கிணையானவர்களன்றோ எங்களையும் பரிக்ஷைசெய்துஇன்னவர்கள்வெந்த பாண்டங்க ளென்றும் இன்னவர்கள்வேகாதபாண்டமென்றும் சொல்ல வேணுமென்றுநேமிக்க அன்னேமனப்படியே கோராகும்பாரும் யாவரையும் வரிசைக்கிரமமாய் செய்து வெந்தபாண்டம் என் றுசொல்லிக்கொண்டே என்னிடம்வந்து பரிக்ஷைசெய்யப் பிரயத்தினப் படுவதை யானுணர்ந்து கோராகும்பாரை நோக்கி பகவானேயானாகியும் யானே பகவானாகியுங் கலந்திருக்கும் என்னையும்பரிக்ஷைசெய்யவேணுமோ என் றுசொல்லி பரிக்ஷை செய்வதைத்தடுத்தேன் அப்போது ஞான்தேவர் என்னைநோக்கிச் சிலநீதிவசனங்களைக் கூறக்கேட்டுயானும்பரிக்ஷைசெய்யும்படியுடன்பட்டேன் அப்போதந்தக் கோராகும்பார் என்னைப் பரிக்ஷைசெய்து இதுவே வேகாத பாண்டமென்று சொல்லக்கேட்டுப் பலர்முன்னம் யான் அவமானப்பட்டு நாணமுடன் தங்களிடம்வந்து பணிந்தேன் எனக்கேட்டு அப்பகவானும் நாமதேவா கோராகும்பார் உன்னைப்பரிக்ஷை செய்து வேகாதபாண்ட மென்று சொல்லியது சரியானவார்த்தையே இதற்காக நீ விசனப்படவேண்டிய காரணமில்லையே யென்றுப் பகவான் பகரினதைக் கேட்டு அந்தநாமதேவர் ஓசுவாமி அடியேன் பொருட்டு அந்த குற்றத்தைப்பாராட்டாமலும் இன்னுமிவ்வுலகத்தினில் அனேகமாக அபராதங்கள் செய்திருக்கின்றேன் அவைகளனைத்தையும் க்ஷமித்து அடியேனைகாப்பாற்றுமென்றுஇரு கரங்களையும் சிரசின்மீது குவித்து அஞ்சலி செய்துக்கொண் டிருப்பவனாகியும் அத்தேருவின் சுகுமாரமானரூபத்தை பார்த்துக்கொண்டிருக்கப் அத்தேவியுந் தானுமாக வெகுபிரியத்துட னிங்கிருக்க அவரிடத்தினில் சாக்ஷாத் தேவரீரைவிட்டுக் கணநேரமாயினும் பிரியாமல் உமது குணானுபவங்களாகும் கீர்த்தனைகளைப் பாடிக்கொண் டிருக்கவில்லையா அந்த கோராகும்பாரைப்போலத் தாங்களுமென்னை வேகாதபாண்டமென்று சொல்லியது நீதியோவென்று சொல்லி விசனப்படுகிற நாமதேவரை நோக்கி ஓநாமதேவா நீபாடினதற்கும் நானாடினதற்குஞ் சரியாய்ப் போய்விட்டது யானென்றும் நினக்குபாக்கியில்லையென்று சொல்லி வஞ்சித்து விட்டார் ஆகையினாலே அப்பா தம்பி எப்படிப்பட்ட கஷ்டம்வந்து நமக்கு நேர்ந்தபோதிலும் பகவானிடத்திலும் அவர்தேவிகளிடத்திலும் அவரை யண்டித்தொழுதுக் கொண்டிருக்கும்படியான பாகவதர்களிடத்திலும்எந்தவிதத்தொண்டுகளுஞ் செய்துக்கொள்ள லாகாது மேலுமந்தப் பகவானைக் காமிகளாகி அரிச்சனை புரிந்தாலோ அக்காமாதி விஷயங்களையே கொடுத்து வஞ்சிப்பார் அன்றியும் இப்படிப்பட்ட இச்சையுடையவர்கள்மீது பகவானுக்கு அணுவளவேனும் பிரியமிராது ஆசையெனும் பாசக்கயிற்றினால் கட்டுண்டயோகிகளுந் முனிவர்களும் இவ்வுலகின் கண்ணுள்ள வனங்கள்தோருந் திரிந்து யாதொருபலனையு மடையாமல் துக்கப்படுவார்கள் அவ்வாசையெனும் பாசக்கயிற்றைசுக்ஞானமெனும் வாளைக்கொண்டு வெட்டியெரிந்தால் சுகமடையலாமென்று சுருதிகள் முறையிடுகின்றன சிலர் மோக்ஷமடைய வேணுமென்று மனதிற்கருதி பக்தி செய்வது தாகாத காரியமாகும் அதென்னவெனில் எந்த கோரிக்கையுங் கொள்ளாமல் பகவத்குணானுபவங்களைச் செய்துக்கொண்டிருந்தால் அவர்களுக்கு

முக்திபதவி யளிப்பன் இதுவே வைஷ்ணவனுக்கு லக்ஷணமாகும் மேலும் ஸ்ரீஹரியின்மீது பாரத்தைப் போட்டு யாவத் விஷயங்களிலும் வைராக்கியத்தைச் செலுத்திக்கொண் டிருக்கும் பக்ஷத்தில் பகவான் னமக்கு யெல்லாகாரியங்களையும் தன்னுடைய காரியமாக வெண்ணிநடத்துவார் மேலும் இது கலிகால மாகையால் நமது ஜென்மமிருக்கும் பரியந்தம் மாய்கைக்குட் கட்டுப்படாமல் வெகுஜாக்கிரதையாகயிருக்கவேணுமென்று பற்பல நீதிமொழிகளைப் பகரக் கேட்டு அந்தரூபா மெத்த விசனத்துடன் அண்ணனுக்கு தெண்டனிட்டுச் சொல்லத் தொடங்கினர்.

கேளும் எனதன்பும் பிரியமுள்ள அண்ணாவே அணுவளவேனும் க்ஞானமில்லாத அடியேனுக்குப் பெருத்த உபகாரஞ்செய்து மனதைத்திருத்தி யருள் புரிந்த தேவரீருடைய க்ஞானபக்தி வைராக்கியங்களின் பெருமையை யானென்னவென்று புகழுவேன் என்று பற்பலவாறு புகழ்ந்துக் கொண்டாட அந்த சனாதனதாசர் உடனே தன்தம்பியினிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய கிரகத்தையடைந்திருந்தார் பிறகு அந்தரூபாவென்னுஞ் சாதுவானவர் தனக்கு அண்ணன் உபதேசஞ் செய்துப் போயினது போல அனன்னிய பாவமின்றி எந்த கோரிக்கையுங் கொள்ளாமல் ராதாதேவியினிடம்உபாசனைசெய்துக் கொண்டு மிதமற்றப் பிரியத்தை மனதினில் வசித்து அப்போதே வீணையைக்கையினி லெடுத்துக் கொண்டு மெத்தரசமாக ஸ்ரீகிருஷ்ணலீலைகளைப்பக்தி பூர்வமாகப் பாடிக்கொண்டே ஆனந்த மேலிட்டால் கண்ணீர்ஒழுக யீனசுரத்துடன்மெத்தமோகத்துடன் பரவசமடைகிறபோது அப்பட்டமாகி சொர்ன நிரத்துடன் வெகுசொகுசாகிய காத்திரதேகத்துடன் அப்போதே ராதாதேவி பிரசன்னமாகியதால் அந்தரூபாவானவர்தெரிசித்து எதிசென்றுதீர்க்கமுடன்விழுந்து சேவித்து ஆனந்தமடைந்து எனதன்னையே யான்செய்திருந்த தப்புகளை மன்னித்து அடியேன்மீது கோபங் கொள்ளாம லிருக்கும்படிவேண்டிகிறேன் அதென்ன தப்புகள் யான்செய்தேனென்று வினவும் பக்ஷத்தில் சொல்லுகின்றேன் தயவுசெய்துக் கேழ்க்கவேணும் இன்று எனதண்ணனாகிய சனாதனதாசர் என்னிடம் வந்தபோது தங்களுக்குமெத்தக்கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன் பிரசாதத்தின்பொருட்டு அந்த குற்றத்தைப் பாராட்டாமலும் இன்னு மிவ்வுலகத்தினில் அனேகமாக அபராதங்கள்செய்திருக்கின்றேன் அவைகளனத்தையும் க்ஷமித்து அடியேனைக் காப்பாற்றுமென்று இருகரங்களையுஞ் சிரசின்மீது குவித்து அஞ்சலிசெய்துக் கொண்டிருப்பவனாகியும் அத்தேவியின் சுகுமாரமான ரூபத்தைப் பார்த்துக்கொண்டிருக்க அத்தேவியுந் தானுமாக வெகுபிரியத்துட னிங்கிருக்க அங்கே சனாதனதாசர் தன்வீட்டினில் ஸ்ரீஹரி பூசையைத் தான் செய்துக்கொண்டிருக்க அவரிடத்தினில் சாக்ஷாத் ஸ்ரீஹரியானவர் பிரத்யக்ஷமாகி சேவைதந்து அந்த சனாதனதாசரை நோக்கிச் சொல்லுகின்றார் அதென்னெனில் ஓசனாதனதாசரே எனக்கு மெத்தப் பிரியமான பிராணநாயகி ராதாதேவி என்னைததனியே யொண்டியாக விடுத்து எப்படிபோயினளோ அறியேன் அவளென்னைவிட்டுப் பிறிந்துப் போனது முதல் என்மனம் சஞ்சலமாகி சிதறிக்கொண்டிருக்கின்றது ஆகையால் நீ சீக்கிரமாகச் சென்று அந்த ராதாதேவியைத் தேடிக்கண்டு பிடித்து அழைத்துவந்து என்னிடத்தினில் சேர்த்துவிட்டு மறுகாரியத்தைக் பாருமென்று நேமிக்க அந்தஜனாதன தாசரும் பகவான் னேமனப்படி விரைந்தோடிச்சென்று தன்தம்பிவீட்டை யடைந்துப் பார்க்கையில் அவ்விடத்தினில் தன்தம்பியாகிய ரூபாவானவர்தன்தேகத்தைமறந்து ராதாதேவியின் றிருவடிகளில் மனதைச் சேர்த்து நிஷ்டைசாதித்துங் கொண்டிருந்தபடியால் தன்அண்ணன்வந்ததுதனக்குத்தெரியாமல்உன்மத்தனாவிருந்தமையால் சனாதசனதர்சர் தன் தம்பியிருக்கும் நிஷ்டையையறிந்து நிஷ்டையைக் கலைத்துப்பேசுவதற்கு எந்தஉபாயமுந் தோன்றாமல்அந்தசனாதன தாசர் சொல்லுவதற்கரிய மகிமையுடன் தன்தம்பியின் தேகத்துக்குட்புகுந்து அப்படித் திருப்பியமாத்திரத்தில் உடனே ரூபாவென்பவருக்கு ஜாக்கிரதை யுண்டாகி அண்ணனைக்கண்டு தெண்டனிடுவதற்குச் செல்லுகையில் அண்ணனாகிய சனாதனதாசர் தன் தம்பியாகிய ரூபா வென்பவரை இருகரங்களினாலுஞ் சேர்த்து இருக்கத் தழுவிக் கொண்டு அப்போது தம்பியாகிய ரூபாவை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

கேளும் எனதுயிருக்குயிராகிய தம்பி அபரூபமாகிய ரூபத்தைக் கைக்கொண்டும் நீ ஆனந்தம் பிரமானந்த மெனுமிரண்டு படிகளையுங்கடந்து மூன்றாம் படியாகும் பரமானந்தத்தினில் சஞ்சலமின்றி மக்னனாகி யிருந்தாய் இந்தநிலையை யான் சத்தியமாகக் கண்டதில்லை உத்தமமாகிய நிஷ்டைசாதிக்கும் விதியினைத் தெரிந்து அனுபவிக்கும் சமர்த்தினை யுடைய என்பிரிமான தம்பி உன்னுடைய மகத்துவத்தை யானென்றென்று சொல்லுவேன் என்று இந்தப்படி தன்தம்பியைப் புகழ்ந்துவிட்டு அந்த சனாதனதாசர்

தன்கிரகத்திற்கு எழுந்தருளினார் அங்கு ராதா தேவியும் ஸ்ரீஹரியும்மாக சேவை சாதிக்கக்கண்டு தெரிசித்து விழுந்துபணிந்து எழுந்து பற்பலவாறு புகழ்ந்துச்கொண்டாட ஸ்ரீஹரியும் ராதாதேவியுங் கேட்டு ஆனந்தித்து சனாதனதாசரை வெகுவாக வாழ்த்தி மறைந்துபோயினார்கள் இந்தப்படி பக்தர்களும் ஸ்ரீஹரியும் ராதாதேவியும் வெகுவிதமாகிய சாகசங்களைச் செய்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் ராதா தேவி ஸ்ரீஹரிதன்னை யொண்டியாக விடுத்து எங்கே போபோய்விட்டார் என்று சனாதனதாசருக்குத் தெரிவித்து அப்பாசனாதனதாசரே அந்த ஸ்ரீஹரியின் பிரிவு ஒருகணநேரம் ஒருயுகமாக வெனக்கிருக்கின்றமையால் நீசென்று பகவானைத் தேடிக்கண்டுபிடித்து அழைத்துவரக் கடவாயென்று நேமிக்க அந்தப்படியே சனாதனதாசரும் ராதாதேவியையழைத்துக்கொண்டு ஸ்ரீஹரியின் எண்ணத்தை யுணர்ந்துச் சென்று ராதாகுண்டமெனும் க்ஷேத்திரத்திற்கு இருவரும்வந்தார்கள் அவ்விடத்தினில் ஸ்ரீஹரியானவர் மெத்தக் கேளீவிலாசமாகச் சேர்ந்திருக்க ராதாதேவியும்மெத்தப்பிரியத்துடன் ஸ்ரீஹரியைவிட்டுப் பிரியாமலும் ஸ்ரீஹரிதன்னைத் தனியேவிட்டுப் போகாத வண்ணமுஞ் செய்துக்கொண்டு இனிது வீற்றிருந்தார்கள். உடனே சனாதனதாசர் ஸ்ரீஹரியினிடத்திலும்ராதாதேவியினிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு பிருந்தாவனஞ்சேர்ந்து வெகுகாலம் அந்தசனாதன தாசரும் ரூபாவென்பவரும் தங்களுபாசனை மூர்த்திகளாகிய ஸ்ரீஹரியையும் ராதாதேவியையும் பூசிப்பதுடன் பக்திபூர்வமாக தியானித்துக்கொண்டிருந்துமுடிவில் வைகுந்தமா னகரத்தை யடைந்தார்கள்.

வாழி விருத்தம்.

வானோர்கள்போற்றியேத்தும் வரபக்தன்வாழியே
தானாதிகளிற்சிறந்த தருமவான்வாழியே
மேனாட்செய்தபுண்ணியத்தில் மேவினோன்வாழியே
சனாதனதாசர்பாத பங்கயத்தாள்கள்வாழி.

சனாதனதாசர்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீபரப்பிரமணேநமஃ

ஸ்ரீமத்

மகாஜனன் சரித்திரம்.

துதிவிருத்தம்.

சுகாதிகளல்லாப்போக போக்கியமனத்தைத்தூரி
சகாயமாம்சாதுசச்சனர் சேவையில்பிரியங்கொண்டு
தகாதனவெல்லாம்நீக்கித் தாரகமந்திரமோது
மகாஜனன்பாதம்நாளும் மகிழ்வுடன்போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு.

ஸ்ரீமங்களகராமாகியக் வாலேரென்றுசொல்லப் பட்ட பட்டணத்தில் வாசஞ் செய்பவரும் குடும்பத்தினில் மெத்த ஆவலுடையவரும் குணதோஷங்களெதுவு மில்லாதவரும் சகலசாஸ்திர புராணவல்லவருமாகிய வணிகரொருவரிருந்தார் அவருக்கு மகாஜனனென்றுபெயர் இவர் வியாபாரஞ்செய்து வெகு

திரவியங்களைச் சம்பாதித்துத் தன்மனையாளைப் போஷித்துக் கொண்டிருந்தார் அம்மாதோ இந்த மகாஜனனுக்காகிலும் மெத்த சிலவதியாகிக் கணவனைப் போஷிப்பதிலும் கணவனுக்கு தொண்டு செய்வதிலும் அழகில் லக்ஷுமிக்கு நிகரானவளும் பொருமையில் பூமாதுக்கு நிகரானவளும் கலவியில் வேசியையொற்றவளும் மதியில் மந்திரிக்குநிகரானவளுமாகிக் கணவனுக் கிணங்கி வணங்கி கொண்டிருந்தாள் இப்படிக்கிருக்கு மிவ்விருவர்களுக்கும் அளவிறந்தப்பொருள்கள் முதலானதுகளு மிருந்தும் புத்திரபாக்கியமொன்று குறைவாக யிருந்தமையால் அதையுங் கருதாமல் வெளிக்கு சாதுக்களைப்போல வேடிக்காரர்களாகி கபடசித்தர்களாகி யிருந்தபோதிலும் அந்த வணிகன் அதுகளை அணுவளவேனும் மனதினில்கருதாமல் அவர்களுக்கு மனப்பூர்வமாக தீர்க்கதெண்டனிடுவார் அன்றியும் அந்தவணிகன் பாகவதர்களைப் போல வேஷக்காரர்களாகி வந்தபோதிலும் அவர்களுடைய தோஷங்களை மனதிலெண்ணாமல் உண்மையான சாதுக்களென்றே தீர்மானித்துச்சதாகாலமும் அவர்களுக்கு கைங்கரியஞ் செய்வார் மேலும்வேஷக்கர்ரர்களாகி வைஷ்ணவர்களைப்போல துவாதசபுண்டரங்களும் வனமாலை வனசமாலைகளைக் கண்டத்தினிற் றரித்துக்கொண்டியிருந்தாலும் அந்தமகாஜனன் சேஷசயனனுக்கு தாசர்களென்று கருதியவர்களுக்குத் தொண்டுசெய்துக் கொண்டிருப்பார் அன்றியும் பாகவதர்களுக்கு எத்தனை தோஷங்களிருந்த போதிலும் பாபவகையராக்கள் தன்னையும் அவர்களையுஞ் சேராதென்று மெண்ணுவார் அதெப்படியெனில்கெருடனானவன் சர்ப்பங்களைத் தின்றபோதிலும் ஜெகதீசனுக்கு வாகனமாகியும் தோஷமில்லா தவனாசியுமிருப்பதுபோல பாகவதர்கள் எத்தனை தோஷங்களைச் செய்தபோதிலும் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்துக் கொண்டிருப்பதினாலே நெருப்பு பொரியானது பஞ்சுப்பொதியின்மீது பட்ட மாத்திரத்தினில் அப்பஞ்சு பஸ்பமாகுவதைப் போல பக்திபூர்வமாய் பகவந்நாமத்தைய பாராயணஞ் செய்தால் அடியார்கள் செய்திருக்கும் பாவராசிகளெல்லாம் உருமாய்ந்துப் போகுமென்று நினைத்தும் தொண்டர்கள் கூட்டத்தின்மீது எப்போதும் ஸ்ரீஹரியானவர் தயைபுரிவாரென்றுகருதி அணுவளவேனும் அந்தமகாஜனன் கபடம் வைக்காமல் பாகவதர்களுக்குத் தொண்டு செய்வதிலேயே மனதைப் பொருந்தவைத்துக் கொண்டே மூயன்றிருப்பார் அன்றியும் இந்தமகாஜனன் பாகவதர்களைக் கண்ட மாத்திரந்திலேயே அவர்களது திருவடிகளைப் பிடித்துக்கொண்டு தீர்க்கதெண்டனிடுவார் மேலும் அவர்கள் திருவடித்தாமரைகளை ஜலத்தினாலே விளக்கி அந்தீர்த்தத்தைத் தன்சிரசின்மீது புரோக்ஷித்துக் கொண்டு பிறகு பற்பலவிதங்களாகப்பூசித்து அவர்கள்கோரிய உருசியுள்ளப்பிரசாதங்களை வரிசைக்கிரமமாகப்பரிமாரிக்கொண்டுஅவர்களந்த ஊரினிலிருக்கும் பரியந்தம்என்றால் எத்தனை வருடங்க ளிருக்கினும் வெறுப்பின்றி உபசரித்துக் கொண்டிருப்பார்.

இந்தப்படியந்த மகாஜனன் வெகுநாள்நடத்திக் கொண்டிருக்கையில் ஒருநாள் பாண்டுரங்கன் பைத்தியக் காரனைப்போல வேடந்தரித்து துவாதசபுண்டரங்களும் வனமாலை வனசமாலை தரித்துக்கொண்டு அந்தமகாஜனன் வீட்டையடைந்து அந்தவணிகன் முன்தோன்றினார் அவரைக்கண்டமாத்திரத்தில்அந்த வணிகன் மெத்தப்பிரியத்துடன் அழைத்துகொண்டு போய் மகந்துக்களையுஞ் சாதுக்களையும் பூசிப்பது போல சகலவிதங்களாலும்பூசித்து வெகுப்பிரியமாக உபசரித்துக் கொண்டிருந்தார் இப்படிக்கிந்த மசாஜனன் அந்தப் பைத்தியக்காரனைச் சிலநாள் தன்வீட்டிற்குள் வைத்துப் பூசித்துக்கொண் டிருப்பதைக் கண்டு அவ்வூரார் சிலர்வந்து மகாஜனரைக் கண்டு பணிந்து ஒசுவாமி எவனோ பயித்தியக்காரனை வீட்டிற்குள்வைத்துப் பூசையுடனுபசரித்துக் கொண்டிருக்கின்றீரே இதுஞாயமோ இவனைப்பார்த்தால் திருடனைப்போலக் காணப்படுகின்றான் அன்றியுஞ் சிலநாளில் இவனது நடவடிக்கை வெளியாகும் இவனாலுமது குடும்பத்துக்கு மோசம் வருமென்று யெண்ணுகின்றோம் ஆகையால் இப்பயித்தியக்காரனைப்போல அபிநயிக்குமித்திருடனை இப்போதே வீட்டைவிட்டு வெளியே போகச்சொல்லுமையாவென்று சொல்லும் ஊராரைநோக்கி அந்தமகாஜனன் மெத்த கோபத்துடன் சொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் கிராமவாசிகளே பரமபாகவதர்களும் சாதுக்களும் தொண்டர்களுமானவர்கள் உலகவாசனையை வெறுத்து பக்திவலுவதிகரித்து விளங்கும் இந்தப்புண்ணிய புருடனைப்போலொற்றவர்களெல்லாம் பயித்தியக்காரர்களைப் போலவும் பேய்பிடித்தவர்களைப் போலவுமே யிருப்பார்கள் அப்படிக்கிருந்தபோதிலும் இவருடைய மனோபாகத்தையறியாமல் இப்படிப்பட்ட பெரியோர்கள்மீது பழிவார்த்தைகளைச் சொல்லி நீங்களேன் அபசாரிகளாகி வீணில் கெட்டுப்போகாதீர்கள் உத்தமபுருடர்கள்நீர் பூத்தநெருப்பைப் போலிருப்பார்கள் முன்னம் அம்

பரீஷச் சக்கிரவர்த்தியினிடப் அபசாரப்பட்ட தவசி ரேஷ்டரான தூருவாசமாமுனிவரைப்போல மானங் கெட்டு நாணம்விட்டுப் பலருஞ்சிறிக்க ஓடியோடிச் சகலதேவர்களையு பிரமனையும் சிவனையும் சாக்ஷாத் வைகுந்தவாசரையும் அடுத்துச் சரணுகதி யடைய அவர்கள் யாவரும் எம்மாலும்மை காப்பாற்றுவதற் கு முடியமாட்டா தென்றும் யெர்த சக்கிரவர்த்தியி னிடம் அபசாரப் பட்டாயோ அவரிடஞ்சென்று சர ணுகதி யடைவையேயாகில் அச்சக்கிர வர்த்திக்குத் தயாளம்பிறந்து உம்மைக் காப்பாத்தி ரட்சிப்பாரெ ன்னும் மேலும் பகவானிடத்தில் அபசாரப்பட்டால் பாகவதர்களுடைய புருஷாகார்த்தினல்பகவான்காப் பாத்திரட்சிப்பார் பாகவதர்களிடத்தில் அபசாரப் பட்டால் அப்பாகவதராலேயே அபசாக்ஷமை செய் துக்கொள்ள வேணுமேயன்றி மகாவிஷ்ணுவினலும் அபசாரக்ஷமை செய்வது அரிதாகுமாகையால்ஒகிரா மவாசிகளே வீணிலேன் இவரைதூஷித்து நரகத்துக் காளாகப் போகின்றீர்கள் வேண்டாம் சீக்கிரமிவர் திருவடிகளில் விழுந்து அபசாரக்ஷமை செய்துக்கொ ண்டு மிவர்கூறும் ஆசியைப் பெற்றுக்கொண்டு சுக ஜீவியாய் வாழ்ந்துக் கொண்டிருங்க ளெனக்கேட்டு அக்கிராமவாசிகள் மகாஜனரைப் பார்த்துப் பின்னு ஞ்சொல்லியதாவது ஒசுவாமி தாங்கள் பரமசாதுவெ ன்றும் நற்குணங்களெல்லாந் திரண்டோ ருருவமாகி அவதரித்து எங்களையெல்லாம் காத்திரக்ஷிக்க இவ்வு லகினி லெழுந்தருளிய கருணைக்கடலே தங்களுக்குத் தெரியா தொன்றுமில்லை ஆகிலுங் கபடமின்றி நடிப் பவரானதாலே கபடவேடம்பூண்டுஇந்தப்பயித்தியக் காரன் தங்களைவஞ்சித்து மோசஞ்செய்ய வந்தவனே யென்று யெங்கள் புத்தியில் தோன்றினபடியால் தங் களுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாவண்ணம் சொ ல்லுவதற்கு வந்தோமேயன்றிக் கெடுதி விளைவிக்கும் பொருட்டு வந்தவர்க ளல்லவென்றுசொல்லக்கேட்டு அந்தமகாஜனரும் பரமசாதுவாகியும் சகல சாஸ்திர சம்பன்னரும் விரக்திபரருமான இந்த பாகவதரப்ப டிச் செய்யப்பட்டவரல்ல இனி தடுத்தொன்றும் பே சாமல் உங்களுங்கள் வீட்டிற்குப் போங்க ளென்று கடினமாகப் பகர்ந்திடக்கேட்டு அக்கிராம வாசிகள் நாமிருவருக்கு க்ஷேமத்தைச்சொல்லவந்தோம்அதை யுணராம லிந்தமகாஜன சாதுவானவர் நமதுபேரில் கோபத்துடன் போங்களென்றுப் பகர்ந்தார் நமக் கென்னவந்தது அவருடைய இஷ்டமென்று பேசிக் கொண்டே தங்கடங்கள் வீட்டைச் சேர்ந்தார்கள்.

இந்தப்படிக்கி அக்கிராம வாசிகள் சொல்லிக் கொண்டே போயினபிறகு இந்தமகாஜன சாதுக்கு ஒருபுதல்வன் பிறந்தான் அப்புதல்வனுக்கு மகாஜன சாதுவானவர் மகிபதியென்று நாமகரணஞ் செய்து அனேக ஆபரணங்களா லலங்கரித்துபந்துக்கள்முன் னிலையில் தொட்டிலில் போட்டு பலவித மங்களகர மான கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே ஊகல்பாடி மங்களாரத்தி யெடுத்துப் பந்துவர்க்கங்களுடன் அ னேக பலகாரவகைகளுடன் பிரசாதம்புசித்துத் தாம் பூல புஷ்ப சந்தனுதிசளளித்து அவர்களுக்குவிடை தர அவர்களும் விடை பெற்றுக்கொண்டு போயின பின்பு இந்தமகாஜனசாது வழக்கப்படி பாவுளசாது க்குப் பூசைபுரிந்து சோடச உபசாரங்களால் அவர் மனது களிப்புறநடந்து வருகிறபோது ஒருநாளந்த பாவுளசாது சந்திபார்த்துக் கொண்டிருந்து விலையு யர்ந்த ஆபரணங்களைப் பூட்டியிருக்கும் பிள்ளையை ஒருவருக்குந் தெரியாம லெடுத்துச்சென்று நகரத்து க்கு வெளியில் கொண்டுபோய் ஆபரணங்களைக் களை ந்துக்கொண்டு வஸ்திரத்தைச்சுத்தி அப்பிள்ளையைக் கொன்றுக் குழிதோண்டி அக்குழியில் பிள்ளையுடன் ஆபரணங்களையும் போட்டுப் புதைத்துவிட்டுச் சென் ருர் அதையங்கொரு திட்டினிலிருந்து யெதிரியொரு வர் பார்த்துக்கொண் டிருந்தார் உடனேயந்தபாவுள சாது சகலஜனங்கள் முன்னஞ்செல்ல அவர்கள் அந் தப்பாவுள சாதுவைநோக்கி ஒஐயா பாகவதரேமகா ஜனசாதுவின் பாலகனெங்கே அப்பாலகனைப்பார்த் தீராவென்று வினவ அதற்கு பாவுளசாது அப்பால கன் கருப்போசிகப்போ எனக்குத் தெரியாதென்று சொல்லக்கேட்டு தாய்தந்தையர்களும் பந்துக்களும் மெத்த விசனத்துடன் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புகுந்து புகுந்து தேடித்தேடி வேசாரிப்பிள்ளையைக் காணமல் தாயானவள் அழுதுபுரண்டு வெகுவாகக் கதரிப்பதறிக் கொண்டிருக்க மருபடியு மொருதரம் பாவுளசாதுவை நோக்கிச்சகலரும் பிள்ளையைப்பார் த்திரா என்று கேழ்க்கையில் அதற்கந்த பாவுளசாது வானவர் சற்ருகிலும்பயமின்றி அப்பாலகனையானே கொன்றேனென்று சொல்லக்கேட்டுச்சகலரும் இவர் மெத்த சாதுவாயிற்றே அப்படிச்செய்ய மாட்டாரெ ன்று மகாஜனரும் அவர்களுடன் கூடிக்கொண்டு மெ த்தப் பிரியமாகச் சொல்லிக்கொண்டிருக்க இதற்குள் அப்பட்டணத்தையாளும் அரசனுக்குச் செய்திதெரி ந்து உடனே தண்டோரா போடுமவர்களை வரவழை த்து விலையுயர்ந்த ஆபரணங்களுடன்ஒருபிள்ளையைக் காணும் யாருக்காகிலுந் தெரிந்திருந்தால் அரசன் சபைக்குவந்து பிள்ளையின் போக்கைச் சொல்லவே ண்டியது அப்படிக்குவந்துசொல்லாமல்நமக்கென்ன வந்ததென்று வஞ்சகமா யிருப்பவர்களைத் தக்கபடி

தண்டிக்கப்படுமென்று தன்னகரமுழுமையுந் தண்
டோரா போடும்படிக்கிக் கட்டளையிட்டான் அந்தப்
படியே வள்ளுவனும் யானையின்மீது ஏறிக்கொண்டு
பட்டணமெங்குஞ் சொல்லிக்கொண்டேதண்டோரா
அடித்தான் அவ்வோசையைக் கேட்டுவந்து ஜனங்
களும்வந்து வள்ளுவன் சொல்லுவதையுணர்ந்துநமக்
கப்பிள்ளை போயின ரகசியமே தெரியாதென்றுசொ
ல்லிக்கொண்டே தங்கள் வீட்டை நாடிப்போயினார்
கள் இச்செய்தியையுந் தண்டோரா முழக்கத்தையுங்
கேட்டுப் பட்டணத்திற்கு வெளியிலிருக்கும் எதிரி
யானவர் விரைந்தோடிவந்து அரசன் சபையையடை
ந்து ஒநரபதியே பாவுள சாதுவானவர் அப்பிள்ளை
யைக் கொன்றுபுதைக்க யான்கண்டேன் என்றுசொ
ல்லிப் பாலகனைப் புதைத்த இடத்தையுமவர் வெளிப்
படுத்துகையி லப்போது இச்செய்தியையறிந்து தாய்
தந்தையர்களும் மத்துமுள்ளவர்களும் பட்டணத்திற்
கு வெளியில்வந்து அக்குழந்தையைப் புதைத்திருக்
குங் குழியுமங்கிருக்கக் கண்டு மண்ணைவாங்கிப் பார்
க்க அதில் பாலனதுதேகமும் உயர்ந்த நகைகளும்
அகப்படப் பார்த்து என்னசெய்வோ மம்மா
எப்படி உயிர் பெற்றிருப்போமம்மா யென்று
அவர்கள் பந்துவர்க்கங்களுடன் அழுது புலம்பினார்
கள் அந்தச் சமயத்தில் மகாஜன சாதுவினிடம் அப்
பட்டணத்தை யாளும் அரசன்வந்து ஒமகாஜனசாது
வே நின்வீட்டினிலிருக்கும் யடியானபாவுளசாதுவே
நின்பிள்ளையைக்கொன்றவன் என்றுசொல்ல அதற்கு
மகாஜன சாதுவானவர் அரசனைநோக்கிச் சொல்லத்
தொடங்கினார்.

கேளுமையா வேந்தனே இந்தபாவுள சாதுவா
னவர் பக்தியில் மிகுத்த விரக்தியுடையவர் சாந்த
சமாதைமாதி குணங்களுமுடையவராகையால் அப்
படிக்கிச் செய்யமாட்டார் என்றும் சாதுக்களுடைய
மனதுக்கு ஆயாசமுண்டாகும்படி வெறும் நிந்தை
யைச் சுமத்தினால் ஸ்ரீஹரிக்கு மெத்த கோபமுண்
டாகி நம்மையெல்லாம் பஸ்பமாக்கி நரகத்தையடை
யும்படிச் செய்வார் வீணாகயேன் சாதுக்களை நிந்தித்
துப் படுநரகத்தில் விழவேணும் நம்முடைகர்மபலன்
இப்படிக்கிச் செய்வித்ததென்று யாவருக்குஞ் சமா
தானஞ்சொல்லி உடனே அப்பாலகனைத் தகனஞ்செ
ய்துச் சென்றுவீட்டையடைந்திருக்க அப்போதுஅப்
பிள்ளையைப் பெற்றதாயும் பந்துக்களும் பட்டணத்
திலுள்ளவர்களும் அந்தயெதியின்மீது நிந்தைசொல்
லிக் கொண்டிருக்கக் கேட்டு அந்தமகாஜன சாதுவா
னவர் ஒபிராணிகளே யான்முன்னஞ் செய்த கர்மம்
என்னை யிப்படிக்கிச் செய்திருக்க யதியின்மீதும் பா
வுளசாதுவின்மீதும் சொல்லுவதற்குக்காரணமேனோ
இவ்வுலகத்தினி லெவ்வொருவரும் செய்த கர்மத்
தின் பலனை ஸ்ரீஹரியானவர் அவரவர்களையனுபவிக்
கும்படிச் செய்திருக்கும்போது அவர்களுமந்தப்படி
யே நடத்தும்படி யுத்தியுண்டாகும் இதை விடுத்து
வீணிலேன் சாதுக்களை நிந்திக்கின்றீர்கள் என்றுபற்
பல நீதிகளையோதியும் அப்பாமரர்கள் அதையுணரா
மல் அங்குசிலர் கூடிக்கொண்டு பூததயை பச்சாத்தா
பமென தெள்ளள்வு மில்லாமலிந்த பாவுளசாதுவான
வன் பாலனைக் காதகஞ்செய்தானே என்றும்சிலர் சுக
மான போஜனமும் சுகமானநித்திரையும் இஷ்டப்ப
டிக்குத் தான் செய்துக்கொண்டிருந்தும்அன்னமிட்
டவர்களை கன்னமிட்டதைப்போல இப்பாவியாகிய
பாவுளசாது இவர்கள்பிள்ளையைக் கொன்றானேஇத
னாலிவனுக் குண்டாகிய பலன்யாதோ என்பார்நகை
களுக்கு ஆசைப்பட்டு இந்தப்பாவுளன் பிள்ளையைக்
கொன்றானென்பது உண்மையாகு மென்றார் சிலர்
இந்தப்படியாக அப்பட்டணத்தி லுள்ளவர்களும்பந்
துக்களு மடிந்துபோயின பிள்ளையின் அன்னையும்பற்
பலவாறு பாவுளசாதுவை வைதுக்கொண் டிருப்ப
தைக்கேட்டு அந்தபாவுள சாதுவானவர் கோபங்
கொண்டு நிரபராதியான வென்மீது நிந்தனையுண்டா
யிற்று இனியங்கிருக்கமாட்டேன் என்றுயாவருக்குந்
தெரியும்படி ஆரவாரம்செய்து புறப்படுவதை மகா
ஜன சாதுவானவர் அறிந்து விரைந்தோடிவந்து பா
வுளசாதுவின் றிருவடிகளில் விழுந்து பணிந்து எழுந்
துக் கரங்களைக் குவித்துக்கொண்டு எதிரில்நின்று ஓ
சுவாமி சாந்தசமதமாதி நற்குணங்களையுடைய தங்க
ளால் எனது புதல்வனெப்படிக்கொல்லப்படுவன்சிறி
தேனு மச்ஞான சற்குணங்களில்லாதப் பாமரசென
ங்களுடன் தங்களுக்கென்ன சம்பந்த மிருக்கின்றது
யோசித்துப்பாரும் அன்றியும் யான்தங்களை யேதே
னும் வைதிருப்பனே யாகில் அப்போ தாங்கள் கோ
பித்துக்கொண்டு போவதுநீதியே அன்னியர்கள் யா
ரோசொல்லிய நிந்தனைக்கித் தாங்கள் கோபித்துக்
கொண்டு என்வீட்டினி லிறேனென்றுசொல்லிப்போ
வது தர்மமோ ஓசுவாமி தங்களுக்குத் தெரியாத நீதி
களுமுண்டோ எளியேன்மீது கடைக் கண்ணோக்க
மிட்டு தேவரீர் யான்செய்யும்படியான தொண்டுகளை
கைக்கொள்ளவேணும் அன்றியுமென்போ லொற்ற
யேழை ஜனங்களுக்கு தங்களுடைய திருவடிகளை
விட வேறுகதியு முண்டோவென்று வினய மொழிக
ளைப் பகர்ந்து பாவுளசாதுவைப்போகவொட்டாமல்
தடுத்தும் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்.

கேளும் எனதன்புக்குறியப் பரமசாதுவே விண்ணப்பமொன்றுளது அதென்னவெனில்தாங்களதை அங்கீகரித்தால் அடியேனுக்கு மெத்தநன்றாகும்விவாகத்திற்குத் தக்கவயதுடைய என்னுடைய கன்னிகையைத் தங்களுக்குகொடுத்துதிருமணஞ்செய் துகொடுக்குறேன் அக்கன்னிகையைத்தாங்கள்விவாகஞ்செய்துக்கொண்ட அப்போதே யானும் யென்முன்னோர்களுஞ் செய்திருக்கும் படியான பாவகர்மங்க ளெல்லாம் நாளுக்குநாள் தேய்ந்து உருமாய்ந்து மருஜென்ம மெடுப்பதற்குக் காரணமேதுமின்றிப்புனிஜராய் விடுவோமென்று மெத்தயும்வேண்டி அந்தப்பாவுளசாதுவை சம்மதிக்கச் செய்து அப்போதே பிராமணர்களை வரவழைத்து முகூர்த்தத்திற்குச்சுபலக்கினமொன்று நேமித்துக்கொண்டு விவாகபத்திரிகைகளை யாவத்திராளுக்கு மெழுதினர் அன்றியும் பிரியமாக விவாகத்திற்கு சகல பதார்த்தங்களை மென்மேலும் செய்வித்தார் இதைக்கேட்டு உலகத்தோர் ஆச்சரியமும் மாச்சரியமு மடையவும் எதியானவர் தன்மீது நிந்தனையுண்டாகக்கேட்டேன் அதுவீணாகுமென்றார் உடனே பகவானாகியபாவுள சாதுவானவர்மகாஜனசாது குருநாதரிடக் கனவினிற்றோன்றிஒகுருநாதரே யான் மகாஜனரை சோதிக்கவெண்ணிப்பற்பலவாறு அவருக்குக் கஷ்டமுண்டாகும் படிக்குச் செய்தும் அந்தமகாஜனசாது அணுவளவேனுஞ் சலிக்காமல் வெகுதிடச் சித்தமாக விருப்பதையான்கண்டு வெகு சந்தோஷங்கொண்டு அந்த மகாஜனசாது செய்திருக்குங் பக்திக்குயான் மெத்த கடன்காரனா யிருக்கின்றேன் அன்றியும் அந்தக்கடன் இவ்வளவுதான்கொடுக்கவேணுமென்ற மொத்தம்யெனக்குத்தெரியவில்லையென்று பகர்ந்துப்பின்னுஞ் சொல்லுகின்றார்ஒதேவகுருநாதரே உமதுசிஷனாகும் மகாஜனசாதுவின் பாலகனை எவ்விடத்தினில்தகனஞ் செய்தார்களோ அவ்விடத்திற்கந்த மகாஜனசாதுவை அழைத்துக் கொண்டு நீருஞ்சென்று என்னுடைய சஞ்சீவனநாமத்தை பக்தியாக உச்சரிப்பையேயாகில் அப்பாலகன் உயிர்பெற்று வருவான் அவனைக்கண்டு நீரும் மெத்தப் பிரிய மடைவீரென்று சொல்லி பகவானாகிய பாவுள சாது மாயமாய் மறைந்துபோயினர்.

உடனே அந்த தேவகுரு நாதரெனும் மகானுபாவர் திடுக்கிட் டெழுந்துத் தான் கண்டகனவின் சவிஸ்தாரத்தையோசித்து மெத்தசந்துஷ்டியடைந்து மகாஜனசாதுவைப் புகழ்ந்து அன்றிரவைப் போக்கி மருநாள் காலையிலெழுந்து ஸ்னானநட் டானங்களை முடித்துக்கொண்டு தன்சிஷனாகிய மகாஜனன் வீட்டைநாடிவந்து அவரைக்கண்டு தன்கனவினில் சாட்சாத் பாண்டுரங்கனாத ரெழுந்தருளி சாதித்த செய்தியைச்சொல்லி நினைப்பினுண்டாகாத பகவானது கிருபையைத் தான் நன்றாகக்கண்டு ஆனந்தங் கொண்டு என்னைப்போலும்பாக்கியவானுண்டோ யெனவிண்டு யான் ஜென்மாந்திரங்களிற் செய்த பூசையின் பலனிதாகும் பண்டு என்று ஆனந்தக்கூத்தாடித் தன்ஆசானது திருவடியைநாடி அவர் சொல்லியபடி மயானபூமிக்குச்சென்று அவ்விடத்தையடைந்து சஞ்லமென்பதை தலைகாட்ட வொட்டாமல் யோக்கி நிர்லபக்தியுடன் ஸ்ரீஹரிபஜனை செய்தார் அதெப்படியெனில் தாளமிருதங்கஞ் சரிசாரந்தா மோர்ச்சங்கு வீணைமுதலான கருவிகளுடன்கலந்து தன்னைமறந்துதலைவனிற்கலந்து தையாயென்று ஆடி பகவந்நாம சங்கீர்த்தனங்களை அச்சுதா கிருஷ்ணா அம்புயக்கண் முகுந்தகோவிந்தா வைகுந்தா நந்தநந்தா நினது கிருபையினாலே பாலகனைக்காட்டி யென்னையாட் கொள்ளுமென்று இந்தப்படி ஆடிப்பாடி மெத்த ஆர்த்தியுடன் தேவகுருநாதன் எர்ப்பட்டிருக்க அப்போது விலையுயர்ந்த ஆபரங்களைத் தரித்துக்கொண்டு அப்பாலகனும் பகவானுடைய கிருபையினாலே உயிர்பெற்றெழுந்தி அங்கு ஆடிக் கொண்டிருக்கையில் பக்தர்கள்கண்டு ஜெயஜெயவென்று வெகுவாக கோஷித்து ரக்தியாக யாவரும் ஸ்ரீஹரியைப் பாடிக்கொண்டே வெகுசந்துஷ்டராகித் தங்கடங்கள் அகம்புகுந்திருந்தார்கள் இங்கே மகாஜனசாதுவும்தேவகுருநாதரும் பாவுளசாது மாயமாய் மறைந்து பகவான் தன்சுயரூபத்துடன் கனவினிற்றோன்றி சொல்லியதெல்லாம் சரியாயினதென்றகங்களித்து பாலகனை யழைத்துக்கொண்டு ஆசானுடன் மகாஜனசாது தன்வீட்டையடைந்துப் பாலகனைத்தன்மனைவியின்பாலளித்து ஆசானைவெகுவாகப் பூசித்துநேசித்து விசுவாசித்து அவரைப் பலவாறு பூஷித்துக் குருசங்கீர்த்தனங்களைக் கோஷித்து தன்னைமறந்திருக்க ஆசான் அந்தமகாஜன சாதுவின்மீது கருணைமழை பெய்து அவருக்கானந்த முண்டாகச் செய்து விடை பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடஞ் சேர்ந்தார் பின்பு மகாஜனசாதுவானவர் குருபக்தியும் ஹரிபக்தியும் இடைவிடாமற் செய்துக்கொண்டு வெகுகால மிவ்வுலகத்திலிருந்து முடிவில் நிரதிசயானந்த ஸ்ரீவைகுந்தபதவி யடைந்திருந்தார்.

வாழி விருத்தம்.

தகாதனவெல்லாம்நீக்கித் தருமத்திற்றேர்ந்தோன்வாழி சுகானுபவமாகுந்தூய னருளினாற்சுகித்தோன்வாழி
ஜெகாதிகளனைவோரேத்த ஜெனித்திட்டவள்ளல்வாழி மகாஜனசாதுசெம்பொன் பாமலரடிகள்வாழி.

மகாஜனன்சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மத்

கூர்மதாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

பார்மகள்கணவன்பக்தி பரவசத்தாலேமிக்கப்
பேர்மிகுகீர்த்தியெங்கு மென்மேலும்பெருகக்கொண்டச்
சீர்பெருஞ்சிந்தையுள்ளச் செம்மல்நற்குணங்கள்வாய்ந்தக்
கூர்மதாசர்பொற்பதத்தைக் குணமுடன்போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு.

செந்திருமலர் மகள்சந்ததமும் கிருபாநோக்கம்
பெற்ற பிரதிஷ்டானியெனும் நகரத்தினில்பிரமகுலத்
தினிற் பிறந்தவரும் ஏழைப்பரதேசிகளை யாதரிப்ப
வரும் சதாசாது சங்கமத்தி லீடுமட்டுக் கொண்டிருப்
பவருமான அதிதியப்பியாகாதிகளுக்கு இல்லையென்
னுமல் யெப்பொழுதும் ஈவியளிப்பவரும் சதா எம்
பெருமானுடைய நாமத்தை தியானித்துக் கொண்டி
ருப்பவரும் க்ஞானசுகரென்று பேர்பெத்தசாது ஒரு
வரிருந்தார் அவருக்குப் பதிவிரதைகள் கொண்டா
டும்படியான உத்தமமாது ஒருவளுண்டு அந்தக்ஞான
சுகர் அம்மாதுடன்கூடி இல்லறமே நல்லற மெனக்
கருதி வாழ்ந்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீஹரியின்
கிருபையால் அவர்களுக் கொருபுதல்வன் பிறந்தான்
அப்புதல்வனேகரசரணாதிகளில்லாமல் மத்த அவய
ங்களெல்லாம்பூர்த்தியாகி அழகியமன்மதனை யொற்ற
சுந்திரவடிவுட னிருக்கக்கண்டு தாய்தந்தையர்கள்மெ
த்தவிசனப் பட்டவர்களாகி நாம் ஜென்மாந்திரங்களி
லென்ன பாவஞ் செய்தோமோ அந்த கர்மத்துக்குத்
தக்கபடி நமக்குமைந்தன் பிறந்தான் யாரையும் வெ
றுக்க வேண்டியதில்லையென்று தங்களுக்குத் தாங்க
ளே சமாதானஞ் செய்துக்கொண்டு அப்புதல்வனுக்
குக் கூர்மதாசரென்று நாமகரணஞ்செய்து பிராமண
ர்கள் அதிதிகள் முதலானோருக்கும் வெகுவாக கோ
தானபூதான வஸ்திரதான ஹிரணியதானங்க ளென்
னும் சோடசதானங்களும் அபாரமாகச்செய்துபந்து
வர்க்கங்களுடன் புசித்துச் சந்தன தாம்பூலாதிவாசனை
திரவியங்களை யணிந்துப் புத்திரோச்சவத்தைப் பிர
ச்சவமாகக் கொண்டாடிப் பந்துகளுக்கு விடை
தந்தனுப்பி அப்புதல்வனை நாளுக்குநாள் செல்வமாக
வளர்த்து ஐந்துவயதாயினவுடன் உபநயனஞ் செய்
வித்துப்பின்பு பள்ளியி லோதவிடுக்க சிலவருடங்க
ளில் அப்புதல்வன் கல்வியிற்றேர்ச்சி யடைந்து பக
வத்பக்தியிற் சிறந்து ஸ்ரீஹரியின்னாம சங்கீர்த்தனங்
களைப் பாடிக்கொண் டிருக்கிறபோது இவருடைய
தாய்தந்தையர் மெத்ததரித்திர திசையடைந் திருப்ப
வர்களாதலா லிந்தக் கூர்மதாசருக்குப் பந்துக்கள்
வேளைதப்பாமல் பிரசாதமளித்துக் கொண்டிருந்தார்
கள் இந்தக் கூர்மதாசரும் அங்கபீனமுடையவ ராத
லால் தன்பந்துக்கள் வீட்டிற்கு ஆமைநகருவதுபோ
லப் பூமியில் ஊர்ந்துக்கொண்டே சென்று அவர்கள
ளிக்கும் பிரசாதத்தை மெத்தப் பிரியமாகப் புசித்து
சந்தோஷசித்தராகி ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனங்களால்
காலத்தைப் போக்கிக்கொண்டிருக்க பந்துக்கள் இந்
தக்கூர்மதாசர் வாக்கிலிருந்துவரும் ஸ்ரீஹரிநாம சங்
கீர்த்தனைகளின் மதுரத்தைக் கேட்டு ஆனந்தித்துக்
கொண்டிருப்பார்கள்.

இந்தப்படி பந்தக்கூர்மதாசர் ஸ்ரீஹரிநாம சங்கீ
ர்த்தனங்களைப்பாடி யாவரையும் மனமுருகச் செய்
துக் கொண்டிருக்கிறபோதுசிலநாளைக்குப்பின்புசில
ஹரிதாசர்கள் அப்பட்டணத்தை யடைந்து ஹரிக
தை காலக்ஷேபஞ்செய்ய இந்தக்கூர்மதாசர் அவர்கள்
சொல்லும் ஹரிகதையைக் கேட்டு ஆனந்தித்துஅவர்
களைநோக்கி ஓசுவாமிகளே நீங்களிம்மார்க்கமாய் எங்
குபோக வந்தீர்களென்று வினவ அதறகவர்கள்ஐயா
கூர்மதாசரே நாங்கள் பண்டரியாத்திரை செய்யப்

போகிறோமெனக்கேட்டு அந்தக்கூர்மதாசர் தன்மனதில் பண்டரிக்கிப் போகவேணுமென்ற கோரிக்கை பிறந்துமென்மேலும் ஸ்ரீஹரியின்மீது பக்தியதிகரித்து மெத்தப் பிரியத்துடன் அந்த ஹரிதாசர்களை நோக்கி ஓ பரமபாகவதர்களே உங்களுடன் யானுமந்தப் பண்டரிபுரத்திற்கு வருகின்றேனெனக்கேட்டந்த ஹரிதாசர்கள் கூர்மதாசரைப் பார்த்து அவருக்குக் கரசரணங்க ளில்லாததை யறிந்து ஓகூர்மதாசரே உமக்கு நிறைந்தசெல்வம் இருக்கும் பக்ஷத்தில் பாண்டுரங்கனுடைய சேவையைப் பண்டரிபுரத்தினில்கண்டு சேவிக்கக் கடவாயென்று சொல்லி விரைந்து பண்டரிபுரத்தை நோக்கி நடந்தார்கள். அப்போது கூர்மதாசர் நமக்குக் கரசரணாதிகளில்லாமையினாலன்றோ பாகவதர்க ளிப்படிச் சொல்லிவிட்டுப் போயினார்களென்று மெத்தத் துக்கத்துடன் உட்கார்ந்து தனக்குத்தானே யோசிக்கின்றார் அதென்னவெனில் மெத்தப்பிரியத்துடன் பண்டரிபுரத்துக்குப் போகாமல் நமதுஜென்மம் புண்ணியபூமியாகியபரமபதத்தை யடையமாட்டாது நரகவேதனைகளை யடைந்து எப்போதும் கணக்கிட்டுச் சொல்முடியாத யோனிகள்தோறும் பிறந்துபிறந்து இறந்துஇறந்து திரிந்துக்கொண்டே யிருப்பதன்றியும் இத்தேகமானது இப்போது அரிதாக யுண்டாயிற்று இத்தருணத்தில் தக்க உபாயந் தேடிக்கொள்ளாமல் தப்பிப்போயின பின்பு எந்தவழியுமில்லையே இந்த அரிதாகிய ஜென்மமிருக்கிறபோதேபண்டரிபுரத்திற்குச்சென்றுபாண்டுரங்கநாதனை சேவித்து அவர்கிருபையைப் பெற்றுக்கொள்வதே இத்தேக மெடுத்ததற்குப் பலனாகுமென்றுகருதி அந்தக்கூர்மதாசர் அப்போதே பூமியில் தவழ்ந்துக்கொண்டே ஆமையைப் போல ஊர்ந்து நெடுந்தூரஞ் சென்று சூரியன் அஸ்தமிக்கும் பரியந்தம் ஆயாசத்துடன் சொல்லுகையில் அங்கொருமாருதிசன்னிதி இருக்கக்கண்டு அதன்சமீபத்திற்சென்று உட்கார்ந்துப் பசிதாக மதிகரித் திருப்பதினாலே மெத்தக் கஷ்டத்தையடைந்து ஓ ஆஞ்சநேயா காஞ்சனசகாயா தூயா அப்பிரமேயா சஞ்சீவிராயா அடியேனுக்கு தேவரீர் சன்னிதியன்றி வேறெங்கும் போக்கிடமில்லையே என்றும் ஓபாண்டுரங்கா பவபங்கா சத்சங்கா மோகனாங்கா பக்தர்கள்மீது பூரணதயவுடையவ னாதலால் தேவரீரை யல்லாது வேறெனக்கெந்த ஆதாரமும் நிற்கநிழலுமில்லையே அன்னையுந் தந்தையும் தெய்வமும் இன்னுமுள்ள சகலரும் நீரேயாமென்று பிரார்த்தனை செய்கையில் உள்ளங்குளிர அந்தப் பாண்டுரங்கனாதன் கூர்மதாசருடைய முறைக்கேட்டு விரைந்தோடிவந்தார் அதெப்படி யெனில் பிராமணனைப்போலத் திருவுருகொண்டு அளவிலாத வியாபாரஞ்செய்யும் வர்த்தகனுக்கு நிகராக அங்கு அமுதுபடிமுதலாகிய சரக்குகளைப் பரப்பிக் கடைவைத்துக்கொண்டு கூர்மதாசரை நோக்கி வினவத்தொடங்கினார் அதென்னவெனில் ஓஐயா சாதுசம்பன்னரே இப்போது நீரெங்கேபோக உத்தேசித்து இங்குவந்து சேர்ந்தீர் உம்முடைய ஊரென்னபேரென்ன குலமென்ன தலமென்ன சொல்லுமையாவென்று வினவக்கேட்டு கூர்மதாசர் அந்த வியாபாரியை நோக்கி ஐயாவர்த்தகரே யான்குலத்தினில் பிராமணன் பிரதிஷ்டானயெனுந் தலத்தினில் வசிப்பவன் என்னுடையபேரோ கூர்மதாசன் பண்டரி புரத்திற்குச்சென்று பாண்டுரங்கனைச்சேவிக்க வேணுமென்றயிச்சை யெனக்குண்டாகிக் கரசரணங்களில் லாக்குறையால் ஆமையைப்போல பூமியிலூர்ந்துஇன்றுபகலெல்லாம் நடந்தும் ஒருகாததூரத்திற்கே மெத்தக் கஷ்டமும் ஆயாசமும்பசியும்தாகதாபமுமெத்தவுண்டாகி இந்த ஆஞ்சநேயர் சன்னிதியைக்கண்டு மார்க்காயாசம் தீர்ந்துப்போகலாமெனக்கருதி இங்குதங்கி ஸ்ரீஹரிநாமங்களை தியானித்துக்கொண்டே இருக்கிறபோது தாங்கள் வரக்கண்டேன் மெத்த ஆனந்தங்கொண்டேன் இதுயென் வரலாறென்றுகூற அந்தப் பிராமண வர்த்தகர்கேட்டு ஓகூர்மதாசரே எனக்குத் தக்கத்துணையும் பசவத் பக்தருமாகிய நினதுசங்கமமுமெளக்கப் பட்டதற்கு மெத்த சந்தோஷமடைகிறேன் என அதற்குக் கூர்மதாசர் ஓவர்த்தகரே கரசரணாதிகளிருக்கு முமக்கும் கரசரணங்களில்லாதவெனக்கும் எப்படித் தொந்தப்படும் தாங்கள் நடக்கத் தலைப்பட்டால் இரனடுநாளில் பண்டரி புரத்தைச் சேருவீர் யானோ பத்துநாள் ஊர்ந்து மெத்தப் பரபரப்பாகச் சென்றாலும் அப்பண்டரிபுரத்தைச் சேருவதுமெத்த அரிதாகும் அன்றியும் தங்களுக்கென்ன வியாபாரம் எப்படிஜீவனம் இதுகளை ஒளியாமற்சொல்லுமையா வென்று வேண்டுகிறபோது அந்தமாயாப்பிராமணர் கூர்மதாசரைநோக்கி ஐயா பரமபாகவதரே யான்கிராமங்கள் தோறும் ஒருவாரம் வசித்து அங்கிருக்குங் குடிகளுக்குக் கடன்உடன் கொடுத்து கணக்குமிதமில்லா பொருள்களைச் சம்பாதித்து அதினால் ஜீவனஞ்செய்துக் கொண்டிருக்கிறேன் அன்றியும் எனக்குக் கரசரணங்களிருந்தும் யான் ஒருநாளுக்குக் காதவழியே நடந்துக் கொண்டிருப்பேன் ஆகையால் உம்முடையதுணை யெனக்குமெத்த நன்று யிருக்கின்றது மேலும் வழியில் நடக்கும் தினர்களுக்கெல்லாம் தாகதாபமும் பசியுந்தீர்த்துப் பூரியுமளித்துக்கொண்டோ பண்டரிபுரத்தைச் சேர்ந்து அங்கு

பெருத்தக்கடை வைப்பது எனக்குவழக்கமானதால் இன்றுதினமுதல் மெல்லன வழிநடந்து மேன்மையான வியாபாரத்தையும் நடத்திக்கொண்டே யும்முடன் சிலநாளையில் பண்டரிபுரத்தை யடைவேன் அன்றியும் என்பேர்கிஸ்தி விடோபா வர்த்தகன் குலத்திலோ யான்பிராமணன் யான்வசிக்குந் தலமோ எல்லாத் தலங்களிலும் வாசம் பண்ணிக் கொண்டிருப்பேன் இப்படிப்பட்ட கேவலனாகிய எனக்கு நினது திணையுஞ்சங்கமும் நன்றாயுண்டாயிற்று மேலும்பண்டரிபுரத்தினில் மிதமில்லாத பக்தர்கள்வந்து ஸ்ரீஹரியைப் பற்பலவாறு துதிசெய்வார்கள் பூரணப்பிரியத்துடன்நாங்களு மங்குசென்றுப் பாண்டு ரங்கனைக் கண்டு சேவித்து உண்மையான பக்தியுடன் நாமத்தைத் துதிசெய் வீரேயாகில் உமக்குநித்தியமாகிய வைகுந்தபதவி கிடைக்குமென்று சொல்லி அந்த மாயாப்பிராமணர் தானே அன்னஞ்சமைத்துவைத்து அந்தப் பிரசாதத்தை அந்தகூர்மதாசருக்குத் தன்கரங்களினாலே யூட்டி உபசரித்தமாத்திரத்திரத்தில் அந்தக் கூர்மதாசரும் திருப்தி யடைந்து மார்க்காயாசத்தினாலே படுத்து நித்திரை செய்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறு ஸ்ரீபாண்டுரங்கநாதர் பிராமணரூபத்துடன் வரத்தகனைப்போல மார்க்கத்தினில் வந்துக் கூர்மதாசருக்கு அன்னபானாதிக ளூட்டிடப் புசித்து நித்திரைசெய்து உதயமாகவே அந்த ஸ்ரீஹரியானவர் கூர்மதாசருக்குப் பண்டரிபுரத்திற்குப் போகும் வழியைக்காட்டி உடனே மாயமாய் மறைந்துபோயினார் அப்போது கூர்ம்தாசர் தனக்கு வழிகாட்டிச் சென்ற வர்த்தகனைக் காணாமல் சத்துநேரம்பிர்மித்து அவ்வழியைப் பிடித்தே ஊர்ந்துக்கொண்டு சென்று அஸ்தமிக்கிறபோது காதவழிநடந்தார் அந்த ஆயாசத்தாலும் பசிதாபத்தினாலும் மெத்தவாடிபகவானைநாடிப்பலவாறு தோத்திரம் புரிகிறபோதுஅம்முறையைக்கேட்டு ஸ்ரீஹரியானவர் முன்போலப் பிராமணவடிவுடன் வர்த்தகனைப்போல வந்து புதிதாக அங்கோர் கிராமமுண்டாகச்செய்து அக்கிராமத்துக்குள் கூர்மதாசரை யழைத்துச் சென்று சத்திரத்தையடைந்துப் பிரசாதஞ்செய்துக் கூர்மதாசருக்கு ஊட்டித் தீர்த்தங்குடிப்பாட்டிட அந்தக்கூர்மதாசரும் தனக்குப் பிராமண வர்த்தகன் செய்யும் உபசாரத்திற்கு மெச்சி அவரை மெத்தவும் புகழ்ந்து பகவந்நாம பாராயணஞ்செய்துக் கொண்டே ஆயாச மேலீட்டால் நித்திரைசெய்தார் அருணோதய காலமாயின வுடனே ஸ்ரீஹரியானவர் கூர்மதாசரை எழுப்பி வழிகாட்டி மாயமாய்மறைந்துபோயினார்இந்தப்படிஸ்ரீஹரியானவர்கிராமமில்லாமலிருக்குங்காடுகளில்கிராமத்தையுண்டாக்கிக் கூர்மதாசருக்கு அன்னபானாதிகளை யூட்டி உபசரித்து தினந்தோரும் காதவழி கடந்துக்கொண்டு சென்று ஹளமெனுங் கிராமத்தினில் கூர்மதாசரைச்சேச்த்து மாயமாய் மறைந்துபோக அப்போது அவ்வூரினில் வசிக்குஞ் சிலபக்தர்கள் பண்டரிபுரத்துக்குப்போக வுத்தேசித்து பெருத்த கூட்டமாகக் கூடி யிருக்கக்கண்டு கூர்மதாசர் அப்பாகவதர்களை நோக்கி ஓபரமசாதுக்களே இத்தனைபேர்களும் என்னவேலையாய் எங்குபோகிறீர்களென்றுகேழ்க்க அதற்கந்த சாதுக்கள் கூர்மதாசரைநோக்கிஐயாபாகவதரே நாங்களெல்லோரும் பண்டரிபுரத்திற்குப் போகிறோமென அதற்கந்த கூர்மதாசர் அப்பண்டரிபுரத்தினிலென்ன விசேஷமென அதற்கந்தசாதுக்கள் ஆஷாட கார்த்திகை வளர்பிறையில் பிரமோச்சவம் ஏகாதசியில்கருடோற்சவம் நடப்பதால் அக்கருடோற்சவம் சேவிக்கும்பொருட்டு வெகுஜெனங்கள் அங்கு வந்து பாண்டுரங்கனை சேவித்துப் பரமபதவியைடைந்துக்கொண் டிருப்பார்கள் ஆகையால்நாங்களெல்லோரும் அப்பண்டரிபுரத்திற்குச்சென்று ஏகாதசியும் கருடோச்சவமும் சேவிக்கவேண்டிப் போகிறோமென்று யவர்கள் சொல்லிய வசனங்களைகேட்டு அந்தகூர்மதாசர் இதற்கு நானென்னசெய்வேன் எப்படியப்பகவானுடைய சேவையைக்கண்டு தெரிசிப்பேன் நாளை சூரியோதயத்துக்கு முன்னம் அங்கு போவதற்கு எப்படியாகும் ஓபண்டரிநாதா கால்களில்லாமல் போவதற்கெப்படி யாகுமென்று இடைவிடாத பக்தியால் செங்கமலக்கண்ணனை விரைந்து வாருமென்று நினைந்தும் அங்கிருக்கும் சாதுக்களை நோக்கி ஓபரமபாகவதர்களே தயவுசெய்து யான் சொல்லும் விண்ணப்பங்களை ஸ்ரீபாண்டுரங்கநாதருக்குச் சொல்லி அடியேனைப் புனிதனாகச்செய்வது உங்கள்பாரம் அந்தவிண்ணப்ப மென்னவெனில் ஓபராபா முரஹரா ஸ்ரீதரா கருணாகரா பைட்ணிபுரத்தினில் யானிப்போதிருக்கின்றேன் அதைவிட்டுப் பிரயாச மெடுத்துக்கொண்டு லகுனைக்குவந்து நாளையதினத்தில் தேவரீரைக்கண்டு தெரிசிப்பதற் கெப்படியாகும் அன்றியுங் கைகளுங் கால்களு மில்லாமலே பிறந்தேன் ஆகையால் யான் னடப்பதற்குக் கூடாமையால் எப்படியும் ஏழுநாள் பிடிக்குமே எனக்கு நின்னை சேவிப்பதற்கு ஆதலால் ஓஜெகதீசா தேவரீர் இங்குவந்து நேத்திரங்களுக்குக் குளிர்ச்சியுண்டாகத் தங்களுடைய தரிசனமளித்துக் கருணைக் கண்ணோக்கஞ்செய்து அடியேனை யாதரிக்கவேணுங் கருணாநிதியே என்று சொல்லியதாக பகவானிட சந்நிதானத்

தின்முன்னம்நின்று சொல்லுங்களென்று மெத்தவும்
வேண்டிக்கொண்டார் அவர்களும் அந்தப்படியேபக
வானிடத்திற் சொல்லுகின்றோமென்று புகன்று அக்
கிராமத்தைவிட்டுப் புறப்பட்டு நடந்து அநேகதூரம்
த்திற் கெல்லாமவர்கள் பண்டரிபுரத்தைச் சேர்ந்து
பீமநதியில் ஸ்நானம்பண்ணி அநுஷ்டானங்கள் முடி
த்து பக்தியாக ஸ்ரீஹரிநாமசங்கீர்த்தனங்களைப் பாடி
க்கொண்டே அத்தலத்தை வலம்புரிந்து மகாத்வார
மண்டபத்திற்குள் மகானுபாவராகிய நாமதேவர் நிர்
மலமான பக்தியுடன் ஸ்ரீஹரியின் மகத்துவங்களை
அங்குவந்து ஹரிகதையைக் கேழ்க்கப் பிரியமுடைய
வர்களை நோக்கி சொல்லிக் கொண்டிருந்தார் அப்
போது அங்கிருந்தவர்க ளெல்லாங்கேட்டு ஆனந்தி
த்து மாதவா யாதவா கிருஷ்ணா முராரி நரஹரி மது
சூதனா ஸ்ரீலட்சுமீ நாயகா கேசவா முகுந்தா அச்சு
தா கோவிந்தா ஆசித்திருக்கும் பாகவதர்களைப்போ
ஷணை செய்யும்படியான கிருபாநிதியே என்றுநாமத்
தை உச்சரித்துக்கொண்டு யாவரும் அதிகப்பிரியத்
துடனிருக்க அப்போது ஸ்ரீபாண்டுரங்கநாதன் அடி
யார்கள்செய்யும் பக்தியையும் அவர்கள் தங்களைமறந்
திருக்கும் இருப்பையும் பார்த்துக்கொண்டே தன்
னுடைய கருணையானது அவர்கள்மீது பரவச்செய்
துக் கொண்டிருக்க அதுசமயத்தினில் யாத்திரைவா
சிதள் அங்குவந்து வேசாரலில்லாமல் அந்தப்பண்ட
ரிநாதன் விக்கிரகத்தைக் கண்டு சேவித்துத்திருவடிக
ளின்மீது விழுந்துபணிந்து எழுந்து ஆலிங்கனஞ் செ
ய்து ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களாகி ஓஜெகதீசா
தேவரீரது முகசுந்தரத்தைக் கண்ட ஜெனங்களுக்கு
தாபங்கள் மூன்றுந்தணிந்து புனிதர்களாவது மன்றி
மருஜென்மமில்லாமல் பரமபதத்தை யடைவது திண்
ணம் என்றிந்தப்படி யந்த யாத்திரைவாசிகள் பக்தி
யுடன் துதிசெய்து உடனே கூர்மதாசர்சொல்லியனு
ப்பிய செய்திகளைச்சொல்லக்கேட்ட மாத்திரத்தினில்
தடாலென்று சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் எழுந்துச்
சென்று நாமதேவரையும் க்ஞானதேவரையும் அப்
போதே தனக்குத் துணையாகிவரும்படி யழைத்துத்
தன்மனோபாவத்தை யவர்களுக்குத் தெரியப்படுத்தி
பாதசாரியாகிப் போகத் தொடங்கினார்.

இந்தப்படியாக யந்தப்பாண்டுரங்கநாதன் நாம
தேவரையும் க்ஞானதேவரையும் அழைத்துகொண்டு
கூர்மதாசரைப் பார்க்க ஒப்புடன் போகும்போது
மார்க்கத்தில் அங்கோர் தோட்டத்தைக்கண்டு பக
வான் நாமதேவரையும் க்ஞானதேவரையும் நோக்கி
எனதன்பர்களே எனக்குமெத்த தாகமாக யிருப்ப
தால் இத்தோட்டத்திற்குட் சென்று தாகமருந்திவரு
கிறேன் அதுபரியந்தம் நீங்களிருவரு மிங்குதானே
யிருங்களென்று சொல்லி வேகமாகத் தோட்டத்திற்
குள்ளேயோடி அங்கு சாவந்தியாமாலியைக் கண்டு
சந்துஷ்டராகி நிற்க அந்த சாவந்தியாமாலி ஸ்ரீஹரி
யைக்கண்டு விழுந்து பணிந்து எழுந்து தன்மனதி
னில் அப்பண்டரிநாதனை ஏளப்பண்ணிசஞ்சலமின்றி
வெளிப்பார்வை யில்லாமல் பரவசமடைந் திருக்கப்
பார்த்து ஸ்ரீஹரியானவர் தன்கரங்களை அவர்சிரத்தி
னில்வைத்து அழுத்திக்கொண்டிருக்க அவ்வேளையில்
சாவந்தியாமாலி அடையாளந்தெரிந்துக்கொண்டு ஸ்ரீ
ஹரியே இவராமென்று மெல்லென தன்கண்களிரண்
டையுந் திறந்து சியாமளசுந்திர சுகுமாரனாகும் ஜெக
தீசனையும் திருத்துழாய்மாலைவனசமாலையுடஆரகிரீட
கேயூர கடகங்களையும் சாரங்குசங்கு சக்கிராயுதந்தரி
த்து திவ்யவிக்கிரக ரூபத்துடன் பிரகாசித்துக்கொண்
டிருக்கும்போது அந்த ஸ்ரீஹரியின் தெரிசனத்தை
யந்த சாவந்தியாமாலிகண்டு சேவித்துப் பிரமானந்த
சுகத்தையடைந்து அவர் திருவடிகளில் விழுந்துபணி
ந்து எழுந்துநின்று அஞ்சலிகரத்தனாகி ஓசுவாமி பா
ண்டுரங்கநாதா தயவுசெய்து சத்தே வீற்றிருப்பீரே
யாகில் தீனனாகிய அடியேன் தேவரீருடைய திருவடி
களுக்கு ஆர்ச்சனையாராதனை முதலிய சோடசோப
சாரங்கள் செய்விக்கப் பிரியமுடையவனாகி யிருக்கின்
றேன் யென அதற்குப் பாண்டுரங்கன்சாவந்தியாமா
லியை நோக்கி ஓஎனதன்பனே பூசையேற்றுக்கொள்
வதற்கு இதுசமயமல்ல திருடர்கள்என்னைத்துரத்திக்
கொண்டு பின்துடர்ந்துவந்துதோட்டத்திற்குள்யான்
புகுந்து ஓடிவரக்கண்டு இங்குயாரோ இருக்கின்றார்க
ளென்று கருதி அத்திருடர்கள் என்னைப் பிடிக்கும்
நிமித்தியம் இவிடத்தினில் எங்கையேர ஒளித்துக்
கொண்டிருக்கின்றார்கள் ஆகையால் ஓபரமசாதுவே
இவ்வேளையிலென்னை யவர்கள் கையினிற் காட்டிக்
கொடாமல் அன்னியர்கள்கண்களுக்குப் புலப்படாம
லென்னைத தக்கயிடத்தினில் ஒளித்துவையு மெனக்
கேட்டு அந்த சாவந்தியாமாலி ஸ்ரீஹரியே தேவரீர்
சர்வத்திலும் வியாபித்து உள்ளும் புறம்புமா யிருக்க
உன்னையொளித்து வைப்பதற்கு என்னிடபதில்உண்
மையிலே இன்னவிடமென்றெனக்கு தோன்றவில்லை
யேயென அதற்கு ஸ்ரீஹரி ஓசாவந்தியாமாலி பிரம்
மக்ஞான முண்டாகுமிட மெதுவோ அதைக்காட்டும்
அவ்விடத்தினில் யான் ஒளித்துக்கொள்ளுகிறே னெ
னக் கேட்டந்த சாவந்தியாமாலி தன்கரத்தினில் வா
ளைப் பிடித்துக்கொண்டு வயிற்றைப்பிளந்து ஓகருணா
நிதி அடியேனுடைய மன்னகமலத்தினிடமாகியவீட்

டினில் இருமென்றவுடன் அப்போதந்த பகவானும் அதிகப்பிரியத்துடன் அதற்குள் சேர்ந்தார் அதைக் கண்டந்த பக்தனும் பிளவுண்ட தன்வயிற்றைச் சமமாகச்சேர்த்து வயிற்றின்மீது தக்க வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு பரிபூரண ஆனந்தனாகியும் ஓபாண்டுரங்கநாதா உண்மையாக என்னுடைய பிராணன்போகும்வரையில் உம்மைவிடமாட்டேனென்று தெரிந்துக்கொள்ளும் என அதற்கு பகவான் பதில்சொல்லத் தொடங்கினார் அதென்னெனில் ஓபரமசாது வாகிய சாவந்தியாமாலியே நின்னுடைய மனனகமலத்திலகப்பட்டு யான்கட்டு பட்டிருக்கின்றேன் உன்னைப் போலே தேகத்தைப் பிளந்து யான் ஒளித்துக்கொள்ள இடந்தந்தவர்கள் இவ்வுலகத்தினிலொருவருமேயில்லை இப்படிப்பட்ட உபகாரகுணமுடைய நினக்கு பதிலுபகாரஞ் செய்வதற்கு நின்மிதென்ன குற்றமிருக்கினு ளவ்விடத்தினில் யானதைப் பார்த்ததேயில்லை இதுசத்தியமென்று நம்பத்தக்கதென்றும்இந்தப்படியந்த சாவந்தியாமாலியும் பாண்டுரங்கநாதரும்வெகுவித அன்னியோன்னியமாக ஆகம வாக்கியங்களைப் பேசிக்கொண்டு பரமானந்தத்துட னிருந்தார்கள். இதற்குத் திருஷ்டாந்தமொன்று அதென்னவெனில் துவாபரயுகத்தினில் சாக்ஷாத் பரந்தாமன்தேவகிவசுதேவர்களுக்குத்தனையனாகப் பிறந்து யசோதை நந்தகோபனிடம் ஆயர்பாடிக்கிச் சென்று கிருஷ்ணமூர்த்தியென்று பேர்கொண்டு அனேகலீலைக நடத்திக் கொண்டிருக்கையில் கோபிகை யொருவள் தயிர்வித்துக்கொண்டு அந்த ஆயர்பாடியினி லிருக்கையில்ஒருநாளந்த கோபிகை தயிர்கூடையைத் தலையின்மீது வைத்துக்கொண்டு தயிரோதயிர் என்பதை மறந்து கோபாலகிருஷ்ணன் மீதிருக்கும் அன்பினாலே கோவிந்தா தாமோதரா மாதவா கிருஷ்ணாவென்று அக்கோபிகை தயிர்வித்துக்கொண்டுபோகிறதைக்கேட்டு மத்தொரு கோபிகை தயிர்விற்பவளை நோக்கி அடியம்மா நீதயிர் விற்பதைவிட்டு கோவிந்தா தாமோதரா மாதவா கிருஷ்ணாவென்று வித்துக்கொண்டுபோகிறையே அந்தப்படி நின்கூடையில் கிருஷ்ணனைக் காட்டுமென்று வற்புறுத்திக்கேழ்க்க அதற்கந்தகோபிகை தன்கூடையை இறக்கினமாத்திரத்தினில் அதிலிருக்கும் தயிர்ப்பானையிலிருந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வெளிப்பட்டுவந்தார் அவரைக்கண்டு அங்குள்ளஜனங்களெல்லாம் வெகுவாக அதிசயிக்கவில்லையா அன்றியும் அரிதாகியும் ஆச்சரியப்படும்படியாகவும் காரியங்களை செய்துக்கொண்டு அச்சுதனாகியபாண்டுரங்கனிருக்கவில்லையா அதுபோல ஸ்ரீஹரியானவர்சாவந்தியா மாலியின் வயிற்றினில் கட்டுப்பட்டிருப்பது அருமையா என்றுசொல்லிகிரந்தகர்த்தாமேல்நடந்த சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினார்.

இவ்வாறு ஸ்ரீபாண்டுரங்கநாதரும் சாவந்தியாமாலியும் இங்கு பரமானந்தத்துடன்வசனித்துக்கொண்டிருக்க அங்கே தோட்டத்தின் புரம்பாக விருந்த நாமதேவரும் க்ஞானதேவரும் இதென்ன பகவான் தாகமருந்தி வருகின்றேனென்று சொல்லிச் சென்று வெகுநேரமாகியு மின்னும் வரக்காணோமே என்று மனதினில் துக்கமடைந்தவர்களாகி மாதவ னெவ்விடத்திற் கேகினாரோ அதைக்காணவேணு மென்றுக் கருதியும் இத்தோட்டத்திற்குள் ஹரிக்கி என்னநொந்தரவு நேரிட்டதோ ஒன்றும் மனதிற்குத் தோன்றவில்லையே என்றுக்கருதி அடிக்கடி துக்கப் பட்டுகொண்டும் மனதினில் கலவரங்கொண்டு அந்ததோட்டத்திற்குள்ளே சென்று சாக்ஷாத்ஹரியை அத்தோட்டமெங்கும் தேடித்தேடித் திரிந்துக்கொண்டே வருகையில் அங்கோரிடத்தினில் பரமபாகவதரான சாவந்தியாமாலி உட்கார்ந்துக் கொண்டிருக்கக் கண்டு அவர் திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டும் ஓபரமபாகவத சிகாமணியே உமது தோட்டத்திற்குள்வந்த சாக்ஷாத் பாண்டுரங்கநாதன் எப்படிப் போயினாரோ என்னமாயினாரோ அவரை இத்தோட்டமுழுமையுந் தேடித்தேடித்திரிந்து வேசாரிஎங்குங் காணாமல் தேவரீரிடம்வந்தேன் தயவுசெய்து ஸ்ரீஹரியாகிய பாண்டுரங்கனை என்கண்களுக்குக் காட்டுமென்று வெக்கிவெக்கி யழுதுக்கொண்டிருக்க அப்போது சாவந்தியாமாலி பகவானுடன் லயித்துக்கொண்டு உலகத்தைமறந்து தலைவனிற்கலந்து யிருந்தமையால் நாமதேவர் வந்ததும் தன்றிருவடிகளை விடாதுபிடித்துக்கொண்டு ஸ்ரீஹரியைக் காட்டுமென்று சொல்லியதுந் தானறியாமல் பகவானுடைய திருவடிகளில் சொக்கி யிருந்தார் அதையறியாமலந்த நாமதேவர் சாவந்தியா மாலியின் தேகத்திற்குள் சொகுசாகிய ரூபங்கண்டு வியந்து ஸ்ரீஹரியானவர் இவருடைய வயிற்றினிற் புகுந்து ஒளித்திருக்கின்றாரென்று அப்போது கண்டுகொண்டு அந்தநாமதேவர் வாக்குக்கு மனதுக்குமெட்டாத பரம்பொருளைச் சிந்தனை செய்துக்கொண்டே ஓபரந்தாமா ஆயிரநாமா அரக்க குலத்திற்கு பீமா பூரணக்கலைகளுடைய முகசோமா என்மீது கிருபைபாரும் இந்த சாவந்தியர் மாலியின் வயிற்றிற்குள் ளொளித்துக் கட்டுப்பட் டிருப்பதற்கெப்படி இஷ்டமுண்டாயிற்றோ இப்புண்ணிய புருடன் தன்வயிற்றினில் தேவரீர் கட்டுப் பட்டிருக்க என்னநோன்பு நோற்றாரோ என்றவரைப் புகழ்ந்து

ஓபாண்டு ரங்கநாதா தேவரீருடைய சுந்திரரூபத்தை
யும் முககமலத்தையும் யான் கண்டு சேவிக்கும்படி
நன்றாகக்காட்டி மதுரமாக மொழியுமென்று துரை
யடைந்து தீனமொழிகளைப் பகரக்கேட்டு எப்படிப்
பட்ட பாபங்களையும் போக்குவதேதனக்கு சொரூப
மாகக் கொண்டு விரிதுபூண்ட அப்பாண்டுரங்கனுதன்
சாவந்தியா மாலியின் மனனகமலத்தினி லிருந்தபடி
யே நாமதேவரை நோக்கிக் கருணையுடன் ஓநாமதே
வரே யான் வெளியில் வரும்படியான விதமாக இந்த
சாவந்தியா மாலியைப் பிரார்த்தனை செய்துக்கொள்
ளுமென்ற மாத்திரத்தில் அந்தநாமதேவர் சாவந்தி
யாமாலியை வெகுவாகப்புகழ்ந்து நீதிவசனங்களினு
லே கொண்டாட அந்த சாவந்தியாமாலி கேட்டுநாம
தேவரைநோக்கி யப்போது மொழிந்தார் அதென்ன
வெனில் ஓநாமதேவரே சாக்ஷாத் பண்டரிநாதன்நின்
மீதுசொல்லி முடியாத பிரியம் வைத்துக்கொண்டுதா
னிருப்பார் அன்றியும் கண்டிப்பாக உனக்கிப்போ
துண்டாகிய ஆவல் தீரும்படிதெரிசனங்கொடுப்பார்
மேலும் ஜென்மாந்தரங்களில் நீர்செய்தபுண்ணியபல
ங்களினுல் எங்கும் வெகுகீர்த்திப் பிரதாபமடைந்தி
ருக்கும் ஸ்ரீபாண்டுரங்கன் நினக்குமெத்த நேசனுகி
யிருப்பது சொல்லவுங் கருதவுங்கூடாதமேன்மையல்
லவா வென்றும் சொல்லிக்கொண்டே யந்தசாவந்தி
யாமாலி தன்வயிற்றின்மீது சுத்திக்கொண் டிருக்கும்
வேட்டியை யப்போது களைந்த மாத்திரத்தில் ஸ்ரீபா
ண்டுரங்க நாதன் சாவந்தியாமாலியின் மனனகமலத்
தைவிட்டு வெளிப்பட்டுக் கீழேகுதித்து நாமதேவர்
கண்டு கொள்ளும்படி வந்தார் இப்படி வெளிப்பட்டு
வந்த ஸ்ரீஹரியின் திருவடிகளை நாமதேவர் பிடித்துக்
கொண்ட வண்ணமே கண்களில் நீரானதுகால்வாயில்
நின்றும் பெருகியோடுவதைப் போல தாரைதாரை
யாக விட்டுக்கொண் டிருப்பதைப் பண்டரி நாதன்
கண்டு பூததயை பச்சாத்தாபமுடைய வராகித் தன்
பீதாம்பரத் தொங்களினுலே நாமதேவருடைய கண்
ணீரைத் துடைத்து ஓநாமதேவரே உமக்கித்தனை
விசனமுண்டாவதற்குக் காரணமென்ன இப்படி யழு
வதென்னஏநிப்படிதீனமதியடைந்தாயென அதற்கு
நாமதேவர் ஓசுவாமி யானென்னசெய்வேன் இங்கு
சந்துஷ்டியுடன் உமது சொகுசாகிய முககமலத்தின்
சேவை யில்லாமையினுலே சொல்லிமுடியாத ஆவலு
ண்டாகும் அதினுலே மனம்மெத்த தவிக்கின்றனநே
சராகிய உம்மைக்காணுத விஷயத்தினில் யான்பைத்
தியக் காரனுகுவேன் அப்போதே அன்றியும்அன்னை
யும்நீயே தந்தையும்நீயே யாவத்துமானபந்துக்களும்
நீயே ஓஜெகதீசா ஸ்ரீஹரிசர்வேசா என்று விண்ணப்

பஞ் செய்யக்கேட்டு அந்தபாண்டு ரங்கநாதரும் சுக்
ஞானபரனுகிய நாமதேவரை நோக்கி நகைத்துக்
கொண்டே சொன்னுர் அதென்னெனில் ஓய்நாமதே
வரே நாம்மூவரும் இப்போது அவ்விடத்திற்கு நடக்
கலாம் வாருங்க ளென்றுசொல்லி அதிகவேகமாகஸ்ரீ
ஹரியானவர் போகையில் அப்போது கூர்மதாசருக்
குண்டாகிய சுபசகுணங்களை என்னென்று சொல்லு
வேன் கெருடன் இடமாயின வனமிருகங்கள் வலமா
யின இரண்டு பிராமணர்கள் எதிரினில் வந்தார்கள்
மூன்றுகன்னிகைகள் தீர்த்தமெடுத்து எதிர்வந்தார்
பூனையிடமாயின பாம்புவலமாயின வளையற்காரன்
எதிர்நோக்கிவந்தான் பால்குடம் தயிர்குடம் மதுக்
குடம் எதிரேவந்தன இப்படிபற்பலவிதசுபசகுனங்க
ளெல்லா முண்டாகக்கண்டு அந்தக்கூர்மதாசர் தன்
மனதிற் ஜெனித்த சந்தேகங்க ளெல்லாம் போக்கி
வெகுசந்துஷ்டராகி திடச்சித்தத்துடன் ஸ்ரீஹரியைப்
பாடிக் கொண்டிருந்தார் அங்கு நாமதேவர் க்ஞான
தேவர் பாணடுரங்கநாதர் இவர்கள்மூவருஞ் செல்லு
கையில் ஸ்ரீஹரியானவர் முன்னுதாகச்சென்று கூர்ம
தாசரும் தெரிசனந்தந்தார் அக்கூர்மதாசரும்ஸ்ரீஹரி
யைக்கண்டு சேவித்து உடனே விழுந்துபணிந்து எழு
ந்து அந்தஸ்ரீஹரியானவர் தன்மீதுகிருபையுண்டாகி
எழுகாதம் நடந்துவந்து தனக்கு தெரிசனந் தந்தபடி
யால் பரமானந்தமடைந்து ரக்தியுடன் அந்தக்கூர்ம
தாசர் ஸ்ரீஹரியின் சரணகமலங்களைப் பிடித்துக்கொ
ண்டு வாடை காற்றினு லடியற்றுவிழும் மரத்தைப்
போலே திடீலென்று விழுந்து எழுந்திராமற் கிடக்க
அதைக்கண்டு ஸ்ரீஹரியானவர் தன் கரங்களினுலே
கூர்மதாசரை எழுப்பி ஓகூர்மதாசரே நீரேன்விசாரப்
படுகிறீர் விசாரத்தை விடுத்து உமக்கு என்னவரம்
வேண்டுமோ அதைக்கேளும்தடையின்றித்தருகிறேன்
என்றுசொல்ல இந்தவசனங்களை யந்தக் கூர்மதாசர்
கேட்டு சந்துஷ்டராகி ஓபகவானே எப்போதும்தன்
னிடத்திலேயே விட்டுப் பிரியாமல் சேவைதந்துக்
கொண்டிருக்க வேண்டியதே எனக்குவேண்டியதொ
ன்று கிருபை செய்தால் போதுமென்று சொல்ல
அதற்கு ஸ்ரீஹரியானவர் அந்தப்படியே கேட்டவரத்
தை யப்போதே கொடுத்து ஸ்ரீஹரியானவர் சென்ற
பின்பு அந்தக்கூர்ம தாசரை விடாமல் ஸ்ரீஹரியான
வர் தன்ரூபத்தை யவர் சதாதெரிசித்துக் கொண்டி
ருக்கும் படியாக தோற்றமாயிக் கொண்டிருந்தார்.
இப்படிக்கி யந்தப் பாண்டுரங்கநாதன் கூர்மதாசரு
டன் எப்போதும் கலந்துக் கொண்டிருக்கும்விந்தை
யை ஆடிமாசத்தினில் அப்பண்டரிபுரத்தினில் நடக்
கும் பிரமோற் சவங்தோரும்சகலஜெனங்களும்அங்கு

வந்து ஸ்ரீஹரியையும் கூர்மதாசரையுங் கண்டு சேவித்தும் ஆனந்தப் பரவச மடைந்தவர்களாகிப் பின்பு பண்டரிக்குச் சென்று பிரம்மோற்சவத்தை சேவித்துப் பரமானந்த மடைந்துப் போவார்கள் கூர்மதாசரும் இடைவிடாமல் ஸ்ரீஹரிபாண்டு ரங்கநாதனை சேவித்துக் கொண்டேயிருந்து வெகு காலத்திற்குப் பின்பு ஸ்ரீவைகுந்தமா நகரமடைந்தார்.

வாழி விருத்தம்.

கார்மலிக்கடல்சூழ்ந்தகளிதருந் தலத்தினிலமர்ந்தோன்வாழி
ஏர்பொலிஹரியின்சேவையென்றுஞ் செய்வோன்வாழி
பார்மிசைபக்தர்கட்குள் பரமசாதுவாழியே
கூர்மதாசர்பொற்பதங்கள் குணமொடொன்றும்வாழியே.

கூர்மதாசர் சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்:

ஸ்ரீமத்

சூரதாசர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

பாரினிற்பக்திசெய்துப் பங்கயக்கண்ணன்றன்னைப்
பூரணச்சந்திரனென்னப் போற்றிடமாந்தரெல்லாங்
காரணவஸ்துவுடன்கலந்து மெய்மறந்துநின்றச்
சூரதாசர்தன்சுந்திரப்பதந் தொழுதுய்குவோமே.

கதையின் வரலாறு.

செந்திருகடாக்ஷம் பொருந்தி திருமாமணிமண்டபமிலங்கும் பரமபதத்திற்கு நிகரான துவாரகையென்றொரு பட்டணமுளது அப்பட்டணத்திற்குநிகரான பட்டண மிவ்வுலகினி லெங்குமில்லை அப்படிப்பட்ட துவாரகா நகரத்தினில் இருக்குஞ்சகலபிராணிகளையும் பரிபாலனஞ்செய்துக் கொண்டு ஸ்ரீகிருஷ்ண பகவானிருக்கையில் அக்ரூரர் வழக்கப்படி சத்தியபாமை வீட்டிற்கு ஒருநாள் எழுந்தருளக்கண்டு அந்த சத்தியபாமை யந்த அக்ரூரர்க்கெதிர்சென்றழைத்து வந்து ஆசனத்திரித்தி விதிப்படி பூசித்து சோடச உபசாரங்களினால் அவர்மனதை சந்துஷ்டி யடையும்படி செய்துக்கொண்டேஅப்பரமபாகவதரைநோக்கி ஓமகானுபாவரான அக்ரூரரேகிருஷ்ணபகவானுடைய செய்கைகளை யானென்ன வென்று சொல்லுவேன் ஆகிலும் அவருடைய கபடவஞ்சனைகளை யொருவராகச் சொல்லுகின்றேன் கவனமாகக்கேளும் அதென்னவெனில் ஒருபுருடனுக்கு நான்கு மனைவிகளிருந்தால் அந்தநால்வரையுஞ் சமமாகப் பார்ப்பது உத்தமர்களுடையலக்ஷணம் அப்படிக்கிப்பாராமல் மூன்று மனைவிகளிடத்தில் விருப்பமும் மத்த], ஒருமனைவியி

ணிடம் வெறுப்புங் கொண்டிருப்பது உத்தம புருஷர்களுக்கு நீதியாமோ யாவரிடத்திலும் ஒரேவிதமாய் நடப்பதன்றோ தர்மம் இதைவிடுத்து வஞ்சகமாய் நடப்பது தர்மமாமோ இதுமறு நீதிக்கடுக்குமோ அடுக்காது ஆகையால் ஓ அக்ரூரரே என் வீட்டிக்கு ஹரிவராம லிருப்பதினாலே தாமரையிலைத் தண்ணீரைப் போலத் தாதுகலங்கியிருப்பேன் அன்றியும் அந்த ஹரியானவர் பிரியத்துடன் இங்குவராம லிருப்பதினாலே வனிதைகளிலே யான் மெத்த துரத்ருஷ்டமுடையவளாகும் மேலும் ஸ்ரீஹரியைப்பாராம லிருக்கும் ஒவ்வொரு க்ஷணப் பொழுதும் எனக்கு ஒவ்வொருயுகமாகத் தோன்றுகின்றன என்னைப் போலுங் கொடும் பாவிகளிவ்வுலகத்தினி லுண்டோ ஒவ்வொரு வேளையில் பிராண நாதனில்லாமல் தனித்திருக்கும்படியான இத்தேகத்தை அக்கினியில் போட்டெரித்து பஸ்பமாகச் செய்தால் மெத்த நலமாகவிருக்குமென்று தோன்றுகின்றது எத்தனைவிதத்தில் மனதைத் திடப்படுத்தினபோதிலும் மனமானது அவ்வழியில் நிற்காமல் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கின்றதே இதற்கு நானென்ன செய்வேன் எவ்வாறு கிருஷ்ணபகவான் பிரிவை சகித்துயிர் தரிப்பேன் இனியின்றிரவு தவிர்த்து உண்மையாக என்னுயிரைத் தரப்பேன் என்று மொழிந்துப் பின்னுஞ் சொல்லுகின்றாள் ஓ அக்ரூரரே அந்தஸ்ரீஹரி இங்குவருகிற விதத்தை யுத்தேசித்து என்னைப் பற்றி யாதாகிலுமொரு தந்திரஞ் செய்யும் ஸ்ரீஹரிபக்தர்களில் நீமேலான உத்த மராகையால் தயவுசெய்து எப்படியாகிலும் ஸ்ரீஹரிஎன் வீட்டிற்கு வரும்படியான முயற்சியைத் தேடுமென்று அம்மங்கை மெத்தவும் வேண்டிக் கொள்ளக் கேட்டு அந்தஅக்ரூரர் இம்மங்கைக்கு விரகதாப மேலிட்டிருக்கின்றது இவவளவு அவசரத்துக்கு ஸ்ரீரியையழைத்துக் கொண்டு வருவதற்கு மெத்த நாழிகையாகும் அதற்குள் ளிம்மங்கைப் பிராணனை விடுவதற்கு சித்தப்பட்டு விடுவாளென்று தனக்குத்தானேயோசித்து அந்தஅக்ரூரர் ஸ்ரீஹரியைபோல உருவ மெடுத்து அன்றிரவினில் சத்தியபாமைவீட்டிற் கெழுந்தருளினர் அவரைக்கண்ட மாத்திரத்திலேயந்த சத்தியபாமை சாக்ஷாத்கிருஷ்ணமூர்த்தியே எழுந்தருளினாரென்றுகருதிஅவருக்குபசரிக்காமலும் எதிர்கொண்டு சொல்லாமலுங் கோபத்துடனிருக்க அப்போது கிருஷ்ண மூர்த்தி யாகிய அக்ரூரர் சத்திய பாமை யினருகிற் செல்ல அந்தசத்திய பாமை நன்றாகப் பரிசீலனஞ் செய்து இவர்கிருஷ்ண மூர்த்தியல்ல அக்ரூரன் நம்மைமோசப்படுத்த வெண்ணி ஸ்ரீகிருஷ்ண பகவானைப்போல உருக்கொண்டு வந்தானென்றெண்ணி ஓ அக்ரூரரே நினதுருவத்தை மாத்திவேறொரு ரூபத்தை யெடுத்துக் கொண்டிங்கு வந்து என்னையே மாத்துவதற்கோ இவ்வண்ணம் வந்தது இப்படிக்கிச் செய்ய யெத்தனித்ததுமக்கு நீதிதானோ கிட்டிவரவேண்டாம் தூரமாகவேநில்லு மென்று சொல்லிக் கடுஞ்சினமடைந்து ஓ அக்ரூரரே இவ்வுலகத்தினில் விரைவாகநீர் அந்தக நாகிப்பிறக்கக் கடவாயென்று சபிக்க அச்சாபத்தை அக்ரூரர் ஏற்றுக் கொண்டு மெத்தவினயமாக ஸ்ரீஹரிக்கி இச்செய்தியை விண்ணப்பஞ் செய்தார் அதெப்படியெனில் மனம் வாக்கு காயமெனுந்திரிகரணங்களும் நிர்மலமானமருதுடன் ஓபதிதபாவனபரமதயானிதி இம்மங்கையின் பிராணத்தைக்காப் பதற்காகதேவரீருடைய ரூபத்தை யெடுத்தேனேயன்றி விஷய சிந்தைகொண்டு தேவரீருடைய ரூபத்தை யெடுத்தவனல்ல இந்த உண்மை சகலபிராணி கோடிகளின் உள்ளும் புரம்புமாகவசித்துக் கொண்டிருக்குந் தேவரீருக்குத் தெரியாததொன்றுண்டோ அடியேன் சொல்லுவது பொய்யோ ஒரு கணைக்கடலே கார்வண்ணனே கமலக்கண்ணனே அடியேன்மீது கிருபைக் கண்ணோக்கம் வைத்துப் பாரும் என்னைக் காரும் நிரபராதியான அடியேன் முன்னம்வாரும் ஸ்ரீஹரியே யென்றுத்தீனனாகித்துதி செய்யக் கேட்டு கிருஷ்ண பகவான் அக்ரூரர் முன் வந்து தெரிசனந்தந்து ஓ அக்ரூரரே நீர்செய்தது உபகாரமா யிருந்த போதிலும் பார்ப்பவர்க்கிது குற்றமாகவேதோன்றும் ஆகையால் நீர் தடுத் தோன்றும் பேசாமல் பூலோகத்தினில் கலியுக பிரஜைகளைப்பக்குள்ளாகும் படிச்செய்யும் பொருட்டுஞ்தொ அவதிசெய்யு மென்றி நேமிக்கக் கேட்டு அக்ரூரர் அன்னேமனத்தைச் சிரமேற் கொண்டவராகி விடை பெற்றுச்சென்றார்.

இவ்வண்ணம் அக்ரூரர் பகவன்னே மனத்தைப் பெற்றுக் கொண்டு போயினபின்பு ஸ்ரீகிருஷ்ணபகவான் சத்தியபாமையை நோக்கி ஓமாதே நீயும்பூலோகத்தினில் அந்தகியாகிப் பிறந்து அந்த அந்தகனைக் யதிரினில் பார்க்கும் வேளையில்யான்வந்து சந்திசெய்கிறேன் அப்போது என்பின் வருவாயென்று சொல்ல அந்தப்படியே சத்தியபாமையும் அந்தகியாகி அவதரித்தனள் ஸ்ரீஹரியின் கட்டளைப்படியக் ரூரரும் உலகத்தினில் அந்தகனாகிப்பிறந்துசூரதாசரென்றபேர்கொண்டு ஸ்ரீஹரிபஜனையனுதினமுஞ் செய்துக்கொண்டிருந்தார் அன்றியும் மேன்மையாகிய கவிகளையுங் கீர்த்தனங்களையுஞ் செய்து ஸ்ரீபரந்தாமனைப்பாடியாடியும் பிரபந்தங்களைச் செய்து அரங்கேற்றுவித்து

ஸ்ரீமதுராநகரத்திற்குச் சென்று ஸ்ரீஹரிசந்நிதியையடைந்து அப்பகவானுக்கு தீர்க்கமாகவிழுந்து தெண்டனிட்டு எழுந்து நின்று நாராயணா நாதபாராயணா எங்கும் பரிபூரணா ஜெகத்காரணா முன்ஜென்மத்தினியாதொருஅபசாரமுஞ் செய்யாமலிருக்கையில்எனக்குக்கோரமானசாபத்தைக் கொடுத்தீர் இவ்வுலகின்கண் என்னை அந்தகனாகயவதரிக்கும்படி நேமித்தீர் ஆனால்யான் ஒருஅபசாரம்பிருந்தாவனத்தினிற்செய்திருக்கின்றேன் அதென்னவெனில்கம் சனுடையஏவலினால்யான்வந்துபிருந்தாவனத்தையடைந்து களங்கமற்ற தேவரீரை யழைத்துக் கொண்டு மதுரா நகரத்தை நோக்கி வருகிற சமயத்தினில் எசோதையும் கோபிகளும் யாவரும் என்னைப்பார்த்து இவனெங்கிருந்துவந்தான் எங்களுயிருக்குயிரான ஸ்ரீகிருஷ்ணபரமாத்மனை அழைத்துக்கொண்டுபோகுரானேஇவன்பேர் அக்ரூரனாகில் நமது கண்ணனைப் பிரியச்செய்வானோ இத்தனை காலமாய் இந்தக் கண்ணனும் நாமும்நகமுஞ்சதையைப் போலவும் மலரும் மணமும் போலவும் கரும்பும்ருசியைப்போலவும்பாக்குஞ்சுவையைப்போலவும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் மெத்த அன்பாகவிருந்த நம்மை இந்த துஷ்டன் வந்து பிரியும்படிச்செய்து ஸ்ரீகிருஷ்ண பகவானையும் அழைத்துக்கொண்டு போகிறானே எப்போதிந்த கிருஷ்ணனை மறுபடியும் காணப்போகிறோ மென்றும் கிருஷ்ணன் பிரிவாற்றாமையாய்யாவரும் கண்ணீர்விட்டழுதுதேகவியோக மடையு மவர்களைப் போலமெய்சோர்ந்தார்கள் இதனாலெனக்கபசாரம் நேரிட்டது அவர்கள் கோபமே விசேஷமாகி எனக்கிந்தவீன ஜென்மமுண்டாயின ஓபரமபாவனா இவ்வுலகின்கண் என்மனதினில் சத்தியபாமையைக்கருதினவனேயல்ல ஓபங்கயக்கண்ணா நீலமேகவண்ணா என்றுசூர தாசரும் தோத்திரஞ் செய்தார் ஸ்ரீகிருஷ்ண நோக்கிக் கண்ணீர்சோர ஈனசுரத்துடன் தாமரைக்கண்ணன் பஜனை செய்தமாத்திரத்தில் அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்சுயரூபத்துடன் சூரதாசர் முன்னந்தோன்றினார்.

அதெப்படியெனில் சங்குசக்கிரங்களும் சாரங்கம் வாள் கெதையெனும் பஞ்சாயுதங்களையும் ஆரகிரீடகேயூர கடககங்களை கௌஸ்துப மாலையும் மேகலாபரணமும் இடையினிற் பீதாம்பரமும் சதுர்ப் புயங்களுடன் நீலமேகசியாமள ரூபமானதுபிரகாசிக்க சூரியசந்திரனைப் போன்ற நேத்திரங்களைப் பொருந்தி சகல அலங்காரத்துடன் சூரதாசருக்கு சேவைதந்தார் அந்தச்சூரதாசர் அப்பகவானைக்கண்டுவிழுந்து பணிந்து எழுந்து நின்று தொழ அப்போதுபகவான் சூரதாசரை நோக்கிஓபரமபாகவத சிகாமணியேஉனக்கு என்னவரம் வேணும் அதைத் தெரியப்படுத்துவீரேயாகில் அவ்வரத்தைதடையின்றித் தருகிறேன் கேளுமென அதற்கு சூரதாசர் என்குல தெய்வமே எனக்கு வேண்டியவரம் எப்போதும் அந்தகனாகவிருக்கும் வரம்ஒன்றேதரவேணும்அன்றியும்யான்பிறந்ததுமுதலாக நாளதுவரைக்கும் வெளிவிஷயங்களைப் பாராமலிருந்த யானிப்போது வெகுதிட்டமாகதேவரீருடைய திவ்யசேவை யாகிய விபவத்தைக் கண்டேன் மேலும் என்னுடைய மனன் கமலத்தினில் தேவரீருடைய திவ்யமங்க விக்கிரகத்தை ஏளப்பண்ணி நிறுத்தினேன் அனித்தியமான பதார்த்தங்களேதுவும் என்மனதுக்கொப்பமாட்டாது என்றசூரதாசரை முன்போல அக்ரூரராகும்படிக்கிருபை செய்யவுடனே யந்த அக்ரூரர் பகவானைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடத்திற்குச் சென்றார் பகவானும் மாயமாய் மறைந்து போயினார் இப்படிக்கந்த அக்ரூரர் போயினபின்பு இவவுலகின்கண் அவந்தியெனு மொருபெரிய பட்டணமானது அதற்குஅதுவே நிகரென்றும் வேறொருபட்டணமானது அதற்குச்சமமாகயில்லையென்று சொல்லும்படிசகல சம்பத்துகளுமன் நிறைந்திருந்தன அப்பட்டணத்தை வெகுநீதியாக அரசனொருவன் ஆண்டுக்கொண்டிருந்தான் அவ்வரசனிடத்தில் சங்கீதற்திற் தேர்ச்சிபடைந்த பாடகர்கள் ஐந்நூறுபேர் களிருக்க அவர்களில்தான்சேன் என்பவன் மெத்தசமர்த்தன் வீணாகானஞ் செய்யும் வித்தையில் அதிகசிறந்தவனாகியும் வல்லமையுமுண்டாயிருந்தான் அன்றியும் இவன்செய்யும் வீணாகானத்தின் மகிமையினால் விளக்குக்குத்தைலமின்றி அணைந்து போவதாயிருக்கினும் அவ்விளக்கு வெகுகாந்தியாக யெரிவதுபோல காணப்படும் ஆகையால் பூபாலன் அந்ததான் சேன் என்பவனை ஒருநாள் புகழ்ந்து உன்னுடைய இனிமையும் அருமையுமான கானத்தின் பெருமையும் இவ்வுலகத்தினி லுன்னைப் போல கானவிசேஷஞ் செய்ய வல்லவர்கள் ஒருவருமே யில்லை யில்லை யென்றான் அதைக்கேட்டுதான்சேன் அரசனை நோக்கி பூபாலரே இவ்வுலகினில் பாட்டனுக்குப்பாட்டன் அப்பனுக்கப்பன் இருந்தன்றோ பேரனென்றும் பிள்ளையென்றுஞ் சொல்லும்படி நேரிட்டது அதைப்போல எத்தனையோ பேர்கள் வீணாகானஞ் செய்வதில் மகான் களிருப்பார்கள் வீணிலென்னைப்புகழ்வது நீதியல்ல அன்றியு முன்னமொருக்கால் பிரமதேவன் தனக்கு நிகரான தெய்வம் வேறொன்று மில்லை யென்றும் தானே யாவருக்கு மேலான தெய்வ மென்றும் தன்னாலேயே சாவப்பி

ராணிகளையுஞ் சிருஷ்டிக்கப் பட்ட தென்றுங்கருதி
கெர்வமடைந்திருக்கக்கண்டு விசுவா மித்திரமுனிவர்
ஸ்ரீஹரி வஸ்த்து பூர்த்தியாகி எள்ளுக்கு ளெண்ணெய்ப்
போல எங்கும் நிறைந்திருப்பதைக்காட்டிப் பிரமதே
வன் கெர்வத்தை யடக்கினார்மேலும் வருணன் தன
க்கு நிகரான பெருத்த கம்பீரமுடைய சமுத்திர
மெங்கு மில்லையென்றுக் கடலரசன் சொல்லி கெர்வித்
திருந்தான் அதையகஸ்திய ருணர்ந்துக்கடல் ஜலத்
தை யெல்லாம் மெத்த லெளிதில் ஆசமனஞ் செய்து
வருணராஜன் மதத்தையடக்கினார் அன்றியும் நாரதர்
ஒருகாலத்தினில் ஆரணியத்திற்குச் சென்று தவமி
யற்றிக் கொண்டிருந்து சிலவருடங்கள் கடத்தி யொ
ருநாள் வைகுந்தத்திற்குச் சென்றுபகவானைக்கண்டு
சேவித்து ஓசுவாமி விடை தரவேணுமென்று மெத்த
வும் அவசரப்படுவதைக்கண்டு பகவான் நாதரை
நோக்கி ஓயாழ்வல்லோனே நீரென்ன மெத்த அவ
சரப்படுகிற காரண மென்னவென அதற்கு நாரதர்
ஓசுவாமி யான் சிலவருடகாலங்களாகக் காட்டிற்குச்
சென்று தவமியற்றிக்கொண்டு மெத்தசுகமாக விருக்
கின்றேன் நாட்டினில் சஞ்சரித்துக் கொண்டிருந்தால்
தேவரீருடையமாய்கையானது புத்தியைசபலமடை
யச் செய்தும் அதிகதிரிச்சலினால் திரேகத்திற்குக்
கஷ்டமேயன்றி அணுவளவேனும் சுகமென்பதே
யில்லையாகையால் இப்போது யானந்தக் காட்டை
விடுத்து நாட்டையடைந்த மாத்திரத்தில் எனக்கு
யேதோ ஒருவித விகாரமாக யிருக்கின்றது ஆகை
யால் யான்சீக்கிரம் நாட்டை விட்டுக் காட்டை யடை
ந்துப் பரமசுகமாகிய தவஞ் செய்துப் புண்ணிய லோ
கத்தை சீக்கிர காலத்திலேயே அடைகிறே னென்று
மொழிவதைக் கேட்டுப் பகவான் ஓ நாரதரே உலக
மாய்கை யானது பிரம சொரூபராகிய சுகரைக்கூட
மூன்றே முக்கால்நாழிகை ஆட்டிவிட்டது அதனாலு
ண்டாகிய சுகதுக்கங்களை யனுபவித்தபின் பேசுகத்
தின் வயிற்றை விட்டு வெளிப்பட்டார் இந்தப்படியே
விசுவாமித்திரர் முதலாகிய அனேக ரிஷிகள் மாய்
கைக்குள் பட்டு மெத்த பங்கப்பட்டுத் தேர்ச்சியடைந்
திருக்க அம்மாய்கை யானது நாட்டிலிருப்பவர்களை
விடுத்துக்காட்டி லுள்ளவர்களை மாத்திரந்தொடர்ந்து
கஷ்டப்படுத்துமோ அப்படிக்கியம்மாய்கை விடமா
ட்டாது நாட்டிலிருப்பவர்களென்றுங் காட்டிலிருப்ப
வர்களென்றும் அம்மாய்கைக்கு பக்ஷபாதங் கிடை
யாது இதையுணராமல் நாட்டை விட்டுக்காட்டிற்குச்
சென்று தவஞ்செய்துக் கொண்டிருந்தால் மாய்கை
யும்மை வந்தணுகாதென்று சொல்லுவது நன்றாயிரு
க்கின்ற தென்று தடுத்தும் நாரத முனிவர் பகவான்
மொழியையுந் தட்டிவிட்டு விடை பெற்றுக்கொண்டு
நாட்டை விட்டுக்காட்டை நாடிப்போகையில் பக
வான் தன்னுடையமாய்கையினால் அங்கொருபட்டண
முண்டாகச்செய்து அப்பட்டணத்தையாளும் அரச
னுக்கு அழகினில் மிகுத்தப்புதல்வி யிருக்க அக்கன்
னிகைக்குத்தக்கவரன் வேண்டிதேச தேசத்தரசர்
களையும் வரவழைத்து அவ்வரசன் தன் புதல்வியுட
னச்சபாமண்டபத்திற்குவந்து இதோயிருக்கும் அர
சர்களில் யாரைமணம் புரிய இச்சை யுண்டாயிருக்கி
ன்றதோ அந்தராஜகுமாரனைக் காட்டு மென்றுசொல்
லிக் கொண்டிருக்கிறபோது நாரதமுனிவரங்குவந்து
பட்டணத்தினழகையும் ரதகஜதுரகபதாதி சேனை
களின் பெருத்த கூட்டத்தையுங் கண்டு இப்பட்ட
ணத்தி லென்னமோ விசேஷம் அதைதெரிந்துக்கொ
ண்டு வரலா மென்றுச் கருதி அப்பட்டணத்திற்குட்
புகுந்து ராஜசபையையடைந்து அக்கன்னிகையைக்
கண்டு மெத்தமோகங் கொண்டு அருகினிற் சென்று
ஓமாது சிரோமணியே இந்தராஜகுமார்களில் எந்த
ராஜகுமாரனை மணம்புரியக் கருதினை சொல்லுமென
அதற்க்கன்னிகை ஓமுனிவரேயான் பூலோகத்துராஜ
குமாரர்களை மணம்புரியேன் சர்வலோகசரண்யரா
கிய சாக்ஷாத் ஸ்ரீமகாவிஷ்ணுவை விவாகஞ் செய்துக்
கொள்ளுவனேயன்றிச்சாமானிய மனிதர்களை மணம்
புரிவதில்லையெனக்கேட்டு அந்தநாரதர் இதற்குநா
னென்ன செய்வேன் எப்படி யுயிர்பெற்றுய்வேன்
என்று மனக்கவலைகொண்டு தேவலோகத்தை நாடிச்
சென்றார்.

இந்தப்படியந்த நாரதமாமுனிவர் பகவானிடத்
தில்தான் பேசிவந்த மாய்கையின் சவிஸ்தாரங்களை ம
றந்து விஷ்ணுமாய்கையினாலுண்டாகிய கன்னிகையி
ன் மீது அடங்காமோகங் கொண்டுதேவலோகததை
யடைந்து தேவேந்திரனைக்கண்டு தவஞ்செய்யும்பொ
ருட்டுத்தான காட்டை நாடிச் சென்றதும் அங்கோர்
பட்டணத்தினில் கன்னிகையொருவள் மகாவிஷ்ணு
வையன்றிவே றொருவரையும் மணம்புரிவதில்லை யெ
ன்று சொல்லியதும் அக்கன்னிகையின் மீதுதனக்கு
ண்டாகிய மோகத்தையுந் தெரியப்படுத்தி ஓதேவரா
ஜனே ஸ்ரீமகா விஷ்ணுவின் ரூபம் எனக்குண்டாகும்
படிக்கிருபை செய்துக்காமாக்கினி யைப்போக்கும்
அக்கன்னிகையை மணம் புரிந்துக்கூடிக்குலாவும்படி
கிருபாகோக்கம் புரியுமையாவென்று வேண்டிக்கொ
ண்டார் அதற்குதேவராஜன் குலுங்கச்சிறித்து ஓநார
தரே உமதிஷ்டப்படி ஸ்ரீமகாவிஷ்ணுவின் சொரூப
முனக்குண்டாகக்கடவதென்று ஆசிகூறினார் அந்தப்

படியே நாரதமுனிவருக்கு ஸ்ரீமகாவிஷ்ணுவின் ரூபமுண்டாயின அந்தரூபத்தைக் கொண்டபோதிலும் எல்லா அவயவங்களும் மகாவிஷ்ணுவைப்போல அமைந்திருந்தபோதிலும்முகம்மாத்திரங்கரடி முகமாகவிருந்தன இதைநாரதரறியாமல் கன்னிகையின் மீதுதனக்குண்டாயிருக்கும்மோகாந்தகாரத்தினலும்நாமமகாவிஷ்ணுவின் ரூபத்தையடைந்தோம் எப்படியும் அக்கன்னிகைநமக்கே மாலையிடுவாளென்றமமதையினலும்விரைந்தோடி வந்துசபாமண்டபத்தையடைந்து அங்கோர்சிங்காதனத்தின்மீதுவீற்றிருந்தார் அப்போதந்தப் பட்டணத்தையாளும் அரசன்தன்புதல்வியைதாதிகளைக் கொண்டழைப்பித்துத்தாதிகளை நோக்கி நீங்களிப்புதல்வியை சபாமண்டபத்திற்கு அழைத்துச்சென்று அங்குவந்திருக்கும் தேவேந்திராதிதேவர்களையுங் காட்டிப் பின்புமகாவிஷ்ணுவின் பக்கலழைத்துச்சென்று யாருக்கு மாலையிடுகிறாளோ அவரைக் கன்னிகையுடன் அழைத்துவாருங்களென்று சொல்லியனுப்பினன் தாதிகளும் அரசன் சொல்லியவண்ணம் தேவேந்திராதிதேவர்களையும் மகாவிஷ்ணுரூபத்துடன்கரடியின் முகத்தை யடையநாரதரையுங்காட்டிக்கொண்டே வருகிறபோது மகாவிஷ்ணுவைப் போல சொரூபத்தைக்கொண்ட நாரதர்சிங்காதனத்தை விட்டோடி அக்கன்னிகையின் முன்னின்று ஓபெண்ணேணே முன்னம் நீமகா விஷ்ணுவை யன்றி அன்னியருக்குமாலை சூடேனென்று சொல்லிய நீமகாவிஷ்ணுவாகிய என்னைப்பாரு நயமொழிகளையான் கேழ்க்கும்படிப்பகரு எனக்கு மாலைசூடி யுனக்கு வேண்டியவரத்தைக்கோரு எனக்குண்டாகிய மையலைத் தீருமென்று அக்கன்னிக்கெதிரிற் சென்று பற்பல இனியமொழிகளைப் பகர்ந்தும் இணங்காததால்அந்தநாரதர்மதிமயங்கி என்செய்வேன் எப்படியுய்வேன் எனறு கவலையடைந்து மறுபடியும் அக்கன்னிகையின்முன் சென்று அவன் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு வெகுவாக வேண்டியும் அக்கன்னிகை இவர்முகமென்ன கரடிமுக மாகவிருக்கின்றது மத்த அவயவங்களெல்லாம் ஸ்ரீமகா விஷ்ணுவைப்போலவே இருக்கின்றதென்று முகத்தைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டே இருந்தனள் அப்போது நாரதருக்குக் காமாக்கினி அதிகரித்த படியால் நாணத்தைவிடுத்து தன்னிருகரங்களால் அக்கன்னிகையைப் பிடித்து ஆலிங்கனஞ்செய்ய முயன்றபோது அக்கன்னிகையானவள் நாரதரைப்பிடித்துத்தள்ளி அச்சபையை விடுத்து ஓடியோர் கூடாகத்தினிற்குதித்துமறைந்துபோயினள் அக்கன்னிகை மறைந்துபோயினவுடனே அப்பட்டணமுதலானதுகளும் மறைந்துக்காடாகித்தோன்றியது அப்போது நாரதருக்குப் பகவான் சொல்லியமாய்கையின் செய்கைக் ஞாபகத்திற்குவந்து நாணமடைந்து நாமென்ன மோசம் போய்விட்டோம் இந்தப்பட்டண முதலாகியக் கன்னிகையும் விஷ்ணுவின் மாய்கையே இதையறியாமல் அற்பத்திற்காசித்து நமது விரதத்தைப் போக்கினேமென்று விசனக்கிராந்தராகிக்காட்டிற்குசென்றாலும் நம்மைஇந்த மாய்கையின் கொடுமை விடமாட்டா தென்று கருதித்திரும்பி நாட்டை யடைந்தார்.

அன்றியும் அஞ்சனாதேவியின் புதல்வராகிய ஆஞ்சநேயரொருக்கால்இவ்வுலகத்தினில்தானேபலவானென்றும் தன்னைவிட பலமுடையவர்கள் யாருமில்லையென்று அதிககெர்வ மடைந்திருக்க அவருடைய கெர்வத்தை ஸ்ரீராமசந்திர மூர்த்தி பாதரைக் கொண்டு அடக்கி பங்கப்படுத்தினர் ஆகையினல் இவ்வுலகித்தினில் நானே சங்கிவவித்தை யினில்மெத்த வல்லவனென்று கெர்வமடைந்தால் எனக்குண்டாகியவித்தையும் நாளுக்குநாள் க்ஷிணிப்ப தன்றியும் பகவானுடைய சங்கல்பத்தினலே பங்கப்படும்படி யாகநேரிடும் ஆதலால் கானவித்தையினில் மெத்தநிபுணராகியபுருஷன் மதுரா நகரத்தினில் சூரதாசரென்ற பேரைவகித்து அம்சத்தில் அக்ரூரராகிஇவ்வுலகினில்பிரமலமடைந்திருக்கின்றாரெனக்கேட்டு அரசன் மெத்த சந்துஷ்டனாகித்தான் சேனைபலவிதமாகக் கொண்டாடி விரைவாக அந்தஅக்ரூரரைதூதரைக்கொண்டுதன் கிருகத்திற்குஅழைப்பித்துத்தனக்குண்டாகியபிரியம் அவருக்குத்தோன்றும்படி அபிநயித்துமெத்தநேசத்துடன் அவருக்கொரு பொற்பீடம் போடுவித்து அப்பீடத்தின்மீது அந்தஅக்ரூரரை ஒக்காத்தி பலவிதங்களாக அவரைப் பூசித்துச் சகலஉப சாரங்கள் செய்கிறபோது பாடகர்கள் ஐந்நூறுபேர்களும்ராஜசபைக்குவந்து தக்கஆசனங் களின்மீது வீற்றிருந் தனர்கள் அதில்வல்ல வராகிய தான்சேனும் அரசனும் அக்ரூரர் சமீபத்தினில் வந்துட்கார்ந்து ஓசூரதாசரே உம்முடைய நவரசகானமும் நிறைந்த பாட்டுகளைக் கேட்பதற்காக வெகுஜனங்களுக்குக்கோரிக்கை யுண்டாகி அடங்காத பிரியத்துடன் இந்தபூபதி யும்மை அழைப்பித் தனரென்று சொல்லவே அந்தஅக்ரூரர் யானிந்த வுலகத்தினில் ஸ்ரீஹரிகீர்த்தனைகளைப் பாடிக்கடத்தேனும் படிப்பகவன்னே மனம்பெற்று வந்தவனுகும் எனக்குக் கிருஷ்ணலீலைகள் மாத்திரந்தெரியுமே யன்றிவேறென்றுந் தெரியமாட்டா தென்று

சொல்லி அந்தராஜசபையினில் அக்ரூரரானவர் வீணையைக்கைக்கொண்டு சொரங்களைக்கவன மாகச்சரிப்படுத்திக் கனராகத்தையாலாபித்துக் கீர்த்தனையை வீணையில்கானஞ் செய்துக்கொண்டே பாடுகையில் விநாயகர் தனக்குப் பின்புரத்தினில் வந்துதாளம் போட சரஸ்வதி தேவி சொரங்களை நன்றாக வீணையினிலிருந்து வெளிப்படுத்தச் சாக்ஷாத் கிருஷ்ண பகவான் நாட்டியமாடினார் கனவான் களாகிய யோக புருஷர்களுக்கும் வாக்குக்கு மனதுக்கு மெட்டாத அந்தப்பரபுருடன் அக்ரூரர் செய்யும் வீணாகான சொரத்திலும் பாடு கீர்த்தனைகளின் இசையிலுங் கலந்து ஆடுவதைக் கண்டு அச்சபை யினிலுள்ளசகல ஜெனங்களும் ஆனந்தங் கொண்டு ஸ்ரீஹரிநாமத்தை வாக்கினால் விண்டு ஏகமனத்தராகி நமக்குப் பரந்தாமமுண்டு என்று யாவரும் தங்களை மறந்துதத்தலைவனிற் கலந்துபாடுங்கிறபோ துண்டாகிய சாரம் சமாகுங்கானத்தின் அருமையை அரசனுங் கேட்டுத்தானுமவர்களுடன் பரமானந் தமடைய அப்போது அரசனுடையமனைவியர்கள் வேந்தனை நோக்கி ஓபிராண நாயகரே அந்தகனும் வீணாகானம் செய்யும் அக்ரூரனுமான அந்தசங்கீத வித்துவானை நமது அந்தப் புரத்திற்கு அழைத்து வந்தால் அந்தசாராம் சத்தைக் கேட்டு நாங்களும் அனுசந்தானஞ் செய்து ஆனந்திக்கிறோமெனக் கேட்டந்த அரசனும் அப்படியே அந்தவக்ரூரரைத்த நமது அந்தப்புரத்திற்கு அழைத்து வருகிறோ மென்று சொல்லி அக்ரூரரையும் அவர் மனைவி யையுஞ் சேர்த்துத்தன் அந்தப் புரத்திற்கு அனுப்பினான் அவர்களும் அரசனுடைய இஷ்டப்படிக்கு அந்தப் புரத்தையடைந்து நாடகசாலைக் குட்சென்று அங்குகானங் கேட்கும் பொருட்டுவந்து கூட்டமாக வீற்றிருக்கும் ஸ்ரீகளின் நடுவினிலுட்கார்ந்து வீணையை மீட்டிக்கொண்டு அந்த அக்ரூரர் பாடுவதை யாவருங் கேட்டு ஆனந்தமேலிட்டால் தேகத்தை மறந்துத் தலமென்றும் ஜலமென்றுந் தெரியாமல் அவர்கள் சொக்கி யிருப்பதால் அந்த அக்ரூரர் தன்மனைவியைக் கண்ஜாடையால் பார்த்து ஓ பெண்ணே இந்த ஸ்ரீகள்யாவரும் உண்மையான பக்தியிற் சொக்கி யிருபபவர்க ளென்று கருதவேண்டாம விஷயாந்திரத்தை யெப்போது கருதிக்கொண்டிருக்கும் படியான நிறைந்த கூட்டமாகு மிதென்று சொல்லக் கேட்டு மிகவும் பிரகாசம் பொருந்திய பெண்கள் வீணாகானஞ் செய்யும் இந்த அக்ரூரர் அந்தகால்ல அரசன் இவரையந்தக ரென்றல்லோ ஸ்ரீகள்வசிக்கும் அந்தப்புர நாடகசாலைக்கி யனுப்பினார் அனுபவத்தில் பார்க்கிறபோது இவரெப்படி அந்தகராவார் இனியிவர் முன்னம் நாமிருப்பது ஞாயமல்லவென்றுப் பேசிக் கொண்டே ஸ்ரீகள்யாவரும் அந்தப்புரத்தைச் சேர்ந்தார்கள்.

இவ்வண்ணம் அந்தராஜபத்தினிகள் அக்ரூரரையந்தகரமென்று தெரிந்த மாத்திரத்தினில் நாணமும் லஜ்ஜையு மடைந்தவர்களாகி அந்தப்புரத்தை ... டைந்த மாத்திரத்தில்அக்ரூரரும் அவர்மனைவிசா... கதையும் ஏகாந்தமாக அந்த நாடகசாலையிலிருக்க... கண்டு ஸ்ரீஹரியானவர் இதுநல்லசமய மென்றெண்ணி மெத்த வாஞ்சையுடன் அத்தம்பதிகளிருவரையு... தன்க்குள் ஐக்கியஞ் செய்துக்கொண்டார்.

வாழி விருத்தம்.

நாரியரில்சத்தியபாமை நயமொழிகள் கேட்டோன்வாழி
நாரணனைப்போலுருவம் நயந்துசென்றோன்வாழி
காரணனால்கடுஞ்சாபமேற்றோறுக் கருணைபெற்றோன்வாழி
சூரதாசர்செங்கமலச் சுந்திரபாதங்கள்வாழி

சூரதாசர் சரித்திரம் முற்றிற்று

ஸ்ரீராமஜெயம்,

ஸ்ரீமத்
சேனாவி சரித்திரம்

துதிவிருத்தம்.

தானாகியுயிர்க்கெல்லாந் தாயாகி நிறைந்தெங்குங் கோனாகிக்குருவாகிக் குலத்திற்கெல்லாம்பூசனைசெய்
தேனாகித்தென்னவர்கள் தம்மைவென்றச் சேனாவிதன்பதங்கள் தினமுந்தொழுதுய்குவோமே.

ஸ்ரீமகாலட்சுமி கடாட்சம் பொருந்திய இவ்வுலகினில் வடதிக்கில் இந்துஸ்தானி தேசமொன்றுளது அந்நகரத்தினில் நாவித வம்சத்திற் பிறந்தவர் சேனாவியென்ற பேர்பெற்றவர் சம்சாரத்தில் ஆசையற்றவர் கம்சாரி பூசையில் அன்புற்றவர் மத்தவிஷயவாஞ்சையெனு மண் பெண் பொன் னெனு மூவாசையிலும் வெறுப்புற்றவர் தொண்டர்கள் சங்கத்தில் விருப்புற்றவர் இவருக்கு மனைவி யொருவளுண்டு அம்மங்

கையுடன் கூடிஇல்லற தர்மத்தை நடத்திக் கொண்டு
தன்னிடமிருக்கும் அரிதாகும் ஸ்ரீஹரிவிக்கிரகமொன்
று அதிகசுந்திரமாகி யிருக்கும்நான்கு புயங்களுடை
ய அந்தஸ்ரீஹரிக்கித் தினந்தோருஞ்சரண்புகுந்துதத்
கபடியந்த சேனுவி அதிகநே மத்துடன் பூசைசெ
ய்துக் கொண்டிருப்பார் அதெப்படி யெனில் காலையி
லெழுந்து ஸ்நானுட்டா னங்கள் முடித்துப் பொருந்
தும்படி வைராக்கியத்துடன் ஸ்ரீஹரியைப் பூசித்துப்
பின்பு ஜீவனத்துக்காக வெளிபட்டுப் போவார் இவ்
வுலகின்கண் சேவகா விருத்தி செய்து ஜீவிப்பதைப்
பார்க்கிலும் அமட்டவிருத்தி மெத்த நீசமாகும் க்ம்
மாள வேலைசெய்து ஜீவிப்பதை பார்க்கிலும் கிராம
த்தினில் புரோகிதஞ் சொல்லி ஜீவிப்பது மெத்தகடி
னம் நாய்மாங்கிசம் புசிக்கும் சக்கிலியும் ஜீவஇம்சை
செய்யும் கசாயிக் காரனும் நேமத்துடன் ஹரிபஜனை
செய்துக்கொண்டு ஜீவராசிகளின்மீது அணுவளவும்த
யவின்றி யெப்போதும் வாழ்ந்துக் கொண்டே யிருப்
பார்களேயன்றி ஸ்ரீஹரிபஜனை யில்முயலார்கள் எவ்
விடத்திலும் துஷ்கர்மங்களைச் செய்யும் பொருட்டில்
பாபங்கள் அளவிலாமல் வந்துசேரும் இப்பாப சம்ப
வத்தினுல் இவர்களுக்கு அளவிட்டுச் சொல்லப்படா
தயோனி பேதங்களில் ஜென்ம மெடுத் தெடுத்துப்
பாவிகளாகவே பிறந்து பிறந்து நரகத்துக் காளாக
வேண்டும் ஆகையால் பகவத்பஜனையைச் செய்யாம
லிருந்தால் பவசாகர மாகிய ஜெனன மரணம் நீங்கா
தென்று அந்தசேனுவி தனக்குத்தானேயோசித்து
க்கொண்டுபகவானைச் சரணமடைவதால் சகலதோஷ
ங்களும் பரந்தோடிப்புனிதநாகலாம் அதெப்படி யெ
னில் ஜலதாரை நீரானது சாகரத்தை யடைந்துப்புனி
த மடைவதுபோல நாமும் புனிதனுகலா மென்று
க்கருதி பகவானை பஜனைசெய் வதிலும் பூசிப்பதிலும்
அதிகஆவல்கொண்டு சதாசெய்துக்கொண்டிருந்தார்.

இவ்வண்ணமந்தசேனுவிதினந்தோரும்காலையி
லெழுந்து ஸ்னனஞ் செய்து ஸ்ரீஹரியைப் பூசித்து
அனந்தரம் அப்பட்ட ணத்தை யாளும் அரசனுக்கு
சேவாஞ்செய்து எண்ணைதேய்து ஸ்னனஞ் செய்வி
த்து அரசன் கொடுக்கும் மாதசம்பள வராகனைப்பெ
ற்று ஜீவனஞ் செய்துக் கொண்டு வருகையில் அப்ப
ட்டணத்தை யாளும் அரசன் ஒருநாள் தூதனையனு
ப்பி சேனுவியை யழைத்து வரும்படிகட்டளையிட்
டான் அவனும் மந்தப்படியே சேனுவி வீட்டை
யடைந்து அங்குதலை வாசலில் நின்றிருக்கு மவர்ம
னைவியை நோக்கி அரசன்னினது நாயகனுகிய சேன
ுவியை யழைத்து வரச்சொன்னு ரென அப்போது
சேனுவி ஹரிபூசையில் துரந்தரநாகி யிருப்பதால்
அவர்மனைவி தூதனை நோக்கி வெளியே போயினு
ரெனக் கேட்டு அத்தூதனும் அரசனிடம் வந்து
அவன் வீட்டில்லை வெளியே போயிருப்பதாக ரிப்
படுத்திமனைவி சொன்னுளெனக்கேட்டு அவ்வரசன்
வேருருமனிதனை யனுப்பி சேனுவியைக் கைப்பி
டியாகப்பிடித்துக்கொண்டு சீக்கிரம் வரக்கடவாயென்
றுகட்டளையிட அவனுஞ்சென்று நாவிதன்மனைவியை
க்கண்டு அரசனழைத்துவரச் சொன்னசெய்தியைதெ
ரிவிக்க யம்மாதும நாவிதர் வீட்டினிலில்லை யென்று
சொல்லக்கேட்டு அவனும் திரிப்பி சென்று அரசனு
க்கறிக்கை யிட்டான் அதைக்கேட்டு அரசன் மருபடி
யும் இரண்டு தூதர்களையனுப்பி சேனுவியையழை
த்து வரச்சொல்ல அவர்களுஞ் சென்று சேனுவி
யையழைக்க அவர்மனைவி வீட்டினிலில்லை யென்று
சொல்ல அவர்களுங் கேட்டு அரசனுக்கு சேனுவிவீ
ட்டிலில்லை யென்று நவில அத்ததியினில் அக்கம்பக்க
த்திலிருப்பவர்களும் அங்கிருப்பவர்களும்விரைந்தோ
டி அரசனிடஞ் சென்று வணங்கி ஓபூபாலரே தாங்க
ள் மூன்றுவர்த்தித் தூதர்களை யனுப்பிச் சேனுவி
யையழைத்து வரும்படி நேமித்தும் அவர்களுஞ் செ
ன்று அழைத்தும் அந்தச்சேனுவிவீட்டினில் ஸ்ரீ
ஹரியைப் பூசித்துக்கொண்டிருந்தும் இல்லையென்று
சொலும்படி தன்மனைவிக்கு நேமித்தபடியால் அவ
ளும்சேனுவி வீட்டினிலில்லை யென்று சொல்வித்தூ
தர்களுக்கு நவின்றுள் அந்த கேவலமாகிய அம்மட்ட
ப்பயலைத்தாங்களித்தனை தரம் அழைத்தும்சற்றேனும்
பயமின்றி வீட்டிலிருந்துக் கொண்டே இல்லையென்று
சொல்லும்படிமனைவிக்குநேமித்தான் அவனைப்போல
கொர்வியுந்துஷ்டரும்இவவுலகினிலொருவரு மில்லையெ
ன்றுநவின்றதைக்கேட்டுஅவ்வரசன்கடுங்கோபங்கொ
ண்டு அங்கிருக்குந் தூதர்கள் சிலரை யழைத்து மொ
ழிந்தான் அதென்ன வெனில் அடாதூதர்களே சீக்
கிரமாக ஓடி அந்தச் சேனுவியைப் பிடித்து கால்
கரங்களை மணிக்கயிறுகொண்டு கட்டி ஆழமுள்ள நதி
யினிற் போட்டு வரக்கடவீர்க ளென்று கட்டளையிட்
டமாத்திரத்தில் ஸ்ரீஹரியானவர் தன் பக்தனுக்குத்
தொந்தரவு செய்ய வெண்ணினதை யறிந்து உடனே
அந்த சேனுவியைப்போல அந்த ஹரியானவர் ரூ
பந்தரித்துஅடப்பத்தைக்கக்கத்தினில் வைத்துக்கொ
ண்டுவிரைந்தேகினுர் அவரெப்படிபட்டவரென்றுல்பா
ற் கடலில் ஆதிசேஷன் மீது யோக நித்திரை செய்யு
ம்சுகுமாரமான திருமேனியை யுடையவன் கக்கத்தில்
அடப்பத்தைத் தாங்கிக் கொண்டும் கெருடன்மீதேரி
வெகுசுகமாகச் சொல்லும் பகவான் பாதசாரியாகநட
ந்துச் சென்றதும் தேவர்களும் ரிஷிகளும் செய்யும்ப

டியான தோத்திரத்துக்கு மகிழ்ந்து சேவை தராதக் கருணு நிதியாகிய ஜெகதீசன் பக்தனைக் காந்திரக்ஷிக்கும் பொருட்டு கேவல ஜாதியையும் உணராமல்பக்த வச்சுலவேகமாக நடந்து அவ்வரசனமுன் செல்லக்கண்டு அவ்ஙீவந்தன் சாந்தசமதமாதி குணத்துடன் சேணுவி யப் போஞருவங்கொண்டு வந்த ஸ்ரீஹரியின் கரங்களால் க்ஷவரஞ்செய்துக் கொண்டிருக்கிறபோதே அவ்வரசனு மெத்த சுகமாக யிருந்தமையால் தன்னைமறந்து நித்திரை செய்து க்ஷவரம் முடிந்தவுடன் அரசனந்த சொர்னமேனியுடன் விளங்குப் சேணுவியை நோக்கி மெத்த சந்தோஷத்துடன் வார்த்தைகள் சொல்லத் தொடங்கினன்.

கேளுமப்பா சேணுவியே யானிதுபரியந்தம் எத்தனை யோதரம் உன்னிடத்தினில் க்ஷவரஞ் செய்துக் கொண்டேன்இன்று தினம்போலசுகமாக நித்திரைவரும்படி நீயெப்போது மெனக்கு க்ஷவரஞ்செய்ததில்லை யாகையால் நாவிதவேலையில் உன்னைப்போல சமர்த்தனை நானிது பரிரிந்தங் கண்டதே யில்லை இதுமுதல் நீஎன்னை விட்டுப் பிரியாமல் எப்போதும் சங்கமஞ் செய்துக் கொண்டிருக்கக்கடவா யென்று வெகு சனுவாகக்கட்டளை யிட்டான் அதற்குபகவான் ஓவேந்தனே அண்டபிண்ட பிரம்மாண்ட மெனும் மூவுலகங்களிலும் சராசரவஸ்துக்களினிடத்தில் உள்ளும் புரம்புமாய் எங்கும் யானொருவனே வசித்துக் கொண்டிருக்கும் எனக்குப்போகவும் வரவும் வேலை ஒழியாது ஏனெனில் இவ்வுலகினிலுள்ள பக்தர்கள் பொருட்டு பலவுருவங்கள் கணப்பொழுதினிலெடுத்து அவர்களுக்குண்டாகும் கஷ்ட நிஷ்டங்களைப் போக்கி ஆதரித்துக்கொண்டிருப்பதே எனக்குத்தொழிலா யிருப்பதால் எப்போதும் யானும்மை விட்டுப் பிரியாம லிருப்பதற்கு ஒழிவுகிடையாது ஆனபோதிலும் எனக்கு ஒழிவுண்டாகும் போதெல்லாம இங்கு வந்து தங்களை விட்டெப்போதும் பிரியாமலிருக்கிறேனென்றிப்படி பகவான் சொல்லிய மொழிகளை அரசன் நன்ருகத் தெரிந்துக் கொள்ள சக்தியற்ற வணுகி அப்பியஞ்சனஞ் செய்துக் கொள்ளும் பொருட்டு அவ்வரசன் தைலத்தைத் தருவித்துசபையோர் முன்னிலையில் சொர்னக்கிண்ணத்தை எதிரினில் வைத்துப் பொற்பீடத்தின் மீதுட்கார்ந் திருக்கையில் சேணுவிருபங் கொண்ட ஸ்ரீஹரி அரசனெதிரினில் நின்று தைலத்தையெடுத்துஅவ்வரசனசிரசின் மீதிட்டுதேய்த்துக் கொண்டிருக்கிறபோது பூமிகாவலன் தைலபாத்திரத்தினிடத்தில் தன் திருஷ்டிகளை நிறுத்திப்பார்க்கிறபோது அதில் ஸ்ரீஹரியின் ரூபங்கண்டுஅப்போது ஆகிரீடகேயூர கடககங்கணபீதாம் பரவன மாலை வனசமாலை கௌத்து மணியுடன் மேகலா பரணபஞ்சாயுததரானகிதோன்ற அவ்வரசன் விந்தையடைந்து அதையேவிடாமல் பார்த்தும்மேல்நோக்கிச் சேணுவியைப்பார்த்தும் திரும்பவும் அவ்வரசன் கிண்ணத்தைப்பார்க்கதிவ்யமானரூபங்காணப்பட்டனஉடனே ஸ்ரீஹரி நரபதியின் கண்களுக் ப் புலப்படாமல் மறைந்து போகவே அவ்வரசன்மெத்ததுக்கத்தையடைவதைக் கண்டு ஸ்ரீஹரி அரசன் மனதினில் தோன்றினர் அந்தசேவையை அரசன் பார்க்க பார்க்க சகலத்தையும் மறந்து சொல்லறியப்பரமானந்தத்திற்சொக்கியிருப்பதை அங்குள்ள ஜெனங்கள் யாவருங் கண்டு அரசனுக்குப் பயித்தியம் பிடித்த விட்டதென்று சொல்ல அப்போது சபையிலுள்ள ஜெனங்கள்கண்டு கெக்கலி கொட்டிசிறிக்க அரசன்மன்ன கமலத்தினில் ஸ்ரீஹரியை சேவித்துக் கொண்டிருப்பதை யந்தமூட ஜெனங்களறியாமல் மரணமாகி விட்டாரென்றுக்ஞானமில்லாமல் மொழிந்துக் கொண்டிருக் கையில்சிலர் அப்படியே யிருக்கக்கண்டு இரண்டுஜாமங் கடந்து போகவே அங்குஜெனங்கள் மெத்த நாழிகையாய் விட்டது ஓபூபதியே சீக்கிரமெழுந்து ஸ்னனஞ்செய்து போஜனஞ் செய்யுமென்று எழுப்ப அப்போது சுபசமாதியை விடுத்து அரசனெழுந்து யாவரும் காணும்படி அந்தசேணுவிக்கிக் கூலிவராகன் களைக்கொடுத்து ஓசேணுவி இங்கொருக் கணநேரமிரும் இதோ வருகிறேனென்றுசொல்லி யந்தவரசன் சென்றுஅப்பியங்கன ஸ்னனஞ்செய்யக்கண்டுஸ்ரீஹரியானவர்சென்றுசேணு வீட்டையடைந்து எப்போதுமவர்வைக்குமிடத்தினில் அடப்பத்தை வைத்து அதிகப்பிரியமூண்டாகும்படி குருக்குசுவத்தின்மீது வராகன் களையும் வைத்துச் சென்ருர் இதற்குள்ளந்த அரசன் ஸ்னனஞ் செய்து சேணுவியை வேகமாக அழைக்க அவரில்லாமையால் அமிதமாகிய மோகத்தினுலே போஜனத்தையும் விடுத்துப் பிராணன் தத்தளிப் பதைக் கண்டுசேகுவர்கள் அந்தசேணுவியினிடம்ஓடினர்கள் உடனே யவ்வரசனும்சேணுவியைக் காணமெத்தஅவர்கொண்டு வந்தனர் அபபோது சேணுவிபூசைமுத்துக் கொண்டு வெளியில் வரஅவர்மனைவிஓ நாதாடி அரசனழைத்து வரச்சொன்ன ரென்று மூன்றுதரம் தூதர்கள்வந்து தேடிப்போயினர்க ளெனக்கேட்டு அந்த சேணுவி மெத்த பயத்துடன் அடப்பத்தையெடுத்துக் கொண்டு ராஜசபைக்கு வரக்கண்டு அரசன் அந்தசேணுவியை நயவசனங் களினுலே சந்துஷ்டி யடையச் செய்து எழுந்து நின்று சொல்லத் தொடங்கினர்

ஓசேனனாவி முன்னமெனக்கு நீவெளிப்படையாக தெரிசனைசெய்வித்த பிரகாசம்பொருந்திய ரூபத்தை இப்போது தயவுசெய்துகாண்பியுமிங்கே என்று சொல்லி கிண்ணத்தினில் தைலத்தைக் கொண்டுவந்து வைக்குப்படி நேமிக்க அந்தப்படியே தூதர்கள் கொண்டுவந்து அரசன்முன் தைலகிண்ணத்தை வைக்க அப்போது அரசன் சபையிலுள்ள யாவருங்கண்டு சிறிக்க அந்தசேனனாவிக்கி சாஷ்டாங்கமாகவிழுந்துதெண்டனிடக்கண்டு அந்தசேனனாவியு அரசனைநோக்கிஓ பூபதியே இங்கு முன்னம் நடந்தப்பிரமாதமென்ன சொல்லுமையா வென்று வேண்டிக் கொண்டபடியால் அரசன் நடந்தசெய்தியை பொளிபாமற் சொல்லக்கேட்டு மெத்த ஆச்சரியமடைந்தவனாகியிருக்க அத்ததியில் அரசன் சேனனாவியின் பிரதிபிம்பத்தை சொர்னக்கிண்ணத்தில் கண்டும் முன்போல சித்திரரூபத்தைக்காணாமல் அதிகவிசனமடைந்தவனாகி அழத்தொடங்கினாரப்போது சிலர் சேனனாவியை நோக்கி நடந்த செய்தியை மொழிந்த மாத்திரத்தில் அந்தசேனனாவி பக்தனும் கேட்டு ஆர்த்தியுடன் அச்சுதனை நினைந்துக் கண்ணீர் உதிர்ந்துக் கொண்டே பகவந்நாமசங்கீர்த்தனஞ் செய்தார் அதெப்படியெனில் ஓபண்டரிநாதா பதிதபாவனா நினது மகுத்துவத்தையாவர் இவ்வுலகினில் தெரிந்துக் கொள்ள வல்லவர்கள் கேவலம் அம்மட்டனாகிய ஏழையைக் காக்கும் பொருட்டு அடியேனைப்போல அம்மட்டனுருவந்தரித்து அடைப்பத்தைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு இங்குவந்து நீச்சவேலை யென்றுச் சிறிதுங் கருதாமல் மானத்தையு மெள்ளளவும் யோசிக்காமல் இந்த நவாப்புக்கு க்ஷவரஞ் செய்ததுமன்றித்தைலந்தேய்த்து அக்கிண்ணத்தினிடமாக தேவரீர் தெரிசனந்தந்து நவாப்புக்குப் பரமசமாதியுண்டாகச் செய்துடனே தெளிந்து நவாப்பு தந்தவராகன்களை யெடுத்துவந்து அடியேன் வீட்டையடைந்து அடைப்பத்தையும் வராகன்களையும் வைத்துவிட்டு மறைந்துபோயினீரோ அப்போது அரசனுக்குத்தந்த சேவையைப்போல இப்போதுமரசனுக்குமெனக்குந் தந்துப் பரமானந்தமடையைச் செய்யலாகாதோ எனக்குற்ற மனக்குறை யெல்லாம் நீங்கிப் போகாதோ பாபசங்கமெல்லாம்உருமாய்ந்து நீராகாதோஜெனன மரணங்கள் எப்போதுமின்றிச் சுகவாழ்வைத் தரலாகாதோ என்றுபகவானைப் புகழ்ந்துத்தன்னைத் தானிகழ்ந்து பகவான்றிருவடிகளில்மனமுகந்து வெகுவாகமகிழ்ந்துக் கொண்டிருக் கையில் அரசன்என்று மில்லாத ஆனந்தத்துடன் சேனனாவியை நோக்கி ஓபரமபாகவத சிகாமணியே நினதுசங்கத்தினாலே அளவிட்டுச் சொல்லப்படாத பரமசுகத்தை யானடைந்தேன் என்றுசொல்லி மெத்த பக்தியுடன் சேனனாவியின்றிருவடிகளைப் பற்றிக் கொண்டு நின்றால் யானந்தக் கிருஷ்ண மூர்த்தியை சேவித்தேன் உன்னையே என்மனதினில் பரமகுருவாகப் பாவித்தேன் என்றுபற்பலவாறு புகழ்ந்துஅந்தவரசன் அன்றுமுதல்சதாகாலமும் சாக்ஷாத் லட்சுமிநாதனை மனதினில் தியானித்துக் கொண்டிருந்தான்.

இந்தப்படியாக அந்தவரசன் பக்தி வைராக்கியத்தில் மெத்த அன்புகொண்டிரிகி நிற்கச்சேனனாவியரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தன்வீட்டையடைந்து இத்தனை நாளும் வைக்குமிடத்தில்அடைப்பத்தைவைத்துத்திரும்புகிறபோதுஅங்குசுவத்தின்மீதுவராக னிருக்கக்கண்டு முனிவர்கள் யோகபுருடர்கள்தேவேந்திராதி தேவாகள் முதலானோர் மனத்திற்கும் வாக்குக்கு மெட்டாத பரம்பொருளே தேவரீர் பாவியிலும்பாவியாகிய அடியேனைக்காப்பாற்றவெண்ணிநவாப்புக்குக்ஷவரஞ் செய்ததுமன்றி அந்தநவாப்பு கொடுத்தக் கூலிவராகன்களையும் அடியேனுடைய வீட்டினில்வைத்து அதனால்யான்ஜீவனஞ் செய்வேனென்றெண்ணிமனதினி லுத்தேசித்துச் சென்றீரோ வென்று மெத்ததுக்க மடைந்தவராகி அவ்வராகன்களை யெடுத்துப் பிராமணர்களுக்கு கிருஷ்ணார்பணஞ் செய்துப் பகுந்துக் வெகுகாலம் ஹரிபூசையில் துரந்தனாயிருந்து முடிவினில் பரந்தாமத்தையடைந்தார்

வாழி விருத்தம்.

மானிலத்தில்மாதவனைப் பூசித்தோன்வாழியே மாதர்மோகத்தொழித்த மாவள்ளல்வாழியே
மோனநிலைதனைபறிந்த மூதறிவோன்வாழியே முக்கியமாய்பவக்கடலை முன்கடந்தோன்வாழியே
ஈனகுலதுதித்தோமென்று இழிவடைதோன்வாழியே எம்பெருமான்றன்பஜனையென்றுஞ் செய்வோ ன்வ
சேனனாவிசெய்கமலத் திருவடிகள்வாழியே செம்பொன்னடிபோற்றியும் திறமுடையோர்வாழி. ழியே

சேனனாவி சரித்திரம்

முற்றிற்று,

——

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

ஸ்ரீமஹாபக்தவிஜயம்

நான்காம் பாகம்

ஸ்ரீமத்

சாத்விகராஜன் சரித்திரம்

துதிவிருத்தம்.

தீர்த்தம்திருமாலைபிரசாதங்கள் திரிகாலமும்பெற்று
ஆர்த்தியுடன்ஜபன்பத மனவரதமும்போற்றிக்
கீர்த்தியெங்கும்புகழ்ந்திடக்கீதமோதுஞ்சுத்த
சாத்விகராஜன்சரணங்களைச் சார்ந்தென்றுமுய்குவோமே

கதையின் வரலாறு.

திருமாது கடாக்ஷப் பொருந்தியும் கலியுக வைகுந்தமென்று வழங்கும் ஜெகந்நாத க்ஷேத்திரத்தினில் சாத்விக ராஜனென்றொரு அரசனிருந்தார் அவ்வரசன்மநுநீதிதவராமல் அந்தக்ஷேத்திரத்தைப் பரிபாலனஞ் செய்துக் கொண்டு அச்சந்நிதியில் திருக்கோலங் கொண்டிருக்கும் பகவான் சந்நிதிக்கித் தர்மகர்த்தராகிமூன்றுகாலமுந்தவராமல்பூசைநைவேத்தியமுநடக்கும்படி நேமித்து தினந்தோறும் மூன்று காலமுந்தவராமல் அந்தசாத் விகராஜன் சந்நிதிக்குச் சென்று பகவானுக்குப் பூசைநைவேத்தியங்கள் முதலான உபசாரங்கள் நடக்கும் பரியந்தமிருந்து பகவானைசேவித்துப்பரமானந்த மடைந்து அரசர் அளிக்குந்தீர்த்தந் திருத்துழாய்ஸ்ரீசடகோபம்பிரசாதமுதலானதுகளும் பெற்றுக்கொண்டுத்தன் அரண்மனைக்கேகுவார் இப்படிக்கிந்த சாத்விகராஜன் மெத்தஊக்கத்துடன் சந்நிதிகைங்கரியத்திலேயே காலங்கழித்துக் கொண்டிருப்பதால் அச்சந்நிதியில் வாசமாயிருக்கும் பகவானாகிய செல்லப்பிள்ளைராயருக்கு மெத்தசந்தோஷமுண்டாகி நாளுக்குநாள் மெத்தமகிமைவிளங்கும்படியாயும் அவரவாகள் கோரிக்கைகள் நிறைவேறும்படியும் அரசனுக்கு பக்தி வைராக்கியமுண்டாகும் படிக்கும் கிருபா நோக்க புரிந்துக் கொண்டிருப்பதால் அவ்வரசனுக்கு பகவான்மீது பிரியமதிகரித்து உயர்ந்த ஆடையாபரணங்களை அர்ப்பணஞ் செய்வதுமல்லாமல் மிதமற்ற நிவேதனங்களையும் அநுதினமுஞ் சமர்ப்பித்துக்கொண்டிருந்தார் இப்படிக்கிருக்கையில் ஒருநாளந்தசாத்விகராஜன் ஸ்ரீஹரிசந்நி தானத்திற்குச் சென்று அங்கு தான்பகல்காலத்தைப்போக்கும்பொருட்டு அங்குஇடஞ்செய்துக் கொண்டுஅவ் விடத்தினிலிடஞ் செய்து சிலரைக்கூடி சொக்கட்டான் தன்னிஷ்டப்படி ஆடிபொழுது போக்கிக்கொண்டிருக்கையில் அர்ச்சகர்தீர்த்தமும்பரிசாரகர்பிரசாதமுந்தட்டினிலெடுத்துக் கொண்டு அரசனிருக்குமிடைத்தைத் தேடிக்கொணடே வந்து அரசனை கண்டு பிரசாதத்தைக்கொடுக்கிறபோது பகடை ஆட்டத்தின் மீதிருக்கும் பிரியத்தினுல் அவ்வரசன் பகவத் பிரசாத மாயிற்றேயென்ற பக்தியை மறந்து இடது கையைநீட்டிப் பிரசாதத்தைக் கொடுமையா வெனக்கண்டு அப்பரிசாகன்பகவத்பிரசாதத்தைஇவ்வளவு அலக்ஷியமாக இடதுகையை நீட்டிக் கொடுமையாவென்று இவ்வரசன் கேட்கிறார் இதுமெத்த அபசாரத்துக் கிடமாயிற்றே யென்றுகருதிப் பிரசாதத்தைக் கொடாமலே அப்பரிசாகர் போயினர் உடனே ஆட்டம் முடிந்து அரசன் அங்குள்ள ஜெனங்களைப் பார்த்துப் பரிசாகர்களை யழைத்து

எனக்குப்பிரசாதமெங்கே என்றுகேழ்க்க அதற்கவ
ர்கள் மகாராசனேபகவானுக்கு அம்சையானவுன்எல்
லோருக்கும்பகுந்துக்கொண்டே தங்களுக்குக்கொடுக்
கமுயன்றபோது தாங்கள் இடதுகையைநீட்டிசொக்க
ஆட்டத்தினில் மெத்தக்கவனம்வைத்து பகவத்பிரசா
தமாயிற்றேஎன்றுசிறிதும் கருதாமல்அலக்ஷியமாகப்
பிரசாதம் பகுந்தவனுக்கும்இடது கையால்பிரசாதம்
வாங்கினவர்களுக்கும் மெத்தஅபசாரம் வந்துநேரிடு
மென்றுக்கருதியான் தங்களுக்குப் பிரசாதங்கொடா
மலே போய்விட்டேன் என்று மொழியக் கேட்டு
அந்த அரசன் மெத்த விசனத்துடன் புகன்றுர்
அதென்னெனில் அதிக விபரீதத்தை விளைவிப்ப
தாகியும் பெரியோர்கள் மனதிற்குக்கஷ்டத்தைத்தரு
வதாகியும் பஞ்சமா பாதகங்களி லொன்ருகியுமிருக்
கப்பட்ட இந்த சூதாட்டத்தை இவ்குஎதுக்காக ஆடி
னே னென்றும் விலையுயர்ந்த அமிர்தத்தைப்புசிக்காம
லும் அதிஞலுண்டாகும் சுகத்தையடையாமல்யான்
அற்பவிலையாகியும் துர்நாற்ற முடையதாகிபும் பெரி
யோர்களுக்கு அருவருப்பை யுண்டாக்கத்தக்கதாகிய
கள்ளைக்குடித்ததைப் போலாயிற்றே பகவான்பிரசா
தத்தை அலக்ஷியஞ் செய்துச் சூதாடிக்கொண்டிருந்
த நமது அறிவீனத்திற் கென்செய்யலா மென்றுயோ
சித்து இனிநாமிந்த சந்நிதிக்குள்வருவதற்கு யோக்கி
யதை யில்லாதவனும் பகவானிடத்திலும் அவர்தொ
ண்டர்களிடத்திலும் அபசாரப் பட்டகொடியபாதக
ஞகி விட்டேனே ஆகெட்டேனே என்று தன்னைத்
தானே நிந்தித்துக்கொணடே சந்நிதியைவிட்டுவெளி
யில்வந்து அங்கு மந்திரியை வரவழைத்து ஓமதிமந்
திரியேநீஎனக்கொருகாரியஞ் செய்யவேண்டும் அதெ
ன்னவெனில் ஒருபைசாசமானது என்னுடையபடு
க்கைவீட்டிற்குள்வந்து நடுராத்திரிவேளையில் மெத்த
ஆர்ப்பாட்டங்கள் செய்து உடனே ஜன்னலின்வழியா
ய்தன்கரங்களை இப்படியும் அப்படியும் திருப்பிசற்
றுநேரத்திற்கெல்லாம் போய்விடும் இந்தப்படி தின
ந்தோரும் அந்தபைசாசமானது வந்து ஆர்ப்பாட்ட
ம் செய்துப்போவதால்எனக்குநித்திரைபங்கமாகிறது
ஆகையால்நீ இன்றுதினம் நித்திரைக்கி இடங்கொடா
மல்இராத்திரிவேளையிலென்படுக்கையறையின் ஜன்ன
லின்பக்கமாகயிருந்து அந்தப்பைசாசமானது ஜன்ன
லுக்கு வெளிப்புரமாகக்கையை விட்டு இப்படியும்
அப்படியும் திருப்புவதைக்கண்ஞேக்கமாகப் பார்த்
துக்கொண்டே யிருந்து சற்றேனும் ஆலோசிக்காமல்
உடனே அதன்கையைவாளினலே வெட்டி விடக்கட
வாயென்றுநேமித்து அவ்வரசன் தன்னரண்மனையை
ச்சேர்ந்து மெத்த விசனத்துடன் படுத்துக்கொண்டு
ஆலோசிக்கத்தொடங்கினர்.

இந்தப்படியாக அந்தசாத்வீக ராஜன்பைசாசத்
தின்கரத்தை வெட்டியெறியும்படி மந்திரியினிடஞ்
சொல்லித்தான் அந்தப்புரத்தையடைந்து பஞ்சணை
யின்மீது படுத்து ஆஹாஹாஎன்றுமில்லாமல் நாமின்
றுதினம் பகவானிடத்தில் அபசாரப்பட்டோமே சூ
தாட்டத்தினல் கெட்டோமே இதற்குக்காரணம் நம்
முடைய இடதுகையேயாகையால் அக்கையைசிக்ஷை
செய்யவேண்டியதவசியமேயாமென்றுத் தனக்குத்தா
னே யோசித்துக்கொண்டு அவ்வரசன்துக்க சாகரத்
தினில்மூழ்கிப் பகற் பொழுதைப்போக்கி இரவுவந்
தவுடன் நடுராத்திரிவரையில் சயனித்துக்கொண்டிரு
ந்தார் அப்போது மந்திரியானவன் தனக்கு அரசன்
சொல்லியபடி அந்தப்புரத்தைச்சேர்ந்து ஜன்னலுக்
கும்புரம்பாக நின்றுப்பைசாசத்தின் கையானது எப்
போது ஜன்னலுக்கு வெளியில்காணப்படுமோவென்
றுக்கண்ஞேக்கம் வைத்திருந்தான் அத்ததியில் அர
சனெழுந்து தன்னிடதுகையை அரைவீட்டிற்குள்
ளிருந்தபடி ஜன்னலின்வழியாய் விட்டு இப்படியும்
அப்படியும் அசைத்தார் அதைக்கண்டு மந்திரிதன்னி
டையிலிருக்கும் வாளையுருவி அக்கையை வெட்டித்த
ள்ளவே அஸ்திமாங்கிசமாகும் அக்கையானது கீழே
விழவே அம்மந்திரியானவன் கண்டுமெய்நடுங்கிவிள
க்கைகொண்டு பார்க்கிறபோது அக்கையானது அ
ரசனுடைய கையாகக்காணப்பட்டதால் அப்போதக்
தமந்திரியானவன் உடனே பூமியின்மீது விழுந்து அ
ழுதுபுரண்டு துக்கப்பட்டுக்கொண்டிருப்பதைக்கேட்
டு அந்தசாத்வீகராஜன் தன்படுக்கை அரையைவிட்டு
வெளியில் வந்து மந்திரிகைக்கண்டு ஓ மதிமந்திரியே
நீயேதுக்காக துக்கப்படுகின்றுய் இக்கையானதுபக
வானுக்கபசாரஞ்செய்தது அப்படிப்பட்ட அபசார
ஞ்செய்த இந்தகையை இனிவைக்கப்படாதென்று
உன்னைக்கொண்டு வெட்டிவிடச்செய்தேன் இதைப்
பற்றிநீ விசனப்பட வேண்டாமென்று அக்கையினல்
நடந்தவிருத்தாந்தம் யாவுஞ்சொல்லி அம்மந்திரியை
த்தேத்தியனுப்பிமத்த இரவுபொழுதையும் போக்கிச்
சூரியோதயமானவுடனே சேவகனொருவனைச் சமீப
த்தினி லழைத்து அடாசேவகனே இதோகிடக்குங்
கையையொருபல்லக்கின் மீதுவைத்து அனேகமேள
வாத்தியங்கள் முழங்க நகர்வலம் புரிவித்து பகவான்
சந்நிதானத்தின்முன்னம் இக்கையைவைத்து அடியே
னுடைய மறுவைத்தெரியப்படுத்தும் அதென்னவெ
னில்ஓஜெகதீசாஇக்கையானது பெருத்ததப்பு செய்த
து என்னுடைய துர்ப்புத்தியினலே தீர்த்தப்பிரசாத
த்தை சூதாட்டத்தினல் மறந்திருந்தும்பரிசாரகர்கள்
எல்லோருக்கும் பிரசாதத்தைப்பகுந்துக் கொண்டே

வந்து எனக்குக்கொடுக்கிறபோது இந்தயிடதுகையை நீட்டிக்கொடுமென் அப்பரிசாரகர் அபசாரம் நேரிடுமென்றுப்பிரசாதங்கொடாமலேபோய்விட்டார் ஆட்டப் முடிந்தவுடனே எனக்கேபிரசாதங் கொடுக்கவில்லையென்றுப் பரிசாரகர்களைக் கேட்டேன் அவர்கள் நடந்தசெய்தியைச் சொல்லக்கேட்டு மனம்பொங்கி அபசாரப்பட்ட இடதுகையை வெட்டித்தங்களுக்குக்காணிக்கையாக அனுப்பியிருக்கின்றேன் அதைதேவரீர் தயவுசெய்து அங்கீகாரஞ் செய்து அபசாரத்தைமன்னித்துக்காப்பது தமதுபாரம் அன்றியும் இக்கையானதுதர்மம் செய்யாமல்துராசாரத்தினில் சதாகாலமும் அகப்பட்டுக் கொண்டிருந்தும் நினது திருவடிகளுக்கு அர்ச்சனை செய்யாமலும் நிஷ்டைக்குட்படாமலும்நின்பக்தர்களைச்சேவிக்காமலும் அவர்களுக்குத் தொண்டுபுரியாமலும் கெர்வமுண்டாகிய கையுமானதால் இக்கையை வெட்டிநினக்குச்சமர்ப்பணஞ் செய்தேனென்று யான் சொல்லியதாகப்புகன்றுசீக்கிரம்இவடம்வந்துசேரக்கடவாயென்றுகட்டளையிட அந்தப்படியே அச்சேவகன் அரசனுடைய கையைப்பல்லக்கின்மீது வைத்துக்கொண்டு சகலமேளவாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்க நகரத்தை வலம்புரிவித்துப் பகவானுடைய சந்நிதானத்தின் முன்னம் அக்கையை வைத்து அரசன் சொல்லிய விண்ணப்பத்தைப்புகன்றான்.

இப்படியந்த சேவகன் பகவான்முன்னே அரசனுடைய இடதுகையைவைத்து அச்சேவகன் சொல்லியமொழிகளையுங் கேட்டு அங்கிருந்த வைணவர்கள் மெத்தஆச்சரியப்பட்டு இப்படியும் கையை வெட்டிஹரிக்கர்ப்பணஞ்செய்யும் அரசர்களு மிவ்வுலகினில் யாரேனுமுண்டோ வென்று அதிசயித்து ஆஹாஹா அரசன்புத்தியும்பக்தியும்என்னென்றுசொல்லுவோம் ஓஜெகந்நாதாபங்கயபாதாவேதவிநோதாவிமலப்பிரக்யாதா வென்று பகவானைத்துதி செய்த வண்ணம்ஜெஜெயகோலாகலத்துடன் ஸ்ரீஹரியைப் புகழ்ந்துக்கொண்டாடுகிறபோதுபகவானுக்கு அம்சைசெய்தப்பிரசாதமானது மலர்க்கூடையைப்போலவும மருக்கொழுந்து கூடையைப்போலவும் அன்றள் தோன்றியதால் இதுவென்ன விபரீதமோவென்றுபரிசாரகர்கள் பயந்து நடுநடுங்கிக்கொண்டிருக்கும் போது அங்கு அரசன் வந்து ஒருகையினாலே பகவானுக்கு வந்தனந்தந்து தீர்க்கமாக விழுந்து பணிந்து எழுந்துப்பிரசாதப்பகராமல் ஒருவரையொருவர் பார்த்தவண்ண மிருப்பதையுணர்ந்து அங்கேவீற்றிருக்கும்போது பரிசாரகன் பிரசாதக்கூடையை யெடுத்து வந்து அரசனுக்குக் கொடுக்க அரசன் ஒருகையை நீட்டிப் பிரசாதம் வாங்குகிறபோது பகவானுடைய கிருபையினால் மத்தொரு கையுமுண்டாகியது அதைக்கண்டு அங்குள்ள ஜெனங்களும் என்று மில்லாதப் பரமானந்த மடைந்து ஸ்ரீஹரியைப் பலவாறு புகழ்ந்துத் தங்கடங்களகஞ் சேர்ந்தார்கள் பின்பு சாத்விகராஜன் அன்றுமுதல் சூதாடுவதை விடுத்து ஸ்ரீஹரியையடுத்துத் தனக்குள்ள தனகண வஸ்து வாகனாதிகள் முதலான சகலசொத்துகளையுங் கிருஷ்ணார்ப் பணஞ்செய்து பகவானுக்குக் கொடுத்து ராஜ்பாதிகாரத்தையும் பகவான் வசத்தி லொப் பித்துத்தான் விசாரணைமுதலான மேல் காரியங்களைப் பார்த்துக் கொண்டு சந்நிதியில் கொடுக்கும் பிரசாதத்தைவாங்கியுண்டு சந்நிதி கைங்கரியத்தையுங் குறைவின்றி நடத்திக்கொண்டு க்ஞான பக்திவைராக்கியத்திற் சிறந்து வெகுகாலங் கழித்துக் கொண்டிருந்து முடிவில் நிரதிசயானந்த ஸ்ரீவைகுந்தமா நகரத்தை யடைந்தனர்.

வாழி விருத்தம்.

ஆர்த்தியுடன்ஸ்ரீஹரிகைங்கரியஞ் செய்தோன்வாழி அளவரதந்தொண்டருட அய்வோன்வாழி
பூர்த்தியாம்பக்திசெய்தப் புண்ணியசீலன்வாழி புகழ்கீர்த்திப்பூதலத்தில் பெற்றோன்வாழி
சீர்த்திகழுஞ்ஜெகந்நாதன் றெய்வமென்போன்வாழி ஜெகமதனில்மத்தெவையுஞ் சிந்தைகொள்ளான்வாழி
சாத்விகராஜன்சரிதைச் சாரமென்றும்வாழி சரணமவர்திருவடிகள் சார்ந்துய்வோர்வாழியே.

சாத்விகராஜன் சரித்திரம் முற்றிற்று

——

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் கர்மாபாயிசரித்திரம்.

துதிவிருத்தம்.

வர்ம்மமின்றிமாய ஜெகத்தாசைப்போக்கி
துர்மதிகள் தங்கள் சங்கந்தூரநீக்கி
நிர்மலமாய்ஸ்ரீஹரினி மலபாதம்பெற்றக்
கர்மாபாய்கழற்கமலம் போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு

ஸ்ரீஹரிக்ஷேத்திரமாகிய ஜெகந்நாத மென்னுந் திவ்யத்தலமானது இவ்வுலகின்கண் மெத்தப்பிரசித்தியடைந்திருக்கும் அந்த க்ஷேத்திரத்தினில் கர்மாபாயி என்றொருவனிதைத்தன் கணவனுடன் இல்லறமேநல்லற மெனக்கருதி இகவாழ்க்கையில் வெகு பிரியமாய் நடந்து வருகையில் சிலநாளில் அந்தக்கர்மாபாயி கர்ப்பிணியாகி யிருக்கிறபோது கணவன் காலகதியினால் மரணமடைய மெத்த துக்கத்துடன் அவனுக்குச் செய்யவேண்டிய கர்மக்கிரிகைகளைச்செய்து முடித்து ஒன்பதுமாதமுங் கடந்தபத்தாவதுமாசத்தில் புத்திரனைப்பெற்றாள் அப்புத்திரனை நாளுக்குநாள் செல்வமாக வளர்த்து அவனைப்பார்த்துத்தன் கணவனிறந்ததுக்கம் நீங்கி அவனால் சுகத்தையடையலாமென்று அதிகசந்துஷ்டி யுடனிருக்கிற போது அப்புதல்வனுக்குப் பதினாறு வயதாயின மாத்திரத்தில் தன்மரபினில் தக்கவனிதையைப்பேசி மணம் புரிவித்து அன்பாக பாதுகாத்து வருகையில் சிலமாதங்களுக்கெல்லாம் மருமகளுங் கெர்ப்பவதியாயிருக்கும் சமயத்தில் புதல்வனும் மரணமடைந்தான் அதைக்கண்டு அந்த கர்ம்மாபாயி மனதிலதிக துக்கங் கொண்டு மகனே மகனே யென்றுபிரலாபித்துக்கொண்டு மருமகளைக் கொண்டு அவனுக்குச் செய்யவேண்டிய கர்மங்களை விதிப்படி நடத்தி புத்திரதுக்கம்நிரந்தர மென்னும் நீதிவாக்கியத்திற் கிணங்க எப்போதுந் தீராததுக்கப் பட்டுக் கொண்டிருக்கிறபோது மருமகளும் புதல்வனைப் பெற்றாள் அவனையு மந்தக்கர்ம்மாபாயி அருமையாகப் பாதுகாத்துக்கொண்டு வருகையில் சிலகாலத்தில் பேரனுங் காலவசத்தால் மரணமடைந்தான் அதைக்கண்டந்தக் கர்ம்மாபாயிபட்டதுக்கத்தை யென்னென்று பகருவேன் ஆகிலும் ஒருவராகச் சொல்லுகிறேன் ஒருவனத்தினில் குரங்கொன்றுளது அக்குரங்குக்கு ஏர்க்கனவே சேஷ்டைகள் சொல்லி முடியாது அப்படிப்பட்ட சேஷ்டைகளுடைய குரங்கானது கள்ளைக்குடித்தால் மேலும் சேஷ்டைகள் சொல்லத்தரமாகாது அதற்கு மேலக்குரங்கைத் தேளொன்று கொட்டியது மேலும் அதினுடைய துக்கமானது சொல்லி முடியாது இப்படிக்கிருக்கிறபோது அக்குரங்கை யொருபிசாசு பிடித்தது அதினாலக்குரங்கின் சுகத்தை எப்படியென்று பகரமுடியாதோ அதுபோல இந்தக்கர்ம்மாபாயி யின் துக்கத்தை இவ்வள வவ்வள வென்று சொல்லி முடியாது.

இந்தப்படியந்த கர்ம்மாபாயி வெகுதுக்கத் துடன் காலத்தைக்கடத்திக் கொண்டு இடைவிடாமலெப்பொழுதும் பாண்டுரங்காபவ பவங்கா என்று துதி செய்துக் கொண்டே ஓ ஜெகதீசா தீராத துக்கமாகிய ஜெனனமரண சாகரத்தினில் மூழ்கி கரை யேருவதற்கு வழிதெரியாமல் அந்தகியைப் போல நிலைகலங்கி அலமலங்கி யிருக்குப்படி யாவரக்ஷிக்க வேணுமென்று ஸ்ரீஹரியைத்துதி செய்துக் கொண்டிருக்கிறபோது சிலசாதுக்கள் எழுந்தருளினாகள் அவர்களைக்கண்ட மாத்திரத்தினில் அந்தக்கர்ம்மாபாயி எதிர்க்கொண்டோடி யழைத்து வந்துதக்கஆசனத்தின் மீது வீற்றிருக்கச்செய்து அவர்கள்திருவடித்தா மரைகளைப்பூசித்து பற்பலவாறு உபசரித்து சென்னியின் மீது இருகரங்களையுங் குவித்துக்கொண்டு அவர்களெதிரினில் பக்தியுடனிற்க அவர்களும் அந்தக்கர்மாபாயியைநோக்கி ஓ அம்மணி நீனதுமுகம்வாட்டத்துடன் மெத்தவிசன முண்டாயிருப்பது போலிருக்கின்றது அப்படிக்கியிருப்பதற்கு யுனக்கென்னவிசனம் உன

க்குண்டாகிய மனக்குறையென்ன அதனை ஒளியாமற்
சொல்லுமெனக்கேட்டு அந்தக்கர்ம்மாபாயி மெத்த
தீனயாகி தனக்குநேரிட்ட கஷ்டத்தையும் அதனாலு
ண்டாகிய திகிலையும் விண்ணப்பஞ் செய்துக்கொள்
ளக்கேட்டந்த சாதுக்களிலொருவர் அந்தக்கர்ம்மாபா
யிக்கி சம்பவித்த துக்கத்தை யரிந்து மெத்தவிசனப்
பட்டவராகிக் கர்ம்மாபாயியை நோக்கி ஓ அம்மணி
இக்கலியில் சம்சாரமானது பொய்யாகும் அன்றியும்
பெருத்ததுக் கத்திற்கிடமாகும் அருகினில் பேரிபூரி
முதலானவாத்திய கோஷங்களை முழங்கச்செய்துக்
கொண்டு நித்திரைசெய்தால் நித்திரை கண்ணுக்கு
பிடியாதது போலவும் கானலைக்கண்டுஜலமென்றதா
கக்கருதி மானானது சமீபத்தினிற் சென்று ஜலத்தை
க்காணாமல் பிரமிப்பது போல அற்பவாழ் வாகுஞ்
சம்சாரத்தையேதோ பெருத்தசுக முண்டாவதுபோ
ல பிரமித்து அதிலுழன்று வெகுதுக்கங்களை யடை
ந்து முடிவில்யாதொருபயனையு மடையாமல் நரகவே
தனைக்குட்பட்டு நைய்யும்படியாக நேரிடும் ஆகையா
ல் ஓ அம்மணி நீயும் தீவிரப்பட்டுமெத்த ஜாக்கிரதை
யுடன் துக்கத்திற்கேது வாகிய மாயா சம்பந்தத்தை
நீக்கி சாக்ஷாத் ஸ்ரீஹரியின் திருவடித்தாமரைகளைய
னுதினமுந் துதிசெய்து முக்திபதவியையடையும் அ
ன்றியும் ஸ்ரீஹரிபதவியையடை வதற்குச் சாதுக்களு
டைய சேவை செய்துக் கொண்டிருப்பதே க்ஷேமத்
தை யடைவதற்கு மேலாகிய மார்க்கமாகும் அந்தப்
பரமசாதுக்கள் காமக்குரோதலோப மோகமதமாச்
சரியங்களென்னும் ஹரிஷட்வர்க்கங்களையும் தாதெ
னெனும் மகாரத்தையும் நீக்கியவர்கள் முகுந்தனைப்
பணிந்து சேவை செய்துக் கொண்டும் சமதமாதி சற்
குணங்களாகிய ஈவிஇறக்கம் பச்சாதாபமுதலானது
களை எப்போதுங் கைக்கொண்டு ஸ்ரீஹரியைத்துதி
செய்தும் மெத்த கீர்த்தியுடன் இப்படி வசித்துக்கொ
ண்டுக் கலிமாய்கைக்குள் படாமல் பரிசுத்த மனதினை
யுடையர்களாக விருப்பார்கள் ஆகையால் நீ அனு
தினமும் அப்படிப்பட்டப் பரமசாதுக்களை ஆர்த்தியு
டன் சேவித்து அவர்கள்திருவடிகளில் விழுந்துபணி
ந்து எழுந்துதுதிசெய்துப் பிரியமாகப் பிரசாதப்பரி
மாரியும் வஸ்திரங்களளித்தும் இன்னும் பற்பலவித
தொண்டுகளையும் வஞ்சிக்காமல் செய்துக் கொண்டி
ருப்பையேயாகில் உன்மீது பிரியங்கொண்டு சாக்ஷா
த்ஸ்ரீஹரியானவர் நீசெய்திருக்கும் பாபங்களென்னு
ங்கொடிகளை யெல்லாம் வாளினாலே வெட்டித்தள்ளு
வார் அன்றியும் சித்தத்திலுதிக்குஞ்சிந்தனையும் தீரும்
படியுனக்குக் கிருபை செய்வார் என்று சொல்லியும்
அந்த உத்தமமான சாதுக்கள் விக்கிரகமொன்றுகொ
டுத்து இதைப்பூசித்துக்கொண்டும் இடைவிடாமலெ
ப்பொழுதும் பகவந்நாமபஜனை செய்துக் கொண்டு
இருப்பையே யாகில் உனக்கு க்ஷேமமுண்டாகுமெ
ன்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு இஷ்டப்படி
சென்றார்கள்.

இவ்வண்ணம் அந்த சாதுக்கள் சொல்லிப்போ
யினபின்பு அந்தக்கர்ம்மாயி சாதுக்கள் கொடுத்துப்
போயின விக்கிரகத்திற்குப் பக்தி பூர்வமாகப் பல
விதமலர்களைக் கொண்டு அர்ச்சித்துத் தூபதீபநை
வேத்தியங்கள் தந்துப்பற்பலவிதங்களாக உபசரித்து
அன்றுமுதல் தனக்குண்டாகிய துக்கத்தை மறந்து
ஹரிசேவையில் மெத்தப்பிரியமுண்டாகி பிள்ளைகளு
டன் விளையாடுவதைப்போல அந்தக்கர்ம்மாபாயி உ
ள்ளங்குளிற அந்தஹரிவிக்கிரகத்துடன் ஒப்புடன் ஆ
டிக்கொண்டுஇதரவிசனம்யாதொன்றுமில்லாமல் சொ
ஸ்தமாக மனசந்துஷ்டியுட னிருந்துக்கொண்டுத் தா
ன்பூசைபுரியும் விக்கிரகத்தை அன்னியர்கள் யாரே
னும் பார்த்தால் கண்ணெச்சல் பட்டதென்றெண்ணி
உடனே அவ்விக்கிரகத்திற்கு திருஷ்டி சுத்திப்போ
டுவதும் அந்தவிக்கிரகத்தைத் தன்காலின்மீது போ
ட்டுக்கொண்டு திரேகத்தைத் தேய்த்து வெந்நீர்
கொண்டு ஸ்னானஞ் செய்வித்து மைதீட்டி ஆடை
யாபரணங்களைப் பூட்டி மலாமாலைகளைச் சூட்டித்
தொட்டிலில் கிடத்தி பலவித நயமாகிய பாட்டுகளை
ப்பாடித் தாலாட்டிக் கண்வளரச்செய்து சற்றுநேர
மாயின பின்பு உடனே எழுப்பி சொர்ன்ன பாத்தி
ரத்தினில் தயிரன்னங்கலந்து அவ்விக்கிக்கத்தின்முன
னே வைத்து கோவிந்தா கோபாலா கிருபாநிதி தயா
நிதி ஸ்ரீஹரிநரஹரி முரகரி மதுகைடவாரி தொந்தர
வடையாமல் சீக்கிரமாக இப்பிரசத்தைத்தின்னு தின்
னு உனக்குண்டாகிய பசியாறும் ஆயாசந்தீரும் சந்
தோஷமீறும் தினமுந்திரேகந்தேரும் கிருபைக்கண்
பாரும் என்று பக்திசிரத்தையுடன் களங்கமின்றி
வேண்டிக்கொள்ளுங் கர்ம்மாபாயியின் பரிசுத்தமான
மனதையறிந்து அந்தவிக்கிரக ரூபத்துடனிருக்கும்
ஸ்ரீஹரியானவர் அந்தத் தயிரன்னத்தைப்புசித்து தி
ருத்தியடைவர் இந்தப்படி அந்தகர்ம்மா பாயிதினந்
தோறும் அந்தகிருஷ்ணவிக்கிரகத்திற்கு மெத்த அக்
கறையுடன் நன்றாக அன்னம் பகர்ந்து ஸ்னானபான
முதலானதுகளில் யாதொருகுறைவுமின்றி அனேக
நாள்களிப்படி நடத்திக்கொண்டு பக்தி பாதந்திரமா
க வருகையில் முன்னமிந்தக் கர்ம்மாபாயிக்கி உபதே
சித்து ஞானமார்க்கத்தை போதித்து விக்கிரகத்தை
க்கொடுத்து போயின பரமசாதுக்கள் அனேகதிவ்ய
க்ஷேத்திரங்களை சேவித்துக் கொண்டு திரும்பி அந்த

ஜெகன்னாதத்தையடைந்துக் கர்ம்மாபாயி வீட்டிற்குள் வர அவர்களைக்கண்டவுடனே யந்த கர்ம்மாபாயிஎதிர்க்கொண்டு சென்று அழைத்து வந்துதக்க ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து அவர்களுக்கு பூசைமுதலான சோடச உபசாரங்களுஞ் செய்து தூபதீபனைவேத்தியங்களைத்தந்து அனந்தரம் ஸ்ரீகிருஷ்ண விக்கிரகத்திற்குத் தயிரன்னம் படைத்துப்பின்பு ஆசை புரிவதை யந்தப்பிராமணர்கள் கண்டு ஓகர்ம்மாபாயிகாலையிலெழுந்தவுடன் ஸ்னானநுஷ்டான நேமங்களை முடித்துப் பின்பு தளிகை செய்து பகவானுக்குத்திருமஞ்சன முதலானதுகளையும் விதிப்படி நடத்துமென்று அந்தசாதுக்கள் நேமிக்க அந்தப்படியேயந்தகர்ம்மாபாயி மெத்தபயத்துடன் மறுநாட்காலையிலெழுந்து வீடுவாசல்களை நன்றாகசாணத்தினால் மொழிகி ஸ்னாநுட்டான நேமங்களை முடித்துப் பின்பு ஜலமெடுத்துவந்து சுயம்பாகஞ் செய்துக் கொண்டிருந்தமையால் அன்னாள் மெத்த பொழுதுபோயிற்று அதனால் ஹரிக்குப்பசியதிகரித்து அப்போது சந்நிதியில் வசிக்கும் ஸ்ரீஹரியானவர் அர்ச்சகரைநோக்கி சிலபிராமணர்கள்கர்ம்மாயி வீட்டில் சேர்ந்து கர்மநிஷ்டைகளைசெய்யும்படி போதிக்கஅம்மாது நிர்மலமானமனதைக்கெடுத்து விகல்பபுத்திகள் நேரிட்டு ஸ்னானதிகர்மங்களையனுசரிப்பதினால் மெத்தப்பொழுது போயிற்று எனக்கோபசிதாபமேலிட்டு மெத்த கஷ்டமுண்டாயின ஆகையால் நீயுமந்தக்கர்ம்மாபாயி நிடஞ்சென்றுக்கர்ம்மாதீதனாகியஎனக்குநிர்மலமானமனதுடன் செய்யும் பக்தியொன்றே போது இந்தகர்ம்மவிதிகளெல்லாம் சரிப்படமாட்டாது என்றும் அம்மாதுடன் தெரியச்சொல்லுமென்று நேமிக்கவே அந்தவர்ச்சகனும் பலவிதமாக பகவானைத் துதிசெய்துக் கொண்டே கர்மாபாயி வீட்டையடைந்துக் கர்ம்மாபாயியைக்கண்டு ஸ்ரீஹரிசொல்லிய சொற்களையும் புகலக்கேட்டு அந்தவர்ச்சகருக்கு வந்தன வழிபாடுகளைச்செய்தனுப்பி அந்நாள் கடத்தி பக்வந்நேமனப்படி மறுநாட்காலையி லெழுந்து ஸ்னானநிட்டானங்களின்றிப் பிரசாதஞ்செய்து பகவானுக்கு முன்னம் தயிரன்னத்தை வைத்து ஓ ஆபத்பந்து அனாதரக்ஷகா ஆதிதேவனே அஷ்டலட்சுமிகள் நேசனே சீக்கிரமிந்தத்தயிரன்னத்தைப்புசித்து உமக்குண்டாகியப்பசியும் ஆயாசந்தீரும் இந்தப்பரமசாதுக்களுக்குமின்னறியசேவைதாரும் கருணைக் கண்ணாற்பாரும் என்று வேண்டிக்கொள்ள அப்போது பகவான்யாவருமறியும்படி கர்ம்மாயி சொர்ன்னபாத்திரத்தினில்வைத்திருக்கும் தயிரன்னத்தைப் புசித்தார் இதைக்கண்டுபக்தர்கள் யாவரும் பரமானந்தமேலிட்டால் ஜெயம்ஜெயமென்றுக் கோலாகலத்துடன் கோஷித்துக் கொண்டாடும்படி ஸ்ரீஹரியானவர் வீற்றிருந்தார் உடனே சாதுக்கள் யாவருங் கர்ம்மாபாயியை வெகுவாகப் புகழ்ந்து விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள் அனந்தரங்கர்ம்மாபாயிதினந்தோறும் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு சொர்ன்னபாத்திரத்தினில் தயிரன்னங்கலந்து வைத்துப் புசிக்கும்படி வேண்ட அவரும்புசித்துப் பரமசந்தோஷத்துடன் வீற்றிருப்பார் இந்தப்படியந்தக் கர்ம்மாபாயி ஸ்ரீஹரிகைங்கரியத்திலும் பக்தர்களுக்குத் தொண்டுபுரிவதிலும் வெகுசிரத்தையுடையமாதாகி வெகுகாலமிருந்து முடிவில் பகவானுடைய கிருபையால் வைகுந்தப்பிராப்தியடைந்தனள்.

வாழி விருத்தம்.

கர்ம்மின்றிக்கண்ணனுக் கமுதூட்டினாள்வாழியே
மர்மமின்றிச்சாதுசேவை மகிழ்ந்துசெய்வோள்வாழியே
நிர்மலமாய்நீலவண்ணன்பதம் பூசிப்போள்வாழியே
கர்மாபாயிகழற்கமலங் காசினியில்வாழியே.

கர்மாபாயி சரித்திரம்

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ ம த்

ஜனஜசாவந்தர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

மனதினில்மாதவன்பதத்தை மகிழ்ச்சியுடபூசித்துக்
கனமாகதருமமென்றுங் காதலித்வதுவழங்கிஹரி
இனமானதொண்டர்கள் தம்மிருபதசேவைசெய்யுஞ்
ஜனஜசாவந்தரிருசரமலர்ப் பணிந்துய்வோமே.

கதையின் வரலாறு.

தாமரை மலரினிலுற்பவித்த ஸ்ரீலக்குமி கடாட்சம்பொருந்தின கௌடபங்காள தேசத்தினில் கோடீஸ்வரரும் சமதமாதிகுண சம்பன்னரும கல்வியில் விற்பனரும் அகண்டபக்திக் ஞானசம்பன்னருமாகிய ஜனனசாவந்தரெனும் பரமசாது ஒருவரிருந்தார் அவருக்குச் சுபமதிபாயியென்றொரு உத்தமமனைவியுண்டு அம்மனை யாருடன்கூடி இல்லறதருமத்தை நடத்திக் கொண்டிருக்கையில் பகவானுடைய கிருபையினால் ஐந்துபுதல்வர்களைப் பெற்று அவர்களுக்குத்தக்கவயதினில் கல்விபயிற்சி செய்வித்து யாதொருகுறைவுமின்றிப் பாதுகாத்துவந்தார் அவர்களும் அந்தச்சிறுவயதிலேயே தந்தையின்சொல்லைக் கேளாமல் மனம்போனபடிக்குத் திரிந்துவந்து வேளைக்கிப்புசித்து நல்ல ஆடையாபரணங்களையணிந்து மனம்போனபடி சஞ்சரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு தந்தையாகிய ஜனஜாவந்தர் மெத்தபுத்திமதிகளைச் சொல்லித் திருத்தப்பாடுசெய்தும் அவர்கள்கேளாமல் யெதிர்த்துப்பேசத்தலைப்பட்டார்கள் அதற்கந்த ஜனஜசாவந்தர் மெத்தசந்தோஷித்துத் தன்புதல்வர்கள் ஐவரும் தாந்தோணிகளாய்த் திரிவதுளதற்காகவெனில் நமக்கனுகூலத்திற்காகவே அதென்ன அனுகூலமென்றால் நாளுக்குநாள் நமக்கிவர்கள்மீது வெறுப்பும் பகவத்பக்தியில் மெத்தவிருப்பும் உண்டாகி பகவானுடைய பதவியை யடைவதற்கு உபகாரிகளாக நமக்குப் புத்திரர்களாகப் பிறந்திருக்கின்றார்கள் அன்றியு மிப்படிப்பட்ட பரமஉபகாரிகளாகியும் புதல்வர்களாகியும் உதிக்கும்படி நமக்குப்பகவான் கிருபைசெய்ததற்கு அந்தபகவான் திருவடிகளுக்கு அனேகதெண்டன்சமர்பிக்கின்றேன்என்று பலதரம்பகவானைபணிந்து ஆர்த்தியுடந்தவராகி அந்தஜனஜசாவந்தர் அதுமுதல்கொண்டு சாதுக்களைக்கண்டால் அவர்களுக்கெதிர்ச் சென்று அழைத்துவந்து தக்கஆசனத்தின் மீதெழுந்தருளச்செய்து அவர்கள் திருவடிகளைத்தீர்த்தத்தினால்விளக்கி அத்தீர்த்தத்தை சிரசின்மீது புரோட்சித்

துக்கொண்டு அர்க்கியம்பாத்தியம் அகமனீயம் தந்து புஷ்பங்கள் அக்ஷதைகளினு லர்ச்சித்துத் தூபதீபமளித்துப்பிரசாதம் ஸ்வீகரிக்கச்செய்து ஆயாசந்தீரும்படி சயனத்திருக்கோலம் புரியும்படி வேண்டித் தானும் தன்மனைவியும் கவரி ஆலவட்டங்களைக் கொண்டு விசிறி இன்னுமனேகவிதங்களாய் அந்தசாதுக்களைஉபசரித்தும் சாக்ஷாத் ஸ்ரீஹரியென்றே அவர்களைமதித்துத் தன்மனதினில் வெகுவாகத் துதித்து அவர்களுக்கு மெத்தப்பிரியமுண்டாகும்படிக்கி தொண்டுசெய்துக் கொண்டிருப்பதுமன்றியும் ஸ்ரீஹரியை இடைவிடாமல் துதிசெய்தும் ஏழைப்பரிதேசிகளுக்கு இல்லையென்னுமல் அன்னம்வஸ்திரம் ஆபரணம் சொர்ணம்முதலாகியதுகளை அவர்கள்கோரிக்கையின்படி விசேஷமாகக்கொடுத்தும் நித்திரை ஆலசியம் சிரமம் பெருமை முதலானதுகளு மில்லாமல் தனக்குள்தானே ஸ்ரீஹரியைக்கண்டு சேவித்துப்பரமானந்தமடைந்து தருமஞ்செய்வதில் எப்போதும் ஆசைமிகுத்தவராகியிருந்தார்.

இந்தப்படிக்கி யந்தஜனஜசாவந்தர் தருமவிஷயத்தில் வெகுவாகத்திரவியங்களையும் ஆடையாபரணங்களையும் சிலவுசெய்து மெத்த சந்துஷ்டி யடைந்துக்கொண்டிருக்கிறபோது புதல்வர்கள் பெரியவர்களாய் வளர்ந்து நாளுக்குநாள் மெத்ததுஷ்டர்களாகியும் நம் தந்தையானவர் பலருக்கும் வெகுவாகப் பொருள்களைக் கொடுத்துவிடுகின்றாரே இதென்ன அனியாயம் பிள்ளையில்லாதவர்களன்றோ நமக்கென்ன பிள்ளையா குட்டியா நமக்குப்பின்னிருந்து இப்பொருளை யனுபவிப்பதற்கு ஒருப்பிராணியுமில்லாததால் நமக்குள்ளபொருள்களை யெல்லாம் தானதருமஞ் செய்து புண்ணியலோகத்தை யடையலாமென்றுக் கருதித் தங்களுக்குள்ள பொருள்களை யெல்லாம் தானதருமஞ்செய்து புண்ணியலோகத்தை யடைவது நீதியும் உலகவழக்கமுமாகி நிற்க நமது தகப்பனுக்கு நாமைந்துபேர்கள் பிள்ளைகளாய்ப் பிறந்திருக்க இந்தசம்பத்துகளையெல்லாம அவருக்குப்பிற்காலம் அநுபவிக்க வேண்டிய சொந்தபாத்தியம் நமக்கிருக்க அதைக்கருதிப்பாராமல் கைகொண்டமட்டும் தானதருமங்களைச்செய்து சிலவழித்து விடுகிறாரே என்றத்துஷ்டர்கள்யோசித்துச் சந்தணமரத்தடியில் கெச்சைக்காய் புதர்ஜென்மித்ததைப்போல அவர்கள் ஐவரும் ஜனஜசாவந்தற்குச் சத்துருக்களைப்போலவும் புலஸ்தியப்பிரமனுக்கு ராவணன் பிறந்ததைப்போலவும் மேன்மையாகிய சந்திரவம்சத்தை நாசப்படுத்தப் பிறந்த துரியோதனனைப்போலவும் அந்தஜனஜசாவந்தருக்கு இவர்களைந்து புத்திரர்கள் பிறந்ததுஇவ்வுலகமாய்கைக்குள்ளாகியும் பாவிகளாகியு மிருப்பதால்தானதருமத்தினால் தங்கள் தந்தை விசேஷமாகக் கணக்குமிதமின்றிப் பொருள்களைசிலவிடுவதைக்கண்டு அவர்கள் ஐவரும் பொறாமைகொண்டு நமதுதந்தைக்குப் பயித்தியம்பிடித்ததென்றும் அப்படிக்கில்லாமல் சுயக்ஞானமிருக்கிற பக்ஷத்தில் இப்படியுங்கொள்ளை கொள்ளையாகச் சிலவழிப்பரோ அழிக்கமாட்டார் ஆகையால் இவருக்குண்மையாகவே பயித்தியம் பிடித்ததென்றுப் பற்பலவாலோசனைகள் செய்து முடிவிலவர்கள் தந்தைக்குத் தெரியாமல் கொஞ்சந்திரவியத்தைத் திருடிச்சேர்த்து வைத்துக்கொண்டு சிலதிரவியங்களை அவர்பார்த்துக்கொண்டிருக்கிறபோதே எடுத்துவைத்துக்கொண்டும் இந்தப்படியாக இந்த ஐந்து புத்திரர்களுங் கூடியமட்டும் பலசொத்துக்களை பத்திரப்படுத்திவைத்துக்கொண்டிருந்து ஒருநாள் அப்பட்டணத்தையாளும் அரசனைக்கண்டு அவர்களைவரும் ஓவேந்தனே தாங்கள் சிரத்தையுடன் யாங்கள் சொல்லுவதைச் செவிசாத்திக் கேழ்க்கவேண்டும் அதென்னவெனில் எங்களுக்குத் தந்தையாகிய ஜனஜசாவந்தர் தானசம்பாதித்த திரவியம் யாவத்தையும் பசியடைந்தவர்களுக்கும் அதிதியப்பா கெதிகளுக்கும் சாதுக்களுக்கும் விரயஞ்செய்துவிடுகின்றார் ஆகையால் அந்தத்திரவியங்கள் யாவற்றும் எங்கள் சுவாதீனத்திலிருக்கும்பக்ஷத்தில் தங்களுக்கொரு சமயத்தினில் அக்கரைக்குதவும் நாங்களும் தங்களுடைய கிருபையினால் பராரியாகாமல் இப்பட்டணத்திலேயே கௌரவமாக வாழ்ந்துக்கொண்டிருப்போம் இதைப்பத்தித் தாங்கள்எங்கள்மீது தயவுசெய்து தந்தையின்வசமாக விருக்கும் திரவியங்களனத்தையும் எங்கள்வசமாகும்படியான யோசனை யொன்றிருக்கின்றது அதெனனவெனில் எங்கள் தந்தையைப் பிடித்துக் கயிறுகொண்டு கால்கரங்களை பிணைத்துக்கட்டி ஆழமுள்ளகுளத்திற்போட்டுப் பிராணனைப்போக்கினால் இனியிருக்கப்பட்ட திரவியங்களாகிலும எங்களுக்குக் கிடைக்கும் தப்பாமலிப்படிச் செய்யாவிடில் இருக்கிறதன முதலானதுகளும் சிலநாளையில் அவர்சிலவுசெய்துவிடுவார் எங்களுக்குயாதொரு ஆதரவுமில்லாமல் குடிக்கக்கஞ்சிக்குங் கட்டத்துணிக்கும் வீடுகள்தோறும சென்றுப்பிட்சை யெடுக்கும்படியாகநேரிடும் ஆகையால் எங்களைப்பெற்ற தாயுந்தந்தையும் நீரேயென்றுநம்பித் தங்களைமெத்தவும் வேண்டிக்கொள்ளுகிறோமென்று தீனர்களாய்விசனப் படுவதைக்கேட்டு அவ்வரசன் பொருள்விஷயத்தினில் ஆசைகொண்டவனாகி மநுநீதியை விடுத்துத் துர்க்குணத்தையடுத்து நீசர்கள்போதனையினாலும் மந்திரியின்

தைரியத்தினாலும் அவ்வரசனுக்கு ஜனஜசாவந்தர் மீ
து அதிகசினங்கொண்டு அங்கிருக்கும் சேவகர்களை
நோக்கி அடாஏவலாளிகளே நீங்கள் விரைந்தோடிச்
சென்று துஷ்டனாகிய ஜனஜசாவந்தனைக் கைப்பிடி
யாகப்பிடித்துக்கொண்டு வரக்கடவீர்களென்று கட்
டளையிட்டான்.

அந்தஏவலாளரவிகலெ அரசன் கட்டளையின்படிவி
ரைந்தோடிச்சென்று அந்த ஜனஜசாவந்தரைக்கண்டு
அவர்கையைப் பிடித்தழைத்துக்கொணடுவந்து அரச
ன்முன்னம்விடுத்தார்கள் அவரைக்கணடு அவிவேகனா
கிய அரசனும் அதமனாகிய மந்திரியும் ஓஜனஜசாவந்
தரே உமக்குண்டாகிய பொருள்கள் யாவத்தையும்
நினதுபுத்திரர்கள் வசப்படுத்தாமல் இப்போதுயாச
கர்கள் சாதுக்கள் முதலானோருக்குங்கொடுத்து விர
யப்படுத்தி விடுவது உமக்குமேன்மையாகுமோ பூர்
த்துக்காய்த்தும் பழுத்தும் நாளுக்குநாள் அதிகப்
படிம்படியான உத்தமதிரவியங்களைக் கைக்கொண்டு
பெருத்த பயித்தியக்காரனாகி அத்திரவியங்களைச் சி
லவுசெய்துப் புத்திரர்களுக்கு யாதொன்று மில்லா
மல் சூனியர்களாகச்செய்வ தமக்குஞாயமோ அன்
றியும் நமக்குண்டாகிய இருப்புதிரவியங்களைப் பிர
ஜைகளுக்கு கொள்ளைவிடுவது நன்றல்லவெனக்கேட்
டந்த ஜனஜசாவந்தர் அரசனை நோக்கி ஓ நரநாதனே
எனக்கு சகலதிரவியங்களும் பிரயத் தினத்தினாலும்
சிரமத்தினாலும் பிராப்தமாகிவந்தது அப்படி எனக்
குக் கிடைத்த திரவியத்தை சாது சத்துக்களுக்குக்
கொடுத்துச் சிலவுசெய்கின்றேன் என்பிள்ளைகள் கஷ்
டப்பட்டு சம்பாதித்த திரவியத்தை யான்சிலவுசெய்
யவில்லை இந்தப்படிக்கி என்திரவியங்களெல்லாம்யே
துக்காக சிலவுசெய்கிறேனென்றால் ஜென்மசபல்யங்
காணும்பொருட்டே எனக்கேட்டந்த அரசன் மெத்
தவுஞ் சினங்கொண்டவனாகி அவருடைய புத்திரர்க
ளைவரையும்நோக்கி அப்பாஜனஜசாவந்தர் புதல்வர்
களே உங்கள்தந்தைக்கு யான்சொன்ன நற்புத்தி சம்
மதிப்படாமல் என்னுடன் எதிர்த்து கெட்ட புத்தியி
னாலேயொருத்திரவுசொன்னார் ஆகையால்மறுவார்த்தை
ஒன்றும்பேசாமல் உங்களுடைய சம்மதத்தின்படிகட்
டாயம் யவரைசிட்சை செய்யமனமுடையவனாக விரு
க்கின்றேன் ஆகையால் நீங்களென்ன சொல்லுகிறீர்க
ளென அதற்கவர்களைவரும்பே சோபித்த மனமு
டையவர்களாகி தந்தையென்ற அபிமானஞ் சிறிதும்
கருதாமல் புத்தி யீனத்தினால் அரசனைநோக்கி ஓபூ
பாலரே இவன் யெங்களைப் பெத்த தந்தையல்ல எ
ங்களுக்கிவன் பகையாளி யாகும் இப்படிப்பட்ட ச
ண்டாளன் முகத்தையும் பார்க்கலாகாது தடையின்
றியுங்க ளிஷ்டப்படிக்கி யிவனைசிக்ஷை செய்விக்கலா
மென்று நவிலக் கேட்டந்த அரசன்உடனே அங்கி
ருக்குஞ் சேவகர்களை நோக்கி அடாசேவகர்களே சீ
க்கிரமிந்த துஷ்டனைப்பிடித்துக் காலகரங்களைக்கயிறு
கொண்டு கட்டி ஆழமுள்ள தடாகத்தினி லிவனைப்
போட்டு வாருங்களென்றுக் கட்டளையிட அவர்களு
மந்தப் படியே அந்தஜனஜ சாவந்தரைப் பிடித்துக் க
யிறு கொண்டுவந்து தடாகக் கரையினில் சேர்த்து
பெருத்தப் பாரங் கல்லைச்சேர்த்து அந்தஜனஜ சாவ
ந்தரைகட்டி ஆழமுள்ள ஜலத்தினில் போட்டார்கள்
அப்போது ஆபத்பந்துவும் அனாதை களுக்குரக்ஷக
னும் பக்தர்களுடைய மனக்கவலையைப் போக்கி
ஆதரித்து அப்பக்தருடைய மகுத்துவத்தை யாவரு
ங்கண்டு களிக்கும் படிச்செய்தும் பக்தனுக்கு இடை
யூருசெய்தமாபாவிகள்மனம் நடுங்கும்படிச்செய்யும்ப
கவான் அப்போதந்ததடாகத்தினில் ஆமையுருவுடன்
வந்து மூழ்கியிருக்கும் ஜனஜசாவந்தர்மிதந்துக்கொ
ண்டிருப்பது போலவும் சகலருங் கண் ஆஹாஹா
வென்று அதிசயிக்கும்படி அந்தஜனஜ சாவந்தரை
முதுகின்மீதுதாங்கிக் கொண்டிருந்தார் அப்போதுஉ
த்தம குணத்தராகிய ஜனஜசா வந்தர் அரசனை நோ
க்கி ஓவேந்தனே சந்திரனுக்கும் சூரியனுக்கும் பிரகா
சத்தைக் கொடுத்த ஜெகதீசனாகிய ஸ்ரீஹரியானவர்
எனக்குற்ற ஆபத்தை யுணர்ந்து இத்தடா கத்தினில்
ஆமையுருவாகி விரைந்தோடிவந்து என்னை ரட்சித்
தார் அன்றியும் கல்லைப் பெண்ணாகச் செய்த திருவ
டிகளை யுடையவனும் மாபாலி சக்கிரவர்த்தி யினிடம்
மூன்றடி தானம்பெற்று ஓரடியாய் ஆகாயத்தை ய
ளந்து கெங்கையைப் பெற்ற திருவடிகளை யுடையவ
னும் மற்றோரடியால் பூமிமுழுமையு மளர்ந்த திருவ
டிகளையுடையவனும் மூன்றாவ தடியைப் பலிசக்கிர
வர்த்தி யின்சிரசின்மீது வைத்துப் பாதலத்தினி லழு
த்திய திருவடிகளை யுடையவனும் சதாகாலமும் ஆ
ஞ்ச நேயர்தன் னிருகரங்க ளாலுந் தாங்கிக் கொண
டிருக்குந் திருவடிகளை யுடைவனுங் காளிங்கன
கெர்வத்தை யடைக்கிய திருவடிகளை யுடையவ
னும் எப்போதும பக்தர்களுடைய இருதய கமலத்
தினில் வசிப்பவனுமான ஸ்ரீஹரியின் கிருபைக்கு நிக
ரான தெதுவென்று சொல்லுகையில் உடனே அவ்
ரசன் மெத்தஆச்சரியப்பட்டுஓடத்தைத்தருவித்து அ
த்தடாகத்தினில் விடுத்து அவ்வோடத் தின்மீது
னேறிக்கொண்டு விரைந்துசென்று ஜனஜசாவந்
க் கட்டியிருக்குங் கட்டுகளை யெல்லாம் அவிழ்
அவரை யந்தஓடத்தின் மீதேற்றிக் கொண்டு வந்
ரைசேர்ந்து அவர் திருவடிகளில் விழுந்து பணி

எழு[illegible]களையுஞ் சிரசின்மீது குவித்துக்கொண்டு [illegible] அக்ஞானத்தினால் தெளிவின்றிச் செய்த அப[illegible]ரதத்தை க்ஷமித்து என்னை ரக்ஷிக்க வேணுமென்று வேண்டிக் கொண்டு மேலுஞ் சொல்லுகின்ருன் ஓஜனஜசாவந்த சாதுவே யென்றழைத்துச் சமீபத்தினில் சிங்காதனத்தின் மீதிருத்தித்தான் எழுந்து நின்றுக்கொண்டு சொல்லத் தொடங்கினான்.

கேளும் பரமபக்தசிகாமணியே நீரிப்படிப்பட்ட மகத்துவமுடையபரமசாது வென்றறியாமல் கினது புதல்வர்கள் சொல்லைக்கேட்டுயான் தங்களிடத்தில் அபசாரப் பட்டேன் மிகவுங் கெட்டேன் உம்மைக் கஷ்டப்படுத்தினதற்குக்காரணம்கினதுபுதல்வர்களே யாம் இதைப்பற்றி யென்மீது முனிவுகொள்ள வேண்டாம் என்றுசொல்லி அவர்புத்திர்களாகிய துஷ்டாத்துமரக்களை வரையும் அழைத்து உங்களுடைய சொல்லைக்கேட்டுயானுந்துர்குணத்தை யடைந்துமதிமோசம்போனேன் பாதகர்களில்கொடியபாதக நாயினேன்என்றுசொல்லிஅவர்கள்மீதுமெத்தமுனிவுகொண்டுஅவர்களுக்கு உபாயமானதண்டனை விதித்துஅவர்களையந்த ஜனஜசாவந்தர் திருவடிகளில் விழச்சொல்லிநேமித்தான்அவர்களும்அந்தப்படியேதந்தையின்திருவடிகளின் விழுந்து பணிந்து எழுந்துநின்று ஔந்தையே பொருளாசை அதிகரித்துக் ஞான சூனியர்களாகி அரசனைக் கொண்டு தங்களுக்கு நாங்கள் செய்வித்த தண்டனைக்குச் சீற்றங் கொள்ளாமல் எங்கள்மீதுக் கிருபாநோக்கம் வைத்து க்ஷமித்துக் காப்பாத்த வேணுமென்று வேண்டிக் கொண்டார்கள். அப்போது ஜனஜசாவந்தருக்கு அவர்கள்மீது கருணை யுண்டாகித் தன்கரங்களால் அவர்களைத்தழுவிக் கொண்டு உத்தமக்ஞான சமபத்தையடையக்கடவீர்களென்று அவர்களுக்காசிகூறினமாத்திரத்தில் அவர்களைவர்களுக்கும் பக்திஞானவைராக்கியமுண்டாகித் தந்தையுடன் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டுத் தங்கள்வீட்டை யடைந்துப்பொருளின் மீது ஆசையற்றவர்களாகி இடைவிடாமல் தைலதாராவிச்சின்னமாக ஸ்ரீஹரியின்திருவடிகளை தியானித்துக் கொண்டிருந்தார்கள் இவர்களிப்படிக் கிருக்க ஜனஜசாவந்தர் வீட்டைச்சேர்ந்து அதுமுதல் ஏழைப்பரதேசிகளுக்கும் சாதுசத்துக்களுக்கும் அன்னம்வஸ்திரஆப்ரண முதலானதுகளையும்யார்யாரென்னவேண்டுமென்று கேழ்க்கின்றுர்களோ அந்தந்தப் பொருள்களை யவரவர்களுக்குக் கொடுத்துமனது சந்தோஷமடையச்செய்துக் கொண்டிருந்தமையால் சில மாதங்களில்தனக்குண்டாகிய சொத்துகளெல்லாம்நாளுக்குநாள் கறைந்து ஒருகாசுலொட்டிய தூசியுமில்லாமல்யாவத்னதயும் சாதுக்களுக்கும்ஏழைப்பரதேசிகளுக்குமே கொடுத்துக் கோமணாண்டியாகி வீடுகள்தோருஞ்சென்றும் பிள்ளைகளுடன் பிட்சையெடுத்து ஜீவித்துக் கொண்டிருந்து வெகுகாலத்திற்குப் பினபு பரமபதசம்பிராப்தியை யடைந்தனர்கள்.

வாழி விருத்தம்.

தனதுகபாருள்னத்தையுஞ் சாதுக்களுக்கீந்தோன்வாழி
மனமுகந்துமாதவன்பக்திமகிழ்ந்து செய்தோன்வாழி
குணமில்லாவாசன்செய்கொடுமைக்குயிர்தப்பினேன்வாழி
ஜனஜசாவந்தர்திருசரண மலரென்றும்வாழி

ஜனஜசாவந்தர் சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்
சூரமநுமோஹனர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

பாரதனில்பக்தர்கட்குத் ததியாராதனஞ்செய்து
நாரணன்பக்தியென்னும் நாமம்புகழ்ந்தென்றும்
பூரணஞ்ஞானியாகிப் புரவலன்போற்றியேத்தஞ்
சூரமநுமோஹனர்சரண் சிரஞ்சூடியுய்குவோமே.

கதையின் வரலாறு.

அஷ்டலட்சுமிகள் கடாக்ஷம்பொருந்தி தனகன வஸ்துவாகனாதிகளிற் சிறந்த அஸ்தினாபுரி யென்றொரு நகரமுளது அப்பட்டணத்தை அக்பர் பாதுஷா வென்பவர் அரசுபுரிந்துக் கொண்டிருந்தார் அவரிடத்தினில் சூரமநுமோஹனரென்பவர் உத்தியோகஞ் செய்துக்கொண்டிருக்கையில் இந்தசூரமநுமோஹனருடைய நடவடிக்கைகளும் நற்குணங்களும் சத்தியம் பொருமை முதலானதுகளும் பொருந்தியிருப்பதையந்த அக்பர் பாதுஷாவானவர் அறிந்து அந்தமநுமோகனர்மீது நம்பிக்கையுண்டாகி அவரைமதுராநகரத்திற்கு அதிகாரியாகநேமித்து அரசன் அனுப்பினான் அப்போது சூரமநுமோகனர் அக்பர் பாதுஷாவினிடம் விடைபெற்றுக்கொண்டு சகலபரிவாரங்களுந்தன்னைச் சூழ்ந்துவர நடந்து மதுராபுரத்தைச்சேர்ந்து அந்நகரத்திற்குப் பிரபுவாகி விளங்கினார் அதுகாலத்தினில் கோகுலம், மதுரைபிருந்தாவனம் கோவர்த்தனம் என்னும் இத்தலங்களில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அவதாரஞ்செய்துஞ் சஞ்சரித்துக் கொண்டிருந்தத் தலமாகையால் அங்குசாதுக்கள் கூட்டங் கூட்டமாக வந்துசேர்ந்து சதாவாசஞ் செய்துக்கொண்டிருந்தார்கள் மேலும் அத்தலங்களானது இப்பூமண்டலத்திற்குள் புண்ணியத்தலங்களாகி யிருப்பதாலும் அங்குவெகுசாதுக்கள் வந்துவாசஞ்செய்யத்தக்க யோக்கியதையுள்ள தாகியுமிருந்தன அப்படிப்பட்ட திவ்யக்ஷேத்திரத்தினில் இந்தசூரமநுமோஹனர் வாசஞ்செய்துக்கொண்டும் பிரபுவாகியிருந்து தாருமாரு விசாரணையில் மெத்தநீதியாக தீர்ப்புகள் செய்தும்தனக்குள்ளபொருள்களைக்கொண்டுத் ததியாராதனை சாதுக்களுக்கு வெகுப்பிரியமாக நடத்திக்கொண்டும் வருகிறபோதுச் சிலவருடங்களுக்குள் ததியாராதனை செய்துதனக்குள்ள பொருள்களையெல்லாஞ் சிலவுசெய்து சத்வினியோகமாகிய படியால் அந்த சூரமநுமோஹனர் மிகவுஞ்சந்துஷ்டராய்ப்பின்புததீயர்களுக்குப் பிரசாதமிடுவதற்குப் பொருளில்லாமையினாலே அந்தமநுமோஹனர் மெத்தவிசனமடைந்து எப்படித்ததீயராதனை நடக்குமென்று யோசித்துக்

கொண்டிருந்தார் அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான்சூரமநுமோஹனருக்குள்ள பொருள்களையெல்லாம் சத்பாத்திரங்களில் விநியோகப்படுத்தியதற்கு அதிகசந்துஷ்டராகி நாளையதினத்திற்கெப்படி ததியாராதனை நடத்துவரோ பார்ப்போமென்றுயோசித்துக்கொண்டிருந்தபடியே சூரமநுமோஹனரிடம் தன்பார்வையைவைத்துக்கொண்டிருந்தார் இதற்குள் சூரமநுமோஹனருக்கொருயோசனை யுண்டாகியது அதென்னவெனில் அரசனுடைய பொக்கிஷம் அவர்வசத்தினிலிருப்பதால் இப்பொக்கிஷத்திலிருக்கும் பொருள்களைக்கொண்டு ததியாராதனை செய்யத்தகுமென்றும் இதையறிந்து அரசன் என்னைப்பிடித்துத் தலையை வெட்டினாலும் யான்புனிதனாகிறேன் என்றுயோசித்துத் திடச்சித்தராகி பயப்படாமல் ராஜனுடைய திரவியத்தைக்கொண்டு ததியாராதனை செய்யத்தொடங்கினார்.

அதெப்படியெனில் சாதுக்களைக்கண்டு வெகுவிதங்களாகப் பக்குவமாகியப் பிரசாதங்களைச் செய்து அவர்களுக்கிட்டுப் பலவிதங்களாகப் பூசித்துப்பற்பலவாறு பூஷித்துப் பகவந்நாமங்களைக் கோஷித்து விசுவசித்து உபசரித்து நேசித்துவசித்திருப்பதற்கு உன்னிதமாகிய சாலைகளையுஞ் சோலைகளையும் நூதனமாகக்கட்டியும் பலதருக்களை வைத்து விருத்தியாகும்படி அத்தருக்களுக்கு ஜலம்வார்த்துப் போஷித்தும் க்ஷேத்திரவாசிகளுக்கும் சாதுக்களுக்கும் உயர்ந்தவஸ்திரங்களை யளித்தும் செம்புமுதலாகிய பாத்திரங்களையீந்தும் அவர்கள்சுகமாய்ப் படுத்துநித்திரை செய்வதற்கு தக்கபடுக்கைகளீந்தும் பக்திவிடாமற் செய்துக்கொண்டு பரமானந்தமடைந்து தன்னைமறந்து தலைவனிற்கலந்து ஆனந்தநடனமாடி சாதுக்கள்திருவடிப்பொடிகளைச் சிரசினிற்சூடி அவர்களை வெகுவாகக் கொண்டாடிக் கொண்டிருந்தார் இப்படி சிலவருடங்கள் ததியாராதனை முதலான சத்கைங்கரியங்களை அபாரமாகச் செய்து அரசனுடைய திரவியம் எண்பத்திரண்டுலக்ஷரூபாய் சிலவிட்டார் இதையொருவன் தெரிந்து விரைந்துசென்று அஸ்தினாபுரத்தையடைந்து அக்பர்பாதுஷாவைக் கண்டுவணங்கி ஓபுவிநாதனே தாங்கள் மதுராநகரத்திற்குப் பிரபுவாக நேமித்து அனுப்பிய சூரதாசர் அளவிட்டுச் சொல்லப்படாத வீண் சிலவுகளால் தங்களுடைய பொருள்களை யெல்லாம் சிலவு செய்துக் கொண்டிருக்கின்றார் இன்னுஞ்சிலநாளில் தங்களுக்குச் சேரவேண்டியகிஸ்தி மொத்தப் பொருள்களையும் விரயப்படுத்துவா னென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லையெனக் கேட்டந்த அக்பர் பாதுஷாவானவர் அதிக சினங்கொண்டு அங்கிருக்கும் தூதர்களை நோக்கி அடா தூதர்களே விரைந்தோடிச்சென்று மதுராநகரத்தையடைந்து அப்பட்டணத்துக்கு அதிகாரியாகிய சூரதாசரைக்கண்டு நாளதுவரைக்கும் நமக்குச் செலுத்தவேண்டிய கிஸ்திமொத்த தொகையையும் அதற்குண்டாகிய கணக்குகளையுங்கொடுக்கும்படி பெற்றுக்கொண்டு வரக்கடவீர்களென்று கட்டளையிட்டுக்கடிதமொன்றெழுதி அதற்கு முத்திரையிட்டு சீல் செய்துக்கொடுக்கப் பெற்றுக்கொண்டு அத்தூதர்கள் அஸ்தினாபுரத்தைவிட்டு வாயுவேக மனோவேகமாகச் சென்று மதுராநகரத்தையடைந்து சூரதாசரைக்கண்டுவணங்கி அஸ்தினாபுரத்தினில் அக்பர் பாதுஷாவிடம்நடந்த செய்தியையெல்லாந்தெரியப்படுத்தி அரசன்கொடுத்தசீட்டையுங் கொடுத்து ஐயா பரமசாதுவே நாங்கள்சீக்கிரம் அஸ்தினாபுரத்திற்குப் போகவேண்டும் வசூலாயிருக்குங்கிஸ்திதொகைமுழுமையும் அதின்கணக்கையுந்தயவு செய்து விரைவாகக்கொடுக்கவேணுமென்று வேண்டிக்கொண்டார்கள் அதற்கந்த சூரதாசர் சந்துஷ்டியடைந்து அரசனனுப்பிய சீட்டைப்பிரித்து வாசித்து அதில்வரைந்திருக்குஞ் செய்திகளை யுணர்ந்துக் கொண்டுத் தூதர்களைநோக்கி அப்பா தூதர்களே நமதரசனுக்கு மெத்தவும் விலையுயர்ந்ததாகியும் மேலானபொருளாகியும் விளங்கப்பட்டஅநேக ஆபரணங்கள் வாங்கியிருக்கிறேன் அந்த ஆபரணங்கள் வாங்கி யிருக்கிறேன் அந்த ஆபரணங்களைப்பாதுஷா அவர்களுக்கு அனுப்பும் பக்ஷத்தில் அதுகளைக்கண்டு மெத்த சந்தோஷப்படுவார் அன்றியும் யான் அவருக்குச்செலுத்த வேண்டியகிஸ்தி தொகை எண்பத்திரண்டுலக்ஷம் ரூபாய் அரசனுக்காகநான்வாங்கியிருக்கும் ஆபரணங்களின்மதிப்பு ஒருகோடியும் அறுபத்திநான்குலக்ஷம்ரூபாய் பொருமானதாகியிருக்குமென்றுஅவர்களுக்குத்திருப்தியுண்டாகும்படிசொல்லி அவிடம்விட்டு அந்தசூரதாசர் அந்தப்புரத்தையடைந்து மனைவியுடன் கலந்துபேசி இரண்டு பெட்டிகள்நிறையகற்களைப் போட்டுநிரப்பியொருபத்திரிகையெழுதி அதில்வைத்து அப்பெட்டிகளைப்பூட்டி முத்திரைவைத்து அப்பெட்டிகளை யெடுப்பித்துக்கொண்டுவந்து தூதர்கள் வசம் ஒப்புக்கொடுத்து அவர்களுக்குப்பலவாறு உபசரித்து சாலுவை வேஷ்டிகளை யீந்து அந்த சூரதாசர் அன்றிரவே அவிடம் விட்டுக் காட்டிற்குச்சென்றார்.

இந்தப்படியந்த சூரதாசர்தந்த பெட்டிகளிரண்டையும் அரசனுடைய தூதர்கள் அன்றிரவெல்லாம் வெகுபத்திரமாய் பாதுகாத்துக்கொண்டிருந்து உதையத்திலெழுந்து சூரதாசரைத்தேடிக் காணாமல்ஒகோ

அவர் சந்தடிசெய்யாமல் யாத்திரை செய்யும்பொருட்டுப் போயினரெனக்கருதி அத்தூதர்கள் பெட்டிகளிரண்டையும் பத்திரமாகவெடுத்துக்கொண்டு மதுராநகரத்தை விடுத்து நடந்துச் சிலநாளில் அஸ்தினபுரத்தை யடுத்து அரசன் கொலுக்கூடத்தின் முன்பாகவைத்து சூரதாசர் சொல்லிய செய்திகளைப் புகன்று வணங்கினர்கள் அப்போதரசன் பெட்டிகளிரண்டையும் அசைத்துப்பார்த்துப் பெரும்பாரமாயிருப்பதைக் கண்டு மெத்த சந்துஷ்டி யடைந்திருக்க அப்போது தூதர்கள் பாதுஷாவைநோக்கி எங்களையாண்டிரக்ஷிக்கும் பிரபுவே அந்த சூரதாசரைக்கேவலமாக யெண்ணவேண்டாம் நற்குணங்க ளெல்லாந் திரண்டோருருவாகியும் தானதருமங்களிற் சிறந்தவராகியும் சாதுக்களை யாராதிப்பவராகியும் சதாகாலமும் ஸ்ரீஹரிநாமங்களைப் பாராயணஞ் செய்யுமவராகியும் விளங்கப்பட்டப் பரமசாதுவென்று கருதக்கடவிர் அன்றியும் அவருடையபெருமையுங் கீர்த்தியும் அத்தலத்திற்குச்சென்று ஸ்ரீகிருஷ்ணபகவானை சேவித்து வந்தவர்களை விசாரித்தால் தங்களுக்குத் தெரியவரும் மேலும் தங்களுக்குச் சேரவேண்டி கிஸ்திதொகைக்கிரண்டுபங்கு மதிப்பும் அருமையாகியும் மேலாகியும் விளங்கும் ஆபரணங்களை இப்பெட்டிகளி லடக்கஞ்செய்து எங்கள்வசம் ஒப்புக்கொடுத்து அன்றிரவே எங்களிடஞ் சொல்லாமலும்யாத்திரைசெய்யப் போய்விட்டார் எனக்கேட்டந்தஅக்பர்பாதுஷா அதிசயித்து உடனேமந்திரியை வரவழைத்து அவனைக்கொண்டு பெட்டிகளைத்திறந்து பார்க்கிறபோது அதுகள்நிறையக் கருங்கல் பொடிகளே இருக்கக் கண்டு அதுகளுடன் சீட்டொன்றிருக்க அதனை யெடுத்து ராயசனிடங் கொடுத்து வாசிக்கச்சொல்ல அந்தராயசனுஞ் சீட்டை வாங்கிப்படிக்கப் பிரயத்தினப்பட்டு அதில் வரைந்திருப்பதை யரசனைநோக்கி சொல்லத் தொடங்கிக் கேளும் எமதரசே சூரதாசர் நமக்குச் செலுத்தவேண்டி எண்பத்திரண்டு லக்ஷம்ரூபாய்களையும் அதிதியப்பாகதி சாதுத்கள் ஏழைப்பரதேசிகள் முதலானோருக்கும் அன்னம் வஸ்திரம் ஆபரணம் அவர்கள் வசிப்பதற்கு மடம் முதலனேக கைங்கரியங்களில் விரயப்படுத்தி மேலானபுண்ணியம் நமக்கிவ்வுலகத்தினி லுண்டாகச்செய்து நாமினி இம்மதுராநகரத்தினி லிருப்பமேயாகில் அரசனால் தண்டனைக்குட் படவேண்டியதாக விருக்கும் யென்று ஆலோசித்து மதுராநகரத்தைவிடுத்து யாத்திரைசெய்யும்பொருட்டுச் சென்றதாக விருக்கின்றதெனக் கேட்டு அந்தப்பாதுஷா சூரதாசர்தன் பொருளையெல்லாம்சாதுக்களுக்கு வினியோகப்படுத்தித்தனக்குமேலானபுண்ணிய முண்டாகச் செய்ததற்கு மெத்த சந்துஷ்டியடைந்து உடனேயந்த சூரதாசர் நாட்டை விட்டுப் பராரியாய்ப் போனதற்கு மிகவுப விசனப்பட்டுக் கொண்டு சற்றுநேரமிருந்து தனக்குத்தானே தேரி சூரதாசர்மீது முன்னம்வந்து கோள்சொல்லிய மனிதனை வரவழைத்து அவனுக்குத்தக்க சிக்ஷைவிதித்து அடாபாதகா உத்தமராகிய சூரதாசர்மீதுபொருமைகொண்டு அவர்மீது கோள்சொல்ல எனக்குச் சினமுண்டாகச் செய்தகுற்றத்திற்கு உனக்கிது சிக்ஷையென்றுசொல்லிமந்திரியைநோக்கிஓமதிமந்திரிவிரைவினிலந்த சூரதாசரை வரவழைத்து முன்போல மதுராநகரத்திற்கு அதிபதியாக அனுப்பவேணுமென்ற அரசனுடைய மொழிகளுக்கு யாவரும் அந்தப்படி செய்விப்பதே மெத்தநலமென்று சொல்லி சம்மதித்தனர் உடனே மந்திரியானவர் விஷ்ணுத்தலங்களெங்கெங்கிருக்கின்றதோ அந்தஸ்தலங்களுக் கெல்லாம் சீட்டுகளெழுதி விடுத்தார் சூரதாசர் தனக்குக்கிடைத்த சீட்டைப்பிரித்து வாசித்து அதில் வரைந்திருக்குஞ் செய்தியையுணர்ந்து பயமற்று வெகுதீரராகிப் பழயபடி மதுராநகரத்தை யடைந்து சந்நிதிக்குள் சென்று ஸ்ரீகிருஷ்ணபகவானை சேவித்துத் தன்னை மறந்துப் பலவாறு புகழ்ந்து ஓஜெகதீசா நினதுகிருபாகடாக்ஷம் தாருமென்றுன்னி அரசனுக்கென்மீது கோபமுண்டாகாமல் சந்தோஷமுண்டாகச் செய்த விந்தையை என்னென்று புகழுவேன். என்று துதிசெய்து சந்நிதியைவிடுத்துப் புறப்பட்டு நடந்து அஸ்தினபுரத்தை யடைந்துப் பாதுஷாவைக்கண்டு பணிந்துநிற்கப் பாதுஷா சூரதாசரைக் கண்டமாத்திரத்தில் சிங்காதனத்தை விடுத்துக் கீழேகுதித்து ஓடோடியும்வந்துத் தன்னிருகரங்களினாலும் அவரைச்சேர்த்து ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு சொல்லத் தொடங்கினர்.

கேளும் உத்தமராகிய சூரதாசரே எனக்கு நின் சங்கத்தினால் மெத்தபுண்ணிய முண்டாயிற்று என்னுடைய பொருளை நல்லோர்களுக்கு வினியோகப்படுத்திக்கொடுத்தாய் இவ்வுலகினில் நின்னைப்போல புண்ணியபுருடர்களை யான்கண்டதில்லை ஆகையால் ஓபரமபாகவத சிகாமணியே முன்போலத் தாங்கள் மதுராநகரத்தைப் பாலித்துக்கொண்டு மிருந்து அங்கு வசூலாகுங் சிஸ்திதொகையைக் கொண்டு சாதுக்களைப் பூசித்தும் பகவத்பக்தர்களுக்கும்ஏழைப்பரதேசிகளுக்குந் தானதருமங்களைச் செய்துக் கொண்டும் ஸ்ரீஹரியின் தொண்டர்கள் சேவை செய்துகொண்டு இரும் மெனக் கேட்டந்த சூரதாசர் அரசனிடத்தில் சிநேகபாவமாகி மெத்தசந்துஷ்டி யடைந்திருந்தார்

அப்போது பாதுஷா அந்தமதுரா நகரத்தை சூரதாசர் பேருக்கெழுதி தன்னுடை மொகர்செய்துக் கொடுக்க அந்தசீட்டை சூரதாசர் கைக்கொண்டுபாதுஷாவினிடம் விடைபெற்று மதுராநகரத்தை நாடிச்சென்று அங்குமுன்போலப் பிரபுவாகி இருந்துக்கொண்டு பயமின்றிப் பக்தஜெனங்களுக்கு விசேஷப்பிரசாதமளித்துக் கொண்டும் இன்னுமவர்கள் கோரும் பொருள்களெதுவேனும் அளித்து அவர்களுக்குச் சந்துஷ்டி யுண்டாகும்படிச் செய்தும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவினது மங்களரூபத்தை ஹிருதயகமலத்தினில் சதாகாலமும் நிருத்தி அவருடைய திருநாமங்களை இடைவிடாமல் பஜனைசெய்தும் அந்த ஹரியின்மீது சுயமாகக் கீர்த்தனைகளைப்பாடியுங் காலத்தைக் கடத்திக்கொண்டு மிருக்கச்சிலதுஷ்டர்கள்சூரதாசர் சுயமாகச்செய்த கவிகளைச் சரியல்லவென்று நிந்தனை செய்யக்கேட்டு அந்தசூரதாசர் உண்மையானமனதினில் அவர்கள்சொல்லிய குற்றங்களைப்பாராட்டாமல் மேலுமேலும் ஸ்ரீஹரி கீர்த்தனைகளைச் சுயமாகச் செய்துக்கொண்டு மிருக்கிறபோது ஒருசாதுவானவர் சூரதாசர்செய்தநூதனகவிகளைப்பரிசோதிக்கவெண்ணி மாதவனுடைய சந்நிதியின்முன்னம் நின்று ஆலோசித்துக் கொண்டிருந்தார் அப்போது சூரதாசர் ஹரியை தெரிசனஞ் செய்யும் பொருட்டு சந்நிதியைநோக்கி வரக்கண்டு அந்த சாதுவானவர் பாதக்குரடுகளை யவர்கையில் கொடுத்தார் சூரதாசர் அந்தசாதுவைநோக்கி ஐயாபரமசாதுவே அடியேன் ஸ்ரீஹரியை தெரிசித்துவரும் பரியந்தம் சிரமமடையாமல் பாதக்குரடுகளை வைத்துக்கொண்டு இவ்விடத்தைவிட்டு எங்கும்போகாமல் வெளியிலிரும் ஒருக்கணப்பொழுதுக்குள் வருகிறேனென்றுசொல்லி சிவிகையைவிட்டிறங்கி அந்தசூரதாசர் மெத்த சம்பிரமதுமிகுந்து அந்தசாதுவின் திருவடிகளைப் பிடித்துகொண்டியிருக்கையில் அந்தசாதுவானவர்இப்படிப்பட்ட சாந்தகுணமும் சேவையும் நமக்கெப்போது கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க அத்தருணத்தில் சூரதாசர் போயிகளைநோக்கிச் சிவிகையை வீட்டிற்குக் கொண்டுபோகும்படி சொல்ல அவர்களும் அந்தப்படியே சிவிகையை சுமந்துக் கொண்டுபோய் வீட்டினிற் சேர்த்துத் தங்கடங்கள் வீட்டை யடைந்தார்கள் அப்போது சூரதாசர் கோயிலின் முன்னம் நின்றிருக்கச் சாதுவானவர் சூரதாசரை சோதிக்கவெண்ணங் கொண்டிருக்கையில் சூரதாசர் சமீபத்திலிருந்தும் வேறொருசூரதாசர் ஸ்ரீஹரிபஜனைசெய்துக் கொண்டு காலைமுதல் ராத்திரிவரைக்கும் பூசைசெய்துப் பொழுதுபோக்கி கொண்டிருந்தமையால் அந்த சாதுவானவர் இன்னமும் சூரதாசர்வரக் காணோமே என்று எதிர்சார்த்துக் கொண்டிருக்கையில் அப்போது சூரதாசர் சந்நிதியைவிட்டு வெளியில் வந்து சாதுவைக்கண்டு பாதக்குரடைச் சாதுவின்முன்னம் வைத்தார் அதைக்கண்டுசாதுவானவர்மெத்தசந்தோஷித்து சூரதாசர்சிரத்தின்மீது தன்கரத்தைவைத்துச் சுகத்துடனிருக்கக் கடவாயென்று ஆசிகூறி சாதுக்கள்சேவை செய்வதில் உன்னைப்போல இவ்வுலகினில் செய்தவர்களை யான் கண்டதில்லை எல்லவருமுன்னை சாதுசேவை செய்புமவரென்று சொல்லியவார்த்தை உண்மையாயிற்று இதனால் உனக்குமெத்த கீர்த்தியுண்டாயிற்று யானுமுன்னைப் பரிக்ஷைசெய்யவந்தவனுகும் ரூபில் உன்னுடைய குணங்களையும் கைங்கரிய விசேஷத்தையுங் கண்டுகொண்டேன் ஒபரம சாதுக்கள் சேவைசெய்வதில் மிகுப்பிரியமுடைய சூரதாசரே உமமைப் பலவாறு யான் சோதனைசெய்தேன் அந்தவபசாரங்களை யெல்லாஞ் க்ஷமித்துக்கொள்ளும் பரமபக்தராகிய நீயும் பகவானுடைய திருவடிகளை யடைவாயென்றுசொல்லி அச்சாதுவானவர் இஷ்டப்படிக்குச் சென்றார்.

இந்தப்படி யந்தசாதுவானவர் சொல்லிப்போயின நல்வார்த்தைகளைக்கேட்டு அந்தசூரதாசர் அநுதபமடைந்துரக்தியுடன் தனக்குப்பின்னிட்டு சாதுக்களுக்கு வினியோகப்படும்பொருட்டு சம்பத்துகளைப் பங்கிட்டுவைத்து யாதொருகஷ்டமுமின்றிப்பிரியமதிகரித்து ஞானபக்திவைராக்கியங்கள் விசேஷித்து ஸ்ரீஹரியை பாடியாடி வெகுகாலமிருந்து ஸ்ரீஹரியின் அபாரமான கிருபையைப்பெற்று என்றுமழியாதபரமபதசாம்பிராச்சிய பதவியடைந்தனர்.

வாழி விருத்தம்.

சாரமென்றுப்பூவுலகில் சாதுசேவைசெய்தோன்வாழி
மாரனைப்பெற்றமாதவனை மனதிலென்றுந்துதிப்போன்வாழி
காரணவஸ்துவின்கிருபைக் கனமாகப்பெற்றோன்வாழி
சூரதாசர்சரணமலர் சுகமுடனென்றும்வாழி.

சூரமநுமோகனர்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமத்
கணேசநாதர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

குணதிகள்யாவுமொன்றாய்க் கூடியோருருவாய்த்தோன்றிப்
பணதிகளாயிரங்கொண்டப் பாம்பணைத்துயின்றசோதிக்
குணானுபவஞ்செய்துநாளுங் கோமான்றன்னருளைப்பெற்றுக்
கணேசநாதர்திவ்ய கழற்பணிந்துய்குவோமே.

கதையின் வரலாறு

பார்க்கவியின் கடாக்ஷம் பொருந்தின சாரசயுஜ்ஜனியெனுங் கிராமத்தினில் வசிப்பவர்சாதுக்களைத் தேடி தெரிசிப்பவர் ஏழைபரதேசிகளை யாதரிப்பவர் பகவத்குணானுபவத்தினில் மெத்தப்பிரியங்கொண்டவர் பகவானை ஹிருதயத்தினில் கண்டவர் நாமஅமிர்தத்தையுண்டவர் ஞானபக்தி வைராக்கியத்தினிற்சிறந்தவர் ஆசாபாசத்தைத் துறந்தவர் பகவத்பக்தர்களிடத்தினில் விருப்பமும் துஷ்டர்கள் விஷயத்தில் வெறுப்பும் சகலசம்பத்துக ளிடத்திலும் ஆசையற்றவர் துறவரத்தை யடுத்தவர் கணேசநாதரெனும்பேர் படைத்தவர் பகற்காலமெல்லாங் காடே கெதியாகச் சஞ்சரிப்பவர் நாட்டினில்வசிக்க மனமில்லாதவர்இரவினில் நாட்டையடைந்துப் பிக்ஷைவாங்கிப் புசித்து பகவந்நாம சங்கீர்த்தனைகளைப் பாடியாடி மெய்மறந்து திண்ணைகளின்மீது படுத்து இரவைப்போக்கிச் சூரியோதயத்துக்கு முன்னமெழுந்து நாட்டைவிடுத்துக் காட்டையடைவார் இந்தப்படிக்கி யவர் நாள்தோரும் நாட்டைவிடுத்துக் காட்டையடைந்து பகற்காலத்தை யெல்லாம்போக்கி இரவுவந்தவுடனேகிராமத்தை யடைவார்.

இவ்வாறு கணேசநாதர் தைலதாரா விச்சினத்தைப்போலப் பகவானை இடைவிடாமல் துதிசெய்துக்கொண்டே எந்தகோரிக்கையுமின்றித் தனசம்பத்தினால் டம்பமில்லாமல் லௌகீகத்தை விடுத்துவைதீகத்தையடுத்து எப்போதும் ஸ்ரீஹரியை மனதினில் தியானித்தும் மதுரமான கவிகளைச் செய்துக்கொண்டும் இருந்து ஒருநாள் இந்தகணேசநாதர் பண்டரிபுரத்திற்குவந்து சொல்லவும் புகழவும் அரிதாகிய ஸ்ரீஹரிபஜனை செய்துக்கொண்டிருக்க அவிடத்திற்கு சிவாஜிமகாராஜன் நால்வகைச் சேனைகளுடன் வந்து கணேசநாதர்செய்யும் ஸ்ரீஹரிகீர்த்தனங்களைக்கேட்டுக்கொண்டிருந்து அவ்வரசனும் பல ஜெனங்களும் கணேசநாதர் யத்திக்கு ஆனந்தித்து தங்களைமறந்திருந்து உடனேதெளிந்து கணேசநாதரை மெத்தப்புகழ்ந்துக் கொண்டாடினார்கள் அப்போது சிவாஜி மகாராஜன் தான் படுத்துக் கொள்ளுவதற்குத் தக்க நூதனகட்டிலொன்று செய்துமுடித்தார் அந்தநூதனமான கட்டிலின்மீது கணேசநாதரைப் படுக்கவைத்துப் பின்புதான் அக்கட்டிலின்மீது படுக்கவேணுமென்றாலோசித்து வெகுவினயபக்தியுடன் அவ்வரசன் கணேசநாதர் திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்துநின்று இருகரங்களையும் குவித்துக்கொண்டு ஓசுவாமி தேவரீர் ஒருநாளைக்கு எமது அந்தப்புரத்தினில் வந்திருந்து அடியேனைப் புனிதனாகச் செய்யவேணுமென்று மெத்தவும் வேண்டிக் கொண்டார் அதற்கந்த கணேசநாதர் அரசன்பணிவாகச் சொல்லும் வசனங்கேட்டு மெத்த சந்துஷ்டராகி அரசனை நோக்கி ஓவேந்தனே உம்முடைய இஷ்டப்படிக்கி நினது அந்தப்புரத்திற்கு யான்வந்து ஒருநாள் தங்கியிருந்து போகிறேனென்றுவிடையளிக்கக்கேட்டந்த அரசன் சந்தோஷித்தனாகி உடனேயந்த கணேசநாதரைச் சிவிகையின் மீதேத்திக்கொண்டு சகலபரிவாரங்களும் தன்னைச் சூழ்ந்துவர நடந்துத் தன்பட்டணத்தை யடைந்து கணேசநாதரைச் சிவிகையினின்றும் இரக்கி அரண்மனை யந்தப்புரத்திற் கழைத்துச் சென்றுத் தக்க ஆசனத்தின்மீது வீற்றிருக்கச்செய்து

அர்க்கியம் பாத்தியம் ஆசமனம் முதலான சோட
சோபசாரங்களினாலும் தூபதீபநைவேத்தியங் களி
னாலும் அவரை மனங்களிக்க உபசரித்து ஓசுவாமி
இன்றல்லவோ அடியேன் பவக்கடலைக் கடந்தவனாகி
னேன் தேவரீர் திருவடித்தாமரைகட்குகந்த தொண்
டனாகினேன் இனியெனக்கு வேண்டிய பொருளொ
ன்றுண்டோ எப்போது தேவரீர் அடியேனுடைய
அந்தப்புரத்திற் கெழுந்தருளினீரோ அப்போதே யா
வத்துமான பொருளையும் அடைந்தவனாகினேனென்
றுக் கணேசநாதரை வெகுவாகப்புகழ்ந்து பகற்பொ
ழுதெல்லாம் கணேசநாதருடன் நன்மார்க்கங்களைக்
கேட்டானந்தித்துக் கொண்டிருந்து இரவுவந்தவுடன்
அவருக்கு வேண்டியப் பிரசாத முதலானதுகளைத்
தருவித்துப் புசிக்கச்செய்து நூதனமாகச் செய்திரு
க்கும் கட்டிலுக்கு திண்டு மெத்தை முதலானதுக
ளும் போட்டு ஓசுவாமி இதின்மீது சயனித்துக்கொ
ள்ளுமென்று வேண்டிக்கொள்ள அந்தகணேசநாதர்
ஓவேந்தனே உமதிஷ்டப்படி யானிந்தக் கட்டிலின்
மீது படுத்து நித்திரை செய்கிறேன் நீர்போய் உமது
காரியங்களைப் பார்த்துக்கொண்டுகாலையிலிங்குவந்து
போமென்று நேமிக்க அதற்கந்த அரசன்மகாபாக்கி
யமென்று அவ்விடத்தை விட்டுத்தன் படுக்கையறை
யை யடுத்துப் பஞ்சணையின்மீது படுத்து நித்திரை
செய்துக் கொண்டிருந்தார் இங்கே கணேசநாதர் அர
சன்போயினபின்பு தனக்கு படுக்கை யமைத்திருக்
கும் கட்டிலைப்பார்த்து வெகுதுக்கமடைந்து அக்கட்
டிலின்மீது சிறுசிறு துருக்கற்களைப் பொருக்கிவந்து
பரப்பி அதற்குமேல் தான்படுத்து பகவத்குணானு
பவ ஆனந்திற் சொக்கிக்கொண்டிருந்தார் அங்கே
அரசன் அதிகாலையி லெழுந்து ஸ்நானநுஷ்டானம்
முடித்துக்கொண்டு விரைந்து கணேசநாதர் படுக்கை
யறைக்குச்சென்று பார்க்க அப்பஞ்சணையின்மீதுகற்
களைப் பரப்பி அதன்மீது அந்தகணேசநாதர் சயனி
த்திருப்பதைப் பார்த்து மெத்தமனம்புழுங்கி அந்த
கணேச நாதரைப் பணிந்து ஓசுவாமி இதென்ன பஞ்
சணையின்மீது கல்லுங்கரமாக விருக்கின்றதே இதெ
ப்படிவந்தது அதைதெரியச் சொல்லவேணும்சுவாமி
யென்றுபணிய அதற்கந்த கணேசநாதர் அரசனை
நோக்கி சொல்லத் தொடங்கினர்.

கேளும் அரசனே இப்பஞ்சணையின்மீது படுத்
துக் கொண்டிருந்தால் அதிகநித்திரை யுண்டாவதுட
ன் புத்தி சபலத்தை யடைந்து விஷயாந்திரத்தினில்
பிரவேசிக்கும்படி செய்விக்கும் எப்போது விஷயாந்
திரத்தினில் புத்திபிரவேசித்ததோ அப்போதே பக
வத் குணானுபவஞ் செய்யுஞ் மனமானது கெட்டு
ஞான சூனியமாகி ஜெனனமரணக் கடலில் விழுந்து
வெகுதுக்கங்களை யனுபவிக்கும் படியாக நேரிடும்
ஆகையாலியான் இக்கற்களையும் பரப்பி படுத்துக்
கொண்டிருந்தது எதுக்காகவென்றால் உமதுமனோ
ரதத்தைப் பூர்த்திசெய்யும்பொருட்டு யானிந்தக்கட்
டிலின்மீது சயனித்தேனே யன்றியான் சுகமாக நித்
திரை செய்யவேண்டு மென்றுக்கருதி இக்கட்டிலின்
மீது படுத்தவனல்ல அன்றியும் சாதுக்களுக்கு சுகங்
கொடுத்தால் உடனே துக்கமானது சம்பவிக்கும்
அதெப்படியெனில் சொறிவியாதி யுண்டாயினவனு
க்கு சொறிந்துக் கொள்ளும்போதே சுகமாகவிருக்
கும் சொறிவதை நிறுத்தினால் உடனே அவன்துக்க
த்தை யடைவன் அதுபோல எனக்கும் விஷயபோக
ங்கள் மெத்த பயமாகியிருக்கும் ஆகையால் இதுஎன்
னுடைய நடவடிக்கையாகும் என்றுசொல்ல அந்த
வரசன்கேட்டு அனுதாபத்துடன் யாவற்றிலும் விரக்
தியடைந்து அதுமுதற்கொண்டு பஞ்சணையின்மீது
சயனிப்பதை விடுத்து எப்போதும் சாதுக்களுடன்
கூடி அவர்களுக்குத் தொண்டுகள் புரிந்துக்கொண்டு
மிருந்தனர் கணேசநாதரோவெனில் அனுதினமும்
ஆரணியத்தில் வசித்துக்கொண்டிருக்க அனேக நரர்
கள் அவருடைய கீர்த்தியையும் மகுத்துவங்களையும்
கேட்டு அவ்விடத்திற்குச்சென்று அவருக்குத் தொ
ண்டுகள் புரிந்து உபதேசம் பெற்றுக்கொண்டு அவ
ரை நிமைப்பொழுதும் விட்டுப்பிரியாமல் அவர்கள்
அக்காட்டினில் கணேசநாதர் பின்தொடர்ந்துக்கொ
ண்டே யிருந்தனர்கள் அவர்களில் துராசாரத்தை
யுடைய மனிதர்களும் கணேசநாதருடைய கரங்கள்
சிரத்தினில் வைக்கப்பட்ட விசேஷத்தினால் நிராசை
யுடையவர்களாகியும்ஞானபக்திவைராக்கியத்தினால்
சிறந்தவர்களாகி யிருந்தனர்கள் இப்படிக்கிந்தகணே
சநாதர் முன்னூற்றி யறுபதுபேர்களைச் சீஷர்களா
கக் கொண்டிருந்தனர் அதையங்குவசித்துக் கொண்
டிருக்கும் துஷ்டர்கள்கண்டு இதுயிந்த கணேசநாத
ருடைய மாயாஜால மெனக்கருதி சம்சாரத்தினி லிரு
ந்த இவர்களை இந்தக்கணேநாதர் மாயாஜாலத்தினால்
மயக்கித் தன்னைப்போலக் காடேகெதியாக இவர்க
ளைச் செய்துவிட்டனரே ஒருப்பிராணியைக் கொன்
றால்தானா கொலைபாதகம் காட்டினில்சுகமாகச்சாரத்
திலிருந்து ஜீவனஞ் செய்துக்கொண் டிருந்தவர்களை
காட்டினில் வரவழைத்துக்கொண்டு அவர்கள் சம்சா
ரத்தை அலையவிட்ட இவர் கொலைபாதக ரல்லவா
வென்று சொல்லிக் கொண்டிருந்து ஒருநாள் இவர்
கள் யாவருங் கூடிக்கொண்டு கணேசநாதர் வசிக்குங்
காட்டிற்குச் சென்று அவரைக்கண்டார்கள் கணேச

னர் தரும் அந்ததுஷ்டர்களை நோக்கிச்சில நீதிவசனங்கள் சொல்லத்தொடங்கினர்.

கேளுங்கள் பிராணிகளே ஒருமனிதன் எங்கே சென்றாலும் அவனுடைய நிழலும் அவனைத் தொடர்ந்து செல்லுமே அதுபோல துஷ்டன் செய்கிறகொடுமையான செய்கைகளெல்லாம் ஒருக்காலும் அவனை விட்டு நீங்காமல் எப்போதும் அவனை தொடர்ந்துக் கொண்டேயிருக்கிறது அக்கினியைக் கையினிலெடுப்பவனுக்கு வேறு தண்டனை கூடவேணுமோ அந்தஅக்கினியே அவனுக்குதண்டனையாயிருக்குமல்லவா அப்படியே பாவஞ் செய்கிறவனுக்கு அப்பாவமேதண்டனையாயிருக்கின்றது அப்பாவத்தினால் தண்டிக்கப்பட்ட மனசாக்ஷியின் வேதனையும் இருதயத்தின் சஞ்சலமும்பயமும் அந்த துஷ்டனுக்கு சகிக்கக்கூடாது தண்டனையாக விருக்கின்றது க்ஷணநேரத்தின்இன்பம் வெகு காலத்திற்குத் துன்பமாகவும் க்ஷணநேரத்தின் இன்பமானது என்றென்றைக்குமுள்ள துன்பமாகவும் இருதயத்தினில் மாறுகின்றதே ஆகையால் உங்கள் மனதைபாவத்துக் கிடமாகிய துர்விஷயத்தினிற் பிரவேசிக்கச் செய்வீர்களானால் அதுஉங்களுக்கு விரோதமாய் சத்துருவைப்போல வாதுக்கு நிற்கும் அன்னியிலும் இம்மையிலும்மறுமையிலும் அதைப்பற்றுக்கதுக்கங்களால் ஆகமாட்டாது ஆகையால்உங்களுக்குஇப்போது மெத்தஇன்பந்தருகிறதென்றுநினைத்துமிகுந்த ஆசையோடேசெய்கிறபாவங்களெல்லாம் சீக்கிரகாலத்துக்குள் அப்பாவமானது உங்களுக்குக் கேடாய் முடியும் வேறொருவனல்ல நீங்களேஉங்கள் பாவங்களின் வேதனையான தண்டனைகளை யடைவீர்கள் நீங்கள் யாவரும் அப்பாவங்களை அற்பமாகநினைத்து மிகுந்த உல்லாசத்தோடே நிரைவேற்றி வருகிற உங்கள்பொய்யும் புலையும் கோபமுங் கொலையுங்குடியும் வெறியும் விபசாரமும் வேசித்தனமும் திருட்டும் புரட்டுமாகிய பாவங்களுக்கெல்லாம் தக்கதண்டனைகள் உங்களுக்குண்டாகுமே அப்போது உங்கள் நிலமை என்னமாயிருக்கும் உருட்டும் புரட்டும் ஒடுக்கம் சிரட்டை என்று அறிந்துக்கொள்ளுங்கள் அன்றியும் நீங்கள் ரகசியமாகச் செய்யும் பாவங்கள் சில சமயங்களில் மனிதர்களுக்கு முன்பாகவெளியாகும் பொழுது உங்களுக்கு எத்தனையோ பயமும் வெட்கமும் உண்டாகின்றது பின்னும் நீங்கள் இப்போது உங்கள் மனதைத் திருத்துவதையும் உத்தமமானநீதி சாஸ்திர விசாரனைகளையும் சாதுசங்கத்தின் பழக்கத்தையும் அசட்டை செய்துக் கோலாகலமாய் எமனுடைய பயமற்று நடப்பீர்களே யாகில் மேல்வரும் எமதூதர்கள் கோபத்திற்கு எப்படிதப்பித்துக்கொண்டு போவீர்கள் அன்றியுங்காமத்துக்கு இடங்கொடுத்துத் தேவேந்திரன் தன்தேகமெல்லாம் புண்பட்டுக் கெட்டான் சீதைமேலிச்சை கொண்டு ராவணன் தன்புத்தியையும் ஜீவனையும் இராஜரீகத்தையும் இழக்கவில்லையா கோபத்திற் கிடங்கொடுத்து சிவனும் பிரம அத்திபிடித்து அலையவில்லையா இப்படியிருக்க நீங்கள் துஷ்டகாரியங்களைச் செய்திருந்தும் எப்படி எமனுடைய தண்டனைக்குத் தப்பிப் போவீர்கள் பின்னும் இக்காலத்திலும் எத்தனைபேர்கள்கோபத்திற் கிடங்கொடுத்துக் கொலைகளத்தை யடைகிறார்கள் எத்தனையோ பேர்கள் காமத்திற் கிடங்கொடுத்துஉடல் எலும்பாகும் படித்திரிந்து குஷ்டவியாதிதொடர்ந்து மெத்த கஷ்டப் படுகிறார்கள் எத்தனையோ பேர்கள் குடிவெறிக்கி ஆசித்துகனப்பொருளைப் போக்கடித்துஉடுக்கத் துணியும் குடிக்கக் கஞ்சியும் படுக்கப்பாயுமில்லாமல் மெத்தக் கஷ்டப் படுகிறார்கள் அன்றியும் ஒருவன்செய்த பாவ புண்ணியங்கள் அவனைத் தொடர்ந்துக் கொண்டேயிருக்கும் அதெப்படியெனில் உங்கள் வீடுவாசல்கள் உங்களைவிட்டுப் பிரியும் உங்களைப் பெற்றார் சுத்தத்தார் உங்களைவிட்டுப் பிரிவார்கள் உங்கள்மனைவி மக்கள் உங்களைவிட்டுப் பிரிவார்கள் உங்கள் சரீரங்களும் உங்களாத்துமாவைவிட்டுப் பிரியும் ஆனால்உங்கள் பாவங்கள் உங்கள் ஆத்மாவை விட்டுப் பிரியமாட்டாது ஆகையால் அப்பாவத்தை முன்னிட்டு எமதூதர்களுங்களைப் பிடித்துக் கொண்டுபோய் எமஙடத்தினில்விட அவன்விசாரணைசெய்து தீர்ப்பு கொடுக்கும் போது அனேகர்க்கு முன்னம் உங்களுக்கு வெட்கத்தையும் பயத்தையும் உண்டாக்கி உங்களை நரகத்திலே தள்ளிநித்திய வேதனையும் வாதனையும் அனுபவிக்கும் படிச்செய்யும் அன்றியும் நீங்கள்உங்கள் பாவங்களை நினைக்கநினைக்க இரவும்பகலும் தூக்கமிராது துக்கமேயொழியாதொரு சந்தோஷமும் உங்களுக்கு அங்குகிடையாது ஆகையால் இன்றுடன் உங்கள் துன்மார்க்க சேஷ்டைகளை விடுத்துப் பரமாசானையடுத்து காமாதிவிஷயபோகங்களைத்தடுத்து எம்பெருமானுடைய பதவியை யடையுங்களென்று சொல்லிய கணேச நாதருடைய நீதிவசனங்களைக்கேட்டந்ததுஷ்டர்கள் ஒகோ நாமிங்கு வந்த காரணத்தை இவரெப்படியோ தெரிந்துக்கொண்டு நம்மைக்கண்ட மாத்திரத்தில் நல்விஷயங்களையோதி நம்மையும் வசப்படுத்திக்கொள்ள வெண்ணினார் இதிருக்கட்டும் இவர்முன்னூற்றியறுபது பேர்களுக்கு உபதேசஞ்செய்து சீஷர்களாகசேர்த்துக்கொண்டிருக்கின்றாரே இத்தனை பேர்களில் யாரேனுமொருவர் அந்தபரமாத்துமனைக் கண்டு தெரிசித்திருக்க வேணுமே ஒருவரையுங் காணோமே இவரிடத்தி லுபதேசம் பெற்றுக்கொண்ட இத்தனை பேர்களும் நமக்காகிலும் பிரசாத மூர்த்திகளாக விருக்கின்றார்களே அன்றி ஒருவரேனும் சுசி ஆசாரத்திலும் ஆசானுக்குத்தொண்டு செய்வதிலும் ஆசான் பக்தியிலும் சிறந்தப்பிராணி யொருவனையுங்காணோமே அப்படிக்கியாரேனுமிருந்தால் இந்தஆசான் மெத்தவும்மகத்[illegible]டையவரென்றுணர்ந்து நாமும் இவரிடத்தி[illegible]

தோம் பெற்றுக் கொள்ளலாம் என்று அத்துஷ்டர்கள் ஒருவருக் கொருவர் பேசிக்கொண்டிருக்கையில் அந்தகணேசநாதர் தன்னுடைய சிஷர்களையழைத்து இதோவந்திருக்கும் இவர்கள் யாவருக்கும் தெளிவுண்டாகும்படிக் ஞானோபதேசஞ் செய்விக்க வேணுமென்று சொல்லியதை அந்ததுஷ்டர்கள் கேட்டுக் கணேசநாதரை நோக்கி ஓசுவாமி தங்களுடைய தெரிசனத்தினாலும் உபதேசத்தினாலும் அனேகம் பிரஜைகளுக்குச் சம்சாரத்தினில் விரக்தியும் தங்கள் திருவடிகளில் பக்தியும் உண்டாயின படியால் அவர்கள் சம்சாரங்களு களுக்குமெத்தகஷ்டம் நேரிட்டு வயிற்றுக்குப் பிரசாத மில்லாமல் மெத்த சங்கடப் படுகின்றார்கள் அன்றியும் அந்தபெண்கள் தங்களை மிகவுந்தூஷிக்கின்றார்கள் ஆகையால் அதுபோலயாங்களும் எங்கள் சம்சாரங்களையும் பிள்ளைகளையும் விடுத்துத் தங்களை யடுத்துத் தொண்டுகள் புரிந்துக்கொண்டிருப்பதற்குத் தக்கபடி உமது திருக்கண்ணோக்கத்திற்குச் சகலசராசரவஸ்துக்கள் யாவும் பகவான் சொரூபமாகக் காணப்பட்டுக் கொண்டிருக்கிறபடியால் இங்குசெழித்துத் தழைத்துக்கொண்டிருக்குஞ் செடிகளுக்கு நாங்கள் பார்க்கும்படி முன்னம் உபதேசஞ்செய்யும் எனக்கேட்டுக் கணேசநாதர் மெத்தப்பிரியமடைந்து அங்கு சமீபமாக கொய்யாமர மொன்று இருக்க அதன் சமீபத்திற்குச் சென்று சகலரும் பார்க்கும்படி தாரகமந்திரத்தை யம்மாத்திற்கு உபதேசித்தார் அதைக்கண்டு சிலர் ஓபரமசாதுவே மனிதர்களைப் பிரமிக்கும்படியாக ஏதோ மந்திரத்தைச் சொல்லி வசப்படுத்தி யும்மை மைபோலே செய்கிறீர் அது ஒரு அருமையல்ல இந்தத்தருவுக்கும் அதைப்போல சொல்லி நின்வசமாகச் செய்துக் கொள்வீரேயாகில் அதுவன்றோ அருமையிலும் அருமை யெனக்கேட்டு அந்தகணேச நாதர் அப்படியே செவிக்கிரேன் பாருங்க ளென்று சொல்லும் சமயத்தினில் சிஷர்கள் அருசுவை யன்னம் தயார்செய்துக் கொண்டுவந்து கணேசநாதரிடங் கொடுக்க அவரதைப் பெற்றுக்கொண்டு அவ்வன தருவை யவர் கண்டு ஓகொய்யா மரமே இதுஸ்ரீஹரிப் பிரசாதமாகும் இதையுன் வாயைத் திரந்து இங்கிருக்கும் யாவருங்காணும் படிப்புசிக்கக் கடவாயென்று சொல்லஉடனே யம்மரமானது அடியில் கொஞ்சம் பிளவுண்டது அப்பிளவின் வழியாய்ப் பிரசாதம் யாவத்தையும் தின்று ஒன்றுய்க்கூடிப் பிளவுநீங்கின அதைக்கண்ட யாவரும் இதுவிந்தையிலும் விந்தையா மென்றுசொல்லிந்த துஷ்டர்கள் காட்டைவிட்டு நாட்டையடைந்தனர்கள்

இந்தப்படி யந்ததுஷ்டர்கள்சொல்லிப்போயின பின்பு கணேச நாதர் அக்காட்டினிலோரிடத்தினில் ஸ்ரீஹரிநாமசங் கீர்த்தனம் வெகுவாகப் பாடியாடிக் கொண்டு தன்னைமரந்திருக்க அவ்விடத்திற்கு அனேகபிராமணர்கள்வந்துபகவந்நாம சங்கீர்த்தனங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிற போது அந்நாம கோஷமானது தாளமிருதங்க வாத்தியங்களுடன்கலந்து கடலொலிபோலே ஆகாயவீதியை நிரைந்துபக்தி அமிர்தமாகும் போதையினால் தன்னைமரந்து ஒ பிராணிகளே நீங்களெல்லோரும் பகவான் நாமத்தைக் கரதாளத்துடன் யுங்கள்வாக்கினா லுச்சரித்துக் கடத்தேருங்களென்று சொல்ல அந்தப்படியே யாவருங் கரதாளத்துடன் வாக்கினால் பகவந் நாமத்தை யுச்சரித்தார்கள் அதில்சில பிராமணர்கள் கரதாளமும் போடாமல் ஹரிநாமத்தை வாக்கினாலுச் சரிக்காமலும் வெருமனே யிருந்துக் கொண்டுகணேச நாதரை நோக்கி ஓஹரிதாசரே நாங்கள் ஜாதிகளிற் சிறந்த பிராமண ஜாதிகளாகும் எங்களை யுன்னுடன் கரதாளத்துடன் ஸ்ரீஹரி நாமத்தை உச்சரிக்கும்படி நீசஜாதியோனாகிய நீசொல்லுவது சரியல்லவென்று அப்பிராமணர்கள் மெத்தவியா கூலத்துடன் சொல்லக் கேட்டுபக்தப்பிரியராகிய கணேசநாதர் பிராமணர்களை நோக்கி ஐயாசிறந்தகுலத்தினி லுதித்தவர்களே இவ்வுலகினில் பனைமரமானது நிழல்தந்த போதிலும் யாருக்கும் பயன்படாதது போலசிறந்த குலத்தினிற் பிறந்தவர்களா யிருப்பதினாலே உங்களுக்கு ஸ்ரீஹரியை பஜிப்பதற்கு வாக்கும் கரங்களும் பயன்பட மாட்டாதுஆனால் அசரவஸ்துக்களாகிய கற்கள் வெகுப்பிரியமாக ஸ்ரீஹரியைபஜனைசெய்யும்பாருங்களென்றிப்படிசொல்லிய மாத்திரத்தில்அக்காட்டினி லுள்ள சிலைகள்ஒன்றுக்கொன்று அடிக்க அப்போதுவெகுதிருத்தமாக ஓசைபிரந்துபஜனைக்குச் சரியானதாளம் போட்டது போலவிளங்கியதுஇந்தவிந்தையைக்கண்டுஅப்பிராமணர்கள் அதிசயித்து அப்போதவர்களும் கரதாளம் போட்டுக்கொண்டேவிட்டல விட்டலவென்றுபகவந் நாமத்தை உச்சரித்தார்கள் அதைக்கண்டு சகலஜனங்களும் சந்துஷ்டி யடைந்து ஆனந்த மேலிட்டால் அந்தகணேச நாதரை வெகுவாகக் கொண்டாடி பஜனை முடிந்தவுடன் பகவானுக்கு மங்களாரத்திகள் தந்து உடனே யவரவர்க ளிருப்பிடஞ் சேர்ந்தார்கள் பின் பிந்தகணேசநாதர் தன்னைமுன்னூற்றி யறுபதுசிஷர்கள் சூழ்ந்திருக்க வெகுகாலம் அக்காட்டினில்பகவந் நாம சங்கீர்த்தனைகள் செய்துக் கொண்டிருந்து முடிவில் நிரதிசயானந்தமாகும் ஸ்ரீவைகுந்த மானகரத்தை யடைந்தனர்.

வாழி விருத்தம்.

குணாதிசயமகுத்துமங்கள்கூடினோன்வாழி
மணாளனை மனனகமலத்தில்மகிழ்ந்துகாண்போன்வாழியே
குணானுபவமுகுந்தனைச் செய்துகுணம்பெற்றோன்வாழியே
கணேசநாதரிருகமலங்கள்வாழியே

கணேசநாதர் சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்

கேசவசுவாமி சரித்திரம்.

துதி விருத்தம்.

பாசபந்தங்களற்று பகவத்பக்தரையடுத்து
நேசமாய்தொண்டுசெய்து நிமலன்பதந்துதித்துக்
கேசவனருளையென்றுங் கிரமமுடன்பெற்றுகந்தக்
கேசவசுவாமிதாள்கள் கீழ்ப்படிந்துய்குவோமே.

கதையின் வரலாறு.

திருமாது கடாக்ஷம்பொருந்தியபீஜபுரமெனும் பட்டணத்தினில் பிரமகுலத்திற் பிறந்தவரும் பக்தர்களிற் சிறந்தவரும் சாந்தசமதமாதி குணங்களுடையரும் சாதுக்கள் சேவையிற் பிரியமுடையவரும்ஏழைப்பரதேசிகளை யாதரிக்குஞ்சிந்தை எப்போதுமுடையவரும் ஸ்ரீஹரிகதை செய்வதில் - என்றும் பிரியா மனத்தினை யுடையவருமான கேசவசுவாமிக ளென்றொருவர் பரமபாகவதர் வாசஞ்செய்துக் கொண்டிருந்தனர் அவர் மாதந்தோறும்வரும் ஏகாதசியினன்றிரவில் ஸ்ரீஹரிகதை செய்துக் கொண்டிருப்பதால் அவ்வூரினில் வசிப்பவர்களும் அடுத்த கிராமங்களி லிருப்பவர்களும் அங்குவந்து கேசவசுவாமிகள் செய்யும் ஹரிகதையைக் கேட்டு ஆனந்தித்துப் போவார்கள் இப்படிக்கிருக்க அந்தக் கேசவசுவாமிகள் ஒருஏகாதசியினன்று ஹரிகதை செய்துக்கொண்டிருக்க யாவரும்வந்து ஹரிகதையைக் கேட்டுப்பரமானந்தமடைந்துத் தங்களை மறந்திருக்கிறபோது அந்தகேசவசுவாமிகள் தாளமிருதங்கத்துடன் சுஸ்வரகான தாண்டவமாடிக் கொண்டேயிருந்து ஸ்ரீஹரிக்கு ஆராதனை செய்யும் பொருட்டு சக்கரையும் சுக்கும்வாங்கிக்கொண்டு வரும்படி வார்த்திகக்கிழவனை தன்சிஷ்யனொருவனை அனுப்பினார் அப்பிராமணக்கிழவனும்உடனே அந்த நடுராத்திரி வேளையில் தள்ளாடி தள்ளாடிக் கொண்டே கடைக்குச்சென்று நித்திரை செய்துக் கொண்டிருக்கும் படியான கோமுட்டி யொருவனை எழுப்பி ஐயாசெட்டியாரே பகவான்னிவேதனத்திற்

ருச் சக்கரையுஞ் சக்குனு சீக்கிரங்கொடுமென கேட்டார் உடனேயந்த கோமுட்டி எழுந்து கடைக்குள் விளக்கில்லாமலே உட்புகுந்து இருட்டினில் தெரியாமலும் நித்திரை மயக்கத்தினாலுஞ்சக்குப்பையென்று பாஷாணப்பையினில் கையை விட்டெடுத்து அளவு போலப் பாஷாணத்தையும் சீரையைப்போல சக்கரையுங் கொடுத்துச் சொல்லுகிறான் ஓஐயா பிராமணரே என்குமாரன் இன்றுதினமொரு கிராத்திற்குப் போயினான் அதற்காக நானிங்குக் கடையினிலிருக்க வேண்டிய காரணத்தினால் ஹரிகதை கேட்பதற்கு வரவில்லை யென்றுசொல்லி இன்றுதினம் அனேகமான ஜெனங்கள் ஹரிகதைகேட்க வந்திருப்பதால் சக்குப் பின்னையுங் கொஞ்சம் எடுத்துச் செல்லுமென்று கொடுக்க அதையும் அந்தசிஷர் பெற்றுக்கொண்டு விரைந்துவந்து அந்தப்பாஷாணத்தை விளக்கு முன்னிலையில் பாராமல் சுக்கென்ற நம்பிக்கையினால் அதைப் பொடிசெய்து சக்கரையுடன்கலந்து அங்கு ஸ்ரீஹரிக்கெதிரில் அந்தநிவேதனத்தை மெத்தப் பிரியத்துடன் வைத்தமாத்திரத்தில் பகவான் வெகுவாகிய கண்ணோக்கமிட்டு இதுவெகு ஜெனங்களுக்குத் தீதுசெய்யுமென்றுக் கருதி அந்தப் பாஷாணத்தைத் தான்புசித்து ஜீர்ணஞ் செய்துக்கொண்டார் அன்றியும் ஏகாதசி விரதத்துடனிருக்கும் அவர்களுக்கது ஒப்பாதென்றும் ஸ்ரீஹரியானவர் கருதி அப்பாஷாணத்தை புசித்தார் அப்போதுகேசவசுவாமிகள் அன்றிரவெல்லாம் ஸ்ரீகிருஷ்ணகதைகளை வெகுப்பிரியமாகவும் ரசமாகவுஞ் சொல்லிக் கதைமுடிந்தவுடன் மெத்த ஆசையுடன் ஸ்ரீஹரிக்கிமங்களாரத்திகளெடுத்து அருணோதயமாகப் போகிறதென்று அந்தசக்கரையை எல்லோருக்கும் பகுந்துக்கொடுத்த மாத்திரத்தில் சிலர் அப்பிரசாதத்தை பகவத்பிரசாம மாகுமென்றுப் புசித்தார்கள் சிலர் மூட்டை கட்டிக்கொண்டு போயினார்கள் கேசவசுவாமிகளும் யநுஷ்டானங்களை முடித்துவரச் சென்றார் இதற்குள் பொழுதுவிடிந்தமையால் அந்தக் கோமுட்டியானவனெழுந்து கடையைத் திறந்துப்பார்க்கையில் அங்கு வெளிப்படையாகப் பாஷாணப்பையானது காணப்பட அப்போதந்தக் கோமுட்டியானவன் இதற்கு நானென்ன செய்வேன் மோசம்வந்து நேரிட்டதே சகலஜெனங்களையுங் கொல்லுவதற்கு யானே எமனாகினேனே புத்திகெட்டுப் பாஷாணத்தை சுக்கென்று கொடுத்தேனே இதுவிளக்கில்லாமல் இருட்டினில் நன்றாய் கவனித்துப் பாராமற் போனேனே இன்னகரத்திலிந்த வர்த்தமானந் தெரிந்தபிறகு அரசனென்னை வெளிதினில் விடுவானோ எனக்கு உண்மையிலேயே சாவுசித்தமாகும் அப்படியெனக்குச் சாவுகிடைத்த போதிலும் மேலான பதவியை யடையப் போகிறதில்லை யானடைவது நரகப்பிராப்தியேயாம் அன்றி யானென்ன கழுதைக்காகிலுங் கேவலனாகி இப்படிப்பட்ட பெருத்த பாவத்தைச் செய்தேனே இனியரைக்கணமேனுமில்வுடலைவைத்துக் கொண்டு சாதுக்கள் முகத்தினிலெப்படி விழிப்பேன் அன்னியர்களுக்குப் புலப்படாமல் நதியினில் விழுந்துச் சாகின்றதே மெத்தநலமென்றுக் கருதினான் இப்படியந்தவணிகன் யோசித்துக்கொண்டே வெளியில்வந்து அங்கிருக்குஞ் ஜெனங்களைநோக்கி இன்றையதினம் நமதுநகரத்தினிலேதேனும் விசேஷமுண்டோ வென்று தந்திரமாகப் பேசி விசாரிக்கையில் அவர்கள்யாதொருவிசேஷமும் நமதுபட்டணத்தில் இல்லையென்றார்கள் அதைக்கேட்டு அந்தவணிகன் பட்டணத்திற்குள் புகுந்து வீதிகள்தோறுந் திரிந்து விசாரிக்கையில்சாவுசெய்தியொன்று மில்லாமையால் அதைவிட்டு ஹரிகதை நடந்தயிடத்திற்குவந்து பார்த்து அங்கும் யாதொருபிரஸ்தாபமு மில்லாமையால் அந்தவணிகன்சில மனிதர்களைக்கண்டு நேற்றிரவில் பகவானுக்கு நிவேதனஞ்செய்தபிரசாதங் கொடுங்களென்று கேட்க அவர்கள் பகுந்தபோதே ப்ரசாதத்தைப் புசித்து விட்டோம் ஏனெனில் ஏகாதசி விரதமாகையால்நிராகாரர்களாகியிருந்தபடியால் இன்னுஞ் சிலர்கூடி இதோபிரசாதம் புசியுங்களென்று கொடுக்க அதையும்வாங்கிப் புசித்தோமென்றும் மேலும் உன்னைப்போல நாங்களும் பிரசாதத்துக் காசித்து இங்குநிற்பதில்லை மனனகமலசுத்தமாய் மறுபடியும் ஒருநாள் உபவாசமிருக்க வேணுமென்றாலும் அப்படியே நாங்களுபவாசமாக யிருப்போம் என்றிப்படிச் சொல்லக்கேட்டு அந்தவணிகன் அவ்விடம்விட்டு மயானபூமியையடுத்துப்பார்க்க அங்குப் ஒருபிணமேனுமில்லாமல் சுடலை யெங்கும் பரிசுத்தமாக விருப்பதை யுணர்ந்து இதுவிந்தையிலும் விந்தையாயிருக்கிறதென்று மெத்த ஆச்சரியமடைந்து அந்தவணிகன் ஓஜெகதீசா தீனதயாளா பாண்டுரங்கவிட்டலா பக்தபரிபாலா ஆதிமூலா அழகிய சீலா வேணுகானலோலா ஜீவகாருண்ணிய மேலிட்டு அனேகர்மரணத்தைத் தடுத்தாட்கொண்டகிருபாகடாக்ஷனே என்றுபகவானை துதிசெய்துகொண்டேகேசவசுவாமிகள்ஹரிகதைசெய்யும் மடத்தைநாடிவருகையில் இதற்குள் கேசவசுவாமிகள்ஸ்நாநநுட்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை சேவிக்கையில் அம்மூர்த்தியானவர் தன்தேக முழுமையும் நீலவர்ணமாகி விளங்குவதைக்கண்டு இதென்ன இன்றையதினம் பகவான் நீலத்திருமேனியாகி சேவை

சாதிக்கின்றாரென்று யோசித்துக் கொண்டிருக்கையில் அன்று துவாதசியாதலால் வைதீகப்பிராமணர்களெல்லோரும் பகவானைசேவித்துத் தீர்த்தம் திருத்துழாய் சுவீகரித்துப் போகலாமென்றெண்ணி வருகையில் அவர்களுடன் அந்தவணிகனும் தொடர்ந்து வந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை சேவித்து அம்மூர்த்தியின் தேகமுழுமையும் நீலநிறமாக விருக்கக் கண்டு அந்தவணிகன் என்றுமில்லாதப் பரமானந்த மடைந்து கேசவசுவாமிகள் திருவடிகளில்விழுந்துதெண்டனிட்டெழுந்து சென்னிமீது இருகரங்களையுங்கூப்பிக்கொண்டு சொல்லத்தொடங்கினான்.

ஓபரமபாகவத சிகாமணியாகிய கேசவசுவாமிகளே அடியேனுடைய விண்ணப்ப மொன்றுளது அதைச் செவிசாத்திக்கேட்டு அடியேனுக்குத் தக்கபடி பிராச்சிதம் செய்யவேணும் அதென்னவெனில் நேற்றிரவில் தேவரீருடைய சிஷராகிய விருத்தப்பிராமணர் என்னுடைய கடைக்குவந்து நித்திரைசெய்துக்கொண்டிருந்த என்னையெழுப்பி பகவானுக்குநிவேதனஞ் செய்வதற்கு சுக்கும் சக்கரையுங் கொடுமென்று கேட்க யானுமெழுந்து கடையைத்திறந்து கடைக்குள்புகுந்து நித்திரை மயக்கத்தினாலும் வெளிச்சமில்லாமல் இருட்டா யிருந்தமையாலும் தெரியாமல் பாஷாணம் போட்டிருக்கும் பையைச் சுக்குப்பையென்று கருதி அப்பையில் கையிட்டுப் பாஷாணத்தை யெடுத்து சுக்கென்று கொடுத்துசக்கரையுங்கொடுத்தனுப்பினேன் அதையந்த விருத்தப் பிராமணர் பாராமலே அவரும் சுக்கென்றே நம்பிக்கொண்டு அதைப் பொடிசெய்து சக்கரையுடன் சேர்த்து விட்டார் அதைதேவரீர் பகவானுக்கு நிவேதனஞ் செய்துக் கொடுக்கிறபோது இதனால் வெகு ஜெனங்கள் மரணமடைவார்களென்றும்அம்மரணத்தினால்தேவரீருக்கு அபவாதம்வந்து சம்பவிக்குமென்றும் அவ்வபகாசத்திற்குத் தானே கர்த்தனாகிறோமென்றும் அந்த ஆபத்து பந்துவானவருணர்ந்து யாவரையுங் காப்பாத்தும் பொருட்டும் உமக்கு கெட்ட அபவாதம்வந்து சம்பவிக்காவண்ணமுங் கருதி அந்ததீனபந்துவானவர் சக்கரையுடன் கலந்த பாஷாணத்தை மாத்திரம் புசித்துத் தன்தேகமெங்கும் நீலநிறம் வகித்துக் கொண்டிருக் கின்றார் இதுநடந்த உண்மை ஆகையால் இதற்குத்தக்க சிக்ஷை அடியேனுக்கு நேமிக்க வேணுமெனக் கேட்டந்தகேசவசுவாமிகள்உள்ளங் கரைந்துப் பிரியமதிகரித்து ஆனந்தக்கண்ணீருதிர்த்து ஸ்ரீஹரியை நோக்கிஓ நீலமேகசியாமளவர்ன கமலக்கண்ணா தாசர்களை ரக்ஷிக்கிறேனென்று தரித்துக்கொண்டிருக்கும் விருது இன்றுசத்திய மாயிற் அ பெருத்த ஆபத்தைத்தீர்த்து வெகுஜெனங்களை ரக்ஷித்த தேவாதிதேவா நிவேதனஞ்செய்த சக்கரையிலிருந்தப் பாஷாணத்தைப் புசித்து எம்போலியர்க்கு அபவாதம் நேரிடாமற் காப்பாத்தின மகானுபாவா அன்றியும் அந்தபாஷாணத்தைப் புசித்துத்தேகமெங்கும் நீலநிரம் வியாபிக்கச் செய்துக்கொண்ட மாதவா முன்னம் பிரகலாதனைக் சொல்லவெண்ணி தக்ஷகன் முதலான சர்ப்பங்களின் விஷத்தைஅன்னத்திற் கலந்து கொடுக்கும்படி தன்மனைவியாகிய லீலாவதிக்கி நேமித்த ஹிரணியன் சொற்படி லீலாவதி விஷங்கலந்த அன்னத்தைப் பிரகலாதனுக்கு ஊட்டுகிற போது அப்பிரகலாதன் தேவரீருடைய நாமத்தைத் துதித்து முறையிட அவ்விஷத்தை யமுர்தமாகும்படிச்செய்வித்த ஓயாதவா இந்தவிஷம் உன்னையென்ன பாதிக்குமோ அன்றியுங் சிருஷ்டித்திதி சம்சாரமெனும் முத்தொழில்களுக்கும் ஆதியாகியும் அனாதியாகியும் விளங்கு ஓபரமபுருடனே பிரமருத்திரேந்திராதிமாமுனிவர்கள் வாக்குக்கு மனதுக்கும் எட்டாத பரம்பொருளே தேவரீருடைய குணாதிசயங்களை என்னால் புகழத்தரமாமோ உத்தமர்களுடைய இருதய கமலத்தினில் வீற்றிருக்கும் ஓஜெகதீசா இதைப்போலவே நின்னடியார்களுக்கு எந்தவிஷபாதையினாலும் ஆபத்து நேரிடாதவண்ண முற்றிலுங் காப்பாத்தி ரக்ஷிப்பதுமது பாரமாகும் மேலும்! நினதடியார்கள் மருத்துவங்களை இவ்வுலகிலுள்ள ஜெனங்களுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு தாங்களிந்த நீலத்திருமேனியுடன் விளங்குகின்றீரோ தயவுசெய்து முன்னமிருந்த ரூபத்தை யாவருங்காணும்படி விரைவாகதரிசனந்தந்து சந்துஷ்டி யடையும்படிக்குக் கிருபைசெய்யவேணுந் தயாநிதியே என்று இப்படியந்த கேசவசுவாமிகள் பகவானைமெத்தவும் வேண்டிக் கொள்ள அப்போதே சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திதனக்குண்டாகிய நீலநிறத்தைப் போக்கிப் பழயரூபத்துடன் விளங்கினார். அதைக்கண்டு அதிசயித்து சகலஜெனங்களும் பரமானந்தத்தை யடைந்தவர்களாகியிருக்க அப்போது கேசவசுவாமிகள் பகவானுக்குச்சகலஉபசாரங்களுடன் தூபதீப நிவேதனங்கள் செய்து யாவருக்குந் தீர்த்தந் திருத்துழாயளித்துத் தானும் திருத்துழாய்தீர்த்தம் ஸ்வீகரித்து உடனே துவாதசிபாரணைக்குத் தயாராகவிருக்கும் பிரசாதத்தைப்பரிமாரி யாவருக்குந் திருப்தியுண்டாகும்படி உபசரித்தார். அதைக்கண்டங்கு பிரசாதம் ஸ்வீகரித்துக் கொண்டிருந்த சகலரும் என்றுமில்லாத பரமானந்தத்துடன் கேசவசுவாமிகளைப் பலவாறு புகழ்ந்துக் கொண்டாடிக்கொண்டே போயினார்கள்.

இவ்வண்ணம் யாவரும் பிரசாதம்புசித்தப்போ யினபின்பு அந்த கேசவசுவாமிகளும் பிரசாதம் புசித்து உடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் சந்நிதியெதிரில் நின்றுக்கொண்டு தாளம் தம்பூர் மிர்தங்க முதலான கருவிகளுடன் கலந்து பகவத்குணானுபவஞ்செய்யத் தொடங்கினர் இதையறிந்து அனேகம் பிரஜைகள் வந்து குணானுபவங்களைக் கேட்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது கேசவசுவாமிகள் அங்குவீற்றிருக்குஞ் சகலரையும்பார்த்து ஓசாது சத்புருடர்களே நேத்திரவினில் பகவானுக்கு நிவேதனஞ்செய்த சக்கரையில் பாஷாணங் கலந்திருந்ததையாருமறியமாட்டோம் அந்தச்சர்க்கரையை நாமெல்லோரும் புசித்திருந்தால் மரணமடைவதற்குச் சந்தேகமேயில்லை அப்படிப்பட்ட கொடிய பாஷாணங் கலந்திருந்த சக்கரையின் ரகசியத்தை சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவருணர்ந்து இந்தசக்கரையைப் பங்கிடப்பெற்றுப் புசிப்பவர்களெல்லாம் மரணமடைவார்களென்றும் மரணமடைந்தவர்களுக்குப் பந்துக்களெல்லாம் இக்காரணத்தைச் சொல்லி நிந்திப்பார்களென்றும் அதனால் காலக்ஷேபத்திற்குத் தடையாகுமென்றும் தன்னைப் பலவாறு தூஷிப்பார்களென்றும் தீர்க்கமாக யோசித்து அப்படிப்பட்ட நிந்தனைகளென்றும் நேரிடாவண்ணந்தானே அந்த சக்கரையுடன் கலந்திருக்கும் பாஷாணத்தையெல்லாம் புசித்து சக்கரையைமாத்திரம் யாவருக்கும் வினியோகமாகும்படி நிறுத்தித் தன்னுடையசௌசீலத்தையும் பக்தர்களுடைய மகுத்துவத்தையும் பலருங் கண்டு ஆனந்திக்கும்படி நீலநிறத்தையடைந்து சேவைசாதித்த பகவானுடைய ஷட்குணசம்பத்திற்கு நாமெல்லோரும் ஆசித்து உண்மையிலேயே இந்தப்பகவானுடைய குணானுபவமாகும் சங்கீர்த்தனைகளைப் பக்தியுடன் பாடியாடி சதாகாலமும் வாடிக்கொண்டாடிக்கொண்டிருந்தால் பவரோகமெனும் ஜென்னமரணக் கடலைக்கடந்து பிரவிக்கிடமில்லாத நிரந்தரமாகிய வைகுந்தபதவியை யடைவதற் கையமில்லையென்று சொல்லக்கேட்டு யாவரும் பரமசந்தோஷத்தையடைந்திருந்தார்கள்.

பின்பு கேசவசுவாமிகள் பகவானுக்கு மங்களாரத்திகளெடுத்துப் பிரசாதம் யாவருக்கும்பகர யாவரும் அப்பிரசாதத்தை வெகு அரிதாகப் பெற்றுக்கொண்டு சென்று தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். உடனே கேசவசுவாமிகளுக்கு சகுணத்தினலே ஆத்துமக்ஞானம் பிறந்து சத்குருபதத்தை இருதயகமலத்தினில் நிறுத்திப் பூசைகள்புரிந்து சதாகாலமும் ஸ்ரீஹரிநாமத்தினில் பிரியமுண்டாகி நூதனமாகிய கீர்த்தனைகளைச் செய்தும் ஹரிகதை சந்தர்ப்பனத்தினில் அக்கீர்த்தனைகளின் சாரத்தை ஜெனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொண்டுமிருக்கையில் அந்தகேசவசுவாமிகளுடைய பெருமை யெங்கும் பரவியதால் நான்கு திக்குகளிலுமுள்ள ஜெனங்களும் அவரை வெகுவாகக் கொண்டாடத் தலைப்பட்டார்கள் அதையந்த கேசவசுவாமிகளறிந்து தனக்கப்பெருமைசரிப்படாமலும் அவ்வூரினில் வசிக்கமனமில்லாமலும்பகவானுக்குப் பூசைபுபசாரங்கள்செய்துமுடித்துஓஜெகதீசா அடியேன் கிருஷ்ணாநதியில் ஸ்நானஞ் செய்ய மெத்த ஆவல்கொண்டேன் ஆசையால் தயவுசெய்து விடைதரவேணுமென்று வேண்டிக்கொள்ளப் பகவான் அசரீரியாக விருந்து ஓபரமபாகவதராகிய கேசவசுவாமிகளே உன்னிஷ்டத்தின்படியே கிருஷ்ணாநதிக்குச் சென்று ஸ்நானஞ்செய்து உன்னாவலைத் தீர்த்துக் கொள்ளக் கடவாயெனக்கேட்டு அந்தகேசவசுவாமிகள் மெத்த சந்துஷ்டராகியிருந்து அன்றிரவிலேயே ஒண்டியாக கிருஷ்ணாநதியைநோக்கி பகவத்குணானுபவஞ் செய்துக்கொண்டே நடந்தார் அப்போது ஸ்ரீஹரியானவர் கேசவசுவாமிகளின் தோளின் மீதிருந்துக்கொண்டு அவர்தியானஞ் செய்யும் கீர்த்தனைகளின் சாரத்தைக் கேட்டுக்கொண்டேபோகையில் வழியினில் வயல்காவற்காரனொருவன் கேசவசுவாமிகள் தோளின் மீதிருக்கும் பகவானுடைய அழகும் சுகுமாரமும் விளங்கக்கண்டு அப்பாலகனுடன் வார்த்தைகளாடவேணுமென்று மனதில்நினைத்துக் கட்டிலின்மீதிருந்துக் கீழேயிரங்குவதற்குள் கேசவசுவாமிகள் வெகுதூரம் போய்விட்டார் அதைக்கண்டந்த காவற்காரன் தானுமவர் பின்னேடி ஓடித் தன்னாலாகாமல் தன்னிருப் பிடத்தைச் சேர்ந்தார் கேசவசுவாமிகளோ விரைந்து நடந்து கிருஷ்ணாநதியையடைந்து பக்திசிரத்தையுடன் ஸ்நானஞ் செய்து அநுட்டானங்களை முடித்துக்கொண்டு பகவத்குணானுபவத்துடன் மூன்றுநாளங்கு வசித்திருந்து மருபடியுந்திரும்பி பகவந்நாமசங்கீர்த்தனஞ்செய்துக்கொண்டே வழியைக் கடந்துவருகிறபோது வயல்காவற்காரன் கேசவசுவாமிகளைக் கண்டுபணிந்து இருகரங்களையுங் குவித்துக்கொண்ட வண்ணம் ஓசுவாமிதேவரீர் இம்மார்க்கமாய் மூன்றுநாளைக்கு முன்னம்போகிறபோது உம்முடைய தோளின்மீது மெத்தஅழகு சுந்திரத்திற் சிறந்த பாலகனொருவனிருக்கக் கண்டேன் அப்பாலகனுடன் வார்த்தைகளாடுவதற்கு நான்மெத்த ஆவல்கொண்டு வெகுதூரம் உம்முடன் ஓடி வேசாரி உம்மைக்கிட்டி யடைவதற்கு முடியாமல் மருபடியுந் திரும்பி இங்குவந்து சேர்ந்தேன்

எனக்கேட்டந்த கேசவசுவாமிகள் மிகவுமதிசயித்து ஒகாவற்காரரே நானெப்போதும் பாலகனைத் தோளின்மீது சுமந்துக் கொண்டு போயின தில்லையேயென அதற்கந்த காவற்காரன் யான் சத்தியமாகப் பார்த்தேன் அப்பாலகனை எப்படி விட்டு விட்டாயெனக் கேட்டந்த கேசவசுவாமிகள் மெத்த ஆச்சரியமடைந்து அப்பாலகன் கபடநாடகசூத்திரதாரியாகிய பகவானே யாகுமெனக்கருதி அங்கிருந்தும்புறப்பட்டு காட்டைநாடி வேகமாய்நடந்தார்.

இந்தப்படியந்தகேசவசுவாமிகள் மெத்தவிந்தையடைந்தவராகி நாட்டைநாடிச்சென்று அங்கோரிடத்தினில் தான்வசிப்பதற்குத் தக்கபடி யிடமமைத்துக்கொண்டு அதிலிருந்து ஸ்ரீஹரியை நினைத்துநினைத்து ஆர்த்தியடைந்த மனத்தராகி ஒஜெகதீசா யான் கிருஷ்ணாநதியை நோக்கிச் செல்லுகையில் என்தோளின்மீதிருந்து யான்சொல்லும் சத்கீர்த்தனைகளைக் கேட்டானந்தித்தும் எனக்குத்தெரியாமல் துணையாகிவந்தீரோ எனக்குமதரிய சேவைதாராமல் வழியில் வயல்காவற்காரனுக்குமதுசேவையைத் தந்தீரேஇப்படிச்செய்வதற்கு என்னஞாயமோ எந்தையே இது வெகுவிந்தையேயாகிலும் சகலாபரணங்க ளணிந்தவராகி இப்போதிங்குவந்துஎனக்குள்ளறிய சேவைதரவிடில் என்பிராணனை யானேமாய்த்துக் கொள்ளுகிறேனென்று மனதைத்திடஞ்செய்துக்கொண்டிருப்பதைஸ்ரீஹரியானவரறிந்துநாமிப்போதுபோகாவிடில் கேசவசுவாமிபிராணனை விடுவதுஉண்மையேயெனஅதையறிந்தப் பிராணிகளெல்லாம்நம்மைநிந்தனைசெய்வதுடன்நமக்கென்றும்நீங்காத அபவாதம்வந்துசம்பவிக்குமென்றுணர்ந்து உடனே சகலா பரணங்களுடன் பஞ்சாயுதங்களையுந் தரித்து கெருடன்மீதூர்ந்துக் கொண்டங்குவந்து கேசவசுவாமிகளுக்கு தெரிசனந் தந்தார் அந்தசேவையி லிடுபட்டுக் கேசவசுவாமிகள் பரமானந்தமடைந்து பகவான் திருவடிகளில்விழுந்து பணிந்துஎழுந்துநின்றுசென்னியின்ரமீ திருகரங்களையுங் குவித்துக்கொண்டவண்ணம் வெகுவாகப்புகழ்ந்துக்கொண் டாடுவதைக்கேட்டு அந்த ஹரியானவர் கேசவசுவாமியை ஆதரித்து எனதன்புக்குறிய நிஜ பக்தனே முன்னம் நீகிருஷ்ணாநதியைநோக்கிப்போகிறபோது யான் சுந்திரமாகிய வடிவழகமைந்தப் பாலகனாகி யின்தோளின் மீதிருந்தது உண்மையே யதனைக்குத் தெரியாமற் போனதற்குக் காரணமென்னவெனில் குணானுபவஞ் செய்துக்கொண்டே போனதினால் நினைச்சு தேகம்மறந்து உலகவாசனையுந்துறந்து யிருந்தமையால் யானுன்தோளின் மீதிருந்தது உனக்குத் தெரியாமலிருந்ததுஎன்றும்பற்பலநீதிவசனங்களைப் புகன்றுப் பின்னும் ஒகேசவசுவாமி நீஎதுக்கும் அஞ்சாமல் பீஜாபுரத்தை யடைந்து முன்போலிருக்கக்கடவாயென்றுசொல்லி மாயமாய் மறைந்து போயினர் உடனே அந்தகேசவ சுவாமிகள் பீஜாபுரத்தையடைந்து யிருக்கையில் வெகுஜெனங்கள் மெத்தப் பிரியத்துடன் புகழ்ந்துக் கொண்டாட வெகுமகிமைகள் விளங்கும்படிவீற்றிருந்தார் இவரிப்படிக்கிருக்கையில் அந்நகரத்தினி லொருவணிகன் எழுபதினாயிரம்ரூபாய் சிலவுசெய்து பெருத்தவீடொன்று கட்டிமுடிந்தவுடன் கோதானம் பூதானம் ஹிரணியதானம் வஸ்திரதானமென்று சொல்லப்பட்ட சோடசதானங்களும் அபாரமாகச்செய்து உடனே எழைப்பரதேசிகளுக்கு அன்னதானஞ் செய்துபின் புபலவிதசாந்திகள் செய்து கிரகப்பிரவேசஞ் செய்து அன்றிரவினிலந்த வணிகன் நித்திரைசெய்துக்கொண்டிருக்க அதில் நெடுநாளாய் வசித்துக்கொண்டிருந்த பிரமராக்கதன் அந்தவணிகனைத்தூக்கிக்கொண்டுபோய் வெளியில் போடவே அவ்வணிகன்மெத்தபயந்து மந்திரதந்திர ஜெபங்கள் வெகுவாகச்செய்தும் அந்தப்பிரமராக்கதன் சிறிதேனுஞ் சலியாமல் மெத்தப்பயமுண்டாகச்செய்தான் அதைக்கண்டந்த வணிகன் மெத்தபயமடைந்து நமக்கினியிந்த வீடுசரிப்படாதென்று யோசித்து அப்போதே அவ்வீட்டைவிட்டு வேறு வீட்டினிற்குடி புகுந்திருந்தான் இப்படியிருக்கையில் அந்த வணிகன் தன்னிடம் வந்திருக்கும் வியாபாரிகளை நோக்கி ஐயா நேசர்களே என்னுடைய துர்ப்பாக்கி யதிசையை நானென்னவென்று சொல்லுவேன் எழுபதினாயிரம் ரூபாய் சிலவுசெய்து வெகுநாளைக்கு கல்பாந்திரமாயிருக்கும்படி கட்டியவீட்டைப் பிரம்மராக்கதனுக்கு ஒப்புவித்துவிட்டு நானிந்த சிறியவீட்டினில் குடிக்கூலிக்கி யிருக்கும்படியாய் நேரிட்டதே இந்த கஷ்டத்துக்கு யானென்னசெய்வேனென்றுசொல்லி விசனப்படுவதைக்கண்டு வியாபாரிகளில் ஒருவன் வணிகனை நோக்கி ஓமகாப்பிரபுவே இதற்காக நீரேன் விசனப்படவேணும் இதற்கொருதந்திர மிருக்கின்றது அந்தப்படி செய்தால் பெருங்காத்தினிலகப்பட்ட பஞ்சுபோல அப்பிரம ராக்கதன் பரந்து உருமாய்ந்து போவன் எனக்கேட்டந்த வணிகன் ஒஐயா அதென்னதந்திரம் அதை வெளிப்படையாகச் சொல்லும் அந்தப்படியேசெய்து பார்ப்போமென அதற்கந்தவியாபாரிகுபேரனுக்கு நிகரான சம்பத்திற் சிறந்த புண்ணியவானே நமது பட்டணத்தில் மெத்தமகுத்துவம் பொருந்தி எங்கும் பிரசித்தியடைந்திருக்கும் பரமபாகவத

சிகாமணியாகிய கேசவசுவாமிகளையாதாமொருதந்தி
ரஞ்செய்தயழைத்துவந்து ஒருராத்திரிக்கிஅக்கிரகத்
தினில்வசிக்கும்படியாகச் செய்வீரேயாகில் அவரைக்
கண்டமாத்திரத்தில் அப்பிரம்மராக்கதன் நடுநடுங்கி
உடலெங்கும் புழுங்கிப் பதறிக் கதறிக்கொண்டு அவ்
விடத்தைவிட்டுப் பரந்துபோவன் எனக்கேட்டந்தவ
ணிகன் இதுசரியான தந்திரமாகுமென்று மெத்த சந்
துஷ்டியடைந்துத் தன்னுடன் இன்னுஞ்சிலரையழை
த்துக்கொண்டு கேசவசுவாமிகள் மடத்தைநோக்கி
நடந்தான்.

இவ்வண்ணம் அந்தவணிகன் சிலரைக்கூட்டிக்
கொண்டு சென்று கேசவசுவாமிகள் மடத்தைச்சேர்
ந்து அங்குகிருஷ்ணஜனத்தின்மீது வீற்றிருந்து ஜெ
பமாலிகையைக் கையிற்கொண்டு தாரகமந்திரத்தை
ஜெபித்துக்கொண்டு களங்கமற்ற மனதுடனிருக்கும்
கேசவசுவாமிகளைக்கண்டு அவர் திருவடிகளில் வீழ்
ந்து பணிந்து எழுந்து மிகுபக்திவினயத்துடன்மொ
ழியலுற்றான் அதென்னவெனில் ஓசுவாமி ஏழையே
ன்மீதுகிருபைகூர்ந்து விண்ணப்பத்தைச்செவிசாத்தி
க்கேட்டு அடியேனுக்குண்டாயிருக்கும் மனக்கவலை
யைப்போக்கி ஆதரித்தருள்புரியவேணுமென்று வே
ண்டிக் கொள்ளும் வணிகனைநோக்கி அந்தகேசவசு
வாமிகள் கிருபாரசம் பொங்கும்படி யாதரித்து ஐயா
வணிகனே உமக் கென்னகுறை யுண்டாயிருக்கிறது
அதைத்தெரியச்சொல்லுமென அதற்கந்த வணிகன்
மெத்தசந்துஷ்டியடைந்து ஓசுவாமி எழுபதினாயிரம்
ரூபாய் சிலவுசெய்து பெருத்தமாளிகை யொன்றுகட்
டி அதில்யான்குடியேறின அன்றேநெடுநாளாக அங்
குவாசஞ்செய்துக்கொண்டிருந்த பிரமராக்கதன்வெ
கு ஆர்ப்பாட்டம்பண்ணினான் அதற்குயான் கிஞ்சித்
தேனுஞ் சலியாமலும் பயப்படாமலும் இருந்தேன்
அதுகண்டு அந்த பிரம்மராக்கதன் மருத்தொன்றுஞ்
செய்யாமற்போயினன். அப்போது யான்மெத்த சந்
தடிகொண்டிருந்து அன்றியுவந்தவுடன் சகலகாரியங்
களையும்பார்த்து வுடனேபுசித்துக் கட்டிலின்மீதுபடு
த்திருந்தேன் நடுநேரத்தில் என்னையறியாத நித்திரை
யில் யானிருக்கிறபோது அந்தராக்கதன்வந்து என்
னையெடுத்துக்கொண்டுபோய் வெளியில் போட்டுவிட்
டுப்போயினன் அப்போதெனக்கு ஜாக்கிரதையுண்
டாகி மெத்தபயந்து அங்குதானே சற்றுநேரமிருந்து
உடனேஎழுந்து வீட்டையடைந்து மறுபடியும்படுத்
து நித்திரையிலிருக்கிறபோது அப்பிரமராக்கதன்வ
ந்து என்னைப்பெருத்த பயமுறுத்துகிறபோது அவ
னுடைய உண்மையான ரூபத்தைக்கண்டு யான்மெ
த்தவும் நடுநடுங்கி இதற்கென்னசெய்கிறதென்று வெ
குவாகயோசித்து மந்திரயந்திர தந்திரங்களைச் சுதந்
தரமாகச்செய்தும் அதற்கந்த பிரம்மராக்கதன் அணு
வளவேனும்பயப்படாமல் என்மீது அதிகசினங்கொ
ண்டு என்னைவிழுங்கி விடுகிறேனென்று சொல்லிக்
கொண்டே சமீபமாகவருகையில் அதை யான்கண்டு
அவிடத்தைவிடுத்து ஓட்டமாகயோடி எதிர்வீட்டினி
ற்போய் சற்றுநேரமிருந்தேன் இதற்குள் பொழுது
விடிந்தது உடனே இனிஙிங்கிருந்தால் மெத்தமோச
முண்டாகுமெனக்கருதி வேறொருவீட்டைக் குடிக்
கூலிக்குப்பேசி அவ்வீட்டிற்குடிபுகுந்து சிலநாளாய்
சுகத்துடனிருக்கின்றேன் கஷ்டப்பட்டு பொருளைச்
சம்பாதித்த அருமையானது எண்பதினாயிரம்ரூபாய்
சிலவாய்ப்போனதுமன்றி அவ்வீட்டினில் வசித்துக்
கொண்டிருந்தால்போதும் அப்படிக்கெனக்குபயோ
கப்படுத்தாமல் பிரமராக்கதன் சுதந்திரப்பட்டு அவ்
வீட்டினில் வாசஞ்செய்துக்கொண்டு என்னை அன்னி
யர்வீட்டில் குடிக்கூலிக்கிருக்கும்படி செய்துவிட்டா
னேஎன்று ஏக்கத்துடன்தூக்கமின்றி ஆகாரமுங்கொ
ள்ளாமல் மெத்தவும் விசனமுற்றிருக்கும் அடியேனு
டையவீட்டிற்கு தேவரீர் எழுந்தருளினால் தங்களு
டைய கிருபாநேக்கம் பட்டமாத்திரத்தில் வீடு பவி
த்திரமடைவதுமின்றித் திருவடிகள்பட்ட சுகிர்தத்தி
னால் பாவனமடைந்துவிடும் அந்தப்பிரமராக்கதனும்
சூரியனைக்கண்ட பனிபோலவும் சந்திரனைக்கண்ட
சகோரப் பட்சியைப்போலவும் தேவரீர் திருவடித்தா
மரைகளுக்கு தெண்டனிட்டு வெகு வினயமாய்த்துதி
செய்துக்கொண்டேபோவான் என்பது எனக்கு புத்
தியில் நன்றாகப்படுகின்றதெனப் பணிவாகச்சொல்ல
க்கேட்டந்த கேசவசுவாமிகள் வணிகனைநோக்கி இ
தென்ன விந்தையாயிருக்கின்றது என்னுடையதேகச்
சாயைப்பட்டவுடன் அந்தப் பிரமராக்கதன் சிங்கத்
தைக்கண்ட யானையைப்போல நடுநடுங்கி அவ்வீட்
டைவிட்டும் ஓடிப்போவான்என்று சொல்லுவது ஞா
யமோ எனக்கென்னதெரியும் உம்மைப்போல யானு
மொரு மனிதன்தானேநான்வந்தால்பிரம்மராக்கதன்
அவ்விடத்தைவிட்டுப் போவானென்பதும் பொய்வா
ர்த்தையே ஆகிலும் என்றாலுனக்குச் சுகமடையவே
ண்டிய ஜென்மாந்திர சுகிர்தமிருக்கிறபக்ஷத்தில் ஒரு
க்கால் அப்பிரமராக்கதன் ஒதுங்கிவர்த்திப்பன் உன்
மனதிற்கேன்குறை இதோவருகிறேனென்றுஉடனே
எழுந்து அவ்வணிகன்பின்சென்று அவன் வீட்டை
யடைந்து அன்றிரவெல்லாம் பகவத் குணானுபவஞ்
செய்துக்கொண்டிருந்தனர். அப்போதந்தப் பிரமரா
க்கதன் மெய்நடுங்கி உடல்புழுங்கி இனிநானென்ன
செய்வேன் எங்குபோ யுய்வேன்எப்படியுமந்நாயேன்

என்று பலவாறு விசனப்பட்டுக் சொண்டேவந்து கேசவசுவாமி திருவடிகளில் விழுந்து பணிந்து எழுந்து ஓசுவாமி இதோநிற்கும் பனைமரத்தினில் அனேகவருடங்களாய் வாசஞ்செய்துக் கொண்டிருந்தேன் வணிகனால் தேவரீரைக்கண்டு தெரிசித்தேன் இனி யானிங் கிருப்பதற்கு யோக்கியதை படமாட்டாது வணிகனேயிதில் சுகமாய் வாசம்பண்ணிக் கொண்டிருக்கட்டும் யான்போய்வரு கிறேன் சுவாமியென்று விடைபெற்றுக் கொண்டு அந்தப்பிரம ராக்சதன் மனதுக்கிசைந்த படியேகினன் பின்புகேசவ சுவாமிகள் மெத்த சந்தோஷத்துடன் ஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்துக் கொண்டிருந்தார் இதற்குள் சூரியோதயமாயிற்றுகேசவசுவாமிகள் உடனேவணிகனையழைத்துப் பிரம்மராக்கதன் சொல்லிய செய்திகளை மொழிந்து ஐயாவணிகரே இனியும திஷ்டப்படிக்கி இந்த மாளிகையில் வசித்துக்கொண்டு சுகஜீவியாய் ஸ்ரீஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்துக் கொண்டியிரு மென்று ஆசிகூறி விடைபெற்றுக் கொண்டு தன்னிருப்பிடமாகிய காட்டை யடைந்து பரமபக்தியுடன் ஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்துக் கொண்டிருந்தனர்

இவ்வண்ணம் அந்த கேசவசுவாமிகள் பகவன்னாம சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டிருக்கிறபோது அந்த பீஜபுரத்தில் வசிக்கும் பாஜிபட்டான னென்னொருவர்த்தகன் அதிகதிரவிய வானகி யிருந்தும் மரணம் சம்பவிக்கும் ரகசியத்தை யுணராமல் செலவச்செருக்கினால் தானென்ற கெருவங் கொண்டு தனக்கு நிகரான பொருளுடையமகாராஜன் இவ்வுலகினிலொருவருமில்லையென்று கருதிக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான் இந்தப்படிக் கந்தபாஜிபட்டானனிருக்கையிலொருநாள் சமீபகிரா மத்திற்குப்போக வேண்டி அனுவலுண்டாகிப் புறப்பட்டு அந்தபாஜிபட்டானன் போயிக்கொண்டி ருக்கையில் மார்க்கத்திலொரு ஒட்டகம் சுமக்கபடாத பாரத்தை சுமந்துக் கொண்டே வந்து அச்சுமை யானது மெத்தவுமதிக்ரித்துயிருந்தமையால் அந்தஒட்டகமானது சுமக்கமாட்டாமல் திடீலென்று பூமியின்மீது விழுந்து மரணமடைந்தது இதைக்கண்டு அந்தபாஜிபட்டானன்ஒட்டகக்காரனை நோக்கி இந்த ஒட்டகம் என் நடக்கமாட்டாது கீழே விழுந்து கிடக்கும் காரண மென்னவென அதற்கந்த ஒட்டகக்காரன் ஐயா இந்த ஒட்டகம் உயிருடனிருக்க வில்லை நடந்து வருகிறபோதே திடீலென்று விழுந்து மரணமடைந்த தெனக்கேட்டு அந்தபாஜிபட்டானன் இந்தப்படியே நமதுபிராணனும் போகுமல்லவா என்றுக்கருதி இனிநாம் வீண் காலம்போக்குவதால் பய னொன்று மில்லையென்னும் தக்க ஆசானை யடுத்து பரமார்த்தம் உபதேசிக்கப் பெற்று ஜென்மசாபலியமடையும் மார்க்கத்தை தேடிக்கொள்ள வேணுமென்று தீர்க்காலோசனை செய்துக் கொண்டு தன்வீட்டை யடைந்து அன்றுமுதல் நமக்குத்தக்க ஆசானெங்கேகிடைப்பாரோ நம்முடைய பூர்வசென்ம சுகுர்தமெப்படி யிருக்கிறதோ என்று ஆசானை யடுக்கவேணுமென்ற இச்சை மெத்த வுண்டாகி வெகுதேசங்களெல்லாந் திரிந்து அலைந்தும் தக்க ஆசான் கிடைக்காததாலே மறுபடியுந் திரும்பி தன்னூரைச் சேர்ந்து ஆசான் கிடைக்க வில்லையே என்ற ஏக்கத்துடன் தூக்கமின்றி வியாகூலப்பட்டுக் கொண்டே படுத்து நித்திரை போயினர் அப்போது ஸ்ரீஹரியானவர் அந்த பாஜிபட்டானன் கனவினில் தோன்றி அப்பாபாஜி பட்டானா நீயேன் கவலைப் படுகின்றாய் நாளைய உதயத்தி லெழுந்து இந்நகரத்திற கைந்துமைல் தூரத்தினி லிருக்கும் காட்டினில் கேசவசுவாமிகளென்னொருபாமவைதீக ரிருக்கின்றார் நீ அவரிடத்திற்குச் சென்று நான் சொன்ன தாகச் சொல்லி உபதேசம் பெற்றுக்கொண்டு பூரணக்ஞான சம்பன்னனாகக்கடவாயென்று ஆசிகூறி மாயமாய் மறைந்துபோயினர். உடனேயந்த பாஜிபட்டானர் திடுக்கிட்டெழுந்து தன்கனவினிலெழுந்தருளினவர் சாக்ஷாத் கிருஷ்ணமூர்த்தியேயாமென்று திடஞ்செய்துக்கொண்டு பரமர் யாளுவாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத் துதிசெய்யாமல் வீண்காலத்தைப் போக்கிவிட்டேனே பொருளாசையினாலே கெட்டேனே சஞ்சலமனதைத் தொட்டேனே பாபத்துக்குட்பட்டேனே எனக்குப் பரமதசாரியரைக்காட்டி மரைந்துபோயின பகவானைத்துதிசெய்யலாமென்றால் என்னென்றுசொல்லிப் புகழும் விதத்தை யறியேனே சன்மார்க்கத்தின் ரகசியத்தை யான் னளதுவரையில் தெரியேனே ஆசானைக்கண்டு அவரைவணங்கி இணங்கி இப்படி நடக்கவேணுமென்ற மார்க்கத்தையுங் குறியேனே மெத்த அரிதாகிய உபகாரமெனக்குச்செய்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை என்னுயிர்நீங்கினபோதிலும் விடேனே என்றிந்தப்படி அன்றிரவெல்லாம் பயித்தியங் கொண்டவனைப் போலவும் மெத்தகாமியானவன் ஒருஸ்திரீயைகண்டு மோகித்து அவளுடன் கலவிசெய்யும்பரியந்தம் அன்னாகாரமின்றியும் தூக்கமில்லாமல் ஏக்கங்கொண்டிருப்பவனைப் போலவும் இந்த பாஜிபட்டானன் எப்போது பொழுதுவிடியுமோ எப்போது ஆசானைக்காணுவனோ எப்போதவரிடம் உபதேசம் பெறுவனோ உடல் பொருள் ஆவிமூன்றையும் ஆசானுக்கெப்போ

ஆ தத்தஞ்செய்வேனே என்று பிரலாபித்துக்கொண்டிருந்தான். இதற்குள் சூரியோதயமாயிற்று அதைக் கண்டந்த பாஜிபட்டானன் உடனேஎழுந்து காலைக்கடனைமுடித்து ஸ்னானநுட்டானங்களைச் செய்துமடியுடுத்தித் திருமணி ஸ்ரீசூரணந்தரித்துப் பலவிதகனிவர்க்கங்களுடன் பூஜாதிரவியங்களையும் பெருத்ததாம்பாளத்தினி லேந்திக்கொண்டு விட்டைவிட்டு வெளிப்பட்டு நாட்டைவிட்டுக் காட்டையடைந்துகுருநாதராகிய கேசவசுவாமிகளைக் கண்டு அவர் திருவடிகள் முன்னம் அந்த தாம்பாளத்தைவைத்து தீர்த்தங்கொண்டு அவர் திருவடிகளைவிளக்கி அத்தீர்த்தத்தை சிரசின்மீது தெளித்துக்கொண்டுப் பரமசீலனாகி அக்ஷதை புஷ்பங்களா லத்திருவடிகளை யர்ச்சிரதுத் தூபதீப நிவேதனங்கள்தந்து முக்காலும் வலம்புரிந்து அடங்கியொடுங்கி அவர் திருவடித்தாமரைகளில்விழுந்து பணிந்துஎழுந்துநின்று இருகரங்களையுஞ்சிரசின்மேற் குவித்துக்கொண்டு அக்குருநாதரை நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

பக்தியிலும் விற்பத்திலும் பரமக்ஞான சம்பூரணரான எனது பரமகுருநாதரே அடியேன் வெகுநாளாய்ப் பரமாசானை யடையவேணுமென்றுக்கருதி அனேக தேசங்களெல்லாந் திரிந்து ஆசானகப்படாமல் மனம் புண்ணாகித் திரும்பிவந்து இந்தபீஜாநகரத்தை யடைந்து அடியேனுடைய வீட்டிற்குட் சென்றும் மனந்தடுமாறித் தூக்கமின்றி ஏக்கங்கொண்டிருந்த நாயேனுக்குநேற்றிரவில் எப்படியோநித்திரை நேர்ந்துப் படுத்து நித்திரைசெய்யும்போது அடியேனுடைய கனவினில் சாக்ஷாத் கிருஷ்ணமூர்த்தி எழுந்தருளி எனக்குண்டாகிய மனக்கவலை தீரும்படி நீ ஏனப்பா சிந்தனைப்படுகின்றாய்சீக்கிரம்எழுந்துநமது நகரத்திற்கு மேற்றிசையில் ஐந்துமயில் தூரத்தினிலிருக்குங் காட்டையடைந்து அங்கிருக்கும் பரமக்ஞான சம்பன்னராகிய கேசவ சுவாமிகளைச் சரணமடைந்து உடல்பொருளாவி மூன்றையும் அவருக்குத் தத்தஞ்செய்து உபதேசம்பெற்று பூரணக்ஞான சம்பன்னனாகி சுகஜீவியாய் இருக்கக் கடவாயென்று ஆசிர்வாதங்கூறி மறைந்துபோயினார் அந்தப்படியேயானுந்தங்களிடம்வந்து சரணாகதி யடைந்தேன் பவக்கடலைக் கடந்தேன் பாவஞ்செய்வதற் கிடைந்தேன் பரமானந்த மடைந்தேன் என்று வினய பக்தியுடன் மொழியக் கேட்டந்த கேசவசுவாமிகள் சந்துஷ்டியடைந்தவராகி அந்தபாஜீட்டானரைச்சமீபத்தினில் வரச்சொல்லி உக்காத்திக்கொண்டு தன்கரத்தையவர் சிரத்தின்மீது வைத்துப் பூரணக்ஞான சம்பத்தியையடையக் கடவாயென்று ஆசிகூறி அஷ்டாக்ஷரமந்திரத்தை யுபதேசித்து அதையநுஷ்டிக்கும் ரகசியங்களையும் பதுமாசனத்தின் விவரத்தையுந் தெளிவாகும்படியோதிக்கருணையாமனனக்குளிர்ச்சியுடன்பரவச்செய்துபோய் வாருமையாவென்று விடைதர அந்தப்பாஜிபட்டானர் என்றுமில்லாத ஆனந்தப்பரவசமடைந்து உடல்பொருளாவியையும் தத்தஞ்செய்து அவர்திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்து நேமனப்படி அவ்விடத்தைவிட்டு தன்கிரகத்தையடைந்து தைலதாராவிச் சின்னம்போல ஆசான் தனக்குபதேசஞ்செய்த மந்திரத்தை ஜெபித்துக்கொண் டிருக்கையில் நாளுக்குநாள் க்ஞானபக்தி வைராக்கிய மதிகரித்து பிரமக்ஞானத்தில் தேரித்தெளிந்து வித்தம்மாடு கன்று வீடு பிள்ளை பெண்டு சுத்தம் பூமிமுதலானதுகளின்மீது சற்றேனும் பிரியமின்றிச் சர்வசங்கபரித்தியாகஞ் செய்து இல்லறத்தைவிடுத்துத் துரவரத்தையடுத்து க்ஞானசம்பத்தைக் கைப்பிடித்துசகலசொத்துக்களையும் ஆசானுக்குக் கொடுத்து வீட்டைவிட்டு வெளிப்பட்டு கிராமங்களில் பிச்சைவாங்கியுண்டுஅடிக்கடித்தன் யிருதயகமலத்தினில் பிரமத்தைக்கண்டுப் பரமானந்த மடைந்துக் கொண்டே சென்றுபெருத்ததக் காட்டையடைந்து அங்கோர்மரத்தடியில் கிருஷ்ணஜலம் பரப்பி அதின்மீது பதுமாசன மிட்டுட்கார்ந்து ஆகாயத்தை நோக்கின முகத்துடன் இருகரங்களையும் ஏந்திக்கொண்ட வண்ணம் சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனை மனதினில் நிருத்தித் தவஞ்செய்துக்கொண்டு சிலவருடங்களிருந்துப் பரமசாயுச்சிய பதவியையடைந்தனர் பின்பு கேசவசுவாமிகள் அந்தக் காட்டினில் வெகுகாலம் வசித்திருந்து முடிவில் நிரதிசயானந்த ஸ்ரீவைகுந்தமா னகரத்தையடைந்தனர்.

வாழி விருத்தம்.

பாசபந்தங்களையகற்றிப் பகவனடிபணிந்தோன்வாழி
தேசுளப்பிரமக்ஞானப் பெருமையிற்றேர்ந்தோன்வாழி
பூசுரர்குலத்துதித்தப் புண்ணியன்பொருமைவாழி
கேசவசுவாமிபாதங் கெதியாகுமென்றும்வாழி.

கேசவசுவாமிகள் சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்:

ஸ்ரீமத்

பாத்ரிராஜன் சரித்திரம்.

துதிவிருத்தம்.

பரமகுணசிரேஷ்டனாகிப் பாரினிலெவரும்போற்றத்
திறமுடனவந்திதேசத் ததிபதியாகிச்செங்கோல்
கரமதிற்றாங்கிநீதி குன்றாமலாண்டிருந்தப்
பரத்ரிராஜன்திவ்ய பதங்களைப்போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு.

திருமாது கடாக்ஷம்பொருந்தி மோக்ஷத்தைத் தரும் க்ஷேத்திரங்களி லொன்றாகிய அவந்திக்ஷேத்திரமெனும்நகரத்தைப் பரத்திரிராஜனென்பவர் வெகு நீதியாய் ஆண்டுக்கொண்டிருந்தனர்இவருக்குத்தம்பி விக்கிரமார்க்கனென்பவன் அவனை அந்நகரத்திற்கு யுவாரஜாவாகியு மிருந்துக்கொண்டு சகலகாரியங்களையும் அண்ணனாகிய பரத்ரிராஜனை முன்னிட்டுக்கொண்டு தாநடத்திவந்தான் இப்படியந்த விக்கிரமார்க்கன் நடத்திக் கொண்டிருப்பதால் பரத்திரிராஜன் தம்பியின்மீது மெத்த சந்தோஷமும் நம்பிக்கையுமுண்டாகி சகலகாரியங்களையும் அவனையேபார்க்கும்படி உத்திரவு கொடுத்துவிட்டு தன்மனைவியாகிபிங்கலையின்மீது அதிகமோகாந்தா காரனாகி கணப்பொழுதேனும் அவளைவிட்டுப் பிரியாமலும் அவளைப்பார்க்காத கணப்பொழுதுஒருயுகமாகவிருப்பதினாலும் அந்தசக்கிரவர்த்தியாகிய பரத்ரிராஜன்தக்கயோசனை செய்து சித்திரவேலைக்காரரை வரவழைத்து அவர்களுடன் அந்தப்புரத்தை யடைந்து தன்மனைவியை யழைத்து அவர்கள்முன்னம் நிறுத்தி அந்தசித்திரக்காரரை நோக்கி இம்மாதைப்போல திருத்தமான அழகும் சுந்திரம் அமைத்துப் படமொன்று எழுதித் தரவேணும் அப்படி எழுதிக்கொடுக்க உங்களாலாகுமா சொல்லுங்களென அதற்கவர்கள் ஐம்பத்தாறு தேசங்களுக்கும் அதிபதியாகிய சக்கிரவர்த்தியே தாங்கள் தயவுசெய்துப் படமெழுதும்படி உத்திரவுகொடுத்தால் நாங்களெழுதிக் கொடுக்குறோம் அந்தபடத்தையுந் தங்கள்தேவியையு மிருத்திப்பாரும் எள்ளள வேணுங் குணங்குறித்தவரி யிருந்தால்தாங்களென்ன தண்டனை விதிக்கின்றீரோ அதற்குயாங்கள் உடன்படுகின்றோம் இந்தசொல்லை யாங்கள் தவறுகிறதில்லையெனக் கேட்டந்த சக்கிரவர்த்தி இவர்கள் சித்திரவேலைகளில் மெத்த வல்லவர்களாகத் தோன்றுகின்றது நாம் சொல்லாமுன்னமே இவர்களே தண்டனைக்குட் படுகிறோமென்று சொல்லும் உறுதிமொழிகளால் மெத்த வேலைக்காரர்களென்றேநம்பத்தக்கதாயிருக்கின்றதென்று தனக்குத்தானேயோசித்துஅவர்கள்மீது நம்பிக்கையுண்டாகி சீக்கிரமாகப் படத்தை எழுதித் தரவேணுமென்று கட்டளையிட்டார் அவர்களும் அந்தப்படியே கூடியசீக்கிரத்தில் எழுதிமுடிக்கின்றோமென்றுசொல்லி அதற்காகச்சில வராகன்களை அட்வான்சு பெற்றுக்கொண்டு விடைதரும்படி வேண்டி விடைபெற்று அவர்கள் அந்தப்புரத்தைக் கடந்துவெளிப்பட்டுத் தங்கள் வீட்டை யடைந்து ஏழடி உயரமும் மூன்றரையடி அகலமுமுள்ளப் பலகையைத் தருவித்து நல்லமுகூர்த்தவேளையில் எழுத ஆரம்பம்செய்து அவர்கள் ஒருவாரத்திற்குள் அந்த சக்கிரவர்த்தியின் மனைவியாகி சக்கிரவர்த்தியைப் போல தற்சொரூபமாக எழுதிமுடித்துஅப்படத்தை எடுத்துக்கொண்டு சென்று சக்கிரவர்த்தின் சபையைச்சேர்ந்துப் படத்தைத்திரந்து எதிரில்வைத்தார்கள் அப்போது சக்கிரவர்த்தி அச்சித்திரப படத்தை நன்றாய்கண்ணுற்று ரூபரேகை சுந்திர முதலானதுகள் தன்பனைவியைப்போல அமைந்திருப்பதைப்பற்றி என்றுமில்லாதப் பரமசந்தோஷத்தை யடைந்து அப்படத்தைத் தன் சிங்காதனத்திற் கெதிரிற்கட்டி வைத்துக்கொண்டு எப்போது தனக்கு மனைவியின்

மீது இச்சையுண்டாகின்றதோ அப்போதெல்லாம் அப்பட்டத்தை நன்றாகப்பார்த்து இச்சை தீர்ந்துக் கொண்டிருப்பார்.

இவ்வாறு அந்தசக்கிரவர்த்திக்கி மனைவின்மீதிருக்கும் இச்சையை அப்படத்தைப் பார்த்துபோக்கிக்கொண்டு மிருக்கையில் அச்சக்கிரவர்த்திரூபத்திலுவ்கல்வியிற் சிறந்தவர் காமத்தில் இச்சையுடையவர் ஆகையால் யெல்லோரும் தன்னைத்தோத்திரம் புரியும்படிக்கு நீதிசாஸ்திரமொன்றுசெய்துமுடித்துஎல்லோருக்கும் உபயோகப்படுத்தி உடனே சதகமொன்று நூதனமாகச்செய்து அச்சதத்தையும் யாவருக்கும் வினியோகப்படுத்திமன்மதபாதையையும்போகபோக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டுமிருந்தனர் அன்றியும் இவருக்கு எல்லா லக்ஷணங்களும் அமைந்திருந்தும் இவருடைய மனைவியாகிய பிங்களைச்சித்தினியாதலால் தங்களரண்மனைக்கு திரைக்காரனுடன்கூடிக்குலாவிக் கொண்டும் சக்கிரவர்த்திக்கித் தெரியாம லிருக்கும்படி சக்கிரவர்த்தியை கண்டால் இத்தனைநேரம் என்னைத்தனியே விடுத்து உமது நகரகாரியங்களைப் பார்த்துக்கொண்டு வெகுநிதானமாய் வ்ருகின்றீர் அடியாளுக்கென்னமோ எப்போதுவருவீர் வருவீர்என்ற எண்ணமே அதிகரித்து உமதுபிரிவாற்றுமல் மெத்தவிசனப் பட்டுக்கொண் டிருக்கினறேனென்றும் சொல்லிக்கொண்டேசக்கிரவர்த்தியை முத்தமிட்டுத் தழுவிப் பலவித தளுக்குகள் செய்வதால் அச்சக்கிரவர்த்திக்கு அம்மாதின்மீது நம்பிக்கையும் ஆசையும் அதிகரித்து மெத்த அன்யோன்னியமாகக்கூடிக் கலவிசெய்துக்கொண்டு மிருந்தார்அன்றியும் இந்தசக்கிரவாத்தி வெகுசூசனைகள் தெரிந்தவராகயிருந்தும் தன்மனைவியின் விபசாரத்தைத் தெரிந்துக் கொள்ளாமலே யிருந்தார் மேலும் இவ்வுலகத்தினில் இப்படிப்பட்ட மனையாளுடன் கூடிக்கொண்டிருந்தால் தன் கீர்த்திக்கும் யச்சுக்குங்குறைவாகின்றதே அன்றியும் அவன் செய்யும்படியான ஜாலவித்தைகளுக்கு சக்கிரவர்த்தி மயங்கி அவளுடைய நடவடிக்கை யிப்படிப்பட்டதென்று உணராமலேஇருந்துவிட்டார் இவரிப்படிக்கி மனைவிபிமீது மெத்தமோகாந்தகாரனுகி யிருக்கிறபோது அப்பட்டணத்திற்கு சரபட்டநாதரெனுஞ் சித்தபுருஷரொருவர்வந்துசோலையிலிறங்கி சீஷர்களுடன் நல்விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கையில் அவ்விடத்திற்குயோதோகாரியமாகத் தலையாரி யொருவன்சென்று அப்பெரியோரைக் கண்டுவணங்கி யவர்பேரைத் தெரிந்துக் கொண்டுவந்து ராஜசபையை யடைந்து சக்கிரவர்த்தியை நோக்கி ஓராஜாதிராஜ ராஜபரமேஸ்வரா ராஜகெம்பீர ராஜவுத்தரா நமது பட்டணத்திற் கருகிலிருக்குஞ் சோலையில் சரபட்டரெனுஞ் சித்தபுருஷர் மகாமகிமையுடன் சீஷர்களுடன் வந்திறங்கிச் சீஷர்களுக்கு நல்விஷயங்களைப் போதித்துக்கொண் டிருக்கின்ருரெனக் கேட்டந்த பரத்திரிராசன் மெத்த சந்தோஷித்து அப்பெரியோரைக் கண்டு சேவிக்கவேணுமென்ற கவனமுண்டாகி உடனே தன்னுடைய பரிவாரங்கள்சூழப் பட்டணத்தைவிட்டு வெளிப்பட்டு அச்சோலைக்குட்சென்று அங்கு பதுமாசனமிட்டுட்கார்ந்துக்கொண்டு தன்சீஷர்களுக்குநல்விஷயங்களைப்போதனை செய்துக்கொண்டிருக்குஞ் சரபட்ட நாதரைக் கண்டு வணங்கிஇணங்கிய சக்கிரவாத்திக்கு ஆசிகூறி அருகினில் ஒக்காத்தி வைத்துக்கொண்டு க்ஷேமலாபங்களை விசாரித்து சந்துஷ்டி யடைந்திருக்கையில் சக்கிரவர்த்தி சரபட்டநாதரை நோக்கிப் பணிவாக ஒருவசனஞ் சொல்லத் தொடங்கினர்.

ஓபரமகுரு சுவாமிகளே ஏழையேன் தங்களிடம் உபதேசம் பெற்றுக்கொள்ள வாஞ்சையுடையவனுகவிருக்கின்றேன் இந்தக் கசடன்மீது கிருபாநோக்கம் வைத்து அருள்புரிய வேணுமென்று பலவாறுவேண்டிக்கொண்டார் அதற்கந்த சரபட்டநாதர் சந்துஷ்டியடைந்து ஓசக்கிரவர்த்தியே உனக்குபதேசஞ் செய்யத் தடையேயில்லை ஆயினும் இதோ என்னெதிரிலிருக்குஞ்சீஷர்கள் ஒவ்வொருவரையும் பனிரெண்டு வருடகாலம் பரிசோதனை செய்தபின்பு இவர்களுக்குபதேசஞ் செய்தேன் ஆகையால் நீயுமந்தப்படிபனிரேண்டுவருடகாலம் எனக்குத் தொண்டுகள் புரிந்துக்கொண்டிருப்பையாகில் உன்னைப் பரிசோதனைசெய்து உபதேசம் பெற்றுக் கொள்ளத்தக்க யோக்கியதை யுன்னிட மிருக்குமாகில் தடையின்றி உபதேசிப்பேன் யோக்கியதையில்லாவிடில் உபதேசஞ்செய்யத் தடைபடுமெனக் கேட்டந்த பரத்திரிராஜன் சரப்பட்டநாத ரடிகளில்விழுந்து அவருடைய திருவடிகளை இருகரங்களினுனும் விடாமற் பிடித்துக்கொண்டு ஓ சுவாமி இக்காயமோ நீர்மேற்குமிழிநிலையற்றக்காயம் இப்பவோ எப்பவோ இத்தேகத்தை விட்டும் உயிர் நீங்குவது உண்மை அப்படி உயிர்நீங்கினபின் மறுபடியும் இந்தஜென்மம் வருவது மெத்தக்கடினம்ஆகையால் இத்தேகமிருக்கிற போதே ஆசானருளைப்பெற்று என்று மழியாதபதவியை அடையவேணுமென்றுச் சிலபெரியோர்களால் சொல்லக்கேட்டிருக்கிறேனுதலால் தேவரீர் தயவுசெய்து அடியேனுக்கிப்போதே உபதேசஞ் செய்ய வேணுமென்று வேண்டிக்

கொள்ளகேட்டு அந்தசரபட்டநாதர்இச்சக்கிரவர்த்தி
தீவரதரனாகி யிருக்கின்றானென் றெண்ணி உடனே
அச்சக்கிரவர்த்திக்குத் தாரகநாமத்தை உபதேசித்து
அதை யனுஷ்டிக்கும் மர்மங்களையுஞ் சொல்லி இவன்
மனம் எப்படிப்பட்டதோ யென்றும் பூர்வக்ஞானத்
தினா லறிந்துக்கொண்டு பூரணக்கடாக்ஷஞ் செய்யா
மல் ஓபரத்திரிராஜனே நீர்வந்து மெத்தநேர மாயிற்
றுப் போய்வாருமென்று விடைதர அவ்வரசன்பெற்
றுக்கொண்டு தன்னுடைய சேனைகளுடன் அலந்தி
நகரத்தையடைந்து ஞானம் பக்திவைராகியம் விர்த்
திகளுமில்லாதவனாகி தாரகமந்திரத்தைகளங்கமுடை
யமனத்துடன் தியானஞ்செய்துக் கொண்டு விஷயா
ந்திரத்தில் மனதைப் பொருந்தவைத்து அலைச்சல்
பட்டவனாகி அரசாக்ஷி புரிந்துக்கொண் டிருந்தான்
இவ்வரசனிப்படிக் கிருக்கிறபோது சரபட்டநாதர்
பரிபூரணக்ஞானராகி உலகெங்குந்திரிந்து அங்கங்கு
ள்ள உத்தமசிஷர்களைக் கண்டு அவர்களுக்குத் தன்
உண்மையான ரூபத்தை தெரிசித்துப் புனிதராகும்ப
டிக் காட்டிக்கொண்டே தேவலோகத்தை யடைந்து
இந்திரனைக்கண்டு ஆசிகூறக் கேட்டந்தஇந்திரன்அவ
ருக்குப் பலவித உபசாரங்கள்புரிந்து மாங்கனிகளிர
ண்டை யீந்துச் சிலநீதிவசனங்களை யவரால்சொல்லக்
கேட்டு சந்துஷ்டி யடைந்துக் கொண்டிருந்தான்அப்
போது சரபட்டநாதர் இந்திரனைநோக்கிவிடைபெற்
றுக்கொண்டு பூலோகத்திற்கு வருகிறபோது அவரு
க்கு பரத்திரிராஜன் கவனம் பிறந்துபோய்கண்டுவரு
வோமென்று கருதி அவந்திமா நகரத்தையடைந்து
பரத்திரி ராஜன் கொலுமுகத்தை நாடிப்போகிற
போது வேவுகாரர்களால் சரபட்டநாதர் வரவை யர
சனறிந்து சிங்காதனத்தைவிட்டுத் திடீலென்று குதி
த்து எதிர்கொண்டு ஓடோடியும்வந்து அழைத்து
வந்து தக்க ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்துதூபதீப
முதலான உபசாரங்களால் அவர்மனங் களிக்கச்செ
ய்து வலம்புரிந்து விழுந்துபணிந்து எழுந்துநின்றுக்
கரங்களைக் குவித்துக்கொண்டவண்ணம் பரமாசானை
நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

ஓ பரமக்ஞான சம்பூரணராகிய சத்குருநாதரே
இன்றுதினம் தேவரீருடைய திருவடித் தாமரைகள்
பட்டு இந்நகரம் பாவனமாயிற்றுத் தங்கள் தெரிச
னத்தால் அடியேனும் புனிதனாகினேன் என்னுடைய
பாக்கியமே பாக்கியமே பாக்கிடம் எவர்க்குண்டிந்த
சிலாக்கியமென்றும் புகழ்ந்துப் பின்னுஞ் சொல்லுகி
ன்றான் ஓசுவாமி பரமகுருநாதரே இவ்வுலகினில் வசி
க்கும் பாமரர்கள் சம்சாரமென்னுஞ் சேற்றினில்
விழுந்து மீண்டும் விடுவித்துக்கொள்ள முடியாமல்
உழன்றுக் கொண்டிருப்பவர்களைத் திருத்திப் புண்
ணியவான்களாகச் செய்யும் பொருட்டு அவதரித்தப்
பரமகிருபாமூர்த்தியே எங்குங்கொண்டாடப் பெற்ற
கீர்த்தியே என்றுப் பலவாறு அவருக்கு சந்தோஷ
முண்டாகும்படிக்கி விண்ணப்பஞ்செய்யக் கேட்டந்
தச் சரபட்டநாதர் என்றுமில்லாத சந்தோஷசாகரத்
தினில் மூழ்கினவராகித் தனக்கு தேவேந்திரன் கொ
டுத்த மாங்கனியிலொன்றை யரசனுக்குக் கொடுத்து
ஓஅரசனே இக்கனியெனக்கு அமராவதி பட்டணத்
திற் கிடைத்தது இக்கனியைத்தின்றால் அழியாமலெ
ன்றுமிருக்கும்படியான காயமாகிக்கொண்டிருக்கும்
ஆகையால் இக்கனியை விரைவாகப் புசியுமென அத
ற்கந்த நரபதியும் ஆசானைநோக்கி மெத்தவினயமாக
தீர்க்கமாகவிழுந்து தெண்டனிட்டு எழுந்து ஓசுவாமி
இக்கனியில் பாதியான்புசித்துப் பாதியை மனைவிக்
குக் கொடுக்கிறேன் யென அதற்கந்த குருநா
தன் சற்றுநேரம் மௌனமாக விருந்து ஓஅரசனே
சஞ்சிதசர்ம மின்னமுன்னை விட்டு நீங்காமலிருப்பதி
னாலே உன்னூழ்வினையின்படி பொருத்தமாகு மென்
றுச் சொல்லிச்சென்றார் அம்மொழியையும் அரசன்
செவியிற் கொள்ளாமல் உடனே அக்கனியை எடுத்
துக்கொண்டு மனைவியின் பக்கலடைந்து வெகு சந்
தோஷத்துடன் அவளை சயனத்திற் கழைத்துச்சென்
றுத் தான் உன்னிதஸ்தானத்தி லிருக்க அவளும்அவ்
விடமடைந்து அரசன் சரீரத்தைத் தன்கரங்களால்
தடவிக்கொண்டு அரசனுக்கு சந்தோஷ முண்டாகும்
படிச் செய்தாள் அன்றியும் அம்மங்கைக்குள்ளப்பிரி
யத்தை வெச்சக்காரன் மீதுவைத்து அரசன்மீதுமெ
த்தப்பிரியம் வைத்திருப்பவன்போல வெளிப்படை
யாகக் காட்டினள் பின்னும் அரசனுக்கு வெற்றிலைச்
சுருளைக் கொடுத்துக் கொண்டே மோகப்பார்வைப்
பார்க்கையில் அவ்வரசனுங் காமதுரந்தரனாகி அம்
மங்கையைக் கட்டி யாலிங்கனஞ் செய்து தன்காமத்
தை வெளிப்படவிடுத்து அடிப்பெண்ணே உன்னை
யான் பார்க்காத கடிகை ஒருயுகமாகும்ஆதலால்உன்
னுடைய சுந்திரமும் அழகும் எப்போதும் உன்னை
நீங்காமலிருக்கும்படியும் என்னுடைய அழகுஞ்சுந்தி
ரமும் என்னைவிட்டு நீங்காமலிருக்கும் படியாகவும்
நீயும்நானும் அமரர்களாகும் பொருட்டும் என் சத்
குருநாதராகியசரபட்டநாதர் இம்மாங்கனியைக்கொ
டுத்தார் என்றுஞ் சொல்லித் தன்கரத்தினில் கனியை
க்காட்ட அம்மங்கை யக்கனியைப்பார்த்தும்அதை
கைக்கொள்ளாமல் இக்கனியை நமது சோரநாயக
னுக்களித்தால்அவன் அமரகாயத்தைபெற்று மெத்த
அழகுடன் விளங்குவன் வெகுநன்றாகவு மிருக்கு

மென்றும் தன்மனதினில் கருதினவளாகியிருக்கஅப்
போதரசன் அக்கனியில்பாதியறுத்துப்புசித்துமற்ற
பாதியை தன்மனைவியாகிய பிங்களையைப் புசிக்கும்
படிசொல்லிகொடுத்தார் அதை யம்மங்கையினிற்கொ
ண்டு ஓபிராணநாயகரே இக்கனிமெத்த அரிதாகிய
கனியாகும் இதனை சுத்திபத்தியாய் நல்ல முகூர்த்த
வேளையில் புசிக்க வேணுமென்றுசொல்லி அக்கனி
யை யங்கோர் பெட்டியிற்போட்டு மூடிவைத்து அர
சன்பக்கலில் நன்ருக சயனித்து மனது சந்தோஷிக்
கும்படிக் கிரீடைகளைச்செய்து நான்குஜாமம் வரைக்
கும் சுகத்துடனிருக்க அப்போது அரசனும் சுகித்தி
ருந்து காலையிலெழுந்து அரசன் போயினபின்பு அப்
பிங்களையானவள் சோரநாயகனை அழைத்து எகாந்த
மாக அக்கனியைக் கொடுத்து நீர் இக்கனியைப்புசிக்
குமிடத்தில் உம்முடைய காயமானது அமரகாயமா
குமென்று சொல்ல அவனும் அக்கனியைக்கைக்கொ
ண்டு தன்னுடைய சோரநாயகிக்குக் கொடுக்கும்பக்ஷ
த்தில் அவளுக்கு நம்மீது மெத்தப்பிரிய முண்டாகு
மென்று தன்மனதினில் நினைத்துக்கொண் டிருக்கை
யில் இதற்குள் ராஜபத்தினிக்கு ஒருயோசனையுண்
டாகி சோரநாயகனைப் பார்த்து ஓயெனதுயிர்க் குயி
ராகிய பிராண நாயகரேயான் ஸ்னானஞ்செய்து சுசி
யாக கவிக்கனியைப் புசிக்கலாமென்றிருந்தேன் மரு
படியும்யொதோ ஒருயோசனையுண்டாகி யுமக்குக்
கொடுத்தே னென்றுத் தந்திரமாகச் சொல்லியும்
அவன் கொடாமலிருப்பதாலும் அக்கனியை மிஞ்சி
சியவன் கையில் கொடுத்துவிட்டபடியாலும் அவனக்
கனியைக் கையில்வைத்துக் கொண்டிருப்பதாலும்
அப்பிங்களையானவள் யாதொரு தந்திரமுஞ். செய்வ
தற்கில்லாமையால் விசனமடைந்தவளாகி இவனைக்
கனியைக் கொடுமென்று கேட்டாலோநம்மீதுசினங்
கொண்டுபோய் விடுவான் மறுபடி நம்மிடத்திற்கு
வரமாட்டானே என்றபயத்தினால் வாயைத்திரவாம
லும் மருவார்த்தை சொல்லாமலும் தன்னரண்மனை
யிலேயே அப்பிங்களையானவ ளிருந்தனள் அப்போ
தந்தச் சோரநாயகனும்மாங்கனியுடன் தன்வீட்டை
யடைந்துத் தன்னுடைய சோரநாயகியாகிய புலிந்
தையென்பவளை யழைத்து அடிபெண்ணே இதோபார்
த்தையா மாங்கனி இந்தக்கனியை நாமிருவரும்புசித்
து மரணமின்றி வெகுகாலம் ஜீவத்துட னிருக்கலா
மென்றுசொல்லி அக்கனியை யந்தபுலிந்தையின் கை
யிற்கொடுக்க அவளுமக்கனியைப்பெற்றுக்கொண்டு
தன்கணவனைநோக்கி ஓபிராணநாயகா நாமிருவரும்
கேவலமான தொழில்செய்யும் வேலைக்காரர்களாக
விருக்க நமக்குத்தகுமோ அமரகாய மடைவதற்குத்
தகாது ஆதலால் இக்கனியை அரசனுக்குக் கொடுத்
தால் அவர்புசித்து அமரகாயத்தைப் பெற்று நீடூழி
காலம் ஜீவத்துடனிருக்க அவர்க்குத் தகுமாகையால்
அந்தப்புண்ணிய சிலராகும் தருமப்பிரபு என்றுமழி
யாத அமரகாயத்தைப் பெற்று இவ்வுலகத்தையாண்
டுக்கொண்டிருந்த போதிலும் ஜெனங்களுக்குச் சுக
மும் அதனாலரசனுக்குக் கீர்த்தியுமுண்டாகும் அன்
றியும் நாமிருவரும் அமரர்களாகி யிருந்தபோதிலும்
நமக்குண்டாகிய குதிரைவேலையே செய்யவேணுமே
யல்லாமல் நீஅரசனும் நான் அரசியும் ஆகப்போகிற
தில்லை ஆகையால் நீடூழிகாலம்ஜீவத்துடனிருந்துஅர
சாக்ஷி செய்துக் கொண்டிருக்கும் படி இக்கனியை
அக்கரையுடன் அரசனுக்குக்கொடுக்கவேணுமென்று
சொல்லக்கேட்டு அந்தசோரநாயகனும் கர்மசண்டாள
னுமாகிய குதிரைக்காரன்சந்தோஷமடையாமல்இனி
காரியங் கெட்டுப்போகு மென்று பயமடைந்தவனாகி
பதிலொன்றுஞ் சொல்லாமல் மௌனமாக விருக்கை
யில் அந்தப் புலிந்தையானவள் அப்போது ஊருக்கு
வெளியில் போவதைப்போல அபிநயித்து கூடைக்
குள்ளாக சாணியைப்போட்டு அதில்பிரகாசம் பொ
ருந்திய மாங்கனியைவைத்துஅக்கூடையைத்தலைமீது
வைத்துக்கொண்டு ராஜவீதிவழியாய் போகிறபோது
மேடையின் மீதிருந்து அரசன்கண்டுதூதனொருவனை
யழைத்து அடாதூதனே நீசீக்கிரமாக ஓடி அதோ
கூடையெடுத்துக்கொண்டு போகிறாளே அவளையழை
த்துக் கொண்டுவரக் கடவாயென்று சொல்லி அனுப்
பத் தூதனும் அந்தப்படியே யோடி கூடையைச் சும
ந்துக்கொண்டு போகிறவளைக் கூவியழைத்து எங்கள
ரசனுன்னைக் கூடையுடன் கொண்டுவரச் சொன்னா
ரென்று சொல்லி யழைத்துவந்துகொலுமுகத்தினில்
விட்டு அரசனுக்குத் தெரியப்படுத்தினான் அப்போ
தரசன் நீசமங்கையை அருகினில் வரச்சொல்லிக்
கூடையிலிருக்குங் கனியைப்பார்க்கையில் அக்கனியா
னது சத்குருநாதர் தனக்கு அநுக்கிரகித்தக்கனிஇது
ல்லவாவென்று நிச்சயித்து அடிநீசமாதேஇக்கனிஎவ
டத்தியது உனக்கெப்படி கிடைத்தது சீக்கிரஞ்சொ
ல்லுமென அதற்கந்த புலிந்தை ஓசுவாமி இக்கனியை
கபடமனத்தனாகிய குதிரைக்காரன் எனக்குக்கொடு
த்தானென்றனள் இதைக்கேட்டந்த நரபாலன் குதி
ரைக்காரனைத் தூதர்களால் அழைப்பித்து அடாகுதி
ரைக்காரனே உனக்கு இக்கனி எப்படிவந்தது சத்தி
யமாகச் சொல்லுமென அதற்கந்த குதிரைக்காரன்
மெத்தபயந்து இக்கனி நமதுயிருக்கு எமனாகவந்த
தே என்றெண்ணி யரசனுக்கு பதில்சொல்லவகை
யில்லாமையால் மௌனமாக விருக்கக்கண்டு அரசன்

ஐவான்களைக்கொண்டு அக்குதிரைக்காரனை அடிக்கும்படி கட்டளையிட்டான் ஐவான்களும்குதிரைக்காரனை நோக்கி அடா துஷ்டா இக்கனியுனக் கெப்படி கிடைத்த சீக்கிரஞ் சொல்லுசொல்லென்று நான்குபக்கத்திலு மிருந்துக்கொண்டு அடிக்கிறபோது அக்குதிரைக்காரன் தீனனாகியும் துக்கமடைந்தும் என்னையடிக்கவேண்டாம் ஏழையின்மீது கருணைபுரியுமையா இக்கனிகிடைத்த விதத்தை சீக்கிரஞ் சொல்லுகிறேனென அதற்கந்தநரபாலன் அடாகுதிரைக்காரா பயமில்லை உன்னையான் கொல்லமாட்டேன் என்றுசொல்ல அக்குதிரைக்காரனும் மெத்தவினயத்துடன் அரசனைவணங்கி இணங்கி ஓசுவாமி இக்கனியை தங்கள் பட்டத்தரசியாகிய பிங்களைக்கொடுத்து இதைப்புசித்தவர்கள் நீடூழியாக ஜீவத்துடனிருக்கும் அமரர்களாகுவார்களென்று அதன் பிரபாவத்தையுஞ் சொல்லி அக்கனியை எடுத்துக்காட்டினாள் அப்போதரசன் அடா குதிரைக்காரா இக்கனியானது அமரர்களுக்கு எட்டாதகனியாயிற்றே அப்படிப்பட்ட அரிதாகிய கனியை அம்மாதுனக்கெப்படி கொடுத்தாள் அந்த விவரத்தைச் சீக்கிரஞ் சொல்லுமெனக்கேழ்க்கையில் அக்குதிரைக்காரனும் மெத்தவுந் திகிலடைந்து நாவுலர்ந்து மெய்நடுங்க ஓசுவாமி அம்மாது என்னுடன் ரதிக்கிரீடை நடத்திப்பின்புயான் அம்மங்கைஎன்னையழைத்து இக்கனியை நாமிருவரும் தின்று அமரகாயத்தைப்பெற்று நீடித்தகாலம் ஜீவத்துடனிருக்கலாமென்று எனக்கிந்தகனியைக் கொடுத்தனள் இந்த ரகசியம் வெளியில் தெரியுமாகில் பிராணனுக்கு அழிவுநேரிடுமென்றும் இப்படிப்பட்டபயத்தைத்தருவதயாகி போகத்தை யனுபவிப்பதைக்காட்டிலும் பயமில்லாமல் நமதுமனையாளுக்குக் கொடுத்து நாமும்புசித்து அமரகாயத்தைப் பெரலாமென்றெண்ணி இவளிடத்திலந்த அரிதாகிய கனியைக்கொடுத்து இதின் மர்மத்தையுஞ் சொல்லிப் புசியுமென்றேன் அதறகிவள் இவ்வுலகினில் கேவலமாகிய குதிரைச்சேவகஞ் செய்யும் நீசர்களாகிய நமக்கு வயது வளரச்செய்வதேதுக்கு அரசனுக்குக் கொடுத்தபோதிலும் அவர் புசித்து அமரகாயத்தைப்பெற்று ஞாலத்திற்கு க்ஷேமமுண்டாகும்படிச்செய்துக்கொண்டிருப்பாரென்று சொல்லிக்கொண்டே உமதிடத்திற்குவந்தனள் இது நடந்த உண்மையென்று சொல்லிப் பணிந்தான்.

இதைக்கேட்டந்த நரபாலன் மெத்தவும் அனுதாபமடைந்து ஜெகதீசனைக் கனவிலும் நினைக்காமல் யான் சிதரிப்போயின சம்சாரத்திற்குள்விழுந்துஇளைத்துவீணனாகினேனே அன்றியும்எனக்கு ஸ்ரீஹரியின் திருவடிகளே திக்காகுமென்றும் மிதமத்தவைராக்கியசீலனாகி யப்போது நிற்பந்தத்துக்குக் காரணமாகும் நிந்தை சுகத்தினில் மனதை வெகுகாலமாகச்செலுத்திக் கொண்டிருந்தேனே என்றும்மைதுன சுகமானது மெத்த அற்பமாகுமென்று அப்போதே நீக்கிக்கொண்டவராகிவேதனையடைந்து இந்ததேகத்தை யான் ஸ்ரீஹரிக்கித் தொண்டுசெய்யும்படிச் செய்யாமல் அற்பமாகிய பெண்ணாசைக்குஇத்தேகத்தைஉபயோகப்படுத்திக் காலத்தை வீணாகக் கடத்தினேன் என்றுசொல்லிக் கண்ணீருதிர்த்துக்கொண் டப்போது வைராக்கியங்கொண்டு வேறொரு சதகமொன்று செய்து உடனெமனைவியை யழைத்து சோரநாயகனுக்கு அவளைக்கொடுத்துச் சிறிதேனும்பயமடையாமல் நீங்களிருவரும் உங்கள்மனதினில் கோரியவண்ணங் காரியங்களை சாபலியமடையும்படிச் செய்துக்கொண்டு இனிஎவ்வித கலகமுமடையாமல் சுகித்திருங்களென்று சொல்லியனுப்பி அக்கனியைப் புசித்து ஐம்பத்தாறுதேசத்தரசர்களுந் தன்னடிபணிந்துக்காணிக்கப்பங்களிட்டு வணங்கும் பெருத்த அரசாக்ஷியைத் தன்தம்பியாகிய விக்கிரமார்க்கன் வசப்படுத்தித் தான்காவிகாம்பர தண்டு கமண்டலதாரராகி நாட்டைவிட்டுக் காட்டைநோக்கி நடந்தார் ; இச்செய்தியை சரபட்டநாதரறிந்து விரைவாகச்சென்று பரத்ரிராஜனைக்கண்டுத் தன்னுடைய பூரணகிருபையாகிய மழைமைப் பொழிந்து பரத்ரிராஜன் ஜென்மாந்திரங்களிற்செய்திருந்த அக்கினியாகிய கர்மங்களைத் தலையெடுக்க வொட்டாமலும் உருவமாய்ந்துப் போகும்படிச்செய்து பூரணக்ஞான பக்திவைராக்கிய சம்பத்தியும் என்றும் அழியாத ஜீவன்முத்தி பதவியையும் அடையும்படிக் கருணைபுரிந்து சித்தபுருஷர்களில்நீயுமொருவனாகி இவ்வுலகினில் சஞ்சரித்துக் கொண்டு சுகஜீவியாய் இருக்கக்கடவாயென்று ஆசிகூறி மனதுக்கிசைந்தபடிக்கிச் சென்றார் பரத்ரிராஜனோ என்றுமில்லாத சந்துஷ்டியுடனும் பூரணக்ஞான சம்பன்னராகி சித்தபுருடர்களுடன் சங்கமம் செய்துக்கொண்டு நினைத்தவிடத்திற் கெல்லாஞ்சென்று கோரக்கநாதரைப்போல ஜீவன்முக்தராகி நாளைக்கும்இவ்வுலகத்தினில் மனிதர்கண்களுக்குத் தோன்றாமல் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றாரென்று பக்தமாலிகை முறையிடுகின்றன.

வாழி விருத்தம்.

தரைபாலதாகிதருமந் தழைத்திடச்செய்தோன்வாழி
பரமாதர்சங்கமென்றும் பழகாததோன்றல்வாழி
நிரதிசயஜீவன்முக்திபதம் நீடிக்கப்பெற்றோன்வாழி
பரத்ரிராஜன்பங்கய பாதங்களென்றும்வாழி.

பரத்ரிராஜன்சரித்திரம்முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்ஃ

ஸ்ரீ மத்

நாகைநாதர் சரித்திரம்.

துதிவிருத்தம்.

ஆகமவிதிகளாய்ந்து ஹரிநாமந்துதித்தென்னும்
தோகையைமருவிடாத தூயநற்குணங்கள்தோன்ற
ஏகமாய்இருதயந்தன்னில் யெந்தையைக்கண்டுபோற்றும்
நாகைநாதர்செம்பொற்பாத நளினந்தலைக்கணிந்துய்குவோமே.

கதையின் வரலாறு

ஸ்ரீமகாலக்ஷுமி கடாக்ஷம் பொருந்தியமானூரெனுங் கிராமத்தினில்சிவாம்சத்தைப்பெற்றவரும்சித்தபுருடர்களையொற்றவரும் க்ஞானவழியிலேயே மனதைச் செலுத்திக்கொண்டிருக்கும்நற்றவரும் ஸ்ரீஹரியே தனக்குத்தாய்தந்தை பெண்டீர்புதல்வர் பத்துக்கள் சினேகிதர்கள் என்றுக்கோரிக்கை யுற்றவர் சகலத்திலும் பற்றற்றவர் நாகைநாதரெனும் பேர்பெற்றவர் முத்தர்களிற் சிறந்ததவத்தர்பாகவதர்களில்தேர்ந்தபக்தர் இப்படிப்பட்ட மகுத்துவமுள்ள புண்ணியசீலர் மேலுமிவர் உலகமாய்கையினல் தவத்துக்குவிக்கினம் நேருமென்றுன்னிப்பார்க்க வெகுஅசுசியாகி ஸ்னை முதலான சுசியைநீக்கி மலினவஸ்திரத்தைத்தரித்துத் தேகமெங்கும் சாம்பலைப்பூசிக்கொண்டிருப்பதால் அவ்வூரினில் வசிக்கும் ஜெனங்களெல்லாம் அவரைத்திருட்டுவேஷக்காரனென்றும் பைசாசமென்றும் சொல்லும்படியாகவும் பூதகணங்கள்எப்போதும் அவரைச்சூழ்ந்துக் கொண்டே யிருக்கவும் சர்ப்பங்கள் வெகுவாகத் தன்னைச் சூழ்ந்து கொண்டு திரிவதால் ஜெனங்களெல்லாம் அவரிடம் கிட்டிப் போகபயப்படுவார்கள் அன்றியும் அவர் தேகமெங்கும் தேள்கள் உலாவிக்கொண்டுதிரியும் இப்படிக்கிவர் தன்னையொருவரும் சமீபத்தினில் வந்துபார்க்கவொண்ணாத உபாயத்துடன் விளங்குகிறபோதுசிலர் மோஹினிமந்திர மிவருக்கு“அனுகூலமாகி யிருக்கின்றபடியால் சந்தேகமில்லாமல் யிவரைக்கண்டால் சம்சாரத்தைவிட்டுப் போகும்படிநேரிடும் என்றூர்கள்,

சிலர் இவனை மூதேவி தொடர்ந்திருப்பதால் தரித்திரம் பிடிங்கித் தின்னுகின்றதென்பார்கள் சிலர் இம்மகானுபாவன் சாக்ஷாத் பரமசிவனைப்போல விளங்குகிறானென்பார் இந்தப்படி ஞாயமில்லாமல் ஜெனங்கள் தங்கடங்கள் மனதிற்குத் தோன்றியபடி பொய்யும் புளுவும் பேசிக்கொண்டிருப்பதால் அந்தஉத்தமபுருடராகிய நாகநாதர் அவர்கள் சொல்லைச் சிறிதேனும் மனதிற்கொள்ளாமல் தியாகசீலராகி வைராக்கியமேலிட்டு பகவந்நாமத்தை சாதனம் பண்ணிக்கொண்டு மழைக்காலத்திலும் பனிகாலத்திலும் வேட்டியைமேற்போர்த்துக் கொள்ளாமலும் பர்ன்னசாலைக்குட் புகாமலும் திரேகத்தின்மீது அபிமானமில்லாமல் வெளிபூமியில் எழுந்தருளியிருப்பார் வசந்தகாலத்தில் காற்றின்றி சூரியனது வெப்பமிகுதியால் காற்றையும் நிழலையுந்தேடாமல் அந்தப்பரம புண்ணியன் தேகத்தின்மீது அதிவிரக்தராகி யிருக்கையில் ஏகலிங்கனெனுமொரு மனிதன் பக்திவைராக்கியத்துடன் ஒருநாள் காட்டிற்குள் போயிக்கொண்டேயிருக்கையில் அகஸ்மாத்தாக நாகநாதரைக் கண்டு மெத்தப் பிரியத்துடன் அவரையடுத்துத் திருவடிகளில் விழுந்துபணிந்து எழுந்துநின்று ஓசுவாமி இவ்வுலகத்திற்குள் யான் அனாதையும் தீனனும் நிற்பாக்கியதிசையை யுடையவர்கள் ஒருவருமேயில்லை இப்படிப்பட்ட கேவலதிசையை யடைந்திருக்கும் நாயினுங்கடையேனைத் திரித்தித் தேவரீருடைய திருவடித்தாமரைகட்குத் தொண்டனாகவும் பக்திக்ஞான சம்பத்தை யடையும்படிக்கித் தங்கள் திருக்கண்ணோக்கம்வைத்து ஆட்கொள்ளவேணும்பரமகிருபாநிதியே என்றுசொல்லி உடல்பொருளாவியை அவர்திருவடிகளுக் கர்ப்பணஞ்செய்து சரணமடைந்தனன்.

இந்தப்படி யந்தக் களிங்கனென்பவன் சரணாகதியடையக் கண்டந்த நாகநாதர் அவனைத் தன்னிகரங்களினாலும் யெடுத்து கிருபானோக்கம் புரிந்து அநுக்கிரகஞ் செய்து உபாசனைசெய்வதற்கு மந்திரமொன்று உபதேசஞ் செய்தமாத்திரத்தில் அந்தக்கலிங்கன் என்னுமில்லாதப் பரமானந்தத்துடன் ஸ்ரீஹரிபஜனையைச் செய்துக்கொண்டு அளவற்ற சம்பத்தை யடைந்தவனைப்போல தேகம்பூரித்து ஆர்த்திமிகுந்து அனன்னியப் பிரியத்துடன் அந்தநாகநாதர் திருவடிகளையொத்திக்கொண்டும் பெண்பாலும் உருசியுள்ளப் பிரசாதங்களைச்செய்து அவர்மனைவியங்குகொண்டுவர அப்பிரசாதங்களைத் தம்பதிகளிருவரும் மெத்தப்பிரியத்துடன் ஆசாரியருக்கிட்டுப் புசிக்கும்படிவேண்டிப் பல உபசாரங்கள் சொல்லிப் புசிக்கச்செய்து எப்போது வேசாரலில்லாமல் அத்தம்பதிகளிருவரும் சத்குருநாதரே ஸ்ரீஹரியென பாவித்து அவருக்காருந் தொண்டுகளைப்புரிந்தும் ஜபம் தபம் யாவும் சத்குருநாதர் சேவைக்கு நிகராதெனக்கருதி அவரைசேவிப்பதே சாதனமாகக் கொண்டு ஜன்மசாபல்ய மடைவதற்கு இதுமெத்த எளிதான தாகுமென்றும் தினந்தோறும் சத்குருநாதரைச் சேவைசெய்தும் பிரபஞ்ச காரியங்களை நடத்தி வந்தபோதிலும் குருநாதர் கைங்கரியத்தில் அபசாரம் நேரிடாவண்ணம் வெகுஜாக்கிரதையாக நடத்திவந்தார் இந்தப்படிக்கந்த ஏகலிங்க குருநாதர் தொண்டில் மெத்தப்பிரியமடைந்து வெகுகாலம் நடத்திக் கொண்டிருக்கிறபோது அவ்வூரினில் மெத்த சம்பத்தினையுடைய யச்சிலவந்தனெனும் வனிகனுக்கொரு புதல்வியுண்டு அப்புதல்வி பதினாறுவயதினில் மிருத்யுவின் வசமாகியிருந்தனள் காரணமென்னவெனில் வியாதியினால் பீடிக்கப்பட்டும் அற்பஆயுளினாலும் அகாலமரண மடையக்கண்டு தாய்தந்தையரும் பந்துக்கள் முதலானோரும் மாயாசம்பந்தத்திற் குட்பட்டு வெகுவாக துக்கசாகரத்தினில் மூழ்கினவர்க ளாகிப் பலவாறு பிரலாபித்து இனிநம்மால் செய்யும்வகையொன்று மில்லையென்று தீர்மானித்துப் பிரேதச்சடங்குகளை முடித்து மயானபூமிக்குக் கொண்டுபோகையில் ஏகலிங்கர் ஆசானைச் சேவித்துத் திரும்பித்தன் வீட்டைநாடி வருகிறமார்க்கத்தில் பிணத்தைச் சுமந்துக் கொண்டுபோவதைக்கண்டு ஆள்காட்டி விரலைப் பூமியில் தேய்த்து அம்மண்ணை அப்பிணத்தின் லலாடத்தினிலிட்டு ஓஅம்மா பாக்கியவதி எமது சத்குருநாதராகிய நாகநாத சுவாமிகள் உன்னைநடந்து தன்னிடத்திற்கு வரும்படி என்னிடஞ் சொல்லியனுப்பினாரென்றவுடனே அக்கன்னிகைக்கு உயிருண்டாகி அந்த ஏகலிங்கருடன் நடந்து நாகநாதரை சேவிக்கும் பொருட்டுச் சென்றனள் அதைக்கண்டு உலகினர் யாவரும் ஆஹா இப்படியுமெங்காகிலு முண்டோவென்று ஆச்சரியப்பட்டு மூர்ச்சையடைந்தனர்கள் சிலர் இதைப்பார்த்து ஒருவருக்கொருவர் இந்த ஏகலிங்கனும் நாகநாதரும் மேத்தக்கபடமனதை யுடையவர்களாதலால் இவன் பின்னிந்த மங்கைப்போவதும் அங்குசென்று நாகநாதரைக் காணச்செல்லும் மேலானகாரியமல்ல வென்றும் பற்பலவிதங்களாகப் பேசிக்கொண்டே ஜெனங்கள் யாவரும் தங்கடங்களகம்புக்கிருந்தார்கள் இங்கே ஏகலிங்கரும் வணிகன் புதல்வியும் பயமின்றி நடந்து சென்று நாகநாதரைக்கண்டு இருவரும் பணிந்து பலவாறு கொண்டாட அப்போது நாகநாதர் நடந்தரகசியத்தை யுணர்ந்து சந்தோஷசித்தராகியிருந்தனர் அக்கன்னிகையோ அன்று

முதற்கொண்டு நாகநாதரை ஆசானாகக் கருதிதிக
ம்பரியாகியுஞ் சேவை செய்துக்கொண்டிருக்கையில்
அந்த சத்குருநாதர் கிருபாநோக்கத்தினால் நாளுக்கு
நாள் ஆத்துமஞானமதிகரித்து தான்பெண்ணென்று
ம் ஆசான்புருடனென்றும் பேதபுத்தி யெண்ணாமல்
அபேதமடைந்தவளாகி பரப்பிரமமானவர் சகலத்தி
லும் உள்ளும் புறம்புமாய் வாசஞ்செய்துக்கொண்
டிருப்பாரெனக்கருதி தன்மனதினில் விஷயபோகங்
களைக் கருதாமல் மூவாசையும் மற்றவளாகி இருதய
கமலத்தினில் பரப்பிரம சொரூபத்தைக்கண்டானந்
தமடைந்து அப்பரப் பிரம்மத்தினிடத்தினில் ஆசை
யதிகரித்து பேதபுத்தியை யொழித்தவளாகி சதாகா
லமும் சத்குருநாதர் சேவையிலே காலத்தைக்கழித்
துதொண்டுகள் புரிந்துக்கொண்டிருந்தனள்.

இந்தப்படி யிக்கன்னிகை ஆசானை சேவிப்பதி
லும் தொண்டுகள் புரிவதிலும் மெத்த ஆவலுள்ளவ
ளாகியிருக்க நாகநாதர் கீர்த்தியானது தேசதேசங்க
ளிற் சென்று பரவிக் கொண்டிருப்பதைவெகுஜனப்
பிரசித்தியால் நவநாத சித்தர்கள் கேள்விப்பட்டு நா
முஞ் சென்று அக்கன்னிகையுடன் அவரை சேவித்
து வரலாமென் றெண்ணி அவர்களிருவரும் சிங்கத்
தின் மீதொருவரும் புலியின் மீதொருவருமாக யேறி
சவாரிசெய்துக் கொண்டு வருவதை நாகநாதருணர்ந்
து தன்சிஷனாகிய ஏகலிங்கனை யழைத்து அப்பா ஏக
லிங்கா சித்தபுருஷர்கள் வருகிறார்கள் நீ அவர்களுக்
கெதிர் சென்று அழைத்து வரக்கடவா என்று நேமி
க்க அந்த ஏகலிங்கனும் அந்தப்படியே அவர்களுக்
கெதிர் சென்று பார்த்துக் கொண்டிருக்கிறபோது அ
வர்கள் சிங்கத்தின் மீதும் புலியின்மீது வருவதைக்க
ண்டு அந்த ஏகலிங்கன் அங்கு சுவர்வைத்துக்கொண்
டிருந்து அவர்களைக் கண்டமாத்திரத்தில் ஏகலிங்கர்
வேகமாகச்செல்ல அச்சுவருங்கூடவே வந்தன அந்த
விந்தையை அவர்கள் கண்டு ஆச்சரியமடைந்து இந்
தப்படி யெங்களுக்கு ஜீவனில்லாத சுவத்தை நடப்பி
க்கும்படியான சாமர்த்தியம் உண்டாக மாட்டாதெ
ன்று சொல்லி உடனே அவர்கள் சிங்கத்தையும் புலி
யையும் விட்டிரங்கி பூமியின்மீது பாதசாரியாக நடந்
துவர அவர்களைக்கண்டு ஏகலிங்கன் பணிந்து விழு
ந்து ஓ சுவாமிகளே வரவேணும் வரவேணும்யென்று
நாகைநாதர் ஆசிரமத்தை நோக்கி யழைத்துக்கொ
ண்டு வருகிறபோது ஏகலிங்கரை நோக்கி ஓ மகா
னுபாவரே இவ்வுலகத்தினில் நாங்களென்றுங் கண்
டறியாத அற்புதத்தை எங்களுக்குக் காட்டினீர்
இதைப் போலவே மங்களகரமாகியநாகநாதருடைய
தெரிசனமுமெங்களுக்குக் கிடைக்கும்படி யனுக்கிர
கஞ்செய்யுமென்று வேண்டிக் கொள்ள அந்தஏகலிங்
கனும் உங்களிஷ்டப்படியே ஆசானுடைய சேவைகி
டக்கும்படியான தந்திரஞ்செய்கிறேன் வாருங்களெ
ன் றழைத்துக் கொண்டுபோய் ஆசான் முன்னே விடு
த்தார் அவர்களைக் கண்டமாத்திரத்தில் நாகநாதர் தி
ட்டேன் றெழுந்து அவர்களுக்கு தெண்டனிட்டு உட
னேயவர்களுக்குத்தக்கபடி யுபசரித்து ஒக்காத்திவை
த்தனர் அவர்களும் அந்தநாகநாதரை நோக்கிஓபுண்
ணிய சீலரே திகம்பரியாகக் கன்னிகையாவருக்கும்
சேவை தருகின்றா ளென்றுப்பலர் சொல்லக்கேட்டு
அதிசயித்து உங்களிருவரையும் சேவிக்கும் பொருட்
டுப் பிரியமுடன் யாங்களிங்கு வந்தோமெனக் கேட்
டு அந்தநாகநாதர் அவர்களைநோக்கி ஓசித்தியிலும்ப
க்தியிலும் ஜீவன் முக்தியிலும் ரக்தியிலுஞ் சிறந்தந
வசித்தர்களே ஒருகன்னிகையுட னிருப்பதற்குளனக்
குத்தகுமோ நீங்கள் சொல்லியது மெத்த நன்றாயிரு
க்கின்றது என்றுசொல்லி அந்தச் சமயத்தினில் அ
க்கன்னிகையும் நாகநாதர் முன்னமிருக்கக்கண்டு அ
ந்தநாகநாதர் அக்கன்னிகையின் தேகத்தைத்தன் இ
டதுகரத்தினால் தடவிக்கொடுத்த மாத்திரத்தில் அக்
கன்னிகைக்குப் பெண்ரூபமாறிப் புருடரூபமுண்டா
யின அப்புருடனுக்குவர தபசுவனென்று நூதனப்பெ
யரிட்டனர் அதையந்த நவநாதர்கள் கண்டு இதென்
ன விந்தையிலும் விந்தையா யிருக்கின்ற தென்றும்
இவர் நூதனமாகிய அம்சத்தைப் பெற்றவரென்றுங்
கருதி எந்தவிவரமும் சொல்லாமல் அவர்கள் வந்தவ
ழியை நோக்கிச் சென்றனர்கள்.

இந்தப்படி சொல்லிக்கொண்டே யந்த நவசித்
தர்கள் போயினபின்பு அவ்வூரினில் வசிக்கும் ஏகரச
னென்னும் சராபுவியாபாரியாகிய யொருவன் நாகநா
தருடைய மகுத்துவங்களைச் சிலரால் கேள்விப்பட்டு
அப்படிப்பட்ட பரமசாதுவைகண்டு சேவிக்கவேணு
மென்றெண்ணிவிரைந்துவந்து நாகநாதரைக்கண்டு அ
வர்திருவடிகளில்விழுந்து சரணாகதியடைந்துஎழுந்து
இருகரங்களையுஞ்சென்னியின்மீ துகுவித்துக்கொண்டு
ஓசுவாமிபதிதனாகும்யான் தேவரீருடைய திருவடிகளி
ல்விழுந்துசரணாகதியடைந்தேன் முன்னம்உடன்பிறந்
தராவணனையும் மத்தபந்து வர்க்கங்களையும்அகண்ட
சாம்பிராசியத்தையும் அற்பமென்றும்அழிந்துப்போ
கும் மென்றும் துஷ்டனுடன் சங்கமனா செய்துக்
கொண்டிருந்தால் பிராணத்துக்கே சங்கடம் வந்த
ணுகு மென்றெண்ணி யாவற்றிலும் வெறுப்படைந்
து பகவான் மீதுவிருப்பங்கொண்டு சரணாகதியடை
ந்த விபீஷணரை ஆதரித்து அபயமீந்து லங்காபட்ட
ணத்திற்கு அரசனாகச் செய்வித்த ஸ்ரீராமரைப்போல

தேவரீர் அடியேனுக்கு பவக்கடலைக் கடக்கும்படியான உபாயத்தைத் தெரியப்படுத்தி அபயங்கொடுத்துக்காப்பாத்தி ரட்சிக்கவேணுமென்று வேண்டிக்கொள்ளக் கேட்டந்த நாகநாதர் சந்தோஷசித்தராகி உடனே தன்கரத்தையந்த ஏகரன் சிரத்தின் மீது வைத்துத் தாரகமந்திரத்தையோதி மங்களகாரியமாக அனுக்கிரகஞ் செய்து அடியேனை யாட்கொள்ளுமெனக் கேட்டந்த நாகநாதர் ஏகரஸனது நிர்மல மனதை யறிந்து அவன் சிரத்தின் மீது கரத்தை வைத்து அஷ்டாக்ஷாமந்திரத்தை யுபதேசித்து அனுட்டிக்கும் விதியைப்போதித்துத் தன் திருக்கண்ணோக்கம் வைத்து அநுக்கிரகஞ் செய்தார் அப்போது அந்த ஏகரஸனும் சத்குருநாதருக்குத் தெண்டனிட்டுப் பரமானந்தமடைந்து எந்தவிகல்பமுமில்லாமல் பரமாசாரியாரரும் பவக்கடலைக் கடக்கச் செய்யும்படியான நாகநாதர்கருணைக்கிப் பார்த்திரனாகி யிருந்தனன்.

இவ்வண்ணமந்த ஏகரஸனும் சத்குருநாதர் கிருபையைப்பெற்று விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குச்சென்றுக் காரியங்களைப் பார்த்துக்கொண்டு மறுபடியும் வந்து சற்குருநாதரை சேவித்து விடைபெற்றும் போயிக்கொண்டிருந்து ஒருநாள்வழக்கப்படி வந்து குருநாதரைசேவித்துவிடைபெற்றுக்கொண்டு போகிறபோது ஆசானைநோக்கி ஓசுவாமி தயவுசெய்துதேவரீர் அடியேன் வீட்டிற்கு வரவேணுமென்று வேண்ட அதற்கந்தகுருநாதர் ஏகரஸனைநோக்கி அப்பா சீஷனே என்னுடைய அடையாளம் உனக்குத் தடையின்றி யுண்டாகுமோ இல்லையோவென ஏகரஸன் சிறியபெண்தாயைக் காணமாட்டாளோ அன்றியும் அன்னைகுருபியாகி இவ்வுலகின் கண்ணிருந்தாலும் சிசுவானதுதாயைவிடுமோ விடாததுபோல தேவரீரை அடியேன்விடுவேனுவிடேன் ஆகையால் அடியேனுடைய கிரகத்தினில் சுவாமிகளுடைய தெரிசனங்கொடுத்து ஏழையேன் மனங்குளிர கடாக்ஷம் செய்யும் பரமகிருபாநிதியென்றிந்தப்படிசொல்லிதெண்டனிட்டு மோகனகாமெனுங் கிராமத்தைநோக்கி நடந்துத் தன்வீட்டையடைந்து வைராக்கியத்துடன் சத்குருநாதர் திருவடிகளில் தைலதாராவிச் சின்னமாக பக்திசெய்துக்கொண்டிருந்து வெகுநாள்கடந்துபோயினபின்பு ஒருநாள் சத்குருநாதன் அங்கங்கு நின்று சஞ்சரித்துக்கொண்டுகல்லடிசித்தனைப்போலவேடம் புனைந்து விகாரரூபத்துடன் மதுபானஞ்செய்துகரங்களில் மாம்சங்களை யெடுத்துத் தின்றுக்கொண்டே மோகனக் கிராமத்திற்குவர அவரைக்கண்டவ்வூரார் யாவரும் பிசாசையொற்ற வடிவுடையவனும் பார்க்கப்பயங்கரமாயும் அசுசியினால் அருவருப்புண்டாகியவனைப்பார்க்க சகிக்கவில்லையென்று சொல்லிக்கொண்டே சென்றனர் அப்போதங்கு அகஸ்மாத்தாக ஏகரஸன்வந்து சத்குருநாதரைக்கண்டு அவர்கொண்ட கோலத்திற்கும் தின்றுக்கொண்டிருக்கு மாங்கிசசதைகளையும் பூரணமாக மதுபானஞ் செய்திருக்கும் இருப்பையும் பார்த்துச் சிறிதேனும் அசங்கிதப்படாமல் அவர் திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டு வினயமாகப் பேசிக்கொண்டே தன் வீட்டிற்கழைத்துச் சென்றார் இதைக்கண்ட அன்னியர்கள் ஏகரஸனை வெகுவாக தூஷணவார்த்தைகள் பேசி ஜாதிபிரஷ்டனாகினானென்று நிந்தனை செய்யவும் அந்த ஏகரஸன் சத்குருநாதருக்குப் பூசைகள் முதலான உபசாரங்கள் புரிந்து மெத்தப்பிரியத்துடன் அவர் திருவடிகளை யலம்பி அத்தீர்த்தத்தை சிரசின் மீது புரோக்ஷித்துக் கொண்டு நயமாகப் பேசிக்கொண்டே அவர் திருவடிசேவை செய்தும் அத்திருவடிகளை கண்களில் ஒத்திக்கொண்டும் பலவிதமாக சத்குரு நாதருக்குப்பிரியம் உண்டாகும்படி உபசரித்துக் கொண்டிருக்கையில் பிராமணர்கள் அனேகர் ஏகரஸன்வீட்டிற்குட்புகுந்து தங்கள் பந்துக்களையெல்லாம் அழைப்பித்துக் கூட்டங்கூடிப்பேசி அந்தஏகரஸனைஜாதியில்நின்றுதள்ளிவைத்து அந்தம் ஏகரஸ கிஞ்சித்தேனும் ஜாதிக்கட்டுக்கு உட்படாமலிருந்தமையால் பிராமணர்கள்யாவரும் சேர்ந்து ஏகரஸனை வீட்டிற்குள் போகவொட்டாமல் நிர்ப்பந்தஞ் செய்ய அதற்கும் அந்தஏகரஸன் எள்ளளவேனும் பயப்படாமல் ஆசானுக்குபசரிக்கும் கைங்கரியத்திலேயே முயற்சிகொண்டிருந்தமையால் அப்பிராமணபந்துக்கள் இனியிவனைப் பிராயசித்தஞ் செய்விக்காமல் நாம்ஜாதியிற் சேர்த்துக்கோள்ளக் கூடாதென்றும் சந்தேகமடைந்து எவர்களும் அந்த ஏகரஸனுடைய செய்திகளைக் கருதாமலும் வெகுநிர்ப்பந்தங்களைச் செய்தபோதிலும் சிறிதேனும் பயமுறாமல்அதிகதைரியத்துடன் சத்குருநாதன் சேவையிலேயே இஷ்டமுடையவராகி அனேகவிதங்களால் குருவைப் பூசித்துக்கொண்டும் தன்வீட்டிலேதானே வைத்துக்கொண்டிருக்கையில் அந்தஏகரஸன் தந்தைக்குத்திதி நாள் சமீபிக்கத்தெரிந்து குருநாதரை நோக்கி ஓசுவாமி நாளையதினம் அடியேனுடைய தந்தைக்குத் திதிவருகிறபடியால்பிராமணீகத்துக்கு ஒருவரேனும் வரமாட்டார்களே இதற்குயானென்னசெய்வேன் எப்படி யிக்காரியம் நடக்கப் போகிறதென்று விசனப்படுவதைக் கேட்டந்த நாகநாதர் ஏகரஸனை நோக்கி அப்பா சீஷனே நீஇதற்காகவா விசனப்படுகிறாய்சீ

கிரம் விசனத்தைவிட்டு பிராமணர்களுக்கு வேண்டிய பிரசாதவகையராக்களைத் தயார்செய்து எனக்குத்தெரியப்படுத்து வையேயாகில் உன்னுடைய பிதுர்தேவதைகளையே வரவழைக்கின்றேன் இவிடத்திறகு பயமின்றி அறுசுவையுடன் கூடிய பிரசாதந் தயார்செய்யக் கடவாயென்று சொல்லக் கேட்டந்த ஏகரஸனும் சந்தோஷமனத்தனாகி உடனே பீமபாகமும்நளபாகமும் இதற்கு நிகரல்லவென்று சொல்லும்படியான சகல பதார்த்தங்களும் பலகார வகைகளுடன் பிரசாதமுஞ் செய்துமுடித்தனர் அப்போதந்த கிராமத்தினில் வசிக்கும் பிராமணர்களில் ஒருவரேனும் பிராமணிகத்திற்கு வராமல் கட்டுப்பாடு செய்துக்கொண்டிருந்துவிட்டனர் அப்போது ஏகரஸன் ஆசானிடம் வந்து பணிந்து ஓசுவாமி தாங்கள் நேமித்தபடி பிரசாதந் தயாராயிற்றெனக் கேட்டந்த நாகநாதர் அப்பாசிஷனே இப்போது மத்தியானவேளை யாயிற்று ஜாலஞ்செய்யாமல் சீக்கிரம் இலைபோட்டுக் கரியமுதுகளைப் பரிமாறி தாகதீர்த்தம்வைத்துப் பூஜாதிரவியங்களை எடுத்துவாருமென்று சொல்லியனுப்பி உடனே அந்தநாகநாதர்பிதுர்தேவதைகளை வரும்படி தன்மனதில்நினைத்தார்அதையறிந்துபிதுர்தேவதைகளனைவரும்வெகுசீக்கிரமாகவந்துநாகநாதரைக்கண்டு பணிந்துஅவரனுமதியை பெற்றுக்கொண்டுகால்கரங்களைசுத்திசெய்துக் கொண்டிருக்கஇதற்குள்ஏகரஸன் இலைகள் பரிமாறி கரியமுதுகளைவட்டித்துபூசாதிரவியங்களை யோர்தட்டினிலெடுத்துக் கொண்டுவந்துசேர்ந்தார் அப்போது பிதுர்தேவதைகள் இலைகள்முன்னம் உட்கார்ந்தனர்கள்.

இவ்வாறு அந்தபிதுர்தேவதைகள்யாவரும்உட்கார்ந்திருக்கிறபோது ஏகரஸன் தான்கொண்டுவந்த பூசாத்திரவியங்களை எடுத்துவந்து மூதாதைகள் திருவடிகளைவிளக்கி அட்சதைப் புஷ்பங்களைக் கொண்டு திருவடிகளுக் கர்ச்சித்துத் தூபதீப நைவேத்தியங்களாகும் சோடசஉபசாரங்களைச் செய்துப் பலகார வகைகளுடன் பிரசாதம் பரிமாறி ஆலவட்டக்கையிங் கரியம்செய்தும் வெகுஜாக்கிரதையாக யாரார் எதை கேட்கின்றார்களோ அதை யவரவர்களுக்கு இல்லையென்னாமல் வெகுபிரியத்துடன் பரிமாரிட அவர்களும்புசித்து திருப்தி யடைந்தவர்களாகிக் கைகால்கள் அலம்பிக்கொண்டு சந்தனபுஷ்பத் தாம்பூலங்களுடன் தக்ஷிணையுமீந்தனர். அப்பிதுர்க்களும் பெற்றுக்கொண்டு விடைகொள்ளுமெனக் கேட்டந்த பிதுர்க்கள் விடைபெற்றுக்கொண்டு போகிறபோது அவ்வூரில்வசிக்கும் பிராமணர்கள் விரைந்தோடி வந்து அவர்களைத்தடுத்து நீங்களார் இங்குயாருடைய வேண்டுகோளினாலே வந்தவர்கள் இந்தக்கிராமத்தினில் வாசஞ்செய்துக் கொண்டிருக்கு மவர்களாதலால்இவ்வூரினில்நடக்கும் சுவாசுபங்களுக்கு நாங்களெதிர் பார்த்துக்கொண்டிருக்க இதையோசிக்காமல்எங்கள் கிராமத்திற்கு நீங்கள்வருவது ஞாயமோவென்று சொல்லிக்கொண்டே அவர்களைப்பிடிக்கப் போகையில் அந்தப்பிதுர்தேவதைகள் அக்கிராம பிராமணர்களுக்கு தந்தைகளாகக் காணப்பட்டு வெகுபிரியத்துதுன் வசனித்திருந்தனர்கள் அவர்களைத் தங்கள் தந்தைகளென்றுப் பிராமணர்களறிந்து ஒருவரையொருவர் கட்டி ஆலிங்கனஞ்செய்தும் அண்ணாநீரித்தனைநாளெங்கு போயிருந்தீர் இங்கெப்போது வந்தீர் என்று விசாரித்து வருகிறபோது அந்தப்பிதுர்தேவதைகள் தங்கள் புதல்வர்கள் வீடுகளுக்குச் சென்று பிரியத்தைக் காட்டிக்கொண்டு மூன்றுநாள் வசித்திருந்து அவர்கள் மூன்றாவதுநாள் பிதுர்லோகத்திற்குப் போயினார்கள் இந்தஅதிசயத்தைக் கண்டு அவ்வூர்பிராமணர்கள் யாவருங் கூடிக்கொண்டு ஏகரஸன் வீட்டையடைந்து வெகுவாக யந்த ஏகரஸனைக் கொண்டாடினார்கள் அன்றியும் ஓஏகரஸரே உமதுமகுத்துவத்தை யாங்களறியாமற் செய்தகுற்றத்தை மன்னித்து எங்களை யாதரித்தருள் புரியவேணுமென்று பணிவாகப்பேசிவிடைபெற்றுச்சென்றனர்கள்பின்பு நாகநாதரும் ஏகரஸனும் வெகுமகிமைகள் நிறையப் பூமியெங்குஞ் சஞ்சரித்துக்கொண்டு வெகுகாலம்வாழ்ந்திருந்து முடிவினில் பரதத்துவ நிரஞ்சனமாகும் பரமபதவியை யடைந்தனர்கள்.

வாழிவிருத்தம்.

ஆகமங்களுக்கெட்டாத ஹரியைக்கண்டுய்ந்தோன்வாழி
மோகவலையைவெட்டி யோக்கஞ்சாதித்தோன்வாழி
யாகமாய்ப்பக்திசாரம் பகர்ந்துபதம்பெற்றோன்வாழி
நாகநாதருபபதிருநளினபதமென்றும்வாழி.

நாகநாதர்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்:

ஸ்ரீமத்

லதீபுஷா சரித்திரம்.

துதிவிருத்தம்.

மதிதனிலுயர்ந்துஜாதி துலுக்கரில்மாசிறந்த
நிதியினையடையவெண்ணி நிர்மலமனத்தினிற்ஸ்ரீ
பதியினைப்பகவத்கீதை படித்துமென்மேலும்நாடும்
லதீபுஷாதிருவடிமலர்க் கமலங்கள்போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு.

திருமகள்கடாக்ஷம்பொருந்திய அவிந்தியையென்னும் பட்டணத்தில் துலுக்கர்குலத்தினிற் பிறந்தவர் போதகபுத்தியினைமறந்தவர் பக்தி வைராக்கியத்திற் சிறந்தவர் பகவற்கீதைபடிப்பதில் ஆசைமீறி மிகவும் பறந்தவர் லதீபுஷாவெனும் பேர்கொண்ட மாவிற்பனர் ஒருவரிருந்தார் இவர்பாலியத்திலேதானே இந்து மதத்தை யடையவேணுமென்ற அவாமிகுத்து இம்மதத்தைச் சேருவதற்குத் தக்கயோசனைசெய்துத் தக்க உபாத்தியாயரைக் கொண்டு இந்துமதத்தைச்சார்ந்த புத்தகங்களை வாசித்துத் தேர்ச்சியடைந்து பகவத்கீதையையும் பாகவதத்தையும் வைத்துக்கொண்டு தினமும் பாராயணஞ்செய்துத்தன்மதத்தைவிடுத்துஇந்து மதத்தை யனுசரித்துக் கொண்டிருப்பதைத் துலுக்கர்கள் சிலர்தெரிந்து இக்கொடிய துஷ்டன் நமதுமதத்தை இழிவாகநினைத்து இந்துமதத்தில் சேர்ந்துகொண்டு அவர்களுடைய கிரந்தங்களை வாசித்துணர்ந்து அம்மதமே சத்தியமதமென்றும் அதுவே தனக்குசம்மதமென்றும் நம்பிக்கைவைத்து ஜாதிப்ரஷ்டனாயினான் இப்படிப்பட்ட குலத்துரோகியை எளிதில் விடக்கூடாது இச்செய்தியை நமதரசனுக்கோதி அரசனைக்கொண்டு இவனைத்தக்கபடி தண்டிக்கவேணுமென்று யோசித்து அரசன் கொலுமுகத்திற்குச்சென்று அரசனைக்கண்டு சலாஞ்செய்து லதீபுஷாவின் நடவடிக்கைகளை எடுத்தோதிடக் கேட்டந்த அவிவேகமுடைய அரசன் கண்கள்சிவக்க மீசைதுடிக்க அடங்காக்கோபங்கொண்டு அருகிலிருக்குந் தூதர்களைநோக்கி அடா தூதர்களே சீக்கிரமாக ஓடி இந்துமதத்திற்சேர்ந்த அந்த லதீபுஷா வீட்டிற்புகுந்து சகல சொத்துக்களையுங் கொள்ளையடித்து சர்வமும் சூனியஞ்செய்து வாருங்களென்று கட்டளையிட்டான் அந்தப்படியே அத்தூதர்களும்லதீபுஷாவீட்டைநாடி செல்லுகையில் உத்தமராகிய லதீபுஷா அப்போது பகவத்கீதையை வாசித்துச் சிலருக்கு உபன்னியாசஞ்செய்துக்கொண்டிருப்பதை ராஜதூதர் கண்டுங்கேட்டும் இப்படிப்பட்ட மகானுபாவருடைய வீட்டைக்கொள்ளையடித்து வரும்படி கட்டளையிட்ட அரசனது புத்திகோசரத்தை என்னென்று சொல்லப்போகிறோமென்று தங்கள் மனதினில்யெண்ணி மறுபடியும் லதீபுஷாவின் முகத்தை நோக்கினார்கள் அந்தச்சமயத்தினில லதீபுஷா அத்தூதர்களைக் குளிரக்கடாக்ஷித்தார் அதைக்கண்டு அத்தூதர்கள் தங்களுக்கு எர்க்கனவே விளங்குங் கோபமானது தணிந்து சாந்தபதமடைந்து பரிதாபங்கொண்டு பக்தியென்னுங் கொடிகளாலே கட்டுப்பட்டவர்களாகி அத்தூதர்களில் ஒருவன் மற்றவர்களைநோக்கி சொல்லத் தொடங்கினான்.

சேளுங்கள் பிரியநேசர்களே இந்தப் பரமசாதுவாகிய லதீபுஷா சொல்லுகிற பகவற்கீதையின் மதுரத்தைக் கேட்டீர்களல்லவா இதனாலிவர் துஷ்டரென்று தோன்றுகிறதா இவர்வீட்டை கொள்ளையடிக்கும்படி கட்டளையிட்டு நம்மையனுப்பிய அரசன் துஷ்டனென்று தோன்றுகிறதா இவ்விரு திரத்தாரில் யார் துஷ்டன் துர்க்குணமுடையவன் எவன் உத்தமனும் நற்குணமுடையவன் சொல்லுங்களென அதற்கந்தத் தூதர்களில் ஒருவன் ஐயா பிரியநண்பரே அரசனே துர்க்குணமுடையவனும் துஷ்டனுமாகும் இந்தலதீபுஷாவே உத்தமமானநற்குணமும் பரமசாதுவுமாகு

மென அதற்கந்ததூதன் இன்றுமுதல் நாமிந்த லதீபுஷாவையடுத்து நல்லவிஷயங்களைக் கேட்டுக்கொண்டு மனதில் அவர்திருவடியைத் துதிசெய்துக் கொண்டிருந்து மோக்ஷமார்க்கத்தை யடுத்துக்கொண்டு புத்தியைப்பலவிதத்தில் சிதரவிடாம லிருப்பதன்றோ ஜென்மசாபலிய மடைவதற்கு வழியாகும் இத்தமேன் பாட்டைவிடுத்துத் துஷ்டனும் துற்குணமுடையவனுமாகிய அரசனிடத்தில் நாம் உத்தியோகஞ் செய்வதுதகாது இன்றோடே உத்தியோகத்தை விடுத்துப் பரமோபகாரியாகிய லதீபுஷாவைப் பணிந்து ஞானோபதேசம்பெற்று ஜென்மசாபலியமடைவதேமேன்மை யாகுமென்று யோசித்து அத்தூதர்கள் லதீபுஷாசொல்லும் ஞானார்த்தங்களைக் கேட்டுப் பரமானந்தமடைந்துக் கொண்டு அவரைவிட்டுப் பிரியாமலிருந்தனர்கள், அப்போது அரசன் நாம் தூதர்களையனுப்பி மெத்த பொழுதாயிற்று இதோ வருகிறோமென்று சொல்லிப்போயின தூதர்கள் நெடுநேரமாகியும் வராமலிருப்பதற்குக் காரண மென்னவென்று யோசித்து மறுபடியுஞ் சிலதூதர்களையனுப்பஅவர்களும் லதீபுஷா திருக்கண்ணோக்கத்திற்கு மயங்கி பகவத்கீதையைக் கேட்டுக்கொண்டு முன்னம் வந்தவர்களுடன்கலந்து பரமானந்த மடைந்துக்கொண் டிருந்தனர்கள் இதையறியாமல்அந்தவரசன் அடங்காதகோபங்கொண்டவனாகித் தானே புறப்பட்டு வருகையில் லதீபுஷா பாகவத அர்த்தஞ் சொல்லிக்கொண்டிருக்க அதை வெகுயின்பமாக ஜெனங்கள்கேட்டு ஆனந்த மேலிட்டால் மெய்மறந்திருந்தனர்கள் அன்றியும் அந்த லதீபுஷாவீட்டின் மதிற்சுவர்களில்பகவானுடைய கிருபையினால் என்றுமில்லாதிருந்து அப்போதே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் போலவும் ராதாதேவியைப்போலவும் சித்திரத்தினால் எழுதப்பட்டிருந்தன அதைக் கண்டு யாவரும் உள்ளங்குளிர சாவதாரங்கள் பகவானெடுத்த க்ஷேத்திரங்களையும் அக்ஷேத்திரத்தினிலிருக்குந் தீர்த்தங்களின் மகுத்துவங்களும்நிறைந்தராதா கிருஷ்ணருடைய சரித்திரங்களும் தெளிவாகஎழுதப்பட்டிருக்க அதைக்கண்டு அந்நகரத்தையாளும் அரசன் அந்த சித்திரப்பதுமைகளைக் கணக்கிட்டும வெகு சுந்தரமாகவும் சுகமாகவும் விளங்கும் ராதாகிருஷ்ண பதுமைகளைப் பார்த்துக் கொண்டேவந்து லதீபுஷாவைநோக்கி ஒருவனுக்குப்பிறந்து மற்றொருவனை அப்பாவென்பவர்களு முண்டோ இல்லை அதையுன்னிடம் பிரத்யக்ஷமாகக் கண்டேன் இதிருக்கட்டும் அதோ பாரு சித்திரத்தினாலெழுதிய பெண்பாவையின் கரத்தினிலென்னமோ இருக்கின்றதே அதென்னசொல்லுமென அதற்கந்த லதீபுஷா ஓவேந்தனே சித்திரப்பதுமையின் கையினிலிருப்பது தாம்பூலமாகும் அத்தாம்பூலத்தைத் தன்கணவனுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றாளென்றும் பிரியத்துடன்சொல்ல அதற்கந்த அரசன் ராதாதேவிகொடுக்கும் வெற்றிலைச் சுருளை அவன்கணவனாகிய கிருஷ்ணன் யேன்பிரியமாகக்கைக்கொள்ளாமலிருக்க அவன்எப்படிதேவநாயன்அவன் என அதற்கு லதீபுஷா இருகரங்களையுங்குவித்துஅஞ்சலிசெய்துக் கொண்டவண்ணம் ஓகோவிந்தா முகுந்தாவென்று பகவானைச் சிந்தனைசெய்து குறிப்புடன் எனதன்னையாகிய ராதாதேவி தாம்பூலத்தைக் கையினிற் பிடித்துக்கொண்டு தங்கள்வாயைப்பார்த்தவண்ணமாகயிருக்கின்றனள் தேவரீர் அக்குறிப்பையுணர்ந்து வாயைத்திறந்து இப்போதே அத்தாம்பூலத்தை பெற்றுக்கொள்ளும் சுவாமியென்று சொல்லவேஅந்த சித்திரரூபத்துடன் விளங்கும் பகவான் வாயைத்திறக்க வாயினில் ராதாதேவி போட்டனள் வெற்றிலைச் சுருளை சித்திரப்பதுமையாகிய ராதாதேவி ஈந்தவிந்தையை அரசன்முதலான யாவருங்கண்டு அதிசயிக்கப்பின்பு அந்தசித்திரப்பதுமைகையினில் ஒன்றுமில்லாமற்போகவே ஆச்சரியமடைந்தவர்களாகி யிருக்க அதில் அரசன்மிகு வினயபக்தியுடன் லதீபுஷா பக்தருக்குத் தெண்டனிட்டுச் சென்றான் இந்தப்படி சாட்சாத் ஸ்ரீஹரியானவர் பக்தர்கள்பொருட்டு வெகுவிதங்களாகிய ரூபங்களையெடுத்துப் பாமரர்களை அதிசயிக்கும்படியும் பாகவதர்கள் மகுத்துவங்களையும் வெளிப்படுத்தும்படி வெகு லீலாவதாரங்களால் பிரமிக்கச் செய்தனர் இந்தவிந்தையை லதீபுஷாகண்டு அன்றுமுதல் அதிக ஞானபக்தி வைராக்கியங்கொண்டு வெகுகாலம் இவ்வுலகினில் வாசஞ்செய்துக் கொண்டிருந்து முடிவினில் வைகுந்த சாம்பிராச்சிய பதவியையடைந்தனர்.

வாழி விருத்தம்.

மதமாகுந்துலுக்கர்தம் மதத்தைவிட்டோன்வாழி
சம்மதமாகும்யிந்துக்கள் தம்மதமடைந்தோன்வாழி
விதமாகும்நவபக்தியால் மேன்மையுற்றோன்வாழி
பதமாகப்பரமடைந்த லதீபுஷாபதங்களென்றும்வாழி.

லதீபுஷா சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் உத்தவசித்கணர் சரித்திரம்.

துதிவிருத்தம்

விந்தையினில்வெகுதேர்ச்சி யடைந்துவமலன்
பத்தியிலுமேன்பாடடைந்தப் பரமசுருணன்வி
ரக்தியினல்ஸ்ரீராம பஜனைசெய்துய்ந்த
உத்தவசித்கணர்பொற்பாத வுபயங்கள்போற்றிசெய்வாம்.

கதையின் வரலாறு.

திருமாதுக்கோர் அணிகலம்போன்ற தாரூரெனும் கிராமத்தினில் பிரமகுலத்தினிலுதித்தவர் இருதயகமலத்தினில் பிரமத்தைப் பதித்தவர் சகலஜீவஜெந்துக்களையும் பிரமசொரூபமென்றே மதித்தவர் பிரமமன்றி வேறுதெய்வ மில்லையெனத் துதித்தவர் உத்தவசித்கணரெனப் பேர்பெற்றவர் இப்படிப்பட்ட இந்தசாதுவானவர் விதிப்படி ஸ்ரீஹரிபஜனைசெய்தும் நூதனகீர்த்தனைகளைப் பகர்ந்தும் கவிவாணராகிப்பிரஜைகளுக்கு பக்தியுண்டாகும்படி போதித்துக்கொண்டிருந்து ஒருநாளந்த உத்தவசித்கணர் கிராமங்களில் சிலநாள் சஞ்சரித்து வரலாமென்று யோசித்துப் பிதருநகரத்தை நாடிச்சென்று அப்பட்டணத்தை யடைந்து அன்றுதினம் ஹரிகதைகீர்த்தனைகளுடன் வெகு பக்திப் பிரியமாகச்செய்து பரமானந்தமடைய அப்பட்டணத்தி லுள்ளவர்கள் மதுரமாகிய ஹரிகதையைக் கேட்டமாத்திரத்தில் பிரம்மானந்த முண்டாகி யாவரும் உத்தவசித்கணரைப் பணிந்து ஓசுவாமிஹரி பக்தரே இன்னுஞ்சிலநாளிங்கு தேவரீர் வாசமாகயிருந்து எம்போலொற்றப் பாமரர்களைத் திருத்தி ஸ்ரீஹரிதிருவடிகளுக்கு ஆளாகும்படிக் கிருபைபுரியவேணுமென்று வெகுவாக வேண்டிக்கொள்ள அதற்கந்த உத்தவசித்கணர் ஸ்ரீராமநவமி வருகிறபடியால் அந்த உச்சவத்திற்கு யான் ஊருக்குப்போகவேணுமென்ற மாத்திரத்தில் அதற்கவர்கள் உங்களூரில் நடத்தும் ஸ்ரீராமநவமி உச்சவத்தைப்போல் இவ்விடத்தில் ஸ்ரீராமநவமி யுச்சவத்தை நடத்துமென்றுயாவருஞ்சொல்ல அதற்கந்த உத்தவசித்கணர் சம்மதித்து யிருக்க சகலருங் கூடிக்கொண்டு கொட்டகைப்பந்தலொன்று போட்டு வெகு ஆடம்பரமாக மாவிலைத்தோரணம வாழைமரங்கள் முதலானதுகளைக்கட்டி அலங்கரித்து ஸ்ரீராமவிக்கிரகமொன்றைத் தருவித்து அவ்விக்கிரகத்திற்குத் திருமஞ்சனம் செய்வித்து ஆடையாபரண மலர்மாலைகளால் சிங்காரித்து தூபதீபநைவேத்திய முதலானதுகளையுஞ் செய்வித்து ஆலவட்டம் கவரிக்

குடை முதலான உபசாரங்கள்செய்து தினந்தோரும் ஹரிகதைகளைச் செய்தும் பிராமணர்களுக்குத்ததியாராதனைநடத்தி தாரைபூரி சின்னம் நாகசுரம்புள்ளாங்குழல் முதலான வாத்தியங்களைக் கோஷித்துக் கொண்டுவர ஹரிதாசர்கள் தம்பூர் மிருதங்கம் ஜாலர் கரதாளம் கஞ்சரி சாரங்காமுதலான கருவிகளுடன் கலந்து பகவந்நாமசங்கீர்த்தனங்கள் பாடிக்கொண்டுவீதிகள்தோரும் திரிந்துவருகையில்துலுக்கதாசிகள் நூறுபோர்கள்கூடி நமது மசூதிமுனபாக வாத்திய கோஷ்டங்களும் பஜனை கோஷ்டங்களுஞ் செய்துக்கொண்டு இந்தத்துஷ்டர்கள் போகக்கூடாதென்று சொல்லக்கேட்டுத் துலுக்கரில் துஷ்டர்கள் சிலபேர்சாணியும் கல்லுகளையும் எடுத்தடிக்கிறபோது அவ்வடிகளால் உத்தவசித்கணர் சிஷர்கள் வெகுபேர் சிரமமடைந்துஒட்டம்பிடித்தார்கள் இப்படி துலுக்கர்களால் வேதனையடைந்தசெய்தியை உத்தவசித்கணருக்குத் தெரியப்படுத்தக்கேட்டு அந்தசாதுவானவர் தமதுசிஷர்களுக்கும் இப்படிப்பட்ட வேதனையுண்டாயிற் றல்லவாவென்று சற்றுநேரம் விசனப்பட்டுக் கொண்டிருந்துஉடனே எழுந்து ஸ்ரீராமர் சந்நிதிமுன்பாகச் சென்று பண்ணிந்து ஓசுவாமி பதிதபாவனா தீனதயாளா தேவரீருக்கு யாங்கள்செய்யும் உச்சவம் தங்களுக்கு சம்மதமாயிராத பட்சத்தில் நானேனிந்த உச்சவம நடத்த முயன்றேன் அண்டரண்ட சராசரங்களெங்கும் நிறைந்திருக்கும் விசுவாத்மகனுக்கும் நீயும் பராத்பரனவைதைக்கண்டும் இப்புவியினில் யாவரிடத்திலும் உள்ளும்புறம்புமாய் நீ வசித்திருப்பதினாலே அவர்களுக்கு நமதுபேரில் ஆயாசமேதுக்கென்று பலவாறு யோசித்து உமக்கு உச்சவஞ்செய்விக்க முயன்றேனேயன்றி எனனிச்சையாய் செய்ய முயன்றவனலவே என்று சொல்லி அந்த உத்தவசித்கணர் அந்தஸ்ரீராம விக்கிரகத்தைப் பெட்டியில்வைத்துப் பந்தலை அவிழ்க்கச் சொல்லி ஹரிதாசர்களுக்கு தெண்டனிட்டும்ஸ்ரீராமா ஜெயராமா ரகுராமா பரந்தாமாயென்று தியானித்துக்கொண்டிருந்தனர் அப்போது ஸ்ரீராமமூர்த்தி ஆஞ்சநேயரைநோக்கி ஓஅஞ்சனாதேவிபுதல்வா பிதருநகரத்தினில் உத்தவசித்கணர் பிரபலமாக எனக்கு உச்சவங் கண்டருளப்பண்ணி வாத்தியகோஷ்டங்களுடன் திருவீதி புறப்பாடாகி வருகிறபோதுதுலுக்கர்கண்டு சாதுக்களை கல்லினாலுஞ் சாணத்தினாலும்அடித்தமையால் வெகுசாதுக்களுக்கு அடிப்பட்டுக் காயமுண்டாகியபடியால் அதைப்பரம சாதுவாகிய உத்தவசித்கணர்கண்டு மனந்தாளாமல் இனிதுலுக்கர்களால்மெத்தக்கலகம் நேரிடுமென்று யோசித்து உடனே எனது மூர்த்திகரம் நிறைந்த விக்கிரகத்தைப் பெட்டியிலடக்கஞ்செய்துப் பந்தலையவிழ்த்துவிட்டுஎன்னுடையநாமத்தைத் தியானஞ் செய்துக்கொண்டு மிகுகவலையுடனிருக்கின்றானெனக் கேட்டந்த ஆஞ்சநேயர் என்றுமில்லாத கோபங்கொண்டு இதோயான்சென்றுஅந்த பிதருநகரத்தை நீறுநீறாகச் செய்கிறேன் என்றுபாய்ந்து நகரத்தையடைந்து துலுக்கர்கள் மசூதிக்குட்புகுந்து அம்மசூதை அடியோடே பேர்த்தெரியத்தொடங்குவதை அந்தமசூதிலிருக்கும் ஞானபகிரானவன்கண்டு ஆஞ்சநேயரைநோக்கி வெகுவாக வேண்டிக்கொண்டும ஆஞ்சநேயர் கேளாமல் அந்தமசூதை அடியோடே பேர்த்தெரிந்தார் இந்தசெய்தியைஅந்தக்ஞானபகிரானவர் அவ்வூரையாளும அரசனுக்குத் தெரியப்படுத்தினான் அதைக்கேட்டந்த அரசன் மிகு பயமடைந்து நாம சும்மாயிருந்துவிட்டால் இன்னமென்ன கஷ்டங்கள்வந்து நேரிடுமோவென்று கருதிஉடனே அந்தவரசன் அந்தப்புரத்தைவிட்டுவெளிப்பட்டு நடந்து உத்தவசித்கணரிடஞ் சென்று அவரைகண்டு பணிந்து ஓசுவாமி துஷ்டர்கள்சிலர் தங்கள்மகிமையை அறியாமல் ஏதோ பிழைகள்செய்து விட்டார்கள் அந்தக்குற்றத்திற்காக ஆஞ்சநேயர்வந்து யெங்கள் மசூதியை அடியோடே இடித்துத் தள்ளிவிட்டார் இந்தத் தண்டனையே எங்களுக்குப்போதும் இனியுமதிஷ்டப்படி உச்சவம்நடத்தி ஆனந்தப்பரவச மடையும் இதன்றியும் யான் ஆயிரம்ரூபாய் கொடுக்கிறேன்அதைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீராமோச்சவத்தைச் சம்பிரமாக நடத்துமென்றுஞ் சொல்லி வேண்டிக்கொள்ள அப்போது உத்தவசித்கணர் அரசனளித்த ஆயிரம்ரூபாயைப் பெற்றுக்கொணடு மருபடியும் உச்சவம்நடத்துவதற்குப் பிரயத்தினஞ் செய்யத் தொடங்கினர்.

அதெப்படியெனில் முன்னம்போடுவித்தப்பந்தலைப்பார்க்கிலும் எண்மடங்கதிவிஸ்தீரணமும்அகலமுமுடைய கொட்டகைப்பந்தல் போடுவித்து அப்பந்தலுக்கு சாலர்முதலாகியசுங்குகள்கட்டி மாவிலைவாழைக்கமுகு முதலான புஷ்பங்களால் சிங்காரித்து தொட்டிப்பிரபையமைத்து அதில் ஸ்ரீராம விக்கிரகத்தைப் பொருந்தவைத்துத் திருமஞ்சனஞ்செய்து ஆடையாபரண மலர்மாலைகளால் அலங்காரஞ்செய்து தூபதீப நைவேத்தியங்கள் சமர்ப்பித்து பலவிதங்களாகியஉபசாரங்கள்புரிந்து எல்லோரையுமவீற்றிருக்கச்சொல்லி தாளமிருதங்கந் தம்பூர்முதலிய கருவிகளைச்சுகமாகச் சுத்திகூட்டி அந்தச்சுத்தியினிற் கலந்து ஸ்ரீஹரிகதையைப் பரமானந்தத்துடன்செய்து கதைமுடிந்தவுடன் பகவானுக்கு மங்களாலாத்திக ளெடுத்துயாவருக்கும் பிரசாதம் பகுந்து விடைதரப் பெற்றுக் கொண்டு

ஜெனங்களும் பகவத்பக்தர்களுஞ் சென்றுதங்கடங்க
ளகம்புக்கிருந்தனர்கள். இந்தப்படியாகஅந்தஉத்தவ
சித்கணர் பத்துநாளைய உச்சவத்தையும் வெகு பிர
பலமாகநடத்தி யாவருக்கும் பரமானந்த முண்டா
கும்படிச் செய்வித்தது மன்னியில் அரசனுக்குமென்
றுமில்லாத ஆனந்தமுண்டாகச்செய்து அந்த உத்தவ
சித்கணர் அரசனையும் மற்றபக்தர்களையும் நோக்கி
ஓபுண்ணியாத்துமர்களே யான்இனிஊருக்குப்போக
வேணுமென்ற யெண்ணமெனக்குண்டாயிருப்பதால்
யாவருமென்மீதுதயைசெய்து விடைகொடுக்கவேணு
மென்றுகேட்க அதர்க்கவர்கள் ஓசுவாமி தாங்கள்
ஊருக்குச் சென்றால் எப்போது மறுபடியும் உம்மை
சேவிப்பதென அதற்கந்த உத்தவசித்கணர் சந்துஷ்டி
யடைந்து நீங்களென்னை யெப்போது வரும்படிநேமி
க்கின்றீர்களோ அப்போது தடையின்றி வருகிறே
னென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு பகவத்தி
யானஞ்செய்த வண்ணமாகத் தன்னூரையடுத்து இரு
ப்பிடஞ்சேர்ந்து எந்தவேளையும் ஸ்ரீஹரிபஜனை செய்
துப் பரமானந்தத்திற் சொக்கித் தன்னைமறந்திருந்
தனர்.

இவ்வாறு அந்தஉத்தவசித்கணர் நாளைப்போக்
கிக் கொண்டிருக்கிறபோது பிதருநகரத்தினில் வசிக்
கும் விமலனென்னும் பிராமணன் உத்தவசித்கணர்
திருவடியை ஆஸ்ரயித்து உபதேசம் பெறவேணுமெ
ன்ற இச்சைபுடையவனுகித் தன்வீட்டைவிட்டு வெளி
ப்பட்டு தாரூரையடைந்து உத்தவசித்கணரைக்கண்டு
பணிந்து எழுந்துநின்று ஓசுவாமி சம்சாரமென்னும்
சாகரத்தினில்மூழ்கிக் கரையேறுவதற்குத் தக்கஓடம்
அகப்படாமல் வெகுதொல்லை யடைந்துக் கொண்டி
ருக்கும் நாயேனை மோக்ஷசாம்பிராச்சிய மடையும்
படி கிருபாநோக்கம்புரிந்து அடியேனுக்கு உபதே
சஞ்செய்து மேன்மையான வழியைக்காட்டி யுமது
சிஷனுக்கிக் கொள்ளவேணும் சத்குருநாதரே என்று
வேண்டிக்கொள்ள அந்தசத்குருநாதராகிய உத்தவ
சித்கணர் மந்தகாசம்புரிந்து விமலனைநோக்கி ஐயா
பிராமணரே ஒருப்பிராணி ஆசானிடம் உபதேசம்
பெறவேணுமென்று ஆசானையடுத்தால் அந்தஆசான்
உபதேசம்பெறவெண்ணி வந்தப்பிராணியை பனிரெ
ண்டுவருடம் சோதனைசெய்துக் குறிகுணங்கள்யாவும்
உத்தமமாகவிருந்தால் அப்பிராணிக்கி உபதேசஞ்
செய்விப்பதனல் ஆசானுக்குப்புண்ணியமுண்டாவது
மின்றி நற்கீர்த்தியும் உண்டாகும்குறிகுணங்கள்மாறு
பட்டிருக்கும் பிராணிக்கி உபதேசஞ் செய்விப்பதும்
பாவமே உபதேசம் பெற்றுக் கொண்டவனுக்கும்
பாவமே அப்பாப சம்பவத்தினல் ஆசானும் நிறைய
த்தை யடையவேண்டியதே சிஷனும் நிறையத்தை
படையவேண்டியதே ஆகையால் ஒவ்வொருவரையும்
பனிரெண்டு வருடகாலம் பரிசோதனைசெய்தே உத்த
மனுக்கு உபதேசஞ்செய்விக்க வேணுமென்று சாஸ்
திரங்கள் முறையிடுகிறபடியால் நின்னையும் பனிரெ
ண்டுவருடம் பரிசோதனை செய்தபிறகே யுனக்குபா
னுபதேசஞ் செய்விப்பேன் என்ற உத்தவசித்கணரை
யந்த விமலன்பணிந்து ஓசுவாமி பனிரெண்டுவருட
காலம் இக்காயம் உயிற்பெற்றிருக்குமென்ற நம்பிக்
கை யில்லாமையால் யான் எமதூதர்வசம் அகப்படா
முன்னமே ஆசிரியரபிமானத்தைப் பெற்றிருந்தால்
நம்மையந்த எமதூதர்கள் கண்ணெடுத்துப் பார்க்க
வும் சமீபத்தினில்வந்து பாசக்கயிர்கொண்டு கட்டி
யிழுத்துக்கொண்டு போகவுங்கூடுமோ கூடாதென்
றெண்ணித் தங்களைச் சரணம்புகுந்திருக்கும் இவ்வே
ழையேனைச் சோதிக்கவேணுமென்று சொல்லுவது
நீதியாமோ என்றவிமலனை நோக்கி உத்வசித்கணர்
சொல்லுகின்றார்.

கேளுமையாவிமலனேஉனக்கு இப்போதுநடப்
பது எவ்வனதிசை இந்தஎவ்வனபருவத்திற்குத்தக்க
விஷயாந்திரங்களை யனுபவித்துச் சுகமடையாமலும்
பெண்டு பிள்ளைகளைவிட்டு நீ தனித்துவந்து என்
னிடம் உபதேசம் பெற்றுக் கொள்ளும் பொருட்டு
என்னுடன்வாதிகரும் விஷயத்தினில் யான்மெத்தக்
சந்தோஷமடைகின்றேன் மேலும் உனக்குமெனக்கு
பரிக்ஷையில்லை நேசமிருந்தால் உன்னுடைய குணகு
ணங்கள் எனக்குத் தெரியவரும் நூதனமாக இன்று
தினமே என்னிடம்வந்தவனுதலால் உன்னிடத்திலெ
னக்கு நம்பிக்கையுண்டாகவில்லை ஆகையால்நின்னை
பனிரெண்டுவருடம் பரிக்ஷை செய்தபின்பே உபதே
சஞ்செய்வேன் எனக்கேட்டந்த விமலன் கண்களில்
நீர்பெருகவிட்டுக்கொண்டு வெக்கிவெக்கியழுது ஈன
சொரத்துடன் ஓசுவாமி சத்குருநாதரே யானிதுவ
ரைக்கும் யெடுத்தஜென்மங்களுக்குக் கணக்கேயில்லை
அந்தஜென்மங்களில் எனக்கெத்தனையோ பேர்கள்
தாய்தந்தையர்களாயினர்கள்இத்தேகத்தைப்பெற்று
வளர்த்த தாய்தந்தையாகளும்முன்தாய்தந்தையர்கள்
கூட்டத்தினில் சேரத்தக்கவர்களே அல்லது இவர்க
ளால் யாதொருவிசேஷமுங் காணேம் சர்வத்திற்கும்
ஆதிதந்தையாகும் ஸ்ரீமந்நாராயணன் எனக்கும் உம
க்கும் எல்லாஉலகங்களுக்கும் தந்தையாகி யிருக்கின்
றன் அவனது நிர்ஹேதுக்கிருபையினல்எனக்குஅரி
தாகும் மனிதசரீரங்கிடைத்தது இந்தஜென்மத்திலும்
அந்தபகவானுடையநாமத்தை உபசரணைசெய்யாமல்
ஆகாரம்நித்திரைபயம் மைதூனதிகளுக்கு வசியப்

பட்டவனாகி காலத்தை வீணாகப் போக்குவனேயா
கில் நான் பசுப்பிராயனென்னத்தகும் சாதுகூட்டத்தி
னிற்சேர்ந்து சாந்தசுகத்தை யனுபவிப்பது அல்லவா
மானிடஜென்மத்திற்குப்பலன் அப்படிப்பட்ட சுகத்
தை யனுபவிக்கவொட்டாமல் காமக்குரோத லோப
மோகமத மாச்சரியங்களென்னும் ஹரிஷட்வர்க்கங்க
ளென்னை வாதைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.
இந்தபயத்தைத்தருஞ் சத்துருக்களை ஜெயித்தவனல்
லவா ஜெனனமரணரூபவனிதைகளை யறுத்துக்கொ
ண்டு பிரம்மானந்த சுகத்தையடைவன் அப்படிப்ப
ட்ட பரமானந்த சுகத்தைஆசித்துபவக்கடலைக்கடப்
பதற்கு சாதுக்கள் சங்கமர்களின்றி வேறுஓடமில்லை
யென்று நிச்சயித்து சாதுக்களிற் சிறந்தவராகும் தே
வரீருடைய திருவடித்தாமரைகளை யடுத்துச் சதாகா
லமுங் கைங்கரியங்களைச் செய்துப் புனிதனாகின்றே
னென்று நிச்சயித்துத் தங்களிடம்வந்தேன்சரணாகதி
யடைப வர்களை ரக்ஷிப்பது சர்வேசனுக்கும்
சாதுக்களும் சுபாவகுண மல்லவா என்று
விண்ணப்பஞ் செய்துக்கொண்ட இந்தவிமல மதுரச்
சொற்களுக்கு உத்தவசித்கணர் மெத்தவும்ஆச்சரியப்
பட்டு நீகேவலமான எவ்வனப்பருவத்தை யடைந்தி
ருப்பவனாகும் நினது விவேகமானது அணைகடந்த
தாகி நின்மொழிகள் செவிகளுக்கமிர்தமூட்டியதைப்
போலிருக்கின்றது இதுசெய்வதற்கு முடியாதகாரிய
ங்களை நினைத்த மாத்திரத்திலேதானே செய்விக்கும்
பகவானுடைய பிரேரெபணையென்று தோன்றுகின்
றது உலகத்தினர்யாவரும் பகவானைபஜிக்காமல் கா
மக்குரோதாதி ஹரிஷ்டவர்க்கங்களைப் போஷித்துக்
கொண்டிருக்க நீஇந்த எவ்வனபருவத்தினில் அந்த
ஹரிஷ்டவர்க்கங்களின் சுபாவத்தையறிந்துஇந்திரிய
சுகந்தைத் துவேஷித்துப் பிரம்மானந்த சுகத்தை
அபேக்ஷித்தாய் உன்னைக் கர்மங்கள் பாதிக்கமாட்
டாது பயப்படவேண்டாம் நீகோரினபடியே என்னி
டத்தினில் நிவாசஞ்செய்யும் என்று அனுக்கரகஞ்
செய்தனர்.

இவ்வண்ணமந்த உத்தவசித்கணர் விமலனுக்கு
அனுக்கிரகம்புரிந்தபோது நாரதருடைய சல்லாபத்
தினால் ஸ்ரீவேதவியாசருக்கும் மஹாரிஷிசல்லாபத்தி
னால் துருவனுக்கும் எப்படிப்பட்ட ஆனந்தமுண்டா
யிற்றோ அப்படிப்பட்ட ஆனந்தமுண்டாகி விமலன்
சந்தோஷித்தனர் அதுமுதற்கொண்டு இந்தவிமலன்
தனுமனாதிகளை அந்தசத்குரு நாதனுக்குச் சுவாதீ
னஞ்செய்தும் குருநாதன் திருவடிகளுக்கு தொண்டு
புரிந்துக்கொண்டும் குருகுலவாசஞ் செய்துக்கொண்
டும் பரமபாவனமாகும் அவருடைய உச்சிஷ்ட அன்
னத்தைப் புசித்தும் அவருடைய திருவடிநிழலையொ
த்து வசித்துக் கொண்டிருந்தனர். ஐயா சிஷனே நீ
சதாகாலமும் எனக்குத் தொண்டுகள்செய்தும் என்
னைவிட்டுப் பிரியாம லிருக்கின்றாய் உன்னுடையப்
பெண்டுபிள்ளை பந்துக்கள் முதலானோரும் அன்ன
வஸ்திரத்திற்கு இல்லாமல் விசனப்பட்டுக் கொண்டி
ருப்பார்கள் பெண்டு பிள்ளைகள் துக்கப்பட்டுக்கொ
ண்டிருக்க நீயவர்கள் சிந்தனையில்லாமல் இவ்விடத்தி
லிருப்பது ஞாயமல்ல நானுனக்குச் சிலபொருள்
கொடுக்கிறேன் அந்ததிரவியத்தை யொரு க்ஷேமவர்
த்தமான பத்திரிகையுடன் நின்பெண்டுபிள்ளைகளுக்
கனுப்பி நீயென்வரவுசிலவு கணக்குகளை எழுதிக்கொ
ண்டு ஜாக்கிரதை யுடையவனாக யிருமென்று நேமித்
தார் அதற்கந்தவிமலன் மகாபாக்கியம்சுவாமிஎன்று
ஆசாரியர் கட்டளையின்படி செய்துக்கொண்டிருக்கிற
போது ஒருநாள் உத்தவசித்கணர் விமலனுடையசம
ர்த்தை பரிக்ஷைசெய்ய வேணுமென்றுநினைத்துஅந்த
விமலனைநோக்கி நீயிதுவரைக்கும் எழுதிய கணக்கு
களை மொத்தஞ்செய்து எனக்குகொண்டுவந்துகாட்டு
மென்று நேமித்தனர் விமலன் அந்தப்படியே செய்
கிறேனென்று பகலெல்லாம் ஆசாரியகைங்கரியத்தி
னில் ஜாக்கிரதையுடையவனாகி யிருந்து இரவில் ஆசா
ரியர் சயனித்தப்பின்பு திருவிளக்கை வைத்துக்கொ
ண்டு கணக்குகளை மொத்தஞ்செய்கிறபோது அரை
கால் அரைக்கால் வீசம் வித்தியாசமாகி யிருப்பதி
னால் விமலன் நித்திரை ஆகாரங்களைநீக்கி அந்த இர
வெல்லாம் மனதைச் சிதரவொட்டாமல் கியாபகசுத்
தியுடன் கணக்குகளைப்பிரட்டிப் பிரட்டிப்பார்த்துக்
கொண்டிருந்தனர் அப்போதுமூன்றுஞ்ஜாமத்தினில்
உத்தவசித்கணர் விழித்துக்கொண்டு விமலன்வழக்க
மாக சயனிக்குமிடத்தினில் காணமல் தேடுகையில்
அந்தவிமலன் ஒரு ஏகாந்தஸ்தானில்உட்கார்ந்துதிரு
விளக்கை வைத்துக்கொண்டு அதுவே ஞாபகமாக
கணக்குகளைப் பார்த்துக்கொண் டிருப்பதைக்கண்டு
விமலனுக்குத் தெரியாமல்கொஞ்சதூரத்தினில்நின்று
பார்த்துக்கொண்டிருக்கையில் கொஞ்சனேரமாயின
பின்பு விமலன் கணக்கு சரிபட்டபடியால் அவர்சந்
துஷ்டியடைந்து தன்ஆசாரியர் அருகி லிருப்பதை
யறியாமல் கைதட்டி குலுங்கச்சிறித்தும் சபாசுயெ
ன்றுசொல்லிஅதைபார்த்துஉத்தவசித்கணர் விமலன்
எதிரில்வந்துநீஎன்னலாச்சரியத்தைக்கண்டாய் சபா
சென்றுசொன்னார்கைதட்டி சிறிப்பதற்குகாரணமெ
ன்னவென்று கேழ்க்க விமலன் தலையெடுத்துப் பார்
துத் தடாலுமென்றெழுந்து•ஆசாரியருக்கு தெண்ட
னிட்டு தன்சிறிப்புக்குக் காரணத்தை விண்ணப்பஞ்
செய்தார் அதைக்கேட்டு உத்தவசித்கணர் சிறித்து
ஓவிமலனே ஒருஜாமபரியந்தம் யான் உன்னருகில்

வந்து நின்றிருந்ததையறியாமல் அரைக்காலுக் காகவும் வீசத்திற்காகவும் ஏகமனதாக நின்மனதைகணக்கினிடத்தில் லயிக்கச்செய்தால் இப்படிப்பட்ட சஞ்சலமற்ற நிஷ்டை யுனக்குப் பகவானிடத்திலுண்டாகுமேயாகில் நீபகவானுடைய சாயுச்சியத்தை யடைவதற்குச் சந்தேகமில்லை இதுவே நீகோரிய பரமசாந்த சுகமென்று இதோபதேசஞ் செய்யவே அந்தவிமலனுக்கு உடனே திடவைராக்கியமுண்டாகி ஓசுவாமி தேவரீரது கருணையினால் என்கோரிக்கை சித்தியாகி என்ஜென்ம சாபல்யமாயிற்று அன்றியும் தேவரீரது இதோபதேச மென்னுந் திருவிளக்கானது அனாதி காலமாக வெகு ஜென்மங்களிடத்தில் என்னைவிட்டுப் பிரியாமலிருந்த அக்ஞானவிருளை ஓடத்துரத்தியது. என்றுசொல்லிக் கணக்குப்புத்தகத்தையும்பேனாவையுங் கீழேவைத்து குருபுங்கவனேகணக்கிடமுடியாத என்சஞ்சிதப் பிரார்த்தங்கள் தேவரீரது கடாக்ஷத்தினாலே உருமாய்ந்து இருந்தவிடந் தெரியாமற் போயிற்று இதுவரைக்கும் நரதேகத்தைத்தரித்துபசுவின் விருத்தியோடுகூடி யிருந்தேன் தேவரீரது உபதேசத்தினால் இருந்தபோது நானொருமனிதனாயினேன் ஆகிலும் என்னை விசுவசிக்கவேணும் இந்தச்சரீரத்தினிற் கட்டப்பட்டிருக்கும் துஷ்டஇந்திரியஅசுவங்கள்என் சுவாதீனத்தில் நிற்கமாட்டாது இது வேதாந்தபதத்தைவிடுத்து விஷய வீதியிற்சென்று என்னை எமனுடைய பட்டணத்திற் சேர்க்குமென்று பயப்படுகிறேன் எனக்குத்திடமாகும் புத்தியெனும் கடிவாளக்கயிற்றையீந்து அந்ததுஷ்ட அசுவங்களின்யிச்சைக்கு வந்த வேகத்தையடக்கி என்னை யர்ச்சராதி மார்க்கத்தினில் நடப்பித்துத் திவ்யமாகிய வைகுந்தநகரத்தினிற் சேர்க்கவேண்டிய பாரம் தங்களுதாகி யிருக்கின்றது யான் தங்கள்சன்னிதிமுன் சரணாகதிசெய்த அன்றனே இந்த ஆத்மபாரமதைத் தாங்களே சுமக்கப் பட்டதாயிற்று இப்போது யான்மருபடியும் பிரார்த்திப்பது அனாவசியம் ஆனபோதிலும் தங்களுடன் சல்லாபம் எனக்கு தாரகபோஷக போக்கியங்களாகி யிருப்பதிலே முன்விண்ணப்பம்யான்மருபடியும் விண்ணப்பம் தெரியப்படுத்துகிறேன் என்று சொல்லிய விமலன் வாக்கியங்களைக் கேட்டு உத்தவசித்கணர் மிகவும் சந்துஷ்டியடைந்து அவரைக் கட்டித் தழுவிக்கொண்டு அவருடைய செவியினில்தாரக மந்திரத்தை யுபதேசித்தார் விமலன் புனிதனானேனென்று ஆனந்தித்து ஏமாராமல் ஆசாரியருக்குத் தொண்டுசெய்துக் கொண்டிருந்தனர்.

இவ்வண்ணம் விமலன் குருநாதருக்குத் தொண்டுசெய்துக் கொண்டிருக்கையில் முன்னம் உச்சவம் நடக்கவொட்டாமல் பக்தர்களுக்குக் கஷ்டமுண்டாகும்படி கற்களாலடித்த துஷ்டர்கள் பிராண ஆபத்தையடைந்து பகவானைப் பிரார்த்தித்த மாத்திரத்தில் ஆபத்துநீங்கிச் சுகமாகியபடியால் அரசனும் துலுக்கர்களும் பகவான்விஷயத்தில் பயமுண்டாகிவருடந்தோறும் பாகவதர்களைக் கொண்டு ஸ்ரீராமநவமி யுச்சவம் நடத்துவதுமின்றி ஏகாதசியை அநுட்டிக்கும்படி பாகவதர்களைவேண்ட அவர்களு மந்தப்படியே ஏகாதசி திதியை பக்தியுடன் அநுட்டித்தமையால் துவாதசிதோரும் இரண்டாயிரம்பிராமணர்களுக்குத் ததியாராதனை நடத்திக்கொண்டு வருகிறபோது பகவத்பாகவதர்கள் தினந்தோரும் பகவானைத் தொழுது சகலகருவிகளுடன் பஜனை செய்துக்கொண்டு வீதிகள்தோறுந் திரிந்து வெகு ஆடம்பரஞ்செய்துக் கொண்டு வருவதைக்கண்டு துலுக்கர்கள் முன்னமடைந்து கஷ்டத்தைநினைந்து அவர்களும் பக்தர்களுடன் கூடிக்கொண்டு பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டுவந்து இருப்பிடத்திற் சேர்த்து பாகவதர்களைவணங்கி விடை பெற்றுக்கொண்டு போவர்கள் இந்தப்படிக்கிங்கே நடத்திவருவதை யந்தவிமலன் கேழ்விப்பட்டு ஆசானிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தன்னூரையடைந்து இங்கொரு விஷ்ணு ஆலயமொன்று கட்டிவைக்கவேணுமென்றுநினைந்து அவ்வூரரசனிடத்திற்குச் சென்று சலாஞ் செய்துத் தான் ஆலயங்கட்ட முயன்றிருக்குங் கருத்தைத்தெரியப்படுத்தக் கேட்டந்த அரசனும் மெத்தசந்தோஷித்து அதற்குவேண்டிய பொருளையளித்தான் விமலனும் அப்பொருளைப் பெற்றுக்கொண்டுவந்துத்தக்க நிலத்தில் உத்தமமான லக்கினத்தினில் கடக்கால் போட்டு கர்ப்பக்கிரகம் அந்தராளம் பிரகாரம் முதலானதுகளையும் வெகு விமர்ச்சையாக சிற்பிகளைக் கொண்டு கட்டிமுடிந்து சிலாவிக்கிரகம்உச்சவிக்கிரகமிவ்விரண்டையும் நூதனமாகச் செய்வித்து நல்ல முகூர்த்தவேளையில் ஸ்தாபனஞ் செய்துப் பிராமணர்களுக்கு ஆயிரமிரண்டாயிரங் கணக்குமேல் ததியாராதனை நடத்துவதுடன்சம்புரோட்சணையுஞ்செய்வித்து மூன்றுகால பூசையும் விதிப்படி நடத்திக்கொண்டு வருகிறபோது ஸ்ரீராமநவமி சமீபித்தது அப்போதந்தவிமலன் தன் குருநாதரிடஞ் சென்று வணங்கி ஓசுவாமி சத்குருநாதரே ஸ்ரீராமநவமியுச்சவஞ் சமீபித்திருப்பதால் தேவரீர் பிதருநகரத்திற் கெழுந்தருளினால் பத்துநாள் பிரமோச்சவத்தை பகவானுக்கு நடத்தி மங்களா சாசனஞ்செய்து வரலாமெனக்கேட்டந்த உத்தவசித்கணர் மெத்த சந்தோஷமடைந்து சீஷனுடன் புறப்பட்டு பிதருநகரத்தை யடைந்து

ஊருக்குள் பிரவேசிக்கிறபோது கோபுர தெரிசன முண்டாகக் கண்டானந்தித்து சிஷனைநோக்கிமுன்ன மிங்கு யான்வந்து ஸ்ரீராமநவமி யுச்சவம்கொட்டகைப்பந்தல் போட்டல்லவோ நடத்தினேன் இப்போது சந்நிதிகட்டி யிருக்கின்றதே இதுயாரால் கட்டப்பட்டது என்றுகேழ்க்க விமலன் ஒசுவாமி அடியேன்இவ்வூரையாளும் அரசனுதவியினல் சந்நிதியைக் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகமுதலான சம்புரோட்சணைகளையுநடத்தி எம்பெருமானைக் கண்குளிரச் சேவித்துப் பரமானந்த வைபவத்தை யடைந்து மூன்றுகாலமுந் தப்பாமல் பூசைநடத்தும்படியாகத் தக்க ஏற்பாடுகள் செய்வித்துப் பின்பல்லவோ தேவரீரிடத்திற்கு யான்வந்தது யென்றுசொல்லிப் பணியக் கேட்டந்த உத்தவசித்கணர் மிகவுஞ் சந்துஷ்டியடைந்தவராகித் தன்சிஷனுகிய விமலனுடன்நடந்து சந்நிதிக்குட்புகுந்து ஸ்ரீராமலட்சிமண பரத சத்துருக்க சீதாதேவியையுங்கண்டு சேவித்து ஆனந்தித்து சந்நிதியில் தான்வசிப்பதற்குத் தக்கயிடந் தயார்செய்து அதில்சிஷனுடன் இருந்துக்கொண்டு பிரமோச்சவந்தொடக்கமாகியநாளில் துவஜாரோகணஞ்செய்துஸ்ரீராமருக்குத் திருமஞ்சனங்கண்டருள்பண்ணி ஆடையாபரண மலர்மாலைகளைச்சூட்டி யனேக மேளவாத்தியங்கள் தாம்தாமென்று முழங்கத் தூபதீபநைவேத்திய உபசாரங்களுஞ்செய்து தொட்டிப் பிரபையினில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியையேளப்பண்ணித்திருவீதி புறப்பாடுசெய்வித்துசந்நிதிக்குள் ஏளப்பண்ணி வேதகோஷ்டம் ஆயினபின்பு யாவருக்குந் திருத்துழாய் தீர்த்தஞ் சடகோபப் பிரசாதமீந்து முதல்நாள் உச்சவத்தை வெகு விமரிசையாய்நடத்தி மெத்த சந்தோஷித்திருந்தார் அவ்வூரிலுள்ள குடிகளெல்லாம் இப்படியாரும் உச்சவஞ் செய்விக்க நாமிதுவரையில் கண்டு சேவித்ததில்லையென்றுப்பலவாறு உத்தவசித்கணரையும் சிஷராகிய விமலனையுங் கொண்டாடி ஆனந்தப் பரவசமடைந்துத் தங்கள் தங்கள்வீட்டையடைந்திருந்தார்கள் இந்தப்படி யந்த உத்தவசித்கணர் பத்துநாள் உச்சவத்தையும் நடத்தி வெகுசந்தோஷமடைந்தவராகித்தன்சிஷனுடன் ஆனந்தசாகரத்தினில்மூழ்கினவராகி அப்பட்டணத்திலே தானேவாசம்பண்ணிக்கொண்டு சிலவருடங்கள் பிரமோச்சவத்தை நிறைவேத்திக் கொண்டிருந்து முடிவில் விமலனும் ஆசானுகிய உத்தவசித்கணருடன் பரமசாம்பிராச்சியப்பதமாகிய வைகுந்தமா நகரத்தை யடைந்தனர்கள்.

வாழிவிருத்தம்.

பத்தினிற்சிறந்துபராபரன் படைத்தோன்வாழி
முத்தர்களில்முதன்மையாய் முனைந்துநின்றோன்வாழி
ரக்திதனில்மெய்மறந்து வைராகியானேன்வாழி
உத்தவசித்கணர்பொற்பாத வுபயங்கள்வாழிவாழி.

உத்தவசித்கணர்சரித்திரம்.

முற்றிற்று,

நான்காம்பாகம்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்ஃ

ஸ்ரீ மகாபக்தவிஜயம்

ஐந்தாம்பாகம்.

விப்பிரநாராயணன் சரித்திரம்.

நாமகள்காப்பு விருத்தம்.

பத்தியெனும்வலைதன்ஞற் பிடித்துக்கட்டி
முத்தர்களாமுதியோர்கள் முனம்நடித்த
பக்தவிஜயமைந்தாம்பாகத் தனைப்பகர
சித்தத்தில்நடித்துலவு சீர்வாணிபதங்கள்காப்பு.

இலக்குமிதுதிவிருத்தம்

அத்திமுன்தோன்றி யபயமீந்துக்காத்த
சுத்தசத்வகுணப்பிரசித்த தூயமாயன்
சித்தத்திலமர்ந்து ஜெகம்புகழுமன்னை
உத்தமமுயர்தாமரைப் பதங்கள்போற்றிபோற்றி.

விஷ்ணுதுதி விருத்தம்.

ஆயர்குலவிளக்காகி யனைத்தைக்காக்கு
மாயன்மணிவண்ணன் மாதவமுகுந்தன்
நேயர்கள்மனத்திலகு நேமியான்றன்
றாயமாமலர்ப்பதங்கள் தொழுதுவாழ்வாம்.

ஸ்ரீமகாலட்சுமி கடாக்ஷம்பொருந்தி அதிகசிறப் புற்றோங்கிய தென்தேசத்தினில் மண்டங்குடி யென் ஞெருகிராமமுண்டு அந்தக்ஷேத்திரத்தினில் பிர்மகுலத்தினிற் பிறந்தவர் சகலகலைகளிலுந்தேர்ந்தவர்ஏழை பரதேசிகள் தமையாதரிப்பவர் சதாகாலமும் எம்பெருமானுடைய குணானுபவத்திலேயே காலக்கழிப்பவர் தன்னுயிரைப்போல மன்னுயிர்கள்மீது ஜீவகாருண்ணியமுடையவர் எப்போதும் பெரியோர்களை விசுவாசிப்பவர் அவர்களுக்குத் தொண்டுசெய்துகளிப்பவர் ஸ்னாநுஷ்டானங்களில் தன்குல விதிப்படி

நடப்பவர் துஷ்டர்கள் நேசத்தைவிட்டொழிப்பவர் இந்திரிய நிக்கிரகஞ்செய்து களிப்புற்றிருப்பவர் இக போகமாகிய மாயயை யடியோடுவெட்டியெறிந்தவர் வானப்பிரஸ்தகிரகஸ்த சன்னியாசமென்னும் மூன்று சிர்மங்களை வெறுத்து நான்காவதாகிய பிர்மசாரி ஆசிர்மத்தையடுத்தவர் விப்பிரநாராயண னெனும் பெயர்வகித்தவர் இம்மகானுபாவரை மண்டங்குடி யென்னும் க்ஷேத்திரத்தினில் வசிக்கும் பிரம்மக்ஷத்திரிய வைசியசூத்திரர் முதலியயாவரும் கொண்டாடி வணங்கி சாக்ஷாத் ஸ்ரீரங்கநாதரே இவ்வடிவமாய் வந்து தோன்றினரென்று புகழ அதிசீலராக அந்த க்ஷேத்திரத்தினில் வாசஞ்செய்து கொண்டிருந்தனர்.

இப்படி சிலவருடம் அந்தமண்டங்குடிக்ஷேத்திரத்தில் வசித்துக்கொண் டிருக்கையில்ஒருநாளிவருக்கொருயோசனை யுண்டாயிற்று அதென்ன வெனில் யாத்திரைசெய்ய வேணுமென்ற விருப்பமுண்டாகி அந்தக்ஷேத்திரத்தைவிட்டு புறப்பட்டு வடதிசையை நோக்கி நடந்து காடு, மலை, வனம்,வனாந்திரங்களைக் கடந்து முதலில் அகோபிலக்ஷேத்திரத்தை யடைந்து அங்கே மலையருவியிற் குளித்து மூழ்கி அநுட்டான முடித்து சீலராகி அப்பிரதேசத்தினில் வீற்றிருக்கும் லட்சுமிநாராயணனை சேவித்து முக்காலும் வலம்புரிந்து ஆனந்தம்பிரம்மானந்தமென்னும் இரண்டையுங் கடந்து மூன்றாவதாகிய பரமானந்தமடைந்து அந்த சன்னிதியில் பிரசாதங் கொடுக்கப்பெற்று தடாகக் கரைக்குவந்து பிரசாதத்தைப் புசித்து ஜலம்அருந்தி "உண்டஇளைப்பு தொண்டருக்கு முண்டென்னும்" பழமொழிக்கிணங்க சிரமபரிகாரத்தின் பொருட்டு அங்கொரு மரத்தடியில் படுத்து சற்றுநேரம் இளைப்பாறி எழுந்து வீற்றிருந்தபடி பகவத் குணானுபவஞ் செய்துக்கொண்டிருந்து சூரியாஸ்தமன காலத்தினிலெழுந்து சந்தியாவந்தன முடித்துக்கொண்டு கரையேறி வருகிறபோது அண்டம்வெடித்ததோவென்று சொல்லும்படி பெருத்தசப்தம் ஒன்றுண்டாயிற்று. அதைக்கேட்டு அந்த விப்பிரநாராயணன்சிறிதேனும் மனங்கலங்காமல் பயமடையாமல் மெத்ததிடச்சித்தத்தோடு அந்தத்தொனியுண்டான விடத்தைக் கண்ணோக்கமிட்டுப் பார்க்கிறபோது பூமியானது பிளப்புண்டு பிலத்துவாரத்தைப் போல காணப்பட்டது. அதைக்கண்டு அந்தவிப்பிரநாராயணன் இதுவென்ன விந்தையிலும் விந்தையாக விருக்கின்றது இதையோசிக்குமிடத்தில் இவ்விடத்தினில் பூதம்வாசமாகயிருக்கிறாப்போல் தோன்றுகின்றது இதைப்பத்தி நமக்கென்னகாரியம் நாம் விருப்பங்கொண்டுவந்த யாத்திரைமுயன்றுபோவதேநமக்கு சுகுர்தமுண்டாமெனக்கருதி அம்மார்க்கத்தைவிடுத்துமைத்தொருமார்க்கமாகக் கரையேறி வருகிறபோது மருபடியும் முன்போலவே பெருத்தசப்தம்; அம்மார்க்கத்திலும்உண்டாயிற்று. அதைக்கேட்டு அந்த விப்பிரநாராயணன் இதுவென்ன கஷ்டகாலமாக விருக்கிறது என்று மனம்புழுங்கி வேறொருவிதமாககரையேறத்துணிந்து வருகிறபோது அம்மார்க்கத்திலும் முன்போலவே பெருத்ததொனி யுண்டாகியது. அதையும் விடுத்து பின்னொருமார்க்கமாய்க் கரையேறவெண்ணி வருகிறபோது அந்தமார்க்கத்திலும் அதுபோலவே தொனியுண்டாயிற்று. இப்படியாக அந்தத் தடாகத்தைவிடுத்துக் கரையேறவொட்டாமல் அந்தப் பிரம்மராக்ஷதன் எத்தமார்க்கத்திலும் அந்தவிப்பிரநாராயணரை போகவிடாமல் தடைசெய்துக் கொண்டிருந்தான். அதைக்கண்டு அந்தவிப்பிரநாராயணன் நாமினைத்து வந்த காரியத்திற்கு பகவான் நம்மைப்போகவொட்டாமல் தடைசெய்கிறாரே இதற்கு நாமென்ன செய்வோம் எவ்வாறு இத்தடாகத்தை விடுத்துக் கரையேறப் போகிறோமென்று கவலையடைந்து பகவத்தியானஞ் செய்துக்கொண்டு நின்றிருந்தனர்.

இவ்வாறு நடுராத்திரியில் விப்பிரநாராயணர்பகவத்தியானஞ் செய்துக்கொண்டு தன்னைமறந்திருந்தனர் அப்போது பிரம்மராக்கதன் கூக்குரலிட்டுநாலா பக்கமும் ஓடிகொக்கரித்து பெருத்த ஆர்ப்பாட்டஞ் செய்ததினால் விப்பிரநாராயணர் பக்திகலைந்து சுயக்ஞானமுண்டாகி இதென்னமோ விபரீதமாகத் தோன்றுகிறது. இதுபேயோ பூதமோ பிரமராக்கதனோவென்று சந்தேகித்துக் கொண்டிருக்கிறபோது அந்த பிரமராக்கதன் விப்பிரநாராயணரை நோக்கிஓய்பிராமணா நான் இந்த வன்னிமரத்தினில் இருபதுவருடமாய் வசித்துக்கொண்டிருக்கும் பிரமராக்கதன்நான் கோரின பதார்த்தங்கள் யாவும்புசித்து ஆசைதீர்ந்தேன் முடிவில் பிராமணமாங்கிசத்தை புசிக்கவேணுமென்ற அபேக்ஷை நெடுநாளாக இருந்தது அந்த விருப்பந்தீரும்படி பகவான் இன்றைக்கு ஆகாரமாக உண்ணும்படி உன்னையிவடம் வருவித்தார் என்னுடையகுறையை உன்னைத்தின்று தீர்த்துக்கொள்ளுவேன் அன்றியும் இப்போது எனக்குப்பசியாயிருப்பதால் சீக்கிரம் என்னருகினில்வாடா வந்துஎன்பசியைத்தீரடா இந்தநடுராத்திரியில் உனக்காகஎன்னைத் தடுப்பவர்கள் யாரடா அஞ்தியா யகப்பட்டுக்கொண்ட உன்னைத்தின்று என்பசியையாற்றாமல் விடுவேனென்பதை மறந்துவிட்டடா என்று கெர்ஜ்ஜித்துக்

கொக்கரித்து பயமுறுத்துவதைக்கண்டுஅந்தவிப்பிரநாராயணன் மெத்தவும்பயந்து நடுநடுங்கி சித்தம்தடுமாறி அந்தோ! இதற்கு நானென்னசெய்வேன் லட்சுமிநாராயணு முன்னம் முதலைவாயிலகப்பட்டுக்கொண்டு நெடுநாள் போராடிமுடிவில் ஆதிமூலம் என்று முறையிட்ட கரிராசனைக் காத்துரக்ஷித்த தீனதயாளா ஹரிநமோவென்று சிந்தித்துக்கொண்டிருந்தபிரகலாதனனை இரணிய நமோவென்று சொல்லும்படி பற்பலதண்டனைகளைச் செய்து கொல்லமுயன்ற இரணியனுக்காக நரசிங்கமாக தூணிலவதரித்து இரணியனைவதைத்து பிரகலாதனனைக் காத்த லட்சுமிநாராயணு கௌரவமுதல்வனான துரியோதனன் துரோபதையை சபைக்குத் தருவித்துத் துகிலுரிகிறபோது எல்லாம்போய் ஒருசுத்து புடவையிருப்பதை அறிந்து அந்ததுரோபதை அபயம் என்று முறையிடக் கேட்டு மானாத்துயிலளித்த ஆபத்பந்துவே! இப்போதிந்த பிரமராக்கதனிடத்தி லகப்பட்டுகொண்டு இப்படியும் அப்படியும்போகமுடியாமல் துக்கமடைந்து முறையிட்டுக்கதரும் அடியேனை ரக்ஷிப்பதுமக்கோர் அருமையோ? ஓஅனுதரக்ஷகனே ஆதிதேவனே சோதிபாதனே வேதபோதனே நாதநாதனே ஐயனே மெய்யனே துய்யனே சங்காழிக் கையனே என்று துதிசெய்துக் கொண்டிருக்கும் விப்பிரநாராயணரை நோக்கி பிரமராக்கதன் பின்னுஞ் சொல்லுகின்றான்.

அடாபிராமணு நீஎன்னமோ தப்பித்துக் கொண்டு உயிருடன் போகலாமென்று பகவானைத் துதிசெய்துக் கொண்டிருக்கின்றாய் இந்தப்படி கள்ளவேடம்புனைந்து என்னை ஏமாத்திவிட்டுப் போகலாமென்று யோசித்து ஏதோதந்திரஞ் செய்கின்றாய் இதற்கெல்லாம் யான்பயப்படுவேனென்று யோசிக்கிறாய் ‘‘பனங்காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சுமோ’’ அஞ்சாது அதுபோல உன்னைப்போன்ற தந்திரவான்களை எத்தனையோபேர்களையான்பார்த்திருக்கிறேன் அவர்களில் நீயுமொருவனல்லவோ இதற்கெல்லாம் யான் பயந்து உன்னை விடுவேனென்று கனவிலும்நினைக்காதே மனப்பால்குடிக்காதே எப்படியும் இன்றிரவுக்குள்ளாக நீ எனக்குணவாகப் போகின்றதுதிண்ணம் இதையோசியாமல் ‘‘சுடுகாட்டுக்கு வந்தபிணம்திரும்புமோ’’ திரும்பாததுபோலநீஎன்னிடத்திலகப்பட்டு திரும்பிப்போகிற தென்பது வீனெண்ணமே அடா பாவி மெத்தவிருப்பத்துடன் நெடுநாளாய்பிராமணமாங்கிசத்தைப் புசித்து அவாதீரவெண்ணியிருக்கும் என்னை உபாயத்தினலே மதிமயங்கச் செய்துபோக மோசவெண்ணங்கொண்ட குடிகேடா நிர்மூடா என்னருகில்வாடா எனக்குணவாகி உயிர்நீங்கிப் போடாவென்று கொக்கரித்து சிங்கநாதஞ்செய்து பயமுறுத்துகிற பிரமராக்கதனை நோக்கி விப்பிர நாராயணர் சொல்லத்தொடங்கினார்.

கேளுமையா பிரமராக்கதனேஎனக்கொருவிரதமிருக்கின்றது அதென்னவெனில் இந்தக்ஷேத்திரத்தினில் நிலைபெறறிருக்கும் ஸ்ரீலட்சுமிநாராமணனை நாற்பதுநாளைக்கு சேவித்து துதிசெய்வதாக வைராக்கியத்துடன் தீக்ஷைவகித் திருக்கின்றேன் ஆகையால் தயவுசெய்து இவ்வேழையின்மீதுகிருபைகூர்ந்துநாற்பதுநாள் எனக்கு விடைதருவீரேயாகில் இக்கெடுவு கடந்த மறுதினமே யானுமக்குத் தடையின்றிவந்து உணவாகிறேன் இவ்வார்த்தைகிஞ்சித்தும் தவரமாட்டேனென்று சொல்லிப்பணிந்தார் இப்படிவினயத்துடன்பணிந்த விப்பிரநாராயணரை அந்தப்பிரமராக்கதன் எட்டியுதைத்து அடாபிராமணு பஞ்சாங்கஞ் சொல்லியும் பிட்சையெடுத்தும் பிணத்திற் சம்ஸ்காரங்கள்செய்தும் திருவத்தியயன கர்ப்பங்களைச் செய்தும் சிரார்த்தவிதிகளை நடத்தியும் வயிறுவளர்க்கும் தரித்திரனுகிய உனக்குலட்சுமி நாராயணன் சேவையா அவர்திருநாமத்துதியாசபாசு மெத்தநன்றாயிருக்கிறது இம்மொழியைக்கேட்ட செவிக்கின்பமும்நாவுக்குருசியும் மனதுக்குசுகமும் திரேகத்திற்குப் புளகாங்கிதமு முண்டாயிருக்கின்றது ஆஹாஹா இந்த விசித்திர வார்த்தைகளை யெங்குகற்றாய்அடா திருடா முறடா திரேகமெங்கும் திருமண் ஸ்ரீசூரணந்தரித்து வனமாலை வனசமாலைபூண்டு விஷ்ணுபக்தனைப்போல வேடம்பூண்டு பொய்வார்த்தைகளைப் பேசுகின்றநீருமொருபக்தனுவையோ தேகத்தின்மீது அபிமானம் வைத்திருக்கிற உனக்கு பகவத்சேவை கிடைக்குமோ பகவன்னுமத்தைத் துதிசெய்ய நாவெழுமோ அடாபகல் வேஷக்காரா மோசக்காரா மண்பெண் பொன்னென்னு மூவாசையையும் ஒழித்துதிரேகாபிமானத்தை விட்டவனெவனே அப்படிப்பட்ட புண்ணிய புருஷனல்லவோ விஷ்ணுபக்தன் பாகவதன் நீ விஷ்ணுபக்தனும் பாகவதனுமாவாயோ இதற்கொரு திருஷ்டாந்திர முண்டு அதைச் சொல்லுகின்றேன் அதை நீகவனித்துக் கேழ்க்கக் கடவாயென்று பிரமராக்கதன் சொல்லத்தொடங்கினன்.

கேளாயடா கள்ளப்பிராமணு சிலவருடங்களுக்கு முன்னம் எம்பெருமானர் திருவரங்க க்ஷேத்திரத்தினில் சீஷர்களுடன் அனேகபெரியோர்களுக்கும்

ஒருநாள் காலக்ஷேபஞ் சாதித்துக்கொண் டிருக்கிறபோது அவ்விடத்திற்கொரு பிராமணச்சிறுவனெழுந்தருளி சுவாமிகள் சொல்லும் காலக்ஷேபத்தைக் கேட்டுக்கொண்டே யிருந்து சுவாமிகளைநோக்கி எமதையனே தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய காலக்ஷேபத்தில் பாகவதர்கள் பெருமைகள் அபாரமென்றல்லவோ சாதித்தீர் பாகவதனென்பவர் எந்தகுணம் வகித்திருக்கவேணும் எதினால் பாகவதனென்றபெயருண்டாகும் அந்தவிசேஷத்தை சங்கைதீர அடியேனுக்கருள்புரிய வேணுமென்று வினயத்துடன்வணங்கிக் கேட்டுக்கொண்டனர் அதற்கு எம்பெருமானார் மெத்தவுஞ் சந்தோஷித்துஅச்சிறுபிள்ளையைநோக்கி அப்பாகுழந்தாய் இந்தச் சதஸ்வினில் எத்தனையோ சாதுக்களிருக்கின்றார்கள் ஒருவரேனும் இந்தவிசேஷத்தைக் கேட்டதில்லை அதிபாலியனாகிய நீ கேட்ட விஷயத்தைப்பற்றி உன்மீதெனக்கு மெத்தப்பிரியமுண்டாயிருக் கின்றபடியால் உனக்குற்ற சங்கைதீரச் சொல்லுதற்கு எனக்கு ஒழிவில்லை காலக்ஷேபத்திற்குத் தடையாகிறது ஆகையால் உனக்கொரு நிரூபம் எழுதிகொடுக்கின்றேன் அதைக்கைக்கொண்டுதிருமலைக்குச்சென்று கோவிந்தபட்டரைக்கண்டு அவரிடத்தினிலந்த நிரூபத்தைக் கொடுப்பையேயாகில்அவர் உனக்குற்ற சந்தேகங்கள்தீர அருள் புரிபவரென்று சொல்லி நிரூபமொன்றெழுதி அப்பிராமணச் சிறுவனிடம் அளிக்க அதையந்தப் பிராமணச் சிறுவன் மகாப்பிரசாதமென்று கைக்கொண்டு அந்தநிரூபத்தைச் சிரசின்மீது தாங்கிக்கொண்டு நடந்துச் சிலநாளில் திருமலையயடுத்து கோவிந்தபட்டர் திருமாளிகையைக் கண்டுபிடித்து அந்தமாளிகையின் திண்ணைமீதிருந்துக்கொண்டு தான் இன்னானென்றும் எம்பெருமானார் உத்திரவுபடிக்கு நிரூபங்கொண்டு வந்திருக்கிறேனென்று தெரியப்படுத்தினார் அதற்கந்த கோவிந்தபட்டர்வந்திருக்கும் பிராமணச்சிறுவனைக்காண்பதற்கு ஒழிவில்லாமல் பிராமணர்களுக்குத்ததியாராதனஞ் செய்துக்கொண்டு வெளியில்வருவதற்கு தீர்க்கையில்லாமையினாலே எம்பெருமானார் எழுதியனுப்பிய நிரூபத்தைத் தருவித்து அதில்வரைந்திருப்பதை உணர்ந்துக்கொண்டு காரியத்தின்மீது கவனித்திருந்தனர்.

இவ்வாறு கோவிந்தபட்டர் ததியாராதன விஷயத்தில் கவனித்திருக்க நாடிவந்தபிராமணச்சிறுவன் விரைந்தெழுந்து சென்று ஸ்நாநுட்டானங்களைமுடித்துக்கொண்டுவந்து மறுபடியுந் திண்ணையின்மீது வீற்றிருந்து பசிநோயினால் வேதனைப்பட்டுக் கொண்டு கோவிந்தபட்டர் எப்போது வெளிக்கி வருவாரோ வென்றெதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்அப்போது பகல் நான்காஞ்சாமமாயினதால் கடசிபந்திக்கி சில பிராமணர்களை ஒக்காரவைத்து இன்னும்யாரேனும் வெளியிலிருக்கின்றார்களா வென்றுபார்க்கும்பொருட்டு கோவிந்தபட்டர் வெளிப்பட்டுவந்து பார்க்கிறபோது எவர்களுமில்லாமல் பிராமணச்சிறுவன் ஒருவனே இருக்கக்கண்டு அப்பிராமணச்சிறுவனையோர் திறையில் உட்காரவைத்தார் அதைக்கண்டு அங்கிருந்த பிராமணர்கள் இவனாரோ புதுமையா யிருக்கின்றான் இவனுடன் நாங்கள் பிரசாதம்புசிக்க சம்மதிக்கமாட்டோ மென்றனர்கள் அதைக்கேட்டு கோவிந்தபட்டர் அப்பிராமணச்சிறுவனை அழைத்துச்சென்றுமைத்தோர்திறையினில் வுட்காரவைத்தனர் அங்குள்ளவர்களும் பிராமணச் சிறுவன்மீது சந்தேகங்கொண்டு கோவிந்தபட்டரை நோக்கி ஓசுவாமி அப்பிராமணச்சிறுவனை நாங்கள் என்றுங்கண்டதில்லை இவனிப்பிரதேசத்துக்குப் புதுமையாயிருப்பதால் இவனுடைய அனுட்டான சீலகுணங்களைநாங்களறியோமாதலால் இவனுடன் புசிக்கச் சம்மதியோ மென்றனர்கள் அதைக்கேட்டு அந்த கோவிந்தப்பட்டர்மைத்துமுள்ள திறைகளிலும் இந்தப்பிராமணச்சிறுவனை அழைத்துப்போய் உட்காரவைத்தார்அந்ததிறைகளிலிருப்பவர்களும் அம்மாதிரியே சொல்லியபடியால் கோவிந்தபட்டர் அந்தப்பிராமணச் சிறுவனை அழைத்துக்கொண்டுபோய் புழக்கடையிலோர் பக்கத்தினில் உட்காரவைத்துப் பிரசாதம் பரிமாரச் சொன்னார் அந்தப்படியே பரிசாரகர்கள் பரிமார அப்பிராமணச்சிறுவன் தன்னை ஒவ்வொருதிறையிலுள்ளபிராமணர்களும் நிராகரித்ததை மனதினில்வையாமல்பரமசாந்த சொரூபியாகி பிரம்மானந்தமாய்ப்பிரசாதத்தை ஸ்வீகரித்து சந்தன காப்பணிந்து பழையபடி திண்ணையின்மீது வீற்றிருந்தனர் அப்போது கோவிந்தப்பட்டர் யாதொரு விக்கினமுமின்றித் ததியாராதனத்தை நடத்தி மத்தவனும் பிரசாதஞ் ஸ்வீகரித்து மெத்தகுதூகலத்துடன் வெளியில்வந்து பிராமணச்சிறுவனிருக்குந் திண்ணையின்மீது அருகினில் வீற்றிருந்தனர் அப்போது பிராமணச்சிறுவனெழுந்து பயபக்தி விசுவாசத்துடன் அவரைப்பணிந்து ஓ சுவாமி அடியேனுடைய மனக்குறை தீரும்படிக்கிருபைபுரிய வேணுமென்று வேண்ட அதற்கு கோவிந்தபட்டர் பிராமணச் சிறுவனைநோக்கி அப்பாசிறுவனே நின் மனதிலிருக்குங் குறையென்ன அதை வெளியிட்டால் உனக்குற்றசங்கை தீரும்ப்டி யான் விரிவாகத்தெரிய உறைக்கின்றேனென்றனர் அதற்கந்தப் பிராமணச் சிறுவன் ஓசுவாமி உலகத்தினில் எந்தகுணத்தினாலே

பாகவதனுகுரான் இந்தசங்கையைத் தீரும்படி அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருள வேணுமென அப்போது ததியாராதனஞ் செய்த பிராமணர்கள் யாவரும் ஒருங்குசேர்ந்து இன்றுயேதோ விசேஷகாலக்ஷேபம் நடக்கப் போகிறதாய் தோன்றுகின்றது. போய் கேட்போம் வாருங்களென்று எல்லோரும் வந்து அங்குவீற்றிருந்தனர்கள் அப்போதுகோவிந்தபட்டர் பிராமணச்சிறுவனை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுகின்றார் ஓய்பிராமணச் சிறுவரே நீகேட்டசங்கையானது மெத்த அருமையிலும் அருமையாகும் இதையெவர்களும் நாளதுபரியந்தங்கேட்டதேயில்லை அப்படிப்பட்ட சங்கையை நீகேட்கமுயன்றபடியால் யான்மிகவும் நின்மீது சந்தோஷமடைந்து புகலுகின்றேன் இதை சஞ்சல மில்லாமல் திடச்சித்தமாய்க் கேட்டு சங்கைதீரக் கடவாயென்று சொல்லத் தொடங்கினார்.

கேளாய் பிராமணச்சிறுவனே பாகவதன் யெப்படி யிருப்பனென்றால் கொக்கைப்போ லிருப்பன் கோழியைப்போலிருப்பன் உம்மைப்போலிருப்பன் கொக்கைப்போ லிருப்பனென்றால் அதெப்படியெனில் "ஓடிமீனோடி ஒருமீன்வருமளவும் வாடியிருக்குமாங்கொக்கு" என்பதைப்போல தண்ணீர்ஓடும்சிறியகால்வாயின் ஓரத்தில்தலைசாய்த்து வாடியிருந்துக்கொண்டு சிறியமீன்களை யெல்லாம் போகவிட்டுப் பெரியமீனை வரப்பார்த்துப் பிடித்துப்புசிக்கும் கொக்கைப்போல அற்பமந்திரங்களை யெல்லாம் விடுத்து பெரிய திருமந்திரத்தை யுணர்ந்து இடைவிடாமல் எப்பொழுதுந் துதிசெய்யுமவன் பாகவதன் கோழியைப்போலிருப்பன்என்றால் அதெப்படியெனில்குப்பையைசீய்த்து அதிலிருக்கும் மணிகளைப் புசித்துப் பசியாருங்கோழியைப்போல சாஸ்திரக்குப்பைகளை யெல்லாந்தள்ளி சாரமாயிருப்பதைமனத்திற்பதித்து சந்தோஷித்து யிருப்பவன் பாகவதன் உம்மைப் போலிருப்பவன் என்றால் அதெப்படியெனில்உப்பானது தண்ணீரிற் சேர்க்கப்பட்டு தன்னிறம்மாறிபிறருக்கு இனிப்பையுண்டாகச் செய்வதுபோல ஏழைகளுக்கு சிரமப்பட்டுத் தன்ரூபத்தைக் கொடுத்தாகிலும் யீவிஅளிப்பவன் பாகவதன் உம்மைப்போலிருப்பன் என்றால் அதெப்படியெனில் பிரசாதம் ஸ்வீகரிக்கும் பொருட்டு பலதிரைகளில் உட்காரவைத்த போது ஒவ்வொருதிரைகளிலும் இருந்த பிராமணர்கள் உம்முடன்புசிக்க சம்மதியாததால் அதற்கு எள்ளளவேனுங் கோபங்கொள்ளாமல் பரமசாந்த சொரூபியாயிருந்து புழக்கடையில் பிரசாதம் ஸ்வீகரித்தபடியாறும் உம்மைப்போல பொருமை யுடையவர் பாகவதன் என்று உபந்நியாசஞ் செய்யக்கேட்டுஅங்குள்ள பிராமணர்கள் யாவரும் அந்தப்பிராமணச் சிறுவனை இவரே பாகவதராகுமென்று கொண்டாடி அந்தபாகவதரை சிலவருடகாலம் அந்தத் திருமலையில் வாசஞ்செய்யும்படி வைத்திருந்து வெகுகன்னியமா யந்தப்பிராமணரை யனுப்பி வைத்தனர்கள் ஆகையால் அந்தப்பாகவதருக்கு நிகராவையோ கள்ளவேடந்தரித்து வயிறுவளர்க்கப் பொய்பேசித் திரிகிற உன்னுடையசொல்லை நம்பிவிடுவேனென்று கிஞ்சித்தேனும் கருதாதே யென்றுசொல்லி ஆர்ப்பரித்துக்கொண்டு தன்னருகில் வருவதைக்கண்டு அந்த விப்பிரநாராயணர் மெய்நடுங்கி பெருமூச்சுவிட்டுநாவுலர்ந்து பிரமராக்கதனை வணங்கி இணங்கி மெல்லிய குரலுடன் சொல்லுகின்றார்.

ஓ பிரம்மராக்கதனே இப்போது நீசொல்லிய பாகவதலட்சணம் உண்மையே அதைப்போல யான் பாகவதனென்று சொல்லவில்லை அந்தலட்சணங்கள் என்னிடத்திலிருக்குமாகில் நீஇத்தனை அலட்சியமாகப்பேசி என்சமீபத்தில் நீவருவையோ உண்மையாகவே என்னுடைய திரேகத்தை உனக்குணவாகும்படித் தரமாட்டேனென்று யான்சொல்லவில்லையேலட்சுமிநாராயணரை சேவித்துவந்து உனக்குணவாகின்றேன் என்றுசொல்லியும் அதற்கிசைந்து அனுப்பாமல் உக்கிரங்கொண்டு என்மீது முனைந்துவருகின்றீர் என்னுடையசொல்லை சத்தியமென்று நம்பி என்மீது கொண்டிருக்குங் கோபத்தைமாத்தி உமக்குணவானபோதிலும் எனக்கு நற்கதி யுண்டாகும்படி கிருபை செய்து என்னை பகவானை சேவித்துவரும்படி விடைதந்தனுப்புமையாவென்றுவேண்டிக்கொண்டும் அந்த பிரமராக்கதன் கேளாமல் எறிந்து பொறிந்து பற்களை நறநறெனக்கடித்து மீசை படபடெனத்துடிக்க மெத்தசினங்கொண்டு அடாபாதகா விசுவாசகாதகா இனியவசனங்களைப்பேசி என்மனதைக் கரையச் செய்து தப்பித்துக்கொண்டு போகவேணுமெனக்கருதி ஏதேதோ தந்திரங்கள் செய்கிறாய் இதச்கெல்லாம் நான் சம்மதிப்பட்டு உன்னைப்போக விடுவேனென்றுப் பன்னிப்பன்னிப் பேசவேண்டாம் என்றுசொல்லிக்கொண்டு சமீபித்துவந்தான் அதைக்கண்டு விப்பிரநாராயணர் மெத்தமனங்கலங்கி ஓ பிரம்மராக்கதனே முன்னம் இதைப்போலவே ஒருவிசேஷம் நடந்திருக்கின்றது அதையுமக்குயான் சொல்லுகின்றேன் அதைக்கேட்டு அந்தப்படியுனக்கு சம்மதியா யிருந்தால் பகவானைசேவித்து வரும்படி எனக்குநீர்விடைதந்தனுப்பும் இல்லாவிடில் உமதிஷ்டத்தைப் போல

என்னை உணவாகச்செய்துக் கொள்ளக் கடவீரெனக் கேட்டு அந்தப் பிரம்மராக்கதன் அதென்னவிசேஷம் சொல்லுமையாவென அதற்கு விப்பிரநாராயணர்சமதித்து பிரம்மராக்கதனை உட்காரவைத்து கொண்டு கேளும்பிரம்மராக்கதனே திருக்குருங் குடியெனுந் திவ்ய க்ஷேத்திரத்திற்குப் புரம்பாய் சேரியொன்றுண்டு அந்தச்சேரியில் பஞ்சமகுலத்தினிற்பிறந்தபாகவதரொருவரிருந்தார் அவர் சகலவேத வேதாந்த சாஸ்திரபுராண இதிகாசங்களில் வல்லவர் சாத்மீகர்களுக்குநல்லவர் தாமசர்களுக்குப் பொல்லார் நிர்மலமானக்ஞான வைராக்கியத்தினில் சம்பன்னர் கர்ம்மயோகத்தினில் விற்பன்னரும் பிரமன்னர் ஸ்நாநுட்டானங்களில் மெத்தசிலருமாகி யிருந்தனர் ஆனலிவருக்கு ஜீவனமெப்படி யெனில் வீணைகானத்தினில் தேர்ச்சியடைந்த தும்புருநாரதர்க்காகிலுஞ் சிறந்தவராகையால் காலையிலெழுந்துபூஜை அநுட்டானங்களை முடித்து வீணைகாணத்துடன் பகவந்நாம சங்கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு அந்தசேரியை வலமாகவருவர் அப்படியவர் வருவதைக்கண்டு அச்சேரியில் வசிப்பவர்கள் மெத்தபயபக்தி விசுவாசத்துடன் அமுதுபடைக்க அவ்வமுதை யெடுத்துவந்து சமைத்து பகவானுக்குக் கண்டருளப்பண்ணி அப்பிரசாதத்தைப் புசித்து பகற்காலமெல்லாம் பகவந்நாம தியானத்தால் பொழுதுபோக்கிநடுராத்திரியானவுடனேவீணையைக் கையிற் பிடித்துக்கொண்டு சேரியைவிட்டு வெளிப்பட்டு நடுவினிலிருக்கும் வனத்தைக்கடந்து வடபெருங்கோயிலை யடுத்து வீணைகானத்துடன் பகவந்நாம சங்கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே வெளிப்பிரகாரத்தை வலம்புரிந்து வருவர் இந்தப்படி தினந்தோருந்தப்பாமல் மழையிடி மின்னல்களா யிருக்கினும் சலியாமல் நடந்து வந்தனர்.

இவ்வண்ணம் சிலவருடகாலம் நடந்து வருகிறபோது ஒருநாள் வழக்கப்படி நடுராத்திரியினில்அநுட்டானமுடித்து வீணையைக்கையிற் பிடித்து வீணைகானத்துடன் பகவந்நாம சங்கீர்த்தனைகளைபாடி யாடிக்கொண்டே தன்னைமறந்து நடந்து மார்க்கத்தை விடுத்து காட்டின்மார்க்கமாய் செல்லுகையில்அங்கொரு பிரதேசத்திலிருந்தோர் தொனியுண்டாயிற்று அத்தொனியினால் அவர்பக்திகலைந்து இதென்ன நாம் வழியை விடுத்துக் காட்டின் வழியாய் நெடுந்தூரம் வந்து விட்டோமே இங்கென்னமோ ஓசையுண்டாயினதே பேயோ பூதமோ ஆரவாரஞ்செய்கிறதே எதுவெப்படி யிருந்தாலென்ன நாம் நாடிவந்த வடபெருங்கோயிலை அடைவதே நமக்குப் பேரின்பமெனக் கருதி அவ்விடத்தைவிட்டுத்திரும்பினர் அதைகண்டு அவ்விடத்தில் வசிக்கும் பிரமராக்கசன் ஓடோடியும் வந்து அந்தபாகவதரைப் போகவிடாமல் வழிமரித்துக்கொண்டு ஆரடாபோகிறவன் நில்லு நில்லடா என்னுடைய காட்டில் அச்சம் பயமில்லாமல் வந்து என்னுடைய ஆரவாரத்தைக் கேட்டு பயந்தோடினால் யானுன்னைவிடுவேனே நெடுநாளாய் நரமாங்கிசம்புசிக்கவேணுமென்ற ஆசைகொண்டிருந்தேன் அவ்வாசைதீரும்படி பகவான் உன்னை இந்தயிரவுகாலத்தினிலென்னிடம் அனுப்பினர் என்னுடைய யெண்ணம் நிறைவேறுங் காலமுமிதேயாகும் அன்றியும் இப்போதெனக்கு மெத்தப்பசியா யிருக்கின்றதுபசியார நீ எனக்குணவாகும் பொருட்டு சீக்கிரம் என்னருகில் வாடாவென்று ஆரவாரம்செய்ய அதைக்கேட்டு அப்புரம் பாகவதர் திடச்சித்தத்துடன் ஓபிரம்மராக்கதனே இத்திரேகம் நீர்மேற்குமிழி நிலையில்லாக்காயம் எத்தனைநாளைக்குப் பூமியிலிருக்கினும் ஒருநாளைக்கழிந்து போவதுதிண்ணம் ஆகையால் உன்னிஷ்டப்படியே யானுனக்குணவாகிறேன் இது சத்தியம் யென்றுநம்பி என்னை வடபெருங்கோயில் எம்பெருமானை சேவித்துத் திரும்பிவரும்படி கிருபைசெய்தனுப்புமையா வென்று வேண்டிக்கொண்டனர் அதற்கந்த பிரமராக்கதன் கடுகடுத்து அடா மாடுதின்னும் புலையா ஆடுதின்னும்புலையா மெத்தநன்றாயிருக்கிறது ஜாதியிற்புலையன் அனேகபிராமணர்கள் திருக்கூட்டமாயிருக்கும் வடபெருங்கோயில் எம்பெருமானிடத்துக்குப் பஞ்சமனாகிய நீ அக்கூட்டத்திற்குள்சென்று எம்பெருமானை சேவிக்க உன்னாலாமோ அவ்விடத்திற்கு நீசெல்வாயாகில் அங்குள்ள பிராமணர்கள் உன்னை எளிதில்விடுவார்களோ நையநறுக்கி உன்னுயிரைப்போக்கி விடுவார்களன்றோ ஆகையால்நீசொல்வது பொய்வார்த்தை இப்படி பொய்வார்த்தை சொல்லி எம்பெருமானை யோர்போக்குகாட்டி ஓடிதப்பிப் பிழைத்துப் போகலாமென்று யோசித்து நயமொழிகள் புகன்றால் உன்னைவிட்டு விடுவேனோஇனி நீஉயிருடன் போவாயென்பதைக் கனவிலும் நினையாதேயென அதற்கந்த பாகவதர் பிரம்மராக்கதனை நோக்கிச் சொல்லுகின்றார்.

கேளுமையா பிரம்மராக்கதனேயான்சொல்வது பொய்வார்த்தை யென்றல்லவோ புகன்றீர் இதற்குப் பிரமாணஞ்செய்கின்றேன் அதென்னவெனில் யான் சென்று வடபெருங்கோயிலையடுத்துபிராமணர்களிருப்பிடத்தில்தலைகாட்டாமல்வெளிப்பிரகாரத்தைவீணைகானத்துடனும் பகவந்நாம சங்கீர்த்தனை பாடிக்கொ

ண்டே வலம்புரிந்து சேவித்துத் திரும்பிவந்து யானுனக்குணவாகாமற் போவனேயாகில் ஐயமிட்டு உண்ணுதவனும் ஒருகுடித்தனத்தைக்கெடுத்தவனும்அகத்திலொன்றை வைத்துக்கொண்டு புறத்திலொன்றைப் பேசுபவனும் செய்தநன்றியை மரந்து அவர்களுக்குத் தீங்குசெய்யநினைத்தவனும் கொலைசெய்யும்பாதகனும் அவசியம் வருகிறேனென்று கைபோட்டு அந்தப் பிரமாணத்தை மரந்தவனும் கன்றுக்குப் பாலைவிடாமல் யாவத்தையுங்கரந்துக்கொண்டவனும்எந்தகெதியிற் சேருவார்களோ அந்தகெதியில் யான்சேரக்கடவேன் மேலும் ஆறுகுளங்களில்கௌபீனமின்றி சுபமனத்துடன் நடந்தவனும் அன்னைவார்த்தை தந்தைவார்த்தை குருவின்வார்த்தைகளைக் கடந்து நடந்தவனும் பெரியோர்களைக் கண்டெழுந்திராமலிருந்தவனும் திருடனுக்கிடங் கொடுத்தவனும் இடங்கொடுத்து அவன்பின்னே தொடர்ந்தவனும் நன்று தீது உணர்ந்திருந்தும் செடியிலே தலைதுருத்துக் கொண்டவனும் எந்தகெதியிற் சேருவர்களோ அந்தக்கெதியில் யான் சேரக்கடவேன் என்று இத்தனைபிரமாணங்களைச் செய்தும் அந்தபிரம்மராக்கதன் கேளாமல், உக்கிரங்கொண்டு ஆர்ப்பரித்து ஆவெனத் திரந்துக் கொண்டு சமீபித்துவரக்கண்டு பாகவதர் திடுக்கிட்டு அப்பிரமராக்கதனைப் பணிந்து ஓஐயா பிரம்மராக்கதரே இன்னொரு விசேஷ பிரமாணஞ் செய்கிறேன் அதையாகிலும் நம்பினாலும்நம்பும் இல்லாவிடில் உமதிஷ்டத்தைபோலநடந்துக்கொள்ளும் அதென்னவெனில் வடபெருங்கோயில் எம்யெருமான் திருவடிகள் மீது ஆணையாய் அவ்வெம்பெருமானை சேவித்துத் திரும்பிவந்து உமக்கு உணவாகின்றேன் என்றுசொன்ன மாத்திரத்தில் பிரம்மராக்கதன்சந்தோஷித்துப் போய் வாருமையாவென்று பணிவுடன் சொல்லக் கேட்டு பாகவதர் இனியில்லாத ஆனந்தமடைந்து அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு சிறிதுதூரம்நடந்து வழிதெரியாமல் மயங்குகிறபோது வடபெருங்கோயில் எம்பெருமான் பிராமணரூபமாய் அவிடத்திற்கு வந்து பாகவதரைப் பார்த்து இங்குயேனையா வந்தீர் இதுகானகமென்று தெரியாயோ துஷ்டதேவதைகளும் துஷ்டமிருகங்களும் வசிக்குமிட மெனக்குறியாயோவென அதற்குபாகவதர் பயபத்தி விசுவாசத்துடன் எட்டப்போய் நின்றுக்கொண்டு ஓசுவாமி யான் பஞ்சமன் வழிதெரியாமல் இம்மார்க்கமாய் வந்துவிட்டேன் வடபெருங்கோயிலுக்குப் போகும் மார்க்கம்யெது அதைதயவுசெய்து காட்டுமையா வென்று பணியக்கண்டு மாயப் பிராமணர் ஓய் பாகவதரே இதோ இந்தமார்க்கமாய்ச் சென்றால் சன்னிதானத்திற்கு நேராய்ப் போகின்றதென்று வழிகாட்டிமாயமாய் மறைந்துபோயினர் அதைக்கண்டு பாகவதர் ஆஹா இதென்ன ஆச்சரியம் நமக்கு வழிகாட்டின பிராமணனைக் காணோமே எப்படிப்போயினரென்று நான்குதிக்கிலும் பார்த்துக் காணாமையால் அப்பிராமணர் எம்பெருமானே என்றுதீர்மானித்துகாடாந்தகாரமான காட்டிற்குவந்து தனக்குவழிகாட்டிய நன்றியை உணர்ந்து ஆபத்பாந்தவா அனாதரட்சகாவென்று துதிசெய்துக் கொண்டே நடந்து வடபெருங்கோயிலையடுத்து எட்ட நின்று சன்னிதானத்தைப் பார்க்கையில் சன்னிதியைச் சூழ்ந்துக்கொண்டு அளவிறந்தப் பிராமணர்கள் யிருப்பதைக்கண்டு இன்றென்னமோ விசேஷமாகக் காணப்படு கின்றதென்று கணக்கிட்டுப் பார்க்கையில் அன்றுகைசிக ஏகாதசியெனயறிந்து மெத்தசந்தோஷமாய் வீணாகானத்துடன் பகவந்நாம சங்கீர்த்தனைகளை கைசிகராகத்திற் சேர்த்துப்பாடித் தன்னைமரந்தாடிக்கொண்டேமாடவீதியை வலமாகவந்து சன்னிதானத்திற் கெதிரில் நின்று ஓஜெகதீசா சிலவருடங்களாய் ஒருநாளேனுந் தவராமல் தினமும்வந்து தேவரீர் சன்னிதானத்தின் முன்னம் நின்றுசேவித்து ஆனந்தமடைந்துக்கொண்டிருந்தேன் இன்றுடன் உமதுசேவைக்குப் பாத்திரனல்லாமல் இப்போதுசென்று பிரம்மராக்கதனுக்கு உணவாகப்போகிறேன் இனி எத்தனைஜென்மங்களெடுக்கினுந் தேவரீருடைய திருவடிகளை மரவாமலிருக்கும்படி கிருபைசெய்ய வேணுமென்று பிரார்த்திக்கக்கேட்டு எம்பெருமான் மனங்களித்துப் பரமானந்தபரிதராகி அங்குள்ள பிராமணர்களைநோக்கிஓதிரிதண்டம்பிடித்தசன்னியாசிமுதலான்பிராமணர்களே (நம்பாடுவார்) நம்பாடுவாரென்றால் நம்மைக்கைசிகிராகம்பாடி உரப்பிக்கும் பரமபாகவதர் வந்திருக்கின்றார் சன்னிதியைவிட்டு சற்றேவிலகி யிருங்களென்றுக் கட்டளையிட்டார் அந்தப்படியே பிராமணர்கள் முதலானோரும் சந்நிதியைவிட்டுவிலகியிருந்தனர்கள் அப்போது நம்பாடுவார் பகவானைசேவித்துப் பலவாறு துதிசெய்து யான்போகிறேன்உமதுசெயலைப்படியோ யானறியேனென்று அனேக விதங்களாக தியானஞ்செய்துக் கொண்டே பிரம்மராக்கதன் மெத்தப்பசியினால் வாடிவதங்கிப் போவரெனக் கருதி விரைவாக நடந்து காட்டையடைந்து ஓபிரம்மராக்கதரே இன்னாள் நன்னாளாகும் உனக்குயானுணவாகி பசியாற்ற என்னபுண்ணியஞ் செய்தேனோ என்பாக்கியமே பாக்கியம் எவர்க்குண்டிந்த சிலாக்கியமும் யோக்கியமும் பசிநோயால் என்னகஷ்டப் பட்டுக்கொண்டிருக்கின்றீரே சீக்கிரம்வாரும் என்திரேகத்

தைப் புசித்துப்பசிதீரும் என்னைக்காரும் யான்சொல்லிய சத்தியமொழியைப் பாரும் என்று வேண்டிக் கொண்டனர்.

இப்படி வேண்டிக் கொள்ளும் மொழிகளைக் கேட்டு அந்த பிரம்மராக்கதன் நம்பாடுவாருடைய சத்தியனிலமைக்கு மெத்தசந்தோஷித்துசுகுணவிசேஷத்தையும் பகவத்பக்திவைராக்கியத்தையும் ஆலோசித்து இவர்குலத்திலே பெரியவராக விருக்கின்றார் இப்படிப்பட்ட புண்ணியசீலரை உயிருடன் வதைத்துப் பசிதீருவனேயாகில் பாகவதவதை தந்தபடலமாகுமே பகவானிடத்தில் அபசாரப்பட்ட போதிலும் பாகவதபுருஷா காரத்தினலே அபசாரத்தைப் போக்கிக்கொள்ளலாம் பாகவத அபசாரபபட்டால் பகவானலு மற்றுமெவர்களாலும் போக்குவதரிதாகும் என்று நம்பாடுவாரை சேவிக்க பிரம்மக்ஞானமுண்டாகி இந்தக்கொடியகாரியம் நாம்செய்யத்தகாதென்று மனதிலுத்தேசித்து ஐயா நம்பாடுவாரே பூர்வஜென்மபாபத்தால் நானிக்கொடிய பிரம்மராக்கதனை அவதரித்து அநேகபாபங்களெல்லாம் இந்த ஜென்மத்திலுஞ்செய்து கொடியபாபியாகினேன்இது போதாமல் உன்னைப் புசிப்பேனகில் தக்தபடலமாயெறிந்துபொறிந்து கறிந்து அழிந்துபோவேன்இதிலெள்ளளவேனும் பிசகாது என்மீது கிருபைகூர்ந்து தாங்கள் தினமும் கைசிகராகம்பாடி பகவானையுகப்பிக்கும் புண்ணியபலத்தினில் எட்டிலொருபங்கை எனக்குத்தத்தஞ் செய்தால் அதைசுகுர்த விசேஷத்தால் பூர்வஜென்மத்தைப் பெற்று பரலோகசாம்பிராச்சியத்தை யடைகிறேன் இந்த ஏழையின்மீதுகருணை செய்யுமையாவென்று பணிந்தான் அதைக்கண்டு நம்பாடுவானும் பிரம்மராக்கதனைப் பணிந்து ஓஐயாபிரம்மராக்கதரே முன்னந் தாங்களெந்த வஸ்துவைக் கேட்டீரோ அந்தவஸ்து உமக்குக்கொடுக்கத் தடையில்லை அவ்வஸ்துவைவிடுத்து வேறுபொருளைக்கேட்டால் அதையான்கொடுக்க சம்மதிப்பட மாட்டேன் என்னைப் பொய்யனென்றும் பிரட்டனென்றும் புகன்ற தாங்கள்பொய்யனும் பிரட்டனுமாவது தருமமல்லவென்றுசொல்லி பின்னுஞ் சொல்லுகிறார் ஓய் பிரம்மராக்கதனே உமக்கிந்த ஜென்மம் வந்ததற்குக் காரணமென்ன உமது விருத்தாந்தத்தைஒளிக்காமற் சொல்லுமையாவென்று வினவினர்.

இவ்வாறு பூர்வஜென்ம விருத்தாந்தத்தைச்சொல்லும்படிவினவிய நம்பாடுவானைநோக்கி பிரம்மராக்கதன் சொல்லுகின்றான் கேளுமையா பரமபாகவத சிகாமணியே யான்முன்ஜென்மத்தில்பிராமணன்என் பெயர்சுசர்ம்மா நான்கல்வி கற்கவேணுமென்றுகானகத்திற்குச்சென்று அங்குதவமியற்றிக்கொண்டிருந்த பெரியவரையடுத்து நெடுநாள் தொண்டுசெய்து வந்தேன். அப்பெரியோருந் தவப்பூர்த்தி யானவுடன் என்மீதுகிருபை யுண்டாகி வேறொருவனத்தையடைந்து இரவும்பகலும் நித்திரையில்லாமல் கல்விகற்பித்துக் கொண்டிருக்கையில்ஒருநாளிரவில்மிருகங்களின் கோஷ்ட மதிகரித்திருந்தமையால் கல்விசொல்லவும் கல்விகற்கவும் தடையாயிருக்கிறதென்று யோசித்து ஓர் ஆலமரத்தின்மீதுயேரி என்னையும் ஏரிவரச்சொல்லி என்னையொரு கிளைமீதிருக்கச் சொல்லித் தானுமொருகிளைமீ திருந்துக்கொண்டு அவர்சொல்லயான் கற்க இப்படி நடுராத்திரியாயிற்று அபபோதந்தத் தவசி என்னைநோக்கி அடாசீஷா உனக்கு நித்திரையாயிருக்கிறபடியால் நீசற்றுநேரம் என்மடியின்மீது படுத்து நித்திரை செய்யென்று என்னைப்படுக்கவைத்துக்சொண்டார் யானும்சிறிதுநேரம்நித்திரைசெய்து எழுந்தேன் அப்போதவர் என்னைப்பார்த்து அடாசீஷா நான்சற்றுநேரம் நித்திரைசெய்கிறேன் நீவிழித்துக்கொண் டிருக்கக்கடவா என்று கட்டளையிட்டு நித்திரைசெய்துக் கொண்டிருந்தனர் யானும் அவர் கட்டளைப்படி விழித்துக்கொண்டே யிருக்கிறபோது என்னையும்மரந்து நித்திரை எனக்குவந்துவிட்ட படியால் யான் அந்தநித்திரையில்தவரி ஆசான்மீதுயான் விழ அவருந்தவரி பூமியின்மீதுவிழ யானும் வீழ்ந்தபடியால் ஆசானுக்குக் கோபமீறி என்னுடைய கட்டளையை நீமீறியபடியால் பிரம்மராக்கதனைக்கடவாயென்று சபித்தார் அப்போது யான்பயந்து அவரைப்பணிந்து நயந்து சாபவிமோசனஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ள அவரும்மனமிளகிஅடாசீஷாநான் கொடுத்தசாபம் தவரமாட்டாது சிலவருடம்நீபிரம்மராக்கதனை விருந்து உத்தமபாகவத சேவையால் பிரம்மராக்கதஉருமாறி சுயரூபத்தைப்பெற்றுசாம்பிராஜ்யபதவி யடையக் கடவாயென்று கிருபைகூர்ந்தனர் என்று சொல்லக்கேட்டு நம்பாடுவான் மனங்கரைந்து கைசிகராகம்பாடின பதத்தில் நாலிலொரு பங்கை அந்தப் பிரம்மராக்கதனுக்கு தத்தஞ் செய்த மாத்திரத்தில் அந்தப் பிரம்மராக்கத உருவமாறி சுயரூபத்தைப் பெற்று விமானத்தின்மீதேறி அழியாத பதவியை அடைந்தனர் ஆகையால் ஓ பிரம்மராக்கதரே நீரும் என்சொல்லை நம்பி எனனை அனுப்பினல் உமக்கும்நற்பதவி பகவான்கிருபைசெய்வானென்னக் கேட்டு மனமகிழ்ந்துப் போய் வாருமையா வென்று விடைதரப் பெற்றுக்கொண்டு நடந்தார்.

இவ்வாறு விப்பிரநாராயணர் பிரம்மராக்கதரிடத்தில்விடைபெற்றுக்கொண்டு லட்சுமிநரசிங்கமூர்த்தி சந்நிதானத்தைநோக்கி நடந்து சந்நிதியின் முன்னின்று பார்க்கத் திருக்காப்பிட்டிருந்த படியால் உள்ளேபோகவும் பகவானைசேவிக்கவும் தடைபட்டதை பத்தி மெத்த விசனமடைந்து ஆஹாநம்முடைய நிர்ப்பாக்கிய திசையை என்னவென்று சொல்லுகிறது இத்தனை சிரமப்பட்டு பிரம்மராக்கதனிடம் விடைபெற்றுக்கொண்டு இவ்விடம்வந்தும் அகாலமாயினதால் கதவுகள்மூடி குச்சிபோட்டு அர்ச்சகர்கள்போயினர். சொற்சோர்வுபடாமல் திரும்பிசென்று பிர்ம்மராக்கதன்பசிதீர நமதுதிரேகத்தை உணவாகக்கொடுப்பதே சத்தியகிலமையாகும் எனக்கருதி துவாரத்தின்முன்னின்று ஒகஜேந்திரவரதா பிரஃலாதவரதா பாபஹரணு சர்வேசா ஜெகதீசா பாபநாசா பக்தநேசா தொண்டருளத்தில் வாசா கோடிசூரியப் பிரகாசா கோடிமன்மததேஜா ஆசாபாசவிநாசாவெனப் பலவாறுதுதித்துப் பின்னுஞ்சொல்லுகின்றார் ஓஆதிமத்யாந்தரகிதா எள்ளுக்கு ளெண்ணெய்போல எங்கும்வியாபித்து சகல ஜீவராசிகளிடத்தும் உள்ளும்புரம்புமாய் வசிக்கும் பரமதயாளா உமக்குத் தெரியாததொன்றில்லை யாவுந்தெரிந்தவரானபடியினாலே நான்சொல்லவும் வேணுமோ அப்படியாவுந் தெரிந்தவரா யிருக்கினும் என்னுடைய மனோபாவத்தை என்வாக்கினாலேயே சொல்லக் கேழ்க்க வேணுமென்ற அபிப்பிராய மிருக்கிறாப்போலத் தோன்றுகின்றது ஆகையால் யானேசொல்லுகிறேன் செவிசாத்தி கேழ்க்கவேணும் ஒ அந்தராத்துமாவே யான் எத்தனையாய் முறையிட்டும் உமதுசேவை கிடைக்கவில்லை சந்நிதியும் மூடப்பட்டிருப்ப தன்னியிலும் என்மனக்குறையாகவே யிருக்கின்றது பிரம்ம ராக்கதனுக்கு யான்சொல்லிவந்த சத்தியமொழி தவராமல் யான் சென்று என்திரேகத்தை உமக்கர்ப்பணஞ் செய்து பிரம்மராக்கதனுக் குணவாகும்படி கொடுக்கப் போகிறேன் இவ்வுலகினில் யான் எத்தனை ஜென்மங்களெடுத்தபோதிலும் தேவரீருடைய திருவடிபக்திமரவாமலிருக்கும்படி யருள்புரிய வேணுமென்று வினயத்துடன்சொல்லி தீர்க்கதெண்டனிட்டார் அப்போது பகவானுடைய கிருபையால் படாலென்று சந்நிதி கபாடம் திறந்துக்கொண்டது அதைக்கண்டு விப்பிரநாராயணர் மனமகிழ்ந்து சந்நிதிக்குட்புகுந்து வலம்புரிந்து மூலவரையும் உற்சவரையுஞ் சேவித்து ஆனந்தங்கொண்டு சந்நிதியைவிட்டு வெளிப்பட்டுநடந்துத் தடாகக்கரையை யடைந்து ஒபிரம்மராக்கதரேவிரைவாகவந்து என்திரேகத்தைப் பசிதீரஉண்டு உமது கோரிக்கையை முடித்துக்கொள்ளு மையாவென்று கூவியழைத்தனர் அதைக்கேட்டந்தபிரம்மராக்கதன் ஒபிர்மசாரி பிராமணரே யான் பிராம்மணமாங்கிசத்தைப் புசிக்கவேணுமென்று அபேக்ஷித் திருந்தது உண்மையே அன்றியும் உன்னைப்போகவிடாமற் றடுத்து உன்திரேகத்தைப் புசிக்கஇச்சித்ததும் உண்மையேயானாலும் இப்போதெனக்கொரு யோசனையுண்டாயிருக்கின்றது அதென்னவெனில் நீர்சத்தியந் தவராமலும் சொற்சோர்வுபடாமலும் நற்குண நற்செய்கையுடைய உத்தம பிரம்மசாரியாயிருப்பதால்உம்முடைய திரேகத்தின்மீது இச்சைவைத்தால் எனக்கு அனந்தங்கோடி பாபங்கள்வந்தணுகுவ தல்லாமல் இந்ததுற்குணத்தினால் ரௌரவாதி நரகத்திற்குநான் ஆளாகவேண்டியவனாயிருக்கின்றேன் ஆதலால்உமது திரேகத்தைப் புசித்து கஷ்டத்தை யடைவதற்காகிலும் உம்மையடுத்து தொண்டுசெய்துக் கொண்டிருந்து உமக்கு அடியேன் விருப்பமுண்டாகிய போது உபதேசம்பெற்றுப் புனிதனாவதேபேரின்பவாழ்வென்று யோசித்து உயிருடன் உம்மைக்கொன்று புசித்துப் பிரம்மஹத்தி தோஷத்தை யனுபவிக்க மனமில்லாதவனாகி யிருக்கின்றேன் மேலும்யான் தங்களுக்கு மனமாரச்செய்த தப்புகளை யெல்லாம் ஒப்புகளாக்பாவித்து என்மீது கிருபைசெய்து அடைக்கலம்புகுந்தேன் கடைக்கண்பாருமையா வென்று சொல்லிக்கொண்டேவந்து அந்தப் பிரம்மராக்கதன் விப்பிரநாராயணர் திருவடிகளில் விழுந்துத் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு எழுந்திராமற் கிடந்தனன்.

இவ்வண்ணம் அந்தப் பிரம்மராக்கதன் தன்னுடைய திருவடியைப் பிடித்துக்கொண்டு எழுந்திராமற் கிடப்பதைக்கண்டு அந்தவிப்பிரநாராயணருக்குத்தியானம்பிறந்து ஒபிரம்மராக்கதனே உன்னிஷ்டப்படிக்கி யான்சம்மதித்தேன் நீ பயப்படவேண்டாம் என்காலைவிட்டெழுந்திருமப்பாசீக்கிரம்காலகதியிலே தானே பகவான் உனக்குக் கிருபை செய்வாரெனக் கேட்டு பிரம்மராக்கதன் மனமகிழ்ந்து விப்பிரநாராயணருடைய திருவடியைவிட்டு எழுந்து ஒசுவாமிஉம்முடைய மகிமையை அறியாமல்உமக்குக்கஷ்டத்தை செய்வித்து பெரும்பாவியாகும் எளியேனைப் புனிதனாகச்செய்யும்பொருட்டு யான்செய்யுந்தொண்டுகளை அங்கிகரிக்க வேணுமென்று பிரார்த்திக்க விப்பிரநாராயணரும் அப்படியே நடக்கக்கடவாயென்று ஆசிகூரிச்சிலநாள் அந்தஅகோபிலத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருந்தா ஒருநாள் தனக்குத்தொண்டுசெய்துக்கொண்டிருக்கும் பிரம்மராக்கதனை நோக்கி அப்பா

ஷனே நான்திவ்ய தேசயாத்திரை செய்யவேணுமென்றெண்ணித் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுவந்து இவ்விடத்திலேயே வெகுநாள் கடந்துவிட்டது ஆகையால் நான் யாத்திரைசெய்து வருமளவும் நீ இங்கேதானே சுகமாக இருக்கக்கடவா யெனக்கேட்டுபிரம்மராக்கதன்பணிந்து ஓசுவாமி யான்தங்களால் புனிதனாகவேணுமென்று கருதியிருக்க அடியேனைக் கைசோரவிட்டு தாங்கள்தனியேபோகவெண்ணுவது தருமமோ தங்களையொரு நிமைப்பொழுதேனும்பிரிந்து உயிர்தரிப்பேனோ பசியார உண்டுகளிப்பேனோ படுத்து நித்திரையும்செய்வேனோ செய்து சுகத்தையடைவேனோவென்றுக் கண்ணீர் ஆராய்ப் பெருகவிட்டுக்கொண்டு கதறுகிற பிரம்மராக்கதனைநோக்கி அப்பா ஷனேயான் போகிறதலங்களில் ஒவ்வொரு பிரதேசத்தினில் பசிக்குணவு கிடைப்பது அரிதாகயிருக்கும் ஆகையால் யான்கஷ்டப்படுவ தன்றியும் நீயும் கஷ்டப்படும்படி நேரிடும் மென்றுணர்ந்து உன்னை நிருத்திவிட்டுப் போகும்படி யெண்ணங் கொண்டேனேயல்லாமல் உன்மீதுபிரியமின்றி கைவிட்டுப்போகவும் நேசத்தைவிடுக்கவும்மோசவெண்ணங்கொண்டு இந்தப்பொய்மொழி புகன்றவனல்ல உனக்குக்ஷேமத்தையே கோருகின்ற வென்னை இப்படிக் கேவலமாகக் கருதவேண்டாமென்று புகலக்கேட்டு அந்தப் பிரம்மராக்கதன் விப்பிரநாராயணரை வணங்கி இணங்கி நமஸ்கரித்து ஓசுவாமி தேவரீரே யாத்திரைசெய்யுந்தலங்களில் உணவில்லாமல் சிரமப்பட்டுகொண்டு சஞ்சரிக்கிறபோது யான் சிரமப்படுவது ஒருபெரிதோ எவ்விதகஷ்ட முண்டாயினபோதிலும் யானும் அந்தக்கஷ்டத்தை யனுபவித்துக்கொண்டு தங்களுடனே வருவனேயல்லாமல் ஒண்டியாய்தேவரீரை அனுப்பிவிட்டு யான்தனியேயிருக்க சம்மதியேன் என்ற பிரம்மராக்கதனுடைய அன்புபிரியத்திற்கு சந்தோஷித்து அந்தப்பிராமணர் ராக்கதனையும் அழைத்துக்கொண்டு அனேகதலங்களெல்லாந் திரிந்து முடிவில் அகோபிலம்வந்து சேர்ந்து பிரம்ம ராக்கதனுக்குத் தாரகமந்திரத்தை உபதேசித்துச் சிலவருடகாலமிருந்து அந்தியதிசையில் நிரதிசயானந்த வைகுந்தபதவியையடைந்தனர். பின்பு பிரம்மராக்கதன் அங்குள்ள பிராமணர்களைக் கொண்டு ஆசானுக்குப்பிரேதசம்ஸ்காரங்களைச்செய்வித்து அவர்தனக்கு உபதேசஞ்செய்த தாரகமந்திரத்தைத்துதிசெய்துக்கொண்டிருந்து ஜென்மாந்திரத்திற் செய்தபாபங்களை யெல்லாம் ஒழித்து சுயரூபமாகிய பிராமணதேகத்தைப்பெற்றுசாம்பிராச்சியபதமாகிய பரமபதத்தை யடைந்தனர்.

வாழிவிருத்தம்.

இப்புவியில்யாவருமே யேத்திப்போற்றும்
துப்புடையபிரம்மக்ஞான தூயோரான
செப்பரியபிரம்மராக் கதனையாண்ட
விப்பிரநாராயணர்தம் விமலபதங்கள்வாழி.

விப்பிரநாராயணன்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கோமளவல்லி சரித்திரம்.

துதி விருத்தம்.

காமங்கள் கன்றுநன்றுங் கல்வியிற்சிறந்துமெத்த
நேமநிட்டைகளுண்டாகி நிர்ம்மலஞானமோன
சேமவாழ்வதனல்மேன்மை செப்பருஞ்ஜெயமுண்டாகும்
கோமளவல்லிமாது குணகதைகூறுவோர்க்கே.

திருப்பதி க்ஷேத்திரத்திற்கு வடக்கே பிரமகாரமென்றொரு கிராமமுண்டு அக்கிராமத்தினில் வணிகர்குலத்தினிற் பிறந்தவர் சம்பத்தினிற்சிறந்தவர் சகலகலைகளையுங் கற்றவர் பகவத்குணனுபவங்களி லன்புற்றவர் பெரியோர்களுடைய கிருபையைப் பெற்றவர் தனகனவஸ்துவாகனுதிகளில்நற்றவர்சாதுக்களை யாராதிப்பவர் ஏழைபரதேசிகளுக்கில்லையென்னுமல் அவர்கள்கேட்பதை யளிப்பவர் பந்துக்கள் மனங்கோணுமல் நடப்பவர் இரவும்பகலும் இடைவிடாமல் பகவானைத் துதிசெய்துக்கொண்டிருப்பவர் இப்படி மநுசாஸ்திரவிதி தவராமல்நடந்து தருமசீலரெனப் பேர்வகித்து யாவரும்புகழ வசித்திருந்தார்இவருக்குமனைவியோ ஒருவளுண்டு அம்மாதை அருந்ததியோ அல்லது சாவித்திரியோ யென்று யாவரும் புகழக் கணவனுக்குத் தொண்டு செய்வதிலும் அவரை ஆதரிப்பதிலும் போஷிப்பதிலும் இடைவிடாமல் அவர்திருவடிகளைப் பணிவிடைசெய்வதிலேயே மனதைச்செலுத்திக் கொண்டிருப்பள். இம்மங்கையின் பெயரோ சுகுணவதியென்று வழங்க நாளைப்போக்கிக்கொண்டிருக்கையில் பகவானுடைய கிருபையினுலும் ஜென்மாந்திர சுகுர்தத்தினுலும் இம்மாதுக்கோர் புத்திரன்பிறந்தான் பத்துநாளுங்கடந்தவிரண்டாநாளென்னும் பிரமாணப்படி பனிரெண்டாநாள் பந்துக்கள் பிராமணர்கள் முதலானவர்களையும் வரவழைத்துபுத்திரனுக்குஸ்னனஞ்செய்வித்து ஆடையாபரணங்களால் அலங்கரித்து அப்புத்திரனை பந்துக்கள் சூழ்ந்திருக்கும் சபைக்குத்தருவித்து பிராமணர்களைக் கொண்டு சாதகருமம் எழுதவைத்துஅக்குழந்தைக்கு விவேகசீலனென்று நாமகரணஞ்செய்துதாய் தந்தையர்கள் ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களாகி கோதான பூதான வஸ்திரதான கன்னிகாதானமென்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டுதானங்களையும் அபாரமாகச் செய்து பந்துக்களுடன்புசித்து சந்தன தாம்பூல புஷ்பங்களை தரித்து புத்திரோற்சவத்தைப் பிரமோற்சவமாகக் கொண்டாடி நாளுக்குநாள் செல்வமாக வளர்த்துவர அச்சிறுவனும் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வரிசைக்கிரமமாய் ஒன்றிரண்டு மூன்றுநான்கு ஐந்துவயதானவுடனே தருமசீலன் புதல்வனைப் பள்ளியிலோதவிடுத்தார் விவேகசீலனும் உபாத்தியாயரை யிணங்கி வணங்கி அவர் சொற்படிநடந்து சிலவருடங்களில் கல்வியை ஐயந்திரிபர உணர்ந்து தேர்ச்சியடைந்து நற்குணங்களிற் சிறந்து தந்தையைப் பார்க்கிலும் என்மடங்கதிக குணவானுகி யிருந்தனன்.

இவ்வணம் புதல்வன் மெத்தகுணசீலனுக விருப்பதை தாய்தந்தைகளுங்கண்டு என்றுமில்லாதசந்தோஷசாகரத்தினில் மூழ்கினவர்களாகிப் புதல்வனுக்குத் திருமணஞ்செய்விக்க வேணுமெனக்கருதி பந்துக்களுடன் ஆலோசித்து அந்ததருமசீலன் தங்கள் மரபிலுதித்தவளும் குணமுடையவளும் அழகினிற்சிறந்தவளுமாகிய கோமளவல்லி யென்னும் பெண்ணைப் பேசி நிச்சயஞ்செய்து முகூர்த்தபத்திரிகை யெழுதி வெகு சந்தோஷத்துடன் வெளிப்பிரதேசங்களிலிருக்கும் பந்துக்கள் பிரியசினேகிதர்கள் முதலான சகலருக்கும் மணஓலையெழுதியனுப்பி தன்னுடையகிரகத்தில் பந்தலிட்டு வாழை கமுகுபலா முதலிய மலர்களால் சிங்காரித்து மணவரை ஏற்படுத்தி சகலமேளவாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்க மெத்த ஆடம்பரமா யிருக்கிறததியில் பந்துக்கள் முதலானே

ரும் வந்துசேர்ந்தவுடன் தக்கபடி அவரவர்களை உபசரித்து அந்தத்தருமசிலனிருக்க, லக்கினஞ்சமீபித்துவிட்டதென்று புரோகிதர் முதலாகிய பிராமணர்கள் வந்து தருமசிலரை எச்சரித்து தருமசிலரும் புரோகிதரைக்கொண்டு சடங்குகளனைத்தையும் நடத்திவிவேகசிலனுக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்களால் அலங்கார மணக்கோலத்துடன் வருவித்து உடனே கோமளவல்லிமாதையும் பணிப்பெண்கள் சர்வாலங்காரத்துடன் அழைத்துவந்து மாப்பிள்ளையையும் கல்யாணப்பெண்ணையும்மணவரையில்உட்காரவைத்து நவக்கிரகஹோமம் நடத்தி மாங்கிலியத்தைப் பெரியோர்களால் ஆசிகூறப்பெற்று சுபலக்கினத்தில் பிராமணர்கள் வேதவாக்கியத்தால் ஆசிகள்கூற பிராமணஸ்திரீகள் மங்களமிசைக்க பெரியோர்கள் வாழ்க வாழ்கவென்று வாழ்த்த விவேகசீலன் கோமளவல்லியின் மிடர்த்தினில் மங்கள சூத்திரம் சூட்ட பற்பல மங்களவாத்தியங்கள்கடலொலிபோல முழங்க திருமணத்தைமுடித்து அந்தத்தருமசீலனும் அவர்மனைவியும் தம்பதிகளைக் கண்டு இனியில்லாத ஆனந்தமடைந்து கோதான பூதான வஸ்திரதான ஹிரண்யதானங்களனைத்தையும் அபாரமாக செய்து பந்துக்கள் முதலானோருடன் உண்டு சந்தனதாம்பூலாதிகளணிந்து அனைவரையும் மகிழச்செய்துக் கொண்டு பிரம்மானந்தமாக மூன்று மாதம் கல்யாண மஹோற்சவத்தைநடத்தி பந்துக்கள் முதலானோருக்குந் தக்க வெகுமதிகளளித்து விடைகொடுத்தனுப்பிவிட்டு மகன்மருமகளுடன் வெகுசுகமாக வாழ்ந்துக்கொண்டிருந்தனன்.

இவ்வண்ண மிருக்கையில் கோமளவல்லிமாது கணவனிஷ்டத்துக்கு விரோதமாக எந்தகாரியங்களையும் செய்யாமல் பயபக்தி விசுவாசமாய்நடந்துக்கொண்டுவந்தனள் இப்படி சிலவருடங்கள்கடந்தும் புத்திரபாக்கியம் ஒன்றில்லாக்குறையால் அம்மாது தான தருமங்கள் அளவிலாமற் செய்தும் விரதங்கள்பற்பல அநுட்டித்தும் பெரியோர்களை ஆராதித்தும் ஒருபுதல்வன் பிறப்பதரிதாக விருந்தமையால் திவ்யதேச யாத்திரையாகிலுஞ் செய்து புத்திரப்பேறை அடைய வேண்டுமெனக்கருதி அந்தக் கோமளவல்லி மாது மாமிமாமனுக் கறிவித்து அவர்கள் சம்மதியின்மேல் தானும் தன்கொழுநனும் வேணமட்டுந்திரவியங்களையெடுத்துக்கொண்டு பிரயாணப்பட்டு வெகு திவ்ய தேசங்களெல்லாஞ் சேவித்தும் அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கிக்கொண்டு வடதிசையை நோக்கிசென்று (அயோத்தியா மதுரா மாயா காசி காஞ்சீ யவந்திகாபுரி த்வராவதீ சைவாஸப்தைதேமோக்ஷதாயகா:) என்னும் பிரமாணப்படி மோக்ஷத்தைத்தரும்க்ஷேத்திரங்கள் ஏழு இந்தயேழினில் ஒன்றாகிய காசிக்ஷேத்திரத்தையடைந்து அங்கோர்கிரகத்தை வாடகைக்குகொண்டு அதிலிறங்கி தினந்தோறுந் தப்பாமல் கெங்கா நதிக்குச்சென்று அதில்மூழ்கி சங்கல்பங்கள் சொல்லி அளவிறந்த தானதருமங்களைச் செய்துக் கொண்டு அங்குமூர்த்திகரமாயிருக்கும் விஸ்வநாதரையும் விசாலாக்ஷியம்மனையுஞ் சேவித்து இருக்கிறபோது ஒரு நாள்பகல் மூன்றுமணிக்கு கோமளவல்லி வசிக்கும் வீட்டிற்கு அடுத்தவீட்டு பிராமண ஸ்ரீயொருவள் கோமளவல்லியம்மா ளிடத்திற்குவந்து ஒ அம்மணி நீங்களெந்தவூர் உங்கள் குறையென்ன நெடுநாளாக இங்கே வாசம்பண்ணிக் கொண்டிருக்கிற காரணமென்ன திரண்டசெல்வமுடையவர்களாயிருந்தபோதிலும் இந்த காசிக்ஷேத்திரத்தில்இரண்டுமூன்றுநாள் தங்கியிருப்பார்களேயாகில் இங்குள்ள பிராமணர்கள் சங்கல்பஞ்சொல்லியும் ஒவ்வொரு மகான்கள் வந்து ஸ்நான அநுட்டானங்களை முடித்துக்கொண்டு போகும் படித்துறைகளையும் கட்டடங்களைக் காட்டியும் பற்பல தானதருமங்களை செய்யும்படியாகவும் வற்புறுத்தி அவர்களுடைய பொருள்களையெல்லாங் கொள்ளைகொண்டு வழிச்சிலவுக்குக்கடன்கொடுத்தனுப்புகிறது வழக்கமா யிருப்பதால் நீங்கள் அளவிட்டுச் சொல்லப்படாதசெல்வமுடையவர்களா யிருப்பீர்களென்று நம்புகின்றேனென அதற்குக்கோமளவல்லி ஒஅம்மணி என்தாய்வீடும் பொருளினில்மிதமற்றவர்களாகும் மாமிவீடும் மிதமற்றபொருளுடையவர்களாகும் இப்படி அளவிறந்த பொருளுடையவர்களாயிருந்தும் சொஸ்தானத்திலேயே இருந்து சுகமனுபவித்துக் கொண்டிராமல் இங்குவந்தகாரணம் யாதென்று வினவுவையேயாகில் சொல்லுகின்றேன்கேளும்மட்டுமிதமில்லாப் பொருள்கள் குறைவின்றி எங்களுக்கிருந்தபோதிலும் புத்திரனில்லாக் குறையே எங்களை வெகுநாளாக பாதித்துக்கொண்டிருக்கின்றதென்றவுடனே அப்பிராமணஸ்ரீ கோமளவல்லியை நோக்கி அடியம்மா புருஷனைவிட்டு அன்னியபுருஷனைக்கூடும் விபசாரியின் முகத்திலும் பேய்பிடித்தவள் முகத்திலும் உண்டவீட்டிற் கிரண்டகஞ்செய்தவனுடையமுகத்திலும் ஒருக்கால் முழித்தாலும் முழிக்கலாம் பிள்ளையைப் பெராதமலடியின் முகத்தைப்பார்க்கத்தகாதென்றும் அவளைவிடப் பாவிகள் இவ்வுலகத்தினிலில்லையென்று சாஸ்திரங்கள் முறையிடுகிற படியால் இத்தனைபொழுது உன்முகத்தைப் பார்த்து பேசிக் கொண்டிருந்த பாபத்தை யானெந்த விதத்தினில்

போக்கிக்கொள்ளப் போகிறேனென்று சொல்லிக்கொண்டே விரைவாக ஓடித் தன்வீட்டிற்குட்புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டனள்.

இவ்வாறு அந்தப்பிராமணஸ்திரீ தன்னைக்கேவலமாகச் சொல்லிப் போயினதைக் கேட்டு மனந்தாளாதவளாகி இடியோசையைக் கேட்ட நாகத்தைப் போலஏங்கி மனம்புழுங்கி ஆஹா என்னுடையஜென்மமேதுக்கு மலடியென்று தாசியில் வேசியென்றும் இழிவானசொல்லுக்கு நான் ஜென்ம மெடுத்தேனே இப்படிப்பட்ட கர்ன்னகடூரமான சொற்களைக் கேட்பதைப் பார்க்கிலும் உயிரைப்போக்கிக் கொண்டால் நன்றுதானே ஓகாசிவிஸ்வநாதா விசாலாக்ஷி பிராணநாதா நேசர்கட்கருள்போதா நின்னைத் தொழுதேத்தும் அடியாளுக்கோர் புதல்வனைப் பாலிக்கலாகாதாவென்று கண்ணீர் ஆராய்ப்பெருகவிட்டுக் கொண்டு ஊணுரக்கமின்றிக்கவலைப்பட்டுக்கொண்டிருந்தனள் அப்போது விவேகசீலன் நித்திரை நீங்கியெழுந்து சென்று முகங்கால்கரங்களை சுத்திசெய்துக்கொண்டு மனைவியின் அருகில்வந்து கண்ணுங் கண்ணீருமாய் விசனப்படுவதைக்கண்டு அடிபெண்ணே ஒருநாளும் நீயிப்படி விசனப்பட நான்கண்டதேயில்லை இன்றுனக்கு இத்தனை விசனமுண்டாவதற்குக் காரணமென்ன சீக்கிரஞ் சொல்லுமென அதற்குகோமளவல்லி பணிவுடன் நாயகனைநோக்கி ஓசுவாமி அடுத்தவீட்டிலிருக்கும் பிராமண ஸ்ரீயானவள் என்னிடத்திற்கு என்வாய் மொழியைக்கேட்டு அடியாளை மலடியென்றும் தாசியில் வேசியென்றும் பேய்பிடித்தவளென்றும் என்முகத்தைப் பார்க்கலாகாதென்றும் சொல்லித் திடுதிடென்றோடிப் போயினள் அம்மொழிகளை நினைத்துக்கொண்டு நமக்கொருபுதல்வன் உதிக்காதகுறையினாலன்றோ பிராமணஸ்ரீ நம்மை இழிவாகப் போயினாளென்று விசனப்படுகின்றேன் எனக்கேட்டு விவேகசீலன் சற்றுலோசித்து அடிமாதே இதற்காகவா நீவிசனப்படுவது இப்படிநேரிடுவதெல்லாம் ஜென்மாந்திரங்களிற் செய்தவினையெனக்கருதி சாட்சாத் கிருஷ்ணபரமாத்துமனைத் துதிசெய்துக்கொண்டிருக்கக்கடவாய் மேலும் உலகத்தினில் நன்மையென்றுந் தின்மையென்றும் இரண்டுண்டு இதில்நன்மையுண்டானால் சந்தோஷிப்பதுந் தின்மை யுண்டாகில் விசனப்படுவதும் உத்தமர்களுக்கு லட்சணமல்ல நன்மைவந்தபோது எப்படி சந்தோஷமடைவமோ அதுபோல தின்மை வந்தபோதுஞ் சந்தோஷத்தையே அடையவேண்டும் ஆகையால் உனக்குண்டான துக்கத்தைப்போக்கிசந்தோஷத்தையே அடைந்துக்கொண்டிருப்பாயெனக் கேட்டு கோமளவல்லிதனக்குண்டான கவலையை மாத்திக்கொண்டு வெகுகளிப்பாக நாயகன் கட்டளையைத் தவராமல் சகலகைங்கரியங்களையுஞ் செய்துக்கொண் டிருக்கிறபோது ஒருநாள் வழக்கப்படி காலையிலெழுந்து சகல வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டு கெங்காநதிக்குச் சென்று ஸ்னானஞ்செய்து அநுட்டானங்களைமுடித்து சங்கல்பஞ்சொல்லி பிராமணர்களுக்கு தானமீந்து மனக்களிப்புடன் வீட்டைநோக்கி வருகையில் சிலபிராமணர்கள் பின்தொடர்ந்து ஓஐயா நாங்கள்வசிப்பது பண்டரிபுரம் யாத்திரையாகப் புரப்பட்டு வெகுதிவ்ய தேசங்களைச் சேவித்தும் நதிகளில்மூழ்கியும் இக்காசி க்ஷேத்திரத்திற்கு வந்து சிலநாளாயிற்று இன்னு மிரண்டுமூன்று நாளையில் சொஸ்தானமாகிய பண்டரிபுரத்திற்குப் போக வெண்ணியிருக்கின்ற எங்களுக்குவழிச்சிலவுக்கில்லாமல் பிரயாணந் தப்பிப்போகும்போலிருக்கின்றது ஆகையால் எத்தனையோ பிராமணர்களுக்குஅளவற்ற தானங்கொடுக்க யாங்கள்கண்டு அதிகசந்துஷ்டியடைந்தோம் அதுபோல எங்கள்மீது கிருபைகூர்ந்து வழிச்சிலவுக் குபயோகப்படும்படி திரவியமீந்தனுப்பினால் பாண்டுரங்கநாதன் கிருபையினால் உங்கள் கோரிக்கைகள் யாவும் அநுகூலப்பட்டு மேலுமேலும் செழித்து வாழக்கடவீர்களென்று வாழ்த்தி அட்சதைகளை தம்பதிகள் சிரசின்மீதுப்போட்டுமஞ்சள் குங்குமம் திருத்துழாயு மீந்தனர்கள். அவைகளைப் பெற்றுக்கொண்டு விவேகசீலன் மனைவியினிடமளிக்க அவ்வுத்தமியும் பக்தியுடன் அவைகளைக் கைப்பற்றி நெற்றியில் மஞ்சளையுங் குங்குமத்தையுந் தரித்துத் திருத்துழா வாயினிற்போட்டுத் தின்றுக்கொண்டே நாயகன் பின்னடந்தனள். விவேகசீலரும் பிராமணர்களை அழைத்துக்கொண்டு வீடுசேர்ந்து அவர்களை உபசரித்து வேண்டியபொருளைத் தந்து வந்தனம்புரிந்து சுவாமிகாள் பண்டரியென்பது எந்ததிக்கிலிருக்கின்றது அப்பண்டரியை யானுஞ் சேவிக்கவேணுமென்று விருப்பமுடையவனாக விருக்கின்றேனென அதற்கந்தபிராமணர்கள் ஐயா விவேகசீலரே தாங்கள் வருகிறபக்ஷத்தில் நாங்கள் வெகுஜாக்கிரதையாகத் தங்களை அழைத்துக் கொண்டுபோய் பாண்டுரங்கநாதன் சேவைசெய்து வைக்கின்றோம்அந்த க்ஷேத்திரமானது இவ்விடத்திற்கு கிழக்கு வடக்காக இருக்கின்றது எனக்கேட்டு விவேகசீலர் சந்தோஷித்து அப்படியானால் எங்களிருவரையும் உங்களுடன் அழைத்துப் போகவேணுமென்று நயந்து தெண்டனிட்டார் அதற்கவர்கள் களிகொண்டு அவசியம்உங்களை அழைத்துக்கொண்டு போகுறோமென்று சொல்லி விடைபெற்றுச் சென்றனர்கள்.

இவ்வாறு அவர்கள் சொல்லிப்போயின பின் விவேகசீலர் இச்செய்தியை தன்மனைவிக்கிச் சொல்லிப் பண்டரி பிராமணர்கள் வரவுக்குசர்வசித்தமாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்கள். மூன்றுநாள் பிராதக்காலத்தினில் பண்டரி பிராமணர்கள் வந்து விவேகசிலரை எழுப்பி புறப்படுமையாவென விவேகசீலனும் மனைவியை அழைத்துக்கொண்டு பிராமணர்கள் முன்னும் மனைவியுந்தானும் பின்னுமாக நடந்து சிலநாளையில் பண்டரியையடைந்து சந்திரபாகா நதியில்மூழ்கி பரிசுத்தராகி அநுட்டானங்கள் முடித்து பிராமணர்களுக்கு தானங்கொடுத்து பிராமணர்கள் வீட்டினில் ஜாகைசெய்துக் கொண்டு உண்டு இளப்பாறி பிராமணர்கள் பின்சென்று பண்டரிநாதன் சந்நிதிக்குட்புகுந்து தூபதீப நைவேத்தியங்கள் செய்து பாண்டுரங்கனை சேவித்து விவேகசிலன் சொல்றுகின்றார் ஓபகவானே எனக்குண்டான பிள்ளைகளை தீரச்செய்வீரேயாகில் பொன்னால் பிள்ளையுந்தொட்டிலும் சமர்ப்பிக்கின்றேனென்று பிரார்த்தனை செய்துக் கொண்டார் அதைக்கேட்டு கோமளவல்லியும் ஓஜெகதீசா அடியாளை யாவரும் மலடிமலடியென்று இழிவாகப் பேசிக்கொள்ளுகிறார்கள் அப்படிப்பட்டஇழிச்சொல்லிலாமற் போகும்படி எனக்கோர் புத்திரனையளித்தால் அப்புத்திரனை உமதுரதத்தின் சக்கரத்திற்கு இறையாகும்படி கொடுக்கின்றேனென்று தன் மனதில் தானே பிரார்த்தனை செய்துக்கொண்டுமணாளனுடன் சந்நிதியைவிட்டு வெளிப்பட்டு ஜாகைசேர்ந்து அன்றுதினம்போக்கி மறுநாளும் சந்நிதிக்குள் நாயகனுக்குத் தணைசெய்துக் கொண்டனள். இப்படி தினந்தோறும் பிரார்த்தனை செய்துக்கொண்டு வருகையில் நெடுநாள் ஆயினபடியால் விவேகசீலர் தந்தைதாயரும் புதல்வனையும் மருமகளையும் பார்க்க வேணுமென்ற அபா மிகுதியால் அவர்களிருவரும் சிலநாளையில் பண்டரிபுரம் வந்து சேர்ந்தனர்கள். அவர்களைக்கண்டு மகனும் மருமகளும்வெகுவாகவுபசரித்து அழைத்துக் கொண்டுபோய் ஜாகையிற் சேர்த்து உணவாதிகளளித்து அன்றிரவைப்போக்கி மறுநாள் காலையினிலெழுந்து நால்வரும் சந்திரபாகாநதியினில்மூழ்கி அநுட்டானங்களை முடித்து சந்நிதிக்குட்புகுந்து பகவானைசேவித்து விவேகசீலன் அன்னை சொல்லுகின்றாள் ஓ பரமதயாளமூர்த்தி அடியேன் புதல்வனுக்கோர் பாலன் பிறக்கும்படி கிருபைசெய்வீரேயாகில் வெள்ளியினால் அப்புதல்வனைபோல ஓர் விக்கிரகஞ்செய்து உமக்குசமர்ப்பிக்கின்றேனென்று பிரார்த்திக்கொண்டாள் தருமசீலரோ பகவானை சேவித்து ஓ அனந்தகல்யாண குணமூர்த்தி அடியேன் மருமகளுக்கோர் புத்திரனைப் பாலிப்பீரே யாகில் பத்துமணங்குவெல்லம் சந்திரபாகாநதியிற் கரைக்கிறேனென்று பிரார்த்தித்துக் கொண்டார்.

இவ்வண்ணம் தாய்தந்தைகள் விவேகசீலர்இவர்கள்மூவரும் சகலருக்குந் தெரியும்படி பிரார்த்தனை செய்துக் கொண்டனர்கள் கோமளவல்லியோ அன்னியர்களறியாவண்ணந் தன்மனதிலேயே பிரார்த்தனைசெய்துக் கொண்டதை பகவானொருவருக்குத் தெரியுமே அன்றி மற்றெவர்களுக்குந் தெரியமாட்டாது இந்த பிரார்த்தனையைத் தானடையவிரும்பி பாண்டுரங்கநாதன் கோமளவல்லிக்கோர் புதல்வன்பிறக்கும்படி அநுக்கிரகஞ்செய்தார் அன்றுமுதல் கோமளவல்லி கெற்பந்தரித்துப் பத்துமாதமும்பூரணமாயினவுடன் ஆண்சிசுவைப்பெற்றனள் இதையறிந்துவிவேகசீலனும் அவனது அன்னைதந்தைகளும் ஆனந்தகடலில் மூழ்கினவர்களாகி அச்சிசுவுக்குசுகுணசீலனென நாமகரணஞ்செய்து அளவிறந்த தானதருமங்களைச் செய்து இனியில்லாத களிப்படைந்து தருமசீலன்செய்துக்கொண்ட பிரார்த்தனையாகும் பத்துமணங்கு வெல்லங்கொண்டு சந்திரபாகாநதியிற் கரைத்து பகவானைசேவித்து மனமகிழ்ந்தான் விவேகசீலன் அன்னையோ வெள்ளியினால் சிசுவைப்போல விக்கிரகம் வார்ப்பித்து பகவானுக்கு சமர்ப்பித்து ஆனந்தமடைந்தனள் விவேகசீலனோ பொன்னினால்பிள்ளையுந் தொட்டிலுஞ் செய்வித்து பகவன்சந்நிதான அந்தராளத்திற்கட்டி பிர்ம்மானந்த மடைந்தனன் இப்படி மூன்றுபேர்களுடைய பிரார்த்தனையும் செலுத்திவிட்டப்பின்னர் சிலநாளைக் கெல்லாம் பிரமோற்சவம் வந்துவிட்டது அதில் ஆறுநாளையஉற்சவமுங்கடந்து ஏழாநாள் ரதோச்சவத்தினன்று பகவானுக்குச் சகல அலங்காரமுஞ் செய்து ரதத்தின்மீது சேர்த்து சகல மங்களவாத்தியங்களும் தாம்தாமென்றுமுழங்க பிராமணர்கள் பாகவதர்கள் முதலானயாவரும் வடம்பிடித்திழுத்துக்கொண்டேவர ரதமானது கோமளவல்லியிருக்கும் வீட்டிற்கெதிரில்வந்து எத்தனை முயர்ச்சி செய்தபோதிலும் அசையாமல் நின்றுவிட்டது அப்போது தர்ம்மகர்த்தா முதலானோரும் இதென்னமோ ரதமானது அசையாமல் எந்தவருடமு மில்லாமல் இவ்வருடம் இங்குநின்றதை யோசித்தால் விந்தையிலும் விந்தையா யிருக்கின்றதென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண் டிருக்கிறபோது அங்கோர் பிராமணர்மீது ஆகோசம்வந்து அதோநிற்கும் கோமளவல்லி தன்புதல்வனை ரதத்தின்சக்கரத்திற் கிரையாகக் கொடுக்கின்றேனென்று பிரார்த்தனைசெய்துக்

கொண்டாள் அந்தப்படி யம்மாது தன்புதல்வனை ரதத்தின் சக்கரத்திற் கொடுக்கும்வரையில் ரதமசைய மாட்டாதெனக்கேட்டு தர்மகர்த்தா முதலானோரும் சென்று கோமவவல்லியைக்கண்டு ஓஅம்மணி நீபிரார்த்தனை செய்துக்கொண்டபடி யுன்புதல்வனை ரதத்தின் சக்கரத்திற்குக் கொடுமென்று நிற்பந்தஞ் செய்யக்கேட்டு கோமளவல்லி வெகுவாகப் பிரலாபித்து அப்பாகுழந்தாய் நீபோயினபின் என்னுயிரிருந்தென்னசெய்ய யானுமுன்னுடன் வருகிறேனென்றுசொல்லிக்கொண்டே திடுதிடென்றோடி புதல்வனை யோர் சக்கரத்தின் கீழ்போட்டுத் தானுமோர் சக்கரத்தின் கீழ்படுத்துக் கொண்டாள் இதையறிந்து மாமன் ஓர் சக்கரத்தின்கீழும் மணாளனொரு சக்கரத்தின் கீழும் படுத்துக்கொண்டார்கள் அப்போது ரதமானதுபின்னிட்டவாக்காய் கொஞ்சதூரம்ஓடிபுலியானதுகெந்து பாய்வதுபோல முன்னிட்டவாக்காக ஓடிவந்து நால்வர்மீது சக்கரம்படாமல் எகிரிக்குதித்து போய்விட்டது இந்த ஆச்சரியத்தை யாவருங்கண்டுபகவானைப் பற்பலவாறு புகழ்ந்துக் கொண்டாட இந்நால்வரும் எழுந்து பகவான் தங்கள்மீது கிருபைசெய்தானென்று பரமானந்தமடைந்து ரதத்தின் பின்தொடர்ந்தோடி வடத்தைபிடித் திழுத்துக்கொண்டுபோய்நிலையிற்சேர்த்து பகவான் சந்நிதிக்குட் பிரவேசிக்கும் வரையிலிருந்து தீர்க்கமாக விழுந்துதெண்டனிட்டெழுந்து பற்பலவாறு பகவானுடைய குணானுபவஞ் செய்துக் கொண்டே வீட்டை யடைந்து அன்றிரவு போக்கி மறுநாளுதயமாயின வுடனே இவர்கள் நால்வர் பிள்ளையுடன் ஐவரு சிலநாளில் சொஸ்தானஞ் சேர்ந்து யாவரும்புகழ சிலகாலம் வாழ்ந்திருந்து சுகுணசீலன்தவிர மைத்தநால்வரும்திருநாடலங்கரித்தனர்கள்.

வாழி விருத்தம்.

தாமமாயிரமேகொண்ட நாரணன்கிருபைதன்னால்
சோமசூரியனைப்போல சுகுணசீலனைப்பயின்று
காமமாதிகளைவென்று கமலைக்கிநிகராமந்தக்
கோமளவல்லிபாதங் குணமுடன்வாழிவாழி.

கோமளவல்லி சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஹரிபானன் சரித்திரம்.

ஹரியெனுமிரண்டெழுத்தை யனுதினமிரைஞ்சிப்போற்றும்
ஹரிபக்தர்தமக்குத்தொண் டன்புடன்செய்தேமீண்டும்
ஹரிபக்தராகுமாசா னம்புயபதமடுத்த
ஹரிபானர்தம்மையாண்ட ஹரியின்சேவடிகள்போற்றி.

பண்டரிபுர க்ஷேத்திரத்திற்கு வடக்கே சென்னஊரெனும் கிராமமொன்றுண்டு அக்கிராமத்தினில் வைசிய குலத்திலுதித்த ஹரிபானனென்றொரு வர்த்தகரிருந்தார் அவர்வெகுகாலமாய் தக்க ஆசானை யடைந்து உபதேசம்பெற்று மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைய வேண்டுமெனக் கருதி எவர்களேனும் பெரியோர்கள் அக்கிராமத்திற்கு வந்தால் அவர்களை யெதிர்க்கொண்டு சென்றழைத்துவந்து தக்கபடிஉபசரித்து நாலைந்துநாள் வைத்திருந்து அவர்கள்மனோபரிபாகத்தை யறிந்து வேண்டிய திரவியத்தை யளித்து அனுப்புவர் இப்படிக்கு வரப்பட்ட பெரியோர்களையெல்லாம் பரிக்ஷை செய்து மனபரிபாகத்தை

யரிந்து பக்குவமில்லாதவர்களை யனுப்பிக் கொண்டிருக்கிறபோது சகலலட்சணங்களும் பக்தியில் பக்குவமுடைய பக்திசாகர ரென்னுமோர்சாது அங்கெழுந்தருள அவரைக்கண்டு ஹரிபானன் எதிர்ச் சென்றழைத்துவந்து அர்க்கியபாத்தியாதிகளால் அவரைப் பூசித்து நாலைந்துநாள் வைத்திருந்து அவரது உண்மையான பக்திநிலைமையை உணர்ந்து அவரை ஆசானாகப் பாவித்து உபதேசம்பெற்று தன்னிடத்திலேயே இருக்கும்படி பிரார்த்தித்தான் அதற்கவர்ஓஹரிபானா யானுன்னிடமிருக்க மனமில்லாதவனாகி எப்போது வுன்னைவிட்டுப் போவனோ என்ற அதிருப்தி எனக்குண்டா யிருக்கிறதென அதற்கு ஹரிபானன் அவரைவணங்கி ஓஸ்வாமிஅடியேன் தங்களுக்கென்ன அபசாரம் பண்ணினேன் மனமார ஒன்றுஞ்செய்யவில்லையே என்னையுமரியாமல் ஏதேனும் செய்திருந்தால் இருக்கலாம் அதை தேவரீரை யொற்றவர்கள் க்ஷமித்து எளியேனைக் காப்பாத்தி ரட்சிக்கவேணும் சர்க்குருநாதரே என்றுபணிந்துத் திருவடியை விட்டெழுந்திராமற் கிடந்தார்.

இவ்வாறு திருவடிகளை விடாமற் பிடித்துக்கொண்டுகிடக்கும் ஹரிபானரைநோக்கி அப்பாசீஷனே உனக்கு மங்களமுண்டாகக் கடவது உன்னுடைய பாபங்கள் யாவும் இன்றோடு உருமாய்ந்துப் போயிற்று நீ அறியாமற்செய்த அபசாரங்களனைத்தையும் க்ஷமித்துக்கொண்டேன் சீக்கிரம் எழுந்திரு மம்மா வென்று கடாக்ஷித்து ஹரிபானரைத் தன்கரங்களாலெடுத்து நிற்கச்செய்து சிலவசனங்கள் சொல்லுகின்றார் அப்பா ஹரிபானனே இன்றுமுதல் நீ எந்தபாகவதரைக் கண்டபோதிலும் சத்குருநாதரென்று பாவித்து அவரை இணங்கிவணங்கி சகல உபசாரங்களினாலும் பூசித்துநேசித்து விசுவாசித்துஉணவாதிகளால் அவர்களை மனமகிழச்செய்துக் கொண்டிருப்பையேயாகில் பெரியோர்களை பரிக்ஷித்த அபசாரங்கள் யாவும் நாளுக்குநாள் நசித்துப் புனிதனாகி இகபரசாதனங்களெனும் இம்மையில் தனவானாகவிருந்து மறுமைப்பயனாகும் பரமபதவீட்டை யடைவாயென்று ஆசிகூறி விடைபெற்றுக் கொண்டு போகவெண்ணங்கொண்டிருக்கும் பரமகுருநாதரை ஹரிபானன் வணங்கி ஓசுவாமி பரமசத்குருநாதரே தேவரீர் இவ்வேழையின்மீது கிருபைகூர்ந்து இவடத்தில்தானே யெழுந்தருளியிருந்துக்கொண்டு பரமானும் பரமசண்டாளனும் பாகவதபசாரப்பட்டக் கொடியபாதகனுமாகிய இவனைப் புனிதனாகச் செய்யவேணும் சுவாமி யென்று அதிவினயமாக வேண்டிக்கொள்ள அப்பரமாசாரியர் புன்னகைபுரிந்து அப்பாசீஷனே உன்னை யான் பலவிதத்திலுஞ் சோதித்ததில் நீதீவ்ரதரனாயிருந்தமையால் உனக்குபதேசித்தேனே அன்னியில் நின்குணங்களை யநுசரித்து யானுனக்கு உபதேசஞ்செய்தவனல்ல ஆகையால் நீசிலகாலம் பாகவதர்களை ஆராதித்துக் கொண்டிருப்பையாகில் ததியறிந்துயானுன்னிடம்வந்து தங்கியிருப்பனே யல்லாமல் இப்போதே உன்னிடமிருக்க என்மனஞ்சம்மதிக்கவில்லையாதலால் நீ யாதொன்றுக்குஞ் சலியாமல் பாகவதசேவைசெய்துக் கொண்டிருக்கக் கடவா யென்று சொல்லி விடைபெற்றுச் சென்றனர்.

இவ்வண்ணஞ் சத்குருநாதர் சொல்லியதையும் அவர் நிலைபெராமற் போயினதையும் எண்ணியெண்ணி மெத்ததுக்காக் கிராந்தனாகி பலவாறு சிந்தித்து இதற்குமேல் அவரைநாம் நிற்பந்தஞ் செய்வோமேயாகில் மெத்த அபசாரத்திற்குள்ளாகவேணுமென்று நினைத்து தனக்குத்தானேதேறுதலைச்செய்துமனதை ஒருமைப்படுத்தி ஆசான்சொல்லியபடி நாம் நடப்பதே உத்தமமென்றுன்னி அன்றுமுதல் பாகவதர்களைத்தேடி ஊரூராய்ச்சென்று அழைத்துவந்து உபசரித்து அறுசுவையன்னம் பரிமாரி ஆலவட்டக் கைங்கரியஞ்செய்துக்கொண்டே அவர்கள்கோரும் வஸ்துக்கள் யாவத்தையுங் குறைவின்றியீந்து அவர்களுக்கு மனங்களிக்கும்படி நடந்துக்கொண்டு அவர்கள் போகவேணுமென்று நிற்பந்தித்தால் வேண்டியமட்டும் பொருள்களையளித்துப் பின்சென்று சிலதூரம் அவர்களை வழிவிட்டும்வருவர் இப்படி சிலவருடகாலம் இந்தஹரிபானர் பாகவதகைங்கறியங்கள்செய்து தனக்கிருந்த ஆஸ்தியை யெல்லாம் விரயப்படுத்தி ஒருகாசேனு மில்லாமற்போகவே ஹரிபானர் இனிவரும் பாகவதர்களுக்கு என்னஉபசாரஞ்செய்வேன் எப்படியவர்கள் மனமகிழச்செய்வேன் எதைக்கொண்டு அறுசுவையன்னம் பரிமாறுவேன் முன்செய்த அபசாரத்தைப் பார்க்கிலும் இன்னுமதிக அபசாரத்திற்காளானேனே இப்படிவருமென்று தெரியாமற்போனேனே இலவுகாத்தக் கிளியானேனே இதற்கு நானினி யென்னசெய்வேன் இந்தசமயம் என்னையாதரிப்பவர்களெவரையுங் காணேனேயென்றுபலவிதமாய் மனக்கவலையடைந்து யாதொன்றுந் தோன்றாமல் சற்றுநேரம் துக்கப்பட்டுக் கொண்டிருந்து தன்மனதைத்தானே தேருதலைசெய்துக்கொண்டு தைரியலட்சுமி பிரகாசிக்கும்படி திடச்சித்தராகி நாமென்ன பாகவதகைங்கறியமெப்படி நடக்கப்போகிறதென்ற சந்தேகங்கொண்டால் முழுமைக்குஞ் சந்தே

கத்தினலேயே பூதத்தினல் விழுங்கப்பட்ட பிராமணா
னைப்போல யாதொருபயனையும் அடையாமல்வீணய்
மாய்ந்து போகும்படிநேரிடும் அதெப்படி யெனில்
ஒருபிராமணன் தன்வீட்டிற் கலகப்பட்டு இல்லறவா
ழ்க்கையில் மனம்வெறுத்துத் துரவரியாகி யாத்திரை
செய்து மோட்சபதவியை யடையவெண்ணித் தன்
பெண்டுபிள்ளை வீடுசுத்தம் முதலாகியதையும்விடுத்து
வெளிப்பட்டு வெகுதேசங்களெல்லாந் திரிந்து யாத்
திரை செய்துக் கொண்டே நடந்து வடதிசையை
நோக்கிப் போகிறபோது அங்கோரிடத்தில் சுத்தப்
பாலநிலமாகவும் மரஞ்செடி புல்பூண்டுக ளில்லாத
மணற்பாங்காக விருப்பதைக்கண்டு அந்தோ யிதெ
ன்னபாவம் சித்திரைமாதம் கத்திரியாதலால் பகல்
பனிரெண்டுமணி உச்சிவேளை ஆதித்தனே வாட்டுகி
ன்றான் பூமியிலோ பாதத்தைவைத்தால் மணலாதலி
னலே கால்களில் கொப்பளங்கள்வெகுவாய் கிளம்பி
விட்டது வெகுதூரம் இப்படியே பாதை மணலாக
விருக்கும்போலத் தோத்துகின்றதே இந்த வழியை
யெப்படிகடந்துப் போகப் போகிறேமென்று சற்று
லோசித்து அங்கோர்மரத்தடியுல் படுத்துக் கொண்
டான் சிறிதுநேரத்திற் கெல்லாம் பசிதாபமுண்டாகி
பொருக்கமுடியாமல் எழுந்து என்னகஷ்டம் நமக்கு
நேரிட்டபோதிலும் அதுகளை மனதி லெள்ளளவே
வேணும் மனதினிற்பதிக்காமல் நடப்பதே உத்தமம்
அன்றியும் நாமிங்கிருந்தால் பசிக்கி அன்னம்கொடுப்
பவர்க ளொருவரையுங் காணேம் மனிதசஞ்சாரமில்
லாத பூமியாயிருக்கிறதே இங்கிருப்பதில் பலனில்லை
யென்றெண்ணி மனேதிடம்பண்ணி அப்பால் நிலத்
தை நண்ணிக்கடவுளை மனதிலுன்னி நடந்து மணற்
சுடுகையினலும் சூரியன்வெப்பத்தினலும் பசிதாபத்
தினலும் மெலிந்துநலிந்து கறிந்துபொறிந்து ஆயாச
மேலிட்டதால் அங்கொரு ஒத்தைப்பனைமரம் நிற்கக்
கண்டு அம்மரத்தடியில்போய் நின்றான் (தேன்படு
பனையின் றிரன்பழத்தொருவிதை வானுறவோங்கி
வளம்பெறவளரினும் ஒருவர்க்கிருக்க நிழலாகாதே)
என்ற நீதிவாக்கியத்திற்கிணங்க ஒருமனிதன் தன்னி
ற்க நிழல்தராத பனைமரத்தைப்போய் யடுத்தானப்பி
ராமணன் அம்மரமோ இக்கலிகாலத்திற்குப் பனைமர
மாய் பாவிகள் கண்ணுக்குத் தோன்றுகின்றது ஆதி
யுகத்தில் அம்மரமே கற்பகவிருட்சமெனச் சொல்ல
ப்படும் அக்காலத்தினில் பிராமணனுக்குஅந்தகற்பக
விருட்சமானது சிரமபரிகாரமாகும்படி குளிர்ந்தகா
த்து வீசியதன்னியிலும் நிழலுந்தந்தது உடனே அப்
பிராமணன்தன்உத்தரீயத்தைஅம்மரத்தடியில்விரித்து
அதின்மேற்படுத்தான் குளிர்ந்தகாத்தினலே சிறிது

சிரமம்நீங்கி பசிதாபந் தாளமாட்டாமல் எழுந்துவீற்
றிருந்துக்கொண்டு ஆஹா இந்தமரம்என்னகுளிர்ந்த
காத்தை வீசுகின்றது இந்தசுகத்துக்குத்தக்கபடியாக
தீர்த்தங்கிடைத்தால் மெத்தநலமா யிருக்குமென்று
கருதினன்; கருதிய சிறிதுநேரத்திற்கெல்லாம்பொற்
சொம்பினில் குளிர்ந்ததீர்த்தம் எதிரிலிருக்கக் கண்
டான் அச்சொம்பு தீர்த்தத்தை அருந்தி ஆனந்தங்
கொண்டான் இத்தீர்த்தங் கிடைத்ததைப்போல இக்
காட்டினில் அறுசுவையன்னமுங்கிடைத்தால்மெத்த
நலமாயிருக்கு மெனவிண்டான் சொல்லிவாயை மூடு
முன்னமே பொற்பாத்திரத்தினில் தேவாமுர்தத்து
க்கு நிகரான அறுசுவையன்னமும் எதிரிலிருக்கக்
கண்டு அப்பிராமணன் அவ்வன்னத்தைப் புசித்துப்
பிர்ம்மானந்த மடைந்து சந்தனதாம்பூலங் கிடைத்
தால் முன்னங்கிடைத்ததைப் பார்க்கிலும் அதிகநல
மாக விருக்குமென நினைத்தான் அப்படியே சந்தன
தாம்பூலமும் வாசனைத் திரவியங்களுடன் பொற்றட்
டில் எதிரிலிருக்கக்கண்ட பிராமணன் பரிமளமாகிய
சந்தனத்தைத் திரேகத்தினில் பூசிக்கொண்டு தாம்பூ
லந்தரித்தும் பரமானந்தமடைந்துஅம்மட்டிலேபோ
காமல் (வினசகாலேவிபரீதபுத்தி) என்பதைப்போல
வினசகாலம்வந்து சமீபித்து அப்பிராமணனுக்குத்
துர்ப்புத்தியுண்டாகியது அதென்னவெனில்பொழுது
போயிற்றே இன்றிரவு இங்குதானேயிருந்து போக
லாமென்றெண்ணி மெத்தையுடன் தலைக்காணியுங்
கட்டிலொன்று கிடைத்தால் படுத்துநித்திரை செய்ய
லாமென்று நினைத்தான் அந்தப்படியே மெத்தைத்
தலைகாணியுடன் கட்டிலொன்றிருக்கக் கண்டு அப்பி
ராமணன் அடங்கா மகிட்சிகொண்டு அக்கட்டிலின்
மீதேரி தலைக்கிஒருதிண்டு காலுக்கொருதிண்டு முன்
பக்கத்திலொருதிண்டு பின்பக்கத்திற்கொருதிண்டை
யும் போட்டுக்கொண்டு படுத்தான் இப்படி படுத்த
வன் நித்திரைசெய்யாமல் கால்பிடிக்க ஒருகன்னிகை
யும் உடம்புபிடிக்க ஒருகன்னிகையும் வந்தால் சிரம
பரிகாரமாகுமென்று நினைத்தான் அந்தப்படியே இர
ண்டுகன்னிகைகள்வந்து ஒருவள் கால்பிடிக்க மைத்
தொருவள் திரேகம்பிடிக்கக்கண்டு அப்பிராமணன்
ஆச்சரியமு மசூசரியமுங்கொண்டு நானென்ன புண்
ணியஞ் செய்தேனே இக்கன்னிகைகள் என்திரேக
சிரமம் நீக்கவந்தனர்களே யெனவிண்டு தீர்க்காலோ
சனையில் மனதைச்செலுத்தி இதென்னகேவலம்பனை
மரம் இதனடியிலிருந்துக்கொண்டு நாம் நினைத்தவஸ்
துக்கள் ஒன்றேனுந் தவராமல் வந்துக்கொண்டே
யிருக்கின்றது இதைத் தீரவாலோசித்தால் இதில்பூத
மேதேனுமிருக்குதோ அப்படிக்கிருந்தால்தான்இதுக

ளெல்லாம் அப்பூதத்தாலனுப்ப வந்திருக்குமென்று
நினைத்தான் அவன்நினைத்தபடியே பூதமொன்று வெ
ளிப்பட்டது அதைக்கண்டு பிராமணன் கிடுகிடென
நடுங்கி இனி நம்முயிர் நீங்குவதன்றி தேகத்தையும்
பூதம்விழுங்குமென்பதற்கையமில்லை என்றுநினைத்து
கட்டுகெட்டுத் தடுமாறுகிற பிராமணனைவிடாமற்பிடி
த்து அப்பூதமானது விழுங்கிப்போயிற்றுஎன்றசவிஸ்
தாரத்தை நாம்கேட்டிருந்து இனிசந்தேகமென்பது
நாம்கொள்வது சரியல்ல சந்தேகமே நம்முயிரைப்
போக்கி விடுமெனக்கருதி அந்தஹரிபானன் சந்தேக
த்தைவிடுத்து திடச்சித்தனாகி பாகவதர்களை ஆராதி
ப்பதற்கு வேண்டிய பொருள் கிடைக்கும் வழியை
யோசித்துக் கொண்டிருந்தனர்.

இப்படி யோசித்துக்கொண்டுநெடுநேரமிருந்து
[illegible]ன்றெழுந்து தட்டிஜல்லடம்பூண்டு கத்திகட்
டாரி பிச்சுவா ஈட்டிமுதலான ஆயுதங்களையெடுத்துக்
கொண்டு வீட்டைவிட்டு வெளிப்பட்டு தன்னுடைய
கிராமத்திற்கு மூன்றுமயில்தூரத்திலிருக்கும் காட்டி
ன்நடுவி லிருந்துக்கொண்டு பாட்டைசாரிகள் யாரே
னும்வந்தால் அவர்களை அடித்துப்பறித்து அப்பொ
ருளைக் கவர்ந்துக் கொண்டுவந்து பாகவதர்களுக்கு
ஆராதனைசெய்விக்க நினைந்து வெகுநேரங் காத்துக்
கொண்டிருந்தும் பகவானுடைய மாய்கையினால் அ
னேக ஜெனங்கள் போக்குவரத்தா யிருந்தும் இந்த
ஹரிபானர்கண்களுக்கு ஒருவரேனும் புலப்படாமற்
போயினர்கள். அப்போது ஹரிபானர் இத்தனைநே
ரங்காத்திருந்தும் ஒருப்பிராணியாகிலும் இம்மார்க்க
மாய் வரவுமில்லை போகவுமில்லையே பகல் இருபது
நாழிகையாயிற்றே வீட்டிலிருக்கும் பாகவதர்கள்பசி
யினால்வருந்திநம்மைதூஷிப்பார்களே இதற்குநானெ
ன்னசெய்வேன் ஜெகதீசா ஆசானிட்ட கட்டளையை
நிறைவேற்றுவதற்குப் பொருளில்லாமல் நடக்கவே
ண்டியதா யிருக்கின்றதே முன்னமே யான்செய்த
பாகவத அபாசாரத்தைப் போக்கிக்கொள்ளும் நிமித்
தியம் பாகவதர்களை ஆராதித்து அவ்வபசாரங்களைப்
போக்கிக்கொள்ளக்கடவாயென்று ஆசான்கூறியபடி
நிமைநேரமாயினும் இடைவிடாமல் தொண்டு செய்
துக்கொண்டிருந்த எனக்கு மென்மேலும் அபசார
மென்னும் பாபங்கள் அதிகரித்துக்கொண்டேவருகி
ன்றதே ஓசற்குருநாதரே இக்கொடிய பாதகங்கள்
என்னை அணுகாமலிருக்கும்படிகிருபைசெய்யவேணு
மென்று பதரிக்கதரி அழுது கண்ணீருராய்ப்பெருக
விட்டுக்கொண்டு துக்கப்பட்டுக் கொண் டிருக்கிற
போது ஆசான் அங்கெழுந்தருளி ஹரிபானன் முன்
னம்நின்றார் அப்படிநின்றிருக்கும் ஆசானைக் கண்டு
ஹரிபானன் திடுதிடென்றோடி ஆசான்றிருவடிகளில்
விழ்ந்து ஓபரமசத்குருநாதரே பாபங்களைப் போக்க
டித்துக் கொள்ளும்பொருட்டு முயர்ச்சிசெய்துக்கொ
ண்டேவருகையில் மென்மேலும் பாபங்கூ ளென்னை
வந்தணுகுகின்றதே இதற்கு நானென்ன செய்வேன்
என்னையாட்கொள்ளும் நிமித்தியம் இக்கொடியகாட்
டினில்வந்து தெரிசனந்தந்த பரமகிருபா மூர்த்தியே
யென்று அழுதுப்புலம்பும் ஹரிபானரை அந்த சத்
குருநாதர் தன்னிருகரங்களாலுந்தாங்கியெடுத்துஅப்
பாகீஷா இதற்காகவா நீவிசனப்படுகிறாய் விசனப்ப
டாமல் தைரியமா யிருப்பையாகில் சிறிதுநேரத்திற்
குள் உன்யெண்ணம் நிறைவேறுமென்று சொல்லிப்
போயினர். அப்போது ஹரிபானர் அந்தோ வீட்டி
னிலிருக்கும் பாகவதர்கள் பசியினால்வாடி மெலிந்து
போவார்களே ஓஜெகதீசா சர்வேசாபக்தர்கள்நேசா
பரமபுருஷா நின்பக்தர்கள் பசிநோயினால் களைத்து
இளைத்து நலிந்துமெலிந்து சிரமப்பட்டுக் கொண்டி
ருப்பது தேவரீருக்கு விளையாட்டாக விருக்கின்ற
தோ பக்தபராதீனனாகிய வுமக்குதருமமோ வென்று
முறையிடுகிறபோது ஸ்ரீஹரி லட்சுமியுடன் சர்வாப
ரணபூஜிதராகி ஹரிபானரை சோதிக்கவெண்ணி அம்
மார்க்கமாய் வந்தனர். அவர்களைக்கண்டு ஹரிபானர்
மெத்தசந்தோஷசித்தராகி அவர்களுக்குக்குறுக்கேகி
போகவொட்டாமல் மிரட்டி நில்லுங்கள் நில்லுங்க
ளென்று சொல்லித்தடுத்து சவுகார் வடிவுடன் வந்த
புருஷனைநோக்கி ஓஐயா சவுகாரே நீங்களிருவரும்
அணிந்துக்கொண்டிருக்கும் படியான ஆபரணங்கள்
யாவத்தையுங் களைந்து என்னிடங்கொடுத்து மறுத்
தொன்றுஞ் சொல்லாமற் போவீர்களே யாகில் உங்
கள் பிராணன் நிலைத்திருக்கும் இன்னுஞ் சிலகாலம்
இப்புவியின்மீது நீங்களுளாவித் திரிந்துக்கொண்டிரு
ப்பீர்கள். இவ்வாபரணங்களைக் கொடுப்பதில்லை யெ
ன்று சொல்லிமருத்து நடக்கத்துணிவீர்களே யாகில்
உங்களிருவருயிரையும் இந்தவாளுக்கு யிரையாகும்
படிச் செய்வேனென்று பயமுறுத்தினான். அதற்கு
ஹரி பயந்தவரைப்போல அபிநயித்து தன்மனைவி
யணிந்துக்கொண்டிருக்கும் ஆபரணங்களில் ஒன்றை
யேனும்விடாமற் களைந்துக் கொடுத்து அப்பாயினி
நாங்கள்போக விடைதருகிறாயாவென ஹரிபானன்
தடையின்றி நீங்கள் சுகமாய்ப் போகலாமென ஹரி
யும் லட்சுமியும் அவ்விடத்தைவிட்டு நடந்தனர்கள்.
அப்போது ஹரிபானன் வெகுசந்தோஷத்தை யடை
ந்துசகலாபரணங்களையும்மேல் போர்வையில்வைத்து
மூட்டை கட்டிக்கொண்டு சிரத்தின்மீது வைத்துக்

ஐந்தாம்பாகம்.

கொண்டு விரைவாகநடந்து தன்வீட்டை யடைந்து
ஆபரணங்களைப் பத்திரப் படுத்தி சாதுக்களுக்குத்
தொண்டுசெய்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு ஹரிபானனிருக்கையில் ஹரியானவர்
சவுகாரவேடத்தை மாத்திசகொண்டு லட்சுமியுந்தா
னும் பகவத்பக்தர்களைப்போல வேடம்பூண்டு ஹரி
பானன்வீட்டிற்கு வரக்கண்டுஹரிபானர் அவர்களுக்
கெதிராகவந்து அழைத்துச்சென்று தக்க ஆசனத்
தின்மீது அவர்களிருவரையும் வீற்றிருக்கச் செய்து
சகல உபசாரங்களாலும் பூசித்து அமுதுண்ணச் செ
ய்து இருகரங்களையுஞ் சிரத்தின்மீது குவித்துக்கொ
ண்டு ஒசுவாமி தங்களுக்குப்பொருளோ அல்லதுஆப
ரணமோ இவ்விரண்டில் யெதுவேண்டியிருக்கிறதோ
அதை தெரியக்கூறினல் அவசியந்தடையின்றித் தரு
கிறேனென அதற்குபகவான் ஓசாதுசீலரே எங்களு
க்குள்ள பொருளை யெல்லாம் வழிமார்க்கத்தினில்
சோராள் அடித்து பரித்துக் கொண்டானென அத
ற்கு ஹரிபானன் கடுஞ்சினமடைந்து சாதுக்களு
டையபொருளை அபகரித்துக் கொண்டேபின் துஷ்
டனை இப்போதே இந்தவாளுக் கிரையாகச் செய்து
வருகிறேனென்று சொல்லிப் புறப்பட்டான். அதை
யறிந்து ஹரியானவர் பழையபடி சவுகாரைப் போல
வும் லட்சுமி சவுகார்மனைவியைப் போலவும் வடிவெ
டுத்து நிற்கக்கண்டு ஹரிபானன்பயந்து ஆபரணங்க
ளனைத்தையு மெடுத்துவந்து அவர்களுக்கு முன்வை
த்து தீர்க்கமாகவிழுந்து தெண்டனிட்டுஒபரமசாதுக்
களே உங்களுக்கு யான்செய்த அபசாரத்தை க்ஷமித்
துப் புதல்வனைப்போல அடியேனைப்பாவித்து ரக்ஷி
க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேனென்றுவினயமா
கப் பிரார்த்திக்கக்கேட்டு ஹரிதன்சுயரூபத்துடனும்
லட்சுமி தன்சுயரூபத்துடனும் சேவைசாதிக்க அவர்
களுடைய சேவையிலீடுபட்டு ஹரிபானன் இனியில்
லாத பரமானந்தமடைந்து ஒ கருணாகரக் கடவுளே
யான்தங்களை சவுகாரென்றே பாவித்து பயமுறுத்தி
அன்னையின் ஆபரணங்களையெல்லாம் பரித்துக் கொ
ண்டுவந்த கொடியபாதகனாகும். இப்பாதகங்களுக்கு
அன்னையுடன் தேவரீர் சேவைதரலாமோ இக்கள்ள
னுக்குந் தாங்கள்கிருபைக்கண்ணோக்க மருளலாமோ
வென்று சொல்லிக்கொண்டே அங்கோர்கல்லின்மீது
தன்சிரத்தை மோதிக்கொண்டு கடவுளுக்கிரண்டகஞ்
செய்தசுவாமி துரோகியான கொடியபாதகன் உயிர்
வைத்துக்கொண்டு உலகத்தினில்வாழ்வேனோஎன்று
சொல்லித் தன்னுயிரைப் போக்கிக்கொள்ள துணிந்
திருக்கும் ஹரிபானனது மனோபாவத்தை யுணர்ந்து
ஹரியானவர் அந்தஹரிபானனைப் பிடித்துகொண்டு
பரமபக்த சிகாமணியாகிய ஹரிபானரே உன்னுடை
யபக்தியை சோதிக்கவெண்ணி யானே யிக்காரியத்
தைச் செய்தபடியால் உன்மீது தோஷமில்லை அன்றி
யும் நின்சொந்த உபயோகத்திற்காக எங்கள் மீதிரு
ந்த ஆபரணங்களை கொள்ளை யடித்துக்கொண்டு வர
வில்லையே பாகவதர்களுக் குபயோகப்படுத்து[illegible]
ருட்டன்றோ நீஎங்கள் பொருளை அபகரித்துக் கொ
ண்டுவந்தது இதனால் நீதிருடனுங் கள்ளனு மாவை
யோ ஆகமாட்டாய்மேலும்சிறுபிராயமுதற்கொண்டு
நீபாகவதர்களை ஆராதித்துக்கொண்டு வந்தவனாகை
யால் நீமெத்த புண்ணிய புருடனாகும் உன்னுடைய
பக்திக்கியான் கட்டுப்பட்டவ னாகையால் உனக்கெ
ளிதில் என்னுடைய தெரிசனந்தந்தேன். இதோஉன்
பிராணனிருக்கும் பரியந்தம் இப்பொருளை யுனக்கீய்
ந்தேன் இதைக்கொண்டுத் தீயர்களை ஆராதித்துக்
கொண்டிருந்து முடிவில் நம்முடையபதவியை யடை
யக்கடவீரென்றுசொல்லி ஆசிகூறி ஹரியானவர் லட்
சுமியுடன் மாயமாய் மறைந்துபோயினர்.

இந்தப்படி ஸ்ரீஹரியானவர் ஆசிகூறி மறைந்து
போயினபின்னர் பகவான்கொடுத்த அழியாத பொ
ருளைக்கொண்டு ததீயர்களை ஆராதனஞ்செய்துக்கொ
ண்டு சிலகாலம் பக்திசெய்து ஸ்ரீஹரி மகிழ்வெய்த
மெத்த சீலராகவிருந்து முடிவினில் என்றுமழிவில்
லாத வைகுந்தபதவி யடைந்தனர்.

வாழிவிருத்தம்.

ஹரிபக்தர்தமையுலகி லாதரித்தோன்வாழியே
ஹரிபக்தராகுமாசா னருள்பெற்றோன்வாழியே
ஹரிலக்குமியாபரண மபகரித்தோன்வாழியே
ஹரிபானர்தம்பதங்க ளனுதினமும்வாழியே.

ஹரிபானன்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

தனாஜாட்டு சரித்திரம்.

துதி விருத்தம்.

குணாதிசயங்களுண்டாங் குருபதசேவையுண்டாம்
அனாதியாய்ச்செய்தபாப மகன்றுபேரின்பமுண்டாம்
ஜனார்த்தனன்கிருபையுண்டாஞ் ஜெகத்தினிற்கீர்த்தியுண்டாம்
தனாஜாட்டுசரிதைதன்னைத் தரணியிற்பகருவோர்க்கே.

பிரம்மதேவனால் சிருஷ்டி செய்யப்பட்ட இவ்வுலகினில் இந்துஸ்தானி தேசமதனில் தனாஜாட்டுவென்ற குடியானவனொருவரிருந்தனர் அவருக்குப்பசுக்கள் மெத்தவுண்டு அம்மந்தைகளை யோட்டிக் கொண்டு காட்டிற்குச்சென்று பசுக்களை மேயவிட்டுத் தானொரு மரத்தடியிலிருந்து பகவத் குணானுபவஞ் செய்துக்கொண்டு பசுக்களுக்குத் தண்ணீர்காட்டிச் சாயுந்திரமானதே பசுக்களை யோட்டிக்கொண்டுவீட்டிற்குவந்து சேர்ந்து ஹரிபக்தர்களுடன் கூடிப்பாடியாடி ஆனந்தித்து இரவைப்போக்கி சிறிதுநேரம் சயனித்தெழுந்து பால்கரந்து அதைவிற்பனைசெய்து அந்தப்பணத்தைக் கொண்டு வேண்டிய சம்மாரங்களை வாங்கி அறுசுவையன்னஞ் சமைத்து ஹரிதாசர்களுக்கிட்டுத் தானும்புசித்து பசக்களையோட்டிமேய்த்து வருகையில் ஒருநாள் அன்னியதேசத்தி லிருந்து சிலபாகவதர்கள் வந்தனர்கள் அவர்களைக்கண்டு தனாஜாட்டு அதிகமகிழ்வுடனெதிர்ச்சென்றழைத்துவந்து தக்கபடி உபசரித்து அன்னபானாதிக ளுதவி ஆதரித்துவருகையில் ஒருநாள் அவர்கள் சாளக்கிராமத்தை வைத்துப் பூசைசெய்துக் கொண்டிருக்க அதைக்கண்டு அவர்களைநோக்கி ஓசுவாமிகளே அடியேன் மீது கிருபைகூர்ந்து இந்தசாளக்கிராமத்தினிலொன்றை அளிக்கவேணுமென அதற்கவர்கள் ஓஐயா எங்களை ஆதரித்து பசியார அன்னமிட்டுக் காப்பாத்துகிற தங்களுக்கொரு சாளக்கிராமமல்ல எல்லாசாளக்கிராமத்தையுந் தருகின்றோம் இரண்டொருநாள்பொறுத்திருமென்று சொல்லி அக்தவஞ்சகர்கள்கருப்புக்கல்லொன்றைத் தேடியெடுத்து அதைக் குண்டாகத் தேய்த்து சாளக்கிராமத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டிருந்து இரண்டுமூன்றுநாள்கடந்தபின் அவர்கள் தனாஜாட்டுவையழைத்து சாளக் கிராமத்துடன் சேர்த்து வைத்திருந்த கருப்பு குண்டுக்கல்லை யெடுத்துக்கொடுத்து ஓபரமசாதுவே எங்களிடத்தி லிருக்கும் சாளக்கிராமத்திற் கெல்லாம் இதுமேலானசாளக்கிராமமிதைத் தாங்கள் வைத்துப் பூசித்து வருவீரேயாகில் உமக்கு க்ஷேமமுண்டாகுமென்றுசொல்லி விடைபெற்றுச் சென்றனர்கள்.

இவ்வண்ணம் சாளக்கிராமத்தைக் கொடுத்துச் சாதுக்கள் போயினபின்பு தனாஜாட்டு அந்த சாளக்கிராமத்தை யிடைவிடாமல் எங்கு சென்றபோதிலுமெடுத்துக்கொண்டு போவார் ஆங்காங்கு தனக்குக் கிடைக்கும் அன்னமோ அல்லதுரொட்டியோ அதுகளைத்தான் குளித்து சாளக் கிராமத்தைப் பூசித்து உண்ணுமுன் சாளக்கிராமத்தை நோக்கி ஓஜெகதீரா தாங்களென்மீது கிருபை வைத்துவந்து இந்தரொட்டியைப் புசித்துப் போக வேணுமென்று வேண்ட அடியார்க்கெளியவனாகும் பகவானும் அணுவுக்குளணுவாய்த் தோன்றும் மாயசொரூபராகிய கிருஷ்ண பரமாத்துபா அந்த சாளக்கிராமத்திலிருந்து வெளிப்பட்டு சங்குசக்ர தாரராகிவந்து தனாஜாட்டு வைத்திருக்கும் ரொட்டியிற் கொஞ்சம் புசித்துத் திருப்தியடைந்து பழயபடி சாளக்கிராமத்தி னுட்பிரவேசித்து மரைந்துபோயினார் இப்படி அனுதினமும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாளக்கிராமத்தி லிருந்து வெளிப்பட்டு தனாஜாட்டு வைத்திருக்கும் அன்னமோ அல்லது ரொட்டியோ புசித்து மரைந்து போயினபின் தனாஜாட்டு பகவான் புசித்த சேதைத்தான் புசித்து ஆனந்தமடைந்து வருகிறபோது ஒருநாள் சிலபாகவதர்கள் பகவத்குணானுபவஞ் செய்துக்கொண்டே

தனுஜாட்டு வீட்டையடைந்து ஓபரமசாதுவே இந்த கருப்புகாலத்தில் எங்களுக் குண்டாயிருக்கும் பசி நோயைத்தீர்த்து ஆதரிப்பீரேயாகில் உமக்குமெத்த புண்ணிய முண்டாகுமென்று வேண்டிக்கொள்ள அதையந்த தனுஜாட்டுகேட்டு இவர்களென்ன அகாலத்தினில்வந்து பசிக்குணவு கேட்கின்றார்களேஇத்தனை பேருக்கும் இந்தசமயத்தில் அமுதுபடியில்லையேஇதற்கென்ன செய்கிறதென்று யோசித்து விரைக்காக வைத்திருக்கும் நெல்லையெடுத்துக் கொடுத்துக்குத்தியானதே அரிசியைக்கொண்டு அன்னம்சமைத்து அறுசுவைபதார்த்தங்களுடன் பரிமாரி அச்சாதுக்களுக்குப் புசித்துப் பசியாரச்செய்து நயமொழிகளால் அவர்கள்வசிக்கும் ஊரையும்பேரையும் அரிந்து இரண்டு மூன்றுநாளவர்களை யாதரித்து வருகையில் வீட்டிலுள்ளவர்கள் இதென்ன அனியாயம் விரைக்குவைத்திருந்த நெல்லையெடுத்து இப்படியுஞ் செய்புமவர்கள் யாரேனுமுண்டோ இந்தபஞ்சகாலத்தில் பெருத்த சவுக்கார்களெல்லாம் என்னபாடு படுகின்றார்கள் இப்படிப்பட்ட சாதுக்கள் கோடிகோடியாய் வந்தபோதிலும் அவர்களுக்கு அன்னபானாதிகள் அளிக்குஞ் சத்தியுடையவர்களாக யிருந்தும் இப்படிபட்ட கைங்கரியங்களை அவர்களேன் செய்யவில்லை பொருள் விரயமாய் விடுமென்றல்லவோ யோசித்துமேலுமேலும் திரவியஞ் சேகரஞ்செய்கிற விதமெதுவோ அதில் ஊக்கமுடையவரா யிருப்பதை உணர்ந்திருந்தும் ஏழையாகியும் பகலுக்குப்புசித்தால் இரவுக்கில்லாத இவர்யிப்படி விரைக்குவைத்திருந்த நெல்லையெல்லாஞ் சாதுக்களுக்கிட்டு விரயஞ் செய்துப் போட்டாரே இன்னுஞ்சிலநாளில் கழனியைஉழுது விரைவிரைக்கவேணுமேஅப்போதிவர்விரைக்குயென்னசெய்வரோ யாரைப்போய் கெஞ்சுவரோ என்று சொல்வதைக்கேட்டு அந்ததனுஜாட்டு அவர்களை நோக்கிச் சொல்லுகின்றார்.

கேளுங்கள் அகத்தினரே வீணாக என்னையேன் நிந்தனைசெய்கின்றீர்கள் விரைக்கி வைத்திருந்த நெல் யாருடையது நம்முடைய நெல்லென்றால் சுதந்திரப் பட்டவர்களாகின்றோம் எப்போது சுதந்திரப் பட்டோமோ அப்போதே யென்னுடையது உன்னுடையதென்ற மமகாரமுண்டாயிற்று. மமகாரமென்றால் என்னவெனில் நான் நீயென்றகெர்வம் ஆங்காரமாகும் இப்படி நானென்ற கெர்வங்கொண்டால் பகவானுக்கு அபசாரப்பட்டவர்க ளாகின்றோம் அதெப்படியெனில் (அவனலாலுலகமில்லை-அவனளால்நீயுமில்லை-அவனலால் நானுமில்லை-அவனசை யாமலெங்கு மணுவசையாது கண்டாய்) என்ற பிரகலாதருடைய மொழியின்படி விராட்சொரூபராகிய மகாவிஷ்ணுவையன்றி இவ்வுலகமில்லை அவனையன்றி நீயுமில்லை அப்பரமாத்மனையன்றி யானுமில்லை இறப்புபிறப்பு மில்லாத ஆதிதேவன் அசைந்தால்தான் அணுவுமசையும் அப்பரம்பொருள் அசையா விட்டால் எங்கும் அணுவுகூட அசையமாட்டாது ஆகையால் சர்வசுதந்திரன் நாமோ அந்தமகாவிஷ்ணுவின் கட்டளையின்படி பரதந்திரமாய் நடக்க வேண்டியதாயிருக்க அக்கட்டளையைமீறி எனக்கு நிகரானவர்கள்ஒருவருமில்லையென்று ஆங்காரங்கொண்டால் இரணியன், இரணியாக்கதனைப் போலவும், ராவண கும்பகர்ணனைபோலவும், தந்தவக்கிர சிசுபாலர்களைப் போலவும், உருமாய்ந்துப் போவோமென்ப துண்மையாகும் ஆதலால் உலகத்திலுள்ள சகலசொத்துக்களுக்குஞ் சுதந்திரராகிய புருஷோத்தமனை யாராதிப்பது மேன்மையே அப்புருஷோத்தமனை யாராதிப்பதைப்பார்க்கிலும் அவருடைய அடியார்களை ஆராதிப்பது மேன்மையிலும் மேன்மையாகும் என்ற வேதமுறைப்படி தவறாமல் யானும் ததியர்களுக்குத் தொண்டுசெய்து அவர்களுக்கு ஆராதனை செய்துவருகிறேன் இப்படிசெய்வது யெதுக்காக வென்பீரேல் ஜென்மசாபல்யமடைய ஜென்மசாபல்ய மென்ப தென்னவெனில் மறுஜென்மமில்லாமல் வைகுந்தமா:னகரத்தையடைந்து நித்தியசூரிகளுடன் கலந்து திருமாமணி மண்டபத்தினில் பூதேவி ஸ்ரீதேவி நீளாதேவியுடன் வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணரை சேவித்துக்கொண்டுநிரந்தரமா யிருப்பதேயாம் ஆகையால் பொருளைத்தேடி பத்திரப்படுத்திக் கொண்டு தானுமுண்ணாமல் அன்னியருக்கும்ஈயாமல் பாகவதர்களுக்குமிடாமல்நாளைப்போக்கி முடிவில் நரகத்தையடைவதுதானோமானிடஜென்ம மெடுத்ததற்குப் பலன் சாகரத்தினில்அலைகள் ஒன்றின்பின் றொன்றுவருவதுபோல அளவிறந்த ஜென்மங்களெடுத்து கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதில் என்னபிரயோஜனம் அன்றியும் மானிடஜென்மமெடுப்பது அரிது எடுத்தபோதிலுங் கூன் குருடு செவிடு பேடு என்னும் அவயப்பழுதின்றி சகலஅவயவங்களும் பூரணமாகப்பொருந்தி பிறப்பதும்அரிது அப்படி பிறந்தபோதிலும் பெண்ணாக உதிக்காமல் புருடனாக உதிப்பது அரிதிலும்அரிது புருடனாகியுதித்தபோதிலும்ஞானஹீனனாகி நாட்டினிலுதிக்காமல் நல்லுணர்வுளனாகி இவ்வுலகினில் அரிதாகியமானிடஜென்மங் கிடைத்ததற்குக் காரணமென்ன இந்தஜென்மத்தை வைத்துக்கொண்டு என்னசெய்தால் மருப்பிரவியில்லாமற் போகுமென்று தீர்க்கமாய் ஆலோ

..த்துப் பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடி சாத
னஞ்செய்து பரலோகத்தை யடையவேண்டும்.

இப்படிப்பட்ட நன்மார்க்கத்தை யடைவதற்கு
சாதுக்களுடைய சேவைசெய்யவேண்டும் பகவந்நா
மத்தைத் துதிசெய்துக்கொண்டிருந்தால் பரலோகத்
தையடையலாமென்று சொல்லி மருபடியும் சாதுக்
கள் சேவைசெய்யவேணு மென்றீரே எதுக்குசாதுக்
கள் செவைசெய்யவேண்டும் அந்த மர்ம்மத்தையுஞ்
சொல்லவேணு மென்பீர்களேயாகில் சொல்லுகின்
றேன் கேளுங்கள் சாதுச்களுடைய பெருமையைதே
வகுருவாகிய பொன்னவனும் பிரம்மதேவனும்
சரஸ்வதியினாலும் ஆயிரம்பணாமுடிகளையும்இரண்டா
யிரம் நாவையும்படைத்த ஆதிசேஷனாலும்சொல்லத்
தரமோ இப்படிப்பட்ட மகான்களாலேயே சாதுக்க
ளுடைய புகழை எடுத்துரைக்கத் தரமாகாம லிருக்க
கேவலனாகிய என்னொருநாவால் சொல்லிமுடிவுபெரு
மோ தரமாகமாட்டாது ஆகிலும் என்மனதிற் கெட்
டியமட்டில் நவிலுகின்றேன் கேளுங்கள் சாதுக்கள்
சேவையினாலே என்றுமழியாத சம்பத்தை அடைய
லாம் சாதுக்கள் சேவையினாலே மென்மேலுங் கீர்த்
தியுண்டாகச்செய்யும் சாதுக்கள் சேவையினாலே ஜெ
ன்மாந்தரங்களிற் செய்தபாபங்கள்நசித்துப்போகும்
சாதுக்கள் சேவையினாலே இனிமேல் நம்மைஅணுக
எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தோஷங்கள்பஞ்சா
கப் பரந்துபோம் சாதுக்கள்சேவையினாலே உள்ளங்
கை நெல்லிக்கனிபோல ஞானம்பிரகாசிக்கும் ஞான
த்தினாலே வெகுசுலபமாய் பகவானைச் சேவிக்கலாம்
ஆகையினாலே ஒவ்வொருவரும் அவசியம் சாதுக்கள்
சேவைசெய்திருந்தால் முடிவில் சாம்பிராச்சிய பதவி
யை எளிதிலடையலாமென்று சொல்லி அந்ததனஜா
ட்டென்பவர் தனக்குண்டான ஆஸ்தியை எல்லாஞ்
சிலவழித்து சாதுக்களை ஆதரித்துச் சேவைசெய்துக்
கொண்டிருந்தனர்.

இவ்வண்ணம் தனஜாட்டு சாதுக்களுடைய சே
வையிலேயே காலத்தைக்கழித்துக் கொண்டிருக்கிற
போது அவ்வூரில்வசிக்கும் குடிகள் தங்கள் தங்கள்
நிலங்களை உழுது விரைவிரைத்து அதற்குச் செய்ய
வேண்டிய சிகிச்சைகளைச் செய்துக்கொண்டு வருகிற
போது பயிரானது நாளுக்குநாள் செழித்துந் தழை
த்துமிருக்க அதைக்கண்டிவர்மனையாள் அந்தோ நம
க்கு விரையிருந்தால் நம்முடைய நிலத்தை உழுது
விரைக்கலாமல்லவா விரைக்காகவைத்திருந்தநெல்லை
யெடுத்து சாதுக்களுக்கு உண்டிசமைத்துப் பரிமாரி
சிலவுசெய்துவிட்டாரே இதற்கு நாமென்ன செய்கி
றது இந்தகிராமத்தினில் ஒவ்வொருவீட்டிலு மிருக்
கும் புருஷர்கள் என்னப்பாடு படுகின்றார்கள் நம்மு
டையபுருஷனோ வீட்டிலுள்ளவஸ்துக்களையெல்லாம்
விக்கிரயஞ்செய்து சாதுக்களுக்கு உபயோகிப்பது
மன்னியில் சாதுக்களைவிட்டும் பிரியாமல் அவர்களி
டத்திலேயே வசனித்துக் கொண்டிருக்கின்றாரேஇது
யான் முன்னஞ்செய்த தீவினையோ யாரிட்ட சாபனை
யோ என்று விசனப்பட்டுக் கொண்டே வந்து அம்
மாது வீட்டையடைந்து சாதுக்களுடன் வசனித்துக்
கொண்டிருக்கும் தன்கணவனைநோக்கி ஓசுவாமிஅக்
கம்பக்கத்தினி லிருக்கும் உம்மைப்போன்ற புருஷர்
கள் தங்கடங்கள் நிலங்களைஉழுது விரைவிரைத்து
அதற்குத்தக்க முயற்சிகளைச்செய்து வருவதால் பயி
ரானது தழைத்து ஒண்ணரைமுழம் வளர்ந்திருக்கின்
றதே இரண்டொருமாதத்தினில் அறுப்பறுத்துநெல்
லை வீட்டிற்சேர்த்து வருஷத்திற்குக் குறைவில்லாமல்
புசித்து சந்தோஷித்திருப்பார்கள். தேவரீரோ விரை
க்காக வைத்திருந்த நெல்லையெடுத்து சாதுக்களுக்கு
அன்னஞ்சமைத்துப்போட்டு வீட்டைவெருவீடாக்கி
சாதுக்களிடத்திலேயே பிரியாமல் இருக்கின்றீர் இப்
படிக்கிருந்தால் மேல்வருஷம் வரைக்கும் பிரசாதத்
திற் கென்னசெய்கிறது ஒருவருஷபரியந்தம்நமக்குக்
கொடுத்து ஆதரிப்பவர்கள் யாரிருக்கின்றார்கள் தங்க
ளுக்கிது தெரியாதா எல்லாந்தெரிந்த தேவருக்கு
யான் சொல்லவும் வேணுமோசிறுகுழந்தையா அடித்
துப்பிடித்துந் திருத்துவதற்கு வீட்டிலிருக்கும் வஸ்
துக்களைப் பாழ்செய்யும் உம்மைப்போன்ற புருஷர்
கள் இக்கிராமத்தினில் யாரேனுமுண்டோ அடியாளு
ம்மை மணவாளராக மணந்துக்கொண்ட நாள்முதல்
இன்றையவரைக்கும் யானென்ன சுகத்தை யடைந்
தேன் அக்கம்பக்கத்திலிருக்கும் பெண்களைப்பாரும்
மூன்றுவேளையும் எதேஷ்டமாய் புசித்து ஆடையாப
ரணங்களையணிந்து சுகத்துடனிருக்க என்துரத்ருஷ்
டமா இப்படிப்பட்ட நாயகன் எனக்குலபித்ததுஎன்
றுசொல்லிக் கொண்டே கண்ணீராறாய்ப் பெருகவிட்
டுக்கொண்டு துக்கசாகரத்தினில் மூழ்கியிருந்தனள்

இவ்வாறு மொழிந்து துக்கசாகரத்தில் மூழ்கி
யிருக்கும் தன்மனைவியைநோக்கிதனஜாட்டுசொல்லு
கின்றார் கேளும்பெண்ணே சத்குணவதி சாதுக்களு
க்கு ஆராதனஞ்செய்வதினாலும் அவர்களுக்குத் தொ
ண்டுபுரிவதினாலும் உண்டாகும் பிரயோஜனமின்ன
தென்றுணராதவ ளாகையால் என்னையிப்படிதூஷிக்
கின்றாய் இந்ததூஷணை என்னையொன்றுஞ் செய்ய

மாட்டாது அன்றியும் பிரம்மசரியவானப்பிரஸ்தகிருகஸ்த சன்னியாசமென்று ஆசிரமங்கள் நான்குண்டு இந்த ஆசிரமங்கள் நான்கில் கிருகஸ்தாசிரமம் விசேஷம் அதெப்படியெனில் கிரகஸ்தாசிரமம்தவிர மற்ற மூன்றாசிரமவாசிகள் மெத்தமகிமாதிசய முடையவர்களாயிருக்கினும் பசிபாதை நிவர்த்தி இல்லறத்தாலே ஆகவேண்டிய திருப்பதினாலே (இல்லறமல்லது நல்லறமன்று) எனமொழிந்த ஔவையார் வாக்கியத்தின்படி இல்லறத்திலிருப்பவன் எழை பரதேசிகள் முதலானோருக்கும் ஆதாரமானபடியினாலே நாம்இல்லறத்திலிருந்து எழைபரதேசிகள் முதலானவர்களையும் அவசியம் ஆதரிக்கவேண்டுமென்ற பிரமாணமிருப்பதினாலே யானுமந்தப்படி சாதுக்களை ஆராதிப்பதும் அவர்களுக்குத் தொண்டுபுரிந்துக்கொண் டிருக்கின்றேன் இதற்குப்பலன் உடனேகிடைக்கும் அதெப்படி கிடைக்குமென்னையோ பகவத் பாகவதர்களுக்கு யான்செய்வித்த தருமம் ஒன்றுக்கனேகமாய்பகவானுடையகிருபையினாலேசீக்கிரகாலத்திலேதானே உண்டாகும் இதைப்பற்றி நீகலங்கி விசனப்படவேண்டாமென்று சொல்லி துக்கத்தைப்போக்கித்தான் சென்று சாதுக்களுடன்கூடி பஜனைபாடி பகவானைக் கொண்டாடித் தன்னைமரந்தாடி தலைவனிற் கலந்திருந்தார்.

அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர்தன்னுடையபக்தனை மனைவியும் ஊர்ஜெனங்களும் இழிவாகப்பேசுகிறதற்கு மனந்தாளாமல் தானொருபணியாளனாகிக் கலப்பையைத் தோளின்மீது யெடுத்துகொண்டு மாடுகளை யோட்டிச்சென்று தனாஜாட்டுக் கழனியை உழுது விரைவிரைத்து மாயமாய் மறைந்துப் போயினர். இதைக்கண்ட சிலர் ஓடிவந்து தனாஜாட்டைக்கண்டு ஓஐயா யாரோ ஒருமனிதன்வந்து நின் கழனியைஉழுது உடனே விரைவிரைத்துகொண்டேயிருக்கப்பார்த்த நாங்கள் மருபடியுந் திரும்பிப்பார்க்கும்போது கலப்பையும் மாடுகளையுங் காணோம் இதென்ன விந்தையோ தெரியவில்லை யன்றியும்நிலத்தை உழுதவுடனே விரைவிரைத்தவர்களை நாங்களெங்கும் கண்டதில்லையென்று சொன்னார்கள். அதைக் கேட்டு தனாஜாட்டு விரைவாகச் சென்று தன்கழனியைப் பார்க்கிறபோது உண்மையா இருப்பதைக் கண்டு இது பகவானுடைய செய்கையாகுமென்றுணர்ந்து பகவானை பற்பலவாறு துதிசெய்துக் கொண்டே தன்னகம்புகுந்து சாதுக்களுடன்பஜனைசெய்துக் கொண்டிருந்து அன்றிரவைப் போக்கிக் காலையிலெழுந்து ஸ்நானத்திற்குப் போகும்போது விரைவிரைத்திருந்த கழனியில் பயிர்செழித்தும் தழைத்தும் இருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்து பகவானைத் துதிசெய்துக்கொண்டே சென்று ஸ்நானஅநுட்டானங்களை முடித்துக்கொண்டு திரும்பி வருகிறபோது கழனியைப் பார்த்தார் அப்போது அந்தப் பயிரானது கதிர்விட்டுப்பழுத்து அறுவடை செய்வதற்குத் தயாராயிருப்பதை யறிந்து விரைவாகத் தன்வீட்டை யடைந்து மனைவியையழைத்து அடிபெண்ணே முந்தியநாள் நான் உனக்குச் சொல்லிபடி நமதுகழனி விளைந்து அறுவடை செய்யவேண்டியதா யிருக்கிறபடியால் சிலபேர்களைக் கூட்டிக்கொண்டுபோய் அறுப்பறுத்து கட்டுகட்டிநெல்லையடித்துக் கோணிகளில், ரொப்பிக்கொண்டுவரக் கடவாயென்று கட்டளையிட்டார். அந்தப்படியே அம்மங்கையானவள் சென்று அறுவடைசெய்து நெல்லையடித்துத் தூற்றி கோணிகளில்ரொப்பி எடுத்துவந்து வீட்டிற்சேர்த்து பத்திரப்படுத்திவைத்தனள். அந்தக்கழனி வருடந்தோறும் முப்பதுகலம் நெல்விளையும் இந்தவருடம் அறுபதுகலமாயிற்று அந்தநெல்லை வைத்துக்கொண்டு சாதுக்களை ததியாராதனத்தினால் திருப்திசெய்துக் கொண்டிருந்தார். இந்த ஆச்சரியத்தினால் அவ்வூர் ஜெனங்களெல்லவரும் தனாஜாட்டின்பக்திக்கும் குணங்களுக்கும் பலவாறு புகழ்ந்துக்கொண்டிருந்தனர்கள். இப்பால்சிலவருடகாலம் அக்கிராமத்தினிலிருந்துகொண்டும் தன்னைத்தேடிவருகிற சாதுக்களை ஆதரித்துகொண்டிருந்து முடிவில் வைகுந்தமா நகரத்தை யடைந்தனர்.

தனாஜாட்டு சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ தரன் சரித்திரம்.

துதி விருத்தம்.

மாதவன்பஜனைசெய்து மனைவியோடாத்திரைசெய்யத்
தீதிலாப்புரவியேறிச் சென்றிடத்தீயர்வந்துக்
கோதிலாமொழிபகர்ந்து குணவாளன்சிரத்தைக்கொய்தார்
ஸ்ரீதரனுயிர்பெற்றுய்யச்செய்த ஸ்ரீதரன்றாள்போற்றி.

திருமகள் கடாக்ஷம்பொருந்திய இந்துஸ்தான்
தேசத்தில் ஸ்ரீதர னென்றொரு பிராமணரிருந்தார்.
அப்பிராமணர் விஷ்ணுபக்தியிற் சிறந்தவர் சகலநற்
குணங்களும் நிறைந்தவர் அவகுணங்களிற் குறைந்த
வர் துஷ்டர்களுடைய நேசத்தைத்துறந்தவர்விஷ்ணு
பக்தர்களை ஆதரிப்பவர் கனவிலும் பொய்சொல்லா
தவர் ஏழை பரதேசிகளுக்கு இல்லை யென்னுமல் ஈவி
கொடுப்பவர் சகல வேதசாஸ்திர புராண இதிகாசங்
களு முணர்ந்தவர் இப்படிப்பட்ட குணசீலருக்கு
மனைவியொருவளுண்டு அம்மாது கணவனையே தெய்
வமென்றும் அவருக்குத் தொண்டுசெய்வதே ஜென்ம
சாபல்யமென்றும் பதிவார்த்தையின்படி நடப்பதே
விரதமென்றுங் கருதி இடைவிடாமல் தொண்டுசெய்
துக்கொண்டு யிருக்கிறபோது அந்தப் பிராமணன்
தன்மனைவியின் கற்பின்னிலமைக்கு மகிழ்ந்து அம்
மாதைப் பதிவிரதைகளிற் சிரோமணி யாகுமென்று
கருதி ஹரிபஜனையை நிமைப்பொழுதேனும் இடை
விடாமலும் மரவாமலுஞ் செய்துக்கொண்டு வருகிற
போது ஒருநாளந்த ஸ்ரீதரர் தன்மனைவியை நோக்கி
அடிபெண்ணே யாத்திரை செய்யவேணு மென்றெ
னக் கோரெண்ண முண்டாயிருக்கின்றது உன்கருத்
தென்ன சொல்லுமென அதற்கந்த உத்தமி ஓசுவாமி
தேவரீர் எண்ணத்தின்படி நடக்க சித்தமாகயிருக்கி
ன்றேனென அதற்கந்தப் பிராமணர் தன்மனைவியை
நோக்கி அடிபெண்ணேயாத்திரை யேதுக்காகசெய்ய
வேணுமென்றால் ஜென்மாந்திரங்களிற் செய்தபாவங்
கள் யாவும்நசித்து புனிதராகும் பொருட்டன்றோ
பெரியோர்கள் யாத்திரைசெய்வது ஆகையால் நாம்
யாத்திரைசெய்துவந்தால் நமதுபாபங்கள் நசித்துப்
[illegible]தை யடையலாமென்றுசொல்லி யாத்

திரைக்குவேண்டிய வஸ்துக்கள் யாவத்தையும் மூட்
டைகட்டிக் குதிரையின்மீது போட்டு மனைவியையுங்
குதிரையின்மீ தேத்திக்கொண்டு சுயதேசத்தை விட்
டுப் பிரயாணஞ்செய்து நெடுந்தூரம் நடந்து மஜில்
மஜிலுக்குத்தங்கி அன்னபானாதிகளைச்செய்துபுசித்து
இளப்பாரி பகவானைத் துதிசெய்துக்கொண்டேமனி
தசஞ்சாரமில்லாத காட்டிற்குள் புகுந்து போகிற
போது கள்ளர்கள் சிலபேர்வந்து இந்தப்பிராமணரு
டன் பேசிக்கொண்டே பின்தொடர்ந்து வருவதைக்
கண்டு சந்தேகங்கொண்டு அந்த உத்தமியானவள்
தன் பிராணநாதரை யழைத்து ஓசுவாமி இவர்களை
நோக்கில் கள்ளர்களாக காணப்படுகின்றது ஏதோ
கஷ்டம்வந்து நேரிடும்போல தோத்துகிறது ஆகை
யால் இவர்கள் பின்போவது ஞாயமாகயிருக்கவில்லை
யென்றனள் அதற்கந்தபிராமணர் சற்றுலோசித்து
அவர்களைமுன்னம் போகவிட்டுப் பின்தங்கினார் அ
தைக்கண்டந்த கள்ளர்கள் ஸ்ரீதரன் சமீபத்தில்வந்து
ஓசுவாமி அடர்ந்திருக்கும் இந்தகாட்டிற்குள் மெது
வாய்நடப்பது சீக்கிரம்நடந்து அந்தகாரக் காட்டை
க்கடந்து போவதேநன்மை இங்குதாமதஞ் செய்யா
மல் சீக்கிரம்நடந்து வாருமையாவென்றனர்கள் அத
ற்கந்தப் பிராமணர் அந்தகள்ளர்களை நோக்கி சொல்
லுகின்றார்.

ஓசாதுக்களே? இந்தநிர்மானுஷ்யமானகொடிய
காட்டினில் எங்களுக்குத் துணையாகிவந்து சேர்ந்த
உத்தமர்களே கூட்டிவைத்ததுகுருகடாக்ஷமென்பது
போல பகவானே உங்களை எங்களுக்குத்துணையாகக்
கூட்டிவைத்தா ரென்பதற்கு சந்தேகமில்லை ஆகிலும்
என்மனைவி உங்கள்விஷயத்தி லேதோ சந்தேகப்
பட்டு மெல்லெனப் போகலாமென்று சொல்லுகின்

ளுள் அதைக்கேட்ட எனக்கும் உங்கள் விஷயத்தில் சந்தேகமே உண்டாயிருக்கின்றது. அதற்கந்த கள்ளர்களில் முதியோன் ஆஹாஹா இவர்களெப்படி யோ நாமின்னவர்களென்று கண்டு கொண்டார்கள் ஆகிலும் இவர்களை தந்திரமாகப்பேசி அழைத்துக் கொண்டே நடந்து தக்கவிடத்தி லவனைக்கொன்று இவனிடத்திலிருக்கிற பணிமணிகளைப் பரித்துக்கொண்டு போகவேணுமெனக் கருதி அக்கள்ளன் ஸ்ரீதர பிராமணரைநோக்கி ஒசுவாமி நாங்களித்தனை பேரிருக்கிறபோது உங்களுக்கென்ன பயம் உங்களுக்கு யாதொரு குறைவும் நேரிடாமல் இக்கடுங் காட்டைக் கடத்தி மனிதசஞ்சாரமுள்ள விடத்தில்விட்டுப் போகின்றோம் பயப்படாமல் வாருமையாவென அதற்கந்தபிராமணர் அந்தமுதியோனைநோக்கி ஒசாதுவே நாங்களிருவரும் உங்களைத்துணைபற்றிக்கொண்டு வரலாமென்று கருதினபோதிலும் சந்தேகமானது எங்களை அடியெடுத்து வைக்கவொட்டாமல் தடுக்கின்றது இதற்கு நாங்களென்ன செய்வோம் இதன்னியிலும் என்மனமென்னமோ நடுங்குகின்றது அதோ பார்த்தீரா? ஆகாயத்தில் நின்று கொரக்கொள்ளிகள் விழுகின்றது ஆந்தைப்பரவையானது எட்டுரைஉரைத்தது இந்த அவசகுனங்கள் தோன்றுகிறபடியால் இந்தக்கடுமையான காட்டினில் மடிந்தாலும் மடிந்து போகிறோம் உங்களுடன்வர எங்களுக்கு மனந்துணியவில்லையென அதற்கந்தமுதியோன் ஒசுவாமி! தாங்கள் மேன்மையான பிராமணகுலத்தினிற் பிறந்தவரென்றும் தனித்துவராமல் மனைவியுடன் வந்திருக்கின்றீரென்றும் கருதி உங்களிருவரையும் இக்கடுமையான காட்டினில்விடுத்துப் போவது நீதியல்லவென்றும் எங்கள்மனமானது தடுக்கின்றதென அதற்கந்த பிராமணர் ஒசாதுவே! நீங்களெந்தவித ஞாயங்களைச் சொல்லி யழைத்தபோதிலும் நாங்களுங்களுடன்வருவதற்குச் சம்மதிக்கமாட்டோம் வீணையேன் சிரமமெடுத்துக் கொள்ளுகிறீர்கள் உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போங்களையாவென அதற்கந்த முதியோன் பிராமணரைநோக்கி ஒசுவாமி இதென்ன தாங்களிப்படி பிடிவாதம் பேசுகின்றீர் பெண்பிள்ளையுடன் இக்கடுங்காட்டினில் தவிக்கின்றீரே யென்று மனந்தாளாமல் நாங்கள் உங்களுக்குநன்மை செய்யவெண்ணினல் போங்களையா வாங்களையா வென்று மரியாதை யில்லாமற் பேசுகின்றீர் இது ஞாயமல்ல தாங்க ளென்னசொன்ன போதிலும் உங்களிருவரையும் இக்கடுங்கானகத்தினில் விடுத்து நாங்கள் போகமாட்டோம் என்றிப்படி நெடுநேரமிவர்கள்பிராமணரிடத்தினிற் பேசுவதெப்படி யிருக்கின்றதென்றால்.

தென்தேசத்திலிருந்து வடதேசத்தைநாடியொருவனும் வடதேசத்திலிருந்து தென்தேசத்தை நாடியொருவனும் புறப்பட்டு நடந்து ஓர்சத்திரத்தினிலிருவரும்புசித்து பொழுது போயினவுடன் திண்ணையின்மீதுபடுத்து நித்திரைசெய்துக் கொண்டிருந்து அதிகாலையில் வடதேசத்தான் முன்னுதா யெழுந்து தலைமாட்டில் வைத்துக்கொண்டிருந்த இரும்புவளை தடியைபிழுத்தான் அத்தடியின் வளைவானது தென்தேசத்தானுடைய தொள்ளைக்காதினில் மாட்டிகொண்டு சிரமமுண்டாகச் செய்ததினால் தென்தேசத்தான் காதுகாதுயென்றான் அதைக்கேட்டுவடதேசத்தான்ஒரிதுராத்துமா இந்தபகுராஜாதியண்டே காதுகாதனே வாயென்று மென்மேலுமிவன் பிடித்துவலிக்க அவனுக்குக்காது நோயுண்டாயினதால் அத்தடியைவிடாமற் பிடித்துக்கொள்ள இப்படி நெடுநேரம்வரையில் இவர்களிருவரும் போராடிக்கொண் டிருந்ததைப் போலக் கள்ளர்களும் பிராமணரும் (விடாக்கண்டக் கொண்டன் குடாக்கெண்டனைப்போல) கள்ளர்கள் பிராமணரைவிட்டுப் போகவில்லை பிராமணரும்அவர்கள்பின் தொடர்ந்துபோகாம லிருக்கையில்முதியோன் பிராமணரைநோக்கி ஒசவாமி தாங்களெந்தக்கபட நாடக சூத்திரதாரியாய் விளங்கும் விஷ்ணுபகவானை பஜிக்கின்றீரோ அந்தவிஷ்ணு பரமாத்துமனுடைய உபயதிருவடிகளின்மீது ஆணையாய் உங்களிருவருக்கும் யாதொருவிபத்தும் நேரிடாவண்ணங் காப்பாத்திக்கொண்டுபோய் மனிதசஞ்சாரமுடையப் பிரதேசத்தினில் விடுத்துப் போகின்றோம் இந்தசத்தியவார்த்தையை யாகிலும் நம்பி எங்கள்பின்னே வாருமையாவென்று கபடசத்தியம் புகலக்கேட்டு நிஷ்கபடராகிய பிராமணர் உண்மையாகுமென்று நம்பி மனைவிக்குத் தெரியப்படுத்தக் கேட்டு அம்மாது சிரோமணி ஒசுவாமி அவர்கள்சொல்லிய பிரமாணிக்கத்தை நம்பவேண்டாம் என்னமோ நம்மைமோசப்படுத்தவெண்ணங்கொண்டு தப்புசத்தியம்கூறினர் இதை நம்பிப் போகலாகாதென்றுகூற அதற்கு பிராமணர் மனைவியைநோக்கி அடிபெண்ணே இவர்கள் பகவான்மீது ஆணையிட்டபின்னும் சந்தேகிப்பது நீதியல்ல பகவான்மீது பாரத்தைப்போட்டு நாமிவர்கள் பின்சென்றால் உள்ளபடி நடக்கட்டுமென்றார் அதற்குமனைவி ஒ சுவாமி இவர்கள்செப்பிய பிரமாணம் பொய்ப்பி[illegible] ணமே இதைநம்பி நாமிவர்கள்பின் செல்[illegible] க்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில்வி[illegible] போலாம்) அதெப்படியெனில் இவர்க[illegible] ளென்றுணர்ந்திருந்தும் இவர்கள்பி[illegible] நாம்போவது பள்ளமென்று தெ[illegible]

வான் செயலின்படி நடக்கட்டுமென்று பள்ளத்தில்
விழுவாரைப் போலாகும் என்னுயிருக்குயிராகிவிளங்
கும் பிராணநாதரே கேடுவருமுன்னே மதிகெட்டு
வருமென்பதைப் போல பின்னிட்டு யேதோகெடுதி
வரப்போகிறதென்று அடியாள் மனதிற் றோன்றிய
படியால் முன்னுதாகவே தெரியப்படுத்தினேன்இனி
யுமதுசித்தம் அடியாள்பாக்கியமென அதற்குப் பிரா
மணர் இவர்கள் பகவான்திருவடிகளின்மீதாணையாய்
உங்களுக்கெந்த ஆபத்தும் நேரிடாமற் காப்பாற்றிக்
கொண்டுபோய் மனிதசஞ்சார முடைய பிரதேசத்தி
னில்விட்டுப் போகிறோமென்று உறுதிமொழி பகர்ந்
தபின் நமக்கெந்த ஆபத்துநேரிட்டபோதிலும் இவர்
கள்பின் போவதே சரியென்றுசொல்லி மனைவியை
அழைத்துக்கொண்டு அவர்கள் பின்னடந்தார்.

இவ்வண்ணம் அந்தப் பிராமணர் தன்மனைவியு
டன் கள்ளர்கள்பின் பகவத்தியானஞ் செய்துக்கொ
ண்டே வெகுதூரம் கடந்துபோகிறபோது அங்கோ
ரிடத்தில் அடர்ந்த மரங்களிருக்குமிடத்திற்குப் போ
கையில் கள்ளர்களுக்குத் தலைவன் மற்றவர்களுக்குச்
சைகைசெய்தான் அவர்களும் குறிப்பையுணர்ந்து ஒ
சுவாமி பிராமணோத்தமரே நாமெல்லோரும் இங்கு
சிறிதுநேரமிருந்து இளைப்பாரிப் போகலாமென்று
சொல்லி அக்கள்ளர்கள் தங்கடங்கள்மேல் போர்வை
யை அம்மரத்தடியில்விரித்து அதின்மேற்படுத்துநித்
திரை செய்பவர்களைபபோல கண்ணைமூடிக் கொண்
டிருந்தார்கள். அப்போது ஸ்ரீதரபிராமணர்தன்மனை
வியைக் குதிரையை விட்டிரக்கித் தனியே ஓர்மரத்த
டியி லிருக்கும்படிச் செய்து தானுமங்கேதானேகுதி
ரைக்கும் மனைவிக்கும் காவலாகயிருக்கையில் காலக்
கொடுமையால் அவருக்கும் நித்திரைசோக மதிகரித்
தபடியால் அப்படியே படுத்து நித்திரைசெய்து விட்
டார். அச்சமயம் பார்த்திருந்து கள்ளர்களிலொருவ
னெழுந்து மெல்லன நடந்துசென்று பிராமணன்மனை
வியின் அருகிற்சென்றான் அவளைக்கண்ட மாத்திரத்
தில் அம்மாது ஓசுவாமி பிராணநாதரே யென்று கூக்
குரலிட்டாள். அதற்கந்த கள்ளன்கையில் வாளைப்
பிடித்துக்கொண்டு கூக்குரல்போடுவையாகில்உன்னை
யிந்தவாளால் இரண்டு துண்டாகும்படிச் செய்வேன்
[illegible]ாயைத்திரவாதே சீக்கிரம் நீ அணிந்துக்கொண்டிரு
[illegible]ம் ஆபரணங்களனைத்தையுங் கொடுக்கிறயா அல்
[illegible]ணவாளனுடன் நீயும் மடிந்துபோகும்படி
[illegible]மற் செய்வேன்என்று பயமுருத்தினான்.
[illegible] மெத்தபயந்து அப்பா புண்ணியவா
[illegible] என்கணவனையும் ஒன்றுஞ்செய்யவே
[illegible]டப்படியானணிந்துக்கொண்டிரு
க்கும் படியான ஆபரணங்கள் யாவத்தையுங்களைந்து
இதோ கொடுக்கின்றேனென்று இனியவசனங்களைக்
கூறிஉடனே தானணிந்துகொண்டிருக்கும்ஆபரணங்க
ளனைத்தையுங் களைந்துஅவன்முன்னேவைக்க,அப்ப
ணிகளை கண்டுஅந்தகள்ளன் தன்மேல்வேட்டியைவிரித்
து அதிலவ்வாபரணங்களனைத்தையும்எடுத்துவைத்து
மூட்டைகட்டி தலைமீதுவைத்து கொண்டுபோய்அரு
காமையிலோரிடத்தினில்பள்ளம்வெட்டி அப்பள்ளத்
தினில் அம்மூட்டையை வைத்துப் புதைத்து அடை
யாளமொன்று பார்த்துக்கொண்டு யாதொன்று மறி
யாதவனைப்போல்வந்து படுத்துக்கொண்டான். அப்
போது ஸ்ரீதரனுடையமனைவி மெல்லெனவெழுந்துத்
தன்கணவனருகிற்சென்று தட்டியெழுப்பி கள்ளன்
வந்து ஆபரணங்களனைத்தையும் அபகரித்துக் கொ
ண்டு போயினசெய்தி யாவத்தையுந் தெரியப்படுத்தி
னள் அதைக்கேட்டந்த ஸ்ரீதரப்பிராமணர் நமக்குத்
துணையாகிவந்த இவர்களிடத்தி லிச்செய்தியைச்சொ
ல்லுவோமெனக் கருதி கள்ளங் கபடறவாகையால்
அவர்கள் படுத்திருக்கும் இடத்திற்குச்சென்று முதி
யோனாகயிருப்பவனை யெழுப்பி ஓஐயா எங்களுக்கு
யாதொருவிபத்தும் நேரிடாமற்படிக்கி காப்பாத்து
கிறோம் யென்று பகவான்மீது ஆணையிட்டீர்கள் அ
தைநம்பி நாங்கள் உங்கள்பின்வந்துஇவடத்தில்யாவ
ருந் தங்கியிருக்கிறபோது எனக்கென்னமோ நித்தி
ரைவந்து வழிநடந்த சிரமத்தினால் மார்க்காயாசந்
தீரும்படி படுத்துநித்திரை செய்துவிட்டேன் அந்த
சமயம் பார்த்திருந்து யாரோஒருதிருடன்வந்துஎன்
மனைவியை பயமுறுத்தி ஆபரணங்களனைத்தையுங்
கொள்ளைகொண்டு போயினனும் இதுசெய்தி இத்
தனைபேர்களுக்குந் தெரியாமலாபோயிற்று யானெப்
போதும் பிரயாணம் நடந்ததுமில்லை யாதலால் நடந்
துவந்த சிரமத்தினால் நித்திரைபோய்விட்டேன் நீங்க
ளித்தனைபேர்களிருந்தும் ஒருவராகிலும் அந்தக்கள்
ளனைப் பிடிக்காமலிருந்து விட்டீர்களேஎன்றார்அதற்
கந்த பெரியகள்ளன் ஓசுவாமி இதுவென்ன விந்தை
யாக விருக்கின்றது கள்ளன்வந்து பயமுறுத்துகிற
போது உம்முடையமனைவி அருகினிலிருந்த தங்களை
யழைக்கலாகாதா அப்படி யழைப்பதற்கும் அசந்
தர்ப்பமாக யிருந்தபக்ஷத்தில் அந்தம்மாள் யாரோ
திருடன் வந்தானென்று கூவினால் அந்த ஓசையைக்
கேட்டாகிலும் இத்தனைபேர்களும் ஓடிவந்து அவனு
யிரை வாங்கிவிடுவோமல்லவா இதையோசிக்கிறபோ
து கள்ளன்வந்து ஆபரணங்களை கொள்ளைகொண்டு
போனானென்று தங்கள்மனைவி சொல்லுவது சுத்தப்
பொய்யாயிருக்கிறது ஒருக்கால் அந்தம்மாளே தங்
களை மோசஞ்செய்ய வேணுமெனக்கருதி ஆபரணங்க

ளனத்தையுங் களைந்து ஒளித்துவைத்துக் கொண்டு
கள்ளன் அபகரித்துக்கொண்டு போனனென்றுசொ
ல்லுவதாகத் தோன்றுகிறதென அதற்குஸ்ரீதரப்பிரா
மணர் கள்ளனைநோக்கி சொல்லுகின்றார்.

கேளும்மப்பா முதியோனே இவளையான் மணஞ்
செய்துக்கொண்டு பனிரெண்டுவருட காலமாயிற்று
இதுவரையிலும் என்னிடம் இம்மாது ஒருபொய்யே
னுஞ் சொன்னவளல்ல இன்று இப்பணிகளைத் தான்
அபகரிக்கும் நிமித்தியம் பொய்வசனிக்கின்றாளென்
றால் நம்பத்தக்கதல்ல நீர் சொல்லுவதும் நீதியல்ல
என்னுடைய மனைவியின்குணம் எனக்குத் தெரியமா
ட்டாதா அப்படிக்கிவள் பொய்வார்த்தையைக் கன
விலுஞ் சொல்லப்பட்டவளல்லவே என்றாகிலுமிவள்
பொய்வார்த்தை சொல்லி யிருப்பளேயாகில் இன்று
வார்த்தையை நம்புவேனோ நம்பி யுங்களிடம்வந்து
சொல்லுவேனோ வென்றனர் அதற்கந்த முதியோன்
(சேலைகட்டியமாதரை நம்பினால் தெருவில்நின்றுதிய
ங்கித்திகைப்பரே) என்ற பெரியோர்கள் வாக்கியத்
தின்படி வஞ்சக நெஞ்சினையுடைய மாதர்களின்சொ
ல்லை நம்பும்புருடர்கள் பெருத்த ஆபத்துக்குள்ளாகி
பேருங்கீர்த்தியுங் கெட்டுத் தெருத்தெருவாய் தியங்
கித் திகைக்கும்படி நேரிடும் ஆகையால் பெண்பிள்
ளைகளுடைய வார்த்தையை புத்திமானாயிருக்குமவன்
செவிகொடுத்துக் கேளான் கேட்டு அவமானத்திற்
குட்பட மாட்டானென அதற்கு ஸ்ரீதரபிராமணர் ஓ
முதியோனே தாங்கள் சொல்லியது கணிகைமாதர்
க்கு நிகரான கொடிய மூதேவிகளின் சொல்லை நம்பு
மவன் எவனோ அவனல்லவோ அப்படிப்பட்ட அவ
மானத்திற்குள்ளாகி தியங்குவான் உத்தமியாகியும்
பதிவிரதத்தைகனவிலுமறவாதவளாகியும்பதியையே
தெய்வமென்றுத் துதிசெய்துக்கொண் டிருக்கும்படி
யான இவள் ஒருக்காலும்பொய்சொல்லமாட்டாளெ
னக்கேட்டு முதியோன் அடங்காச்சினங்கொண்டு அ
டாபிராமணா உன்காலில் நீயேவிழுந்து கும்பிட்டுக்
கொள்ளுகிறாய் உன்னுடைய மனைவியைப் போன்ற
பதிவிரதைகளெங்குங் கண்டதில்லையென்று விள்ளுகி
றாய் பிக்ஷையெடுத்துண்ணு முனக்கித்தனை கெர்வமா
என்று தூஷணவார்த்தைகள் விண்டு இதுவேநல்லசம
யம்இவனைகொன்றுஇம்மாதை நாம் கைப்பற்றுவதற்
கென்று தனக்குதானேயோசித்துக்கொண்டோடோ
டியும்வந்து அப்பாதகன் முன்பின் யோசிக்காமல்வா
ளையோங்கிப் பிராமணன் சிரசைவெட்டி தள்ளினான்
இதைகண்டமற்றகள்ளர்கள்நம்துகாரியானுகூலமாய்
விட்டதென்று பின்வருங் கெடுதியை யறியாதவர்க
ளாகையால் புதைத்துவைத்த ஆபரண மூட்டை[illegible]
யெடுத்துக்கொண்டுவந்து முதியோனைநோக்கிஐயா
இம்மூட்டையை எடுத்துக்கொண்டு முன்னுதாய் நட
ந்து நாங்கள் ஊரைச் சேருகின்றோம் தாங்களிந்த
வனிதையைக் குதிரையின் மீதேற்றிக்கொண்டு மெல்
லனவாருமென்று சொல்லிக்கொண்டிருக்கிறபோது
ஸ்ரீதரர்மனைவி நமது பிராணநாதருக்கும் கள்ளருக்
கும் யேதோ சண்டைசச்சரவா யிருந்ததே அசச்ச
ரவு நின்றும் பிராணநாதர் இன்னும்வரவில்லையேஎன்
னமோசமோ தெரியவில்லையே என்று அங்கிருந்த
படியே எட்டிஎட்டிப் பார்த்துக்கொண் டிருந்தனள்
அதைக் கள்ளர்களிலொருவன்கண்டு ஓஅம்மணிஉன்
பிராணநாயகர் மடிந்துபோயினார் அந்த விந்தையை
நீநேரில்வந்து பாராமல் அங்கிருந்தபடியே எட்டி
எட்டி பார்க்கிறது ஞாயமோ இனியென்னயோசனை
ஏமன்கையிலகப்பட்ட உயிர் தப்பித்துக் கொண்டு
போகாததுபோல எங்களிடத்தி[illegible]லகப்பட்[illegible]க்கொ
ண்ட நீஎப்படி தப்பித்துக்கொண்டு போகவுமார்க்க
மில்லை ஆகையால் நீயாதொன்றுக்கும் பயப்படாமல்
சீக்கிரம் எங்களெஜமான் முன்வந்து அவர்சொற்படி
நடந்துக்கொள்வையாகில் உனக்கிஷ்டமான ஆடை
யாபரணங்களை தரித்துக்கொண்டு யாதொருகுறையு
மின்றி சுகித்திருக்கலா மெனக்கேட்டு அந்த உத்தமி
இடியோசையைக் கேட்ட நாகத்தைப்போலவும் கெ
ருடனுடைய தொனியைக்கேட்ட சர்ப்பத்தைப்போ
லவும் நடுநடுங்கிப் பூமியின்மீது விழுந்து ஓபிராண
நாயகரே அடியாளை இந்தக்கள்ளர்கள் வசப்படுத்தி
மாண்டீரே இவர்களுடன் சென்றால் நமக்கேதோ
விபத்து நேரிடுமென்று முன்னமேதங்களுக்கு விண்
ணப்பம் பண்ணினேனே என்சொல்லைக் கேளாமல்
வந்து இவர்களால் மடிந்தீரே இக்கொடியகாட்டினி
லென்னையாதரிப்பவர்க ளொருவருமில்லை எனக்கு
வந்துநேர்ந்தது மெத்ததொல்லையே யென்று புரண்டு
புரண்டழுது கண்ணீராறாய்ப் பெருகவிட்டுக் கொண்
டே ஓபிராணநாயகரே தேவரீர் திருவடித்தாமரைக
ளின் மீதாணையாய்த் தங்களைவிட வேறுதெய்வமில்[illegible]
யென்றுப் பூசித்துத் தொண்டுசெய்துக் கொண்டிருந்
தது உண்மையாகில்லோகமாதாவாகியசீதாபிராட்டி
சமேதராக ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி இங்கெழுந்தருளி
அடியாளைக் காப்பாத்தவேண்டும் அப்படிக் கில்[illegible]
மல் பொய்யாகில் இக்கள்ளர்கள் பங்காகி யா[illegible]
டியநரகினில் விழக்கடவேன் என்றுசொல்லி[illegible]
முன்னமே கள்ளர்கள் யாவருக்கும் கண்[illegible]
குருடர்களாகி ஓடிப்போவதற்குக் [illegible]
வாய்பிரலாபித்துக்கொண்டு அங்க[illegible]

அப்போது சிதாசமேதராகி ஸ்ரீராமர்சந்திரமூர்த்தி அக்காளகத்திற் கெழுந்தருளி ஸ்ரீதரருக்குயிர் தந்தெழுப்ப அவரும் நித்திரையில்நின்றெழு மவரைப்போலெழுந்து சிதாசமேதராக சேவைதந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை சேவித்து பற்பலவாறு தோத்திரஞ் செய்துக் கொண்டிருக்கும் தன்பிராண நாயகரைக் கண்டு பணிந்து எழுந்து ஸ்ரீராமரையுஞ் சிதையையுங்கண்டு தெரிசித்துப் பரமானந்தக்கடலில்மூழ்கினவர்களாகி தம்பதிகளிருவரும் கைகளைக்கூப்பி சிரத்தின்மீது வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீர்சோரநிற்கையில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கள்ளர்க ளனைவரையும் மடித்து அவர்க ளபகரித்துக்கொண்ட ஆபரணங்களை யெடுத்துவந்து ஸ்ரீதரன்மனைவியின் முன்னம்வைத்து ஓஅம்மணி கற்பினிற்சிறந்த உத்தமியே நீ இந்தவாபரணங்களை யெடுத்துஅணிந்துக்கொண்டு உன்பதியுடன் யாதொரு குறையுமின்றி யாத்திரை செய்து மீண்டு உங்கள் நாட்டையடைந்து சிலகாலம் சுகித்திருந்து முடிவினில் நம்முடையப்தவியைஅடையக்கடவீரென்று வாழ்த்தி மறைந்துபோயினர்.

இவ்வாறு ஸ்ரீராமச்சந்திரமூர்த்திவரந்தந்துபோயினபின்பு தம்பதிகளிருவரும் யாத்திரைசெய்து சிலநாளில் தங்களூரையடைந்து சிலகாலம் சுகமாக பகவந்நாம பாராயணஞ் செய்துக்கொண்டிருந்து முடிவில் வைகுந்தபதவியை யடைந்தனர்கள்.

வாழிவிருத்தம்.

பூதலத்தில்மேன்மைபெற்றப் புண்ணியர்கள்வாழியே
மாதவத்தில்மதிசிறந்த மாமுனிவர்வாழியே
ஓதுவதற்கரிதாகுமா யோகிகளும்வாழியே
ஸ்ரீதரர்செந்தாமரைத்தாள் செழித்தென்றும்வாழிவாழியே.

ஸ்ரீதரன்சரித்திரம்.

முற்றிற்று,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மாலோபந்துசரித்திரம்.

துதி விருத்தம்.

அகமகளுமரிராம நாமசாரச்
சுகமதனில்செழிக்க வென்றுஞ்செய்புமெத்த
இகமதனில்கீர்த்தியும் பேரின்பமுண்டாம்
மகிமையுளமாலோபந்து மாசரிதைப்பகருவர்க்கே.

ஸ்ரீமகாலட்சுமி கடாக்ஷம் பொருந்திய பரவடா...த்தினில் பிரமகுலத்தி லுதித்தவர் பாண்டுரங்க... திருவடிகளை மனதிற்பதித்தவர் சகலசாஸ்திர... கர்மயோகத்தினில் விற்பன்னர் பக்திக்... பிரபன்னர் ஏழைபரதேசிகளிடம் பூத...பமுடையவர் அன்னதானம் யாவ...குந் திறமுடையவர் மாலோபந்து யென்ற பெயருடைய பிராமணரொருவ ரிருந்தார். அவருக்கு மகாபதிவிரதையாகும் மனைவியொருவளுண்டு அம்மனைவியுடன் இல்லறமே நல்லறமெனகருதி இகபோகத்தி லீடுபட்டுக்கொண்டும் பகவந்நாமசங்கிர்த்தனங்களை பாடிக்கொண்டும் ஏழையெளியோர்களுக்கு அன்னமளித்துக் கொண்டும் சாதுக்களுக்குத் தொண்டுபுரிந்துக் கொண்டும் சத்தியவாக் குடையவ

ராகி சிலவருடகாலங் கழித்துக்கொண் டிருக்கையில் மனைவியானவள் வியாதியினால் பீடிக்கப்பட்டும் பரலோகத்தை யடைந்தனள் அதைக்கண்டு அர்தமாலோபந்து மெத்த துக்கப்பட்டுக்கொண்டிருந்து ஒருவாராய்த்தேறி இன்றுடன் நமதுபந்தம் நீங்கியது. பகவானைபஜிப்பதற்கு அனுகூலமுண்டாயிற்றென்று அதிகமகிழ்வடைந்தவராகில் பிரேத சம்ஸ்காரஞ்செய்துமுடித்து கருமமுதலானதுகளை நடத்தி சாதுக்களுடன்கூடி நிர்மலமாக பகவானை பஜித்துக்கொண்டு மெத்தசந்தோஷ சித்தராகி யிருந்தனர்.

இவ்வண்ணம் அந்தமாலோபந்து யாதொருகவலையுமின்றி நிர்மலமனத்துடன் பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு வைராக்கியசீலராயுமிருக்கையில் நேசர்கள் சிலபேர்சேர்ந்து ஒரு கன்னிகையைக் கொண்டுவந்து வைராக்கியசீலராகிய மாலோபந்துக்குக்காட்டி ஒப்பிரியரே இக்கன்னிகையை நீ விவாகஞ்செய்துக் கொள்ளுகிற விஷயத்தில் உனக்கு மெத்த அனுகூலமாய் நடந்துக்கொள்ளுவள் உமது முதல்பத்தினிக்காகிலும் இப்பெண்மெத்தபுத்திசாலியாகும் இவளாலேமெத்த சுகத்தையடைவாய் அதெப்படி யென்பீரோ நீர் பகவந்நாம பாராயணஞ் செய்து முடித்துவந்த பிரகல்லவோ தளிகைசெய்து புசித்துவந்தீர் அப்படிக்கிச் செய்வதால் உமக்கு மெத்த சிரமமாயிருக்கும் அந்தசிரமமில்லாமல் உம்முடைய காரியங்கள் முடித்துக்கொண்டு தாங்கள் வருவதற்குள் இக்கன்னிகைத் தளிகைசெய்து முடித்து உம்மை எதிர்பார்த்துக் கொண்டிருந்து நீர்வந்தவுடனே தளிகைபரிமாரி ஆலவட்ட கைங்கறியஞ்செய்வதுமல்லாமல் தக்கபடி உமக்குபசாரஞ் செய்வள். ஆகையால் ஒருமனிதனுக்கு அதிகசிரமமுண்டாகு மாகில் பகவத் பக்திசெய்வதற்குத் தடையுண்டாகும் ஆதலால் தடையொன்றுஞ் சொல்லாமல் எங்கள் வார்த்தையைத் தள்ளாமல் இக்கன்னிகையை விவாகஞ்செய்துக்கொள்ளுமையா வென்று நிர்ப்பந்திக்கஅதற்கு மாலோபந்து ஓநேசர்களே விசுவாசர்களே முன்பத்தினி இறந்துபோனவுடனே என்னை நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்த பந்தம் ஒழிந்ததென்றுசொல்லிவெகு நிம்மதியாய் பகவத்தியானஞ் செய்து வைராக்கிய மேற்கொண்டு பரமானந்த மடைந் திருக்கின்றேன் இப்படிக்கிருக்குமென்னை பந்தத்திற்குள் பட்டால் சுகமடைவா யென்கின்றீரே இப்பந்தபானது துக்கத்திற்குக் காரணமாயிற்றே இதையறியாமல் வேண்டாமென்கிறவன் கழுத்தினில் லிங்கத்தைக் கட்டுமவர்களைப்போல வேண்டாமென்கிற எனக்கு விவாகஞ் செய்து வைக்கவந்தீர்கள் விவாகஞ்செய்துக்கொ[…] வேணுமென்ற அபிப்பிராயமெனக்கிருக்குமேயாகில் மனைவி மரணமாயினவுடனே விவாகஞ்செய்துக்கொண்டிருப்பேனல்லவா எனக்கிஷ்டமில்லாத காரணத்தால் சிலவருடங்கள் கடத்திவிட்டேன் இனியொரு மனைவியும் எனக்குவேண்டுமோ வேண்டியதில்லைக் கன்னிகையை அழைத்துக்கொண்டு போங்களையா வென்றுக் கடுமையாகக்கூறினர் அதற்கந்தநேசர்கள் எமதுபிரியமுள்ள நேசரே வலியபெண் கொடுத்து விவாகஞ் செய்விக்கின்றோ மென்றால் குலமென்ன கோத்திரமென்னவென்று கேழ்ப்பவர்களைப் போல நீயும் பிரிவுபேசுகின்றாய் அன்றியும் உமக்கும் உம்மைத் தேடிவரும் பாகவதர்களுக்கும் தொண்டுசெய்து உபசரிக்க ஒருகன்னிகை வீட்டிலிருக்கவேணுமல்லவா அக்கைங்கறியத்தின் பொருட்டு இக்கன்னிகையை மணம்புரிந்துக் கொண்டுபகவந்நாமசிந்தனையிலிருமையாவென்று நிற்பந்தித்து அக்கன்னிகையை மாலோபந்துக்கு மணஞ் செய்வித்துப் போயினர். பின்பு மாலோபந்து அக்கன்னிகையினால்உபசரிக்கப்பெற்றுச் சிலமாதங்கள் காலங்கழித்துக்கொண்டுவருகையில் ஒருநாள் மாலோபந்து கிரகத்திற்குச் சில பாகவதர்கள் வந்தார்கள் அவர்களைத் தொடர்ந்துக்கொண்டு அவ்வூரினில்வசிக்கும் பிராமணர்களிற் சிலரும்வந்து பாகவதர்கள்பாடும் ஹரிநாமசங்கீர்த்தனங்களைக் கேட்டு ஆனந்தித்து கொண்டிருக்கிறபோது மாலோபந்துக் கிரண்டாவதுமனைவியின் தந்தையானவன்வந்துப் புதல்வியைக்கண்டு அடியம்மா குழந்தாய் நமதுகுலம் பஞ்சமகுலமாயிருக்கப் பிராமணகுலத்தோனாகியமாலோபந்தையெப்படிமணஞ்செய்துக்கொண்டாய் முதன்மையாயிருந்து உனக்குவிவாகஞ் செய்துவைத்தவர்கள் யாவரென்றுவினவ அதற்கம்மாது ஓஅண்ணா நம்முடையசேரியில் அர்[…]
திரிவேளையில் திருடர்கள் புகுந்து அடிக்கிற[…]
பயந்து அம்மாளென்னை யழைத்துவந்து ஊ[…]
ளிருக்கும் ஓர்பிராமணருடைய பிழக்கடையில்[…]
த்துவைத்துக் கொண்டிருக்கிறபோது அவ்வீட்[…]
திருடர்கள்புகுந்து பிராமணர்களை மடலொடியக[…]
டியடிக்கிற அரவங்கண்டு அம்மாள் மெத்தப்பய[…]
வேறொருவீட்டுப் பிழக்கடையி லென்னையொளித்[…]
வைத்துக்கொண் டிருக்கிறபோது அவ்வீட்டி[…]
க்கும் பிராமணர்களும் விழித்துக்கொண்டு[…]
கள்செய்யுங் கேராமையினால் பிராமணர்[…]
முறையோவென்று கூக்குரலிடும் ஓசை[…]
பயந்து பிழக்கடைக்குவந்து நானிரு[…]
வந்து அவர்களும் ஒளித்திருக்கை[…]

டர்கள்செய்யுங் கோஷ்டத்தைக்கேட்டு அவர்களுக்கு அங்கிருக்க மனமில்லாமல் என்னையழைத்துக்கொண்டு அந்தநடுராத்திரி யெல்லாம் நடந்து இந்ததேசத்தைச் சேர்ந்து என்னை இப்பிராமணருக்கு விவாகஞ்செய்துவைத்துப் போயினர்கள் என்று நடந்தசெய்தி ஒன்றையும்விடாமல் மொழிந்தனள்.

இவ்வாறு தன்மகள்சொல்லிய விர்த்தாந்தத்தை கேட்டு அந்தபஞ்சமன் வெகுவாகச் சிந்தித்து அடியம்மா இன்றோடு உனக்கும்எனக்கும் சம்பந்தம்விட்டுப்போயிற்று ஏனென்றால் நம்முடைய குலத்திற்குலந்தவனை நீமணம்புரிந்துக்கொண்டிருப்பாயாகில்உன்னைப்பெற்றதாயும் அண்ணன் தம்பிகளும் நானும்அடிக்கடிவந்து பார்த்துக்கொண்டுபோவோம் அன்னிய குலத்தோனாகிய பிராமணனை நீவிவாகஞ் செய்துக்கொண்டபடியால் நாங்கள் வரப்போகத் தகாது ஆகையால் மருபடி யானெப்போதுன்னைப் பார்க்கப் போகிறேன் என்றுசொல்லிக் கண்ணீர்விட்டுக் கவலையடைந்து தனக்குத்தானே தேரினவனாகி மாலோபந்தைநோக்கி ஒ ஐயா பிராமணரே யான்பஞ்சம குலத்தோன் இப்பெண் என்மகள் திருடர்கள்தொந்திரவினாலே இப்பெண்ணை பிராமணஸ்திரீயைப்போல சிங்காரித்து எங்கள் சேரிக்கருகி லிருக்குமோர் பிராமணர்வீட்டுப்பிழக்கடையில் ஒளித்துவைத்திருந்தோம் அவ்வீட்டு பிராமணர்கள் பிழக்கடைக்குவந்து இக்கன்னிகையைக்கண்டு பரிதாபப்பட்டு அழைத்துவந்து பிராமணத்தியென்றே பாவித்து உனக்கு விவாகஞ் செய்து வைத்துப்போயினர்கள் இச்செய்தியையானு மக்குச் சொல்லாமற் போவனேயாகில் எனக்குமெத்தப் பாபமுண்டாகுமென்று கருதி உண்மையையுமக் க் தெரியப்படுத்தினேனெனக்கேட்டுமாலோபந்து வீழ்ந்தப் புலியைப்போல தேகம் புழுங்கிப் தரி ஆஹாஹா நமக்கு நேசராகி யிருந்தப் னர்களே நம்மை ஜாதிபிரஷ்டனாகும்படிபஞ்ச ரீயை யழைத்துவந்து வேண்டாமென்று நாம் ரந்தடுத்தும் அதைக்கேளாமல் இம்மங்கையை கு விவாகஞ்செய்வித்து நம்மையும்பஞ்சமனாகும் ச் செய்தார்களே என்று வெகுவாகப் பிரலாபித் ங் கொண்டிருந்து ஓகோ நாமென்ன மதியீனத்தி பிராமணர்கள்மீது கோபித்து தோஷம்சம்பா காண்டோமே அவர்கள் இவளைப் பஞ்சம தெரிந்திருந்தால்இக்காரியத்திற்குடன் அவர்களும் பிராமணஸ்திரீயாகு மிவ மோசம்போயினர்கள் நாமும் அவர் ஜாதிப்பிரஷ்டனாயினோம் இப்படி நமக்குவந்து சம்பவிப்பதற்குக் காரணம் ஜென்மாந்திரங்களிற் செய்த பாபமேயாம் வினையானதுமகான்களைக்கூட விடமாட்டாதுநாம்செய்தவினைகளை நாமே யனுபவித்துத் தீர்க்கவேணும் அன்றியும் உலகத்தினில் சுகமென்றுந் துக்கமென்றும் இரண்டுண்டு இவ்விரண்டினில் சுகம் வந்தபோது சந்தோஷிப்பதும் துக்கம்வந்தபோது விசனப்படவுங் கூடாது சுகம் வந்தபோது சந்தோஷமடைவதைப் போல துக்கம் வந்தபோதும் சந்தோஷத்தை யடைந்திருப்பதே பெரியோர்களின் இயர்க்கை யாகையால் இதைபத்தி நாம் துக்கப்பட்டுக் கொண்டிருப்பது தகாதென்று மதித்து திடச்சித்தங்கொண்டு மனைவியை யழைத்து அடிபெண்ணே உண்மையாக இவனுன் தந்தையா அல்லவா சத்தியமாகச் சொல்லுமென அம்மங்கை பதிலொன்றுஞ் சொல்லாமல் பயந்து நின்றுக்கொண்டிருக்கையில் அக்குறிப்பையறிந்து மாலோபந்துபஞ்சமனைநோக்கி நீஇந்த மங்கையை யழைத்துக்கொண்டு போமையாவென அதற்கந்த பஞ்சமன் சிறித்து ஓ சுவாமி பிராமணோத்தமரே இம்மங்கையைத்தாங்கள் மணம்புரிந்துக் கொண்டு ஆறுமாதகால மாயிற்றே இதுபரியந்தம் இவளுடன் நீர் சேராமலா யிருப்பீர் பிரம்மா விஷ்ணு சிவன் இம்மூவரும் காமத்தையடக்கி இந்திரிய வியாபாரமில்லாமல் நிக்கிரகிக்கவேணுமெனக் கருதி திடங்கொண்டு மகாவிஷ்ணுவானவர் பாற்கடலிற் சயனித்தால் காமாக்கினியானதுநம்மை பாதிக்காமல் தணிந்துபோமென்றெண்ணங்கொண்டு திருப்பாற்கடலில் சயனித்தார் (பாற்கடலிற்றுயின்றானொருவன் அவன்மார்பேறினாளொருவள்) என்றபழமொழிக்கிணங்க லக்ஷுமியானவள் மகாவிஷ்ணுவின் மார்பின்மீது ஏறினள் (பங்கயமலர்ப் புகுந்தானொருவன் அவன் நாவேறினாளொருவள்) என்றபடி காமத்தை யடக்கமுடியாமல் பிரம்மதேவன் குளிர்ச்சியைத் தரும்படியான தாமரைமலருக்குள் புகுந்திருக்கஅவருடைய நாவினிலேறிக் கொண்டனள்சரஸ்வதி(வெள்ளியங்கிரி ஏறினானொருவன் அவன்சிரமேறினாளொருவள்) என்றபடி காமத்தை யடக்கமுடியாமல் சிவன் குளிர்ச்சியைத் தரும்படியான வெள்ளியங்கிரியின் மீதேறினான் அப்போது கெங்கையானவள் சிவபெருமானுடைய சிரத்தின்மீதேறிக்கொண்டனள் என்று பெரியோர்களால் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட திரிமூர்த்திகளையே காமமானதுவிடாதிருக்க உன்னைவிடுமோ என்மகளுடன் நீர்கூடி சம்போகஞ்செய்து சுகத்தை யனுபவித்துக்கொண்டிருந்தும் இப்போதென்னைப் பார்த்தும் யான்சொல்லிய வசனங்களைக் கேட்டும் மனஞ்சகியாமல் பெண்ணை

யழைத்துக்கொண்டு போகச் சொல்லுவது உன்னை யொற்றவர்களுக்கு இது நீதியாகுமோ மேலும் எங்கள்சாதியில் யாரேனும் பெண்டுகள் அன்னியர்கள் வீட்டிற்குப்போய் ஒரிரவுதங்கி யிருந்துவந்தால் அப்பெண்பிள்ளையை வீட்டிற் சேர்த்துக்கொள்ள மாட்டோம். அன்றியும் இப்பெண் வந்து பட்டுவிட்டாள் இப்படிப்பட்டவளை நானழைத்துக்கொண்டு போவனேயாகி லென்னை சாதியில்நின்றும்விலக்கிவைப்பார்கள் எப்போதிவளைத் தொட்டுத் தாலிகட்டினீரோ அப்போதே உம்முடைய சொத்தாகும் உம்முடைய சொத்தை நானழைத்துப் போகசம்மதியேனென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்றனன்.

இவ்வண்ணம் அந்தப்பஞ்சமன் சொல்லியதை ஆதியோடந்தமாகக் கேட்டிருந்த பிராமணர்களும் பாகவதர்களும் மாலோபந்து வீட்டிற்குள் ளிருக்க அசுசிதோன்றி மாலோபந்தை நோக்கி ஓய்பிராமணரே இன்றுமுதல் எங்கள்வீட்டிற்கு எந்தப்பிரயோஜனத்திற்கும் நீர்வரக்கூடாது. உம்மை ஜாதிக்கட்டின்படி தள்ளிவைத்திருக்குரோ மென்று சொல்லிவிட்டுத் தடாலுமென்று யாவருமெழுந்திருந்து வெளியில் வரக்கண்ட மாலோபந்து ஒருவரையும் போகவிடாமல்தடுத்து யாவரையும்நோக்கி இந்தகிரகத்திற்குள்ளிருக்கும் சகல சொத்துக்களுங் கொள்ளையென்றார் இம்மொழியைக்கேட்ட மாத்திரத்தில்பிராமணர்களும் பாகவதர்களும் அவ்வீட்டிற்குள் புகுந்து அவரவர்களுக்கு அகப்பட்ட சொத்துக்களை யெடுத்துக்கொண்டு வீட்டைக் காலிசெய்து விட்டார்கள் அப்போது மாலோபந்து பிராமணர்களுக்கும் பாகவதர்களுக்கும் வந்தனந்தந்து ஓசுவாமிகளே அடியேன் மீது கிருபைசெய்து யாவரும் வீற்றிருப்பீர்களேயாகில் அடியேன் ஒருவசனங் கூறுகின்றேன் அவ்வசனத்தைக்கேட்டு அதற்குத்தக்கபடி வேதசம்மதமான மறுமொழிகூறி என்மனதைக் களிப்படையச்செய்து உங்களிஷ்டப்படிக்குப் போகலாமெனக்கேட்டுபிராமணர்களும் பாகவதர்களுங் கூட்டமாய்ப் பின்னுமனேகப் பிராமணர்களை வரவழைத்து கோஷ்டிகூடிய பின் மாலோபந்து யாவருக்கும்தீர்க்கதெண்டனிட்டு எழுந்துநின்று கைகுவித்துக்கொண்டு ஓசுவாமிகளே பரமபாகவதர்களே இவ்வேழையின் சொல்லைக் கவனித்துக்கேட்டு அடியேனைப் புனிதனாகச் செய்யவேணும் அதென்னவெனில் யானிம்மங்கையை மனமார பஞ்சமசாதிப் பெண்ணென்று தெரிந்து மணம்செய்துக் கொண்டவனல்ல பிராமணர்களும் தெரிந்துச் செய்தவர்களல்ல பிராமணப் பெண்ணைப்போல சிங்காரித்துக் கொண்டிருந்தபடியால் இவளைப் [illegible] ஸ்ரீயென்றுணராமல் பிராமண ஸ்ரீயென்றே பாவித்து எனக்குமணஞ் செய்வித்தார்கள். இதுவினைப்பயனே இப்படிவந்துமுடிந்தது ஆகையால்இதற்குப்பிராசிதமேதாகிலும் இருந்தால் சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்து விதிப்பீர்களேயாகில் அந்தப்படிக்கி யான் நடந்துக் கொள்ளுகிறேன் தயவுசெய்து இப்பதிதனைப்பாவனஞ் செய்யும்படியான பாரமுங்களுடையதாகுமென்று இணங்கிவணங்கி நின்றார் இப்படி யாவரையும் வணங்கிநிற்கும் மாலோபந்துவின் மொழிகளையும் வணக்கத்தையுங் கேட்டும்கண்டும் பச்சாதாபமுடையவர்களாகி அக்கோஷ்டி லிருந்தவர்களி யாவரும் கிருபையுடையவர்களாகிவேதசாஸ்திரங்களையும் மநுதர்மசாஸ்திரத்தையுந் தருவித்து பஞ்சம ஸ்ரீயை மணந்து அவன்செய்துபசரித்த பிரசாதத்தைப் புசித்த பிராமணனுக்குப் பிராச்சித்தமென்ன வி[illegible]த்திருக்கிறதோவென்று ஆராய்ந்து பாக்கிறபோது [illegible] சாஸ்திர விதியின்படி பிராமணனுக்குப் பிராச்சித்தமென்னவெனில் கேளுமையா மாலோபந்து பெருத்ததாகும் புளியமரத்தின் போரையிலப் பிராமணனிருந்துக்கொண்டு அம்மரத்தின் உயரத்திற்கு வெரட்டிகளை அடிக்கி அக்கினியையிட்டு தகிக்கச் செய்துக்கொண்டால் இப்பாபந்துலைவது மல்லாமல் புனிதமடையலாமென அந்தப்படியே யான் செய்துக்கொண்டு உங்களுடைய கிருபையினால் புனிதனாகின்றேனென்றுசொல்லி அந்த மாலோபந்து யாவருக்கும் விடைகொடுத்தனுப்பி அதற்குவேண்டியகட்டைமுட்டைகளும் இலுப்பெண்ணைக்குடங்களும்தயார்செய்து அத்தேசத்திற் கிடையிலிருக்கும்புளியங்தோப்பினிற் சேர்ந்து அப்புளியமரங்களில் பெரியமரத்தின் போரையினிற் புகுந்துக்கொண்டு தன் புதல்வனாகிய ஸ்ரீதரனையழைத்து அந்தமாலோபந்து சொல்லுகின்[illegible]

அடாபுதல்வனே நீசீக்கிரம் நமதூருக்குச்[illegible]
று பிராமணர்கள் யாவரையும் நானழைத்துவரா[illegible]
ன்னேனென்று சொல்லி அழைத்துக்கொண்டு [illegible]
மப்பா வெனக்கேட்டு அப்புதல்வன் தந்தையின்[illegible]
ற்படி விரைவாகச்சென்று ஊரைச் சேர்ந்து பிரா[illegible]
ணர்களை யெல்லாம் அழைத்துத் தந்தை சொல்[illegible]
தைப் பகர்ந்து யாவரையும் அழைத்துக் கொ[illegible]
வந்து தந்தையிருக்கும் புளியமரத்தடியில் [illegible]
தந்தையே தங்கள் சொற்படி பிராமணர்க[illegible]
யும் அழைத்துவந்தேன் எனக்கேட்டு [illegible]
ஓ பிராமணர்களே உங்கள்சொற்படி [illegible]
மரத்தின் போரையிலிருக்கின்றேன் [illegible]

[illegible]து எனதுபுதல்வனுடன் சேர்ந்துகொண்டு
[illegible]ட்டிலே அடிக்கி நெருப்பிட்டுப் பற்றியெரிகிற
போது குடங்களிலிருக்கும் இலுப்பெண்ணெயையூத்
திவிட்டு உங்களுங்கள் வீட்டை யடைந்து நாளைய
தினங் காலையில்வந்து என்னுடன்பேசிப் போகவே
ணுமென்று உங்களை மெத்தவும் வேண்டிக்கொள்ளு
கிறேன் யென அதற்கந்த பிராமணர்கள் உன்னிஷ்ட
படியே நாளையதினங் காலையில் வருகின்றோமென்று
சொல்லி மாலோபந்து புதல்வனுடன் அங்கிருக்குங்
கட்டைமுட்டைகளை யடிக்கி நெருப்புவைத்து சற்று
நேரமிருந்துங் கலந்துப்பற்றி யெரிகிறபோது இலு
ப்பை என்ணையை குடங்குடமாவூத்திச்சென்று அப்
பிராமணர்கள் தங்கடங்களகம் புக்கிருந்து மறுநாள்
காலையிலெழுந்து அவ்விடத்திற்கு வந்து பார்க்கிற
போது அண்டக்கூடாத அக்கினிஜ்வாலை வீசுகிறதி
னால் தூரத்திலேயே யிருந்துக்கொண்டுஒருவர்க்கொ
ருவர் பேசிக்கொண்டார்கள் அதென்னவெனில் ஒ
கிருஷ்ணபந்து இப்படிப்பட்ட அக்கினிஜ்வாலை வீசு
கின்[illegible]டியால் இந்தபுளியமரம் சற்றேனும் வாடாம
லும[illegible]தங்காமலும் புளியயிலைகள் கரிந்து பொரிந்து
போகாமல் நேத்தியதினம் நாம் பார்த்தவண்ணமே
யிருக்கிறது இதை யோசிக்கையில் மெத்தவியப்பை
யடையத்தக்கதாக விருக்கின்றது அன்றியும் இப்பு
ளியமரத்திற் கருகிலிருக்கிற மரங்களெல்லாம் வாடி
வதங்கி இலைகள் கரிந்துபொரிந்து போயிற்றே இம்
மரமாத்திரம் யாதொருபின்னமு மடையாம லிருப்ப
தால் இம்மரத்தின் போரைக்குள்ளிருக்கிற மாலோ
பந்துவும் உயிருடனிருப்பா ரென்றே யோசிக்கிறே
னென அதற்கு சிதோபந்து இந்த மாலோபந்துஹரி
பக்தன் ஹரிதாசர்களுக்கு அன்னமிட்டு உபசரிக்கும்
படியான புண்ணியபுருடன் ஆகையால் அவரிருக்கும்
மரத்திற்கும் அவருக்கும் யாதொரு சங்கடமும்நேரி
டாவண்ணம் பகவான் கிருபை செய்தாரென் றெண்
ணுகின்றோம் இதிருக்கட்டும் மாலோபந்தை யழைத்
துப் பார்ப்போம் உயிருடனிருந்தால் புண்ணியவா
னே இவ்வக்கினிக்கு ஆகாரமாகிக் கரிந்துபொரிந்து
[illegible]யிருந்தால் மெத்தப் பாவியாகுவான் என்று
[illegible]லி அந்தகோஷ்டியிலிருக்கு மொருபிராமணன்
[illegible]லோபந்துவே சுகமாயிருக்கின்றீரா வென்று
[illegible]ரலிட்டான் இந்தக் கூக்குரலோசையை கேட்டு
[illegible]லாபந்து சொல்லுகின்றார்.
[illegible] கேளுங்கள் பிராமணர்களே அளவிட்டுச்சொல்ல
[illegible]யாத கட்டைமுட்டைகளும் குடங்குடமாய் இலு
ப்பெண்ணையினாலும் ஆகாசத்தை யளாவிய அக்கினி
ஜ்வாலைகளாலும் உயிர்போகாமல்யான்உங்களுடைய
கிருபையினாலே சுகமேயிருக்கின்றே னென்றுபகரக்
கேட்டு பிராமணர்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு ஆ
ஹாஹா இதுமெத்த வியப்பை யடையத்தக்கதாக
விருக்கின்றது அன்றியும் இப்படிப்பட்டவிந்தையை
யானென்றுங் கேட்டதுமில்லைக் கண்டதுமில்லை யெ
ன்றுசொல்லி தங்களகத்தை யடைந்து மூன்றுவது
நாள் பிராமணர்யாவரும் ஒருங்குகூடி மாலோபந்து
வைப் பார்த்துவரலாம் வாருங்களென் றழைத்துக்
கொண்டு புளியமரத்திற்கு அருகினில் நின்றுக்கொ
ண்டு ஓய்மாலோபந்துவே சீக்கிரம் புளியமரத்தின்
போரையைவிடுத்து வெளியில் வாருமையா வெனக்
கேட்டு அந்தமாலோபந்து போரையைவிட்டு வெளி
பட்டுவந்து பிராமணர்கள் யாவருக்கும் வந்தனஞ்
செய்துக் கரங்களைச் சிரசின்மீது குவித்துக்கொண்டு
ஓசுவாமிகளே அடியேனுடைய திரேகமானது இத்
தனை கட்டைமுட்டைகளாலும் இலுப்பெண்ணையினா
லும் எரிந்துகரிந்து போகாமலிருக்கின்றதே எனைப்
போலும்பாவி இவ்வுலகத்தினி லெவருமில்லை எனெ
ன்றால் நீங்கள் கட்டளையிட்டபடி யான்பிராச்சிதத்
திற் குடன்பட்டு அந்தப்படியே செய்துக்கொண்டும்
அக்கினியானது என்னையணுகாமலும் எரிக்காமலும்
இருந்தபடியால் யான் கொடியபாதக னென்பதற்கு
தடையேயில்லை ஆகையால்நீங்கள்விதித்தபிராச்சிதம்
எனக்குப் பயன்படாமற்போயிற்று இதற்குயானினி
என்னசெய்வேன் சுவாமிகளே என்றுப்பணிந்து நிற்
கையில் அப்பிராமணர்கள்யாவரும் தீர்க்காலோசனை
செய்து இவர் பரமபாகவதராகையால் இவரை அக்கி
னியும் தொடுவதற்கு பயந்துபோயிற்று இதைவிட
வேறு பிராச்சித மொன்றுமேயில்லை என்றுபகர்ந்து
மாலோபந்துவே நீர் யாதொன்றுக்குங் கவலைப்படா
மலும் பயப்படாமலும் எங்களுடன் வீட்டை யடை
ந்து பஞ்சமஸ்ரீயைப்பாதுகாக்கும்விதத்தில்முயர்ச்சி
யடைந்து ஜாக்கிறதையாக விருமையாவென்று சொ
ல்லி மாலோபந்தை யழைத்துக்கொண்டுபோய் வீட்
டிற் சேர்த்துப் போயினர்கள்.

இப்பால் அந்த மாலோபந்து தன்மனைவியை
அழைத்து அடிபெண்ணே சீக்கிரம் நீவீட்டைவிட்டு
வெளியேபோடி என்று அம்மங்கையைவேறுபடுத்தி
வெகுகாலம் பண்டரிநாதனைப் பாடி யாடிக்கொண்டு
பக்தர்களுடன்பகவத்குணானுபவஞ்செய்துகொண்டி
ருந்துமுடிவில்பரமபத சாம்ராஜ்யத்தையடைந்தனர்.

வாழிவிருத்தம்.

அகிலமதிலரிபக்தியறிந் திசைத்தோன்வாழி
மிகுமணஞ்சேர்மெல்லியரை மணந்தவள்ளல்வாழியே
பகர்மறையோர்பிராச்சிதத்தைப் பரக்கடித்தோன்வாழியே
ஜெகப்புகழ்மாலோபந்துத் திருவடிகள்வாழியே.

மாலோபந்து சரித்திரம் முற்றிற்று.

—

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்:

மண்டலீகமன்னன் சரித்திரம்.

துதி விருத்தம்

அண்டர்களேத்துமீச னம்புயபதங்களைத்தன்
னந்தரங்கத்துள் வைத்தன்புடன்பூசைசெய்யும்
தொண்டனென்றறிந்திலாதத் தூயர்கள்மனம்புழுங்கித்
தோன்றலைப்பலவாய்ப்பேசி தூஷணவார்த்தைவிள்ளக்
கண்டுநன்மொழியாள்தன்கண வன்செய்யந்தரங்க
கானத்தையுணர்ந்துபோற்றிக் கழல்பணிந்தருமையென்ன
மண்டலீகமன்னன்மாதும் மால்பதந்தனையடைந்த
மாசரிதையைப்பகருவோர்க்குத் திருமணிமண்டபமே.

திருமகள் கடாக்ஷம் பொருந்திய இந்துஸ்தானி
தேசத்தை யாண்டுக்கொண்டிருந்த மண்டலீகமன்ன
னென்றொருபிராமணரிருந்தார்அவர்பத்தியிற்சிறந்த
அந்தரங்கபக்தியால் பகவானைத் தொழுதுக்கொண்டு
அன்னியர்கள் தன்னைக்கண்டால் பக்தியில்லாத பதி
தனென்று சொல்லும்படி தன் அந்தரக்கத்தில்பாண்
டுரங்கனைத் துதிசெய்துக் கொண்டிருந்தனர் இவருக்
கொருமனைவியுண்டு அம்மாது பாண்டுரங்கநாதனை
பயிரங்கமாய்த் துதித்தும் ஏழை எளியோர்களுக்கு
அன்னமிட்டும் மச்சக் கூர்மவராக நரசிங்க வாமன
பரசுராம தசரதராம பலராம கிருஷ்ணகற்கி யெனும்
பகவானுடைய அவதாரங்க ளாகிய தசாவதாரங்க
ளின் ஜயந்தியில் ஒவ்வொரு அவதார தினந்தொட
ங்கி பத்துநாள் உற்சவங்கள் நடத்திக் கொண்டும்
இடைநடுவில் தசமி தொடக்கஞ்செய்து ஏகாதசியி
லுபவாசமாகவிருந்து பகவத்குணானுபவஞ்செய்துப்
பகலிரவையும் போக்கி துவாதசியில் மிதமில்லாத
பிராமணர்களுக்குத் ததியாராதனம் செய்துக்கொண்
டும் இப்படி சர்வகாலமும் அம்மங்கையிடத்தில் நட
ந்துவருகிறபோது இம்மங்கையின் கணவனாகியமண்
டலீகமன்னவன் நேமநிஷ்டைகளும் நாமத்தியான
மும் ஸ்ரீ பாண்டுரங்கன் பூசையும் பகிரங்கமாகயெது
வுஞ்செய்யார் யாருக்குந் தெரியாமல் நேமநிஷ்டை
பூசை தியான முதலானதுகளும்அந்தரங்கத்திற்செய்
துக்கொண்டு வந்தனர் இதையறியாமல் அவ்வூரில்
வசிக்கும் ஜெனங்கள் இதென்னவிபரீதம் இவ்வூரை
[illegible] ன் பகவத்பக்தியில் மனதை ஒருபோ

தாகிலும் செலுத்தாமல் வேளைக்கொருவித ஆடை
யாபரணங்களைத் தரித்துக்கொண்டு ஞானஹீனனைப்
போல காமாந்தகாரத்தினில்முழுகிக்கிடக்கின்றானே
அந்தோ இதென்னபாபம் குலத்தினிற்சிறந்தும் பல
த்தினிற்சிறந்தும் செல்வத்திலும் அஷ்டைஸ்வரியசம்
பத்திலுஞ் சிறந்தவனாகவிருந்தும் குணத்திலும் மன
த்திலும் நலத்திலும் தாழ்ந்தவனாகவேயிருக்கின்றான்
அன்றியும் அருமையான மானிடஜென்மம் யெடுத்
தும் இந்த ஜென்மத்திலுஞ் சிறந்த பிராமண ஜென்ம
மெடுத்தும் நல்லுணர்வும் ஞானமும்மில்லாமல் அன்
னியாயமாய் வாழ்நாளையெல்லாம் வீணாளாகக் கடத்
தினால் மரணம் இப்பவோ எப்பவோவென்று
த்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றதே
சாஸ்திர புராண சுருதிஸ்மிருதியெனுஞ் சகல
ரங்களை யுணர்ந்தவராகயிருந்தும் விஷயவாஞ்
பற்றறுக்காமலும் தனக்கு பட்டமகஷி யொரு
ருந்தும் அவளைவஞ்சித்து தாசிகள்வீடே கெதி
றிருக்கின்றானே மெத்த பாபியாகுவனென்று மண்ட
லீகமன்னனை தூஷித்துப் புண்ணியவதியும் பதிவிர
சிரோமணியுமான இவர்மனைவி பகவத் பக்
ரக்தியிலும் விரக்தியிலுஞ் சிறந்தவளாகி ஏ
தேசிகளை ஆதரித்தும் ததியரை ஆராதித்
ன்றனளன்றோ இம்மாதின் தருமகுண
லவா இந்நகரத்தில் க்ஷாமமென்ப தி
மும்மாரி பெய்து க்ஷேமமுண்டா
என்று அரசனை தூஷிப்பதும் அர
கொண்டு மிருந்தனர்கள்.

இவ்வண்ணம் அவ்வூரில் வசிக்குங் குடிகள் அர
சனை தூஷித்தும் அரசியை பூசித்துக்கொண்டு மிருக்
கிறபோது ஒருநாள் அரசி அரசனைநோக்கி ஒசுவாமி
தேவரீர் ஒருநாளேனும் பகவத்குணானுபவஞ் செய்ய
வில்லையே நமது பட்டணத்திலுள்ள ஜனங்களெல்
லோரும் பகவத்குணானுபவஞ் செய்யாத அரசனெ
ன்றும்மை இழிவாகப் பேசுகின்றார்களே அந்தயிழி
வான சொற்களைக்கேட்ட அடியாள் திரேகம் பதறு
கின்றதே இன்றுதொடங்கியாகிலும் பகவத்குணானு
பவஞ் செய்துக்கொண்டிருமே யென அதற்கரசன்
சிரித்து அடிபெண்ணே! என்னிருகண்ணே! விஷயா
னுபவத்தினி லுண்டாகும் உருசியைப்போல பகவத்
குணானுபவத்தி லெனக்கு வுருசியுண்டாக வில்லையே
அன்ன [illegible] ளுக்கும் ஆடை யாபரணங்களுக்கும்
வழு[illegible] ழகளல்லவோ பகவத் பக்தர்களைப்
போல வேடந் தரித்துக்கொண்டு பகவானே என்று
பக்திசெய்துக் கொண்டிருப்பவர்கள். அப்படிக்கிரு
ப்பதற்கு எனக்கென்ன தலைவிதியா சம்பத்துக்கள்
யாவத்தும் சம்பூரணமா யிருக்கிறபோது யானேன்
பக்தர்களைபபோல வேடம்புனைந்து பகவத்குணானு
பவஞ் செய்யவேணுமோ அப்படிச்செய்யஎன்மனஞ்
சம்மதிக்கவில்லை எனென்றால் பதினாயிரத் திருநூறு
கோபிகாஸ்திரீகளும் அஸ்டபாரியாக்களுஞ் சூழ ஸ்ரீ
லோலனாக யிருந்தவனைப் பகவானென்றெப்படிவண
ங்குவது நீங்கள் இதையறியாமல் அந்த ஸ்ரீலோலனாக
வும் காமியாகவுமிருந்த இடையனைப் பகவானென்று
பாவித்துத்தொழுதுக் கொண்டிருக்கிறீர்கள். அன்
றியும் ஆயர்பாடியில் கோபிகாஸ்திரீகள் வீடுகள்தோ
றும் நீங்கள் தொழுந்தெய்வமாகிய கிருஷ்ணன் புகுந்
[illegible] ால்தயிர் வெண்ணைகளைத் திருடித்தின்றவனா
[illegible] ல் அப்படிப்பட்ட திருடனைத் தெய்வமென்று
[illegible] துத் தொழுவதற்கு என்மனஞ் சம்மதிக்கவில்
[illegible] ன்றுந் தன்மனோபாவத்தை வெளிப் படுத்தா
[illegible] றைத்து வெளிப்படையாக பகவானை தூஷிப்ப
[illegible] ப்போல அபிநயித்துப் பகரக்கேட்டு அம்மாது
[illegible] னும் அரசனைநோக்கிச் சொல்லத்தொடங்கினள்.

[illegible] ளும் என்னுயிர்க்குயிராகிய பிராணநாயகரே
[illegible] ஷ்ணபரமாத்துமா ஸ்ரீராமர்சீதாலட்சுமண
[illegible] டகாரணியத்திற் பிரவேசித்தபோது அவ்
[illegible] ல் தவமியற்றிக்கொண்டிருந்த முனிவர்
[illegible] ந்திரமூர்த்தியை சேவிக்கவெண்ணி அ
[illegible] நுளி ஸ்ரீராமச்சந்திரரைக்கண்டுஅவ
[illegible] த்தையுந் தேகச்சாயையும் புன்ன
[illegible] னுக்குக்கீழ் தொங்கும்படியான
கரங்களையும் விசாலமாகிய மார்பையும் பொன்னரு
வியைப்போன்ற முப்புரிநூலையும் வளர்ந்தபுருவமும்
மைப்போன்ற தந்தவரிசைகளும் கோவைப்பழத்தை
யொத்த அதரத்தையும் சதகோடிசந்திரர்கள் ஏககா
லத்தினிலுதித்தால் எவ்வளவுபிரகாசமுண்டாகுமோ
அவ்வளவு பிரகாசத்துடன் மங்களகரமான திருமுக
த்தையுங்கண்டு பரமானந்தங்கொண்டு அம்முனிவர்க
ளனைவரும் அம்மூர்த்தியை ஆலிங்கனஞ் செய்துக்
கொள்ளும்பொருட்டு சமீபத்திற்சென்று இருகரங்க
ளாலும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைக்கட்டித் தழுவ
எத்தனிப்பதை ஸ்ரீராமச்சந்திர மூர்த்திகண்டு அவர்
களைநோக்கி சற்றே பொருத்திருங்கள் யென்று கை
யமர்த்தி ஓ முனிசிரேஷ்டர்களே நானிந்த அவதார
த்தில் ஏகபத்தினிவிரதனாகி யிருக்கின்றேன் ஆகை
யால் நீங்களென்னை ஆலிங்கனஞ் செய்துக்கொள்ளத்
தகாது உங்கள் விப்பந்தீர்க்க கிருஷ்ணாவதாரஞ்செய்
யப்போகிறேன் அவ்வவதாரத்தில் என்னை நீங்கள்
கட்டித்தழுவி ஆவல்தீர்த்துக் கொள்ளுங்க ளென்று
சொல்லியபடிக்கி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கிருஷ்ணாவ
தாரஞ் செய்தார் தண்டகாரண்ணிய முனிவர்களனை
வோரும் கோபிகாஸ்ரீகளாகப் பிறந்து இக்கிருஷ்ண
மூர்த்தியைச் சிலர்துதித்தும்சிலர்ஆலிங்கனாதிகளால்
களிக்கச்செய்தும் நிமைப்பொழுது கிருஷ்ணமூர்த்தி
யை காணாவிட்டால் அந்தகோபிகாஸ்திரீகளுக்குஒரு
யுகமாகத்தோன்றும் இப்படிப்பட்டபக்தி அவர்களி
டத்தினி லிருந்தபடியால் பக்தபராதீனனாகிய கிருஷ்
ணமூர்த்தி பக்தியென்னுஞ் சாரத்தைப் பானம்பண்
ணிக் கொண்டிருந்தனர். இந்தமர்மத்தை யறியாமல்
சிலர் கோபிகளைப் புணர்ந்தனரென்றும்அவர்கள்வீட்
டினில் பால்தயிர் வெண்ணைகளைத் திருடினரென்னும்
சொல்லுவது அனீதியேயாம்? சிவன் பிரமன் இந்தி
ராதிதேவர்கள் முனிவர்களுக்கும் முதல் மூர்த்தியா
கிய கிருஷ்ணபரமாத்துமர நான்குவேதங்கள் பஞ்ச
காவியங்கள் பதினெண்புராணங்கள் சுருதி ஸ்மிருதி
ஹிதிகாசாதிகளைப் பெரியோர்களால் பரவச்செய்து
அதையுலகத்தவர்கள் உணர்ந்து தருமசாஸ்திரவிதிப்
படி நடக்கும்படி சட்டமேர்ப்படுத்தி யிருக்க அந்த
சட்டப்படி நடந்துக்கொண்டவர்களுக்கு வைகுந்த
பதவியைத் தருவேனென்றும் சட்டத்திற்கு மாறு
பட்டு நடக்குமவர்களுக்கு ஏமதண்டனை யுண்டாக்கு
மென்றும் சட்டமேற்படுத்தி யிருக்கின்றார். அப்படி
க்கிருக்கத் தானேர்ப்படுத்திய சட்டந்தானே என்று
விரோதமாயவர் நடந்தால் அந்தசட்டம் அவருக்கு
முண்டல்லவா இதையோசிக்காமல் ஏதேதோ பக
வான்மீது தூஷணவார்த்தைகளைச் சொ[illegible]

தோஷமுண்டாகுமென்று சொல்ல அதற்கரசன் தன
க்கு எர்க்கெனவே யுண்டாயிருக்கும் அந்தரங்கபக்தி
யாகும் மர்மத்தைவெளிவிடாமல் மத்தனைபோலவும்
பித்தனைப்போலவும் மனதிற்கு வந்தமட்டும் பகவா
னைப் பேசிபேசிப் போயினன்.

இவ்வண்ணம் மண்டலீகமன்னன் தன்மனைவியி
னிடத்தில் பகவானை பற்பலநிந்தை வார்த்தைகளால்
பேசியேசித் தன்மனதிற் மிதமற்றப் பிரியமென்னும்
பக்தி செய்துக்கொண்டு வெளிக்குவந்த சம்சாரியை
ப்போல காலங்கடத்திக் கொண்டிருந்தனர் மேலும்
பக்தியெனுஞ் சாகரத்தினில் மூழ்கினவ ரிவரென்று
எவர்களுங் கண்டுக்கொள்ளா திருக்கும்படி அவ்வர
சன் அந்தரங்கத்தினில் பகவானை ஏளப்பண்ணிதூப
தீப நைவேத்தியங்க ளளித்து உள்ளத்தினில் பகவா
னைச்சேவித்து பரமானந்தவாரியில் முழ்கிக்கொண்டு
தான்செய்யும் நேமனிஷ்டைகளை பைரங்கமாய் காட்
டினேமானல் யாவரும் நம்மை பகவற்பக்திசெய்யப்
பட்டவ னென்பர்கள் ஆகையால் நாம்செய்யும்அந்த
ரங்கபக்தி அன்னியர்களுக்குந் தெரியாதவண்ணம்
காலங்கழிக்க வேணுமென்று நினைத்து அந்தரங்கத்
தில் பக்தியும் பயிரங்கத்தில் காமியைப் போலவும்
அபிநயங்காட்டிக் கொண்டிருக்கையில் ஒருநாளிவ்வ
ரசன் நித்திரையி லிருக்கும்போது மனைவியானவள்
அங்குசென்று மன்னன் நித்திரையிலிருப்பதைக்கண்
டுத் தானும் அருகினிற்படுத்தும்நித்திரைபிடிக்காமல்
புரண்டுக் கொண்டிருந்தனள் அப்போது நித்திரையி
லிருந்த மன்னவன் ராமாராமாவென்று சொல்லக்கே
ட்டு அம்மாது ஆனந்தக்கடலில் மூழ்கினவளாகி ஆ
ஹாஹா இவருடைய வாக்கினல் ராமாவென்று சொ
ல்ல யானென்னபாக்கியஞ் செய்தேனேயென்று மெ
த்தச் சந்தோஷமடைந்து பகவத்தியானஞ் செய்துக்
கொண்டே நித்திரைசெய்துக் கொண்டிருந்து உதய
மானவுடனே எழுந்து காலைக்கடனைமுடித்து ஸ்னாநு
ஷ்டானங்களைச் செய்து சீலவதியாகிய பகவானுக்
குத் திருமஞ்சனஞ்செய்து ஆடை யாபரணங்களால்
சிங்காரித்து தூபதீப நைவேத்தியங்கள் தந்துபகவத்
கீர்த்தனைகளைப்பாடித் ததியாராதனை மெத்தசந்தோ
ஷமாகச் செய்யக்கண்டு அரசன் மனைவியை நோக்கி
அடிபெண்ணே அபார திரவியத்தைச் சிலவழித்து
உற்சவமேதக்குச்செய்கிருயென அதற்கம்மாதுநேற்
றிரவில் தாங்கள் நல்லநித்திரை செய்கிறபோது தங்
களுடைய வாக்கிலிருந்து தாரகநாமமாகும் ராமா
வென்று வாக்கேட்ட யான் மெத்தவும்பயந்து இனி
[illegible]ந்தங்கொண்டிருந்துஉதயமானவுடனே

அந்தராமனுக்கு உற்சவஞ் செய்கிறேனென அதற்[illegible]
மன்னவன் அடிபயித்தியக்காரி நித்திரையி லிருந்த
என்வாக்கினிற் ராமாவென்ற மொழிவந்தா லென்ன
அதற்காகவா அளவற்றதிரவியத்தைச் சிலவிட்டுராம
னுக்கு உற்சவம் செய்கின்றாய் சுதாவில் நானிருக்கி[illegible]
போது ராமாவென்றசப்தம் என்வாக்கினில் வந்திரு
ந்தால் ராமனுக்கு நீஉற்சவஞ செய்வித்தால் அந்த
உற்சவத்திற்கு இதைப்பார்க்கிலும் எண்மடங்கு திர
வியத்தைச் சிலவிட்டு உற்சவம் செய்விக்கும்படி யா
னேசொல்லுவேன் நித்திரையில்ராமநாமம் என்வாக்
கினில்வந்தால் அதற்குநீஇவ்வளவு திரவியஞ் சிலவு
செய்யலாமோ அன்றியும் அந்தராமன் தன்மனைவி
யாகிய சீதையைராவணன் எடுத்துக்கொண்டுபோய்
லங்கையில் வைத்துக்கொண்டான் அ[illegible]
ராமன் ஆஞ்சநேயரை யனுப்பி சீதை[illegible]தை
தெரிந்துக்கொண்டு வரும்படி கட்டளையிட அந்தப்
படியே அனுமானுஞ்சென்று சீதைலங்கையி லிருப்ப
தைக்கண்டுவந்து சொல்லக்கேட்டுராமன்சுக்கிரீவாதி
வானரசேனைகளுடன் சென்று ராவணன்மீதுயுத்தஞ்
செய்து மூலபலத்துடன்ராவணனையுங்கொன்றுசீதை
யை அழைத்துக்கொண்டு அயோத்தியை யடைந்து
அரசுபுரிந்துக் கொண்டிருந்தனரென்று ராமாயணத்
திற் படித்து பெரியோர்களால் சொல்லக்கேட்டுமிரு
க்கின்றேன் இந்தராமன் க்ஷத்திரியனுகவும் சூரனுகவு
மிருப்பனேயாகில் ராவணன் எடுத்தேகின சீதையை
மருபடியும் அழைத்துவந்து ராஜரீகத்திற் சேர்த்துக்
கொண்டு சுத்தவீரனுகத் திரியுமவனைத் தெய்வமெ
ன்று பாவித்து உற்சவாதிகள் செய்துக்கொண்டிருக்
கின்றாய் மேலும் பகவானுகவிருந்தால் இருந்தவிடத்தி
லேயே சகல காரியங்களையும் நடத்திக் கெ[illegible]
கூடாதா அன்றியும் ஆதிமத்தியாந்த ரகிதனும்[illegible]
ளுக்குள் ளெண்ணையைப்போல யாவத்திலும்[illegible]
ந்து உள்ளும்புரம்புமாய் வசிக்கும் பகவானுகை[illegible]
தால் அந்தஸ்ரீராமன் ராவணனைக் கொல்லுவ[illegible]
எழுபத்திரண்டுவெள்ளம் வானரசேனைகளைக்கூட[illegible]
கொண்டு போவரோ ஸ்ரீராமனைப் பகவானெ[illegible]
தொழுவதற்கு பூர்வக்ஞான முண்டாயிருக்க [illegible]
மல்லவா அதுவுங்கிடையாது எந்தவிஷயத்தை[illegible]
சரித்து ஸ்ரீராமனைப் பகவானென்று தொ[illegible]
வொருவிஷயத்தையும் யோசிக்கிறபோது[illegible]
இப்பூமண்டலத்திற் கெல்லாம் சக்கிரவ[illegible]
அனைவருங் காணிக்கை கப்பங்களிட்[illegible]
னுமேயல்லது ஸ்ரீராமனைப் பகவா[illegible]
உற்சவாதிகளைச் செய்விப்பது மதி[illegible]
வென அதற்கம்மாது ராமாராம[illegible]

பாட்டுக்கொண்டு ஓபிராணநாயகரே ஸ்ரீராமருக்கு பூர்வக்ஞான மில்லாமற் போனதற்குக் காரணம் என்னவெனில் ஸ்ரீராமர் சிதையுடன் உப்பரிகையின்மீதிருக்கிறபோது வசிஷ்டரும் அவர்மனைவியாகியஅருந்ததியும் ஸ்ரீராமரையும் சிதையையும் பார்க்கவேணுமென்ற அபேக்ஷைகொண்டு அயோத்தியை நோக்கி வருகிறபோது அருந்ததியின் விகார ரூபத்தையும் தள்ளாடும் நடையையும் உப்பரிகையின் மீதிருந்த சிதைபார்த்து கக்கடக்கக்...ச் சிரித்தனள் அதை அருகிலிருந்த ஸ்ரீராமர்பார்த்தும் சிதையைக்கண்டிக்காமல் வெருமனே யிருந்துவிட்டார் இதைஅருந்ததியும் வசிஷ்டரும் பார்த்துக்கொண்டே வந்து உப்பரிகையின்மீது சென்று சிதையையும் ஸ்ரீராமரையுக் ...ந்தித்து வணங்கிய இருவருக்கும்ஆசிகூறி ...ஆசனத்தின்மீ திருந்துகொண்டு வசிஷ்டர் ...மரையழைத்து ஸ்ரீராமா நாங்கள் மார்க்கத்தில் நடந்து வருகிறபோது உன் மனைவியாகிய சிதையெங்களைப்பார்த்து நகைத்ததற்குக் காரணமென்னவென ஸ்ரீராமர் பதிலொன்றுஞ்சொல்லாமல் மௌனமாக யிருந்தனர் அக்குறிப்பையுணர்ந்துவசிஷ்டர் ஸ்ரீராமரைநோக்கி மனைவியின்மீதிருக்கும்பிரியத்தினல் பெரியோர்களை பரமசித்த தோஷத்தையென்னமலும் தண்டனை கண்டனை செய்யாமலும் யிருந்தபடியால் உனக்கின்றுதொடங்கி பூர்வக்ஞானமில்லாமற் போகக்கடவதென்று சபித்தபடியால் ஸ்ரீராமருக்கு பூர்வக்ஞானமில்லாமற் போயிற்று இந்த காரணத்தைத் தெரிந்திருந்தும் தாங்கள்விகடமாய்ப் பேசுகின்றீரென்று மொழிந்து உற்சவத்தின்காரியங்களில் கவனித்துக் கொண்டிருந்தனள்.

...வ்வாறு அந்தமண்டலீகமன்னன் மனைவி ஒவ்... அவதாரதினத்திலும் பகவானுக்கு உற்சவா...செய்தும் விசேஷமாக ததியாராதனம் புரிந்... பகவத்பாகவதர்களுடன் கூடிப்பாடியாடி தன்... ந்து தலைவனிற்கலந்து காலத்தைப் போக்கிக்...ண்டிருக்கையில் ஒருநாள் சகலசாஸ்திர சம்பன்... பிரமன்னரும் விற்பன்னரும் ஞானபக்தி வை...த்திற் சிறந்தவரு பக்தியிற் கரைகண்டவரும் ...ரெனும் மாமுனிவர் அங்குவரக்கண்டு அம்... ச்சென்றழைத்து வந்து தக்க ஆசனமளி... ரை வீற்றிருக்கச்செய்து சோடசஉபசா... மகிழச்செய்து பிரதக்ஷண நமஸ்கா... ருகரங்களையுஞ் சென்னிமேற் கூப்... மி பரமகுருநாதரேதங்களுடைய ...யாள் புனிதளாகினேன் தேவரீர் திருவடிப்பட்டு இந்நகரம் பாவனமாயிற்று அஷ்டைஸ்வரிய சம்பத்துக்களிலும் குறைவற்றவளாயினேன் தேவரீர் இவ்வேழைகளின்மீது கிருபைகூர்ந்துஇவடமெழுந்தருளிய காரணம் யாதோ அதைதெரியப்படுத்தவேண்டும் சுவாமியென்று பணிய அதற்கம்முனிவர் மகிழ்வடைந்து அம்மாதுக்காசிகூறி ஓ உத்தமகுணத்திலும் நற்றவமணத்திலுஞ் சிறந்த பதிவிரதா சிரோமணியே ஏழைபரதேசிகளை யாதரிக்கும் புண்ணியவதியென்று சிலரால் சொல்லக் கேழ்விப்பட்டு உன்னையடுத்தேன் காரண மென்னவெனில் எனக்கொருபுதல்வனுண்டு அப்புதல்வனுக்கு மணமுடிக்க வேணுமென்று எண்ணங்கொண்டேன் அதற்கு திரவியமில்லாமையால் வெகுபேரையடுத்து என்மனோ பாவத்தைத் தெரியப்படுத்தியும் அனுகூலப் படாததால் உன்னிடத்திற்கு வந்தேன் தயவுசெய்து நீஎப்படியாகிலும் எனக்குவேண்டிய திரவியத்தைக் கொடுத்து என்னெண்ணத்தை சிரைவேத்திவைப்ப துன்னுடைய பாரமென்று நயந்து வேண்டிக்கொள்ள அதற்கம்மாது ஓசுவாமி தாங்கள்கேழ்ப்பது சுபகாரியத்திற்காகவென்று நினைத்த போதிலும் அடியாள் பிராணநாயகருடைய அனுமதியின்றி வேண்டிய திரவியத்தை யளிப்பதற்கு சுதந்திரமில்லையே பரதந்திரமாக நடப்பவளாயிற்றே அன்றியும் யான் அரசனுக்குப் பட்டமகிஷியா யிருந்தபோதிலும் பிராணநாயகர் எனக்கென்னகட்டளை யிட்டிருக்கின்றாரென்றால் பசியென்று வந்தவர்களுக்கு இல்லையென்றுசொல்லாமல் பசிதீர அன்னமிட்டனுப்பவும் பகவத் கைங்கரியங்களுக்கு வேண்டியபொருளைச் சிலவுசெய்து கைங்கரியத்தைப் பூர்த்திபண்ணிக் கொண்டிருக்கக் கடவாய் மைத்தவிசேஷ சுபகாரியங்கள் முதலானதற்கு என்னுடைய அனுமதியன்றி நீசெய்யக்கூடாதென்று கட்டளையிட்டிருப்பதால் இந்தசுபத்தை யானவருக்குத் தெரியப்படுத்தி அவரால் உம்முடைய வெண்ணம் நிறைவேறும்படியானக் கிருஷியைத் தேடுகிறேன் என்றுசொல்லி அம்முனிவரைப்பணிந்து தன் பிராணநாயகன் மண்டலீக மன்னனிருக்குங் கொலுகூடத்திற்குவந்து அங்கே ராஜபத்தினிகள் முதலானோர் வந்திருப்பதற்காக யேர்ப்படுத்தி யிருக்கும் ஓர்அரைவீட்டினி லிருந்துக்கொண்டுதாதியையழைத்துத் தன்வரவை மன்னவனுக்குத் தெரியப்படுத்தும்படி அனுப்பினள் அத்தாதியும் அந்தப்படியே சென்று அரசிவந்திருக்கும் படியான செய்தியைஅரசனுக்குத் தெரியப்படுத்தினள் அதைக்கேட்டு அரசன் வந்துத் தன்மனைவியைக் கண்டுவந்த செய்தியை மனைவி சொல்லக் கேட்டு மகிழ்வடைந்து ...ண்டி